மாண்புறும் மருதமுனை

வரலாற்றுப் பதிவுகள்

ஆக்கமும் தொகுப்பும் :
அல்-ஹாஜ். ஏ.ஆர். அப்துல் சத்தார், ஜே.பி.

JPL
C11587

வெளியீடு :
சமூக மேம்பாட்டு மையம்,
04A, மகூர் மௌலானா வீதி, மருதமுனை-03.
2015-01-01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Al-Haj. A.R.A. SATHAR
Justice of the Peace - Whole Island
Regd. No: 2000/ 03/ NE/ WI/ B/ 015
504A, Central Road,
Maruthamunai - 03

மாண்புறும் மருதமுனை

வரலாற்றுப் பதிவுகள்

KOHA JPL
விசேடசேர்க்கை பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்
KOHA JPL
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஆக்கமும், தொகுப்பும் :
அல்-ஹாஜ். ஏ.ஆர். அப்துல் சத்தார், ஜே.பி.

11587.cc

அன்பளிப்பு பிரதி
இப்புத்தகம் யாழ்.....
க்கு இலவசமாக வழங்கப்பட்டது.

வெளியீடு :
சமூக மேம்பாட்டு மையம்
504A, மகூர் மௌலானா வீதி, மருதமுனை-03.
2015-01-01

246301
cc
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
246301 cc

954.93

நூல் பற்றிய விபரம்

நூலின் பெயர்	:	மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்
தொகுப்பாசிரியர்	:	அப்துல் றகீம் அப்துல் சத்தார்
மொழி	:	தமிழ்
நூலின் வகை	:	மருதமுனையின் வரலாறு
பதிப்புரிமை	:	தொகுப்பாசிரியருக்கு
ஆண்டு	:	ஜனவரி 2015
பக்கங்கள்	:	560 + XV
கணனி வடிவமைப்பு	:	முபா பிறின்ட் இமேஜ், மருதமுனை.
அச்சுப்பதிப்பு	:	அப்னா ஓப்செற் பிரிண்டர்ஸ், மருதமுனை.
வெளியீடு	:	சமூக மேம்பாட்டு மையம், மருதமுனை.
விலை	:	ரூபா 1000.00
ISBN No.	:	978-955-41921-0-2

Bibiliography

Book Title	:	Manpurum Maruthamunai - Varalaattup Pathivukal
Author	:	Abdul Raheem Abdul Sathar
Language	:	Tamil
Kind of Book	:	History of Maruthamunai
Copy Right	:	Author
First Edition	:	January 2015
Pages	:	560 + XXVIII
Graphics	:	MOFA Print Image, Maruthamunai.
Printing	:	ABNA Offset Printing, Maruthamunai.
Publisher	:	Community Development Centre, Maruthamunai.
Price	:	Rs. 1000.00
ISBN No.	:	978-955-41921-0-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

பொருளடக்கம்

	பக்கங்கள்
• மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்	01 - 08
• மருதமுனை மண்ணின் மைந்தர்கள் (பூர்வீகத்துடன் தொடர்புடைய ஒரு தேடல்)	09 - 36
• எமது பாரம்பரிய நெசவுத்தொழில்	37 - 44
• வயலும் கடலும் வளம்சேர்த்த பூமியிது	45 - 50
• மருதமுனையின் அரசியல் (1800 - 2013) ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம்	51 - 66
• கரைவாகு வடக்கு கிராம சபையின் வரலாறு	67 - 75
• மண்ணுக்குச் சொந்தம் - மண்வாசனை	76 -76
• மருதமுனையில் அரசியல் அதிகாரம்	77 - 108
• மருதமுனையின் கல்வி வரலாறு	109 - 146
• சடங்குகளும் சம்பிரதாயங்களும்	147 - 188
• கரைவாகு வடக்கு கிராம சபை பொதுநூலகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்	189 - 194
• சமாதானப் பாதையில் மருதமுனை	195 - 222
• மருதமுனையில் நாட்டு வைத்தியம்	223 - 234
• மருதமுனை வைத்தியசாலை வரலாறு	235 - 246
• இலக்கியம் வளர்த்த நம்மவர்கள்	247 - 254
• மருதமுனையின் இலக்கிய அடையாளங்கள்	255 - 272
• மருதமுனையில் நாவல் இலக்கிய வரலாறு	273 - 278
• பாரம்பரிய விளையாட்டுத் துறையில் மருதமுனைப் பிரதேசத்தின் வகிபாகம்	279 - 287
• மருதமுனையின் விளையாட்டுக் கழகங்கள்	288 - 301
• மருதமுனை மக்களின் வாழ்வாதாரங்களும். இயற்கை அனர்த்தங்களும்	302 - 309
• சுனாமியின் பின்னரான மருதமுனை தடைகளும் சவால்களும்	310 - 316
• சுனாமியின் பின்னரான அபிவிருத்திப் பணிகள் - தடைகளையும் தாண்டி -	317 - 324
• ஊடகத்துறையும் மருதமுனையும்	325 - 327

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- போர்க்கால வாழ்வியல்
  மருதமுனையின் நினைவுக் குறிப்புக்கள் 328 - 336
- மருதமுனையிலுள்ள பள்ளிவாசல்களின் வரலாறுகள் 337 - 373
- மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா
  ஒரு சுருக்க வரலாற்றுப் பார்வை 374 - 377
- மருதமுனை ஹாபிழ்கள், மௌலவியாக்கள் 378 - 379
- மருதமுனை ஆசிரியர் மரணப்பணிக்கொடை நிதியம் 380 - 385
- வங்கிளும் அரச அலுவலகங்களும் 386 - 387
- மருதமுனை உப தபாலகமும், உப தபாலதிபர்களும் 388 - 388
- இரு தசாப்தத்தில் மருதமுனை ஸக்காத் நிதியம் 389 - 400
- தஃவா இயக்கங்களின் வரலாறு 401 - 412
- மருதமுனை வை.எம்.எம்.ஏ.யின் வரலாறு 413 - 417
- ஹியூமன் லிங்க் (விசேட தேவையுடையோருக்கான இல்லம்) 418 - 422
- இவர்களால் இந்த மண்ணுக்குப் பெருமை 423 - 444
- பிரிந்து சென்று சொந்தங்களும் தேடிவந்த உறவுகளும் 445 - 453
- எமது திருமணங்களில் பெண் மேலாதிக்கம்
  ஒரு ஆய்வுக்கண்ணோட்டம் 454 - 459
- பயங்கரவாதம் பலிகொண்ட நம்மவர்கள் 460 - 461
- எண்ணங்கள் எழுத்துக்களாய் 462 - 470
- மண்ணுக்கு மணம் சேர்ப்போர் 471 - 558

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிச் செய்தி

இலங்கையின் கீர்த்திமிகு முஸ்லிம் கிராமங்களுள் மருதமுனை முதன்மையானது என்பது மிகையல்ல. எனக்கு அரசியலில் மட்டுமன்றி குடும்ப ரீதியான உறவுகளும் இக்கிராமத்திலுண்டு. கற்றோரும் பண்பாளர்களும் நிறைந்துள்ள இக்கிராமத்தின் வரலாறு பற்றி அறிய வேண்டுமென்ற அவா என்னுள்ளத்தில் நீண்டநாட்களாக இருந்து வந்துள்ளது. அந்த இடைவெளியினை அல்-ஹாஜ் ஏ.ஆர். அப்துல் சத்தார் ஜே.பி. அவர்களின் "மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்" நூல் நிறைவு செய்துள்ளது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

மேலும், இந்நூலினைத் தொகுத்தெடுப்பதற்கு தனியாளாக நின்று எவ்வளவோ இன்னல்களை அடைந்திருப்பார் என்பது நூலினைப் படித்துப் பார்த்தபோது தான் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. தவிர, நூல் வெளியீட்டு நிகழ்வு நாளன்று மருதமுனைக் கிராமத்துக்கு மங்காப் புகழ்தேடித்தந்த சான்றோர் பலர் கௌரவிக்கப் படவிருப்பதும் போற்றத்தக்கதாகும்.

இவ்விரு பெருவிழாக்களும் இனிதே நிறைவேற எனது ஆசியையும் வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றியுடன்,

அல்-ஹாஜ். றஊப் ஹக்கீம், LLM, MP

கௌரவ நகர அபிவிருத்தி மற்றும்
நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சர்,
தலைவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச் செய்தி

எமது பிரதேசத்தில் பல கிராமங்களின் வரலாறுகள் இதுவரை பலராலும் எழுதப்பட்டுள்ளன. இதன் வரிசையில் மருதமுனையின் வரலாறும் சிலரால் வெளியிடப்பட்டுள்ளதை நான் அறிவேன். அவை மருதமுனையின் முழுமையான வரலாற்றைக் கூறவில்லை என்று நான் துணிந்து கூறுவதற்கு மருதமுனையோடு மிக நீண்ட காலமாக எனக்குள்ள உறவுகளும் தொடர்பு களும் துணைநிற்கின்றன.

எனது இனிய சகோதரர் அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர்கள் எனது நீண்டகால நண்பனாவார். அவருடைய சிறந்த குண இயல்புகளையும் நான் நன்கு அறிந்தவன் என்ற வகையில் இப்பாரிய பணியில் அவர் துணிந்து கால்வைத்தமை என்னை வியப்பில் ஆழ்த்தியது. இதற்காக அவர் எடுத்துக்கொண்ட சிரமங்களையும் நான் எண்ணிப் பார்க்கின்றேன்.

கற்றோர்கள், சான்றோர்கள் எனப் பலரைப் பற்றியும் இந்நூல் சொல்லுவது ஒரு விஷேட அம்சமாகும். இவரது இம்முயற்சி பாராட்டப்பட வேண்டியது.

அல்-ஹாஜ். எம்.ரி. ஹஸனலி, MP
கௌரவ சுகாதார இராஜாங்க அமைச்சர்,
பொதுச் செயலாளர்,
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக
உப வேந்தர் அவர்களின்

சிறப்புரை

அல்-ஹாஜ். ஏ.ஆர். அப்துல் சத்தார் ஜே.பி. அவர்களின் தன்னார்வ முயற்சியினால், மருதமுனைப் பிரதேசத்தின் சமய, சமூகப் பண்பாட்டு விழுமியங்களையும், பிரதேசத்துக்கு வளம்சேர்த்த தகைமைச் சான்றோரின் அறிமுகங்களையும் "மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்" எனும் மகுடத்தில் ஒரே கூரையின்கீழ் கொணர்ந்துள்ள தேடல்தொகுப்புக்கு ஆசி வழங்குவதைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

மருதமுனைக் கிராமத்தினை இளமைப் பருவத்திலிருந்தே நான் நேசித்து வருபவன். மறைந்த மார்க்க மேதை சின்னாலிமப்பா அவர்களின் அடியையொட்டி மார்க்க போதகர்களையும், புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களை முதன்மை வித்தகராகக் கொண்டு வித்தியா வித்தகர்களையும் தொடர்த்தேர்ச்சியாக உருவாக்கி வரும் கிராமமாக மருதமுனை காணப்படுவதும் இதற் கானதோர் முக்கிய காரணமாகும். இத்தொடரிலேயே அப்துல் சத்தார் அவர்களின் இவ்வரிய தேடலையும் நான் பார்க்கின்றேன்.

பரபரப்பும் சந்தடியும் நிறைந்து காணப்படும் நவீன உலகில் மனவழுத்தத்தினாலும், தொற்றா நோய்களி னாலும் வயது வித்தியாசமின்றி மரணங்கள் சம்பவிப்பது சகஜமாகிவிட்டது. இந்நிலையில் பலர், விலைமதிக்க வொண்ணாத முதுசொம்களையும் தம்முடன் சுமந்து கொண்டு சென்றுவிடுகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டே அவைகளைத் தேடிக்கண்டு பிடித்து, தம்முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களாக எதிர்காலச் சந்ததியினருக்கு ஒப்படைக்கும் அரிய முயற்சியில் ஆசிரியர் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்க தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைப் பொறுத்தவரையில் இந்நாட்டில் பல நெருடல்களுக்கு மத்தியில் எதிர்நீச்சலடித்து வாழ்ந்து வருகின்றோம். எமது இருப்பினை எதிர்காலத்தில் தக்க வைப்பதனால் எதிர்காலச் சந்ததியினரைக் கருத்திற் கொண்டு சகல கிராமத்தினரும் இவ்வாறான முயற்சியில் ஈடுபடல் காலத்தின் தேவையாகும். அதற்கான உந்து விசையாக "மாண்புறும் மருதமுனை - வரலாற்று பதிவுகள்" தொகுப்பு அமையும் என நம்புகின்றேன்.

இறுதியாக இவ்வரிய தொகுப்பானது சுவடுபதித்து உலகம் உய்யும்வரை நிலைத்திருக்க வல்ல அல்லாஹ் விடம் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர் கலாநிதி.
அல்-ஹாஜ். S.M. முகம்மது இஸ்மாயில்
உப வேந்தர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2014-12-04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் - முஸ்லிம் தேசிய கல்வி மாநாடு,
முன்னாள் பேராதனைப் பல்கலைக் கழக
மெய்யியல் உளவியல் துறைத் தலைவர் அவர்களின்

மதிப்புரை

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை எழுதுவதில் எமக்கு முந்திய மூத்த ஆய்வாளர்கள் ஒரு செந்நெறி முறையை வகுத்துச் சென்றுள்ளனர். முஸ்லிம்களின் வரலாற்றை, நம்பத்தகுந்த ஆதாரங்களுடன் கூடிய ஒரு தொன்மைக் காலத்திலிருந்து ஆரம்பித்து தேசிய பரப்பில் அதை தெளிவுபடுத்தும் போக்கைக் கடைப்பிடிக்கும் ஒரு பாதையை அவர்கள் வகுத்துத் தந்துள்ளனர். முஸ்லிம்களின் வரலாற்றிலிருந்து எழும் முக்கிய கேள்வி முஸ்லிம்களின் வரலாறு பற்றியதாகும். இது ஆச்சரியம் ஊட்டக்கூடியதாக இருந்தாலும் உண்மை நிலை இதுதான். பழைமையைப் பாதுகாக்கும் மரபும் தொன்மைக்குச் சான்று சொல்லக் கூடிய ஆதாரங்களும் கண்முன்னால் மறைவதைக் கவனத்தில் எடுக்காத ஒரு சமூக கலாசாரத்தின் தவறான போக்குகள் எமது வரலாற்றை அநேக சந்தர்ப்பங்களில் கேள்விக்குறியாக்கி உள்ளன.

19ஆம் நூற்றாண்டில் சட்ட நிரூபண சபையில் ஏற்பட்ட வாக்குவாதங்கள் முஸ்லிம் வரலாற்றை எழுதுவதில் முக்கிய திருப்பு முனையாக இருந்தது. 1915ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லிம் கலகங்களும், 1976ஆம் ஆண்டு புத்தளம் கலவரத்திலிருந்து 2014 அளுத்கமை கலவரம் வரை நிகழ்ந்துள்ள 28ற்கும் மேற்பட்ட சிங்கள முஸ்லிம் கலவரங்களும் நாட்டில் நடைபெற்ற 30 வருட இனவாதப் போரில் முஸ்லிம்கள் அனுபவித்த துயரங்களும் கடந்த மூன்று தசாப்தங்களாக வரலாற்றைத் தேடும் உணர்வலையை முஸ்லிம்கள் உள்ளத்தில் விதைத்திருப்பதை நன்கு உணர முடிகின்றது.

1976ஆம் ஆண்டு புத்தளம் இனக்கலவரத்தை பதிவு செய்த 'புத்தளத்தில் இரத்தக்களம்' என்ற நூல் இவ்வகை எழுத்துக்களுக்கு ஒரு முக்கிய ஆரம்பமாக அமைந்தது. அது இனக்கலவர நிகழ்வுகளையும், சொத்து இழப்புக்களையும், உயிர் இழப்புக்களையும் பதிவு செய்ததோடு மட்டுமன்றி புத்தளம் முஸ்லிம்களின் தொன்மை வரலாற்றை எடுத்துக் கூறும் வரலாற்றுச் செய்திகளோடு அது எழுதப்பட்டிருந்தது. இதிலிருந்து தான் கலவரச் சூழல் ஏற்படுத்திய வரலாற்று தேடல் ஒரு ஆரம்பத்தை பெறுவதாக நினைக்கின்றேன்.

முஸ்லிம்களை குறிப்பதற்காக பயன்படுத்தப்படும் யொன்னு, சோனகர், மரக்கல, மரைக்கார் போன்ற பதங்கள் அவற்றின் வரலாற்று தொன்மையளவில் கி.பி. 3ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில் அரேபியரின் தொடர்பு வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னோக்கிக் கொண்டு செல்கின்றது. பாவாத மலையும், தப்தர் ஜெய்லானியும், இப்னு பதூதாவின் வருகையும் அவர் தரிசித்த தலங்களும் மன்னார் பகுதியில் கண்டெடுத்த மீசான் கற்பொறிப்புக்களும், குதிரை மலை இடிபாடுகளும், மட்பாண்டச் சிதைவுகளும் இந்த விடயங்களை இன்னும் விரிவாக நோக்கும் வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளன.

அறேபியரின் ஆதிக்கம் மத்தியதரைக் கடலிலும் அரேபிய மற்றும் இந்து சமுத்திர கடற் பரப்பிலும் மெல்ல சரிவடைந்து சென்றபோது இலங்கையில் ஏற்பட்ட ஐரொப்பிய காலனித்துவ ஆதிக்கம் இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களுக்கென்று மற்றொரு தனித்துவமான அத்தியாயத்தைத் தொடங்கி வைக்கின்றது. மன்னார், புத்தளம், பேருவளை, காலி, மாத்தறை என்று கரையோர பிரதேசங்களின் முஸ்லிம் வரலாறு அரபுகளின் வருகையோடு தொடர்புபடுத்தி பேசப்படுவது வரலாற்று மரபுரிமை என்று கூறும் அளவு இன்று வலிமைபெற்ற கருத்தாக வேரூண்றியுள்ளது.

14ஆம் நூற்றாண்டில் இப்னு பதூதாவின் இலங்கை வருகை தெரிவிக்கும் செய்திகளும், 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியரின் வருகை ஏற்படுத்திய தாக்கங்களும் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மறக்க முடியாத இன்னொரு பிரி கோடாக அமைகின்றது. இப்னு பதூதாவின் வருகை மத்திய மலை நாட்டிலும், கரையோரப் பகுதிகளிலும் முஸ்லிம்களின் வாழ்வை பிரதிபலிக்கிறது. கிழக்கு மாகாணத்தோடு தொடர்பான செய்திகள் ஐரோப்பியரின் வருகையோடு கண்டி இராச்சிய நடவடிக்கையூடாக முக்கியத்துவம் பெறுகிறது. எனினும் வரலாற்றின் தடங்கள் எல்லையற்று விரிவு பெறக் கூடியவை. இந்தப் பின்னணியில் தான் ஒரு முக்கிய கருத்தை இங்கு விவாதிப்பது பொருத்தம் எனத் தோன்றுகிறது.

கடந்த நான்கு பத்தாண்டுகளாக முஸ்லிம்கள் எதிர்நோக்கிய புதிய இனக் கலவர அலையும் அது உருவாக்கிய பல்வேறு தரத்திலான பிரச்சினைகளும், கேள்விகளும் முஸ்லிம்களை மீண்டும் வரலாற்றை நோக்கித் தள்ளுவதை அவதானிக்க முடிகின்றது. 19ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு சித்தி லெப்பையும், ஐ. எல். எம். அப்துல் அஸீஸும் செந்நெறி முஸ்லிம் வரலாற்றை கட்டியெழுப்பும் முயற்சியையும் அதேவேளை வரலாற்று புரட்டுக்களுக்கு அறிவு பூர்வமாகப் பதிலளிக்கும் வரலாற்றெழுதியல் முறையையும் வகுத்தளித்தனர். இலங்கை முஸ்லிம் வரலாற்று எழுதியல் முயற்சியில் இது ஒரு முதன்மை நிகழ்வாகும்.

இதற்கு அடுத்த கட்ட விளைவுகள் பெரும்பாலும் ஒரு வகையில் இயல்பான வரலாற்று தூண்டுதல் காரணமாக அமைதியாக ஆரம்பித்ததை அவதானிக்கலாம். அதன் முழுமையான அத்திவாரத்திற்கு ஏ. எம். ஏ. அஸீஸின் முஸ்லிம் வரலாற்றெழுதியல் முறை ஒரு திருப்பு முனையைக் கொண்டு வந்தது. இருந்த போதும் அடுத்து வந்த இனக்கலவர, இன மோதல் சூழல் மற்றொரு புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டுதலை உருவாக்கியது. இம்முறை தேசியளவிலான செந்நெறி வரலாற் றெழுதியல் என்பதற்கு அப்பால் பிராந்திய கிராமிய வரலாறுகள் அதிகளவில் பேசப்படுவதையும், வெளிவருவதையும் அவதானிக்க முடிகிறது. 1990களில் வடபுலத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதைப் பின்னணியாகக் கொண்டு மன்னார் மற்றும் வன்னி மாவட்டங்களின் பல ஊர்களின் வரலாறுகள் எழுத்துருவம் பெற்றன. பள்ளிவாசல் நிர்வாக சபையினரும் ஊர் தலைவர்களும் இந்த பணிக்கு ஆதரவளித்தனர்.

1976இல் அப்துல் ரஹீம் யாழ்ப்பாண முஸ்லிம் வரலாறு எழுதி வெளியிட்டதன் ஒரு தவிர்க்க முடியாத தொடர்ச்சி போல் இந்த பிராந்திய வரலாறு எழுதும் முயற்சி தொடரலாயிற்று எனலாம். குறைந்தது 30இற்கும் அதிகமான முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களின் ஊர்களின் வரலாறுகள் வெளிவந்துள்ளன. மருதமுனை வரலாறு இவ்வாறான பிராந்திய அல்லது ஊர் வரலாற்று தொட்ர்ச்சியில் மற்றொரு அத்தியாயத்தை நிறைவு செய்கின்றது.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றெழுதியல் வலிமை பெறுவதற்கு பிராந்திய கிராமிய வரலாறுகள் எழுதப்பட வேண்டிய அவசியத்தை இந்நிகழ்வுகள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றன. துல்லியமாகவும் வரலாற்றியல் நுட்பத் தோடும் சரியான சான்றுகள், முறையான அனுமானங்கள் மூலமான வரலாற்று எழுதுகை சாத்தியமாக வேண்டும். அவ்வாறு நிகழுமாயின் உண்மையில் முஸ்லிம்களின் வரலாறு தொடர்பில் எழும், எழுப்பப்படும் கேள்விகளுக்கு உறுதியான பதில்களை இவற்றிலிருந்து பெற்றுத் தர முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நம்ப முடியாத செழுமையும் வரலாற்றுத் தொன்மையும் கொண்ட செய்திகளும், சான்றுகளும் முஸ்லிம்கள் குடிபதிகளாய் அல்லது நிரந்தரவாசிகளாய் வாழும் ஒவ்வொரு இடங்களிலும் மக்கள் வாழ்வில் பதிவுபெற்றுள்ளன. இவற்றைப் பேச, வெளியிட சந்தர்ப்பங்கள் தேவை. இவற்றை ஆராய, விமர்சிக்க மேலும் வாய்ப்புக்கள் தேவை. மருதமுனை வரலாற்று வெளியீடு அவ்விதமான நடவடிக் கைகளில் ஒன்றாக எனக்குத் தோன்றுகின்றது.

ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் சில வரலாற்று செய்திகளும், தூரத்திலிருந்து கண்சிமிட்டும் சில சான்றுகளும் வழிவழியாகத் தொடரும் நம்பிக்கைகளும் தான் நம் பிராந்திய வரலாற்றில் நாம் தேட வேண்டிய உண்மைக்கு நெருங்கிய நிகழ்வுகளாகும். மருதமுனை உட்பட கிழக்கின் பல முஸ்லிம் கிராமங்களின் வரலாற்றை ஆராயத் தொடங்கும்போதும் ஏனைய மாகாணங்களின் முஸ்லிம் களின் வரலாற்றை எழுதும் போதும் ஒரு வரலாற்று ஆசிரியன் சந்திக்கும் சவால்கள் அதிக வேறுபாட்டுக்கு உரியவை அல்ல. தெளிவான வரலாற்றினைப் பற்றிய சில தரவுகள் கைக்கெட்டிய தூரத்தில் இருந்தபோதும் வரலாறு எம்மை இன்னும் தொலைதூரத்திற்கு கொண்டு செல்ல சக்தி பெற்றதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு, சம்மாந்துறை என்ற பிரதேசங்களின் தொன்மைச் செய்திகளோடு இவற்றை விரிவாக நோக்கும் போது முந்திய அராபிய தொடர்புகளும் அவர்கள் மேற்கொண்ட வணிகச் செயற்பாடுகளும் பற்றிய தகவல்கள் அண்மைக் காலத்தில் எமது கவனத்தை ஈர்த்துள்ளன. அதனால், ஒரு குறித்த காலத்தை நிர்ணயிப்பதால் அதை முடிந்த முடிவாக வரலாறு எடுத்துக் கொள்ளாது. வரலாற்றின் ஆழம் உங்கள் ஆராய்ச்சியின் ஆழத்தை எதிர்பார்த்துள்ளது. பல புதிய செய்திகளையும் நம்பிக்கைக்குரிய ஊகங்களையும் புதிய ஆய்வாளர்கள் உலகின் கவனத்திற்கு கொண்டுவர முடியும். அது வரலாற்றுக்கேயுள்ள ஒரு விசித்திரமான சக்தியாகும்.

ஆனால், முஸ்லிம் சமூகத்தைப் பொருத்தவரை பல எதிர்கணிய செயற்பாடுகள் இந்த முயற்சிக்குத் தடையாக இருந்து வருவது கவலைக்குரியதாகும். வரலாற்றியல் உணர்வு சமூக கலாசார நாளங்களில் விருத்தியுறாத ஒரு நிலை பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. வரலாற்று ஆய்வுகளுக்குத் தேவையான பண்பாட்டு முதுசொங்களை பாதுகாக்கும் பணி என்பது இலகுவானதல்ல. அது ஒரு பௌதீக நிலைப்பட்ட விடயம் மாத்திரமல்ல, மன உணர்வுகளில் கொள்கைகளில் அது வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் மிக அரிதாகக் கிடைக்கக் கூடிய எஞ்சியுள்ள வரலாற்று மற்றும் தொல்லியல் சான்றுகளும் சின்னங்களும் காலத்திற்கும் மண்ணிற்கும் இரையாகிவிடக் கூடும்.

அதனால் தான் உலக கல்வி ஸ்தாபனங்களும், வரலாற்று நிறுவனங்களும், அருங்காட்சியகம் அல்லது மியூசியம் என்ற எண்ணக்கருவை வலிமைப்படுத்தி வருகின்றன. வரலாறு மற்றும் தொல்லியல் தொடர்பில் முஸ்லிம் சமூகம் சாதிக்க வேண்டியவை நீண்டகால சிந்தனைக்கு உரிய விடயங்களாகும். கிழக்கு மற்றும் தென்கிழக்கு முஸ்லிம் மக்கள் இதற்கான தீர்வினைத் தர சக்தியுள்ளவர்கள் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

மருதமுனைக் கிராமம் என்ற அதன் பழைய வரலாற்றிலிருந்து இன்றை வரையான அதன் முழுமையான வளர்ச்சியை இந்நூல் தொட்டுச் செல்கின்றது. கிராமங்களின் தோற்ற வரலாற்றைத் தேடுவது மனதிற்கு நிறைவு தரும் ஆய்வு முயற்சியாகும். வெட்ட வெறும் மணற்பரப்பு மக்கள் வாழ்நிலமாக மாறுவது அற்புதமான நிகழ்வாகும்.

பறங்கியருக்குப் பயந்து பள்ளித்திடல் பங்குரானை
ஓணகம விழாங்காடு போன்ற
இருண்ட காடுகளில் குடியேறிய முஸ்லிம்கள் போன்று
கிழக்கிற்கும் சிலர் வருகை தந்து
வீடுகள் அமைத்து வாழ்ந்துள்ளனர்

என்று மருதமுனை மஜீதின் 'எனது கிராமத்தை தேடுகிறேன்' என்ற நூல் ஒரு வரலாற்றுக் குறிப்பை பேசுகின்றது. கண்டி மன்னன் செனரதன் காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தொகையாக நிகழ்ந்த முஸ்லிம் குடியேற்றங்கள் பற்றி பரவலான வரலாற்றுத் தகவல்கள் எம்மிடம் உள்ளன. ஆனால், அந்த காலப்பகுதியிலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் நிகழ்ந்த மூத்த முதல் குடியேற்றங்கள் பற்றிய ஆய்வில் நாம் இன்னும் ஆரம்ப பருவத்தில் இருப்பதாகவே தோன்றுகின்றது. எனினும் இவை ஆர்வமூட்டும் ஆய்வுக்குரிய வினாக்களுக்கு எம்மை அழைத்துச் செல்லக் கூடியவை. வரலாற்றைத் தேடுவதிலுள்ள நலந்தரும் செய்திகள் ஆழமானவை. பன்மைச் சமுதாயம் ஒன்றில் அவை ஆற்றக்கூடிய வகிபங்கானது வரலாறும் வியக்கக் கூடியதாக விளங்கும் தகைமையுடையவை.

வரலாற்றை வரலாற்றுக்காகத் தேடுவதில் உள்ள அறிவியல் பூர்வமான தேவையைப் போல் வரலாற்றை வாழ்வுக்காகவும் சமூக மேம்பாட்டிற்காகவும் அதை விரிவாகப் பொருள் காண்பதில் ஒரு முக்கியத்துவம் உண்டு. வரலாறு நடந்து முடிந்தவைகளின் சரித்திரச் சித்திரங்கள் மட்டுமல்ல, உண்மையில் வரலாற்றின் ஆன்மா எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகளுக்கு வலுவூட்டும் ஆதாரம் என்பதை நம்மில் அநேகர் உணர்வதில்லை.

வரலாற்றுத் தத்துவத்தை பேசும் புகழ்பெற்ற ரொமிலா தாப்பரின் பின்வரும் செய்திகளை இங்கு நினைவுபடுத்தலாம். கடந்த காலத்தை ஆராய்வதையே தொழிலாகக் கொண்டுள்ள வரலாற்றாசிரியன் தன் ஆய்வுப் பொருளாகவுள்ள சமூகத்தின் எதிர்காலத்தை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுவது ஒரு விந்தையான புதிர் என்று அவர் கூறுகின்றார்.

வரலாற்று முறையில் ஒரு சமூகம் உருப்பெற்று வளர்வதைப் புரிந்துகொள்ள முயல்வதே ஒரு வரலாற்றாசிரியனின் பணி. தனது ஆய்வின் மூலமாக ஒரு வரலாற்றாசிரியன் தான் எடுத்துக் கொண்ட சமூகம் பற்றிய சித்திரத்தை உருவாக்குகின்றான் என்று தாப்பர் கூறுவதை இங்கு மனங்கொள்ளலாம். வரலாற்றாசிரியன் ஆராய்கின்ற பழமையின் சித்திரம் எதிர்காலத்திற்கு அவன் வழங்கும் நன்கொடையாகும். வரலாற்று ஆய்வுப் பணிகளை நான் இவ்வாறு தான் மதிப்பிட விரும்புகின்றேன்.

புத்தளம் முஸ்லிம்களின் வரலாறாயினும், மருதமுனை வரலாறாயினும் அவற்றின் வெளிப்பாடுகள், செயல்முறைகள் சரித்திரத்தின் மாண்பின் மீது கட்டியெழுப்பப்பட்டதாக இருக்க வேண்டும். இது தான் முக்கிய நிபந்தனை.

திமிலர் முக்குவர் சண்டை, அதில் அரபு முஸ்லிம்களின் தொடர்பு, பட்டாணி மடை துறைநீலாவணை குளித்திக் கோயில், பத்திரகாளி அம்மனுக்கு மருதமுனை மக்கள் நெய்தளித்த சோமன் சேலை குறித்த வரலாற்றுச் செய்திகள் தவிர்க்க முடியாத இன நல்லிணக்க உணர்வுகளின் இயக்கங்களாக எமக்குத் தெரிகின்றன. பல்வேறு பரம்பரைச் செய்திகளும் புராணவியலும்கூட வரலாற்றாசிரியனின் கவனத்திற்கு உட்பட வேண்டியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாணி மடை பற்றி பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை கருத்தரங்கில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமன் வழங்கிய விரிவான ஆய்வு ஆப்கானிஸ் தானியரின் அல்லது பட்டாணி இனத்தினரின் வருகையையும் தொடர்பையும் கிழக்கு மாகாணத்திற்குரியதாக்குகின்றது. இது ஒரு முக்கிய வரலாற்று செய்தியாயினும் அது கொண்டுள்ள இன உறவுத் தொடர்பு குறித்த செய்திகள் பன்மைச் சமூக மேம்பாட்டிற்கு வளம் சேர்ப்பதாக அமையலாம்.

இது ஏற்கனவே 'அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள்' வரலாற்றில் சுருக்கமாக பதிவுபெற்ற ஒரு வரலாற்று செய்தி என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுவது முக்கியமானமாகும். மட்டக்களப்பிற்கு துலுக்கர்களும் பட்டாணியர்களும் மற்றும் சுல்தான், சிக்கந்தர் போன்றவர்களும் சில துலுக்கக் குடும்பங்களுடன் பாளையம் போட்டு வர்த்தகம் செய்தனர் போன்ற செய்திகள் இப்பிராந்தியத்தில் முஸ்லிம்களுக்கு என்று ஒரு நீண்ட பாரம்பரியமும் வரலாறும் உள்ளதென்பதை வலியுறுத்தும் சான்றுகளுமாகும்.

வரலாற்றைத் தேடுவது பகைமை அல்லது பிரிவு பற்றிய சிந்தனைகளுக்காக அல்ல. ஆனால், யதார்த்தமும் அதேபோல் ஐக்கியத்திற்கான உணர்வும் ஒன்று கலந்த உண்மைான சரித்திரத் தேடல் இன்றைய தேவை எனலாம். பல்லின சமூகத்தில் வரலாற்றை நோக்கும் முறையும், தேவையும் இவற்றையும் குறிக்கோளாக கொண்டிருப்பது பற்றிய அவதானிப்பை இங்கு வலியுறுத்துவது முக்கியமானதாகும்.

மருதமுனையின் தொன்மை வரலாறு தொடர்பாக இன்னும் தேட வேண்டிய தகவல்கள் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கு இந்நூல் மேலும் ஊக்கம் அளிக்கும் என நாம் நம்பலாம். கிராமங்களின் வரலாறுகளைத் தேடுதவதும் அவற்றின் தொன்மையைப் பதிவு செய்வதும் இலங்கை முஸ்லிம்கள் வரலாற்றின் பொதுக்கட்டமைப்பை தேசிய அளவில் நிர்ணயிப்பதற்கு உதவும் என்பதில் ஐயமில்லை. இந்தவகையில் மருதமுனையின் இந்த வரலாற்று முயற்சி மற்றொரு கிராமிய வரலாற்று அத்தியாயத்தை நிறைவு செய்வதாகவும் அமைகின்றது.

இலங்கையின் கிழக்கு நோக்கி வந்த பொரும்பாலான வெளிநாட்டு வர்த்தகக் கப்பல்கள் மட்டக்களப்பு வாவியோடு அமைந்த இயற்கையான துறைமுக வசதிகளைப் பயன்படுத்திய வரலாறு பற்றிய ஆய்வுகள் இப்போது ஆரம்பமாகி யிருப்பதை அறிய முடிகின்றது. மட்டக்களப்பு என்ற பதம் தென்கிழக்கிலுள்ள சம்மாந்துறையைச் சார்ந்துள்ள களப்புப் பகுதியையே குறித்து வந்துள்ளது. சம்மாந்துறைக்கு அண்மித்த மட்டக்களப்பு பிரசித்தி பெற்ற கப்பல் கட்டும் இடமாகவும், கப்பல்கள் வணிகத்திற்காக வந்து சென்ற தொடர்புகளைப் பெற்றிருந்த பிரதேசம் என்பதும் இன்று அடிக்கடி முன்வைக்கபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துகேயர் இலங்கைக்கு வருகை தர முன்னரே இந்த கப்பல்களின் வருகையும், கப்பல் வணிகத் தொடர்புகளும் இருந்ததென்பது இங்கு கவனத்திற் குரிய விடயமாகும். மேலும் 'அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள்' வரலாறு தெளிவாகக் குறிப்பிட்டு இருப்பதுபோல் போர்த்துகேயர் காலத்திற்கு முன்பும் பின்பும் இடம்பெற்ற மட்டக்களப்புத் துறைமுக வர்த்தகம் என்பது தென்கிழக்கு பிரதேசங்களிலேயே இடம்பெற்றிருக்கின்றது. மட்டக்களப்புத் துறைமுகம் சார்ந்து கூறப்படும் வரலாற்று குறிப்புக்கள் தென்கிழக்கைச் சாரந்ததாகவும் மற்றும் சம்மாந்துறைப் பகுதியையும் இணைத்தாகவும் இது எடுத்துக் காட்டப் படுகின்றது.

குறிப்பிடத்தக்க சில வரலாற்றுச் செய்திகளோடு மருதமுனை வரலாற்று நூல் பல்வேறு வித்தியாசமான தலைப்புகளில் மருதமுனையின் வாழ்வியலையும், அரசியலையும் பண்பாட்டு அம்சங்களையும் ஒரு வரலாற்று பின்னணியில் கூற முயற்சிப்பதாகக் தெரிகிறது.

எமது பண்பாட்டின் ஊற்றுக்கள் எமது கிராமங்கள் தான். கிராமங்களின் வனப்பு அதன் வளங்களில் மட்டுமல்ல பாரம்பரியத்திலும், மரபுகளிலும் அவை மலர்ச்சி பெற்றுள்ளன. மனித வாழ்வை அவை அழகுபடுத்துகின்றன. வாழும் ஆவலை மனித மனத்தில் அவை ஆழமாக விதைக்கின்றன. எனினும், பாரம்பரியங்கள் எம்மை விட்டும் கைமாறிச் செல்கின்றன. அன்றைய மருதமுனை இன்றில்லை. அதாவது, அன்றைய கிராமங்கள் இன்றில்லை. 'எனது கிராமத்தைத் தேடுகின்றேன்' என்ற மருதமுனைக் கலாசாரத்தில் பேசும் நூலின் அவல ஓசை என் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. பண்பாடுகளைப் பாதுகாக்கும் மனோநிலை எம்மிடம் இல்லை என்பதும் இந்த அவலத்திற்கு ஒரு காரணமாகும். கிராமத்தைத் தேடுவதும், அவற்றின் முதுசொங்களைப் பதிவுகளிலாவது விட்டுச்செல்வதும் எதிர்காலத் தலை முறைக்காக என்பது வரலாற்று முயற்சி என்பதற்கும் அப்பாற்பட்ட பணியாகும்.

தூய வரலாற்றுச் செய்திகளோடு வாழ்வியல், திருமணச் சம்பிரதாயங்கள், சடங்குகள், வழக்காறுகள், தொன்மங்கள் பல்வேறு நம்பிக்கைகள், பொருளாதார நடவடிக்கைகள், புராதன வீடமைப்பு வடிவங்கள், கலை முயற்சிகள் போன்ற வற்றை ஒவ்வொரு கிராமங்களிலிருந்தும் நுணுக்கமாக ஆய்வு செய்வதன் மூலம் நாம் அரிய வரலாற்று தகவல்களையும் தெரிந்து கொள்ள முடியும். மேலும், அரபு அல்லது முஸ்லிம் நாடுகளோடு இலங்கை முஸ்லிம் சமூகம் கொண்டிருந்த பல்வேறு கலாசார தொடர்புகளையும் அவற்றின் வரலாற்றுத் தொன்மை களையும் அறியும் வாய்ப்புக்களும் உருவாகின்றன. அதனால் எழுத்துத் துறையிலும், மருதமுனை பண்பாட்டு ஆய்விலும் ஆர்வமுள்ளவர்களின் இந்த எழுத்து முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் பேசும் சமகாலத் தரவுகளைக் கூட நாம் குறையாக நினைக்க வேண்டியதில்லை. சமகாலத் தரவுகளையும் களஞ்சியப்படுத்த வேண்டிய தேவை எதிர்கால வரலாற்றுக்கான ஒரு சீரிய முயற்சி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சைமன் காசி செட்டி தமது வரலாற்றுப் பதிவுகளை 18ஆம் நூற்றாண்டில் மேற்கொண்டபோது அவர் முன்வைத்த பல பதிவுகள் புராதன விடயங்களையும் தாண்டி அவரது காலத்தில் அவர் கண்ணுற்ற விடயங் களையும் கொண்டதாய் இருந்ததை நாம் கவனத்திற் கொள்ளலாம். 100 வருடங் களின் பின்பு மருதமுனை தன்னைத் திரும்பிப் பார்க்கும் போது அதற்கென்று அறிஞர்களாலும், சான்றோர்களாலும் எழுதப்பட்ட வரலாற்று தொகுப்புக்கள் இருப்பதைப் போன்ற சமுதாய நலன்மிக்க செய்தி வேறெதுவும் இருக்க முடியாது.

பேராசிரியர், கலாநிதி.
எம்.எஸ்.எம். அனஸ்
முன்னாள் துறைத்தலைவர் - மெய்யியல் உளவியல் துறை,
பேராதனைப் பல்கலைக் கழகம்.
தலைவர் - முஸ்லிம் தேசிய கல்வி மாநாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

"மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்" என்ற மருதமுனையின் வரலாறு கூறும் இந்நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தான் பெரிதும் நேசிக்கும் மருதமுனையின் வரலாற்றை இந்நாட்டு மக்கள் அறியவும், அதன் மேன்மையைப் புரிந்துகொள்ளவும் சகோதரர் சத்தார் அவர்களினால் தொகுக்கப்பட்ட இந்நூல் துணைபுரியும் என நம்பு கின்றேன்.

மருதமுனையின் வரலாறு முன்னைய தலைமுறையினரால் வெளிக்கொணரப்படவில்லையென்ற பெருங்குறையை சகோதரர் அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. தீர்த்து வைத்துள்ளார் என்று துணிந்து கூறுவேன். இப்பணி எவ்வளவு சிரமமானது என்பது நாமறியாத ஒரு விடய மல்ல. தவிரவும் மருதமுனையின் மாண்புமிக்க பெரியார்கள் பலர் இதன் மூலம் கௌரவிக்கப்படுவதும் எம்மால் பாராட்டத்தக்க விடயமாகும்.

மேற்படி நிகழ்வுகள் சிறப்புற எனது ஆசியும் வாழ்த்துக் களும் என்றும் உரியன.

கௌரவ. எச்.எம்.எம். ஹரீஸ்
பாராளுமன்ற உறுப்பினர்.
திகாமடுல்ல மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

மருதமுனைக்கும் எனக்கும் நெருங்கிய நட்பும் உறவும் உண்டு. எனவே இதன் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் நீண்ட நாட்களாகவே எனக் கிருந்தது. புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன், மஜீட் அதிபர் ஆகியவர்களினால் வெளியிடப்பட்ட நூல்கள் மருதமுனையின் வரலாறுகள் பலவற்றைக் கூறியிருந் தாலும் அவை ஒரு முழுமையான வரலாறாகக் கொள்ள முடியாது. இக்குறையை எனது இனிய நண்பர் அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர்களினால் தொகுக் கப்பட்டுள்ள "மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்" தீர்த்து வைக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த மண்ணின் பல சான்றோர்களைப் பற்றிய தகவல்கள் இந்நூலில் உள்வாங்கப்பட்டுள்ளமையானது இந் நூலுக்கு மேலும் மெருகூட்டுகிறது.

இந்நூல் மருதமுனையின் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இவ்விடத்தில் கூற விழைகிறேன். நாம் எல்லோரும் இம்முயற்சிக்கு ஊக்க மளிக்க வேண்டும். எனது ஆசியும் ஆதரவும் சத்தார் அவர்களுக்கு என்றும் சொந்தம்.

கௌரவ. நிஸாம் காரியப்பர், சட்ட முதுமானி
முதல்வர்,
மாநகர சபை,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

எனது கிராமமான மருதமுனையைப் பற்றிய சிறப்புக்கள், பெருமைகளை சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம் நான் கூறத் தவறுவதில்லை. ஆனாலும் எழுத்துருவில் மருதமுனையின் சிறப்புக்களும், பெருமைகளும், மாண்புகளும் ஆவணப்படுத்தப்படவில்லையென்ற குறைபாடு என்னைப் பெரிதும் கவலையிலாழ்த்தியது. புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களினால் எழுதப் பட்ட "மருதமுனை வரலாறு", மஜீட் அதிபரினால் எழுதப்பட்ட "எனது கிராமத்தைத் தேடுகிறேன்" என்பன போன்ற நூல்களும் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் நின்று பேசியிருப்பதை நான் அறிந்தவன்.

மேற்படி குறைதனையகற்றி மருதமுனையின் ஆரம்பம் முதல் இன்று வரையான சகல விடயங்களையும் உள்ளடக்கியதான "மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்" என்ற நூல் எனது வாழ்நாளின் போதிலேயே எனது அன்புக்கும் நட்புக்குமுரிய அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர்களினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுவதானது என்னால்என்றுமே மறக்கமுடியாதது. மேலும் நூற்றுக்கும் அதிகமான மருதமுனையின் சொத்துக்களான சான்றோர்களை ஒரே மேடையில் கௌரவிப்பதென்பது எமது பிரதேசம் இதுவரை காணாத ஒரு நிகழ்வாகும்.

இப்பாரிய பணியினை மேற்கொண்டுள்ள சத்தார் ஹாஜியார் அவர்களுக்கு இந்த மண்ணின் சார்பாகவும், மண்ணின் மக்கள் சார்பாகவும் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன். இப்பெரு விழாக்கள் இனிதே நிறைவுற எனது உணர்வுபூர்வமான வாழ்த்துக்கள் என்றும் உரியன.

அல்-ஹாஜ். S.Z.M. மஹ்ரூப் மௌலானா, ஜே.பி.
முன்னாள் மூதவை உறுப்பினர்,
கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச் செய்தி

அல்-ஹாஜ். எ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர்களினால் தொகுக்கப்பட்ட "மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்" என்ற நூலை முழுமையாகப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இதற்காக அவர் எடுத்துக் கொண்ட சிரமங்கள் மிக அதிகமானது.

மருதமுனைக்குப் புகழ்தேடித் தந்தவர்கள் இன்றுவரை புகழைத் தேடித்தருபவர்கள் எனப் பலருடைய விடயங்களை இந்நூல் வெளிக்கொணர்ந்திருப்பது எல்லோராலும் பாராட்டத்தக்க விடயமாகும்.

மருதமுனை வரலாறு கூறும் சில நூல்கள் முன்னர் வெளி வந்திருந்தாலும் அவற்றிலுள்ள குறைகளையெல்லாம் நிவர்த்திக்கும் ஒரு வரலாற்று ஆவணமாக நான் இதைப் பார்க்கிறேன். இந்நூலுக்கு என்னுடைய ஆசியும் ஆதரவும் என்றும் உரியன.

கௌரவ. பைசால் காசிம்,
பாராளுமன்ற உறுப்பினர்,
திகாமடுல்ல மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

"மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்" நூல் வெளியீடும் "வாழ்நாள் சாதனையாளர்கள் விருதும்" என்ற தலைப்பிட்ட ஒரு கடிதத்தினை என்னிடம் தந்து இது பற்றிய எனது கருத்தையும் நண்பன் அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. வேண்டி நின்றார். நானும் அவரிடம் பல விடயங்களைப் பற்றிக் கேட்டறிந்த பின்னர், இந்நூல் எழுதப்பட்டால் ஆகக்குறைந்தது ஐயாயிரம் பிரதிகளாவது அச்சுப்பதிக்கப்பட்டு ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு பிரதி வழங்கப்படல் வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தேன்.

சில மாதங்கள் கழித்து ஒரு புத்தகத்துடன் என்னைக் காணவந்தார். புத்தகத்தையும் காட்டினார். நான் உண்மையில் ஆச்சரியமடைந்தேன். இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இவ்வாறானதொரு முயற்சி கைகூடும் என்று கனவிலும் நினைக்கவில்லை. அவரது விடா முயற்சியும், செயற்திறனும் எம் மனக்கண் முன்னால் மருதமுனையைத் தூக்கி நிறுத்துகிறது. பல பெரியார்கள் பற்றிய தகவல்கள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளமை யானது இதன் கனதியைக் கூட்டுகிறது.

இவரது முயற்சியை நாம் ஒருங்கிணைந்து பாராட்ட வேண்டியது நம் கடமையாகும். எனது வாழ்த்துக்கள் என்றும் உண்டு.

கௌரவ. எம்.ஐ.எம். மன்சூர், M.P.C.
முன்னாள் மாகாண சுகாதார அமைச்சர்,
கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

மருதமுனை இப்பிரதேசத்தில் பல்வேறு துறைகளிலும் புகழ்பெற்ற கிராமம் என்பது நாமறிந்த விடயமே. கல்வியால், பண்புகளால், கலையால், நேர்மையினால் உயர்ந்து நிற்கும் இக்கிராமத்து மக்கள் பழகுவதற்கும் இனிமையானவர்கள். மருதமுனையின் வரலாற்றை அறிய உரிய ஆவணங்கள் இல்லையே என்ற குறை பாட்டை என் இனிய சகோதரர் அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர்களின் "மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்" என்ற இந்த நூல் நீக்கிவிட்டது என்று கூற நான் தயங்க மாட்டேன். இந்நூலின் ஒரு பிரதியை பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

இப்பாரிய பணி மூலம் மருதமுனை மக்களின் பேரன் பையும் பேராதரவையும் பெற்றுள்ள சகோதரர் சத்தார் அவர்களின் முயற்சி வெற்றிபெற எனது உளப்பூர்வமான ஆசியையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெருமித மடைகிறேன்.

கௌரவ. ஏ.எம். ஜமீல், M.P.C.
கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

நண்பர் அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர் களினால் தொகுக்கப்பட்ட "மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்" என்ற நூல் மருதமுனையின் சிறப்புக்களைக் கூறுகின்றது. மருதமுனையில் வரலாறு மட்டுமல்லாமல் அந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர் களையும் வரலாற்று நாயகர்களையும் எம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

நாம் தெரிந்திராத பல விடயங்கள் இந்நூல் மூலம் அறியக் கிடைக்கிறது. எங்களது அட்டாளைச்சேனையோடு மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள சத்தார் ஹாஜியாரின் உடன்பிறப்புக்களான தம்பியின் மகள் தங்கையின் மகள் ஆகிய இருவரும் மணந்துள்ள அட்டாளைச்சேனையைச் சேர்ந்த மணவாளர்கள் மூலம் எனக்கு உறவினராகவும் காணப்படும் இவரது இம்முயற்சி வெற்றிபெற எனது வாழ்த்துக்கள்.

கௌரவ. ஏ.எல்.எம். நஸீர், M.P.C.
மாகாண சபை உறுப்பினர்,
கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

மருதமுனை எனது கிராமம் என்று சொல்லிக் கொள்வதில் எனக்குப் பெருமை.

பல்கலைக்கழகத்திலிருந்த காலங்களில் என் அதிக நண்பர்களாகவிருந்தவர்கள் மருதமுனையைச் சேர்ந்த வர்கள். குறிப்பாக அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர்களின் குடும்பத்தவர்கள் இதில் அதிகமானவர்கள். இவரால் தொகுக்கப்பட்ட "மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்" என்ற இந்நூல் இக்கிராமத்தின் வரலாற்றினையும், மாண்பினையும் படம்பிடித்துக் காட்டுகின்றது.

தனியொருவராக நின்று இக்காரியத்தைக் குறுகிய காலத்தில் சகோதரர் சத்தார் ஹாஜியார் செய்து முடித் துள்ளார் என்பதனை எண்ணும்போது நம்புவதற்கே கஷ்டமாக இருக்கிறது. இதற்காக இவர் எடுத்துக் கொண்ட சவால்கள், விமர்சனங்கள், சிரமங்கள் அளப் பெரியன.

அத்தனைக்கும் மத்தியில் இவ்வரிய பணியினைச் சாத்தியமாக்கிய இவர் ஒரு சாதனையாளர் தான் என்பதில் சந்தேகமில்லை.

இப்பாரிய பணி இனிதே நிறைவுற எனது இதயபூர்வ மான வாழ்த்துக்கள்.

கௌரவ. ஏ.எல். தவம், M.P.C.
கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்குப் பல்கலைக்கழக
மொழித்துறை தலைவர் அவர்களின்

அணிந்துரை

மருதமுனை தனது வரலாற்றை நெய்திருக்கிறது!

"பட்டணத்தில் பிழைக்கலாம், வாழமுடியாது. தனிமையாக நடமாடப் பட்டணம் வாக்கானது. ஆனால் கிராமத்தில் ஒதுங்கி வாழ உங்களைவிட மாட்டார்கள். யாராவது புதிதாக வந்துவிட்டால் போதும். "யாரைத் தேடுதிய? ஓ! அவுகளா ஏலெகாத்தான். நாவன்னா வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு போ" என்று வீட்டுவரைக்கும் கொண்டு போய் விட்டுத் திரும்புவார்கள். மறுநாள் விடியற் காலம் பார்த்து விட்டால் நீங்கள் ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் உங்களை வாயைத் திறந்து நாலு வார்த்தையாவது பேச வைத்துவிடுவார்கள். அவர்களுக்கு நேரம், அவகாசம் பார்க்காமல் வந்து உட்கார்ந்து பேசுவதற்குத் தெரியும். கிராமத்துக்காரன் ஒவ்வொருவனும், அந்த ஊர் சரித்திர ஆசிரியன். அந்த ஊர்ப்பிள்ளையார் பிரதிஷ்டை பண்ணினது, ஆலடி வயலில் வெள்ளம் மண்ணடித்து விட்டது. மூக்கன் மதகைத் திறக்காது போயிருந்தால் கரையே உடைத்துக் கொண்டு ஊர் அழிந்து போயிருக்கக் கூடிய ஆபத்து, நல்ல பாம்பை மண்வெட்டியினால் ஒரேவெட்டில் இரண்டு துண்டாக்கிப் போட்ட செம்பிலி, நடுச்சாமத்தில் பேராய்ச்சி ஊர் பார்த்து வருவதை பார்த்து ரத்தம் கக்கிச் செத்துப்போன தொப்ளான் ஆகிய எல்லோரையும் நீங்கள் வெகுசீக்கிரத்தில் பரிச்சயம் செய்துகொள்ள முடியும். அச்சடித்த புஸ்தகங்களைப் போல இவர்களுடைய சரித்திரங்களும் கொஞ்சம் அமிதமான புளுகுகள் நிறைந் திருக்கும். சமுக நலத்துக்காக அங்கீகரிக்கப்பட வேண்டிய சில பொய்களைச் சரித்திர சித்தாந்தம் அமைக்கிற மாதிரி இந்தக் கிராமத்து மனிதக் கும்பலும் தன்னுடைய வம்ச பரம்பரை இற்றுப்போகாமல் இருக்கக் கட்டிவைக்கும் ஞாபகக் கோவைதான் இவையும். சிறிது மட்டரகமான பொய்களாக இருந்தாலும் சரித்திரமென்றே மதிப்போம்."

இது 'புதுமைப்பித்தன் கட்டுரைகள்'என்ற நூலில் புதுமைப்பித்தன் வரலாறு, கிராமம் தொடர்பாக கூறிய அபிப்பிராயம். எந்த வரலாற்றையும் தேடுகின்ற போது இந்த அபிப்பிராயங்களை புறந்தள்ளிவிட முடியாது. நமது நினைவுக் குட்பட்ட காலத்திற்கு அப்பால் எம்மால் செல்ல முடிவதில்லை. ஆதலால் நாம் கேள்விப்பட்ட கதைகளையும் ஒதுக்கிவிட முடியாது. ஆனால் மிக நெருக்கமான காலத்தோடு ஒட்டிய மாண்புறும் மருதமுனையின் வரலாறு உண்மைக்கு மிக நெருக்கமாக அமைந்திருப்பது மகிழ்ச்சி தருகின்றது. இந்த அறிமுகத்தோடு இந்நூல் பற்றிய எனது அபிப்பிராயத்தை குறிப்பிட விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு- அடையாளம் பற்றிய தேவை மிக அண்மைக் காலமாகவே பெரிதும் உணரப்பட்டு வருகிறது. பெரும்பாலும் பிரயாணி களாகவும் வர்த்தகர்களாகவும் அறியப்பட்ட ஒரு சமூகம் தனது வரலாற்றின் தேவையைப் பற்றி அதிகம் அக்கறைப்படவில்லை. மேலும் அவர்கள் கொண்டிருந்த சமய, சமூக சிந்தனைகளும் பெரிதும் அதனை வற்புறுத்துவதாக அமையவுமில்லை.

முஸ்லிம்களது சமயம் - சமூகம் பற்றிய கோட்பாடுகள் அவர்களைச் சிறு பிரதேசங்களினூடாகவும் எல்லைகளினூடாகவும் அல்லது ஒரு தேசியம் அல்லது பல்தேசியம் சார்ந்ததாகவும் அடையாளப்படுத்தவில்லை. அவர்கள் உலகம் தழுவிய - சர்வதேசம் தழுவிய- 'உம்மா' என்ற கோட்பாட்டைக் கொண்டுள்ளனர். ஆனால், இலங்கையின் இனப்பூசல் சூழ்நிலை, இரண்டாவது சிறுபான்மையினரான முஸ்லிம்களையும் அரசியல் ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் சிந்திக்க வைத்தது. இதனாலே இலங்கை முஸ்லிம்கள் தமது பூர்வீகத்தைத் தேடலாயினர்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பாக எம்.ஏ.எம். சுக்ரி, எம்.எம். சமீம், எம்.எஸ்.எம். அனஸ் முதலானவர்கள் சிந்தித்ததைத் தவிர, முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் மீலாத் தினங்களையொட்டி மாவட்ட ரீதியாக வரலாற்றுத் தேடலை ஆரம்பித்தது. இவை தவிர பழமைவாய்ந்த ஒவ்வொரு ஊர்களும் தமது வரலாற்றினைப் பதிவுசெய்யத் தொடங்கிய வரிசையில் இன்று மருதமுனை தனது வரலாற்றை வெளிக்கொண்டு வருகிறது.

ஆனால், மருதமுனை வரலாற்றுத் தேடலில் ஒருசிறப்பம்சம் இருக்கிறது. மருதமுனை வரலாறு தொடர்பாக புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் எழுதிய குறிப்புக்கள் அண்மையில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஏ.எச்.எம். மஜீட் 'எனதுகிராமத்தைத் தேடுகிறேன்' என்ற பெயரில் மருதமுனை தொடர்பான நூலை வெளியிட்டுள்ளார். மேலும், மருதமுனையின் தனியாள் தகவல்களும் நூல்களாக வந்துள்ளன. 'அல்-மருதமுனை' என்ற சஞ்சிகையும் மருதமுனையை படம்பிடித்துக் காட்டுகின்றது. இந்தத் தொடரிலேதான் 'மாண்புறும் மருதமுனை' என்ற நூல் வரலாற்றுப் பதிவுகளாக வெளிவந்துள்ளது.

வரலாற்று நூல்கள் எப்போதுமே சர்ச்சைகளைக் கிளப்பிவிடுவதும் பல்வேறு அபிப்பிராயங்களுக்கு உட்படுவதும் கவனிக்கத்தக்கது. என்றாலும் தமது பழமையையும் அடையாளத்தையும் வெளிப்படுத்தவிரும்புபவர்கள் வரலாற்றை எழுதிக்கொண்டே இருக்கின்றனர். இங்கு 'அந்தக் காலத்தில் காப்பி இல்லை' என்ற நூலில் ஆ. இரா வேங்கடசலாபதி எழுதிய கருத்து கவனிக்கத்தக்கது:

"வரலாறு என்பது வெறும் மன்னர்கள் அவர்களுடைய கேளிக்கைகள், போர்கள், அந்தப்புரச் சூழ்ச்சிகள் அல்ல. மேலும், கடந்த காலத்தைப் பற்றியது மட்டுமல்ல. அசோகர் மரம் நட்டார், கரிகாலன் குளம் வெட்டினார் என்ற போக்கில் எழுதப்படுவது வரலாறாக முடியாது. இதுபோன்ற தவறான கருத்துகளால்தான் 'வரலாறு' என்றாலே மாணவர்கள் கொட்டாவி விடுகிறார்கள். மேலும், தேதிகளை உருப்போட வேண்டும் என்றும் பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெறும் பெயர்கள் மட்டும் எண்களின் பட்டியலாக 'டெலிபோன் டைரக்டரி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிருக்கும் பாட நூல்களும் இத்தகைய கருத்தையே வலியுறுத்துகின்றன. உண்மையில் வரலாறு என்பது சுவையானது ஆவலைத் தூண்டக் கூடியது."

ஒட்டுமொத்த மனித வாழ்க்கைதான் வரலாற்றைக் காட்டுகின்றது. அந்த மனித வாழ்வின் வெளிவந்த அழிபாட்டு எச்சங்கள், ஆவணங்கள், கதைகள் எல்லாம் வரலாற்றுக்கு அவசியமாகின்றன. அவற்றைத் தக்கசான்றுகள் மூலம் ஊர்ஜிதப் படுத்த வேண்டும். கடந்தகால செய்திகளை ஆவணப்படுத்துதல் அதன் தொடக்கம் மற்றும் முதன்மை பற்றிப் பேசுதல், சிறப்புக்களை வெளிப்படுத்திக் காட்டுதல், தொடர்ச்சியைக் காட்டுதல் முதலானவை வரலாற்றுக்கு இன்றியமை யாதன. இந்தப் பின்னணியில் மருதமுனை வரலாறு உருப்பெற்றிருக்கின்றது எனலாம்.

கிழக்கிலங்கையில் மருதமுனையின் வரலாறு மிகப் பழமையானது. இக்கிராமம் ஒரு முன்மாதிரிக் கிராமமுங்கூட. சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட கிராமம். இந்தச் சவால்களினூடாக மிகப்பெரும் வெற்றியினைச் சாதித்த கிராமம் என்றும் கூறவேண்டும். தமிழ் - முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் கிழக்குப் பிரதேசத்தில் நல்லிணக்கம் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்கள் மருதமுனைமக்கள். மிக முக்கியமாக மருதமுனை மக்களுக்கும் நீலாவணை மக்களுக்குமிடையிலான புரிந்துணர்வு இடப்பெயர்வை இதற்கு நல்ல உதாரணமாகக் குறிப்பிடலாம். பின்வந்த காலத்தில்கூடத் தமிழ் தீவிரவாதக் குழுக்களுடன் கூட இத்தகைய சமரசப் போக்கை மருதமுனை மக்கள் கொண்டிருந்ததற்கு இந்நூலில் பல ஆதாரங்கள் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

மிகச்சிறிய ஒரு விவசாய - மீனவக் கிராமம் தான் கொண்டிருந்த கைத்தொழில் பின்னணியுடன் மிகவீச்சோடு கல்வியினை உள்வாங்கியது இக்கிராமத்திற்குரிய மிகக் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். இலங்கையின் வட-கிழக்குப் புலத்திலே தமிழர்களிடம் வகித்திருந்த கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி மருதமுனை முஸ்லிம் கிராமத்திற்கும் கிடைத்திருக்கின்றது என்று குறிப்பிடவேண்டும். மேலும், 'கோயில் இல்லாஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பார்கள். மருதமுனையின் குடியிருப்பு அல்லது நீலாவணையின் குடியிருப்பு வணக்க ஸ்தலங்களோடு இணைந்த கலாசாரத்தோடு உருவாகியிருக்கிறது. இவ்வாறு மருதமுனையின் வரலாறு, பண்பாடு, கல்வி, தொழில் முயற்சிகள், அரசியல் முதலான அனைத்து அம்சங்களையும் இந்நூல் விளக்கியிருக்கிறது.

இந்நூல் ஒருதொகுப்பு முயற்சியாகும். இந்நூலை ஆக்கியவர் நீண்ட காலமாக வங்கித் துறையில் சேவையாற்றி தற்போது ஓய்வுபெற்றுள்ளவர். இவர் மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை மிக ஆர்வத்தோடு தொகுத்திருப்பது கவனிக்கத் தக்கது. ஒரு ஆய்வு ரீதியான தொழிற்துறைக்குள் அகப்படாத ஏ.ஆர்.ஏ. சத்தார் சத்தார் அவர்கள் மாண்புறும் மருதமுனையின் ஊடாக மருதமுனை தொடர்பான ஆய்வுக்கு வழிசமைத்திருக்கிறார். அதன் கதவுகளை அகலத் திறந்திருக்கிறார் என்றுதான் குறிப்பிடவேண்டும். இந்நூலிலுள்ள மருதமுனையின் பூர்வீகம் தொடர்பான எஸ்.எம். மூஸாவினுடைய கட்டுரை இலங்கை முஸ்லிம்களின் வருகையோடு தொடர்புபடுத்தி மருதமுனையின் வரலாற்றினைத் திறந்து விட்டிருக்கிற மிக முக்கியமான கட்டுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் அரசியல் தொடர்பாக எம்.எம். பாஸிலும் இந்நூல் தொகுப்பாசிரியரும் கட்டுரைகளை எழுதியுள்ளனர். இந்த இரு கட்டுரை களினூடாக கிழக்கிலங்கையின் அல்லது கல்முனை அரசியலின் ஒரு முக்கிய பாத்திரமாக மருதமுனை இருந்த வரலாற்றைக் காண முடிகிறது. கரைவாகு வடக்குக் கிராம சபையின் வரலாறு மருதமுனை தொடர்பான நிர்வாக ரீதியான அம்சங்களைக் குறிப்பிட வருகிற அதேநேரம் அதன் பொதுநூலகம் தொடர்பான ஒரு கட்டுரையும் இங்கு இணைக்கப்பட்டுள்ளது. மருதமுனையின் நல்லிணக்க முயற்சிகள் வேறு ஒரு வகையாக இக்கட்டுரையில் பார்க்கப்படுகிறது. மேலும் போர்க்கால வாழ்வியலும் இங்கு பதிவுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. மருதமுனையின் கல்வி வரலாறு தொடர்பாகவும் பண்பாடு தொடர் பாகவும் வேறு இரு பெரிய கட்டுரைகள் இணைக்கப்பட்டுள்ளன.

மருதமுனைப் பொருளாதாரத்தின் அச்சாணியாக அமைந்த நெசவுக் கைத்தொழில், மீனவம் தொடர்பான இரு முக்கியகட்டுரைகளும் இந்நூலில் மிகுந்த கவனத்திற்குரியவை. மேலும் இலக்கியம், வைத்தியம், வைத்தியசாலை வரலாறு, விளையாட்டு முதலான கட்டுரைகள் மருதமுனையின் இன்னுமொரு பக்கத்தைப் புரட்டிக் காட்டுகின்றன. மக்களின் தொழில்முயற்சிகள் அது பாதிக்கப்பட்ட விதம் தொடர்பாகவும் வெவ்வேறு விதமான கட்டுரைகள் இணைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சுனாமியினுடைய பாதிப்பு இந்நூலில் வெவ்வேறு விதமாக நோக்கப்பட்டிருக்கிறது. இந்நூலின் சிறப்பம்சமாக மருதமுனையிலுள்ள ஒவ்வொரு பள்ளிவாசலும் இங்கு பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. அங்குள்ள ஜும்மியத்துல் உலமா சபை பற்றிய தகவல், ஆசிரியர் மரணபணிக்கொடை நிதியம், வங்கிகள், அரச அலுவலகங்கள், ஸக்காத் நிதியம், இஸ்லாமிய இயக்கங்களின் பணிகள் வேறு சமூக இயக்கங்களுடைய தகவல்கள், மருதமுனைக்குப் பெருமை சேர்த்தவர்களும் பிரிந்து சென்றவர்களும் பற்றிய செய்திகள், மருதமுனையின் குறிப்பிடத்தக்க ஆளுமைகள் என்றளவிலே இந்த நூல் வரலாற்றைப் பதிவு செய்திருக்கிறது.

இந்நூலின் உள்ளடக்க ரீதியான வைப்புமுறையில் இன்னும் கவனம் செலுத்து வதோடு பிரதான தலைப்புகளினூடே பல சிறிய கட்டுரைகளை இணைப்பதன் மூலம் இந்நூல் இன்னும் முழுமைபெறும் எனலாம். மொத்தத்தில் மிகக் கஷ்டமான காரியம் இந்நூலின் தொகுப்பாசிரியர் மூலம் நிறைவேறியிருக் கிறது. இந்தப் பணியினை இந்த ஊர் மக்கள் என்றும் பாராட்ட வேண்டும். நூலாசிரியர் அப்துல் சத்தார் அவர்கள் மருதமுனை மக்களைப் பதிவு செய்த மிகச்சிறந்த பதிவுகாரர் என்ற வகையில் என்றும் மறக்கப்பட முடியாதவர். அவர் இது போன்ற இன்னும் பல நூல்களை ஆக்க இறைவன் சித்திக்க வேண்டும். அவருக்கு என்றும் எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உண்டு.

கலாநிதி. றமீஸ் அப்துல்லா
தலைவர்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாண்புறும் மருதமுனை

வரலாற்றுப் பதிவுகள்

ஏ.ஆர். அப்துல் சத்தார், ஜே.பி. - ஆசிரியர்

உங்களோடு சில வார்த்தைகள்....

பொதுவாக வரலாறு என்பது இறந்த காலம் பற்றியது. பழமை சார்ந்தது. கழிந்துபோன வாழ்க்கை பற்றியது என்றெல்லாம் சொல்லப்படுவதனால், நம்மில் சிலர் வரலாற்றை நிகழ்காலத்திற்குச் சம்பந்தம் அற்றது என்று பிழையாகக் கருதிக்கொள்வதுண்டு. வரலாறு என்பது இறந்தகாலத்தில் வேர் பாய்ச்சி நிகழ்காலத்தை வழிநடாத்தும் வல்லமை படைத்தது. ஏன் எதிர்காலத் திட்டமிடலுக்கும் வரலாறே பாடம் போதிப்பதால், அது முக்காலத்தையும் பின்னிப் பிணைத்து நிற்கக்கூடியது என்றே சொல்லலாம். வாழ்ந்து முடித்த வர்கள், வாழ்வோருக்கும் வாழவிருப்போருக்கும் விட்டுச்சென்ற விலைமதிக்க முடியாத சொத்து.

வரலாறு என்பது ஒரு சமூகத்தின் நினைவாற்றல் ஆகும். நினைவாற்றலை இழந்த ஒருவரின் நிகழ்காலமும் எதிர்காலமும் எவ்வளவு தூரம் கேள்விக் குறியாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. வரலாற்றைப் பாதுகாத்தல் ஒரு சமூகத்தின் ஆணிவேரைப் பாதுகாப்பதற்கு இணையானது. வரலாறு இல்லாத சமூகம் வேரை இழந்த விருட்சம் போன்றது. இதனால்தான் வரலாற்றைப் பதிவுசெய்யும் பணி தலையாய பணியாகக் கருதப்படுகிறது.

வரலாற்றுக் கலை என்பது அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டியஒரு கலையாகும். இதற்காகக் கூடுதல் அக்கறை செலுத்துதல் அவசியம். (இப்னு கஸீர் (றஹ்) அவர்கள்) அந்த வகையில் நல்லதோ கெட்டதோ காய்தல் உவத்தலின்றி வரலாற்றைப் பதிவு செய்வதன் மூலந்தான்அதிலிருந்து அடுத்த தலைமுறைக்குப் பாடமும் எச்சரிக்கையும் கிடைக்கும். எனவே எந்தவொரு பிரச்சினைக்கும் பதிவு செய்யப்பட்ட நமது பழைய கால வரலாற்றில் தீர்வு இல்லாமல் போகாது. அதைக்கண்டு பிடிக்காதது நாம் செய்கின்ற தவறாகும்.

ஒரு சமூகம் தனது வரலாற்றை முதுகில் சுமந்து கொண்டே முன்னோக்கிச் செல்கிறது. (அல்லாமா இக்பால்). ஒரு சமூகத்தின் நிகழ்கால வெற்றி மற்றும் முன்னேற்றத்திற்கு, அவர்களின் கடந்தகால அனுபவங்களுடன் அறுக்க முடியாத தொடர்புண்டு. கடந்தகால அடித்தடங்களின் மீதே நிகழ்காலத்தின் கட்டமைப்பு சாத்தியமாகிறது. எனவேதான் வரலாற்று அறிவும் உணர்வும் ஒரு சமூகத்தின் அடுத்தகட்ட நிகழ்வுக்கு அவசியமானவை என்று வலியுறுத்தப்படுகிறது.

மேலே சொன்ன பெரியார்களின் வரலாறு தொடர்பான ஆழமான கருத் துக்கள், மருதமுனையில் வரலாற்றையும் எமது அடுத்த தலைமுறையினருக்கு வழங்க வேண்டும் என்ற ஆசையும் அவாவும் என்னுள் நிறைந்தன. இதன் விளைவே "மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்" என்ற இச்சிறிய முயற்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே சொந்தம். அவன் உதவியின்றி எதுவுமே நடைபெற முடியாது. அவன் மீது தவக்குல் வைத்தவனாக, எனதருமை சகோதர சகோதரிகள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியையும் சமாதானத் தையும் வேண்டியவனாக, உங்கள் முன் நிற்கின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபறகாத்துகு.

எமது மருதமுனைக் கிராமம் மதுரமுனை என்றே அழைக்கப்பட்டு வந்தமையும் பின்னரே அது மருதமுனையாகப் பெயர் பெற்றது என்பதும் நாமறிந்த விடயங்கள்.

பொதுவாக மருதமுனையைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மர்ஹூம் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் ஹாஜியார் அவர்களினால் "மருதமுனை வரலாறு" என்ற பெயரில் ஒரு நூலாக எழுதப்பட்டு, இப்பாரிய பணி ஆரம்பிக்கப்பட்டுள்ள மைக்காக நாம் அனைவரும் அன்னாருக்கு நன்றியுடையவர்களாவோம்.

இதனைத் தொடர்ந்து மர்ஹூம் ஏ.எச்.எம். மஜீத் ஜே.பி. அதிபர் திலகம் அவர்கள் "எனது கிராமத்தை தேடுகிறேன்" என்ற நூலை வெளியிட்டுள்ள தோடு, அல்-மருதமுனை சஞ்சிகையும் தனது பங்களிப்பைச் செய்துள்ளது. பிரதேச செயலாளர் எம்.எம். நவ்பல் SLAS அவர்கள் இது தொடர்பில், "மருதமுனையின் தனியாள் ஆளுமைகள்" போன்ற சில நூல்களை வெளியிட்டும் தமது பங்களிப்பைச் செய்துள்ளார். அபூமுகம்மத் என்ற புனைப்பெயரில் "நினைவோடையில்" என்னும் மகுடத்தில் ஆசிரியர் எஸ்.எச். சாஜஹான் அவர்களும் சில தகவல்களை வழங்கியுள்ளார். அத்தோடு "மருதமுனை வரலாற்றில் தனியாள் ஆளுமை ஏ.எம்.ஏ. ஜலீல்" என்ற ஏ.ஜே.ஏ. ஹஸீப், ஏ.ஜே.எல். வஸீல் ஆகியோர்களினால் வெளி யிடப்பட்ட நூலிலும் பல தகவல்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாக்கங்கள் யாவும் மருதமுனையின் வரலாற்றை முற்றாக வெளிப் படுத்தியுள்ளனவா?.... என்ற வினாவிற்கு இல்லை என்று துணிந்து பதில்கூற முடியும்.

ஒரு வரலாறு நிறைவுபெற வேண்டுமானால் அதற்கான ஒழுங்கு முறைகள் பேணப்படல் வேண்டும். மேற்சொன்ன படைப்புக்கள் புலவர்மணி அவர்களின் நூலினைத் தழுவியதாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான குறைபாடுகளின்றி எமது கிராமத்தின் வரலாறு முழுமையாக எழுதப்படல் வேண்டும். இதன் பின்னர் வரலாறு எழுதுபவர்கள், "மான்புறும் மருதமுனை" என்ற நூலின் வெளியீட்டுத் திகதியிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். இந்த அடிப்படையில் இப்புத்தகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை என்னுள் நான் ஒரு விதியை ஏற்படுத்திக் கொண்டேன். அதன் பிரகாரம் எனது செயற்பாடு களையும் மேற்கொண்டேன்.

எமது கிராமத்தின் ஆரம்பக் குடியிருப்புக்கள் எங்கு அமைந்தன, அவர்களது வாழ்வாதாரங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன, வணக்க வழிபாடுகளை எவ்வாறு மேற்கொண்டனர் என்பன போன்ற விடயங்களை நாம் ஆராய்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு செய்து அவற்றின் உண்மைத் தன்மைகளை வெளிக்கொணர்வதற்கான வாய்ப்புகள் எம்மத்தியில் மிக அரிதாகவே காணப்படுவதும், எமது மூதாதையர்கள் இவ்வாறான வாலாற்றுக் குறிப்புகளைப் பதிவுசெய்யத் தவறியுள்ளார்கள் என்ற விடயமும், மேலும் வயது கூடிய வரலாற்றினைக் கூறும் முதிய முதுசொம் எம்மை விட்டும் நாள்தோறும் பிரிந்து சென்று விடுவது மட்டுமல்லாமல், இன்று உயிருடனுள்ள முதியவர்களை நெருங்கியபோது அவர்கள் இதுபற்றிய வரலாறோ, வழிவாறுகளோ மறந்தவர்களாக இருப்பதும் மிகப்பெரிய குறை பாடாகவே உள்ளது.

ஆக இன்று எம்மிடமுள்ள ஆதாரங்கள், ஆய்வுகள் என்பனவற்றைக் கொண்டே எமது வரலாற்றை வெளிக்கொணர வேண்டியுள்ளது. மேலும் எமது வரலாற்றை ஒரேதிசையில் அல்லது ஒரே வீச்சில் சொல்ல முனைவோமானால் அது ஒரு நிறைவு பெறாத வரலாறாகவே அமையுமென்பதில் சந்தேகமில்லை. எனவேதான் எமது கிராமத்தில் உள்ள படித்தவர்கள், பட்டம்பெற்றவர்கள், சமூகசேவையாளர்கள் என துறைசார்ந்தவர்களை இனங்கண்டு அவர்களினால் வழங்கப்படும் தகவல்கள், ஆதாரங்கள் போன்றன பதிவு செய்யப்படுவதன் மூலம் ஓரளவேனும் எமது எண்ணம் நிறைவேற வாய்ப்புண்டு. எனவேதான் மருதமுனையின் முக்கிய துறைகளாக பின்வரும் துறைகளைத் தேடல் விடயங்களாக ஆராய முற்பட்டுள்ளேன். வைத்தியத்துறை, நிர்வாகமும், கணக்கியல் துறையும், பாடசாலைக் கல்வியும், கல்விச் சேவைகளும், உயர் கல்வி, சட்டமும், நீதியும், பாதுகாப்பும், பொறியியல் துறை, அரசியல், விளையாட்டுத் துறை, சமயம், எழுத்து, இலக்கியம், கலை நாட்டாரியல், வர்த்தகத் துறை, ஊடகத்துறை, சமூக சேவைகள், மீன்பிடியும், விவசாயமும், ஏனைய வாழ்வாதாரங்கள் மற்றும். ஏனைய துறைகள்.

மேற்படி தலைப்புகளின் கீழ் உரியவர்களிடம் தகவல்கள், ஆதாரங்கள் சேகரிக்கப்படுவதன் மூலம் எமது வரலாற்றின் பெரியதொரு பகுதி நிறைவுறும் என்பதில் ஐயமில்லை.

மேலும் சிறப்புக் கட்டுரைகளாக அந்தந்த துறை சார்ந்தவர்களிடமிருந்து பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இக்கட்டுரைகள் மூலம் மேலும் பல தகவல்கள் எமது இப்பணிக்கு வலு சேர்ப்பனவாக அமைகின்றன. அதற்கமைவாக கீழ்வரும் மகுடங்கள் எமது சிறப்புக் கட்டுரைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

01. மருதமுனையின் கல்வி வரலாறு
02. எமது பாரம்பரிய நெசவுத் தொழில்
03. இலக்கியமும் எமதூரும்
04. வயலும் கடலும் வளம்சேர்த்த பூமியிது
05. நாடறிந்த நாட்டு வைத்தியத்தில் நம்மவர்கள்
06. அரசியலும் மருதமுனையும்
07. விளையாட்டுத் துறையில் மருதமுனை
08. உள்ளூராட்சிசபை வரவாற்றில் எமது ஆளுமைகள்
09. மருதமுனை எதிர்கொண்ட இயற்கை அனர்த்தங்கள்
10. எமது பள்ளிவாயல்கள், பாடசாலைகள் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்
11. வாழ்வாதாரங்கள் ஒரு திறனாய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சமுகப்பணியில் இயக்கங்கள், தஃவா அமைப்புக்கள் நிதியங்கள், கழகங்கள் போன்றன.

இக்கட்டுரைகளிலிலிருந்து மேலும் அதிகமான தகவல்கள் எமது கிராமத்தின் இதுவரை பேசப்படாத வலுச்சேர்க்கும் ஆவணங்களாக அமைகின்றன.

இதற்கும் மேலாக எம்மோடு வாழ்ந்து, வளர்ந்து சமுகப்பணியில் ஈடுபட்டு இக்கிராமத்துக்கு அளப்பெரிய சேவைகளாற்றியது மட்டுமல்லாமல் இக்கிராமத்தை நேசித்த, காதல் கொண்ட எத்தனையோ கனவான்கள் எம்மைவிட்டும் பிரிந்து விட்டார்கள். அவர்கள் எமது பிற்காலச் சந்ததியினர் களுக்கு யாரென்றே தெரியாத ஒரு நிலையை அவதானிக்க முடிகிறது. அவ்வாறான மறைந்த எமது பெருந்தகைகளையெல்லாம் எமது சிறார்களுக்கும், எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் அறிமுகம் செய்வதற்காக "மண்ணுக்கு மணம்பரப்பி உதிர்ந்த மலர்கள்" என்ற மகுடத்தில் ஒரு நினைவுக் குறிப்புகள் என்ற விடயமும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளமை மேலும் இந்நூலிற்கு சிறப்பைத் தருகிறது.

அத்தோடு இந்நூலின் மற்றுமொரு சிறப்பம்சமாக, இன்றய காலகட்டத்தில் எம்மோடு வாழ்பவர்களில் அதிகமானவர்கள் நாட்டின் எல்லாப் பிரதேசங் களிலும் தமது சேவைகளையாற்றி வருவதோடு எமது மண்ணுக்கு மரியாதை யையும், மாண்பினையும், பெரும் புகழினையும் ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள். மட்டுமல்லாமல் நாடு கடந்தும் அவர்களது சேவைகள் இடம்பெற்றுக் கொண்டி ருப்பதை நாம் மறுக்க முடியாது.

தற்போதைய இளைஞர் சமூகத்தில் சமூக சேவைகள் என்றால் என்ன என்பதே தெரியாத ஒரு சூழ்நிலையையும் நாம் அவதானிக்கலாம். எனவேதான் சமூக சேவைகளுக்காக அர்ப்பணிக்கின்ற ஒரு சமூகத்தை கட்டியெழுப்பும் தார்மீகப் பொறுப்பு எமக்குண்டு என்ற அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட படித்த, உயர் உத்தியோகம் செய்கின்ற சமூக சேவையாளர்கள் போன்றவர்களை கௌரவிக்கின்ற மாபெரும் விழா ஒன்றினைச் செய்து இளைஞர் சமூகத்திற்கு மட்டுமல்லாமல் எமது முழு நாட்டுக்கும் ஒரு செய்தியை கூறுவதன் மூலம் எமது கிராமத்தின் மாண்பும், உயர்வும் வெளிக்கொணரப்படல் வேண்டும் என்ற அவாவின் வெளிப்பாடாகவே இதை நான் பார்க்கிறேன்.

இந்த அடிப்படையில் இனங்காணப்பட்ட சுமார் இருநூறு நபர்களை கௌரவிப்பதோடு அவர்களைப் பற்றிய தகவல்கள், அவர்களது அனுபவங்கள், இக்கிராமத்துடன் அவர்களிற்குள்ள வரலாற்றுத் தொடர்புகள், இக்கிராமத்திற்கு அவர்களால் செய்யப்பட விருக்கின்ற எதிர்கால முயற்சிகள் போன்றனவற்றை அவர்கள் மூலமே வெளிக்கொணரும் முயற்சியாக "மாண்புறும் மருதமுனை" என்ற மலரிலேயே இவர்கள் ஒவ்வொருவருக்குமாக ஒவ்வோர் பக்கத்தினை ஒதுக்கி அவர்களின் புகைப்படத்துடன் வெளியிடுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

ஆக "மாண்புறும் மருதமுனை" என்ற எமது நூல் ஒரு முழுமையான மருதமுனையின் வரலாற்றைக் கூறும் ஓர் ஆவணமாக மாறும் என்று திடமாக நம்பமுடியும். மேலும் இப்பணி எதுவித தடைகளுமின்றி நடைபெறவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காக ஒரு அணுகு முறையையும் கடைப்பிடித்தேன். இது எனக்குப் பல அனுபவங்கள் மூலம் பெறப்பட்ட படிப்பினையென்றே கூறுவேன். அதாவது ஒரு விடயத்தைச் செய்ய நாடி அதிகமானவர்களை அழைத்து ஆலோசனைகளைக் கேட்டு அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு ஆலோசனைகள் கூறி இறுதியில் அனைத்தும் கைவிடப்படும் நிலையை தவிர்ப்பதற்காக தேவையான ஆலோசனைகள், உதவிகள் போன்றன தேவையானபோது உரியவர்களிடம் சென்று பெறுகின்ற ஒரு நடைமுறையை ஏற்படுத்திக் கொண்டேன்.

இவ் ஆய்வு முயற்சிக்கு அதிகமானவர்கள் தமது வாழ்த்துக்களையும், ஆதர வினையும் நேரடியாகவும், தொலைபேசியூடாகவும், கடிதங்கள் மூலமாகவும் தெரிவித்தமை எம்மை மேலும் உற்சாகப்படுத்தியது. அத்தனை உள்ளங் களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் உணர்வுகளுக்கு உயிர்கொடுத்தவர்கள்

மருதமுனையின் வரலாறு வெளிக்கொணரப்பட வேண்டும் என்ற எனது விருப்பத்தை நான் பலரிடம் பகிர்ந்துகொண்ட போது பலவிதமான கருத்துக்கள் எனக்குக் கிடைத்தன. அவற்றில் சில என்னை இம்முயற்சியிலிருந்து பின்வாங்க வைத்து விடுமோ என்ற அச்ச உணர்வைத் தந்த அதேவேளையில் பலர் இந்த முயற்சி கட்டாயம் செய்யப்படல் வேண்டும் என்ற கருத்தை முன்வைத்ததோடு தம்மாலான உதவிகளைச் செய்ய நாம் சித்தமாக இருக்கிறோம் என்ற உறுதிமொழி தந்து என்னை உற்சாகப்படுத்தினர். நான் கேட்கின்ற தகவல்கள், ஆக்கங்கள் போன்றவற்றை வழங்கவும் முன்வந்தனர். இவர்களது ஒத்துழைப்புக்கள் கிடைத்திராவிட்டால் "மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்" என்ற இந்த நூல் வெளிவருவதற்கு இன்னும் பல வருடங்கள் தேவைப்பட்டிருக்கலாம்.

உரிய காலங்களில் ஆக்கங்கள், கட்டுரைகள் தந்து இந்நூல் வெளியீட்டுக்கு உதவிய அத்தனை கட்டுரையாளர்களுக்கும் எனது நன்றியினைச் சமர்ப்பிக் கிறேன். இவ்வெளியீடு மூலம் கிடைக்கப்பெறுகின்ற அத்தனை பெருமைகளுக்கும் அவர்களும் பங்காளிகள்.

எனது இந்த மண்ணின் பெரியார்கள் மற்றும் கல்வியியலாளர்கள், சமூக சேவையாளர்கள் என இனங்காணப்பட்ட சுமார் இருநூறு நபர்களைத் தெரிவு செய்து அவர்களது தகவல்களைப் பெறுவதற்கான அத்தனை நடவடிக்கை களையும் மேற்கொண்டேன். அத்தனை வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் எனது வேண்டுகோளை ஏற்று உரிய தகவல்களை உரிய வேளையில் தந்தவர்கள் இந்நூலில் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். சிலர் நேரடியாகவே தங்களின் விருப்ப மின்மையைத் தெரிவித்தனர். சிலர் தருவதாகக் கூறியும் இதுவரை தரமுடியாத வர்களாகவுள்ளனர். ஆக இந்நூல் விரைவில் வெளிவர வேண்டும் என்ற முனைப்பில் இதில் உள்வாங்கப்படவில்லை என்ற செய்திகளையும் இவ்விடத்தில் கூறவிரும்புகிறேன்.

இம்முயற்சி வெற்றிபெற பாரிய நிதியுதவி தேவைப்பட்டது. இது தொடர்பாக நான் சார்ந்த ஸ்ரீ.ல.மு.கா. கட்சியின் தலைவர் உட்பட பலரிடம் ஆலோசனைகள் கேட்டபோது அவர்களும் தங்களின் பங்களிப்பைச் செய்வதற்கு முன்வந்து இம்முயற்சிக்கு ஊக்கமளித்தனர். மேலும் ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகளை வழங்கி இந்நூலுக்கு பெருமைசேர்த்த இவர்களுக்கு எனது பணிவினைச் சமர்ப்பிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்பட்ட கட்டுரைகள், ஆக்கங்கள் போன்றவற்றை மேற்பார்வை செய்து தேவைப்பட்ட போதெல்லாம் ஆலோசனைகளை வழங்கிய ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.எம். மூஸா ஜே.பி. அவர்களுக்கு விசேடமான நன்றியினையும், நான் துவண்டுவிடாமல் தினமும் என்னைக் கண்டு உற்சாகப்படுத்திய விரிவுரையாளர் ஏ.ஜே.எல். வஸீல் ஜே.பி. அவர்களுக்கும், எஸ்.எம். அபூபக்கர் (நஜீம்) ஆசிரியர் அவர்களும் என் நன்றிக்குரியவர்கள்.

எனது வேண்டுகோளை ஏற்று இந்நூலுக்கு சிறப்புரை வழங்கிய தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி அல்-ஹாஜ். எஸ்.எம். முகம்மது இஸ்மாயில் அவர்களுக்கும், சிறந்ததோர் மதிப்புரை வழங்கிய தலைவர் - முஸ்லிம் தேசிய மகாநாடு, பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் மெய்யியல் உளவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் அவர்களுக்கும், பல வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் இந்த நூலை முழுமையாக வாசித்து பெறுமதிவாய்ந்த ஒரு அணிந்துரையை வழங்கிய தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் கலாநிதி றமீஸ் அப்துல்லா ஆகியோர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூல் அழகிய முறையில் அமைவதற்கு இதனைக் கணனி வடிவமைப்புச் செய்து உரிய காலத்தில் வெளிவருவதற்குப் பெரிதும் துணைநின்ற சகோதரர் ஏ.எச்.எம். பாயிஸ் (உரிமையாளர், முபா பிறின்ட் இமேஜ்) அவர்கள் என்றும் என் நன்றிக்குரியவர். கணனி வேலைகளில் பங்கெடுத்துக்கொண்ட எனது மகன் ஹாபி, மகள் றுஸ்தா மற்றும் இதனை அழகிய முறையில் அச்சிட்டு நூலுருவாக்கிய அப்னா ஒப்செற் நிறுவனத்தினரின் உரிமையாளர் யூ.எல்.எம். நக்கீப், தேவையான புகைப்படங்களை வழங்கிய ஊடகவியலாளர் ஏ.ஆர். எம். நபாயிஸ் ஆகியவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தானது.

இவற்றுக்கெல்லாம் மேலாக எனது அத்தனை வேலைகளுக்கு மத்தியிலும் போதிய நேர அவகாசங்களை வழங்கி இம்முயற்சிக்குத் தடையேதும் வந்து விடாமல் பார்த்துக்கொண்ட ஜாஹி வீவர்ஸ் உரிமையாளர் மருமகன் அல்-ஹாஜ் எம்.ஐ. உபைதுர் ரஹ்மான் அவர்களுக்கு எனது ஆழமான நன்றியைத் தெரிவிப் பதோடு, நிதிதேடல் முயற்சிகள் அத்தனைக்கும் எனது பிரதான ஆலோசக ராகவும் ஆதரவாளனாகவுமிருந்த எனது இனிய நண்பன் அல்-ஹாஜ் எம்.எஸ். உமர்அலி ஜே.பி. MMC அவர்களுக்கும் எனது பணிவினை சமர்ப்பிக்கிறேன்.

இறுதியாக எனது அத்தனை கஷ்டங்களிலும் பங்கெடுத்துக்கொண்ட எனது மனைவி ஆயிஷா பீவி அவர்களுக்கும் என் குடும்பத்தினருக்கும் விசேட மாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

யாருடைய உதவிகள், ஒத்தாசைகள், ஒத்துழைப்புக்கள் இருந்தாலும் அவனுடைய உதவியின்றேல் இது நடைபெற்றே இருக்காது. ஆக இந்நூல் வெளியீடும், கௌரவிப்பு நிகழ்வும் இனிதே நடைபெற உதவிபுரிந்த எல்லாம் வல்ல அந்த அல்லாஹ்வுக்கு நன்றிகூறி எனது இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார், ஜே.பி.

மருதமுனைப் பிரதேசத்தின் வரலாறு, கலை, கலாச்சார, சமய விழுமியங்களை ஒரே பார்வையில் வெளிக்கொணர்ந்து எம்முன் "மாண்புறும் மருதமுனை" எனும் மகுடத்தில், நூலாகச் சமர்ப்பித்துள்ள சகோதரர் அப்துல் றகீம் அப்துல் சத்தார் ஜே.பி. மருதமுனையின் பிரபல ஆயுர்வேத வைத்தியத்துறை சார்ந்த குடும்பமொன்றில் 1954-06-02ல் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை கமு/ ஸம்ஸ் இல்ம் வித்தியாலயத்தில் கற்றுத்தேறிய பின்னர், தனது இடைநிலைக் கல்வியை கமு/அல்-மனார் மத்திய கல்லூரி, கமு/ பாத்திமாக் கல்லூரி ஆகியவை களில் கற்றார். தனது க.பொ.த. உயர்தரக் கல்வியை கமு/ ஸாஹிரா கல்லூரியில் பயின்று வர்த்தகத் துறையில் யாழ் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகி தனது உயர்கல்வியை தொடரும் வாய்ப்பினைப் பெற்றார். நாட்டில் சமநிலையற்ற அக்காலத்தில் துரதிஷ்டவசமாக சர்வகலாசாலைக் கல்வியை அவரால் முழுமைப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் 1978-11-06இல் இலிகிதராக ஏறாவூர் மக்கள் வங்கியில் முதல் நியமனம் பெற்று மருதமுனை ஈறாக, பல வங்கிகளில் சேவையாற்றியுள்ளார்.

சமூகசேவையிலும், விளையாட்டுத் துறையிலும் இளம் பராயத்திலேயே ஈடுபாடு கொண்ட இவர், எமது பிரதேசத்தின் எழுச்சிக்காக அரியபல சேவைகளைச் செய்துள்ளார் என்பது அவருடன் இரண்டறக்கலந்து பழகியோருக்கு நன்கு புரியும்.

வடக்குக் கிழக்கு இணைப்பின் கீழ் முஸ்லிம்களுக்கு தனியலகொன்று தேவை என உரத்துப் பேசியோரில் சத்தார் அவர்களும் ஒருவராவார். இவ்வாறான மிதவாதப் போக்கு அவரிடம் குடிகொண்டிருந்த படியினாலேயே, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) மருதமுனை மத்திய குழுத் தலைமைத்துவத்தை நீண்டகாலமாக அவரிடம் ஒப்படைத் திருந்தது. அவர் தனக்குக் கிடைத்திருந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, பல அபிவிருத்திப் பணிகளுக்குப் பங்களிப்புச் செய்துள்ளதுடன், பல்துறைகளிலும் இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் வழிசமைத்துக் கொடுத்தார். இவர் தற்பொழுது, கடற்கரை நண்பர்கள் வட்டத்தின் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவராகவும், வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், 'ஹியுமென் லிங்க்' விசேட தேவையுடையோர் நிலையம் ஆகிய வைகளில் செயலாளராகவும் செயலாற்றி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனைப் பிரதேசத்தில் ஸக்காத் நிதியமொன்று (பைத்துஸ்ஸக்காத்) உருவாவதற்கு முன்னின்று உழைத்த சத்தார் அவர்கள் ஆறு வருடகாலம் அதன் செயலாளராகவும் பின்னர் பொருளாளராகவும், உப தலைவராகவும் சேவையாற்றியமையும் நோக்கற்பாலது. இவ்வாறான ஆளுமைகளைக் கொண்ட அன்னாரினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள இந்நூலினை அவருடைய பொதுச்சேவைக்குக் கிடைத்த கிரீடமாகக் கொள்ளலாம்.

எமது பிரதேசத்தின் நல்விழுமியங்களை தடியெடுத்தவர்களெல்லாம் தண்டல் காரர்களாக மாறி கொச்சைப்படுத்தியுள்ள இக்கால கட்டத்தில் ஒவ்வொரு துறையிலும் துறைபோனவர்களைக் கொண்டு அவைகளை ஆவணப்படுத்தி "மாண்புறும் மருதமுனை" எனும் மகுடத்தில் எம்முன் சமர்ப்பித்துள்ளார். இதுவோர் தனியாள் முயற்சியென்றால் எவருமே நம்ப முடியாது. இவருடைய இம்முயற்சி வெற்றிபெற தனது நீண்ட காலத்தினையும் சக்தியையும் தியாக சிந்தையுடன் செலவு செய்திருப்பது இத்துறையில் ஈடுபடுவோரினாலேயே புரிந்துகொள்ள முடியும். எந்த விடயத்தினையும் துல்லியமாக ஆராய்ந்து முடிவெடுக்கும் சகோதரர் சத்தார் அவர்களின் ஆளுமைக்குக் கிடைத்த அரியதோர் பரிசே "மாண்புறும் மருதமுனை" எனும் ஆவணத் தொகுப்பாகும். அன்னாரின் எழுத்துப்பணி தொடர வாழ்த்த வேண்டிய கடமைப்பாடு எம் சகலருக்கு முண்டு.

- எஸ்.எம். மூஸா *B.A.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மண்ணின் மைந்தர்கள்

(பூர்வீகத்துடன் தொடர்புடைய ஒரு தேடல்)

எஸ். முகம்மது மூசா

பீடிகை

ஈழத்திருநாட்டின் தென்கிழக்குப் பிரதேசத்தில், அம்பாரை மாவட்டத்தின் நுழை வாயிலில், இருப்புக்கொண்டுள்ள முஸ்லிம் கிராமம் மருதமுனையாகும். (இன்று ஒரு நகரத்துக்குரிய சகல அம்சங்களையும் கொண்டுள்ளது). கிழக்கே வங்கக் கடலையும், மேற்கே மட்டுவாவியின் (Batticaloa Lagoon) படுக்கையுடன் கூடிய மருத நிலத்தினையும், வடக்கே நீண்டு செல்லும் பெரியநீலாவணை யையும், தென்புலத்தில் பழம்பெருமை கொண்ட பாண்டிருப்பையும் எல்லைகளாகக் கொண்டதோர் வனப்புமிகு கிராமமாகும். 2004-12-26 அன்று ஏற்பட்ட சுனாமி (Tsunami) பேரனர்த்தங்களுக்கு முன்னர், இருபதினாயிரம் மக்கள் தொகையை (ஆண்கள் 9050, பெண்கள் 10068) இக்கிராமம் தன்னகத்தே அடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மருதமுனைக் கிராமத்தின் தொன்மை பற்றிப் பலரும் பலவாறான வாய்மொழிச்சான்றுகளைக் கூறிவந்த போதிலும், மரபுவழியிலான சான்றுகளின் துணைகொண்டு ஆவணப்படுத்துவதற்கான கள ஆய்வில் எம்மூரவர் எவரும் இதுவரையில் ஈடுபடவில்லை என எம்மால் துணிந்து கூறமுடியும். கி.பி. 2004இல் ஏற்பட்ட சுனாமியைப் போன்று 1978இல் வீசிய சூறாவளியும் (Cyclone) எமது பிரதேசத்தினை வெகுவாகப் பாதித்தது. அது பற்றிய துல்லியமான பதிவுகளும் எம்மிடமில்லை. அவ்வாறான வரலாற்றுத் தவறுகள் தொடரக் கூடாது என்பதனைக் கருத்திற் கொண்டே, இம்முயற்சியில் கால்பதித்தோம். பலநூறு மனித உயிர்களையும் மூவாயிரம் மில்லியன் ரூபாவுக்குக் குறையாத உடைமைகளையும், கட்டடங்களையும் காவுகொண்ட சுனாமிக்கு முன்னரான பூர்வீகம் பற்றியே இங்கு ஆராயப்படுகின்றது.

ஒரு பிரதேசத்தின் பூர்வீக வரலாற்றினை ஆய்வுக்குட்படுத்தும் போது, சரிநுட்பமான ஆதாரங்கள் இல்லாதுவிடின், நிகழ்வுகளையும், கிடைக்கின்ற தடயங்களையும், தகவல்களையும் அகச்சான்றுகளையும் கொண்டு அனுமானஞ் செய்தல் மரபாகும். அதனையே நாமும் செய்துள்ளோம்.

இலங்கையுடனான அரேபியரின் தொடர்பு இஸ்லாத்திற்கு முன்பே - அதாவது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சகாப்தத்துக்கு முன்பே ஆரம்பமாகி விட்டது. அவர்கள் ஆரம்பத்தில் சிங்கள மன்னர்களுக்கு குதிரை வியாபாரிகளாக அறிமுகமான போதிலும், பின்னர் அம்மன்னர்களின் குதிரை பயிற்றுவிப்பாளர் களாகவும், படை வீரர்களாகவும், படைத் தளபதிகளாகவும், மெய்ப்பாதுகாவலர் களாகவும், வைத்தியர்களாகவும் இராஜாங்கக் கடமைகளில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலன்னறுவையிலிருந்து சோழ மன்னர்களை அகற்றி, இராஜரட்டை முழுவதையும் அவர்களிடமிருந்து கைப்பற்றியவன் உறுகுணையைச் சேர்ந்த விஜயபாகு என்னும் இளவரசனாவான். இவன் வரலாற்றில் முதலாவது விஜயபாகு என அழைக்கப்படுகின்றான். இவனுடைய பேரனே பொலன்னறுவை மன்னன் மகாபராக்கிரமபாகு. விஜயபாகு மன்னன் சோழர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஐந்து முறை தோல்வி கண்டான். ஆறாவது முறை வெற்றி பெற்றான். அப்போர் காலத்தில் அவனுடைய மெய்ப்பாதுகாவலனாக இருந்தவன் வட ஆபிரிக்க மொறோக்க நாட்டைச் சேர்ந்த **மூர்சமத்** என்கின்ற நீக்கிறோ இன அரேபியாவான். 'இம்முறை நீ எனக்கு பாதுகாவலனாக அமைந்து செய்த வீரசாகசங்களும் சேர்ந்துதான் எனக்கு இந்த வெற்றியைத் தந்தது' என விஜயபாகு மன்னன் தனது வெற்றி விழாவின் போது கூறினான். போர்க்காலங்களில் அவன்பட்ட காயங்களுக்கு மூர்சமத், தனது மனைவியரைக் கொண்டே சிகிச்சையளித்தான். இந்த விபரங்களை சாண்டில்யனின் "விஜயமகாதேவி" நாவலில் காணலாம். பல்வேறு வரலாற்று நூல்களைப் படைத்து திரட்டிய தழுவல்களைக் கொண்டுதான் நான் இந்த நாவலை எழுதினேன் என நாவலாசிரியர் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சாண்டில்யனின் மேற்கூறிய வரலாற்றுக் குறிப்பினை எமது பிரதேச தமிழறிஞர்கள் அறியாமலிருப்பதற்கும் நியாயமில்லை. நாடு காடு பரவணிக் கல்வெட்டுக்கள், வீரமுனைச் செப்பேடு ஆகிய ஆவணங்களும், மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்புத் தமிழகம் ஆகிய தமிழர்களால் செய்யப்பட்ட நூல்களும் அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள் இருப்புப் பற்றி இயம்புகின்றன. கிழக்கிலங்கையில் நூறு இருநூறு வருடப் பூர்வீக வரலாற்றினைக் கொண்டவர்கள்தான் முஸ்லிம்கள் என்பது அவர்களது கருத்தாகும். எனவேதான் மருதமுனை உட்பட இலங்கை முஸ்லிம்களின் வருகையானது இஸ்லாத்தின் தோற்றத்திலிருந்து மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளுடன் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பது பற்றி அலச வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டது.

மண்ணின் பூர்வீக மைந்தர்கள்

மருதமுனைக் கிராமம் தென்கிழக்குப் பிராந்தியத்திலுள்ள ஏனைய முஸ்லிம் கிராமங்களிலிருந்தும் மாறுபட்ட பூர்வீக வரலாற்றினைக் கொண்டது. அதன் தோற்றுவாய் மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளுடன் நேரடியான தொடர்பு கொண்டுள்ளதே இதற்கான முக்கிய காரணமாகும். பூகோளத்தின் மத்தியில் ஏறக்குறைய பத்து இலட்சம் சதுரமைல் பரப்பினைக் கொண்டு அமைந்துள்ள பிரதேசம் அரேபியத் தீபகற்பமாகும். இறுதித்தூதர் முகம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்திலிருந்து குலபாஉர்ராசிதூன்களின் இறுதியான கலிபா அலி இப்னு அபூதாலிப் (ரலி) அவர்களின் ஆட்சியீறாக அல்குர்ஆன் - சுன்னா அடிப்படையிலான இறையாட்சி, இஸ்லாமிய உலகில் நிலைத்திருந்தது. இறுதிக் கலிபா அவர்கள் உள்நாட்டுக் கலகக்காரர்களினால் கொலைசெய்யப்பட்டதும் கி.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

661இல் உமைய்ய வம்சத்தைச் சேர்ந்த முஆவியா (ரலி) என்பவர், இஸ்லாமிய ஆட்சியைப் பலவந்தமாகக் கைப்பற்றிக் கொண்டார். அன்று முதல் கி.பி. 750 வரை உமைய்யாக்களின் வன்முறையாட்சி இஸ்லாமிய யுகத்தினைக் கவ்விக்கொண்டது. இவ்வாட்சியானது இஸ்லாமிய வழிமுறைக்கு முரணானது என்பது வரலாற்று உண்மையாகும். இந்நிலையில் கி.பி. 661.10.10 அன்று நபியுல்லாஹ்வின் பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களும் குடும்பத்தினரும் உமைய்யாப் படையினரால் 'கர்பலா' மைதானத்தில் கொலைசெய்யப்பட்டதும், றசூலுல்லாஹ்வின் கிளையான பனூகாசிமீக்களுக்கும் உமைய்யாக்களுக்கும் இடையிலான பகைமை மேலும் உக்கிரமடையத் தொடங்கியது. இப்பின்னணியில் ஆட்சிபீடமேறிய அப்துல் மலிக் பின் மார்வான் (கி.பி. 685 - 705) என்பவர், பனூகாசிமீக்களைக் கண்டகண்ட இடங்களிலெல்லாம் இம்சைப்படுத்தத் தொடங்கினார். அவைகளைத் தாங்கவொண்ணாத முஸ்லிம்களின் ஒரு தொகுதியினர் ஜாவா, சுமாத்திரா, மலாயா முதலான தூர கிழக்கு நாடுகளில் குடியேறி வாழத் தலைப்பட்டனர்.

பின்னர், உள்ளூர் அரசியற் பிரச்சினைகள் காரணமாக அந்நாடுகளிலிருந்து கடல் மார்க்கமாக வெளியேறிய சில முஸ்லிம் குழுவினர், இலங்கையின் வடமேற்குக் கரையிலுள்ள புத்தளம், கற்பிட்டி ஆதியாம் பிரதேசங்களை வந்தெய்தினர். அங்கு அவர்கள் நிலபதியாக வாழ்ந்து, சிறு வர்த்தகம், உப்பு உற்பத்தி, முத்துக்குளிப்பு, தெங்குச்செய்கை முதலியவைகளில் ஈடுபட்டனர். அவர்களின் இருப்புக்கு அப்பிரதேசத்தில் வேரூன்றியிருந்த உள்ளூர்க் குழப்பங்களே கால்கோள்களாக அமைந்தன எனக்கூறலாம். புத்தள மாவட்டத்தின் கொத்தாந்தீவுப் பகுதியில் முக்குலத்தினர் என அழைக்கப்படும் முக்குவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களுக்கும் பக்கத்துப் பிரதேசத்தின் தலைவன் மாணிக்கம் என்பானுக்குமிடையில் ஏற்பட்ட போரில், புத்தளக் கடலில் நங்கூரமிட்டிருந்த முஸ்லிம்கள், முக்குலத்தினருக்கு உதவி செய்து, மாணிக்கத்தையும் சிறைப்பிடித்துக் கொலைசெய்தனர். அதற்குப் பிரதியுபகாரமாக முஸ்லிம்களின் வேண்டுகோளுக்கு இயைய, அப்பிரதேசத்திலுள்ளோர் புனித இஸ்லாத்தினை ஏற்றனர். எனவே அரேபிய முஸ்லிம்கள் அங்குள்ள முக்குலப் பெண்களைத் திருமணஞ் செய்து வாழத்தொடங்கினர்.

இன்றும் எமது பிரதேசத்தில் புரையோடிக் காணப்படும் குடிவழி முறைக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான தொடர்பினை அறிதல் அவசிய மாகும். புத்தளப் பிரதேசத்திலிருந்த தென்னிந்திய திராவிடர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் மூலமே குடிமுறைமை பரவியுள்ளது. அங்கு முஸ்லிம்கள் காலூன்றிய காலகட்டத்தில் பிக்கந்தகுடி, நல்லந்தகுடி, கொய்தகுடி, முடிவிளங்குடி, பாண்டியர் குடி, பலவகைகுடி, தேவர்குடி என ஏழு வகையான குடிகள் காணப்பட்டுள்ளன. இந்தியாவிலுள்ள முக்குலத்தினரை கலிங்க மன்னன் விவசாய நடவடிக்கைகளுக்காகவே புத்தளப் பிரதேசத்திலும் யாழ்குடா நாட்டிலும் குடியேற்றியிருந்தான். அவர்களின் கோத்திர மரபே குடிகளாகும். பிற்காலத்தில் புத்தளத்தில் வாழ்ந்த முக்குலத்தினர் மத்தியில் கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் வேகமாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவத் தொடங்கியதும், குடிமுறைமையானது அப்பிரதேசத்தில் படிப்படியாக மறைந்து மட்டக்களப்பின் கிழக்குப் பகுதியில் வேரூன்றியது. ஈற்றில் அங்கிருந்தும் படிப்படியாக அருகி தென்கிழக்கில் மட்டுமே தமிழர், முஸ்லிம்கள் மத்தியில் கலாசார பண்பாட்டு விழுமியங்களை பிரஸ்தாபிக்கும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

புத்தளப் பிரதேசத்தில் வாழ்ந்த பெண்கள் திராவிடர் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகையால் அவர்களின் தாய்மொழியும் தமிழாகவே காணப் பட்டுள்ளது. அதன் காரணமாக அங்கு குடியேறிய அரேபிய முஸ்லிம்களின் பரம்பரையினரும் தமிழ்மொழியைக் கற்பதில் ஆர்வங்கொண்டனர். இலங்கையில் இன்று எங்கெல்லாம் முஸ்லிம்கள் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் மார்க்க உபன்னியாசங்களும் குத்பா (ஜும்ஆ)ப் பேருரைகளும் தமிழ்மொழி யிலேயே நடாத்தப்படுவது இதற்கானதோர் சான்றாகும்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள முஸ்லிம்களின் தாய்வழி உறவினர் முக்குலத்தினர் என்பது திரிபுபடாத உண்மையாகும். (1959 வரை மருதமுனையும் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு கூறாகும்). இன்று இங்குள்ள குடிவழி மரபு, தாய் வழியிலேயே பின்பற்றப்பட்டு வருகின்றது. கிழக்கு வாழ் முஸ்லிம்கள் மத்தியிலுள்ள பணிக்கனார் குடி, படையாண்டகுடி, கலிங்கனார் குடி, நாச்சியார்குடி, வடக்கனார்குடி, சம்மனோட்டி குடி ஆகிய வைகளெல்லாம் ஆரம்பகால முக்குவர்களிடம் குடி கொண்டிருந்த குடிமுறை மைகளே. மட்டக்களப்பு மாவட்ட உதவிச் செயலாளராகப் பணியாற்றி, அகால மரணமடைந்த Y. அகமது அவர்களும் தனது "வாழைச்சேனை - ஒரு வரலாற்றுக் குறிப்பு" எனும் நூலில் "முக்குலத்தினருக்கும் (முக்குவர்) மட்டக் களப்புப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களுக்குமிடையிலான இரத்த உறவினை மறுக்க முடியாது" எனக்கூறியுள்ளதும் நோக்கற்பாலது. இருப்பினும் கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கு பிரத்தியேகமான கலை, கலாசார, சமய விழுமியங்கள் உள்ளன என்பதை எவருமே மறுக்கவில்லை.

இன்று வடக்கே பெரியநீலாவணையையும் தெற்கே பொத்துவிலையும் கிழக்கே வங்கக் கடலையும் மேற்கே அம்பாரை நகரத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள தென்கிழக்குப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்றனர். இவர்களுள் மட்டக்களப்பு வாவியினூடாகப் பயணித்து வந்தவர்கள் மருதமுனைக் கிராமத்தினைச் சேர்ந்தவர்கள் மட்டுமேயாகும். ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னர், துறைநீலாவணை எனும் பழம்பெரும் கிராமத்தில் குடியமர்ந்து வாழ்ந்த முஸ்லிம்கள் மருதமுனை கிராமத்தின் ஆதிக்குடிகளான சீர்பாத குலத்தினருடன் ஒத்துமாறிய ஒரு முஸ்லிம் குழுவினரையே மருதமுனையின் பூர்வீக முஸ்லிம்களாகக் கொள்ளப்படுகின்றது. புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் தனது 'மருதமுனை வரலாறு' எனும் நூலில் ஒத்துமாறியமை பற்றியும் துறைநீலாவணையில் வாழ்ந்த ஆரம்பக்குடி முஸ்லிம்கள் நெசவுத்தொழிலினை தங்களுடைய சீவனாம்சத் தொழிலாகக் கொண்டனர் என்பது பற்றியும் கூறியபோதிலும் அதனைத் தெளிவுபடுத்து வதற்குத் தவறிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

246301

மருதமுனையில் முஸ்லிம்கள் வாழ்வதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த சீர்பாதக்காரர்கள் இந்தியாவிலிருந்து இலங்கையில் குடியேறியோராகும். தென்னிந்தியாவில் செழுமை பெற்றுக்காணப்பட்ட சோழப் பேரரசானது கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கும் எட்டாம் நூற்றாண்டுக்குமிடையில் நலிவடைந்து, பல சிற்றரசுகளாக மாறின. அதன் காரணமாக சோழ மன்னன் குமராங்குசன் என்பான் கி.பி. 831இல் பழையாறை எனுமிடத்தை தலைநகராகக் கொண்டு அரசோச்சினான். அம்மன்னனின் ஆட்சியின் பின்னரே சோழப் பேரரசு புத்துயிர் பெற்று கடல் கடந்து வியாபிக்கக் தொடங்கியது. இந்நிலையில் இலங்கையைச் சேர்ந்த இளவரசன் வாலசிங்கன் (ஜயதுங்க பரராசசிங்கன்) என்பான், குமராங்குசனின் புதல்வி சீர்பாததேவி என்பாளை தென்னிந்தியாவில் வைத்துத் திருமணஞ் செய்துகொண்டான். இளவரசி சீர்பாததேவிக்கு தனது கணவனின் விருப்பப்படி ஈழத்தில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதையுணர்ந்த மன்னன் குமராங்குசன் கப்பற்றொகுதியொன்றில் தனது புதல்வியுடன், அரச குலத்தினர், அந்தணர், வேளாளர், வணிகர் ஆகிய நான்கு குலத்தினரையும் அடக்கி, இலங்கைக்கு அனுப்பினான். அக்கப்பற்றொகுதி வங்கக்கடலின் கிழக்குப் பக்கமாகப் பயணித்து திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தினை வந்தடைந்துள்ளது.

இளவரசி சீர்பாததேவி தனது கணவனின் ஆளுகைக்குட்பட்டிருந்த பிரதேசங்களைச் சுற்றிப்பார்க்க அவாவுற்றாள். அதற்கு ஒருப்பட்ட இளவரசன் வாலசிங்கம், கடல் மார்க்கமாக மட்டக்களப்பை வந்தடைந்து, தனது கப்பற் றொகுதியை மட்டுவாவியின் தென்புலம் நோக்கிச் செலுத்துமாறு கப்பலோட்டி களுக்கு ஆணையிட்டான். அக்கப்பற்றொகுதி, மட்டு வாவியினூடாகப் பயணித்து, அதன் அந்தத்திலுள்ள வீரமுனையில் "மணற்றிடர்" எனுமிடத்தில் தரைதட்டியது. அப்பொழுது அப்பிரதேசத்தில் மனித சஞ்சாரமும் அரிதாகவே காணப்பட்டது. இளவரசன் வாலசிங்கன் அச்சூழலிலுள்ள மக்களின் அனுசரணையுடன் விநாயகர் ஆலயமொன்றினை அமைத்துள்ளான். தன்னுடன் பயணித்து வந்த நான்கு குலத்தினரையும் அங்கு குடியேற்றி, வர்க்கபேதமற்ற ஒரே குலமாகப் பிரகடனஞ் செய்துள்ளான். அப்புதிய கூட்டுக் குலத்தினருக்கு தனது மனைவியின் மீதிருந்த வாஞ்சையினால் "சீர்பாதகுலம்" என நாமமிட்டுள்ளான். இந்நிகழ்வு கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்டதாக நம்பப்படுகின்றது.

11587.08

வீரமுனையில் கால்பதித்த சீர்பாத குலத்தினர் பிற்காலத்தில் பல்கிப்பெருகி, மட்டுவாவியின் கரையோரக் கிராமங்களான துறைநீலாவணை, சேனைக்குடி யிருப்பு, நாவிதன்வெளி, குறுமண்வெளி, மண்டூர், மகிழூர், தம்பலவத்தை, கரையாக்கன் தீவு முதலான இடங்களில் தங்களது குடியேற்றங்களை அமைத் துள்ளனர். அவ்வாறானதொரு குடியேற்றமே ஆரம்ப காலத்தில் மருதமுனை யிலும் இடம்பெற்றதாக நம்பப்படுகின்றது. அதேநேரம், அயற் கிராமமான பெரியநீலாவணையில் முக்குலத்தினரே குடியேறியிருந்தனர்.

இன்றைய மருதமுனைக் கிராமத்தின் 'ஆத்திமேடு' எனுமிடத்தை உள்ளடக்கிய தெற்குப் பிரதேசம் 'சந்திமணல்' என அழைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
வீசேடசேர்க்கை பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

அவ்விடத்திலேயே இன்று மக்கள் மண்டபம் (People Hall), புதிய தபாலகம் என்பன நிறுவப்பட்டுள்ளன. அங்கிருந்து மருதமுனையின் வடக்குத் திசை நோக்கிய மேட்டு நிலத்திலேயே சீர்பாத குலத்தினர் தங்களுடைய குடியேற்றத்தினை நிறுவியுள்ளனர். பிற்காலத்தில் பிரித்தானியரும் பிரதான பாதை (Main Road) அமைக்கும்போது மக்கள் குடியிருந்த திடற்பகுதியை சரிபாதியாகப் பிரித்தே பாதையை அமைத்திருந்ததையும் நோக்கற்பாலது.

கிழக்கு மாகாணத்திற்கு வடக்குப் பகுதியிலிருந்து மட்டு வாவியினூடாகப் பயணித்து, துறைநீவணைக் கிராமத்தை வந்தடைந்த ஆரம்பகால முஸ்லிம் குழுவினர் அக்கிராமத்தில் சீர்பாதகுல இந்துக்கள் வாழ்ந்த இடங்கள் தவிர்ந்த கிழக்குப் பகுதியில் குடியமர்ந்து வாழ்ந்துள்ளனர். அக்குடியேற்றமானது சிறுசிறு நீர்நிலைகளையும் ஊடறுத்து மருதமுனையின் வடபகுதியிலுள்ள ஒல்லிக்கேணி எனுமிடம் வரை நீண்டிருந்ததாக அறிய முடிகின்றது. அதற்கான சான்றுகள் நிறையவுள்ளன. கி.பி. 1949 வரை ஒல்லிக்கேணியில் நிலபதியாக வாழ்ந்த முஸ்லிம்கள், பக்கத்திலிருந்த கிராமங்களின் கெடுபிடிகள் தாங்கவொண்ணாமல், படிப்படியாகக் குடியகல்ந்து மருதமுனையிலுள்ள இனசனத்துடன் இணைந்துள்ளனர். அங்குவாழ்ந்த அப்துல் கபூர். முகம்மது ஹனிபா, அசனார் லெப்பை ஆகியோர் பரம்பரையைச் சேர்ந்தவர், அண்மையில் மரணித்த சேகுதாவுது என அழைக்கப்பட்ட அ.லெ. இத்ரீஸ் (வயது 85) என்பவராகும். தான் அன்றைய அ.த.க.மு. பாடசாலையில் (அல்-மனார் ம.வி.) ஆரம்பக் கல்வியைக் கற்றுக் கொண்டு மதரசாவொன்றில் அல்குர்ஆன் ஓதியவராக தனது பதினைந்து வயது வரை ஒல்லிக்கேணியில் வசித்து வந்ததாகக் கூறியுள்ளார். அங்குள்ள காணிகளின் தாயுறுதிகள் (Deeds) இன்றும் எம்மூரவர் சிலரின் அடிப்பெட்டிகளுக்குள் உறங்கிக் கிடக்கின்றன. சிலர் வழக்குப் பேசியே அழிந்த கதைகளும் நமக்குத் தெரியாததல்ல. ஒல்லிக்கேணிக்கும் மருதமுனைக்குமிடையில் நீண்டு காணப்படும் முக்குலத்தவர் கிராமமே பெரியநீலாவணையாகும்.

ஒரு பிரதேசத்தில் மக்கள், முதன்முதலாகக் குடியேறினால் அவற்றைத் தமது ஊராகக் கொள்வதும், அதற்கென நிரந்தரமானதொரு நாமத்தைச் சூட்டிக் கொள்வதும் இயல்பாகும். அந்நாமம் பெரும்பாலும் காரணப்பெயராகவே காணப்படும். இவ்வுண்மையினை எந்தவொரு சராசரி மனிதனும் ஏற்றுக் கொள்வான். மருதமுனையில் சீர்பாத குலத்தினர் குடியேற்றமமைப்பதற்கு முன்னர் இங்கு மக்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் எதுவுமே கிடைக்கவில்லை. இங்கு முட்புதர்களும், நீர்க்கேணிகளும், இடையிடையே பெரும் காட்டு மரங்களும், கடல்சார்ந்த பிரதேசத்தில் அடம்பன்கொடி, இராவணமீசை என்பனவும் விரவிக்காணப்பட்டுள்ளன. இவ்வாறான பகைப்புலனில், மேட்டுப்பகுதியில் குடியிருந்த சீர்பாத குலத்தினரே "மருதமுனை" எனும் நாமத்தினைச் சூட்டியிருப்பர் என்பது வெள்ளிடை மலையாகும்.

சேறும் சகதியும் நிறைந்த ஆற்றுப்படுக்கைகளில் (River Beds) காட்டு வெள்ளத்தினால் அள்ளுண்டுவரும் மரம் செடி கொடிகளின் விதைகள் (Seeds), எச்ச சொச்சங்கள் என்பன தானாகவே முளைத்து வளர்வது இயல்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வடிப்படையில் பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு ஆகிய கிராமங்களின் மேற்குக் கரையோரமாக அண்மைக் காலம்வரை மருதை, வம்மி மற்றும் பிரப்பம் பற்றைகளும் பரந்து காணப்பட்டமை எம்மில் பலருக்குத் தெரியும். துறைநீலாவணைக்கும் துரைவந்தெய்திய மேட்டுக்கு மிடையில் அணையொன்று அமைக்கப்பட்டு மட்டுவாவியின் உவர்நீர் ஊடுருவலைத் தவிர்த்து, சிறுசிறு குளங்கள் கட்டி மழைநீரைத் தேக்கிவைத்து, மேட்டு வட்டைக் காணியில் துறைநீலாவணை, மருதமுனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கமச் செய்கையில் ஈடுபடத் தொடங்கினர். அதுவரை மருதமுனைக்கும் துறைநீலாவணைக்குமுள்ள போக்குவரத்து பரந்த நீர்ப் பரப்பில் சிற்றோடங்கள் மூலமே இடம்பெற்றுள்ளன.

அக்காலத்தில் 'ஆத்திமேடு' எனுமிடத்தினை அண்டிய கரையோரப் பிரதேசமும் மருத மரங்கள் அடர்ந்த ஒருமுனை (மூன்று பக்கங்களும் நீரினாலும் ஒரு பக்கம் மட்டும் நிலத்துடன் இணைந்த பிரதேசம்) போன்று காட்சியளித்துள்ளது. நீர்வழியினால் பயணிக்கின்ற ஓடங்களும் அவ்விடத்திலே தங்கி மீழ்வதும் வழக்கமாகவிருந்துள்ளது. எனவே தான் எமது கிராமம் 'மருதமுனை' எனும் காரணப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டிருக்கலாம். புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களின் கருத்தும் இதுவேயாகும். (இவை தவிர்ந்த தர்க்க ரீதியான காரணங்கள் எவரிடமாவது இருப்பின் எமது கருத்து வாபஸ் பெறப்படும் - கட்டுரையாளர்).

கடவுள் நம்பிக்கை கொண்ட மக்கள் தாங்கள் முதன் முதலாகக் குடியேறி வாழத் தலைப்படும்போது, கடவுள் வழிபாட்டுத் தலங்களை நிறுவுவது இயல்பாகும். இவ்வுண்மையை நாஸ்திகர்களைத் தவிர எவருமே மறுக்க முடியாது. அவ்வடிப்படையில் மருதமுனையில் வாழ்ந்த ஆரம்பக் குடிகள் நவியான் குளத்தின் தெற்கெல்லையில் விநாயகர் கோயில் ஒன்றை நிறுவி வழிபாட்டில் ஈடுபட்டு வந்துள்ளனர். அக்கோயில் அமைந்திருந்த இடம் 'கோயில் வளவு' என அழைக்கப்பட்டு வந்துள்ளது. அதேபோன்று துறைநீலாவணையில் வாழ்ந்த பூர்வீக முஸ்லிம்களும் சிறுசிறு மஸ்ஜிதுகளை நிறுவி வழிபட்டு வந்துள்ளனர். இன்று பூரான்பிட்டி என அவ்வூர் மக்களினால் அழைக்கப்படும் இபுறாகிம்பிட்டி, நீர்த்துறையை அண்டியுள்ள பள்ளித்திடல் ஆதியாம் இடங்களில் வழிபாட்டுத் தலங்கள் இருந்துள்ளதாக அவ்வூரவர்களிலிருந்து வாய்மொழிச் சான்றுகளைப் பெற முடிந்தது. மாறாக, இவ்வரலாற்று நிகழ்வுகள் பற்றிய சந்தேகத்தைக் கிளப்பிக் கொண்டிருப்பவர்கள் மருதமுனையின் பூர்வீகக் குடிகள் வேறு எங்கிருந்து வந்தனர் என்பதனையாவது கூற வேண்டுமல்லவா!

புரிந்துணர்வு மாற்றம்

துறைநீலாவணையில் வாழ்ந்த முஸ்லிம்களும் மருதமுனையின் ஆரம்பக் குடிகளான சீர்பாதக்காரர்களும் பரஸ்பரம் ஒத்துமாற ஒருப்பட்டதற்கான காரணங்கள் நியாயமானவைகளே! மட்டு வாவியினூடாகப் பயணித்து துறைநீலாவணை வந்து சேர்ந்தவர்கள் ஜாவா நாட்டின் பரம்பரையினராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் சீவனாம்சத் தொழில் நெசவாகும். அவர்கள் அத்தொழிலை தங்களுடைய மூதாதையர்களிடமிருந்து கற்றிருக்கலாம். துறைநீலாவணையில் அவர்களின் குடியேற்றம் சடுதியானதாகையால் அத்தொழிலில் ஈடுபடுவதில் பல இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியேற்பட்டது.

ஆரம்பத்தில் கைத்தறி நெசவு குழித்தறி முறையாகவே அறிமுகமாகிக் காணப்பட்டது. எனவே அதற்கான குழிகளை (PITS) அகழ்வதற்கும், பாவோடுவதற்கான தடிகளை நடுவதற்கும் அக்கிராமத்தில் இயற்கையாகக் காணப்பட்ட கற்றரை ஒவ்வாததாகக் காணப்பட்டது. அத்துடன் மட்டுவாவியி னூடாக வீசிய குளிர்காற்றும் பாவை (Yarn Roll) ப் பண்படுத்துவதற்கும் பெரும் சவாலாகக் காணப்பட்டது. மேலும் அங்கு குடியேறிய முஸ்லிம்கள் நந்நீர் மீன்பிடியிலோ, கமச்செய்கையிலோ பரிச்சயமற்றவர்களாகவும் காணப் பட்டனர். அங்கு குடியேறிய முஸ்லிம்கள் நெசவாளர்கள் (சேணியர்) என்பதை புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீனும் தனது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். முஸ்லிம்களிடம் நெசவுத் தொழிலைக் கற்றுத் தேர்ந்த ஒரு குடும்பம் துறைநீலா வணையில் நீண்டகாலமாக இருந்ததாகவும், அவர்கள் 'சேணியர் குடும்பம்' என அழைக்கப்பட்டதாகவும் அவ்வூரவர்கள் எம்மிடம் சான்று பகர்கின்றனர்.

மருதமுனையில் வாழ்ந்த சீர்பாத குலத்தினர் துறைநீலாவணைக் கிராமத்திற்கு ஒத்து மாறுவதற்கு ஒருப்பட்டதற்கு வலுவான காரணங்களும் இருந்தன. மட்டுவாவியின் கரையோரங்களில் குடியேறிய தமிழ் மக்களுக்கான பெரும்பாலான வயற்காணிகள் வாவியின் மேற்குக் கரையிலேயே காணப் பட்டன. அவ்வடிப்படையில் மருதமுனையில் வாழ்ந்த சீர்பாதகுலத் தோருக்கு ஒதுக்கப்பட்ட காணிகள் கவுடாதீவு, மணல்மேடு முதலிய இடங்களில் இருந்தன. அக்காணிகளில் கமச்செய்கையில் ஈடுபடுவதற்காக மருதமுனை யிலிருந்து அடிக்கடி பிரயாணஞ் செய்வதும் சிரமமாகக் காணப்பட்டது. துறைநீலா வணையில் தமது சாதிக்காரர்களுடன் வாழ்ந்தாலே சிரமமின்றித் தொழில்புரிய முடியும் என அவர்கள் நம்பினர். மேலும், துறைநீலாவணையில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு நந்நீர் மீன்பிடியில் எவ்வாறு பரிச்சயமில்லையோ, அவ்வாறே மருதமுனையில் வாழ்ந்த இந்துக்களுக்கும் கரையோரக் கடல்மீன்பிடியிலும் பரிச்சயமிருக்கவில்லை. இன்றும் தென்கிழக்குக் கடலோரக் கிராமங்களில் வாழும் முஸ்லிம்களுக்குள்ள கடற்றொழில் தேர்ச்சி தமிழ்க் கிராமத்தினருக்கு இல்லாதிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டுவாவியின் மேற்குக்கரையில் மருதமுனை முஸ்லிம்களுக்குச் சொந்தமாகவிருந்த அலியார்வட்டை, சோனிவட்டை (கல்வட்டை) ஆகியவைகள் இன்றும் அதே பெயர்களைக் கொண்டே அழைக்கப்பட்டு வருகின்றன. அப்பகுதிகளில் தென்கிழக்குப் பிரதேசத்திலுள்ள வேறு எந்த முஸ்லிம்களுக்கும் காணிகள் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 1959ஆம் வருடம் மேற்கொள்ளப்பட்ட தேர்தற் றொகுதி மீழமைப்பின் போது காலஞ்சென்ற முதலியார் எம்.எஸ். காரியப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் முயற்சியினால் மருதமுனைக் கிராமம் கல்முனை தேர்தல் தொகுதியுடன் இணைக்கப்படும்வரை மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்புத் தொகுதியின் ஓரங்கமாகவே எமது கிராமம் இருந்துவந்துள்ளது.

1947 தொடக்கம் 1956 வரை நடைபெற்ற மூன்று சட்ட மன்றத் தேர்தலிலும் பட்டிருப்புத் தொகுதியின் தமிழ் வேட்பாளர்களுக்கு மருதமுனை மக்கள் வாக்களித்தது மட்டுமன்றி, வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் தீர்வு வாக்காளர் களாகவும் (Desiding Voters) இருந்து வந்துள்ளனர். 1947இல் இடம்பெற்ற முதலாவது தேர்தலில் பட்டிருப்புத் தொகுதியில் திருவாளர்களான S.M. இராசமாணிக்கம், V.O. குருகுலசிங்கம், U.S. எதிர்மன்னசிங்கம் ஆகிய மூவரும் போட்டியிட்டனர். இராசமாணிக்கம் மண்டூர் கிராமத்தில் புகழ்பூத்த வேளாளக் குடும்பத்தில் பிறந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பட்டதாரி யாகிய அவர், நாட்டின் பல பாகங்களிலும் காணி உப ஆணையாளராகக் கடமை யாற்றி கற்றோர் மத்தியில் நற்புகழ் பெற்றவர். ஆரம்பத்தில் காணப்பட்ட கருத்துக் கணிப்பின்படி அவரே வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. அதேநேரம் அவருடன் போட்டியிட்ட U.S. எதிர்மன்னசிங்கம் சாதாரண கல்வியறிவுடைய முக்குலத்தைச் (முக்முவர்) சேர்ந்தவராகும்.

தாம் தேர்தலில் வெற்றிபெறுவதானால் மருதமுனை மக்களின் ஆதரவு தேவை என்பதை உணர்ந்த எதிர்மன்னசிங்கம், அவர்களுடனான தாய்வழி உறவுக்கு மெருகூட்டியே வெற்றி அடைந்தார். இராசமாணிக்கம் 888 வாக்குவித்தியாசத்தில் தோல்வியைத் தழுவிக்கொண்டார். இதனை பிரபல அரசியல் ஆய்வாளரான கலாபூஷணம் பூ.ம. செல்லத்துரை, "இத்தேர்தலில் மருதமுனை முஸ்லிம்களுக்கு முக்குலத்தினருடனிருந்த தாய்வழி உறவு நினைவுறுத்தப்பட்டதனால், முக்குலத்தைச் சேர்ந்த எதிர்மனைசிங்கம் வெற்றி பெற்றார்" என இராசமாணிக்கம் நூற்றாண்டு மலரில் விதந்துரைத்திருந்தார். எனவே மருதமுனை முஸ்லிம்களுக்கெனத் தனித்துவமான கலை, கலாசார விழுமியங்கள் இருந்த போதிலும் தம்மைச் சூழவுள்ள தமிழ்மக்களுடன் எப்பொழுதும் சௌஜன்யமாகவே வாழவிரும்புவதைக் காணலாம்.

துறைநீலாவணையிலிருந்து மருதமுனைக் கிராமத்துக்கு ஒத்துமாறிய முஸ்லிம்களுக்கு, தூரகிழக்கு நாடுகளிலொன்றான ஜாவாவிலிருந்து குடிபெயர்ந்து வந்திருந்த அபூபக்கர் அலி (பெரிய ராசப்பா), அன்னாரின் மைத்துனர் சேர்மென் முகம்மது ஹாஜி ஆகிய இருவருமே தலைமை தாங்கி வந்தவர்களாகும். அவர்களின் வழித்தோன்றல்களே மஸ்ஜிதுன்னூரிலுள்ள யாகுவக்குடி, சேர்மாது குடி ஆகியவைகளைச் சேர்ந்தவர்களாகும். ஏனைய முக்கிய இருகுடிகள் வடக்கனாகுடி, சம்மனோட்டி குடி என்பவைகளாகும். இம்முஸ்லிம் குழுவானது வடக்குத் திசையிலிருந்து வந்து சேர்ந்ததால் வடக்கனாகுடி என்றும் அவர்களின் ஓடத்தினைச் செலுத்தி வந்தோர் பரம்பரையினர், சம்மனோட்டி குடியினர் என்றும் இன்றும் அழைக்கப்படு கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைநீலாவணையிலிருந்து தங்களுடைய குடும்பத்தினருடன் மருதமுனை நோக்கி வந்தவர்கள் சீர்பாதகுலத்தினர் வசித்து வந்த வடபகுதியிலேயே தங்களுடைய ஆதிக் குடியேற்றத்தினை நிறுவியுள்ளனர். மேலும் இன்று மஸ்ஜிதுன்னூர் அமைந்துள்ள அதேயிடத்தில் அன்னவர்களினால் முதன் முதலாகச் சிறியதோர் மஸ்ஜித் கட்டப்பட்டு ஐவேளைத் தொழுகையும் ஜும்ஆவும் நடாத்தப்பட்டுள்ளன. நீண்ட காலமாக அம்மஸ்ஜித் அதன் தாபகத் தலைவரின் நாமத்தைத் தாங்கி 'அபூபக்கர் அலியப்பாப் பள்ளி' என அழைக்கப்பட்டுள்ளது. மேலும் அம்மஸ்ஜித் அவக்கலியப்பாப் பள்ளி, பெரிய ராசப்பாப்பள்ளி என்றெல்லாம் பாமரர்களினால் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அம்மஸ்ஜித் அமைப்பதற்கான மரமும் களிமண்ணும் அதன் சூழலிலிருந்தே பெறப்பட்டுள்ளன. கி.பி. 1860இல் மருதமுனையின் தென்புலத்தில் மஸ்ஜிதொன்று அமைக்கப்படும்வரை, மருதமுனையிலிருந்த ஒரேயொரு மஸ்ஜித் இதுவேயாகும்.

காலத்துக்குக் காலம் இம்மஸ்ஜித் விஸ்தரிக்கப்பட்டு 1840ல் கற்கட்டடமாக மாற்றியமைக்கப்பட்டது. அக்கட்டமும் 1926இல் முற்றாக நிர்மூலமாக்கப் பட்டு இஸ்லாமியக் கட்டடக்கலையின் அம்சங்கள் பொதிந்ததாக மஸ்ஜிதொன்று அமைக்கப்பட்டது. முதிரை மரங்களிலான பெரும்பெரும் கடைச்சல் தூண்களையும், அரபு எழுத்தணியினாலும் பூங்கொடிகளினாலும் செதுக்கிய அலங்கார வேலைப்பாடுகளையும் கொண்ட நுழைவாயிலையும், மொஷைக் (Mosik) நுண்கலையை ஞாபகமூட்டும் பன்னிற வேலைப்பாடுடைய கண்ணாடிச் சாரளங்களையும், எண்கோண வடிவுடைய நீர்த்தொட்டியையும் (ஹவ்லு) அடக்கி சிற்றோட்டினால் வேயப்பட்டு வனப்புமிகு மஸ்ஜிதாகக் காணப்பட்டது. அம்மஸ்ஜித் வெள்ள அபாயத்திற்கு அஞ்சி உயரமான அடித்தனத்தில் கம்பீரமாகக் காட்சி யளித்தமை இன்றும் பசுமையான நினைவாகவுள்ளது.

வளர்ந்துவரும் சனத்தொகைக்கேற்ப 1977.04.08 இல் "மஸ்ஜிதுன்னூர்" எனும் பெயரில் மாடியைக் கொண்ட நவீன மஸ்ஜித் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் வரை அம்மஸ்ஜித் "வடதெருப்பள்ளிவாசல்" என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது. இன்று மஸ்ஜிதுன்னூர் தென்கிழக்கு நுழை வாயிலில் மாடியைக் கொண்ட வனப்புமிகு தோற்றத்துடன் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அதன் முன்புறத்தில் எமது கிராமத்தைச் சேர்ந்த சுலைமாலெவ்வைப்போடி இப்றாலெவ்வைப்போடி என்பவரினால் நன்கொடை யாக வழங்கப்பட்ட காணியில் கி.பி. 1911இல் அ.த.மு.க. பாடசாலை அமைக்கப்பட்டது. இன்று அப்பாடசாலை அல்-மனார் மத்திய கல்லூரி எனும் நாமத்துடன் புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது. இப்பாடசாலை உருவாக்கப் படுவதற்கு முன்னர் எம்மவர்கள் பாண்டிருப்பின் மத்தியில் அமைந்திருந்த கிறிஸ்தவ மிஸனரிப் பாடசாலையிலேயே தங்களுடைய முதனிலை கல்வியைக் கற்றிருக்கின்றனர்.

1978இல் வீசிய சூறாவளிப் பரபரப்பிலிருந்து மருதமுனைக் கிராமம் விடுபட்டதும் கிழக்கின் கரையிலிருந்த ஸம்ஸல் இஸ்லாம் வித்தியாலயம் 1979-02-28இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலயமாக அன்றைய கல்முனைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் (UNP) சட்டத்தரணி A.R. மன்சூர் அவர்களின் அனுசரணையுடன் தரமுயர்த்தப்பட்டது. அவ்வமையம் அதன் முதலாவது அதிபராக A.R.A. அஸீஸ் அவர்கள் (முன்னாள் கல்விக்கல்லூரி - முதல்வர்) சேவையாற்றினார்கள். 1992இல் மருதமுனை அல்-மனார் மகாவித்தியாலயம், மத்திய கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இக்கல்லூரியும் 1993-07-01இல் மத்திய கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டது. 2004இல் அக்கல்லூரி சுனாமியினால் சிதைவுறும் வரை அங்கு 1680 மாணவ மாணவியர் கற்றுக்கொண்டிருந்தனர். மருதமுனையின் கல்வி வளர்ச்சியில் தேக்கநிலை ஏற்படக்கூடாது என்பதை யுணர்ந்த அதிபர்களும் ஆசிரியர்களும், பெற்றோரும் தன்னார்வலர்களும் சேர்ந்து அயராது மேற்கொண்ட முயற்சியினால் மருதமுனையின் மேற்குப் புறத்தில் சகல வசதிகளுமுடைய அக்கல்லூரி உருவாக்கப் பட்டது. இன்று இக்கல்லூரியும் அல்-மனார் கல்லூரியும் சினேகபூர்வமான புரிந்துணர்வுடன் ஊரின் மட்டுமன்றி, பிரதேசத்தின் வித்தியாவிருத்திக்காக உழைத்து வருகின்றன. ஷம்ஸ் மத்திய கல்லூரி கிழக்கிலிருந்து விடுபட்ட பகுதியில் அங்கிருந்த எச்ச சொச்சங்களைத் திருத்தி அன்புக்குரிய மாணவன் A.R. நிஃமதுல்லாஹ் (அறநிலா) தன்னார்வலர் களின் துணையுடன் ஆரம்பப் பாடசாலையொன்றை நிறுவியுள்ளார். எம்மைப் பொறுத்த வரையில் அப்பிரதேசத்திலுள்ள வறிய சிறுவர்கள் நிர்க்கதியானவர்களாக ஆகிவிடாமல்தடுப்பதற்கான தீர்க்கதரிசனமானதோர் முயற்சியென்றே அதனைக் கருதுகின்றேன். அன்னாருக்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

அபூபக்கர் அலியப்பாப் பள்ளி உருவாகி நீண்டதோர் இடைவெளிக்குப் பின்னர் அம்மஸ்ஜிதின் நிருவாகிகளுடன் ஏற்பட்ட பிணக்கொன்றின் காரணமாக வடபுலத்திலிருந்து வெளியேறிய அறுவர் கொண்ட ஒரு குழுவினர் தென்புலம் நோக்கிக் குடிபெயர்ந்துள்ளனர். (விரிவஞ்சிப் பெயர்கள் குறிப்பிட வில்லை). அவர்கள் தங்களின் முதலாவது பணியாக மஸ்ஜிதொன்றை அமைப்பதில் கவனஞ் செலுத்தினர். இன்றைய மஸ்ஜிதுல் கபீருக்கு முன்னால் காணப்பட்ட இத்திமரத்தடியில் கி.பி. 1860இல் மஸ்ஜிதொன்றை நிறுவி யுள்ளனர். அச்சூழலிலுள்ள காட்டு மரங்களையும், நற்பிட்டிமுனையிலிருந்து அகழ்ந்து கொண்டுவரப்பட்ட சுண்ணக் கற்களையுங் கொண்டு அபூபக்கர் அலி மஸ்ஜிதைவிடச் சற்றுப் பெரியதொரு மஸ்ஜித் அங்கு அமைக்கப்பட்டது. அம்மஸ்ஜித் தென்தெருப்பள்ளி, பெரியபள்ளி என்றெல்லாம் அண்மைக்காலம் வரை அழைக்கப்பட்டு வந்தது. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வட ஆபிரிக்காவின் ஹலரமவ்த் எனும் பிரதேசத்தில் பிறந்த அஸ்ஸெய்யித் அப்துர் ரஹ்மான் மவுலானா என்பவர் மருதமுனையில் வாழ்ந்து மார்க்கப் பிரசாரத்தில் ஈடுபட்டு இங்கேயே மரணமானார். அன்னாரை அடக்கஞ் செய்த இடமும் நீண்டகாலமாக அம்மஸ்ஜிதுக்கு அண்மையில் இருந்ததும் நினைவுகூரத் தக்கது. அம்மஸ்ஜித், காலத்துக்குக் காலம் பல படித்தரங்களையும் தாண்டி, மஸ்ஜிதுல் கபீர் எனும் நாமத்துடன் மிளிர்கின்றது. இன்ஷா அல்லாஹ் தற்பொழுது தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதன் விஸ்தரிப்புப் பணிகள் முற்றுப்பெற்றதும் இப்பிர தேசத்திலேயே நாமத்திற்கேற்ப வனப்புமிகு மஸ்ஜிதாக காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலமாக மஸ்ஜிதுல் கபீரிலும் மஸ்ஜிதுன்னூரைப் போன்ற குடிவழிக் குறிகளைக் கொண்ட (Totems) பத்துக்குக் குறையாத குடிகள் காணப்படுகின்றன. அவைகளின் முக்கிய குடிகளான சின்னக்கதிரவன் குடியின் ஒரு கூறாக, வடக்கனா குடியும், சில்லறைக் குடியின் ஒரு பிரிவாக சம்மனோட்டி குடியும் இன்றும் மஸ்ஜிதுல் கபீரில் உள்ளன. இக்குடி முறைமைகள் (Totems) இந்துக்களிலிருந்து வந்தவை என்பதனை எமது தொன்மைத் தொடர்புகள் காட்டுகின்றன. தென்புலத்தில் மஸ்ஜித் அமைக்கப்பட்டதன் பின்னர் மக்கட் தொகையானது அங்கு படிப்படியாக நகரத் தொடங்கியதாலும் வேறு பல காரணங்களி னாலும் (விரிவஞ்சி விளக்க முடியவில்லை). பிற்காலத்தில் ஒரு பெரிய கிராமம் உருவாகி இன்று ஒரு நகரத்துக்குரிய சகல அந்தஸ்தினையும் மருதமுனை பெற்றுள்ளது. அதேநேரம் இன்று எம்மூரில் சிறிதாகவோ பெரிதாகவோ பதினைந்துக்குக் குறையாத மஸ்ஜிதுகள் காணப்படுகின்றன. ஆனால் இவ்விரு மஸ்ஜிதுகளில் மட்டுமே குடிவழி முறையில் பரிபாலனம் நடைபெறுகின்றன. இன்ஷா அல்லாஹ் காலம் பதில் சொல்லும் வரையில்,

> "எவர் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பி தொழுகையையும் கடைப் பிடித்து ஏழைவரியும் கொடுத்து வருவதுடன் **அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும்** அஞ்சாமல் இருக்கின்றார்களோ அவர்கள் தான் அல்லாஹ்வுடைய மஸ்ஜிதை பரிபாலனஞ் செய்யக்கூடியவர்கள். அவர்கள்தான் நேர்வழியினர் என்று நம்பத் தகுந்தவர்கள்." (9:18) எனும் அல்லாஹ்வின் கூற்றுக்கியைய தாங்களும் நடந்து மக்களையும் வழிநடாத்துவார்களானால் மஸ்ஜித் பரிபாலகருக்கு நிகராக எவருமே உலகில் இருக்க முடியாதல்லவா!

அகல்வும் மீளலும்

மருதமுனைக் கிராமமானது கடலுக்கும் களனிக்குமிடையில் அமைந்திருந்த போதிலும் வளர்ந்துவரும் சனத்தொகையினைப் போசிக்குமளவுக்கு என்றுமே வளங்களைக் கொண்டிருக்கவில்லை. இங்கிருந்த பெரும்பகுதி மக்கள் அவர்களின் மூதாதையர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கைத்தறி நெசவினையே பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். கடலை அண்டி வாழ்ந்த ஒருசில குடும்பத்தினர்கள் மட்டும் கரைவலை மீன்பிடியில் ஈடுபட்டனர். அவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் தங்களுடைய தலைமைத் தண்டல்காரர்களின் நாமங்கொண்டே அழைக்கப்பட்டு வருகின்றனர்.

கைத்தறி நெசவில் ஈடுபட்டவர்களுக்குத் தேவையான நூல் (Yarn), சாயம் மற்றும் ஏனைய உபகரணங்கள் யாவும் தென்னிந்தியாவிலிருந்தே பெறப்பட்டன. அவைகளின் துணைகொண்டு முடிவுப் பொருள்களாக்கப் பட்ட சாரம், மருதமுட்டுக்கம்பாயம், பச்சவடச் சால்வை, மோகினிப்பட்டுச் சேலை ஆகியவைகள் அக்காலத்தில் பிரசித்தி பெற்றுக் காணப்பட்ட போதிலும் அவைகள் மூலம் பெறப்பட்ட வருமானமும் போதாமலிருந்தது. இங்கிருந்த பெண்கள் தங்களுடைய நீர்த்துரவுகளிலும் ஒல்லிக் கேணியிலுமிருந்தும் பெறப் பட்ட பன்புற்களையும், பனையோலைகளையுங் கொண்டு பாய், தட்டு, பெட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டான், கடகம் முதலியவைகளையும் முடைவதில் ஈடுபட்டனர். அவைகளும் ஊர்மக்களின் சொந்தத் தேவைகளையும் பூர்த்தி செய்யப் போதவில்லை. தங்களுடைய சீவனோபாயத்துக்கான வேறு தொழில்கள் புரிவதற்கும் வாய்ப்புக்களும் நீண்ட காலமாக இருக்கவில்லை.

இவ்வாறான பகைப்புலனில், 1920களில் குறிப்பாக மருதமுனையின் வடபுலத்தில் வாழ்ந்த ஆண்களுள் ஒரு பகுதியினர் 150 கிலோ மீற்றருக்கப் பாலுள்ள தமன்கடுவைப் பிரதேசத்துக்கு (வடமத்திய மாகாணம்) தங்களுடைய மாட்டு வண்டிகள் சகிதம் சென்றனர். அங்கு, மகாவலிகங்கை ஆற்றுப்படுக்கையிலுள்ள தரிசு நிலங்களைத் துப்புரவு செய்து சுருட்டுப் புகையிலைச் செய்கையிலும் சிறிதளவு மந்தை வளர்ப்பிலும் ஈடுபட்டனர். ஏறாவூரைச் சேர்ந்த முஸ்லிம்களும் இத்தொழில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

தொழிலுக்காகச் செல்லும் பாதையில் சுங்காவில் (Sungavil), தம்பாளை (Tampala) ஆகிய முஸ்லிம் கிராமங்களும் அமைந்திருந்ததனால் தங்களுக்குத் தேவையான தொழிலாளர்களையும் இலகுவாகப் பெறமுடிந்தது. சுங்காவில் கிராமத்தினுடனான தொடர்பு நாளுக்கு நாள் அதிகரித்தமையினால் தொழிலுக்காகச் சென்ற இளைஞர்கள் சிலர், அங்கேயே திருமணம் செய்து நிலைபதியாகிவிட்டனர். இச்செயற்பாடானது அவசியமான தொழிலாளர்களை இலகுவாகப் பெறுவதற்கும், பிரதான உற்பத்தியான சுருட்டுப் புகை யிலையை களஞ்சியப்படுத்தி (யாழ்ப்பாண வர்த்தகர்கள் கொள்வனவு செய்யும் வரை) வைப்பதற்கும் வழிசமைத்துக் கொடுத்தது. அத்தொழிலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி, அங்கு நிரந்தரமாக வாழத் தொடங்கிய சிலராக, மீராலெவ்வை (வண்டர்), இப்ராலெவ்வை (கலட்டியர்), சீனி முகம்மது (பானாவர்) இபுறாலெவ்வை (நாகூர் லெவ்வை), முகம்மது சாலிஹ் (மூனாச்சாவன்னா) முகம்மது ஹனிபா ஆகியவர்களைக் குறிப்பிட முடியும். அவர்களுடைய குடும்பங்கள் நாளுக்கு நாள் பல்கிப் பெருகியதனால் இன்று 'சின்ன மருதமுனை' என்றே அழைக்கப்படுகின்றது. கி.பி. 2008இல் பழைய சுங்காவிலில் காணப்பட்ட 235 குடும்பங்களுள் அரைவாசிக்கு மேற்பட்டவை மருதமுனைக் கிராமத்தின் தந்தைவழித் தோன்றல்களாகும். 1980களின் பின்னர் நாட்டில் உருவான பயங்கரவாத நடவடிக்கைகள், புகைபிடித்தலுக்கு எதிரான விளம்பரங்கள் ஆகியவைகளின் தாக்கத்தினால் சுருட்டுப் புகையிலையைக் கொள்வனவு செய்த யாழ்ப்பாணத் தனியுரிமை வர்த்தகர்களின் வருகை படிப்படியாகக் குறைந்ததனால் அத்தொழிலின் செய்கையும் அருகிவிட்டது. எனவே, அங்கு திருமணஞ் செய்து குடும்பங்களுடன் வாழ்ந்தவர்களைத் தவிர ஏனையோர் தாயகம் மீண்டதால் மருதமுனையில் தொழிலில்லாப் பிரச்சினை மேலும் வலுவடையத் தொடங்கியது. இருந்தும் இரு கிராமங்களுக்குமிடையிலான திருமண பந்தம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது எனலாம்.

மருதமுனை வடபுலத்தினர் சிலர், தமன்கடவை நோக்கிச் சென்ற சம காலத்தில் தென்புலத்தைச் சேர்ந்த சிலர் வர்த்தக நோக்கமாக ஊவா - வெல்லஸ்ஸப் பகுதி நோக்கிச் சென்றனர். அங்குள்ள தும்பகஹவெலப் பிரதேசத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக நிலையங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். அக்கால கட்டத்தில் மருதமுனையின் ஒரு பகுதி மிகவும் செழுமை பெற்றுக் காணப்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இங்கு உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறிப் புடைவை வகைகளை விற்று விட்டு அங்கு உற்பத்தியான மரக்கறி, பழவகை, கிழங்கு வகைகளை கல்முனைப் பிரதேசத்திற்கு வாகனங்களில் ஏற்றிக்கொண்டு வந்து விற்பனை செய்து பொருளீட்டவும் முடிந்தது. சிலர் பலசரக்கு வர்த்தக நிலையங்களையும் நிறுவி யிருந்தனர். அவ்வாறான வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டோரில் குறிப்பிடத் தக்கவர்கள், மு.கா. ஆதம்பாவா (கோசி கண்ணியர்), அவருடைய மருமகன் ஏ.எல். இப்றாலெவ்வை, கலந்தர் லெவ்வை மரைக்கார் (கூனாக்கானா), அவருடைய மருமகன் தம்பிலெவ்வை மனேஜர், ஏ.எம். முகம்மது சாலிஹ், ஏ.ஆர்.எம். யூசுப், ஏ.ஆர்.எம். இப்ராகிம், அப்துர்ரஹ்மான், அபூவக்கர் மரைக்கார் ஆகியோராகும். தற்பொழுது எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்.எச்.எம். ஹனிபா என்பவர் அங்குள்ள கிராம சபை உறுப்பினராக இருந்ததுடன் தோட்டந்துரவுகளுக்குச் சொந்தக் காரராகவும் இருந்துள்ளார்.

தும்பகஹவெலயில் வாழ்ந்த எம்மவர் அங்கு சிறிய மஸ்ஜிதொன்று நிறுவுவதற்கு பல தடவை முயற்சி செய்தபோதிலும் அங்கிருந்த பெரும்பான்மை சமூகத்தினர் தடையாக இருந்து வந்துள்ளனர். மேலும், அங்கு முஸ்லிம்கள் மீது காழ்ப்புற்ற பெரும்பான்மையினரின் நெருக்குதல் தினாந்தம் அதிகரித்தமை யினால் சகலரும் படிப்படியாக மருதமுனைக்கு மீள வேண்டிய அவசியமேற் பட்டது. அங்கு கரும்புச்சாறு பிளியும் தொழிலில் ஈடுபட்ட அபூபக்கர் (தம்பிக்காக்கா) என்பவரே கடைசியாக ஊர்வந்துறைந்தவர் என நம்பப்படு கின்றது. இருந்த போதிலும் அங்கிருந்து மீண்டவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சில இளைஞர்கள் அப்பிரதேசஞ் சென்று மரவள்ளிக்கிழங்கு, வாழைக் குலை, பழவகைகள், மரக்கறி என்பன கொள்வனவு செய்து கல்முனைப் பிரதேசத்தில் விற்பனை செய்து வருவதை நாம் இன்றும் அவதானிக்கலாம். மேலும், எம்மவரின் தும்பகஹவெலத் தொடர்பினால் எமது கிராமத்தில் பணப் புழக்கம் அதிகரித்திருந்தமையையும் மறுக்க முடியாது.

இத்தொடரில் கி.பி. 1947இல் உருவாக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டம் இலங்கையில் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியது போன்று எமது கிராமத்திலும் ஏற்படுத்தத் தவறவில்லை. இலங்கையின் முதலாவது பிரதம அமைச்சராகவிருந்த (UNP) D.S. சேனனாயக்காவினால் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இலங்கையின் மத்திய மலைநாட்டினை அண்டிய கல்லோயாக் குன்றுகளில் ஊற்றெடுத்து கிழக்கே நோக்கிப் பாய்ந்த கல்லோயா நதியின் முக்கிய கிளையாகிய பதுளை ஓயாவை, இயற்கை அரண்களைக் கொண்ட இங்கினியாகலை எனுமிடத்தில் அணை (Dam) ஒன்று கட்டி, பாரிய நீர்த்தேக்கமொன்று அமைக்கப்பட்டது. அத்தேக்கம் "சேனனாயக்க சமுத்திரம்" என அழைக்கப்படுகின்றது. அதிலிருந்து வெளியேற்றப் படும் நீரிலிருந்து உச்சப் பயன்களைப் பெறும் பொருட்டு வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு, இரு மருங்கிலும் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் மருதமுனைக் கிராமம் பட்டிருப்புத் தொகுதியில் அடங்கியிருந்தது. அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக காலஞ்சென்ற எஸ்.எம். இராசமாணிக்கம் அவர்கள் இருந்தார்கள். அன்னவரின் அயராத முயற்சியினால் 1953இல் வறுமைக் கோட்டிலிருந்த ஏறக்குறைய முன்னூறு குடும்பத்தினர் அக்குடியேற்றத்திட்டத்தின் 4ஆம் 5ஆம் அலகுகளில் (Colonies) குடியமர்த்தப்பட்டனர். இன்னும் பலரைக் குடியேற்றுவதற்கு இராசமாணிக்கம் அவர்கள் விரும்பிய போதிலும் எம்மவரின் வரட்டுக்கௌரவம் அதற்கு இடங் கொடுக்கவில்லை. மருதமுனைக்கென ஒழுங்கான அரசியல் சமூகத் தலைமைத்து வங்கள் அரிதாகவிருந்த அக்கால கட்டத்தில் இராசமாணிக்கம் செய்த அளப்பரிய சேவையை அன்றைய மக்கள் ஒரு வரப்பிரசாதமாகவே கருதியிருந்தனர். அக்குடி யேற்றத்துக்கான ஒத்தாசையை அன்றைய கல்முனைத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், எம்.எஸ். காரியப்பர் அவர்கள் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

அன்றைய ஆட்சியாளரின் முக்கிய குறிக்கோள் மக்களைக் குடியேற்றி தொழில்வாய்ப்பினை வழங்கி வறுமையைக் கட்டுப்படுத்துவதாகும். அவ்வடிப்படையில் குடியேற்றவாசிகளின் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மூன்று ஏக்கர் நீர்ப்பாசன வயற்காணி, இரு ஏக்கர் குடியிருப்பு நிலம், ஒரு சோடி உழவு மாடு, இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட ஒரு கறவைப்பசு ஆகிய வைகளும் வீட்டுத் தளவாடங்களும் வழங்கப்பட்டன. அவர்களுக்கான உறைவிடமாக தலா $10' \times 10'$ சதுரவடிப் பரப்பைக் கொண்ட மூன்று அறைகளையும் இரு வராந்தாக்களையும் (VARANDAH) உள்ளடக்கிய இல்லமொன்றும் புறம் போக்கு நிலத்தில் கழிவறை (Lavatory) ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அவர்களுக்குத் தேவையான நீரினை அருகிலுள்ள வாய்காலிலிருந்து பெறுவதற்கு வாய்ப்புச் செய்து கொடுக்கப்பட் டிருந்தது. இவ்வாறான வாய்ப்பு வசதிகளைக் கண்ணுற்ற ஆரம்பகாலக் குடியேறிகள் அடைந்த உவகைக்கோர் அளவேயில்லை. வாய்ப்புக்களைத் தவறவிட்ட பலர் வாயூறிக் கொண்டிருந்தனர். அத்துடன் அக்குடியேற்றங்களை நோக்கி அவர்களின் இனசனங்கள் சதங்கை பூட்டிய மாட்டு வண்டிகளிலும் துவிச்சக்கர வண்டிகளிலும் மருதமுனையிலிருந்து அங்கு சென்று குசலம் விசாரித்து வருவதும் போவதும் கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்பட்டது.

ஆரம்பத்தில் மருதமுனை மக்களை கொலனிகளில் குடியேற்றி அவர்களுக்கான கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதில் பலர் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கோர் எம்மைவிட்டும் பிரிந்தவர்களான யூ.எல். முகம்மது காசிம் ஓடாவியார் (எம்.சீ.எம். இஸ்மாயில் ஆசிரியரின் தந்தை), ஏ. அகமது லெவ்வை ஆலிம் (ஏ.எம். அப்துல்லாஹ் ஆசிரியரின் தந்தை), சின்னலெவ்வை புச்சர், எம். மீராலெவ்வை, பக்கீர்பிள்ளை, மு.பா. அலியார், இப்றாலெவ்வை, அச்சு முகம்மது வட்டைவிதானை, அபூபக்கர் - அப்துர்ரஸ்ஸாக் சகோதரர்கள் ஆகியோராகும். அவர்களது அயராத முயற்சியினால் ஐந்தாம் கொலனியில் ஐவேளைத் தொழுகையும் ஜும்ஆவும் நடாத்துவதற்காக மஸ்ஜிதொன்று நிறுவப்பட்டது. அதன் ஆரம்ப காலத் தலைவராக முகம்மது காசிம் ஓடாவியாரும், ஹத்தீபாக அகமதுலெவ்வை ஆலிமும் மக்களால் நியமிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மூரவர்கள் ஆரம்பத்தில் உற்சாகத்துடன் கொலனியில் குடியேறிக் கமச் செய்கையில் ஈடுபட்ட போதிலும், காலப்போக்கில் அவர்களின் குடியேற்றம் நலிவுறத் தொடங்கியது. அதற்கான பிரதான காரணம், அவர்கள் கமத் தொழிலில் பரிச்சயமற்றிருந்ததேயாகும். எனவே, அத்தொழில் தொடர்பாக ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட இடர்பாடுகளைத் தாங்கிக்கொள்ளும் திராணி அவர்களிடம் இருக்கவில்லை. தங்களுடைய வயல் நிலங்களை சிரமப்பட்டு பண்படுத்தியதற்குரிய மகசூல் கிடைக்கவில்லையே எனும் வெறுப்புணர்வு நாளுக்கு நாள் அவர்களிடம் வளரத்தொடங்கியமையால், தங்களுடைய நிலபுலன்களை விட்டும் வெளியேறுவதே உசிதமானது எனும் முடிவுக்கு வந்தனர். அவர்களை ஆற்றுப்படுத்துவதற்கான அனுபவசாலிகளும் அவர்கள் மத்தியில் காணப்படவில்லை.

குடியிருப்புக்களை கைமாறிக் கொடுத்துவிட்டு மருதமுனைக்கான மீழ்வருகைக்காக கமச் செய்கையிலிருந்த பிடிப்பின்மையை காரணமாக அவர்கள் கூறியபோதிலும் மேலும் பல நிமித்தகாரணங்களையும் முன்வைத்தனர்.

(1) பாடுபட்டுக் காடுவெட்டிக் களனியாக்கிக் கமச்செய்கையில் ஈடுபட்ட போதிலும், யானை, காட்டுப்பன்றி முதலிய மிருகங்கள் பயிர்களைச் சேதப் படுத்தியமையினால் அதற்கான பாதுகாப்பு இருக்கவில்லை.

(2) விசப்பாம்புக் கடியினால் அடிக்கடி அகால மரணங்கள் சம்பவிக்கத் தொடங்கின. விவசாயச் செய்கைக்காகப் பற்றைக் காடுகள் அழிக்கப்பட்டதும் பாம்பின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. நீர்ப்பாம்பினைக் கண்டாலே தொடை நடுங்கிய மருதமுனை மக்கள் இரவு வேளைகளில் வீட்டைவிட்டு வெளியேறுவதற்கே அச்சப்பட்டமை.

(3) விவசாயத்துக்குத் தேவையான நீரை வழங்குவதில் பெரும்பான்மை சமூகத்தினரும், அவர்களைச் சேர்ந்த அதிகாரிகளும் பாரபட்சம் காட்டத் தொடங்கியமை. மேல்வாய்க்கால்களில் குடியிருந்தவர்களினால் நீர் வினியோகம் அடிக்கடி கட்டுப்படுத்தப்பட்டமையினால் தேவைக்கேற்ப நீரினைப் பெறமுடியவில்லை.

(4) அடிப்படைச் சுகாதார வசதி, கல்வி வசதி ஆகியவைகள் மிக அரிதாகக் காணப் பட்டமை.

(5) குடியேற்றப் பிரதேசம் (Colony Area) மருதமுனைக் கிராமத்துக்கு மிகவும் அண்மையில் இருந்தபடியால் நினைத்த மாத்திரத்தில் அங்கு போவதும் வருவதுமாக இருந்தனர். அதன் காரணமாக அநேகமானவர்களுக்கு பிறந்த மண்ணில் இருந்த பிடிப்பு புகுந்த மண்ணில் இருக்கவில்லை. ஆகையினால் கமத்தொழிலில் கிடைக்கும் பருவகால ஓய்வினையும் தமது இனசனத் தினருடனேயே கழிக்க விரும்பியமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) ஒப்பீட்டளவில் மருதமுனை வாழ்க்கை முறை குடியேற்றவாசிகளுக்கு சொகுசாகத் தென்பட்டதனால் அதே வாய்ப்பினை குடியேற்றங்களிலும் எதிர்பார்த்தனர். சான்றாக தங்களுடைய ஆடைகளைக் கழுவி ஸ்திரிக்கை (Iron) பண்ணிக் கொடுப்பதற்காக,, பெரியநீலாவணையைச் சேர்ந்த நாகமணி எனும் சலவைத் தொழிலாளிக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் காணியையும் உறையுளையும் ஒழுங்குசெய்து கொடுத்திருந்தமையைக் குறிப்பிடலாம்.

246301

(7) திருமணப் பந்தங்களை மருதமுனையில் நிலபதியாக வாழும் இனபந்துக்களுடனேயே வைத்துக்கொள்ள வேண்டும் எனும் மனப்பாங்கும் அவர்களிடம் தொடர்ந்தும் இருந்தமை.

(8) 1978இல் வீசிய சூறாவளியினால் சிலருடைய உடைமைகளும் நிரந்தரப் பயிர்களும் சேதமுற்றன. இந்நிகழ்வும் சிலருடைய குடியல்வுக்குச் சாதகமாக அமையத் தவறவில்லை.

(9) அங்கு குடியேற்றப்பட்ட மக்களின் நலன்களைப் பேணி ஆர்வமூட்டக்கூடிய அரசியல்வாதிகளோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ அவர்கள் மத்தியில் இருக்கவில்லை. மேலும், ஆரம்பத்தில் அங்கு குடியேறுவதற்கு ஆர்வமூட்டிய முன்னோடிகள் சிலரின் பிற்கால அடாவடித்தனங்களும் குடியேற்றத்தை விட்டும் வெளியேறக் காலாக இருந்தமை.

(10) 1980களின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதப் பிரச்சினைகளினால், பல்வேறு கோணங்களிலிருந்தும் அச்சுறுத்தல்களும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டமையால் "செத்தாலும் இனசனத்துடன் சாவோம்" எனும் வைராக்கிய உணர்வு சிலருக்கு ஏற்பட்டமை.

ஆரம்ப காலத்தில் ஆர்வத்துடன் இடம்பெற்ற குடியேற்றம் படிப்படியாக நலிவடைந்தமைக்கு மேற்கூறிய காரணங்களும் கால்கோள்களாக அமைந்திருந்தமையையும் நாம் அவதானிக்க முடிந்தது. எனவே அவர்கள், தங்களுடைய நிலபுலன்களை, விவசாயத் துறையில் தேர்ச்சிபெற்ற கல்முனைக்குடி, நற்பிட்டிமுனை, சாய்ந்தமருதுக் கிராமத்தவர்களுக்கு சொற்ப கிரயத்துக்குக் கைமாறிக் கொடுத்துவிட்டு படிப்படியாக மருதமுனைக்கு வரத்தொடங்கினர். இவர்களின் வருகையினால் குடியிருப்புக் காணிகளின் விலை விஷம்போல் ஏறத்தொடங்கியதுடன் மேலும் சனநெருக்கடி அதிகரிக்கத் தொடங்கியது. இந்நிகழ்வினை எமது கிராமத்து பூசுவாச் சிந்தனையாளர்களும் பயன்படுத்தத் தவறவில்லை. இன்று கொலனிக் குடியிருப்புக் காணிகள் ஒவ்வொரு துண்டும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியுடையதாகக் காணப்படுகின்றது. அவ்வீனச் செயலானது தங்களுடைய பரம்பரையினருக்குச் செய்த பாரிய துரோகம் என்பதை குடியேற்றவாசிகள் பிற்காலத்திலேயே உணரத் தொடங்கினர். இன்னும் நூற்றுக்குட்பட்ட குடும்பத்தினரே அங்கு வாழ்வதாக அறியமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றவாசிகளின் மீழ்வருகையினால் மருதமுனைப் பிரதேசத்தில் பல புதிய பிரச்சினைகள் ஏற்படத் தொடங்கின. அரசுக்குச் சொந்தமான காணி களையும், இடம்பெயர்ந்தோர் விற்றுவிட்டுச் சென்ற வீட்டுக்காணிகளையும் சொற்ப விலைக்கு வாங்கியிருந்த சில பூசுவாச் சிந்தனையாளர்கள் அக்காணிகளை அதிகவிலைக்கு விற்பதற்காக முண்டியடித்தனர். குடியேற்றவாசிகளின் உறவினர்கள் தங்களிடமிருந்த வீட்டுக்காணிகளை தமது பெண்பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளித்துவிட்டு நிம்மதியாகவிருந்த வேளை உறவினர்களின் மீழ்வருகை யினால் அவர்களுக்குப் பல சங்கடங்கள் ஏற்படுத்தத் தொடங்கின. நலிவடைந்து சென்றுகொண்டிருந்த நெசவுத் தொழிலினாலும் அவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்க முடியவில்லை. எனவே பெரும்பாலானவர்கள் ஏதிலிகள் போன்று குற்ற உணர்வுடன் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் மாதிரிக் கிராமமாகக் காட்சியளித்துக் கொண்டு சுனாமியால் (26-12-2004) நிர்மூலமாகிய அக்பர் குடியேற்றத் திட்டமும் மருதமுனையின் தெற்கு எல்லையிலுள்ள மக்பூலியா புரமும், மீன்பிடி இலாக்காவுக்குச் சொந்தமாகவிருந்த ஏனைய பகுதிகளும் மக்களால் நிரம்பி வழியத் தொடங்கின. அதன் நிமித்தம் சுனாமிக்கு முன்னர் தமது இருபக்க இறக்கையுட்பட ஏறக்குறைய இருபதினாயிரம் மக்களைச் சுமந்த வண்ணம் விம்மிக் கொண்டிருந்த மருதமுனைக் கிராமம், சுனாமிப் பேரலையினால் மூன்றிலொரு நிலப்பரப்பினையும், ஆயிரத்துக்கும் குறையாத மனித உயிர்களையும், உடைமைகளையும் இழந்தமை வரலாற்றில் மறக்க முடியாத சுவடுகளாகும். அதனை ஓரளவு ஈடுசெய்வதற்காக மேட்டுவட்டைப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட குடியிருப்புத் திட்டங்கள் பத்து வருடங்கள் பூர்த்தியான நிலையிலும் விடைபகரவில்லை. அத்திட்டங்கள் அரசியல்வாதிகளினதும், அரச அதிகாரிகளினதும் கையாலாகாத் தனத்தைப் பறைசாற்றிக் கொண்டிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். அம்மக்களின் விடியலுக்கு காலந்தான் வகை சொல்லும்.

மருதமுனைக் கிராமத்திற்கு அதன் ஆரம்ப காலத்திலிருந்தே நிரந்தரமானதொரு பொருளாதார அமைப்பு இருக்கவில்லை. அதன் காரணமாக சகல துறைகளிலும் அதன் தாக்கம் ஏற்பட்டுள்ளது. கைத்தறி நெசவுக்காக எந்தவொரு மூலப்பொருளும் தன்னகத்தேயின்றி சகலவற்றையும் பிறநாடுகளிலிருந்து பெற்று, முடிவுப் பொருட் களைத் தயாரிக்கும் ஒரு கிராமமாகவே இருந்து வந்துள்ளது. தங்களுடைய மூதாதையர்களினால் அறிமுகஞ் செய்யப்பட்ட ஒரேயொரு தொழில் என்பதற் காகவும் வேறுதொழில்கள் செய்ய நாதியற்ற நிலையில் அத்தொழிலைச் செய்து வந்துள்ளனர். இன்றும் அதன்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். இந்நிலையில் மூலப்பொருள்களின் விலையேற்றத்தினாலும் இந்தியா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகளிலிருந்து சாரம், சாரிவகைகள் தாராளமாக இறக்குமதி செய்யப்படு வதனாலும் எமது பிரதேச நெசவுற்பத்திகளின் சந்தைவாய்ப்பு படிப்படியாக நலிவடையத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமன்கடுவை, துப்பகஹவல தொழில் முயற்சிகள் கொலனிக் குடியேற்றம் தொடர்பான தொழில்கள் என்பன யாவும் விடுபட்ட பின்னரும் நெசவுத் தொழிலை மட்டும் நம்பியிராமல் எம்மவர்கள் மேற்கொண்ட தொழில் முயற்சிகளும் தோல்வியையே தழுவிக் கொண்டன. சிலர் ஆற்றாமை காரணமாக அம்பாரை மாவட்டத்தின் சிங்களப் பிரதேசங்களான வாவின்ன, பரகஹகல, பள்ளம் ஓயா, கண்டியக்குளம், கொக்கு நாரை ஆகிய இடங்களுக்குச் சென்று காடுவெட்டி நிலந்திருத்திக் காலபோக விவசாயத் தொழில்களில் ஈடுபட்டனர். காலக்கிரமத்தில் அக்காணிகளும் பெரும்பான்மைச் சமூகத்தினரால் கபளீகரஞ் செய்யப்பட்டு விட்டன.

மருதமுனை மக்களுக்கு, காலத்துக்குக் காலம், ஆட்சிபீடமேறுவோரும் அவர்களின் முகவர்களும் "மருதமுனையின் கைத்தறி நெசவினை விருத்தி செய்வோம், ஏற்றுமதிக் கிராமாக்குவோம்" என்றெல்லாம் வாக்குறுதிகளை வழங்குவதும் அதனை நம்பி மக்கள் ஏமாறுவதும் மாமூலானதோர் விடயமாகி விட்டது. புத்தஜீவிகள் மலிந்த கிராமம் மருதமுனை என மார்தட்டிக்கொள்ளும் நாம் மாற்றுவழியைத் தேடாமல் தொடர்ந்தும் மக்களை ஏமாற விடக்கூடாது. "அல்லாஹ்வின் உதவியில் நம்பிக்கை வைக்க வேண்டும். ஆனால் முயற்சி செய்வதைக் கைவிடக்கூடாது" (புஹாரி, முஸ்லிம்) எனும் பொன்மொழிக் கிணைய முயற்சித்தல் வேண்டும்.

திறந்த பொருளாதாரம்

1977களின் பின்னர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட "திறந்த பொருளாதார முறைமை (Open Economical System) மருதமுனைப் பிரதேசத்தின் பொருளாதாரத்திலும் தாக்கம் ஏற்படுத்தத் தவறவில்லை. அம்முறைமையானது கடல்கடந்து சென்று பொருளீட்டக்கூடிய வாய்ப்பினை எம் பிரதேசத்தைச் சேர்ந்த இருபாலாருக்கும் வழங்கியது. இருந்தும் இளம் யுவதிகளின் வெளியேற்றம் எமது கலாசாரத்தில் சீரழிவினை ஏற்படுத்தியதை எம்மால் மறக்கவொண்ணாது. நான்கு வேலிகளுக்கு மத்தியில் வாழ்ந்து பழக்கப்பட்ட யுவதிகள் பலர், வறுமையைக் காரணமாகக் கூறிக்கொண்டு வீட்டுத் தாதிகளாக (House Maid) மத்திய கிழக்கு நாடுகள் நோக்கிப் படையெடுக்கத் தொடங்கினர். பெண்களின் இவ்வாறான வெளியேற்றம், இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு (ஷரிஆ) அப்பால் நின்று சிந்திப்போருக்கு ஒரு வரப்பிரசாதமாகத் தென்பட்டபோதிலும், சமூக, சமயப் பிரச்சினைகள் பலவற்றைத் தோற்றுவித்ததை எம்மால் மறுக்க முடியாது. அப்பெண்கள் தங்கள் உழைப்பிலேயே தங்களுடைய வாழ்க்கையைச் சீர்செய்து கொண்டதாகக் கூறியபோதிலும், கணவன் - மனைவி உறவில் ஏற்பட்ட விரிசல்கள், இளம் வயது விவாகரத்துக்கள், வேலைவாய்ப்பு முகவர்களினால் உருவான ஏமாற்றமும் கடன் பழுவும், வேலைசெய்த இடங்களில் உருவான உடல் உளரீதியான பாதிப்புக்கள் அடக்கிய இவ்வேலை வாய்ப்பானது இப்பெண்களின் எதிர்பார்ப்புக்களை எந்தளவுக்குப் பூர்த்தி செய்தன என்பது நாம் அறியாத தொன்றல்ல. அப்பொழுதெல்லாம் மௌனியாகவிருந்த எமது முஸ்லிம் ஊரும் உலகமும் மூதூரைச் சேர்ந்த இளம்யுவதி, சவூதி அரேபியாவில் சிரச்சேதஞ் செய்யப்பட்டதும் தொடர்த்தேர்ச்சியாக "திருமணஞ் செய்வதற்குத் தடுக்கப் பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களைத் தவிர (மஹ்ரம்) அன்னிய ஆடவர்களுடன் பெண்கள் வெளிநாடு செல்லக்கூடாது" என அறிக்கைகள் விட்டமையும், கருத்தாடல்கள் நடாத்தியமையும் நகைப்புக்குரிய விடயங்களாகும்.

"அல்லாஹ்வின் மீதும், இறுதிநாளின் மீதும் விசுவாசங் கொண்டிருக்கும் ஒரு பெண், தன்னுடன் தன்னை மணக்கத் தடைசெய்யப்பட்ட (மஹ்ரம்) எவரையும் அழைத்துச் செல்லாது (வேறு ஆண்களுடன்) ஒரு இரபு பகல் பயணத் தொலை பிரயாணஞ் செய்வது ஆகுமானதல்ல" (புஹாரி, முஸ்லிம், முஅத்தா).

"ஒரு பெண் ஒரு (அன்னிய) ஆணுடன் தனித்திருத்தலாகாது தன்னை மணக்கத் தடை செய்யப்பட்டவரில் ஒருவர் இருந்தாலன்றி" என நபி (ஸல்) அவர்கள் கூற சபையிலிருந்த ஒருவர் எழுந்துநின்று, 'யாரசூலுல்லாஹ், எனது மனைவி ஹஜ்ஜுக்குப் புறப்படவுள்ளார். ஆனால் நானோ இன்னின்ன யுத்தங்களுக்குப் புறப்படுவதற்குப் பெயர் கொடுத்துள்ளேன்' எனக் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "செல்லும், உனது மனைவியுடன் ஹஜ்ஜுச் செய்யும்" எனக்கூறி அவரை விரைவுபடுத்தினார்கள்" (புஹாரி, முஸ்லிம்)

இவ்விரு பொன்மொழிகளுக்குமாவது பிரச்சார (தஃவா) இயக்கங்கள் விளக்கம் கொடுத்திருந்தால் எவ்வளவோ சமூகச் சீர்கேடுகளைத் தவிர்த்திருக்கலாமல்லவா! இப்பொழுதும் காலம் கடந்துவிடவில்லை.

1980களின் பின்னர் முஸ்லிம்களின் தனித்துவத்துக்கென தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) மருதமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்குக் குறையாத இளைஞர்களுக்குத் துறைமுகங்களில் (Harbour) வேலைவாய்ப்பினைத் தேடிக்கொடுத்த போதிலும் அவைகளும் நிரந்தரத் தன்மையுடையவைகளாகக் கொள்வதற்கில்லை. உற்பத்தியை மட்டும் இலக்காகக் கொண்டு தொழில்வழங்கும் அரச, கூட்டுத்தாபனங்கள் ஆட்குறைப்புச் செய்யும்போது அவர்களின் வாழ்க்கை பழைய பல்லவியாக மாறுவது முண்டு. எனவேதான் அண்மைக் காலமாக சில இளைஞர்கள் ஊக்குவிப்புத் தொகைகளைப் பெற்றுக்கொண்டு வெவ்வேறு தொழிற்றுறைகளில் ஈடுபடுகின்றனர் போலும். இருப்பினும் எமது பிரதேசத்தில் பணப்புழக்கம் அதிகரிப்பதற்கும் வறுமைக் கோட்டிலிருந்த சில குடும்பங்கள், தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் இவ்வேலைவாய்ப்புக்கள் வழிசமைத்துக் கொடுத்தன என்பது மறுப்பதற்கில்லை.

"திரைகடலோடியும் திரவியம் தேடு" எனும் முதுமொழிக்கியைய எம்மூர் இளைஞர்கள் சிலர், கீழைத்தேய மேலைத்தேய நாடுகளுக்குச் சென்று, கைநிறையக் காசுசேர்த்து வந்து, எமது பிரதேசத்தை பொலிவடையச் செய்திருப்பதும் வரவேற்கத்தக்கதாகும். அரிசி ஆலைகள், மரவாலைகள் (Saw Mills), தொழில்நுட்ப வேலைவாய்ப்பு வழிகாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்கள், நகைக்கடைகள், பல்வேறு வர்த்தக நிலையங்கள் முதலியன நிறுவி தொழிற்முயற்சிகளில் ஈடுபட்டுவருவதும் போற்றத் தக்கதாகும். இருந்தபோதிலும் அடிக்கடி சில நிலையங்கள் மூடப் படுவதும் புதியவைகள் திறக்கப்படுவதும் சர்வசாதாரணமாகி விட்டது. இந்நிகழ்வானது எமது பிரதேசத்தின் ஸ்திரமற்ற பொருளாதாரத் தன்மையைப் பறைசாத்துவதாக ஏன் கூறமுடியாது!

கடந்தகால அரசியல் வரலாற்றினை உற்றுநோக்கின் அதுவும் எமது பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவில்லை எனத் துணிந்து கூறமுடியும். இன்று எம்மைச் சூழவுள்ள முஸ்லிம் கிராமங்கள் மட்டுமன்றி, நாடளாவிய முஸ்லிம் பிரதேசங்களும் அரசியல் பலத்தினைத் துணையாகக்கொண்டே பொருளாதாரத் துறையில் வலுவடைந்து வருகின்றன. சான்றாக எமக்கு வடக்கேயுள்ள காத்தான்குடியைக் கூறமுடியும். எம்மைப்போன்று எவ்வித அடிப்படை வளங்களுமற்ற அப்பிரதேசம் ஊர் கடந்து சென்று சிறுசிறு வர்த்தக முயற்சிகளிலேயே ஈடுபட்டு வந்தது. ஆனால் இன்றோ அரசியலின் சாதகத்தினால் சிங்கப்பூரைப் போன்று காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. மருதமுனைப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் என்றுமே அரசியல் பலம் இருக்கவில்லை. இனிமேலும் இருக்கக் கூடிய பின்புலங்களும் (Back Round) இருப்பதாகத் தெரியவில்லை.

1959இல் அன்றைய அரசினால் நியமிக்கப்பட்ட தொகுதி நிர்ணய சபையின் விதந்துரைக்கியைய மட்/ பட்டிருப்புத் தொகுதியிலிருந்த எமது கிராமம் காலஞ்சென்ற சட்டமன்ற உறுப்பினர் எம்.எஸ். காரியப்பரின் முயற்சியினால் கல்முனைத் தேர்தல் தொகுதியுடன் இணைக்கப்பட்டது. 1960 மார்ச்சில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் பின்பே எமது கிராம மக்களுக்கு தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம்களுடன் அரசியல் ரீதியான பிணைப்பு ஏற்படத் தொடங்கியது. அச்சமகாலத்திலேயே இளம் வயதில் மருதமுனை மண்ணுக்கு மட்டுமன்றி கல்முனைப் பிரதேசத்துக்கே அரசியலை, தத்துவார்த்த ரீதியாகக் கற்றுக்கொடுக்கும் ஆசானாக S.Z.M. மசூர் மவுலானா அவர்கள் பிரகாசிக்கத் தொடங்கினார்கள். அன்னார் 1950களிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மறைந்த S.J.V. செல்வநாயகம் அவர்களின் சமஷ்டித் தொட்டிலில் வளர்ந்தவர். வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைதல் வேண்டும். அவ்வினைப்புக்குள் முஸ்லிம்களின் தனித்துவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என அன்றுபோல் இன்றும் கூறிவருபவர். எவ்வித அடைமொழியும் இல்லாமலே எமது மண்ணை, சர்வதேசத்துக்கு அறிமுகம் செய்து வைத்தவர். தனது எண்பதாவது அகவை தாண்டியும் எம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பவர்.

1960, 1965, 1968களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாகவும் 1989இல் ஐக்கிய தேசியக்கட்சி (UNP) சார்பாகவும் மவுலானா தேர்தலில் போட்டியிட்டார். துரதிஷ்டவசமாக ஒவ்வொரு தேர்தலின் போதும் நூற்றுக் கணக்கான வாக்குகளினால் தோல்வியைத் தழுவிக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மவுலானாவை சட்ட மன்றத்துக்கு அனுப்புவதற்காக, ஒவ்வொரு தேர்தலின் போதும் தமிழ்மக்கள் வரிந்து கட்டிக்கொண்டு வாக்களித்தனர். மாறாக, அன்னாரின் தோல்விக்கு வழிவகுத்து, தொடர்ச்சியான வரலாற்றுத் தவறினை இழைத்தவர்கள் அவரின் உயர்ச்சியில் காழ்ப்புற்ற குடும்ப உறவினர்கள் சிலரும் நெருங்கிப்பழகிய நண்பர்களுமாகும். அத்துடன் அக்காலத்தின் "முனைப்புப் பெற்றுக் காணப்பட்ட கல்முனைச் சுற்றுவட்ட (Round About) வாதமுமாகும். மருதமுனை மக்கள் ஒரணியில் திரண்டு வாக்களித்திருந்தால் மவுலானா தோற்றிய முதலாவது தேர்தலிலேயே வெற்றிபெற்று, அன்றையப் பிரதேச வாதத்தினையும் தகர்த்தெறிந்து எம் பிரதேசத்துக்கு அவரினால் நல்ல பல சேவைகளைச் செய்திருக்க முடியும் என்பது அன்றைய அரசியல் அவதானிகளின் ஒட்டுமொத்த கருத்தாகும்.

இந்நிலையில் மவுலானாவின் தொடர்ச்சியான தோல்விகண்டு துயருற்ற தமிழர் சமூகம் சொற்ப காலம் அவரை மூதவைக்கு (செனட்சபை) அனுப்பி ஆறுதலடைந்தது.

இருந்த போதிலும் மசூர்மவுலானா 1962 தொடக்கம் 1978 வரை தனக்குக் கிடைத்த அரசியல் வாழ்வைச் சரியாகப் பயன்படுத்தினார் என்பதை மறுக்க முடியாது. 1972இல் கரவாகு வடக்கு கிராம சபைக்குட்பட்ட பிரதேசத்துக்கு மின்சாரம் பெற்றுத்தந்தமை, பொது நூலகம், நாற்பது வீட்டுத்திட்டம், பொது விளையாட்டு மைதானம், அக்பர் மாதிரிக் கிராமம் ஆகியவைகளை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தமை ஆகிய சேவைகள் எமது பிரதேசத்தின் மண் என்றுமே மறுக்க முடியாதவைகளாகும். தனது அரசியலின் அந்திம காலத்திலும் கல்முனை மாநகர சபையில் இணைந்து தம்மால் முடியுமானவை களையும் செய்துவிட்டுத்தான் எண்பதாவது அகவையில் ஓய்வடைந் துள்ளார்.

> "துன்பத்தால் எது உங்களை வந்தடைந்தாலும் உங்கள் கரங்களினால் சம்பாதித்துக் கொண்ட (காரணத்)தினாலாகும்." (42 : 30)

எனும் அல்குர்ஆன் வாக்குக்கியைய அரசியலைப் பொறுத்தவரையில் எமக்குரிய படுகுழியை நாமே தோண்டிக்கொண்டோம். அதன் காரணமாக எமது கிராமம் அன்று தொட்டு இன்றுவரை காலத்துக்குக் காலம் நிறம் மாறும் அரசியல் வாதிகள் வாரி வழங்கும் வாக்குறுதிகளை நம்பி, அவர்களை உருவாக்கும் தொழில் சாலையாகவே இருந்து வருகின்றது.

இலங்கை அரசியலில் இனவிரிசல்கள் தொடரத் தொடங்கியதால் மவுலானா அவர்கள் தான் சார்ந்திருந்த அரசியல் கட்சியையும் (UNP) உதறித்தள்ளிவிட்டு 1994 தொடக்கம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து முஸ்லிம்களின் தனித்துவத்துக்காக உழைத்து வந்தார். அதன் மூலமாவது அவருடைய நீண்டகால அரசியல் வாழ்வினைக் கௌரவித்து இன்று வழக்கிலிருக்கும் தேசியப்பட்டியல் (National List) மூலமாவது வாய்ப்பொன்று கிடைக்குமென மருதமுனை மக்கள் எதிர்பார்த்ததும் வீணாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 2000ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாபகர்களில் ஒருவராகிய மறைந்த மண்ணின் மைந்தர் கவிஞர் யூ.எம். ஹனிபா (மருதூர்க்கனி) அவர்களுக்கு தேசியப்பட்டியல் மூலம் சட்டமன்றம் செல்லும் வாய்ப்பினை அக்கட்சி வழங்கிக் கௌரவித்தது. அதனை அறிந்ததும் மருதமுனை மக்களும் அவருடைய நண்பர்களும் அளவிலா உவகையடைந்தனர். தேசிய அரசியல் நீரோட்டத்தில் நேரடியாகக் கலக்கும் முதலாவது வாய்ப்பாக அதனைக் கருதப் பட்டது. கல்விச் சேவையில் கால்நூற்றாண்டுக்கும் மேலான அனுபவமுடைய அன்னாரிடம் அது தொடர்பான சில தேவைகளையாவது நிறைவேற்றித் தரும்படி கேட்கப்பட்டது. மாறாக, அவருக்குக் கிடைத்த ஒருவருடகால வாய்ப்பினை நண்பர் ஹனிபாவினால் முழுமையாகப் பயன்படுத்த முடியாமற் போய்விட்டது. அன்றைய அரசியல் சூழ்நிலையும் அதற்கான முக்கியமான காரணமாக இருக்கலாம். இருப்பினும் மருதமுனையிலிருந்த ஆதார வைத்திய சாலையைத் தரமுயர்த்தியமை, பொதுநூலக விஸ்தரிப்புக்காக நிதிபெற்றுத் தந்தமை ஆகியவைகளை அவருடைய வரலாற்றுச் சுவடுகளாகக் கொள்ளலாம். 2004-11-22 திங்கட்கிழமை சம்பவித்த அவருடைய மரணம் (62) எமது பிரதேசத்துக்கும் இலக்கிய உலகுக்கும் பாரிய பேரிழப்பாகும்.

மேலும், மருதமுனை மண்ணுக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே புகழ் தேடித்தந்த இருவரை நினைவுகூரலும் சாலப் பொருந்தும் என நினைக்கின்றேன். ஒருவர் அனுஸ்லெப்பை (காரியப்பர்) மற்றையவர் அறிஞர் சின்னாலிமப்பா.

ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் மருதமுனைக் கிராமம் உட்பட மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் கண்டி மன்னர்களின் கீழ் இருந்து வந்துள்ளது. அதன் காரணமாக முஸ்லிம்கள் அவர்களுக்கு விசுவாசமாக இருந்து வந்துள்ளனர். அதன் காரணமாக, பிரதேச எல்லைப் பாதுகாப்புக்குப் பொறுப் பாகவும் பொதுமக்களிடமிருந்து நெல், உப்பு ஆகியவைகளை அறவிட்டு மன்னர் களுக்கு வழங்குவதற்காகவும் முஸ்லிம்கள் சிலர் நியமிக்கப் பட்டனர். அவர் களுக்கு 'காரியப்பர்' எனும் பதவியும் வழங்கப்பட்டது. அப்பதவி வழங்கப்பட் டோரில் ஒருவரே எமது கிராமத்தைச் சேர்ந்த அனுஸ்லெவ்வை (காரியப்பர்) என்பவராகும். கி.பி. 1796இல் பிரித்தானியர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றியதும் "கத்தோலிக்க சமயத்தைத் தழுவுவோருக்கு ஆங்கிலக் கல்வி கற்றுக்கொடுத்து உயர்பதவியும் வழங்கப் படும் என ஒரு அறிக்கையை வெளி யிட்டனர். இதனை முஸ்லிம்கள் ஏற்கவில்லை. இதனைச் சாட்டாகக் கொண்டு, பிரித்தானியர் தம் அரசுக்கு எதிராகப் புரட்சி செய்தார்கள் எனக்கூறி பலரை இம்சித்ததுடன் சிலரைக் கைதுசெய்தார்கள். அவர்களுள் முக்கியமான ஒருவரே அனுஸ்லெவ்வை என்பவர். 1804இல் பிரித்தானியரினால் கைதுசெய்யப்பட்டு அவரின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன. தமது இனத்துக்காகப் போராடிய அனுஸ்லெவ்வை என்பவர் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர் என்பது அறியப்படவில்லை. இவருடன் இன்னும் முக்கியமான மூவர் கைதுசெய்யப் பட்டனர். அவர்களுள் அபூபக்கர் ஈசா (முகாந்திரம்) என்பவர் சம்மாந்துறையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிடமாகக் கொண்டவர். ஏனைய இருவர் கல்முனையைச் சேர்ந்த குசைன் லெவ்வை உதுமாலெவ்வை, மீரா உசைன் அபூவக்கர் ஆகியோராகும். சம்மாந்துறையைச் சேர்ந்த அபூபக்கர் ஈசா தப்பியோடி விட்டதாக வரலாறு கூறுகின்றது.

அதே நூற்றாண்டின் முற்பகுதியில் மார்க்க அறிவுத் துறையிலும், இலக்கண இலக்கியங்களிலும் விற்பன்னராகத் திகழ்ந்தவர் எமது கிராமத்தைச் சேர்ந்த, "சின்னாலிமப்பா" என அழைக்கப்பட்ட அஷ்ஷேய்ஹ் மீராலெவ்வை ஆலிம் என்பவராகும். அவருடைய தந்தை இபுறாஹிம் லெப்பை என்பவரும் ஆலிமாக இருந்தபடியால் அவர் "சின்னாலிமப்பா" என அழைக்கப்பட்டார். அவரின் மார்க்க அறிவையும் இலக்கியப் புலமையையும் பறைசாற்றிக் கொண்டிருப்பது "ஞானரை வென்றான்" நூலாகும். அந்நூலானது இல்லறத்தினூடாக ஆன்மீகத்தை அடையும் வழியை சுருக்கமாகக் கூறுகின்றது. அவர் தம் பாடல்களில் கையாண்டுள்ள உவமான உவமேயங்கள் இன்றைய இலக்கியவாதிகளையே மெய்சிலிர்க்கச் செய்கின்றன.

மங்கையுற்றுறைந்த வாழ்வூரிலங்கிய பதிநற் செந்நெல்
பொங்கிய செளிப்புவாய்ந்த பூவையர் கற்பு மாறாப்
பொன்னக ரொப்பச் செல்வம் பொலிந்திடும் தடாகஞ் சூழுங்
குந்திடர் குலங்கண் மாவின் கூட்டிவாழ் மதுரையூரே

என தனதூரைப் பற்றிப் பாடிய அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தமொன்றே அவருடைய புலமையைப் பறைசாற்றப் போதுமானதாகும். கி.பி. 1850களில் அபூபக்கர்போடி - அகமது லெவ்வை என்பவரினால் பாதுகாத்து வைக்கப் பட்டிருந்த ஞானரை வென்றானின் மூலப்பிரதி, புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களினால் பிழைகள் திருத்தப்பட்டு. மறைந்த எழுத்தாளரும் கல்விமானுமாகிய ஜே.எம்.எம். அப்துல் காதர் அவர்களைச் செயலாளராகக் கொண்ட மருதமுனை ஆசிரியர் சங்கத்தினால் 1948-07-09 ஆந்திகதி அழகிய நூலாக வெளியிடப்பட்டது. அவருடைய வழித்தோன்றல்கள் மருதமுனை மஸ்ஜிதுந்நூரின் முக்கிய மரபுக் குடியாகிய யாகுவக் குடியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

1960களின் பின்னர் காலத்துக்குக்காலம் சட்டமன்றமேகிய கல்முனைப் பிரதேச உறுப்பினர்கள் "தம்வெற்றிக்கு வழிவகுத்தவர்கள் மருதமுனை மக்களே!" எனச் சிலாகித்துப் பேசுவர். செஞ்சோற்றுக் கடனைத் தீர்ப்பதற்காக ஏதாவது செய்ய முனைவர். ஆனால் அவர்களின் முகவர்களோ தங்களுடைய சொந்தத் தேவைகளை நிறைவேற்றும் நோக்கில் அவர்களைத் திசைதிருப்பி விடுவர். அதன் காரணமாக ஆரம்பகால அரசியல்வாதிகள் இக்கிராமத்துக்கு பெரிதாக எதுவும் செய்யவில்லை. இருப்பினும் முன்னாள் அமைச்சர், சட்டத்தரணி ஏ.ஆர். மன்சூர் அவர்களும் மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களும் ஏறக்குறைய எழுபது கோடி ரூபாவுக்குக் குறையாத சேவைகளை எமது கிராமத்துக்குச் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் அமைச்சர் அஷ்ரஃப், இலங்கைத் துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் கணிசமான வேலைவாய்ப் பினையும் பெற்றுக்கொடுத்துள்ளார். இவ்விருவரின் சேவைகளை மருதமுனை மக்கள் என்றும் மறப்பதில்லை. இருந்தபோதிலும் எமது அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய சட்டமன்ற உறுப்பினரொருவர் எமது கிராமத்தில் என்றுமே உருவாகுவதற்கு வாய்ப்பில்லை எனும் எதார்த் தத்தினை நாம் ஏற்றேயாக வேண்டும்.

சட்டத்தரணி அஷ்ரஃப் அவர்கள், ஒரு பொது நிகழ்வின் போது செப்பிய பின்வரும் கூற்று எமது மண்ணுக்குச் சாலப்பொருந்தும் என நினைக்கின்றேன்.

"இலங்கையில் ஜனாதிபதித் தெரிவுக்கு, போட்டிப் பரீட்சை நடைபெறு மானால் அப்பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளை மருதமுனை மக்கள் பெற்று, அப்பதவியையும் தமதாக்கிக்கொள்வார்கள். அந்தளவுக்கு அவர்கள் திறமைசாலிகள்"

இக்கூற்றின் மூலம் சகோதரர் அஷ்ரஃப் அவர்கள், மருதமுனை மக்கள் தங்களுடைய அரசியல்வாதிகளின் துணைகொண்டு என்றுமே தங்களை வழப்படுத்த வாய்ப்பில்லை என்பதை சூஷகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். சிந்தித்துப் பார்ப்பின் எதார்த்தமும் அதுவேயாகும். எவ்வித வளமுமற்ற எம்மிடம் கைவசமுள்ள ஒன்றேயொன்று "அறிவுப் பொருளாதாரம்" ஆகும். அதன் துணைகொண்டு மட்டுந்தான் எம்மை நாம் வளப்படுத்த முடியும். இன்று செல்வந்த நாடுகளின் முதன்மை வகிக்கும் ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் எம்மைப்போன்று எவ்வித மூலவளங்களும் கிடையாது. தங்களுடைய தொழில்நுட்ப அறிவைக் கொண்டே முன்னேறி வருகின்றன. எனவே மருதமுனை மக்களாகிய நாமும் மரபுவழிக் கல்வி முறையிலுள்ள பிடிப்பினை படிப்படியாகக் குறைத்து தொழில்நுட்பக் கல்வியில் நாட்டத்தை அதிகரிப்பின் நிச்சயமாக பொருளாதாரத்தில் தன்னிறைவினைப் பெற்று நிம்மதியாக வாழலாம். அதற்கான உதவியை எல்லாம்வல்ல அல்லாஹ்வும் எமக்கு வழங்குவான்.

- வஸ்ஸலாம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைநின்றவை...

- மட்டக்களப்பு மாண்மியம்
- சீர்பாதகுலம்
- இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்கள் - ஒரு வெட்டுமுகம்
- முஸ்லிம்கள் மத்தியில் குடிவழிமுறை
- மருதமுனை வரலாற்றுக் குறிப்புக்கள்
- MUSLIMS OF SRI LANKA

நேர்காணல்....

- S. இராஜேந்திரன் (அதிபர்)
- S. சுந்தரலிங்கம் (பிரசித்த நொத்தாரிசு)
- மருதூர்க்கொத்தன் V.M. இஸ்மாயில் (அதிபர்)
- அல்-ஹாஜ். A.P.M. மரைக்கார் ஜே.பி.
- A.M. அபூபக்கர் (ஆங்கில ஆசிரியர்)
- மவுலவி. S.M. முஸ்தபா மவுலானா (பாஸில்)
- S.M. பீர்முகம்மது (அதிபர்)
- M.C.M. இஸ்மாயில் ஆசிரியர்
- P. சிவசுப்பிரமணியம் (அதிபர்)
- S. வீரசிங்கம் (நீர்ப்பாசன மேற்பார்வை உத்தியோகத்தர்)
- S.M.M. அபூபக்கர் (நஜீம்) ஆசிரியர்
- K.L.A. வாஹித் (அதிபர்)
- கவிஞர் துறையூர் கனகசபை (சிற்பி)
- K. பாக்கியராசா (நூலகர்)
- A. முகம்மது நூர்தீன் (சாரதி பயிற்றுநர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். முகம்மது மூசா B.A.

"மருதமுனை மண்ணின் மைந்தர்கள்" கட்டுரையாசிரியர் எஸ். முகம்மது மூசா, மருதமுனை அல்-மனார் வீதியை பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரும் கலைமானிப் (BA) பட்டதாரியு மாகும். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அ.த.க.மு. பாடசாலை (கமு/ அல்-மனார் மத்திய கல்லூரி)யில் கற்றுத்தேறியதும், ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்தியெய்து மட்/ காத்தான்குடி மத்திய கல்லூரியில் இடைநிலைக் கல்வியைக் கற்றார்.

1964-06-01இல் கமு/ பெரியநீலாவணை முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரி யராக முதல் நியமனம் பெற்ற பின்னர், மட்/ அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்டதும் 1970 இலிருந்து A/மரக்கல ஹல்மில்லாவ மு.வி., கமு/ அல்-ஹம்றா வித்தியாலயம், PL/ அல்-ஹிலால் வித்தியாலயம், PL/ அல்-அஸ்ஹர் வித்தியாலயம் (அதிபர்), கமு/ அல்-மனார் மத்திய கல்லூரி ஆகியவைகளில் பணிபுரிந்துவிட்டு, தனது சுயவிருப்பின் பேரில் 46வது வயதில் ஓய்வுபெற்றார்.

1980களில் கமு/ அல்-மனார் மத்திய கல்லூரியின் அதிபராகவிருந்த ஏ.எச்.எம். மஜீத் அவர்களின் வழிகாட்டலின் கீழ், அன்றைய பட்டதாரி ஆசிரியர் குழுவினருடன் இணைந்து உயர் வகுப்புக்களை ஆரம்பித்து கலை, வர்த்தகப் பட்டதாரிகள் உருவாகு வதற்கு துணைநின்றார். அச்சம காலத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு அரசறிவியலை (Political Science) ஒரு பாடமாகக் கற்பதற்கு மாணவர்கள் அச்சங்கொண்டனர். அதேநேரம் துணிந்து முன்வந்த எஸ்.எம்.எம். அபூபக்கர் (நஜீம்) ஆசிரியரை அரசறிவியல் பாடத்தில் புலமைபெற்ற கலைப் பட்டதாரியாக்கிய பெருமை மூசா ஆசிரியருக்குண்டு. மாஷா அல்லாஹ் இன்று கல்முனைப் பிரதேசத்தின் பல பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்கிவரும் அபூபக்கர் ஆசிரியரை கல்விச்சமூகம் மறக்க முடியாது.

1990இல் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்ற மூசா ஆசிரியர் KU/பரகஹதெனிய தாருத் தவ்ஹித் அஸ்ஸலாபியாவில் எட்டு வருட காலம் போதனாசிரியராகக் கடமையாற்றி, மவுலவி ஆலிம்களை பட்டதாரிகளாக உருவாக்குவதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னின்று உழைத்தார். மர்ஹூம் அஷ்ஷேய்க் எஸ்.எம்.எம். முஸ்தபா மவுலானா அவர்களைத் தொடர்ந்து, ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னத்தில் முகம்மதியாவின் பிரச்சார ஏடான "உண்மை உதயம்" ஆசிரியராகப் பணிபுரியும் பேற்றினையும் பெற்றிருந்தார்.

1970களில் எழுத்துத் துறையில் பிரவேசித்த மூசா ஆசிரியர், உயர்தர முஸ்லிம் மாணவர்களின் நலன்கருதி, தினகரன், தினபதி, சிந்தாமணி முதலான தேசியப் பத்திரி கைகளிலும், சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் பலவற்றை எழுதியதுடன் வினா விடைத் தொகுதிகளையும் வெளியிட்டார். அந்நூல்கள் இன்றும் சிலாகித்துப் பேசப்படுகின்றன. பட்டதாரி ஆய்வு மாணவர்களின் வேண்டுகோளுக் கியைய எழுதப்பட்ட ஆசிரியரின் "இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்கள் - ஒரு வெட்டு முகம்" எனும் விமர்சன நூல் தேசியமட்டத்தில் பெரும் வரவேற் பினைப் பெற்றது. அந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள், "இந்நூல் பொதுமக்களுக்கு மட்டுமன்றி ஆய்வு முயற்சியில் ஈடுபடுவோருக்கும் பயனுள்ளதாக அமையும்" எனக் கூறியுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. மேலும், ஆசிரியர் மூசா அவர்கள், 'றாஹிலா மூசா' எனும் புனைப் பெயரில் எழுதிய நாடகங்களும் அவருடைய எழுத்து வன்மையை வெளிப் படுத்தின. ஆசிரியரின் புதல்வர்களான கவிஞர் விஜிலி, றஸ்மி (ஸலபி) MA, ஊடகவியலாளர் ஜெஸ்மி ஆகியோரும் தந்தையைப் போன்று எழுத்துத் துறையில் வன்மையுடையோராக இருப்பதையும் நாம் அறிவோம். ஆசிரியர் எஸ்.எம். மூசா (ஜே.பி - 1991) எப்பொழுதும் பொதுத்துறையில் கரிசனை கொண்டவர். இளம் பராயத்திலிருந்தே கிராம அபிவிருத்தி நிறுவனங்களின் தலைவராகவும் செயலாளராகவும் அளப்பரிய சேவைகள் புரிந்துள்ளார்.

விளையாட்டுத் துறையில் எப்பொழுதும் ஈடுபாடுடையவர். 1960களில் தாபிக்கப்பட்ட "மருதமுனை விளையாட்டுக் கழக"த்தின் தாபக உறுப்பினர் களுள் ஒருவராக இருந்து இவர் கல்முனைப் பிரதேசத்தில் உதைபந்தாட்டக் கழகங்களை உருவாக்கு வதற்கு மர்ஹூம் எஸ்.எம்.எம். பழீல் (அதிபர்) அவர் களுடன் இணைந்து அயராது பாடுபட்டார். 1980ல் அகில இலங்கை உதைபந் தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்து கல்முனைப் பிரதேசத்தில் பல போட்டிகளில் மத்தியஸ்தராகவும் கடமையாற்றியுள்ளார். மருதமுனை விளை யாட்டுக் கழக (MSC) கரப்பந்தாட்டக் குழுவின் முன்னணி வீரர்களில் ஒருவரா கவும் மத்தியஸ்தராகவும் செயலாற்றி ஊருக்குப் பெருமை தேடித் தந்தோரில் ஒருவராகவும் மூசா ஆசிரியர் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் மூசா, எப்பொழுதும் ஆய்வுத்துறையில் நாட்டமுடையவர் என்பதை அவருடைய எழுத்துக்கள் எமக்குச் சான்று பகர்கின்றன. அப்பணி தொடர நாமும் ஊக்கமளிப்போம்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாரம்பரிய நெசவுத்தொழில்

அப்துல் றகீம் அப்துல் சத்தார், ஜே.பி.

மருதமுனையில் நெசவுத்தொழில் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் இல்லை, ஆயினும் கிராமத்தின் முதல் தொழில் நெசவு என்பதில் கருத்து வேறுபாடில்லை. நெசவுத்தொழில் வாய்ப்பு வசதிகளுக்காக துறைநீலாவணையிலிருந்து மருதமுனைக்கு ஒத்துமாறிய கதையும் இதன் காலத்தை உண்மைப்படுத்துகிறது.

இங்கு முதன்முதலில் வந்து குடியமர்ந்தவர்களுக்குத் தெரிந்த ஒரு தொழிலாக நெசவே இருந்தபடியால் இக்கிராமம் நெசவுக் கிராமமாகவே அறிமுகமாகிறது. எவ்வளவு காலமாக இது செய்யப்பட்டு வருகிறதென்பதைத் துல்லியமாக கூற முடியாவிட்டாலும் சுமார் 150 ஆண்டு கால வரலாறு இதற்குண்டு என்று துணிந்து கூறலாம்.

ஆரம்பத்தில் இப்போது நாம் காணும் அமைப்பில் தறிகள் இருக்கவில்லை, நிலமே நெய்பவர் இருக்கும் இடமாகவும், மூன்று அடி ஆழம் நான்கடி நீளம் மூன்றடி அகலம் கொண்ட ஒரு குழி செய்யப்பட்டு அதனுள்ளேயே அவரது கால்கள் இருந்து மாறிமாறிக் கால்களை மிதித்து மெதுமெதுவாக பாவினுள் குறுக்கு நூல்களைப் புகுத்துவதன் மூலமே முடிவுப் பொருட்கள் பெறப்பட்டன. இத்தறியையே "குழித்தறி" என்று கூறுவார்கள். இதற்கான அச்சி, விழுது, நாடா, குழல் போன்ற உபகரணங்களும் இவர்களாலேயே செய்யப்பட்டன என்பது இப்போது உள்ளவர்கள் நம்புவதற்கு கஷ்டமாகக்கூட இருக்கலாம். நான் பிறக்கின்றபோது 1954ம் ஆண்டு எங்கள் வீட்டில் மூன்று குழித்தறிகளும் ஆறு நிலத் தறிகளுமாக மொத்தம் ஒன்பது தறிகள் வேலை செய்தன.

1945ம் ஆண்டு முதல் இத்தொழிலைச் செய்வதாக எனது வாப்பா கூறியிருக் கிறார்கள். அன்று எங்கள் வீட்டில் நெய்தவர்களில் பலர் இன்னும் என் நினைவில் நிற்கிறார்கள். குத்தூஸ், மையதின் பிச்சை, அபூபக்கர், மம்மது, முஸ்தபா பயில்வான், வஹாப்தீன், கனிப்பிள்ளை, சம்சுதீன் எனப்பலர் என்னால் நினைவுகூரக்கூடிய வர்கள். இதில் இன்னும் பலர் உயிருடன் இருக்கிறார்கள். அதில் அண்மையில் அபூபக்கர் (ஜின்னாவின் வாப்பா) சந்தித்து சில விடயங்களைக் கேட்டேன். அவ்வளவு விடயங்களையும் ஒன்றுவிடாமல் கூறினார். நான் பிறப்பதற்கு முன்பிருந்தே எங்கள் வீட்டில் நெசவு செய்ததாகவும் 1950ம் ஆண்டு முதல் 1965ம் ஆண்டு வரை சுமார் 15 வருடங்கள் வேலை செய்ததாகவும் நெய்த கூலியில் ஒரு பகுதியை வாங்காமல் விட்டு சேமித்து வந்ததாகவும் அதில் 700 ரூபாவை வாங்கி ஒரு பெரிய வளவு வாங்கியதாகவும் கூறினார். அவர்கள் அன்றிருந்த (தற்போது டாக்டர் ஹாரிசின் தங்கையின் வீடு) வீட்டுக்குப் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தற்போது அன்வர்தீன் P.D. அவர்களின் சகோதரிகளின் வீடுகளைத் தாண்டி றூமில் அவர்களின் வீதிவரை) வாங்கியதாகவும் கூறுகிறார். மூன்று நான்கு வயதுப் பிள்ளையாக நான் இருந்தபோது தறியில் என்னை தனக்குப் பக்கத்தில் வைத்திருந்து நெசவுவதாகவும் கூறினார்.

பா ஓடுகின்ற விதமே ஒரு அலாதி. சூத்திரம், காவார், திருவட்டம் எனப்படும் உபகரணங்கள் இதற்காகப் பாவிக்கப்பட்டன. நூல் சுற்றப்பட்ட திருவட்டங்கள் காவாரில் வைக்கப்பட்டு சூத்திரத்தில் பா ஓடப்படும் காட்சி மறக்க முடியாதவை. ஏனென்றால் சூத்திரத்தின் உள்பக்கம் உள்ள கைமரங்களில் நாங்கள் ஏறியிருப் போம், பா ஓடும்போது சுற்றிச் சுற்றி வரும் காட்சி தற்போதய தொட்டில் ஊஞ்சலை நினைவூட்டும் இவை செய்வதற்கு குறைந்தது இப்போது வீடுகட்டும் ஒரு வளவாவது தேவை. இந்தப் பாஓடும் வேலைதான் இன்று வாப்றோளாக மாறி மிகச்சிறிய இடத்தில் செய்யக்கூடியதாக இருக்கிறது.

சூத்திரத்தில் இருந்து பா கழற்றப்பட்டு பாக்கலைத்தல் என்ற ஒரு விடயம் இடம் பெறும். இது சிறுவர்களுக்குக் கொண்டாட்டம் போன்றது. பனையடி வீதி, தற்போதைய விளையாட்டு மைதானம் போன்றன அக்கால பாக்கலைக்கும் இடங்களாக இருந்திருக்கின்றன. எங்களுடைய "பா" விளையாட்டு மைதானத் திலேயே கலைக்கப்படும், அப்போது மைதானம் இருக்கவில்லை. இப்போதுள்ள சுனாமி ஹோட்டல் அருகில் ஒரு நாவல் மரம் நின்றது. அதில் கயிற்றை கட்டுவார்கள். ஒரு ஐந்து மீற்றர்களுக்கு அப்பால் முளைகள் அடிக்கப்பட்டு அதில் பாவின் ஒரு தொங்கல் கட்டப்பட்டு பல சுள்ளிகளையிட்டு அந்தப்பா மைனருடைய கடைவரை, தற்போதய தண்ணீர் தாங்கியையும் தாண்டிச் செல்லும். அவை பெரிய கயிறுகளினால் இழுக்கப்பட்டு இடையிடையே கைத்தடிகள் குறுக்கால் இடப்பட்டு நிமிர்த்தப்படும். அதன் இடை இடையே இடப்பட்ட சுள்ளிகளின் அகலத்திற்குக் கலைக்கப்படும். அதன் பின்னர் ஒருபக்கம் தைக்கப்பட்ட உறைகளில் காய்ச்சிவரப்பட்ட சவ்வரிசிக் கஞ்சி ஊற்றப்பட்டு இருபக்கமும் அவ்விருவர் மெல்ல மெல்ல அவ்வுறையை பாவின் மீது உருட்டுவதும் இவ்வாறு ஆள் மாறி ஆள் முழுப்பாவிற்கும் பசை போட்டு முடிப்பார்கள். எப்போது பசையிடுதல் முடியும் என்று நாங்களெல்லாம் ஆவாலாய் இருப்போம், ஏன் தெரியுமா? உறையினுள் சவ்வரிசிக் கஞ்சியின் எஞ்சிய வடிக்கப்பட்ட அடிப்பாகம் இருக்கிறதே! அதன் மணமும், சுவையும் அனுபவித்தால்தான் புரியும். பசையிடப்பட்ட பா ஒரு வீமரத்தில் சுற்றப்பட்டு தறியில் பொருத்தப்பட்டு அவை சாரியாக, சாறனாக மற்றும் தேவையான பொருட்களாக நெய்தெடுக்கப்படும்.

இவற்றின் மூலப்பொருளான நூல் பாகிஸ்தான், எகிப்து, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டன. இருந்தாலும் தற்காலத்தில் இந்தியா, சீனா போன்ற நாடுகளில் இருந்தே அதிலும் குறிப்பாக இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் அவை தேவையான நிறங்கள் ஊட்டப்பட்டு தேவையான பொருட்கள் பெறப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்தில் நெசவுத் தொழில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நூல்கள் வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்படுவதற்கு முன்னர் எவ்வாறு இந்த மூலப் பொருளான நூலைப் பெற்றுக்கொண்டனர் என்பது தொடர்பாக நான் கேட்டறிந்த விடயங்கள் மிகவும் சுவையானது.

மருதமுனையில் அந்தக்காலத்தில் அதாவது 1860 - 70களில் மிகவும் குறைந்தள விலான குடும்பங்களும் வீடுகளுமே இருந்திருக்கின்றன. 1877ம் ஆண்டு இடம் பெற்ற குடிசனமதிப்பீட்டின்படி மருதமுனை வடக்கு, மத்தி, தெற்கு என மூன்று பிரிவுகளாகவே கணக்கெடுப்புகள் நடைபெற்றிருக்கிறது. அதன்படி மருதமுனை வடக்கில் 188 குடும்பங்கள் 148 வீடுகளிலும், மருதமுனை மத்தியில் 158 குடும்பங்கள் 123 வீடுகளிலும், மருதமுனை தெற்கில் 121 குடும்பங்கள் 88 வீடுகளிலும் வாழ்ந்திருக்கிறார்கள் என்றால் அவர்களது வளவும் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற அடிப்படையிலேயே இருந்திருக்கின்றன. இதில் நெசவுத் தொழிலில் அதிகமான குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களது வளவில் இலவமரம் செய்கை பண்ணப்பட்டு அதன்மூலம் பஞ்சு பெறப்பட்டு அதனைக்கொண்டு சோமன் சாரி, பளையகாட் சாறன்கள் போன்றன செய்யப் பட்டிருக்கின்றன.

பருத்திமணை என்ற ஒன்றை பன் அரைப்பதற்காக எமது தாய்மார் பயன் படுத்தியதை நம்மில் பலர் அறிந்திருப்போம். உண்மையில் அது பருத்தி அரைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு உபகரணமே. இலவ மரத்தில் இருந்து பெறப்படும் காய்கள் உலர்த்தப்பட்டு அவை இந்த பருத்திமணை மூலமே பஞ்சு வேறாகவும் அதன் விதைகள் வேறாகவும் பிரிக்கப்பட்டன. இதனாலேயே இது பருத்திமணை என்ற பெயர்பெற்றிருக்கிறது. மணை என்பது பருத்தியைச் சுத்தம் செய்யும் கருவி என்பது அகராதிப்பொருளாகும். இவ்வாறு பிரிக்கப்பட்ட பஞ்சு, நீர் நிரப்பப்பட்ட பாத்திரத்துள் போடப்பட்டு இளை இளையாக எடுக்கப்படும். இவ்வாறு எடுக்கப்படும் பஞ்சு ஒன்பது பத்து அங்குல அளவுள்ள "நாங்கள் தற்காலத்தில் காண்கின்ற பென்ஸில் அளவு என வைத்துக்கொள்ளுங்கள்" சுள்ளியின் அடிப்பாகத்தில் ஈயத்தினாலான ஒருபாரம் பொருத்தப்பட்டிருக்கும். அதில் பாத்திரத்திலிருந்து பிரித்தெடுக்கப்படும் பஞ்சின் ஒரு பகுதி பிணைக்கப் பட்டு இச்சுள்ளியை தமது தொடையில் வைத்து உருட்டுவார்கள். அது பம்பரம் போல் சுழலும். அதன் சுழற்சிக்கேற்ப பருத்தியை விட்டுக்கொடுப் பார்கள். அது நன்றாக முறுக்கேறும். அதுவே நூலாகும்.

அந்த நூலைப் பாவாக மாற்றும் முறை இன்னும் அலாதியானது, பெரிய வளவு என்று ஏற்கனவே குறிப்பிட்டேனல்லவா? அந்த வளவைச்சுற்றி இரண்டு அடி உயரமான சுள்ளிகளை மூன்று அடிக்கு ஒன்றாக நட்டு வைத்திருப்பாகள். அந்த சுள்ளிகளில் முறுக்கப்படும் நூலை மாறிமாறி அதாவது ஒரு சுள்ளியில் உள்பக்கம் என்றால் மறுசுள்ளியில் வெளிப்பக்கமாக நூலைப் பின்னிவிடுவார்கள். இதுதான் அன்றய பாவோடும் முறையாக இருந்தது. இந்தக் காலத்தில் ஒரு பா ஓடி முடிப்பதற்கு சில மணித்தியாலங்கள் போதுமானது. ஆனால் அந்தக் காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதக்கணக்கில் ஒரு பாவை செய்துமுடிப்பதற்குக் காலம் தேவைப்பட்டது. மற்றும் விவசாயம், மீன்பிடி போன்ற வேலைகளுக்கும் சென்று வருவதோடு இதனையும் செய்து கொண்டார்கள்.

இவ்வாறுதான் குழித்தறிகள் மூலம் செய்யப்பட்ட நெசவுத் தொழில் நிலத்தறியாக மாறி எல்லா மக்களும் செய்யக்கூடிய இலகுவான தொழிலாக இது வடிவமைக்கப்பட்டது. காலப்போக்கில் குழித்தறி என்பது எமது அடுத்த பரம்பரையினர் அறியாத ஒரு விடயமாகிவிட்டது. இறுதியாக 1965, 66 களில் எங்களது வீட்டில் இரண்டு குழித்தறியும், அப்துல் றஹ்மான் மரைக்கார் (ஏ.ஆர்.ஏ. அஸீஸ் சேர் அவர்களின் வாப்பா) அவர்களின் வீட்டில் (தற்போது E. கமால்தீன் ஆசிரியரின் வீடு) இரண்டு தறிகளும் இருந்தன.

இக்காலப்பகுதியில்தான் மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதிலும் விநியோகிப்பதிலும் பல சிரமங்கள் ஏற்பட்டன. இதற்காக தேசிய பிடவைக் கூட்டுத்தாபனம் (NTC), சங்கங்கள் ஊடாக நூல் விநியோகம் செய்யும் திட்டத்தினை அரசு முன்னெடுத்தது. எமதூரில் றஹ்மானியா நெசவாளர் சங்கம் என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக அப்துல் றகுமான் மரைக்கார், செயலாளராக அப்துல் றஹீம் மரைக்கார் (கட்டுரையாளரின் தந்தை) தெரிவு செய்யப்பட்டு இவர்கள் மட்டக்களப்பு சென்று NTCஇல் நூல் பெற்று வந்து நெசவாளர்களுக்கு விநியோகித்தனர்.

இவ்வாறு மருதமுனையின் நெசவுத் தொழில் சீராகவும் சிறப்பாகவும் ஓடிக் கொண்டிருந்த வேளையில்தான் 1978ம் ஆண்டு பாரிய சூறாவளி எம்மைத் தாக்கியது. இதனால் நெசவுத் தொழிலுக்கு பாரிய சேதமேற்பட்டது. இவ்வேளையில் நானும் ஐந்து சாரித்தறிகள் போட்டிருந்தேன். முழுப்பாவுடன் தறிகள், வாப்புறோல் மற்றும் உபகரணங்கள் எனப் பலத்த சேதம் ஏற்பட்டன. அப்போதுதான் எனக்கு ஏறாவூரில் வங்கியில் இலிகிதர் வேலை கௌரவ ஏ.ஆர். மன்சூர் அவர்களினால் வழங்கப்பட்டது. இதனால் எனக்கு நெசவுத்தொழிலை தொடர்ந்து செய்யமுடியாமல் போய்விட்டது. அத்தோடு சிறிய சிறிய முதல்களில் செய்தவர்கள் பலர் இத்தொழிலை கைவிடும் நிலைக்கு வந்து விட்டனர்.

இதன் பின் ஒரு பேரிடியும் இத்தொழிலுக்கு ஏற்பட்டது, அதுதான் அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கை. தேவையான சாறன்கள் இந்தியாவிலிருந்து தரமாகவும் குறைந்த விலையிலும் பெறக்கூடியதாக இருந்தபடியால் எமது நெசவுக் கைத்தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. இந்நிலை பற்றி அரசுக்கு எமது பிரதானிகளால் பல மனுக்களும் வேண்டுகோள்களும் விடுக்கப்பட்ட போதிலும், அவை பல நிருவாகச் சிக்கல்களையும், குறிப்பிட்ட சிலரே அவற்றை அனுபவிக்கும் நிலைமையுமே காணப்பட்டன. இத்தொழிலுக்கு ஊக்கமளிப்பதற்காக இதற்கான ஒரு தனியான அமைச்சும் ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைச்சின் பிரதி அமைச்சராக எமது பிரதேசத்தை சேர்ந்த எம்.ஏ. அப்துல் மஜீத் அவர்கள் நியமிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார்கள். ஆயினும் இத்தொழில் எழுச்சி பெறமுடியாமல் இருந்தது. எல்லா அரசியல்வாதிகளிடமும் இதுபற்றிய மனுக்களும் முறையீடுகளும் சென்றன. இதற்குப் பிரதானமான காரணியாக எமது பொருட்களின் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கின்ற அதேவேளை பொருட்களின் விற்பனை விலை மிகவும் குறைவானதாக இருந்தமையும் காரணங்களாகும். மேலும் எமது உற்பத்தி பொருட் களைவிட இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நெசவுப்பொருட்கள் தரம் கூடியனவாக இருந்தன. இதனால் நல்லதையே விரும்பும் மக்களின் நாட்டமும் அவற்றின்பால் ஈர்க்கப்பட்டன.

1978 - 79 காலப்பகுதியில்தான் அதாவது நெசவுத்தொழில் வீழ்ச்சியான இக்கால கட்டத்தில்தான், எமது கிராமத்தில் கல்வியில் அதிக கவனம் செலுத்துபவர் களாக எமது மக்கள் திசைமாற்றம் பெறுகின்றனர். வேலைவாய்ப்புகள் பெற்று வெளிநாடு செல்லும் மோகமும் அதிகரிக்கின்றன.

மாஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் 15.02.1989இல் நடைபெற்ற ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலில் கல்முனைத் தொகுதியின் நாடாளு மன்ற உறுப்பினராக தெரிவானார், அவரிடமும் இத்தொழில் தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்பட்டன அவரின் முயற்சியால் நெசவாளர்களுக்கும், நூல் வியாபாரிகளுக்கும் மானியம் பெறும் ஒரு திட்டத்தினை ஏற்பாடு செய்துதந்தார். இதிலும் நூல்வியாபாரிகளே பெரிதும் நன்மையடையும் ஒரு நிலை காணப்பட்டது. மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் இது தொடர்பில் அடிக்கடி கூறும் விடயம் ஒன்றை இங்கு கூறுவது பொருத்தம். இவ்விடயத்தை மசூர்மவ்லானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஒரு பகிரங்க மேடையில் கூறுவதை அவரது மொழியிலேயே கேளுங்கள், "அன்புள்ள எனதருமைச் சகோதரர்களே உங்களுடைய மாபெரும் பிரச்சினையாக இந்த நெசவுத்தொழிலில் ஏற்பட்டுள்ள சரிவினையும், வீழ்ச்சியினையும் நான் காண்கிறேன். இதற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள நாமே முயற்சிக்க வேண்டும். ஏனென்றால் நமது உற்பத்திப் பொருட்கள் தரம் குறைந்தவையாக இருப்பதே இதன் பிரதான காரணமாக உள்ளன. நான் உடுத்தியிருக்கும் இந்தச் சாரனைப் பாருங்கள், இதை நான் ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கினேன். ஏனென்றால் இதன் தரம் மிக உயர்ந்தளவில் உள்ளது. இவ்வாறு தரமான உற்பத்திப் பொருட்கள் செய்யப்பட்டால் உங்களது இந்த நெசவுத்தொழில் மிகவும் முன்னேற்றம் அடையும் என்பதில் சந்தேகமில்லை. நானும் படிக்கின்ற காலத்தில் சாறன் வியாபாரம் செய்தவன்தான். (இது 1989ம் ஆண்டு மருதமுனை மசூர்மவ்லான சதுக்கத்தில் ஆற்றிய உரையின்போது). ஆனாலும் நெசவுத் தொழில் வீழ்ச்சிப்பாதையிலே சென்றதற்கு கல்வி முன்னேற்றம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் போன்றனவும் காரணங்களாகவிருந்தன.

அஷ்ரப் அவர்களின் உலங்குவானூர்தி (Helicopter) விபத்து 16-09-2000மாம் ஆண்டு நடைபெற்றபோது அதில் அவர்கள் மரணிக்கிறார்கள். அத்துடன் எனது நண்பர்களான CDO நிஃமதுல்லாஹ், றபியுதீன் ஆசிரியர் ஆகிய இருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணிக்கிறார்கள். இதன்பின்னர் தலைவராக வந்த அல்-ஹாஜ் றஊப் ஹக்கீம் இந்தத் தொழிலுக்கு தன்னாலான உதவிகளைச் செய்ய எமது வேண்டுகோளின் பிரகாரம் முன்வந்தார்கள். அப்போது இத்தொழிலை முன்னேற்ற வேண்டும் என்ற முனைப்புடன் ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்களைத் தலைவராகக் கொண்ட "மருதமுனை அபிவிருத்தி மக்கள் கம்பனி" ஆரம்பிக்கப்பட்டது. இதில் முக்கியமாக சாஜகான், உபைதுர் ரஹ்மான், உமர் மவ்லானா, முயீனுத்தீன், அகது போன்றவர்கள் முன்னிலையில் நின்றனர். அப்போது SLMC அமைப் பாளராகவும், மத்தியகுழுத் தலைவராகவும் நான் இருந்தபடியால் அவர்கள் என்னை நெருங்கி ஏதாவது இத்தொழில் முன்னேற்றத்துக்காக செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டதற்கிணங்க தலைவர் ரஊப் ஹக்கீம் அவர்களை எனது இல்லத்திற்கு அழைத்து (தற்போதைய அஸ்வர் ஆசிரியர் அவர்களின் இல்லம்) ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தேன். அதன்போது தொழிலிலுள்ள அத்தனை பிரச்சினைகளும் தலைவர் அவர்களிடம் சமர்பித்து கலந்துரையாடி மேலும் அதன் நடவடிக்கைகள் தொடரப்படும் என்ற அடிப்படையில் அமைச்சு உயர் அதிகாரிகளிடமும் அமைச்சர் அவர்களுடனுமான ஒரு சந்திப்பை கொழும்பில் தனது அமைச்சில் செய்வோம் என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டு அடுத்தவாரமே உபைதுர் ரஹ்மான் அவர்களின் வேனில் கம்பனி முக்கியத்தர் களுடன் நானும், ஹமீட் சேமன் அவர்களும் உடன் சென்று அமைச்சர், உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல்களின்போது தொழில் அபிவிருத்திக்கான பல முன்னெடுப்புக்கள் எடுக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானத்தோடு இதன் முதற் கட்டமாக கம்பனிக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபா நிதி வழங்வது என்றும் உறுதியளிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து படிப்படியாக நெசவுத்தொழிலில் சில மாற்றங்கள், முன்னேற்றங்கள் ஏற்படத்தொடங்கின. படையப்பா சாறனின் அறிமுகம், சேட் துணிகள் போன்றனவும் உற்பத்தி செய்யப்பட்டன. ஓரளவு தொழில்நுட்பங்களும் புகுத்தப்பட்டது மட்டுமல்லாமல் ஒரு புதிய தலைமுறை இத்தொழிலைப் பொறுப்பேற்றுச் செய்ய முற்பட்டது இத்தொழி லுக்கு ஒரு உத்வேகத்தை கொடுத்தது.

இந்த வேளையில்தான் 2004 டிசம்பர் 26ல் மற்றுமொரு பாரிய இயற்கை அனர்த்தம் "சுனாமி" எம்மைத்தாக்கியது. அதனால் கரையோரங்களில் உள்ள நெசவாளர்கள் பாதிக்கப்பட்டதும் NGOக்கள், அரச உதவிகள் பல கிடைக்கப் பெற்றதும் மீண்டும் தொழில் உயர்ச்சி பெற்றமையும் கண்கூடு.

இன்று இந்த நெசவுத்தொழில் திட்டமிட்ட அடிப்படையில் வடிவமைக்கப் பட்டு உயர் தரத்தில் நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் மக்கள் விரும்பி வாங்குகின்ற பொருட்களாக எமது சாறன்கள், சாரிகள், சேட்டுகள், சல்வாரிகள், தாவணிகள், கைலேஞ்சுகள், பட்டுச் சாறன்கள், சாரிகள் போன்றன விநியோகிக் கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த உற்பத்தியின் கணிசமான பங்களிப்பினை "மருதமுனை ஜாஹி வீவர்ஸ் பிரைவேட் லிமிடட்டும்" அதன் முகாமைத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர் அல்-ஹாஜ். எம்.ஐ. உபைதுர் ரஹ்மான் அவர்கள் செய்து கொண் டிருக்கிறார்கள். இதன் முகாமையாளராக கடமையாற்றும் பணி என்னால் மேற்கொள்ளப்படுகிறது. கடந்த நான்கு வருடங்களாக இங்கு நான் கடமை யாற்றுவதன் மூலம் பல அனுபவங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. அதிகமான அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், பாதுகாப்புப் படையினர், உயரதி காரிகள், வியாபாரிகள் என நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் எமது பொருட்களை நாடி வருகின்றனர். இதன் மூலம் எமது கம்பனியால் நேரடி யாகவும், மறைமுகமாகவும் ஆயிரம் பேரளவில் தொழில்வாய்ப்பைப் பெற்றிருக் கின்றனர்.

USAID உடன் கூட்டுச்சேர்ந்து இததொழிலை முன்னேற்றுவதற்கான ஒரு பாரிய திட்டம் வகுக்கப்பட்டு சுமார் இரண்டு கோடி ரூபா அளவில் அதற்காகச் செலவிடப்பட்ட பின்பும் உரிய அதிகாரிகளின் அசமந்தப் போக்கினாலும் விருப்பமின்மையாலும் இம்முயற்சி கைவிடப்பட்டுள்ளதை இவ்விடத்தில் மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகாரிகளின் மேற்படி தவறினால் சுமார் 600 பேர்களுக்கு தொழில் வாய்ப்பளிக்கும் திட்டம் கைகூடாமல் போயிருக்கிறது.

இத்தொழில் எதிர்காலத்தில் ஒரு அபாயமான நிலையைச் சந்திக்க இருக்கின்றது என்ற ஒரு விடயத்தையும் நான் இங்கு குறிப்பட விரும்புகிறேன். அதுதான் தொழிலாளர் பிரச்சினை, இப்போது நெசவு செய்கின்ற தலைமுறையினர் ஓய்வெடுத்துக்கொண்டால் அல்லது இறந்துவிட்டால் அடுத்த தலைமுறையினர் இத்தொழிலை செய்வதற்கான எந்த ஏற்பாடுகளும் இல்லை. இளைஞர்கள் இத்தொழிலைக் கற்றுக்கொள்வதற்கு ஆர்வம் காட்டுகிறார்களில்லை. இது தொடர்பில் எமது நிறுவனத்திற்கு வந்த அமைச்சர்கள், செயலாளர்கள், உயரதிகாரிகள் என எல்லோரிடமும் நாம் சொல்லியிருக்கின்றோம். அதற்காக சில ஆலோசனைகளையும் நாம் எழுத்து மூலமும் கொடுத்திருக்கிறோம். ஆனால் இதுவரை எதுவும் அரச சார்பில் நடைபெற்றதாக தெரியவில்லை. அதன் உள்ளடக்கத்தில் சில,

ஆலோசனை - 01 :
கல்வித் திட்டத்தில் நெசவுத்தொழிலை ஒரு கட்டாய பாடமாகக் கொண்ட பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் கட்டாயம் அதில் சித்திபெற வேண்டும் என்ற ஏற்பாட்டினைச் செய்வதோடு அம்மாணவர்கள் சித்திபெறும் பட்சத்தில் அவர்களுக்கான உயர்கல்வி வேலைவாய்புக்கள் என்பனவற்றுக்கான உத்தரவாதம் அளிக்கப்படல்.

ஆலோசனை - 02 :
பாடசாலை விடுகை மாணவர்களில் பல்கலைக்கழகம், கல்விக் கல்லூரி போன்றவற்றிற்கு தெரிவாகும் மாணவர்களுக்கு அடுத்து நிலையில் இருக்கும் மாணவர்களுக்காக ஒரு தனியான நெசவுத்தொழில் தொடர்பான கலாசாலை அமைக்கப்பட்டு அதன் மூலம் உயர்கல்வி, வேலைவாய்ப்புகள், மற்றும் பயிற்சித் திட்டங்கள் வகுக்கப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான திட்டங்களை அரசு முன்னெடுத்து எமது இந்த நெசவுத்தொழிலின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஊக்கமும் ஆக்கமும் வழங்க முன்வரவேண்டும் என்பது எங்களது வேண்டுகோளாகும்.



சில நினைவுகள் :

நெசவுத் தொழிலின் பெயரால் பட்டப்பெயர்கள் சில வழங்கப்பட்டன. பாவோடியர், நூலார், கட்டாரி கனிபா, பளைகாட் மஜீட், சூத்திரக்காரன் பிள்ளை, அச்சுக்கட்டியர், டை முஸ்தபா, டை மீராலெப்பை, நைலோன் முஸ்தபா, சறுக்கால் இன்னும் பல.

1. ஊடைப்பாவில் ஒழித்த பையன் பழுக்காத்தாரை என்ன பழம் என்று கேட்டானாம்.
2. எட்டிப் பார்த்தால் எட்டு இளை குறையும்.
3. துண்டுப்பாவுக்குள்ள நாடா ஓடுறாப்போல...

நெசவு ஆசிரியர்களாக :

01. அ. முகைதின் பாவா (மருதூர் ஹஸனின் வாப்பா)
02. மு. முஹம்மது இஸ்மாயில்
03. கே. எம். ஸம்சுத்தீன் (உமர்அலியின் வாப்பா)
04. வை.எல்.எம். யாசீன்
05. ஏ.பி. இப்றாகிம் (டை மீராலெப்பை)
06. பீ.எம். இப்றாலெப்பை ஓடாவியார்
07. முத்தலிப் வஹாப்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலும் கடலும் வளம் சேர்த்த பூமியிது

ஏ.ஆர். அப்துல் சத்தார், ஜே.பி.

விவசாயம் - வேளாண்மை :

மருதமுனை வரலாற்றில் விவசாயம் பாரியளவில் இல்லாவிட்டாலும் ஒரு சிறு தொகையினரால் மிகப்பழங்காலம் தொட்டு 1850களில் இருந்து விவசாயம் செய்யப்பட்டதாகவும் இக்காலப்பகுதியில் வாழ்ந்த சின்னாலிமப்பா அவர்கள் களிமடுக் கண்டத்தில் விவசாயத்தில் ஈடுபட்டதாகவும் வரலாறுகள் சான்று பகர்கின்றன. எம்மவர்கள் குறிப்பாக வடக்கில் வாழ்ந்தவர்கள் தமன்கடுவை சுங்காவில் களிமடுக்கண்டம் போன்ற இடங்களுக்குச் சென்று நிலம் கொத்தி பயிர்கள் பல செய்ததாகவும் நெல், புகையிலை என்பன பெரியவருமானம் தரும் தொழில்களாக இருந்துள்ளமையும் இவ்வுற்பத்திப் பொருட்களுக்கு மாற்றீடாக வீட்டுக்குத்தேவையான பொருட்கள் பண்டமாற்று முறையில் செய்யப்பட்ட தாகவும், பிற்காலங்களிலேயே அவை பணத்துக்கு விற்பனை செய்யப்பட்ட தாகவும் அறிய முடிகிறது.

இதேபோல தெற்கில் வாழ்ந்தவர்களில் பலர் சேனைப் பயிர்செய்கைக்காக மொனறாகலை, தும்பக்காகவலை போன்ற இடங்களுக்குச் சென்று விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதையும் அறிய முடிகிறது. இவர்கள் மந்தை வளர்ப்பு விவசாயத்திலும் ஈடுபட்டுள்ளனர். இத்தொழில் பெரும் இலாபகரமான தொழிலாக அக்காலத்தில் கணிக்கப்பட்டிருக்கிறது. மந்தை வளர்ப்பு வேளாண்னை எமதூரிலும் பெரியளவில் இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. இதன் செயற்பாடுகள் நடவடிக்கைகள் பற்றி "எனது கிராமத்தை தேடுகிறேன்" நன்றாகக் கூறுகிறது.

கிராமம் கடந்து செய்யப்பட்ட இவ்விவசாயம் எமது கிராமத்தின் மேற்கேயுள்ள மேட்டுவட்டை என்ற வயற்காணிகளோடு ஆரம்பிக்கிறது. அலியார் போடி என்பவரே முதலில் வேளாண்மை விவசாயத்தில் ஈடுபட்டவர் எனக்கூறலாம். அவரும் துறைநீலாவணை மக்களிடமிருந்து நிலங்களை வாங்கியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இவர் நல்ல செல்வந்தராகவும் நன்கொடை வழங்கும் இயல் புடையவராகவும் இருந்துள்ளார். பல பொதுநிறுவனங்களுக்கு குறிப்பாக பள்ளி வாயல்களுக்கு நிலங்களை இலவசமாக வழங்கியுள்ளதாக அறியப்படுகிறது.

இவரை தொடர்ந்து வந்தகாலங்களில் பலர் இந்த மேட்டுவட்டையில் காணிகளை வாங்கி வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். பண்டைக்காலங்களில் தற்போதய எமது வயல்களும், குளங்களும் மட்டக்களப்பு வாவியாகவிருந்து கப்பல் போக்குவரத்து செய்கின்ற இடமாக இருந்திருக்கிறது.

குதிரைமலைத் துறைமுகம், கற்பிட்டித் துறைமுகம் என்பன நாட்டின் மேற்கே பிரதான துறைமுகமாகவும் மட்டக்களப்பு, திருகோணமலை போன்றன ஏற்றுமதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்குமதித் துறைமுகமாகவும் வடக்கே காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு மலைநாட்டுப் பிரதேசங்களில் இருந்து தவளம் ஊடாக கறுவா, ஏலம், மிளகு, மாணிக்கக்கற்கள், யானைத் தந்தங்கள் போன்றன ஏற்றுமதி செய்யப்பட்டு அதற்குப் பதிலாக கருவாடு, பாக்கு, உடுதுணி வகைகள் போன்ற வற்றைக் கொடுத்திருக்கின்றனர். கிட்டங்கித் துறையே பிரதான துறையாகவும் பண்டகசாலையாகவும் இருந்தது. இவ்விடயங்கள் மட்டக்களப்பு வாவி பரந்து விரிந்து எமது மருதமுனை வரை இருந்ததையும் அவ்வேளைகளில் வேளாண்மைத் தொழில் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை என்பதும் மேட்டுவட்டை என்ற காணிப்பிரதேசம் ஆற்றின் ஒரு பகுதியாகவே இருந்தது மட்டுமல்லாமல் இந்த நீர் உவர்நீராகவும் இருந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

பிற்காலத்தில் பிரதான வீதிகளின் தோற்றம், வாகனங்களின் அறிமுகம் என்பனவும் குடிப்பரம்பலின் அதிகரிப்பும் இந்நிலைமைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின. மக்களின் உணவுத்தேவைக்காக வேளாண்மை பயிரிடப்பட வேண்டியதன் அவசியமும் பொருத்தமான இடங்களை இனங்காண வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இதனாலேயே மேட்டுவட்டை என இப்போது வழங்கப்படும் பிரதேசங்களை இனங்கண்டு அவற்றை முதலில் உவர்நீர் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பதன் மூலமே வேளாண்மை செய்யமுடியும் என உணர்ந்ததன் பயனாக துரைவந்திய மேட்டை அண்மிய பகுதியில் குறுக்காக ஒரு அணை அமைக்கப்பட்டதும் இங்கு நினைவு கூறப்பட வேண்டும். இதன் பின்னரே மக்கள் இப்பிரதேசங்களில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு காட்டியுள்ளனர். ஆரம்பத்தில் துறைநீலாவணை மக்கள் நீலாவணை மக்கள் மருதமுனை மக்கள் எனப்பலரும் மேட்டுவட்டை வடக்கில் தமது வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர்.

மருதமுனையின் அலியார்போடி என்பவர் இதற்கு முன்னோடியாக இருந்தவர் என முன்னர் குறிப்பிட்டேன். இதனைத் தொடர்ந்து எம்மவர்களில் பலர் இத்தொழிலில் ஈடுபாடுகாட்டி பெரியளவில் வருமானம் பெற்றிருக்கிறார்கள். கறுப்பன், முத்துசம்பா, சீநெட்டி, நொறுங்கன் எனப்பலவகை நெல்லினங்கள் இனங்காணப்பட்டு விதைக்கப்பட்டு நல்ல அறுவடைகளைப் பெற்றிருக் கின்றனர். நாளடைவில் இவர்கள் எல்லோரும் ஒன்றாகக்கூடித் தங்களுக்குள் ஒரு குழுவை ஏற்படுத்தியிருக்கின்றனர் 1950, 60களில் எனது தந்தை அப்துல் றஹீம் மரைக்கார் குழுத்தலைவராக இருந்ததாக றஸாக் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அது எனக்கு நினைவில இல்லையென்றாலும் 1965-1975 காலப்பகுதியில் மேட்டு வட்டை வடக்கு விவசாயிகள் சங்கத்தின் செயலாளராக இவர் இருந்திருக்கிறார். விவசாய இடாப்பு என்ற பதிவு அப்போது இருந்ததும் அதைப் பலமுறை நான் எழுதிக்கொடுத்ததும் நினைவில் உண்டு. அச்சமயம் இதன் தலைவராக துறை நீலாவணை தம்பியப்பா (இவர் இன்னும் உயிர்வாழ்கிறார்) பொருளாளராக நீலாவணை செல்லப்பா ஆகியோர்கள் கடமையாற்றியதை நினைவுகூர்கிறேன். இவர்களாலேயே பெரியநீலாவணை கமநலசேவை நிலையம் கட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டு முத்தட்டு என்ற பெயருடைய எமது வயலுக்கு வேலை செய்பவர்களுக்காக சோற்றுப்பெட்டி, தேநீர் போன்றவற்றையும் மற்றும் உபகரணங்களையும் நான் எனது நண்பர்கள் சிலருடன் எடுத்துச் செல்வேன். பக்கத்து வயல் புர்கான் அவர்களுக்குரியது. அன்று வயல்களில் குருவி விரட்டும் காட்சி இன்னும் பசுமையானது. ஹம்தூன், பதுறுல் இஸ்லாம் ஆகிய இருவரும் குருவி விரட்டுவதைப் பார்த்து நானும் அவ்வாறு விரட்டுவதற்கு முயற்சிப்பேன். அறுவடை செய்யப்பட்ட நெற்கள் யாவும் செய்கைக்காறன், வேலைக்காறன் நன்கொடைகள் எனப் பங்கிடப்பட்ட பின்னர் மீதியானவை யாவும் மாட்டு வண்டிகளில் வீடுகளுக்குக் கொண்டு செல்லப்படும் உள்வீட்டில் பட்டடை அமைக்கப்பட்டு அங்கு நெல் சேமித்து வைக்கப்பட்டு தேவையானளவில் பாவிக்கப்படும். சோற்றுப்பஞ்சமே இல்லை. கடலில், ஆற்றிலிருந்து மீனும் வீட்டுப் பட்டடையிலிருந்து அரிசியும் மற்றெல்லாப் பொருட்களும் இலகுவில் கிடைக்கக் கூடிய ஒரு நிலைமையும் இருந்ததால் மக்கள் சாப்பாட்டுக் கஷ்டமின்றி சந்தோச மாக வாழ்ந்தார்கள். தயிர், நெய், பால் போன்றவையும் முட்டை காய்கறிகள் என்பனவும் தாராளமாக கிடைத்தன.

காலவோட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், அரச உத்தியோகங்கள், நெசவுத்தொழிலின் எழுச்சி, கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் என்பன விவசாயத் தொழிலில் ஈடுபாடுகொள்வதில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தின. இளைஞர் சமூகம் விவசாயத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளவோ அதில் ஈடுபடவோ முன்வரவில்லை. மேலும் உயர்ந்து சென்ற வாழ்கைச் செலவுக்கு ஈடுகொடுக்கும் அளவிற்கு வருமானம் தரும் துறையாக மேற்படி விவாசயம் கைகொடுக்க வில்லை.

மற்றெல்லாக் கிராமங்களும் விவசாயக் கிராமங்களாக இருந்த அதேவேளையில் மருதமுனை மாத்திரம் கைத்தொழில் கிராமமாக இருந்தமையும் அதிகளவு காணிவயல்கள் இல்லாதவர்களாகவும் இவர்கள் காணப்பட்டனர். இன்றய தினத்தில் மருதமுனையைச் சேர்ந்த ஒரு சதவீதத்தினரும் விவசாயத்தில் ஈடுபட வில்லை என்பது நோக்கத்தக்கது.

கடல் தொழில் - மீன்பிடி :

மருதமுனையின் கடற்றொழில் பற்றிய தகவல்கள் யாவும் 1880களிலிருந்தே ஆரம்பிக்கிறது. முதன்முதலாக கரைவலைத்தோணி இக்காலப்பகுதியிலேயே 'அசனார் மரைக்கார்' என்பவரால் சிங்களப் பிரதேசத்திலிருந்து கொண்டுவரப் பட்டது. இதனால் இவர் "பெரிய தண்டையல்" என்ற பெயர் பெறுகிறார். இவரது மகனே மூத்த தண்டையல் (றஸாக் ஆசிரியரின் வாப்பா). 1898ல் பிறந்த இவர் தண்டையலின் மக்களது வாடி தற்போதைய தோணாவிற்கு வடக்கில் உள்ள பிரதேசத்தில் குடியிருப்பாக இருந்தார்கள். இவரது வாழ்வாதாரத் தொழிலாக கடல் மீன்பிடி இருந்ததோடு மேலும் பலர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். இத்தோணிவலை "மொட்டயன்" என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டிருக்கின்றது. இக்கால மீன்பிடியும் மிக வருமானம் தரும் ஒரு தொழிலாக இருந்தபடியால் மேலும் பலர் இத்தொழிலைச் செய்வதற்கு முன்வந் திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து வெள்ளக்குட்டியர், வைத்தியர் இறமுழார் போன்றவர்களும் தோணிவலைகள் வைத்திருந்தனர். 1940 காலப்பகுதிகளில் ஐந்து அல்லது ஆறு தோணிவலைகளே இருந்திருக்கின்றன. இதன் பின்னர் அப்துல் றஹீம் என்ற மம்மலிபா தண்டையல், சீனி முஹம்மது தண்டையல், சாய்பு தண்டையல், நாகூரான் தண்டையல், பக்கிர் தண்டையல், அச்சு மம்மது தண்டையல், யூசுப் தண்டையல், யூகம்பிள்ளை, ஆதம்பாவா தண்டையல் எனப் பலர் இத்தொழிலில் ஈடுபட்டிருக் கின்றனர். இவர்களது தோணிவலைகள் மொட்டையன், காக்கா மொட்டையன், குயின்மேரி, டம்பர், வெள்ளவத்தை, சாரவத்தை, வைரவன், பஞ்சமி எனப் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றன. இத்தொழில் அன்றும் சரி இன்றும் சரி தொடர்ச்சியாக வருமானம் தரும் தொழிலாக இல்லை. ஏனெனில் இத்தொழில் காலநிலை மாற்றங்களால் தீர்மானிக்கப்படும் பருவகாலத் தொழிலாகவே இருந்துள்ளது. தண்டையலின் மக்களது வாடி ஒரு பெரிய தென்னந் தோட்டமாக பனை ஓலைகளால் வளைத்து வேலி கட்டப்பட்ட பகுதியாகவும், ஹிதாயதுள்ளா (எங்களோடு படித்தவர்) வைச் சந்திக்க சில போது நாங்கள் பலர் சேர்ந்து அந்த வாடிக்குச் சென்றிருக்கின்றோம். அப்போது அவரின் தாயார் கிடுகு இழைத்து கட்டுக்கட்டாக அடுக்கியிருப்பதையும், நூற்றுக்கணக்கான தேங்காய்கள் பறிக்கப்பட்டு உரிமட்டைகள் குவியலாகவும், வீட்டுக்குள் ஒரு மூலையில் தேங்காய்கள் குவிக்கப்பட்டிருப்பதையும் நாங்கள் கண்டிருக்கிறோம். தாகசாந்திக்காக இளநீரும் கிடைத்திருக்கிறது.

1960, 70களில் இருபதுக்கும் அதிகமான தோணி வலைகள் எமது கடற் பிரதேசத்தில் இருந்தன. தொழிலாளர்கள் எமது கிராமத்து மக்கள் மட்டு மல்லாமல் துறைநீலாவணை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை போன்ற தமிழ் பிரதேசங்களிலிலிருந்து அதிகமானவர்கள் பங்கெடுத்துக்கொண்டமையை இன்றும் நினைவுகூரக்கூடிய தாகவுள்ளது. வலை இழுத்த கூலி கொடுப்பதும் உடனுக்குடன் நடைபெற்றது. அயல்கிராமங்களிலிருந்து வரும் தொழிலாளர்கள் வேலைமுடித்துச் செல்லும்போது வேறு தொழில்களில் ஈடுபட்டு அதன் மூலம் மேலதிக வருமானம் பெற்றுச் செல்வதையும் கண்டிருக்கிறோம். வேலிகட்டுதல், கூரைவேய்தல், தேங்காய் பறித்தல் மற்றும் கூலி வேலைகள் போன்றன அவர்களின் வருமான மூலங்களாக இருந்தன.

மருதமுனையாரின் கடற்தொழில் பிரதேசமாக பாண்டிருப்பு முதல் கல்லாறு வரை பரந்து விரிந்திருந்தது. கல்முனை வாடிவீட்டு வீதி தெற்கெல்லை யாகவும் கல்லாற்றோடை வடக்கு எல்லையாகவும் இருந்தன. மருதமுனையார் மட்டுமே இக்காலப்பகுதியில் தோணிவலை சொந்தக்காரர்களாக இருந்தபடியால் இப்பரந்த பிரதேசத்தில் சென்று மீன்பிடிக்க தடையிருக்கவில்லை. கடலில் நீர் ஓடுகின்ற காலத்தில் வலை, வளையும் இடத்திலிருந்து மிகத்தொலைவிற்கு சென்று வலை கரையேறும். இந்நீர் ஓட்டம் வாடை நீர், சோழ நீர் என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டன. தூரவிடங்களில் வலை கரைசேருகின்ற போது தோணிச்சொந்தக்காரர்களோடு வலையேற்றுபவர்கள் என மேலும் மூவர் அவ்வேலை முடிந்த பின்னரே வீட்டிற்குச் செல்ல முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் முதலாளியின் வீட்டிலிருந்து சோறு, கறி ஓலைப்பெட்டியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து எடுத்துச்செல்லப்படும். இரைமாத்திற ஆலையடி என்ற இடத்தில் - கல்லாற்று வைத்தியசாலைக்கு நேர் எதிரிலுள்ள கடற்கரைப் பிரதேசத்தில் நான் சோற்றுப்பெட்டி கொண்டு சென்றது இன்றும் என் நினைவில் உள்ளது. வாப்பாவுடன் அலிமுகம்மது நானா, அச்சுமுகம்மது குடைக்கட்டியர், சேக்கார் ஆகியவர்களுடன் நாங்கள் ஐவரும் சோறு சாப்பிட்டிருக்கிறோம். அங்கு சோறு சாப்பிடுவது என்பது மிகவும் உருசியான விடயம். சிலபோது தண்ணீர் போதா விட்டால் தண்டையல்ல மக்கள்ள வாடிக்கு வந்து குடத்தில் நீர் கொண்டு போவது வழக்கம். அதிகமானவர்களின் கூலி பங்கிடும் இடமாகவும் அந்த வாடி இருந்தது. வைத்தியர்ர வாடி தற்போதைய தோணாவிற்கு தெற்குப்பக்கமுள்ள பிரதேசம். அதுவும் இரண்டாவது தோற்றுவிக்கப்பட்ட வாடியாகும். இதனைத் தொடர்ந்து இதன் தெற்குப் பிரதேசமாக பல வாடிகள் தோன்றின. வாடிகளுக்குள் வலை, பீப்பா, உப்பு, கயிறு, வாளி போன்றன சேமித்தும் பாதுகாத்தும் வைக்கப் பட்டன.

அக்காலத்து மீன்பிடிகள் தாய்வலை கிளப்பி மீன் அள்ளும் காட்சிகள் இன்னும் நினைவில் நிற்கின்றன. சீலாப்பாடு, தோறாப்பாடு, கிளவள்ளுப்பாடு, கீரிப்பாடு, நெத்தலிப்பாடு என அவைகள் கூறப்பட்டன. அந்தக்காலத்தில் வீதி வசதிகள் இருக்க வில்லை, மீன் வியாபாரிகள் கூடைகளில் மீனைக்காவிச் செல்வதும் சிலர் சைக்கிளில் தகரப்பெட்டி வைத்து இன்னொருவரின் உதவியுடன் மணல்வழியே உருட்டிச்செல்வதும் வாடிக்கையான விடயங்கள். மேலதிக மீன்கள் கடற்கரை யிலேயே கருவாடாக்கப்பட்டு கல்முனைக்குடி இஸ்மாயில் முதலாளிக்கே விற்பனை செய்வார்கள். கடற்கரை அடம்பன் கொடியாலும், மீசான் பற்றையாலும் நிறைந்திருக்கும். போக்குவரத்து வழியில் கடற்பயற்றை பிய்த்து சாப்பிட்டது மறக்க முடியாதவை. மீன் கோர்ப்பதற்கு ஒரு வகைக்கொடி கடற்கரை யிலேயே கிடைக்கும். இன்னும் எவ்வளவோ விடயங்கள்... சொல்லிக்கொண்டே போகலாம். வலைக்குத் துவர் போடுவது (நிறமூட்டுதல்), காய் வெட்டுவது, தண்ணீர் ஓதியடிப்பது எனப் பல விடயங்களும் அப்போதிருந்தன.

இத்தொழில் நீண்டகாலமாகச் செய்யப்பட்டு வந்தாலும் இதன் வருமானம் நிரந்தரமானதாகவோ, போதுமானதாகவோ இருக்கவில்லை. தவிரவும் இது ஒரு பருவகாலத்தொழிலாக இருந்தபடியால் வருமாத்திற்காக மாற்றுத்தொழில் தேடும் நிர்ப்பந்தம் தொழிலாளர்களுக்கேற்பட்டது. இதனால் மேற்படி தொழிலில் இருந்தும் பலர் தம்மை விடுவித்துக்கொண்டு வேறு தொழில் முயற்சிகளுக்குச் சென்றதனால் இத்தொழில் புரிபவர்களின் எண்ணிக்கையில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டமை இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

மருதமுனையில் 1960ம் ஆண்டு முதன் முதலாக மாய வலைத்தோணியொன்று அப்துல் றஹீம் - முகம்மது அலிபா தண்டயல் அவர்களால் கொண்டுவரப்படு கிறது. ஆழ்கடல் மீன்பிடியின் ஆரம்பம். ஆனால் இதில் மற்றவர்கள் ஆர்வம் காட்டவில்லை. மூன்று வருடங்கள் இத்தொழிலில் ஈடுபட்டபின்னர் இத்தோணி வலை நன்நீர் மீன்பிடிக்காக நவகிரியா குளத்துக்கு மாற்றப்பட்டதும் அங்கிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய செல்வன் மீன்களும் கொக்கிசான் மீன்கள், கருவாடுகள் என வீட்டுக்கு வருவதும், கொக்கிசான் மீனின் சினைகள் உலர்த்தப்பட்டு வரும் வேளைகளில் அதன் மணமும் உருசியும்... அளவில்லாமல் நாங்கள் சாப்பிட்ட நினைவுகள் இன்றும் மறக்க முடியாதவை.

இதன் பின்னரான தலைமுறையினரும் இத்தொழிலில் பெரிதாக ஆர்வம் காட்டாமை கல்வித்துறை, அரச உத்தியோகம், நெசவு, விவசாயச் செய்கை என்பன இதன் ஈடுபாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தின. மேலும் இத்தொழிலை நவீனமயப்படுத்துவதற்கான எந்த உதவிகளோ வழிவகைகளோ வழிகாட்டல் களோ இதற்கு கிடைக்கவில்லை. ஒரு காலத்தில் கடல் தொழிலுக்குச் செல்வது தரம் குறைந்தது என்ற தவறான கருத்தும் நிலவாமல் இல்லை. மேலும் இத்தொழில் குறிப்பாக ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் மருதமுனையைப் பொறுத்தமட்டில் மிகக்குறைவாகவே உள்ளது. கரைவலை இன்றைய தினத்தில் 15இற்கு உட்பட்ட தோணிவலைகளே இங்கு உள்ளதும் இதைச் செய்பவர்கள் மிகக்குறைந்தளவிலேயே காணப்படுவதும் கறிக்கு மீன் எடுக்க வருபவர்களை நம்பியே தோணி வலையை கடலில் இறக்க வேண்டிய நிலையும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இருதரப்பினரும் வெறுங்கையுடனேயே வீட்டுக்குத் திரும்ப வேண்டிய நிலையுமே காணப்படு கிறது.

பரம்பரை பரம்பரையாக இத்தொழிலில் ஈடுபட்டவர்களும் கைவிட்டு விட்டு வேறு தொழிலுக்குச் செல்லும் நிலைமையும் உள்ளது. இத்தொழில் நிலைத்திருக்க வேண்டுமானால் கரைவலையை மட்டும் நம்பியிருக்காமல் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்குரிய வேலைத்திட்டங்களை வகுத்து அரசு இதற்கான வாய்ப்புக்களையும் வசதி களையும் செய்ய முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் அரசியல் (1800 - 2013) ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம்

எம். எம். பாஸில்
விரிவுரையாளர் - அரசியல் விஞ்ஞானத்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

"வரலாறு இறந்த காலத்தினதும் நிகழ்காலத்தினதும் தொடர்ச்சியான உரையாடலாகும்" என ஈ.எச். கார் (1961) கருத்து வெளியிட்டுள்ளார். முன்னைய காலங்களில் வரலாறு என்பது கடந்த காலத்தின் அரசியல் பற்றியதாகவும் நிகழ்கால அரசியல் இன்றைய வரலாறாகவுமே கட்டமைக்கப்பட்டிருந்தது (றமீஸ் 2012 :viii). இந்த கருத்துக்களின் அடிப்படையில் ஒரு சமூகத்தின் அல்லது கிராமத்தின் அரசியல் வரலாறு என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அறிவியல் துறையில் பூர்வீகம் ஒரு சமூகத்தின் இருப்புடன் தொடர்புபடுகின்றது. அத்துடன் பூர்வீகம் அரசியல் வரலாற்றையும் தன்னளவில் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளது. இந்த வகையில் பல்வேறு சிறப்புக்களைப் பெற்று தென்கிழக்கில் புகழ்பெற்ற மருத முனையும் அதன் பூர்வீகமும் அதன் அரசியலும் மிகப்பழைமை வாய்ந்ததாகும்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பகுதியான கல்முனைப் பிரதேசத்தின் வடக்குப் புறமாக அமைந்துள்ள ஓர் அழகிய நகரமே மருதமுனையாகும். இந்நகரமானது கிழக்கே கடலையும் மேற்கே துரவந்திய மேட்டினையும், வடக்கே நீலாவணையையும், தெற்கே பாண்டிருப்பையும் கொண்டுள்ளது. இதன் பெயர் உருவான விதத்தினை நோக்கினால், மருதமுனை யின் மேற்குப் புறத்தில் ஆற்றுமேடை ஒன்று இருந்துள்ளது (நௌபல் 2011:1) . இது குறித்து ஆ.மு. ஷரிபுத்தீன் (2009:1) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "ஆத்திமேடு என அழைக்கப்படும் அந்த முனைப்பகுதியில் பல மருதமரங்கள் நின்று அழிந்து போனதை நான் கண்டிருக்கின்றேன். மாரிகாலத்தில் மீனவர் தம் தோணிகளை அந்த மரத்தடி முனைக்குக் கொண்டு வந்து கரை சேர்ந்திருக் கின்றனர். மருதமரத்தடிமுனை காலாந்தரத்தில் மருவி மருதமுனையாகி விட்டது".

இவ்வாறு அமைந்துள்ள மருதமுனை மக்களின் அரசியல் நிர்வாக முறைகள், விவசாயம், வர்த்தகம், குறிப்பாக நெசவுக்கைத்தொழில் என்பன நீண்ட வரலாற் றையும் முன்மாதிரியான சமூக ஒழுங்கமைப்பையும் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுதந்திரத்திற்கு முன்னரான எமது உயர் நிர்வாகப் பதவிகளான போடிகள், காரியப்பர்கள், மரைக்காமார்கள், உடையார்கள், பொலிஸ்விதானைகள் போன்ற பதவிகள் மூலமே எமது அரசியல் வரலாறு கட்டியெழுப்பப்பட்டுள்ளது (இது குறித்த விரிவான ஆய்வு அவசியமாகும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் மருதமுனையின் அரசியல் வரலாறு குறித்த இக்கட்டுரையினை எழுதுவதற்கான தகவல்களைப் பெறும் நோக்கில் கிடைக்கப்பெற்ற முன்னைய ஆய்வுகள், நூல்கள் என்பன வாசிப்புக்குட்படுத்தப்பட்டன. மஜீத் (2005) எழுதிய எனது கிராமத்தைத் தேடுகிறேன், மசூர் மௌலானா அவர்களுக்கு மருதமுனை மக்கள் எடுத்த இரட்டை விழா மலர் "விடிவெள்ளி" (2008), ஷரிபுத்தீனின் (2009) மருதமுனையின் வரலாறு, ஜெஸ்மியின் மருதமுனைப் பிரதேசத்தின் தமிழ் - முஸ்லிம் உறவு (2010), நௌபல் (2011) எழுதிய மருதமுனையின் வரலாறு (ஆள்சார் கண்ணோட்டம்), அஸ்வர் (2013) தொகுத்த மருதமுனை முத்து மசூர் மௌலானா, முன்னாள் அமைச்சர் மன்சூர் அவர்களைப் பாராட்டு முகமாக மருதமுனை மக்களால் வெளியிடப்பட்ட விருட்ஷம் (2013) மற்றும் சிறிய சில குறிப்புக்கள் அல்லது கட்டுரைகள், ஏனைய ஊர்களின் வரலாற்று நூல்கள் போன்ற பல்வேறு முன்னைய எழுத்துக்கள் ஆய்வுக்குட்படுத்தப் பட்டதன் அடிப்படையில் பின்வரும் இரு முடிவுகளுக்கு இக்கட்டுரையாளரினால் வரமுடிகிறது :

1. மருதமுனை குறித்த முன்னைய ஆய்வுகள் யாவும் ஊர் குறித்த பொதுவான வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அதிக கவனம் செலுத்தியுள்ளன. எனவே மருதமுனையின் அரசியல் வரலாறு குறித்து பெரிதளவான கவனயீர்ப்பு வழங்கப்படவில்லை.
2. சில நூல்களில் ஆள்சார் கண்ணோட்டம் அல்லது சேவைநலன் பாராட்டு போன்றவை கவனத்தில் எடுக்கப்பட்டு இவ்வூரின் சமூக, பொருளாதார, கலாசார அம்சங்கள் வரலாற்றினூடே விளக்கப்படுகின்றது.

எனவே இவ்வாய்வு இடைவெளிகளை பூர்த்திசெய்யும் நோக்கில் மருதமுனை அரசியல் வரலாற்றில் முற்றுமுழுதாகக் கவனம் செலுத்தி மறைந்து கிடக்கும் விடயங்களை வெளிக்கொண்டு வருவதை இக்கட்டுரை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால் மருதமுனையின் முழுமொத்த வரலாற்றினையும் சித்தரிக்கக்கூடிய ஒரு தனியான ஆய்வுநூல் எதிர்காலத்தில் வெளியிடப்பட வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்.

பின்வரும் இக்கட்டுரை நேர்காணல், மட்டுப்படுத்தப்பட்ட அவதானம் போன்ற வற்றின் மூலம் பெறப்பட்ட முதலாம்நிலைத் தரவுகளையும் மேலே கூறப்பட்ட முன்னைய ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளையும் பயன்படுத்தி விவரணப்பகுப்பாய்வு முறையியலின்படி செய்யப்படுகின்ற ஒரு ஆய்வாகும்.

சுதந்திரத்திற்கு முன்னரான அரசியல் வரலாறு

நமது நாடு சுதந்திரம் பெற்று அறுபத்தைந்து ஆண்டுகளைக் கடந்துள்ளது. இவ்வேளையில் சுதந்திரத்திற்காகப் போராடிய நம் முன்னோர்களை நினைத்துப் பெருமைப்பட வேண்டும். அம்பாரை மாவட்டத்தில் பழம்பெரும் கிராமமான மருதமுனையைச் சேர்ந்த ஒரு மகனும் சுதந்திரத்திற்காகப் பங்காற்றியுள்ளதை பதிவு செய்ய வேண்டியுள்ளது. எமது ஊர் கண்டி இராச்சியத்தின் கீழ் இருந்ததன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக முஸ்லிம்கள் கண்டி அரசர்களுக்கு மிக விசுவாசமாக நடந்து கொண்டனர். கண்டி அரசர்களும் முஸ்லிம்களை ஆதரித்து அன்புடன் நடத்தினர். முஸ்லிம் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் காணிகளை வழங்கியதோடு பள்ளிவாசல்களுக்கும் காணிகளை நன்கொடையாகக் கொடுத்தனர்.

அக்கால வேளையில் கண்டி இராச்சியத்தின் எல்லைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது ஏனையவர்களுடன சேர்ந்து முஸ்லிம்களும் எல்லையைப் பாதுகாக்கப் போராடினர். 1804 ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் திகதி "ஒந்தாச்சிமடம்" எனும் இடத்தில் பிரித்தானியப் படைகளை எதிர்த்துப் போராடியதில் மிக முக்கியமானவராக மருதமுனையைச் சேர்ந்த அனுஸ்லெவ்வை மரைக்கார் என்பவர் கருதப்படுவதாக வரலாற்றுக் குறிப்பேடுகள் எடுத்தியம்புகின்றன (அபூபக்கர் 1998:26). இந்த அனுஸ்லெவ்வை மரைக்கார் என்பவர் காரியப்பர் என்ற பதவியை வகித்ததாகவும் கூறப்படுகின்றது.

காரியப்பர் பதவி அக்காலத்தில் அரசனால் நியமிக்கப்படுகின்ற ஒரு அதிகாரம் பொருந்திய பதவியாகும். இவர் மக்களிடமிருந்து நெல்லையும் உப்பையும் அளவிட்டு மன்னனுக்கு வழங்குவதுடன் அப்பகுதியின் பாதுகாப்பு, நீதி என்பவற்றுக்கும் பொறுப்பாக இருப்பார். அனுஸ்லெவ்வை மரைக்கார் என்பவர் மலாய் சமூகத்தைச் சேர்ந்தவர் எனவும் வரலாறு கூறுகின்றது. இந்த அனுஸ்லெவ்வை மரைக்கார் என்பவரையும் ஏனைய சிலரையும் 1804-09-01 எனும் திகதிக்கு முன்னர் சரணடைய வேண்டும் எனவும் அக்காலத்தில் பிரித்தானிய அரசின் பிரதம செயலாளராக இருந்த அல்பர்ட் நோர்ட் என்பவர் கட்டளை பிறப்பித்திருந்தார். இவர்கள் சரணடையாவிட்டால் அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

இவர்கள் பின்னர் பிரித்தானிய அரசாங்கத்தால் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். இதுபற்றிய விபரங்கள் கல்முனைப் பொலிஸ் நிலைய சம்பவ திரட்டுப் புத்தகத்தில் இன்றும் காணலாம். இவரைப்பற்றிய மேலதிக விபரங்கள் எமக்குக் கிடைக்கவில்லை என்பது துரதிஷ்டவசமாகும். இருந்தபோதிலும் அக்காலத்திலேயே எமது கிராமம் உரிமை, சுதந்திரம் போன்ற சொற்களுக்கு முழு அர்த்தம் கொடுக்கக் கூடியதாய் இருந்ததை எண்ணி மிகவும் பெருமைப்பட வேண்டும் (அபூபக்கர் 1998: 27).

மேலும் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை அரசியல் எண்ணக்கரு உருவாகத் தொடங்கிய காலகட்டத்தினை இலங்கையின் சட்டவாக்கக் கழகம் (Legislative Council of Ceylon) உருவாகத் தொடங்கிய காலமான 1833 ஆம் ஆண்டிலிருந்து வரையறுப்பது பொருத்தமானதாக அமையும். இதற்கு முந்திய காலங்களில் இங்கு வாழ்ந்த மக்கள் மீது ஆட்சி செலுத்தப்பட்டு வந்தாலும் அரசியல் என்ற எண்ணக்கரு தெளிவுபடுத்தத் தக்கதாக இருக்கவில்லை.

1889 இல் இலங்கை முஸ்லிம்களுக்கான நியமனப் பிரதிநிதி ஆளுனர் சேர். ஆர்தர் கோர்டன் என்பவரால் எம்.ஸி. அப்துல் ரஹ்மான் என்பவர் (ஜெமீல் 2012:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே முஸ்லிம் சமூகத்துக்கான அரசியல் கதவு திறக்கப்பட வாய்ப்புண்டாயிற்று. எம்.ஸி. அப்துல் ரஹ்மான் தொடர்ச்சியாக அவர் இறக்கும் வரை (1899) இச்சபையில் அங்கத்தவராக இருந்தார். இவரின் இறப்பின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஏ.எல்.எம். ஷெரீப் நியமிக்கப் பட்டார்.

1908 - 1911 காலப்பகுதிக்குரிய சட்டவாக்கக் கழகத்தில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதியாக முன்னாள் பாராளுமன்ற அமைச்சரான எம்.எச். முஹம்மத் அவர்களின் பாட்டனார் டபிள்யு.எம். அப்துல் ரஹ்மான் நியமனம் செய்யப் பட்டார். பின்னர் 1900 - 1916 வரைக்கும் சட்டவாக்கக் கழகங்களில் டபிள்யு.எம். அப்துல் ரஹ்மான் நியமனம் செய்யப்பட்டிருந்தார். 1917ல் என்.எச்.எம். அப்துல் காதர் பதவி வகித்தார் (காதர் 1999 : 1-148 & Ameer Ali 2013). மேலும் 1920 - 1924 காலப்பகுதியில் 3 நியமன உறுப்பினர்களாக சேர் ஒ.எல்.எம். மாக்கான் மாக்கார், எம்.ரி. அக்பர், என்.எச்.எம். அப்துல் காதர் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். இதில் ஒ.எல்.எம். மாக்கான் மாக்கார் கிழக்கு மாகாண முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய வேளை தமிழ் மக்களுக்காக மட்டக்களப்பைச் சோந்த ஈ.ஆர். தம்பிமுத்து தெரிவுசெய்யப்பட்டிருந்தார் (இஸ்ஸதீன் 2005:382-383). இவ்வாறான தேசிய அரசியலினூடாகவே எமது சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவமும் மருதமுனையின் அரசியல் பணியும் தொடங்கியது எனலாம். 1931 ஜூலை முதல் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் யாப்பில் அரச கழக (State Council) அறிமுகத்துடன் சர்வசன வாக்கெடுப்பும் 50 உறுப்பினர்களுக்கான தேர்தலும் தொடங்கியது. ஆயினும் வாக்களிக்கும் நிபந்தனையின்படி எமது சமூகத்தில் 4% மட்டுமே வாக்களிக்கும் தகைமையைப் பெற்றிருந்தனர்.

இதனிடையே மருதமுனையின் அரசியல் வரலாற்றில் குடி முறையும் மரைக்கார் நிருவாகமும் குறிப்பிட்டளவிலான பங்களிப்பினை செய்திருக்கின்றது. தென்கிழக்கில் குடிமுறை நிருவாகம் மிகவும் பழமையானதாகும். இக்குடிகள் அக்காலப் பகுதியில் சமூக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளை மேலாண்மை செய்தன. இந்த வகையில் மருதமுனையில், குடிகளின் வழக்கு இன்றுள்ளது. குடிமுறையில் குடியின் தலைவராக மரைக்கார் அல்லது போடிமார் இருந்துள்ளனர். வயது, கல்வியறிவு, செல்வாக்கு, மார்க்க அறிவு, நேர்மை ஆகியவற்றில் கூடிய அறிவுள்ளோரை மக்கள் மரைக்காயராகத் தெரிவுசெய்தனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மரைக்காயர் சபை அதிக செல்வாக்கும் ஆளுமையும் கொண்டு விளங்கியது. அதன்படி மருதமுனையில் அரசியல் வரலாற்றில் இம்மரைக்காயர்மாரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க தாகும். கிழக்குக்கு வெளியேயும் உள்ளேயும் இருந்த அரசியலில் களமிறங்கிய பல ஆளுமைகளுக்கு அரசியல் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு மருதமுனையின் மரைக்காயர்களே உதவிபுரிந்தனர். அதாவது மரைக்காயர் களின் செல்வாக்கின் நிமித்தம் வாக்களிப்பு நடத்தைகள் தீர்மானிக்கப்பட்ட தனை மருதமுனையின் வரலாற்றில் கண்டுகொள்ள முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1931 - 1935 முதலாவது அரசாங்க சபையில் மட்டக்களப்பு தெற்குத் தொகுதியின் ஒரேயொரு முஸ்லிம் உறுப்பினராக சேர் எச்.எம். மாக்கான் மாக்கார் தெரிவு செய்யப்பட்டதுடன், அவர் தொலைத்தொடர்பு சேவைகள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். தமிழ் பிரதிநிதியாக சுப்ரமணியம் மயில்வாகனம் முதலியார் மட்டக்களப்பு திருமலை பகுதிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தார். இத்தேர்தலில் போட்டியிட்ட சேர் மாக்கான் மார்க்கார் அவர்கள் மருதமுனை யினையைச் சேர்ந்த ஐதுரூஸ் மௌலானா, உமர் நெய்னா மரைக்காயர் ஆகியோ ருடன் நெருங்கிப் பழகியிருந்தார். அதிலும் குறிப்பாக மாக்கான் மாக்கார் தனது நண்பன் ஐதுரூஸ் மௌலானாவின் வீட்டினை தனது தேர்தல் காரியாலயமாகப் பயன்படுத்தியதுடன் உமர் நெய்னா மரைக்காயரின் வீட்டினை தனது தங்குமிட மாகவும் ஆக்கியிருந்தார்.

1936ம் ஆண்டு இயங்க ஆரம்பித்த இரண்டாவது அரசாங்க சபைக்கு இலங்கையில் எப்பாகத்தில் இருந்தேனும் முஸ்லிம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படவில்லை (ஜெமீல் 2012:21). எனினும் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவ நலன்கருதி ரீ.பீ. ஜாயா, சேர்.ராசிக் பரீட் ஆகியோர் தேசாதிபதி யினால் நியமனம் செய்யப்பட்டனர். டாக்டர் எம்.சீ.எம்.கலீல் 1942 இடைத் தேர்தல் மூலம் சட்டசபைக்குத் தெரிவுசெய்யப்படும் வரை இந்நிலை தொடர்ந்தது. இதன்போது மருதமுனை உள்ளடங்கலான கிழக்கு மக்கள் தமிழ் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதில் தயக்கம் காட்டவில்லை. இன, மத வேறுபாடுகளைக் கடந்து முஸ்லிம்கள் தமிழ் பிரதிநிதிகளுக்கும் தமது வாக்கினை வழங்கலாயினர் என்பதற்கு இவ்விடயம் நல்லதொரு சான்றாக உள்ளது.

சுதந்திரத்தின் பின்னரான அரசியல்

கல்முனையின் அரசியல்வாதி என அறியப்படும் எம்.எஸ். காரியப்பர் கிழக்கிலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்கவர். அவரது குடும்பத்திற்கிருந்த மக்கள் செல்வாக்கு, அவரது ஆளுமை, ஆங்கில அறிவு என்பன அவர் அரசியலில் குறிப்பிட்ட காலம் வரை நீடிப்பதற்கு காரணமாக அமைந்தது. 1947இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்முனை என்ற புதிய தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. இது கல்முனை, சாய்ந்தமருது, அக்கரைப்பற்று, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய பாரிய தொகுதியாகக் காணப்பட்டது (அன்வர் அலி 2012:27). புதிய தொகுதி உருவாக்கப்பட்டு இடம்பெற்ற தேர்தலில் கல்முனைத் தொகுதியினைப் பிரதி நிதித்துவப்படுத்தி எம்.எஸ். காரியப்பர் வெற்றிபெற்றார். தேர்தலின் பின்னர் அமைந்த அமைச்சரவையில் உள்நாட்டலுவல்கள் கிராமிய அபிவிருத்தி அமைச்சராகவும் அவர் நியமிக்கப்பட்டார்.

எவ்வாறாயினும் மருதமுனைக் கிராமமானது 1960ஆம் ஆண்டு வரைக்கும் பட்டிருப்பு தொகுதியுடன் இணைந்திருந்த ஒரேயொரு முஸ்லிம் கிராமமாகும். அதன்படி 1947, 1952, 1956 ஆகிய பொதுத் தேர்தல்களில் குறித்த தொகுதியில் போட்டியிடும் இரு தமிழ் வேட்பாளர்களில் ஒருவரின் வெற்றியைத் தீர்மானிக்கும் ஒரு சக்தியாக மருதமுனை மக்களே இருந்து வந்துள்ளனர். காலம்சென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசமாணிக்கம் அவர்கள் வெற்றி பெற்ற இரு தேர்தல்களிலும் மருதமுனை மக்கள் முழுக்க வாக்களித்திருந்தனர். இதற்கு முக்கிய காரணம் அவரது சமயச் சார்பற்ற தன்மையும், மசூர்மௌலானா அவர்களின் தூண்டுதலுமாகும். 1952 சட்டமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய இராசமாணிக்கம் அவர்கள், கல்ஓயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடியேற்றங்கள் நிறுவப்பட்டபோது 1953களில் தனது வெற்றியின் நன்றிக்கடனாக 4ஆம், 5ஆம் குடியேற்றப் பிரிவுகளில் மருதமுனை மக்களை தமிழ் மக்களுடன் சேர்த்து குடியேற்றுவதற்கு உதவி செய்தார்கள் (மூசா 2013: 47-48 ஜெஸ்மி 2010). இச்சேவையானது இன நல்லுறவுக்கான அன்னாரினால் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், 1959 தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்றிய முஸ்லிம் தலைவர்கள் குறிப்பாக எம்.எஸ்.காரியப்பர் முஸ்லிம் கிராமமாகிய மருதமுனையை கல்முனைத் தேர்தல் தொகுதியுடன் இணைக்க வெண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதன் பிரகாரம் மருதமுனை கல்முனைத் தொகுதியோடு இணைக்கபட்டதன் பின்னரான முதலாவது பொதுத்தேர்தல் 1960 மார்ச்சில் இடம் பெற்றது. இத்துடன் இக்காலம் முதல் மருதமுனையின் அரசியல் தந்தை (காதர் இப்றாஹீம் 2013:9) எஸ். இஷட். எம். மசூர்மௌலானா அவர்களின் அரசியல் குறித்த ஒரு சுருக்கப் பார்வையினூடாக இக்கிராமத்தின் அரசியல் பங்குபற்றுதலை மதிப்பிட முடியும்.

மசூர் மௌலானாவின் அரசியற் பிரவேசம்

தேசிய அரசியலுக்குள் மருதமுனை உள்ளீர்க்கப்பட்ட வரலாறு மசூர் மௌலானாவுடன் ஆரம்பிக்கின்றது. ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய மசூர் மௌலானா பின்னர் அரசியலிலும் மிகுந்த ஈடுபாடு காட்டியிருந்தார். கரைவாகு வடக்கு கிராம சபையின் தலைவராக ஒன்பது ஆண்டுகள் பதவிவகித்த மசூர் மௌலானா, தந்தை செல்வா தமிழரசுக் கட்சியினை தொடக்கிய ஆரம்ப நாட்களில் அவரது அரசியலால் வெகுவாகக் கவரப்பட்டிருந்தார். தமிழரசுக் கட்சியின் அரசியல் பிரச்சாரங்களில் தந்தை செல்வாவுடன் இணைந்து அவர் பணியாற்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. மௌலானாவுடன் சேர்ந்து மற்றுமொரு மருதமுனை மகனாகிய எஸ்.எல். அப்துல் லத்தீப் (மருதூர் வாணர்) என்பவரும் தமிழரசுக் கட்சிக்காகப்பாடுபட்டார் (நௌபல் 2012:29). அது மட்டுமன்றி தமிழரசுக் கட்சியின் சாத்வீக அரசியல் போராட்டங்களில் மௌலான தம்மை முழுமையாக ஈடுபடுத்தி யிருந்தமையினையும் அவதானிக்க முடிகின்றது.

அதன்படி 1956ல் தமிழுக்கு சமஉரிமை கோரி காலிமுகத் திடலில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திலும், 1961 அம்பாரைக் கச்சேரிக்கு முன்னால் இடம்பெற்ற மக்கள் எதிர்ப்புப் போராட்டத்திலும் தமிழ் தலைவர்களுடன் இணைந்து மௌலானா கலந்துகொண்டார். இதன்விளைவாக 4 மாதம் பனாகொட தடுப்பு முகாமிலும் அடைக்கப்பட்டார். திருமலை மாநாடு, தமிழரசுக் கட்சியின் மாநாடு முதலியவற்றில் கட்டாயம் ஒலிக்கப்படுகின்ற ஒன்றாக மௌலானாவின் குரல் மாறியது (ஜெஸ்மி 2010:iii).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வாவுடன் மௌலானாவுக்கு இருந்த தொடர்பு, அவரது போராட்ட உணர்வு என்பன 1960 மார்ச் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பான பிரதி நிதியான கல்முனைத் தொகுதியில் நிறுத்தப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. எனினும் இத்தேர்தலில் எம்.எஸ். காரியப்பரிடம் 212 வாக்குகளால் மட்டும் மௌலான தோல்யினைத் தழுவிக் கொண்டார். 1960 ஜூலைத் தேர்தலில் எம்.சீ. அஹமத் அவர்களுக்கு தனது வேட்புரிமையினை விட்டுக்கொடுத்த மௌலானா (நௌபல் 2012:30), அவரது தேர்தல் வெற்றிக்கு மருதமுனை மக்களை ஒன்று திரட்டுவதில் பெரும்பங்காற்றினார். இத்தேர்தலில் கல்முனைத் தொகுதியில் எம்.சீ. அஹமத் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மையும் இங்கு குறிப்பிடத் தக்கது. மேலும் 1965 பொதுத்தேர்தலில் போட்டியிட்ட மகூர்மௌலானா அவர்கள் எம்.எஸ். காரியப்பரிடம் 491 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி கண்டார்.

1965ம் ஆண்டு தேர்தலினூடாக தேசிய அரசு முறைமை உருவாக்கப்பட்டது. டட்லியின் அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சியும் இணைந்திருந்தது. இச்சூழ்நிலையில் இரண்டு ஆண்டுகள் கழிந்தபோது கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் இலஞ்சக் கமிசனால் விசாரணைக் குட்படுத்தப்பட்டதன் பிரகாரம் அவர் குற்றவாளி எனக்காணப்பட்ட தனால் கல்முனையில் 1968ல் ஒரு இடைத்தேர்தல் இடம்பெற்றது. தந்தை செல்வநாயகம் அவர்கள் தமிழரசுக் கட்சியின் அங்கத்தவரான மகூர் மௌலானாவை இத்தேர்தலில் தேசிய அரசின் வேட்பாளராக நியமிக்க அனுமதி அளித்திருந்தார். இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக மௌலானா தனது சனட் பதவியை ராஜினாமா செய்தார் (ஜெமீல் 2012: 40). தேசிய அரசியலின் தலைவர்கள் எல்லாம் இச்சிறிய கல்முனைத் தொகுதியில் முகாமிட்டு மகூர் மௌலானாவின் வெற்றிக்காக பெரும்பங்காற்றினர். அஸ்வர் (2013:29) இதனைப் பின்வருமாறு சித்தரிக்கின்றார் :

> "இலங்கைத் தேர்தல் வரலாற்றிலேயே அரசாங்க எதிர்க் கட்சித் தலைவர்கள் அவ்வளவு எண்ணிக்கையில் எந்தத் தொகுதியிலும் உப தேர்தல் பிரச்சாரம் செய்ய களமிறங்கிய வரலாறு கிடையாது. இதில் மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்னவெனில் மருதமுனையைச் சேர்ந்த முஸ்லிம் மகன் ஒருவரைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்ய சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள ஒன்றிணைந்து செயற் பட்டமையாகும். எவ்வாறாயினும் தேர்தல் முடிவில் மௌலானாவைத் தோற்கடித்து அஹமது வெற்றி கொண்டார்".

இத்தேர்தலில் 1254 வாக்குகளால் தோல்வியுற்றார் (ஜெமீல் 2008: 71).

1967இல் சனட்சபை உறுப்பினராக இருந்த கற்குடாவைச் சேர்ந்த மு.மாணிக்கம் மரணத்தைத் தழுவிய பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு (ஜெஸ்மி 2010:iii). தந்தை செல்வாவின் சமஷ்டிக் கட்சியின் சனற் பிரதிநிதியாக மகூர் மௌலானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமனம் செய்யப்பட்டார் (ஜெமீல் 2012:40). சோல்பரி பாராளுமன்றத்தின் இரண்டாவது அவையாக விளங்கிய செனற் மன்றத்தின் பிரதிநிதியாக மௌலானா நியமனம் செய்யப்பட்டது மருதமுனை மக்களுக்கு மட்டுமன்றி, இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கான பெரும் கௌரவமாகிற்று. பின்னாட்களில் தமிழரசுக் கட்சியுடன் ஏற்பட்ட விரிசல் காரணமாக மௌலானா கட்சியிலிருந்து விலகியதுடன் ஐக்கிய தேசியக் கட்சியினை தமது அரசியல் பயணத்திற்காக தேர்வு செய்துகொண்டார்.

தனது அரசியல் பிரதிநிதித்துவம், அரசாங்கப் பதவிகள் மூலம் மருதமுனையின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய மௌலானாவின் அபிவிருத்திப் பட்டியல் கல்வி, கலாசாரம், மின்சாரம், விளையாட்டு, வீடமைப்பு என பல் துறைகளினூடாக நீண்டு செல்கின்றது.

மருதமுனையின் அரசியலில் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர்

1970 முதல் மருதமுனையின் அரசியல் வரலாற்றில் கல்முனையைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் அவர்கள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரமாகும். இவர் கல்முனைப் பிரதேசத்தின் மூத்த அரசியல்வாதியும் முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சருமாவார். அவர் 1977 முதல் 1994 வரை 17 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராகவும், மாவட்ட அமைச்சராகவும், மந்திரிசபை அமைச்சராகவம் பணியாற்றி நேரடி அரசியலிலிருந்து ஓய்வு பெற்றவர் (நுஃமான் 2013:36).

அவர் 1970ம் ஆண்டின் பொதுத் தேர்தலில் மருதமுனை மக்களின் அனுசரணையுடனும் மறைந்த முன்னாள் டட்லி சேனனாயக்கவின் வேண்டுகோளின் பேரிலும் ஐ.தே.க. சார்பில் கல்முனைத் தொகுதியில் போட்டியிட்டு 955 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றார். இத்தேர்தலில் மருதமுனை மக்கள் பல சிக்கல்களுக்கு மத்தியிலும் கூடியளவான வாக்குகளை வழங்கினர். எதிர்பாராத விதமாக மன்சூர் அஹமதிடம் தோல்விகண்டார். ஆதலால் அடுத்து வந்த 7 ஆண்டுகள் மருதமுனைக் கிராமம் அரசியல் அநாதையாகியது (ஜமால்தின் 2013: 159). இருப்பினும் 1977ல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மன்சூரின் பாராளுமன்றப் பிரவேசத்திற்கு முழு ஆதரவினையும் மருதமுனை வழங்கி பக்கபலமாக இருந்தது (அமீருல் அன்சார் 2013: 94). இது குறித்து மசூர் மௌலானா (2013: 18-19) அவர்கள்,

> "1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் முதன்முறையாக இவர் (மன்சூர்) பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றதில் நானும் எனது மருதமுனை மக்களும் நூற்றுக்கு நூறு வீதம் பங்களிப்புச் செய்த சரித்திர நிகழ்வு இன்று என் கண்முன்னே நிழலாடுகிறது. மன்சூர் அவர்களின் வெற்றிக்காக என்னை நேசித்து - எனது தலைமைத்துவத்தை ஏற்றிருந்த நமது மருதமுனை மக்களையும் கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை போன்ற கிராமங்களில் தமிழ் மக்களையும் ஓர் அணியில் திரட்டி - ஆதரவளிக்கச் செய்து ஓர் கடின உழைப்புடன் விஷேடமான பங்களிப்பை வழங்கியிருந்தேன் என்பதை வரலாறு என்றும் நினைவுகூறும்!".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை உறுதிப்படுத்தும் வகையில் இக்கிராமத்திற்கான மன்சூரின் அரசியல், சமூகப் பொருளாதார, கலாசார ரீதியான பங்களிப்புக்களை நினைவு கூர்ந்து மருதமுனை மக்கள் மனமுவந்து பாரியதோர் பாராட்டு விழாவினை செய்திருந்தனர். அவ்விழாவில் "விருட்ஷம்" எனும் 164 பக்கங்களைக் கொண்ட மலரையும் வெளியிட்ட இந்நிகழ்வில் மன்சூர் பின்வருமாறு கூறுகிறார்.

> "மருதமுனை மக்களால்தான் நான் எம்.பி.ஆனேன். அதனால் தான் நான் அமைச்சருமானேன். இதனை என் வாழ்க்கையில் என்றும் மறக்கவும் மாட்டேன். நான் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் எனது கறைபடியாத கரங்களினால் அபிவிருத்திப் பணிகள் இவ்வூருக்குச் செய்ததன் காரணமாகவே இன்று நீங்கள் இவ்வாறான தோர் நன்றி சொரியும் பெரும் விழாவினை ஏற்படுத்தி யிருக்கின்றீர்கள் (வஸீல் 2013)"

இவ்வாறு மன்சூரின் அரசியலில் மருதமுனை மக்கள் முனைப்புடன் பங்களிப்புச் செய்தனர். மௌலானாவுடன் சேர்ந்து இப்பிரதேசத்தில் ஐ.தே.க. இன் இருப்புக்கும் மன்சூரின் அரசியல் வெற்றிக்கும் பலர் பங்காற்றியிருந்தனர். மன்சூர் மருதமுனைக்கு ஆற்றிய சேவைகளுக்கு பின்னாலும் இத்தகையோரின் அளப்பரிய பங்கு இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அமைச்சரின் நெருங்கிய நண்பராக இருந்த எம்.எச். காதர் இப்றாகிம் 1981 - 1987 காலப்பகுதியில் கரைவாகு வடக்கு கிராமாட்சிமன்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக (விஷேட ஆணையாளர்) அமைச்சர் அவர்களின் சிபாரிசுக்கு அமைவாக, அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்தார் (நௌபல் 2011:95). தமது தனிப்பட்ட நண்பனாகவும் ஆலோசகராகவும் மன்சூர் இவரை இனங்கண்டார். ஆதலால் காதர் இப்றாகிமின் ஆலோசனையின் பேரில் மருதமுனைக்கு அதிகப்படியான நிதிஒதுக்கீடு, வேலைவாய்ப்பு, ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை மன்சூர் வழங்கினார் என்பது மருதமுனையின் அரசியல் வரலாற்றில் நெஞ்சை விட்டகலாத நினைவுகளாகும்.

மேலும் தாவூத்லெப்பை மரைக்கார், ஏ.சாஹூல் ஹமீத் (ஓடாவியார்), எஸ்.எம். சுல்தான் மரைக்கார், ஐ.எல்.எம். இஸ்மாயில் (சீப்பலஸ்), எம்.எஸ். ஐயூப் ஹாஜியார், முஹம்மட் தம்பி, ஏ.எல்.எம்.ஏ. மஜீட் (நூலகர்), ஏ.எச்.எம். மஜீட், முஹம்மது அபூபக்கர் (ஆங்கில ஆசிரியர் முஹம்மட் அவர்களின் தந்தை), ஏ.சீ. முகம்மது சாலிகு (போஸ் மாஸ்டர்) ஆகிய பெருந்தகைகள் மன்சூரின் நெருங்கிய சகபாடிகளாகவும், ஐ.தே.கட்சியின் தீவிர ஈடுபாட்டாளர்களாகவும் செயற்பட்டு மருதமுனையின் அபிவிருத்தியில் மன்சூரையும் ஏனைய அரசியல் தலைவர்களையும் ஈடுபடுத்தினர். குறிப்பாக சுல்தான் மரைக்கார் அவர்கள் தனது நெருங்கிய நண்பரான பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்த தயாரத்தினவின் மூலம் பல அபிவிருத்தித் திட்டங்களை மருதமுனைக் கிராமத்தில் அரங்கேற்ற முயற்சித்தார். மேலும் எழுபதுகளில் துடிப்புள்ள இளைஞர்களாக இருந்து அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றுதலில் தீவிர ஈடுபாடு காட்டிய கே.எல்.எம். ஹனீபா மௌலவி, ஏ.எம். ஹஸன் மௌலவி, ஏ.ஆர்.ஏ. சத்தார், ஏ. மீரா முகைதீன், ஏ.எல். மீரா முஹைதீன், எம்.சி. அஹமது முகைதீன், என்.எம். இஸ்மாயில், எம்.எல்.எம். ஜமால்தீன், எஃப். எம். அமீருல் அன்சார் மௌலானா, எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா, எஸ்.எம். பீர்முஹம்மட், எஸ்.எம். மூசா போன்றவர்களின் பங்களிப்பும் கவனத்திற்கொள்ளத்தக்கதாகும் (ஏனையோரின் பெயர்கள் அடுத்து வரும் ஆய்வில் உள்ளடக்கப்படும்). ஏககாலத்தில் இலங்கையில் தலைவிரித்தாடிய இனமோதல் முஸ்லிம்களையும் மருதமுனை மக்களையும் வெகுவாகப் பாதித்தது.

இனமோதலும் மருதமுனையின் அரசியலும்

சுதந்திரத்திற்குப் பிந்திய அரசியல் தலைமைகள் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தையே அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான குறுக்குவழியாகக் கையாண்டு வந்திருக்கின்றனர். இன ஒருமைப்பாடு, இன சமத்துவம் என்பவற்றினூடாக ஒன்றுபட்ட தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தின் மூலம் இனங்களைப் பிளவுபடுத்தி இலகுவாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதே இவர்களின் குறிக்கோளாக இருந்து வந்திருக்கின்றது. சுதந்திர இலங்கையில் பண்டாரநாயக்க இதனைத் தொடங்கி வைத்தார். சிங்கள தேசியவாதத்தை அவர் தன் வெற்றிக்கான ஆயுதமாகப் பயன்படுத்தினார். தான் கிளப்பிவிட்ட பூதத்துக்கே பின்னர் அவர் பரிதாபமாகப் பலியானார். அதுமுதல் சிங்களத் தேசியவாதம் தமிழ்த் தேசியவாதத்தை ஊட்டி வளர்த்தது. இரண்டும் சேர்ந்து முஸ்லிம் தேசிய வாதத்திற்கு உரமிட்டன (நுஃமான் 2013:37).

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை 1980களின் நடுப்பகுதி வரையிலும் முஸ்லிம் தமிழ் உறவில் உள்ளடங்கிய புகைச்சல்கள் இருந்தன. எனினும் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் உடைய பாரிய பிளவுகள் எவையும் இருக்கவில்லை. உள்ளடங்கிய புகைச்சலுக்கும் பாராளுமன்ற சந்தர்ப்பவாதமே காரணமாக இருந்திருக்கின்றது. தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் பாராளுமன்ற ஆசனம் ஒன்றை மட்டுமே கருத்திற் கொண்டு முஸ்லிம் வேட்பாளர்களை நாடியதும், முஸ்லிம் வேட்பாளர்கள் தமிழ் வாக்குகளை மட்டுமே கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியவாதக் கட்சிகளை நாடியதும் பின்னர் கட்சி மாறியதும் இப்புகைச்சலுக்கு அடிப்படையாகின (நுஃமான் 2013:37).

ஆனால் மருதமுனையின் மசூர்மௌலானா அப்படியானதொரு சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடவில்லை. அவர் தமிழரசுக் கட்சியுடன் தூய எண்ணத்துடன் இணைந்து செயற்பட்ட முஸ்லிம் தலைவராவார். மருதமுனைக்கும் நீலாவணைக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு முரண்பாடு காரணமாக மருதமுனை இளைஞர் ஒருவர் 1969ஆம் ஆண்டு பிற்பகுதியில் தனது வீட்டு முற்றத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சம்பவத்தினை அடுத்து அதுதொடர்பிலான வழக்கு விசாரணை ஒன்று இடம் பெற்றதுடன அவ்விசாரணையில் தமிழரசுக் கட்சியின் சார்பாக அதன் செயலாளர் தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் நீதிமன்றில் தோன்றியிருந்தார் (நௌபல் 2012:30). இதன்போது மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தமது ஆட்சேபனையினை வெளியிட்டனர். நாங்கள் முழு மொத்தமாக அக்கட்சிக்கு வாக்களிக்கின்றபோது எங்களுக்கு எதிராக நீதிமன்றில் அமிர்தலிங்கம் தோன்றுவது கூடாது என வாதிட்டனர். அமிர்தலிங்கம் அவர்கள் இம்மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் கசப்படைந்த மருதமுனை மக்கள் மௌலானாவை கட்சியிலிருந்து விலகிட அழுத்தம் கொடுத்தனர். தன்னை அன்பாக நேசிக்கும் மருதமுனை மக்களின் வேண்டு கோளைத் தவிர்க்க முடியாத நிலையில் அவர் கட்சியிலிருந்து விலகினார் (மஜீத் 2008:17-18 அஸ்வர் 2013:81-82). இந்நிகழ்வு கவலைக்குரியதொரு விடயமாக இருந்தபோதிலும் மருதமுனை மக்கள் தமிழ் தேசியவாதத்தின் அச்சத்தினாலேயே இவ்வாறானதொரு முடிவுக்கு வந்தனர் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

1985க்குப் பின்னர் துரிதமாக வளர்ச்சியடைந்த ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலை இயக்கங்கள் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பினையும் விரோதத் தினையும் வெளிப்படுத்தின. துப்பாக்கி முனையில் முஸ்லிம்கள் நிறுத்தப் பட்டனர். இச்சூழல் தமிழ் முஸ்லிம் உறவில் பாரியளவான விரிசல்களுக்கு இட்டுச் சென்றது. தமிழ்ப் பயங்கரவாத நடவடிக்கை மூலம் முஸ்லிம் உணர்ச்சி தீவிரம் அடைந்து முஸ்லிம் இனத்துவ அரசியல் எழுச்சி பெற்றது. நீண்ட காலமாக சிங்கள, தமிழ்ப்பிரச்சினையாக இருந்த இலங்கையின் இனப்பிரச்சினை சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரச்சினையாக மிகவும் சிக்கலடைந்து இலங்கையின் எதிர் காலம் மிகவும் கேள்விக்குறியாகியது.

ஆனால் மருதமுனை மக்கள் தமது ஊர்த் தலைமைத்துவத்தின் கீழ் கட்டுப்பட்டு நின்றனர். 1980களில் உருவாக்கப்பட்ட சமாதான சபையினூடாக அயல் தமிழ் கிராமங்களுடன் பேச்சுவார்த்தைகள், விட்டுக்கொடுப்புகள், புரிந்துணர்வுகள் போன்றவற்றின் மூலமாக நல்லுறவைப்பேண முற்பட்டனர். இவ்வாறான சூழலுக்கு இக்கிராமத்தின் புவியியல் அமைவிடம் முக்கிய செல்வாக்கினைச் செலுத்தியது. இச்சமாதான சபையின் உறுப்பினர்கள் தேவையேற்பட்ட வேளைகளில் தமிழ்ப் போராட்டக் குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி சமதானத்தைப்பேண முயன்றுள்ளனர். இதன்காரணமாகவே சென்னையில் இடம்பெற்ற ஒரு பேச்சுவார்த்தையின் போது சமாதானத்திற்கு உதாரணமான கிராமமாக மருதமுனை பேசப்பட்டது.

இச்சூழலில் முஸ்லிம்களின் நலன்கருதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஓர் இளம் சட்டத்தரணியான எம்.எச்.எம். அஷ்ரப் முஸ்லிம்களுக்கென தனியானதொரு கட்சியை உருவாக்குவது அவசியம் என எண்ணினார் (பாலில் 2004:213). 1981ல் கிழக்கு மாகாணத்தில் அரசியல் தலைவர்களைக் கொண்ட ஒரு சிறு கூட்டத்தில் இப்புதிய கட்சி உதயமாகியது. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய தலைவராக எம்.எச்.எம். அஷ்ரப் நியமிக்கப்பட்டதுடன் மாத்திரமல்லாது குறுகிய காலத்துக்குள்ளேயே இலங்கையின் அரசியலில் அவர் பிரசித்தி பெற்ற தலைவரானார். 1988 பெப்ரவரி மாதத்தில் தேர்தல் ஆணையாளர் ஒரு தேசிய கட்சியாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அங்கீகரித்தார். அதன் பிரகாரம் 1988 மாகாண சபைத் தேர்தலில் இக்கட்சி போட்டியிட்டது. இதிலிருந்த இக்கட்சியானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தேசிய அரசியலைத் தீர்மானிக்கிற சக்தியாக குறிப்பிட்ட காலம் இருந்திருக்கின்றது (பாஸில் 2004:213). அஷ்ரபின் மரணத்துடன் பல பிரிவு களாக உடைந்த முஸ்லிம் அரசியல் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலவீனப் படுத்தினாலும் அதன் முக்கியத்துவம் இன்றும் இலங்கை அரசியலில் தாக்கம் செலுத்தக் கூடியதாகவே உள்ளது.

குறிப்பாக அஷ்ரபின் மரணம் வரைக்கும் 1988ன் மாகாண சபைத் தேர்தல், 1989, 1994 பொதுத் தேர்தல்கள் போன்றவற்றின் ஊடாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கையின் தேசிய அரசியலில் பல அதிர்வலைகளை ஏற்படுத் தியது. இத் தேர்தல்களில் மருதமுனை மக்கள் குறைந்தளவான ஆதரவினையே இக்கட்சிக்கு வழங்கினர். இக்காலத்தில் தொடர்ச்சியாக அவர்கள் மசூர் மௌலானா வாதத்திலும் அவர் சார்ந்திருந்த ஐ.தே.க மீதுமே அதிக அக்கறை காட்டினர். உதாரணமாக 1989ம் ஆண்டைய பொதுத்தேர்தலில் மசூர் மௌலானா போட்டியிட்டு மீண்டும் ஒரு முறை தோல்வியைத் தழுவிக் கொண்டார். சில வேளைகளில் கல்முனைப் பிரதேசத்தின் ஏனைய முஸ்லிம் கிராமங்கள் மசூர் மௌலானாவின் வெற்றிக்கு தொடர்ந்தேர்ச்சியாக ஆதர வளிக்காமல் விட்ட மனக்கசப்பு மருதமுனை மக்களை இவ்வாறான செயற்பாடு களுக்குள் வலிந்து இட்டுச் சென்றிருக்க முடியும். மேலும் மருதமுனையில் வேரூன்றியிருந்த ஐ.தே.க.வின் மத்திய குழு, அதன் இளைஞர் அணி என்பவற்றின் பங்கும் இதற்குக் காரணமாக அமைந்திருக்கக் கூடும்.

எப்படியாயினும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமைபற்றி முதன்முதல் பேசிய ஒரு முஸ்லிம் அரசியல் மகன் மசூர்மௌலானாவே (காதர் இப்றாகிம் 2008:20). இது குறித்து இரா.சம்பந்தன் :

> "அல்ஹாஜ் மசூர் மௌலானா அவர்கள் ஒரு நீண்டகால அரசியல் வரலாற்றுக்கு உரித்துடையவர். பெரியார் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களால் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு அந்தக் கட்சியின் வளர்ச்சிக்காகவும், இந்நாட்டின் தமிழ்பேசும் மக்களாகிய தமிழ், முஸ்லிம் மக்களுடைய உரிமைகளுக் காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற் பட்டவர் என்பதில் எவ்விதமான சந்தேகத் திற்கும் இடமில்லை. அவருடைய நாவன்மையின் மூலம் சாதாரண தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் ஆட்சி, அதிகாரம், காணி, மொழி, கல்வி, அபிவிருத்தி, சமூக, பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகள் சம்பந்தமாக மிகவும் தெளிவான கருத்துக்களை முன்வைத்து தமிழ், முஸ்லிம் நன்மதிப் பையும், அன்பையும், பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டவர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பிரகாரம் 1956ல் இடம்பெற்ற திருமலை மாநாட்டில் வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட இருக்கும் சமஷ்டி முறைமையில் முஸ்லிம்களுக்கென ஒரு உப சமஷ்டி அலகு உருவாக்கப்படும் என பிரகடனப்படுத்தப்பட்டது. தந்தை செல்வாவின் பரந்துபட்ட மனப்பான்மை இந்த முடிவின் பின்னணியில் இருந்தாலும்கூட மசூர் மௌலானா, எம்.எம். முஸ்தபா ஆகிய முஸ்லிம் தலைவர்களின் தமிழ் தேசத்துடனான ஒன்றிணைந்த செயற்பாடும் சாணக்கியமும் இம்முடிவில் பங்களிப்புச் செய்திருக்க முடியும்.

இவ்வகையில் சுதந்திரத்திற்குப் பின்னர் வியாபித்திருக்கும் முஸ்லிம்களின் அரசியல் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் ஒருவராக மசூர் மௌலானா திகழ்கிறார். முஸ்லிம் அரசியல் கட்சிகள், அவற்றின் கோரிக்கைகள், முஸ்லிம் தேசம் பற்றிய கருத்துருவாக்கம் போன்றவற்றின் அடிநாதமாகவும் அவர் விளங்குகின்றார்.

முடிவுரை

மருதமுனையின் அரசியல் வரலாறு மிகச் சுவாரஸ்யமானதாக வளர்ச்சியடைந்துள்ளது. இது சுதந்திர காலம் முதல் 1970கள் வரைக்கும் தமிழ் மக்களுடான நல்லிணக்க அரசியலாகப் பரிணமித்துள்ள அதேவேளை அயல் முஸ்லிம் கிராமங்களுக்கான விட்டுக்கொடுப்பு அரசியலையும் கடைப்பிடித்துள்ளது. எவ்வாறாயினும் 1970 - 1990 வரையான காலப்பகுதியில் ஐ.தே.க. சார்பான அரசியலில் அதிக அக்கறை காட்டியுள்ளது. இனமோதல் காரணமாக சிங்கள, தமிழ் தேசியங்கள் முஸ்லிம்களை நசுக்கியபோது உருவான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கீழ் ஒன்றிணைவதில் இவ்வூர் மக்கள் பெரிதளவு ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில் இக்கிராமத்தின் அரசியல் தந்தையாக விளங்கும் மசூர் மௌலானா சார் அரசியலே இங்கு நீண்டகாலம் செல்வாக்குப்பெற்று விளங்கியது. எனினும் பின்நாட்களில் முஸ்லிம் காங்கிரசின் அரசியல் வெற்றியில் மருதமுனை மக்களும் பெரும்பங்கெடுத்துக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

References

1. Ameer Ali. (2013). *Sri Lanka's Muslims: the End of the Road*. Retrieved from https://www.colombotelegraph.com/index.php/sri-lankas-muslims-the-end-of-the-road/.

2. Carr, E.H. (1961). *What is History?*. New York: Random House.

3. அபூபக்கர், எஸ்.எம். (1998). சுதந்திர போராட்ட களத்தில் மருதமுனையின் வீர புருஷன், **அல்-மருதமுனை, இதழ்: 01.**

4. அமீருல் அன்சார், எப்.எம்.ஏ. (2013). குணவான் அரசியலுக்கு முன்னு தாரணம் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூர். ப 94, **விருட்ஷம்.**

5. அன்வர்அலி, எச்.எம். (2012). **சம்மாந்துறையின் அரசியல் வரலாறு**, கலை இலக்கியப் பேரவை, எம்.எம்.எம்.வி. சம்மாந்துறை.

6. அஸ்வர், ஏ.எச்.எம். (2013). **மருதமுனை முத்து மசூர் மௌலானா.** அஸ்மினா பதிப்பகம், தெஹிவளை.

7. இஸ்ஸதீன், ஏ.எஸ். (2005). **ஏறாவூர் வரலாறு**, ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்.

8. காதர், எம்.எல்.ஏ. (1999). இலங்கையின் பத்தாவது பொதுத்தேர்தலும் (1994) முஸ்லிம்களும். இலங்கை அரசியல் ஆய்வுக் கழகம், பேராதனை.

9. காதர் இப்றாஹிம், எம்.எச். (2008) இன்று தனியும் இந்த மண்ணின் தாகம். பப 20-21, **விடிவெள்ளி.**

10. சம்பந்தன், இரா. (2008) நாடறிந்த நாவலன். பப 7-8, **விடிவெள்ளி.**

11. பாஸில், எம்.எம். (2004). இலங்கையின் இனத்துவப் பிணக்கில் முஸ்லிம் காரணி, **பல்வகையினைக் கையாளுதல் - இலங்கையின் சமாதானமும் முரண்பாடும் பற்றிய சொல்லாடல்,** நெதர்லாந்து சர்வதேச உறவுகள் நிலையம்.

12. மஜீத், ஏ.எச்.எம். (2005). **எனது கிராமத்தைத் தேடுகிறேன்**, மருதமுனை வாசகர் வட்டம்.

13. _ (2008) மஷூர் மௌலானாவின் அரசியல் தடம். பப 13-19, **விடிவெள்ளி**, (2008).

14. மஷூர் மௌலானா, எஸ்.இஸட்.எம். (2013). ஆசிச் செய்தி. பப 18-20, **விருட்ஷம்.**

15. மூசா, எஸ். எம். (2013). தமிழர்-முஸ்லிம் உறவுப் பாலம். பப 47-49, **இராசமாணிக்கம்**, இலங்கை தழிழரசுக் கட்சி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. றமீஸ், எம்.ஏ.எம். (2012). அணிந்துரை. **சம்மாந்துறையின் அரசியல் வரலாறு**, கலை இலக்கியப் பேரவை, எம்.எம்.எம்.வி. சம்மாந்துறை.

17. நௌபல், எம்.எம். (2011). **மருதமுனையின் வரலாறு (ஆள்சார் கண்ணோட்டம்) பாகம் 1**, ஆயிஷா வெளியீட்டகம், மருதமுனை.

18. __ (2012). **மருதமுனையின் வரலாறு (ஆள்சார் கண்ணோட்டம்) பாகம் 2**, ஆயிஷா வெளியீட்டகம், மருதமுனை.

19. _ (2013). காலமழைகாணா மண்ணுக்கு பருவமழை பொழிந்த கார்மேகம். பப 8-10, **விருட்ஷம்**.

20. நுஃமான், எம்.ஏ. (2013). தேச முன்னேற்றமும் அரசியல் தலைமைத்துவமும். பப 33-38, **விருட்ஷம்**.

21. ஜெமீல், எஸ்.எச்.எம். (2012). **இலங்கைப் பாராளுமன்றத்தில் முஸ்லிம்கள்**, குமரன் புத்தக இல்லம்.

22. ஜெஸ்மி, எம்.எம். (2010.6.6). **மருதமுனைப் பிரதேச தமிழ் முஸ்லிம் உறவு**. ஞாயிறு கிழக்குத் தினக்குரல்.

23. ஷரிபுத்தீன், ஆ.மு. (2009). **மருதமுனையின் வரலாறு**, அன்னை வெளியீட்டகம், மருதமுனை.

நேர்காணல்

1. எஸ்.இஸட். மஷூர் மௌலானா - முன்னாள் செனட்டர்
2. எஸ்.எம். அபூபக்கர் - ஆசிரியர
3. எம்.எச்.காதர் இப்றாஹிம் - முன்னாள் கல்வி அதிகாரி
4. ஏ.ஆர்.ஏ.சத்தார் - முன்னாள் மக்கள் வங்கி உத்தியோகத்தர்
5. ஏ.ஜே.எம்.வசீல் - விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
6. எஸ்.எம். மூசா - ஓய்வுபெற்ற ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்சூர் முகம்மது பாஸில், விரிவுரையாளர்

மன்சூர் வைத்தியரின் மூத்த மகன் முகம்மது பாஸில் 1974-02-07இல் மருத முனையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. உயர்தரம் வரை அல்-மனார் மத்திய கல்லூரியில் கற்ற இவர் கலைப்பீட மாணவனாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானார். இங்கு அவர் B.A. (Hons) பட்டத்தைப் பெற்றார். இவர் தனது உயர்கல்வியினை MPs மேஜி (Meiji) பல்கலைக் கழகம் - ஜப்பானில் பூர்த்தி செய்ததன் பின், மலேசியா மலாயா பல்கலைக்கழகத்தில் PhD கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளார்.

21-08-2000இல் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்ற இவர் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தற்போது அரசியல்துறை விரிவுரையாளராகப் பணிபுரி கிறார்.

Dip. in Human Rights, Dip. in International Affairs, Advanced Dip. in Computer, Sp. Trained in IR & HR ஆகிய விசேட தகைமைகளைக் கொண்டுள்ள இவர் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, சர்வதேச உறவுகளுக்கு ஓர் அறிமுகம், அரசியல் சமூகவியல் ஆகிய ஆக்கங்களையும் தந்துள்ளார்.

WAMY Scholarshi, ICRC & UNHCR Scholarship, JICA Scholarship, QEF / IRQUE Award (World Bank), HETC Award (World Bank), NCAS Award ஆகிய விருதுகளின் சொந்தக்காரன்.

ஊரின் அரசியல், சமூக பொருளாதார அபிவிருத்திசார் நிறுவனங்களில் அங்கத்த வராக இருப்பதுடன் இந்நிறுவனங்களினூடாக ஊரின் முன்னேற்றத் திற்கு பங்களிப்புச் செய்து வருகின்றார். மேலும் சமய நிறுவனங்களிலும் அதிக ஈடுபாடு காட்டுகிறார். மருதமுனையின் அரசியல் வரலாற்றை முதன் முறையாக ஆய்வு செய்தவர் என்ற சிறப்பைப் பெறுகின்றார். [அல்-மருதமுனை 5 (11)].

தனியாக பல ஆய்வுகளைச் செய்து வருவதுடன் மாத்திரமல்லாது உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்களுடன் இணைந்து அரசியல், சமூக, பொருளாதார அபிவிருத்தி குறித்து பல்வேறு ஆய்வு முயற்சிகளில் ஆர்வம் காட்டுகின்றார். அத்துடன் ஆய்வு முடிவுகளை சஞ்சிகைகளிலும், சர்வதேச ஆய்வரங்குகளிலும் சமர்ப்பித்து வருகின்றார்.

முகம்மது முஸம்மில் றஸ்மியாவைக் கரம்பற்றிய இவர்களுக்கு ஒரு பிள்ளை உண்டு.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைவாகு வடக்கு கிராம சபையின் வரலாறு

எம்.எம். முஹைமின், ஜே.பி.

ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர், செயலாளர், உள்ளக கணக்காய்வாளர்,
மாநகர சபை கல்முனை.

ஆரம்ப வரலாறு

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் உள்ளூராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டன. அவைகள் கிராமசபை, பட்டினசபை, நகரசபை, மாநகரசபை என பெயரிடப்பட்டன. இவற்றில் எம்முடையதுதான் கரைவாகு வடக்கு கிராம சபையாகும். இது பெரியகல்லாறு, பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு ஆகிய கிராமங்களைக்கொண்டு ஆரம்பத்தில் அமைக்கப்பட்டது. இதன் முதல் தலைவராக பெரிய கல்லாற்றைச்சேர்ந்த திரு. கனகசபை என்பவர் நியமிக்கப்பட்டார். இக்கிராம சபை அப்பொழுது பட்டிருப்பு தொகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தது.

பின்னர் ஏற்பட்ட சில மாற்றங்கள் காரணமாக மருதமுனைக் கிராமம் மூன்று வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு அந்த மூன்று வாட்டாரங்களுக்கும் தேர்தல் ஒன்று நடைபெற்று செ.ஐ.செ. சாலிஹு மௌலானா, செ.ம. தாவூத் லெப்பை, பை. அப்துல் ஹமீது என்ற மூவரும் ஏகமனதாக போட்டியின்றி தெரிவுசெய்யப் பட்டனர். இதன் பிரதிபலனாகவும் ஏனைய தமிழ்க் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் 1956ம் ஆண்டில் செ.ஐ.செ. சாலிஹு மௌலானா (காலஞ்சென்ற ஹஸனுல் பாரி அதிபர் அவர்களின் தகப்பனார்) என்பவர் கரைவாகு வடக்கு கிராம சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவர் பதவியை மருதமுனைக்கு கொண்டு வந்த பெருமை அவரையே சாரும். அவருடைய காலத்தில் புதிய சந்தைக் கட்டிடம் அமைக்கப்பட்டதுடன் பல புதிய தெருக்களும் திறந்துவிடப்பட்டன. அவரைத் தொடர்ந்து பை. அப்துல் ஹமீது என்பவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். (இவர் ஏ.எச்.ஏ. ழாஹீர் G.S. இன் தந்தை) இவரின் காலத்திலும் பல தெருக்கள் அமைக்கப்பட்டன. இவருக்கு பின்னர் 1959ஆம் ஆண்டில் கல்முனை தொகுதியுடன் இக்கிராம சபை இணைக்கப்பட்டு எட்டு வட்டாரங்களாக பிரிக்கப் பட்டு தேர்தல் ஒன்று நடைபெற்றது. அத்தேர்தலில் ஐந்து முஸ்லிம் உறுப்பினர்களும், நான்கு தமிழ் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் பெரியகல்லாறு கிராமம் இக்கிராம சபையிலிருந்து நீக்கப்பட்டது. அத்தேர்தலில் எஸ்.எம்.எஸ். அஹமது மௌலானா என்பவர் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இவரது காலத்தில்தான் பொது நூலகம் ஒன்று கிராம சபையால் உருவாக்கப்பட்டது. அது மட்டுமன்றி அந்நூலகத்தை வழிநடத்துவதற்கு ஜனாப். ஏ.எல்.ஏ. மஜீது (ஜே.பி.) என்பவரை நூலகராக நியமித்து பிராதன வீதியில் அமைந்திருந்த அவருக்கு சொந்தமான கடையறையொன்றை வாடகை எதுவுமின்றி இலவசமாக வழங்கி யிருந்தார். சுமார் மூன்று வருடங்களாக அந்நூலகம் அக்கடையறையிலேயே இயங்கி வந்தது. பின்னர் 1962ம் ஆண்டில் நடைபெற்ற கிராம சபைக்கான தேர்தலில் ஜனாப். எஸ்.எல்.எம். புர்ஹான் (றைசுல் இஸ்லாம் அவர்களின் தகப்பனார்) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது காலத்தில் வாளி மலகூட சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக ஆறு சுகாதார தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களால் பொதுச்சந்தை வளவு மேலும் கிராமத்தின் பொதுவான இடங்களில் தெருக்கூட்டுச் சேவையும் இடம் பெற்றன. மேலும் தற்பொழுது மக்கள் மண்டபம் அமைக்கப்பட்டிருக்கும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பொதுச்சந்தைக் கட்டிடத்தின் ஒரு பகுதியை அடைத்து பொதுநூலகம் அங்கு மாற்றப்பட்டது. ஜனாப். ஏ.எல்.ஏ. மஜீது ஜே.பி. அவர்கள் நூலகராக செயற்பட்டார். அவர் அவரது கடமையை கண்ணியமாகவும், பொறுப்புடனும் செய்து வந்தார். 01.10.1966ம் ஆண்டு வரை ஜனாப். எஸ்.எல்.எம். புர்ஹான் அவர்கள் கிராமசபைத் தலைவராக கடமையாற்றினார்.

1966ம் ஆண்டு நடைபெற்ற கிராம சபைத்தேர்தலில் அல்ஹாஜ். மசூர்மௌலானா ஜே.பி. அவர்கள் தலைவராகவும் பின்வருவோர் உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

உறுப்பினர்கள்

1ம் வட்டாரம்	திரு. எஸ். வீரசிங்கம்	பெரியநீலாவணை
2ம் வட்டாரம்	ஜனாப். எஸ்.எம். சுல்தான், ஜே.பி.	மருதமுனை
3ம் வட்டாரம்	ஜனாப். ஐ. முஹம்மது தம்பி, ஜே.பி.	மருதமுனை
3ம் வட்டாரம்	அல்ஹாஜ். ஐ.எல்.எம். இஸ்மாயில், ஜே.பி.	மருதமுனை
4ம் வட்டாரம்	அல்ஹாஜ். மசூர்மௌலானா, ஜே.பி.	மருதமுனை
5ம் வட்டாரம்	எஸ்.எம். அபூபக்கர் (சேகுசாய்வு)	மருதமுனை
6ம் வட்டாரம்	திரு. கதிர்காமத்தம்பி	பாண்டிருப்பு
7ம் வட்டாரம்	திரு. சதாசி ஐயர்	பாண்டிருப்பு
8ம் வட்டாரம்	திரு. செலவாராஜா	பாண்டிருப்பு

அல்ஹாஜ். மசூர்மௌலானா அவர்கள் 01.10.1966ம் ஆண்டு தொடக்கம் 31.12.1972ம் ஆண்டு வரை இரண்டு முறை தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டு தொடர்ந்து தலைவராக இருந்து பின்வரும் சேவைகளை செய்து முடித்தார்.

சேவைகள்

01. 1968, 1969ஆம் வருடங்களில் இருளில் மூழ்கிக்கிடந்த இக்கிராமத்தை அப்போதிருந்த அரசாங்க சார்பான அரசியல்வாதிகள் மூலம் மின்சாரத்தைக் கொண்டு வந்து இக்கிராமத்துக்கு ஒளியேற்றினார். மேலும் அம்பாரை மாவட்டத்தில் முதலாவது தெருவிளக்கை அறிமுகப்படுத்தியது அவரே. இதற்கென உள்ளூராட்சி கடன் நிதியத்திலிருந்து 40 இலட்சம் ரூபா கடனாகப்பெற்று அத்திட்டத்தை நிறை வேற்றினார். இக்கடனை மீளச்செலுத்துவதற்காக இப்பகுதியில் நாடு, நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதோடு மதிப்பீட்டு வரியையும் (சோலை வரியையும்) அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தார்.

02. அக்காலத்தில் அம்பாரை மாட்டத்தில் எந்தக்கிராமத்திலும் இல்லாதவாறு ஒரு பொதுநூலகத்தை அமைத்தார். குறிப்பிட்ட இடத்தில் பலர் கொட்டில்கள் கட்டி குடியிருந்தனர். அவர்களையெல்லாம் பலாத்காரமாக எழுப்பி அந்த இடத்தை பொதுநூலகம் அமைப்பதற்கு ஒழுங்குபடுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. அக்காலத்தில் இக்கிராமத்தில் பாவனையிலிருந்த வாளி மலகூடங்களை அகற்றி நீரடைப்பு மலகூடங்களாக மாற்றியமைத்தார்.

04. வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தை அம்பாரை மாவட்டத்தில் உள்ள கிராம சபைகளில் முதலாவதாக அறிமுகம் செய்து நினைத்தவாறு தெருக்களில் மதிற்சுவர் அமைப்பதையும் கட்டிடங்கள் கட்டுவதையும் ஒழுங்கு படுத்தினார். அதன் காரணமாகவே இங்கு மாத்திரம் பாதைகள் அகலமாகுவதற்கு காரணமாக இருந்தார்.

05. கடற்கரைக்கு அண்மையில் அத்துமீறி குடில்கள் அமைத்து குடியேறியிருந்த சிலரை அகற்றி சுமார் 03 ஏக்கர் நிலப்பரப்பில் விளையாட்டு மைதானத்தை உருவாக்கினார். அதன் காரணமாகவே இன்றுவரை அது மசூர்மௌலானா விளையாட்டு மைதானம் என அழைக்கப்படுகின்றது.

06. இக்கிராமத்தில் அக்காலத்தில் இருந்த பல முக்கியமான மணல் நிறைந்த பாதைகளை கிறவலிட்டு செப்பனிட்டு பொதுமக்களின் போக்குவரத்துக்கு உதவி செய்தார். மேலும் மசூர்மௌலானா வீதி, அக்பர் கிராம வீதி ஆகியவற்றை தெருநிர்மாண திணைக்களத்திற்கு பாரம் கொடுத்து அதனை கல், தார் வீதிகளாக மாற்றியமைத்தார்.

07. அக்காலத்தில் உயர் கல்வி கற்ற வறிய மாணவர்களுக்கு கிராம சபையின் மூலமாக புலமைப்பிரில் வழங்கி உதவி செய்தார்.

08. அக்காலத்தில் அடுத்த கிராமத்திலுள்ள மீன்பிடி தோணிகள் எமது கிராமத்திலுள்ள கடல் எல்லைக்குள் பிரவேசித்து எமது மீனவர்களின் மீன்பிடியை தடைசெய்து தொல்லை செய்து வந்தனர். அவற்றை அரசாங்க வரத்தமானி மூலம் தடைசெய்து எமது கிராமத்தின் கடல் எல்லைக்குள் எமது மீனவர்கள் மாத்திரம் மீன் பிடிப்பதற்கு உதவி செய்தார்.

09. மின்சார திட்டத்திலும் பொதுநூலகத்திலும் கிராம சபையின் பல வேலைத் திட்டங்களிலும் பலருக்கு தொழில்வாய்ப்பினை வழங்கினார்.

1972ஆம் ஆண்டு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா உள்ளூராட்சி அமைச்சராக இருந்த போது அக்காலத்தில் சிறிமா அரசுக்கு எதிரான சகல கிராம சபைகளும் அவரால் கலைக் கப்பட்டன. அன்று வரை கிராம சபையின் தலைவராக இருந்து அளப்பரிய சேவைகளை செய்து அகில இலங்கையிலும் பிரசித்தி பெற்ற கிராம சபையாக மசூர்மவ்லானா மாற்றியமைத்தார் என்பதை எவரும் மறுக்கமாட்டார்.

பின்னர் 01.01.1973ஆம் திகதி தொடக்கம் 01.03.1983ஆம் ஆண்டு வரை சுமார் எட்டு வருட காலத்திற்கு விசேட ஆணையாளர்களின் நிருவாகத்தின் கீழ் கரைவாகு வடக்கு கிராம சபை கொண்டுவரப்பட்டது. தேர்தல்கள் எதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறவில்லை. 01.01.1973ஆம் ஆண்டு தொடக்கம் 01.12.1977ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அம்பாரை அலுவலகத்தின் ஆய்வு உத்தியோகத்தர் திரு. ஜெயசீலன் பெர்னாண்டோ அவர்களும் 02.06.1977 தொடக்கம் நான் பிரதம எழுதுநராகவும் கடமைகளைப் பொறுப்பேற்று செய்து வந்தோம். கிராமத்திலுள்ள பல மணல் தெருக்கள் கிறவலிட்டு திருத்தங்கள் செய்யப்பட்டன.

01.12.1977ம் திகதி தொடக்கம் ஜனாப். ஏ.ஆர்.ஏ. அஸீஸ் B.A. அவர்கள் விஷேட ஆணையாளராக அக்காலத்தில் கௌரவ. பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த ஜனாப். ஏ.ஆர். மன்சூர் அவர்களின் சிபாரிசுக்கமைய நியமிக்கப்பட்டார். எவ்வாறாயினும் விஷேட ஆணையாளர்களாக நியமிக்கப்படுவர்கள் முழுநேரமும் அலுவலகத்திற்கு வருகை தருவதுமில்லை. நாளாந்தம் பொது மக்களால் கொண்டுவரப்படும் முறைப்பாடுகளை தீர்த்துவைப்பதுமில்லை. எனவே அவர்கள் அவர்களுடைய சில முக்கியமான கடமைகளைச் செய்யுமாறு எழுத்துமூலம் பிரதம எழுதுநருக்கு அதிகாரம் வழங்கு வார்கள். அவ்வகையில் சகல கடமைகளையும் பிரதம எழுதுநராக கடமையாற்றிய நானே செய்து வந்தேன். இக்காலத்தில் எத்தனையோ ஒழுங்கை பிரச்சினைகள், வளவுப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன.

எவரும் எதிர்பாராத விதமாக 23.11.1978ஆம் திகதி சூறாவளி அனர்த்தம் ஏற்பட்ட பொழுது பெரியதொரு பிரளையமே எமது கிராமத்துக்கு ஏற்பட்டது. அது மட்டுமல்ல அயல்கிராமங்களும் பாதிக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் இரவு பகல் பாராது எமது கிராம சபை ஊழியர்களைக்கொண்டு முறிந்து வீழ்ந்த மரங்கள், மின்சார தூண்கள் என்பவற்றை அகற்றி மனிதர் நடமாடுவதற்கு வழி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. ஒரு மாத காலத்துக்கு மின்சாரம் இல்லை. மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் ஏற்பட்ட அனர்த்தங்கள் திருத்தப்பட்டு முடிய வில்லை. இவ்விடயத்தில் அக்காலத்தில் விஷேட ஆணையாளராக இருந்து ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்கள் என்னுடனும், எமது ஊழியர்களுடனும் சேர்ந்து பங்குபற்றியதை என்னால் மறக்க முடியாது.

சூறாவளியின் போது கடும் மழை பெய்து காற்றும் அடித்த காரணத்தினால் பல முக்கியமான தெருக்கள் மோசமான நிலையில் பழுதடைந்திருந்தன. மற்றும் மின்சார கம்பங்கள் அனைத்தும் முறிந்து வீழ்ந்ததால் மின்சாரத்தின் நிலையும் கவலைக்கிடமாக இருந்தது. எனவே இவ்விடயமாக உள்ளூராட்சி ஆணையாளர் அம்பாரை அவர்களை சந்திப்பதற்காக நானும், விசேட ஆணையாளரான ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்களும் சென்ற பொழுது அங்கே திரு. வில்சன் என்பவர் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவரிடம் எமது பிரச்சினைகளை கதைத்தபொழுது இதற்கென தனக்கு ஒரு தொகைப்பணம் கிடைத்துள்ளதாகவும், எனினும் உள்ளூராட்சி அமைச்சின் செலாளர் அவர்களினால் சிபாரிசு செய்யப்பட்டால் மாத்திரம்தான் அந்தப் பணத்தில் உங்களுக்கு உடனடியாக ஒதுக்கீடு செய்ய முடியும் எனக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நாங்கள் இருவரும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரை சந்திப்பதற்காக கொழும்பு சென்று ஜனாப். மசூர்மௌலானா ஊடாக அவ்வமைச்சின் செயலாளரான திரு. பாஸ்கரலிங்கம் அவர்களை சந்தித்தோம். மசூர்மௌலானா அவர்களின் சிபாரிசின் பெயரில் உடனடியாகவே அவர் ரூபா 07 இலட்சத்தை எம்முடைய சபைக்கு கொடுத்து தவுமாறு திரு. வில்சன் அவர்களுக்கு கடிதம் ஒன்றை தந்தார். அதைக்கொடுத்து எமக்குரிய அந்த நன்கொடையை நாம் பெற்றுக்கொண்டோம். அந்நன்கொடையிலிருந்து பழுதடைந்த பல தெருக்களைத் திருத்தியதோடு விளையாட்டு மைதானத்தை புனர்நிர்மாணம் செய்தோம். உடைந்து கிடந்த மதிற் சுவரின் ஒரு பகுதியை மீண்டும் கட்டியெழுப்பினோம். மேலும் ஒப்பந்தக்காரர்கள் மூலமாக இவ்வேலைகள் நிறைவேற்றப் பட்டதால் அவர்களைக் கொண்டு ஸம்சுல் இல்ம் மகா வித்தியாலயத்தின் உள்ளக வீதிகள் மற்றும் சுற்றிவளைத்து மதில்கள் என்பன அவ்வொப்பந்தக்காரர்களால் இனாமாக செய்து கொடுக்கப்பட்டன. மேலும் மசூர்மௌலானா அவர்களின் ஒத்துழைப் புடன் இலங்கை மின்சார சபையை அணுகி உடனடியாக அங்கிருந்து ஒரு பிரதம பொறியியலாளருடன் தேவையான உபகரணங்கள் மற்றும் ஊழியர்களை இங்கு கொண்டுவந்து மின்சார திட்டத்தை புனர்நிர்மானம் செய்தோம். அதன் மூலமாக மேலதிகமாக மின்சாரம் இல்லாத பலதெருக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய சந்தர்ப்பமும் எமக்குக் கிடைத்தது.

28.02.1981ம் ஆண்டு வரை ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்கள் விஷேட ஆணையா ளராகக் கடமையாற்றினார். 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் அம்பாரை மாவட்ட அபிவிருத்தி சபைக்கான தேர்தல் நடைபெற்று அத்தேர்தலில் ஜனாப். எம்.எச்.எம். ஜௌபர் என்பவர் தலைவராகவும் ஏனைய 02 அங்கத்தவர்கள் உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டு 01.03.1981ம் திகதி இச்சபை அம்பாரை கச்சேரியில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் எமது கரைவாகு வடக்கு கிராம சபை அம்பாரை மாவட்ட அபிவிருத்தி சபையின் உப அலுவலகமாக மாற்றப்பட்டது. 01.03.1981ல் ஆரம்பிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபையில் செயலாளராக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபரும் பிரதிச் செயலாளராக உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் தலைவருமாக எம்.எச்.எம். ஜௌபர் அவர்களும் நியமிக்கப்பட்டனர். அவ்வலுவலகம் 13 கிராம சபைகள், 01 பட்டின சபை, 01 நகரசபை இவைகளை உள்ளடக்கி அமைக் கப்பட்டது. இவ்வாறன ஒரு சபைக்கு பிரதம எழுதுநராக என்னையே தேர்ந் தெடுத்து நியமித்தனர். காரணம் சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழியிலும் பேசக்கூடிய ஆற்றல் எனக்கு இருந்ததால் எனக்கு அவ்வாறான வாய்ப்புக் கிடைத்தது.

மேலும் இச்சபை மாதம் ஒருமுறை கூடுகின்றபொழுது இம்மாவட்டத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அச்சபையின் அங்கத்தவர்களாக பிரசன்னமாகி கூட்டத்தை நடத்துவர். அக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மூலமாகத்தான் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றன. இங்குள்ள கரைவாகு வடக்கு உப அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். காதர்இப்றாகிம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றினார். ஜனாப். ஏ.எம். ஜூனைட் அவர்கள் பிரதம எழுதுநராக கடமையாற்றினார். இக்காலத்தில்தான் மருதமுனையில் மக்கள் மண்டபம் ஒன்றை எம்.எச். காதர் இப்றாகிம் மூலமாக அமைக்கப் பட்டது. மேலும் அவர் மூலமாக நமது பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர். மன்சூர் அவர்களின் உதவியுடன் பல அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றன. மன்சூர் அவர்களிடமிந்து நன்கொடைகளைப் பெறுவதற்கு அதன் மூலமாக பல தெருக்களை அமைப்பதற்கு மின்சார அபிவிருத்தி வேலைகை செய்வதற்கு ஜனாப். எம்.எச். காதர் இப்றாஹிம் அவர்கள் காரணகர்த்தாவாக இருந்தார் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அம்பாரை மாவட்ட அபிவிருத்தி சபை 31.12.1987ஆம் ஆண்டுவரை தனது ஆட்சியை நடாத்தி வந்தது. 01.01.1988ஆம் திகதி அபிவிருத்திச்சபை கலைக்கப் பட்டு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு பிரதேச செயலகத் திற்கும் ஒரு பிரதேசசபை வீதம் உருவாக்கப்பட்டன. அவ்வகையில் கல்முனைப் பிரதேச சபை ஒன்று உருவாக்கப்பட்டது. அதன் கீழ் கரைவாகு வடக்கு கிராம சபை, கல்முனை பட்டின சபை, கரைவாகு தெற்கு கிராம சபை, கரைவாகு மேற்கு கிராம சபை என்பன உள்ளடக்கப்பட்டன. 01.01.1988ஆம் தொடக்கம் இயங்கிய கல்முனை பிரதேச சபைக்கு என்னையே செயலாளராக நியமித்தனர். கரைவாகு வடக்கு கிராம சபை இப்பிரதேச சபையின் உப அலுவலகமாக இயங்கி வந்தது. இதற்கு பிரதம எழுதுநராக இருந்தவரே பொறுப்பு உத்தியோக்கத்தராகவும் இருந்தார். அவ்வகையில் ஜனாப். ஏ.எம். ஜூனைட் அவர்கள் இவ்வுப அலுவலகத் திற்கு பொறுப்பு உத்தியோகத்தராக இருந்தார்.

கல்முனைப் பிரதேச பைக்கு விசேட ஆணையாளராக கல்முனைப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் ஜனாப். ஏ.எச். முயினுத்தீன் அவர்கள் நியமிக் கப்பட்டார். அப்பொழுது உப அலுவலகங்களின் கடமை வருமானங்களை மட்டும் அறவீடு செய்து வங்கியில் இடுவது மட்டும்தான்.

08.11.1989ஆம் ஆண்டு எமது பிரதேச சபையின் வசமிருந்த மின்சாரத் திட்டங்கள் அனைத்தும் இலங்கை மின்சார சபைக்கு பாரம்கொடுக்கப்பட்டது. மேலும் எமது மருதமுனை பொதுநூலகம் ஒன்று புதிதாக அமைத்து திறந்து வைக்கப்பட்டது. இதற்கு காலஞ்சென்ற யூ.எம். ஹனீபா (மருதூர்கனி) அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த பொழுது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1990ஆம் ஆண்டு 06ஆம் மாதம் 11ஆம் திகதி புலியுறுப்பினர்களுக்கும், இராணுவத்திற்கும் நடைபெற்ற மோதலில் பெரியதோர் கலவரம் ஒன்று கல்முனையில் ஏற்பட்டது. அதே திகதியில் அன்று இரவு கல்முனை பிரதேச சபை அலுவலகம் உடைக்கப்பட்டு சகல ஆவணங்களும், தளபாடங்களும் கொள்ளை யிடப்பட்டன. அதே இரவு கரைவாகு வடக்கு உப அலுவலகத்தின் காரியாலயமும் தீயிடப்பட்டது. இக்காரணத்தால் உடனடியாக கரைவாகு வடக்கு உப அலுவலகம் மக்கள் மண்டபத்திற்கு மாற்றப்பட்டது. அதேபோன்று கல்முனைப் பிரதேச சபையின் அலுவலகத்தையும் மக்கள் மண்டபத்திற்கு மாற்றியமைத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனையில் சகல கடைகளும், காரியாலயங்களும், வங்கிகளும், ஏனைய நிறுவனங்களும் 01.08.1990ம் ஆண்டுவரை இயங்கவில்லை. மீண்டும் 01.08.1990ம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த ஆர். பிரமேதாசா அவர்கள் கல்முனைக்கு சமூகமளித்து கல்முனையில் உள்ள பொது நூலகத்தை பொலிஸ் நிலையமாக மாற்றியமைத்து திறந்து வைத்தார். ஏற்கனவே இருந்த பொலிஸ் நிலையம் தீயிட்டு கொழுத்தப்பட்டிருந்தது. இதற்கிடையில் STF Camp ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் கல்முனை பிரதேச செயலாளரான ஏ.எச். முயினுத்தீன் அவர்களை பணித்ததன் பேரில் அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க கரைவாகு வடக்கு உப அலுவலகம் பெரியநீலாவணை STF Camp அமைப்பதற்காக கொடுக்கப்பட்டது. அது இன்று பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

நான் பிரதேச சபையின் செயலாளராக இருந்த போது எமது கிராமத்தில் உள்ள பலர் என்னிடம் வந்து கடற்கரை ஓரமாக பலர் குடில்கள் அமைத்து நிலத்தை பிடிப்பதாகவும் அதனால் இனிமேல் கடற்கரை என்ற ஒரு இடமே இருக்காது என முறையிட்டனர். இவ்விடயமாக எமது கிராமத்திலுள்ள 02 கிராம சேவகர்கள் மாத்திரம் உத்தரவுப்பத்திரம் வழங்கி வருவதாகவும் அவர்கள் எனக்கு தெரிவித்தனர். நான் உடனடியாக விசேட ஆணையாளராகவும், பிரதேச செயலலாளராகவும் இருந்த ஏ.எச். முயினுத்தீன் அவர்களைக் கண்டு இவ்விடயத்தை தெரியப்படுத்தினேன். அவர் உடனடியாக எனது முன்னிலை யிலையே அக்கிராம சேவகர்களை அழைத்து இதுவரை கொடுக்கப்பட்ட உத்தரவுப்பத்திரங்களை இரத்துச் செய்யுமாறும், அமைக்கப்பட்டிருக்கும் குடில்களை அப்புறப்படுத்துமாறும் அவர்களுக்கு கட்டளை பிறப்பித்தார். அன்று பிற்பகல் நானும் கூடச்சென்று மேற்படி குடில்கள், அடைப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு கடற்கரை விடுவிக்கப்பட்டது.

அம்பாரை மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவராக இருந்த பொலிஸ் உதவி அத்தியட்சகர் எச்.எல். ஜமால்தீன் அவர்களும், செயலாளராக இருந்த மரிகோல்ட் ஏ.எம். இப்றாஹிம் அவர்களும் இணைந்து அகில இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவருடன் ஒப்பந்தம் ஒன்றைச்செய்து விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த அஸ்வர் ஹாஜியார் அரங்கின் இரண்டு பக்கங்களிலும் புதிய பார்வை அரங்கு ஒன்றை அமைத்து ஒழுங்குசெய்து சபைக்கு பாரம் தந்தனர்.

1994ம் ஆண்டு பிரதேச சபைக்கென தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் ஐ.ஏ. ஹமீட் அவர்கள் கல்முனை பிரதேச சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அதைத்தொடர்ந்து எனக்கு நிந்தவூர் பிரதேச சபைக்கு இடமாற்றம் கிடைத்தது. 1998ம் ஆண்டு வரை அப்பிரதேச சபையின் செயலாளராக கடமையாற்றினேன். மீண்டும் 1999ம் ஆண்டில் கல்முனைப் பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்று வந்தேன். அப்பொழுது ஜனாப். சாஹூல் ஹமீட் என்பவர் தலைவராக இருந்தார். 1999ம் ஆண்டில் பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக்கப்பட்டது. 10.06.1999ம் ஆண்டு அதைத்தொடர்ந்து அப்பிரதேச சபை நகர சபையாக தரம் உயர்த்தப்பட்டது. அத்துடன் கரைவாகு வடக்கு கிராம சபை என்ற நாமே இல்லாதொழிந்தது. மீண்டும் 15.02.2002ஆம் ஆண்டு மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டது. நகர சபைக்கென தேர்தல் எதுவும் நடத்தப்பட வில்லை. இதைத்தொடர்ந்து மாநகர சபைக்கான முதலாவது தேர்தல் 2006ஆம் ஆண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் எம்.எச்.எம். ஹரீஸ் அவர்கள் மேயராக தெரிவுசெய்யப்பட்டார்.

பிரதி மேயராக ஐ.எல். கமறுத்தீன் அவர்கள் கடமையாற்றினார்கள். மீண்டும் சட்டங்களில் திருத்தம் செய்து பிரதி மேயராக ஜனாப். மசூர் மௌலானா நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து எம்.எச்.எம். ஹரீஸ் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். அதைத்தொடர்ந்து பிரதி மேயராக இருந்த ஜனாப். மசூர்மௌலானா அவர்கள் மேயராக தெரிவுசெய்யப்பட்டார். இவர்களுடைய ஆட்சி 2011ம் ஆண்டு வரை நடைபெற்றது. 2011ஆம் ஆண்டு மீண்டும் நடை பெற்ற மாநகரசபைத் தேர்தலில் சாய்ந்தமருது கிராமத்தை சேர்ந்த சிராஸ் மீராசாஹிப் என்பவர் மேயராக தெரிவுசெய்யப்பட்டார். மருதமுனைக் கிராமத்தின் உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஜனாப். ஏ.ஆர். அமீர்	**பெரியநீலாவணை**	*(SLMC)*
ஜனர். ஏ.எம். றக்கீப் (சட்டத்தரணி)	**பெரியநீலாவணை**	*(SLMC)*
ஜனாப். ஏ.எல்.எம். முஸ்தபா (சரிப்)	**மருதமுனை**	*(SLMC)*
ஜனாப். எம்.எஸ் உமர்அலி	**மருதமுனை**	*(SLMC)*
ஜனாப். இஸட்.ஏ.எச். றகுமான்	**மருதமுனை**	*(UPFA)*

மேற்படி நான்கு உறுப்பினர்களும் எமது கிராமத்திற்குத் தேவையான பல விடயங்களைச் செய்து வருகின்றனர்.

என்றும் எம் நினைவலையில்...

26-12-2004ல் ஏற்பட்ட சுனாமிப் பேரலையால் உயிர்களை நீத்த ஆசிரியர்கள் :

1. ***முகைதீன்பாவா செய்னுலாப்தீன் - அபுல் ஆசிரியர்***
2. ***ஹச்சு முகம்மது சதுறுத்தீன் (காசிம் ஹாஜியாரின் மகன்)***
3. ***அப்துல் றகீம் அப்துல் மஜீத் (சீனி விதானை றகீமின் மருமகன்)***
4. ***ஆதம்பாவா அப்துல் வதூத் (மர்ழியா ஆசிரியையின் கணவர்)***
5. ***திருமதி. ஈ.ரீ. ஜாபிர்***

இவர்களின் ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திப்போமாக....

- சமூக மேம்பாட்டு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எம். அகமது முகைமின், ஜே.பி.

ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர், செயலாளர், உள்ளகக் கணக்காளர், மாநகர சபை - கல்முனை.

மௌலவி முகம்மது முகைதின் (ஜமாலி) அவர்களின் மூத்த மகன் அகமது முகைமின் 10-06-1948ல் மருதமுனையில் பிறந்தவர். இவர் முகம்மது அமானுல்லாஹ் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் தனது கல்வியை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி, கல்முனை பாத்திமாக் கல்லூரி, குருநாகல கதிரவெலான மகாவித்தியாலயம், குருநாகலை தெலியாகொன்ன மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மேற்கொண்டார்.

1972-12-01ல் கரைவாகு வடக்கு கிராம சபை முகாமைத்துவ உதவியாளர் தரம் ஒன்றினை முதல் நியமனமாகப் பெற்றார். தற்போது தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

மருதமுனை மஸ்ஜிதுல் கபீரின் பொருளாளராக மூன்று வருடங்கள் கடமை யாற்றிய இவர் அதன் கட்டிட நிர்மாணக் குழுவில் முக்கிய உறுப்பினராகவும் இருந்தார்.

இவர் தம் சேவைக் காலத்தில் வீதிகள் அனைத்தும் கடற்கரையோடு இணைக்கப் பட்டும் அகலமாக்கப்பட்டும் இருப்பதற்கு இவர் முக்கிய காரணமாக அமைந்தார். மற்ற எமது வீதிகள் அமைந்திருக்கும் நேர்த்தி, மற்றெந்தக் கிராமத் திலும் காணமுடியாதவொன்று என்பது மறுக்க முடியாது.

அசாதாரண சூழ்நிலைகளில் சமாதான சபையின் முக்கிய உறுப்பினராகவிருந்து கிராமத்தின் சமாதானத்திற்காகப் பாடுபட்டார். இந்திய அமைதிகாக்கும் படையினருடன் (IPKF) நல்ல உறவின் மூலம் பல விடயங்களைச் சாதிக்கக் கூடிய தாகவிருந்தது.

அப்துல் கரீம் சித்தி மர்ளியாவைத் திருமணம் செய்த இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். சமாதான நீதவானாகிய இவர், ஊரின் கடற்கரைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த கொட்டில்களை அகற்றி மக்களின் பாவனைக்காகவும் சுதந்திர நடமாட்டத்திற்காகவும் வழிசமைத்தவர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுக்குச் சொந்தம் - மண்வாசனை

ஒருவருடைய கருத்தினை மற்றவர் புரிந்துகொள்வதற்கான ஊடகம் மொழியாகும். செவிப்புலன் இல்லாதவர்களை நாம் ஊமையர் என்கின்றோம். அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது சைகைகள் (Action) மூலம் தங்கள் கருத்தினை வெளிப்படுத்துவர். அதனையும் சங்கேத மொழி என்கின்றோம். எனவே தனிமையில் வாழ்ந்த மனிதன் சமூகமாக வாழமுற்பட்டபோது ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்வதற்கு மொழியினைக் கண்டுபிடித்தான். அல்லாஹ் நபி ஆதம் (அலை) அவர்களுக்குப் பொருட்களின் பெயர்களை பெயர்களை ஜிப்ரீல் (அலை) மூலம் கற்பித்தான். ஆனால் அந்த மொழியையே உலகமாந்தர்கள் முழுவதும் பேசுவதுமில்லை; எழுதுவதுமில்லை. இன்று உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. அவைகளில் பெரும் பாலானவை எழுத்துருவில் உள்ளவைகளாகும்.

எழுத்துருவிலுள்ள மொழிகள் பேச்சு வழக்கிற்கு வரும்போது சில சொற்கள் திரிபடைகின்றன. அவ்வாறு திரிவடைந்த சொற்கள் பிரதேசத்துக்குப் பிரதேசம் வித்தியாசமாகக் காணப்படுவதனால் அவற்றை மண்வளச் சொற்கள் என்கிறோம். எமது மருதமுனைப் பிரதேசத்தில் வாழையடி வாழையாக வழக்கிலிருந்து வரும் மண்வளச் சொற்கள் மிகவும் அலாதியானவை; வேறு எந்தக் கிராமங்களிலும் காண முடியாதவை.

மிகவும் பிரசித்தமான ஒரு சொல் **"எலவ"** என்பதாகும். 'எலவ' என்பது **'இல்லையா'** எனும் சொல்லின் திரிபாகும். இச்சொல்லினை எமது கிராமத்தின் கற்ற பெண்களும் சாதாரணமாகப் பேசிவருவதை நாம் காணலாம்.

அயினே, ஈனே, கிறுகி ஆகிய சொற்களையும் எம்மவர் சாதாரணமாகப் பேசுவதை நாம் காணலாம். உதாரணமாக வெளியூரவர் ஒருவர் எம்மைச் சந்தித்து இன்னாரை எப்படிச் சந்திக்கலாம் என்று வினவுகிறார். அதற்கு நம்மவர் என்ன கூறுகின்றார் தெரியுமா! "அவர் இப்பதான் **ஈனே** நின்றார். ஒருவேளை வீட்டுக்குப் போயிருப்பார். எதுக்கும் நீங்க இந்த ரோட்டாலே நேரே போங்கள். **அயினே** ஒரு சந்திவரும். அதாலே வலப்பக்கமாக **கிறுகினா** அவருடைய வீடு வரும்" என்பார். தேடி வந்தவருக்கு அம்போவென்று போய்விடும். (அயினே - அங்கே, ஈனே - இங்கே, கிறுகி - திரும்பி).

இன்றுமொரு முக்கியமான சொல் **"அவிய"** (அவர்கள்) என்பதாகும். ஒரு தடவை எனது வெளியூர் நண்பரொருவர் எங்கள் வீட்டுக்குப் போய் "சேர் இருக்கிறாங்களா?" என வினவினார். அதற்கு அவருக்குக் கிடைத்த பதில் **"அவியளைக் காணல்ல"** என்பதாகும். ஒன்றும் புரியாமல் அவர் எங்கள் சந்தியில் நிற்கும் போது அவரைச் சந்தித்தேன். சேர் உங்களை வீட்டுக்குப் போய் விசாரித்தேன். 'அவியளைக் காணல்ல' என்று சொன்னாங்க. உங்களுக்கு 'அவிய' என்றொரு பெயர் இருக்கிறதா? என்று கேட்டார். அப்படியில்லை. இதுதான் விளக்கம் என்று கூறினேன். அவர் இன்றைக்கும் என்னைச் சந்தித்தால் இவற்றை ஞாபகப்படுத்திக் கொண்டு சிரிப்பார். (இதன் தொடர்ச்சி..... பக்கம் 188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையில் அரசியல் அதிகாரம்

அல்-ஹாஜ். அப்துல் றகீம் அப்துல் சத்தார், ஜே.பி.

உலகில் சமூக அமைப்புக்கள் எப்போது தோன்ற ஆரம்பித்ததோ; அன்றிலிருந்தே அரசியலும் தோற்றம் பெற்று விட்டதை நாம் பார்க்கலாம். ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் உதவியை நாடும் போதும், ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தின் உதவிகளை நாடும் போதும்; ஒரு நாடு இன்னொரு நாட்டின் அனுசரணை, ஆதரவினை நாடும்போதும் அரசியல் அங்கே தோற்றம்பெறும். இந்த அடிப்படையிலேயே மருதமுனையின் அரசியல் வரலாறும் தோன்றியிருப்பதைக் காணலாம்.

மருதமுனையில் ஆதிக்குடிகளாக வாழ்ந்த மக்கள் தத்தமது தேவைகளை இன்னொருவரின் உதவியுடன் அல்லது ஆலோசனைகளுடன் நிறைவேற்ற வேண்டிய தேவை ஏற்படும்போது அவர் இன்னொருவரை நாடுவதும் அதேபோல வேறொரு குழுவினரை நாடுவதும் தவிர்க்க முடியாதனவாகின்றன. இந்த அடிப்படையிலேயே அன்று அரசியலைச் செய்து கொண்டிருந்த தலைவர்களாகக் காணப்பட்ட எமது பக்கத்துப் பிரதேசமான களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்களை நாடிச் சென்றதை அவதானிக்கலாம்.

இவ்வாறு மருதமுனைப் பிரதிநிதிகளாகச் செல்பவர்கள், இங்கு செல்வாக்குமிக்கவர்களாகவும் பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாக்களாகவும் அவர்கள் மூலமாகவே கிராமத்தின் தேவைகள், பிரச்சினைகள் என்பன முன்வைக்கப்படுவதும் இங்கு நோக்கத்தக்கது. இதில் முதன் முதலாக குடியிருப்புக் காணிகளும் விவசாயக் காணிகளும் தமது மக்களுக்குத் தேவையென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக அறியமுடிகிறது. அதற்குப் பிரதி உபகாரமாக சட்டசபைத் தேர்தலில் தம்மை ஆதரிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் நம்மவர்களிடம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இது 1945 - 1946 காலப்பகுதியில் இடம்பெற்றதாக நம்பப்படுகிறது. இந்த விடயங்களை அடிப்படையாக வைத்தே எனது இந்த ஆய்வினை மேற்கொள்ள முனைந்திருக்கின்றேன்.

1. தமிழ்த்தேசியத்துடன் இணைந்ததான அரசியல்
2. தேசிய கட்சிகளுடன் இணைந்ததான அரசியல்
3. இனம் சார்ந்த தனித்துவ அரசியல்

இவைகளைத்தவிர மேற்படி மூன்று விடயங்களையும் இருகால கட்டங்களாகப் பிரித்து நோக்குவதன் மூலம் மேலும் அதிகமான விடயங்களைத் தேட முடியும் என்ற நம்பிக்கையும் பிறக்கிறது. இந்த வகையில் 1970ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினை ஒரு கட்டமாகவும், 1977 முதல் இன்று வரையான காலப் பிரிவினை இன்னொரு கட்டமாகவும் நோக்க முற்பட்டிருக்கிறேன். ஏனெனில் முதற்கால கட்டம் எனது காலத்துக்கு முற்பட்ட ஒரு பகுதியாக இருப்பதனால் அவற்றை பல முதியவர்களின் நேர்காணல்கள், அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நூல் மற்றும் பத்திரிகைக் கட்டுரைகள் போன்றனவற்றின் துணையுடன் எழுத் முற்படும் அதேவேளையில்; 1970க்குப் பின்னரான காலகட்டம் அரசியல் மேடைப் பேச்சுக்கள், அரசியல் முன்னோடிகளின் நடவடிக்கைகளை மாணவப் பருவத்தில் அவதானித்த விடயங்களாகவும், குறிப்பாக 1975க்குப் பின்னர் நேரடியாகவே அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொண்டவன் என்ற வகையில் என்னுடைய சொந்த அனுபவங்கள், அவதானிப்புகள், ஞாபகக் குறிப்புகள், நண்பர்கள், இணையத் தளங்கள், அரசியல் தலைவர்களுடனான உறவுகள், உரையாடல்கள் என்பன துணைநின்றன.

ஆகவே தமிழ்த்தேசியத்துடன் இணைந்ததான அரசியல் எவ்வாறு அமைந்தன வென்ற விடயத்திற்கு நாம் இப்போது வரலாம்.

தமிழ்த் தேசியத்துடன் இணைந்ததான அரசியல்

இலங்கையின் முதலாவது சட்டசபை தேர்தல் 1947ஆம் ஆண்டு நடைபெற்ற போதும், இரண்டாவது சட்டமன்ற தேர்தல் 1952ஆம் ஆண்டும், மூன்றாவது பாராளுமன்ற தேர்தல் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற காலங்களிலும் பாராளு மன்றப் பிரதிநிதியைத் தீர்மானிக்கும் சக்தியாக மருதமுனைக் கிராமம் முன்னின் றுழைத்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்புத் தொகுதியோடு இணைந்திருந்த ஒரேயொரு முஸ்லிம் கிராமமான மருதமுனை மக்கள் யாரை ஆதரிக்கின்றனரோ அவரே சட்டமன்றப் பிரதியாக தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கிறார்கள். இந்த வெற்றிக்குக் காரணங்களாக இக்கிராமத்தின் ஒற்று மையும் பள்ளிவாசல்களின் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படும் மக்களின் பண்பும் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன. 1952ஆம் ஆண்டு சட்டபைத் தேர்தலில் இக்கிராமத்தவர்கள் திரு. இராசமாணிக்கம் அவர்களின் வெற்றிக்காக உழைத்தமைக்காக 1953ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கல்லோய குடியேற்றத் திட்டத்தில் நம்மவர்களுக்கு 5ம் குளணி, 4ம் குளணி போன்ற பிரதேசத்தில் அதிகளவான குடியிருப்பு, மற்றும் விவசாயக் காணிகளை வழங்குவதற்குக் காலாக அவர் இருந்துள்ளமை நினைவுகூரப் படவேண்டியது.

1950ஆம் ஆண்டின் பின்னரே இளைஞராகவிருந்த மசூர்மௌலானா அவர்களின் அரசியல் பிரவேசம் தமிழ்த்தேசிய அரசியலோடு இணைந்ததாக முன்னெடுக்கப்படுகிறது. இவரது அரசியல் பிரவேசமும் நமது கிராமத்து தலைவர்களின் ஆலோசனைகளாகவும், அறிவுரைகளாகவும் இருந்திருக்கின்றன. மேலும் அவரது அரசியல் பிரவேசம் கிராமத்தின் ஒரு சிலரைத்தவிர ஏகமனதான வரவேற்பினைப் பெற்றிருந்தது இங்கு கூர்ந்து நோக்கப்பட வேண்டியது. 1960ஆம் ஆண்டு மருதமுனை கல்முனைத் தொகுதியோடு இணைக்கப்படல் வேண்டும் என்ற எம்.எஸ். காரியப்பரின் வேண்டுகோளை தேர்தல் நிர்ணய ஆணைக்குழு ஏற்றுக்கொண்டது. ஜனாப் மசூர்மௌலானா அவர்கள் 19-03-1960ம் ஆண்டு நாலாவது பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் கல்முனைப் பிரதிநிதியாக களமிறங்கியபோது எமது கிராமம் அவருக்காகத் தமது 90 வீதமான வாக்குகளை வழங்கிய அதேவேளையில் தமிழ்மக்களும் அதிகூடிய வாக்குகளை அன்னாருக்கு வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதும் வெறும் 212 வாக்கு வித்தியாசத்தில் எம்.எஸ். காரியப்பர் இத்தேர்தலில் வெற்றி பெறுகிறார். மசூர்மௌலானா அவர்களின் இத்தோல்வி மருதமுனையின் தோல்வியாகவே நோக்கப்படல் வேண்டும். ஏனெனில் இத்தோல்வியின் தொடர் SLMCயின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ஜனாப். மருதூர்க்கனி அவர்களின் நியமனம் வரையிலான ஒரு பாரிய இடைவெளியை ஏற்படுத்தியதை இலகுவில் நாம் மறந்துவிட முடியாது. இத்தோல்விக்கு அவரது குடும்பத்தின் ஒரு பகுதி யினரே காரணமாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாகப் பேசப்பட்டதையும் நாம் அறிய முடிகிறது.

அதே ஆண்டு 1960-07-19இல் நடைபெற்ற இடைத்தேர்தலின் போது மசூர்மௌலானா அவர்கள் ஜனாப். எம்.சி. அகமது அவர்களுக்குத் தமது வேட்புரிமையை விட்டுக் கொடுத்த தானது ஒரு வரலாற்றுத் தவறாக நோக்கப் படல் வேண்டும். அதன் பின்னர் 22-03-1965இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 491 வாக்கு வித்தியாசத்தில் மசூர்மௌலானா அவர்கள் தனது இரண்டாவது தோல்வியினை சுமக்க வேண்டியதாயிற்று.

இதற்கிடையில் கல்முனையின் பாராளுமன்றப் பிரதிநிதியான எம்.எஸ். காரியப்பர் அவர்கள் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டினால் பதவியிறக்கப்பட்ட மையால் 1968இல் ஒரு இடைத்தேர்தல் நடைபெற்றது. அதிலும் மசூர் மௌலானா அவர்கள் போட்டியிட்டு 1254 வாக்குகளால் எம்.சீ. அகமது அவர்களிடம் தோல்வியைத் தழுவிக் கொண்டமையானது அன்னாரின் வெற்றி வாய்ப்புக்கள் தூரமாகிக்கொண்டு சென்றதை நாம் அவதானிக்கலாம். மசூர் மௌலானா அவர்களின் இத்தேர்தல் வெற்றிக்காக நாட்டின் பெரும்பாலான அரசியல் தலைவர்கள் இங்கு பிரச்சாரப் பணியில் ஈடுபட்டமை மவ்லானா அவர்களை எவ்வாறாயினும் வெற்றிபெறச் செய்யவேண்டும் என்பதில் அவர் களுக்கிருந்த கரிசனையைக் காட்டி நிற்கிறது.

இத்தேர்தலில் களமிறங்குவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் மருதமுனை மகன் ஒருவர் நாட்டின் மூதவை உறுப்பினரான வரலாறு பதியப்பட வேண்டிய வொன்றாகும். கல்குடாவைச் சேர்ந்த மு. மாணிக்கம் என்பவரின் மரணத்தினால் ஏற்பட்ட வெற்றிடம் மசூர்மௌலானா அவர்களினால் நிரப்பப்பட்டதாயினும் அதன் ஆயுட்காலம் வெறும் 33 நாட்களாகவே இருந்தமையையும் இங்கு சுட்டிக்காட்டல் வேண்டும். 02-08-1967 முதல் 15-10-1967 வரையிலான காலப் பகுதியே அவை.

ஏறக்குறைய 15 வருடங்கள் தமிழ்த்தேசியத்திற்காக தன்னை அர்ப்பணித்த மசூர்மவ்லானா அவர்கள் வடக்கு கிழக்கு மக்களால் பெரிதும் கவரப்பட்ட சிறந்த பேச்சாளராகவும் நாவன்மையுடையவராகவும் விளங்கியதோடு இக்கிராமத்தின் அபிவிருத்திப் பணிகளிலும் கவனம் செலுத்தினார். கிராமத்திற்கு மின்சாரம் பெற்றுக்கொடுத்தது முதல் கல்வி, விளையாட்டு, கலாசாரம், வர்த்தகம் என இப்பணிகள் நீண்டுகொண்டு செல்லும். இவரால் நன்மையடைந்த பலர் இன்றும் அவரை நேசிப்பவர்களாகவும் நினைவுகூர்பவர்களாகவும் இருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரை ஒரு பாராளுமன்றப் பிரதிநிதியாகக் காணவேண்டும் என்ற முனைப்பு எல்லோரிடமும் இருந்தது. அதற்காகத் தம்மை அர்ப்பணித்த பலர் எமது கிராமத்தில் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். மவ்லானா அவர்களுக்கு வாகனம் ஒன்றை வாங்கிக்கொடுப்பதற்காகப் பலர் ஊர் முழுவதும் வசூலில் இறங்கிய சம்பவம் அவர் மீது மக்கள் கொண்டிருந்த அன்பின் அடையாள மாகவே பார்க்கப்படுகிறது.

இவ்வேளையில்தான் 1969இல் பெரியநீலாவணைவாசி ஒருவரால் மீராமுகைதீன் என்ற எமது ஊர் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனால் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டதும் போலீஸ் வாகனங்கள் எமது இளைஞர்களால் தாக்கப்பட்டதும் ஊரடங்கு உத்தரவு போலீசாரால் போடப்பட்டதும் எம்மவர்களில் பலர் கைதுசெய்யப்பட்ட சம்பவங்களும் இன்னும் எமது மக்களால் பேசப்பட்டு வருகின்றன. இதன்போது நாங்கள் ஒன்பதாம் ஆண்டில் அல்-மனாரில் கல்வி கற்றுக்கொண்டிருந்தோம். எங்களது வகுப்பாசிரியராகவிருந்த அமீன் சேர் அவர்களின் வீரப்பேச்சும் அவ்விளைஞர் களைத் தூண்டி கல்லால் அடியுங்கள் என்று பெரிய சப்தமிட்டு முழங்கியதும் சீனிப்பிள்ளையின் ஹோட்டலுக்கு முன்னால் வீதி செப்பனிடுவதற்காகப் போடப்பட்டிருந்த கற்களினால் ஜீப் வண்டி தாக்கப்பட்டதும் இன்னும் எத்தனையோ எதிர்ப்புக்கள், கைதுகள் என இரண்டு மூன்று நாட்கள் நீடித்தமையும் வீடுகளில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் தூங்கிக்கொண்டிருந்தவர்கள் எனப் பலர் கைதுசெய்யப்பட்டு வண்டியில் ஏற்றப்பட்டு பின்னர் விடுதலையான சம்பவங்களும் மறக்க முடியாதன.

ஊர் இளைஞரைச் சுட்டவர் இனங்காணப்பட்டு நீதிமன்ற வழக்கொன்றும் பதிவானது. இவ்வழக்கில் சுட்டவரின் சார்பில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் வழக்காடியமை. அதுவும் மசூர்மவ்லானா அவர்களின் வேண்டுகோளையும் மீறி வழக்காடியமை தமிழ்த் தரப்பினருக்கும் மவ்லானா அவர்களுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்படக் காரணமாக விருந்தது. இந்த விரிசலைப் பயன்படுத்திக் கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி அப்போதிருந்த பிரதமர் டட்லி சேனனாயக்க அவர்களின் ஆலோசனையின் பேரில் மசூர்மவ்லானா அவர்களைத் தமது கட்சியினுள் உள்வாங்கும் விடயத்தில் வெற்றிகண்டது. தமிழ்த் தேசியத்துக்காகப் பாடுபட்டுழைத்த ஒரு முஸ்லிம் மகன் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து அக்கட்சியின் உயர்ச்சிக்காகவும் வெற்றிக்காகவும் உழைக்கும் நிலை உருவாகியது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்ததான அரசியல்

நாடறிந்த ஒரு அரசியல்வாதி, சிறந்த பேச்சாளன் என்ற விஷேட தகுதிகளை யுடைய மவ்லானா அவர்கள் மிக விரைவிலேயே அக்கட்சியில் செல்வாக்குமிக்க ஒருவராக இனங்காணப்பட்டது மட்டுமல்லாமல் இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றத் தேர்தல் வேட்புமனுக்கள் கோரப்பட்ட இவ்வேளையில் ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனை வேட்பாளராக ஜனாப். ஏ.ஆர். மன்சூர் அவர்களைக் களமிறக்குவதற்கும் மவ்லானா அவர்கள் கால்கோளாய் அமைந்தார். இத்தேர்தல் 27-05-1970இல் நடைபெற்றபோது முழு மருதமுனையும் மவ்லானா அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளை ஏற்று ஜனாப் மன்சூர் அவர்களுக்கு வாக்களித்த போதிலும் 955 வாக்குகள் வித்தியாசத்தில் ஜனாப் அகமத் அவர்களிடம் தோல்வி கண்டார்.

மருதமுனைக்கும் அகமத் அவர்களுக்குமிடையிலான உறவுகள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டதும், குறிப்பிட்ட ஒரு சிலர் மாத்திரமே அவரிடம் உறவாடும் நிலையுமே அப்போது காணப்பட்டது. எமது படித்த இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கள் மற்றும் ஊரின் அபிவிருத்திகள் என்பன மிகவும் கீழ்மட்டத்தில் இருந்தன. அமைச்சர் ஒருவர் மருதமுனைக்கு வருவதென்பதைக்கூட பொறுக்கமாட்டாத ஒரு பிரதிநிதியாகவே அகமத் அவர்கள் காணப்பட்டார்கள். அப்போது கல்வி அமைச்சராகவிருந்த டாக்டர் பதியுதீன் மஃமூத் அவர்களை, அவர்களால் அல்-மனாருக்கு வழங்கப்பட்ட பதியுதீன் மஹ்மூத் மண்டப கட்டிடத்தைத் திறந்து வைப்பதற்குக்கூட அவர் அனுமதிக்கப்படாமல் வீதியில் நின்று வாகனத்தில் இருந்தபடியே திரைநீக்கம் செய்த காட்சி மருதமுனை மக்களால் மறக்க முடியாத ஒரு சம்பவமாகவே கருதப்படுகிறது. மேற்படி தடைகளகற்றி மசூர்மவ்லானா வீதியின் பிரதான வீதியடியில் (தற்போதைய On Going) ஒரு மாபெரும் வரவேற்பைக் கல்வி அமைச்சருக்கு வழங்கியது மட்டுமல்லாமல் 5 பவுண் தங்கப் பதக்கம் அணிவிக்கப் பட்டதும் அமைச்சர் அவர்கள் களிப்பின் உச்சிக்கே சென்ற விடயங்களும் அன்று மவ்லானா அவர்கள் ஆற்றிய வித்தியாசமான உரையும் இன்றும் எமக்குப் பசுமையான நினைவுகளாகவே உள்ளன. இவ்விழா ஏற்பாட்டில் அதிக ஈடுபாடு காட்டியவர்கள் மர்ஹூம் அமீன் சேர் தவிர மற்றும் பலர் இந்த மண்ணில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சுருக்கமாகக் கூறினால் 1970 முதல் 1977 வரையிலான காலப்பகுதி எமதூரைப் பொறுத்த மட்டில் ஒரு கடினமான காலகட்டமாகவே கழிந்தது. ஆட்சியிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் காரணமாக எமது நெசவுத் தொழிலுக்கு ஒரு எழுச்சியும் முன்னேற்றமும் இக்காலப்பகுதியில் நிலவியதனால் ஓரளவேனும் அரசியல் நெருக்கடிகளிலிருந்து விடுதலை கிடைக்கக்கூடிய ஒரு நிலை காணப் பட்டது.

பின்னர்தான் 1977ல் தேர்தல் அறிவிக்கப்படுகிறது. இதிலும் ஜனாப். மன்சூர் அவர்களே UNPயின் கல்முனை வேட்பாளராகக் களமிறங்குகிறார். 21-07-1977ல் நடைபெற்ற இத்தேர்தலில் UNP கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வெற்றிவாகை சூடியது மட்டுமல்லாமல் ஏ.ஆர். மன்சூர் அவர்களும் அமோக வெற்றியினைப்பெற எமது மருதமுனை தனது அதிகபட்ச ஆதரவினை வழங்கியது. அதன் பயனாக மன்சூர் அவர்கள் தனது பதவிக்காலத்தில் பல அபிவிருத்திகளை எமது கிராமத்துக்கு வழங்கியது மட்டுமன்றி அதிகமான இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பிற்கும் ஏற்பாடுகள் செய்துகொடுத்தார். கல்முனைப் பிரதிநிதியின் செயற்பாடுகள், சிறந்த முறையில் இருந்தபடியாலும் நேர்மையாக நடந்துகொண்டமையினாலும் மவ்லானா அவர்களின் உதவியோ ஒத்தாசையோ தேவைப்பாடோ அவசியமில்லாத ஒரு நிலை காணப்பட்டது மட்டுமல்லாமல் மசூர்மௌலானா அவர்களுக்கும் மன்சூர் அவர்களுக்கு மிடையில் ஒரு பனிப்போர் நிலவியமையையும் இங்கு நினைவுகூர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டங்களில்தான் அரசுகள் சிறுபான்மை மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் மற்றும் காணிப் பிரச்சினைகள் போன்றனவற்றினால் இனமுரண்பாடுகள் தோற்றம் பெறுவதும் இதற்கான பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் தரப்புக்கான அனுமதிகள் மறுக்கப்படுவதும் முஸ்லிம்களுக்கான ஒரு கட்சியின் அவசியத்தை உணர்த்தின. இதன் பெறுபேறாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெறுகிறது. இக்கட்சி ஆரம்ப கர்த்தாக்களில் எமது மகன் மருதூர்க்கனி அவர்களும் ஒருவராக இருப்பதனாலேயே மருதமுனை அரசியல் வரலாற்றில் இவ்விடயம் இடம்பிடித் திருக்கிறது. இனி SLMCக்கும் எமதூருக்கும் உள்ள உறவுகள் தொடர்புகள் என்பன போன்றவற்றை ஆராய முற்படுகிறேன்.

மருதமுனையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரவேசம்
- எனது சாட்சியம் -

மருதமுனை அரசியல் வரலாற்றைக்கூற அல்லது எழுத விரும்பும் ஒருவர் மசூர் மவ்லானா அவர்களின் பெயரைத் தவிர்த்து எவ்வாறு எழுத முடியாதோ அதேபோல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வரலாற்றைக்கூற, எழுத முற்படுபவர் மர்ஹூம் மருதூர்க்கனி அவர்களின் பெயரையும் தவிர்க்க முடியாது. மருதூர்க்கனி அவர்கள் மருதமுனை மகன் என்ற வகையில் SLMC இன் வரலாறு மருதமுனையோடு பின்னிப் பிணைவதும் தவிர்க்க முடியாதது.

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் நீண்ட நாட்களாக நடைபெறாமல் இருந்து 1987ல் ஐ.தே.கட்சி அரசினால் கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக வேட்பு மனுக்கள் கோரப்பட்டதும், இத்தேர்தல்களில் போட்டியிடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்ற அறிவிப்பை விடுதலைப்புலிகள் பகிரங்கமாக அறிவித்ததும் நாம் அறியாததல்ல. இத்தேர்தலை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படாத வேளையிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு எதிர்கொண்டது என்பதை நாம் சற்று விரிவாக நோக்க வேண்டும்.

1981ஆம் ஆண்டு காத்தான்குடியில் அகமட்லெப்பை அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் அரும்புவிடத் துவங்கி மெதுமெதுவாகத் தன்னைக் கிழக்கின் முஸ்லிம் கிராமங்களுக்குள் அறிமுகம் செய்து வரத் துவங்கியது. எமதூரிலும் அது எவ்வாறு அறிமுகமாகியது என்பது ஒரு சுவையான நிகழ்வு.

சம்சுல் இல்ம் மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிக்கொண்டிருந்த காலம். வழமையாக அதிபர் காரியாலயத்திற்கு முன்னால் நாங்கள் கூடுவது வழக்கம். இதை "மணல் சங்கம்" என்று அழைப்போம். இருந்தாற்போல் இருவர் எம்மை விட்டும் எவ்வாறோ விலகிவிடுவார்கள். மருதூர்க்கனியும் சமது அதிபர் ஆகிய இருவரும் தான் அவர்கள். பல நாட்கள் இவ்வாறு நடைபெற்றது எமக்கு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியதனால் நாங்கள் சிலர் இவர்கள் எங்கு செல்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களைத் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குத் தெரியாமல் சென்றோம். அப்போது பஞ்சாப் மாளிலம் என அழைக்கப்பட்ட பிரதேசத்தில் மிஃழார் தலைமையில் ஒன்றியம் என்ற ஒரு அமைப்பு இயங்கிக் கொண்டிருந்தது. இதில் மிஃழாருடன் லத்தீப், தோழர், ஹூசைன், றசாக் போன்ற பலர் இருந்தனர்.

அவர்களைச் சந்திப்பதற்காகவே இவ்வாறு ஒழித்து வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு என்ன பேசப் போகிறார்கள் என்ற விடயத்தை அவதானித்தோம். அப்போதுதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய விளக்கங்களையும் செய்திகளையும் அறிந்தோம். இது 1984ம் ஆண்டளவில் என்று நினைக்கின்றேன். இதன் பின்னர் நாங்கள் எமது மணற் சங்கத்தில் இந்த விடயத்தை எடுத்துக் கூறியபோது, எச்.எல். ஜமால்டீன் SP, வரி மதிப்பீட்டாளர் ஏ.எல்.எம். முனாஸ் போன்றவர்கள் தமது ஆதரவினைத் தர ஆயத்தமாக இருப்பதை அவதானித்தோம். இவ்வாறு மணற் சங்கத்தில் தினமும் பேசு பொருளாக SLMC மாறியது.

இவ்வாறு கட்சியின் விளக்கங்கள் மெதுமெதுவாகச் சென்று கொண்டிருக்கும் போது தான் 1986 நவம்பரில் கொழும்பில் கட்சியின் மகாநாட்டை நடாத்துவது என்ற தீர்மானம் கட்சியின் தலைமைத்துவத்தால் எடுக்கப்பட்டு, எமதூரில் இருந்து ஒரு பஸ் வண்டியில் இருபதுக்கும் அதிகமான இளைஞர்கள் சென்றது நினைவுறுத்தப்பட வேண்டியது. இம்மகாநாடு சிறப்பாக நடைபெற்றது மட்டுமல்லாமல் SLMC ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில்தான் நான் ஏற்கனவே கூறிய கிழக்கிலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை LTTE இன் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நடாத்துவது என்ற முடிவை ஜே.ஆர். அரசு மேற்கொள்கிறது.

மேற்படி தேர்தலைச் சந்திப்பது என்று SLMC முடிவெடுத்த காரணத்தினாலும், கட்சி இன்னும் பதிவுசெய்யப்படாத காரணத்தினாலும் தராசுச் சின்னத்தில் போட்டியிடுவது என்ற முடிவுக்கு வந்து வேட்பாளர்கள் தேடும் படலம் ஆரம்பமானது. எமதூரில் மூன்று வேட்பாளர்கள். யாரைப் போடுவது? எவ்வாறு அவர்களை இனங்காணுவது? பல நாட்கள் கூடுவதும் கலைவதும். இறுதியாக கடற்கரையில் தற்போதைய லைட் ஹவுசுக்குப் பக்கத்தில் அஷ்ரஃப் தலைவர், மருதூர்க்கனி, என்.எம்.எம். இஸ்மாயில், ஹம்தூன் G.S., சத்தார் ஆகிய நாங்கள் இரவு ஏழு மணிக்குக் கூடுகிறோம். அங்கு அபூபக்கர் (Hi Choice), அகமட் லெப்பை (ஐயூப் ஹாஜியாரின் மச்சினன்), வாஹிட் சேர், முனாஸ் ஆகிய நால்வரைக் கண்டு அவர்களின் விருப்பத்தை அறிவது என்றும் முடிவானது. இதன் பிரகாரம் நேரத்தைக்கூடப் பொருட்படுத்தாது இவர்களது வீடுகளுக்குச் சென்று விருப்பத்தினைக்கேட்க, அவர்கள் மறுக்க, மேலும் கவலையாகிவிட்டது. இரவு ஒரு மணியையும் தாண்டி கடற்கரையில் அதே இடத்தில் மீண்டும் கூடி இரவு நான்கு மணிவரை பேசிப்பேசி இறுதியில் நான் கையூமிடமும், மருதூர்க்கனி அவர்கள் நாபியிடமும், என்.எம்.எம். இஸ்மாயில் அவரது மாமா டைமீராலெப்பை அவர்களிடமும் பேசுவது என்ற முடிவோடு கலைந்தோம். அவர்களே வேட்பாளர்கள் என்பது அடுத்த நாள் முடிவாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலில் போட்டியிடுவது என்றானதன் பின் அதற்கான பிரச்சாரங்கள் கட்சிக்கு ஆள் சேர்த்தல், கட்சிக் கிளையமைத்தல் போன்றன செய்யப்படல் வேண்டுமே. இதற்காக ஒரு கூட்டத்தினை ஏற்பாடு செய்வது என்ற பணியில் எனது தம்பி ஏ.ஆர்.ஏ. ஹலீம் அவர்களின் இல்லத்தில் ஒரு கூட்டம் என்னால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் எனக்குதவியாக எனது தம்பிமார்களான கலீல், வஹாப், தடங்கல் தமீம், ஏ.ஆர்.எம். சித்தீக், எஸ்.ஐ.ஏ. சத்தார் போன்றவர்கள் அழைப்பிதழ் மற்றும் கூட்ட ஒழுங்குகள் ஏற்பாட்டைக் கவனித்துக் கொண்டனர். உரையாற்றுவது, தலைமை தாங்குவது யார் என்ற பிரச்சினை. ஆட்களோ மிகச் சொற்பம். ஏறத்தாழ ஆண்கள் பெண்கள் என முப்பதுக்குட்பட்டவர்கள். அதிலும் எனது குடும்பத்தவர்கள் அதிகம். இவ்வேளையில்தான் சத்தார் எம். பிர்தௌஸ் வந்து சேர்ந்தார். எனவே அவரைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும்படி வேண்டிக்கொண்டேன். அதை ஏற்ற அவர் அக்கடமையைச் செய்தது ஒரு வரலாற்றுப் பதிவாதல் வேண்டும். மட்டுமல்லாமல் எமது பிரதேசத்திலேயே ஒரே மேடையில் பல கட்சியினர் பேசும் ஒரு நடைமுறையை ஏற்படுத்த எண்ணி இப்போது லைட் ஹவுஸ் இருக்கும் இடத்திற்கு முன்னாலுள்ள தௌபீக்கின் ஹோட்டலுக்கு வட புறத்தில் ஒரு மேடையமைத்து அதில் தேர்தலில் களமிறங்கிய UNP மற்றும் SLMC வேட்பாளர்கள் பேசுவது என்ற அடிப் படையில் முறையே மசூர்மௌலானா அவர்களும் மருதூர்க்கனி அவர்களும் தத்தமது கொள்கைகளை வெளியிட்டு உரையாற்றினார்கள். இத்தனை ஏற்பாடுகளுக்கு மத்தியிலும் தேர்தல் இடை நிறுத்தப்பட்டது.

மருதமுனையில் SLMCஇன் கட்சிப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. படிப்படியாக 1988-02-11ம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தினால் கட்சி பதிவு செய்யப்பட்டு மரச் சின்னமும் வழங்கப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தல்

29-07-1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதால் அதன் ஓர் ஏற்பாடாகிய மாகாண சபையில் இலங்கையிலுள்ள வடகிழக்கு ஒன்றிணைந்த எட்டு மாகாணங்களுக்குமான தேர்தல்கள் நடாத்தப்பட்டன. இதில் விசித்திரம் என்னவென்றால் எந்தப் பிரதேசத்தின் பிரச்சினைகள், அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்படல் வேண்டும் என்பதற்காக மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்டதோ, அந்தப் பிரதேசமான வடகிழக்கிற்கே இறுதியாக 19-11-1988இல் இத்தேர்தல் நடாத்தப்பட்டது. இதில் மருதமுனையின் வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், எமது மக்கள் 99 வீதமான வாக்குகளை ஸ்ரீ.ல.மு.காங்கிரசுக்கு வழங்கியிருந்த போதிலும் அம்பாரை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒன்பது உறுப்பினர்களில் ஒருவராவது எமது மருதமுனை மகனாக இருக்கவில்லை என்பதுதான். மருதமுனை மகன் மசூர் மவ்லானா அவர்களுக்கு ஐ.தே.கட்சி, அவர்களது மாகாண சபைப் பிரதிநிதியாக நியமித்து கௌரவித்தமை இந்த வரலாற்றில் பதிவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுத் தேர்தல்

1989ம் ஆண்டு இலங்கையின் ஒன்பதாவது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தல் 15-02-1989இல் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டதால் அதன் பிரச்சாரப் பணிகள் மற்றும் தேர்தல் வேலைகள் மருதமுனை யிலும் முன்னெடுக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மசூர்மவ்லானா அவர்கள் களமிறங்கியிருந்தது மட்டுமல்லாமல் அதன் கோட்டை என வர்ணிக்கப் பட்ட மருதமுனையில் தேர்தல் பணிகள் மிகவும் சிரமமான ஒரு விடயமாகவே காணப்பட்டது. இருந்த போதிலும் எமது தேர்தல் பணிகள் பலநாட்கள் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் சிறப்பாக முன்னெடுக்கப் பட்டமை இங்கு நினைவு கூரப்பட வேண்டியதே. இதற்காகப் பெரிதும் உழைத்த நாபி நானா, ஹம்தூன் C.S., என்.எம். இஸ்மாயில், நிஃமதுல்லா CDO, நெய்னா முகம்மது, கையூம், மஆரிப், அமீறுல் அன்ஸார் மௌலானா, கலீல், கரீம், நூறுல் பவுஸ், காசிம், மிஃழார், றபீஉத்தீன், நஸீர், ஹபீபுள்ளாஹ், முனாஸ் போன்றவர்களுடன் இன்னும் பலர்... இன்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். ஏனென்றால் இக்காலத்தில் UNP கோட்டைக்குள் நாங்கள் வாக்குகள் பெறுவதென்பது மிகமிகக் கடினமான ஒன்றாகவிருந்தது.

ஒருவாறு தேர்தல் முடிவுற்றது. நாடு முழுவதிலும் SLMC 202016 வாக்குகள் பெற்று மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களையும் தேசியப்பட்டியல் மூலம் ஒன்றுமாக மொத்தம் நான்கு பாராளுமன்றப் பிரதிநிதிகளைப் பெற்றுக் கொண்டது. இதில் குறிப்பாகப் பார்க்கப்பட வேண்டிய விடயம் ஒன்றுண்டு. அதுதான் அம்பாரை மாவட்டத்தில் மூன்று பாராளுமன்றப் பிரதிநிதிகளைப் பெற மிகச் சொற்பமான வாக்குகளே தேவையாயிருந்தன. இந்த வாக்கு களை மருதமுனை வழங்கியிருந்தால் மூன்று ஆசனங்களைப் பெற்றிருக்கலாம். வெறும் ஆயிரம் வாக்குகளை மட்டுமே மருதமுனை SLMCக்கு வழங்கியிருந்தது. அதனால் ஒரு பாராளுமன்றப் பிரதிநிதியையே பெறமுடிந்தது என்ற குற்றச்சாட்டாகும்.

உண்மையில் இக்குற்றச் சாட்டை மருதமுனை மக்கள் மீது மாத்திரம் சுமத்துவது பொருத்தமல்ல. ஏனென்றால் மருதமுனையின் அரசியல் தந்தை என வர்ணிக்கப் பட்ட மசூர்மவ்லானா அவர்களை ஒரு M.P.யாகக் காணவேண்டும் என்பதில் இம்மக்கள் வெறியாகவே இருந்தார்கள் என்பது பொய்யல்ல. இதன் காரணமாக இம்மக்கள் அதிகமான வாக்குகளை அவருக்கு வழங்கியதும் ஆச்சரியமான ஒன்றல்ல. அதேவேளையில் நிந்தவூர், பொத்துவில் ஆகிய கிராமங்களும் UNPக்கு அதிகளவு வாக்குகளை வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

கல்முனைப் பிரதேச சபையின் தேர்தல் களத்தில் புதிதாக கட்சிப் பணிகளில் பங்கெடுத்துக் கொண்ட சகோ. ஐ.ஏ. ஹமீட் அவர்களை இத்தேர்தலில் களமிறக்க நாம் முடிவுசெய்தோம். 1994ல் நடைபெற்ற இத்தேர்தலில் அறுபது வீதமான மருதமுனை மக்கள் SLMCக்கு வாக்களித்தமை, இதனால் அதிகூடிய விருப்பு வாக்குகள் ஹமீட் அவர்களுக்குக் கிடைத்தமை, சகோதரர் எஸ்.எல்.எம். றபீக் அவர்கள் SLMCஇன் மற்றொரு உறுப்பினராகத் தெரிவானமை என்பன வரலாற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும் அதேவேளையில் UNP சார்பில் சுபைர் ஆசிரியர், அமீறுல் அன்ஸார் சட்டத்தரணி ஆகிய இருவரும் தெரிவானமை வரலாற்றுப் பதிவாகின்றன. கல்முனைத் தொகுதி முழுவதையும் உள்ளடக்கியதாக முதன்முதலாக நடைபெற்ற இத்தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற ஐ.ஏ. ஹமீட் தவிசாளராகக் கட்சியினால் நியமிக்கப்பட்டார். தலைவருக்கு யாரையாவது நியமிக்கக்கூடிய ஒரு அதிகாரமிருந்த போதும்கூட மருதமுனை மகன் ஒருவரை நியமித்தமை வரலாற்றில் பதியப்பட வேண்டியது. இதன் பின்னரே SLMC இன் செல்வாக்கு மருதமுனையில் படிப்படியாக மேலோங்கி வருவதை அவதானிக்க முடியும்.

பொதுத் தேர்தல்

16-08-1994இல் நடைபெற்ற இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத் தேர்தலில் SLMC தனது மரச்சின்னத்தில் போட்டியிட்டு ஏழு பாராளுமன்றப் பிரதிநிதிகளைப் பெறுவதும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் பெற்ற 105 ஆசனங்களுக்கு வலுச்சேர்ப்பதற்கான எமது ஏழு ஆசனங்கள் தேவைப்படுவதும் அதன் மூலம் தலைவர் அவர்கள் அமைச்சராவதும் இது மக்கள் மத்தியில் பல மனமாற்றங்களை ஏற்படுத்தியதும் இயல்பானதே.

1989ஆம் ஆண்டு முதல் 1994 வரையான காலப்பகுதியில் முஸ்லிம்கள் அபிவிருத்தி களையோ, பதவி பட்டங்களையோ எதிர்பார்க்காமல் தலைவர் அஷ்ரஃப் அவர்களால் இந்த மக்களுக்காகப் பேசப்படுகின்ற விடயங்களையும் பாராளுமன்றத்தில் அவரது உரையினையும் ஆசையுடன் பார்ப்பவர்களாகவே மக்கள் காணப்பட்டனர்.

1994இல் சக்திமிக்க அமைச்சரானதும் மக்களின் தேவைப்பாடுகளும், ஆசைகளும் கூடுகின்றன. எனவே கிராமங்களின் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் பழுக்கள் கூடுகின்றன. தவிசாளராக நமது மகன் ஒருவர் இருப்பதுவும் எமது அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இருந்தது. மேலும் ஒரு சக்தியாக தலைவர் அஷ்ரஃப் அவர்களின் கிழக்கு மாகாண இணைப்பதிகாரியாக சகோதரர் எஸ்.எம். அப்துல்லா BOC நியமனம் பெறுவதன் மூலம் இக்கிராமத்தின் அபிவிருத்தி வேலைவாய்ப்புக்களில் அதிகளவு பங்கினைப் பெறுவது சாத்தியமாயிற்று. இந்த அபிவிருத்திப் பணிகள் வேலைவாய்ப்புகள் தொடர்பில் அல்-மருதமுனை சஞ்சிகையின் 1998ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதப் பிரதி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. மேற்படி கட்டுரையை இவ்விடத்தில் தருவது பொருத்தமானதே.

பிரதேச சபை வேலைத்திட்டங்கள்

வீதி அமைப்பும், பராமரிப்பும் வடிகால் அமைப்பும் - ரூபா 14,17,000.00

இதில் அடங்கும் வீதிகள் பின்வருமாறு :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறாணியா வீதி வடிகாலமைப்பு முதலாம் கட்டம் - 1994
அக்பர் கிராம மத்திய வீதி அமைப்பு - 1994
ஸம் ஸம் வீதி பராமரிப்பு - 1994
ஹாஜியார் வீதி பராமரிப்பு - 1995
மக்பூலியா வீதி பராமரிப்பு - 1995
பெரியநீலாவணை கானடி வீதி பராமரிப்பு - 1995
மக்பூலியா பள்ளிவாசல் முன் வீதி அமைப்பு (மக்பூலியா புரம்) - 1995
ஆஸ்பத்திரி முன் வீதி அமைப்பு (மக்பூலியா புரம்) - 1995
பதுரியா வீதி பராமரிப்பு - 1995
பெரியநீலாவணை முஸ்லிம் வித்தியாலய முன் வீதி - 1995
அல்-மனார் வீதி, கிழக்குப் பராமரிப்பு - 1995
பாண்டிருப்பு ஹாஜியார் வீதி 1ம் குறுக்குத்தெரு - 1995
மக்காமடி வீதி, கிழக்கு - நிர்மாணம் - 1996
அல்-ஹம்றா வீதி பராமரிப்பு - 1996
பறக்கத்துள்ளா ஹாஜியார் வீதி பராமரிப்பு - 1996
அக்பர் கிராம, கிராமோதைய வீதி பராமரிப்பு - 1996
பெரியநீலாவணை ஸ்டார் வீதி பராமரிப்பு - 1996
ஹாஜியார் வீதி, 5ம் குறுக்குத்தெரு பராமரிப்பு - 1996
ஹிஜ்றா வீதி, 3ம் குறுக்குத்தெரு பராமரிப்பு - 1996
அல்-ஹம்றா வீதி, பாடசாலைப் பகுதி பராமரிப்பு - 1996
ஜாயா வீதி, மேற்கு பராமரிப்பு - 1996
மரைக்கார் வீதி பராமரிப்பு - 1997
அல்-மனார் வீதி, மேற்கு பராமரிப்பு - 1997
பெரியநீலாவணை மாவடி வீதி பராமரிப்பு - 1997
ஹிஜ்றா வீதி பராமரிப்பு - 1997
மஸ்ஜிதுல் கபீர் - முன் வீதி பராமரிப்பு - 1997
ஆலிம் ஹாஜியார் வீதி பராமரிப்பு - 1997
பாண்டிருப்பு அல்-மினன் பராமரிப்பு - 1998
ஸம் ஸம் வீதி - கிழக்கு பராமரிப்பு - 1998
மஸ்ஜிதுன் நூர் முன் வீதி பராமரிப்பு - 1998
மஸ்ஜிதுன் நூர் முன் வீதி பராமரிப்பு - 1998
மஸ்ஜிதுல் அக்பர் வீதி 3ம் குறுக்கு பராமரிப்பு - 1998
அக்பர் கிராம வம்மியடி வீதி பராமரிப்பு - 1998
பெரியநீலாவணை இமாம் கஸ்ஸாலி வீதி பராமரிப்பு - 1998
பெரியநீலாவணை பாக்கியத்துஸ் ஸாலிஹாத் வீதி பராமரிப்பு - 1998
அக்பர் கிராம சனசமூக நிலைய வீதி பராமரிப்பு - 1998
மசூர் மௌலானா வீதி 10ம் குறுக்குத்தெரு பராமரிப்பு - 1998
மசூர் மௌலானா வீதி 06ம் குறுக்குத்தெரு பராமரிப்பு - 1998
மஸ்ஜிதுல் கபீர் வீதி பராமரிப்பு - 1998
பெரியநீலாவணை மாவடி வீதி 5ம் குறுக்குத்தெரு - 1998
மஸ்ஜிதுல் அக்பர் வீதி 2ம் குறுக்குத்தெரு பராமரிப்பு - 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேக் லேன் பராமரிப்பு	-	1998
பெரியநீலாவணை ஆஸ்பத்திரி வீதி கிழக்கு	-	1998
அல்-ஹம்றா வீதி கிழக்கு பராமரிப்பு	-	1998
பொதுநூலக வீதி 7ம் குறுக்குத்தெரு	-	1998
அல்ஹம்றா வீதி 1ம் குறுக்குத்தெரு - திருத்தல்	-	1999

கட்டட நிர்மாணங்களும் இதர வேலைகளும்

அக்பர் கிராம மையவாடி சுற்று மதில்	1997	ரூபா	250,000.00
பொதுநூலக மேலதிக கட்டிடம்	1998	ரூபா	360,000.00
பொதுநூலக சுற்றுமதில் 2ம் கட்டம்	1998	ரூபா	136,000.00
மருதமுனை சிறுவர் பூங்கா	1998	ரூபா	100,000.00
வீதிப் பெயர்ப் பலகைகள் அமைப்பு	1998	ரூபா	60,000.00

பிரதேச சபையினால் மருதமுனையில் பூரணப்படுத்தப்பட்ட வேலைகளின் மொத்தப் பெறுமதி	ரூபா	23,23,000.00

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் செய்யப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் விபரம்

நூறாணியா வீதி வடிகால் அமைப்பு 2ம் கட்டம்	ரூபா	150,000.00
பனையடி வீதி வடிகால் அமைப்பு	ரூபா	1,200,000.00
பெ.நீ. பாக்கியத்துஸ் ஸாலிஹாத் வீதி வடிகால்	ரூபா	250,000.00
பனையடி வீதி கல்போட்டு தார் ஊற்றல்	ரூபா	500,000.00
ஆஸ்பத்திரி கட்டிட நிர்மாணம்	ரூபா	2,300,000.00
ஆஸ்பத்திரி எல்லைச் சுவர்	ரூபா	500,000.00
ஆஸ்பத்திரி விடுதி கட்டிட நிர்மாணம்	ரூபா	3,000,000.00
மசூர்மௌலானா சதுக்க அபிவிருத்தி 1ம் கட்டம்	ரூபா	300,000.00
அல்-மனார் மத்திய கல்லூரி ஆராதனை மண்டபம்	ரூபா	1,500,000.00
அல்-மனார் மத்திய கல்லூரி கட்டிட நிர்மாணம்	ரூபா	1,300,000.00
அல்-மனார் மத்திய கல்லூரி மின்னிணைப்பு நீடிப்பு	ரூபா	300,000.00
ஷம்ஸ் ம.க. விஞ்ஞான ஆய்வுகூட நிர்மாணம்	ரூபா	2,000,000.00
ஷம்ஸ் மத்திய கல்லூரி மின்னிணைப்பு நீடிப்பு	ரூபா	300,000.00
ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கான தளபாடம்	ரூபா	500,000.00
மசூர்மௌலானா சதுக்க அபிவிருத்தி 2ம் கட்டம்	ரூபா	800,000.00
பொதுநூலகச் சுற்றுமதில் 1ம் கட்டம்	ரூபா	220,000.00
வீதிகளுக்கான மின் விளக்குகள்	ரூபா	160,000.00
மூன்று பள்ளிவாசல்களுக்கான நிதியுதவி	ரூபா	900,000.00
மொத்தம்	**ரூபா**	**1,66,80,000.00**

D.C.B. மூலம் செய்யப்பட்ட வேலை விபரம்

அல்-ஹம்றா வித்தியாலய குடிநீர் விநியோக நிர்மாணம்	ரூபா	125,000.00
அல்-மினன் பாடசாலை சுற்றுமதில்	ரூபா	125,000.00
விளையாட்டுக் கழகங்களுக்கான உபகரணங்கள்	ரூபா	50,000.00
மொத்தம்	**ரூபா**	**300,000.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட இதர நிவாரண உதவிகளும், மானியங்களும்

1200 குடும்பங்களுக்கான நிவாரணம் 4000/- வீதம்	ரூபா	48,00,000.00
210 குடும்பங்களுக்கான வீட்டு மானியம் 25,000/- வீதம்	ரூபா	52,50,000.00
மொத்தம்	**ரூபா**	**10,050,000.00**

எமது முயற்சியின் மூலம் பெருந்தெருக்கள் அமைச்சினால் செய்யப்பட்ட வீதி அபிவிருத்திப் பணிகளின் விபரம் :

ஹாஜியார் வீதி தார் வீதி நிர்மாணம்	ரூபா	10,000,00.00
காரியப்பர் வீதி தார் வீதி நிர்மாணம்	ரூபா	10,000,00.00
மசூர்மௌலானா வீதி தார் வீதி புனரமைப்பு	ரூபா	7,000,00.00
எல்லை வீதி (மஸ்ஜிதுல் அக்பர்) தார் வீதி நிர்மாணம்	ரூபா	15,000,00.00
மொத்தம்	**ரூபா**	**52,000,00.00**

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் :

அல்-மனார் மத்திய கல்லூரி ஆராதனை மண்டபம்	ரூபா	38,000,00.00
ஷம்ஸ் மத்திய கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூடம்	ரூபா	30,000,00.00
மொத்தம்	**ரூபா**	**68,000,00.00**

பிரதேச சபை மூலமான அபிவிருத்திப் பணிகள்	ரூபா	23,23,000.00
புனர்வாழ்வு, புனரமைச்சு அபிவிருத்திப் பணிகள்	ரூபா	234,80,000.00
புனர்வாழ்வு, புனரமைச்சு மூலமான நிவாரணங்களும், மானியமும்	ரூபா	100,50,000.00
D.C.B. மூலமான அபிவிருத்திப் பணி	ரூபா	300,000.00
பாரிய வீதி அபிவிருத்திப் பணிகள்	ரூபா	52,00,000.00
மொத்தம்	**ரூபா**	**413,53,000.00**

- 1994இல் ஏப்ரல் தொடக்கம் இற்றை வரைக்கும் மருதமுனைப் பிரதேசத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் செய்யப்பட்ட மொத்த அபிவிருத்திப் பணிகளின் பெறுமதி ரூபா 4 கோடியே 13 இலட்சத்து 53 ஆயிரம் ஆகும்.

- தனியார், வர்த்தக, அரச ஊழியர்களுக்காக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கிய இழப்பீட்டுத் தொகைகள் இதனுள் உள்ளடக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதர சேவைகள் :

- அக்பர் கிராம உப தபாலகம் அமைக்கப்பட்டவை.
- மருதமுனை உப தபாலகம் தபாலகமாக தரமுயர்த்தப்பட்டவை.
- மருதமுனை டிசைன் சென்ரர் புனர்நிர்மாணம் செய்யப்பட்டவை.
- "நெய்ற்றா" பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோக வாய்ப்புக்கள்

எமது மத்திய குழு சிபாரிசுவின் பேரில் வழங்கப்பட்டுள்ள தொழில்வாய்ப்புக் களின் விபரம் :

- □ சிறிலங்கா துறைமுக அதிகார சபை - 70
- □ சமுர்த்தி ஊக்குவிப்பாளர் - 18
- □ பிரதேச சபை - 05
- □ இலங்கை வங்கி - 01
- □ இதர நிறுவனங்கள் - 10
- □ SLPAஇல் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தொழில்வாய்ப்பை எதிர்பார்த்திருப்போர் - 18

தகவல் உதவி: அல்-ஹாஜ். ஐ.ஏ. ஹமீட் - முன்னாள் தவிசாளர்
அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் - அமைப்பாளர்
சகோதரர் எஸ்.எம். அப்துல்லா - கிழக்கு மாகாண இணைப்பாளர்
தொகுப்பு: சகோ. ஏ.எம். நிஹ்மத்துள்ளா - CDO

ஜனாதிபதித் தேர்தல்கள்

இலங்கையின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09ஆம் திகதி நடைபெற்ற வேளையிலும், 1999 டிசம்பர் 21ல் நடைபெற்ற நான்காவது ஜனாதிபதித் தேர்தலிலும் எமது மருதமுனை மக்கள் அதிகளவு வாக்குளை சி.ல.மு.காங்கிரஸ் ஆதரிக்கு மாறு வேண்டிக் கொண்டதற்கிணங்க திருமதி. சந்திரிக்கா குமாரதுங்க அவர்களையும், 2005-11-17இல் நடைபெற்ற ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. ரணில் விக்ரமசிங்க அவர்களையும் ஆதரித்தமையானது SLMCஇன் செல்வாக்கு மருதமுனை மண்ணில் படிப்படியான முன்னேற்றத்தினைச் சுட்டி நிற்பதுவும் இன்றுவரை அவை சற்று ஏற்ற இறக்கங்களுடன் நிலையாக இருப்பதுவும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதே. ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை என வர்ணிக்கப்பட்ட நமதூர் இன்று அம்பாறை மாவட்டத்தில் மட்டுமல்ல முழு இலங்கையிலும் விகிதாசார அடிப்படையில் அறுபதுக்குமதிகமான விழுக்காட்டில் முஸ்லிம் காங்கிரசுக்கே ஆதரவு வழங்கும் கிராமமாக மாறியிருப்பது இங்கு அக்கட்சியை வழிநடாத்தியவர்களின் முயற்சி என்பது இங்கு பதியப்பட வேண்டியது.

2000 செப்டம்பர் 16

இலங்கையின் பதினோராவது பாராளுமன்றத் தேர்தல் 10-10-2000இல் நடைபெற அறிவிக்கப்பட்டிருந்தமையால் தேர்தல் வேலைகளில் எல்லோரும் களமிறங்கியிருந்ததால் நாங்கள் மருதூர்க்கனி அவர்களின் தலைமையில் அக்பர் கிராமத்தில் நயீமுத்தீன் மீன் வியாபாரி (ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் மருதமுனை மத்திய குழுவின் ஆரம்பப் பொருளாளர்) அவர்களுடைய வீட்டடியில் அவரைச் சந்திக்கவெனச் சென்று கொண்டிருந்த வேளையில் மருதூர்க்கனி அவர்களின் கையடக்கத் தொலைபேசி அலறியது. அன்று செப்டம்பர் 16ம் திகதி மருதூர்க்கனி அவர்களின் முகம்மாறியது. கண்களில் கண்ணீர்த்துளிகள். சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றவர்களுக்கு மத்தியில் படபடப்பு. என்னவென்று வினவியும் பதிலில்லை. நிலத்தில் குந்திவிட்டார். பின் ஓரளவு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவராக தலைவர் அவர்கள் வந்த உலங்குவானூர்தி (Helicopter) விபத்துக்குள்ளாகிய செய்தியைக் கூறினார். இது பொய்யாக இருக்கக் கூடாதா என்று எல்லோரது மனங்களும் விரும்பின.

இதனிடையே 16ம் திகதி காலை 6.00 மணிக்கு CDO நிஃமத்துள்ளாஹ் கொழும்பிலிருந்து எனது தொலைபேசியில் தொடர்புகொண்டு நானும், றபீஉத்தீனும் தலைவருடன் ஹெலியில் வருகிறோம். நாபி நானாவுக்கு பிக்கப் கொடுத்து அவரும் இன்னும் சிலரும் அதில் வருகிறார்கள் என்ற செய்தியைக் சொல்லியிருந்தார். இது எனக்கு மட்டும் தெரிந்த விடயம். ஹெலிகொப்டர் விபத்து அடுத்த அரைமணி நேரத்தில் ஊர்ஜிதமானது. இப்போது எனது நண்பர்களிருவரும் தலைவருடன் சஹீதான விடயம் என்னைப் பெரிதும் கவலைகொள்ளச் செய்தது. உடனே நான் CDO அவர்களின் வீட்டுக்குச் சென்ற போது அங்கு அவர்களுடைய குடும்பத்தினர் பலர் பேசிக்கொண்டிருந்தனர். CDO வின் மனைவிக்கு மட்டுமே அவர் கொழும்பு சென்ற விடயம் தெரியுமாத லாலும், அவர் ஹெலியில் வருகிறார் என்ற விடயமும் அவரது மனைவிக்குத் தெரியாத ஒரு சூழ்நிலையில் என்னால் எனது கண்ணீரை அடக்க முடியவில்லை. CDO நிஃமத்துள்ளாஹ், றபீயுடீன் ஆசிரியர் ஆகிய எமது கிராமத்தின் செல்வங்கள் இருவர் விபத்தில் மரணித்த விடயமும் வெளியாகின்றது. ஊரே சோக மயம். மையித்துக்கள் யாவும் கொழும்புக்கு தெமடகஹா பள்ளிவா சலுக்கு நல்லடக்கத்திற்காகச் கொண்டு செல்லப்படுவதனால் நெய்னா முகம்மது அவர்களுடைய காரில் நானுட்பட மூவர் செல்கிறோம். நாங்கள் வரும் செய்தியறிந்த அபுல்கலாம் சட்டத்தரணி, உமர்அலி போன்றவர்கள் நண்பர்கள் இருவரதும் ஜனாசாக்களை அடக்கம் செய்யாமல் வைத்திருந்து எமது வருகையின் பின்னரே நல்லடக்கம் செய்தமை மறக்க முடியாதன. நல்லடக்கத் தினை முடித்துக்கொண்டு உடனடியாக ஊருக்குத் திரும்பி வருகின்றோம். மசூர்மவ்லானா விளையாட்டு மைதானம் மக்களால் நிரம்பி வழிகிறது. எமது வருகையை எதிர்பார்த்து நின்ற மக்கள் எம்மைக் கண்ட பின்புதான் ஜனாஸாத் தொழுகையை நடாத்தினார்கள். இதில் என்னை உரையாற்றுமாறும் வேண்டிக் கொண்டார்கள். உரையின் பின் எனது அழுகையை என்னால் கட்டுப்படுத்த முடியாமல் போனதும் காதர் இப்றாகிம் சேர் என்னை ஆறுதலடைய வைத்த கட்டமும் என்னால் இன்னும் மறக்க முடியாதவை. மொத்தமாக செப்டம்பர் 16, 2000ம் ஆண்டு நான் நேசித்த தலைவர், எனது அன்புக்குரிய இரு நண்பர்கள் ஆகிய மூவரையும் இழந்தமை நெடுநாட்கள் எம்மை எதுவித செயற்பாடுகளையும் செய்ய விடாமலாக்கிவிட்டது. தேர்தலும் நெருங்கியது. தலைவருக்குப் பதிலாக அவரது மனைவியை வேட்பாளராகத் தேர்தல் திணைக்களம் அறிவித்தது. எமது மக்கள் முஸ்லிம் காங்கிரசுக்காகத் தமது அதிகபட்ச வாக்குகளை வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதூர்க்கனி அவர்களின் பாராளுமன்றப் பிரவேசம்

10-10-2000இல் நடைபெற்ற இலங்கையின் பதினோராவது பாராளுமன்றத் தேர்தலில் கதிரைச் சின்னத்தில் நுஆ (SLMC) கட்சியின் வேட்பாளர்கள் நால்வர் வெற்றி பெறுகின் றனர். தலைவர் அவர்களைப் பறிகொடுத்த சோகத்தின் மத்தியிலும் மக்கள் கதிரைச் சின்னத்துக்கு வாக்களித்து அதன் வெற்றியில் பங்காளிகளாகிக் கொண்டனர். எமது மருதமுனை மக்களும் அதிகப்படியான 60 - 65 வீதமான வாக்குகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தல் வெற்றியில் எமது (SLMC) NUAவுக்கு தேசியப்பட்டியல் உறுப்பினர் களாக இரண்டு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டு, அவற்றில் ஒன்று எமது மகன் யூ.எல்.எம். ஹனீபா (மருதூர்க்கனி) அவர்களுக்கு வழங்கி எமது மண்ணுக்கும் கட்சியின் சிரேஷ்டத்துவத்துக்கும் மரியாதை செய்கின்ற விடயம் மருதமுனை அரசியல் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக் கப்பட வேண்டியதாகும். இதற்காக கட்சியின் இன்றைய தலைவர் அல்ஹாஜ் றஊப் ஹக்கீம் அவர்கள் என்றும் எம் மண்ணினால் மதிக்கப்பட வேண்டியவர்.

ஒரு பாராளுமன்றப் பிரதிநிதியாக மசூர்மவ்லானா அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற பேரவாவுடனிருந்த மருதமுனை மக்களுக்கு இது ஓர் ஆறுதலாக இருந்தமையும் இங்கு மீட்டிப்பார்க்கப்பட வேண்டிய ஒன்று. ஆனாலும் இப்பதினோராவது பாராளுமன்றம் சரியாக ஒரு வருடத்தில் கலைக்கப்பட்ட தனால் எமக்காக வழங்கப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதியின் ஆயுட்காலம் ஒரு வருடமாகவே இருந்தமை கவலைக்குரியதே. இந்த ஒரு வருட காலத்தினுள் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 75 வீதமான பணத்தினை எமது கிராமத்துக்காகச் செலவிட்டமையும், சில வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தமையும் ஈண்டு பெருமையுடன் ஞாபகப்படுத்தப்பட வேண்டிய விடயங்களே. மேற்போந்த நியமனம் எதிர்காலத்தில் கிடைக்கப்பெற உள்ள ஒரேயொரு வழியாக ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் வெற்றியிலேயே தங்கியுள்ளதும் உரத்துக்கூறப்பட வேண்டியது.

வரலாற்றுத் திருப்பம் கண்ட 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்

இலங்கையின் பன்னிரண்டாவது நாடாளுமன்றத் தேர்தல் 05-12-2001இல் நடைபெற்றது. இத்தேர்தல் எமது கிராமத்தைப் பொறுத்தவரையில் SLMCக்கு ஆதரவாக சுமார் 80 வீதமான மக்கள் வாக்களித்தமையாகும். ஏனென்றால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்ததான தேர்தல் என்ற காரணத்தினால் எமது கிராமத்தின் இக்கட்சி ஆதரவாளர்களும் சேர்ந்து களத்தில் நின்று தேர்தல் பணிகளில் ஈடுபட்டமை இங்கு நோக்கத்தக்கது. மட்டுமல்லாமல் 1994இல் ஜனாப் மசூர்மவ்லானா அவர்கள் சி.ல.மு. காங்கிரஸில் சேர்ந்ததன் விளைவாக பாரிய வாக்கு வித்தியாசத்தினை எம்மால் பெறமுடியாமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துத் தேர்தல் பிரச்சாரங்களின் போதும் மறைந்த தலைவர் அவர்களின் உரைகளும், கட்சிப் பாடல்களும் பெருமளவு மக்களை கட்சியின் பால் ஈர்த்துக்கொண்ட மையும் அவரது மறைவின் தாக்கத்தினை மக்கள் இன்னும் மறவாதவர்களாகவும் இருந்தனர். தொடர் பிரார்த்தனைகள், குர்ஆன் திலாபத்துகள் என்பனவும் அதிகளவில் நடைபெற்றமையும் கூட்டங்கள் யாவும் கட்சிக் கீதங்களுடனும் தலைவருக்கான மௌன அஞ்சலியுடனுமே ஆரம்பிக் கப்பட்டமை குறிப்பிடப்பட வேண்டியது. ஆனால் இன்று இவ்வாறான விடயங்களைக் கட்சித் தொண்டர்கள் அடியோடு மறந்து விட்டமை கவலை யளிப்பதாகவுள்ளது. அவரோடு மிகவும் நெருங்கிப் பழகியவன் என்ற வகை யிலும் அவர் என்னோடு மிகவும் அன்பும் பாசமும் வைத்திருந்தார் என்பதனையும் நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.



2001-09-15ஆம் திகதி அவரது இரண்டாவது நினைவு தினம் எமதூரில் மருதமுனை அல்-மனார் அஷ்ரஃப் ஆராதனை மண்டபத்தில் அனுஷ்டிக்கப் பட்டபோது அதில் 'காவிய நாயகன்' என்ற மலர் வெளியிடப்பட்டதும் என் நினைவில் நிற்கின்றது. இம்மலருக்காக என்னால் எழுதப்பட்ட இரங்கலுரையை இங்கு சமர்ப்பிப்பது பொருத்தமென நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மன்னர் மனம் கொண்ட அரசியல் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப்

16.09.2000 அன்று.....

- அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் (ஜே.பி.)

இலங்கை வாழ் முஸ்லிம்களை பேரதிர்ச்சியடையச் செய்த நாள்!
தேர்தல் கடமைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த எம்மை எல்லாம் சித்தப் பிரமை கொள்ளச் செய்த நாள்!

"யா அல்லாஹ்! இச்செய்தி பொய்யாக இருக்கக் கூடாதா" என்று ஒவ்வொரு இதயமும் ஏங்கிய நாள். வெளிநாட்டில் வாழ்கின்ற எமது சகோதரர்களின் தொலைபேசிகள் எம்மை எல்லாம் குடைந்தெடுத்த அந்த நாள்!

இன்றோடு ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்கிறதென்பதை நம்பமுடியாமல் இருக்கிறது. ஆயினும், நெஞ்சை விட்டு மாறாத நினைவுகளை தடம்பதித்த சக்தியை, மாமனிதரை எண்ணிப்பார்க்கிறேன்.

"பொத்துவில் தீர்மானம்" இது எம்மிருவருக்குமே புரியும் பரிபாசை. அதன் மூலம் அந்த மாமனிதனின் மானிட நேயத்தையும் சமூகம் பற்றிய எதிர்காலத் திட்டங்களையும் என்னால் அறிய முடிந்தது. அதுவே அவர்மீது அதிக ஈடுபாடு காட்டவும் வைத்தது.

- ஒவ்வொரு இளைஞனுக்கும் வேலை.
- வேலைவாய்ப்புப் பெற்றவனை ஏழைக் குமர்களுக்கு மணமுடித்து வைத்தல்
- அக்கரைப்பற்று முதல் பொத்துவில் வரை உள்ள வெற்றுக் காணிகளில் அவர்களுக்கு வீடமைத்துக் கொடுத்தல்.

பொத்துவிலிலிருந்து பயணித்த போது அவர் என்னிடம் கூறிய இந்தத் திட்டம் கிழக்கு இஸ்லாமிய இளைஞர்களின் மொத்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகவே எனக்குப்பட்டது.

இது மட்டும் நிறைவேறி விட்டால்.....

14.09.2000 அன்று இரவு 12 மணியளவில் தொலைபேசியில் என்னோடு பேசும்போது "பொத்துவில் தீர்மானம்" நிறைவேறாமலே போய்விடுமோ என்று அங்கலாய்த்ததன் அர்த்தம் இரண்டு நாட்களின் பின்புதான் என்னால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

ஒரு முறை இஸ்லாத்தில் கருத்தடை கூடுமா, கூடாதா என்ற வாதம் எம்மிடையே வந்தது. அதற்கு கூடும் என்று அவர் முன்வைத்த கருத்துக்கள் மார்க்கத்தில் அன்னாருக்கிருந்த ஆழமான அறிவையும் பற்றையும் எடுத்துக்காட்டியது.

இரண்டாவது தலைமைத்துவ விடயத்தில் நான் பலமுறை அவருடன் விவாதித்திருக்கிறேன். சம பலமுடைய இருவர் இருப்பின் கட்சியுடைந்து விடும் என்றதோடு அதற்கு ஆதாரமாக கட்சியின் இரண்டாம், மூன்றாம் தலைமைத்துவத் தரத்திற்கு கணிக்கப்பட்டு 'பைஅத்' செய்தவர்களின் கழுத்தறுப்புக்களையும் துரோகங்களையும் எடுத்துக் கூறி எம்மை ஆசுவாசப்படுத்தினார். இருப்பினும் தற்போதைய தலைவரை அவர் இனங்காட்டவும் தவறவில்லை.

1986ல் காத்தான்குடியில் ஒன்றுகூடல் ஒன்று இரவு 12 மணியைத் தாண்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைக் கலைப்பதற்காக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அன்றுதான் எம் தலைவரின் மன உறுதியை எம்மால் காண முடிந்தது. இதற்கு காரணமாகவிருந்தவர் இன்று எமது கட்சியின் தீவிரப் போராளி மட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினரும் கூட. ஆனால் அந்த ஒன்று கூடலை ஏற்பாடு செய்தவர் எம்மைவிட்டும் வெளியே நிற்கிறார். இதுதான் இறைவனின் ஏற்பாடுபோலும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாத்தளையில் முஸ்லிம் காங்கிரஸ் என்றால் அம்மக்களுக்கு எதுவுமே விளங்காத நிலையில் சகோதரர் நிஜாமுத்தீனையும் என்னையும் தலைவர் மாத்தளைக்குச் செல்லுமாறு பணிக்கிறார்கள் நாங்கள் அங்கு சென்று தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். JVP, SLFP, UNP என்ற மும்முனை அச்சுறுத்தலுக்கு மத்தியில் தலைவரின் திட்டமிடலும் வழிகாட்டலும் சகோதரர் அத்ஹம் அவர்கள் மாகாணசபைக்கு தெரிவாக வழிவகுத்தது. இது அவருடைய அரசியல் வழிகாட்டலுக்கு கிடைத்த வெற்றியாகும்.

எமது பிரதேசத்தில் தமிழ் இளைஞர்கள் மட்டுமல்ல எமது இளைஞர்களும் ஆயுதக் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்ட வேளை ஆயுதக் குழுக்களின் செல்வாக்கு இளைஞர்கள் மத்தியில் மேலோங்கி வந்த காலம் எமது இளைஞர்களைப் பிழையான வழியில் செல்லாமல், நெறிப்படுத்தி அவர்களை அரசியல் மயப்படுத்த வேண்டிய பணியே எனது முதற்பணி என்று அவர் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையும் இளைஞர்கள் பால் அவருக்கிருந்த பற்றுதலை வெளிக்காட்டி நிற்கின்றன. இன்னும் எவ்வளவோ!

புலவர்கள் என்றும் கவிஞர்கள் என்றும் நாயகம் என்றும் தன்னைத்தானே பெயர் சூட்டிக் கொள்ளும் இக்காலத்தில், மிகவும் புலமைவாய்ந்த பண்பட்ட ஒரு கவிஞர் திலகமாய் திகழ்ந்த அந்த மாமனிதனின் இழப்பு இன்னும் மிக நீண்ட காலத்திற்கு ஈடுசெய்ய முடியாததோர் இழப்பாகும்.

இன்றைய அரசியல் நிலவரம் இவருடைய வெற்றிடத்தை துல்லியமாக காட்டுகிறது.

ஒரு மன்னர் மனம் கொண்ட அரசியல் தலைவனாக
தலைசிறந்த மார்க்க அறிஞனாக
பார்போற்றும் புலவனாக
மனிதமுள்ள மானிடனாக

மொத்தத்தில் ஒரு ஆளுமை உள்ள அரசனாக எம்மிடையே உலா வந்த அந்தப் பேரொளி எம்மை விட்டு மறைந்து ஒரு வருடமாகி விட்டது என்பதை ஏற்க மனம் மறுக்கின்றது.

ஆனாலும் ஒரு நெருடல்

நீங்கள் ஏற்று வந்த இலட்சியப்பாதையில்
தடையாக இன்று இருப்பது உங்கள் விலா எலும்பு என்பதுதான் வேதனை.

பரவாயில்லை, உங்கள் வழி வந்து உங்கள் பொறுப்பையெல்லாம் தான் சுமந்து சமூகத்தின் விடியலுக்காய் தளபதியின் இளவலை நாங்கள் ஏற்று போராட புறப்பட்டு விட்டோம். உங்கள் ஆசிர்வாதம் எம்மை வழிநடாத்தும் என்ற நம்பிக்கையில்.

இந்த சமூகத்தை நீங்கள் நடுத்தெருவில் விட்டுவிடவில்லை. தகுதியான தலைமை ஒன்றை விட்டுத்தான் சென்றிருக்கிறீர்கள். அதற்காக என்றென்றும் இச்சமூகம் உங்களுக்கு கடமைப்பட்டுள்ளது.

யா அல்லாஹ்! மறைந்த எம்தலைவர் சமூகத்துக்கு செய்தவைகளை 'சதகத்துல் ஜாரியா'வாக ஏற்று அங்கீகரிப்பாயாக! அவருடைய ''கப்ரை'' ஒளிமயமானதாக ஆக்குவாயாக! அவருக்கு ''ஜென்னத்துல் பிர்தௌஸை'' வழங்குவாயாக! என்றும் அவரை சுவனத்தில் வாழச் செய்வாயாக!

முன்னேறும் பாதையிலே
முள்ளை வைத்தாலும்
தடை அகற்றி வழிநடாத்து
தலை மகனே.
இது உங்கள் மொழி
தொடர்வோம் அவ்வழி
இன்ஷா அல்லாஹ்!

அல்-ஹாஜ் ஏ.ஆர்.ஏ. சத்தார். (ஜே.பி)
அமைப்பாளர் (SLMC)
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நான் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் கூறவரும் வரலாற்றுப் பதிவு மிக முக்கிய மானது. 1989ஆம் ஆண்டு இறுதிப்பகுதியிலிருந்து 2003ஆம் ஆண்டு ஆரம்பம் வரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மருதமுனை அமைப்பாள ராகவும் மத்திய குழுவின் தலைவராகவும் இருந்ததுடன் அம்பாரை மாவட்ட குழுவின் உப செயலாளராகவுமிருந்து இக்கட்சிக்கும், இதன் வளர்ச்சிக்கும் எதுவித பிரதியுபகாரங்களும் எதிர்பார்க்காமல் செயலாற்றியுள்ளேன் என்பதுதான். இக்காலப்பகுதியில் அதிகமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும், வேலைவாய்ப்புகளுக்காகச் சிபார்சு செய்யவும் இயலுமாயிருந்தன. தலைவர் அவர்களும் மத்திய குழுவின் சிபார்சுக் கடிதம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டார். இந்த விடயம் மத்திய குழுவுக்கும் அதன் தலைவருக்கும் மிகவும் மரியாதையிருந்தமை மற்றவர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களாகும். இக்காலம் வரை பேரியல் அஷ்ரஃப், மருதூர்க்கனி ஆகியவர்களின் பிளவைத் தவிர மற்றெல்லோரும் ஒற்றுமையாக ஒரே கட்சியாகவிருந்தார்கள்.

கட்சியில் பிளவுகள்

கட்சியின் தலைமையோடு கருத்து வேறுபாடு கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அதாவுல்லாஹ், அன்வர் இஸ்மாயில், ஹரீஸ் ஆகியோர்கள் கட்சியின் தலைமைத்துவம் மாற்றப்படல் வேண்டும் என்ற கோஷத்துடன் பிளவுபடுவது எமது கிராமத்திலும் பல மாறுதல்களைத் தருகிறது. ஒன்றாக விருந்து கட்சிப் பணிகளில் ஈடுபட்ட நண்பர்கள் இரு அணியில். இந்த நிலை மையிலேயே 2004ஆம் ஆண்டுத் தேர்தலையும் சந்திக்க வேண்டிய நிலை. 02-04-2004ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் பதின்மூன்றாவது பாராளு மன்றத் தேர்தலில் அம்பாரை மாவட்ட பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பாக பேரியல் அஷ்ரஃப், அதாவுல்லாஹ் போன்றவர்களுடன் SLMC இன் சார்பாக அதன் தலைவர் றஊப் ஹக்கீம் அவர்களும் இங்கு போட்டியிட்டு வெற்றிபெறுகிறார்கள். இத்தேர்தலில் முக்கியமாக ஐ.ஏ. ஹமீட், நூறுல் பவுஸ், மஹ்றூப் ஆசிரியர் உட்பட நாங்கள் அதாவுல்லாஹ் அவர்களை ஆதரித்து நிற்பதுவும் அங்கும் நானே மத்திய குழுவின் தலைவராகவிருப்பதுவும் குறிப் பிடப்பட வேண்டியது. உண்மையில் மனம் விரும்பாத ஒரு நிலையிலும் SLMC தலைமையுடன் சில கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியிலும் ஊரின் அபிவிருத்திப் பணிகளையாவது செய்வோம் என்ற இலக்கை நோக்கிய நகர்வாகவே எனது பயணம் தொடர்ந்தது. இக்காலப் பகுதியில் எனது தலைமையில் கடற்கரை வீதி தார் வீதிகளாக மாற்றப்படல், பாண்டிருப்பு மினன் வீதி, மக்பூலியாபுர வீதி தார் வீதியாக மாற்றப்படல், வைத்தியசாலைக்கான இரண்டு மாடிக் கட்டிடம் ஆரம்பித்து வேலைகள் நடந்தமை. மருதமுனை நூலக அபிவிருத்திக்கும் அல்-மனார் ஆரம்பப் பிரிவுக்கும் நிதி ஒதுக்கீடுகள் எனப்பல 'அபிவிருத்திகள் செய்யப்பட்டன. இவ்வேளையில்தான் 2004-12-26 சுனாமிப் பேரலையின் அகோர தாண்டவம் இடம்பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து முரண்பாடு

சுனாமியில் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காக இயன்றளவு எம்மாலான வற்றை அரசியல் ரீதியாகச் செய்யவேண்டும் என்ற முனைப்புடன் அமைச்சர் அதாவுல்லாஹ் அவர்களைச் சந்திக்க கொழும்பிற்குச் சென்று பிற்பகல் நான்கு மணிக்கு அமைச்சில் சந்திப்பதற்கான அனுமதி யையும் பெற்றுக்கொண்டேன்.

அன்று இரவு ஊருக்குத் திரும்புவதற்கான பஸ் டிக்கட்டும் புக் பண்ணியாகி விட்டது. அன்று ஊருக்குச் செல்வதற்காக சபீக் ஹாஜியார் (சீப்பலஸ்) அவர்களும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது அமைச்சரைச் சந்தித்துவிட்டு ஊருக்குப் போகலாம் தானே என்ற எனது வேண்டுகோளை ஏற்று அவரும் என்னுடன் அமைச்சுக்கு வந்தார். மூன்று மணிக்கெல்லாம் அமைச்சுக்குச் சென்று சேர்ந்துவிட்டோம். நான்கு ஐந்தாகி, ஐந்து ஆறாகி, ஆறு ஏழாகி..... பத்து மணிக்குத்தான் நாங்கள் உள்ளே அழைக்கப்பட்டோம்.

மிகவும் கோபத்துடன் சென்ற என்னை நிறையப்பேச வேண்டியிருப்பதால்தான் எல்லோரையும் அனுப்பிவிட்டு என்னை உள் அழைத்ததாகக் கூறி மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். அன்றைய எங்களுடைய பிரயாணம் தடைப்பட்டு விட்டது மட்டுமல்ல பஸ்ஸுக்காக செலுத்தியிருந்த முற்பணங்களும் நஷ்டமாகிவிட்டது. பல விடயங்கள் பேசப்பட்ட பின் எனது சந்திப்புக்கான காரணங்களையும், வேண்டுகோள்களையும் முன்வைக்கிறேன். அவையாவன,

1) சுனாமியால் குறைந்தது ஆயிரம் வீடுகளாவது பாதிக்கப்பட்டிருப்பதால் அம்மக்களுக்கான வீட்டு வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும்.
2) முற்றாகவே சேதமடைந்துள்ள ஷம்ஸ் மத்திய கல்லூரி புதிதாகப் புதிய இடத்தில் கட்டித்தர ஏற்பாடுகள் செய்யவேண்டும்.
3) தங்களின் நிதி ஒதுக்கீட்டினால் செய்யப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடம் உட்பட மருதமுனை வைத்தியசாலையின் அனைத்துக் கட்டடங்களும் சேத மடைந்து விட்டன. எனவே அவற்றையும் வேறு ஒரு இடத்துக்கு மாற்று வதோடு அதனைத் தரமுயர்த்தித்தர ஆவன செய்ய வேண்டும்.

மேற்படி மூன்று கோரிக்கைகளையும் நண்பர் சபீக் ஹாஜியாரின் முன்னிலேயிலேயே கேட்டமைக்கு அவர் சாட்சியாகவிருப்பார். இக்கோரிக்கை களெல்லாம் சுனாமியடித்து மூன்று மாதங்களுக்குள்ளேயே நான் முன்வைத்த மையை இங்கு சுட்டிக்காட்டல் பொருந்தும். இதற்கான அமைச்சரின் பதில்கள் என்னைத் திருப்திப்படுத்தவில்லை. அவரது பதில்களை இங்கு வெளியிடுவது எனது கடமையாகக் கருதுகிறேன்.

1) உங்களுடைய கிராமத்தில் அப்படி ஆயிரம் பணக்காரர்கள் இல்லையா. ஒவ்வொரு வரும் ஒவ்வொருத்தரைப் பொறுப்பெடுத்துக் கொண்டால் விஷயம் இலகுவில் முடிந்துவிடும் தானே.
2) பாடசாலையை இடம்மாற்றுவது சம்பந்தமாக ஒன்றுக்கு இரண்டு முறை நன்றாகச் சிந்தியுங்கள்.
3) வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஏதாவது செய்ய முடியுமா எனப் பார்க்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி பதில்களால் மிகவும் ஆத்திரமுற்ற நான் உங்களுக்காக 2004ஆம் ஆண்டுத் தேர்தலில் மிகவும் எதிர்ப்புகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் சுமார் இரண்டாயிரம் வாக்குகள் பெற்றுத் தந்திருக்கிறோம். (யூ.எல். றமீஸ் அவர்களின் இல்லமே தேர்தல் நடவடிக்கைக் காரியாலயமாக இயங்கியது.) இந்த மக்களுக்காக நீங்கள் கூறிய பதில்கள் யாவும் என்னை மிகவும் கவலைகொள்ள வைத்தது மட்டுமல்லாமல் இந்த மக்களையும் உதாசீனம் பண்ணும் போக்கும் என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. மேலும் அமைச்சர் அவர்களினால் எந்தவொரு உதவியையும் எதிர்காலத்தில் இந்த மக்களுக்காகப் பெற்றுக்கொள்ள முடியாது என்ற உண்மையையும் தெளிவுபடுத்தியது. இதன் காரணமாக நான் அமைச்சர் அதாவுல்லாஹ் அவர்களை விட்டும் தூரமானேன். மற்ற நண்பர்கள் ஹமீட் சேமன் உட்படப் பலர் என்னைச் சமாதானப்படுத்தவும் அமைச்சரவர்களிடம் பேசவும் பல முயற்சிகள் மேற்கொண்டமையும் அவர்களுக்கெல்லாம் எனது உறுதியான முடிவினைக்கூறி விலகிக் கொண்டமையும் இன்றும் என் நினைவுகளில் நிற்கும் அழியாத பாடங்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் நண்பர்களின் அழைப்பு

இவ்விடத்தில் வாஹித், சித்தீக், உமர்அலி, ஹிதாயத்துள்ளா மனேஜர் ஆகிய நால்வரையும் நினைத்துப் பார்க்கிறேன். அவர்களது தூண்டுதலும் நெருக்குதலும், மனேஜரின் மகளுடைய திருமணத்தன்று என்னை தலைவர் றஊப் ஹகீமுடனான சந்திப்பு ஏற்படுத்தப் பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை கட்சிக்காக என்னால் முடியுமான பணிகளைச் செய்துகொண்டிருக்கிறேன்.

நாம் எதிர்கொண்ட ஜனாதிபதித் தேர்தல்கள்

17-11-2005ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் செயலாற்று அதிகாரமுடைய ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலில் திரு. மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் 4887152 வாக்குகளைப் பெற்று நாட்டின் ஜனாதிபதியாகப் பொறுப் பேற்கிறார். இவர் பெற்ற வாக்குகள் 50.29% மாகக் காட்டியது. இதே தேர்தலில் SLMCயும் மருதமுனை மக்களும் பெருமளவில் ஆதரித்த ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் திரு. ரணில் விக்ரமசிங்க அவர்கள் 48.43% மான 4706366 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியைத் தழுவிக்கொள்கிறார். இரண்டு வேட்பாளர்களுக்குமிடையிலான 28632 வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளாக அமைந்தன.

ஆறு வருடங்களைக் கொண்ட ஜனாதிபதி பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் ஒரு வருடம் இருந்த போதிலும்கூட ஒரு வருடம் முன்னதாக இலங்கையின் ஆறாவது ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தீர்மானித் ததன் பிரகாரம் 26-01-2010ஆம் திகதி மேற்படி தேர்தல் நடைபெற்றது. இவரை எதிர்த்து திரு. சரத் சந்திரலால் பொன்சேகா அவர்கள் களமிறங்கியிருந்தார். இவர் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகவும், யுத்த வெற்றியின் கதாநாயகனாகவும் இருந்தமை மற்றும் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் முழு ஆதரவைப் பெற்றிருந் தமை; இத்தேர்தலில் இவரே வெற்றிபெற வாய்ப்புக்கள் அதிகமாகஇருந்ததாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பப்பட்டது. எமது சி.ல.மு. காங்கிரசும், மருதமுனை மக்களும் அதிகபட்ச ஆதரவினை அவருக்கு வழங்கியது மட்டுமல்லாமல் வடக்கு கிழக்கு மாகாணங் களிலுள்ள யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல ஆகிய ஐந்து மாவட்டங்களையும் மத்திய மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களில் நுவரெலியா மாவட்டத்தையும் திரு. பொன்சேகா அவர்கள் அதிகளவு வாக்குகளைப் பெற்றிருந்ததாகத் தேர்தல் முடிவுகள் காட்டி நின்றன. இருந்த போதிலும் இத்தேர்தல் முடிவுகள் நமது எதிர்பார்ப்புக்களைத் தவிடுபொடி யாக்கும் விதத்தில் அமைந்ததை இன்றும் சிலர் ஏற்றுக்கொள்ள மறுப்பதும் இங்கு நோக்கப்படல் வேண்டும்.

தேர்தல் முடிவுகள் இவ்வாறு அமைந்தன.

மஹிந்த ராஜபக்ஷ	-	**6015934**	-	**57.88%**
சரத். சந்திரலால் பொன்சேகா	-	**4173185**	-	**40.15%**

மேற்படி முடிவுகளின் பிரகாரம் வடக்கு, கிழக்குத் தமிழ் முஸ்லிம்களுடைய விருப்புகள் எல்லாம் தகர்த்தெறியப்பட்டு 1842743 வாக்குகள் வித்தியாசத்தில் திரு. ராஜபக்ஷ அவர்களின் வெற்றியானது தனிச்சிங்கள சமூகத்தின் வெற்றியாகவே பார்க்கப்பட்டது.

இங்கு நாம் ஊன்றிப் பார்க்க வேண்டிய விடயம் யாதெனில் மேற்படி இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் நாம் தற்போதைய ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களை ஆதரித்து நிற்கவில்லையென்பதும் இக்கால கட்டங்களில் எதிர்க்கட்சி சார்ந்த அரசியலிலேயே நாமும் நமது மக்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வழிநடாத்தலை ஏற்று செயல்பட்டிருக்கிறோம் என்பதே. ஒரு சிறு தொகையினர் இதற்கு மாற்றமான நிலைப்பாட்டில் இருந்தமையையும் நாம் புறந்தள்ள முடியாது.

பாராளுமன்றத் தேர்தல் - 2010

இலங்கையில் புரையோடிப் போயிருந்த இனப்பிரச்சினை காரணமாக இந்த நாட்டை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த வன்முறைகளும், பயங்கரவாதங் களும், அதனைத் தலைமையேற்று நடத்தி வந்த பிரபாகரன் மற்றும் அவ்வமைப்பினர் முற்றாக அழிக்கப் பட்ட நிகழ்வு நாட்டின் ஜனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஷ அவர்களை ஒரு வீர புருஷனாகவே சிங்கள மக்கள் மத்தியில் காட்டி நின்றது. 2009 ஏப்ரல் 19 முள்ளிவாய்க்கால் வெற்றியானது இலங்கையில் மட்டுமல்ல பல வெளிநாட்டுத் தலைவர்களாலும் போற்றிப் பேசப்பட்ட வரலாறு இலகுவில் மறக்க முடியாதது. இவ்வாறு இலங்கையின் சரித்திர நாயகனாக பெரும்பான்மை சிங்கள மக்களால் ராஜபக்ஷ அவர்கள் போற்றப் பட்ட சந்தர்ப்பத்தில்தான் இலங்கையின் பதினான்காவது பாராளுமன்ற தேர்தல் 2010 ஏப்ரல் 8ம் திகதி நடாத்தப்பட்டது. இத்தேர்தல் முடிவானது வரலாறு காணாத ஒரு வெற்றியினை பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஈட்டிக் கொடுப்பதானது சிறுபான்மை மக்களிடையே ஒரு சிந்தனை மாற்றத்தை வேண்டி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகிதாசாரத் தேர்தல் முறையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுப்பதென்பது ஒரு போதும் சாத்தியமானதல்ல எனக்கூறிய இத்தேர்தல் முறையை அறிமுகம் செய்த ஐக்கிய தேசியக் கட்சியினரின் கூற்றுக்கு மாற்றமாக 2010ம் ஆண்டுத் தேர்தலில் 160 தேர்தல் தொகுதிகளில் 135ஐத் தம் வசப்படுத்திக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு வெறும் 6 ஆசனங்களே தேவையாக இருந்தமையையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

இவ்விடயத்தில் நமது மருதமுனையின் வகிபாகம் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் வழிநடாத்துதலின் கீழ் நாம் மேற்படி வெற்றிக்கு உரிமைகோர முடியாதவர்கள் என்பது மட்டுமல்ல SLMC எமது கட்சி என்ற அடிப்படையில் நமது மண்ணும் மக்களும் அதை ஏற்று வருகின்றமை இங்கு பதிவுசெய்யப்பட வேண்டியதே.

மாகாண சபைத் தேர்தல்கள்

2008-05-10இல் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்ற வேண்டும் என்ற பாரிய எதிர்பார்ப்பில் தலைவர் றஊப் ஹக்கீம், செயலாளர் நாயகம் ஹஸன் அலி, தவிசாளர் பஷீர் சேகுதாவூத் ஆகிய மூவரும் தமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இராஜினாமாச் செய்து மூன்று மாவட்டங்களையும் மூவரும் பிரதிநிதித்துவப்படுத்தி களத்தில் குதித்த சம்பவம் இத்தேர்தலில் ஒரு உற்சாகத்தையும், விறுவிறுப்பையும் ஏற்படுத்திய நிகழ்வுகள் என்பன இன்றும் மறக்க முடியாதன.

மேற்படி தேர்தலில் சி.ல.மு.காங்கிரஸ் சார்பில் எமது மகன் அமீருல் அன்ஸார் மவ்லானா சட்டத்தரணி அவர்களும் அதாவுல்லா அணி சார்பில் துல்சான் அவர்களும் களமிறங்கியதும் மருதமுனை மக்கள் அன்சார் மவ்லானா பிரதிநிதித்துவப்படுத்திய SLMCக்கு அதிகபட்ச வாக்கினை அளித்ததும் நினைவில் உள்ளன. இத்தேர்தலில் நமக்குக் கிடைத்த பாடம் ஒன்றைப்பதிவு செய்தல் இங்கு பொருத்தமானது. அது மற்ற முஸ்லிம் கிராமத்தவர்கள்; அதிலும் குறிப்பாக கல்முனைக்குடி, சாய்ந்தமருது மக்கள் எமக்கு வாக்களிக்கவில்லை என்ற கசப்பான உண்மையை மனங்கொண்டேயாக வேண்டும். இவ்விடயத்தை பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்கள் பகிரங்க மேடையில் ஏற்றுக் கொண்டதும்; இதற்குப் பரிகாரமாக அடுத்த மாகாண சபைத் தேர்தலில்; மருதமுனைக்குத் தமது பிரதேசத்தின் அதிகபட்சமான வாக்குகளைத் தருவதற்குத் தான் முன்னின்று உழைப்பேன் என்ற உறுதிமொழியையும் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது நிறைவேறியதா....?

ஆனால் இத்தேர்தலில் அமைச்சர் அதாவுல்லாஹ் அவர்களின் பிரதிநிதியாகப் போட்டியிட்ட சகோ. துல்சான் அவர்கள் வெற்றிபெற்று எமது மண்ணின் இரண்டாவது மாகாண சபை உறுப்பினர் என்ற வரலாற்றைப் பதிவுசெய்தார். இவருக்காக அக்கரைப்பற்று மக்கள் அதிகளவான வாக்குகளை வழங்கியமையும் ஒரு வரலாறாகும்.

2012 செப்டம்பர் 08ம் திகதி நடாத்தப்பட்ட கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பரபரப்பாக நடைபெற்றது மட்டுமல்லாமல் முஸ்லிம் முதலமைச்சர் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோசமும் மேலோங்கி யிருந்தமை முஸ்லிம் காங்கிரஸ் சார்ந்த ஒருவர் முஸ்லிம் முதலமைச்சர் என்ற மகுடம் சூடப்போகின்றார் என்ற எதிர்பார்ப்புகளுடன் முன்னெடுக்கப்பட்டது. இதில் எமது மண்ணைச் சேர்ந்த ஏ.ஆர்.எம். அமீர், எம்.எல். துல்கர் நயீம் (துல்சான்) ஆகிய இருவரும் களமிறக்கப்பட்டனர். இதில் துல்சான் கலைக்கப்பட்ட மாகாண சபையின் அதாவுல்லா அணியின் மாகாண சபை உறுப்பினராகவிருந்து அடுத்த தேர்தலில் அவ்வணியில் இவருக்குப் பதிலாக வேறொருவர் களமிறக்கப்படுவதனையும், வேறும் பல அதிருப்தியினாலும் SLMC உடன் இணைந்து தேர்தல் கேட்கவிரும்பிய காரணத்தினாலும் தலைமையும் கிராமமட்ட கட்சி உறுப்பினர்களும் விரும்பியதனாலும் அவர் தேர்தல் களத்தில் குதித்தார்.

மேற்படி தேர்தலில் மருதமுனை மகன் ஒருவரை மாகாண சபை உறுப்பினராகக் காண ஒத்துழைப்பு வழங்குவோம் என்ற பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்களின் வாக்குறுதி ஒன்றும் இருந்த காரணத்தினாலும் துல்சான் அவர்களின் நெருங்கிய நண்பராக ஹரீஸ் அவர்கள் இருந்ததாலும் கல்முனைக்குடி, சாய்ந்தமருதிலிருந்து MP அவர்களுடைய கணிசமான வாக்குகள் எமக்குக் கிடைக்கலாம் என்ற எண்ணம் எவ்வாறாயினும் எமது மண்ணுக்கும் SLMC சார்பாக ஒரு மாகாண சபை உறுப்பினர் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட வாய்ப்பிருக்கிறது என்ற நம்பிக்கையைத் தந்தது. ஆனால் தேர்தல் முடிவுகள் வேறு விதமாக அமைந்தன.

அமீர் 8520 வாக்குகளையும், துல்சான் 6556 வாக்குகளையுமே பெற்றனர். மருதமுனை வாக்களிப்பு நிலையங்களிலிருந்து கொண்டு செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள் அம்பாரை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியில் அறை இலக்கம் 27இல் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம்,

SLMC	-	5252	65.54%
UPFA	-	1693	20.18%
UNP	-	506	6.02%
PMGG	-	183	2.17%
TNA	-	34	0.40%

செல்லுபடியான வாக்குகள்	7668	
நிராகரிக்கப்பட்ட வாக்குகள்	729	8.68%
அளிக்கப்பட்ட வாக்குகள்	8397	
மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை	11319	
அளிக்கப்பட்ட வாக்கு வீதம்		74%

இதுவே அம்பாரை மாவட்டத்தின் அதிகூடிய வாக்குப் பதிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேர்தலில் SLMC வேட்பாளர்கள் தவிர UPFA சார்பில் ஜே.எம். சுபைர் ஹாஜி அவர்கள் போட்டியிட்டு 7954 விரும்பு வாக்குகளையும், ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிட்ட சுவிஸ் சித்தீக் அவர்கள் 598 வாக்குகளையும், T.N.A. சார்பில் போட்டியிட்ட துவான் புனைட் அவர்கள் 455 விருப்பு வாக்குகளையும் பெற்றிருந்தனர். மேற்சொன்ன மூவரும் SLMCஇன் ஆரம்பகால உறுப்பினர்கள் என்பதும் மனம்கொள்ள வேண்டியது. இத்தேர்தலில் SLMC சார்பில் போட்டியிட்டுத் தெரிவான நால்வருக்கும் எமதூரிலிருந்து கணிசமான வாக்குகள் வழங்கப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதே. பின்வரும் அட்டவணை இதற்கு ஆதாரமாகும்.

பெற்ற மொத்த வாக்குகள்	மருதமுனையிலிருந்து பெற்ற வாக்குகள்
தவம் - 32330	3335
ஜமீல் - 22357	1217
மன்சூர் - 21753	1091
நஸீர் - 18327	92

இத்தேர்தலில் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் துல்சான் அவர்களை மாகாண சபை உறுப்பினராக்கியதைப் போன்றதொரு நிகழ்வு சுபைர் ஹாஜி அவர்களுக்கும் வழங்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்ததை அவர்களது தேர்தல் பிரச்சார மேடைகளில் அறியக்கூடியதாக இருந்தது.

இந்த இடத்தில் இன்னொன்றையும் கூறவேண்டும். 2012 மாகாண சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டவுடன் ஆட்சியமைக்கும் கட்சி எது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பும் வாய்ப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கே இருந்தது. அரசுடனா அல்லது தமிழ்த் தேசியத்துடன் சேர்ந்தா ஆட்சியமைப்பது என்ற தீர்மானத்தை ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் எவ்வாறு எடுக்கப்போகிறது; அதன் தலைவர் இந்த விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்வார் என்பன போன்ற விடயங்கள் சூடுபிடித்துக் காணப்பட்டன. எமது ஆதரவாளர்கள் சிலர் தமிழ்த் தரப்போடு சேர்ந்தே ஆட்சியமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தனர். உண்மையில் இவ்வாறு அவர்கள் எண்ணுவது ஒன்று அவர்கள் வரலாற்றை மறந்தவர்களாகவோ அல்லது சிந்தனைக் குறைபாடுள்ளவர்களாகவோதான் இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கின்ற ஒவ்வொரு தீர்மானமும் சமூகம் சார்ந்ததாகவே இருக்கும். தமிழ்த் தரப்புடனோ அல்லது அரசுடனோதான் சேர்ந்து அரசியல் செய்ய வேண்டும் என்ற நிலையில் இக்கட்சி இல்லை. தேவையானபோது தேவையானவர்களுடன் சேர்ந்து அரசியல் செய்யும் ஒரு போக்கினையே அது கொண்டிருக்கிறது. அந்த வகையிலேயே அரசுடன் சேர்ந்து மாகாண சபை நிறுவப்பட்டது. தமிழ்த்தரப்புடன் சேர்ந்து ஆட்சியமைக்கக் கூடாது என்ற கொள்கையிலும் நாம் இல்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நமது அரசியலைத் தனித்து நின்றே நாம் செய்ய வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையே தற்போதைய நாட்டின் சூழ்நிலை சுட்டி நிற்கிறது. தமிழ்த் தரப்புடன் சேர்த்து ஆட்சி அமைப்பதற்கான காலம் இன்னும் கனியவில்லை. பின்னர் இது சாத்தியமாகக்கூட ஆகலாம்.

இங்கே இதற்கு முன்னர் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள் என்பன எமதூரைப் பொறுத்தமட்டில் தனித்து நின்று அல்லது எமது வாக்காளர்கள் ஒருமித்து நின்று வாக்களித்தாலும் ஒரு பிரதிநிதியைப் பெற்றுக்கொள் வதற்கான வாய்ப்புகள் அரிதாகவிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. எனவே இவ்விடயம் தொடர்பாக கட்சியும் அதன் தலைமைகளும் சி.ல.மு.கா.க்கு அதிகளவான வாக்குகளை வழங்கும் மருதமுனை மக்களுக்காக பிரதிநிதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதன் மூலமே தமது ஆதரவினைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள முடியுமாயிருக்கும். இது விடயத்தில் எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்கள் கூடிய கவனம் செலுத்துவது இன்றியமையாதது. ஏனெனில் அவருடைய தேர்தல் வெற்றிகளைத் தீர்மானிக்கும் காரணியாக இவ்விடயம் நோக்கப்படல் வேண்டும்.

மாநகர சபைத் தேர்தல்கள்

கல்முனை மாநகர சபை என்பது பிரதேச சபை, நகர சபை என இயங்கி வந்து 2002-04-15ம் திகதிய 1188/1/1/06/2001 என்ற வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மாநகர சபையாக மாற்றப்படுகிறது. இதன் முதலாவது மாநகர சபைத் தேர்தல் 2006-05-20ம் திகதி நடைபெற்றது. இத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட சில தவறு களினால் உரிய வேட்பாளர்களுக்குப் பதிலாக வேறு பெயர்களை (டம்மி) வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்து அவர்கள் உரிய முறையில் அவர்களது இராஜினாமாக் கடிதங்களைக் கொடுத்த பின்பே உண்மையான வேட்பாளர்கள் உறுப்பினர்களாக வரக்கூடிய சூழ்நிலை உருவானது. இதனால் போலி அல்லது டம்மி வேட்பாளர்களாக கமறுத்தீன், உமர் அலி, அமீருல் அன்ஸார் மவ்லானா, முர்ஷித் ஆகிய நால்வரின் பெயர் களுக்கு வாக்களித்து தெரிவு செய்யப்பட்டதும், இதன் இழுபறிநிலை இரண்டு வருடங்கள் நீடித்த கதையும் கட்சிக்கு ஒருபோதுமே தனது ஆதரவினைத் தராத கமறுத்தீன் அவர்கள் பிரதி மேயரான விடயங்களும் நடந்தேறின.

ஓரளவாக இரண்டு வருடங்களைத் தாண்டியே தேர்தல் களத்தில் இறங்கிய உண்மை வெற்றியாளர்களான மசூர்மவ்லானா, முஸ்தபா, அமீர், றகீப் ஆகிய நால்வரும் தமது பதவிகளைப் பொறுப்பெடுக்கக்கூடிய வாய்ப்புகள் உருவாயின. இச்சபையில் எமது மகன் மசூர்மவ்லானா அவர்கள் பிரதி மேயராகவிருந்து பின்னர் சில காலம் மேயராகவிருந்து தமது சேவையை வழங்கியமை குறிப்பிடப் பட வேண்டும்.

இரண்டாவது மாநகர சபைத் தேர்தல் 2011-08-10ஆம் திகதி நடைபெற்றது. இத்தேர்தலில் SLMC சார்பாக சட்டத்தரணி ஏ.எம். றகீப், எம்.எஸ். உமர்அலி, ஏ.எல்.எம். முஸ்தபா, ஏ.ஆர்.எம். அமீர் ஆகிய நால்வரும் வேட்பாளர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் எம்.வை. அக்மல் நிறுத்தப் பட்டதோடு ஜனாப். மஆரிப் தலைமையிலான சுயாதீன முன்னணியும் ஒரு வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்தது. இதில் அனைத்து வேட்பாளர்களும் எமதூரைச் சேர்ந்தவர்களாகவிருந்தபடியால் தேர்தல் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படலாமோ என்ற அங்கலாய்ப்பு பலரிடம் காணப்பட்டது.

ஆனால் கல்முனையின் கள நிலவரங்களைக் கவனித்து எமது முடிவுகள் எவ்வாறு அமையும் என்பது பற்றிய கருத்துக் கணிப்பீடுகளை எம்மால் செய்ய முடியுமாயிருந்தது. இவ்வாறான பல கருத்துக் கணிப்பீடுகள் எம்மால் முன் சென்ற தேர்தல்களின் போதும் வெளியிடப்பட்டமையும் அவற்றில் பெரும் பாலானவை சரியாகவே இருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டப்படல் வேண்டும். இந்த அடிப்படையில் 2011ஆம் ஆண்டு மாநகர சபைத் தேர்தலின் போதும் நாம் பகிரங்க மேடையில் வெளியிட்ட கருத்தொன்றினை முன்வைப்பது பொருத்தமானதாகும். அது என்னவென்றால் இத்தேர்தலின் முடிவுகள் எமது நான்கு வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் என்பது மட்டுமல்லாமல் இவ்வெற்றியாளர்கள் 3, 4, 5, 6ம் இடங்களைப் பெறுவார்கள் என்றும் கூறியிருந்தோம். தேர்தல் முடிவுகள் இந்த எமது கூற்றினை உண்மைப்படுத்தியதை எம்மால் என்றும் மறக்க முடியாது.

இது தொடர்பில் எத்தனையோ சுவையான சம்பவங்களை எம்மால் எழுத முடியுமாக இருந்தும் விரிவஞ்சி இத்தோடு முடித்துக்கொண்டு அடுத்த விடயத்திற்குச் செல்ல விரும்புகிறேன்.

கட்சி நடவடிக்கைகள்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மருதமுனையில் அறிமுகம் செய்யப்பட்ட 1980இற்குப் பின்னரான காலங்களில் அதன் அமைப்பாளர்களாக ஏ.எம். நாபி, என்.எம். இஸ்மாயில் ஹம்தூன் ஆகியோர்களும்; 1989 இறுதியிலிருந்து 2003 நடுப்பகுதி வரை நானும், அதற்குப் பின்னரான காலத்தில் அமீறுல் அன்ஸார் மவ்லானா, மர்ஹூம் ஏ.சீ.எம். சுபியான் அவர்களும் பின்னர் ஏ.எம். றகீப் சட்டத்தரணி அவர்கள் இன்று வரையும் இருந்து வருவதுடன் மத்திய குழுக்களின் தலைவர்களாகவும் அவர்களே கடமையாற்று வதும் ஒரு வழக்கமாகிவிட்டது. ஏனென்றால் இரண்டு பதவிகளையும் இருவர் செய்யக்கூடிய ஏற்பாடுகள் கட்சியில் உண்டு.

இவற்றில் எனது காலமான சுமார் 13 வருடங்கள் இந்தக்கட்சியினால் பாரிய அபிவிருத்திப் பணிகள் வேலைவாய்ப்புக்கள், நஷ்ட ஈடுகள், மானியங்கள் எனப் பல வகையான சேவைகளைச் செய்ய முடிந்தது மட்டுமல்லாமல் கட்சிப்பணிகள் கிரமமாக மேற்கொள்ளப்பட்டவற்றையும் இன்றும் பலர் சுட்டிக்காட்டுவர். ஒவ்வொரு குறிச்சுக்குமான கிளைகள் புனரமைக்கப்பட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குழுக்களும் அதற்கான தலைவர்கள், செயலாளர்கள் என நியமிக் கப்பட்டு அவர்களுக்கு மத்தியில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டு அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபார்சின் பேரிலேயே மேற்சொன்ன அனைத்து வேலைத் திட்டங்களும் மேற் கொள்ளப்படும் ஒரு நிலையிருந்தது. தினமும் எனது வீட்டில் கூடி கட்சிப் பணிகள் பற்றி உரையாடுவது மாதமொரு முறை கூட்டங்கள் போடுவது போன்ற வேலைகளும் நடந்தன.

கட்சி வேலைகள் செய்வதற்கும் கூட்டங்கள் போடுவதற்கும், தேர்தல்களைச் சந்திப்பதற்கும் நாங்கள் எவரையும் எதிர்பார்த்து நிற்கவுமில்லை. அப்போது கொந்தறாத்துக்கள் மூலம் பெறும் அன்பளிப்புக்கள் மூலமாகவும், அபிமானிகள் மூலம் பெறும் நன்கொடைகள் மூலமாகவுமே இப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. பல சந்தர்ப்பங்களில் மேற்படி செலவுகளை நானே பொறுப்பேற்க வேண்டியுமிருந்தது. இந்த இடத்தில் 2001ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது இடம்பெற்ற சம்பவமொன்றை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

மத்திய குழு கூடி நான்கு பெரிய கூட்டங்கள் நடாத்துவது, ஒவ்வொரு குறிச்சுக்கும் இரண்டு பொக்கட் மீற்றிங் நடாத்துவது பற்றியும், தேர்தல் தினச் செலவாக 15 ஓட்டோக்கள் பிடிப்பது சாப்பாட்டுச் செலவுகள் மற்றும் தேர்தல் நிலையங்களுக்குச் செல்பவர்கள் வாக்குகள் எண்ணும் நிலையங்களுக்குச் செல் பவர்களின் செலவுகள் என ரூபா 150,000/- செலவுகள் உத்தேச மதிப்பீடாகக் கணிக்கப்பட்டு, இத்தொகையை வேட்பாளர்களான அதாவுல்லாஹ், ஹரீஸ் ஆகியவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதனைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. இக்குழுவில் நானுட்பட லாஹிர் G.S., சுபியான், உமர்அலி, மஹ்றூப், நூறுல் பவுஸ், சித்தீக் என ஏழு பேர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு அடுத்த நாள் நாங்களனைவரும் இரு வேட்பாளர்களையும் சந்திக்கச் சென்றோம். அதாவுல்லாஹ் அவர்களிடம் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றித் தெளிவு படுத்தியபோது மிக உற்சாகமாகத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்ததுடன் தனது காசுப் பையைத் திறந்து ரூபா 19,000/- (பையிலிருந்த பணம் அவ்வளவுதான்) தூக்கி என்னிடம் நீட்டினார். அதனை லாஹிர் G.S. அவர்களிடமே ஒப்படைக் கும்படி நான் வேண்டிக் கொண்டதற்கிணங்க அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அடுத்து ஹரீஸ் அவர்களிடமும் வந்து விடயங்கள் கூறப்பட்டபோது அவர்களும் ரூபா 25,000/- (இருபத்தைந்தாயிரம்) வழங்கினார்கள். ஆக 19,000/- + 25,000/- என மொத்தமாக 44,000/- பணமே எமது கைக்குத் தேர்தலுக்காகக் கிடைக்கப் பெற்ற பணம். இப்போது சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் பணத்திற்காக எவ்வளவு சிரமப்பட்டிருப்போம் என்பதை. தேர்தல் திட்டமிட்டபடி முடிவுற்றது. செலவுகளும் குறைவின்றி நடந்தேறியது. இறுதியாகக் கணக்குப் பார்த்தபோது ரூபா 72,000/- அதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது. இத்தொகையில் ரூபா 10,000/- மர்ஹூம் சுபியான் அவர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இந்த விடயத்தை ஏன் கூற வருகின்றேன் என்றால், ஒரு விடயத்தைப் பொறுப் பெடுத்தால் அதைச் செய்து முடிப்பதற்குள் அவர் படுகின்ற சிரமங்கள் எவ்வாறு உள்ளன என்பதனைச் சொல்வதற்காகத்தான். இவ்வாறு எல்லாத் தேர்தல் களிலும் பல சிரமங்கள் பணச்சிக்கல்களைச் சந்தித்திருக்கிறேன். பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஷ்டங்கள் மட்டுமன்றி எனது வீடே தேர்தல் காரியாலயமாகவும் கட்சிக் காரியாலயமாகவும் இக்காலப் பகுதியில் செயல்பட்டதனால் டெலிபோன் பில், லைட் பில், தேநீர் செலவுகள் என எவ்வாறு சிரமப்பட்டிருப்பேன் என்பதனை உங்களிடம் மன ஆறுதலுக்காகப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

அடிக்கடி தற்போதைய அமைப்பாளர் றகீப் அவர்கள் என்னிடம் கேட்பார், எப்படிக் காக்கா நீங்கள் அவ்வளவு காலமும் சமாளித்தீர்கள் என்று. ஏனென்றால் கட்சி நடவடிக்கைகள் மிகக்குறைந்த இக்காலப்பகுதியிலேயே அவர் பாரிய சிரமங்களை எதிர்நோக்கும்போது கட்சியின் வளர்ச்சிக் காலங்களில் பொறுப்பிலிருந்த நான் எவ்வளவு சிரமங்களை எதிர்கொண்டிருப்பேன் என்பதற்கு அவரது இக்கேள்வியே சாட்சியமாகக்கொள்ளப் படல் வேண்டும்.

2000 செப்டம்பர் 16ம் திகதி ஸ்தாபகத் தலைவர் மறைந்ததன் பின்னர் கட்சிப் பணிகள் முன்னெடுக்கப்படுவதில் ஒரு தொய்வுநிலை காணப்படுவதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இந்நிலை கிராமமட்டத்தில் மட்டுமல்ல தேசிய மட்டத்திலேயும் இதே நிலைதான். ஆனால் பேராளர் மாநாடு மட்டும் வருடா வருடம் கூட்டப்படுவதானது கட்சியின் உத்தியோகத்தர்கள் இம்மகாநாட்டிலேயே அங்கீகாரம் பெற்று தேர்தல் காரியாலயத்தில் சமர்ப்பிப் பதனூடாகத்தான் கட்சியின் தொடர் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் முடியும் என்பதனாலாகும்.

இந்த நிலை தொடராமல் கட்சிப் பணிகளை மேற்கொண்டு கட்சியினை மக்கள் மத்தியில் ஒரு இயக்க சக்தியாக மாற்ற கட்சியின் சகல தரப்பினர்களும் முன்வருவதன் மூலமே எமது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எதிர்காலத்தில் நாம் முகம்கொடுக்க முடியுமாயிருக்கும்.

மேலே என்னால் வழங்கப்பட்ட சாட்சியங்களுக்குச் சாட்சிகளாகப் பின்வருவோர் களையும் பதிவுசெய்யாவிடில் இது முழுமை பெறாது. என்னுடைய எல்லாக் கட்சிச் செயற்பாடுகளிலும் தங்களையும் இணைத்துக்கொண்டு ஒத்தாசையாக இருந்த இவர் களுக்கு எனது பணிவினையும் நன்றியினையும் இதன் மூலம் செலுத்த விழைகிறேன். மர்ஹூம்களான ஏ.எம். நிஃமதுல்லாஹ் CDO, எஸ்.எம். றபிஉத்தீன் ஆசிரியர் ஆகியோர்களுடன் எம்.எஸ். உமர்அலி, என்.எம். அலி என்ற வாஹிட், ஏ.ஆர்.எம். சித்தீக், ஏ.எம். ஹிதாயத்துல்லா, ஐ. நூறுல் பவுஸ், பி.ரீ.எம். மஹ்றூப் ஆசிரியர் ஆகிய இவர்களுடன் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற வேளைகளில் எல்லாம் தன்னையும் எம்மோடு இணைந்து செயற்பட்ட ஐ.ஏ. ஹமீட் தவிசாளர் அவர்களையும் நினைவுகூர்கிறேன்.

இதற்கு மேலாக வை.எல். அன்ஸார், பீ.எம்.எம்.ஏ. காதர், எம்.ஏ. இனாமுள்ளாஹ், ஏ.எல்.எம். முஸ்தபா, கே. இஸ்மாயில் மிஹ்ழார், எம்.எம். சம்சுத்தீன், முதிலுத்தீன், றம்ஸான், ஹபீபுள்ளாஹ், அஷ்ரப், எஸ்.எம்.ஏ. கையூம், ஏ.எம்.ஏ. கபூர் போன்ற வர்களும் என் நன்றிக்குரியவர்கள் இன்னும் பலர் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் சம்பவங்கள் இன்னும் என் நெஞ்சைவிட்டு அகலாமல் இருக்கின்றன...

1989ஆம் ஆண்டு எமது பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களால எமதூருக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 350,000/- இனை ஏதாவது ஒரு கட்டிடம் கட்ட வேண்டும் என்ற நோக்கில் புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலய அதிபர், அல்-மனார் அதிபர், அல்-மினன் அதிபர் ஆகியவர்கள் மூவரிடமும் நான் நேரில் சென்று அவர்களது விருப்பத்தைக் கேட்ட போது அவர்கள் மறுத்தமையும்; ஷம்ஸ் மத்திய கல்லூரியில் அபிவிருத்திச் சபையின் செயலாளராக நான் இருந்த காரணத்தினால் அந்த அதிபரின் எதிர்ப் பையும் மீறி அந்த 350,000/- இற்கு ஒரு வாசிகசாலைக் கட்டிடம் கட்டியமையை நினைவுறுத்துகிறேன்.

1989ஆம் ஆண்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்காக வாக்களித்த மக்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் மஸ்ஜிதுன் நூறுக்கு வருகைதந்து நன்றி சொல்ல ஒலிவாங்கியை எடுத்த போது அந்த ஒலிவாங்கி அவரிடமிருந்து பிடுங்கப்பட்டமையும் ஒரு கசப்பான நிகழ்வு.

1991ஆம் ஆண்டு கட்சியின் 10ஆவது தேசிய மகாநாடு கொழும்பு 'பரடைஸ் பார்க்'கில் நடைபெற்றபோது கட்சியின் தலைமைக் காரியாலயமான 'தாருஸ்ஸலாம்' கட்டுவதற்கான ஆரம்ப நிதியாக ரூபா 25,000/- மருதமுனை மக்களின் சார்பாக தலைவர் அஷ்ரஃப் அவர்களின் முன்னிலையில் அப்போதைய கட்சியின் பொருளாளரும், தற்போதைய செயலாளர் நாயகருமான பா.உ. சகோ. எம்.ரி. ஹஸன் அலி அவர்களிடம் என்னால் கையளிக்கப்பட்ட விடயம் இந்த இடத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

ஒரு ஜனாதிபதித் தேர்தலின் போது அமைச்சராகவிருந்த மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் புலவர்மணி வித்தியாலயத்திற்கு வருகைதந்த போது, அவரை உள்ளிருந்து வெளியேற விடாமல் தடுத்து அவமானப்படுத்தியதையும் ஒரு கறைபடிந்த வரலாறாகவே பார்க்க வேண்டும்.

நிறைவாக...

ஒரு கிராமத்தின் அரசியல் வரலாறு ஒரு தேசத்தின் வரலாறு; அதேபோல உலக வரலாறுகள் எனப் பலராலும் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் உண்மையான வரலாறுகள் மாத்திரமன்றி, புனையப்பட்ட வரலாறுகள் மறுக் கப்பட்ட வரலாறுகள், மாற்றப்பட்ட வரலாறுகள், உருவாக்கப்பட்ட வரலாறுகள் எனப் பலவகை வரலாறுகள் வெளிவந்திருப் பதனை ஒரு சிறந்த வாசகனால் புரிந்துகொள்ள முடியும்.

இதற்குச் சிறந்த உதாரணங்களாக இஸ்லாமிய வரலாறுகள் வேண்டுமென்றே யூதர்களாலும், கிறிஸ்தவர்களாலும் மறுக்கப்பட்டும் மாற்றப்படும் எழுதப் பட்டிருக்கின்றன. அவற்றுக்கான மறுப்புக்கள் எழுதப்பட்டிருந்தாலும் அவை ஒரு குறிப்பிட்ட வர்களைச் சென்றடைவதோடு நின்றுவிடுகிறது. ஆனால் தொடர்ந்தும் மறுக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட வரலாறுகள் இஸ்லாமிய எதிர்ப்பாளர்கள் மத்தியில் நீடித்து நிலைத்து நிற்பதை நம்மால் கண்டுகொள்ள முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இன்று நேற்றிருந்து நடைபெறும் விடயமல்ல. மஹாவம்சத்தில் எல்லாளனை ஒரு எதிரியாகக் காட்ட முயர்ச்சித்திருப்பதும் இதனால் மாற்றினத் தவர்களுடன் முரண்பட்டு வன்மம் பாராட்டும் ஒரு நடைமுறையைப் பேரினத் தவர்கள் இந்த மகாவம்சத்திலிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். எனவே இவ்வாறான வரலாறுகள் அழிக்கப்படல் வேண்டும் என்ற ஒரு கருத்தை அண்மையில் ஒரு சிங்களப் பேராசிரியர் வெளியிட்டிருந்தமை இங்கு நோக்கத்தக்கது.

இவ்வாறு இஸ்லாமிய வரலாறுகள் மறுக்கப்பட்டமை, மறைக்கப்பட்டமை தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தின் துணைத் தலைவரும், இலங்கை உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியுமாகிய திரு. சீ.ஜி. வீரமந்திரி அவர்கள், தனது "இஸ்லாமியச் சட்டவியல் ஒரு சர்வதேசப் பார்வை" என்ற நூலில் நிறையவே பேசியிருப்பதை இங்கு குறிப்பிட விரும்பு கிறேன். வேற்று மதத்தவர்களால் தற்காலத்தில் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதன் மூலம், நீண்ட நாட்கள் புனையப்பட்ட மறைக்கப்பட்ட வரலாறுகள் நிலைத்து நிற்காது என்பதற்குக் கட்டியம் கூறுவனவாக அமையும் என்று நாம் திடமாக நம்ப முடியும். எழுதப்படும் உண்மையான வரலாறுகள் நீடித்து நிலைத்து நின்று அடுத்த சந்ததியினரையும் சென்றடைவதோடு அவை அவர்களுக்கோர் ஆவணமாகவும், அப்போது அவை வழிகாட்டியாகவும் அமைய முடியும்.

தற்போது நாட்டில் நம்மால் நேரடியாகவே காணக்கூடிய ஒரு விடயத்தையும் இங்கு சொல்வது பொருத்தமானதே. அதாவது பாராளுமன்றமாக இருக்கட்டும், பத்திரிகைகளாக இருக்கட்டும், வானொலிகள், தொலைக்காட்சிகள், பகிரங்க மேடைகள் என எல்லா இடங்களிலும் மிகப்பொறுப்புவாய்ந்தவர்களினால், அரசியல்வாதிகளினால் முஸ்லிம்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச் சாட்டுக்களாகும். அல்கைதா என்றும், தலிபான் என்றும், ஜிஹாத் என்றும், முஸ்லிம் தீவிரவாதிகள் என்றும் இல்லாத ஒன்றைப்பற்றி அடிக்கடி பேசிக்கொண்டிருக் கிறார்கள். இலங்கையின் பொலிஸ்மா அதிபர் மட்டுமன்றி பாராளுமன்றத்தின் முக்கிய அமைச்சர்கள் பலரின் மறுப்பறிக்கைகளுக்கு மத்தியிலும் தமது போக்கில் இவ்விடயத்தை தொடர்ந்தேர்ச்சியாகக் கூறிக்கொண்டிருப்பதானது எனது பார்வையில்; இப்போது இவ்விடயங்கள் எமக்குப் பொய்யானதே என்பது தெரிந்தாலும், இன்னும் ஐம்பதோ அல்லது நூறு வருடங்களுக்குப் பின்னர் வருகின்ற சமூகத்துக்கு ஒரு வரலாற்றைத் திணிக்க முற்படுவதாகவே தெரிகிறது. அதாவது எமது சிங்களத் தலைவர்களும், பாதுகாப்புப் படையினரும்; தமிழ்ப் பயங்கரவாதத்திற்கு எதிராக மட்டுமன்றி, முஸ்லிம் பயங்கரவாதத்திற்கெதிராகவும் போராடியே இந்த நாட்டை மீட்டிருக்கிறார்கள் என்ற ஒரு புனையப்பட்ட வரலாற்றைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

இந்த வகையில் எமது கிராமத்து வரலாறுகள் என எழுதியவர்களும் ஏதோ ஒரு வகையில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய வரலாறுகளை மறந்தோ அல்லது மறைத்தோ இருக்கிறார்கள் என்பது ஒரு கவலைக்குரிய விடயமாகவே என்னால் கருதமுடிகிறது. எனவேதான் எனது இந்த "மருதமுனையில் அரசியல் அதிகாரம்" என்ற மகுடத்தின் ஒரு உப தலைப்பான "மருதமுனையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரவேசம் - எனது சாட்சியம்" என்ற விடயத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் கல்வி வரலாறு

எஸ்.எல். அஜ்மல்கான் ஆசிரியர்

மருதமுனையின் கல்வி, அதன் வரலாறு, அதன் வளர்ச்சிக்காக வித்திட்ட மகான்கள், அரசியல்வாதிகள், முன்னோடிகள், செல்வந்தர்கள், கல்வியில் அக்கறைகொண்ட பெருந்தகைகள், மருதமுனை எதிர்கொண்ட சவால்கள், மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்கு சாதகமாக அமைந்த காரணிகள் மற்றும் மருதமுனையின் தற்போதைய கல்விப்போக்கு என்பன ஆய்வுக்கு உட்படுத்தப் பட வேண்டிய அம்சங்களாக அமைந்துள்ளன.

ஏனென்றால், மருதமுனையின் கல்வி வளர்ச்சி பல்வேறு சந்தர்ப்பங்களில் பாராட்டுக்களுக்கும் சிலவேளைகளில் விமர்சனங்களுக்கும் உள்ளாக்கப் பட்டமையே. மருதமுனையின் கல்விக்கு ஒரு குறிப்பிடத்தக்க நீண்ட வரலாறு இருப்பினும், ஏனைய பிரதேசங்களில் கல்வி எம்மைவிட நீண்ட வரலாற் றினையும், கல்விச் சாதனைகளையும் ஏற்கனவே கொண்டவையாகக் காணப்படு கின்றன.

இருப்பினும் மருதமுனையின் நிறுவன ரீதியான கல்வியைத் தொடங்கி வைத்த மருதமுனையின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்த அப்போதைய மருதமுனை "அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" என அழைக்கப்பட்ட தற்போதைய மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியுடன் மருதமுனை கல்வி வரலாறு ஆரம்பமாயிற்று. எனினும் இப்பாடசாலையின் தொடக்கத்திற்கு முன்னர் மருதமுனை மக்கள் தங்களது கல்வியை பெற்றுக்கொள்ள வேறு பிரதேசங்களுக்கும், ஊர்களுக்கும் சென்று தேடிப் பெற்றுக்கொண்டனர்.

அவ்வாறான பாடசாலைகளில் பெரியநீலாவணை கோவிலடிப் பாடசாலை (தற்போதைய விஷ்ணு மகா வித்தியாலயம்), பாண்டிருப்பு அரசடிப்பாடசாலை (தற்போதைய நாவலர் வித்தியாலயம்), கல்முனை உவெஸ்லியன் தர்மப் பாடசாலை (தற்போதைய உவெஸ்லி உயர்தரப் பாடசாலை) ஆகியன குறிப்பிடத் தக்கவை.

மருதமுனையின் முதலாவது பாடசாலை உருவாக்கம்
(கமு/ மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி)

மருதமுனையின் கல்வி வரலாற்றை தொடக்கி வைத்த பெருமை, நூற்றாண்டு கண்ட அல்மனார் மத்திய கல்லூரியையே சாரும். 1911ம் ஆண்டு மர்ஹூம் மு.சு. இப்றாலெவ்வை போடி அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிரந்தர காணியில் "மருதமுனை அரசினர் கலவன் பாடசாலை" ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது தலைமை ஆசிரியராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னையா கடமையாற்றி கல்விப்பணி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையில் எமதூரின் முதுபெரும் கல்விமான் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் முதலாம் வகுப்பில் சேர்ந்து பயின்றார் என்பதை எமதூரின் கல்வி வரலாறு சுட்டிக்காட்டுகின்றது. இப்பாடசாலையில் கற்றுத்தேர்ந்த புலவர்மணி அவர்கள் இதே பாடசாலையில் ஆசிரியராகவும், 1949இல் தலைமை ஆசிரியராகவும் பணிசெய்தமை இப்பாடசாலையும், எமதூரும் செய்த பாக்கியமாகும்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1962ஆம் ஆண்டு அல்-மனார் மகா வித்தியாலயமாகவும், அதன் பின்னர் மத்திய கல்லூரியாகவும் தரமுயர்ந்து கல்விப் பணியை எமதூர் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிரதேச மாணவர் களுக்கும் வழங்கி எண்ணிலடங்காத கல்விமான்களையும், பல்துறைசார் நிபுணர் களையும், நற்பிரஜைகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

1911ம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரியானது படிப்படியாக சகல பௌதீக, மனித வளங்களைப் பெற்று எமது பிரதேசத்தில் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு கல்லூரியாக மிளிர்கின்றது. இக்கல்லூரியானது தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தனது கல்விப்பணியை சிறப்பாகச் செய்து வந்திருந்தாலும் கூட, 1980ம் ஆண்டின் பின்னர் தேசிய ரீதியாக பல சாதனை களைப் படைத்ததன் மூலமாக முழு இலங்கையிலும் தனது பெயரைப் பதித் துள்ளது என்றால் மிகையில்லை.

மருதமுனையின் முக்கிய அடையாளங்களில் (Landmark) ஒன்றாக விளங்கும் அல்-மனார் மத்திய கல்லூரியானது கல்விப் பணியை மட்டுமன்றி பல்வேறு சமூகப்பணிகளின் பங்காளியாக செயற்பட்டிருப்பது அதன் அங்கீகாரத்தை மேலும் உயர்த்துகின்றது. மருதமுனையில் நடைபெறும் முக்கிய கூட்டங்கள், கலந்துரையாடல்கள், பாராட்டு விழாக்கள், வரவேற்பு விழாக்கள், பாடசாலை தவிர்ந்த நிறுவனங்களின் கலைநிகழ்ச்சிகள், பரிசளிப்பு விழாக்கள், நூல் வெளி யீட்டு விழாக்கள் என பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளின் நிகழ்வரங்காக இக்கல்லூரி தனது பங்களிப்பை தொடர்ந்து செய்கின்றது. இயற்கை அனர்த்தங் களின் போதும், யுத்த சூழ்நிலைகளின் போதும் அகதி முகாமாகவும், அனர்த்த மத்திய நிலையமாகவும், சமாதான செயலகமாகவும் அதன் பரிமாணங்களை நாம் ஒவ்வொருவரும் நினைவில் வைத்திருக்கக் கூடியன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் போதும், அவ்வப்போது ஏற்பட்ட இன முறுகல்களின் போதும், தமிழ் முஸ்லிம் உறவுகளின் பாலங்களில் ஒன்றாக அல்-மனார் மத்திய கல்லூரியை நாம் காண்கிறோம். அக்காலையில் இக்கல்லூரியில் அதிபராகவிருந்த ஏ.எச்.எம். மஜீத் அவர்கள் ஒரு சமாதானப் பிரியராக இருந்த காரணத்தால், இக்கல்லூரி யையும் சமாதானத்துக்காக பயன்படுத்தினார். தமிழ் மாணவர்கள் பலர் எவ்வித அச்சமுமின்றி அக்கல்லூரியில் கற்றுத்தேறினர். தமிழ் ஆசிரியர்கள் எவ்வித வேறுபாடுகளின்றி சந்தோசமாக அவர்களது பணியை இக்கல்லூரிக்கு வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-மனார் மத்திய கல்லூரியானது தனது கல்விப்பணியை மருதமுனைக்கு மட்டும் மட்டுப்படுத்தாமல் இலங்கையில் நாலா புறங்களிலிருந்தும் கல்வித் தாகத்துடன் வரும் மாணவர்களுக்கு பாடம் புகட்டி அவர்களை துறைசார் நிபுணர்களாக மாற்றியுள்ளதற்கு அம்மாணவர்களே சான்று. இக்கல்லூரியானது அன்று தொடக்கம் தனது கல்விப் பணியைச் செய்துவருவது எமதூருக்குப் பெருமை.

இன்றைக்கு ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர் மருதமுனையில் ஆண், பெண் பாடசாலை பிரிப்பு தொடர்பில், அல்-மனார் மத்திய கல்லூரியானது உள்வாரியாக இப்பிரிப்பை மேற்கொண்டு அதனது ஆரம்ப பிரிவை பெண்கள் பிரிவாகவும், ஆரம்ப பிரிவாகவும், அதன் உயர் பிரிவை ஆண்கள் பிரிவாகவும் அமைத்து பாடசாலையை கொண்டு நடாத்துவது கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்கவொரு விடயமாகும்.

மருதமுனையின் இரண்டாவது அரசாங்க பாடசாலை உருவாக்கம்
(கமு/ மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயம்)

மருதமுனை அல்-மனார் வித்தியாலயம் தனது கல்விப் பணியைச் சிறப்பாக செய்து கொண்டிருந்த வேளையில் மருதமுனையின் பெண்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அப்போதைய மருதமுனையின் புத்திஜீவிகளாலும், அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பினாலும், 1941ஆம் ஆண்டு "மூத்தவர்" என்ப வரால் பெரியார் மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்த காணியில் "மருதமுனை தெற்கு பெண்கள் பாடசாலை" (தற்போதைய அல்-ஹம்றா) ஆரம்பிக்கப்பட்டு பெண் மாணவிகள் மாத்திரமே அங்கு சேர்த்துக்கொள்ளப் பட்டனர். இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட பெண் மாணவிகள் இதே பாடசாலையில் தொடர்ந்து கல்விகற்றனர்.

இவ்வாறு பெண்கள் பாடசாலையாக பரிணமித்த இப்பாடசாலை "மருதமுனை தெற்கு அரசினர் பெண்கள் பாடசாலை" எனவும், தற்போதைய அல்-மனார் மத்திய கல்லூரி, "மருதமுனை வடக்கு அரசினர் ஆண்கள் பாடசாலை" எனவும் தரமுயர்ந்து, மருதமுனையில் ஆண்களுக்கு ஒரு பாடசாலையெனவும், பெண்களுக்கு ஒரு பாடசாலை எனவும் கல்விப்பணி செய்துகொண்டிருந்தன.

இவ்வாறு பெண்களுக்கென தனியான பாடசாலை உருவாக்கப்பட்டு நிருவகிக்கப்பட்ட போதிலும், பெண்கள் உயர்கல்வியில் அதிக நாட்டம் காட்டாமையினால் இப்பெண் பாடசாலை 1942ல் ஒரு அரசினர் கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டு இன்றுவரை இயங்கி வருகின்றது. இதுவே எமதூரில் இரண்டாவதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாகும்.

அல்-ஹிறா வித்தியாலயம் (அல்-மனார் மத்திய கல்லூரி - பெண்கள் பிரிவு)

மேற்படி இருபெரும் கலவன் பாடசாலைகளும் கல்விப் பணியை தொடர்ந்து கொண்டிருக்கும் வேளையில் 01-09-1959இல் மருதமுனை "ஆலயடிப் பாடசாலை" என்றழைக்கப்பட்ட அல்-ஹிறா வித்தியாலயம் தற்போது அல்-மனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கல்லூரி பெண்கள் பிரிவு அமைந்திருக்கும் இடத்திலேயே ஆரம்பிக்கப் பட்டது. அப்பாடசாலை ஆரம்பத்தில் ஆரம்ப கலவன் பாடசாலையாகவே இருந்தது. பின்னர் இது அல்-மனார் மகாவித்தியாலயத்துடன் இணைக்கப் பட்டது. இந்த இணைப்பால் அல்-மனார் மத்திய கல்லூரிக்குத் தேவையான போதுமான நில, கட்டிட வசதிகள் கிடைத்தன.

ஷம்ஸ் மத்திய கல்லூரி

இதே ஆண்டில் மருதமுனை கிழக்குப் பிரதேசத்தில், மறைந்த ஐ.எம். அப்துல் குத்தூஸ் தலைமை ஆசிரியர் அவர்களின் பெருமுயற்சியால், அப்போதைய அரசியல் வாதிகளினதும், புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் போன்ற கல்வி அதிகாரிகளின் பங்களிப்புடனும் "மருதமுனை கிழக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை" என்ற பெயரில் ஒரு ஆரம்பப் பாடசாலை 114 மாணவர்களுடன் தற்போது அல்-மதீனா வித்தியாலயம் அமைந்திருக்கும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இது 1968ஆம் ஆண்டு வரையும் நாலாம் வகுப்பு வரை நடைபெற்றது. அதன் பின்னர் 1968இல் ஷம்சுல் இல்ம் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப் பட்டு ஐந்தாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 1968இல் அப்போதைய கல்வி அமைச்சர் ஈரியகொல்லயின் திட்டப்படி 6, 7, 8ம் வகுப்புக்கள் ஆரம்பித்து நடாத்தப்பட்டன. 1975இல் அப்போதைய கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் திட்டப்படி 6, 7, 8ம் வகுப்புக்கள் கலைக்கப்பட்டன. இப்பாடசாலை 1959ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது அதன் தலைமை ஆசிரியர் பொறுப்பை இரண்டு மாதங்கள் ஜனாப். வீ.எம். இஸ்மாயில் (மருதூர்க் கொத்தன்) பொறுப்பேற்று நடாத்தினார். அதன் பின்னர் 01-11-1959 தொடக்கம் 23-11-1970ம் ஆண்டுவரை இப்பாடசாலையில் ஐ.எம்.ஏ. குத்தூஸ் தலைமை ஆசிரியராக கடமைபுரிந்தார்.

இவ்வாறு கிழக்கின் விடியலாக சகல பௌதீக வளங்களையும் கிட்டத்தட்ட 2000 மாணவர்களையும் கொண்டு மிளிர்ந்து கொண்டிருந்த ஷம்ஸ் மத்திய கல்லூரியானது ஆழிப்பேரலையில் சிதறுண்டு சின்னாபின்னமானது. இக்கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்த 262 மாணவர்களையும், 2 ஆசிரியர்களையும், நூற்றுக்கணக்கான பெற்றோர்களையும் அதிகமான பௌதீக வளங்களையும் பறிகொடுத்த இப்பாடசாலையின் எதிர்காலம் கேள்விக்குறியானது.

1978ஆம் ஆண்டு சூறாவளியின் பின்னர் இப்பாடசாலையை புனருத்தாரனம் செய்து தரமுயர்த்தப் பாடுபட்ட அதே குழுவினருடன், ஏனையோரும் சேர்ந்து மஸ்ஜிதுல் கபீர் நிருவாகத்தின் ஒத்துழைப்புடன் தற்காலிகமாக இப்பாட சாலையை இதே பள்ளிவாசல் வளவிலும், அருகிலிருந்த தனியார் வீடுகளிலும் இயங்கவைக்க எடுத்த முயற்சியும் அவர்களின் அயராத உழைப்பும் இப்பாட சாலைக்கு நம்பிக்கையூட்டின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே காலகட்டத்தில் பல்வேறு காரணங்களால் இப்பாடசாலையில் கல்விகற்ற மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது. அவைகளுள் பிரதானமாக

1. 262 மாணவர்கள் மரணமானவை.
2. நூற்றுக்கணக்கான மாணவர்கள், தங்களின் பெற்றோர் மற்றும் சகோதரங்களையும் இழந்து அனாதைகளானமை.
3. சில மாணவர்கள் தங்களது பெற்றோருடன் வேறு ஊர்களுக்குச் சென்று வசித்தமை.
4. மிகவும் குறைந்த பௌதீக வளங்களைக் கொண்ட இப்பாடசாலையில் தங்களது பிள்ளைகள் கல்வி கற்பதை விரும்பாத பெற்றோர், மருதமுனையில் சுனாமியால் பாதிக்கப்படாத ஏனைய பாடசாலைகளில் அவர்களை சேர்த்தமை.
5. சில மாணவர்கள் சுனாமியின்போது பெற்றோரையும், உடன் பிறப்புக்களையும், சொத்துக்களையும் இழந்து கல்வியில் நாட்டம் காட்டாமல் தங்களை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் இறங்கி பாடசாலையைவிட்டு இடைவிலகியமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான நிகழ்வுகள் இப்பாடசாலைக்கு மேலும் அச்சுறுத்தல்களாக அமைந்தன. பின்னர் இப்பாடசாலையை ஒரு நிரந்தர இடத்தில் அமைப்பது தொடர்பாக எடுக்கப் பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக, மருதமுனையின் மேற்குப் புறமாகவுள்ள மேட்டுவட்டை எனப்படும் 8 ஏக்கர் விசாலமான காணித்துண்டு எமதூரைச் சேர்ந்த டாக்டர் ஜெமீல் அவர்களினதும், ஏனைய நலன்விரும்பிகளின் பெரு முயற்சியினாலும் கொள்வனவு செய்யப்பட்டு இப்பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

பின்னர் இக்காணி, அப்போதைய கல்முனை முஸ்லிம் பிரிவின் பிரதேச செயலாளர் அல்-ஹாஜ். ஏ.எச்.எம். அன்ஸார் போன்றவர்களின் பெருமுயற்சியினாலும், மற்ற நலன்விரும்பிகளின் பங்களிப்புடனும் மணல் நிரப்பப்பட்டு, சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டு பாடசாலை நடாத்தப்பட்டது. அதன் பின்னர் 2010-05-12ம் திகதி அன்று அதே காணியின் மேற்குப் புறத்தில் "யுனிசெப்" நிறுவனத்தால் கட்டிமுடிக்கப்பட்ட மூன்றுமாடி பாடசாலைக் கட்டிடத் தொகுதிக்கு பாடசாலை மாற்றப்பட்டது.

அல்-மினன் பாடசாலை (ஹாஜியார் பள்ளி)

மருதமுனையின் பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவில் தற்போது ஆரம்பக் கல்விப் பணியினை மேற்கொண்டிருக்கும் அல்-மினன் வித்தியாலயம், 24-02-1960ல் பாண்டிருப்பு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. இது அக்காலத்தில் "ஹாஜியார் பள்ளி" எனவும் அழைக்கப்பட்டது. இதற்கு முதலாவது தலைமை ஆசிரியராக ஈ.எம். வதூர்தீன் ஆசிரியர் செயற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஹாஜியார் வீதியில் ஒரு வாடகை வீட்டில் இயங்கிக் கொண்டிருந்த இப்பாடசாலைக்கு நிரந்தரக் காணியை பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் அதிபர்கள், மற்றும் நலன்விரும்பிகள் தொடராக முயன்று கொண்டிருந்தனர். எனினும் இம்முயற்சி விரைவில் கைகூடவில்லை.

1978 நவம்பர் மாதம் 23ஆம் திகதி எமது பிரதேசத்தில் வீசிய சூறாவளியினால் இப்பாடசாலையை நடாத்திய தனியார் வீடு சேதமடைந்ததால், தற்காலிகமாக இப்பாடசாலையில் கல்விகற்ற மாணவர்களுக்கான கல்வியை பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் மாலை நேர வகுப்புக்களாக நடாத்தி பாடசாலையை முன்னெடுத்தனர்.

இவ்வாறு நாவலர் வித்தியாலயத்தில் பாடசாலையைத் தொடர்ந்து கொண்டு செல்வதில் ஏற்பட்ட சிரமம், இப்பாடசாலைக்கான ஒரு தனியான காணியை பெற்றுக்கொடுக்கும் தார்மீகப் பணியை தூண்டிவிட்டது.

1981ஆம் ஆண்டு மர்ஹூம் ஏ.எல். தாவூது லெவ்வை மரைக்கார் ஜே.பி. அவர்களினால் நன்கொடையாக வழங்கப்பட்ட நிரந்தரக் காணியில் அல்-மினன் என்ற பெயரில் இப்பாடசாலை தொடர்ந்து நடைபெறுகின்றது. இப்பாடசாலை இன்று மருதமுனையின் பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவை தளமாகக் கொண்ட ஒரு சிறந்த ஆரம்பப் பாடசாலையாக திகழ்கின்றது.

புலவர்மணி சரிபுத்தீன் வித்தியாலயம்

மருதமுனையின் இன்னொரு பாடசாலை கிராமத்தின் வட-கிழக்குப் பிரதேசத்தில், பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில் 10 மாணவர்களுடன் ஓலைக் கொட்டிலில் 1961ஆம் ஆண்டு பெரியநீலாவணை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை (புலவர்மணி சரிபுத்தீன் வித்தியாலயம்) புலவர்மணி அல்-ஹாஜ். ஆ.மு. ஷரீப்தீன் அவர்களின் முயற்சியினால் உருவானது.

இவ்வாறு ஆரம்பப் பாடசாலையாக பரிணமித்த இப்பாடசாலை பிற்காலத்தில் "புலவர்மணி ஷரிப்தீன் வித்தியாலயம்" என்று பெயர் மாற்றப்பட்டு இன்றுவரை அதனது கல்விப் பணியை மருதமுனை மாணவர்களுக்கும் குறிப்பாக பெரிய நீலாவணை முஸ்லிம் பிரதேச மாணவர்களுக்கு சிறந்த கல்வியை போதித்து வருகின்றது.

இப்பாடசாலையும் 2004இல் ஏற்பட்ட சுனாமியில் வெகுவாகப் பாதிக்கப்பட்டு அதிகமான மாணவர்களையும், பெற்றோர்களையும் வளங்களையும் இழந்து நிர்க்கதியாக நின்றது. அவ்வேளை இப்பாடசாலையின் அபிமானிகளும், பெற்றோர்களும், மற்றும் ஊர் பிரமுகர்களும் பன்னாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் பாடசாலைக்கு புதிய கட்டடங்களையும், ஏனைய வசதிகளையும் பெற்றுக்கொடுத்ததனால் இப்பாடசாலை தனது கல்விப் பணியை தொடர்ந்து செய்வதற்கு தன்னை தயார்படுத்திக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலை தற்போது முதலாம் வகுப்புத் தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம் வரை வகுப்புக்களைக் கொண்ட ஒரு சிறந்த கலவன் பாடசாலையாகத் திகழ்கின்றது.

அல்-மதீனா வித்தியாலயம்

1959ஆம் ஆண்டு "மட்/ மருதமுனை தெற்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை" என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் "கமு/ மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி" என்ற பெயரில் மருதமுனையில் இயங்கிக் கொண்டிருந்த பாடசாலை 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் சுக்கு நூறானது.

இதன் பின்னர் இப்பாடசாலை அமைந்திருக்கும் நிலப்பரப்பு முதலில் "பாதுகாப்பு பிரதேசம் (Buffer Zone)" என அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டு பின்னர் அது 150 மீற்றராகக் குறைக்கப்பட்டது. இதனால் இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் சுனாமியின் பின்னர் வேறு பிரதேசங்களுக்கு குடியமர்த்தப் பட்டனர்.

இந்நிலையில் சுனாமியினால் அழிந்துபோன மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியை மீண்டும் அதே இடத்தில் மீள்நிர்மாணம் செய்வதா அல்லது அதனை வேறு பாதுகாப்பான பிரதேசத்திற்கு இடமாற்றுவதா என்ற ஒரு இக்கட்டான தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டிய பொறுப்பு இப்பாடசாலையின் அபிமானிகளுக்கும், அதன் பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் பிரதேச மக்களுக்கும் ஏற்பட்டது.

ஒரு சாரார் அப்பாடசாலை அதே இடத்தில் அமைக்கப்பட வேண்டுமெனவும், அதற்கான தங்களது கருத்துக்களையும் முன்வைத்து அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டபோது, இன்னொரு சாரார் அதற்கு மாறாக இப்பாடசாலை ஒரு புதிய பாதுகாப்பான இடத்தில் அமைக்கப்பட்டு அதில் மாணவர்கள் அச்சமின்றி கல்வி கற்க வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

இதற்கொரு முடிவாக அப்போது பாடசாலைக் கல்விக்கு உதவிக்கொண் டிருந்த ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகிய மனித உரிமை ஆணைக்குழுவின் அனுசரணையுடன், புதிய இடத்திலா அல்லது பழைய இடத்திலா பாடசாலையை அமைப்பது என ஒரு கருத்துக்கணிப்பு நடாத்தப்பட்டு 230 அதிகப்படியான வாக்குகளால் இப்பாடசாலை புதிய இடத்திலேயே அமைக்கப்பட வேண்டும் என்ற அக்கேள்விக்கு விடைகாணப்பட்டு புதிய இடத்தில் பாடசாலையை நிர்மாணிக்கும் பணியில் ஷம்ஸ் மத்திய கல்லூரி சமூகம் ஈடுபட்டது.

இதற்கிடையில் ஷம்ஸ் மத்திய கல்லூரியை அதன் பழைய இடத்திலேயே மீள நிர்மாணிக் கப்படல் வேண்டும் என்ற எண்ணத்துடன் தொழிற்பட்ட ஷம்ஸ் அபிமானிகளும், பிரதேசவாதிகளும் இந்தப் பாடசாலையின் நிலம் பாழ்படாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆரம்பப் பாடசாலை யாவது இங்கு நடாத்தப்படல் வேண்டும் என்ற தங்களது விடாப்பிடியினால், அப்போதைய கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளர் இக்கல்லூரியின் பழைய மாணவன் எம். தம்ஸீர் (ஆஸாத் மௌலானா) பெருமுயற்சியினாலும், ஏனைய கல்விப் பணிப்பாளர்கள், அரசியல்வாதிகள், பாடசாலையின் நலன்விரும்பிகள் மற்றும் பிரதேசவாதிகளின் உழைப்பினாலும் 01-01-2009ஆம் ஆண்டு "மருதமுனை அல்-மதீனா" என்ற பெயரில் மருதமுனையின் ஏழாவது பாடசாலை உருவானது.

இப்பாடசாலை தற்போது ஒன்று தொடக்கம் 9ஆம் தரம் வரைக்கும் வகுப்புக் களை உள்ளடக்கி சுமார் 500 மாணவர்களுடனும், 21 ஆசிரியர்களுடனும் சிறப்பாக கல்விப்பணி செய்துகொண்டிருக்கின்றது.

இப்பாடசாலையின் முதலாவது அதிபராக ஏ.ஆர். நிஃமதுல்லா கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். சுனாமிப் பாதிப்பிலிருந்து எஞ்சிய இப்பாடசாலையின் கட்டிடங்கள் புனருத்தாரனம் செய்யப்பட்டு, சுற்றுமதில் அமைத்து கல்விப்பணியைத் தொடர இப்பாடசாலை தன்னை தயார்படுத்தி மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றது.

அக்பர் வித்தியாலயம்

மருதமுனையின் ஏழாவது பாடசாலையாக கமு/கமு/ அக்பர் வித்தியாலயம் உருவாகின்றது. 2004ம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் தான் இந்த அக்பர் கிராமம் என்பது சகலரும் அறிந்ததே.

நூற்றுக்கணக்கான மாணவர் செல்வங்களையும் இழந்த அக்பர் கிராமமானது மீண்டும் அவ்விடத்தில் குடியேற நிர்ப்பந்திக்கப்பட்டது. பௌதீக வளங்கள் படிப்படியாக கிடைக்கின்ற வேளையில் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல் நிருவாகிகள் அவ்விடத்தில் ஒரு ஆரம்ப பாடசாலையை நிர்மாணிக்க வேண்டுமென முனைப்புடன் செயற்பட்டதன் விளைவாக அப்போது கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராகவிருந்த ஜனாப். எம்.எல். துல்கர் நயீம் (துல்சான்) அவர்களின் அரசியல் பலத்துடன் 01-01-2012ஆம் ஆண்டு இப்பாடசாலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இன்று இப்பாடசாலை ஒன்று தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையான வகுப்புக்களைக் கொண்டு 120 மாணவர்களுடனும், அதிபர் ஜனாப். ஜிப்ரி உட்பட எட்டு ஆசிரியர்களுடனும் கல்விப் பணியை செய்திட தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

அல்-ஹிக்மா கனிஷ்ட பாடசாலை

சுனாமியின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்கள் மருதமுனையின் மேற்குப் பகுதியிலுள்ள மேட்டுவட்டை என்னும் பகுதியில் "பிரான்ஸ் சிற்றி", 65 மீற்றர் வீட்டுத்திட்டம், யூ.என். ஹெபிராட் ஆகிய வீட்டுத்திட்டங்களில் மீள்குடி யேற்றப்பட்டனர். இதனுடன் இணைந்ததாக, சுனாமியால் முற்றும் முழுதாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, யுனிசெப் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டது. சுனாமியால் முற்றாக அழிக்கப்பட்ட மருதமுனை வைத்தியசாலை "மேர்லின்" என்ற நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இவ்வாறு ஷம்ஸ் மத்திய கல்லூரியானது 2010-05-12 தொடக்கம் புதிய கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது. இதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பாடசாலை கல்வி அமைச்சின் 1000 பாடசாலைகள் வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டதனால்

முதலாம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரையிலான வகுப்புக்களை தொடர்ந்து நடாத்த முடியாத நிலை ஏற்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற மாணவர்களின் நன்மை கருதி ஷம்ஸ் சமூகத்தினாலும் மற்றும் அப்பிரதேச மக்களின் அயராத முயற்சியினாலும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் அரசியல் அதிகாரத்தினால் அல்-ஹிக்மா கனிஷ்ட பாடசாலையானது ஷம்ஸ் மத்திய கல்லூரியின் கிழக்குப் புற நிலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை தற்போது 57 மாணவர்களுடனும் 03 ஆசிரியர்களுடனும் இயங்கி வருகின்றது. இப்பாடசாலையின் முதன் அதிபராக ஜனாப். எம்.எல்.எம். மஹ்றூப் ஆசிரியர் பணியாற்றி வருகின்றார்.

மருதமுனையின் இஸ்லாமியக் கல்வி

மருதமுனை இலங்கையிலுள்ள ஒரு பாரம்பரிய முஸ்லிம் கிராமமாக தோற்றம் பெற்றதுடனேயே அதனது இஸ்லாமியக் கல்வியும், இஸ்லாமிய மத, பாரம்பரிய விழுமியங்களும் ஆரம்பித்ததெனக்கூறலாம். மருதமுனையில் இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன்பு மருதமுனையில் வந்து குடியேறிய இந்தியர்கள் அவர்களைத் தொடர்ந்து மருதமுனையில் வாழ்ந்த ஆலிம்கள், மற்றும் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் மருதமுனையின் இஸ்லாமிய கல்வியை நிலைநிறுத்துவதிலும், சந்ததியினருக்கு இஸ்லாமியக் கல்வி, கலை, கலாச்சார பாரம்பரியங்களை கடத்துவதிலும் தங்களது பங்களிப்பைச் செய்துவந்தனர்.

இதற்கு உதாரணமாக மருதமுனையில் வாழ்ந்து மரணித்து மருதமுனை யிலேயே நல்லடக்கம் செய்யப்பட்ட செய்யிது அப்துர் றகுமான் மௌலானா, செய்யது இஸ்மாயில் மௌலானா, செய்யது முகம்மது மௌலானா போன்ற உலமாக்கள் மருதமுனை மக்களுக்கு இஸ்லாமியக் கருத்துக்கள் மற்றும் விதிமுறை களையும் போதித்தனர்.

இவ்வாறு இவர்கள் மருதமுனையின் மார்க்கக் கல்வியை முன்னெடுத்துக் கொண்டிருந்த வேளையில், மருதமுனையைச் சேர்ந்த பலர் ஆலிம்களாக உருவாக்கப்பட்டனர். இவர்களுள் மீராலெவ்வை (சின்னாலிமப்பா) செய்யது கலீல் மௌலானா, அலியார் லெவ்வை ஆலிம் (கொத்துவால் ஆலிம்), கனீபா ஆலிம், அனுஸ்லெவ்வை ஆலிம் மற்றும் அல்-ஹாஜ் செய்யது ஐதுறுஸ் மௌலானா போன்ற நல்லடியார்கள் குறிப்பிடத்தக்கவர்கள். காலப்போக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையிலோ அல்லது இலங்கையிலே இஸ்லாமிய மார்க்கக் கல்வியைப் புகட்டும் கலாசாலைகளோ, மத்ரசாக்களோ இல்லாத அல்லது குறைவாக விருந்த காரணத்தினால் மருதமுனையில் சிலர் இந்தியாவுக்குச் சென்று, அங்கு மார்க்கக் கல்வியைப் பெற்று மௌலவிமார்களாக பரிணமித்தனர்.

இவர்களுள் மௌலவின் அப்துல் கரீம் (பாகவி), ஜலாலுத்தீன் (பாகவி), முகைதீன் ஜமாலி (பாகவி), முஸ்தபா மௌலானா போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் இந்தியாவில் இஸ்லாமிய மார்க்கக் கல்வியைக் கற்று அரபு மொழியிலும் தேர்ச்சி பெற்று இலங்கையிலுள்ள பிரபல்யமான அரபுக் கலாசாலைகளிலும், அரச பாடசாலைகளிலும் ஆசிரியர் களாகவும் பேராசிரியர் களாகவும் பணிபுரிந்து மருதமுனைக்கும் புகழைச் சேர்த்தனர்.

இவர்களின் வழிகாட்டலின் நிமிர்த்தம் மருதமுனையிலுள்ள மார்க்கப் பற்றுள்ள பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளுக்கும் முறையான மார்க்கக் கல்வியை வழங்கி மார்க்க அறிஞர்களாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தங்களுடைய மக்களை இலங்கையிலுள்ள அப்போதைய பிரபல்யம் வாய்ந்த அரபிக் கல்லூரிகளான அட்டாளைச்சேனை அரபிக்கல்லூரி (கிழக்கிலங்கை அரபிக் கல்லூரி), வெலிகம அரபிக் கல்லூரி மற்றும் காத்தான்குடி அரபிக் கல்லூரி போன்ற ஆண்களுக்கான கல்லூரிகளுக்கும், கல்லெலிய பெண்கள் அரபிக் கல்லூரிக்கும் அனுப்பி இஸ்லாமிய மதப்போதனை களையும், அரபு மொழி தேர்ச்சியையும் வழங்கி சிறந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர்களை எமதூருக்கு வழங்கினர்.

இவ்வாறு அக்காலத்தில் மார்க்கக் கல்வி பயின்று மௌலவிமார்களாக வெளியாகிய சம்சுத்தீன் மௌலவி (பஹ்ஜி), சாகுல் ஹமீத் மௌலவி (கபூரி), றசூல் மௌலவி (பாரி), சமது மௌலவி (பஹ்ஜி), மஜீத் மௌலவி (பஹ்ஜி), கே.எல்.எம். ஹனிபா மௌலவி (பஹ்ஜி), ஹஸன் மௌலவி (சர்க்கி), அபூஉபைதா மௌலவி (மதனி), ஹுசைனுத்தீன் மௌலவி (நியாழி), இஸ்ஹாக் மௌலவி (கபூரி), செயினுலாப்தீன் மௌலவி (சர்க்கி), முபாறக் மௌலவி (பாரி) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களில் குறிப்பாக கே.எல்.எம். ஹனிபா மௌலவி (பஹ்ஜி), ஜலாலுத்தீன் (பாகவி), றசூல் மௌலவி (பாரி), சாகுல் ஹமீட் மௌலவி (கபூரி), ஹஸன் மௌலவி (சர்கி) போன்றோர் மருதமுனையில் சிறு சிறு குர்ஆன் மத்ரசாக்களை பள்ளிவாசல்கள் சார்ந்த இடங்களில் அமைத்து மாணவர்கள் குர்ஆனை சரியாக ஓதுவதற்கு பயிற்றுவித்தனர்.

இவ்வாறான குர்ஆன் மத்ரசாக்களில் ஓதி பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரம் வரையில் கல்வி கற்ற மாணவர்கள் மேற்குறிப்பிட்ட அரபுக் கலாசாலைகளிலும், பேருவளை ஜாமிய நளீமியா கலாபீடம், பறகஹதெனிய அரபிக் கல்லூரி, சம்மாந்துறை அரபிக் கல்லூரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை அல்-ஹாமியா அரபிக்கல்லூரி போன்ற பிரபல அரபிக்கல்லூரி களுக்குச் சென்று மார்க்கக் கல்வியைப் பெற்று மௌலவிகளாகவும், அதன் பின்னர் பல்கலைக் கழகங்களில் பயின்று பட்டதாரி மௌலவிகளாகவும் வெளியாகி இன்று அரச உயர்பதவிகளிலும், மௌலவி ஆசிரியர்களாகவும், பல்கலைக் கழக விரிவுரை யாளர்களாகவும் பணிபுரிகின்றமை, எமதூரில் தற்போது மௌலவிகளாகவும், காபிழ்களாகவும் கற்றுக்கொண்டிருப்பவர் களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கின்றது.

இவ்வாறு மார்க்க அறிஞர்களாக வெளியாகியவர்களுக்கு மருதமுனையில் இவ்வாறான இஸ்லாமிய கல்வி ஸ்தாபனங்களை அமைக்க வேண்டும் என்ற முனைப்பு ஏற்பட்டு இதற்கு ஆதரவாக மருதமுனையிலுள்ள தௌஹீத் அமைப்புக்களும், பள்ளிவாசல்களும், தனவந்தர்களும், கல்விமான்களும், அரசியல் வாதிகளும் வழங்கிய ஆக்கபூர்வமான ஒத்துழைப்பினால் மருதமுனையில் பெண் களுக்கென ஒரு தனியான அரபிக் கலாசாலை "தாறுல் ஹுதா" என்ற பெயரில் 2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இதன் அதிபரான எம்.எல்.எம். முபாறக் (மதனி) அவர்களும், கலாசாலையின் பணிப்பாளர் சபையும் சிறப்பாக நடாத்தி வருகின்றனர். இதில் தற்போது அதிகமான மாணவர்கள் மார்க்கக் கல்வியும், அத்துடன் இலங்கை அரசாங்க பாடவிதானத்துடன் அமைந்த கல்வியையும் பெற்று க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சையில் தோற்றி அதிக எண்ணிக்கையான மாணவிகள் பல்கலைக் கழகங்களில் தங்களது பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்-நஹ்லா அரபிக் கல்லூரி

இதே போன்று ஆண்களுக்கான அரபிக்கல்லூரி அன்-நஹ்லா என்ற பெயரில் 1995ம் ஆண்டு கமு/ மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு வளாகத்துள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது அதற்காக அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் நிரந்தரக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்திற்கு காணியையும் அடிப்படைக் கட்டிடங்களையும் தந்துதவிய அல்-ஹாஜ். ஏ.எம். கமால்தீன் B.Com, அல்-ஹாஜ். எம்.எம். ஷபீக் பொறியியலாளர், டாக்டர். எம்.எம். ஜெமீல் (லண்டன்), அல்-ஹாஜ். செயினுலாப்தீன், அல்-ஹாஜ். ஏ.ஆர். பறக்கத்துல்லாஹ், அல்-ஹாஜ். ஏ.எம். பதுறுத்தீன் சட்டத்தரணி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். அதன் பின்னர் அமைச்சர் அதாவுள்ளா அவர்களினால் இக்கல்லூரிக்கு 2 மாடிக் கட்டடம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இக்கலாசாலை ஆரம்பத்தில் குர்ஆன் மனனம் செய்யும் (ஹிப்ளு) மத்ரசாவாகப் பரிணமித்து இன்று ஹிப்ளு மற்றும் ஷரியா என்ற மார்க்கக் கல்வியுடன் அரச பாடசாலை கல்வியும் போதிக்கப்பட்டு இவர்கள் ஹாபிள் களாகவும், மௌலவிமார்களாகவும் வெளியாகியுள்ளனர். மருதமுனையில் இது வரைக்கும் கிட்டத்தட்ட நூற்றுக்கும் அதிகமான காபிழ்கள் வெளியாகியுள்ளனர் என்பது எமது மண்ணின் ஆத்மீகத் துறைக்கு அல்லாஹ் அருளிய அருட்கொடை யாகும்.

தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரி

மருதமுனையின் இஸ்லாமிய கல்வி தொடர்பில் குறிப்பாக பெண்கள் இஸ்லாமிய கல்வி தொடர்பில் தாருல் ஹுதா அரபுக் கல்லூரியானது ஒரு புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயத்தைப் புரட்டியுள்ளது. ஆழமான இஸ்லாமிய அறிவும், ஆன்மீகப் பண்புகளும் கொண்ட அல்-குர்ஆன், சுன்னா வழி நடக்கும் சிந்தனையாளர்கள், சமூக வழிகாட்டிகள், சமூக ஆய்வாளர்களாக சிறந்த 'தாஇகளை' பிரச்சாரிகளை உருவாக்கும் பணியில் இக்கல்லூரி 01-05-2008ம் திகதி மருதமுனையில் உதயமானது.

2008ம் ஆண்டு 1 வகுப்பறையில் 17 பெண் மாணவிகளுடன் ஆரம்பிக்கப் பட்ட இக்கல்லூரியானது தற்போது 162 மாணவிகளுடனும், அதிபர், பிரதி அதிபர்கள், விரிவுரையாளர்கள், நூலகர், அலுவலக உதவியாளர் என 21 கல்விசார் ஆளணியினருடனும், நிர்வாக, பொதுச்சபை உறுப்பினர்களுடனும் 7 வகுப்பறைகள், சகல வசதிகளுடனும் கூடிய ஒரு வாசிகசாலை, தொழுகை அறை, கணனிக்கூடம் போன்ற பௌதிக வளங்களுடனும் அரை ஏக்கர் நிரந்தரக் காணியில் தனது இஸ்லாமியக் கல்விப் பணியை சிறப்பாகக் கொண்டு செல்ல தன்னை ஸ்திரப்படுத்தி வருகின்றது.

ஆரம்பத்தில், இது ஒரு ஆரம்ப நெறி அரபுக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இதன் ஒரு வளர்ச்சிக் கட்டமாக இஸ்லாமிய அரபுக் கல்லூரியாக இலங்கை முஸ்லிம், கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.

மருதமுனையிலுள்ள இரண்டு மத்திய கல்லூரிகளிலிருந்து கலை, கலாச்சார அரபு பீடங்களுக்கு பல்கலைக் கழகங்களுக்கு தெரிவுசெய்யப்படும் மாணவர் தொகையுடன் அல்-ஹுதா இஸ்லாமிய அரபுக் கல்லூரியானது ஒரு அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. 2011/2012 கல்வியாண்டிற்கு 9 மாணவிகளையும், 2012/2013 கல்வியாண்டிற்கு 17 மாணவிகளையும், 2013/2014 கல்வியாண்டிற்க 19 மாணவி களையும் பல்கலைக்கழக கலை, கலாச்சார, அரபுப் பீடங்களுக்கு அனுப்பி மருதமுனையின் பெண் பட்டதாரிகளின் எண்ணிக்கையை பொதுவாக அதிகரித் ததுடன், குறிப்பாக இஸ்லாமிய கல்வியுடன் கூடிய பட்டதாரி 'தாஇகளை' மருதமுனை மண்ணுக்கு தொடர்ந்து வழங்குவதற்காக தன்னை உட்படுத்தியிருக் கின்றது.

கணித, விஞ்ஞான, வர்த்தகத் துறைகளில் பிரகாசிக்கக்கூடிய, திறமையான பெண் மாணவிகள் இக்கல்லூரிக்கு உள்வாங்கப்படுவதாக சில அபிப்பிராய பேதங்கள் சிலர் மத்தியில் இருந்தாலும் இம்மாணவிகளின் சுயவிருப்பத்தின் பேரிலும், அவர்களது பெற்றோர்களின் விருப்பத்தின் பேரிலேயே அவ்வாறு அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றார்களே தவிர மிகவும் திறமையான விஞ்ஞானம் கற்றுத்தேறக்கூடிய மாணவர்கள் கட்டாயப்படுத்தப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடக்கூடிய ஒரு விடயமாகும்.

ஜாமியா நளிமிய்யா இஸ்லாமிய கல்வி நிறுவகம் நிறுவப்பட்டு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டபோது மேற்கூறியதைப் போன்றதொரு விமர்சனம் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டது. பின்னர் அது ஒரு பாரிய கல்விக் கூடமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிணமித்து இஸ்லாமிய கல்வி மட்டுமன்றி விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் போன்ற துறைகளும் அங்கு நிறுவி துறைசார் நிபுணர்களை இஸ்லாமிய வழிகாட்டலில் பயிற்றுவித்து சமூகத்துக்கு அளித்த போதுதான் விமர்சனங்கள் வலிதற்றுப் போயின.

இதுபோன்று தாருல் ஹுதா இஸ்லாமிய அரபுக் கல்லூரியானது எமது நாட்டின் நாலா புறத்திலிருந்தும் வரும் பெண் மாணவியர்களை இஸ்லாமிய அடிப்படையில் பயிற்றுவித்து, பட்டதாரிகளாக்கி அதனோடிணைந்ததான தொழில்முறைசார் கல்வியையும் அவர்களுக்கு வழங்கும் போது இஸ்லாமிய நெறிமுறையிலான சிறந்த பிரஜைகளை எமதூருக்கு வழங்கும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்களிடமிருந்தும் அன்பளிப்புக்கள், நன்கொடைகள், மாத வருட சந்தாக்கள் மூலம் நிதியீட்டப்பட்டு, கொள்கைச் சகோதரர்கள், நிர்வாக, பொதுச்சபை உறுப்பினர்கள், அரசியல்வாதிகளால் உதவப்பட்டு வரும் இக்கல்லூரியின் அதிபராக அஷ்-ஷேய்க் எம்.எல்.எம். முபாறக் மதனி (MA) அவர்கள் வழிநடாத்த கல்லூரியின் முதல்வராக அல்-ஹாஜ். டாக்டர். ஏ.ஆர்.எம். ஹாரிஸ் (MBBS) அவர்களும், செயலாளராக அல்-ஹாஜ். எஸ். பஹூறுத்தீன் (BA, Dip. in Ed.) அவர்களும் செயற்படுகின்றனர்.

அந்நூர் கல்வி நிறுவனம்

மருதமுனையில் 2010ம் ஆண்டு இஸ்லாமிய சூழலில் கல்வியை வளங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட அந்நூர் கல்வி ஸ்தாபனமானது தரம் 06 முதல் தரம் 09 வரையிலான ஆண் மாணவர்களுடன் மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசலின் மேல்மாடியில் இயங்கி வருகின்றது.

பாடசாலைப் பாடத்திட்டத்தை தழுவியதாக மாலை நேர வகுப்புக்களில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு போன்ற பாடங்களைப் போதித்தல், தஜ்வீத் அடிப்படையில் குர்ஆன் ஓதுவதற்குப் பயிற்சியளித்தல், சிங்கள, தமிழ் மொழிகளைப் போதித்தல், சுன்னத்தான் பழக்க வழக்கங்கள் மற்றும் ஆளுமைவிருத்திப் பயிற்சிகளை வழங்குதல், மாணவர்களின் ஒழுக்க விடயங்களை பெற்றோருடன் இணைந்து கண்காணித்தல் போன்ற நடவடிக் கைகளை இந்நிறுவனம் செய்துவருகின்றது.

இதன் இன்னொரு வளர்ச்சிக் கட்டமாக 2013ம் ஆண்டில் அந்-நிஷா என்ற பெயரில் பெண்களுக்கான கல்வி நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தி வருகின்றது. இதில் 6, 7ம் தரங்களில் கல்விகற்கும் 60 பெண் மாணவிகள் பயில்கின்றனர். அந்-நிஷா நிறுவனம் இப்போது கலாநிதி எச்.எம். நசீர் அவர்களின் இல்லத்தில் நடைபெறுகின்றது. இவ்விரு நிறுவனங்களின் அதிபராக ஜனாப். சீ.எம். தில்சாத் (B.A) அவர்கள் செயற்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலத்தில் எமது ஊர் இளம் சந்ததிகளிடம் காணப்படும் ஒழுக்கச் சீர்கேடு, மார்க்க அறிவுக் குறைபாடு மற்றும் சுன்னத்தான வழிகளை பின்பற்றுவதில் பின்னடைவு போன்றவற்றை சீர்படுத்தும் நோக்கில் தரம்-06 தொடக்கம் க.பொ.த. (உயர்தரம்) வரை கல்வி கற்கும் ஆண், பெண் மாணவர்களை சீர்படுத்தும் இந்நிறுவனம் தொடர்ந்து இம்முயற்சிகளில் தளராது ஈடுபடுவது பாராட்டத்தக்க விடயமாகும். இந்நிறுவனத்தை இயக்கும் விரிவுரை ஆலோசகர்கள், பணிப்பாளர் குழுவினர் பாராட்டுக்குரியவர்களே.

குறிப்பாக தப்லீக் ஜமாஅத்தினரின் பிரச்சார பணியும், அதனோடு இணைந்த இஸ்லாமிய சூழலில் மாணவர்களுக்குப் போதிக்கும் அடிப்படையில் "அன்நூர்' எனப்படும் கல்வி நிறுவனத்தை நிருவகித்தல், அகில இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் மருதமுனைக் கிளையினால் குர்ஆன் மத்ரசாக்கள், விஷேட மார்க்க பயிற்சி வகுப்புக்கள், இஸ்லாமிய மார்க்க விழிப்புணர்வு மாநாடுகளை நடாத்துதல், கூட்டான உழ்கிய்யா நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அதேபோன்று தௌஹீத் ஜமாஅத்தின் மருதமுனைக் கிளையினால் "இஸ்லாமிய பிரச்சார மையம் - IPC' நிறுவப்பட்டு ஆண் - பெண்களுக்கு விஷேட மார்க்கச் சொற்பொழிவுகளும், பயிற்சிகளும் வழங்கப்படல், மார்க்க விழிப்புணர்வு மாநாடுகளை நடாத்துதல் மூலம் மருதமுனை மக்களின் இஸ்லாமியக் கல்வியறிவு மிகவும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியுள்ளதை கண்கூடாகக் காணமுடிகின்றது. இம்முன்னேற்றத்திற்கு தஃவா இயக்கங்களின் அர்ப்பணிப்புடனான செயற்பாடுகள் முக்கிய காரணம் என்றால் அது மிகையாகாது.

இதன் விளைவு மருதமுனையின் மூன்று அரபிக் கல்லூரிகளைத் தோற்றுவித்ததுடன் சில நிரந்தர இஸ்லாமிய பிரச்சார மையங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த தஃவா இயக்கங்களை ஒன்றிணைத்து வழிநடாத்தி வரும் மருதமுனை ஜம்இய்யத்துல் உலமாவின் பங்கும் இங்கு போற்றத்தக்கது. மருதமுனையில் இயங்கிவரும் சக்காத் நிதியம், இஸ்லாமிய வங்கிச்சேவை என்பன இதன் வெளிப்பாடுகளாகும்.

ஆங்கிலக் கல்வி

மருதமுனையின் ஆங்கிலக் கல்வி வரலாறு, மருதமுனையின் கலங்கரை விளக்கம் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் தோற்றத்துடன் ஆரம்பமாகியிருப்பினும் மருதமுனையின் ஆங்கிலக் கல்வியின் மோகம் பல ஆண்டுகளுக்குப் பின்னரே ஆரம்பித்ததாக சில வரலாற்றுச் சான்றுகள் எமக்குக் கிடைக்கின்றன. ஏனெனில் அல்-மனார் மத்திய கல்லூரியின் ஆரம்பத்திற்கு முன்னர் மருதமுனை மக்கள், மருதமுனையின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள தற்போது நாவலர் வித்தியாலயம் என அழைக்கப்படும் பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் படித்தனர்.

அதன் பின்னர் அக்காலத்தில் ஆங்கில மொழிகற்றவர்களுக்கே அரசாங்க உத்தியோகம் கிடைக்கும் வாய்ப்பு இருந்ததால் வசதி படைத்த பெற்றோர் தங்களது பிள்ளைகளை கல்முனையிலுள்ள மாதாந்த கட்டணம் பெற்று ஆங்கிலப் படிப்பித்த "மிஷனரி" பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தற்போதைய உவெஸ்லி உயர்தரப் பாடசாலை கார்மேல் பாத்திமாக் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கு, ஆங்கிலம் கற்கச் சென்ற எமதூர் மாணவர்கள் தங்கள் படிப்பைத் தொடர்ந்தனர். பின்னர் "சுயபாஷா" கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதும் கல்முனைக்கு ஆங்கிலம் படிக்கச் சென்ற பலர் மீண்டும் வந்து தமிழ்மொழி மூலம் தமது படிப்பை மேற்கொண்டனர்.

இது இவ்வாறிருக்க 1942ஆம் ஆண்டு எமதூரைச் சேர்ந்த அல்-ஹாஜ் எஸ்.எம். மசூர் மௌலானா மற்றும் முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். அப்துல் மஜீட் ஆகிய இருவரும் ஐந்தாம் வகுப்பு வித்தியா விருத்தி பரீட்சையில் சித்தியடைந்து மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திற்கு ஆங்கிலம் மூலம் உயர்கல்வி கற்பதற்குச் சென்றவர் களாவர். இந்த இருவருக்கும் பின்னர் ஜனாப். ஐ.எம். அப்துல் காதர் (பொறியியலாளர்) இதே பாடசாலையில் ஆங்கிலத்தில் கல்வி கற்றுத் தேர்ந்தார்.

இதன் பின்னர் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த எமதூர் மாணவர்கள் ஆங்கில மொழி மூலம் தமது கல்வியைத்தொடர வாய்ப்பின்றி தமிழ்மொழி மூலமே தங்களது கல்வியைத் தொடர்ந்தனர். இதன் பின்னர் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த 1. லத்தீப் (தற்போது அநுராதபுரத்தில் வாழ்ந்து வருபவர்). எஸ்.எம்.எம். பழீல் ஆகியோரும் அதனைத் தொடர்ந்து எஸ்.எம். மூஸா, எஸ்.எம்.ஏ. மத்தீன், ஏ.எம். முஸ்தபா ஆகிய மூவரும் இவர்களின் பின் எஸ்.எல். அபுல்ஹஸன் (தப்லீஃ) அவர்களும் காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு சென்று கல்வி கற்றனர். வடகிழக்கில் முஸ்லிம்களுக்கென எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய கல்லூரியும் காத்தான்குடி மத்திய கல்லூரியுமே முஸ்லிம்கள் புலமைப் பரிசில்களுக்காகத் தேர்ந்தெடுக்கக்கூடிய கல்லூரிகளாக அப்போதைய கல்வியமைச்சர் திரு. கன்னங்கராவினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

மேலும் எட்டாம் ஆண்டிற்கான விஞ்ஞான புலமைப்பரிசில் பரீட்சை யொன்றும் அறிமுகம் செய்யப்பட்டிருந்த அவ்வேளையில் எமதூர் மாணவர் களான முன்னாள் கல்முனை பிரதேச சபைத் தலைவர் ஜனாப். ஐ.ஏ. ஹமீட் (பொறியியலாளர்) மற்றும் இளைப்பாறிய வரிமதிப்பீட்டாளர் ஏ.எல்.எம். முனாஸ் ஆகியோர் தங்களது உயர்கல்வியை வந்தாறுமூலை மத்திய மகாவித்தி யாலயத்தில் தமிழ்மொழியிலேயே தொடர்ந்தனர்.

இவ்வாறு ஆங்கில மொழியில் கற்றுத்தேர்ந்த முன்னால் கல்விக் கல்லூரி பீடாதிபதி அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. அஸீஸ் போன்ற சிலர் மருதமுனையில் ஆங்கிலக் கல்வியை வளர்க்க சில முன்னெடுப்புக்களை அப்போதே மேற்கொண்டிருந்தனர். ஆயினும் அப்போது ஆங்கில மோகம் அவ்வளவு பெரிதாக இல்லாத காரணத்தால் ஆங்கிலம் கற்பதில் குறைந்த எண்ணிக்கை யானவர்களே ஆர்வம் காட்டினர். அல்-மனார் மத்திய கல்லூரியில் அக்காலத்தில் அதிபராக இருந்த ஏ.எச்.ஏ. மஜீத் போன்றவர்கள் வெளியூர்களைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களை, உதாரணமாக முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன், G-7 நாடுகளின் தலைவர் ஏ.எல்.ஏ. அஸீஸ் போன்றவர்கள் அல்-மனார் மத்திய கல்லூரியில் எமதூர் மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வி போதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறாவளிக்குப் பின்னர் இரு மகாவித்தியாலயங்களில் இருந்து அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பல்வேறு பல்கலைக்கழக கற்கை நெறிகளுக்கு தெரிவாகி அவர்கள் ஆங்கில மொழி மூலம் தங்களது பட்டப்படிப்பினை தொடர வேண்டியிருந்தனால் மருதமுனையின் சில பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் முளைத்தன. குறிப்பாக முன்னாள் கிராம சேவகர் எஸ்.எச்.எம். தௌபீக், முகம்மத் சேர், ஏ.ஆர்.ஏ. அஸீஸ் மற்றும் ஏ.எம்.ஏ. ஜெலீல் போன்றவர்கள் இவ்வாறு மாணவர்களுக்கு தனிப்பட்ட வகுப்புக்கள் நடாத்தியும் ஆங்கிலத்தைப் போதித்தனர்.

இக்கால கட்டத்தில் மருதமுனையில் ஏ.எம். அபூபக்கர், எஸ்.எம்.எம். பழீல், மற்றும் ஏ.எம்.ஏ. ஜெலீல் போன்ற மூவருமே ஆங்கில பயிற்சிபெற்ற ஆசிரியர்களாக இருந்தனர். இதன் பின்னர் மருதமுனையில் ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்தது. போட்டிப் பரீட்சை மாவட்ட ஆங்கில மொழி முன்னேற்ற நிலையங்கள் (DELIC), ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் நியமனம், கல்விக் கல்லூரி ஆங்கில டிப்ளோமா ஆசிரியர் நியமனம் மற்றும் பட்டதாரி ஆசிரியர் நியமனம் என்பவற்றின் மூலம் மருதமுனைக்கு போதியளவு ஆங்கில ஆசிரியர்கள் வந்து சேர்ந்தனர். இது மருதமுனை பாடசாலைகளில் ஆங்கில அறிவு விருத்தியை ஓரளவு ஏற்படுத்தியது.

1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இவ்வாறு ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் மருதமுனையில் தனிப்பட்ட ஆங்கிலக் கல்வி நிலையங்களை நிறுவி மருதமுனையின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தனர். இவ்வாறான கல்வி நிறுவனங்களில் சில தற்போதும் சிறப்பாக இயங்கி, பாடசாலைகளில் ஆங்கில கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருந்து மாணவர்களின் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தி வருகின்றன.

மருதமுனையைச் சேர்ந்த ஆங்கிலத்தில் நாட்டம் கொண்ட பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களில் பலர் பல்கலைக் கழகங்களிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், உயர் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் (ATI) கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் உள்ள ஆங்கிலக்கல்வி நிறுவனங்களிலும் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொண்டனர்.

மருதமுனையில் இருந்து பல்கலைக் கழகங்களுக்கும், ஏனைய உயர்கல்வி கலாசாலைகளுக்கும் தெரிவுசெய்யப்படுகின்ற மருதமுனை மாணவர்கள் தங்களது கல்வியை ஆங்கிலத்தில் தொடர்வதனால் அவர்களது ஆங்கில அறிவு மேம்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

இன்று மருதமுனையிலுள்ள பட்டதாரிகளுள் ஆங்கில மொழிமூலம் பட்டதாரிகள் அதிகம் காணப்படுகின்றனர். ஆங்கிலத்தை ஒரு பாடமாக பல்கலைக் கழகங்களில் கற்றவர்களும், ஆங்கிலத்தில் முதுமானிப் பட்டம் பெற்று ஆங்கிலத்தில் கலாநிதிப் பட்டம் பெற்ற Dr. ஏ.எம்.எம். நவாஸ் (தென்கிழக்கு பல்கலைக் கழகம்), Dr. எஸ்.ஏ. ஜஹ்பர் சாதிக் (ஓமான் பல்கலைக் கழகம்) போன்றோர் இதற்கு சான்றுபகர்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையைச் சேர்ந்த குறைந்த எண்ணிக்கையானோர் ஆங்கிலத்தில் புலமைபெற்றிருந்தாலும் இன்னும் பலர் ஆங்கில ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், பணிசெய்திருந்தும்கூட, மருதமுனையின் பெருமட்டான ஆங்கிலக் கல்வி வீதம் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகக் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

மருதமுனை சேர்ந்த உயர்தொழில்களை அலங்கரிப்போர்களில் பலர் ஆங்கிலத்தில் போதிய புலமை பெறாதிருப்பது விமர்சனங்களுக்கு உட்பட்டிருப்பது எமக்கு வேதனை யளிக்கின்றது. ஏனெனில் ஆங்கிலத்தில் அதீத புலமை பெற்றவர்கள் உயர்தொழில்களில் பிரகாசித்திருந்தது வரலாற்றுண்மை.

இது இவ்வாறிருக்க மருதமுனையில் சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை ஆங்கிலமொழி மூல பாடசாலைகளுக்கு அனுப்பி தமது பிள்ளைகளின் ஆங்கில அறிவை உறுதிப்படுத்தி வருகின்றனர். இதற்கும் மேலாக அல்-மனார் மத்திய கல்லூரியிலும் இரு மொழி வகுப்புக்கள் (Billingual) நடாத்தப்படுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

எவ்வாறாயினும் மருதமுனையில் இருக்கின்ற வளங்களையும், எதிர்காலத்தில் கிடைக்கப் போகின்ற ஆங்கிலம் சார்ந்த வளங்களையும் பயன்படுத்தி மருதமுனையில் ஒரு முழுமையான ஆங்கில மொழி மூலம் பாடசாலையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். இது இக்காலத்தின் தேவையாகும். இது மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்கு மென்மேலும் உதவும்.

மருதமுனையின் உயர்கல்வி வரலாறு

மருதமுனையின் உயர்கல்வி வரலாறு, அது கடந்துவந்த பாதை வழிகாட்டல்களால் மட்டும் உயரவில்லை. உயர்கல்விக்கு முன்னோடிகளாக இருந்த ஒரு சிலர், வழிகாட்டிகளாக இருப்பதற்கு முடியாதவர்களாக ஆகி விட்டனர். ஆரம்ப காலத்தில் கல்முனைப் பிரதேசத்தின் முஸ்லிம்களின் உயர்கல்வி, கல்முனை சாஹிறாக் கல்லூரியின் வீரியமான எழுச்சியில் தங்கியிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் உருவாகின.

1957ம் ஆண்டு லண்டன் பல்கலைக் கழகத்திலிருந்து விஞ்ஞானமானி (B.Sc.) பட்டத்தைப் பெற்று கிழக்கு மாகாணத்தில் முதலாவது விஞ்ஞான பட்டதாரி என்ற பெருமையை ஊருக்கு சேர்ந்தவர் முன்னாள் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.ஏ. மஜீட் ஆவார். இதன் பின்னர் 1966/67 கல்வியாண்டுக்கு பல்கலைக்கழக நுளைவைப் பெற்று மருதமுனையின் உயர்கல்வி வரலாற்றினை தொடங்கிவைத்த எமது கிராமத்தின் இரண்டாவது பட்டதாரியும் கல்விமானுமாகிய அல்-ஹாஜ் ஏ.ஆர்.ஏ. அஸீஸ் (இளைப்பாறிய கல்விக் கல்லூரி பீடாதிபதி) அவர்கள் திருகோணமலைப் பிரதேசத்தில் பல வருட காலமாக ஆசிரியப் பணிபுரிந்ததன் பலனாக தன்னை உயர்கல்விக்குட்படுத்திக் கொண்டார். இவர் ஒரு பட்டதாரி ஆசிரியராக காலடியெடுத்து வைத்ததன் பின்னர் இக்கிராமத்திலிருந்து பலர் உயர்கல்வியினால் கவரப்பட்டு உயர்கல்வி கற்ற பாடசாலைகளைத் தேடிச் சென்று உயர்கல்வி பெற்று பல்கலைக் கழக நுழைவையும் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின் பின்னர் மருதமுனை, அரசியலால் வஞ்சிக்கப்பட்ட போது உயர் கல்வியின் வளர்ச்சி, பௌதீக வளங்கள் மருதமுனையை அடைய முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையேற்பட்டது. இந்த ஏழு ஆண்டு கால ஆட்சியின் போது உயர்கல்விப் பங்களிப்பில் மருதமுனை சாஹிறா கல்லூரியின் ஒளி வீசிய காலம் எனலாம். மருதமுனையிலிருந்து பலர் அங்கு உயர்கல்வியை நாடிச்சென்று பல்கலைக் கழகம் செல்லும் சந்தர்ப்பத்தைப் பெற்றனர். இக்கால கட்டத்தில் வருடா வருடம் பல்கலைக் கழக நுழைவுக்கு உள்வாங்கப்பட்டனர்.

1977ம் ஆண்டுக்கு பின்னர் அரசியல் மாற்றம் ஏற்பட்டது. இது மருதமுனைக்கு சாதகமாகவும் ஏற்பட்டது. இதே காலகட்டத்தில் 1978ம் ஆண்டு திடீரென வீசிய புயல் மருதமுனை உயர்கல்வி வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. மருதமுனையில் உயர் வகுப்புக்கள் கொண்ட ஒரேயொரு நிறுவனமாக இருந்த அல்-மனார் மகா வித்தியாலயத்தின் கட்டிடத்தின் பெரும்பாலானவை இப்புயலினால் அழிந்து கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்புண்டானது.

சூறாவளித் தாக்குதலுக்கு முன்னர் கல்முனை சாஹிறாக் கல்லூரியில் படித்த மருதமுனையைச் சேர்ந்த சில இளைஞர்கள் மேலதிக நிலங்களை சுவீகரித்து பௌதீக வளங்களைப் பெற்று சாஹிறாக் கல்லூரியைப் போன்று ஒரு உயர்தர பாடசாலையை தோற்றுவிக்க ஆசைப்பட்டனர். இந்த முயற்சி அப்போது மளுங்கடிக்கப்பட்டு சூறாவளியினால் பாடசாலை பாதிக்கப்பட்ட போது அது மீண்டும் விஸ்வரூபம் எடுத்தது. இது மருதமுனை சம்ஸ் மகாவித்தியாலயத்தை தோற்றுவித்தது.

மருதமுனை அல்-மனார் மகாவித்தியாலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சில மாணவர்களுடன் ஆரம்பமான மருதமுனை சம்சுல் இல்ம் மகாவித்தியாலயம் மருதமுனையின் உயர்கல்வி வரலாற்றுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்குவதற்கு தன்னை உறுதிப்படுத்திக்கொண்டது. இதனால் இவ்விரு மகாவித்தி யாலயங்களினாலும் ஏற்படுத்தப்பட்ட உயர்கல்வி வளர்ச்சிப் போக்கில் பாரிய மாற்றம் ஏற்பட்டது.

1980 ஆண்டிற்கு பின்பிருந்தே அல்-மனார் மத்திய கல்லூரியிலிருந்து உயர்கல்வி மாணவர்கள் தெரிவுசெய்யப்படும் நிலை உருவானது. இக்கால கட்டத்தில் எமதூரைச் சேர்ந்த க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையுடன் தமது கல்வியை இடைநிறுத்தியவர்களிலும், பலதரப்பட்ட வேலைவாய்ப்புக்குட் பட்ட வர்களிலும் பலர் உயர் கல்வியில் நாட்டம் கொண்டு தனிப்பட்ட பரீட்சார்த்தி களாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொண்டனர்.

பல்கலைக் கழகங்களுக்குச் சென்று வெளியான பட்டதாரிகளின் சேவை இவ்விரண்டு மகாவித்தியாலயங்களுக்கு கிடைத்த போது 1980களின் பிற்பகுதியில் மருதமுனையில் இருந்து பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர் தொகையில் கணிசமானதொரு முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979இல் ஒரு மகாவித்தியாலயம் இருக்க, இன்னுமொரு மகாவித்தியாலயம் உருவாக்கப் பட்ட சந்தர்ப்பம் மருதமுனையில் ஒரு சிலரை பாதிப்புக்குள்ளாக்கி அதனுடைய வடுக்கள் தொடர்ந்த வேளையில், பல்கலைக்கழக நுழைவுக்காக மாணவர்களின் தொகை அதிகரித்தபோதுதான் பாடசாலை பிரிக்கப்பட்டு வந்து மனப்போக்குகளில் ஒரு மாற்றம் உண்டானது.

1980களின் பிற்பகுதியில் விஞ்ஞானக் கல்வியின் தாகம் எமது கிராமத்தில் வேகமாகப் பரவியது. வெளியிடங்களில் கல்வி கற்ற ஒரு சிலர் விஞ்ஞானக் கல்வியைப் பெற்று வந்ததினால் அதனுடைய தாக்கம் எமது பாடசாலை களையும் பாதித்தது. இதற்கு வாய்ப்பாக அரசும் விஞ்ஞான பட்டதாரிகளுக்கு ஆங்கில நியமனம் வழங்கியபோது பல தமிழ் ஆசிரியர்கள் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களாக இக்கிராமத்தின் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றனர். இவ்வாறான மருதமுனையின் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்கு ஆரம்பத்தில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஏ. மஜீட் அவர்களின் உழைப்பு இங்கு குறிப்பிடத்தக்கது.

மருதமுனை மகாவித்தியாலயங்களில் க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டமை வெளியூர்களுக்குச் சென்று விஞ்ஞானக் கல்வியை பெறமுடியாத எமதூர் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்ததுடன், மருதமுனையிலேயே கற்றுக் கொண்டிருந்த பெண் மாணவிகளும் விஞ்ஞானக் கல்வி பயில தூண்டியது. இதன் விளைவாக போட்டி மனப்பான்மையுடன் காட்டிய கல்வி வளர்ச்சியை மருதமுனை சந்தித்தது. இதன் பிரதிபலனாகத்தான் 1980இன் பிற்பட்ட காலத்தில் விஞ்ஞான துறைசார்ந்த பீடங்களுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களின் தொகை கணிசமாக உயர்ந்தது.

இச்சந்தர்ப்பத்தில் மருதமுனையில் விஞ்ஞானம் கற்பித்த தமிழ் ஆசிரியர்களின் பணியை நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

விஞ்ஞானக் கல்வி பற்றிய சந்தேகங்களும், தடைகளும் இவ்வாசிரியர் களினால் அகற்றப்பட்டபோது புதிய விஞ்ஞானத் துறைகளைப் பற்றிய சிந்தனை மாணவர் மத்தியில் எழுந்தது. இதன் விளைவாக எமது கிராம மாணவர்கள் எல்லா விஞ்ஞானத்துறைகளுக்கும் தெரிவுசெய்யப்பட்டு அந்தந்தத் துறைகளில் மிளிர்ந்து கொண்டிருப்பது எமதூருக்கு மகிழ்ச்சி தருகின்றது.

இவ்வாறான வளர்ச்சி எல்லா ஆண்டுகளிலும் ஒரே சீரானதாய் அமைய வில்லை. மருதமுனையிலுள்ள இரண்டு பாடசாலைகளில் இருந்தும் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும், க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் விகிதாசாரத்திற்கு ஏற்ப பல்கலைக்கழக நுளைவு சில ஆண்டுகளில் கூடியும், சில ஆண்டுகளில் வீழ்ச்சியும் காணப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு காரணங்களை நாம் முன்வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. 1980ஆம் ஆண்டுக்கு பிந்திய காலங்களில் விஞ்ஞானம் கற்பித்த தமிழ் ஆசிரியர்கள் விட்டுச் சென்றமையும், அனுபவ முதிர்ச்சியில்லாத விஞ்ஞான ஆசிரியர்கள் எமது பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றமையுமாகும்.

02. நாட்டில் நில அசாதாரண சூழ்நிலை காரணமாக பல்கலைக் கழகக் கல்வி குறித்த ஆண்டுகளுடன் முற்றுப்பெறாமையினால் மாணவர்கள் பல்கலைக் கழக நுழைவில் அலட்சியம் காட்டியமை.

03. நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக சில குறிப்பிட்ட பல்கலைக் கழகங்களில் கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டமை.

04. பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களின் வெட்டுப் புள்ளி (cut off marks) படிப்படியாக அதிகரிக்கப்பட்டமை.

05. 2004இல் ஏற்பட்ட சுனாமியினால் மாணவர்களுக்கு ஏற்பட்ட பல்வேறு தாக்கங்களினால் கல்வியில் குறைந்த நாட்டத்தை வெளிப்படுத்தியமையும், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை கணிசமான அளவு தெரிவுசெய்யப் படுவதற்கு ஆதாரமாகவிருந்த ஒரு கல்விக்கூடம் முற்றாக சேதம் அடைந்தமை.

06. கலைப்பீடங்களுக்கான Z-Score தேசிய மட்டத்தில் கணிப்பிடப்பட்டமை.

07. புதிய வேலைவாய்ப்புக்களுக்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் கிடைத்து மாண வர்கள் கலவரப்பட்டமை.

08. மாணவர் மத்தியில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற காதல் உணர்வுகள், கணனி மற்றும் ஆண் மாணவர்களுக்கிடையே காணப்படும் அலட்சியப் போக்கு என்பன கணிசமான மாணவர்களை க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் திறமைகளை வெளிக்கொணரத் தவறியமை.

இவை போன்ற இன்னும் பல காரணங்களினால் பல்கலைக் கழகங்களில் நுழைவு பெறுகின்ற மாணவர்களின் தொகையில் விகிதாசார மாற்றம் ஏற்பட்டது. இக்காரணிகளோடு பாடசாலைகளில் அவ்வப்போது ஏற்பட்ட அதிபர், ஆசிரியர் இடமாற்றங்களையும் இணைத்துக்கொள்ளலாம்.

1979ஆம் ஆண்டிலும், 1980களின் பிற்பகுதியிலும், 1990களின் முற்பகுதி களிலும் ஏற்பட்ட பல்கலைக்கழக நுளைவு அதிகரிப்பை மனமகிழ் வுடன் அரவணைத்துக் கொள்ளும் அதேவேளை சில ஆண்டுகளில் குறிப்பாக 1980 களின் முற்பகுதிகளிலும் 1990ஆம் ஆண்டின் பிற்பகுதிகளிலும் பல்கலைக் கழக நுளைவில் ஏற்பட்ட வீழ்ச்சியை விசனத்துடன் விமர்சிக்க வேண்டியுள்ளது.

இதற்கும் பல காரணங்களை முன்வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. 1980களின் முற்பகுதியில் எமதூரின் பண்டைய தொழிலான நெசவுத் தொழில் மீண்டும் புத்துயிர் பெற்று அது செல்வச் செழிப்பை ஏற்படுத்தி மாணவர் மத்தியில் கல்வி நாட்டத்தை படிப்படியாகக் குறைத்தமை.

02. 1990களின் பிற்பகுதியில் ஏற்பட்ட உக்கிரமான போர்ச்சூழல், இன முரண்பாடுகள் காரணமாக அநேக மாணவர்கள் கல்வியைத் தொடராமல் வெளிநாடுகளுக்கு சென்றமையும், எஞ்சிய மாணவர்களுக்கு உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்கான, ஆரோக்கியமான சூழல் இல்லாமையும் காரணங்கள் எனலாம்.

பல்கலைக்கழக நுழைவில் ஏற்பட்ட பாரிய எழுச்சி, அரசாங்க வேலை வாய்ப்புத் துறைகளிலும் இக்கிராமத்திற்கு ஒரு உயர்வான நல்ல நிலைமையைப் பெற்றுத் தந்திருப்பதை ஒரு பேறாகக் கருதமுடியும். அரசாங்கத் துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வது ஒரு கடினமான காரியம் என்ற நிலை மாற்றப்பட்டு பெரும்பாலான அமைச்சுக் களில், திணைக்களங்களில் உயர்பதவி களை நிருவாகப் பதவிகளை திறமை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு மட்டுமல்லாமல் பல்கலைக் கழகங்களிலும், கல்விக் கல்லூரி களிலும், ஏனைய உயர்கல்வி ஸ்தாபனங்களிலும் பீடாதிபதிகள், திணைக்களத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பதிவாளர்கள் போன்ற பதவிகளைப் பெறுவதற்கு மருதமுனையின் கற்றோர் குழாத்திற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இது ஒரு புறத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்திய அதேவேளை 1991/1992ம் ஆண்டுக்கும், 2004/2005 ஆண்டும், 2005/2006ம் கல்வி ஆண்டுகளுக்கும் பல்கலைக்கழக நுழைவு பெற்ற இக்கிராம மாணவர்களின் தொகை அதிகரிப்பு பலருடைய வியப்புக்கும் உட்பட்டிருக்கின்றது. பல்கலைக்கழக நுழைவு விகிதாசாரத்தில் இக்கல்வியாண்டுகள் உயர்ந்த ஸ்தானத்தை எட்டியிருக்கின்றது.

கிராமப் புறங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குச் செல்கின்ற வாய்ப்பை மிகவும் சாதுர்யமாகப் பயன்படுத்திக்கொண்ட ஒரு கிராமமாக மருதமுனை உயர்கல்வியைப்பற்றிச் சிந்திக்கும் வட்டத்தில் - மாபெரும் அலையை ஏற்படுத்தி யதைக் காணக்கூடியதாக இருந்தது. இப்படிப்பட்டதொரு அலை உயர் கல்விக்குப் போதிய ஆசிரியர்களும், வசதிகளுமின்றி பரிதவித்த பல பிரதேச மாணவர்களை மருதமுனைக்கு வரவும் தூண்டியது.

1990களின் முற்பட்ட காலம் வரையும் இளநிலைப் பட்டப்படிப்பை (Bachelors' Degree) முடித்துக்கொண்டு வெளியேறும் நோக்குடன் பல்கலைக் கழகங்களுக்குச் சென்ற எமது கிராம மாணவர்களில் அநேகமானோர் இன்று ஒரு படி மேலாகி முதுநிலை பட்டப்படிப்புக்களை (Masters' Degree) பூர்த்திசெய்தும், சிலர் தங்களை தயார்படுத்திக் கொண்டும், இன்னும் சிலர் கலாநிதிப் பட்டங்களையும் (Ph.D.) முடித்தும், இன்னும் சிலர் அவற்றுக்காக தயார்படுத்திக் கொண்டிருப் பதையும் நாங்கள் அவதானிக்கின்றோம்.

Al-Haj. A.R.A. SATHAR
Justice of the Peace - Whole Island
Regd. No: 2000/ 03/ NE/ WI/ B/ 015
504A, Central Road,
Maruthamunai - 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரிசையில் எமதூரைச் சேர்ந்த எம்.எம். முகம்மட் ஜெமீல் MBBS, FRCS (London), பேராசிரியர் ஜே.எம். முகம்மட் சித்தீக் (பீடாதிபதி - பல்மருத்துவபீடம், பேராதனை பல்கலைக் கழகம்), கலாநிதி எம்.எஸ்.எம். முகைதீன் வாவா (வெளிநாட்டுக் கபூர்) போன்றோர் கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்து உயர்கல்விக்கு முன்னோடிகளாக இருந்தனர். இதன் பிற்பட்ட காலங்களில் கணிதத் துறையில் கலாநிதிப் பட்டத்தை தனதாக்கிக் கொண்ட கலாநிதி எம்.எச்.எம். நஸீர் (ஓமான் பல்கலைக்கழகம்), பொறியியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற கலாநிதி எஸ்.எம். ஜூனைடீன், ஆங்கிலத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஏ.எம்.எம். நவாஸ் மற்றும் கலாநிதி எஸ்.எம். ஜஹ்பர் சாதிக் (ஓமான் பல்கலைக்கழகம்), கலாநிதி பீ.எம்.எம். ஜமாஹிர், கே.எம். இம்தியாஸ் (அவுஸ்திரேலிய பல்கலைக் கழகம்) போன்றோரின் சேவைகளையும் வழிகாட்டுதல்களையும் பெறும் பாக்கியத்தைகூட எமது கிராம மாணவர்கள் பெற்றிருக்கின்றனர்.

1990ம் ஆண்டின் பிற்பட்ட ஆண்டுகளிலிருந்து மருதமுனை மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களை நாடத் தொடங்கினர். வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் வழங்குவதும் புலமைப்பரிசில்கள் ஊடாகவும், மாணவர் வீஷா மூலமாகவும், சுயநிதியீட்டல் மூலமாகவும், வெளிநாடுகளில் பகுதிநேரமாக தொழில்செய்து கொண்டும், எமதூர் மாணவர்கள் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பட்டப்படிப்புக்கான இவ்வாறான பிரசித்திபெற்ற வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் எமதூர் மாணவர்களின் தொகையும் அண்மைக் காலங்களில் அதிகரித்த வண்ணம் உள்ளது.

ஏற்கனவே இளமானிப் பட்டத்தை உள்ளூர் பல்கலைக் கழகங்களிலிருந்து பெற்று கல்வித் துறையிலும், ஏனைய துறைகளிலும் தொழில்வாய்ப்பைப் பெற்ற எமதூரவர்கள் தமது முதுமானி, மற்றும் கலாநிதிப் பட்டங்களையும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தொடர்வது எமதூரின் கல்விக் கனதியை மேலும் அதிகரிக்கின்றது.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் மருதமுனை மண் மூக்கில் விரல் வைக்குமளவிற்கு எமதூர் மாணவி சாதனை படைத்துள்ளார். முகம்மது அன்சார் முகம்மது முஸ்தபா மரைக்கார் ஐனுல் றமீதா தம்பதிகளின் புதல்வி நுஹா லூபி (நக்ஷபி, புள்ளிவிபரவியலாளர் அவர்களின் மருமகள். தற்போது தமது பெற்றோருடன் லண்டனில் வசிப்பவர்) உலகின் முதல் 10 (Top Ten) பல்கலைக் கழகங்களில் ஒன்றான ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்திற்கு (Oxford University) மருத்துவத் துறைக்கு தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கல்வியே கருத்தனம் என்று வாழும் எமதூரவர்களை ஒரு தரம் உசுப்பிவிட்டது. இவ்வரலாற்றுச் சாதனையைப் படைத்த எமதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இம்மாணவியையும், அவரது பெற்றோரையும் பாராட்டுகிறோம். ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்துள் எமதூரைப் பதிவுசெய்த இம்மாணவியை முதல் மரியாதையுடன் வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகங்களில் கற்பிக்கின்ற எமது விரிவுரையாளர்களும் ஏனைய கல்விசார் துறைகளில் பணியாற்றுகின்ற எமதூரைச் சேர்ந்த பலர் கலாநிதிப் பட்டங்களுக்கு தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை எண்ணும் போது மருதமுனையின் ஒரு காலத்தில் எட்டப்பட முடியாததாக விருந்த உயர் கல்வி இலக்கு எய்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது என பெருமையுடன் கூறலாம்.

பாடசாலைகளிலிருந்து நேரடியாக பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள் பல்கலைக்கழக நுளைவு விகிதாசாரத்தை ஒரு புறம் அதிகரிக்க பல்வேறு வேலை வாய்ப்புக்களிலிருந்து கொண்டு அல்லது பாடசாலைகளில் இல்லாமல் வெளி பட்டப்படிப்பு ரியூடோரிகளில் படித்து பல்கலைக்கழக நுளைவு பெற்ற மாணவர் களும் கணிசமாக அதிகரித்துச் செல்வதை கண்கூடாகக் காணக்கூடிய தாக உள்ளது.

மேலும் பல்வேறு தொழில்துறைகளிலிருந்து கொண்டு அல்லது பட்டப் படிப்பைத் தொடர வாய்ப்பற்ற மாணவர்கள் வெளிவாரியாக (External) தங்கள் பட்டப்படிப்பினை முடித்து இக்கிராமத்தின் பட்டதாரிகள் தொகையை கணிச மான அளவு உயர்த்தியுள்ளனர். இவ்வாறு கலை, வர்த்தகம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் வெளிவாரியாகப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட எமதூர் மாணவர்கள் பல்வேறு அரச தொழில்களில் மிளிரக்கூடியதை காணக்கூடியதாக வுள்ளது.

பொதுவாக இலங்கையில் டியூசன் கலாசாரத்தைப் பற்றி அவ்வப்போது விமர்சனங்கள் செய்யப்படுவதை நாங்கள் செய்தி ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம். இந்த டியூசன் கலாச்சாரத்தைப் பற்றி எமதூரிலும் அவ்வப்போது விமர்சனங்கள் எழுவது வழமையானதே. எவ்வாறாயினும் பொதுப் பரீட்சை களான க.பொ.த. (சா./த), க.பொ.த. (உயர்தரம்), 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை என்பனவற்றுக்கு மாணவர்களை தயார்படுத்துவதில் இந்த டியூசன் வகுப்புக்கள் பெரும் பங்களிப்பை நல்கிறது என்பதை அநேகர் ஏற்றுக்கொள்வர். எமது பிரதேசத்தில் Bond Institute என்ற பெயரில் டியூசன் வகுப்பை முதலில் தொடங்கி வைத்தவரும் எமதூரைச் சேர்ந்த ஏ.சீ.ஏ. ஜப்பார் (Smacks) என்பவர் என்பதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

க.பொ.த (உயர்தர) வகுப்புக்களைப் பொறுத்தமட்டில் குறிப்பாக க.பொ.த. (உயர்தர) விஞ்ஞானப் பிரிவில் கற்கும் மாணவர்களைப் பொறுத்தமட்டில் மிகவும் புலமைவாய்ந்த ஆசிரியர்களிடம் அவர்கள் கேட்டு கற்க வேண்டியுள்ளது. தங்களது பாடசாலைகளில் அவ்வாறான புலமையான ஆசிரியர்கள் கிடைக்காத போது அவர்கள் டியூசன் வகுப்புக்களை நாடாத்தும் அனுபவமுள்ள, திறமையான ஆசிரியர்கள் நாடுவது தேவையாகவுள்ளது. இந்த டியூசன் வகுப்புக்கள் பாடசாலைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்கு மேலதிகமான ஊட்டல்களை வழங்குவதால் மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெற உதவுகின்றது என்பதையும் நாம் அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, எமதூரின் கல்வி வளர்ச்சிக்கு என்னென்ன காரணிகள் பங்களிப்புச் செய்து வருகின்றதோ அதேபோன்று டியூசன் வகுப்புகளும் தமது பங்களிப்பைச் செய்து வருகின்றது எனலாம்.

இந்த வெளிவாரி பட்டதாரிகளுக்கென தனியாதொரு புள்ளிவிபரம் திரட்டி வெளியிட முடியும். இவ்வாறானவர்களுக்கு எமது கிராமத்தின் முன்னோடி களாக அமைந்தவர்கள் ஜனாப் எம்.வை.எம். முஸ்லிம் (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர், கண்டி), ஜனாப். ஏ.எம். மஜீட் (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்), ஜனாப். ஏ.எல். மீராமுகைதீன் (ஓய்வுபெற்ற அதிபர்) போன்றவர்களாவர். இவர்கள் அரச உத்தியோகங்களில் இருந்துகொண்டு தம்மை உயர்கல்விக்குட்படுத்தினர்.

1980களின் பிற்பகுதியில் ஜனாப். எஸ்.எம். நஜீம் ஆசிரியர், வெளிவாரி பட்டப்படிப்பினை முடித்து கணிசமான மாணவர்களுக்கு ஊக்கம் கொடுத்து இன்றுவரை வெளிவாரி மாணவர்களுக்கு வகுப்புக்களை நடாத்தி வருவதுடன், மருதமுனை வெளிவாரி பட்டதாரிகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருப்பது பாராட்டத்தக்கது. இவ்வாறான நடவடிக்கைகளும், முயற்சிகளும் இக்கிராம மாணவர் பலருக்கு தூண்டுதலாக அமைந்தது. இந்த நிலை இன்று வேகமாக வீறுநடை போட்டு மற்றக் கிராமங்களுக்குக்கூட முன் மாதிரியாகத் திகழ்கின்றது.

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான வாய்ப்பு எமதூர் பெண் மாணவிகளுக்கு மிகவும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள வெளிவாரி கல்வி நிலையங்களில் கற்பிக்கப்பட்ட இம்மாணவிகளில், நூற்றுக்கணக்கானோர் வெளிவாரி பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து மருதமுனையின் பெண் பட்ட தாரிகளின் தொகையை வியக்க வைக்கும் வகையில் உயர்த்தியுள்ளனர்.

இலங்கையில் 1956ஆம் ஆண்டின் பின்னர் முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சி தூண்டப்பட்டதனால் முஸ்லிம் பாடசாலைகள் பல உருவாகின. அவற்றிலிருந்து சித்தியடைந்த மாணவர்கள் 1957 - 1958ம் ஆண்டுகளின் பின்னர் ஆசிரியர்களாகத் தொழில்வாய்ப்பினைப் பெற்றனர். இவ்வாறானவர்கள் 1975 வரையிலும் பல்கலைக் கழகக் கல்வியை பெறக்கூடியவர்களாக இருக்கவில்லை. அதற்கான வழிகாட்டல் இல்லாமல் இருந்தமை ஒரு புறமிருக்க; அரச தொழில்வாய்ப்பைப் பெற்ற ஒருவர் பல்கலைக் கழகத்தில் உள்வாரியாக உயர்கல்வியைத் தொடர முடியாது என்ற கட்டுப்பாடு நிலவியதும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்நிலை க.பொ.த. உயர்தர வகுப்பில் சித்தியடைந்து 1978ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச வேலைவாய்ப்புப் பெற்ற அநேக இளைஞர்களுக்கு ஏற்பட்டது. இதனால் தொழில்வாய்ப்புப்பெற்ற பல பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டும்கூட அவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்காத பலரினால் காட்டிக் கொடுக்கப்பட்ட காரணத்தினால் பட்டதாரிகளாக முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப் பட்டனர். இவர்களுள் ஜனாப். ஏ.ஆர்.ஏ. சத்தார், எச்.எல். நஜ்முத்தீன், எம்.எச். காதர் இப்றாகிம், எஸ்.எம். அப்துல்லா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாறான காட்டிக்கொடுத்தல் எமது கிராமத்திற்கு அதிகளவில் ஏற்பட்ட தென்றால் அது மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்வாய்ப்பில் இருப்பவர்கள் பல்கலைக்கழகக் கல்வியை சிரமம், அர்ப்பணிப்புக்களுடன் தொடரமுடியும். இவ்வாறான நிலை வேறு சில கிராமங்களில்தொடர்ந்தாலும்எமது கிராமத்தில்அது பகிரங்கப்படுத்தப்பட்டதால் துர்ப்பாக்கிய நிலைக்குற்பட்ட பலர் பட்டதாரிகளாகும் வாய்ப்பை இழந்தனர். இக்கிராமத்திலிருந்த மிக மோசமான இந்த நிலை மேலும் பல பட்டதாரிகளை உருவாக்குவதைத்தடுத்துவிட்டது. எவ்வாறாயினும்அவ்வாறு உள்வாரியாகதங்கள் பட்டப்படிப்பைத் தொடர முடியாமல் போனவர்கள் தங்களை வெளிவாரியாகப் பதிவுசெய்து பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து பதவி உயர்வுகளைப் பெற்று பல உயர் பதவிகளை வகித்தனர் என்னும்போது மனதுக்கு சாந்தம் அளிக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் இளமானிப் பட்டப் படிப்பை முடித்த அநேகர் முதுமானிப்பட்டப்படிப்பிலும், பட்டமேல்டிப்ளோமாக்(Post Graduate Diploma) களையும் மேற்கொள்வதை காணக்கூடியதாக உள்ளது. தொழில் வாண்மை விருத்திக்காகவும், பதவி உயர்வுக்காகவும், புதிய தொழில்களைப் பெறுவதற் காகவும் அறிவைப் பெருக்குவதற்காகவும் இவ்வாறான கற்கை நெறிகளைப் பின்பற்றுகின்றனர். எமதூரைச் சேர்ந்த மருத்துவப் பட்டதாரிகள் பலர் மருத்துவத் துறையில் முதுமானிப் பட்டப்படிப்பினை பூர்த்திசெய்து வைத்திய நிபுணர்களாக பிரகாசிப்பதையிட்டு எமது கிராமம் மகிழ்கின்றது. இவற்றுள் ஜனாப். Dr. A.W.A. வாஸில் (சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை நிபுணர்), Dr. சித்தீக் ஜெமீல் (சத்திர சிகிச்சை நிபுணர்), Dr. A.W.A. சமீம் (சத்திர சிகிச்சை நிபுணர்), Dr. M.N.M. சுகைப் (பொது வைத்திய நிபுணர்), Dr. A.G.M. ஜூரைஸ் (மனநல வைத்திய நிபுணர்) போன்றோருடன் கல்வித்துறை சார்ந்தோர், நிருவாகத்துறை சார்ந்தோர், நீதித் துறை சார்ந்தோர், பொறியியல் துறைசார்ந்தோர் தத்தமது துறைகளுக்கு ஏற்றவாறு பட்டப்பின் படிப்பு கற்கைகளை பூர்த்தி செய்வது எமது கிராமத்தின் கல்வி வளர்ச்சியின் கனதியை அதிகரிக்கின்றது.

இது பல உயர் பதவிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கு எமதூரவர் களுக்கு வழிசமைத்துவிட்டது. எதிர்காலத்தில் இன்னிலை வேகமாக முன்னேறி எமது ஊரவர்கள் உயர்கல்வியின் வாயிலாக பல சாதனைகளை நிலைநாட்டு வார்கள் என்று இந்த ஊரின் எதிர்பார்ப்பாகும்.

இன்று உயர்கல்வியானது பல்கலைக்கழகங்களிலுள்ள பட்டப்படிப்பு கல்வியுடன் மட்டுப்படுத்தப்படாமல் வேறு பல உயர்கல்வி ஸ்தாபனங்களாலும் முன்னெடுத்துச் செல்லப்படுவதை நாங்கள் அறிகின்றோம். தொழில்நுட்பம் அதிவேகமாக வளர்ச்சியடையும் இக்காலகட்டத்தில் விஞ்ஞான ரீதியான உற்பத்திச் சாதனங்களை கையாள்வதற்கான கல்வியும் பயிற்சியும் உயர் தகைமை களாகக் கருதப்படுகின்றன.

பல்கலைக்கழக நுழைவை ஒரிரு புள்ளிகளால் தவறவிட்ட எமதூர் மாண வர்கள் இவ்வாறான உயர்கல்வி ஸ்தாபனங்களில் உயர்கல்வியைப் பெற்று நல்ல தகைமைகளுடன் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில்புரிந்து எமது கிராமத்தின் பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்தியுள்ளனர். 1990ம் ஆண்டுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள் (Affiliated University College) ஏற்படுத்தப்பட்டதனால் பல்கலைக்கழக நுழைவை தவற விட்ட அநேகமானவர்கள் இக்கல்லூரிகளில் பட்டப்படிப்பை முடித்து எமதூர் உள்வாரி பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தனர்.

தொழில்நுட்ப ஸ்தாபனங்களும், கல்லூரிகளும் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் வழங்கி வருகின்ற புலமைப்பரிசில்களின் மூலம் எமது மாணவர்கள் பெறும் தொழில்நுட்பக் கல்வியும் உயர்கல்விக்குட்படுத்தப்படக்கூடியதே. கடந்த காலங்களில் கண்டும், கேட்டும் அறிந்திராத பல்வேறு துறைகளில் எமதூர் மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்ந்து தகைமைகளைப் பெற்றிருப்பது எமக்கு உவகையளிக்கின்றது.

தற்காலத்தில் உயர்கல்வித் தகைமைகளைவிட தொழிற்தகைமைகளுக்கு அதிகமான முக்கியத்துவம் உணரப்படுவதால் எமதூர் மாணவர்களில் பலர் பல்கலைக்கழக கல்வியில் நாட்டம் காட்டாது இவ்வாறான உயர் தொழிற் தகைமைகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். எமதூரைச் சேர்ந்த மாணவர்களில் CIMA, ACCA, Sri Lanka Charted Accountance, Law College, AAT போன்ற உயர்தொழில் தகைமைகளை எமதூர் மாணவர்களில் அநேகர் ஏற்கனவே பெற்றுவிட்டனர். இன்றும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இவ்வாறான தொழில் தகைமைகளைப் பெறத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

எமது கிராமத்தில் பல்கலைக்கழக நுழைவு விகிதாசாரத்தில் ஒரு சரிவு ஏற்பட்டிருப்பதை பல்கலைக்கழக பட்டப்படிப்பிலும், அதன் பின் தொழில் வாய்ப்பைப் பெறுவதிலும் ஏற்படுகின்ற சலிப்பு மாணவர்களை உயர்தொழில் தகைமைகளின்பால் திசைதிருப்புகின்றது என்றால் அது மிகையாகாது. ஏனெனில் பல்கலைக்கழகக் கல்வியை புறம்தள்ளிவிட்டு உயர்தொழில் தகைமை களைப்பெற்ற எமதூர் மாணவர்களில் பலர் பட்டதாரிகளைவிடவும் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் சிறந்த தொழில்களைப்பெற்று மற்றவர்களுக்கும் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் நிலையில் உள்ளனர் என்பது உண்மை.

இதற்குக் காரணமாக ஒன்றைக் கூறலாமென நினைக்கின்றேன். பல்கலைக் கழகங்களில் உள்ள ஒரிரு துறைகளைவிட உதாரணமாக மருத்துவம், பொறியியல் துறை, சட்டத்துறை என்பவற்றைவிட அநேகமான கற்கை நெறிகள் தொழில் உலகுக்குப் பொருத்தமற்றவைகளாகக் காணப்படுவதேயாகும். பல்கலைக் கழகங்களில் உள்ள இவ்வாறான கற்கை நெறிகள், சமகால எதிர்கால தொழில் உலகிற்கு ஏற்றாற்போல் (Job Oriented Courses) ஆக வடிவமைக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு பல்கலைக் கழகங்களிலும் உயர்தொழில் ஸ்தாபனங்களிலும் எமது கிராம இளைஞர், யுவதிகள் கல்வி அறிவினையும், தகைமைகளையும் பெற்றி ருப்பது எமது கிராமத்தின் கல்விப் பரிமாற்றத்தை மிகைப்படுத்தியுள்ளது. ஆனாலும் எமதூரவர்களினால் அடைய முடியாமல்போன தொழிற்துறைகளும், கல்வித் தகைமைகளும் பலவுள்ளன என்பது மறுக்க மறைக்க முடியாத உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, வானூர்தி பொறியில் (Aeronautic), கட்டிட வடிவமைப்பாளர் (Architect) போன்ற துறைகளை குறிப்பிடலாம். இத்துறைகளைக் கற்க எமது மாணவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் வழங்கப்படல் வேண்டும். இதுமட்டு மன்றி எமதூரைச் சேர்ந்த எவரும் இலங்கை வெளிநாட்டுச் சேவையில் (Sri Lanka Foreign Service - SLOS or SLFS) இணைந்துகொள்வதற்கான வாய்ப்பை இதுவரையும் பெற்றிருக்கவில்லை. எனினும் ஐக்கிய நாடுகள் அமைப்பில் உயர் பதவிகளைப் பெறுமளவுக்கு எமதூரைச் சேர்ந்த ஜனாப். எம்.ஐ.எம். சுபைர் தகைமை உயர்பதவியை அலங்கரிப்பது எமதூருக்குக் கிடைத்த பெருமையாகும். இவ்வாறான ஒரு பதவியை இவரின் மூத்த சகோதரன் டாக்டர். எம்.ஐ.எம். முகைதீன் பாவா (வெளிநாட்டுக் கபூர்) வகித்தமை குறிப்பிடத் தக்கது.

எமதூரிலிருந்து பல்கலைக்கழக நுழைவு, எமதூரின் கல்வி வளர்ச்சியின் பிரதான குறிகாட்டியாக அமைவதனால் பல்கலைக்கழக நுழைவில் ஏற்படும் விகிதாசார வீழ்ச்சியை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது. இதற்கான காரண காரியங்கள் ஆராயப்படல் வேண்டும். நீதியான ஆலோசனைகள் முன்வைக்கப்படல் வேண்டும். பல்கலைக்கழக நுழைவை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய பாடப் பரப்புக்கள், வழிகாட்டல்கள் மாணவர்களுக்கு வழங்கப் படல் வேண்டும்.

உயர்கல்வியில் நாட்டமுள்ள, நெறிப்படுத்துகின்ற தாபன ரீதியான தனி மனித செல்வாக்குள்ள சக்திகள் அனைத்தும் ஒருமுகப்படுத்தப்பட்டு மருத முனையின் பல்கலைக்கழக நுழைவை அதிகரிப்பதற்கான யோசனைகள் முன் வைக்கப்படல் வேண்டும். இவ்வாறான சக்திகள் எவ்வித பாரபட்சமுமின்றி எமதூரில் உள்ள இரண்டு மத்திய மகாவித்தியாலயங்களையும், தாருல் ஹுதா பெண்கள் அரபிக் கல்லூரியையும் சென்றடைய வேண்டும். கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வளங்கள் அதிகரித்துள்ள வேளையில் வெளியீடுகளின் வளர்ச்சியில் மந்தப்போக்கு ஏற்படுவது கண்டிப்பாக ஆராயப்பட வேண்டிய தொன்றாகும். அதற்கான தடைகள் ஆராயப்பட்டு பரிகாரம் காணப்படல் வேண்டும். இக்கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்தக்கூடிய வளங்கள் (குறிப்பாக ஆசிரிய வளங்கள்) எமது பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டிய வகையில் ஒருமுகப்படுத்தப்படல் வேண்டும்.

1967ம் ஆண்டிலிருந்து உள்வாரியாக பல்கலைக் கழகங்களுக்கு மாணவர் களை அனுப்பி போதுமான கலை, வர்த்தகப் பட்டதாரிகளை உருவாக்கி இருப்பினும்கூட, 1980ம் ஆண்டுக்குப் பின்னர்தான் மருதமுனையிலிருந்து நிலையுருவாகியது. தற்போதைய காலகட்டத்தில் கணித, விஞ்ஞான, தொழில் நுட்ப, கணக்கியல் துறைகளுக்கு அதிக முக்கியத்துவங்களும், தேவைகளும் இருப்பதனால மேற்குறிப்பிட்ட துறைகளுக்கு மாணவர்களை உட்படுத்தி அத்துறைக்கான பல்கலைக்கழக நுழைவையும் உயர்கல்வி, தொழில்சார் தகைமை களையும் அதிகரிப்பது இன்றைய தேவையாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையான மாணவ, மாணவிகள் கலைப் பாடங்களைக் கற்று இலகுவாகப் பல்கலைக்கழக நுளைவினைப் பெறுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இவர் களுடைய இலக்கு ஒரு பட்டத்தைப் பெற்று, அதற்கே அரச தொழிலைப் பெறுவதாகவுள்ளது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் இவ்வாறான திறமையான மாணவர்களை இனங்கண்டு அவர்களை கணித, விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் கற்பித்து மேற்குறிப்பிட்ட துறைகளில் உயர்கல்வியைப் பெறுவதற்கும், எமது கிராமத்தின் கணித, விஞ்ஞான தொழில்நுட்ப கல்வியின் கனதியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாம் பெற்றிருக்கின்ற பெரும்பாலான உயர்கல்வி கலைப் பாடங்களுடன் தொடர்புட்டவை. அவை எதிர்பார்க்கப்படுகின்ற விஞ்ஞான யுகத்திற்கு எவ்வாறான பங்களிப்புச் செய்யும் என்பது கேள்விக்குறியாக உள்ளபோது, காலத்தால் நாம் பின்தள்ளப்படுவதிலிருந்து எம்மைப் பாதுகாக்க புதிய விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்விகளால்தான் முடியும். எனவேதான் 2014ம் ஆண்டு தொடக்கம் கல்வி அமைச்சு தொழில்நுட்பப் பிரிவு (Technological Stream) என்கின்ற ஒரு பிரிவை க.பொ.த. (உயர்தர)ப் பிரிவுகளில் ஒன்றாக அறிமுகப் படுத்தியுள்ளது. வளரும் விஞ்ஞான யுகத்தினால் உருவாகும் நவீனத்துவம் எம்மிடையே உருவாகாவிட்டால் நாம் எதிர்காலத்தில் கல்வியால் சேவை செய்கின்ற சந்தர்ப்பத்தை இழந்து விடுவோம்.

எமது கிராமத்தில் தற்போதைய காலகட்டத்தில் மாணவர்கள் உயர் கல்வியில் நாட்டம் காட்டுவதைக் குறைத்து அவ்வப்போது வருமானம் ஈட்டித் தரக்கூடிய தொழில் துறைகளில் ஈடுபடுவது கவனிக்கப்படுகின்றது. இத்தொழிற் துறைகள் எக்காலத்திலும் வருமானம் ஈட்டித்தரக்கூடியதாகவோ அல்லது வளர்ச்சியடையக் கூடியதாகவோ அல்லது பொருளாதார ஸ்திரத்தன்மை கொண்டதாகவோ அமைவதில்லை. இவ்வாறு தொழிற்துறைகளில் ஈடுபட்ட மாணவர்கள் பின்னர் கைசேதப்படுவதையும் கண்கூடாகக் காண்கின்றோம்.

உதாரணமாக எமது கிராமத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் பல வியாபார ஸ்தாபனங்களில் நாள் கூலி அடிப்படையில் அல்லது வாராந்த கூலி அடிப்படை யிலும் தற்காலிமாகச் சேர்ந்து, இந்த தற்காலிக வருமானத்தில் கவரப்பட்டு கல்வியைத் தொடர்ந்திராத பல மாணவர்களை நாங்கள் காண்கின்றோம். இவ்வாறான ஒருநிலை 1970ம் ஆண்டு காலப்பகுதியில் மருதமுனைக் கிராமம் நெசவுத் தொழில் உச்சக்கட்ட எழுச்சியைக் கண்டபோது இதனால் கவரப்பட்ட அநேகமான மாணவர்கள் அல்-மனார் மகாவித்தியாலயத்தில் கற்றுக்கொண்டிருந்த வேளையில் தங்களுடைய கல்வியில் நாட்டத்தைக் குறைத்து அல்லது இடை நிறுத்திவிட்டு நெசவுத்தொழிலில் ஈடுபட்டு, பின்னர் 1977ம் ஆண்டு காலப் பகுதியில் அப்போதைய அரசின் கொள்கையினால் மருதமுனையின் பாரம்பரிய கைத்தொழிலுக்கு ஏற்பட்ட பாதிப்பு இம்மாணவர்களை கதிகலங்க வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் அரசியல் கொள்கை மருதமுனைக்கு ஒரு வகையில் சாதகமாக அமைந்துவிட்டது. அரசியல் பலமில்லாத மருதமுனைக் கிராமத்தின் படித்த இளைஞர்கள், போட்டிப் பரீட்சைகளின் ஊடாகவும், வேலை வங்கி (Job Bank) திட்டத்தின் மூலமாகவும் தங்களது தகுதிக்கேற்ப அரசாங்கத் தொழில்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

அரசாங்கம் புதிது - புதிதாக பல்கலைக் கழகங்களையும், பல்கலைக்கழக கல்லூரிகளையும், உயர்தொழில்நுட்பக் கல்லூரிகளையும் நிறுவி இக்கல்வி நிறுவனங்களுக்கு உள்வாங்கப்படும் (Intake) மாணவர்களின் எண்ணிக்கையை கணிசமான அளவு அதிகரித்தும்கூட, எமது கிராமத்திலிருந்து தெரிவுசெய்யப் படும் மாணவர்களின் விகிதாசாரத்தில் தேக்கநிலை இன்று வெகுவாகப் பலராலும் உணரப்படுகின்றது. இந்நிலைபற்றி கல்வியுடன் அக்கறையுள்ள அனைத்து புத்தி ஜீவிகளும், தனிப்பட்ட தாபனங்களும் தனவந்தர்களும் சிந்திக்க வேண்டும். பல்வேறு வளங்களை எதிர்கால சந்ததிக்காக எம்மால் திரட்டக்கூடிய காலம் கனிந்திருக்கும் இவ்வேளையில், பல்வேறு துறைகளுக்கும் வழிகாட்டக்கூடிய முன்னோடிகள் எமது கிராமத்தில் இருக்கின்ற வேளையில், அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகளில் உயர் பதவிகளைப் பெற்று அதன் அனுகூலங்களைப் பற்றி அறிந்திருக்கும் பலர் எமது கிராமத்தில் இருக்கும் இவ்வேளையில் மருதமுனையின் அவ்வப்போது ஏற்படும் கல்விப் பின்னடைவுகளை எக்காரணம் கொண்டும் எண்ணிப்பார்க்க முடியாதுள்ளது.

எனவே எமது கிராமத்தின் பொதுவான வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கின்ற குறிப்பாக உயர்கல்வி வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கின்ற மனோபக்குவம், உறுதிப்பாடு அடைந்திருக்கின்ற இவ்வேளையில், அமைதியாகவிருக்கின்ற ஒவ்வொரு சிறிய காலப்பகுதியும் பின்னால் ஒரு பெரும் வெற்றிடத்தை, கிட்ட நெருங்க முடியாத இடைவெளியை எமக்கு உருவாக்கிவிட்டால் எல்லோரும் வருந்த வேண்டியேற்படும்.

எனவே பல்வேறுபட்ட கவர்ச்சிகளின்பால் இலகுவாக ஈர்க்கப்படுகின்ற எமது கிராமத்தின் இளம் சமுதாயத்தினரை சரியான பாதையிலே இட்டுச் செல்வதற்கு இக்கிராமத்திலுள்ள பொது வளங்களையும், மூளைசாலிகளின் அறிவு வளத்தையும் துறைசார் நிருணர்களின் கல்வியுடன் சங்கமமாகியுள்ள அனைத்து ஸ்தாபனங்களும் திடமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். அவ்வாறு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளில் சிலவற்றை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

1. உயர்கல்வியை மேம்படுத்துவதற்கான பொது ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப் படல் வேண்டும். (1970களில் இருந்த கல்விப்பணி மன்றம் பின்னர் செயலிழந்தது குறிப்பிடத்தக்கது).

2. கல்விமான்களின் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் மாணவர்களை சென்றடைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உயர்கல்வியைப் பெற்று அது பூரணமடையும் வரையிலான காலப் பகுதியில் கல்விக்கான உதவி வேண்டும்.
4. உயர் கல்விக்கான வாய்ப்புப் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் அச்சந்தர்ப் பங்களை உறுதிப்படுத்தல் வேண்டும். (சில காரணங்களினால் உயர்கல்வி வாய்ப்பை இழக்க வேண்டிய மாணவர்களுக்கு அக்குறை பாட்டை நிவர்த்தி செய்வதற்கு, நடவடிக்கை எடுத்தல்.)
5. வறுமை நிலையில் உயர்கல்வி வாய்ப்புப் பெறுகின்றார்கள் இனங்காணப் பட்டு சமூக ரீதியான ஒப்பந்தங்கள் மூலமாகவேனும் தனவந்தர்களினால் அவர்கள் போசிக்கப்படல் வேண்டும்.
6. தனிமனித சுயநலங்கள் சமுதாயத்தின் பாதிப்புக்கு ஒரு சில மாதங்களைத் தானும் அபகரித்துக் கொள்வதற்கு இடம்கொடுக்கக் கூடாது.
7. காலவோட்டத்துடன் இணங்கியிராத மருதமுனையிலுள்ள கல்வி ஸ்தாபனங்களின் தலைமைத்துவங்களும் மாற்றப்படல் வேண்டும்.
8. கல்வியால் ஏற்பட்ட புரிந்துணர்வு சமூகத்தின் ஐக்கியத்தினை வளம்படுத்த வேண்டுமே தவிர சமூகத்தை மென்மேலும் கூறுபோட இடமளிக்கக் கூடாது.
9. வளந்து வருகின்ற கேளிக்கை - வினோத உணர்வுகளுக்கு உயர் வகுப்பு, உயர்கல்வி கற்கும் மாணவர்கள் உட்படும் நிலையை தவிர்த்துக் கொள்வதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் முழுமையான அக்கறைகொள்ள வேண்டும்.
10. பாடசாலைகளால் மட்டுமல்லாது தனிப்பட்ட ஸ்தாபனங்களும் கூட புதிய துறைகளை விரும்பி நாடக்கூடிய மனோநிலையை உயர் வகுப்பு மாணவர் களுக்கு உறுதிப்படுத்த வேண்டும்.
11. கல்விக்கான முதலீடு இக்கிராமத்திற்கு நீண்ட காலத்திற்கு பயனளிக்கும் என்ற உணர்வு தனவந்தர்களுக்கு ஏற்படுத்தப்படல் வேண்டும்.
12. ஒவ்வொரு துறைசார்ந்த திறமைசாலிகளும் சமூகத்தினால் மதிக்கப் பட்டு கௌரவிக்கப்படல் வேண்டும். இது இளம் சந்ததியினருக்கு ஒரு தூண்டு கோலாக அமையும்.
13. அரிய கல்வித் துறைகளில் பிரவேசிக்கின்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள், உதவு தொகைகள் வழங்கி ஊக்கிவிக்கப்படல் வேண்டும்.
14. கல்விக்கென ஒரு சாரார் மட்டுப்படுத்தப்படும் நிலை மாற்றப்பட்டு கல்வியின் பால் அக்கறையும் ஆர்வமும் உள்ள எல்லோரினதும் ஆதரவு பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். மற்றும் கல்வியின் பால் எல்லோருக்கும் பொதுவானது என்னும் மனோநிலை தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.
15. பொதுநல நோக்கங்கள் கொண்ட, சமூக நலனுக்கு உழைக்கக் கூடியவர் களை கௌரவித்து அவர்களின் தொண்டினை கல்வி வளர்ச்சிக்கும் பெற்றுக் கொள்ள வேண்டும்.
16. மருதமுனையில் விஞ்ஞானக் கல்வியை மேலும் மேம்படுத்தும் நோக்கிலும் பெண் மாணவிகளை உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கற்கும் தொகையை அதிகரிக்கும் நோக்கிலும் உயர்தர விஞ்ஞானப் பிரிவு தனியார் வகுப்புக்கள் மருதமுனையில் நடாத்தப்படுவது உறுதிசெய்யப்படல் வேண்டும்.
17. மருதமுனையிலுள்ள இருபெரும் மத்திய கல்லூரிகளின் சமூகங்களுக் கிடையில் ஒரு இணக்கப்பாடு காணப்பட்டு ஒன்று ஆண் கல்லூரியாகவும், மற்றது பெண் கல்லூரியாகவும் மாற்றப்படல் வேண்டும். இதற்கு ஏனைய பாடசாலைகளின் நிபந்தனை இல்லாத ஒத்துழைப்பு பெறப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மருதமுனையில் இயங்கும் பாடசாலைகளில் ஒன்று முற்று முழுதான ஆங்கில மொழிப் பாடசாலையாக மாற்றப்படல் வேண்டும்.
19. செயலிழந்திருக்கும் மருதமுனை பட்டதாரிகள் சங்கம் மீண்டும் உருப்பெற்று ஒவ்வொரு ஆண்டிலும் க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சைகளில் தோற்றும் மாணவர்களுக்கு நன்மை பயக்கும் கல்விசார் நடவடிக்கைகளை எடுப்பதுடன் சங்கத்தையும் சமூகத்துடன் இணைத்து கல்வி அபிவிருத்திக்கு பாடுபடல் வேண்டும்.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் கல்விக்கென அர்ப்பணிப்புக்களை அதிகமாக மேற்கொண்ட கிராமம் மருதமுனை என்பதை அதனது குறுகிய கால கல்வி வளர்ச்சி பலருக்கும் தெளிவுபடுத்தியிருக்கின்றது. மேலே நாம் காட்டிய பல்வேறு அர்ப்பணிப்புக்களையும், சேவைகளையும், உதவிகளையும், விட்டுக் கொடுப்புக்களையும் கல்விக்கு வழங்க முற்படும் போது உண்மையில் நாம் அடுத்த நூற்றாண்டுக்கான ஒரு விழிப்புள்ள ஆரோக்கியமான கல்விச் சமுதாய மொன்றை உருவாக்கிய பங்காளிகளாக தலைநிமிர்ந்து நிற்க முடியும். எமது வளர்ச்சியின் வேகத்தில் அரசியல் பக்க பலத்திற்கு அப்பாற்பட்ட சந்தர்ப்பங்கள் தான் அநேகமுண்டு. எம்மில் நாம் நம்பிக்கை வைத்து உழைத்ததன் பிரதிபல னாகத்தான் இறைவன் உதவியுடன் இன்று நாம் ஒரு கல்விச் சமுதாயமாகக் காட்சியளிக்கின்றோம் என்பது கண்கூடு. ஆனால் எல்லாம் இணைந்துவிட்ட இக்கால கட்டத்தில் நமது அத்தனை சக்திகளையும் முயற்சிகளையும், முறைமை யாகப் பயன்படுத்தினால் வானளாவ நாம் உயர்ந்துவிடலாம் என்பதற்கு தடை இருக்காது. கல்வியென்பது யாருக்கும் வரையறுத்து உடமையளிக்கப்பட வில்லை. அது வளங்களும் முயற்சிகளும் உள்ள இடங்களைத்தான் நாடிச்செல்லும். இவ்வாறிருக்க முயற்சி திருவினையாக்கும் என்ற தாரக மந்திரத்தை எடுகோளா கக் கொண்டு பழக்கப்பட்டுவிட்ட நாம் முயன்றால் எமது வெற்றியையும், இலக்கையும் நிச்சயம் உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

References :

01. மருதமுனை வரலாறு - புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன்.
02. மருதமுனை வரலாற்றில் தனியாள் ஆளுமை - ஏ.எம்.ஏ. ஜலீல்
03. மருதமுனையின் வரலாறு - ஆள்சார் கண்ணோட்டம் - முகம்மது தம்பி முகம்மது நௌபல்
04. சிறப்பு மலர் - 2010 - அல்-நஹ்ழா இஸ்லாமிய கல்வி நிலையம்.
05. A/L தின சிறப்பு மலர்கள் - கமு/ அல்-மனார் மத்திய கல்லூரி, மருதமுனை.
06. A/L தின சிறப்பு மலர்கள் - கமு/ ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை.
07. சிறப்பு மலர் - 1994 - மருதமுனை பட்டதாரி மாணவர்கள் சங்கம்
08. நேர்காணல் மௌலவி. அல்-ஹாஜ். கே.எல்.எம். ஹனிபா
மௌலவி. என்.ஜி. முகம்மது கமால்
அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. ஹமீது, ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னலெப்பை அஜ்மல்கான் (BBA) ஜே.பி.

1967-01-22ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் ஆரம்பித்த இவர் தனது இடைநிலைக் கல்வியை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியிலும் ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் மேற்கொண்டார். கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு (BBA) ஆங்கில மொழிமூல முகாமைத்துவக் கற்கை நெறியைப் பூர்த்திசெய்து 01-04-1992ல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைக்கப் பெற்றார்.

விஷேட தகைமைகளாக,
PGDE - பட்டமேற்கல்வி டிப்ளோமா - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
PGDM - பட்டமேற் முகாமைத்துவ டிப்ளோமா - கிழக்குப் பல்கலைக்கழகம்
MBA (R) - முகாமைத்துவ முதுமானி (வாசிப்பு)
போன்றனவற்றைக் கொண்டிருக்கிறார்.

BBAQ பரீட்சையில் அதிசிறந்த பெறுபேற்றுக்காக செங்கலடி MPCS விருதினையும் பெற்றுக்கொண்டார். Tech Lang ஆங்கிலக் கல்வி நிறுவனம், Vision Institute போன்ற நிறுவனங்கள் மூலம் ஆங்கில அறிவு வளர்ச்சிக்கு அதிகபட்ச சேவைகளையாற்றினார். மாலைதீவு, ஓமான் போன்ற நாடுகளில் ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

2000ம் ஆண்டில் இலங்கை மொழிபெயர்ப்புச் சேவை வகுப்பு ஒன்றிலும் சித்தியடைந்தார். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி (சம்மாந்துறை) போன்றவற்றின் பகுதி நேர ஆங்கில விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்ற சட்ட மொழிபெயர்ப் பாளராகக் கடமையாற்றும் இவர் கிழக்குப் பிராந்தியத்திலிருந்து தெரிவுசெய்யப் பட்ட ஒரே நபர் என்பது குறிப்பிடத்தக்கது. சுயாதீன மொழிபெயர்ப்பாளராகவும், உரை பெயர்ப்பாளராகவும் பணிபுரியும் இவர் பல நூலுருவாக்கக் குழுவிலும் சில சங்கங்களின் ஆலோசனைக்குழு, நிர்வாகக் குழுக்களிலும் பங்கேற்றுள்ளார்.

முகம்மது ஜூனைட் லம்உஸ் ஷூறைலா என்பவரைக் கரம்பற்றிய இவர்களுக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றனர். முழுத்தீவுக்குமான சமாதான நீதவானான இவர் USAID BIZA நிகழ்ச்சித்திட்ட ஆலோசகராகவும் கடமையாற்றுகிறார். கல்முனை RKM வித்தியாலயத்தில் தற்பொழுது கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகப் பதிவாளர்கள்

01. ஜனாப். எம்.எப். ஹிபதுல் கரீம் (பதிவாளர்)
02. ஜனாப். பீ.எம்.எம். முபீன் (சிரேஷ்ட பிரதிப் பதிவாளர்)
03. ஜனாப். எம்.எப். மர்சூக் (பிரதிப் பதிவாளர்)

- பிரதிப் பதிவாளராகக் கடமையாற்றிய ஜனாப். எம்.ஐ.எம். சுபைர் தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் உயர்பதவியில் ஜெனீவாவில் கடமையாற்றுகிறார்.

உயர்கல்வி, கல்விச்சேவைகள், பல்கலைக்கழகங்கள்

01. பேராசிரியர். டாக்டர். எம்.ஏ.எம். சித்தீக்
02. கலாநிதி. மவ்லவி எம்.எஸ்.எம். ஜலால்தீன் (முன்னாள் பீடாதிபதி)
03. கலாநிதி. பீ.எம். ஜமாஹிர்
04. கலாநிதி. எம்.எச்.எம். நஸீர் (ஓமான் பல்கலைக்கழகம்)
05. கலாநிதி. எம்.பி.எம். இஸ்மாயில்
06. கலாநிதி. எஸ். ஜூனைதீன் Eng. (பீடாதிபதி, பொறியியல்பீடம், SEUSL)
07. கலாநிதி. ஏ.எம்.எம். நவாஸ் (தலைவர், ELTU, SEUSL)
08. கலாநிதி. கே. இம்ரியாஸ் (அவுஸ்திரேலியா பல்கலைக்கழகம்)
09. கலாநிதி. எம்.என். பௌஸ் (கால்நடை மருத்துவ நிபுணர்)
10. கலாநிதி. எஸ். ஜஹ்பர் சாதிக் (ஓமான் பல்கலைக்கழகம்)
11. கலாநிதி. மவ்லவி பீ.எம்.எம். இர்பான் (சூடான் பல்கலைக்கழகம்)
12. ஜனாப். ஏ.ஏ. நுபைல் (முதுநிலை விரிவுரையாளர்)
13. ஜனாப். எம்.Bபி.எம். அம்ஜத் (முதுநிலை விரிவுரையாளர்)
14. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் (முதுநிலை விரிவுரையாளர்)
15. மவ்லவி. எம்.எச்.எம். ஜெலீல் (முதுநிலை விரிவுரையாளர்)
16. ஜனாப். எம்.எச்.எம். நைறூஸ் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
17. ஜனாப். எம்.எம். பாஸில் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
18. ஜனாப். ஏ.எம். றியாஸ் அகமட் (விரிவுரையாளர்)
19. ஜனாப். ஏ.ஜே.எல். வஸீல் (விரிவுரையாளர்)
20. ஜனாப். ஏ.எம். றாபி (விரிவுரையாளர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகர்கள்

01. ஜனாப். எம்.சீ.எம். அஸ்வர் (சிரேஷ்ட நூலகர்)
02. ஜனாபா. மஸ்றூபா ஹமீம் (சிரேஷ்ட உதவி நூலகர்)

- ஜனாப். எம்.எல்.எம். தாஹிர் (உடற்கல்வி போதனாசிரியர், SEUSL)
- ஜனாப். எம்.எஸ்.எம். பஸீல் (Works Engineer - SEUSL)

கல்விக்கல்லூரி விரிவுரையாளர்கள்

01. ஜனாப். எம்.ஏ.எம். ஜெலீல் (முன்னாள் உப பீடாதிபதி)
02. மவ்லவி. அல்-ஹாஜ். எப்.எம்.ஏ. அன்ஸார் மவ்லானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நிருவாக சேவை (SLEAS)

01. அல்-ஹாஜ். ஏ.எம். அப்துல் மஜீட்
(இவர் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய பின் ஓய்வு பெற்றுள்ளார்.)
02. அல்-ஹாஜ். எம்.வை.எம். முஸ்லிம்
(கண்டி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய பின் ஓய்வுபெற்றுள்ளார்.)
03. ஜனாப். எம்.எச். காதர் இப்றாஹீம் (ஓய்வு)
04. ஜனாப். எம்.கே.எம். மன்ஸூர் (வலயக் கல்விப் பணிப்பாளர்)
05. ஜனாப். எம்.எஸ்.ஏ. ஜெலீல் (வலயக் கல்விப் பணிப்பாளர்)
06. ஜனாப். எம்.எஸ். சஹ்துல் நஜீம் (வலயக் கல்விப் பணிப்பாளர்)
07. ஜனாப். எஸ்.எம். அமீர் (தற்போது சம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபராக கடமை யேற்றுள்ளார்.)
08. ஜனாப். எஸ்.எல்.ஏ. றஹீம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
09. ஜனாப். ஏ.சீ.எம். தௌபீக் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
10. டாக்டர். எஸ்.எம்.எஸ். உமர் மவ்லானா (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
11. ஜனாப். பீ.எம். யாஸீர் அரபாத் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
12. ஜனாப். எம்.எச்.எம். ஜாபீர் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
13. ஜனாபா. எம்.எச். றியாசா (பயிற்சியில் உள்ளனர்)
14. ஜனாபா. Bபி. ஜிஹானா (பயிற்சியில் உள்ளனர்)

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்

01. ஜனாப். ஏ.எல்.ஏ. சக்காப் ஜே.பி.
02. ஜனாப். சத்தார். எம். பிர்தௌஸ்
03. அல்-ஹாஜ். மவ்லவி. இஸட்.எம். நதீர்
04. அல்-ஹாஜ். ஏ. அலாவுதீன்

அதிபர் சேவை (SLPS) தரம் - I

01. அல்-ஹாஜ். ஏ.எம்.ஏ. சமது ஜே.பி. (ஓய்வு)
02. அல்-ஹாஜ். ஏ.எல். மீராமுகைதீன் ஜே.பி. (ஓய்வு)
03. அல்-ஹாஜ். எஸ்.எல். இப்றாலெப்பை (ஓய்வு)
04. ஜனாப். ஏ.எம். பாறூக் ஜே.பி. (ஓய்வு)
05. ஜனாப். எஸ்.எல்.எம். ஜலால்தீன் (ஓய்வு)
06. ஜனாப். ஏ.ஆர்.ஏ. றாஸிக் (ஓய்வு)
07. அல்-ஹாஜ். ரீ.எல். அமீனுத்தீன் (ஓய்வு)
08. ஜனாப். ஏ.ஆர்.எம். தௌபீக் (ஓய்வு)
09. ஜனாப். எம்.எச். ஹுமாயூன் (ஓய்வு)
10. அல்-ஹாஜ். செய்யித் எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா, ஜே.பி. (ஓய்வு)
11. அல்-ஹாஜ். ஏ. கால்தீன் (ஓய்வு)
12. அல்-ஹாஜ். எம்.சீ. அகமது முகைதீன் (ஓய்வு)
13. ஜனாப். எஸ்.எம். ஜஹ்பர்தீன் (ஓய்வு)
14. ஜனாப். ஏ.ஆர்.ஏ. றசூல் (ஓய்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் சேவை (SLPS) தரம் - II

01. ஜனாப். எம்.ஜே. ஹஸீப்
02. ஜனாப். எம்.ஏ.எம். இனாமுள்ளாஹ்
03. ஜனாப். எம்.எம். ஹிர்பான்
04. ஜனாப். எம். ஹூனுக்கத்துல்லாஹ்
05. ஜனாப். ஐ. உபைதுல்லாஹ்
06. ஜனாப். எம்.எம். முஸம்மில்
07. ஜனாப். எம்.ஐ. சம்சுத்தீன்

அதிபர் சேவை (SLPS) தரம் - III

01. ஜனாப். எம்.எம். முஸ்ரப்
02. ஜனாப். ஏ.எம். அன்ஸார்
03. ஜனாப். எம்.எம்.எம். நியாஸ்

ஆசிரிய ஆலோசகர்கள்

01. ஜனாப். ஐ.எல். நூறுல் அமீன்
02. ஜனாப். ரீ.எல். ஹபீபுல்லாஹ்
03. ஜனாப். எம்.எஸ்.எஸ். ஸஹ்துல் அமீன்
04. ஜனாபா. ஜெஸீலா உதுமாலெப்பை

பொறியியலாளர்கள்

01. எஸ். உபைதுல்லாஹ்
02. பீ.ரீ.எம். சித்தீக்
03. ஏ.எஸ்.எம். நியாஸ்
04. எம்.ஐ. அமீனுல்பாரி
05. எம்.எஸ். மவ்ஜூத்
06. ஜே. நஸ்றுல் கரீம்
07. ஜே.எம். நஸார்
08. ராஜ்முகம்மட் சிறாஜ்
09. எம்.எம். நிலாம்
10. ஜஹ்பர்
11. எம்.ஐ.எம். ஆரிப்
12. எம்.எம்.எம். ரிலா
13. எம்.கே.எம். பௌமி
14. ஏ.எச்.எம். முஜாஹித்
15. எம்.எம். றஊப்டீன்
16. எம்.ஏ. இப்திகார்
17. எம்.எஸ்.எம். பஸீல்
18. எம். அரபா பாறூக் (மரணம்)
19. காதர் (மரணம்)
20. ஐ.ஏ. ஹமீட்
21. எம்.எம்.எம். சபீக்
22. எம்.ஏ. யாஸிர் றஸ்மி

பொறியியல்பீட மாணவர்கள்

பேராதனை	-	எஸ்.எச். சாஜித்	3ம் வருடம்
		ஏ.ஜே.எம். தஸ்ரிப்	1ம் வருடம்
தென்கிழக்கு	-	ஏ.எம். தாலூத்	1ம் வருடம்
றுகுணு	-	எம்.ஐ.எம். சஜீர்	1ம் வருடம்

விசேடசேர்க்கை பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்நிலை உத்தியோகத்தர்கள்
நிருவாக சேவை (SLAS)

அமைச்சு செயலாளர் :

- அல்-ஹாஜ். ஏ.எச்.எம். அன்ஸார் (SLAS) (இவர் தற்போது கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றுகிறார்.)

பணிப்பாளர் :

- அல்-ஹாஜ். எஸ். அன்வர்தீன், M.A. (SLPS)
  (அம்பாரை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றுகிறார்.)
- அல்-ஹாஜ். எம்.எம். நௌபல்
- ஜனாப். எம்.சீ.எம். அன்ஸார்
- ஜனாப். ஏ.எம். லத்தீப்
- ஜனாப். கே.எம். றிஸ்வி
- அல்-ஹாஜ். மவ்லவி எஸ்.எம். றஸான்
- ஜனாப். ஏ.எல்.எம். தாஸிம் (ஓய்வு)
- ஜனாப். ஐ.எல்.எம். சம்சுத்தீன் (ஓய்வு)

கணக்காளர் சேவை (SLAcS)

01. ஜனாப். ஐ.எல்.எம். அக்றம்
02. அல்-ஹாஜ். வை. ஹபீபுள்ளாஹ்
03. ஜனாப். கே. றிஸ்வி யஹ்ஸர்
04. ஜனாப். எம்.ஏ.எம். அமீன்
05. ஜனாப். ஏ.எச். தஸ்தீக்
06. டாக்டர். எம்.எல். அப்துல் காதர் (ஓய்வு)
07. ஜனாப். எம்.ஐ. றிஹான்

ஏனைய துறைகளில் உயர்பதவி வகிப்பவர்கள்

புள்ளிவிபரத் திணைக்களம் :

01. ஜனாப். ஏ. அபுல்ஹூதா (உதவி ஆணையாளர்)
02. ஜனாப். எம்.எம். நக்ஷபி (உதவி ஆணையாளர்)
03. ஜனாப். எம்.எஸ். ஸஹ்துல் ஹலீம் (உதவி ஆணையாளர்)
04. ஜனாப். இஸட்.எம். ஜாபிர்

- தேசிய பயிலுனர் சபை (NAITA) யின் கிழக்கு மாகாண பணிப்பாளராக ஜனாப். எம்.எச். ஷாஜஹான் கடமையாற்றுகிறார்.
- விவசாயத் திணைக்களத்தின் அம்பாறை மாவட்டப் பிரதிப் பணிப்பாளராக ஜனாப். எம்.ஐ. கலீஸ் கடமையாற்றுகிறார்.
- தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளராக ஜனாப். ஏ.எம்.எம். இப்றாகிம் கடமையாற்றுகிறார்.
- அல்-ஹாஜ். வை.எல்.எம். பகுர்தீன் (நைல்வர்) கூட்டுறவுத் திணைக்களத்தின் ACCD யாகப் பணியாற்றுகிறார்.
- விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாகக் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ள இருவர், 1. அல்-ஹாஜ். எஸ்.எச்.எம். நிஸாம்
  2. அல்-ஹாஜ். ஏ.சீ.எம். றஸீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்முனை காணிப்பதிவாளர் காரியாலயத்தில் மேலதிகக் காணிப் பதிவாளராக (A.D.R.) கோல்ட்மைன்ட் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் முஸத்திக் ஜே. முகம்மது ஜே.பி. அவர்கள் நீண்ட காலமாக சிறப்பான பணி யாற்றுகிறார்.

- கல்முனைப் பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக எம்.ஐ.எம். முகர்ரப் ஜே.பி. கடமைபுரிகிறார்.

- அல்-ஹாஜ் ஏ.எச். அப்துல் லாஹிர் கல்முனைப் பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார். கல்முனைப் பிரதேச செயலாளர் முஸ்லிம் பிரிவுக்குட்பட்ட அத்தனை கிராம சேவை உத்தியோகத்தர்களையும் நிருவகிக்கும் பொறுப்பு இவருடையது. இவர் கரைவாகு வடக்கு கிராம சபையின் முன்னாள் தலைவர் அப்துல் ஹமீத் அவர்களின் புதல்வராவார்.

- கல்முனைத் தொழில் திணைக்களத்தில் பிரதம அதிகாரியாக ஜனாப். எச்.எம். முனீர் கடமையாற்றுகிறார்.

- ஜனாப். எம்.ஏ.எம். மனாஸ் கல்முனை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தராகவும், ஜனாப். எம்.ஐ.எம். முஸர்ரப் சுகாதாரப் பிராந்தியப் பணிமனையின் அதிகாரம் பெற்ற உத்தியோககத் தராகவும் பணிபுரிகின்றனர். ஜனாப். எம்.பி. அபுல்ஹஸன் மருதூர் ஹஸன் இப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

- ஜனாப். யூ.எல். றமீஸ், காரைதீவு பிரதேச செயலகத்தில் தலைமை இலிகித ராகக் கடமையாற்றி வருகிறார்.

- இலங்கை மின்சார சபை கல்முனைக் காரியாலயத்தில் கடமையாற்றிய அல்-ஹாஜ். எம்.எம். பதுறுநயீம் அண்மையில் ஓய்வுபெற்றார். இவர் ஓய்வு பெறும்போது கல்முனை மின்சார சபையின் முகாரியாக பதவியுயர்வு பெற்றிருந்தார். இவ்வாறு ஒரு பதவி உயர்வினைப் பெற்ற முதல் பிரஜையும் இவரே.

- இலங்கை மின்சார சபை கல்முனை (பொறியியலாளர்) பிரதான காரியா லயத்தில் தலைமை இலிகிதராகக் கடமையாற்றும் சகோ. ஏ.எஸ்.எம். முனவ்வர் மருதமுனை மகன் என்பது எமக்குப் பெருமை.

- இலங்கைத் தொலைத்தொடர்பு (Telecom) காரியாலயத்தில் எம்.ஏ. அஸ்றப் IPT யாகக் கடமையாற்றி தற்போது உதவிப் பொறியியலாளர் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

- செல்வநாயகம் என்றே நண்பர்களால் அன்பாக அழைக்கப்படும் ஏ.எல். அலாவுத்தீன் பல திணைக்களங்களில் பணியாற்றிய பின் கல்முனை மாநகர சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகவிருந்து (AO) தற்போது ஓய்வுபெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள்

நீதிபதிகள்

01. ரீ.எல். அப்துல் மனாப் - மாவட்ட நீதிபதி
02. வீ.எம். சியான் - தொழில் நீதிமன்ற நீதிவான்
03. ஏ.சீ.எம். றிஸ்வான் - நீதிவான்

சட்டத்தரணிகள்

01. எம்.எஸ்.எம். ஜெமீல்
02. ஏ.எம். பதுறுத்தீன்
03. ஏ.எம். றகீப்
04. எப்.எம்.ஏ. அன்சார் மௌலானா
05. எஸ். மனார்தீன்
06. எம்.எல். துல்கர் நயீம்
07. எம்.ஐ. றைசுல் ஹாதி
08. எம்.எச்.எம். ஹம்சா
09. பி.எம். றசீன்
10. ஐ.எல்.எம். றமீஸ்
11. ஏ.ஆர்.எம். கலீல்
12. ஏ. றஸ்மின்
13. ஏ.எல்.எம். றிபாஸ்
14. ஏ.ஜீ. பிரேம் நவாத்
15. எம்.ஏ.எம். முபீத்
16. எஸ்.எம். இஹ்லாஸ்

வெளியிடங்களில் வாழ்ந்துவரும் மருதமுனை சட்டத்தரணிகள்

01. எம்.எம். றபீக் (பலாங்கொடை)
02. எம்.சீ.எம். நவாஸ் (கொழும்பு)
03. இஸ்மாயில் பி. மஆரிஃப் (கொழும்பு)
04. கே.ஆர்.எம். அப்துல் றஹீம் (கொழும்பு)
05. எஸ்.எம். அப்துல்லாஹ், LL.M. (கொழும்பு)
06. மஹ்பூபா றிபாய்டீன் (கொழும்பு)
07. எம்.எம். அபுல்கலாம் (லண்டன்)
08. ஏ.ஆர்.எம். சுல்பி (தென்சூடான்)
09. எம்.எம். முபாறக் (கட்டார்)

சட்டமானி மாணவர்கள் - யாழ் பல்கலைக்கழகம்

01. ஏ.எச். நூபா நத்தரின்
02. எம்.எச். சனோபர் ஜரிசா
03. ஏ.எஸ். அப்சனா
04. எம்.எச். சஉத் முகம்மதி

கொழும்பு பல்கலைக்கழகம்

05. எம்.ஐ. யஸ்தீன்

எம்.ஏ.எம். முபீத், கமு/ அல்-மனார் மத்திய கல்லூரியில் 2004ம் ஆண்டு க.பொ.த. உயர்தர கலைப்பிரிவில் 3A சித்திகளைப் பெற்றதன் மூலம் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று "C.W.W. கன்னங்கரா விருதை" அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களிடமிருந்து பெற்று எமது கிராமத்திற்கும், எமது மக்களுக்கும் பெருமை சேர்த்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகளும் சம்பிரதாயங்களும் மருதமுனை கலாசாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்

ஏ.ஜே.எல். வஸீல் (M.Ed, M.Phil)
உளவியல் உதவி விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள்,
அரபு மொழிப்பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

அறிமுகம்

இலங்கை முஸ்லிம் கவுன்சிலின் வருடாந்த மாநாடு 14.09.2014இல் BMICH நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட பிரதான பேச்சாளர்களில் ஒருவரான களனி பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு மற்றும் பௌத்த பாளி கற்கைகளின் பேராசிரியரான கொட்டிபிட்டிய ராகுலதேரர் பிரதான உரை நிகழ்த்தினார். அதில் அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்டுவரும் சிங்கள - முஸ்லிம் தப்பபிப்பிராயங்களுக்கு முஸ்லிம்களிடையே அண்மையில ஏற்பட்ட கலாசார மாற்றமே காரணம் என்கிறார். அவ்வாறாயின் ஒரு சமூகத்தின் இருப்புக்கும். அழிவுக்கும் முக்கிய காரணியாக கலாசாரம் அமைகிறது. பல்லின சமூகம் வாழும் இலங்கையில் ஒவ்வொரு இனமும் அவர்களுக்கென்ற தனித்தனியான கலாசாரங்களை எவ்வாறு சமூகத்தின் மத்தியில் கைக்கொள்வது என்பது பற்றி தெரிந்திருத்தல் அவசியம். இந்தப் பிண்ணனியிலேயே மருதமுனை மக்களின் கலாசாரம் பற்றி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மனித மனங்களில் உயரிய பெறுமானத்தை ஏற்படுத்தியுள்ள அதேவேளை உபகலாசாரத்தையும் ஏற்படுத்தி யுள்ளது என்பதை கடந்தகால மதிப்பீடுகளிலிலிருந்து அறிய முடியுமாக உள்ளது. அதனால் மருதமுனையின் கலாசாரத்தை அதன் பூர்வீக வரலாற்றுடன் இணைத்துப் பேசுவதோடு, சில பழமையான கலாசாரங்களின் அழிவுகளினால் ஏற்பட்டுள்ள விளைவுகளையும், புதிய கலாசார இணைவினால் ஏற்பட்டுள்ள நன்மை, தீமைகளை மதிப்பீடு செய்வதாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

உலகத் தோற்றத்திலிருந்து ஒரு பிரதேசத்தின் வரலாற்றை, கலாசாரத்தை ஆராய்வது என்பது கடினமானது. மனிதன் சிந்தித்ததன் விளைவுதான் கலாசார மாகும். ஆயினும் இஸ்லாமியக் கலாசாரம் இதனிலுமிருந்து வேறுபட்டது. அது அல்குர்ஆன், ஹதீஸ் என்பவற்றோடு தொடர்பானது.

ஓர் இடத்தின் வரலாற்றினையும் கலாசாரத்தினையும் விஞ்ஞான ரீதியாக பார்ப்பது அவசியம். எழுத்துக்கலை இருக்கின்றது என்பதற்காக வரலாறு, கலாசாரம் என்பவற்றை எழுத முடியாது அதற்கு ஆதாரங்கள் தேவை அதன்படி எமது மூத்த மனிதர்கள் எமது ஊரைப்பற்றி எழுதிய விஞ்ஞான பூர்வமான நூல்கள், கல்வெட்டுகள், புராணக்கதைகள், கட்டுக்கதைகள் என்பன அவசியமாகும்.

கலாசாரம் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் வழங்கப் பெற்று வந்தாலும் E.B. டெய்லர் முன்வைத்த வரைவிலக்கணம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அமைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. அவர் கலாசாரம் என்பதற்கு அறிவு , நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலியனவையும், மனிதன் சமுதாயத்தின் ஓர் உறுப்பினராக விருந்து கற்கும் ஏனைய திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமையான தொகுதி என வழங்குகிறார். கலாசாரம் என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கை வழிமுறை (Ways of Life) இதனுள் வாழும் நபர்களின் மொழி, ஆடையணிகள், ஆபரணங்கள், கலை நுட்பங்கள், இலக்கியம், கல்வி, சட்டம், பழக்கவழக்கங்கள், நற்பண்புகள், நம்பிக்கை, விசுவாசம், பாரம்பரியம், வழக்காறுகள் ஆகிய அனைத்து விடயங்களும் அடங்கிய கோவை என விளங்கப்படுத்தலாம்.

எந்தவொரு சமூகமும் நிலைத்திருப்பது அதற்குரிய கலாசார இலட்சணங்களை பரம்பரை பரம்பரையாக பரிமாறுதலிலேயே ஆகும். ஒப்படைப்பதிலும் மறுப்பதிலுமே அப்பிரதேசத்தின் கலாசாரம் தங்கியிருக்கும். கலாசாரத்தை பொதுவாக இரண்டுவகையாகப் பிரிக்கலாம்

i. பொருள்சார் கலாசாரம் (Material Culture) - இது வெளிப்படையாக தெரியும்.
ii. பொருள்சாரா கலாசாரம் (Non Matireal Culture) - இது வெளித்தெரியாது மனித மனங்களோடு தொடர்புடையது.

இவ்விரு கலவைகளினாலுமே மருதமுனையின் கலாசாரம் பண்டைய காலம் முதல் இன்றைய காலம்வரை அரேபியர், தமிழர், சிங்களவர், அந்நிய ஆட்சியாளர்கள், இந்தியர் போன்றோர்களின் கலாசார செல்வாக்குக்கு உட்பட்டு வந்திருக்கின்றது.

உலக சிந்தனை வரலாற்றில் உலகம் தோன்றி நெடுங்காலத்துக்கு பின்னரே மெய்யியலும், விஞ்ஞானமும் தோன்றியதாக ஆதிகிரேக்க மெய்யியல் நூலில் ஜோன்பேணாற்று என்பவர் குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் மருதமுனையின் தோற்றத்தையும் உலகம் தொடங்கிய காலம் முதல் அறிவதென்பது கடினம் ஆயினும் மருதமுனைக்கு மனித குடியேற்றம் ஆரம்பித்த பின்னர் கிடைத்த புராணவியல், சிந்தனை தகவல்களில் இருந்தே கலாசாரம் பற்றி அறிய முடிகிறது.

சமூக உணர்வின் ஆதி மூலமாக தொன்மம் அல்லது புராணவியல் (Mythology) காணப்பட்டதாக விஞ்ஞான வரலாறு கூறுகின்றது. மனித சிந்தனையும், விஞ்ஞான முன்னேற்றமும் அவற்றின் தோற்றத்தை சமயத்திலிருந்து பெற்றதாக கருதப்படுகிறது. இதன்படி உலகை விளக்குவதற்கான மனிதனின் ஆரம்ப முயற்சி என புராணவியலை கூறலாம். தான் எதிர்நோக்கும் அல்லது கண்முன் தோன்றும் பிரச்சினைகளுக்கு அல்லது தோற்றப்பாடுகளுக்கு ஒரு விளக்கத்தையோ அர்த்தத்தையோ புராணவியல் ஊடாக மனிதன் வழங்குகின்றான். எவ்வாறு ஆயினும் புராணவியல் விஞ்ஞானத்துக்கு முந்திய பார்வை எனலாம். அதிகமான கலாசாரங்கள் தமது சிந்தனை வளர்ச்சியின் ஆரம்பத்தை புராணவியலில் இருந்தே பெற்றிருக்கிறது. இதனை எகிப்திய, சீன, இந்து நாகரீகங்களில் அவதானிக்க முடியும். அவற்றின் ஆரம்பவடிவம் கவிதைகள், கதைகள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பிண்ணனியில் இருந்துதான் மருதமுனையின் கலாசாரத்தினையும் அது புராணவியலிலிருந்து வளர்ந்து வந்த விதத்தினையும் நாம் அறிய முடியுமாக உள்ளது அதனடிப் படையில் மருதமுனைக்கு முதல் வந்த மனிதர் யார்? மருதமுனைக்கு வந்த முதல் சமயப் போதகர் யார்? மருதமுனைக்கு வந்த முதல் அரேபியர் யார்? மருதமுனையின் முதல் மஸ்ஜித் எது? மருதமுனையின் முதல் குடிமுறை எது? ஆரம்பத்தொழில் எது? ஆரம்ப உணவு எது? ஆரம்ப மொழி எது? ஆரம்ப குடியிருப்பு எது? ஆரம்ப குடிநீர் எங்கிருந்து பெறப்பட்டது? முதல் போக்குவரத்து முறை எது? ஆகிய வினாக்களிலிருந்து விடைகளை தேடும்போது தான் எமது ஊரின் கலாசாரத்தினை நாம் அறிய முடியும்.

மருதமுனையின் கலாசாரத்தினை அறிய வேண்டுமாயின் முதலில் இலங்கையின் வரலாற்றினையும், அரேபியரின் வரலாற்றினையும், இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றினையும் தெளிவாக அறிதல் அவசியமாகும். குறிப்பாக இலங்கையின் வரலாற்றில் விஜயனின் வருகை, போர்த்துக்கீசர் வருகை (1505-1658), ஒல்லாந்தர் வருகை (1658-1796), பிரித்தானியர் வருகை (1796-1948) என்ற பின்னணி தெரிய வேண்டும். அதேபோல் மிகப்பழமையான துறைமுகம்களில் ஒன்றான மட்டக்களப்பு துறைமுகம், தென்கிழக்கு, கிழக்கு துறைமுகம்கள் ஆகியவைகளின் முக்கியத்துவங்கள் உணர்தல் வேண்டும். அதற்கும் அப்பால் இஸ்லாத்துக்கு முற்பட்ட, பிற்பட்ட அரேபியர் வர்த்தக வரலாறு பற்றியும் தெரிந்த பின்னணியில் விளங்க முற்படும் போதே மருதமுனை பூர்வீக வரலாற்றின் ஊடாக மருதமுனையின் தெளிவான கலாசாரத்தினை அறிந்துகொள்ளலாம்.

இஸ்லாத்துக்கு முன்னர் இலங்கையில் அரேபிய வணிகர்

இலங்கையின் வரலாற்றைக் கூறும் தொன்மை நூலான மகாவம்சம் கி.மு. 4ம் நூற்றாண்டளவில் அனுராதபுரத்துக்கு மேற்குப்புறமாக யோனர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடம்பற்றி குறிப்பிட்டுள்ளது. பாரதியாரின் சிறு கவிதையடிகளிலும் இந்த யோனர்கள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இலங்கையின் புராதன சிங்களக் காவியங்களிலும் "யோனக" என்ற பதம் கையாளப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் முதலே இலங்கையில் அரேபியர் கொண்டிருந்த வணிகச் செல்வாக்கினை காட்டுகின்றது. (பார்க்க றவூப்ஸெயீன் 2012:12)

எனவேதான் இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னரே அரேபியர் குடியேற்றங்கள் காணப்பட்டன என்பதை தென்கிழக்கு ஆசிய வரலாற்றை ஆராய்ந்தவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இதுபற்றி The History of Commerce in Indian Ocean என்ற நூலில் பேராசிரியர் சிறி. கந்தையா "நபியவர்கள் வேதத்தை அறிமுகம் செய்ய முன்னர் மிக நீண்டகாலத்துக்கு முன்பே இந்தியாவின் மேற்குப் பகுதிக்கும் அரபுநாடுகளுக்கும் இடையிலான வியாபாரத் தொடர்புகள் விரிந்தளவில் இடம்பெற்றன" என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1ம் நூற்றாண்டில் அரேபியரின் கட்டுப்பாட்டில் இலங்கை துறைமுகம்கள்:

கி.பி. 1ம் நூற்றாண்டளவில் அரேபியரின் வணிகத் தொடர்புகள் இலங்கையில் அரேபியர்கள் தங்கி இருக்கவும் குடியிருப்புக்களை அமைத்துக் கொள்ளவும் காரணமாகியது. கிறிஸ்துவுக்கு பிந்திய முதல் நூற்றாணடில் இலங்கை முஸ்லிம்களின் மூதாதையர்களான அரேபியர்களின் இலங்கைச் செல்வாக்கு படிப்படியாக அதிகரித்தது. அக்காலத்தில் இலங்கையில் காணப்பட்ட பெரும்பாலான வணிகத் துறைமுகங்கள் அரேபியரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. இது பற்றி சேர் தோமஸ் ஆர்னோல்ட் என்பவர் தனது *Preaching of Islam* என்ற நூலில் உறுதி செய்கிறார்.

கி.பி. 2ம் நூற்றாணிடில் இலங்கையின் வர்த்தகம் முழுவதும் அரேபியரின் கைகளில் :

கி.பி. 2ம் நூற்றாண்டில் இலங்கையுடனான வர்த்தகம் முற்றாக அரபிகளின் கைகளிலேயே இருந்தது. கிறிஸ்தவ யுகத்தின் கி.பி. 7ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையுடனான சீன வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஆயினும் 8ம் நூற்றாணடின் நடுப்பகுதியில் இலங்கையின் துறைமுகப்பகுதிகளில் கணிசமான அரபிகள் குடியிருந்தனர். *Thomas Arnold Preaching of Islam* எனும் நூலில் கூறுகிறார் (பார்க்க எஸ்.எச்.எம்.ஜெமீல் 1997) இத்தகைய சான்றுகள் இலங்கைக்கு அரேபிகள் வர்த்தக நோக்கம் கருதி அதிகளவில் வந்ததை உறுதிப்படுத்துகின்றன.

மட்டக்களப்பு அரபிகளின் துறைமுகம்

அப்போதைய முஸ்லிம்களின் வரலாற்றிலும், கலாசாரத்திலும் மிக முக்கியமான இடத்தை மட்டக்களப்பு ஆறுகளும், வாவிகளும் பெற்றிருந்தன. அல்-இத்ரீசி, அல்-புர்பானி, அபூ-செய்யது ஆகிய புகழ்மிக்க அரேபிய புவியியலாளர்கள் 12ம் நூற்றாண்டளவில் இலங்கையின் தென்கிழக்கின் முக்கிய துறைமுகம்களை தமது வரைபடம்களில் குறித்துள்ளனர். இதனாலேயே தொலமி கி.பி. 140இல் அவரது வரைபடத்தில் பாணமை, திருக்கோவில், கோமாரி, காரைதீவு, கல்லாறு, மட்டக்களப்பு முதலிய மிகப்பிரதான கடலோரத் துறைமுகங்களைக் குறித்துள்ளார். எனவே இலங்கையின் தென்கிழக்கின் கடலோரப் பிரதேசம் என்பது புராதன வர்த்தகத்தில் மிகப்பிரபல்யமான பகுதியாக இருந்தது. இதில் அராபியர், பாரசீகர், துலுக்கர், பட்டாணி அரபிகள் என்போர் அடங்குவர்.

எனவே பூர்வீக காலம் முதல் இப்பிரதேசத்திற்கு தோணிகள், படகுகள் வந்து போயின என்பதற்கும் சான்றுகள் உள்ளன. இதனமூலமே தென்கிழக்குப் பிரதேசத்தில் தோற்றம்பெற்ற பல்வேறு குடியிருப்புக்களுக்கும் அடிப்படையாக இக்கடல் மார்க்க வர்த்தக தொடர்பும் அதற்கு மையமாக மட்டக்களப்பு வாவியும் இருந்திருக்கின்றன. இதனை மையப்படுத்தியே ஆ.மு. ஷரிபுத்தீன் என்பவர் "சுமார் 600 ஆண்டுக்கு முன் பெரியராசப்பா (அபூபக்கர் அலி) என்பவரும் அவரது மைத்துனர் சேர்மன் முகம்மது ஹாஜி என்பவரும், கிழக்கிந்திய தீவுப்பகுதியில் இருந்து அரசியல் பிரச்சினை காரணமாக தமது குடும்பத்தினருடன் பாய்க்கப்பலில் மட்டக்களப்பையடைந்து அங்கிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளத்தில் மட்டக்களப்பு வாவியூடே தெற்கு நோக்கி வந்தனர். வரும்போது நீலாவணைத்துறையில் மக்கள் சஞ்சரிப்பதைக் கண்டு இறங்கினர். மனித நடமாட்டமுள்ள அவ்விடத்தில் தங்கிவிட்டனர்" (பார்க்க ஆ.மு. ஷரிபுத்தீன் 2009 : 15) எனும் சம்பவம் வரலாற்றோடும் போக்குவரத்தோடும் ஒப்பிடும் போதும் சரியாகவே உள்ளது. இதிலிருந்துதான் வெளித்தெரியக்கூடிய மருதமுனையின் வரலாறும் கலாசாரமும் உண்மையாகின்றது, உதயமாகின்றது. இந்த வகையில் வளர்த்தெடுக்கப்பட்ட மருதமுனையின் சமய, சமூக, கலை என்பவற்றில் வரும் தெரிவு செய்யப்பட்ட சில கலாசாரங்களை பின்வருமாறு நோக்கலாம்.

பழமையான கலாசாரங்கள் இஸ்லாம் இலங்கைக்கு வருவதற்கு முதல் தென்னிந்தியாவிலிருந்து வந்த அல்லது அரேபிய நாடுகளிலிருந்து வந்த சமய பெரியார்கள் மனிதர்களை ஒழுக்க நிலையில் வைத்திருக்க இந்நிலைகளை பயன்படுத்தியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. தோமஸ் ஹொப்ஸ், லொக், ரூஸோ போன்றோர்கள் எவ்வாறு அரசு தோற்றம் பெறுவதற்கு முன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதனை ஒப்பந்தத்தின் மூலம் ஒழுக்கமுள்ள வனாக மாற்றியது போன்று இக்கலாசாரங்களையும் மனித விழுமியங்களை பண்படுத்துகின்ற செயற்பாடுகளாக ஒப்பிடலாம்.

மருதமுனையின் வாழ்க்கை முறை இரண்டு தலைப்புக்களில் விளக்கப்படல் வேண்டும். அவற்றிலிருந்தே மருதமுனையின் கலாசாரமும் வகைப்படுத்தப் படல் வேண்டும்.

1. இபாதத் வணக்க வழிபாடுகளோடு தொடர்பானவை
2. மனித நடைமுறைகள் (சடங்குகள், சம்பிரதாயங்கள்)

I. இபாதத் வணக்க வழிபாடுகளோடு தொடர்பானவை

• தலைப்பாத்திஹாவும் கொழுக்கொட்டை கொட்டுதலும்

ஆரம்பகால மருதமுனையில் தலைப்பிள்ளை சுமந்திருக்கும் தாய்க்கு எட்டாம் மாதத்தில் அவளின் தாய் அவளின் செலவில் கொளுக்கொட்டை சுட்டு அடுத்தவர்களையழைத்து குரவை வெடியுடன் கர்ப்பிணியின் முந்தானைக்குள் கொட்டுவார். தலைப்பிள்ளை பிறக்கும் வரைக்கும் அனைத்துச் செலவினையும் பெண்ணின் தாய் செய்வாள்.

தலைப்பிரசவத்தை இலகுவாக ஆக்கித்தருமாறு பாத்திமா நாயகியிடம் பிரார்த்தனை செய்வார்கள். இதற்கு பாத்திமா நாயகியை புகழ்ந்து பாடுவர்.

(மவ்லாய ஸல்விவஸல்) இவ்வாறு பல அடிகள் வேறுவேறு பொருளில் தொடர்ச்சியாக பாடப்படும் இதன்போது கொழுக்கொட்டை, மாதுளம்பழம், கல்கண்டு, பிளம்ஸ்என்பன பகிரப்படும் ஓதுபவர்களுக்கு சிறுதொகை அன்பளிப்பும் கொடுப்பார்கள். இதற்கு பள்ளி கதீப் தலைமை தாங்குவார். இத்தலைப் பாத்திஹா ஓதுகையில் கருவுற்ற தாய் ஒரு மூலையில் இருந்து முந்தானையை விரித்து வானத்தின்பால் உயர்த்தி பிரார்த்தனை செய்து கொண்டிருக்குமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ப்பந்திக்கப்படுவாள். எனினும் தற்போது கர்ப்பிணிக்கு உறவினர்கள் 'பார்சல் சாப்பாடு' வீட்டுக்கு கொண்டு வந்து கொடுக்கும் பழக்கம் உள்ளது. அப்பெண்ணின் கணவரும் குடும்பத்தினரும் பிள்ளை பிறக்கும் வரை அப்பெண்ணை சந்தோச மாக வைத்திருப்பர். பிள்ளை பெறும் காலம் நெருங்கியவுடன் கணவனும், மனைவியும் இரவு வேளைகளில் வீதியில் அல்லது கடற்கரையில் சிறிது நடைப் பயிற்சியில் ஈடுபடுவர். இப்போதுள்ள வயது முதிர்ந்தவர்கள் சிலர் இத்தலைப் பாத்திஹா சம்பவங்கள் இல்லாமையை கவலைப்பட்டும் பேசுவார்கள்.

- **சுன்னத் கல்யாணம் (கத்னா வைபவம்)**

சுமார் 30 வருடங்களுக்கு முன் ஒவ்வொரு நாளும் இரண்டு அல்லது மூன்று வீடுகளில் தென்னை மரத்தில் ஒலிபெருக்கி கட்டி, அதிலிருந்து பாடல்கள் ஊர் முழுவதும் ஒலித்துக்கொண்டே இருக்கும். குறித்த விஷேடம் தொடர்பாக ஊர் முழுவதும் பரவும், கல்யாண வீட்டுக்கு அயல்வீட்டுக்காரரும் அழைப்பு விடுக்கப்பட்டு அங்கேயே இருப்பர். அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து போக வில்லை என்றால் உறவே அற்றுப்போகும். ஆனால் இன்று ஸ்பீக்கரில் ஏதேனும் அறிவித்தல் சொல்வதாயினும் பொலிஸ் அனுமதி பெறவேண்டும். பக்கத்து வீட்டில் திருமணம் நடந்தாலும் அதன் மணமே இல்லாமல் நடந்தேறும் கலாசாரமாகவே உள்ளது. முன்னைய கத்னா வைபவங்கள் மிகவும் அலாதியாக இருக்கும். இதற்கும் அப்பால் சுமார் 100 வருடங்களுக்கு முன் நடைபெற்ற சுன்னத் கல்யாணங்களில் பல்வேறு வேடிக்கைகள், வினோதங்கள் நிறைந்ததாக காணப்பட்டது. வீடுகள் வெள்ளையடிக்கப்பட்டு மஸ்கட், தொதல் செய்து, குருத்து மணல் எடுத்து வாயிலில் கொட்டி, இன்னிசைக் கச்சேரி நடாத்தி, ஊரவர்களுக்கு விருந்து கொடுத்து, குரவை ஒலியுடன் வட்டாக் கொண்டுவந்து (செப்பு) மிகவும் அலாதியானவை.

சுன்னத் செய்வதற்கு முன் வெற்றிலை, பாக்குவைத்து முறைக்காரர்கள் சுன்னத் மாப்பிள்ளைக்கு தண்ணீர் வார்த்து பால்பழம் கொடுத்து பருகக் கொடுப்பர். சிறார்கள் நன்றாக சோடிக்கப்பட்டு கோட், சூட், தொப்பி சகிதம் உழவு இயந்திரங்களில் கதிரைகளில் அமர்த்தப்பட்டு கொண்டு வந்த காட்சியும், கார் பவனியாக வந்து அவற்றில் மின்சார வல்புகள் கட்டப்பட்டும் ஊர்வலம் வந்த காட்சியுமுண்டு. சியாரம்களில் காணிக்கை போட்ட சம்பவங்கள் மறக்க முடியாத சடங்குகளாகும்.

ஊர்வலத்துக்கு முதல்நாள் சுன்னத் வீட்டில் மாடு அறுத்து உறவினர்களுக்கும் ஊரவர்களுக்கும் உணவு கொடுப்பர். இவ்வாறு கல்யாணம் ஆரம்பமாகி முடிவுற சுமார் 30 நாட்கள் தேவைப்படும். ஆனால் இப்போது மூன்று மணித்தி யாலத்துக்குள் சகல வைபவங்களும் சுருங்கி விட்டன. மாலை முடிந்தவுடன் கல்யாணம் நடக்கும். ஒஸ்தாமாமா (இந்திய கலாசாரம்) சுன்னத் செய்வார். அவரை அழைத்துவர வட்டாக் கொண்டு செல்வர். அதனுள் வெற்றிலை பாக்கு இன்னும் பல பொருட்கள் இருக்கும். அவர் கத்திக்கூடு, மருந்துப் பையுடன் நேரத்தோடு வருவார். ஒஸ்தாமாமா வியர்வை வடிய வடிய மந்திரம் சொல்வார் சாம்பல் ஓதி வளவை காவல் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய், பிசாசுகளிலிருந்து காவல்தேடி கட்டுப்போடுவார். அவர் முன்னே உரல் ஒன்று கவிழ்த்து வைக்கப்படும். வெள்ளைத்துண்டு உடுத்த மாப்பிள்ளையை உரலில் இருத்துவர். சிறுவன் நடுங்குவான் சுன்னத் செய்ததும் இரத்தம் வரும் காயத்தை சுற்றி மருந்து போட்டு (ஸ்காடன் பவுடர்) வெள்ளைத் துணியால் சுற்றிக் கட்டுவார். பின்னர் வந்தவர்களுக்கு பழம், தொதல், பலகாரம் கொடுக்கப் படும். இதன் பின்னர் விடியும் வரை இசைக்கச்சேரி நடக்கும். பையனுக்கருகில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ரீ.வி. டெக்குடன் அதன் உரிமையாளர் படம் போடுவதற்கு வந்திருப்பார்.

முதல்நாள் பஜனை நடக்கும். அடுத்த நாள் பொல்லடி நடக்கும். மறுநாள் பக்கீர்பைத், சில வசதியான வீடுகளில் அலிபாதுஷா நாடகம் இடம்பெறும். இதுபோன்று சுன்னத் மாப்பிள்ளை ஊர்வலம் போகும்போது பக்கீர் ரப்பான் அடித்து முன்னே செல்வர். மேள தாளம், சந்திக்குச் சந்திவெடில், குரவை ஒலி என்பனவும் கேட்கும். எனது சகோதர்களான ஏ.ஜே.எல். ஜெஸீல், ஏ.ஜே.எல். அஸீல் ஆகியோரை 1970.05.18ம் திகதி விமானம் மூலம் ஊர்வலம் சென்று மருதானையிலுள்ள கலீல் வாட்டில் டாக்டர். ஏம்.ஆர். கலீல் சுன்னத் செய்யப் பட்டதாக ஏ.எம்.ஏ. ஜலீல் குடும்ப வரலாற்று புத்தகம் கூறுகின்றது.

சுன்னத் வைக்கப்பட்ட பையனுக்கு 07 நாள் தண்ணீர் கொடுப்பதை மட்டுப் படுத்துவர். தண்ணீர், தண்ணீர் என்று கத்துவான். ஏழுநாளும் சுன்னத் வைக்கப் பட்ட காயத்திலிருந்து இரத்தம் வந்ததற்கு காரணம் தொடக்குக்காரர்கள் உள்ளே வந்தது எனக் காரணம் சொல்வர். கல்யாண வீட்டில் எல்லோரும் ஆடம்பரமாக உண்டு மகிழும்போது சுன்னத் வைக்கப்பட்டவன் மாத்திரம் குறைந்தளவு இலையுடன் கூடிய உணவுடன் சாப்பிடுவான். தாள் காசால் மாலைகட்டி கழுத்தில் போடப்படும். பணியாரம் சுடுவதற்கு மட்டக்களப்பி லிருந்து ஆட்கள் கொண்டுவரப்படும். 07 நாள் கழிந்த பின்னர் சேர்ந்த செப்புக்களை (காசுகளை) எண்ணி கடன்களை அடைப்பர். மேலதிக கடன் களை சிறுகச்சிறுக அடைப்பர். இப்போதுள்ள விலைமுறையில் மேற்கூறிய ஆடம்பரங்களுடன் சுன்னத் கல்யாணம் செய்வதென்றால் சுமார் இரண்டு இலட்சமாவது தேவைப்படும்.

இவைகள் எல்லாம் தற்போது மருவி சில வீடுகளில் எளிமையாக நடந்தேறியது. சுன்னத் செய்வதற்கு முன் வாப்பாவுடன் சில புதினமான இடங்களை காரில் அல்லது மோட்டார் சைக்கிளில் கூட்டிச்சென்று பார்த்ததன் பின் ஒஸ்தாமாமா வந்து சுன்னத் செய்வார். அவருக்கு அன்பளிப்பு கொடுக்கப்படும். 07 நாளைக்கு அவர் வீடு வந்து பார்த்துச் செல்வார். ஒவ்வொரு நாளும் அன்பளிப்பு கொடுக்கப் படும். போகும் போது எம்மிடம் சிக்காடின் பவுடர் தந்துவிட்டுச் செல்வார். காயத்தில் போடச் சொல்வார். இவையும் மருவி பிள்ளை பிறந்து 40 நாட்களுக்குள் சுன்னத் செய்யும் நடைமுறைக்கு வந்துள்ளது. இதனை மருதமுனையில் டாக்டர். என். சதுறுத்தீன், டாக்டர். ஏ.டபிள்யூ.எம். சமீம் (பொது வைத்திய நிபுணர்) ஆகியோர் அவர்களது வீட்டிலுள்ள வைத்திய அறைகளில் வளையம் போடுதல் எனும் முறைகொண்டு செய்து சிறுவனினதும், பெற்றோரினதும் துன்பத்துக்கு முடிவு தந்து விடுவர். இப்போது சுன்னத் கல்யாணம் நடப்பதே தெரியாமல் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் 2014இல் மருதமுனையில் நியூநிசார் என்பவரது வீட்டிலும், பிரதான வீதியில் அப்துல் சமது என்பவரது வீட்டிலும் சுன்னத் செய்ததன் பின்னர் மாலை 08.00 மணிமுதல் இரவு 02.00 மணிவரை பஜனைக் கச்சேரியுடனான தமிழ், முஸ்லிம் பாடகர்களின் இசைநிகழ்ச்சி நடந்தது என்பது குறிப்பிடத் தக்கது. இச்சம்பிரதாயம் எம்மை இந்தியாவோடு இணைப்பதனை உணர்ந்து கொள்ளலாம்.

- **திருமணம் (வாழ்வு கல்யாணம்)**

திருமணம் பேசிய பெண்ணுக்கு பேசிய மாப்பிள்ளையை வீதியில் செல்லும் போது தங்கச்சி, தாத்தா வீதியின் கதவு இடுவலுக்குள் கூப்பிட்டுக் காட்டுவர். அவர் சாமான் வாங்க அல்லது மீன்வாங்க செல்வார். சாமான் வாங்கச் செல்லும் போது அவர் கொண்டு செல்லும் பையைக்காட்டி பார் உம்மாவுக்கு வாங்கிப் போகும் பை இப்படி சைஸ் என்றால் உனக்கு வாங்குவது இதைவிட பெரிதாக இருக்கும் என காட்டி முதியோர் கதைத்துக் கொண்டு பெண்ணை கிளுகிளுப்புச் செய்வர்.

அந்தக் காலத்து திருமணங்கள் பெரும்பாலும் நள்ளிரவு கடந்த பின்னர் தான் இடம்பெறும். திருமணம் இடம்பெறுவதற்கு பல மாதங்களுக்கு முன்னர் திருமணப் பேச்சுக்கள் இடம்பெறும். இப்பேச்சுக்காக குடும்பத்தில் இருக்கும் வயோதிப பெண்கள் சம்மந்தம் தேவைப்படும் வீட்டுக்குச் சென்று பெண்ணின் சிறப்புகளையும் பெண்ணுக்குள்ள சொத்துக்களையும் பொதுவாக கதைப்பது போன்று கதைப்பார்கள். அவ்வாறு கதைக்கும்போது அவர்கட்கும் இருக்கும் விருப்பம் சிறிதாயினும் மெருகூட்டி பெண்வீட்டுக்குச் சொல்லி இருசாராரின் பெரியோர்கள் ஒருவருக்கொருவர் பேசி சம்மதத்தை பெற்றதன் பின் சம்மந்தம் தொடரும். சிலர் தான் விரும்பும் மாப்பிள்ளை வீட்டில் நீண்டகாலம் தொடர்பு வைத்து திருமண பேச்சை ஆரம்பிப்பர். 07 பெட்டி பணியாரம், முறுக்கு, பழம், கொண்டைப்பணியாரம் என்பன செய்து வண்டிலில் அல்லது காற்றாடி கம்பு கட்டி இரு பக்கமும் இனிப்பு வகைகளை கூடையில் கட்டி ஒருவர் தோளில் கம்பின் நடுப்பகுதியை சுமந்து செல்வர். சம்மதம் பூரண விருப்பம் எனின் கொண்டு சென்ற பெட்டிக்குள் மாப்பிள்ளை வீட்டிற்கு அவர்கள் விரும்பும் இனிப்பு பழம் என்பன வைத்துவரும் அதன்பின் இச்சம்மதம் பல மாதங்கள், பல வருடங்கள் தொடரும். இவ்விடைக்காலத்தின் போது மாப்பிள்ளைகாரர், பெண்வீட்டுக்காரர் ஒருவரை ஒருவர் புனிதமானவர்களாக மதிப்பர். அப்போது மாப்பிள்ளை வீட்டாரும், பெண்வீட்டாரும், ஒருவருக்கொருவர் நோய், சந்தோசம், மரணம் என்பன ஏற்படும்போது செப்புக்கொண்டு சென்று மிக சினேகமாக இருப்பர். பின் திருமணம் செய்வதற்குரிய கால நேரம் நெருங்கி வந்ததும் திருமண திகதி தீர்மானிக்கும் விடயத்தை பெண்வீட்டார் அவசரப் படுத்துவர். இதற்கு இருசாரார் பக்கம் இருந்தும் சுமார் 150பேர் பெண்வீட்டில் கூடுவர். இதற்கு மாப்பிள்ளை வீட்டில் மாப்பிள்ளை முக்கியஸ்தர்கள் பெண் வீட்டுக்காரரின் வருகைக்காக காத்திருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் செல்லும்போது பெரிய பொட்டி கட்டி, அதனுள் தேயிலை, சீனி, பால்மா, வெற்றிலை, போயிலை, கேக், தொதல், மஸ்கட், அப்பிள் - 101, தோடம்பழம் -101, வாழைப்பழம் - 101 என்பன வைத்து மாப்பிள்ளையின் தாய், சகோதரிகள் இருக்கும் இடத்திற்கு கொண்டுசென்று வைத்து சிரித்துப்பேசுவர்.

- **திருமண திகதி தீர்மானித்தல்**

பெண் வீட்டுக்காரரின் வருகைக்காக திருமணப்பேச்சு நடக்கும் மத்திய இடத்தை அவர்களுக்காக ஒதுக்கிவைத்து, வந்தவுடன் பெண்வீட்டுக்காரர் உள்ளே வாருங்கள்! என முக்கியமானவர்கள் சொல்ல, உள்ளே சென்று இருப்பர். கூடவே இருபக்க மரைக்காரும் இருப்பர். சுமார் ஐந்து நிமிட நேரம் கதைத்ததன் பின் மாப்பிள்ளை வீட்டின் முக்கியஸ்தர்கள் ஒருவரின் குரல் கேட்கும். அதை சபை எதிர்பார்த்து இருக்கும். யாரை இவர்கள் குடும்பத்தில் முக்கியம் எனக் கருதுகின்றனர் என்பதை பார்ப்பதற்காக ஒருவர் "என்ன நீங்கள் இன்று கூட்டமாக வந்துள்ளீர்கள், நீண்ட நேரமாக கதைத்துக் கொண்டிருக்கின்றீர்கள் " எனக் கேட்பார். அதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பெண்வீட்டு முக்கியஸ்தர் ஒருவர் விடை சொல்வார். பெண்ணின் பெயர் சொல்லி தொழில் இருந்தால் தொழிலையும் சொல்லி வாப்பாவின் பெயரையும் சொல்லி, இப்பெண்ணுக்கு உங்கள் வீட்டில் இருக்கும் இன்ன பெயருடைய, இன்ன பட்டம் பெற்ற, இன்ன தொழில் செய்பவரை எங்களுக்கு மாப்பிள்ளையாக பேசி, திருமணத்துக்கு உங்களது திகதி கேட்டு வந்திருக்கின்றோம் என்பர். இவ்விரண்டு பேச்சுக்களும் இடையில் இருபக்க மரைக்காயர்கள் தலையிட்டு, உங்களுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள் பேசி முடித்து விட்டீர்களா? என கேட்பார். அப்போது முடித்து விட்டோம் எனச்சொல்வார். சுமார் 50 வருடத்துக்கு முதல் திருமணம் பேசச் சென்றோர் இக்கொடுக்கல் வாங்கல் பற்றி அதிகாலை வரை பேசியும் முடிவுறாமல் வீடு திரும்பிய சம்பவங்களும் உண்டு. எனினும் தற்போது இவை வெளிப்படுவது இல்லை. சபையில் கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை இல்லை என்றால் நல்ல திகதி ஒன்று பார்ப்போம் என்பர். இதுபற்றி ஏற்கனவே இருசாராரும் பெண்ணின் மாதவிடாய் பற்றிக் கதைத்து பேசி, திகதி பார்த்தும் திகதி ஒன்றை மனதினுள் வைத்திருப்பர். அப்போது உத்தேசமாக ஒரு திகதியைச் சொல்வர். அதற்கு இன்னொருவர் அது பிறை எத்தனை எனக்கேட்க வீட்டு சுவரில் கொழுவியிருந்த முஸ்லிம் பிறை கலண்டர் கழற்றப்பட்டு சபையின் முன்பே கொண்டுவரப்படும். பின் பிறையுடன் திகதி, மாதம் என்பன தீர்மானமாகும். இன்னொருவர் பள்ளிவாசலிலா? வீட்டிலா திருமணம் எனக்கேட்க இன்னொருவர் சிற்றுண்டியா? விருந்தா? எனக்கேட்பர். எல்லா விடயங்களும் முடிவாகி சபையில் பெரியோர்களால் மீண்டும் சரிபார்க்கப்பட்டு திருமணத் திகதியும், நேரமும் அறிவிக்கப்படும். அப்போது மாப்பிள்ளை வீட்டின் நடு அறையில் இருந்து புதிதாக உடுத்து, தொப்பி போட்டு அஸ்ஸலாமு அலைக்கும் எனும் சத்தத்துடன் சபையினுள் நுழைவார். அவரிடமும் திகதி சம்மதம் கேட்கப்பட்டு முடிவானதும் பெண்ணின் தம்பி அல்லது சகோதரர் ஓர் அன்பளிப்புப் பொருளை மாப்பிள்ளையிடம் கொடுக்க, மாப்பிள்ளை அதை வாங்கி அவரின் மச்சானிடம் கொடுப்பார். பின் பெண்ணின் வாப்பா மாப்பிள்ளைக்கு சபையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையில் சலாம் கொடுத்து ஒருவரை ஒருவர் ஆரத்தழுவுவர். சிலவேளை பெண்ணின் வாப்பாவின் கண்ணிலிருந்து ஆனந்தக்கண்ணீர் வரும். இவைகள் முடிவுற்றதன் பின் பெண்வீட்டின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தீர்மானிக்கப் பட்ட திகதி, நேரம் என்பவற்றை முக்கிய சபைக்கு வெளியில் உள்ளவர்களிடம் வந்து அறிவிப்பார். இது முடிந்ததும் சம்சா, பழம், கேக், சோடா என்பன பகிரப்படும் சபையோர் சிற்றுண்டியை சாப்பிட்டதன் பின் துஆச் சொல்லி, மாப்பிள்ளைக்கு ஸலாம் சொல்லிவிட்டு கலைவர். எனினும் பெண்ணின் வாப்பா இன்னும் அங்கு பலமணி நேரம் தங்கியிருந்து வெற்றிலை போட்டு கதைப்பார். அதில் திருமணத்தை எவ்வாறு தடல்புடலாக செய்வது என்று திட்டமிடுவர். விடிந்ததும் ஊரில் இச்சம்பவத்தை பலபேரும் பேசுவர்.

- **திருமண காட் அடித்தல்**

மாப்பிள்ளை குறித்த திகதிக்கு முன்னர் கல்யாணகாட் அச்சடித்து பெண் வீட்டாருக்கும் கொடுத்து உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் சுமார் 15 நாட்களுக்கு முதல் சொல்லுவார். கூடவே மச்சினனும் செல்வார். முன்னைய காலங்களில் திருமணம் பேசப்பட்டதும் மச்சினன் திருமணம் நடைபெறும் காலம்வரை கூடவே திரிவான். அதன்போது மாப்பிள்ளையின் கூடாத நடத்தைகள் தெரிந்ததும் திருமணப்பேச்சு பூசல்களுடன் அற்றுப்போகும். அதனால் மறைவாக கொடுத்த சீதனம் எல்லாம் வெளிப்படும்.

- **சீதனக் கலாசாரம்**

சுமார் 50 வருடங்களுக்கு முதல் ஆண்கள் சீதனம் வாங்கவில்லை என்றால் மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளை வீட்டு குடும்பத்துக்கும் ஊரில் மதிப்பு இல்லை என்பது அர்த்தமாகும். அதனால் குறைவாக சீதனம் வாங்கினாலும் இருதரப் பினரும் கூட்டியே சமூகத்தில் பேசுவர். முன்னர் ஒரு டொக்டர் என்றால் 50 இலட்சம் காசு, கடை, வீடு, வளவு, கொழும்பில் வீடு, தங்கநகை என்பவற்றை பேசி முன்கூட்டியே கொடுத்துவிடுவர். ஊரில் மதிக்கத்தக்க குடும்பத்திலிருந்து முக்கிய அரச தொழில் செய்பவரை திருமணம் செய்வதானால் சுமார் ஒரு கோடி பணம் தேவையாக இருக்கும். தற்போது பெண்ணுரிமை எழுச்சி பெற்றதன் பின் பெண்கள் பலர் படித்து உத்தியோகம் செய்வதால் அவர்களை வீடு, வளவுடன் சீதனக்காசு இல்லாமல் திருமணம் செய்யும் கலாசாரம் ஏற்பட்டுள்ளது.

- **பெண்கள் அதிகம் அரச உத்தியோகத்தில் இணைவு**

எப்படியோ தகப்பன் அல்லது சகோதரர்கள் உழைத்து வீட்டைக்கட்டினாலும் சீதனம் இல்லாமல் திருமணம் செய்யலாம் என்ற எழுச்சியிலும், மறுபுறம் இப்போதுள்ள வாழ்க்கைச் செலவுக்கு இரண்டு பேரும் அரச உத்தியோகம் செய்தால் தான் வாழ்க்கையில் சந்தோசமாக இருக்கலாம் என்று எண்ணியும், மற்றொருபுறம் திருமணம் பேசும்போது உங்கள் மகனும் உத்தியோகம்தான் எனது மகளும் உத்தியோகம்தான் என்பதால் பெண்வீட்டாருக்கும், பெண்ணுக்கும் மதிப்பு ஏற்படுவதால் அரச உத்தியோக சீதனக் கலாசாரம் பெண்களின் படிப்பில் மருதமுனையில் இன்னும் உயர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது என்பதையும் மறுக்க இயலாது. மறுபுறம் இப்பெண் கல்விக் கலாசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் மத்தியில் அலுப்பு, சலிப்பு, வீட்டு நிர்வாக முறையில் ஏற்படும் சீர்கேடு, பிள்ளை வளர்ப்பு, வீட்டிலுள்ள முதியோருக்கு இதனால் ஏற்படும் வீட்டு வேலைப்பழு (சமைத்தல், பிள்ளை பராமரித்தல்) கணவனை சரியாக கவனிக்க முடியாமை, கணவனுக்கு மனைவியை கவனிக்க முடியாமை, பிள்ளைகளின் படிப்பு என்பன சீர்கெடுவதையும், இதனால் ஆண்கள் தொழிலற்று இருப்பதையும் ஆங்காங்கே பேசும் கருத்தாடல்களில் சுட்டிக் காட்டும் விடயமாக சொல்லலாம். இதனால் சுமார் இரண்டு வருடகாலமாக தீவிரமாக பலர் திருமணம் செய்ததன் பின் தனது மனைவியை இஸ்லாமிய முறையில் வைத்திருக்க வேண்டும் எனும் எண்ணத்தில் தொழில்களை அவர் களாகவே விரும்பி நீங்குதல் "பதவி விலகுதல்" எனும் திட்டத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் செய்து வருகின்றனர். வேறு சிலர் பல்கலைக்கழகத்தில் அல்லது உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்றால் திருமண பேச்சுக்களை முடித்துவிட்டு, குறித்த பெண்ணின் கல்வியை இஸ்லாமிய ஒழுக்கம் கருதி நிறுத்தி வருகின்றனர்.

- **சீதனக் கலாசாரத்தால் உயர் கல்வி இழப்பு**

மருதமுனையில் ஆண்களும், பெண்களும் பல்கலைக்கழகம் சென்று முதல் பட்டம் பெற்றவுடன் திருமணம் செய்து வைக்கின்றனர். இதனால் வைத்தி யராகும் ஆண்பிள்ளை தொடர்ந்து உயர்கல்வி கற்று சர்வதேசத்தில் உயர்வதற்கு அவனுக்கு தகுதி, தகமை இருந்தும் சீதன கலாசார திருமணம் அவனை தடுத்து விடுகிறது. மறுபுறம் பெண்கள் எவ்வளவுதான் உயர்கல்வி கற்றாலும் வீடு, வளவு, வேறுவசதிகள் இல்லாமல் ஆண்கள் திருமணம் செய்வார்களா என்பதாலும் பெண்கள் உயர்ந்து என்னதான் செய்ய என்ற எண்ணத்தினாலும், உயர்கல்வியை நிறுத்தி விடுகின்றனர். இவற்றை விமர்சனக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இச்செயற்பாடுகள் முஸ்லிம் சமூகத்தை முஸ்லிம் பண்புகள் கொண்ட சமூகமாக மாற்ற உதவுமா? என்ற கேள்வியை தோற்றுவித்துள்ளது. இன்று எமதூரில் பெண்பாடசாலை பற்றிச் சிந்திக்கும் பலர் பெண் ஆசிரியர்களை அதிகரிப் பதிலும் பார்க்க பெண்களை அத்தொழிலில் இருந்து நிறுத்துவது ஆரோக்கியமான செயற்பாடா என மீள்சிந்திக்க வேண்டியுள்ளது. அதேபோல் வைத்தியராகும் பெண்கள் முதல் பட்டத்தோடு (MBBS) முடித்தால் முஸ்லிம் பெண் மகப்பேற்று நிபுணர்களை உருவாக்குவதில்லையா? இன்று இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பெண்களின் பிரசவத்தில் ஆண் வைத்திய நிபுணர்கள் சேவையாற்றுவது இஸ்லாத்தின் பார்வையில் பிழை என வாதிக்கும் இக்காலத்தில் எமது கிராமத்துக்கும், ஏனைய கிராமங்களுக்கும் உயர்தொழில் உத்தியோகத்தர்களை உற்பத்தி செய்யும் நாம் இவ்வாறான செயற்பாடுகளை செய்யலாமா என்ற கேள்வி உள்ளது. இத்தனைக்கும் காரணம் நாம் இஸ்லாமிய கலாசாரத்தில் இருந்து மேற்கத்தைய கலாசாரத்தில் நாட்டம் கொண்டமையாகும். எனவே மருதமுனைக் கலாசாரம் இதுபற்றி மீள்சிந்திக்க வேண்டும். தமிழர்களிடம் இருந்து வந்த சீதனக் கலாசாரம் எமது உயர்கல்வியை கீழ்நோக்கி செல்வதற்கு காரணமாக இருக்கிறது என்பதை ஒவ்வொரு மருதமுனை மகனும் சிந்தித்தல் வேண்டும். இதன்மூலம் எமது இஸ்லாமிய கலாசாரத்தை வேறு இன கலாசாரங்கள் தாக்கம் செலுத்தி பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சீதனத்தை மீண்டும் ஒப்படைக்கும் கலாசாரம்**

கடந்த 5 வருட காலமாக மருதமுனையின் சீதனக் கலாசாரம் வேறு ஒரு வகையிலும் மாற்றம் பெற்றுள்ளது. விரல் விட்டெண்ணக்கூடிய இளைஞர்கள் சிலர் தமக்கு சீதனமாக கொடுத்த வீடு, வளவு என்பவற்றை தமது மாமா. மாமி மார்களிடம் ஒப்படைத்து கூலிக்கு வீடெடுத்து இஸ்லாமிய முறையில் வாழ்ந்து வருவதோடு, அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவில் இல்லாத ஆடம்பரத் திருமணங்கள், வரதட்சணைத் திருமணங்கள், பெண்வீட்டுடன் கூடிய திருமணங்களை நிராகரித்து அவற்றிற்கு சமூகமளிக்காமையினையும் காணமுடிகிறது. வேறுசிலர் தாம் முன்னமே வாங்கிய சீதன வீடு, வளவு, காசு என்பவற்றுக்கு பகரமாக வேறு வகையில் உரியவர்கட்கு மாற்றீடு செய்தும் வருகின்றனர். இன்னும் சிலர் இக்கொடிய பாவத்திற்குள் அகப்பட்டு விட்டேன் இப்போது என் மகனையாவது சீதனம் இல்லாமல் உத்தியோக பெண்களை வீடு, வளவுடன் திருமணம் செய்து வைத்தும் வருகின்றனர். வேறு சிலர் மகனுக்கென்றே வீடுகட்ட காசுகொடுத்து அவ்வீட்டிலேயே எல்லோருடைய ஒப்புதலை பெற்ற பெண்ணை திருமணம் செய்கின்றனர். வேறுசிலர் எனக்கு வீடோ, சீதனக்காசோ அரச உத்தியோகமோ தேவையில்லை எனது உம்மாவின் வீட்டில் அல்லது சகோதரியின் வீட்டில் நாம் உழைத்து வீடு கட்டும்வரைக்கும் இருப்போம் எனப்பேசியும் அதுவே இஸ்லாமிய முறை எனச்சொல்லி பெண்கேட்டால் அத்தகைய மாப்பிள்ளைக்கு பெண் கொடுக்காத பெற்றோரும், அதற்கு உடன்படும் பெண்கள் இவ்வூரில் இல்லாததால் நாட்டின் கிராமங்களுக்கு சென்று பெண்பார்த்து திருமணம் செய்தும் வருகின்றனர்.

- **தற்கால திருமண கலாசாரம்**

இச்சடங்கு முறைகள் இப்பொழுது இல்லாமலாகி தான்விரும்பும் பள்ளி வாசலில் பதிவாளர், மரைக்காயர்கள், டிரஸ்டிகள், ஊரவர்கள், உறவினர்கள், நண்பர்கள், மாப்பிள்ளை தரப்பினர், பெண் தரப்பினர் என எல்லோரும் ஒன்றாக குறித்த திருமணத் திகதியில் சுப்ஹ் அல்லது அஸர் தொழுகையின் பின்னால் காவின் எழுதப்படும். தற்போது முன்கொடுக்கப்படும் 1001 மஹர் காசை நிறுத்தி, தான் கொடுக்கும் தாலியின் தங்க நகைக்கு பெறுமதியான தொகையை மஹராக பதிவுசெய்வர். பின் சாட்சிகள் ஒப்பமிட்டு, மாப்பிள்ளையும், பெண்ணின் வாப்பாவும் ஸலாம் கொடுத்த பின் மாப்பிள்ளைக்கு விருப்பமான மௌலவி உள்ளூரிலோ, வெளியூரிலோ இருந்து அழைத்து வந்து மார்க்க உபன்னியாசம் செய்வர். அது நிறைவுற்றதும் டொபி, கற்கண்டு, பிளம்ஸ் இட்ட சுமார் 100 கிராம் நிறையுள்ள பை ஒன்று கொடுப்பர். வேறுசிலர் சொக்லட் கொடுப்பர். பின்னர் பெண்வீட்டார் ஒருவர் எழுந்து எங்கள் வீட்டிற்கு சிற்றுண்டி அல்லது சாப்பாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என சொல்லி எல்லோரையும் அழைப்பர். பின் கலைவர். வெளியூர்களில் இருந்து வந்த சிலர் "டொபி பக்கற்றுக்களோடு" எமது கலாசாரத்தை அறிந்தவர்களாக வீடு செல்வர்.

வேறு சிலர் நாம் சீதனம் வாங்காவிட்டாலும் பெண்ணுக்கு கொடுக்கும் வீடு, அவளின் உத்தியோகம் சீதனம் எனக்கருதி பள்ளிவாசலுக்கு நிக்காஹ் பதிவை கொண்டு செல்லாமல் வீட்டிலேயே எல்லாச் செயற்பாட்டையும் வைத்துக் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **மாப்பிள்ளை கூட்டிச் செல்லல்**

சுமார் 40 வருடங்களுக்கு முன் மாப்பிள்ளை கூட்டிவரும்போது பொல்லடி, சீனடி, சிலம்படி முன்னால் செல்ல ஏனையோர் பைத்பாடிவருவர். அவ்வாசகம் வருமாறு

மௌலாய ஸல்லிவஸல் லிம்தாஹி மன் அபதா
ஆலாஹுபீபிக்க ஹைறில் ஹல்க்கி குல்லிஹிமி

மாப்பிள்ளை கோட், சூட், துருக்கித் தொப்பி அணிந்து லெவ்வை, கதீப் பாட ஏனையோர் கூடிச்சேர்ந்து பாடிச்செல்வர். மாப்பிள்ளைக்கு ராணிமார்க் கறுத்த காம்புள்ள குடையை மச்சினன் பிடிப்பான்.

வீட்டை நெருங்கியதும் அங்கு செங்கம்பளம் (சிவப்பு) விரிக்கப்பட்டிருக்கும். அதன்மேல் நடந்து சென்று வெள்ளை விரிக்கப்பட்ட கதிரையில் வெளியே உட்காருவார் பின் மாப்பிள்ளையின் உறவுக்காரர்கள் எல்லோரும் வந்தபின் வீட்டின் முகப்பு கதவடியில் வெள்ளைச்சீலை விரித்து வெற்றிலை பாக்கு வைத்து தேங்காய்ப் பாலினால் மச்சினன் கால் கழுவுவார். அதற்காக மச்சினனுக்கு ஒரு தொகைப் பணத்தை கொடுப்பார். அப்போது குரவை ஒலி, வெடில் சத்தம் என்பன வானைப்பிளக்கும். இப்போது ஜனாதிபதிக்கு கொடுக்கும் வரவேற்பை விட பல மடங்கு சோடனைகளுடன் முக்கியத்துவம் பெறும். மாப்பிள்ளை (துரோணில்) மணமேடைக்குச் சென்று பெண்ணின் அருகில் அமர்ந்தவுடன் பெண்ணின் தகப்பன் தனது மகளின் மூன்று தலைமயிரைப் பிடித்து மாப்பிள்ளையின் கையில் கொடுப்பார். மாப்பிள்ளையின் சகோதரிகள் பெட்டியில் இருந்து தாலியை வெளியே எடுத்து ஒரு பக்கத்தை ஒரு சகோதரியும் மற்றைய பக்கத்தை மற்றைய சகோதரியும் பிடிக்க மாப்பிள்ளை இரண்டு பக்கத்தையும் இணைத்து கழுத்தில் கொழுவிவிடுவார். பெரிய சத்தத்தில் விரும்பிய மௌலவி கொண்டு துஆ செய்வார். பின்னர் மாப்பிள்ளையின் சகோதரிகள் தாலியை சரிபார்த்து நேர் செய்வர். அப்போது தாலிப்பொட்டகக்காசு, உம்மாவிற்கு பால் காசு என எதிர்பார்ப்பர். பெண்தரத்தினரும் கொடுப்பர். எதிர்பார்த்த தொகை கிடைக்க வில்லை என்றால் உறவை முறித்துக்கொள்வர். இச்சடங்கு முடிந்தவுடன் எல்லோருக்கும் சிற்றுண்டி கொடுக்கப்படும். பின்னர் சிகரெட், வெற்றிலை கொடுக்கப்படும். மாப்பிள்ளைக்கும் பொண்ணுக்கும் துரோணில் ஒரே கிளாஸில் பாலும் பழமும் கொடுத்து இருவரையும் பருகச்செல்வர். இதனை மாப்பிள்ளையின் சகோதரி பொண்ணுக்கும், பொண்ணின் சகோதரி மாப்பிள்ளைக்கும் கொடுப்பார்.

- **திருமண நாள்**

திருமணம் செய்து அன்றிரவிலிருந்தே வீட்டில் ரீவி, டெக் என்பன வாடகைக்கு கொண்டுவரப்பட்டு சுமார் ஐந்து நாட்கள் குடும்ப திரைப்படங்கள் போடப் படும். அதில் கணவன், மனைவி எவ்வாறு வாழ்வது என்பது கற்றுக் கொடுக்கப் படும். சுமார் 50 வருடங்களுக்கு முற்பட்ட திருமணங்களில் திருமணம் செய்து மூன்று அல்லது நான்கு வருடங்களின் பின் பூப்படைந்த பிள்ளைகளும் உண்டு. சிலவேளை திருமணம் செய்து கொடுத்த பெண்பிள்ளைகள் விளையாடச் சென்ற கலாசாரமும் எம்மிடம் உண்டு. இவைகளிலிருந்து பாதுகாப்புப் பெற குடும்ப படங்களை வீட்டில் திரையிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **திருமண மறுநாள் கால் மாறுதல்**

திருமண மறுநாள் காலை மச்சினன் வாகனத்தில் சவாரி செய்ய மாப்பிள்ளை வாகனத்தில் இருந்து தனது தாயார் வீடு, சகோதர சகோதரிகள் வீட்டுக்கு இனிப்புடன் சென்று வருவார். திருமண இரவு, காலை உணவு, பகல் உணவு எல்லாம் இருவருக்கும் தனியாகவே படுக்கை அறையிலேயே வைக்கப்படும் தன்னம் தனியாக இருவரும் ஒரு பீங்கானில் சாப்பிடுவர். சாப்பிடும்போது கதவு பூட்டப்படும். இவ்வாறு தூக்கமும், சந்தோசமும், புதிய உறவுகள் என்ற கிளுகிளுப்போடு நாள்கள் கழியும்.

மூன்றாம் நாள் கால் மாறுதல் எனும் நிகழ்வுக்காக மாப்பிள்ளை வீட்டிலிருந்து இருவரையும் கூட்டிவர கார் அல்லது வேன் கொண்டு செல்வர். வரும்போது பொண்ணுக்கு உடுப்பதற்கு கூறைச்சாரி வாங்கிவருவர். அன்றைய தினம் மாப்பிள்ளைக்கு பெண்வீட்டார் சேட், றவுசர், வாங்கிக்கொடுத்து அதனை அணிந்துகொண்டு இருவீட்டு குடும்ப உறவினர்களுடனும் மாப்பிள்ளை வீட்டுக்கு செல்வர். அங்கு மாப்பிள்ளை, பெண் வந்ததும் துரோணில் இருத்தி மாப்பிள்ளையின் தாய் மாலை நெக்லஸ், காப்பு அணுவிப்பார். குடும்பத்தார் வீடியோ, போட்டோ எடுப்பர். இவ்வாறு சிறப்புக்கள் நடுநிசியைத்தாண்டும். பெண்ணின் உம்மா நாளை பகல்சாப்பாடு கொண்டுவருவதாகவும் சொல்வார். சிற்றுண்டியும் கொடுக்கப்படும். பின் அங்கு குறைந்தது மூன்று நாள் தங்கி மாப்பிள்ளை வீட்டாருடன் பொண் வீடுவந்து சேருவர். வரும்போது மாப்பிள்ளையின் தாய்வீட்டுப் பாவனைப் பொருட்கள் பாய், பீங்கான், தலையணை, அலுமாரி இன்னும் வேறு சில பொருட்களும் கொடுக்கப்படும்.

- **உறவுக்காரர் திருமணச் சாப்பாடு**

வீடு வந்து சேர்ந்தவுடன் பெண்ணின் சகோதரி முதல் சாப்பாடு கொடுத்து பெறுமதிமிகு அன்பளிப்பும் கொடுப்பார். பின் சாப்பாட்டுக்குச் செல்வதற்காக உறவுக்காரர்கள் புதுவீட்டை நோக்கிவருவர். அழைப்பை ஏற்று சுமார் ஒருமாதம் குடும்ப உறவினர்களிடையே உணவு உண்டு அன்பளிப்பு பெற்று வருவர். சேரும் காசில் மனைவிக்கு காப்பு, மாலை என வாங்கிக் கொடுத்து மனைவியை சந்தோசப்படுத்துவார். இவ்வாறு விருந்துக்காக செல்லும் போது இருபக்க உறவுக்காரர்களும் இருபக்கமும் தெரியவரும். சுமார் 30 வருடத்துக்கு முன் மாப்பிள்ளைக்கு ஆறுமாத சோறு பெண்வீட்டார் கொடுத்ததும் உண்டு. இடையிடையே இனிப்புடன் குடும்பத்திலுள்ள முதியவர்களையும், முக்கிய குடும்ப உறவினர்களையும் அவர்களுக்கு விரும்பிய அன்பளிப்புக்களுடன் சென்று மகிழ்விப்பார். முதியவர்கள் ஆசி சொல்வர்.

தற்போது இவைகளில் அதிகமான கலாசாரங்கள் நீண்டு நிலைக்கின்றன. எனினும் இப்போது திருமணங்கள் மிகவுமே சுருங்கிவிட்டன. வலீமா கொடுத்தல், கூறை மாற்றுவதற்கு அபாயா மாற்றுதல் என மாறி மாலை 4.00 மணிக்கு தொடங்கி இரவு 7.00 மணிக்கு திருமணம் நிறைவு பெற்றுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **மருதோன்றி இடுதல்**

கல்யாண சம்பிரதாயங்கள், பெருநாள் ஆகிய தினங்களில் ஆண் - பெண் எல்லோரும் மருதோன்றி செடியின் இலையினை ஆய்ந்தெடுத்து அரைத்து கைகளிலும், கால்களிலும் அழகாக கோலமிடுவர் அடுத்த நாள் சிவப்பு நிறமுடைய அடையாளங்கள் தோன்றும். இதனால் சிறுவர்கள் அதிகம் சந்தோசப்படுவர். திருமணத்தில் மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் மருதோண்றியிட்டு அன்பளிப்பு பெற்றுக்கொள்வர். இவ்வாறு திருமணத்திலுள்ள கலாசாரங்கள் அனைத்தும் தமிழ் சமூக முக்குல இனத்துக்குரியதாகும். இக்கலாசாரத்திலிருந்து விடுபட்டு முஸ்லிம்களின் கலாசாரத்திற்குள் நுழைய சிந்திப்பது அவசியமாகும்.

- **உணவுக் கலாசாரம்**

ஆரம்ப காலத்தில் மருதமுனையில் காலை உணவு இரவு சாப்பிட்ட சோறில் மீதமானது பானையில் இருக்கும். அதை காலைவேளை தண்ணீர் ஊற்றி, வெங்காயம், கொச்சிக்காய், தேசிக்காய் என்பன இட்டு கரைத்து சாப்பிடுவர். இதை 'தண்ணிச்சோறு' என்பர்.

பகல் உணவு நெல்லுக்குத்தி எடுத்த அரிசினை சோறு சமைத்து முருங்கை இலை, பிலாக்காய், குப்பைக்கீரை கொண்டு கறிசமைத்து அல்லது சுண்டி சாப்பிடப் படும். இரவு வேளையில் குரக்கன் களிக்கெண்டி கறியோடும் உண்பர். இதுதவிர மூன்று நேரச்சோறு, சோளம், பயறு சேர்த்து பால்புக்கை, மரவள்ளி அவித்து தேங்காயுடன் குடல் வாங்கி பப்பாசியுடன் கறி சமைத்தல், இராசவள்ளிக் கிழங்கு கிழங்கு அவித்தல், புடிகிழங்கு சோளம், பயறு, சீனி, தேங்காய் சேர்த்து உண்ணல். அவித்த பனங்கிழங்கு, பிட்டு, இடியப்பம், மாவும் குரக்கனும் சேர்த்து களிக் கெண்டி இறைச்சிக்கறி அல்லது குடல் கறியோடு சாப்பிடுவர். இவைகளை தேவைப்படும் போது காலை, பகல், இரவு என விரும்பியபோது உண்பர். விரும்பியவர்கள் கோழி வளர்த்து மோதினாரிடம் கொண்டு போய் அறுத்து வந்து வீட்டுக்கு யாரும் வந்தால் அவர்களுடன் சேர்ந்து உண்பர். கோழியை மோதினாரிடம் அறுக்கச் செல்லும் போது இன்னார் வீட்டில் இன்று கோழிக்கறி அவர்கள் வீட்டில் இன்னார் வந்துள்ளனர் என ஊர் முழுவதும் பரவும். கோழி அறுக்கும் போது கண்ட உறவினர்களுக்கும் கறிகொண்டு கொடுப்பர்.

ஆரம்பகால இனிப்புப் பண்டங்களாக பணியாரம், சீனிமா, எள்ளுப்பணியாரம், பயற்றங்கொட்டைப் பணியாரம், எண்ணெய்ப் பணியாரம், முந்திரியம் கொட்டைப்பணியாரம், கொட்டைப்பணியாரம், பணங்காய்ப்பணியாரம், கொழுக் கொட்டை, கோழி அப்பம் (சுருட்டப்பம்), கொட்டபுக்கே, அரிசிப்புக்கே, துள்ளுமா, சீனிமா, அரிசிபோளை, தேங்காய் போளை, சோ(க)பி, மோதகம், பல்லுக்கொழுக்கொட்டை, ஓட்டுக்கொழுக்கொட்டை, ஓட்டு வண்டப்பம், பாலப்பம், தேங்காய்ப்பூ ரொட்டி, முறுக்கு. (எஸ். ஆசியத்தும்மா - வயது 105-2014) என்பன பாவனையில் இருந்தது.

தற்போது இவைகள் மருவி காலைச் சாப்பாட்டை எவரும் வீட்டில் தயாரிப்பது இல்லை. வீட்டில் செய்து சாப்பிட்டால் அவர்கள் ஏழை என்பது அர்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி பிள்ளைகளும் சாப்பிட மாட்டார்கள். கடையில் இறைச்சி ரொட்டி, மரக்கறி ரொட்டி, தோசை, இட்லி, தேங்காய் ரொட்டி, வடை, இடியப்பம், பிட்டும் கோழிக்கறியும், இறைச்சிக்கறி, பருப்புக்கறியோடு உண்பர். ஒவ்வொரு வீதியிலும் இரண்டு, மூன்று காலைச்சாப்பாட்டுக்கடை திறந்திருக்கும்.

பகல் சாப்பாடு ஆண்கள் சந்தைக்கு சென்று மீன் அல்லது இறைச்சி வாங்கிவந்து சமைப்பர். இதுவும் தற்போது குறைந்து சமைப்பதற்கு கஷ்டமாயின் கடையில் இருந்து பகல் உணவுகளை வாங்குவர். அது மஞ்சட் சோறு, கோழிக்கறி, கழியா, மாசிச்சம்பல், போட்டுத்தருவார்கள். ஒரு சாப்பாடு 200/-. பிள்ளைகள் அதிகமாக விரும்பி உண்பர்.

இரவு உணவிற்கு கடைக்குப்போய் மின்சாரத்தில் அவிக்கப்பட்ட இடியப்பம் வாங்கி வந்து அதிகமானோர் கறியோடு உண்பர். ஏனையோர் விரும்பியபடி சோறு, பாண், பிட்டு என்பவற்றை கறியோடு சாப்பிடுவர். மாலை 4.00 மணி முதல் - இரவு 10.00 மணிவரை இடைச் சாப்பாடாக கொத்துரொட்டி, மரவள்ளிக் கிழங்கு, மிக்ஸர், பொரியல், சீவல், குடல் பொரியல், அவித்த கடலை, கௌபி, சம்சா சாப்பிடுவார்கள். மருதமுனையில் உள்ள 'மன்னூர் சல்வா' எனும் உணவுக்கடையில் இருக்கும் ரொட்டி, கோழிச்சம்சா, இறைச்சி சம்சா என்பவற்றுக்கு கடும் மவுசு. பிள்ளைகளும், பெரியோர்களும் அதிகம் விரும்பி உண்பர். அதேபோல் மருதமுனை மஜீதின் மரவள்ளி கிழங்குப் பொரி, துனியாவின் சுவிற் (இனிப்புக்கள்) மஃபத் போளை, அவல் பொரியல் இன்னும் பல உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மிகப் பிரபல்யம் பெற்றதாகும்.

- **தலைநோன்பு**

தலைநோன்பு வந்தால் குடும்பத் தலைவரின் கையில் அரிசி பேக், கோழி, ஈத்தம்பழம், சீனி, குளிர்பானப் பவுடர், டின்பால் என்பவைகளை மொத்தமாகப் போட்டு பொதிசெய்து தாய், சகோதரிகளுக்கு என திருமணம் செய்த ஆண்கள் கொண்டு சென்றுகொடுப்பர். அந்தநாள் மாலையிலிருந்து இறைச்சிக்கடை, கோழிக்கடை, அரிசிக்கடை, சில்லறைக்கடை என்பவற்றில் அதிகமானோர் பொருட்கள் வாங்குவர். முதல் நோன்பு பிடிப்பதற்காக தடல்புடல் என இருக்கும். மாம்பழம், விளாம்பழம், தயிர், வாழைப்பழம், கோழிக்கறி என்பன எல்லோர் வீட்டிலும் இருக்கும். முதல் நோன்புக்கு சிறுவர்களும் எழுந்து நோன்பு பிடிப்பர். ஸஹர் நேரமானதும் இரவு 3.00 மணிக்கு பெண்கள் எழும்புவர். ஆண்கள் ஸஹர் சாப்பாடு தயார் என சொன்னதும் எழும்புவர். பின்னர் சுபஹ் தொழுகைக்காக பள்ளிவாசல் நிறைந்து வழியும். சஹர் வேளையில் வானொலி பிறை எப்எம், சக்தி தொலைக்காட்சி, சில சர்வதேச ஒலி அலைவரிசைகளிலும் முக்கிய உலமாக்களின் பேச்சுக்கள் இடம்பெறும். துஆப்பிராத்தனையும் செய்வர். அவைகளை ஆண்களும், பெண்களும் செவிமடுத்துக் கேட்பர்.

- **நோன்பு திறத்தல்**

அஸர் தொழுது முடிந்ததும் ஒவ்வொரு வீதியிலும் 'சம்சா' எனும் உறைப்பு சிற்றுண்டிக் கடைகள் குறைந்தது ஐந்து இருக்கும். அக்கடையில் நோன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறப்பதற்குரிய சம்சா, ரோள்ஸ், வண்டப்பம், கொழுக்கொட்டை, ஓட்டுக் கொழுக்கொட்டை, மாட்டிறைச்சி சம்சா, கோழி இறைச்சி சம்சா எனவும் இருக்கும். ஒவ்வொரு குடும்பமும் குறைந்தது 250/- ரூபாவுக்கு நோன்பு திறக்கும் சாமான்களை வாங்கிக்கொள்வர். கஞ்சி பி.ப. 2.30 மணிக்கு பள்ளிவாசலில் கொடுக்கப்படும். பெரியோர்களும், சிறுவர்களும் சென்று கஞ்சி வாங்கி வந்து எல்லோரும் மஃரிப் பாங்கு சொல்லும் முன்பு எல்லோரும் ஓரிடத்தில் வீட்டில் இருந்து நோன்பு திறப்பர். நோன்பு திறக்கும் உணவுப் பண்டங்களை பார்த்தால் சவூதி ஞாபகத்துக்கு வரும்.

- **மரணவீடு**

சுமார் 100 வருடங்களுக்கு முன் மரணம் நிகழ்ந்தால் அந்த வீட்டில் பாக்கு, வெற்றிலை வந்தவர்களுக்கு கொடுக்கப்படும். திடீர் மரணங்கள் தவிர இயற்கை யான மரணங்கள் நிகழும்போது பல நாட்களுக்கு முதல் ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் என பலபேர் சுகயீனமுற்றவரின் அருகில் அல்லது அவ்வீட்டிலில் மாறிமாறி ஓய்வெடுத்து பராமரிப்பர். சுகயீனம் உற்றவருக்கு விலைகூடிய சத்துள்ள மா, ஸம்ஸம் தண்ணீர், மாதுளம்பழம் என்பன கொடுக்கப்படும். நோய் சுகமாகும்படி உறவினர்களால், லெப்பைகளால் குர்ஆன் ஓதப்படும். சிலவேளை மாடறுத்து குர்பான் கொடுக்கப்படும். மூச்சுபோகும் சந்தர்ப்பம் நெருங்கும் இயல்பு அறிந்து அதனை 'ஸக்கரத்தஹால்' எனச்சொல்லி அதிகமானோர் அவ்வீடு வந்து செல்வார். இதை அறிந்து வெளியூர்களில் நிற்கும் உறவினர்களும் வந்து செல்வர்.

அல்லாஹ்வின் நாட்டத்தால் மரணம் நிகழ்ந்தால் 'அடிக்கழுவுதல்' உறவினர்கள் செய்து 'மையித்' என அழைத்து மக்களின் பார்வைக்காக, கதவினை கழற்றி, உரல் இரண்டு பக்கமும் வைத்து வைப்பர். தற்போது கட்டிலில் வைப்பர். ஆண்மையித்தோ, பெண்மையித்தோ என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரும் பார்ப்பர். மரணித்தவரின் பெயர், வீதி, மக்களின் பெயர் அவர்களது தொழில் என்பன எழுதப்பட்டு 'ஜனாஸா அறிவித்தல்' என எழுதி பள்ளிவாசல்களில் மோதினாரால் வாசிக்கப்படும். வசதியுள்ளவர்கள் வானொலியிலும் அறிவித்தல் செய்வர். இதற்கு உதவியாக பிறை எப்.எம். கட்டுப்பாட்டாளர் அல்-ஹாஜ் பஸீர் அப்துல் கையூமும் ஊரவர்களுக்கு உதவுவார். மரணித்த செய்திகேட்டு உறவினர் கதிரை, ரென்ட், மஞ்சி என தேவையான சாமான்களை விரைந்து தேடி எடுப்பர். தற்போது தோழர் இஸ்மாயில் எனும் சகோதரர் இதனை இலகு படுத்தும் முகமாக மரணித்தவரின் கடமைகள் செய்யும் அத்தனை சாமான்களையும் கொண்டு தருவார். கதிரை, ரென்ட், பாய் மற்றும் இதர சாமான்கள் அவர் பொறுப்பில் உள்ளன. இவருடன் உறவினர்கள் சேர்ந்து 'கப்று' வெட்டுவர்.

ஜனாஸா அடக்கும் நேரம் வந்தவுடன் குறித்த மையத்தின் நெருங்கிய உறவினர்களுக்கு கடைசியாக காட்டப்படும். வெளியூர்களிலிருந்து வந்தவர்களும் அவசர அவசரமாக பார்ப்பர். குறித்த பள்ளிவாசலிலிருந்து இமாம், முஅத்தின் வந்து உறவினர்களும், தோழர் இஸ்மாயிலும் குளிப்பாட்டத் தொடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் மையித்தாயின் விரைவாக குளிப்பாட்டி முடிப்பர். பெண் மையித்து ஆயின் ஒரு மணி நேரம் செல்லும். இமாம், கதீப் குளிப்பாட்டிய மையித்தை கபனிடுவர். கபனிட்ட மையித்தை பள்ளிவாசலில் இருந்து கொண்டுவரப்பட்ட சந்தூக்கில் வைத்து உறவினர்கள், விருப்பமானவர்கள் சுமந்துசெல்ல தூக்கியதுடன் வீட்டிலிருந்து பெரிய அழுகைக்குரல் கேட்கும். தூக்கியவர்களுக்கு பின்னால் லெவ்வை, முஅத்தின் ஸகாதத் கலிமாவை சொல்லிச்செல்வர் 'ஜனாஸா' மரணித்தவரின் விருப்பமான பள்ளிவாசலுக்கு கொண்டு தொழுகை நடாத்தப் படும். அப்போது கடன் பற்றியும் வினவப்படும்.

தொழுகை நடாத்தப்பட்டு மையித்து விரைவாக கப்றை வந்தடையும். ஏலவே ஆண்கள் பல நூறுபேர் மையவாடியில் காத்திருப்பர். ஜனாஸா சென்றவுடன் அடக்கம் செய்து மீசான் நாட்டி, மரம்நட்டு அதன்மேல் மூன்று குடம் தண்ணீர் ஊற்றியதன் பின் பள்ளிவாசல் லெப்பையினால் தல்கீன் ஓதப்படும். இப்போது தல்கீன் நிறுத்தப்பட்டு விட்டது. (6 கேள்வி விடை) தற்போது மையித் அடக்கம் செய்வதற்கு வந்த சுமார் ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர் கலந்துகொள்வர். மக்களுக்கு மரணித்தவரின் இயக்கம் சார்ந்த ஒருவரால் மார்க்க உபன்னியாசம் அரைமணித்தியாலம் ஒலிபெருக்கியில் செய்யப்படும். இச்சனக்கூட்டத்தைக் கண்டு அயலவர்கள் அதிசயிப்பர். இவ்வுரையை கேட்க மையவாடியில் அனைவரும் வெள்ளை மணலின் மேல் இருப்பர். மார்க்க உபதேசம் முடிந்தவுடன் மரணித்தவருக்கு தனித்தனியாக பிரார்த்தனை செய்துவிட்டு மீண்டும் உறவினர்கள், வெளியூரவர்கள் மரணித்த வீட்டில் டீ, பிஸ்கட் குடித்து ஆறுதல் சொல்வர். சுமார் 10 நாட்களுக்குள் உறவினர்களால் காலை, பகல், இரவு, உணவு கொடுத்து துக்கம் களைவர். மிகப்பழைய காலத்தில் கத்தம் ஓதுவர். சோறு, இறைச்சிக்கறி, கத்தரிக்காய் இட்டு பருப்புக்கறி, புளியாணம் என்பன இருக்கும். அழைத்தவர்கள் ஒன்றுக்கு இரண்டு தரம் செல்வர். அழைத்தவர் வரமுடியவில்லை என்றால் வீட்டில் யாரையாவது அழைத்துச் செல்வர்.

- **இத்தா வீடு**

பெண்ணின் கணவன் இறந்தால் அடக்கம் செய்துவிட்டு பெண்களை இத்தா வைப்பர். சீவன் (உயிர்) போனவுடன் கை, காது, கழுத்திலுள்ள தங்க ஆபகரணங்கள் கழற்றப்படும். வெள்ளைப் பிடவையை உடுப்பார்கள். பெண் இத்தா இருக்கும் அறையை எலியும் புகாதவாறு பச்சை ஓலையால் அடைக்கப் படும். ஊரிலுள்ள உறவினர்களிடமுள்ள தென்னை மரங்களில் பச்சை ஓலைகள் வெட்டப்படும். இத்தா வீட்டுக்கு வரும் உறவினர்கள் ஓலையை இளைத்து வீட்டை வளைத்துக் கட்டுவர். இத்தா இருக்கும் அறையில் ஒருவர் புகுந்து போகும் அளவிற்கு வழிவைப்பர். திரைமறைவில் பேசுவர். வகுத்துக்குள் வந்த சகோதரர் மட்டும் கதைப்பர். ஆண்கள் பேசமுடியாது. யாருமே முகம் பார்க்கவும் முடியாது, கதைக் கவும் முடியாது. தற்போது இத்தா வீட்டில் சிறிது பூக்கலந்த வெள்ளைப் பிடவை அணிந்து இஸ்லாமிய முறையில் மஹ்ரமிகளுடன் மாத்திரம் தொடர்பை அறுத்து வீட்டில் எல்லோருடனும் ஒன்றரக் கலந்து இத்தா கடமையை நிறை வேற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **பெருநாள் தினம்**

முன்னைய காலங்களில் பெருநாள் வருவதற்கு முன்பே வீட்டிலுள்ள ஒட்டறை அடித்து, வீடு முழுவதும் சுத்தப்படுத்தப்படும். தற்போது பெருநாள் தினத்தன்று முன்னிரவு சிறுபிள்ளைகள் அலாதியாக மருதாணி இட்டு மகிழ்ந்து சந்தோசப்படுவர். விடிந்ததும் பெருநாள்காசு பிள்ளைகளுக்கு கொடுத்து அவர்களின் பொக்கற்றுக் களிலிருந்து பணம் நிரம்பி வழியும். என்ன செய்வது என்று தெரியாமல் தங்களுக்கு விருப்பமானவைகளை வாங்கி அனுபவிப்பர்.

பெண்கள் பெருநாளைக்கு ஐந்து உடுப்பு எடுப்பர். குளிப்பதற்கு ஒன்று, தொழுவதற்கு ஒன்று, வீட்டிலே ஒன்று, ஊருக்கே ஒன்று, இரவில் தூங்குவதற்கு ஒன்று. பெரியவர்கள், பெண்கள் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுத பின்னர் அல்லது அதற்கு முன்னர் கோழி இறைச்சி, பூந்தி என வீட்டுக்கு கொண்டு வருவர். பூந்தியை உம்மா, சகோதரிகள், மருமக்களுக்கும் கொடுப்பர். அன்று மாலை முதல் கடற்கரை சென்று இரவு வரை குதூகலிப்பர். உறவினர்களிடம் பெருநாள் காசு வாங்குவதற்காக சிறுபிள்ளை எந்த நேரமும் வந்த வண்ணமே இருப்பர். பெருநாள் தொழுகை 10 வருடங்களுக்கு முதல் பள்ளிவாசலில் காலை 10.00 மணிக்கு மட்டும் இடம்பெற்றது. தற்போது கடற்கரையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் காலை 6.30 மணிக்கே நடந்தேறும். ஊரின் 75 வீதமானோர் தொழுகைக்காக அவ்விடத்தில் கூடுவது சிறப்பாக அமையும். எனினும் தற்காலத்தில் பெருநாள் என்றால் எம்மிடையே பிறை பிரச்சினை வருமா எனப் பயப்படுவர்.

பழங்காலத்து சமயக்கிரிகைகள்

- **ஒடுக்கத்துப் புதன்**

ஹிஜ்ரி புதுவருடங்கள் மலர்ந்ததும் 10ம் நாள் ஒடுக்கத்துப் புதன் என்ற பெயரில் புனித நீர் அருந்தும் சம்பவம் ஊரில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. கிராமத்திலுள்ள ஆலிம்கள் பீங்கான் மற்றும் பாத்திரங்களில் பச்சை நிறத்தினாலான சாயங்களினால் 'குர்ஆன்' வசனங்களை எழுதிக்கரைத்து பெரிய பாத்திரங்களில் தண்ணீர் கலந்து அள்ளி யள்ளி கொடுப்பார்.

- **படுகளம்**

முகர்ரம் மாதம் வந்ததும் படுகள மாதம் என கதைப்பர். இக்காலத்தில் மருதமுனை மக்கள் தங்களது திருமண வைபவங்களை நடாத்த மாட்டார்கள். திகதி தீர்மானிக்கும் வைபவம், சுன்னத்துக் கல்யாணம், புதுவீடுகட்ட கல் வைத்தல், வளை வைத்தல், கிணறு கட்டுதல் போன்ற எந்த காரியத்தை ஆரம்பிப்பதென்றாலும் இம்மாதத்தில் செய்யமாட்டார்கள்.

- **முகர்ரம் மாதம் – நபி(ஸல்) பிறந்த தினம்**

படுகளம் எனக்குறிப்பிடப்படும் தேய்பிறைகாலம் முடிந்ததும் அதாவது முகர்ரம் மாதம் முடிவடைந்து ரபிஉல் அவ்வல் மாதம் பிறந்ததும் மருதமுனை மக்கள் மத்தியில் புது உத்வேகம் பிறந்து, நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுவர். அந்நாளில் குர்ஆன் மத்ரஸா பிள்ளைகள் ஆண், பெண் இருபாலாரும் பிரதான வீதி, மருதமுனையின் முக்கிய வீதிகளில் 2 அடி நீளமான கம்பில் பச்சை நிறத்தினாலான கொடிகளை பிறை வடிவில் வெட்டி ஒட்டி கையில் ஏந்தி வலம் வருவர். வரும்போது முஹம்மத் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாட்டுப்பாடுவர். ஊரிலுள்ள தனவந்தர்கள், கழகங்கள் என்பன பிஸ்கட், டொபி, சர்பத், கொப்பி, பென்சில், சொக்லட் போன்றவைகளை பிள்ளை களுக்குக் கொடுப்பார்கள். வீட்டுக்குப் பிள்ளைகள் வரும்போது நிறைய சாமானோடு வருவர். அன்றைய பொழுது சந்தோசமாக இருக்கும். இச்சடங்கு தற்போது எமதூரில் இல்லை. ஆயினும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நிர்வாகம் இந்நிகழ்வை ஒவ்வொரு வருடமும் மத்ரஸா பிள்ளைகளின் ஊர்வலத்தினை கல்முனை நகர் வரை அழைத்துவந்து கொண்டாடுவர். தென்னிந்தியாவிலிருந்து சமய அறிஞர்களை அழைத்து வந்து மார்க்க உபன்னியாசங்களும் செய்வர்.

- **மவ்லூது**

மஸ்ஜிதுன் நூரில் புகாரி ஓதி கந்தூரி கொடுப்பர். மஸ்ஜிதுல் கபீரில் மீராசாஹிபு ஆண்டவர் பேரில் கொடியேற்றக் கந்தூரி கொடுத்து புறுதா ஓதுவர். வித்திரியா ஓதுவர், இவையெல்லாம் தென்னிந்தியா முஸ்லிம்களின் கலாசாரத்தை மருதமுனை ஆலிம்களால், லெவ்வைகளால் பெற்றுக்கொண்டவை ரபிஉல் அவ்வலில் சுப்ஹான மௌலூதை ஓதப்படும். முஹிதீன் ஆண்டவருக்கு ஒரு மௌலூத், கபுறாளிகளுக்குகொரு புக்கையும், பாத்திஹாவும், சாகுல் ஹமீத் வலியுள்ளாவுக்கு ஒரு பாத்திஹா என ஓதி ஏழைகளுக்கும் லெப்பைக்கும், மோதினாருக்கும், அதிகாரிக்கும், ஊரவர்களுக்கும் ஓதிப்படைப்பர்.

- **சந்தன கூடு இழுத்தல்**

100 வருடங்களுக்கு முதல் மருதமுனையில் கலாசார நிகழ்வாக இருந்தது. ஒரு மாதிரிப் பள்ளிவாசல் செய்து அதற்குள் றைஹாப் பலகையை வைத்து, அதில் குர்ஆனை விரித்து வைத்து மணக் குச்சிகளையும் பற்றவைத்து அதனை இரட்டை மாட்டு வண்டிக்குள் வைத்து தேரை இழுப்பதுபோல இழுத்து வந்தனர். 1955களின் பின்னர் இச்சடங்கு மருதமுனையில் நிறுத்தப்பட்டது.

- **குர்ஆனை கையால் எழுதியவர்**

இப்றாலெப்பை பக்கீர் தம்பி என்பவர் பிள்ளைகளுக்கு குர்ஆனை ஓதிக் கொடுப்பவர். இவர் 30 ஜூஸுக் குர்ஆனையும் கையால் எழுதியவர் என அவரது மகனான மஸ்ஜிதுல் மத்திய பள்ளிவாசல் முஅத்தின் சுலைமாலெவ்வை வயது (73) கூறுகிறார். இவரது வாப்பா மௌலூது ஓதுவார். பதம் பாடுதல் முறையில் ஓதிக்கொடுப்பார். பிள்ளைகள் தூரமாகவிருந்து குர்ஆன் ஓதுவதைக்கேட்டு அவர்கள் பிழைவிட்டால் தூரத்திலிருந்தே திருத்திச் சொல்லிக்கொடுப்பார்.

- **ஹஜ், உம்றா செல்லும்போது வீடு வந்து சொல்வர்**

ஒவ்வொரு வருடமும் ஹஜ் காலம் நெருங்கும்போது ஹஜ், உம்றா செல்பவர்கள் உறவினர்களுக்கும், பழகியவர்களுக்கும் வீடு வந்து நாங்கள் அல்லது நான் ஹஜ் செய்யப்போகிறேன் ஏதாவது பிழைகள் செய்திருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேட்பர். அதற்கு வீட்டுக்காரர் எல்லோருக்கும் துஆச் செய்யுங்கள் எனக் கூறுவர். ஹஜ் செல்ல ஓரிரு தினங்களுக்கு முன்பாகவே அவர்களின் வீடுகள் சனத்திரளால் நிரம்பி வழியும். வீடுவந்து சொன்னவர்கள் எல்லோரின் வீட்டுக்கும் செப்புக் கொண்டு வீடு தரிசித்து செல்வோரை உற்சாகப் படுத்துவர். ஹஜ் செல்லும் ஊரவர்களின் பெயர் பட்டியல் ஜும்ஆவின் பின்னர் வாசிக்கப்படும். மருதமுனையில் ஏ. அபூஉபைதா மற்றும் மௌலவி, ஐ.எம். ஹுசைனுத்தீன் மௌலவி இருவரும் ஒவ்வொரு வருடமும் மக்களை மக்கா கூட்டிச் சென்று வழிப்படுத்துவர். உம்றாக் கடமையை செய்னுலாப்தீன் மௌலவி வழிநடாத்தி வருகிறார்.

2. மனித நடைமுறைகள் (சடங்குகள், சம்பிரதாயங்கள்)

• பிறந்த முதல் நாளும், பல்லுக் கொழுக்கொட்டையும்

சில தசாப்தங்களுக்கு முன்னர் பிரவச வீடுகளிலுள்ள அறைகளில் மருத்துவச்சி உதவியுடன் தாய் சுயமாக குழந்தையை பிரசவிப்பார். இப்போதிருக்கும் நவீன முறையிலான அறுவைச் சிகிச்சை முறைகள் அப்போதிருக்கவில்லை. ஏனென்றால் அப்போது பெண்கள் கடினமாக உடல் உழைப்பினால் வலுவான உடலைக் கொண்டிருந்ததோடு குடிப்பரம்பல் குறைவாக இருந்ததனாலும், தங்களது வேலைகளை சுயமாகவே தங்களது கரங்களினால் செய்வதினாலுமாகும். இப்போது இருக்கும் பெண் மருத்துவ நிபுணர் வசதி அப்போது இருக்கவில்லை.

சில தசாப்தங்களுக்கு முன்னர் மருதமுனையில் பிள்ளை ஒன்று பிறந்துவிட்டால் பிள்ளையை அணைத்து, முத்தமிட்டு, குரவையிட்டு பட்டாசு கொழுத்தி மகிழ்வர். பெண்பிள்ளை பிறந்தால் ஆண் பிள்ளை வைத்திருக்கும் மாமி முறைக்காரி தனது மகனுக்கே அப்பிள்ளையை மணமுடித்துத் தரவேண்டுமெனக் கேட்டு பிறந்த பிள்ளையின் மேலில் ஒரு துண்டுப் பிடவையை போற்றி விடுவார். அதனை சாணைக்கூரை போற்றுதல் எனப்படும். பிள்ளை வீட்டில் பிறந்தவுடன் தேன், சீனித்தண்ணி என்பவற்றை தொடர்ச்சியாகக் கொடுப்பர். பிள்ளை பெற்ற தாய் சுமார் 40 நாளைக்கு "சூரணம்" எனும் மருந்தினை உண்பார். பிள்ளைக்கு 40 நாள் முடியும்வரை தாய் பிள்ளையுடனேயே வீட்டில் தங்கியிருப்பார். அக்காலத்தில் இவர்களின் உறவினர்கள் குழந்தைகளுக்குத் தேவையான பொருட்கள், பணம் போன்றவைகளைக் கொடுப்பர்.

தற்போது மருதமுனையில் பிறக்கும் குழந்தைகள் வீட்டில் பிறப்பதில்லை. மகப்பேற்று நிபுணரின் சுமார் ஒரு வருட மேற்பார்வையில் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வர். பிறந்தவுடன் பாங்கு, இகாமத் பிள்ளையின் தகப்பன் அல்லது உறவினர் ஒருவர் பிள்ளையின் வலது, இடது காதுகளில் ஓதுவர். சிலர் தேன் அல்லது 'ஸம்ஸம்' தண்ணீர் நாக்கில் தொட்டு வைப்பர். டொபி அல்லது சொக்லட் போன்றவைகளை உறவினர்களுக்குக் கொடுப்பர். தலைப் பிள்ளை யாயின் இன உறவுக்காரர்கள் அடிக்கடி வீடு வந்து பார்ப்பர். பிறந்து ஏழு நாட்களுக்குள் அல்லது 40 நாட்களுக்குள் ஆடு ஒன்றினை வாங்கி அகீகா கொடுப்பார்கள். இதனால் உறவுக்காரர் மகிழ்வர். பின் குழந்தைக்கு பல் முளைத்ததும் பல்கொழுக்கொட்டை சுட்டு கௌரவிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• **இசைக்குழு, நாடகக்குழு**

மருதமுனையில் ஆரம்பகாலம் தொட்டு இசைத்துறையில் ஆர்வமுடையோர் இருந்தனர். பழைய பாடகர்களான அத்தீல், இஸ்மாயீல். எக்கோடியன், சம்சுத்தீன், டோல் பீர்முஹம்மது, அக்கரைப்பற்று ஜமால்தீன், மர்ஹூம் முஸாதிக் (சரப்னாப் பெட்டி), முன்னாள் கல்விக்கல்லூரி உபபீடாதிபதி ஜெலீல், அவரது மகள் றூபியா இன்னும் நாடகக் குழுவில் அபுதாலி, சித்தீக், றாசிக், றகீப், சக்காப் மௌலானா, மனாப் ஆகிய இன்னும் பலரும் இடம் பெறுவர்.

மருதமுனையில் 2000ம் ஆண்டுகளில் தனியாக இசைக்குழு ஆரம்பிக்கப் பட்டது. அது அனுஸ்வரம், ஸ்கைலாஸ், தேவா, U.J., சுல்பி போன்ற இசைக் குழுக்கள் தோற்றம்பெற்று நடைபெற்று வந்தன. தற்போது தென்னிந்தியப் பாடகர் நாகூர் ஈ.எம். ஹனீபாவைப் போன்று பாடக்கூடிய திறமைகொண்ட மருதமுனை எஸ்.எம். கமால் என்பவர் பாடி வருகின்றார். 2010ம் ஆண்டு இவர் தனியாகவே சுமார் 2 மணித்தியால இசை நிகழ்ச்சியை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியக் கீதம் பாடி சிறப்பித்தார். தற்போது 2014இல் மருதமுனை கடற்கரை நிகழ்வொன்றில் அவரும், அவரது மகனும் இஸ்லாமிய கீதம் பாடியமையைப் பார்த்தோம். ஆயினும் மருதமுனையில் இசையோடும், நாடகத்துறையோடும் தொடர்பான சுமார் நூறு பேர்களை பட்டியல் படுத்தலாம். எனினும் ஐ.எல்.எம். லத்தீப், (எக்கோடியன் தம்பி), யூ.எல். மர்சூக் (பெண் பாடகர்), எம்.ஐ.எம். சிறாஜ் (சொய்ஸ்பலஸ் உரிமையாளர்), எஸ்.எச்.எம். ஜஃபர், (சேக்முகமட்), அஸ்ரப் (சௌந்தரராஜன்), இஷ்ஹாக் (சௌந்தரராஜன்), டாக்டர். ஏ.எஸ். கியாமுடீன், ரசாக் போன்றோரும், வாத்திய இசைக்கருவி முக்கியஸ்தர்களாக நியாஸ், நஜ்ஜாஸ், டோல் றகீம், நவாஸ், மருதூர்வாணன் போன்றோரையும் குறிப்பிடலாம்.

இவர்கள் மருதமுனையிலும் இலங்கையின் பல பாகங்களிலும் குறிப்பாக கண்டி, மாத்தறை, B.M.I.C.H, புத்தளம், மூதூர், அனுராதபுரம், குருநாகல், கெக்குணு கொல்ல போன்ற இடங்களிலும் மருதமுனையில் இருந்து குழுவாக சென்று பாடியவர்களாகும். அண்மையில் மருதமுனைப் பாடகர் எஸ்.எம். கமால்டீன் (நாகூர் ஈ.எம். ஹனிபா) இந்தியா சென்று இஸ்லாமிய கீதம் பாடினார் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். இவர்கள் பொது வைபவங்கள், அரசியல் மேடைகள், சுன்னத்துக் கல்யாணம் என்பவற்றில் கலந்து கொண்டு பாடுவார்கள். இதற்காக மக்கள் அதிகளவான அன்பளிப் புக்களை கொடுப்பார்கள். தற்போது இதன்மீதுள்ள நாட்டம் குறைந்து நவீன ஊடக வரவு காரணமாக இதன் தாகமும் குறைந்துள்ளது. எனினும் மருதமுனைக் கலைஞர்கள் தனியாக ஓரணி அமைத்து வாழும் அளவிற்கு மருதமுனையில் உள்ளனர் என்பது மருதமுனை கலாசாரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து பேசவேண்டிய முக்கிய அம்சமாகும். இதன்மூலம் இத்தகைய மனித ஆளுமைகள் எந்தக் கலாசாரத்திலிருந்து கிடைத்திருக்க வேண்டும் என்ற வினா எழும்புகின்றது. அது தென்னிந்தியாவின் வருகையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மருதமுனையின் இசை நிகழ்வுகள் பற்றி பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் அவரது இலங்கை முஸ்லிம்களது நுன்கலை எனும் நூலில் பின்வருமாறு கூறுகிறார். மருதமுனை 'ஹைட் டோன்' இசைக்குழுவின் இஸ்லாமிய கீதம்களை "தீன் இசை" எனும் தலைப்பில் காண முடிகிறது. மருதமுனை கமால், ஜௌபர் போன்ற பாடகர்கள் நாகூர் ஹனிபா, ஷெய்க் முஹம்மத் குரல்களில் தோன்றி தமது திறமைகளை வெளிப்படுத்தினர். அவர்களது பலம் நாகூர் ஹனிபா, ஷெய்க் முஹம்மது பாடல்களில்தான் வெளிப்பட்டது. அது குறை பாடல்ல. முஸ்லிம் இசை இன்றுள்ள பலவீனமான நிலையில் இது போன்ற முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவை. (பார்க்க எம்.எஸ்.எம்.அனஸ் 2007 : 36)

- **குரவை ஒலி**

திருமண வீடுகள், பூப்படைதல், சுன்னத் கல்யாணம், மௌலவியாகி பட்டம் பெற்றுவருதல் போன்ற சம்பவங்களுக்கு பெண்களால் ரபானும், குரவை ஒலியும் ஒலிக்கப்படும். குரவை போடுவதற்காக கல்யாண வீட்டுக்காரர் உறவினர்களுக்கு தாத்தா, தங்கச்சி, மாமி மற்றும் ஊரிலுள்ள ஏனையோருக்கும் அவர்களது வீட்டுக்குச் சென்று அழைப்பு விடுப்பர். எல்லோரும் மாலையில் கல்யாண வீட்டில் ஒன்றுகூடி வட்டமாக நின்று வாயில் கையை மடித்து நாக்கை வளைத்து சத்தம் இடுவர். அப்போது பட்டாசும் சுடப்படும். திருமண வீடுகளில் மாப்பிள்ளை பெண்வீட்டுக்கு முதல் ஜும்ஆ சென்று வந்தவுடனும் இக்குரவை ஒலி இடப்படும். திருமண வீட்டிற்கும், சுன்னத்துக் கல்யாணங்களிலும் உறவுக்காரர் தனக்குத் தெரிந்தவர்களுக்கு சொல்லி செப்புக்கொண்டு வருவர். அவர்கள் வரும்போதும், பின்னர் அவர்களில் இருந்து ஒரு குழுவும் குரவை இடுவர். பாட்டம் பாட்டமாக செப்புக்கொண்டு வந்து குரவை இடுவர். பின்பு எந்த உறவினர் குழு செப்பு (காசு) அதிகம் கொண்டு வந்தார்கள் என ஊர் முழுவதும் பரவும். இதைக் கொண்டு பெண்ணுக்கு காப்பு, மோதிரம் வீட்டுச்சாமான்கள் வாங்குவர்.

- **பெண்கள் ரபான் அடித்தல்**

அக்காலத்தில் முஸ்லிம் பெண்கள் திருமணவீடு, சுன்னத்து வீடுகளில் குறைந்தது 25 பெண்கள் ஒன்றுசேர்ந்து பெரிய ரபான்களை ஓர் உயரத்தில் கவிழ்த்து வைத்து, கீழே நெருப்பு மூட்டி ரப்பான் அடிப்பர். இதனை அடிக்கும் போது பலதரப்பட்ட பாடல்களையும் அவர்களுக்கே உரிய நாட்டுக் கவிகளையும் பாடுவர். அவற்றின் ஆரம்ப வரிகள் சில,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தான் தளம்புது தண்ணி தளம்புது
"தட்டும் புதுத்தட்டு
புட்டும் புதுப்புட்டு
புட்டைக் கொட்டிக்கு தட்டைத்தா"
"சாச்சா தைத்த சட்டை
சாச்சிக்கு ஏற்ற சட்டை"
"ஆறு கறுப்பு ஏறுகடப்பு".....

இத்தகைய சம்பிரதாயம் இன்று மருதமுனையில் முற்றாக ஒழிந்து விட்டதையும் இது தற்போது சிங்களவர்களிடம் உயிர்ப்போடு உள்ளதையும் சுட்டிக்காட்ட வேண்டும். அவ்வாறாயின் எமது கலாசாரம் சில சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவை என்பது தெளிவாகின்றது.

- **பூப்படைதல்**

அந்தக் காலத்தில் பெண்கள் பூப்படைந்த நிகழ்வினை ஒரு விழாவாகவே கொண்டாடினார்கள். முதலில் உறவினர்கட்கு சொல்லி அழைத்து, கால நேரம் பார்த்து, கிணற்றடியில் குப்பையை எரித்து, குத்துவிளக்கேற்றி செப்புக் குடத்திற்குள் தென்னம்பாளை வெட்டிவைத்து, குளிக்கும் இடத்தில் ஒரு பலகையில் வெள்ளைச்சீலை விரித்து அதன்மேல் இரண்டு வெற்றிலையும், இரண்டு கொட்டைப்பாக்குகளையும் வைத்து அந்த இரண்டு பாக்குகளையும் இரண்டு பெருவிரல்களுக்கிடையில் மஞ்சள் பூசி, தேங்காய்ப்பால் ஊற்றி நீராட்டுவர். நீராட்டிய பின் சாரி உடுத்து 07 நாட்கள் வெளியில் செல்லாமல் இருத்தல் வேண்டும். அந்த 07 நாட்களும் தினமும் காலையும், மாலையும் முட்டையும் நல்லெண்ணையும் கோப்பியும் அருந்தக்கொடுத்து இடுப்பில் பிட்டு ஒத்தடம் கொடுத்தல், அதிகளவு பிட்டுகள் அவித்து உறவினர்களுக்கு பகிர்ந்தளித்தல், 7ம் நாளன்று மீண்டும் மஞ்சள்பூசி தேங்காய்ப்பால் ஊற்றி நீராடி முகத்தை மூடி அழைத்து வந்து ஆரத்தி எடுத்து புத்தாடை அணிவித்து பாற்சோற்றில் முழித்து அதை உண்ணவைத்து உண்ட மீதியை நாற்சந்தியில் வைப்பர். மஞ்சள் அரைத்து கிடாரத்துள் வைத்து முறைகாரர்களுக்கு ஊற்றுவர். இது இந்து மக்களிடமிருந்து மருவி வந்த ஒரு செயற்பாடாகும்.

தற்காலத்தில் பெரும்பாலான விடயங்கள் மறைந்து சென்று ஒரு சில விடயங்கள் மாத்திரமே நடைமுறையில் காணப்படுகின்றன. பண்டைய காலத்தில் காணப் பட்டதைப் போன்று உறவினர்களை அழைக்கும் முறையெல்லாம் மருவிச் சென்று உறவினர்களுக்கே தெரியாதளவிற்கு மறைமுகமாக நடைபெறுகின்றது. எனினும் சில வீடுகளில் இவைகளில் பல மருவி பூப்படைந்த பெண்பிள்ளைக்கு தாயிடமுள்ள நகைகளை அணிவித்து சுமார் ஒரு மாதம் வரையும் செப்புக் கொண்டு செல்லும் பழக்கமும் உண்டு. அத்தோடு முறைக்காரப் பெண்கள் வந்து பூப்படைந்த பெண்ணுக்கு குளிப்பாட்டி விடுவர். பூப்படைந்த பெண்ணின் சகோதரிக்கு திருமணம் பேசியிருந்தால் சம்மந்தக்காரர் பெட்டி கொண்டு வருவார்கள். அதனுள் முட்டை, வெற்றிலை, புகையிலை, உணவுப் பொருட்கள், தேயிலை, சீனி என பல பொருட்கள் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வெள்ளி புரியாணிப் பெருநாள்**

பொதுவாக வெள்ளிக்கிழமையானால் மீன் சமைக்க மாட்டார்கள். எங்கும் கோழிக் கறிதான். வெள்ளி காலை விடிந்ததும் மாட்டிறைச்சி, கோழி இறைச்சிக் கடைகளில் மக்கள் கூட்டமாக நிற்பர். சிறுபிள்ளைகள் இன்று பிரியாணி என அடம்பிடிப்பர். புறயிலர், கொக்றோஸ், 40 நாள் இன கோழிகள் குருநாகலில் இருந்து கொண்டுவரப்பட்டு விற்கப்படும். விலை 1 கி.கி. 500 ரூபாவுக்குள்ளே இருக்கும். சிலர் கோழிகளை அறுக்காமல் வாங்கிச் சென்று வீட்டில் அவர்களே பிஸ்மில் சொல்லி அறுப்பர். அனேகர் அறுத்த கோழிகளையே வாங்குவர். அதை வீட்டிலுள்ள பெண்கள் பிள்ளைகளுக்கு பொரித்தும், கறி சமைத்தும் கூடவே மஞ்சள் சோறு சமைத்து 'புரியாணி' என உண்பர். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பெருநாளாகவே இருக்கும். அன்று மீன் சமைத்தால் சிறிய பிள்ளைகள் சாப்பிட மாட்டார்கள். ஏனையோர் அதை அதிசயமாக கதைப்பர். ஜும்ஆ தினத்தன்று வியாபாரிகள் கடைகளை பூட்டியும், அரச உத்தியோகத் தர்கள் குறுகிய லீவு, அல்லது அரைநாள் லீவில் வீடுவந்து பிள்ளைகளோடும், மனைவியோடும் உண்டு மகிழ்வர். தற்போது வெள்ளிக்கிழமைகளில் வீட்டில் சமைப்பதும் குறைந்து அனேக வீடுகளில் கடைபுரியாணி, தம் புரியாணி, சகன் சாப்பாடு என ஓடர்செய்து உண்டுவருவது வேடிக்கையாகவுள்ளது. இந்த நடைமுறை நோன்பு, ஹஜ்ஜுப் பெருநாள் தினங்களில் அதிகரித்துக் காணப் படும். சுமார் 10 வருடங்களுக்கு முதலுள்ள ஜும்ஆ மிகவும் புனிதமானதாகவும் சிறப்பானதாகவும் இருக்கும். முதியோர் ஜும்ஆவிற்கு பாங்கு சொல்வதற்கு அரை மணித்தியாலம் முன்பே குளித்து, வெள்ளை ஆடை அணிந்து, தோளின் மேலே சால்வையிட்டு, மணம் பூசி, சுர்மா இட்டு சென்று விடுவர். இமாம் மிம்பரில் ஏறுவதற்கு முன்னே உள் பள்ளி முழுவதும் ஆட்களால் நிரம்பி விடும். அக்காலத்தில் ஊரில் ஒரே இடத்தில் ஜும்ஆ என்பதால் ஊரிலுள்ள எல்லா சமூக படிநிலை மக்களும் ஒன்றுசேர்வதால் முக்கிய மகாநாடுபோல் தோற்ற மளிக்கும். ஜும்ஆ முடிந்ததும் பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் ஊரிலுள்ள முக்கிய பிரச்சினைகள் அலசி ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும். வெளியூர் களிலிருந்து வருகை தந்த மருதமுனை மக்கள் உள்ளூர் மக்களுடன் ஸலாம் சொல்லி சுகம் விசாரித்து மகிழ்வர். முதியோர்கள் ஜும்ஆ செய்த இமாமை முஸாபா செய்வர். எவ்வாறாயினும் வெள்ளிக்கிழமைகளில் ஆண்கள் வீடு வந்து சேர சுமார் 2.30 மணியை எட்டி விடும். பள்ளிவாசலில் நடந்த சம்பவங்களை உணவு உண்ணும் போது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் பரிமாறுவர்.

- **கடற்கரை உல்லாசம்**

மருதமுனை மக்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தமது கடற்கரை பிரதேசத்தை உல்லாச இடமாக பயன்படுத்தி வருகின்றனர்.

மாலை 4.30 மணியானதும் ஊரிலுள்ள வயோதிபர் பலர் காற்றுவாங்குவதற் காகவும், தனது ஓய்வு நேரங்களை பயனுள்ள முறையில் கழிப்பதற்காகவும் கடற்கரை மண்ணில் வட்டமாக மஃரிப் பாங்கு சொல்லும் வரையும் இருப்பர். அரச உத்தியோகம் செய்பவர்களும், ஆசிரியர்களும் மாலையானதும் 5.00 மணிக்கு பின்னர் ஓய்வு எடுப்பதற்காக கூட்டங் கூட்டமாக அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியவர்களுடன் வட்டமாக இருந்து ஓய்வுபெறுவர். இதில் பிரபல்யம் பெற்ற வட்டமாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டம், ஐக்கிய தேசியக்கட்சி வட்டம், சமூக மேம்பாட்டு மைய வட்டம், உயர் அரச உத்தியோகத்தர் கொண்ட வட்டம். இவர்கள் நோன்பு திறத்தல், நிலாச்சோறு, நண்பர்களின் பதவி உயர்வு விருந்து, பெருநாள் உணவு, ஹஜ் செல்வோருக்கான விருந்து என்பனவும் இடம்பெறும். உயர் அரச அதிகாரிகள் கொண்ட வட்டத்தில் நீதிபதிகள், கல்வி நிர்வாகிகள், திட்டமிடல் அதிகாரி, ஆசிரியர்கள், மருத்துவர்கள், விரிவுரையாளர்கள், பொறியியலாளர்கள் என அடங்குவர். சமூக மேம்பாட்டு மைய வட்டத்தில் தலைவர் சத்தார் ஹாஜியாரும் அவருடன் எஸ்.எம். நஜீம் சேரும், பலரும் இருப்பர். இதில் பல பொதுவிடயங்களை அமுல்படுத்துவர். நோயாளருக்கான அன்பளிப்பு, நோன்பு திறத்தல், ஸம்ஸ், அல்-மனார் கல்லூரிகளுக்கு நூல் அன்பளிப்பு என்பன பற்றி விரிவாக கலந்துரையாடுவர். இந்நீண்ட கலந்துரையாடல் நிலாக்காலங்களில் இடம்பெறும். அவ்வேளைகளில் 'நிலாச்சோறு' எல்லோரும் உண்பர். வேறு சில குடும்பங்கள் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுது முடிந்தவுடன் கடையில் ஓடர்பண்ணிய சகன் உணவுகளை எடுத்துக்கொண்டு கடற்கரையில் ஒன்றாக சாப்பிடுவர். ஏனையோர் மாலை வேளை மஃரிப் தொழுகைக்குப் பின் கணவன், மனைவி, பிள்ளைகள் கடற்கரைக்கு வந்து மாலை 6.30 - இரவு 10 மணிவரை இரவு உணவு கொத்துரொட்டி, கிழங்குப்பொரி, வடை, ஐஸ் கிறீம் என்பவற்றை பகிர்ந்து உண்பர். வெள்ளிக்கிழமைகளில் இச்செயற்பாடு செய்யவில்லை என்றால் கடற்கரை செல்லாத குடும்பங்களுக்கு அன்றைய தினம் வீட்டில் சோகமாக இருக்கும்.

- **பொல்லடி / களிகம்பு**

மருதமுனை இக்கலையை ஆரம்பகாலம் முதலே பெற்றிருக்கின்றது. எமது ஊரில் சுமார் 126 வருடகாலம் வாழ்ந்த இரும்பு மனிதர் இப்றாலெவ்வை என்பவர் இக்கலையில் தேர்ச்சி பெற்றவராவார். இக்கலையை பழக்குபவர்கள் பலர் மருதமுனையில் உள்ளனர். இவர்களை அண்ணாவியர் என்பர். 2013ம் ஆண்டு தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மருதமுனைக்கு வந்து இக்கலையைப் படித்துச் சென்றனர். இக்கலை இன்றுவரை முஸ்லிம்களால் பேணப்பட்டு வருகின்றது. சுமார் 150 வருட காலத்துக்கு முதல் சடங்குகளை தொடங்கி வைப்பதற்காகவும், அதிதிகளை வரவேற்கவும் , திருமணம் மற்றும் கத்னா வைபவங்களுக்கும், மாப்பிள்ளையை அழைத்து வரவும் பயன்படுத்தினர். தற்போது முஸ்லிம் பிரதேசங்களில் ஜனாதிபதியை, அமைச்சர்களை வரவேற் கவும், மதரஸா பட்டமளிப்பு நிகழ்வுகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

இக்கோலாட்டம் முஸ்லிம் கலாசாரத்தினை இழந்துவிடக்கூடாது என்பதற்காக தலைப்பாகையுடன், ஜுப்பா, சாரம் வெள்ளைநிறத்தில் அணிவர். இதன்போது இசைக்கும் பாடலாக இஸ்லாமிய கீதம் இருக்கும். இஸ்லாமிய கீதம் அல்லது கஸீதா இசைக்கப்பட்டதும் சோடிகளாக நின்று ஆரம்பித்து பின்னர் இசைக்கும் கஸீதாவின் தாளத்துக்கேற்ப தமது கோலாட்ட நிகழ்வுகளின் வடிவங்களை மாற்றி உள்வட்டம், வெளிவட்டம், நிரை போன்ற வடிவங்களில் அடித்துச் செல்வர். இதன்போது உள்வட்டம், வெளிவட்டம் என்பது வேறுபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளையை கூட்டிவந்து முடியும்வரை இஸ்லாமிய கீதத்தை மாற்றிப் படித்து களிகம்பு அடிப்பர். அடிக்கும் கம்பு நல்ல உறுதியானதாக, நல்ல சத்தம் உள்ளதாக, உடையாத கம்பாக இருக்க வேண்டும். இக்கலை தான்தே தாந்தே... என ஆரம்பித்து லாஇலாஹ இல்லல்லாஹு, லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்ரரஸுல்லாஹ் என முடிக்கப்படும். அண்மைக் காலமாக மருத முனையில் அல்-மதீனா பாடசாலை மாணவர்களுக்கு இக்கலை பயிற்றுவிக்கப் பட்டு வருகின்றது. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் மருதமுனை மாணவர்களை அதிகம் கொண்ட குழு ஒன்று உள்ளது. பல்கலைக்கழக முக்கிய நிகழ்வுகளில் அவர்கள் கலந்துகொண்டு பாராட்டுப்பெற்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கலை பற்றி மருதூர் மஜீட் எழுதிய மட்டக்களப்பில் இருந்து மத்திய கிழக்கு வரை எனும் நூலில் இக்கலாசாரங்கள் தான் முஸ்லிம்களின் இருப்பினை தக்க வைக்கும் காரணிகளில் ஒன்றாகவும் உள்ளது. எனவே இதன் முக்கியத்துவம் உணர்ந்து ஒவ்வொரு முஸ்லிம் கிராமங்களிலும் தமக்கு பாண்டித்தியமான முஸ்லிம் கலாசாரங்களை, கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும் முன்வர வேண்டும்.

மருதமுனையில் இப்றாலெவ்வை மரைக்காயர் அவர்கள் தனது இளமைக் காலத்தில் பல்வேறு கலைகளையும் பயின்று பல்கலை விற்பனராக இருந்துள்ளார். இவர் சீனடி, சிலம்படி போன்ற விளையாட்டுக்களில் தேர்ச்சி பெற்றிருந்ததோடு ஏனைய கிராமங்களிலிருந்து அனேகர் இங்கு வந்து இவரிடமிருந்து இக்கலைகளை கற்றுள்ளதை அறிய முடிகிறது. (பார்க்க எம்.எம். நௌபல் 2013 : 19) மேலும் மருதமுனை ஏ. கையஸ் சிலம்பாட்டத்தில் தேர்ச்சி பெற்றவர் எனவும், இப்றாகிம் சர்க்கஸ், தேகப்பயிற்சி என்பவற்றில் நிபுணத்துவம் உள்ளவர்கள் என்றும் அறியப்படுகிறது.

- **கிணறு தோண்டுதல்**

சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் அயலவருக்கு இன்றிரவு கிணறு வெட்ட வந்துவிடும்படி அழைப்பு விடுத்தால் மண்வெட்டி சகிதம் வந்துவிடுவர். வட்டமாக வளைத்து நின்று துரவு வெட்ட ஆரம்பிப்பர். தண்ணீரைக் கண்டதும் சந்தோசம் அடைவர். துரவு வெட்டும்போது பெறப்பட்ட வெள்ளை மணலை "குருத்து மண்" எனச்சொல்லி வீட்டிற்கு முன்னால் போடுவர். அக் காலத்தில் அடுத்த வீட்டில் தண்ணீர் எடுக்கச்செல்வது அவமானம் எனக்கருதி வீட்டின் முன் வாசலில் கிணறு ஒன்றை அமைத்து விடுவர். பின்னர் அடுத்த நாள் சீமெந்திலான கொட்டுப் பதிக்கப்படும். அப்போது கொட்டைப் புக்கை தயாரித்து வேலையில் பங்கெடுத்தவர்கள், உறவுக்காரர் போன்றோருக்கு கொடுத்து அனுப்பப்படும். இதற்கு முதல் மரக்குற்றிகளை மண் சரியாமல் நான்கு புறமும் மறைத்து கிணறு அமைத்தனர். தற்போது குழாய் கிணறு, லைன் தண்ணீர் மூலம் நீர் பெறப்படுகின்றது. முன்னைய காலங்களில் கிணற்றிலிருந்து நீரைப் பெறுவதற்கு சிலாந்து, துலா போன்றன பயன்படுத்தப்பட்டது. இதற்காக பாரிய இடம் தேவைப்பட்டது. இக்கிணற்றை சுற்றி தட்டுவேலி அமைத்து கீழே சீமெந்து இட்டு கதவுவைத்து பாத்றூம் போல் பாவிப்பர். தற்போது நீர் பாவனைக்காக மாதம் குறைந்தது 500/- செலவு செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா எடுத்தல்

மருதமுனைக்கு பெயரும் புகழும் பெற்றுக்கொடுத்தோரையும், சேவைகள் செய்தோரையும் மருதமுனை மக்கள் உள்ளூரவர், வெளியூரவர் என்ற வேறுபாடு இல்லாமல் பாராட்டும் கலாசாரம் மருதமுனை மக்களால் இன்றுவரை பேணப்படுகின்றது. புதிதாய் பதவி உயர்வு பெற்றவருக்கு, உயர் பரீட்சையில் சித்தி, 5ம் தர புலமைப்பரிசில் மாணவர்கள் 9A, 4A எடுத்தவர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர் போன்றோருக்கு மிகவும் கலாதியாகவும், அலாதியாகவும் விழா செய்து பாராட்டுவர்.

அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப், அமைச்சர் றஊப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர், இஸட்.எம். மசூர்மௌலானா, ஏ.எல்.எம். அதாவுல்லா, ஏ.பீ.எம். மரைக்கார், மருதூர்க்கனி, எம்.எல். துல்கர் நஹீம் (துல்ஷான்), எம்.எஸ். ஐயூப், ஐ.எல்.எம். இஸ்மாயில் ஜே.பி. (சீப்பலஸ்), முகைதீன் பாவா, புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன், ரீ.எல்.ஏ. மனாப், ஏ.எச்.எம். அன்சார், எஸ்.எம்.ஏ. கையூம், ஏ.டபிள்யூ.எம். மஹ்தூம், எஸ்.எம். சுல்தான் மரைக்கார், சேர்மன் மௌலானா, முகம்மட் தம்பி, சேகுசாய்வு, எஸ்.எம். மரைக்கார், டாக்டர். சித்தீக், ஏ.எச்.எம். மஜித் அதிபர், ஏ.எல். மீராமுகைதீன் அதிபர், ஏ.எம்.ஏ. ஜலீல், எஸ்.ஏ.ஆர்.எஸ்.எம். இஸ்மாயில் மௌலானா, எஸ்.ஏ.ஆர்.எஸ்.எம். ஹசன் மௌலானா, ஏ.எம்.ஏ. சமது அதிபர், தோழர் இஸ்மாயில், பீ.எம்.எம்.ஏ. காதர், எம்.எம். நௌபல், மருதூர் வாணர், யாசீர் அறபாத், எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா வெகு விமர்சையாக பாராட்டப்பட்டனர். அதேபோல் எச்.எல். ஜமால்டீன், எம்.எச். காதர் இப்றாகீம், பாராட்டு, எம்.எஸ்.எம். ஜெமீல், எஸ்.எல்.ஏ. றஹீம், பீ.எம். பதுறுதீன், ஏ.சீ.எம். தௌபீக், கே.எல்.ஏ. ஹனீபா, ஹம்தூன், எம்.எஸ். சஹூதுல் நஜீம் போன்றவர்களும் மேலும் பலரும் இவ்வாறான பாராட்டுக்களையும் பெற்றார்கள்.

இவைதவிர கட்டிட திறப்புவிழா, சங்கங்களின் வருடாந்த நிகழ்வு. நூல்வெளியீட்டு விழா, A/L, O/L விழா என்பன மிகச்சிறப்பாக நடாத்துவர். அவ்விழாக்களின் போது முகைதீன்பாவா அபுல்ஹஸன், மர்ஹூம் இஸ்மாயில் முகாந்திரம் மிகப் பெறுமதியான வரவேற்பு பாடலை இயற்றுவார்கள் குறிப்பாக மருதமுனை ஹஸன் இயற்றிய அல்-மனாரின் ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எல். மீராமுகைதீன் அவர்களுக்கு இயற்றிய வரவேற்புப்பா சபையோரால் பெரிதும் பாராட்டைப் பெற்றது. அப்பாடலின் சில அடிகள் வருமாறு.

"ஆத்தோர வம்மியிலே புள்ளிக்குயில் வீற்றிரிந்து
கூ கூ என்று கூவுது... எங்கள் அன்பான அதிபர்மணி
அகமது லெவ்வை மகன் மீரா முகைதீனை பாடுது.."

அதேபோல் பீ.எம். பதுறுத்தீன் அவர்கள் பதவி உயர்ந்து செல்லும் போது பிரியாவிடையில் எப்.ஐ.ஏ. ஹினாயா அன்சார் மௌலானா ஆசிரியை இயற்றிய வரவேற்பு பாடலும் மிகச்சிறப்பானது. இவ்வாறான வரவேற்புபாக்களை இயற்றுபவர்கள் மருதமுனையில் அதிகம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப் பட்டாளம்

1960களில் மருதமுனையைப் பாதுகாப்பதற்காகவும் ஊரின் ஒழுக்க விழுமியங்களை பாதுகாக்கும் நோக்கிலும் எல்லைக் காவலர்களாக மன்னியனாரின் தலைமையில் பல பலசாலிகள் ஒன்றுசேர்ந்து செயற்பட்டதனை அறியமுடிகிறது. இவர்கள் பிற ஊர்களிலிருந்து எமது ஊரிலுள்ள பெண்களை துன்பியல் செய்ய வருபவர்களை மடக்கிப் பிடிப்பவர்களாகவும் களவுகளிலிருந்து வீட்டையும், ஊரையும் காப்பாற்றும் காப்பாளர்களாக செயற்படுவர். குற்றங்களுக்குள்ளாபவர்கள் மீது தண்டனையும் நிறைவேற்றுவர். இம்மன்னியர் பட்டாளத்தில் மர்ஹூம் ஐ.எம். இஸ்மாயில் (சீப்பலஸ்), ஏ.ஏ. றகுமான், எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா, ஏ.எம். சம்சுத்தீன், ஏ.எம். அலியார் மரைக்கார் என்போர் முக்கியமானவர்களாகும். இன்னும் சிலர் காலத்தின் தேவைக்கேற்ப இணைந்து இயங்கிய விடயங்களையும் மறக்க முடியாது. இப்படையினர் பிற்காலத்தில் கலைந்ததும் ஊரின் தேவை கருதி ஊர்காவல் படை அமைக்கப்பெற்று ஊர் பாதுகாக்கப்பட்டது. (எம்.எச்.எம். காதர் இப்றாகிம், ஏ.ஏ. றகுமான் 2014)

சமாதானக் கலாசாரம்

மருதமுனைக் கலாசாரம் தனித்துவமானது. அது மட்டக்களப்பு பிரதேச தமிழ் மக்களோடும், மட்டக்களப்பு நோக்கி வந்த அரேபிய முஸ்லிம்களோடும் நேரடித் தொடர்புடையது என கோடிட்டுக்காட்டலாம். இதனால்தான் இலங்கையின் வடகிழக்குத் தமிழர்கள் பற்றி அறிய முற்பட்டபோது அவர்களிடையே பின்னிப் பிணைந்திருந்த மருதமுனை முஸ்லிம்கள் பற்றி முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி இவ்வாறு கூறினார். "ஸ்ரீலங்காவில் குறிப்பாக கிழக்குப் பகுதியில் சமாதானத்துக்கு எடுத்துக்காட்டான கிராமம் மருதமுனையே என்பதை நான் அறிந்து கொண்டேன்" (பார்க்க அல்-மருதமுனை 2014: 39.) இந்தியாவின் மேஜர் குப்தா பின்வருமாறு கூறினார். "சமாதான விரும்பிகளாகவும், தமிழ் மக்களோடு அன்னியொன்னியமாகவும் வாழும் மருதமுனை மக்கள் குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்"

- **தாலாட்டுப்பாடல்**

பிள்ளைகளை தூங்கச் செய்வதற்கும், அழுகையை நிறுத்துவதற்கும் தாலாட்டுப் பாடல்களை பாடினர். அப்போது வீடுகளில் ஊஞ்சல் கட்டி தாயும், பிள்ளையும் ஊஞ்சலில் அமர்ந்துகொண்டு பிள்ளைக்கு உணவு கொடுக்கும் வேளையில் இத்தாலாட்டுப் பாடல்களைப் பாடுவார்கள். இப்பாடல்கள் ஏடறியாதவை. இவை தாய்மார்களால் சுயமாக இயற்றிப் பாடப்படும்.

- **விளையாட்டுக்கள்**

மல்யுத்தம், சீனடி சிலம்படி, றவுன்பந்து (எல்லைக்கோடு) , கட்டை எறிதல், புள்ளுக்குட்டி விளையாட்டு, கிளித்தட்டு, கிடுவிளையாட்டு, பருப்பும் பருப்பும் பன்னிரண்டாம் , சாந்தமாமா விளையாட்டு, பிள்ளை பெற்று விளையாட்டு, ஆலாப்பற விளையாட்டு, நாயும் புலியும் விளையாட்டு, வார் விளையாட்டு, ரோசாப்பூ விளையாட்டு, சீமைப்பந்தாட்டம் என்பன வீட்டில் சிறுபிள்ளைகள் விளையாடுவர். கிறிக்கட், காற்பந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து போன்ற விளையாட்டுக்களை பாடசாலைகளில் விளையாடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **பள்ளிவாசல் நீதிமன்றம் போல்**

அக்காலத்து பள்ளிவாசல்கள் ஊரின் விடயங்கள், மக்கள் பிரச்சினைகள் போன்ற வைகளை விசாரித்து முடிவுகளை தீர்மானிக்கும் நீதிமன்றங்களாகவும், ஆபத்து வேளையில் ஊர்கூடி பிரார்த்தனை செய்யும் இடமாகவும் அமைந்தது. இவ்வாறான நிகழ்வுகள் மஸ்ஜிதுன் நூர், மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசல் நிர்வாகிகள் மிகவும் திறம்பட செய்த வரலாறு இன்றும் மறக்க முடியாதவை. இன்று பல படித்த முக்கியஸ்தர்கள் சேர்ந்து செய்யமுடியாத காரியங்களைக்கூட அப்போதைய பள்ளிவாசல் நிர்வாகமும் சமாதான சபையும் காத்திரமாக செய்துமுடித்தனர்.

மார்க்க வரம்புகளை மீறுவோர், பள்ளிவாசல் கட்டமைப்புக்களை அலட்சியம் செய்வோர் நீதி விசாரணைகளின் பின்னர் வழங்கப்படும் தீர்ப்புகளை நிராகரித்து எதிர்ப்போர், திருடுவோர், விபச்சாரம் புரிந்தோர் போன்றோருக்கு பள்ளிவாசல் பகிரங்கமாக தண்டனைகளை வழங்கியது. தண்டப்பணம் விதித்தல், பிரம்பால் அடித்தல், மட்டையால் அடித்தல், கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி மொட்டை அடித்து ஊர்வலம், குற்றம் செய்தவரை ஊரிலிருந்து தள்ளி வைத்தல் என்பன இலங்கைச் சட்டத்தோடும், கல்முனை பொலிஸ் நிலையத் தோடும் இணைந்தும் செயற்படுத்தியமை ஊரின் கலாசாரத்தில் முக்கிய அம்சங்களாகும். மேலும் அக்காலத்தில் தமிழ் முஸ்லிம் பிரச்சினைகளை LTTEயுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்க்கதரிசனமான முடிவுகளை எடுத்து அமுல்படுத்தியமையையும் குறிப்பிடலாம். உதாரணமாக தமிழர் ஒருவரின் சைக்கிள்ளை முஸ்லிம் ஒருவர் பறித்தால் அதையாருக்கும் தெரியாமல் சீப்பலஸ் ஹாஜியார் சைக்கிள் வாங்கிக் கொடுப்பார்.

பள்ளிவாசல்களில் முன்னைய காலம்களில் பிரச்சினைகளை எழுதியோ, சொல்லியோ வட்டாவைத்து தீர்ப்பு கேட்பார். குறித்த பிரச்சினை வந்ததும் மர்ஹூம்களான அல்-ஹாஜ் சம்சுதீன் மௌலவி, அல்-ஹாஜ் றஸூல் மௌலவி, அல்-ஹாஜ் ஜலாலுத்தீன் மௌலவி, அல்-ஹாஜ் அப்துல் மஜீது, அல்-ஹாஜ் ஹசன் மௌலவி, அல்-ஹாஜ் செயினுலாப்தீன் மௌலவி போன்றோரிடம் குறித்த பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடுவர். இவர்கள் இதற்கான தீர்வுகளை கிதாபுகளில் ஆராய்ந்து தீர்ப்புச் சொன்னால் அதனை மாற்றமாட்டார்கள். அந்தளவுக்கு அக்காலத்தில் மௌலவிமார்கட்கு மதிப்பும் மரியாதையும் இருந்தது.

- **இலங்கையின் முன்னணி விளையாட்டுக் கழகங்கள்**

ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தேசிய விளையாட்டுக்களான கால்பந்து, கிரிக்கட் என்பவற்றில் எமதூர் சிறந்து விளங்குகின்றது. அம்பாரை மாவட்டத்தின் விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறும் இடமாக மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கு மாறிவருகின்றது. குறிப்பாக வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை, மாலை வேளைகளில் ஆயிரக்கணக் கானோர் நுழைவுச் சீட்டுக்களைப் பெற்று இவ்விளையாட்டுக்களை பார்க்கும் அளவிற்கு முன்னேறி யுள்ளது. ஒவ்வொரு வருடமும் அதிகமான நிகழ்வுகளை அமைச்சர்கள், முக்கிய அதிதிகளை கொண்டு நடாத்துவர். இதனால் இவ்விளையாட்டுக்களை பார்ப்பதும் விளையாடுவதும் பொழுதுபோக்காகவும், பரம்பரை விளையாட்டாகவும் மாறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விளையாட்டினை பிரதிநிதித்துவப்படுத்தும் கழகங்களாக ஈஸ்டன் யூத் வி.க., ஒலிம்பிக் வி.க. கோல்மைண்ட் வி.க., டொக்ஷா வி.க. போன்றவை பிரசித்தி பெற்றவை. இவ்விளையாட்டுக்கழக முக்கிய உறுப்பினர்களையும் இணைத்தே ஊரின் முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்படும்.

- **ஜே.பி. கலாசாரம்**

1967ம் ஆண்டுக்கு முன்னர் முதலாவது ஜே.பி. பட்டம் (சமாதான நீதிபதி) ஏ.பீ.எம். மரைக்கார் ஹாஜியார் அவர்களுக்கே கிடைத்தது. அதற்கு முன் மருதமுனை மக்கள் சமாதான நீதவானின் ஒப்பம் தேவையாயின் கிராம சேவகரின் கடிதத்துடன் செல்வர். தற்போது மருதமுனையில் குடும்பத்துக் கொரு ஜே.பி. எனும் கலாசாரமாக மாற்றம் பெற்றுள்ளது.

- **மருதமுனையின் பழமொழிகள்**

1. பொன்பிடியை விட்டாலும் மண்பிடியை விடாதே.
2. உடுத்த பிடவையை விற்று அடுத்த வளவை வாங்கு.
3. எட்டிப்பார்த்தால் எட்டு இழை குறையும்.
4. யானை துரத்தி வந்தாலும் தறிமால் பக்கம் போகாதே.
5. தறிக்குழி தவறினால் கபுறுக்குறி.
6. ஊரான் கோழியை அறுத்து உம்மா பெயரில் கத்தமா?
7. சேணியன் குடும்பி சும்மா ஆடாது.
8. ஊரோடொத்தது உதுமாலெவ்வைக்கு.
9. பின்னி நெய்தவர் பிச்சை எடுப்பார்.
10. சுற்றிவரவேலி, சூளவர முள்வேலி, எங்கும் ஒரேவேலி, எங்காலே வந்திட்டன்.
11. மரத்தைத் தொளைத்துத் தண்ணீர் எடுப்பான் மட்டக்களப்பான்.
12. காலைப்பசியைத் தீர்த்தவரும் கன்னி காதானம் முடித்தவரும் ஆழ்கிணறு போட்டவரும் அரிய சுவர்க்கம் புகுவரே.
13. பஞ்சுபடாத பதினெட்டுப்பாடும்
14. பஞ்சை நூலாகும் வரை ஊழியம் அதிகம்
15. செய்யும் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்த்தாலும் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை.
16. எடுப்பாரை எடுக்கும் கழிப்பாரை கழிக்கும் மருதமுனை.
17. வருந்தி அழைத்தாலும் வராது வரா!
18. பொருந்துவன போ என்றால் போக இருந்துரங்கி
19. நெஞ்சும் புண்ணாகி நெடுந்தூரம் தான் நினைத்து
    துஞ்சுவதே மாந்தர் தொழில் பொல்லாருக்கு.
20. வந்து வந்து போகும் செல்வம்
    வந்தால் போகாது கல்வி போனால் வராது சீவன்.

- **கிடுகு கட்டுதல்**

சுமார் 50 வருடங்களுக்கு முன் வீட்டின் கூரைக்கு கிடுகு கட்டுவதற்காக கட்டத் தெரிந்தவர்களுக்கு முதல்நாளில் சொல்லி வைப்பர். அடுத்தநாள் காலையில் எல்லோரும் வந்து பழைய கூரையைப் பிரித்து துப்பரவு செய்து புதிய கிடுகு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்தோலை, வாழைநார் என்பவற்றை தயார்செய்வர். கிடுகு கட்டியபின் பணம், உணவு கொடுக்கப்படும். அக்காலத்து வீடுகளில் பல அறைகள் இருக்கும். சாப்பு நெய்யற்கூடம், முன்புறத் தின்னை, சாப்பூடு, உள்ளூடு, கல்லறை, ஆலவீடு (பிரசவ அறை), இத்தாய் வீட்டை தள்ளி குசினி (சமயலறை), கழிவறை அல்லது கோடி (புளக்கடை) இருக்கும். முன்பக்கம் கிணறு இருக்கும். அக்காலத்தில் பணிந்தவீடு கட்டுவது "பறக்கத்", மரியாதை என்றும். ஜன்னல் வைத்துக்கட்டுவது ஆபத்து என்றும் கருதப்பட்டது. தற்போதுள்ள வீடுகள் ஓடுகள், கொங்கிறீட்டினாலும் அமைக்கப்பட்டுள்ளது. ஓடுகளினாலான வீடுகளும் அருகிவருகிறது. ஒவ்வொரு வீதியிலும் கொங்கிறீட்கல், மண் எப்போதும் கிடப்பதை காணலாம்.

- **ஊரின் முக்கிய தீர்மானங்களை கூப்போட்டு அறிவித்தல்**

ஊடகங்கள், ஸ்பீக்கர் இல்லாத அக்காலத்தில் பள்ளிவாசலில் கடமையாற்றும் 'அதிகாரியார்' என்பவர்தான் பெருநாள் பிறை பற்றிய முடிவுகளை பள்ளிவாசலின் கட்டளைகேற்ப கூப்போட்டுவருவார். நாளை பெருநாள் என்றால் பின்வருமாறு கூப்போட்டுச் சொல்வார்.

"நாளைக்குப்பெருநாளாம் கொத்துபா காசையும் கொண்டு நாளை பள்ளிவாசலுக்கு வரட்டாம் கூ...கூ...கூ...." இவ்வாறு கூற பின்னால் சிறு பிள்ளைகள் 100, 150 பேர் அவர் சொல்ல பிள்ளைகள் கூப்போட்டு ஊர் முழுவதும் சுற்றுவர். இவ்வாறே நோன்பு முப்பது நாளிலும் பைக்கீர் பாவா ரப்பானில் கொட்ட, இன்னொருவர் அவருக்கு உதவியாக 'அரிக்கன் லாம்பு' தூக்கி இரவு 2.00 மணிமுதல் 3.30 மணிவரை பக்கீர் பைத்பாடி நோன்பு பிடிப்பதற்கு எழுப்புவார்.

- **கிராமிய கவி**

அக்காலத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் தேர்தல்கேட்டு அவரை ஆதரித்து வாக்குபோட்டு தேர்தல் முடிவுகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்த சந்தர்ப்பத்தில் அவர் குறைவான வாக்குகளைப் பெற்றதைக் கேட்ட வயோதிபர் இவ்வாறு கிராமிய கவியை மருதமுனையில் பாடினாள். (எஸ்.எம். ஹாறூனா, 2014)

அம்மாவுக்கு மனசுக்குள்ளே
ஆசையாலே டக், டக், டக்
அடிக்கிற அடியோ
துடிக்கிற துடியோ
எனக்கு கேட்குது
டிக், டிக், டிக்

இவ்வாறு உடனுக்குடன் கிராமியக் கவிபாடுவோர் மருதமுனையில் அருகி வருவதையும் அவதானிக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **பாயும், பாய் இழைக்கும் கைவினையாளர்களும்**

முஸ்லிம்களின் கலாசாரத்தில் ஒவ்வொரு கட்டங்களிலும் அன்றாடத் தேவைகளிலும் பாய்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. குழந்தை பிறப்பு, குழந்தை தவழ்தல், விளையாடுதல், விருந்தினர் உபசாரம், திருமணம், தொழுகை, சாப்பாட்டுத் திருமணம், பள்ளிவாசல் தேவைகள் என்று பாய்கள் சம்பந்தப்படும் விஷேட கூட்டங்களையும் தேவைகளையும் வரிசைப்படுத்த முடியும். இத்தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய மிகச்சிறந்த கைவினையாளர்கள் மருதமுனையில் உள்ளனர். தொழுகைப்பாய், பள்ளிவாசல் பாய், வரவேற்பறைப் பாய், கபன்பாய், சாதாரண பாய், விலையுயர்ந்த பாய் என பலவகையான பாய்கள் (பார்க்க எம்.எஸ்.எம். அனஸ் 2007:81) கற்பண், கிராம்பன், புல்பன் என்பனவற்றால் தயாரிக்கப்படுகின்றன. இக்கைவினையை அதிகம் வயது சென்ற பெண்களே செய்வர்.

பாய் பின்னுவதற்கு வீட்டில் பன்தோட்டம் செய்து சுமார் 6மாதத்திற்கு பின்னர் அறுவடை செய்து அதனை கட்டி, வெயிலில் ஒரு கிழமை உலர்த்தியதன் பின் பெரிய கிடாரத்தில் தண்ணீர் கொதிக்க வைத்து பன்சாயம் இட்டு நிறம் இட்டதன்பின் காயவைக்கப்பட்ட பன்களை நிறத்தண்ணீரில் அமிழ்த்தி தேவையான கலர் பன்களைப் பெறுவர். அதனை காயவைத்து ஒவ்வொரு அளவுகளிலும் பன்களைக்கட்டி, பருத்திமனையில் அரைத்து பதமான பன்களை எடுத்து தேவையான பாய் டிசைன்களை கற்பனை பண்ணி பாய் இழைப்பர். மீதமாகவும் சிறிய பன்களைக் கொண்டு தட்டு, சிறியபெட்டி, கைப்பை, தொப்பி என்பனவும் பின்னப்படும்.

ஆரம்பகால மூடநம்பிக்கை வைத்திய கலாசார முறைகள்

- **கண்ணேறு கழிப்பது**

புளுதியில் புரண்டு விளையாடி வந்த பிள்ளையை தாய் ஆரத்தழுவி குளிக்க வைத்து கண்ணேறு களிப்பாள். இதற்கு உப்பு, கொச்சிக்காய், மிளகு, 1பிடி அரிசி என்பவற்றை வலக்கரத்தில் எடுத்து பிள்ளையின் தலையை 7 தடவை சுற்றி சட்டியில் எடுத்த எரிதணலில் இட்டு எரிப்பாள். உப்பு வெடிக்கும், மிளகும் மிளகாயும் மூக்கை துளைக்க தும்மலும் இருமலும் தொடர்ந்து வரும். உறைப்பால் கண்களில் நீர் தழும்பும் பின்னர் கண்ணூறு நீங்கி பிள்ளை அமைதியாய் தூங்கும்.

- **ஷைத்தானும் கண்ணேறு கழித்தலும் / பிள்ளையின் உடம்பில் கூட்டால்**

கண்ணேறுக்கு சாமான்களை வாங்கி சாம்புராணிச் சட்டியில் போட்டு எரித்து பிள்ளையின் தலையில் ஏழுதரம் சுற்றி நாற்சந்தியில் கொட்டிவிட்டு திரும்பிப் பாராமல் வீட்டுக்கு வருவாள். இப்படிச் செய்தால் பிடித்த ஷைத்தானும் கண்ணூறும் கழிந்து நோய் தீரும் என நம்புவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **காத்தனம் (காற்றுணர்வு)**

பரிசாரி கையைப்பிடித்து வயிற்றை தடவுவான் மந்திரம் ஜெபித்து பிள்ளை முகத்தில் ஊதுவான் கூடவே குர்ஆன் வசனங்களையும் ஓதி ஊதுவார். குளிர்ந்த நீரை ஓதி முகத்தில் வீசுவர். பின்னர் கறுத்த சின்ன உருண்டை உள்ளிக் குளிசையை கையில் கொடுத்து முலைபாலில் அல்லது தேனில் கரைத்து குடிக்கச் சொல்வார்.

- **குழந்தைக்கு தூக்கமில்லை என்றால்**

பரிசாரியின் வாயிலிருந்து கனதியாக வெளிப்பட்ட வாயுவை (கரியமிலவாயு) சுவாசித்த குழந்தை பரிசாரியின் மந்திரஜைப்பில் பயந்து உறைந்து போய் உறங்கும்.

- **பிறந்த குழந்தை இறத்தல்**

குழந்தை பிறக்கும்போது இறந்தால் அடுத்த வீட்டில் உள்ள யாராவது ஒரு பகையாளியின் மேல் பழியைப் போடுவர். அக்காலத்தில் சூணியத்தால்தான் குழந்தை மதித்து பிறந்துள்ளது என்பர்.

- **நோயாளியின் வீடு இனங்காட்டல்**

"இந்த வீட்டில் நோயாளி இருக்கிறார்" என்பதை தெரியப்படுத்துவதற்காக வாசலில் வேப்பிலையை முன்கதவில் கட்டி வைப்பர். இதனால் தொற்று நோய்கள் பரவுவதையும் தடுப்பர்.

- **ஷைத்தானைக் கட்டல்**

பிறந்த குழந்தையின் காலில் இரும்புத்துண்டை, ஆணியை கட்டிவைப்பர். இதனால் பேயும், ஸைத்தானும் பிள்ளையை அணுகாது என்பது முன்னோர்களின் நம்பிக்கை.

- **கோடாரியை நிலத்தில் வைத்தல்**

பிள்ளை உறங்கும் சீலைத் தொட்டிலின் கீழே கோடாரியை போட்டு வைத்தால் ஷைத்தான் பார்வையற்று குழந்தை உறங்கும் என நம்புவர்.

- **பாலைக் கக்குதல்**

அஜீரணத்தால் பிள்ளை குடித்தபாலை கக்கினால் அடுப்பில் கத்தியை வைத்து பழுக்கச் காச்சி பின்னர் அதனை தண்ணீரில் போட்டு அந்தத் தண்ணீரை குடிக்கக்கொடுத்து முகத்தை கழுவினால் கண்ணூறு நீங்கி பிள்ளை பாலைக் குடிக்கும்.

- **நோய் வராமல் பாதுகாத்தல்**

பிள்ளையின் கைகளிலும், கழுத்திலும், காலிலும் அச்சிரமும், இசுமும் கட்டி தொங்க விடுதல், செம்புத்தகட்டில் எழுதிய இசுமும் மெழுகுச்சீலையில் எழுதிய அச்சிரமும் பிள்ளைக்கு காவல் என்பர். குறைந்தது 3 வயது வரை பிள்ளையின் உடம்பிலே தங்கியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகள் தற்காலத்தில் மருவி பிள்ளை கரு முதல் இறப்பு வரை வைத்தியர், வைத்திய நிபுணர்களிடமே சுகத்தை தேடுபவர்களாக உள்ளனர். அதனால் தற்போதைய பெண்கள் பிள்ளைகளுக்கு வீட்டில் வரும் அவசர நோய்களுக்கு கூட எந்த முதலுதவியும் தெரியாத கலாசார பெண்களாக மாறி வருகின்றனர்.

- **ஆங்கிலக் கலாசாரம்**

மருதமுனையில் மர்ஹூம் ஏ.எம்.ஏ. ஜெலீல் ஓய்வுபெற்ற அதிபருக்கு 2010.08.05 இல் செஸ்டோ ஸ்ரீலங்கா தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் மருதமுனையின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட மாபெரும் விழாவில் முன்னாள் வர்த்தக வாணிப அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வழங்கப்பட்ட விழாவில் பாண்டிருப்பைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. லோகிதராஜா அவர்கள் ஆற்றிய உரை மருதமுனையின் கலாசாரத்தினையும், ஆங்கிலக் கலாசாரத்தின் தோற்றத் தினையும் பின்னைய மருதமுனை சந்ததிகள் அறிந்து கற்க நல்ல பாடமாகும். அவர் தனது உரையில், "மொழியாலும் கல்வியாலும் பொருளாதார முயற்சி களாலும் கலாசார பண்புகளாலும் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றினைந்து வாழ்ந்த காலத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் நாங்கள். பாண்டிருப்பு மக்களும், மருதமுனை ஊராரும் இணைந்து உறவுமுறை சொல்லி வாழ்ந்ததை நாமறி வோம். இந்த உறவுகள் விலகிச்சென்றமையை இன்று நாம் எல்லோரும் அறிந்திருக்கின்றோம்.

மருதமுனை வரலாறு எழுதிய புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் தமிழைப் படிப்பது "ஹறாம்" என்ற மனப்பான்மையோடு தமது சிறுவயதில் பெரியவர்கள் இருந்தனர் என்று எழுதியுள்ளார். பின் ஆங்கிலத்தை 'சைத்தானின்' மொழி என்றும் கருதியிருந்த காலத்தில்தான் கல்முனை லீஸ் உயர்தரப் பாட சாலையில் ஆங்கில மொழி மூலம் கற்றவர் மர்ஹூம் ஏ.எம்.ஏ. ஜெலீல் அதிபர். பின்னர் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் ஆங்கில மொழியில் படித்துத் தேறி ஆங்கில ஆசிரியரானார். அந்தக் காலத்தில் வசதி உள்ளவர்களே ஆங்கிலம் படிப்பர்.

1950 இல் இங்கிலீஸ் அபூபக்கருக்குப் பின் ஜனாப் ஏ.எம்.ஏ. ஜெலீல் அவர்கள் இவ்வூரில் ஆங்கிலம் கற்று ஆசிரியரானார். இவருக்குப் பின் நளீம் சேர், ஏ.ஆர்.ஏ. அஸீஸ் சேர், கே.எல்.ஏ. வாஹிட், எஸ்.எம்.எம். பளீல் ஆகியோர் ஆங்கில மொழி மூலம் படித்தவர்களாகும்.

அந்த நாட்களில் ஆங்கிலம் கற்றவர்களுக்கு இருந்த சமூகப் பொறுப்புக்களும் ஊர் கடமைகளும் அனேகம். பாடசாலையில் பல பொறுப்புக்களும் அதிகம். அதனால் மருதமுனையின் புதிய கலாசார அம்சங்களை தோற்றுவிப்பதிலும் இவர்களது பங்கு அளப்பெரியது. வீடுகளில் ஆங்கிலக் கடிதம் வாசிக்க, கடிதம் எழுத அமைச்சர் அலுவலகத்தில் மக்கள் காத்திருப்பது போன்று ஆங்கிலம் கற்றவர்களின் வீட்டில் காத்திருப்பர். பாடசாலைகளில் காரியாலயக் கடிதங் களை வாசித்து பதில் எழுதுதல், விளையாட்டுப் போட்டிகள், மன்றங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சங்கக் கூட்டங்கள், சுற்றுலாக்கள், கலை விழாக்கள் அனைத்திலும் ஆங்கில ஆசிரியர்களுக்கு பங்கிருந்தது. கற்பித்தல் பணியோடு மேற்கூறிய அனைத்தும் இவர்களோடு சார்ந்திருந்தது. இன்றும் இச்சமூகப்பொறுப்பு தாங்கும் கலாசாரம் பொறுப்புள்ள ஆங்கில ஆசிரியர்களையே மையப்படுத்தியதாகவே மருதமுனையில் உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

- **கல்விச் சமூகமும் கல்விக் கலாசாரமும்**

மருதமுனை மக்களின் இருப்பிடம் புவியியல் ரீதியில் கடலையும் வயலையும் கொண்டிருந்த போதிலும் அவை இரண்டிலிருந்தும் தங்களது ஜீவனோபாயத்தை மேற்கொள்வது இதுவரை கடினமாக இருப்பதாலும் தங்களது ஜீவனோபாயத் துக்கான மாற்றுவழி கல்வியே தவிர வேறுவழி இல்லாமல் கல்வியிலே தங்களது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றனர். அம்பாரை மாவட்ட ஏனைய முஸ்லிம் பிரதேசங்களோடு ஒப்பிடும்போது மருதமுனை மாத்திரமே கடல் வளம், விவசாய வளம் அற்று இருப்பதால் அவர்களது ஜீவனோபாயம் கல்வியாக மாறியுள்ளது.

- **அறிவுப் பொருளாதாரமும் மருதமுனையும்**

அதனால் மருதமுனை மக்களில் 90% வீதமானோர்தான் கற்ற கல்வியினால் அரச, தனியார் துறைகளில் வேலை செய்து ஊதியம் பெறுகின்றனர். குறிப்பாக நிர்வாக அதிகாரிகள் (SLAS), நிர்வாக கல்வி அதிகாரிகள் (SLEAS), அமைச்சின் செயலாளர்கள், வைத்தியர்கள், வைத்திய நிபுனர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், துறைசார்ந்த பட்டதாரிகள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், விரிவுரை யாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள் எனப் பலதரப்பட்ட துறையினரை உற்பத்தி செய்யும் அறிவு நகரமாக மருதமுனை பெயர் பெற்றுள்ளது.

நாட்டில் உருவெடுத்துள்ள பலதரப்பட்ட இனப்பிரச்சினைகளுள் முஸ்லிம்களது பொருளாதாரம் அழிக்கப்பட்டு வரும் இச்சூழலில் மருதமுனை மக்களைப் போன்று ஏனைய முஸ்லிம்களும் தங்களது அழிக்க முடியாத பொருளாதார மாக எதிர்காலத்தில் கல்வி அமையவேண்டும் என கல்விமான்கள் பேசியும், எழுதியும் வருவது குறிப்பிடத்தக்கது. இது பற்றி மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் பின்வருமாறு கூறினார், "இனப்பிரச்சினை காலத்திலும் மருதமுனை மக்கள் சமாதான விரும்பிகளாக இருந்து தங்கள் கல்வியை முன்னேற்றினர்".

- **பிரத்தியேக கல்விக் கலாசாரம் (ரியூசன் கலாசாரம்)**

இக்கல்விப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் மருதமுனை பாட சாலைகளில் கடந்த 10 வருடங்களாக இலங்கையின் பல ஊர்களிலும் இருந்து முஸ்லிம் மாணவ, மாணவிகள் ஒவ்வொரு வருடமும் அனுமதி பெற்று கற்று வருகின்றனர். பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழக கல்வி வரையான பிரபல்யமான வகுப்புக்கள் மாலை வேளைகளிலும் சனி, ஞாயிறு தினங்களில் முழுநேரமும் இடம் பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அதற்கேற்ப புகழ்பெற்ற பாட ஆசிரியர்களும் இக்கிராமத்தில் பிறந்துள்ளமை இக்கிரா மத்துக்கு கிடைத்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பிரசாதமாகும். இவ்வகையில் விஞ்ஞானத்துறையில் பைலுல் ஆசிரியர், உவைஸ் ஆசிரியர், ரீ.எல். கலீல், தமீம், அக்பர் நிஜாம், ஆங்கிலத் துறையில் எஸ்.எல். அஜமல்கான், உபைதுல்லா, ஏ.ஆர்.ஏ. அஸீஸ், ஏ. அன்வர், ஏ.ஆர்.ஏ. ஹமீட், வர்த்தக கலைத்துறையில் சபருள்ளா, லுத்பி, சபீல், எம்.எஸ்.எம். ஜெலீல், கசீப், ஹில்மி, அபூதராப் (5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை) என்பவர்களோடு இன்னும் பல துறைசார் நிபுணத்துவமான ஆசிரியர்கள் ஆண்டு-01 முதல் உயர்தரம் வரையிலான கற்கைகளுக்கு உள்ளனர். மேலும் கலைத்துறை வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு ஏ.எம். நஜீம், ரீ.எல்.எம். அமினுதீன், ஏ. ஜே.எல். வஸீல், சீ.எம். தில்சாத் ஆகியோர் இம்மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான வெளிவாரி பட்டதாரி மாணவர்களை மருதமுனையிலிருந்து உருவாக்கிய மையையும் கூறலாம். இதற்காக மருதமுனையில் வெளிவாரிப்பட்டப்படிப்பு நிலையம் ஒன்றும் உள்ளது. இன்றுவரை பலநூற்றுக்கணக்கான உள்ளூர், வெளியூர் மாணவர்கள் கற்று வருகின்றனர். அதனால் அம்பாரை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங் களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மருதமுனை யிலிருந்து கணிசமான ஆசிரியர்கள் நியமனம் பெற்றுச் செல்கின்றனர். அதனால் மருதமுனை ஆசிரியர்கள் "ஆசிரிய இடமாற்றக் கொள்கையில்" அதிகம் உள்வாங்கப்படுவதையும் அவதானிக்கலாம். 2013 புள்ளிவிபரத்தின்படி மருதமுனை ஆசிரியர்களின் எண்ணிக்கை சுமார் 600 ஐயும் தாண்டியுள்ளது.

மேலும் மருதமுனையில் ஒவ்வொரு வீதிக்கொரு ரியூசன் சென்ரர்கள், பாலர் பாடசாலைகள் பல ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். அதனால் மாணவர்கள் ஆண்டு -01 தொடக்கம் உயர்தரம் வரை சனி, ஞாயிறு தினங்களிலும் வீட்டிலிருந்து ஓய்வுபெற முடியாதளவு கற்றலிலே ஈடுபடுவர். வீட்டிலிருக்கும் தாய்மாரும் தொடர்ச்சியாக பிள்ளைகளின் கற்றலை மேற்பார்வை செய்பவர்களாக இருப்பதால் அவர்களும் முறையில் ஆசிரியர்களாக கடமை புரிகின்றனர் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். மொத்தத்தில் மருத முனையின் வெளிப்படையான கலாசாரங்களில் அதிகம் காணக்கூடியது ரியூசன் கலாசாரம். இதனை காலை ஆறு மணி தொடக்கம் மாலை ஆறு மணிவரை வெளிப்படையாகப் பார்க்கலாம். இன்னும் மெருகூட்டிச் சென்னால் சனி, ஞாயிறு தினங்களில் மருதமுனையின் உள் வீதிகள் ரியூசன் சந்தைபோல் காட்சி தரும். 5ம் தர மாணவர்கள் இரவு வேளைகளிலும் ரியூசன் சென்று இரவு 9.00 மணிக்கு வீடு திரும்புவர். தற்போது ஆங்கில, தகவல் தொழில்நுட்ப கலாசாரம் அதி தீவிரமாக மருதமுனையில் பரவி வருகிறது.

முடிவுரை

மருதமுனையின் கலாசாரம் பின்வரும் அம்சங்களில் இருந்து கிடைக்கப் பெற்றதாகும் அல்லது இதன் கூட்டுக்கலவைகும். தமிழர் கலாசாரம், முக்குவ குல கலாசாரம், சீர்பாதகுல கலாசாரம், அரேபியர் கலாசாரம், பட்டாணி அரேபியர் கலாசாரம், ஜாவாநாட்டு கலாசாரம் / மலாயா கலாசாரம், போர்த்துக்கேசர் கலாசாரம், ஒல்லாந்தர் கலாசாரம், பிரித்தானியர் / ஆங்கிலேயர் கலாசாரம், தென்னிந்திய கலாசாரம், மலையாளத்தினரின் கலாசாரம், சிங்கள இன கலாசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொருள் சார்ந்த, பொருள்சாரா கலாசாரங்களையே நாம் இன்றுவரை மருதமுனையின் சமய, சமூக, பொருளாதார, கல்விக் கலாசாரமாக பின்பற்றி வருகின்றோம். இவற்றுள் இருந்து பெறப்பட்ட அனேக சடங்குகளும் சம்பிரதாயங்களும் மருதமுனைக் கலாசாரத்தில் மருதமுனை தௌஹீத் ஜமாஅத் எழுச்சி காரணமாக கலாசாரங்களில் அதிக சடங்குகளும் சம்பிரதாயங்களும் ஷிர்க் என்ற பெயரில் நிறுத்தப்பட்டு விட்டது.

எனவே பல்லின கலாசார நாட்டில் வாழும் நாம் ஒவ்வொரு இன மக்களினதும் கலாசரம்களை எம்முள்வரும் கலாசாரம்களை ஏற்பதற்கும், மறுப்பதற்கும் எனது மனங்களை பண்படுத்த வேண்டும். அப்போதுதான் எமது இருப்பு சமய வரையறைக்குள்ளான கலாசாரத்துடன் ஏற்படுத்த முடியும். இதனடிப்படையில் மருதமுனையின் பழமையான கலாசாரம், புதிய கலாசாரம்களும் எம்மில் முன்னேற்றத்தையும் பலவீனங்களையும் ஏற்படுத்தியுள்ளது. என்பதை அறிய மருதமுனையின் கலாசாரம் பற்றிய கற்கை உதவுகிறது. எம்முள் இருந்த பல பழைய கலாசாரம்கள் எம்மை ஒற்றுமைப்படுத்தவும், வேற்றுமைப்படுத்தவும் மனதில் அமைதியைத்தரவும், ஆன்மீகத்தை உயர்த்திடவும், பல்வேறு சமூக நடவடிக்கைகளை மனம்விரும்பி செய்வதற்கும் எம்மை ஊக்குவித்தது என்பதை மறுப்பதற்கில்லை. அதேவேளை இஸ்லாமிய மார்க்கத்துக்கு முரணாக இருந்த கலாசாரத்தை நீக்கி தூய்மையான இஸ்லாமிய கலாசாரத்தை கண்டறியவும், இன்றைய நவீன உலகத்தில் மனிதனாக வாழ்வதற்கு தேவையான நவீன தொழில் நுட்ப கலாசாரத்தினை நோக்கி செல்லவும் இக்கலாசார சிந்தனைகள் உதவி நிற்கின்றது எனலாம்.

இவற்றின் விளைவாக இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் பாரிய கலாசார மனப் பாங்கு மாற்றத்திற்கு உள்ளாக வேண்டிய அவசர தேவை ஏற்படித்தியுள்ளது. அது எதுவெனில் இலங்கை முஸ்லிம்கள், முஸ்லிம்களாக இருப்பதோடு "இலங்கை முஸ்லிம்கள்" என்ற மனப்பாங்கோடு பன்மை சமுக கலாசாரத்துடன் வாழந்து தமது கலாசாரத்தையும் இருப்பினையும் பாதுகாக்க முன்வருதல் வேண்டும். அதுவே அறிமுக உரையில் கூறிய தற்கால கலாசார பிரச்சினைக்கான தீர்வாகக் கொள்ளப்படுவதோடு இதனை இலங்கையில் முஸ்லிம்கள் வாழும் மாதிரி நகரமான மருதமுனையிலிருந்து ஆரம்பிப்பதே காலத்தின் தேவையாகும். இதனை அறிவுப் பொருளாதாரம் கொண்ட மருதமுனை மக்களால் செய்து முடிக்க இயலும் என்பது நூலாசிரியரின் எண்ணமுமாகும்.

குறிப்பு : இக்கட்டுரை ஆ.மு. ஷரிபுத்தீனின் "மருதமுனை வரலாறு", ஏ.எச். மஜீதின் "எனது கிராமத்தைத் தேடுகிறேன்" எனும் நூலில் பேசப்பட்ட மருதமுனை கலாசார தொடர்ச்சியாக கொள்ளப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை நூல்கள்

01. ஆ.மு. ஷரிபுத்தீன் (2009) மருதமுனையின் வரலாறு
அன்னை வெளியீட்டகம், மருதமுனை.

02. மருதமுனை மஜீத் (2005) எனது கிராமத்தை தேடுகிறேன்
மருதமுனை வாசகர் வட்டம்,
மருதமுனை.

03. எஸ்.எச்.எம். ஜெமீல் (1997) அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள்
முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள்
திணைக்களம் - இலங்கை.

04. றவூப் ஸெய்ன் (2012) இலங்கை முஸ்லிம்களின் வரலாறு,
இப்னு கல்தூன் சமூக விஞ்ஞானத்
துக்கான ஆய்வகம். திஹாரி.

05. ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம் (2005) ஏறாவூர் வரலாறு
ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்,
ஏறாவூர்.

06. எம்.எம். நௌபல் (2011) மருதமுனையின் வரலாறு -
ஆள்சார் கண்ணோட்டம்
ஆயிஷா வெளியீட்டகம், மருதமுனை.

07. Arasaratnam (1958) Ducth Power in Ceylon. 1658 - 1687

08. Ramanadan P. (1888) The Ethnology of Moors of Ceylon,
A research Essay Published in J.R.A.S

09. Davaraj L. (1994) The Muslim of Sri Lanka
The thousand years of ethnic harmony,
The Lanka Islamic Foundation.

10. W.I. Siriweera A Study of Economic History of
Pre-modern. Sri Lanka - P166

11. Lorna Dewaraja (1994) The Muslim of Sri Lanka Ethinic Harmony
(900 - 1915), Islamic Foundation, Colombo.

12. Hussain Miya (B.A) (1980) The Regiment People
A Study of Malay's Ceylon Rifle Regiment.
(1727 - 1823) Unpublished P.HD Thesis
University of Peradenya (Page 53 -54)

13. G.K. Pippet (1938) A History of the Ceylon Police
Vol -01 (Times of Ceylon)

14. S.H.M. Jameel & Asiff Hussein (2011) The Muslim Heritage of Eastern Sri Lanka
Muslim Women's Research and Action Forum,
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழித் தகவல் தந்தோர் :

01. எஸ். சுபராஜ் (2014) — விரிவுரையாளர், இந்து நாகரீகத் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

02. கலாநிதி அனுசியா (2014) — முதுநிலை விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

03. அசனார் லெவ்வை றகுமத்தும்மா (2014) மக்பூலியா வீதி, மருதமுனை. (வயது - 75)

04. ஏ. அப்துர்ரஹ்மான் (2014) — நூலக வீதி, மருதமுனை. (வயது - 83) பிறப்பு - 1931

05. எஸ்.எம். ஹாறூனா (2014) — ஸம் ஸம் வீதி, மருதமுனை. பிறப்பு - 1945.08.25

06. ஏ.எம். இபாசத்துள்ளா (2014) — ஸம் ஸம் வீதி, மருதமுனை. (வயது - 50)

07. உ.நெ. றாவியத்தும்மா — மசூர்மௌலானா வீதி, மருதமுனை. (வயது - 102)

08. எஸ்.எம். றம்சான் (2014) — பழைய வைத்தியசாலை வீதி, மருதமுனை. (வயது - 67)

09. தி. பாஸ்கரன் (2014) — விவேகானந்த வீதி, பாண்டிருப்பு -01 (வயது - 73), பிறப்பு - 1941.12.28

10. வைரமுத்து சதாசிவம் (2014) — அரசடி அம்மன் கோயில் வீதி, பாண்டிருப்பு -01 (வயது - 80), பிறப்பு - 1935

11. இப்றாலெப்பை பக்கீர் தம்பி சுலைமாலெப்பை (2014) (வயது - 73) அல்-ஹம்றா வீதி, மருதமுனை.

12. ஏ.ஆர். அப்துர் ரஹ்மான் (2014) — மசூர்மௌலானா வீதி, மருதமுனை. (வயது - 65)

13. எஸ்.ஏ.ஆர்.எஸ்.எம். இஸ்மாயில் மௌலானா ஜாயா வீதி, மருதமுனை. (வயது -80)
14. எம்.எச். காதர் இப்றாஹிம் — நூலக வீதி, மருதமுனை. (வயது - 70)
15. எம்.ஏ.எம். மிஹ்ழார் — மசூர்மௌலானா வீதி, மருதமுனை (வயது - 37)
16. எம்.ஐ.எம். வலீத் — ஜாயா வீதி, மருதமுனை. (வயது - 35)
17. வை.கே. றகுமான் — பிரதான வீதி, மருதமுனை. (வயது - 55)
18. எஸ். சஜா அஹமட் — மரைக்கார் வீதி, மருதமுனை. (வயது - 32)

கல்வெட்டு

01. மஸ்ஜிதுல் கபீர்
02. அல்-மனார் மத்திய கல்லூரி
03. கமு/ பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம்
04. பழைய கிராமசபை கட்டிட கல்வெட்டு
05. மருதமுனை பொது நூலக கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் ஜெலீல் லபீறுல் வஸீல்

விரிவுரையாளர்

ஆங்கில ஆசிரியரும், சமூக சேவையாளருமாகிய அப்துல் ஜெலீல் அவர்களின் புதல்வன் லபீறுல் வஸீல் 1974-01-01ல் மருதமுனையில் பிறந்தார்.

தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியினை பாண்டிருப்பு அல்-மினன் வித்தியாலயம் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மற்றும் கமு/ பாத்திமாக் கல்லூரி ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்தார். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் விஷேட திறமைகளைப் பெற்று பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்குத் தெரிவானார். கலைப்பட்டதாரியான இவர் M.Phil., M.Ed., PGDE, Dip. in Eng. ஆகிய விஷேட தகைமைகளையும் பெற்றுள்ளார்.

மருதமுனையின் முதலாவது கல்வி முதுமானிப் பட்டம் பெற்ற வஸீல் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உதவி விரிவுரையாளராக 1999-01-01ல் நியமனம் பெற்று இன்று உளவியல் விரிவுரையாளராக பணிபுரிகிறார். மேலும் தேசிய கல்வி நிறுவகத்திலும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்கைகளுக்கான வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார்.

1. இஸ்லாமிய மற்றும் மேற்கத்தைய அரசியல் கருத்தியல் ஒப்பீடு.
2. இலங்கையில் இனக்கலவரம்
3. மருதமுனை வரலாற்றில் ஏ.எம்.ஏ. ஜெலீல்
4. கல்விசார் பிரச்சினைகள்

ஆகிய நான்கு ஆக்கங்களை நமக்குத் தந்திருக்கிறார்.

மருதமுனை ஸகாத் நிதிய உறுப்பினராகவும் அல்-ஹம்றா பாடசாலை SDC உறுப்பினராகவும் இருக்கும் இவர் வெளிவாரிப் பட்டதாரிகளை உருவாக்குவதில் கூடிய அக்கறை செலுத்தி வருகிறார்.

ஏ.எம்.ஏ. ஜெலீல் பவுண்டேசன் மூலம் பாடசாலை, பள்ளிவாசல்களுக்கு உதவி வரும் இவர் மருதமுனை செஸ்டோ அமைப்பின் பொதுச் செயலாளராகவிருந்து சமூக சேவைகள் புரிகிறார். கல்வி, சமூக சமயம் சார் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து தேவையான நிதியுதவிகள் ஆலோசனைகள் செய்துவரும் வஸீல் சிறந்த ஒரு வளவாளராவார்.

மீராமுகைதீன் எஸ். பர்வின் என்பவரைக் கரம்பற்றிய வஸீல் ஜே.பி. அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு இறைவரி திணைக்கள உத்தியோகத்தர்கள்

01.	ஏ.எல்.எம். முனாஸ்	ஓய்வுபெற்ற வரி மதிப்பாளர்
02.	எம்.ஐ.எம். முஸம்மில்	ஆணையாளர்
03.	எம்.என். அப்துல் காதர்	பிரதி ஆணையாளர்
04.	ஐ.எம். றூமில்	வரி மதிப்பாளர்
05.	எம்.ஜே.எம். நிஸார்	உதவி ஆணையாளர்
06.	ஐ.எம். உவைஸ்	உதவி ஆணையாளர்

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்

அல்-ஹாஜ். ஐ.எல்.எம். முனவ்வர் (ஓய்வுநிலை)
ஜனாப். ஏ.எம். பாறூக்
அல்-ஹாஜ். நியாஸ் எம். அப்பாஸ்
ஜனாப். எம். ஜமால்டீன்
ஜனாப். ஜே.எம். நிஸ்தார்
ஜனாப். எம்.எம்.எம். இத்ரீஸ்
ஜனாப். ஜே.எம். நிஜாமுத்தீன்
ஜனாப். ஐ.எம்.எம். இத்ரீஸ்
ஜனாப். ஐ.எல்.எச். அமீர் (வெளிநாடு)
ஜனாப். எம்.ஐ.எம். வலீத் (PHI) (ஆசியா பவுண்டேசன்)
ஜனாப். ஏ.எல். றிபாஸ் (PHI) LL.B
ஜனாப். எம்.எம். பைஸால்
ஜனாப். எம்.என்.எம். பைலான்

சமூர்த்தி உத்தியோகத்தர்கள்

01.	ஏ.ஆர்.எம். சாலிஹ்	SMHQ
02.	ஏ.சீ. அன்வர்	SMPM
03.	எஸ்.எஸ். பரீறா	SMMD
04.	எம்.எம்.எம். முபீன்	SM - Bank
05.	எம்.ஐ.எம். முஜீப்	AM - Bank
06.	ஏ.ஆர். பாஹிதா	SDO - Bank
07.	எம்.எஸ்.எல். மர்ழியா	SDO - Bank
08.	ஏ.ஆர். முஹர்ரமா	SDO - Bank
09.	எம்.எஸ்.ஏ. ஹலீம்	SDO - Bank
10.	எம்.எஸ்.எம். நஸீர்	SDO - Div. PMD 01
11.	பீ.எம். இஷாக்	SDO - Div. MM 01
12.	பீ.எம்.எம். இல்யாஸ்	SDO - Div. MM 02
13.	ஏ.பி.எம். நவாஸ்	SDO - Div. MM 03
14.	எம்.எஸ்.யூ. சபீனா	SDO - Div. MM 04
15.	ஏ. ஜனூபா	SDO - Div. MM 05
16.	எஸ். சைபுத்தீன்	SDO - Div. MM 06
17.	ஏ.எச். பஸீலா	SDO - Div. PNMD 01
18.	ஏ. கமால்தீன்	SDO - Div. PNMD 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைவாகு வடக்கு கிராமசபை பொது நூலகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

ஏ.எல்.எம்.ஏ. மஜீது (ஓய்வுபெற்ற நூலகர்)

1959ஆம் ஆண்டு மருதமுனை பிரதான வீதியில் மர்ஹூம் யூ.எல்.ஏ. சமது மௌலவி அவர்களுக்குச் சொந்தமான கடையறையொன்றில் பொதுநூல் நிலையம் என்ற பெயர்ப்பலகை இடப்பட்டிருந்ததை நம்மில் பலர் கண்டிருப்பர். இந்நிலையம் ஜனாப். வீ.எம். இஸ்மாயில் (மருதூர்க் கொத்தன்) தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு இதன் செயலாளராக ஜனாப். நயீம் ஷரிபுத்தீன் அதிபர் அவர்களும், மர்ஹூம். ஏ.சீ.எம். ஸாலிஹ் (P.M.) அவர்கள் பொருளாளராகவும், ஏ.எம். அபூபக்கர் ஆசிரியர், முன்னைநாள் பீடாதிபதி ஜனாப். ஏ.ஆர்.ஏ. அஸீஸ், ஜனாப். எம்.ஐ.எம். முஸ்லீம், ஜனாப். எஸ்.எம்.எம். பழில் அதிபர், ஈ.எம். றாஸீக் அதிபர், கே.எல்.ஏ. வாஹித் அதிபர், எஸ்.ஏ.எஸ். ஹஸன் மௌலானா அதிபர், பீ. மீராலெவ்வை அதிபர், எம்.எம். அபூபக்கர் அதிபர், எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா அதிபர், எஸ்.எம்.ஏ. மத்தீன் அதிபர், ஏ.எச்.எம். மஜீத் (கல்விப்பணிப்பாளர்), எம்.எல்.எம். கனி (கி.ச. தலைவர்) இவர்களை உள்ளடக்கிய நிர்வாக கமிட்டி வாலிபர் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் நூலகத்தை நடாத்தி வந்தது. நூலகப் பொறுப்பாளராக ஜனாப். ஏ.எம். முகைதீன் (G.S.) அவர்கள் கடமையாற்றி வந்தார்.

இக்கழகத்தின் சிறந்த பணி எமது கிராமத்தில் ஓர் வாசிகசாலையை உருவாக்கு வதற்கு வழிவகுத்தது எனக்கூறலாம். காலப்போக்கில் வாலிப முன்னேற்றக்கழக அங்கத்தவர்கள் சிலர் வெளியூருக்கு உத்தியோகம் பெற்றுக் சென்ற காரணத்தாலும் நூலகக்கட்டிட அறை கட்டட உரிமையாளருக்குத் தேவைப்பட்ட காரணத் தாலும் இந்நூலகத்தைத் தொடர்ந்து நடந்து முடியாது மூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை வாலிபர் முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்டது. இக்காலகட்டத்தில் பெரியகல்லாறு, துறைநீலாவணை, மருதமுனை, நீலாவணை, பாண்டிருப்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக கரைவாகு வடக்கு கிராமசபை செயல்பட்டு வந்தது. ஜனாப். மர்ஹூம். எஸ்.எம்.எஸ். அகமது மௌலானா கிராமசபைத் தலை வராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். கிராம சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஒரு பொது நூலகமும், விளையாட்டு மைதானமும், பொதுக்கிணறுகள், ஆயுள்வேத மருந்தகம் கிடைக்கவிருப்பதாகவும் பெரியகல்லாற்றில் அந்த பொது நூலகத்தை அமைக்க வேண்டுமென அப்பகுதி உறுப்பினர்கள் விரும்பு வதாகவும், மேலும் இந்நூலகத்தை மருதமுனையில் ஏன் அமைக்கக்கூடாது என்ற கருத்தை கிராமசபைத் தலைவர் பலரது கவனத்திற்கும் கொண்டு வந்தார். இது தொடர்பாக ஊரிலுள்ள புத்திஜீவிகள், கல்விமான்கள், துடிப்புள்ள இளைஞர்களை மருதமுனை தெற்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்போதைய அல்-ஹம்றாவில்) 11-12-1961 அன்று நடைபெற்ற கூட்டத்திற்கு அழைத்து ஓர் கட்டிடத்தை கட்டி இந்நூலகத்தை மருதமுனையில் அமைப்பதன் மூலம் எமது ஊரின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முடியும் என்ற கருத்தை கிராம சபைத் தலைவர் முன்வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கூட்டத்திற்குத் தற்காலிக தலைவராக கடமையாற்றிய புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன் வித்தியாதரிசகர் அவர்கள் தமது உரையில் இக்கிராம மக்களின் அறிவுத்தாகத்தை பூர்த்தியாக்கும் பொருட்டு இக்கிராம எல்லைக்குள் ஓர் பொதுநூலகத்தை அமைக்க விருப்பதை நினைத்து நான் பூரிப்படைகின்றேன் என்று கூறினார். இந்த நல்ல காரியத்தைச் செய்ய முன்வந்த கிராமசபைத் தலைவர் ஜனாப் எஸ்.எம்.எஸ். அகமது மௌலானா ஜே.பி. அவர்களுக்கு நாம் கடமைப்பட்டவர் களாகவும் மேலும் இந்நூலகம் நீண்ட காலம் வரை திறம்பட இயங்கி, அறிவுப் பணிபுரியும் என்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார். (ஆதாரம்: K.N.V.C. நூலகக்கோவை). இந்நூலகத்தை பராமரிக்க பொறுப்பாளராக ஜனாப். ஏ.எல்.எம்.ஏ. மஜீது அவர்களும் பத்துப்பேர் அடங்கிய நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. அங்கத்துவப் பணமாக ஒரு ரூபா (1/=)வும் மாதாந்தச் சந்தாவாக ஐம்பது சதம் (50) எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நூலகத்தை அவசரமாக திறக்க வேண்டியிருப்பதால் வாலிப முன்னேற்றக் கழகம் வைத்திருக்கும் புத்தகங்கள், தளபாடங்கள் அனைத்தையும் தருவார்களேயானால் அவற்றைப் பொறுப்பேற்று கூடிய விரைவில் நூலகத்தை திறக்கலாம் என்ற கருத்து கூட்டத்தில் தலைவரால் முன்வைக்கப்பட்டது. நாம் அன்பளிப்புச் செய்த புத்தகங்கள், தளபாடங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஈ.ஏ. றாசிக் ஆசிரியரின் வீட்டிலிருந்த 125 தமிழ்ப் புத்தகங்கள், 28 ஆங்கிலப் புத்தகங்கள், 2 வாங்குகள், 1 மேசை, 1 அலுமாரி, 1 பெயர்ப்பலகை, 1 தபால் பெட்டி, விளம்பரப்பலகை உட்பட மொத்தம் (506/-) ஐந்நூற்றி ஆறு ரூபா பெறுமதியான பொருட்கள் கிராம சபைத் தலைவரிடம் கையளிக்கப்பட்டன. நூலகம் அமைக்கப் பொருத்தமான இடம் பற்றி ஆராய்ந்த போது தலைவர் தமது சொந்தக் கட்டிடத்தில் ஓர் அறையை எவ்வித வாடகையும் இன்றித் தருவதற்கு முன்வந்தார். அதன்படி 07-04-1963 ஆம் திகதி தலைவர் அகமது மௌலானாவின் கட்டிடத்தில் நூலகம் திறக்கப்பட்டது. (தற்போதைய சொய்ஸ் பலஸ் அமைந்த இடத்தில்) இதற்கு வேண்டிய பத்திரிகைகளை பின்வருவோர் பெற்றுத்தர முன்வந்தார்கள்.

மர்ஹூம்களான ஈ. உதுமாலெவ்வை அதிபர் வீரகேசரி, ஏ.சீ.எம். சாலிஹ், (பீ.எம்.) டெய்லி நியூஸ் ஏ. அகமது லெவ்வை அதிபர் கலைமலர், ஏ. ஹூஸைன் டைலர் தினகரன், பீ.எம். மீராலெவ்வை அதிபர் குமுதம், கல்கண்டு, எஸ்.எம்.எம். பளீல் அதிபர் கலைக்கதிர், ஏ.எச்.எம். மஜீது அதிபர் கலைச்செல்வி, வீ.எம். இஸ்மாயில் அதிபர் தேனருவி, எஸ்.எம். முஸ்தபா மௌலானா தேசியமுரசு, எம்.எம். இப்றாகீம் அதிபர் கலைமகள், எச்.எம். அபூபக்கர் G.S. மாலைமணி, ஈ.எம். றாசிக் ஆசிரியர் நவயுக. மேற்படி பத்திரிகைகளை ஒவ்வொருவரது வீடுகளுக்கும் சென்று பெற்று வந்து நூலகத்தை நடைமுறைப்படுத்தி வரும வேளை நடைமுறைச் சிக்கல் ஏற்பட்டதால் நூலக அபிவிருத்திச் சபை 02-04-1963ஆம் திகதி நூலகக் கட்டிடத்தில் கூடியது. அக்கூட்டத்தில் புதிய செய லாளராக ஏ.எம். அபூபக்கர் ஆசிரியரும், உப செயலாளராக எஸ்.எம். பளீல் ஆசிரியரும் தெரிவுசெய்யப்பட்டார்கள். தலைவராக ஏ. அகமது லெவ்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் தெரிவானார். நூலகத்தை நடத்திச் செல்வதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்காக ஆராய்ந்த குழு பெரியநீலாவணை சாரதா படமாளி கையில் 10-04-1963ஆம் திகதி "காவேரியின் கணவன்" என்ற படக்காட்சியை நடத்தி அதன் மூலம் சிறிய வசூலைப்பெற்று பத்திரிக்கைகளுக்குச் சந்தா செலுத்தியது. கல்முனை சென்று பத்திரிகைகளைப் பெற்றுவர பைசிக்கல் வாடகைக்கு பெறுவதற்காக மட்டும் மாதம் ரூபா 10/- நூலக பொறுப்பாளராக கடமையாற்றிய ஏ.எல்.எம்.ஏ. மஜீதுக்கு கொடுக்கப்பட்டது.

இக்கால கட்டத்தில் மர்ஹூம் எஸ்.எம்.எஸ். அகமது மௌலானா அவர்கள் கிராம சபைத் தலைவர் பதவியிலிருந்து விலக ஜனாப் எஸ்.எல்.எம். புர்ஹான் ஜே.பி. கிராமசபைத் தலைவராக பதவியேற்றார். இதன் பிறகுதான் நூலகத்தில் சில வளர்ச்சி ஏற்பட்டதென்று கூறலாம். தற்போது நூலகம் நடைபெற்று வந்த கட்டிட அறை, கட்டிட சொந்தக்காரர் அகமது மௌலானாவுக்கு தேவைப்பட்டதால் நூலகத்தை இடமாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நூலக அபிவிருத்திச் சபையின் விடா முயற்சியின் பயனாக கிராமசபைத் தலைவரோடு தொடர்பு கொண்டு அவரின் அனுமதியைப் பெற்று சந்தைக்கட்டிடத்தின் ஒரு பகுதியில் நூலகம் செயற்பட்டு வந்தது. இதனைத் தொடர்ந்து கிராம சபை பொதுநூலகத்தைப் பொறுப்பேற்றது. இந்நூலகத்திற்கு தேவையான புத்தகங்கள், தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நூலக அங்கத்தவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதன் பின்னர் இரவல் கொடுக்கும் பகுதியும் இயங்க ஆரம்பித்தது. நூலக அலுவலராக கிராம சபை நாளாந்த சம்பள அடிப்படையில் ஏ.எல்.எம்.ஏ. மஜீத் அவர்களை நியமனம் செய்தது.

கரைவாகு வடக்கு கிராமசபை புதிய தலைவராக அல்-ஹாஜ். எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா முன்னாள் மூதவை உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார். இதனால் நூலகவளர்ச்சி மேலோங்கியது என்று சொல்லலாம். இதற்கு நிரந்தர கட்டிடம் கொடுக்கப்பட்டது. முன்னாள் உள்ளூராட்சி அமைச்சரும் ஜனாதிபதியுமான அதிமேதகு ஆர். ரணசிங்க பிரேமதாசா அவர்களை அழைத்து வந்து 1969ம் ஆண்டு புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போது அரசியல் செல்வாக்குள்ள பலர் தற்போது நூலகக் கட்டிடம் இருக்கும் நிலம் முழுவதையும் அத்துமீறிக் குடியேறி சுவீகரித்துக் கொண்டிருந்ததையும் மருதமுனை பொதுமக்கள் ஒன்றுதிரண்டு அவர்களை அப்புறப்படுத்தியமையும் எல்லோர் மனதிலும் ஞாபகம் இருக்கும். தலைவர் எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா தலைமையில் கிராம சபை அங்கத்தவர்களும் இளைஞர்களும் சேர்ந்து இந்த இடத்தை மீட்டெடுத்தார்கள். இதற்கு முன்னோடியாக மர்ஹூம்களான ஏ. சாஹூல் ஹமீது ஓடாவியார் அவர்களையும் ஜனாப். எஸ்.எல்.எம். சுல்தான் ஜே.பி. கிராம சபை உறுப்பினர் அவர்களையும் ஜனாப். ஐ. முகம்மதுத்தம்பி கிராம சபை உறுப்பினரையும் இந்த இடத்தில் ஞாபகப்படுத்துவது பொருத்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிழமைக்கிடையில் நூலக கட்டிட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு அம்பாரை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டான்போத் அவர்களால் நூலகக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின் 01-10-1966ல் ஏ.எல்.எம்.ஏ. மஜீத் அவர்கள் நிரந்தர நூலகராக நியமிக்கப்பட்டார்.

1997ல் நடைபெற்ற தேர்தல் மூலம் கல்முனைத் தொகுதியுடன் பாராளு மன்றப் பிரதிநிதியாக ஜனாப். ஏ.ஆர்.எம். மன்சூர் தெரிவுசெய்யப்பட்டார். பாராளுமன்ற பிரதிநிதியாகவும் முல்லை மாவட்ட அமைச்சராகவும் இருந்த ஜனாப். ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களை நூலக அபிவிருத்திச் சபையினர் அழைத்துவந்து நூலக குறைபாடுகளை எடுத்துக்கூறியபோது பன்முகப்படுத் தப்பட்ட வரவு செலவுத்திட்டதிலிருந்து ரூபா 20,000/- ஐ ஒதுக்கீடு செய்திருந்தார். அதனைக்கொண்டு நூலகத்திற்குத் தேவையான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 23.11.1978ல் ஏற்பட்ட சூறாவளி காரணமாக மேல்கூரை முற்றாக பாதிக்கப்பட்டு 25,000/- பெறுமதியான நூல்கள் மழையில் நனைந்து சேதமடைந்தன. அப்போது விசேட ஆணையாளராகக் கடமையாற்றிய பீடாதிபதி ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்களின் பெரும் முயற்சியால் மீண்டும் நூலகம் படிப்படியாகப் புனரமைப்புச் செய்யப்பட்டது. பொது மக்களின் கவனத்தையும் மாணவர்களின் கவனத்தையும் நூலகத்தின் பால் ஈர்க்கும் பொருட்டு பல கருத் தரங்குகள் நடாத்தப்பட்டன. பின்னர் அன்பளிப்புப் புத்தங்கள் பெறுவதற்காக கல்விமான்களுக்கும் தனவந்தர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டு பல நூல்கள் பெறப்பட்டு வாசகர்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டன. மேலும் இந்நூலகத்தில் உயர்தர மாணவர்களுக்கும் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கும் தேவையான பல புத்தகங்கள் பெறப்பபட்டு அதன் மூலம் மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்கு இந்நூலகம் பெரும் பங்காற்றியது எனவும் குறிப்பிடலாம்.

இதன் பிறகு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக ஜனாப். எம்.எச். காதர் இப்றாகீம் ஆசிரியர் அவர்கள் கரைவாகு வடக்குக் கிராம சபைக்கு நியமனம் பெற்றார். அதன் பிறகும் நூலகம் வளர்ச்சி கண்டது. இவருடைய காலத்தில் பொதுக்கிணறு, மல சல கூடம் போன்றன கட்டப்பட்டு, நூலகக் கட்டிடமும் விஸ்தரிப்புச் செய்யப்பட்டது. நூல்களும் கொள்வனவு செய்யப்பட்டன. இந்நிலையில் மருத்துவமனை அமைப்பதற்கு இடம் இல்லாதமையால் எமது ஊரில் சிலர் நூலகம் இருக்கும் இடத்தை மருத்துவ மனையாக்க திட்டம் தீட்டி செயல்பட்டார்கள். மேலும் சிலர் நூலகத்தை மக்கள் மண்டப மேல்மாடியில் அல்லது அல்-ஹம்றா பாடசாலை கட்டிடத்துக்கு கொண்டுசெல்ல வேண்டு மென முயற்சித்தார்கள்.

அந்த வேளை இம்முயற்சியை முறியடிப்பதற்கு அல்-ஹாஜ் எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா அவர்களும் அவருக்கு உதவியாக நூலகர் ஏ.எல்.எம்.ஏ. மஜீதும் பல எதிர்ப்புக்களைத் தெரிவித்ததுடன் துண்டுப்பிரசுரமும் இவர்களால் வெளியிட்டப்பட்டது. நூலகத்தை இடம் மாற்றுவதால் 20,000/- ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமதியான நூல்களும் தளபாடங்களும் அழிந்து போகும் என மக்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் மகப்பேற்று மருத்துவமனை அல்-ஹம்றா வித்தியாலயத்தின் ஓர் பகுதியில் அமையப்பெற்றது.

இச்சந்தர்பத்தில் கிராம சபைகள் அனைத்தும் பிரதேச அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டது. மாவட்ட சபை மட்டத்தில் நிர்வாகம் நடைபெற்றது. கல்முனை நகர சபையின் தலைவராக அல்-ஹாஜ் ஐ.ஏ. ஹமீது பொறியியலாளர் நியமனம் பெற்றார். மருதமுனை நூலகத்தின் குறைகளை ஆராய்ந்து அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொண்டார். நூலகத்துக்கு வேண்டிய புத்தகங்கள், தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அத்துடன் நூலகத்தை சுற்றி சுற்றுமதில் அமைக்கப்பட்டன. அழகிய சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டது. உசாத்துணை பகுதிக்காக கட்டிடம் விஸ்தரிக்கப்பட்டது. அத்துடன் சில மாற்றுநிலை ஊழியர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதன் பின்னர் சிறுவர் பகுதி, வாசிப்புப் பகுதி, உசாத்துணைப் பகுதி, இரவல் வழங்கும் பகுதி சரளமாக செயல்படத் தொடங்கியது.

கரைவாகு வடக்கு கிராம சபைப் பொதுநூலகம் அம்பாரை மாவட்டத்தில் சிறந்த நூலகமென 1987ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டு நூலகக் கட்டடம் படம்பிடிக்கப்பட்டு கொழும்பிலுள்ள உள்ளூராட்சி பயிற்சி நிலையத்தில் வைக்கப்படும் அளவுக்கு நூலகர் ஒருவரின் முயற்சியிருந்தது. எனினும் நூலகம் எவ்வளவுதான்சிறப்பாக இயங்கி வந்தாலும்இடவசதி பற்றாக்குறையாகவே இருந்து வந்தது. இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கமாக முஸ்லிம் காங்கிரஸின் மூத்த துணைத்தலைவர் அல்-ஹாஜ். யூ.எம். ஹனிபா அவர்களை கண்டு கதைத்த போது, நூலக நிர்வாக சபையின் கோரிக்கையை ஏற்றுக்ககொண்டு புதிய மாடிக் கட்டட நூலகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பதற்காக நல்ல மனதோடு பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஓர் பகுதியும் அன்னை பேரியல் அஷ்ரஃப் வீடமைப்பு அதிகார சபையின் அமைச்சர் அவர்களின் நிதியையும் கொண்டு மாடிக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர் தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுள்ளா நீர்வழங்கல் வடிகால்கள் அமைச்சர் அவர்களும் நிதி வழங்கி ஓரளவு பூரணப்படுத்தப்பட்டு புதிய மாடிக்கட்டிடத்தில் நூலகம் இயங்கி வருவது யாவரும் அறிந்ததே. எனவே மருதமுனையின் தற்போதைய நூலகம் இவ்வளவு போராட்டங்களுக்கு மத்தியில் கட்டி எழுப்பப்பட்ட ஒன்று என்று எல்லோரும் உணர்ந்து இதன் வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஸ்லெப்பை மரைக்கார் அப்துல் மஜீத், ஓய்வுபெற்ற நூலகர்

1942-04-05ம் திகதி மருதமுனையில் பிறந்தவர். க.பொ.த. சாதாரண தரம் வரை அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்விகற்ற இவர், நூலக விஞ்ஞானம் என்ற துறையிலும் கற்றுத் தேர்ந்தார். 01-10-1966ல் நூலகராக நியமனம் பெற்ற இவர் மருதமுனை, கல்முனை ஆகிய நூலகங்களை மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் வைத்திருந்தார். தற்போது ஓய்வு நிலையிலுள்ள இவர் ஓய்வுபெறும் போது நூலகர் தரம் இரண்டை அடைந்திருந்தார்.

ஆரம்பத்தில் பொது நூலகம் ஒன்றினை மருதமுனையில் அமைவதற்கு முன்னோடியாகவிருந்து பாடுபட்டவர். பெரியநீலாவணை கஸ்ஸாலி விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவிருந்து அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். சிறந்ததோர் கரம்பந்தாட்ட வீரராகவிருந்த இவர் நாடகம், கலை, இலக்கியம், உதைபந்தாட்டம் போன்றவற்றிலும் ஈடுபாடு காட்டினார். ஊரின் சமாதான சபை அங்கத்தவராகவிருந்து ஊரினதும் பிரதேசத்தினதும் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையிலும், மத்தியஸ்த சபையிலும் பங்குகொண்டார். மஸ்ஜிதுல் கபீர் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து அளப்பெரிய சேவைகள் புரிந்தார். இவர் மஸ்ஜிதுல் கபீரின் தலைவராகவிருந்த காலப்பகுதியிலேயே தற்போது அமைக்கப்படும் புதிய பள்ளிவாயலை புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மிருக வைத்தியர் எம்.எம். சாலி அவர்களின் புதல்வி ஜலீமா அவர்களைக் கரம்பற்றிய இவருக்கு ஆறு பிள்ளைகள் இருக்கின்றனர். சமாதான நீதவனாகிய இவர் தேசகீர்த்தி விருதினையும் பெற்றுள்ளார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானப் பாதையில் மருதமுனை

முன்னாள் அதிபரும், விவாகப் பதிவாளருமான
அல்-ஹாஜ். எஸ்.எம். பீர்முஹம்மத் (அதிபர்) ஜே.பி.
முன்னாள் செயலாளர், சமாதான சபை, மருதமுனை.

நுழை வழி

மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே முரண்பாடுகளும் தோற்றம் பெற்றுவிட்டமையை வரலாறுகள் எடுத்தியம்புகின்றன. இவை தனி மனித முரண்பாடுகளில் ஆரம்பித்து குடும்பம், சமூகம், இனம், மதம், மொழி, நிறம், தேசம் எனப் பல்வேறுபட்ட வகைகளில் விரிந்து வியாபித்துச் சென்று கொண்டிருக்கின்றன. அதன் கொடுமுடியாக ஒரு தரப்பை இன்னொரு தரப்பு அடக்கியாளவும் ஆதிக்கம் செலுத்தவும் முனைந்து நிற்கின்றன.

இன்று மனிதனின் அறிவு, அனுபவம், ஆராய்ச்சி, ஆற்றல் அனைத்துமே மானிட இனத்தின் அழிவுக்கே வழிசமைத்துக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். மன்பதைச் சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என எதை நோக்கினாலும் கொலை, கொள்ளை, பாலியம் துஷ்பிரயோகம் தொடர்பான செய்திகளே நிறைந்து வழிகின்றன. எங்கு திரும்பினாலும் இரத்தக்களரி, வயது, பால் வேறுபாட்டைக் கடந்த ஆயுத சன்னத்தம். எவர் அதிகூடிய அழிவை ஏற்படுத்துகின்றாரோ அவரே இன்றைய வீரபுருஷன் (Hero).

இத்தனைக்கிடையிலும் சமாதானத் தேடலுக்கான முயற்சிகளும் மனிதநேய விருத்தியைக் கருத்திற்கொண்ட எத்தனங்களும் பல கோணங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் மறுப்பதற்கில்லை.

மக்கள் குழுக்கள் தம்மிடையே ஒன்றித்து, ஏதேனும் குறிக்கோளினடிப்படையில் செயற்படும் பின்புலத்திலேயே சமாதானம், சகவாழ்வு போன்ற உயர் விழுமியங்கள் துளிர்க்க ஆரம்பிக்கின்றன. அவ்வழிமுறையையொட்டி மருதமுனையிலும் பல அமைப்புக்கள் காலத்துக்குக் காலம் தோன்றித் தடம்பதித்து வந்துள்ளன. அவை சமயாபிவிருத்திச் சபைகள், சமூகநலச் சங்கங்கள், கலை, கலாசார ஒன்றியங்கள், விளையாட்டுக் கழகங்கள் எனப் பலப்பலவாகும். அரும்பெரும் சேவைகள் புரிந்து பிரபலம் பெற்றிருந்த பல அமைப்புக்கள் காலச் சுழற்சியில் கரைந்து போய் விட்டாலும் மேலும் பல நிறுவனங்கள் நீடித்து நிலைத்து நின்று பணியாற்றி வருகின்றமை கண்கூடு.

இத்தகைய நிறுவனங்களுள், குறிப்பிடத்தக்கதொரு காலப்பகுதியில் காத்திரமான சேவையை வழங்கி, "இணக்க சபை" எனும் பெயரில் தடம்பதித்த மூத்ததும் முன்னோடியானதுமான சமாதான அமைப்பை ஈண்டு நினைவுகூர்தல் நமது தார்மீகக் கடமையாகும்.

1970களின் முற்கூற்றில் அன்றை அரசாங்கத்தின் அனுசரணையில் பிரதேசங்கள் தோறும் இணக்க சபைகள் உருவாக்கப்பட்டன. அவ்வேளை இன, மத முரண்பாடுகளோ முறுகல்களோ சிறிதளவும் காணப்படவில்லை. இதனால் கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் குடும்பம் மற்றும் காணி எல்லைத் தகராறுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றுக்கு இச்சபையினால் தீர்வுகள், சமரசங்கள் காணப்பட்டன. இதன் தீர்ப்புகள் ஏற்கப்படாதவிடத்து முறைப்பாடுகள் சட்ட நீதிமன்றுகளுக்கு முன் நகர்த்தப்பட்டன. எவ்வாறாயினும் ஊரில் சமாதானம். சகவாழ்வு நிலவுவதற்கு இச்சபை கணிசமான பங்களிப்பை வழங்கியமையை மறக்கவியலாது.

இச்சபையின் தலைவராக மர்ஹூம் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் ஹாஜியார் ஜே.பி. அவர்கள் பணியாற்ற பத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் சபையில் நியமனம் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் அல்லது பெரும்பாலானோர் அரசாங்கக்கட்சி ஆதரவாளர்களாக இருந்த அதேவேளை தகுதிவாய்ந்த பலர் உறுப்பினர்களாக உள்வாங்கப்படாமை அவ்வேளை விமர்சனத்துக்குரியதா யிருந்தது. இச்சபை நாட்டின் ஆட்சி மாற்றத்தையடுத்துச் செயலிழந்து போயிற்று. ஆயினும் இன்றைய தலைமுறையினர் அத்தகைய நிறுவனங்கள் பற்றி அறிந்துகொள்ளவோ மீட்டுப்பார்க்கவோ எழுத்துப் படிமங்கள் எவையும் ஆவணப் படுத்தப்படாமை பெருங்குறையாகும். அதனை நிறைவு செய்வதற்கான கருத்துப் பரிமாறல் அவ்வப்போது இடம்பெற்றாலும் அதற்குச் செயல்வடிவம் கொடுக்கும் எத்தனங்கள் முன்னெடுக்கப்பட்டதாயில்லை. எனவே அதனைத் தூண்டி விடுவதற்குக் கால்கோளிடும் வகையில் மருதமுனையில் பிரபல்யம் பெற்றுத் திகழும் சமாதான சபை பற்றிய ஆக்கமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்னும் எண்ணம் என்னுள் முகிழ்த்தது. இச்சந்தாப்பத்தில் 'மாண்புறும் மருதமுனை' எனும் மகுடத்தில் மருதமுனையின் வரலாற்றுத் தகவல்களை நூலுருவில் படைக்க எண்ணியிருப்பதாகவும், அதற்கு சமாதானசார் ஆக்க மொன்றை தருமாறும் நூலின் தொகுப்பாளர் அல்-ஹாஜ் ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. கோரியிருந்தார். எனவே மருதமுனை சமாதான அமைப்புக்களில் 20 வருடங்கள் செயலாளராகப் பணியாற்றி யவன் என்ற வகையில் உடனடியாகச் செயலில் இறங்கினேன்.

இவ்விடயத்தில் நான் பெற்ற அனுபவத்தின் பேரிலும் கைவசமுள்ள சபை ஆவணங்கள் நாட்குறிப்பேடுகளின் அடிப்படையிலும் ஞாபகத்தில் உள்ள சம்பவங்களின் நிழலிலும் சேகரமாகிய தகவல்களை ஆதாரங்களாகக் கொண்டு இதனையாக்க முனைந்துள்ளேன்.

"சமாதானப் பாதையில் மருதமுனை" எனத் திலகமிட்ட இவ்வாக்கத்தை உருவாக்க ஆலோசனை வழங்கியவர்களுக்கும், தமது நினைவுகளில் நின்ற பல தகவல்களை என்னுடன் பரிமாறிக் கொண்டவர்களுக்கும் ஆழ்ந்த நன்றிகளைச் சமர்ப்பித்துக் கொள்கின்றேன். விசேடமாக எல்லா வகையிலும் தனது பூரண ஒத்துழைப்பினை வழங்கி வருபவரும், மருதமுனைச் சமாதான சபையின் ஸ்தாபகத் தலைவரும், சபைக் காலத்தின் பெரும்பகுதியில் தலைமைப் பொறுப்பை ஏற்று வழிநடாத்தியவரும், சபையின் செலவினங்களில் கணிசமான தொகையைத் தாமே ஏற்றிருந்தவருமான அல்ஹாஜ் எம்.எஸ். ஐயூப் ஜே.பி. அவர்களுக்கு சபையின் சார்பிலான எனது கடப்பாட்டினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் நான் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுபட்டிருந்த ஓரிரு வருடங்கள் அப்பதவியை பொறுப்பேற்ற எஸ்.எம்.ஏ. கையூம் (பிரதம முகாமைத்துவ உதவியாளர்) அவர்களையும் இங்கு நினைவு கூர்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்கம் தப்பினால் மருதமுனை" என்பது இக்கிராமத்தைப் பற்றி அறிந்தவர்கள் மத்தியில் பண்டுதொட்டு வழங்கி வரும் பிரபல்யம் பெற்றதொரு சுலோகமாகும். இதற்குக் காரணம், மருதமுனையின் பூர்வீகம் தொடக்கம், அது சமய அனுஷ்டானங்கள் சமூக விழுமியங்கள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள், சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகள் என்பவற்றில் முன்மாதிரியாகத் திகழ்ந்தமையாகும்.

கடந்ததொரு சகாப்தத்துக்கு முந்திய காலம் வரை வன்முறைகள் சார்ந்த முறைப்பாடுகளோ (Criminal Complains) வழக்குகளோ மருதமுனையிலிருந்து தாக்கல் செய்யப்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதுபற்றி அவ்வப்போது கல்முனையில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகளாலும் நீதிபதிகளாலும் வியப்பும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளமை இக்கிராமத்தின் உயர் பண்புக்கும் நற்பெயருக்கும் கட்டியம் கூறுவனவாய் அமைந்துள்ளன. பின்வந்த காலங்களில் ஓரிரு சம்பவங்கள் விதிவிலக்காக நடைபெற்றமையையும் மறுப்பதற் கில்லை. ஆயினும் பிற கிராமங்களுடன் ஒப்பிடுகையில் இதன் விகிதாசாரம் குறிப்பிடத்தக்கதாக இல்லையென்றே கூறலாம். இந்நிலை தொடர்ந்து பேணப் பட்டு வந்ததற்கு இங்குள்ள பள்ளிவாசல்களும் சமாதான சபையும் சமாதான விரும்பி களான பொதுமக்களுமே காரணகர்த்தாக்கள் என்பதில் மறுவார்த்தைக்கு இடம் கிடையாது.

சமாதான சபையின் தோற்றமும் மாற்றமும்

1980களின் ஆரம்பம் வரை ஓரளவு சகஜ நிலை நிலவிய இந்நாட்டில் 1982இல் அரும்புவிட்ட இன மோதல்கள் 1983இல் வன்முறைச் சம்பவங்களாகத் தளிர்விட்டு அவ்வாண்டு ஆடிக் கலவரத்துடன் விஸ்வரூபம் எடுக்கலாயிற்று. வடபுலத்தில் வெளிக்கிளம்பிய வன்செயலின் தீநாக்கு உடனடியாக வெலிக்கடைச் சிறைச்சாலையைப் பற்றிப் பிடித்து தலைநகரமெங்கும் பெருநெருப்பாகப் பற்றி எரியலாயிற்று. அதன் சுவாலையும் காங்கையும் நாடளாவிய ரீதியில் பரவத் தொடங்கின. இதனால் சகல பிரதேச மக்களினதும் இயல்பு வாழ்க்கை பாதிப்புக் குள்ளாயிற்று. இதன் விளைவுகள் உடனடியாக கல்முனைப் பிரதேசத்தில் பிரதிபலிக்காத போதும் படிப்படியாக அதிகரித்துப் பின்னர் வேகம் கொள்ள லாயிற்று. அதன் தாக்கம் மருதமுனை மக்கள் மீது பல எதிர்விளைவுகளை ஏற்படுத்தியது. மேலும், சிவில் நிருவாகச் செயற்பாடுகள், பாதுகாப்பு உத்தரவாதம் என்பவற்றில் பலவீனமும் ஸ்திரமற்ற நிலையும் ஏற்படலாயிற்று. இந்நிலையில் மருதமுனையை மையமாகக் கொண்ட கரைவாகு வடக்கு முஸ்லிம்களுக்கும் அவர்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்த ஏனைய கிராம தமிழ், முஸ்லிம் மக்களுக்குமிடையே அமைதி, புரிந்துணர்வு, சுமூகநிலையை ஏற்படுத்த நடுநிலை அமைப்பொன்றின் தேவை சகலராலும் உணரப்பட்டது. இவ்வெண்ணக் கருவுக்கு வடிவம் கொடுக்கும் வகையிலேயே **மருதமுனைச் சமாதான சபை** என்னும் அமைப்புத் தோற்றம் பெறலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வமைப்பின் சமாதான சபை என்ற ஆரம்பப் பெயர் பல சூழ்நிலைத் தாக்கங்களால் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுவந்தது. ஈற்றில் மீண்டும் அதே பெயரில் தற்காலம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் தலையணை ஒன்றுதான் உறைகள் வேறு வேறு.

சபையின் பெயர்கள் மாறிய காலமும் பெயர்களும் ஒரே பார்வையில் பின்வருமாறு :

சுவடு - 01 1982 - மருதமுனைச் சமாதான சபை
சுவடு - 02 1985 - கரைவாகு வடக்கு முஸ்லிம் சமாதான சபை
சுவடு - 03 1987 - கரைவாகு வடக்கு ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் சமாதான சபை
சுவடு - 04 1990 - கரைவாகு வடக்கு முஸ்லிம் பிரஜைகள் குழு
சுவடு - 05 1995 - மஜ்லிஸ் அஷ்-ஷூறா
சுவடு - 06 2001 - மருதமுனை சமாதான சபை

மேற்கண்டவாறு மருதமுனை தன் சமாதானப் பாதையில் சுவடு பதித்த சந்தர்ப்பங்களை ஈண்டு காண்போம்.

சுவடு - 01 (1982) :

1982இன் ஆரம்பத்தில் அரச படைகளுக்கும் ஆயுதக் குழுக்களுக்குமிடையேயான முரண்பாடுகள் வெளிப்படத் தொடங்கியிருந்தன. அவை பெரும்பாலும் வட மாகாணத்திலேயே மையம் கொண்டிருந்தாலும் ஆயுதபாணிகளின் நடமாட்டம் கிழக்கிலும் பரவலாகக் காணப்பட்டது. இச்சூழ்நிலை பொது மக்களிடையே அச்சவுணர்வைத் தோற்றுவிக்கலாம் எனக் கருதப்பட்டது. இது தொடர்பில் ஏதேனும் நிகழும் பட்சத்தில் நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கென ஒரு குழுவினரின் சேவை அவசியமாயிற்று. அதனடிப்படையில் அப்போது கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகராயிருந்த திரு. ஏ. நவரட்ணராஜா அவர்களின் அறிவுறுத்தல்களுக்கமைவாக ஒரு குழு அமைக்கப்பட்டது. இது மருதமுனைச் சமாதான சபை என அழைக்கப்பட்டது. இச்சபை வெகுஜன அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்ற கருதுகோளில் அதன் உறுப்பினர்கள் மருதமுனையின் பிரதான நிறுவனங்களிலிருந்து தெரிவாகினர்.

இச்சபையின் ஸ்தாபக முன்னோடியாகத் திகழ்ந்த அல்-ஹாஜ். எம்.எஸ். ஐயூப் ஜே.பி. அவர்கள் தலைவராகவும், மர்ஹூம் எஸ்.எம். நழீம் (அதிபர்) அவர்கள் செயலாளராகவும் அமைந்தனர். மற்றும் உறுப்பினர்களாக, மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசலின் சார்பில் அல்-ஹாஜ். ஏ.பீ.எம். மரைக்கார் ஜே.பி, அல்-ஹாஜ். ஐ.எல்.எம். இஸ்மாயில் ஜே.பி., ஜனாப். ஏ.எல்.எம். முனாஸ் (வரி உத்தியோகத்தர்), ஜனாப். எம்.எம்.ஏ. முகைமின் (இலிகிதர்) ஆகியோரும், மஸ்ஜிதுந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் சார்பில் ஜனாப். எஸ்.ஏ.எஸ். இஸ்மாயீல் மௌலானா (அதிபர்), ஜனாப். எஸ்.எம். பீர் முஹம்மத் (அதிபர்), ஜனாப். எம்.ஐ.எம்.ஏ. காதர் ஜே.பி. ஆகியோரும் அல்-மனார் மத்திய கல்லூரி, ஷம்ஸ் மத்திய கல்லூரி ஆகியவற்றின் அப்போதைய அதிபர்களான ஜனாப். ஏ.எச்.எம். மஜீத் ஜே.பி., ஜனாப். பீ.எம். மீராலெப்பை ஆகியோரும் தெரிவாகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சபையின் செயற்பாடுகள் பெரும்பாலும் அரச பாதுகாப்பு அதிகாரிகளின் வழிகாட்டல், வரையறைகளின்கீழ் இடம்பெற வேண்டியிருந்த மையால், சுயாதீனமாகச் செயற்படுவதில் சில தர்ம சங்கடங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டது. இதனால் சபையின் சேவைகள் நேரடியாகவோ வெளிப் படையாகவோ மக்களைச் சென்றடைவதில் தாமதங்கள் ஏற்படலாயிற்று. எனினும் தன் சக்திக்குட்பட்ட பல சேவைகளைப் புரிந்துவந்த நிலையில் சூழ்நிலைகளின் இறுக்கத்தால் படிப்படையாக மந்தகதியடைந்து ஸ்தம்பித மடைந்து விட்டது.

இதனைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் அதாவது 1983 ஜூலை வன் செயல்களை அடுத்து நாடே கொலைக் களமாக மாறிவிட்டிருந்தது. இது தமிழ், சிங்கள இனங்களுக்கு இடையே பாரியளவு உயிரழிவு, சொத்தழிவுகளை ஏற்படுத்தி யமை ஒரு கரிய வரலாறாகும். இதன் தாக்கம் முஸ்லிம்களையும் கணிசமான அளவு இழப்புகளுக்குள்ளாக்கி விட்டிருந்தமையும் மறுப்பதற்கில்லை. எனினும் ஆயுதக் கலாசாரம் கொடிகட்டிப்பறந்த இவ்வேளையில் சிவில் நடவடிக்கைகளும் அஹிம்சாவாதங்களும் சமாதான முயற்சிகளும் கையறு நிலையை அடைந்து விட்டிருந்தன.

சுவடு - 02 (27-09-1985) :

மேற்குறிப்பிட்ட சிவில் நிருவாகத் தளர்வைச் சாதகமாகக் கொண்டு, பொது மக்களிடையே தோன்றிய இன உரசல்களுக்கும் கொடுக்கல் - வாங்கல் பிரச்சினை களுக்கும் மாற்று வழியில் தீர்வுகாண்பதில் நாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. இதற்கு இயக்கத் தொடர்புள்ள தமிழ், முஸ்லிம் இளைஞர்களின் துணை பெற்றுக் கொள்ளப்படலாயிற்று. இதன் மூலம் அச்சுறுத்தல், கடத்துதல் போன்ற சம்பவங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெற்றன. இவ்வழிமுறை வளர்ச்சியடைந்து விஸ்வரூபம் பெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் சமாதான சபை மீண்டும் தனது சேவையைத் தொடரவேண்டும் என்னும் கருத்து மக்களின் ஏகோபித்த அபிப்பிராயமாக வெளிப்படலாயிற்று. அதன்படி மருதமுனை மஸ்ஜிதுந்நூர், மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசல்களின் கூட்டு முயற்சியில் சமாதான சபை மீளமைப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

1985-09-27ஆந் திகதி நடைபெற்ற இக்கூட்டத்திற்கு அனைத்துப் பள்ளிவாசல் நிருவாகிகள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் சமூகமளித்திருந்தனர். அவ்வமையம் சமாதான சபை மீண்டும் இயங்க வேண்டியதன் அவசியம், அதற்கு இருக்க வேண்டிய கடமைப் பொறுப்புக்கள், அதிகாரப் பரப்பு என்பன குறித்துப் பரந்தளவிலான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

மேலும் பெரியநீலாவணை, பாண்டிருப்பு முஸ்லிம் பிரதேசங்களில் வாழும் மக்களின் சார்பில் வேண்டுகோள் ஒன்றும் முன்வைக்கப்பட்டது. அதாவது "நாங்கள் அடிப்படையில் மருதமுனையைச் சேர்ந்தவர்களே. ஆயினும் அரச நிருவாகக் கண்ணோட்டத்திலும், அடையாள அட்டை, பிறப்பு இறப்பு பதிவுகள் போன்ற விடயங்களிலும் எங்கள் வசிப்பிடங்களே கருத்திற்கொள்ளப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சபையின் பெயரில் எமது பிரதேசங்களும் உள்ளடக்கப்படுவது அவசியம்" எனக் கூறினர். இக்கோரிக்கையின் நியாயம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் நிமிர்த்தம் சபைக்கு "கரைவாகு வடக்கு முஸ்லிம் சமாதான சபை" என நாமகரணமிடப்பட்டது. அடுத்து நிருவாக சபைத் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக அல்-ஹாஜ். எம்.எஸ். ஐயூப் ஜே.பி. அவர்களும் செயலாளராக ஜனாப். எஸ்.எம். பீர்முஹம்மத் (அதிபர்) அவர்களும் பொருளாளராக அல்-ஹாஜ். ஏ.பீ.எம். மரைக்கார் ஜே.பி. அவர்களும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் பள்ளிவாசல் நிருவாகிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பல்வகைத் தொழிற்துறை சாந்தவர்கள் என்போரிலிருந்து ஆற்றலும் அனுபவமும் செல்வாக்கு மிக்க பிரதிநிதிகளைக் கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இச்சபை 1987இன் நடுப்பகுதி வரை பணியாற்றியது.

சுவடு - 03 (28-04-1987) :

மேற்குறிப்பிட்ட சபை செம்மையாகச் செயற்பட்டு ஏராளமான உள்ளூர் - வெளியூர்ப் பிரச்சினைகளுக்குச் சிறந்த தீர்வுகளைக் கண்டுவந்தது. சபை வழங்கிய தீர்ப்புக்கள் தமக்குச் சாதகமாக அமையப் பெறாத சிலர் மேன்முறையீடு கருதி நீதிமன்றம் மற்றும் படை உத்தியோகத்தர்களின் துணையைக் குறுக்கு வழிகளில் பெற்றுக்கொள்ள முனைந்தனர். அதனையொட்டி, பொதுமக்களிடையே இடம்பெறும் பிரச்சினைகளையே தங்கள் தொழிலின் அடிநாதமாகக் கொண்டிருந்த ஓரிரு வழக்கறிஞர்கள் சமாதான சபை வழங்கும் தீர்ப்புக்களுக்கான சட்டப்பெறுமானம் குறித்துக் கேள்வியெழுப்பினர். இதனையிட்டுச் சபை ஆழ்ந்த கவனம் செலுத்தியதுடன் மந்திராலோசனைகளிலும் ஈடுபட்டது. ஈற்றில் சிறந்ததொரு மாற்று வழியைக் கண்டறிந்தது. என்னவெனில், "பள்ளிவாசல் நிருவாகிகள் சமய, கலாசார அமைச்சின்கீழ் இயங்கும் முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தினால் நம்பிக்கையாளர்கள் (Trustees) எனக்குறிப்பிட்டு நியமனம் வழங்கப்பட்டவர்களாவர். அவர்களது தகுதி, நம்பகத்தன்மை என்பவற்றில் திணைக்களம் திருப்தி கண்டே அவர்களை நியமித்துள்ளது. அவர்களுள் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட சமாதான நீதவான்களும் மார்க்க அறிஞர்களான உலமாக்களும் இடம்பெறுகின்றனர். எனவே இவர்களால் வழங்கப்படும் தீர்ப்புக்களை நீதிமன்றங்கள் சாதகமான கண்ணோட்டத்தில் அணுக வேண்டும்" என்பதாகும். இக்கருத்து அரச மற்றும் படை அதிகாரிகளின் முன்வைத்துக் கலந்துரையாடப்பட்டது. இதனை அவர்கள் சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டனர். அதன் நிமித்தம் சபையின் பெயர் 1987-04-28ஆம் திகதி நடை பெற்ற பொதுக்கூட்டத்தில் "கரைவாகு வடக்கு ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கை யாளர்களின் சமாதான சபை" என மாற்றியமைக்கப்பட்டது. பெயர் மாற்றத்துக்கு ஏற்ப நிருவாக அமைப்பிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி மஸ்ஜிதுல் கபீர், மஸ்ஜிதுந்நூர் பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் சபைத் தலைவர்களான அல்-ஹாஜ். எம்.எஸ். ஐயூப் ஜே.பி., ஜனாப். எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா (அதிபர்) ஆகியோர் சமாதான சபையின் இணைத் தலைவர்களாகவும், பள்ளிவாசல் செயலாளர்களாயிருந்த ஜனாப். ஏ.எம். அபூபக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆங்கில ஆசிரியர்), ஜனாப். எஸ்.எம். பீர்முஹம்மத் (அதிபர்) ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், அல்-ஹாஜ். ஏ.எம். இஸ்மாயில் ஜே.பி. அவர்கள் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். மற்றும் உறுப்பினர்களாக ஏற்கனவே இருந்தவர்களுடன் நம்பிக்கையாளர்களாக நியமனம்பெற்ற மேலும் சிலரும் சபையின் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

சிவில் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனைகளையும் அங்கீகாரத்தையும் இச்சபை பெற்றிருந்ததால் சபையின் நடவடிக்கைகளுக்கும் தீர்ப்புக்களுக்கும் பொலிஸ் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும், போராளி அமைப்புக்களிலும்கூட கௌரவமும் கணிப்பும் வழங்கப்பட்டு வந்தன. 1990இன் பிற்பகுதி வரை செயற்பட்டுவந்த இந்நிருவாக அமைப்பு அதிகமான சவால்களுக்கு முகம் கொடுத்து காத்திரமான சேவைகளை வழங்கியது.

சுவடு - 04 (12-09-1990) :

சிவில் நிருவாகம் முழுவீச்சுடன் செயற்படுவதில் சிரமங்களை எதிர்நோக்கிய காலப்பகுதி இதுவாகும். எனவே கிராம, பிரதேச மட்டங்களில் பிரஜைகள் குழுக்களை அமைத்துச் செயற்படுவதன் மூலம் உள்ளூர்ப் பிரச்சினை களுக்குச் சுமுகமானதும் விரைவானதுமான தீர்வுகள் எட்டப்படலாம் என அரசாங்கம் கருதியது. பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்களின் சுமையும் குறையும் சாத்தியமும் எதிர்பார்க்கப்பட்டது. இக்கருதுகோளின் பின்னணியில் நாடளாவிய ரீதியில் பிரஜைகள் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென அரசாங்கம் அறிவுறுத்தல்களை வழங்கியது. அதனையொட்டி "கரைவாகு வடக்கு ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் சமாதான சபை" தனது பெயரை "கரைவாகு வடக்கு முஸ்லிம் பிரஜைகள் குழு" என 1990-09-12ஆம் திகதி மாற்றிக்கொண்டதுடன் புதிய நிருவாக சபையையும் தெரிவுசெய்து அதன் அறிக்கையைச் சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தது. இக்குழுவின் தலைவராக ஜனாப். ஏ.எச்.எம். மஜீத் (கல்விப் பணிப்பாளர்) அவர்களும், செயலாளராக ஜனாப். எஸ்.எம். பீர்முஹம்மத் (அதிபர்) அவர்களும் பொருளாளராக அல்-ஹாஜ். ஏ. ஜமால்தீன் ஜே.பி. அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் சுமார் மூன்று வருடங்கள் திறமையுடன் பணிகளில் ஈடுபட்டுச் சேவையாற்றினர்.

பின்னர் 1993இன் பிற்கூற்றில் இடம்பெற்ற புதிய உத்தியோகத்தர் தெரிவின் போது தலைவராக அல்-ஹாஜ். எம்.எஸ். ஐயூப் ஜே.பி. அவர்களும், செயலாளராக ஜனாப். எஸ்.எம்.ஏ. கையூம் (எழுதுவினைஞர்) அவர்களும், பொருளாளராக ஜனாப். ஏ.எல்.எம்.ஏ. மஜீத் ஜே.பி. (நூலகர்) அவர்களும் தெரிவாகினர். இதனை அடுத்துவந்த காலப்பகுதி தேர்தல் பரபரப்பு மிகுந்ததாகக் காணப்பட்டமையால் சமூக நலன்கருதிய பொதுச்செயற்பாடுகள்கூடக் கட்சிக் கண்ணோட்டத்திலேயே நோக்கப்பட்டன. இதனால் சமாதான சபையின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே இடம்பெற வேண்டியிருந்தன. எனினும் சபை நிருவாகம் மிகுந்த அர்ப்பணிப்புடனும் நடுநிலை நழுவாமலும் பணியாற்றியமை பாராட்டத் தக்கதாகும். இந்நிலையில 1994 ஆவணி மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலுடன் சபையின் இயக்கம் ஸ்தம்பித மடைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் ஏறக்குறைய ஒரு வருட காலத்திற்கு எந்தப் பெயரிலும் சபை நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. கிராமத்தின் சகல விடயங்களும் அரசியல் அதிகாரிகளின் கண்காணிப்பில் நடைபெற வேண்டுமென்ற கருத்தேற்றமே இதற்குக் காரணமாகும்.

சுவடு - 05 (1995) :

பொதுத்தேர்தலை அடுத்துவந்த இக்காலகட்டத்தில் சில திடீர்த் தலைமைகளும் அவை சார்ந்த குழுக்களும் கிராமத்தை வழிநடாத்த முற்பட்டதால் எந்தவொரு விடயத்திலும் ஒருமுகப்பட்ட தீர்மானத்தை எடுப்பது அசாத்தியமாயிற்று. இந்நிலை பொதுமக்களிடையே கருத்து மோதல்களை ஏற்படுத்தியதுடன் சிலவேளை அதற்கப்பாலும் செல்லும் நிலையைத் தோற்றுவித்தது. இப்போக்கைத் தடுத்து நிறுத்திக் கருத்தொருமிப்பைக் காண்பதன் அவசியம் காலத்தின் தேவையாயிற்று. இதற்கான முன்னெடுப்புக்கள் நலன்விரும்பிகள் சிலரால் மேற் கொள்ளப்பட்டன.

அதேவேளை இஸ்லாமிய நடைமுறையையொட்டி "மஜ்லிஸ் அஷ்-ஷூறா" என்ற பெயரில் அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் வெளிப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் தனிப்பட்ட அழைப்பின் மீது கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமையம், "நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் மூலம் முஸ்லிம்களுக்குக் கணிசமான அரசியல் அதிகாரம் கிடைத்துள்ளது. அதனைப் பயன்படுத்தி நமது கிராமமும் அபிவிருத்தி செய்யப்பட வுள்ளது. அதற்கேற்ற பின்னணியிலேயே புதிய சபை அமைக்கப்பட வேண்டும். இச்சபை கிராமத்தின் சகல விடயங்களிலும் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் வல்ல மையைக் கொண்டிருக்க வேண்டும்" என்ற வரைவிலக்கணம் முன்வைக்கப் பட்டது.

மேலோட்டமாகப் பார்க்கையில் இக்கருத்து யதார்த்தமாகவே காணப்பட்டதால் சமூக மளித்திருந்தவர்களின் பரவலான ஆதரவுடன் சபைக்கான உத்தியோகத் தர்கள், உறுப்பினர்கள் தெரிவு ஆரம்பித்தது. இயல்பை மீறிய வேகத்தில் முன்மொழிவுகளும் வழிமொழிவுகளும் குறிப்பிட்ட ஒரு திசையிலிருந்தே வெளிப்பட்டு நிறைவேறின. கடந்த காலங்களில் கைம்மாறு கருதாமற் பணியாற்றிய பல அனுபவஸ்தர்கள் நாசுக்காக ஓரங்கட்டப்பட்டு, அடி முதல் முடிவரை ஒரே அடிப்படை சார்ந்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இது ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட ஒரு நிருவாகக் கட்டமைப்பு அரங்கேற்றப் பட்டிருப்பதை வெளிப்படுத்தியது. இதனைப் புரிந்துகொண்ட பக்கச் சார்பற்ற வர்களும் முரண்பாடுகளை விரும்பாத சில பிரபலஸ்தர்களும் மௌனாங்கீகாரம் தெரிவித்து புதியவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொண்டனர். இதன் விளைவாக "மஜ்லிஸ் அஷ்-ஷூறா" என்ற இலக்கு எட்டப்படாத போதிலும் அமைப்பொன்று உருவாக்கப் பெற்றுவிட்டது. இவ்வமைப்பு சமாதானம் சார்ந்த பொதுப்பணி களில் ஈடுபட்டதற்கான சான்றுகள் கிடைக்காத போதிலும் அமைச்சர் அல்-ஹாஜ். எம்.எச்.எம். அஷ்ரஃப் (பா.உ.) அவர்களின் இணைப்பதிகாரியான அல்-ஹாஜ். எஸ்.எம். அப்துல்லாஹ் அவர்களின் தலைமையில் அரசியல் சார்ந்த பல அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்பட்டமையை மறுப்பதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடு - 06 (22-07-2001) :

1996 தொடக்கம் 2000ஆம் ஆண்டு நிறைவு வரை குறித்துரைக்கப்படும் அளவுக்கு கல்முனைப் பிரதேசத்தில் அமைதிக்குலைவு ஏற்படவில்லை. இடையிடையே சில சம்பவங்கள் இடம் பெறாமலும் இல்லை. அவற்றைப் பள்ளிவாசல் நிருவாகிகளும் கிராமப் பெரியார்களும் அவ்வப்போது நடவடிக்கைகள் மேற்கொண்டு தீர்வு கண்டு வந்தார்கள். உத்தியோகப்பற்றற்ற முறையில் சமாதானக் குழுக்களும் அமைதி பேணும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தன.

2001ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து பயங்கரவாதத்தோடு சம்பந்தப்பட்ட சம்பவங்கள் சிறிது சிறிதாக நம்மூரில் மீண்டும் தலைகாட்டத் தொடங்கின. அவை படிப்படியாக அதிகரித்து வந்ததோடு வாகனக் கடத்தல், ஆள்கடத்தல், கப்பம் கோரல் போன்றனவும் இடம்பெறலாயிற்று. இது மக்களிடையே அச்சத்தையும், பதற்றத்தையும் உருவாக்கியது. இதனையொட்டி கிராமத்தின் கட்டுக்கோப்பில் தளர்ச்சிப்போக்குக் காணப்பட்டதாலும் சமூக முரண்பாடுகள் மீள்தோற்றம் பெறக்கூடிய அறிகுறிகள் தென்பட்டதாலும் சமாதான சபையைப் புனரமைத்துப் புத்துயிரளிக்க வேண்டும் என்னும் கோரிக்கை தொடர்ச்சியாகவும் வலுவாகவும் பொதுமக்களால் முன்வைக்கப் பட்டது.

இக்கோரிக்கையின் உந்துதல் காரணமாக 2001.07.22ஆம் திகதி மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசலில் பகிரங்கக் கூட்டமொன்று கூட்டப் பட்டது. அதில் அனைத்துப் பள்ளிவாசல்கள், பாடசாலைகள், சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதி நிதிகள் கலந்துகொண்டனர். அங்கு சமாதான சபையின் கடந்தகாலச் செயற்பாடுகள், கடைப்பிடித்த அணுகுமுறைகள், சேவைப் பரப்புக்கள் என்பன ஆராயப்பட்டன. சபை புனரமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டியதன் அவசியமும் அவசரமும் வலியுறுத்தப்பட்டன. இவை சபையினரின் ஏகமானதான அங்கீகாரத்தைப் பெற்றதும் புதிய நிருவாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்	:	மௌலவி. அல்-ஹாஜ். ஏ.எம். ஹஸன் ஜே.பி.
தவிசாளர்	:	அல்-ஹாஜ். எம்.எஸ். ஐயூப் ஜே.பி.
செயலாளர்	:	அல்-ஹாஜ். எஸ்.எம். பீர்முஹம்மத் (ஓய்வுபெற்ற அதிபர்) ஜே.பி.
பொருளாளர்	:	ஜனாப். எம்.பி. றைசுல் இஸ்லாம்
உப செயலாளர்	:	அல்-ஹாஜ். ஏ.எச்.ஏ. ழாஹிர் (கிராம உத்தியோகத்தர்)
உப தலைவர்கள்	:	அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. றஷீத் ஜே.பி.
		ஜனாப். எம்.ஐ.எம்.ஏ. காதர் ஜே.பி.

மேலும் செயற்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஜனாப். ஏ.எச்.எம். மஜீத் ஜே.பி. (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்)
அல்-ஹாஜ். எஸ்.ஏ.எஸ். இஸ்மாயீல் மௌலானா ஜே.பி. (ஓய்வுபெற்ற அதிபர்)
அல்-ஹாஜ். கே.எல்.ஏ. வாஹித் ஜே.பி. (ஓய்வுபெற்ற அதிபர்)
ஜனாப். ஏ.எல். மீராமுகைதீன் (அதிபர்) ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாப். ஏ.எம்.ஏ. சமத் (அதிபர்)

ஜனாப். எஸ்.எம்.எஸ்.எம்.எஸ்.எச். பாரி மௌலானா (அதிபர்)

ஜனாப். ஐ.எல். நூறுல் அமீன் (ஆசிரிய ஆலோசகர்)

ஜனாப். எம்.பி. முஹைதீன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

ஜனாப். எப்.எம்.ஏ. அன்ஸார் மவ்லானா ஜே.பி. (சட்டத்தரணி)

ஜனாப். எம்.எஸ்.எம். ஜெமீல் (சட்டத்தரணி)

ஜனாப். ஏ.எம். வதூர்தீன் (சட்டத்தரணி)

அல்-ஹாஜ். மௌலவி. எப்.எம்.ஏ. அன்ஸார் மௌலானா (ஆசிரியர்)

மௌலவி. ஏ.ஆர். செயினுலாப்தீன் (ஆசிரியர்)

டாக்டர். எஸ்.ஏ.ஆர்.எம்.எஸ். முஹம்மத் மௌலானா

டாக்டர். ஏ.எல்.எம். மிஹ்ழார்

ஜனாப். ஏ.எல்.எம்.ஏ. மஜீத் ஜே.பி. (நூலகர்)

அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. (வங்கி உத்தியோகத்தர்)

ஜனாப். எம்.ஐ.எம். வலீத் (பொதுச் சுகாதார பரிசோதகர்)

ஜனாப். என்.எம். ஸாஹிர் (கிராம உத்தியோகத்தர்)

ஜனாப். எம்.ஆர்.எம். சமீம் (எழுதுவினைஞர்)

ஜனாப். எம்.எல்.எம். ஜமால்தீன் ஜே.பி. (இ.போ.ச.)

ஜனாப். ஏ.எல். மீராமுகைதீன் ஜே.பி.

ஜனாப். ஏ.எச்.ஏ. ஹமீத் ஜே.பி.

ஜனாப். எம்.எச்.எம். நஸீர் ஜே.பி.

ஜனாப். எம்.எஸ்.எம். சாதிக்

ஜனாப். ஐ.எம். நூறுல் பௌஸ்

ஜனாப். ஏ.எம். இப்றாஹிம்

அல்-ஹாஜ். எம்.எச்.எம். முஹைதீன்

நினைவில் நிறைந்தவர்கள்

இன்றைய காலப் பிரிவில் சபையின் உத்தியோகத்தர்களாகவும் உறுப்பினராகவும் இருப்போரைத் தவிர இதற்கு முன்னிருந்த சபைகளில் அங்கத்துவம் பெற்ற அரும்பணியாற்றியவர்கள் பலர் அன்னவர்களையும் அவர்கள் வழங்கிய அர்ப்பண மிக்க சேவையையும் மறந்து விடுதல் நன்றிகொன்ற தன்மையாகிவிடும். அவர்கள் இங்கு நினைவுகூரப்படுகின்றனர்.

அவர்களுள், இச்சபையின் தலைவர்ப் பதவியைச் சிலகாலம் வகித்தவரும் தன் இறுதி மூச்சுவரை தன் செல்வத்தையும் சேவையையும் வரையாது வழங்கிய வருமான மர்ஹூம் அல்-ஹாஜ். ஐ.எல்.எம். இஸ்மாயீல் ஜே.பி. (சீப்பலஸ்) அவர்கள் விசேடமாகக் குறிப்பிடத்தகுந்தவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பள்ளிவாசல்களின் நிருவாக மாற்றங்கள் நிகழ்ந்த காலங்களில் கிராமத்தின் பாரம்பரியத்துக்கமைய இணைத் தலைவர்களாகப் பணிபுரிந்தோர்.

மர்ஹூம். கே.எல். அலியார் ஜே.பி. (தலைவர் - மஸ்ஜிதுல் கபீர்)
ஜனாப். எஸ்.ஏ.எஸ். இஸ்மாயீல் மௌலானா ஜே.பி. (தலைவர் - மஸ்ஜிதுந்நூர்)
மர்ஹூம். எம்.ஐ.எம்.ஏ. காதர் ஜே.பி. (தலைவர் - மஸ்ஜிதுந்நூர்)
ஜனாப். ஏ.எல்.எம். முனாஸ் ஜே.பி. (வரி மதிப்பீட்டாளர்)

செயலாளர் மற்றும் இணைச் செயலாளர்களாகப் பணியாற்றியோர் :

மர்ஹூம். எஸ்.எம். நழீம் (அதிபர்)
அல்-ஹாஜ். எஸ்.எம். பீர்முஹம்மத் ஜே.பி. (அதிபர்)
மர்ஹூம். ஏ.எம். அபூபக்கர் (அதிபர்)
மர்ஹூம். பீ.எம். மீராலெவ்வை (அதிபர்)
மர்ஹூம். எம்.எஸ். ஹமீத் (பிறப்பு இறப்புப் பதிவாளர்)
ஜனாப். எஸ்.எம்.ஏ. கையூம் (எழுதுவினைஞர்)
ஜனாப். எம்.ஏ. இனாமுல்லாஹ் (அதிபர்)

பொருளாளர்களாக சேவைபுரிந்தோர் :

மர்ஹூம். அல்-ஹாஜ். ஏ.பீ.எம். மரைக்கார் ஜே.பி.
மர்ஹூம். அல்-ஹாஜ். ஏ. ஜமால்தீன் ஜே.பி.
மர்ஹூம். அல்-ஹாஜ். ஏ.எம். இஸ்மாயில் ஜே.பி.
ஜனாப். ஏ.எல்.எம்.ஏ. மஜீத் ஜே.பி. (நூலகர்)

ஏனைய உறுப்பினர்கள் :

ஓர் அமைப்பில் உத்தியோகப் பதவி வகிப்பவர்களால் மாத்திரம் அதன் செயற்பாடுகளைச் செம்மையாக முன்னெடுத்துச் செல்லுதல் சாத்தியமன்று. அதற்கு ஊக்கமும் ஊட்டமும் வழங்கி தோள்கொடுக்கக்கூடிய உறுப்பினர்களின் பங்களிப்பு மிக முக்கியமாகும். அவ்வகையில் தம் சேவைத்திறத்தாலும் செல்வத்தாலும் தாம் வகித்த அரசாங்கப் பதவிகள் ஊடான செல்வாக்கினாலும் அரிய பங்களிப்புக்களை வழங்கி, சமாதான சபையின் சேவைக்குச் செழுமை சேர்த்த கௌரவ உறுப்பினர்களை இங்கு நினைவுகூர்தல் கடனாகும். அவர்களின் விபரம் வருமாறு.

மர்ஹூம். அல்-ஹாஜ். I.M.S.M. பழீல் மௌலானா ஜே.பி. (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்)
ஜனாப். M.H. காதர் இப்றாஹிம் (கல்விப் பணிப்பாளர்)
மர்ஹூம். அல்-ஹாஜ். S.M.M. பழீல் ஜே.பி. (அதிபர்)
மர்ஹூம். ஜனாப். V.M.M. இஸ்மாயில் (அதிபர்)
மர்ஹூம். அல்-ஹாஜ். A.M.A. ஜலீல் (அதிபர்)
மர்ஹூம் A.L.A. சமத் (அதிபர்)
மர்ஹூம் M.N. ஷரிபுத்தீன் (அதிபர்)
அல்ஹாஜ். M.C. அஹமத் முகைதீன் (அதிபர்)
மர்ஹூம். A.M. முஸ்தபா (அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாப். P.M. பதுர்தீன் (அதிபர்)
ஜனாப். A.M. அபூபக்கர் (ஆசிரியர்)
ஜனாப். S.M. மூஸா ஜே.பி. (ஆசிரியர்)
மர்ஹூம். A. செயினுலாப்தீன் (ஆசிரியர்)
அல்-ஹாஜ். S.M. இப்றாஹிம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்)
மர்ஹூம். அல்-ஹாஜ். மௌலவி M.M.M. நயீம்
மர்ஹூம். ஜனாப். H.L. ஜமால்தீன் ஜே.பி. (பொலிஸ் அத்தியட்சகர்)
ஜனாப். M.S. ஜலீல் (நூலகர்)
மர்ஹூம். A.L.A. ஹமீத் (விவசாய அலுவலர்)
ஜனாப். A.R.M. கலீல் (நீதிமன்றப் பதிவாளர்)
ஜனாப். S.H.M. நிஸாம் (விலைக்கட்டுப்பாளர்)
ஜனாப். M.M.A. முஹைமின் (பிரதம எழுதுவினைஞர்)
ஜனாப். A.M. ஜுனைத் (பிரதம எழுதுவினைஞர்)
ஜனாப். M.A. ஜமால் முஹம்மத் (உதவிப் பதிவாளர்)
மர்ஹூம். H.M. அபூபக்கர் (கிராம அலுவலர்)
அல்-ஹாஜ். N.M. இஸ்மாயில் ஜே.பி. (கிராம அலுவலர்/ காதிநீதவான்)
மர்ஹூம். U. குதுப்தீன் (கிராம அலுவலர்)
மர்ஹூம். S.H.M. தௌபீக் (கிராம அலுவலர்)
ஜனாப். M.A. நெய்னா முஹம்மத் (கிராம அலுவலர்)
ஜனாப். M.M. உவைஸ் (கிராம அலுவலர்)
ஜனாப். M.C. அன்ஸார் (பிரதேச செயலாளர்)
ஜனாப். S.L.A. அஸீஸ் (இ.போ.ச. அலுவலர்)
மர்ஹூம். E.M. நஸ்றுத்தீன் (பொலிஸ் அதிகாரி)
மர்ஹூம். அல்-ஹாஜ். A.C.A. வாஜித் (எழுதுவினைஞர்)
அல்-ஹாஜ். N. இஸ்மாலெப்பை
மர்ஹூம். அல்-ஹாஜ். L.M. இப்றாஹிம்
அல்-ஹாஜ். A.R. பறக்கத்துல்லாஹ்
மர்ஹூம். அல்-ஹாஜ். Y.L.M. இப்றாஹிம்
மர்ஹூம். அல்-ஹாஜ். A.L. தாவூத் லெப்பை மரைக்கார் ஜே.பி.
அல்-ஹாஜ். A.M. சலாஹுதீன்
மர்ஹூம். அல்-ஹாஜ். S.M. சுல்தான்
மர்ஹூம் S.M. ஷஹ்பான்
ஜனாப். M.A.M. இப்றாஹிம்
ஜனாப். A.L. ஹம்தூன்
ஜனாப். A. லத்தீப்
மர்ஹூம். A.M. மிஹ்ழார்
ஜனாப். M.H.A.M. அஜ்வாத்
ஜனாப். M.Y.A. மனாப்
அல்-ஹாஜ். I.L.M. அபூபக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் சேவைகளில் சில துளிகள்

மருதமுனைச் சமாதான சபையின் கடமைகள் வரையறுக்கப்பட்டதொரு சேவைப் பரப்பைக் கொண்டதாய் இருக்கவில்லை. ஏனெனில் இயல்பாக இக்கிராமத்துக்குள்ள தேவைகளுடன் அவ்வப்போது புதிது புதிதாகத் தோன்றிய பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டிய கடப்பாடு அதற்கிருந்தது. அவை பயங்கரவாதம் தொடர்பானவை, சமூக, இன முரண்பாடுகள், கொடுக்கல் - வாங்கல் சம்பந்தப்பட்டவை, குடும்பப் பிரச்சினைகள் போன்ற பலதரப்பட்டவையாகக் காணப்பட்டன. அவை முழுவதையும் பட்டியலிட்டுக் காட்டுவது அசாத்தியமானதாகும். அவற்றில் எதனையும் தட்டிக் கழித்துவிட முடியாதிருந்த சூழ்நிலையே இங்கு காணப்பட்டது. அவற்றுள் சில முக்கிய விடயங்களையிட்டுக் குறிப்பிடுவது பொருத்தமானதெனக் கருதுகிறோம்.

நீதி வழங்கும் பணியில்....

கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக 1985 தொடக்கம் 1995 வரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் சபைக்குக் கிடைத்தன. அவற்றுள் அநேகமானவை பகிரங்க விசாரணைக்குட்படுத்தப்படாமலேயே தீர்த்துவைக்கப்பட்டன. பிரச்சினைகளின் தன்மைக்கேற்ப, சம்பந்தட்டவர்களின் இடங்களுக்குச் சென்றும் தலைவர், செயலாளர்களின் வீடுகளுக்கு வாதி-பிரதிவாதிகள் அழைக்கப்பட்டும் தீர்வுகாணப்பட்டவைகள் ஏராளமானவை. இவ்வாறு பூர்வாங்க மட்டத்தில் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் பகிரங்க நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டன. அதனடியாக 600இற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றுள் 472 முறையீடுகள் இருதரப்பாலும் மருதமுனை மக்களைச் சார்ந்தவை. ஒருசிலவற்றைத்தவிர மற்றவை அனைத்தும் சுமூகமாகவும் சமரசமாகவும் தீர்த்து வைக்கப்பட்டன.

மேலும், 135 முறைப்பாடுகள் மருதமுனைவாசிகளுக்கு எதிராக வேற்றூரவர்களினால் விசேடமாக தமிழ் மக்களினால் சமாப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் இரண்டே இரண்டைத்தவிர ஏனையவற்றுக்குச் சபை சமரசம் கண்டது. இரண்டில் ஒன்று ஒரு ஆயுதக்குழுவின் தலையீட்டைக் கண்டது. மற்றது நீதிமன்றம் சென்றது.

சுமார் 14,000.00 ரூபா கொடுக்கல் வாங்கல் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கு, சமாதான சபையில் விசாரிக்கப்பட்ட பொழுது, குறிப்பிட்ட தொகை தன்னால் கொடுக்கப்பட வேண்டியதே எனப் பிரதிவாதி ஒப்புக்கொண்டிருந்தார். மேலும் அதனை மீளக் கொடுப்பதற்குரிய தவணையையும் கேட்டுப் பெற்றுக்கொண்டு சபையின் வழக்குப் பதிவேட்டில் ஒப்பமிட்டிருந்தார். ஆனால் அவர் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. எனவே நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான அனுமதி வாதிக்கு வழங்கப்பட்டது. இவ்வழக்கு கல்முனை மாஜிஸ்டிரேட் நீதிமன்றில் ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகாலம் நடைபெற்றது. இக்காலமவ்வளவும் சபையின் சார்பில் சாட்சியமளிப்பதற்காக அதன் செயலாளர் ஜனாப். எஸ்.எம். பீர்முஹம்மத் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஒவ்வொரு தவணைக்கும் சமூகமளிக்க வேண்டியிருந்தது. இரு தரப்பினரும், வழக்குரைஞர்களுக்கும் ஏனைய செலவுகளுக்குமாக தலா 20,000/- ரூபாவாவது செலவிட்டிருப்பார். ஆனால் யாருக்கும் எப்பிரயோசனமுமின்றி வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. காலவிரயமும் பணவிரயமும் அலைச்சலும் தான் கண்டபலன். இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவென்றால், எந்த வழக்குரைஞர் வாதியின் சார்பில் நீதிமன்றில் வழக்கைச் சமர்ப்பித்து வாதாடி வந்தாரோ அதே வழக்குரைஞர் பின்னர் பிரதிவாதியின் தரப்புக்கு மாறி, தான் ஏற்கனவே பேசியதற்கு மாறாக வாதாடி பிரதிவாதியைக் கடனிலிருந்து விடுவித்தார். ஒரே வழக்குரைஞரால் ஒரே வழக்கில் நீதிக்காவும் போராட முடியும், நிதிக்காகவும் வாதாட முடியும் என்பதை இச்சம்பவம் குறிப்பிடுகிறதல்லவா? இவ்வழக் குரைஞர் மருதமுனையைச் சேர்ந்தவரல்லரென்பது சற்று ஆறதல் தருகிறது.

மேற்படி சம்பவத்தின் மூலம் சமாதான சபையினூடாகத் தீர்வுகாணப்பட்ட பந்நூறு வழக்குகள் தொடர்பில் எவ்வளவு பண விரயமும் கால விரயமும் தவிர்க்கப் பட்டுள்ளன என்பது புலனாகும். இதற்குமப்பால் எவ்வளவு மோதல்களும் முரண்பாடுகளும் அவற்றை ஒட்டிய இழப்புக்களும் தடுக்கப்பட்டன என்பதை அறிவுள்ளவர்கள் அறிந்துகொள்ளத் தவறமாட்டார்கள். சபையின் மூலம் சமரசம் காணப்பட்ட வழக்குத் தீர்வுகளுக்கு எதிராக நடுநிலை பிறந்ததாகவோ சார்புநிலை கொண்டிருந்ததாகவோ விமர்சனங்கள் எழுந்ததற்கு ஆதாரங்கள் கிடையாது. இதுவே வழக்குமன்ற சேவையின் மூலம் சமாதான சபை பெற்ற பெருவெற்றியாகும்.

அகதிகளை அரவணைக்கும் பணியில்....

சமாதான சபை சந்தித்த நெருக்கடிமிக்க காலகட்டங்களில் 1988, 1989, 1990ஆம் ஆண்டுகள் மிக முக்கியமானவையாகும். இவ்வாண்டுகளில் ஏனைய கிராமங் களைப்போல் மருதமுனையும் பல பாரிய பிரச்சினைகளுக்கும் அச்சுறுத்தல் களுக்கும் முகம்கொடுக்க வேண்டியே வந்தது. ஆயினும் சமாதான சபை மேற்கொண்ட நிதானமான, புத்திபூர்வமான நடவடிக்கைகளால் பெருமளவிலான உயிர், உடமை இழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. எந்தவொரு சூழ்நிலையிலும் அகதிகளாக இடம்பெயரும் நிலைமையிலிருந்து மருதமுனை பாதுகாக்கப்பட்டு வந்தமை அல்லாஹ்வின் பேரருளாகும். அதேவேளை காலத்துக்குக் காலம் சில கிராமங்கள் அகதி நிலைக்கு இலக்கானமை வருந்தத்தக்கதாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மருதமுனை தனக்கிருந்த தார்மீகக் கடமைகளை உணர்ந்து அகதிகளுக்கு உதவும் பணியில் தன்னாலான பங்களிப்பை வழங்கத் தவறவில்லை. இது தொடர்பில், 1988 முற்பகுதியில் பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்திருந்த மாளிகைக்காடு கிராம மக்களுக்கு 30,000.00 ரூபா பணம் மற்றும் சாரம்கள் என்பன 1988-04-06ஆம் திகதி அகதி நிவாரணச் சபையின் மூலம் வழங்கப்பட்டன. இவற்றை அங்குள்ள கிராம முக்கியஸ்தர்கள் கையேற்றுப் பங்கீடு செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 1989 மே மாதத்தில் இடம்பெற்ற பயங்கரவாதச் சம்பவங்களின்போது அநேக முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு அகதிகளாயினர். அச்சமயம் சமாதான சபை நம் ஊரளாவிய ரீதியில் குழுக்களை நியமித்து நிவாரண வசூல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அதன்பேரில் பணம், சாறம்கள், சாரிகள், தைக்கப்பட்ட ஆடைகள் என்பன ஆயிரக்கணக்கிலும் அரிசி மூடைகள் நூற்றுக்கணக்கிலும் சேகரமாயின. அவையனைத்தும் 1989-05-26ம், 29ம் திகதிகளில் சவளக்கடை, சம்மாந்துறை, பொலன்நறுவ, மூதூர் ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவ்வவ்வூர் களுக்குப் பொறுப்பான நிருவாகிகள் மூலம் அகதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

இவ்விடயத்தில், பல சிரமங்களுக்கு மத்தியில் வசூல் பணிகளில் ஈடுபட்ட நமது கிராம முக்கியஸ்தர்கள், இளைஞர்கள் ஆகியோரின் சேவைகள் என்றும் மறக்க முடியாதவையாகும். அதேபோல் தங்கள் சக்திக்கும் மீறிய அளவில் தமது பொருள், பண்டங்களை வாரி வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், அரசாங்க ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் எக்காலமும் நினைவுகூரப்பட வேண்டியோராவர்.

நோய் தீர்க்கும் பணியில்....

1987-07-29ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் விளைவாக இந்திய அமைதி காக்கும் படை (Indian Peace Keeping Force) இலங்கைக்கு வந்தது. அப்படையினர் 1990-03-24 வரை சுமார் மூன்று வருட காலம் தங்கியிருந்து பல சேவைகளை வழங்கினர். அவர்கள் 1989-10-24இல் அம்பாரை மாவட்டத்தை விட்டுச் செல்லும்வரை அவர்களால் வழங்கப்பட்ட சேவைகளை மருதமுனைக்கும் பெற்றுக்கொடுப்பதில் சமாதான சபை பல முயற்சிகளை மேற் கொண்டது. அவற்றுள் விசேடமாகக் குறிப்பிடத்தகுந்தது. இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் பெறப்பட்ட வைத்திய சேவையாகும்.

இந்தியப் படையினர் அனுசரணையில் இந்திய செஞ்செலுவைச் சங்கத்தின் வைத்தியக் குழுவொன்றும் இலங்கைக்கு வந்திருந்தது. அவ்வேளை வடக்கு - கிழக்கு மாகாண வைத்தியசாலைகள் போதியளவு சேவைகளை வழங்க முடியாத நிலை காணப்பட்டதால் இந்திய வைத்தியக் குழு நடமாடும் வைத்திய முகாம்களை நடாத்தி வந்தது. அதன் சேவையை மருதமுனைக்கும் பெற்றுக் கொடுப்பதற்காக சமாதான சபை IPKF அதிகாரிகளின் உதவியை நாடியது. அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டு அதற்கான அனுமதியை வழங்கினர். அதன் பேறாக 1988-05-28ஆம் திகதி மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் ஒரு வைத்திய முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு வந்த குழுவின் தலைவராக இந்தியாவின் பிரபல வைத்திய கலாநிதி டாக்டர். எம்.எம். சஹாப்தீன் அவர்கள் அமைந்திருந்தமை பல அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாய் அமைந்தது. அதன் மூலம் நமது கிராமத்தின் பல நூற்றுக்கணக்கான நோயாளிகள் சிறந்த வைத்திய ஆலோசனைகளையும் பெறுமதிமிக்க உயர்ரக மருந்து வகைகளையும் இலவசமாகப் பெற்றுக் கொண்டனர். மேலதிகமாகத் தேவைப் பட்ட மருந்து வகைகளுக்கும் வைத்திய உபகரணங்களுக்கும் சமாதான சபை நிதியிலிருந்து செலவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மருத்துவ சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்திய ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தலைவர், அதன் முக்கிய அதிகாரிகள், கேணல், வேணுகோபால், டாக்டர் சஹாப்தீன் ஆகியோருக்கு வாழ்த்துக் கடிதங்களை சமாதான சபை அனுப்பி வைத்தது. அவற்றைப் பெற்றுக் கொண்டதற்கான பதில் நன்றிக் கடிதங்களும் அவர்களால் சமாதான சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பசி போக்கும் பணியில்....

T.N.A. (Tamil National Army) என அழைக்கப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவம் *1989-11-12*ஆம் திகதி கல்முனைப் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டது. இம்முற்றுகை அம்மாதம் *26*ஆம் திகதிவரை பதினேழு நாட்கள் நீடித்தது. இதனால் இப்பிரதேச மக்கள் விசேடமாக மருதமுனை மக்கள் தொழில்களில் ஈடுபடவோ தமது தேவைகளுக்காக கிராமத்தை மட்டுமல்ல வீட்டைவிட்டும் வெளியேறவோ முடியவில்லை. வீதிகள் தோறும் போராளிகளின் நடமாட்டம், தலைக்கு மேல் பேரோசையுடன் சீறிச் செல்லும் துப்பாக்கிக் குண்டுகள், காதைப் பிளக்கும் வெடியோசைகள் இவைகளுக்கிடையில் மக்கள் உயிரைக் கையிற் பிடித்தபடி வீடுகளில் முடங்கிக் கிடந்தனர்.

கையில் பணமில்லை, பணமிருந்த போதும் வாங்குவதற்குக் கடைகளில்லை, கடைகளிற் பொருட்களில்லை. இதனால் வேளைக்கு உணவில்லை. பசியும் பதற்றமும் முழுக்கிராமத்தையும் ஆக்கிரமித்திருந்தது. மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பறிபோய் விட்டிருந்தது. இந்நெருக்கடியிலிருந்து மக்களை மீட்க வேண்டிய கடமையை சமாதான சபை உணர்ந்து கொண்டது இறைவனை முன்னிறுத்தித் துணிச்சலுடன் செயலில் இறங்கியது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை முகாமையாளர்கள், கிராம சேவகர்களை உள்ளடக்கிய கூட்டமொன்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டதுடன் உடனடியாகக் கருமமாற்றத் தொடங்கியது. அப்போது கல்முனை உதவி அரச அதிபராயிருந்த ஜனாப். எம்.எச்.எம். முயீனுத்தீன் அவர்களின் ஆலோசனையையும் அனுமதியையும் பெற்றுக்கொண்டு கிராமத்திலுள்ள பத்திற்கும் மேற்பட்ட லொறிகள் மற்றும் வாகனங்களுடன் *1989-11-20* அன்று கல்முனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் தலைவர் ஜனாப். எம்.எம். இஸ்மாயீல் (ஆசிரியர்) அவர்களின் இல்லத்துக்கு சமாதான சபையினரும், கூட்டுறவுச்சங்கக் கிளை முகாமையாளர்களும் சென்றனர். அவரிடம் கிராமத்தின் கையறு நிலை பற்றி விளக்கினர். அதனை மனிதாபி மானத்துடன் செவிமடுத்த அவர், சமாசத்தின் கையிலிருப்பிலிருந்த உணவு முத்திரைக்குரிய பெருந்தொகையான அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா வகைகள் என சகல பொருட்களையும் லொறிகளில் ஏற்றுமாறு தம் ஊழியர்களைப் பணித்தார். சாதாரணமாக, உணவு முத்திரைக்கான பொருட்கள் வழங்கப்படும்போது கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகளைக் கடந்து தனது தலைமைத்துவத் தற்துணிவின் பேரிலும் உதவி அரச அதிபரின் அனுசரணையுடனுமே அவ்வளவும் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவரும் A.G.A.யும் காட்டிய பெருந்தன்மையும் தயாள குணமும் மருதமுனை மக்களாலும் சமாதான சபையினராலும் என்றென்றும் நன்றியுடன் நினைவுகூரத்தக்கதாகும். அன்னவர்களின் இருமை நலனுக்கும் பிரார்த்திப்போமாக.

மேற்குறிப்பிட்டவாறு லொறிகளில் பொருட்களை ஏற்றி முடிப்பதற்கும் சூரியன் மறைந்து இருள்சூழத் தொடங்குவதற்கும் சரியாகவிருந்தது. இப்போது பொருட்களை ஊருக்குக் கொண்டு சேர்ப்பது எப்படி? என்ற பிரச்சினை எழுந்தது. காரணம் வாகனங்களில் வருவது அரசபடை சார்ந்தவர்கள் என மறுதரப்பு ஆயுத பாணிகள் கருதிவிட்டால் நிலைமை விபரீதமாகிவிடும். அது மட்டுமன்றி அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் உணவுப் பொருட்களின் தேவையிருந்தது. இந்நிலையில் போராளிகளுடன் அறிமுகமுள்ள நம்மவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடிவுசெய்யப்பட்டது. அதன்படி அத்தகைய இளைஞர் களைத் தேடியெடுத்து ஒவ்வொரு வாகனத்தின் முன் ஆசனத்திலும் ஏற்றிக் கொண்டு வாகனத் தொடரணி புறப்பட்டது. அவ்விளைஞர்களின் துணிச்சல் மிக்க வழிநடாத்தலுடன் பல்வேறு தடைகளையும் சாதுரியமாகத் தாண்டி இர வோடிரவாக வாகனங்கள் மருதமுனையை வந்தடைந்தன.

மறுநாள் பொழுதுவிடிந்து பொருட்கள் பங்கிடப்பட்டு முடியும்வரை அவற்றுக்குப் பாதுகாப்பளிப் பதில் இளைஞர்களும் தொண்டர்களும் வழங்கிய ஒத்துழைப்பு மிகப்பாராட்டுக்குரியதாகும். மேலும் பொருட்களைப் பாரபட்ச மற்ற வகையில் பங்கிடுவதிலும் அதற்குரிய ஆவணங்களை முறையாகத் தயாரித்து கூட்டுறவுச் சங்கத் தலைவரிடம் ஒப்படைப்பதிலும் கிராம சேவகர்கள், கிளை முகாமையாளர்கள் எடுத்துக்கொண்ட சிரமம் மிகுந்த பொறுப்புக்களுக் காக அவர்கள் எப்போதும் நன்றிக்குரியவர்களாவர். இந்த வகையில் பசிநீக்கும் பணியிலும் சமாதான சபை தன் சேவையை வழங்கியது.

ஆபத்திலும் அஞ்சாமை....

மேற்குறித்த சம்பவம் நிகழ்ந்த இதேகாலப் பகுதியில் நிலவிய பதற்ற நிலை காரணமாக கடைகளும் தொழில் நிலையங்களும் மூடப்பட்டுக் கிராமமே பீதியில்உறைந்துகிடந்தது. அந்த ஸ்தம்பித நிலையைப் பயன்படுத்தி 1989-11-19இல் பல கடைகளும் அரிசி ஆலைகளும் கொள்ளையிடப்பட்டன. இதனை நடாத்தி யவர்கள் தமிழ்த் தேசிய இராணுவத்தில் இணைந்து செயற்பட்ட ஒரு குழுவினரே என இனங்காணப்பட்டனர். இதற்குப் பரிகாரந் தேடவும் இதுபோன்ற அடாத செயல்களைத்தடுத்து நிறுத்தவும்ஏதேனும்வழிகளுண்டா? எனச்சபை ஆராய்ந்தது. அவ்வேளை வட-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. ஏ. வரதராஜப் பெருமாள் அவர்கள் களுவாஞ்சிகுடிக்கு ஹெலிகொப்டரில் வந்துகொண்டிருப்பதாகத் தகவலொன்று கிடைத்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நமது கிராமத்தில் நடைபெற்ற அநியாயம் பற்றி அவரிடம் முறையிடுவதற்காக களுவாஞ்சிகுடி செல்லத் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு செல்லும் குழுவில் மர்ஹூம் அல்-ஹாஜ். ஐ.எல்.எம். இஸ்மாயில் ஜே.பி. (சீப்பலஸ்) அவர்களும் இடம்பெற முடிவு செய்யப்பட்டபோதிலும் அவரது உடல்நலக் குறைவு காரணமாக வரமுடியாமற் போய்விட்டது. எனினும் தனது காரை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் அதனைச் செலுத்துவதற்கு ஒரு சாரதி தேவைப்பட்டார். உடனே அவ்விடத்திலிருந்த பொலிஸ் அத்தியட்சகர் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள் வாகனத்தைச் செலுத்தத் தானாகவே முன்வந்தார். மற்றவர்கள் அதனை விரும்பவில்லை. ஏனெனில் பொலிஸாருக்கும் போராளிகளுக்கும் நேரடி மோதல் நடந்துகொண்டிருந்த அவ்வேளையில் ஒரு பொலிஸ் அதிகாரி அவர்களது இருப்பிடத்துக்கே செல்வது தற்கொலைக்கு ஒப்பானதாகவே கருதவேண்டியிருந்தது. ஆயினும் "எனது கிராமத்துக்கான சேவையில் என்னுயிர் பிரியவேண்டியதுதான் இறைநியதியாயிருந்தால் அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கின்றேன்" என்று கூறியவாறு காரின் சாரதி ஆசனத்தில் ஏறி அமர்ந்தார் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் ஜே.பி. அவர்கள். அவரது திடசித்தம் மற்றையோரைப் பிரமிக்கச் செய்தபோதும் அவரைப் பற்றிய மிகுந்த அச்சத்தோடு ஏனையோர் காரில் ஏறினர். அப்பயணத்தில் சமாதான சபைத் தலைவர், அல்-ஹாஜ். எம்.எஸ். ஐயூப் ஜே.பி., செயலாளர் ஜனாப். எஸ்.எம். பீர்முஹம்மத் (அதிபர்), இணைத்தலைவர் ஜனாப். எஸ்.ஏ.எஸ். இஸ்மாயீல் மௌலானா (அதிபர்) மற்றும் ஜனாப். ஏ.எச்.எம். மஜீத் (அதிபர்) ஆகியோர் பங்குபற்றினர்.

வீதிநெடுகிலும் ஆயுதபாணிகள், அவர்களின்மீது குண்டு பொழிவதற்காக பறந்து திரியும் உலங்கு வானூர்திகள் (Helicoptors). இவற்றுக்கிடையே நமது வாகனமும் பல தடைகளைத் தாண்டிச் சென்று ஒந்தாச்சிமடத்தில் ஒதுக்குப் புறமாயமைந்த ஓரிடத்தை அடைந்தது. ஆனால் என்ன துரதிஷ்டம், பாதுகாப்புக் காரணம் கருதி அன்று முதலமைச்சரின் வருகை இரத்துச் செய்யப்பட்டுவிட்டதாக நாம் அங்கிருக்கும் போதே செல்லிடத் தொலைபேசி மூலம் தகவல் வந்தது. எமது ஏமாற்றத்துக்கு வருந்திய ஒரு போராளித் தலைவர் தமிழ்த்தேசிய இராணுவத்தின் கிழக்குப் பிராந்தியத் தளபதி திரு. காளிதாஸ் என்பவரிடம் எம்மை அழைத்துச் சென்றார். அங்கு மாகாண சபை உறுப்பினர் திரு. சர்மாவும் உடனிருந்தார். நாம் சென்ற நோக்கத்தை அவர்களிடம் விபரித்தோம். அவர்கள் தமது "பிக்கப்" வாகனத்தில் ஏறி எம்முடன் மருதமுனை நோக்கி வந்தனர். வரும் வழியில் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களெனக் கருதப்பட்ட குழுவினர் எதிரில் வந்தனர். அவர்களைத் தடுத்து நிறுத்திய காளிதாஸ் அவர்கள் கொள்ளை நடைபெற்ற இடத்துக்கே அழைத்துச் சென்று நேரடி விசாரணையில் ஈடுபட்டார். சம்பவம் உண்மையெனக் கண்டதும் அவ்விடத்தில் வைத்தே அவர்களைத் தண்டித்தார். பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தருவதில் தம்மால் முடிந்ததைச் செய்வதாக திரு. காளிதாசும் திரு. சர்மாவும் வாக்களித்து ஆறுதல் கூறினர். ஆனால் மாகாண சபை ஆட்சி விரைவில் முடிவுக்கு வந்ததால் இழப்பீடுகளை எதனையும் பெற்றுக்கொடுக்க முடியாமற் போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் பாதுகாப்பு நடவடிக்கைகள்....

1989இன் பிற்பகுதியிலிருந்து 1990இன் நடுப்பகுதி வரை ஏறக்குறைய ஒரு வருட காலம் கிழக்கு மாகாணம் அரச படையினருக்கும் ஆயுதக்குழுவினருக்குமிடையே பந்தாடப்பட்டுக் கொண்டிருந்தது. திடீரெனப் போராளிகளின் கையோங்குவதும் பாரிய போராட்டத்தின் பின் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள்ளாகுவதுமாக இருந்தது. இக்கால கட்டத்தில் இரு தரப்பினராலும் பொதுமக்கள் அனுபவித்த சிரமங்களும் நெருக்கடிகளும் சொல்லிமாளாது. 1989 நவம்பரில் தமிழ்த்தேசிய இராணுவத்தின் பிடியிலிருந்து மீண்ட கிழக்கு மாகாணம் 1990 ஜூன் மாதத்தில் விடுதலைப் புலிகளின் பிடிக்குள் வந்தது. 1990-06-11ஆம் திகதி கல்முனை உட்படப் பல பொலிஸ் நிலையங்கள் புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட போது நூற்றுக்கணக்கான முஸ்லிம் பொலிஸார் கொல்லப்பட்டனர். அடுத்து வந்த பதினொரு தினங்களின் பின் 1990-06-21ஆம் திகதி இலங்கை இராணுவம் கல்முனையுட் பிரவேசித்ததும் விடுதலைப்புலிகள் இங்கிருந்து வெளியேறிச் சென்றனர். இதன்போது பல தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றன.

1990-07-03ஆம் திகதி அரசபடை ஹெலிகொப்டர்கள் புலிகளுக்கெதிராக நடாத்திய தாக்குதலினிடையே அகப்பட்டு மகூர்மௌலானா வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த அமீர்கான் என்னும் இளம் குடும்பஸ்தர் மரணமானார். கடற்படையினர் மருதமுனைக் கடலிலிருந்து தீர்த்த துப்பாக்கி வேட்டுக்களால் பலர் காயமடைந்தனர். இச்சந்தர்ப்பத்தில் கிராமத்தில் நிலவிய பதற்றத்தைத் தணிப்பதிலும் இருதரப்பு ஆயுதபாணிகளின் சந்தேகக் கைதுகள், தண்டனைகளிலிருந்து இளைஞர்களை மீட்பதிலும் பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு சமாதான சபைக்கு ஏற்பட்டது. அதில் கணிசமான வெற்றியையும் சபை ஈட்டியது. அவ்வாறு இராணுவத்தினரிடமிருந்தும் போராளிகளின் பிடியிலிருந்தும் மீட்கப்பட்டவர்களிற் சிலர் பின்நாட்களிலும் மேலும் சிலர் இன்று வரையிலும் கிராமத்தின் நற்பெயருக்குப் பங்கம் விளைவிப்போராய் அமைந்தமை வருந்தத்தக்கதாகும். சபை சார்ந்தோருக்கு எதிரிகளாய் மாறி அவர்களைத் தண்டித்தோரும் சிலருளர். பாம்புக்குப் பாலூட்டினாலும் அதன் இயற்கைக் குணம் (அசல்) மாறுவதில்லையல்லவா?

நள்ளிரவுப் பேச்சுவார்த்தை....

சில போராளிக் குழுக்கள் கூட்டாக இணைந்து அரசபடைகளுக்கெதிராக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததொரு காலகட்டம் அது. ஒருநாள் மாலை ஐந்து மணியளவில் அதிர்ச்சி தரும் தகவலொன்று சமாதான சபைச் செயலாளருக்குக் கிடைத்தது. அதாவது, "போராளிக் குழுவொன்று மருதமுனை யைத் தாக்கத் திட்டமிட்டுள்ளது" என்ற செய்தியே அது. உடனே தலைவரின் ஆலோசனையுடன் மாலை 6.00 மணிக்கு அவசரமாகச் சபை கூடி இவ்விடயம் பற்றி ஆராய்ந்தது. ஈற்றில் சம்பந்தப்பட்ட போராளிக் குழுவினை நேரிற்கண்டு பேசுவதைத் தவிர வேறு வழியில்லை எனும் முடிவுக்குச் சபை வந்தது. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது உயிரைப் பணயம் வைத்து நடாத்தப்பட வேண்டியதொரு செயலென்பதால் "பூனைக்கு மணிகட்டுவது யார்?" எனும் கேள்வி எழுந்தது. நீண்ட மௌனத்துக்கும் தயக்கத்துக்கும் பிறகு சபையின் செயலாளர் அவர்களும் சபையின் சிரேஷ்ட உறுப்பினர்களுள் ஒருவரான ஜனாப். எம்.எச். காதர் இப்றாகீம் (ADE) அவர்களும் தாமாகவே முன்வந்தனர். ஆனால் எங்கு? யாரை? எப்போது? சந்திக்க வேண்டு மென்ற சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மாலை 7.00 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

அன்று இரவு 9.00 மணிக்கு அறிமுகமற்ற இளைஞரொருவர் செயலாளரின் வீட்டுக்கு வந்தார். அப்போது அவருக்கும் செயலாளருக்கும் நடந்த உரையாடல் இது.

வந்தவர் : நீங்கள்தானே பீர்முஹம்மத் மாஸ்டர்?
செயலாளர் : ஆம். நீங்கள் யார்?
வந்தவர் : எங்கள் லீடரைச் சந்திக்க எப்போது வருகிறீர்கள்?
செயலாளர் : எந்த லீடரை?
வந்தவர் : உங்கள் சமாதான சபையில் சற்றுமுன் பேசப்பட்ட லீடரை
செயலாளர் : அது உங்களுக்கு எப்படித் தெரியும்?
வந்தவர் : அது உங்களுக்குத் தேவையில்லை. வரும் நேரத்தைச் சொல்லுங்கள்.
செயலாளர் : 10.00 மணிக்கு எங்கே வரவேண்டும்?

அந்த இளைஞர் வரவேண்டிய இடத்தைச் சொன்னதும் செயலாளருக்கு வியர்க்கத் தொடங்கிவிட்டது. ஆயினும் மறுக்க முடியாது. எனவே "சரி, வருகிறேன்" என்று வந்தவரை அனுப்பி வைத்தார்.

இச்சந்திப்புப் பற்றி வீட்டவர்களுக்குத் தெரிந்தால் கலவரமடைவார்கள் என்பதால் வேறு காரணங்களைக்கூறி வீட்டைவிட்டுப் புறப்படுவதற்கிடையில் நேரம் 10.00 மணியைத் தாண்டி விட்டது. அப்போது முன்னர் வந்த இளைஞர் மீண்டும் செயலாளர் வீட்டுக்கு வந்தார். "லீடர் காத்துக்கொண்டிருக்கிறார்' என்று சற்று கூடாகக்கூறினார். உடனே அவருடன் புறப்பட்டுச் சென்று ஜனாப். காதர் இப்றாகிம் அவர்களையும் அழைத்துக்கொண்டு குறிப்பிட்ட இடத்தை மூவரும் அடைந்தனர். அந்த லீடரும் அங்கு வந்து சேர்ந்தார்.

பகலிலேயே மனிதர் நடமாட அஞ்சும் ஒரு மயான பூமி. நேரமோ நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. கும்மிருட்டில். சுமார் இருபது ஆயுதபாணிகள் ஏறக்குறைய முப்பது மீற்றர் சுற்றுவட்டத்தில் சூழ்ந்து நிற்க பேச்சுக்கள் ஆரம்பமாயிற்று. அந்த லீடர் சம வயதினராகவும் உரையாடிய விதத்தில் படித்தவராகவும் நிதானமானவராகவும் காணப்பட்டார். பேச்சின் தொடக்கத்தில் "நான் உங்கள் இருவரையும் போன்று உத்தியோகத்தன் அல்லாவிட்டாலும் பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீட இறுதியாண்டிலிருந்த போது தமிழ்த்தேசிய விடுதலைக்காகப் படிப்பை நிறுத்திக்கொண்டவன்" என்று தன்னை அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொண்டார். இதனால் சற்று அச்சம் தெளிந்த நிலையில் இயல்பான தன்மையில் உரையாடல் தொடர்ந்தது. உலகின் போராட்ட வரலாறுகளைக் கரைத்துக் குடித்திருந்தார் அந்த லீடர். பேச்சின் சாராம்சம் இதுதான். அவர் கூறினார் :

"மருதமுனையில் 'ஜிஹாத்' குழுவொன்று செயற்படவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் வெளியூரைச் சேர்ந்த ஒரு குழு பெரியநீலாவணை எல்லையில் மருதமுனைக்குள் முகாமிட்டிருப்பதாகவும் அது தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடாத்த முஸ்தீபுகள் செய்து வருவதாகவும் நம்பகமான புலனாய்வுத் தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. அதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் முயற்சியில்தான் இன்று அல்-மனார் மகாவித்தியாலயத்தில் நீங்கள் நடாத்திய சமாதான சபைக் கூட்டத்தையும் வேவுபார்க்க எமது புலனாய்வாளர்களை அனுப்பியிருந்தோம். அதன் மூலம் நான் முன்கூறிய 'ஜிஹாத்' குழுபற்றிய தகவல் சமாதான சபை யினருக்குத் தெரியாதென்பதையும் நீங்கள் எம்மைச் சந்தித்துப் பேசத் தீர்மானித் திருப்பதையும் அறிந்துகொண்டோம். உங்கள் நல்லெண்ணத்தைப் புரிந்து கொண்டதால்தான் நாமே உங்களை அழைத்து வரும்படி ஆளனுப்பினோம். விடயத்தை இப்போது உங்களுக்கு தெரியப்படுத்திவிட்டோம். இதன் பின்னர் மேற்படி குழுவினால் தமிழ்மக்களுக்கு ஏதேனும் நடக்குமானால் தகுந்த பதிலடி கொடுப்போம். அது மருதமுனைக்கோ முஸ்லிம்மக்களுக்கோ பாதிப்பை தருமானால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல" என்று கூறி முடித்தார்.

ஆனால் நாம் 'ஜிஹாத்' குழு சம்பந்தமாக அவர்களுக்குக் கிடைத்த தகவலில் உண்மையிருக்க முடியாதென வாதாடியதுடன், நமது கிராமத்தின் இன உறவுச் சார்பு பற்றியும் எடுத்தியம்பினோம்.

மேலும் இதுதொடர்பில் அசம்பாவிதம் ஏதும் நிகழுமாயின் அதற்கான தார்மீகப் பொறுப்பைச் சமாதான சபையின் சார்பில் நாமிருவரும் ஏற்றுக்கொள் வதாக உறுதியளிக்கப்பட்டது. அங்கு இடம்பெற்ற உரையாடல்கள் அனைத்தும் அவர்களினால் ஒலிப்பதிவு செய்யப்பட்டமையை இறுதி நேரத்தில் அறிந்து கொள்ள முடிந்தது. பின்னிரவு 1.00 மணியளவில் விடைபெற்றுக் கொண்டோம்.

அங்கிருந்து புறப்பட்ட செயலாளரும் மற்றவரும் அவ் அகால வேளையிலேயே சபைத் தலைவரையும் முக்கியஸ்தர் சிலரையும் ஒன்றுகூட்டி பேச்சுவார்த்தை பற்றி விபரித்தனர். உடனே அனைவரும் புறப்பட்டு ஜிஹாத் குழுவினர் தங்கியிருப் பதாகப் போராளிகள் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்றனர். உண்மையாகவே அவ்வாறான புதிய முகங்கள் சிலர் அங்கு காணப்பட்டனர். அவர்களை விசாரித்த போது "தமது நண்பர்கள் சிலரின் அழைப்பின்பேரில் வந்ததாகவும், யாரையும் தாக்கும் நோக்கத்தில் வரவில்லை" எனவும் கூறினார்கள். எனினும் அவர்கள் அங்கு தங்கியிருப்பதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை இதமாக எடுத்துக் கூறியபின் வழியனுப்பி வைக்கப்பட்டனர். அதனையடுத்து வந்த பல தினங்கள் எல்லை யோரக் கண்காணிப்புக்களை சபை உறுப்பினர்களே மேற்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இளமைத் துடிப்புக்கொண்ட ஆனால் பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்க முடியாத சிலரினால் கிராமத்துக்கு ஏற்படவிருந்த பேரழிவு உடனடியானதும் துணிச்சல் மிக்கதுமான அணுகுமுறையினால் இறையுதவியுடன் தவிர்க்கப்பட்டது.

ஊர்காவற் படைச் சேவை....

மேற்குறிப்பிடப்பட்ட சம்பவங்களையொத்த ஏராளமான நிகழ்வுகளைச் சந்தித்த சமாதான சபை, இக்கிராமத்தின் நலன்பேண என்னென்ன கருமங்களில் ஈடுபட வேண்டுமெனக் கருதப்பட்டதோ அத்தனை விடயங்களிலும் தன் கவனத்தைச் செலுத்தியது. சந்தர்ப்ப சூழ்நிலைகட்குத் தகுந்தவாறு சகல முயற்சிகளிலும் ஈடுபட்டது. அவையனைத்துக்கும் அடிநாதமாய் அமைந்தது கிராமத்தின் பாதுகாப்பு சார்ந்த விடயமேயாகும்.

1989/90ஆம் ஆண்டுகளில் ஆயுதக் குழுக்களால் அடிக்கடி முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்களை முறியடிப்பதிலும் பதிலடி கொடுப்பதிலும் அரச படைகளின் கவனம் பெருமளவு ஈர்க்கப்பட்டிருந்தது. இதனால் கிராமங்களையும் மக்களையும் பாதுகாக்கும் விடயத்தில் ஊர் மட்டத்திலான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும்படி அரசாங்கத்தால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதனையொட்டி ஊர்காவற் படைகள் அமைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டு அப்படைக்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கும் ஒழுங்குகள் முன்னெடுக்கப் பட்டன. நமது கிராமத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பல இளைஞர்களுக்கு 1990 ஆகஸ்டில் ஆயுதப் பயிற்சி பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கான செலவுகள் அனைத்தையும் சமாதான சபையே ஏற்றுக்கொண்டது. இவ்விடயத்தில் அம்பாரை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (SSP) ஆகவிருந்த ஜனாப். நூர்தீன் அவர்கள், பிராந்திய இராணுவத் தளபதி ஜனாப். மீராசாஹிப் ஆகியோர் வழங்கிய ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் மிகப்பெறுமதி வாய்ந்தனவாகும்.

ஆயுதப் பயிற்சி பெற்ற இளைஞர்களைக் கொண்டு ஊர்காவற்படை அமைக்கப் பட்டது. இப்படையினர் பொலிஸாருடன் இணைந்து கிராமத்தைக் காக்கும் கடமையில் ஈடுபட்டனர். இவர்களுக்குப் பொலிஸாரினால் ஆயுதங்கள் வழங்கப் பட்டன. அரசாங்கத்தால் கொடுப்பனவுகள் வழங்குவதாகக் கூறப்பட்ட போதிலும் அவை உடனடியாக வழங்கப்படவில்லை. அது வழங்கப்படத் தொடங்கும்வரை அவர்களைப் பராமரிக்க வேண்டிய கடமை சமாதான சபையின் மீதே விழுந்தது. ஏனெனில் இரவு முழுவதும் விழித்திருந்து கடமைபுரியும் இவர்களால் பகல் நேரங்களில் வேறுதொழில்களில் ஈடுபடுவது அசாத்தியமாக இருந்தது. இதனால் அவர்களது குடும்ப ஜீவனோபாயம் பாதிப்புக்கு உள்ளானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஊர்காவற் படையினரின் சேவையை இலகுபடுத்தும் நோக்கில் விழிப்புக் குழுக்களை அமைக்கும் முயற்சியும் முன்னெடுக்கப்பட்டது. அதன்பேரில் மருதமுனையும் பாண்டிருப்பு, பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவுகளும் பத்து வலயங்களாக வகுக்கப்பட்டன. ஒவ்வொரு வலயத்துக்கும் சமாதான சபையின் இளம் உறுப்பினர்களின் தலைமையில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் சுமார் 200 இளைஞர்கள் மனமுவந்து ஈடுபட்டனர். ஆயினும் அவர்களுக்கான தாபரிப்புக்கும் உபகரணச் செலவுகளுக்கும் சபை ஏற்பாடு செய்யவேண்டியிருந்தது. இவைகளைக் கருத்திற்கொண்டு அதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டது.

அதன்படி ஏற்கனவே வகுக்கப்பட்டிருந்த ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு வசூல் குழு அமைக்கப்பட்டது. அவர்களால் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வசூல் பெறப்பட வேண்டியவர்களின் பட்டியலும் மாதாந்த உதவு தொகைகளும் நிர்ணயிக்கப்பட்டன. அவை பின்வருமாறு : (இது அன்றைய நாணயப் பெறுமதி)

அரிசி ஆலைகள்	-	ரூபா. 400.00
லொறிகள்	-	ரூபா. 300.00
பெரிய கடைகள்	-	ரூபா. 300.00
பெரிய நூல் வர்த்தகர்கள்	-	ரூபா. 300.00
சிறிய நூல் வர்த்தகர்கள்	-	ரூபா. 200.00
சிறிய கடைகள்	-	ரூபா. 200.00
தறிமால்கள்	-	ரூபா. 200.00
ஓடாவி மால்கள்	-	ரூபா. 200.00
பேக்கரி, தேநீர்க்கடைகள்	-	ரூபா. 150.00
தேநீர்க்கடைகள்	-	ரூபா. 100.00
அரச ஊழியர்கள்	-	ரூபா. 50.00
பொதுமக்கள்	-	விரும்பியளவு

இத்திட்டத்தினைப் பிரகடனப்படுத்தும் கூட்டம் அப்போதைய சபைத் தலைவர் ஜனாப். ஏ.எச்.எம். மஜீத் (அதிபர்) அவர்களின் தலைமையில் 1990-11-26ஆம் திகதி நடைபெற்றது. இதில் மருதமுனை அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி திரு. தவுலகல அவர்களும் கலந்துகொண்டார்கள். மேலும் இதுபற்றிய துண்டுப் பிரசுரங்களும் வீடுகள் தோறும் விநியோகிக்கப்பட்டன. ஊர்மக்களின் பரிபூரண ஒத்துழைப்புடன் இத்திட்டம் வெற்றிகரமாக அமுல்நடாத்தப் பட்டன. இதன் மூலம் திரட்டப்பட்ட நிதி சேவையிலிருந்த 80 ஊர்காவற்படை வீரர்களுக்குத் தலா ரூபா. 1000/- வீதம் மாதாந்தம் வழங்கப்பட்டது. இதற்கப்பால் விழிப்புக் குழுவினருக்கான இரவுநேரத் தேநீர், சிற்றுண்டி ஏற்பாடுகளும் பொதுமக்களால் செய்துகொடுக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் விழிப்புக்குழு தொடர்பான நிதிக் கையாள்கையைப் பொறுப்பேற்கும்படி வங்கி அதிகாரியும் நமது சபை உறுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினருமான அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டார். அவர் அப்பொறுப்பினை ஏற்று அதனைத் திறம்பட நிறைவேற்றுவதில் தனது அர்ப்பணிப்புமிக்க சேவையை வழங்கினார்.

சகஜநிலை பேணும் நடவடிக்கைகள்....

இதுவரை விபரிக்கப்பட்டவைகள் அவ்வப்போது தோன்றிய திடீர்ப் பிரச்சினை களுக்கு உடனடித் தீர்வுகண்ட சந்தர்ப்பங்களாகும். பிரச்சினைகள் உருவானதன் பின்னர் அவற்றுக்குப் பரிகாரம் தேடுவதையும் சமாளிப்பு முயற்சிகளில் ஈடுபடு வதையும்விட நிரந்தர சமாதானத்துக்கான வழிமுறைகளைக் கையாள்வதே நிலையான அமைதிக்கு வழியாகும். இப்படிப்பினையைச் சபை தன் அனுபவங் களிலிருந்து உணர்ந்துகொண்டது. அதன் விளைவாக சகோதர சமூகங்களுடன் பரஸ்பர நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் வளர்த்துக்கொள்ளும் பூர்வாங்க நடவடிக்கைகளைச் சபை மேற்கொண்டது. இதன் படிமுறையில் கல்முனை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, பெரியநீலாவணை, துறை நீலாவணை, கல்லாறு முதலிய கிராமங்களுடன் இறுக்கமானதும் இயல்பானது மான தொடர்புகளை வளர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏதேனும் சந்தேகங்கள், முரண்பாடுகள் தோன்றக்கூடிய சமிக்ஞைகள் தென்பட்டால் அவற்றை முளையிலேயே கிள்ளியெறிவதற்குக் காத்திரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. பிரச்சினைகளோடு தொடர்புபடும் கிராமங்களுக்கு நமது சபை உடனடி விஜயங்களை மேற்கொண்டு அக்கிராம முக்கியஸ்தர்கள், கோயில் நிருவாகிகளைச் சந்தித்துச் சுமூகமான உரையாடல்களை மேற்கொண்டது. சில தவிர்க்க முடியாத தேவைகளின் பொருட்டு போராளிகளின் முகாம்களுக்குச் சென்று பேசவேண்டிய தேவைகளும் ஏற்பட்டன.

உதவி அரச அதிபர் காரியாலயம்....

மேற்போந்த சேவைப் புலங்களுக்கப்பால் கிராம, சமூகத் தேவைகள் பற்றியும் சமாதான சபை கவனஞ் செலுத்தத் தவறவில்லை. அதிற் பிரதானமானது நடமாடும் உதவி அரசாங்க அதிபர் அலுவலக சேவையாகும். சபையின் பெரு முயற்சியினாலும் கிராமத்திலுள்ள உயர்மட்ட அரச உத்தியோகத்தர்களின் வழிகாட்டலின் பேரிலும் இச்சேவையைப் பெற்றுக்கொள்ளுதல் சாத்திய மாயிற்று. மேற்படி சேவை 1990-09-28ஆம் திகதி மருதமுனை மக்கள் மண்ட பத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வாரத்தின் பிரதி செவ்வாய்க்கிழமையும் இவ்வலுவலகம் செயற்பட்டதால் பொதுமக்களின் அனைத்துத் தேவைகளும் அலைச்சலின்றி நிறைவேறின. சிறப்பாக நடைபெற்று வந்த இச்சேவை சில தவிர்க்க முடியாத நிருவாகம் சார்ந்த காரணிகளால் நிறுத்தப்பட்டுவிட்டது.

கரையோர மாவட்டக் கோரிக்கை....

மேலும் அம்பாரை மாவட்டப் பள்ளிவாசல்களின் சம்மேளனம் முன்வைத்த கல்முனையைத் தளமாகக் கொண்ட கரையோர மாவட்டக் கோரிக்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றெடுக்கும் முயற்சியில் நமது சமாதான சபையும் அதன் முழுமையான ஆதரவை வழங்கியது. இவ்விடயம் சம்பந்தமாக அம்பாரை மாவட்டப் பள்ளி வாசல்களின் சம்மேளனம் 1990-10-05ஆம் திகதி கொழும்புக்கு விஜயமொன்றை மேற்கொண்டது. கல்முனைக்குடியைச் சேர்ந்த அல்-ஹாஜ் மௌலவி எஸ்.எஸ்.எம். இப்றாஹிம் சாஹிப் அவர்களின் தலைமையில் சென்ற தூதுக்குழுவில் மருத முனையின் சார்பில் மஸ்ஜிதுந் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைச் செயலாளரும் சமாதான சபைச் செயலாளருமான ஜனாப். எஸ்.எம். பீர்முஹம்மத் (அதிபர்) அவர்களும் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி அல்-ஹாஜ். ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்களும் கலந்துகொண்டனர். இக்குழுவினர் அப்போதைய பாராளுமன்ற சபாநாயகர் அல்-ஹாஜ் எம்.எச். முஹம்மத், அமைச்சர்கள் அல்-ஹாஜ் ஏ.ஆர். மன்சூர், அல்-ஹாஜ். ஏ.சீ.எஸ். ஹமீத், பாராளுமன்ற உறுப்பினர்களான அல்-ஹாஜ். எம்.எச்.எம். அஷ்ரஃப், அல்-ஹாஜ். எம். ஹலீம் இஷாக், மற்றும் முன்னாள் சென்ட்டர் அல்-ஹாஜ் எஸ். இஸட். எம். மசூர்மௌலானா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது. அத்துடன் அமைச்சர் அல்-ஹாஜ். ஏ.ஆர். மன்சூர் அவர்களின் அனுசரணையின் பேரில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்களை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து மகஜரொன்றையும் கையளித்தது. ஜனாதிபதி அவர்கள் இத்தூதுக்குழுவை கௌரவத்துடன் வரவேற்று தேநீர் விருந்துபசாரமும் வழங்கினார். மேலும் இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து சாதகமான முடிவொன்றை அறிவிப்பதாகக் கூறினார். ஆனால் பிரதேச அரசியல்வாதிகள் கரையோர மாவட்டத்தினை முன் மொழிந்தவர்கள் தாம்தான் என மாறிமாறி உரிமைகொண்டாடி வந்தார்களே தவிர காரியம் மட்டும் இன்றுவரை கைகூடவில்லை என்பது மிகக் கசப்பானதொரு உண்மையாகும்.

நிறைவு

மருதமுனைச் சமாதான சபை கடந்துவந்த இருபது ஆண்டுகால சமாதானப் பாதையில் அது சந்தித்த சோதனைகள், சாதித்த சாதனைகள், அனுபவித்த வேதனைகள் சிறியனவும் பெரியனவுமாக ஏராளம் ஏராளம். அவையனைத் தையும் எழுத்தில் வடித்து முடிப்பதோ வார்த்தைக்குள் வரையறுத்து விடுவதோ சாத்தியமாகக் கூடியதல்ல. எனினும் முக்கியமான சில விடயங்கள் முடிந்தளவு மீள்பார்வைக்குட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சில நிகழ்வுகளும் அவற்றோடு தொடர்புள்ளவர்களும் அபூர்வமாக விடுபட்டிருக்கக்கூடும் என்பதை மறுப் பதற்கில்லை. அது தனிமனித நினைவாற்றலின் இயல்புங்கூட. அதனால் தயவுசெய்து சம்பந்தப்பட்டவர்கள் அவற்றைப் பெரிதுபடுத்தற்க.

மேலும், இவ்வெளியீட்டின் இலக்காகக் கொள்ளப்படுவது யாதெனில், மிக இக்கட்டான காலகட்டங்களில் மருதமுனைப் பெருமக்களும் சமாதான சபையும் காட்டிய சகிப்புத் தன்மை, கடைப்பிடித்த அணுகுமுறைகள் என்பன எந்நதள வுக்குப் பலனளித்துள்ளன, ஒப்பீட்டு ரீதியில் இழப்புக்களைக் குறைத்துள்ளன அல்லது தவிர்த்துள்ளன என்பதை மறுபரிசீலனை செய்வதேயாகும். அதன் பேறாக, கால, தேச, வர்த்தமானங்களுக் கமைவாக திருத்தங்களும் மடைமாற்றங் களும் மறுக்கக்கூடியனவுமல்ல. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் எதிர்வுகளைப் புறக்கணித்த சிந்தனையோ நமது சக்திக்கு அப்பாற்பட்ட வாய்வீரமோ விவேகமற்ற வெறும் இளமைத் துடிப்போ சாதகமான பெறுபேறுகளைப் பெற்றுத்தருவதில்லை. சிலவேளை நமது தரப்பில் நீதி, நியாயம் நிறைய இருக்கலாம். ஆனால் அவற்றை யார் முன்னிலையில் நிறுவப்போகிறோம். நமது மறுதரப்பு யதார்த்தத்தை உள்வாங்கி உணரும் பக்குவம் வாய்ந்ததா? என்பவற்றைப் பொறுத்தே வெற்றி தோல்விகள் அமையும். உதாரணமாக கட்டுப்பாட்டை இழந்து தடம்மாறி ஓடிவரும் வாகனத்தின் எதிர்நின்று அதன் சாரதியைப் பார்த்து நியாயம் பேசிக்கொண்டிருக்க முடியாது. அவ்வேளையில் நாம் எவ்வளவு தூரம் ஒதுங்கிநின்று நம்மைக் காத்துக்கொள்ள முயல்கிறோமோ அதுதான் சாதுரியம், சாணக்கியம், சாமர்த்தியம், சமயோசிதம் எல்லாம். ஆனால் எப்போதும் அவ்வழி முறையைப் பின்பற்றிக் கொண்டிருக்கவும் முடியாது. அது விவேகமுமல்ல. வெறும் கோழைத்தனம். அவ்வப்போது உள்ள சாத்திய அசாத்தியங்களையும் சாதக பாதகங்களையும் கருத்திற்கொண்டு பிழைகளைத் தொட்டுக்காட்டித் திசைக்கோட்படுத்துவதும் மீறும்போது தட்டிக்கேட்பதும் தடுத்து நிறுத்த முயற்சிப்பதும் தவிர்க்க முடியாதவையாகும். எனவே நாம் கடந்துவந்த பாதையில் பெற்ற படிப்பினைகள் நமது கிராமத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கும் அமைதிக்கும் ஓரளவுக்கேனும் வழிகாட்ட வேண்டுமெனவும் சாந்தம் நிகழும் சமாதானக் கிராமமாக மருதமுனை திகழவேண்டுமெனவும் வல்ல இறைவனை வழுத்துவோமாக.

என்றும் என் நினைவலையில்...

நாட்டின் வடகிழக்குப் பிரதேசத்தில் நிலவிய
அசாதாரண சூழ்நிலைமைகளின் போது
இராணுவக் கோப்ரலாகக் கடமையாற்றிய எமது மண்ணின் மகன்
இறமுளான் முகம்மது அஸ்வர் அவர்கள்
பயங்கர வாதத்திற்குப் பலியானார்.

இவர்கள் பயங்கரவாதத்திற்குப் பலியான
எமது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் வீரர்கள் :

1.	எச்.எல். ஜமால்தீன், MA	S.S.P.
2.	ஈ.எம். நஸ்றுத்தீன்	S.I.
3.	வை.எல்.எம். அன்ஸார்	S.I.
4.	எஸ். நுஃமான்	S.T.F.

இவர்களுக்காக நாம் பிரார்த்திப்போமாக!

- சமூக மேம்பாட்டு மையம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனிமுகம்மது பீர்முகம்மது, ஜே.பி.

முஸ்லிம் விவாகப் பதிவாளர்

சீனிமுகம்மது பீர்முகம்மது 27-01-1947ல் மருதமுனையில் பிறந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்விகற்றார். க.பொ.த. உயர்தரம், ஆசிரியர் பயிற்சி பொதுக்கலை முதல்தேர்வு (GAQ) 1976, பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா (NTE - மஹரகம) போன்றவைகளை இவரது உயர்கல்வித் தகைமைகளாக்கிக் கொண்டார்.

01-11-1968ல் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் 01-06-1989இல் அதிபர் தரத்திற்கு உயர்ச்சி பெற்றார். தனது ஓய்வின்போது முஸ்லிம் விவாகப் பதிவாளராக இன்றுவரை பணிசெய்கிறார். மெய்வல்லுனர் மற்றும் பெருவிளையாட்டு விருதுகள், உதைபந்தாட்ட தேசியமட்ட நடுவருக்கான தகைமை, சமாதான அமைப்புக்களில் 25 ஆண்டு சேவைகளுக்கான விருது போன்றவற்றின் சொந்தக் காரனான பீர்முகம்மது அவர்கள் மருதமுனை மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆ பள்ளி வாயலின் செயலாளராகவும், தலைவராகவுமிருந்து கால்நூற்றாண்டு காலமாக அதன் வளர்ச்சிக்காக உழைத்தவர். கரைவாகு வடக்கு முஸ்லிம் பிரதேசத்தில் இயங்கிய சமாதான அமைப்புக்களின் செயலாளராகவும் கால்நூற்றாண்டு காலமாகத் தனது அளப்பெரிய சேவைகளை வழங்கியவர். மருதமுனை சந்தித்த பாரிய இரண்டு அனர்த்தங்களின் போதும் (சூறாவளி, சுனாமி) அரச, தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து கிராமத்தின் மீள் கட்டுமானப் பணியில் செயற் பட்டவர்.

எஸ்.எல். றசீனா உம்மாவின் கணவரான இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். இவருடைய புதல்வர் அஷ்-ஷேய்க் பீ.எம். இர்பான நளீமி, சூடான் பல்கலைக் கழகத்தில் கலாநிதி (Phd)ப் பட்டம் பெற்று அண்மையில் வெளியாகியிருப் பதும் நோக்கற்பாலது.

அகில இலங்கை சமாதான நீதவானாகிய இவர் விளையாட்டு, கலை இலக்கியம் எனப் பல துறைகளிலும் தம்மை ஈடுபடுத்தியதோடு இன்றும் மருதமுனையின் சகல நடவடிக் கைகளின் போதும் தன்னால் முடியுமான பங்களிப்பினையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் 78இன் தொடர்ச்சி.....

"இஞ்சயிங்க" என்பது 'இங்கே பாருங்கள்' அல்லது 'இங்கு கொஞ்சம் கவனம் செலுத்துங்கள்' என்பது பொருள். அதிகமான பெண்கள் தனது கணவனை என்றழைப்பது இந்த மண்ணுக்கே சொந்தமான சொல். அதேபோல **"ஒங்களத்தான்"** என்பதும் 'உங்களைத்தான்' என்பதன் திரிபாகும்.

வயது சென்ற ஒருவரை தமிழ்மொழியில் **"தாத்தா"** என்று அழைப்பது வழக்கம். ஆனால் எமது கிராமத்தில் மட்டும் மூத்த சகோதரி, தாத்தா என அழைக்கப்படுவது வழக்கம். அதேநேரம் அயலிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் இச்சொல் மருவி லாத்தா, ராத்தா என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. காரணம் இன்னும் புரியவில்லை.

மனிதர்களின் பின்புறத்தை எம்மவர் **"குப்பி"** என அழைத்து வருகின்றனர். ஏனைய கிராமங்களில் அவ்வாறு அழைப்பதாகத் தெரியவில்லை. மாறாக குண்டி, சூத்து என அழைப்பதைக் காணலாம்.

ஒருவர் மரணித்தால் அவருடைய ஜனாசாவிலுள்ள அசுத்தங்களெல்லாம் வெளியாவது வழக்கம். எனவே மரணமடைந்ததும் மரணச்செய்தியை ஊரவர் களுக்கு அறிவிப்பதற்கு ஜனாசாவை மேலோட்டமாகக் கழுவி பிறிதொரு இடத்தில் வைப்பது வழக்கும். ஜனாசாவைப் பார்ப்பதற்கு வருபவர்கள் முதலாவது கேட்கும் கேள்வி "கசகப்பாய் மாத்தியாச்சா" அல்லது "அடிக்கழுவி யாச்சா" என வினவுவர். ஜனாசா நல்லடக்கம் செய்த தினத்திலிருந்து வருடம் வருடம் முதலாம், ஏழாம், நாற்பதாம், வருடம் என கத்தம் ஓதும் வழக்கத்தினை எமது முன்னோர்கள் பழக்கியிருந்தனர். இன்று மார்க்க விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் சில குடும்பங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் முதலாம் நாள் கத்தத்தினை 'இருட்டுக்கத்தம்' என அழைக்கும் வழக்கு எம்மூரில் மட்டுமேயுண்டு.

"மகுடி" என்றொரு சொல்லும் எம்மூரில் மட்டுமுள்ளது. ஒருவர் ஒரு விடயத்தை நேராகப் பேசாமல் பொடிவைத்துப் பேசுவதை இவ்வாறு அழைப் பதுண்டு. அல்-மனார் வீதியைச் சூழவுள்ள ஒரு குடும்பத்தினர் எதனையும் வெளிச்சம் போட்டே பேசி வந்தனர். அதன் காரணமாக அவர்கள் வாழும் அப்பிரதேசம் மகுடிவட்டை என அழைக்கப்பட்டு வந்துள்ளது. மேலும் ஒரு விடயத்தைத் தன்னால் மட்டுமே செய்ய முடியும் எனப் பீத்தித் திரிவோரை **"எடுப்பிணி"** எனக்கூறும் வழக்கமும், கஷ்டம் எனும் சொல் **"கக்கிசம்"** என மருவியுள்ளதையும் நாம் காணலாம். இவ்வாறான மண்வாசனைச் சொற்களைப் பாதுகாத்து எமது எதிர்காலச் சந்ததியிடம் ஒப்புவிப்பதும் எமது கடமை யல்லவா?

- அபூறஸ்மி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையில் நாட்டு வைத்தியம்

அல்-ஹாஜ். ஏ.எல். மீராமுகைதீன், ஜே.பி.
(ஓய்வுபெற்ற அதிபர்)

மனித வரலாற்றுடன் வைத்திய வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளது. மனிதன் தனது அன்றாட நடவடிக்கைகளாலும் உணவுப் பழக்க வழக்கங்களாலும் நோய்களுக்குள்ளானான். இதற்கான தீர்வினைத்தேடி தனக்குச் சூழவுள்ள தாவரங்களை நாடினான். பல்வேறு முகிலிகள் நோய்களுக்கான மருந்துகளாக மாறின. அன்று வாழ்ந்த புத்திஜீவிகளான சித்தர்கள் இதனை எதிர்கால சந்ததியினருக்காக ஏடுகளில் பதிவுசெய்து வைத்தனர். அந்தப் பதிவுகளே சித்த ஆயுள்வேத வைத்திய முறைக்கான அடிப்படைகளாக அமைந்தன.

மருதமுனையின் வரலாறும் நீளமானது. நூற்றுக்கணக்கான வைத்தியர்கள் அளப்பரிய சேவைகளைச் செய்து மரணித்துள்ளார்கள். அவர்களின் பரம்பரையில் சிலர் இன்னும் இதனை செய்து வருகின்றனர். இவர்களை நாம் என்றும் நன்றி உணர்வுடன் நினைவுகூருவோம்.

மருதமுனையின் நாட்டு வைத்திய முறையை அறிவதற்கு எந்த எழுத்து மூலமான ஆவணங்களும் கிடைக்கவில்லை. எனக்குத் தெரிந்தவர்களையும் என்னைவிட முதியவர்களையும் சந்தித்து உரையாடி வைத்தியர்களையும் வைத்திய முறைகளையும்பற்றி கேட்டறிந்து கொண்டேன். இதனை நெறிப்படுத்தி தொகுத்து எழுதுவதற்கு எனது சகோதரரும்வைத்தியருமான அல்-ஹாஜ் ஏ.எல் செய்னுலாப்தீன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கள் உறுதுணையாக இருந்தார்கள். கிராமத்திலுள்ள பலரைச் சந்தித்து தகவல்களைச் சேகரிப்பதற்கு உதவியாக இருந்த நண்பர் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் ஜனாப் ஏ.எல். சித்தீக் (தலைவர், மஸ்ஜிதுல் ஹிதாயா) அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருதமுனையில் நடைமுறையிலிருந்த வைத்திய முறைகளை கூட்டு மொத்தமாக சொல்வதைவிட பின்வரும் தலைப்புக்களில் வகைப்படுத்திப் பார்ப்பது மிகப் பொருத்தமானதாகும்.

01. சித்த ஆயுள்வேத வைத்தியம்
02. முறிவு வைத்தியம்
03. விசக்கடி வைத்தியம்
04. சித்த சுவாதீனமற்றவர்களுக்கான வைத்தியம்
05. தொற்றுநோய் வைத்தியம்
06. மாந்திரீக வைத்தியம்
07. கண்ணூறு, காத்தணவு, ஜின், சைத்தான் வைத்தியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்த ஆயுள்வேத வைத்தியம் பிரதான வைத்தியத் துறையாக இருந்தது. இதில் பரம்பரை பரம்பரையாக தேர்ச்சி பெற்றவர்கள் இருந்தார்கள். இன்றுகூட தீர்வு காண முடியாத பக்கவாதம் பாரிசவாதம், ஆஸ்த்துமா, வெண்குஸ்டம், கருங் குஸ்டம் போன்ற நோய்களை அன்று பூரணமாகக் குணப்படுத்தியதற்கான சான்றுகளாக நோய் குணமடைந்தவர்கள் இன்றும் உள்ளனர்.

இலங்கை ஆயுள்வேத வைத்திய சபை 1952ஆம் ஆண்டு நாட்டு வைத்தியர் களுக்கான பரீட்சை நடாத்தி அனுமதி (Licence) வழங்கினார்கள். அதற்கு முன்னர் வைத்தியம் நடைபெற்றபோதும் யாருக்கும் வைத்தியத்திற்கான அனுமதி வழங்கப்படவில்லை. வைத்தியர்கள் நாடி பிடித்துப் பார்த்தும் நோயாளியிடம் கேட்டறிந்தும் வைத்தியம் செய்வார்கள். வைத்திய வடிவங்களாக குளிசை, எண்ணை, தூள், பஸ்பம், லேகியம், நஸ்ம் போன்ற பல காணப்பட்டன. பொதுவாக தூள், லேகியம் போன்றவற்றில் குறிப்பிடத்தக்களவு போதைவஸ்து சேர்ந்திருக்கும். (கஞ்சா, அபின், சாராயம் போன்றவை) இதற்கு இவர்களுக்கு அரச அனுமதியும் இருந்தது.

மருந்துக்குத் தேவையான முகிலிகள் சூழலில் காணப்பட்ட போதும் மேலதிக மான முகிலிகளைப் பெறுவதற்கு பிராதான வீதியில் பல பட்டோலைக் கடைகள் காணப்பட்டன.

01. சுலைமாலெப்பை பட்டோலைக் கடை (வெள்ளக் குட்டியர்)
02. அபூபக்கர் பட்டோலைக் கடை (மாச் சீனியர்)
03. புர்கான் பட்டோலைக் கடை
04. ஆதம்பாவா பட்டோலைக் கடை

இவை போன்ற பட்டோலைக் கடைகள் காணப்பட்டன. இன்று பார்மஸிகள் காணப்படுவதுபோல் அன்று பட்டோலைக் கடைகள் காணப்பட்டன.

சிறு பிள்ளைகளின் நோய்களுக்கு பெரும்பாலும் கைமருந்துகளே கொடுக்கப் பட்டது. இதில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற சிலரும் இருந்தார்கள். (சின்னப் பரிசரியார்) கைம்மருந்துகளுக்குத் தேவையான வேம்பு, மாதுளை, கைப்பூரவள்ளி, துளசி, வேலிப்பருத்தி, முடக்கொத்தான், பால்க்கள்ளி போன்ற தாவரங்கள் எல்லா வளவுகளிலும் காணப்பட்டன. குடலேற்றமும் வயிற்றுப் போக்கும் சிறுபிள்ளை களுக்கு சாதாரணமாகக் காணப்பட்டது. இதற்கு மாந்தம் என்று சொல்லி வயிறு தட்டி குடலை இறக்கி சமப்படுத்தி விடுவார்கள். இதற்கான சாம்பல் தட்டு எல்லா வீடுகளிலும் இருந்தன. குறிப்பிட்ட வயது முதிர்ந்த சிலர் இதனைச் செய்தார்கள்.

பிரசவ வைத்தியம் அடுத்த முக்கியமான ஒரு துறையாக இருந்தது. இன்று இருப்பது போன்று பிள்ளை தரித்ததிலிருந்து பிரசவிக்கும்வரை வைத்திய பரிசோதனை முறைகள் (கிளினிக்) எதுவும் இருக்கவில்லை. பிள்ளைப்பேறு ஒரு சாதாரண இயற்கை நிகழ்வாகவே கருதப்பட்டது. கருத்தரித்தவர் தனது உடல் நிலையில் ஏதேனும் வித்தியாசம் தென்பட்டால் வைத்தியரை நாடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிட்டால் காலம் நெருங்கியதும் வைத்தியரிடம் செல்வார்கள். அவர் குளிசைகளைக் கொடுத்து ஊறல்போட்டு குடிக்கச் சொல்வார். ஊறலிலும் பல முகிலிகள் சேர்க்கப்படும். கடுப்பு ஏற்பட்டதும் வைத்தியரும் மருத்துவிச்சியும் நோயாளர் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவர். பிள்ளை பிறந்து நீராட்டும் வரை அவர்கள் அங்கேயே தரித்திருப்பார்கள்.

இதே நேரத்தில் பிள்ளை எந்த ஆபத்துமில்லாமல் பிறக்க வேண்டும் என்ப தற்காக தலைப்பாத்திஹா என்றதொரு அரபுத் தமிழ் பாட்டு பாடப்படும். இதற்காக லெப்பைமார்கள் வந்திருப்பார்கள். இந்நிகழ்ச்சி மிகச்சிறப்பாக இடம்பெறும். இது பாத்திமா நாச்சியாரின் புகழ்ச்சிப்பாடலாகும்.

1985ம் ஆண்டு வரை மருதமுனையில் பிள்ளைகள் வைத்தியசாலையில் பிறந்த தற்கான பதிவுகள் மிகக்குறைவு. எல்லாப் பிள்ளைகளும் வீட்டிலேயே பிறந்தன. ஆனால் இன்று எந்தப் பிள்ளையும் வீட்டில் பிறப்பதுமில்லை. பிறக்கவும் முடியாது. பிள்ளை பிறந்த வீட்டு வாயலில் வேப்பங்கொத்து தொங்கவிடப் படும். இது நாற்பது நாட்கள் வரை இருக்கும். இத்துறையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பலர் இருந்தனர். (சிலுப்பா பரிசாரியார், ஆதம்பாவா பரிசாரியார், காரியப்பர் பரிசாரியார்) எல்லோரும் தாய்க்கு சாராயப்பொடி எனும் தூளை கொடுக்க மறந்துவிட மாட்டார்கள். தூள் ஒன்று இடிக்கப்பட்டு அது சாராயத் தினால் கூடல் செய்யப்படும்.

மருத்துவிச்சிமார்களில் பாத்துமுத்துவையும் அவரது மகள் ஹதீஜா உம்மா வையும் எமது சமூகம் என்றுமே மறக்க முடியாதவர்கள். அவர்கள் இன்று தாதிமார் செய்கின்ற வேலைகளை முழுமையாக செய்து முடிப்பார்கள். அதனைத் தவிர பெண்கள் மரணித்தால் குளிப்பாட்டுவதையும் கபனிடுவதையும் அவர்களே செய்தார்கள்.

அன்று விஷ வைத்தியத்தின் தேவை காலத்தின் கட்டாயமாக இருந்தது. கிராமப் புறமாக இருந்ததால் பாம்பு, பூரான், நட்டுவக்காலி, கொடுக்கான், குளவி போன்ற விஷ ஜந்துக்களின் தாக்கம் இருந்தது. அதற்கான வைத்திய முறையும் கட்டாயமாக தேவைப்பட்டது. அப்துல் றஹீம் (றஹீம் பீடிக்காரர்), அப்துல் றகுமான் லெப்பை மரைக்கார், காந்தியர், சீனியர், எஹியாலெப்பை, இரட்டை யரின் பாதி, செய்யதுப்போடி போன்ற சிலர் இதற்கான வைத்தியங்களைச் செய்தார்கள்.

விஷக்கடிக்கு உள்ளானவர்களை வைத்தியரின் வீட்டுக்கு கொண்டு சென்று விஷக்கல்லில் வைத்துப் பிடிப்பார்கள். விஷம் இறக்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறும். கசாயம், மருந்து என்பன கொடுக்கப்படும். சரிவராவிட்டால் காத்தான்குடி, ஏறாவூர் மௌலானா கபுறடிக்கு கொண்டு சென்று மீஸான் கட்டையில் விசம்பட்ட இடத்தை வைத்து விசத்தை இறக்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுள்வேத வைத்தியத்துறை சார்ந்ததாகவே முறிவு வைத்தியத் துறையும் காணப்பட்டது. இதற்கும் சிலர் வைத்தியம் செய்தார்கள். நோவு எண்ணை, பத்து, ஒத்தடம், மட்டை வைத்துக் கட்டுதல் போன்ற வைத்திய முறைகள் பின்பற்றப்பட்டன. இதற்கான வைத்தியர்களாக முகைதீன் பாவா (மணலைப் போடியாரும் மகனும்) மற்றும் அச்சு முகம்மது ஓடாவியார். இன்றும் ஓடாவியாரின் மூத்த மகள் றகுமத்தும்மா தன்னை நாடிவரும் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்கிறார்.

தற்போது அல்-ஹாஜ் வை.எம். சபுறுத்தீன் என்பவர் இதனை படித்து ஆயுள்வேத வைத்திய சபையின் அனுமதியுடன் வீட்டிலும் கல்முனையிலும் வைத்திய நிலையங்களை நடத்துகின்றார்.

உழுக்குச் சுழுக்கு ஏற்பட்டால் காலால் பிறந்தவர்களைத் தேடுவார்கள். அதாவது பிள்ளைகள் பிறக்கும்போது சாதாரணமாக தலைதான் முதலில் வரும். மிக அருமையான சந்தர்ப்பத்தில் கால்கள் வெளியில் வரும். அப்படியான பிள்ளைகளை காலால் பிறந்த பிள்ளைகள் என்று சொல்வார்கள். நோயாளர்களை இவர்களின் வீடுகளுக்குக் கொண்டு சென்று அந்தக் காலினால் உழுக்குச் சுலுக்கு ஏற்பட்ட இடத்தை தடவி விட்டால் சுகமடைந்து விடும். இன்றும் இந்த நடைமுறை யைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு கிராமத்தில் சிலர் இருந்தார்கள். எனது மச்சான் அல்-ஹாஜ் ஏ.எம். ஷாபி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் வீட்டில் இன்றும் அவ்வைத்தியம் நடைபெறுவதை காண்கின்றேன்.

ஆயுள்வேத வைத்திய துறையில் இன்னுமொரு வைத்திய முறையும் காணப்படு கின்றது. அது சித்த சுவாதீனமற்றவர்களுக்கு செய்கின்ற வைத்திய முறை. இது மிகவும் பயங்கரமானது. வருத்தம் ஏற்பட்டவர்களை வைத்தியரிடம் கொண்டு செல்வது மிகவும் கடினம். நான்கு அல்லது ஐந்து ஜவான்கள் சேர்ந்து நோயாளியைப் பிடிக்க வேண்டும். அவர் வீதிகளில் ஓடத்தொடங்கி விடுவார். மிகவும் கஸ்டப் பட்டு பிடித்து வந்து குற்றியில் போடுவார்கள். அன்று மயக்க மருந்துகள் எதுவும் இல்லை.

பெரிய தென்னங்குற்றியை எடுத்து அதில் இரண்டு கால்களையும் ஓட்டக் கூடியவாறு துளையிட்டு கால்களை அதனுள் செலுத்தி நிலத்தில் அலவாங்கை நாட்டி அதனோடு இணைத்து சங்கிலியால் கட்டிவிடுவார்கள். நோயாளி அசைய முடியாது. அதற்குப் பின்னர்தான் மருந்து கொடுப்பார்கள். நல்ல பிரம்படியும் கொடுப்பார்கள். உணவும் இந்த நிலையிலேயே வழங்கப்படும். நோய் சுகமானதும் குற்றியைக் கழற்றிவிடுவார்கள். மிக அண்மைக் காலத்தில் இவ்வாறான ஒரு வைத்திய முறையை மன்சூர் வைத்தியர் அவர்கள் செய்தார்கள். அவர்கள் மேலும் பல நோய்களுக்கும் வைத்தியம் செய்தார்.

அக்காலத்தில் ஏற்பட்ட தொற்று நோய்களான அம்மை, கூஹைக்கட்டு, குக்கல், கண்ணோய் போன்றவற்றுக்கு வைத்தியர்கள் இல்லாமலே வைத்தியம் நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய அம்மை நோய் ஏற்பட்டால் நோயாளியை 14 நாட்களுக்கு தனிமைப் படுத்துவார்கள். தனியான இடம், வெள்ளை உடை, தனியான பாத்திரம் என்பன வழங்கப்படும். வேப்பம் துளிர், மாதுளம் துளிர், செஞ்சந்தணம் என்பவற்றை அரைத்து பன்னீருடன் சேர்த்து உடல் முழுவதிலும் பூசுவதுடன் குடிக்கவும் கொடுப்பார்கள். வேறு எந்த மருந்தும் கொடுக்கப்படமாட்டாது. உணவு மிகவும் கட்டுப்பாடாக இருக்கும். மீன், இறைச்சி என்பவற்றை வீட்டு வளவுக்குள்ளும் எடுக்கக்கூடாது. வீட்டில் கறி தாளித்தல், பொரித்தல் என்பனவும் தடைசெய்யப் படும். இவைகளால் அம்மன் கோவினை அடைந்துவிடுவார் என்று கூறி அனைத் தையும் தடுத்துவிடுவார்கள். நோயின் குணம் கூடினால் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த ஐயர்களை அழைத்து வந்து வேப்பங்கொத்தினால் வீசி வீசி தாலாட்டுப் பாடுவார்கள். நோய் குணமடைந்ததும் அவர்கள் பாவித்த எல்லா பொருட்களும் இடமும் வெந்நீரினால் சுத்தம் செய்யப்படும். நோய் குணமடையும் வரை கடவலில் வேப்பங்கொத்து தொங்கவிடப்படும்.

கூஹைக்கட்டு ஏற்பட்டால் செஞ்சந்தனம் அல்லது பனம்பழம் கரைத்து தொண்டை, முகம் முழுவதும் பூசிவிடுவார்கள். வெள்ளை உடை அணிவிக்கப் பட்டு தாய்மார்களின் வெள்ளி மணிக்கோர்வையை கழுத்தில் போட்டு விடுவார்கள். வேறு எந்த மருந்துகளும் கொடுப்பதில்லை. நோயும் குணமடைந்து விடும்.

கண்நோய் ஏற்பட்டால் கடுக்காயைச் சுட்டு அரைத்து முலைப்பாலுடன் சேர்த்து கண்புருவத்தில் வட்டமாகப் பூசிவிடுவார்கள். அல்லது கோழிச்சாயத்தை முலைப்பாலில் கரைத்து பூசிவிடுவார்கள். வேறு எந்த மருந்துகளும் இல்லை.

தீராத இருமல், குக்கல் நோய் ஏற்பட்டு தீர்வதற்கு காலதாமதம் ஏற்பட்டால் வித்தியாசமான நடைமுறைகளைப் பின்பற்றுவார்கள். பக்கத்து கிராமத்திலுள்ள இளக்கச்சாதி (வண்ணான், நாசிவன்) போன்றவர்களின் வீடுகளுக்குச் சென்று எச்சில் (உணவு) வாங்கிக்கொடுப்பார்கள். நோயும் குணமடைந்து விடும்.

அன்றைய மக்களிடம் பேய், பிசாசு, சூனியம், செய்வினை, சைத்தான், ஜின், கண்ணூறு, காத்தணவு என்பவற்றில் அதிக நம்பிக்கை இருந்தது. இது தொடர் பான வைத்தியர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகக் காணப்பட்டது. இவர்களை வைத்தியர்கள் என்று சொல்வதில்லை ஏதோ ஒரு வகையில் நோய் களைக் குணப்படுத்தினார்கள்.

சித்த வைத்தியர்கள் அனைவரும் மாந்திரீக வைத்தியம் தெரிந்திருந்த போதிலும் எல்லோரும் அதனை விரும்பிச் செய்வதில்லை. அதில் சிலர் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களாக காணப்பட்டார்கள். பலர் இதற்கான வைத்தியங்களை செய்தார்கள் இன்றும் ஒரு சிலர் இதனைச் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் முதலில் குறி அல்லது இஸ்ம் கணக்குப் பார்ப் பார்கள். இதற்கு கிராமத்தில் பலர் இருந்தாலும் அயல் கிராமங்களிலும் சிலர் இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறி சொல்வதில் பாண்டிருப்பு கிராமத்தைச் சேர்ந்த செல்லத்துரை வாத்தியார் மிகவும் பிரசித்தி பெற்றவர். அன்றைய மருதமுனையில் அவரைத் தெரியாத யாரும் இருந்ததில்லை. ஏனெனில் எல்லா வீடுகளுக்கும் அவரே நிலமெடுப்பார். ஒரு நாளைக்கு நான்கைந்து வீடுகளுக்கும் நிலமெடுப்பார். நிலமெடுக்கும்போது ஒரு சிறு பகுதியை நச்சு நிலமெனக் கழித்து விடுவார். அதில் எதுவும் செய்யக் கூடாது. மாறிச் செய்தால் தீராத நோய் ஏற்படும். இதனடிப்படையில் உடை பட்ட வீடுகளும் உண்டு.

குறிபார்ப்பதென்பது வெற்றிலையையும் பாக்கையும் காசையும் வட்டாவில் வைத்துக் கொடுக்க வேண்டும் . அதனை அவர் எண்ணி கணக்கொன்று பார்ப்பார். பார்த்து விட்டு நோய் அல்லது சூனியம் அல்லது பேய் என ஏதாவது சொல்வார். அதற்கேற்றாற் போல் வைத்தியம் செய்யும் வழக்கம் அதிகமாக இருந்தது.

இஸ்ம் கணக்குப் பார்ப்பதும் இப்படித்தான். ஒரு லெப்பையிடம் போய் முழுப் பெயரையும் பிறந்த திகதியையும் சொன்னால் அவர் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு நோயா அல்லது பேயா என சொல்வார். இதை வைத்து வைத்தியம் ஆரம்பமாகும்.

இவற்றுக்கு வேறு வகையான வைத்திய முறைகள் உண்டு. மடை வைத்தல், கழிப்புக் கழித்தல், காய் வெட்டுதல், சூனியம் எடுத்தல் போன்ற பல வேலைகளில் ஈடுபடுவார்கள். இதற்கெல்லாம் அதிகம் மந்திரம் பயன்படுத்தப்படும். இதற்கு நமது வைத்தியர்களுடன் நீலாவணைக் கிராமத்தைச் சேர்ந்த கேசகப்பிள்ளை வைத்தியர், வவாசிங்கம் வைத்தியர் போன்றவர்கள் இத்துறையில் அதிகம் ஈடுபட்டார்கள்.

இரவெல்லாம் விழித்திருந்து சூனியம் எடுப்பதற்கு காய்வெட்டி, களிப்புக் கழித்து விட்டு மடையை நாலாஞ் சந்தியில் வைத்து விடுவார்கள். அதில் பாக்கு, வெற்றிலை, வாழைப்பழம், செவ்வரத்தம் பூ, கழுத்து வெட்டப்பட்ட பாணிச் சேவல், சில்லறைக் காசு போன்ற பலபொருட்கள் இருக்கும். இதனால் பெற்றோர் பிள்ளைகளை அதிகாலையில் வெளியில் அனுப்பமாட்டார்கள். அதில் முதலில் விழிப்பவர்களுக்கு அந்த நோய் மாறிவிடும் என்பது அவர்களின் கருத்து. எனினும். துணிச்சலுள்ள சில இளைஞர்கள் மடையில் சிறுநீர் கழித்து விட்டு சில்லறைக் காசை எடுத்துச் செல்வதுமுண்டு.

திடீரென ஒருவர் மரணித்து விட்டால் அவருக்கு அங்கம் விட்டு விட்டார்கள் அல்லது பேய் அறைந்து விட்டது எனக் கூறுவார்கள். இப்போது நாம் அதனை மாரடைப்பு எனக் கூறுகின்றோம்.

அரபு மொழியிலும் அரபுத் தமிழிலும் பாண்டித்தியம் உள்ள சிலர் வேறு வகையான வைத்திய முறைகளையும் செய்தார்கள். இவர்கள் ஜின், சைத்தான் என்பவற்றை விரட்டுவதாக சொல்வார்கள். இதற்காக இவர்கள் பின்வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய முறைகளைப் பின்பற்றினார்கள். தண்ணீர் ஓதிக் கொடுத்தல், ஊதிப்ப பார்த்தல், தாயத்துக் கட்டுதல், அரைக்கூடு போடுதல், வீடு, வழவு காவல் பண்ணுதல் என்பனவாகும். இதற்காக அவர்கள் அரபு எழுத்துக்களையும் அரபு ஆயத்துக்களையும் பயன்படுத்தினார்கள்.

அன்று எமது கிராமத்தில் எந்த சில்லறைக் கடைகளுக்குப் போனாலும் மெழுகு, சீலை, நாடாக் கயிறு, செம்புத் தகடு, அரைக்கூடு, சாம்புராணி, சந்தணக்குச்சி என்பன இருக்கும். பொதுவாக சிறியவர், பெரியவர் என்ற வேறுபாடின்றி எல்லோருடைய இடுப்பிலும் தாயத்து காணப்படும்.

தாயத்து என்பது அரபு எழுத்துக்களை கடதாசியில் அல்லது செம்புத் தகட்டில் எழுதி மெழுகு சீலையில் சுற்றி அல்லது அரைக்கூட்டில் போட்டு நாடாக் கயிற்றினால் இறுகக் கட்டி சாம்புராணி புகைபோட்டு ஊதிப்பார்த்து கட்டி விடுவார்கள். தொடக்கு வீட்டுக்குப் போனால் முறிந்துவிடும், மீண்டும் கட்ட வேண்டும். அரைக்கூடு அல்லது செம்புத் தகடுகளை வீட்டின் நாலா மூலை களிலும் தொங்கவிடுவார்கள். அல்லது அதனைப் புதைத்து விடுவார்கள். இது வீடு, வளவு காவல் பண்ணுதல் என்றழைக்கப்படும்.

நாட்டு வைத்திய முறைகளைப்பற்றி இன்னும் கூறலாம். நீண்ட காலமாக இந்த வைத்திய முறைகள் நமது கிராமத்தில் நடைபெற்று வந்த போதிலும் எந்த விதமான விபரீதங்கள் இடம்பெற்றதற்கான தடையங்கள் இல்லை.

1960களில் மட்டக்களப்பு மாங்காட்டைச் சேர்ந்த டாக்டர் சீனித்தம்பி ஐயா அவர்களின் வருகை (கு.க. டொக்டர்) வைத்தியத் துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவரும் ஒரு யூனானி வைத்தியர்தான். ஆனாலும் ஆங்கில மருந்துகளை கொடுக்கத் தொடங்கினார். நாட்டு வைத்தியர்களுடன் இணைந்து செயற்பட்டார். அதனைத் தொடர்ந்து டாக்டர் ரவி அவர்களின் வருகை ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. இவர் பச்சத் தண்ணீர் டாக்டருடைய மகன். இவரும் இந்தியாவில் ஹோமியோ வைத்தியத்தை கற்றவர். இருந்த போதிலும் ஆங்கில மருந்துகளையும் ஹோமியோ மருந்துகளையும் இவர் பயன் படுத்தினார். சிறுபிள்ளை நோய்களை சிறப்பாக கையாண்டார். எல்லோரிடமும் கனிவாகப் பழகியதனால் சுமார் ஐந்து தசாப்தங்களாக இக்கிராமத்தில் வைத்தியராக கடமையாற்றுகின்றார். இன்று வீதிக்கு வீதி MBBS வைத்தியர் களின் கிளினிக்குகள் இருந்தபோதிலும் டொக்டர் ரவியைத் தேடிச் செல்பவர் களும் உண்டு.

இதே காலப்பகுதியில் கல்லாறு வைத்திய சாலையில் கடமையாற்றிய டொக்டர் வாமதேவன் AMP அவர்கள் மக்காமடி வீதியில் ஒரு கிளினிக் செய்தார்கள். பத்து வருடங்களுக்கு மேலாக இக்கிராமத்திலிருந்து ஆங்கில வைத்தியத்தை மிகவும் சிறப்பாகச் செய்தார். அவர் துணிச்சலும் திறமையும் மிக்கவர். எந்த நோயைக் கண்டும் பின்வாங்க மாட்டார். பிரசவ வீடுகளுக்குச் சென்றால் பிள்ளை பெறாமல் வெளியேற மாட்டார். இவர்களையெல்லம் நாம் என்றென்றும் நன்றி யுணர்வோடு நினைவுகூர வேண்டியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மருதமுனையில் இரண்டு மத்திய கல்லூரிகளின் செயற்பாட்டினால் கல்வி நிலை வியப்படையும் அளவுக்கு முன்னேறியுள்ளது. வைத்தியத் துறையை நோக்கினால் நூற்றுக்கும் குறையாத எம்.பி.பி.எஸ். வைத்தியர்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண், பெண் தாதிகளும், இருபத்தைந்து அளவிலான யூனானி வைத்தியர்களும், இரண்டு சத்திர சிகிச்சை நிபுணர்களும், சில வைத்திய ஆலோசகர்களும், இரண்டு பொது வைத்திய நிபுணர்களும் இரண்டு வைத்தியத்துறை பேராசிரியர்களும் காணப்படுகின்றனர். மேலும் வைத்தியத்துறை வளர்ச்சியடைய எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

மருதமுனையில் நாட்டு வைத்தியத்தில் ஈடுபட்டவர்களும் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களின் பெயர் விபரம்

பெயர்	வழங்கிய பெயர்	பதிவிலக்கம்
01. அறியமுடியவில்லை	மகுடிப் பரிகாரி	
02. அறியமுடியவில்லை	மாவடியார்	
03. அறியமுடியவில்லை	கொண்டைக்காரன்	
04. அறியமுடியவில்லை	அக்கரைப்பற்று பரிகாரி	
05. மீரா சாஹிபு	சாஹிபுப் பரிகாரி	
06. முஹைதீன் பாவா	மையதீன் பாவா பரிகாரி	
07. மு.ப. அலியார்	நெடிய பரிகாரி	747
08. மு.ப. அஹமதுலெப்பை	சிலுப்பா பரிகாரி	736
09. அ. அப்துல் மஜீத்	தறிப்பரிசாரியார்	8220
10. அ.செய்னுலாப்தீன்	ஓய்வுபெற்ற ஆசிரியர்	11047
11. அஹமது லெப்பை	போடிப்பிள்ளை	
12. அறியமுடியவில்லை	பொல்லடியார்	
13. ஆதம்பாவா மரைக்கார்	ஆதம்பாவா வைத்தியர்	
14. உஸன் காரியப்பர்	காரியப்பர் பரிகாரி	
15. முகைதீன் பிச்சை	காரியப்பர் பரிகாரி	764
16. முகம்மது காஸிம்	தும்பியர்	
17. சாஹிபு லெப்பை	சாஹிபுப் பரிகாரி	
18. ஆதம்பாவா	தும்பியர்	749
19. அப்துல் ஹமீத்	அவுத்தல் பரிகாரி	
20. முஹம்மது சித்தீக்	சித்தீக் வைத்தியர்	
21. ஏ. பாறூக்	பாறுக் வைத்தியர்	
22. எப். முபீன்	முபீன் வைத்தியர் (மதுரை)	5647
23. ஏ.எச். மஹ்மூத்	மஹ்மூத் வைத்தியர்	
24. ஐ.எல்.எம். சுல்தான்	கோழி கொத்தியர்	11294
25. வி.எம். அப்துல் காதர்	கோழி கொத்தியர்	10888
26. கலன்தர் லெப்பை	கலன்தர் பரிகாரி	
27. க. அகமது லெப்பை	சின்னப் பரிகாரி	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. முகைதீன் பாவா	மையதீன் பரிகாரி (நெசவு மாஸ்டர்)	8533
29. எம். அபுல்ஹஸன்	ஓய்வுபெற்ற (ஏ.ஓ)	
30. சீனித்தம்பி	சீனிப்பரிகாரி	
31. சீ. சம்சுத்தீன்	சம்சுத்தீன் வைத்தியர்	
32. முஹம்மது சுல்தான்	சுல்தான் பரிகாரி	
33. முஹம்மது மன்சூர்	மன்சூர் வைத்தரியர்	
34. இஸ்மாலெப்பை	குஞ்சுத்தம்பி பரிகாரி	
35. முகைதீன் பாவா	சூத்திரக்காரன்	
36. அப்துல் கபூர்	ஒல்லிக் கேனியர்	
37. அச்சு முஹம்மது	லாலாட அச்சுமம்மது	
38. பி. நூர் முஹம்மது	ராசர்	
39. இப்றாலெப்பை	மிசினூட்டுக்காரன்	
40. ஏ.பி.எம். முகையதீன்	சந்தணக்குச்சி பரிகாரி (சாத்திரியார்)	
41. மீராமுகைதீன்	மின்னல்கொடி	
18. ஆதம்பாவா	தும்பியர்	749
42. அச்சு முஹம்மது	யூனீசியர்	
43. அப்துல் றஹீம்	றஹீம் பீடிக்காரர்	
44. அச்சு முஹம்மது	ஓடாவியார்	
45. அப்துல் ரகுமான்	அத்தரமான் மரிக்கார்	
46. அப்துல் ரஹீம்	சிங்கள வைத்தியர்	
47. ஆதம்பாவா	சாப்பைப் பரிகாரி	
48. இப்றாலெப்பை	காந்தியர்	
49. சீனித்தம்பி	புலவர சீனி, பாம்புப் பரிசாரி	
50. அசனார் லெப்பை	சாத்திரியார்	
51. முகைதீன் பாவா	மணலைப்போடி	
52. சுபையிர் ஹாஜியார்	ஹோமியோ வைத்தியர்	
53. இத்ரீஸ்	ஈழக்குயில் இத்ரீஸ்	
54. யூ.எல்.ஏ. அஸீஸ்	தேங்குழல் அஸீஸ்	
55. வை.எம். சபுறுதீன்	முறிவு வைத்தியர்	7136
56. ஏ.சி. செய்னுலாப்தீன்	மீசைக்காரர்	11958
57. எஸ்.எம். தொகுத்தார்	றபியுதீன் பாமஸி	11963
58. எம்.எல்.எம்.ஏ. காதர்	ஹோமியோ (ஓய்வு கணக்காளர்)	11959
59. எஸ்.எம்.எம்.எஸ். உமர்மௌலானா (கல்வியதிகாரி, ஹோமியோ)		11965
60. அறியப்படவில்லை	ரெட்டையரில் பாதி	
61. உதுமான் லெப்பை	உதுமான் பரிகாரி	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். ஏ.எல். மீராமுகைதீன், ஜே.பி.

ஓய்வுபெற்ற அதிபர்

அஹமது லெப்பை மீராமுகைதீன், மருதமுனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்டவர். 29-05-1944ல் பிறந்த இவர் 01-06-1964ல் மாணவ ஆசிரிய ராகத் தெரிவுசெய்யப்பட்டார். அன்று முதல் இன்று வரை இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றார். தமது கல்வியை முழுமையாக மருதமுனை வடக்கு ஆண்கள் பாடசாலை (அல்-மனார் மத்திய கல்லூரி) யில் கற்றார். பின்னர் பாடசாலைக் காலங்களில் பொதுப் பணிகளில் ஆர்வமுடைய வராகக் காணப்பட்டார். 1960களில் மருதமுனையில் முன்னணிக் கழகங்களாக விளங்கிய இளைஞர் புத்துணர்ச்சி மன்றத்தின் தலைவராக, செயலாளராக இருந்து பல பொதுப்பணிகளில் ஈடுபட்டுள்ளார். ஏதாவது கற்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் க.பொ.த. (சா/த) சித்தியடைந்ததும் கரடியனாறு விவசாயப் பாடசாலைக்குச் சென்று ஒரு வருட கால விவசாயப் பயிற்சியைப் பூரணமாக முடித்தார். அதன் பின்னர் அவர் ஆசிரியராக இணைந்து கொண்டதால் விவசாய ஆசிரியர் இல்லாத காலகட்டத்தில் பாடசாலைகளில் அப்பாடத்தை சிறந்த முறையில் போதித்தார்.

1972ல் தான் பிறந்து வாழ்ந்த பிரதேசத்திலேயே சீனிமுகம்மது உம்முல் பதீலா என்பவரை திருமணம் செய்து நான்கு பிள்ளைகளின் தந்தையானார். பிள்ளைகள் நால்வரும் தற்போது நல்ல நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

கல்வியின் மீது கொண்ட ஆர்வத்தின் காரணமாக திருமணம் முடித்து பிள்ளைகள் பெற்ற பின்னர் க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை (BA) முடித்தார். அது மருதமுனையின் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு ஒரு முன்னுதாரணமாகும். அதனைத் தொடர்ந்து கொழும்புப் பல்கலைக் கழகத்தில் உள்வாரியாக பட்ட பின் படிப்பை (Diploma in Education) நிறைவுசெய்தார்.

அல்-மனார் கல்வி வரலாற்றில் உத்வேகத்தை ஏற்படுத்திய கல்விப்பணி மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினருள் ஒருவராக இருந்து அதன் வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார். 1994ம் ஆண்டு அல்-மனார் மத்திய கல்லூரியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக கடமை யேற்று தனது ஆரவாரமற்ற நிருவாகத் திறமை மூலம் பௌதீக வள அபிவிருத்தியிலும் கல்வி அபிவிருத்தியிலும் அளப்பெரிய பங்களிப்பை நல்கினார். இதன் பிரதிபலனாக 1996ம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக சிறந்த அதிபராகவும் சிறந்த பாடசாலை யாகவும் அல்-மனார் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1983 - 1993 காலப்பகுதியில் பொலன்னறுவை மாவட்ட அல்-ஹிலால் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, மாவட்ட சமூகக் கல்வி ஆசிரிய ஆலோசகராக ஆற்றிய சேவைகள் பொலன்னறுவை மாவட்ட மக்களாலும் கல்விச் சமுகத்தாலும் இன்றும் மீட்டிக் கொள்ளப்படுகின்றன.

மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவராகவிருந்து தனது கலாச்சார பங்களிப்பை சரிவரச் செய்துள்ளார்.

ஓய்வுபெற்ற பின்னர் காத்தான்குடி அனாதை இல்லத்தின் முகாமையாளராகவும் பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரியின் பிரதி அதிபராகவும் இருந்து அந்நிரு வாகிகளால் என்றும் விரும்பப்படக்கூடிய நிருவாகத்தை செய்துள்ளார்.

மருதமுனை மர்கஸுத் தஃலீமில் இஸ்லாமியின் ஆரம்பகால உறுப்பினராக விருந்து "ஹிப்ழுல் குர்ஆன்" மத்ரஸாவின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ததுடன் 2007ஆம் ஆண்டு அந்நிருவாகத்தை பொறுப்பேற்று அதனுடைய பௌதீகவளத் தேவைகளை பூர்த்தி செய்வதிலும் மாணவர்களை உள்ளீர்ப்பதிலும் கரிசனை யுடன் இயங்கி வந்துள்ளார். அது இன்று அந்நஹ்ழா அரபுக் கல்லூரி என்ற பெயரில் இயங்குவதற்கு இவருடைய பங்களிப்பு கனதியானது. இன்றும் இக்கல்லூரியின் நிருவாக உறுப்பினராகவும் போதனாசிரியராகவும் கடமை யாற்றி வருகின்றார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவாஸி நீதிபதிகள்

கரைவாகு வடக்கு குவாசி நீதிமன்ற நீதிபதிகளாக எம்மவர்கள் பலர் சிறந்த பணி செய்திருக்கின்றனர்.

1) அல்-ஹாஜ். S.A.R.S. கலீல் மவ்லானா மௌலவி
2) மர்ஹூம் A.H.M. மஜீத், ஜே.பி. அதிபர்
3) அல்-ஹாஜ். K.L.M. ஹனிபா மவ்லவி, ஜே.பி.
4) அல்-ஹாஜ். N.M. இஸ்மாயில், ஜே.பி. (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்) 2013 ஜனவரியிலிருந்து இவர் கடமையாற்றி வருகிறார்.

பிறப்பு இறப்புப் பதிவாளர்

மருதமுனையில் பிறப்பு இறப்புப் பதிவாளர்களாக மர்ஹூம்களான அ.ம.தோ. அசனார், அ.ம.தோ. ஆதம்பாவா, எஸ்.ஏ. ஹமீத், ஐ.எல். இப்றாலெப்பை, உதுமாலெப்பை, ஏ.கீ.ஏ. வாஜித் ஆகியோர்களும், ஏ. ஆப்தீன் என்பவரும் கடமையாற்றியதுடன் தற்பொழுது மருதமுனை வடக்கு பிறப்பு இறப்புப் பதிவாளராக பீ.எம்.எம். ஜலீல் கடமையாற்றி வருகிறார்.

விவாகப் பதிவாளர்கள்

மருதமுனை மக்காமடி வீதியை எல்லையாகக் கொண்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் வடக்குப் பகுதியின் விவாகப் பதிவாளராக ஓய்வுபெற்ற அதிபர் அல்-ஹாஜ். எஸ்.எம். பீர்முஹம்மது ஜே.பி. அவர்களும், தெற்குப் பிரதேசத்தின் விவாகப் பதிவாளராக அஷ்-ஷெய்க் எம்.எஸ். மன்சூர் (ஷர்கி) அவர்களும் கடமைபுரியும் அதேவேளையில் அக்பர் கிராமத்திற்கான தனியான விவாகப்பதிவாளர் நியமிக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பினை இந்தியன் செலக்ஷன் உரிமையாளர் அல்-ஹாஜ். எம்.எம். உதுமாலெப்பை ஜே.பி. அவர்கள் நிறைவேற்றி வருகிறார். மர்ஹூம் ஏ.எல்.எம். சதக்கத்துல்லா லெப்பை அவர்கள் இப்பதவியை முன்னர் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை வைத்தியசாலை வரலாறு

அப்துல் றகீம் அப்துல் சத்தார், ஜே.பி.
செயலாளர். வைத்தியசாலை அபிவிருத்திச் சபை. மருதமுனை.

மருதமுனை மக்கள் ஆரம்பத்தில் தமது வைத்திய தேவைகளுக்காக நாட்டு வைத்தியர்களின் சேவையையே பெற்றுக்கொண்டார்கள். காலப்போக்கில் ஆங்கில வைத்தியத்தில் நாட்டம்கொண்டு கல்முனை ஆதார வைத்தியசாலை, கல்லாறு மாவட்ட வைத்தியசாலை, பிரத்தியேக வைத்திய சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சை பெறத்தொடங்கினர். மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு போன்ற தூர இடங்களிலுள்ள வசதிகூடிய வைத்தியசாலைகளையும் நாடத்தொடங்கினார்கள். இனப்பிரச்சினை பூதாகரமாகி போக்குவரத்துகளிலும், ஏனைய வசதிகளிலும் கஷ்ட நிலைமைகள் ஏற்பட்டபோது, மருதமுனையில் ஒரு வைத்தியசாலையின் தேவை உணரப்பட்டது. ஆகக்குறைந்தது கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஒரு மகப்பேற்று மருத்துவ நிலையமாவது அமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்பட்டது. இதன் அடிப்படையில் 17-07-1991ம் ஆண்டு, சகோதரர் அப்துல் றசீட் (சலாம் ட்ரைவர்) என்பவரின் இல்லத்தில் மகப்பேற்று நிலையம் முதன் முதலாக தனது பணியை ஆரம்பித்தது. அதன் பொறுப்பு வைத்தியராக டாக்டர். கே. பாலசிங்கம் அவர்கள் நியமிக்கப் பட்டார்கள். இந்நிலையம் உருவாவதற்கு சகோதரர்கள் ஏ.எம். நாபி, ஐ.எல்.எம். முனவ்வர் (PHI கலீல்), செய்னுதீன் (CC), மர்ஹூம் சஃபான் ஆகியோரும் மற்றும் இன்னும் பலரும் முன்னின்று உழைத்தார்கள். பள்ளிவாசல் நிர்வாகத்தினர்களின் ஆதரவும் உதவிகளும் கிடைக்கப்பெற்றன.

1992 ஆகஸ்ட் மாதம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தின் ஒரு கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டது. 1994 மே மாதம் டாக்டர் கே. பாலசிங்கம் ஓய்வுபெற்று சென்ற வேளையில் டாக்டர் S.A.R.S.A. மவ்லானா பொறுப்பு வைத்தியராக கடமை யேற்றார். மகப்பேற்று சிகிச்சை வசதியுடன் வெளிநோயாளர் (OPD) சிகிச்சை வசதியும் இவரால் ஏற்படுத்தப்பட்டு சிறந்த முறையில் சேவை வழங்கப்பட்டது.

வைத்தியசாலைக்காக சொந்த இடமொன்று தேவையென உணரப்பட்ட போது மருதமுனை மையவாடிக்கு தென்புறத்தில் நிலத்தைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்முயற்சியில் பலர் ஈடுபட்டனர். அப்போது மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசல் தலைவராகவிருந்த மர்ஹூம் கே.எல். அலியார் ஜே.பி. அவர்களின் ஒத்துழைப்புடன் இது சாத்தியமானது.

கட்டிடங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளில் மருதமுனையிலுள்ள அரசியல் கட்சிகளின் குழுக்கள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். அஷ்ரப், அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் ஆகியோரை நாடி அவர்களின் மூலம் நடவடிக்கைகளை மேற்கொண்டன. அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களால் ரூபா ஐந்து இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இடைநடுவில் நிர்மாணப் பணிகள் ஸ்தம்பித மடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ல் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் அமைச்சராகிய போது, மருதமுனை ஸ்ரீ.ல.மு.கா. மத்திய குழு வைத்தியசாலை நிர்மாணப் பணிகளை முடித்து அதனை திறந்து வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவரிடம் முன்வைத்தனர். அக்கோரிக்கையை ஏற்ற அமைச்சர் அவர்கள் ரூபா இருபத்தைந்து இலட்சம் ஒதுக்கீடு செய்து கட்டிட நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 1995 மே மாதம் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது டாக்டர் மவ்லானா பொறுப்பு வைத்தியராக இருந்து சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

1997ம் ஆண்டு டாக்டர். ஏ.எல். பாறூக் (MBBS) அவர்கள் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையேற்று சிறப்பான முறையில் சேவையாற்றினார்கள். இவருடன் டாக்டர் மவ்லானாவும் ஏனைய வைத்திய அதிகாரிகளும் பக்க பலமாகவிருந்து வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக உழைத்தார்கள்.

13-06-2001ம் ஆண்டு இவ்வைத்தியசாலை சுற்றயற்கூறு வைத்தியசாலையாக பாராளுமன்ற உறுப்பினர் மருதூர்க்கனி அவர்களின் முயற்சியினால் தரமுயர்த்தப்பட்டது. மகப்பேற்று வைத்தியப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவுடன் உள்நோயாளர் சிகிச்சை விடுதி வசதிகளும் ஏற்படுத்தப்பட்டது.

இக்கால கட்டத்தில் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதற்காக விடுதி வசதியின்மை ஒரு குறைபாடான விடயமாக இருந்தது. ஸ்ரீ.ல.மு.கா. மத்திய குழுவின் தலைவராக இருந்த ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்களிடம் டாக்டர் மவ்லானா விடுத்த வேண்டுகோளுக்கிணங்க மேற்படி விடயமாக அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களிடம் பேசப்பட்டபோது ரூபா முப்பது (30) இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு விடுதி வசதி ஏற்படுத்தப்பட்டது (24 படுக்கை வசதிகளைக் கொண்ட விடுதி). மேலும் சுற்று மதிலுக்காகவும், தொலைபேசி இணைப்புக்காகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து (5) இலட்சம் மேலதிக நிதி ஒதுக்கப்பட்டு தேவைகள் நிறைவேற்றப் பட்டது. இது விடயத்தில் மத்திய குழுவின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கதாக விருந்தது. கல்முனைப் பிரதேச சபையின் தவிசாளர் ஐ.ஏ. ஹமீட், அமைச்சர் அஸ்ரப் அவர்களின் கிழக்கு மாகாண இணைப்பாளர் எஸ்.எம். அப்துல்லாஹ் சட்டத்தரணி ஆகியோர்களின் பங்களிப்பும் மகத்தானது.

இக்கால கட்டத்தில் நோயாளர்களை வேறு வைத்தியசாலைகளுக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்புவதற்கு அம்பியூலன்ஸ் வண்டி ஒன்று தேவைப்பட்ட போது மர்ஹூம் எஸ்.எம். சுல்தான் மரைக்கார் ஜே.பி. அவர்களின் முயற்சியினால் பெறப்பட்டது.

இவ்வாறு வைத்தியசாலையின் வசதிகளும் சேவைகளும் மேலும் அதிகரிக்க வேண்டுமென்ற தேவைகள் உணரப்பட்ட சமயத்தில் டாக்டர் ஏ.எல்.எம். மிஹ்ளார் (MBBS) அவர்கள் செப்டம்பர் 2004இல் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையேற்றார்கள். இதன் பின்னர் நிர்வாக கட்டிடமும் வெளிநோயாளர் பிரிவும் அமைக்கப்பட வேண்டுமென்று வைத்தியசாலை அபிவிருத்திச் சபை ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்களுடன் கலந்தாலோசித்தது. இதன் பலனாக அமைச்சர் அதாவுள்ளா அவர்களினால் 1 கோடி 25 இலட்சம் நிதி மதிப்பீட்டில் முதல் கட்டமாக ரூபா இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு கட்டிட நிர்மாணப் பணிகள் நவம்பர் 2004ல் வைபவ ரீதியாக ஆரம்பிக் கப்பட்டு துரிதகெதியில் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது டிசம்பர் 26, 2004இல் ஏற்பட்ட சுனாமி பேரலையின் காரணமாக வைத்தியசாலை முற்று முழுதாக அழிக்கப்பட்டது. இதனால் கட்டிட நிர்மாணப் பணியும் இடைநடுவில் கைவிடப்பட்டது. இதனால் எம்முடைய அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதமடைந்தது.

27-12-2004 மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசல் அலுவலக அறையில் வைத்திய சேவை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பாடசாலைகளில் சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அழிந்த வைத்தியசாலையிலிருந்து எடுத்துவரப்பட்ட மருந்து களையும், ஏனைய வைத்தியசாலைகளிலிருந்து பெறப்பட்ட மருந்துகளையும் உபகரணங்களையும் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைகள் மிகவும் கஷ்டங்களுக்கு மத்தியில் டாக்டர். ஏ.எல்.எம். மிஹ்ளார் அவர்களின் வழிகாட்டலில் ஏனைய வைத்திய அதிகாரிகளினதும் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட்டன. மேலும் ஜனவரி 10, 2005ல் சுகாதார அமைச்சின் மூலமும், தொண்டு நிறுவனங்களின் மூலம் கிடைத்த மருந்துகளையும், உபரணங்களையும் கொண்டு மக்கள் மண்டபத்தில் வைத்தியசாலை மீளவும் செயற்பட ஆரம்பித்தது. இதற்காக டாக்டர். ஏ.எல்.எம். மிஹ்ளார் அவர்களும், ஏனைய வைத்திய அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும், பிரமுகர்களும் எடுத்துக் கொண்ட அக்கறையும் முயற்சியும் வியக்கத்தக்கவை. சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் முதன் முதலாக மீளச்செயற்பட ஆரம்பித்த முதல் வைத்தியசாலை என்ற பெருமையும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மண்டபத்தை வைத்தியசாலைக்குப் பொருத்தமான இடமாக மாற்றி அமைக்க வேண்டிய தேவை இருந்தது. இதற்காக MSF என்ற பன்னாட்டு தொண்டர் நிறுவனம் மிகப்பாரிய பங்களிப்பைச் செய்தது. (மருந்துகள், உபகரணங்கள், தளர்பாடங்கள், அறைகளாகப் பிரித்தல், மலசல கூட வசதிகள்). டாக்டர் எம்.எம்.எம். ஜெமீல் அவர்களும் பல வகையான மருந்துகளையும் இங்கிலாந்திலிருந்து கொண்டு வந்து வழங்கினார்கள்.

மேலும் இடப்பற்றாக்குறை மக்கள் மண்டபத்தில் ஏற்பட்டபோது பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரை அணுகி கலந்துரையாடியபோது, மிக நல்ல முறையில் பரிசீலித்து, மேல் மாடியை விடுதிகளாகப் பிரித்து சகல வசதிகளையும் (மலசல கூடம், நீர் வசதி, அறைகளாகப் பிரித்தல், மின்விசிறிகள்) ஏற்படுத்தித் தந்தனர். இந்நிறுவனத்தினரை அல்-ஹாஜ். எம்.எச்.எம். நஸீர் அவர்களே டாக்டர் ஏ.எல்.எம். மிஹ்ளார் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். இவ்வாறு மக்கள் மண்டபத்தை திருப்தியான மருத்துவச் சேவைகளை வழங்கக்கூடிய ஒரு வைத்தியசாலையாக மாற்றுவதற்கு டாக்டர் மிஹ்ளார் அவர்களும், ஏனைய வர்களும் எடுத்துக் கொண்ட முயற்சி அபாரமானது, நன்றியுடன் நினைவு கூறக்கூடியது.

இந்நிலையில் பல் சிகிச்சைப் பிரிவு ஒன்று இல்லாத குறைபாடு உணரப் பட்டபோது பற்சிகிச்சைப் பிரிவிற்கான Dental Chair ஐயும், ஏனைய பெறுமதி யான பரிசோதனைக் கூட உபகரணங்களையும், சவூதி அரேபிய செம்பிறைச் சங்கத்தினூடாக சம்மாந்துறையைச் சேர்ந்த ஐ.எல்.எம். மாகிர் அவர்கள் (சவூதி தூதுவராலய மக்கள் தொடர்பு அதிகாரி) பெற்றுத்தந்தார்கள். இதனைத் தொடர்ந்து டாக்டர். M.A.H.J. பர்ஸானா (BDS) அவர்கள் பாலமுனை வைத்திய சாலையிலிருந்து இடமாற்றம் பெற்று 2005 டிசம்பர் மாதம் இங்கு கடமை யேற்றார்கள். இது ஒரு முக்கியமான சேவை முன்னேற்றமாகும்.

பழைய வைத்தியசாலையிலிருந்த அம்பியூலன்ஸ் வண்டி சுனாமியால் முற்றாக சேதமடைந்தது. எமக்கான புதிய அம்பியூலன்ஸ் வண்டியை Doctors World Wide என்ற பன்னாட்டு தொண்டர் நிறுவனம் ரூபா 46 இலட்சத்திற்கு இறக்குமதி செய்து தந்தது. இந்த நிறுவனத்தை காத்தான்குடியைச் சேர்ந்த பொறியியலாளர் அப்துல் றகுமான் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர்களுக்கான தங்குமிட வசதிகளும், ஏனைய ஒழுங்குகளும் மருதமுனையில் ஒழுங்குசெய்து கொடுக்கப்பட்டது. இதன் மூலம் ஏற்பட்ட நெருக்கத்தின் காரணமாக இந்த அம்பியூலன்ஸ் வண்டியை அவர்கள் பெற்றுத்தந்தார்கள்.

இன்னும் பல அமைப்பினரும், தனிப்பட்ட பிரமுகர்களும் வைத்திய சாலையின் வளங்களையும், வசதிகளையும் அதிகரிப்பதற்கு தங்களால் முடிந்த உதவிகளைச் செய்தனர். குறிப்பாக சிறிலங்கா ஜமாஅத்தே இஸ்லாமி குளிர்சாதனப் பெட்டியையும், தப்லீக் ஜமாஅத்தினர் கழிவறை வசதிகளையும் வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக பல நிறுவனங்களின் பேருதவிகளின் காரணமாக மக்கள் மண்டபத்தில் தற்காலிகமாக இயங்கிய வைத்தியசாலை மகப்பேற்று சிகிச்சை வசதி தவிர்ந்த ஏனைய சேவைகளை சிறந்த முறையில் வழங்கியது. இதற்காக உழைத்த பொறுப்பு வைத்திய அதிகாரி, ஏனைய வைத்தியசாலையில் தாதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் அனைவரும் பாராட்டிற்குரியவர்கள்.

அடுத்த கட்டமாக புதிய வைத்தியசாலை பொருத்தமான இடத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்ட போது, இதற்கான காணியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்காக பிரதான வீதிக்கு மேற்குப் புறமாக பொருத்தமான காணி தேடப்பட்டது. *Doctors World Wide* அமைப்பினரிடம் இது சம்பந்தமாக கலந்துரையாடியபோது அவர்கள் அதற்கு சம்மதித்து காணி விலைபேசப்பட்ட போதும் மிக அதிகவிலை கோரப் பட்டதால் அம்முயற்சி கைவிடப்பட்டது. அந்நிதியைக் கொண்டே புதிய அம்புலன்ஸ் வண்டி வாங்கப்பட்டது.

சுனாமிப் பேரழிவு ஏற்பட்டவுடன் டாக்டர். மிஹ்ளார் அவர்களுடன் இங்கிலாந்திலிருந்து தொடர்பு கொண்ட டாக்டர் எம்.எம்.எம். ஜெமீல் அவர்களிடம் காணி வாங்குவதற்கான அவசியம் பற்றி பேசப்பட்டு, அவர் 46 இலட்சம் ரூபாக்களை சேகரித்துக்கொண்டு வந்தார்கள். அதைக் கொண்டு மேட்டுவட்டையில் காணி வாங்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்ட வேளை அமைச்சர் ஜனாபா. பேரியல் அஷ்ரப் அவர்கள் டாக்டர். மிஹ்ளார் அவர்களை தொடர்புகொண்டு, தான் வைத்தியசாலைக்கு, ஏற்கனவே மலாக்கா முதலமைச்சரால் வாங்கப்பட்டிருந்த 7 ஏக்கர் காணியில் 3 ஏக்கர் காணியை தருவதாக வாக்களித்து, அவரிடமிருந்த நிதியைக்கொண்டு ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கு 8 ஏக்கர் காணி வாங்கிக் கொடுக்கும் படி வினயமாக வேண்டிக் கொண்டார். அதனடிப்படையில் சம்ஸ் மத்திய கல்லூரிக்கு அந்நிதியைக் கொண்டு காணி வாங்கப்பட்டது. வைத்தியசாலைக்கான 3 ஏக்கர் காணி (தற்போது வைத்தியசாலை அமைந்திருக்கும் இடம்) நில அளவு செய்யப் பட்டது. வைத்தியசாலை அமைப்பதற்கான பொறுப்பை சுகாதார அமைச்சு மேர்லின் (*Merlin*) பன்னாட்டு தொண்டர் நிறுவனத்திடம் ஒப்படைந்திருந்தது. காணியை நிரப்ப வேண்டிய நிலை ஏற்பட்டபோது எவருமே அதற்கு முன்வர வில்லை. இதன் காரணமாகவும் காணிக்கான உறுதிப்பத்திரத்தை சுகாதார அமைச்சுக்கு மாற்றுவதற்கு எடுத்த தாமதத்தின் காரணமாகவும் கட்டிட நிர்மாணப் பணி சற்று தாமதமடைந்தது.

மேர்லின் நிறுவனத்துடன் பல தடவைகள் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை பேசியதன் விளைவாக உடன்பாடு ஏற்பட்டு 2007-03-19ல் காணி நிரப்புவதற்கான பணி வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக இரண்டரை கோடி ரூபா செலவிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த காணிக்கான உறுதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக டாக்டர் ஏ.எல்.எம். மிஹ்ளார் அவர்கள் எடுத்துக் கொண்ட சிரமங்கள் சொல்லில் அடங்காதவை. இதற்காக அலைந்த அலைச்சலையும் கஷ்டங்களையும் நான் நன்கறிவேன். அமைச்சர் பேரியல் அஷ்ரப், மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல், அபுல்கலாம் சட்டத்தரணி, அப்போதைய கல்முனைப் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்ஸார், மலேசியா தூதுவர் நஷீறா, மலாக்கா முதலமைச்சர், ஆசிரியர் ஏ.ஆர்.எம். உவைஸ், மாகாண சேவைகள் பணிப்பாளர் ஏ.எல்.எம். நஸீர், மர்ஹூம். ஏ.ஆர்.ஏ. அஸீஸ் (முன்னாள் கல்விக்கல்லூரி பீடாதிபதி) ஆகியோர்கள் உதவிபுரிந்தார்கள்.

வைத்தியசாலைக்கான பிரதான பாதையை அமைத்துத் தருமாறு இஸ்லாமிக் றிலீப் நிறுவனத்தினரை அணுகி கோரிக்கை விடுத்தபோது கோரிக்கையை ஏற்று பாதையை அமைத்துத் தந்தார்கள். இதனை சிறந்த முறையில் அமைப்பதற்கு பொறியியலாளர் புகாரி அவர்கள் உதவி செய்தார்கள்.

வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டு வைபவம், Dr. மிஹ்ளார் அவர்களின் தலைமையில் பிரதம அதிதி பேரியல் அஷ்ரப் அவர்களினால் 31-08-2007இல் நாட்டப்பட்டது. அன்றிலிருந்து கட்டுமானப் பணிகள் துரிதகெதியில் நடைபெற்றது. வைத்தியசாலை கட்டிடங்களுடன் சேர்த்து இரு வைத்திய அதிகாரிகளுக்கான விடுதிகளும் கட்டப்பட்டது. பிரித்தானிய Daily Telegraph பத்திரிகை நிறுவனமும், அனர்த்த அவசரக்குழுவும் இணைந்து பிரித்தானிய மக்களிடமிருந்து சேகரித்த நிதியைக் கொண்டு இவ்வைத்தியசாலையை 14 கோடி ரூபா செலவில் நல்ல முறையில் அமைத்துத் தந்த மேர்லின் பன்னாட்டு தொண்டர் நிறுவனத்தினர்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம்.

2008 ஜூன் மாதம் வருடாந்த இடமாற்றம் பெற்று டாக்டர். ஏ.எல்.எம். மிஹ்ளார் அவர்கள் கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குச் சென்ற பின் டாக்டர். ஏ.ஆர்.எம். ஹாரிஸ் அவர்கள் மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையேற்றார். அவர் கட்டிட நிர்மாணப் பணிகளை சிறந்த முறையில் நிறைவுசெய்து மக்கள் மண்டபத்திலிருந்து புதிய இடத்திற்கு வைத்தியசாலை இடமாற்றம் செய்து 13-06-2009இல் அமைச்சர் ஜனாபா. பேரியல் அஷ்ரப் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அமைச்சர் அதாவுல்லா, மாகாண சுகாதார அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் இன்னும் பலரின் முன்னிலையில் இது நடைபெற்றது. இந்த வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கும், புதிய வைத்தியசாலையை சிறந்த முறையில் சேவையாற்ற வைப்பதற்கும் டாக்டர். ஹாரிஸ் அவர்களினாலும், ஏனைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அபிவிருத்திச் சபையினர் ஆகியோர்களினால் எடுக்கப்பட்ட முயற்சிகள் அளப்பரியவை. மேலும் மாகாண சபை உறுப்பினராகவிருந்த சட்டத்தரணி எம்.எல். துல்கர் நயீம் (துல்சான்) அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் கிணறு ஒன்றும் கட்டப்பட்டது. இக்கால கட்டத்தில் சகோ. சறோ தாஜூதீன், பறக்கத் டெக்ஸ் பரீட், பரிஸ் பேக்கரி உரிமையாளர் போன்றவர் களால் வைத்திய சாலையின் தேவைகள் பல நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த காலகட்டத்தில்தான் பரிசோதனை கூடமும், அதற்கான MLTயும் வைத்தியசாலைக்குக் கிடைத்தது. இதன் மூலம் நோயாளர்கள் கூடியளவில் நன்மைகளை அடைந்தார்கள்.

இக்கால கட்டத்தில் அபிவிருத்திச் சபையின் செயலாளராகவிருந்த பீ.ரீ.எம். மஹ்றூப் ஆசிரியர், பொருளாளராகவிருந்த ஓய்வுபெற்ற வரி உத்தியோகத்தர் ஏ.எல்.எம். முனாஸ் ஜே.பி., உப செயலாளராகவிருந்த தாதி உத்தியோகத்தர் பீ.எம். நஸ்றுத்தீன் ஆகியோர்களின் பணி மெச்சத்தக்கதாகவிருந்தது.

2012 செப்டம்பர் மாதம் டாக்டர். ஹாரிஸ் அவர்கள் வருடாந்த இடமாற்றம் பெற்று கல்முனை ஆதார வைத்தியசாலைக்குச் சென்ற போது மீண்டும் டாக்டர். மிஹ்ளார் அவர்கள் மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையேற்றார். இவ்வைத்தியசாலையின் செயற்றிறனையும், சுற்றாடலையும் மேம்படுத்துவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கில் செயலூக்கமுள்ள வைத்தியசாலை அபிவிருத்திச் சபையொன்றை அமைக்க வேண்டுமென்று விரும்பி புதிய சபையொன்று அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்களை செயலாளராகவும், பறக்கத் டெக்ஸ் உரிமையாளர் அல்-ஹாஜ். எம்.ஐ.ஏ. பரீட் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட சபையொன்று அமைக்கப்பட்டது.

இந்த அபிவிருத்திச் சபை துரிதகெதியில் செயற்பட்டு பல அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

1) நான்கு அறைகளைக் கொண்ட எட்டரை இலட்சம் பெறுமதியான கட்டிடத்தொகுதியொன்று முஸ்லிம் பெண்கள் சமூக அமைப்பினரின் உதவியினால் கட்டப்பட்டு வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது. இதன் ஏற்பாட்டாளராக டாக்டர் ஹாரிஸ் அவர்கள் செயற்பட்டார்கள்.

2) அதே அமைப்பினரால் குடிநீர் சேமிப்புக்காக பத்தாயிரம் லீற்றர் கொள்ளளவினைக் கொண்ட நீர்த்தாங்கியொன்று இரண்டு இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

3) ஜாஹி வீவர்ஸ் உரிமையாளர் அல்-ஹாஜ். எம்.ஐ. உபைதுர் ரகுமான் அவர்களினால் களஞ்சிய அறையொன்று அமைத்துத் தரப்பட்டது.

4) சீப்பலஸ் உரிமையாளர் அல்-ஹாஜ். எம்.எம்.எம். சபீக் அவர்களால் அம்பியூலன்ஸ் வண்டி தரிப்பிடம் பாதுகாப்பான இடமாக தயார் செய்யப்பட்டது.

5) பாபுஜீஸ் நிறுவனத்தின் ஊடாக கொழும்பு லயன்ஸ் கழகத்தினால் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான ECG இயந்திரமொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதன் ஏற்பாட்டாளராக தாதி உத்தியோகத்தர் பீ.எம். நஸ்றுத்தீன் ஜே.பி. அவர்கள் இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) மருதமுனை-01 கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக அதன் தலைவர் பீ.எம். ஆப்தீன் அவர்களின் ஏற்பாட்டில் ரூபா நாற்பதாயிரம் பெறுமதியான பரிசோதனைக் கூடத்திற்கான Centrifuge உபகரணம் பெற்றுத்தரப்பட்டது.

7) அபான்ஸ் நிறுவன உரிமையாளர் அல்-ஹாஜ். Z.A.M. நவ்சாத் அவர்களினால் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

8) ABZ Tool Master உரிமையாளர் எம்.பி. நூறுல் அமீன் அவர்களினால் வைத்தியசாலைக்கான வரவேற்புப் பலகை, பெயர்ப் பலகைகளும், பூச்சாடிகள் போன்றவைகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

9) பாபுஜீஸ் நிறுவனத்தினரால் தாதி உத்தியோகத்தர் பீ.எம். நஸ்றுத்தீன் ஜே.பி. அவர்களின் ஊடாக ஒரு அலுமாரி உள வளப் பிரிவுக்கு வழங்கப் பட்டது.

10) மை ஹோப் நிறுவன உரிமையாளர் நதீர் சித்தீக் அவர்களினால் பல் சிகிச்சைப் பிரிவுக்கு குளிரூட்டி (Airconditioner) ஒன்று அன்பளிப்புச் செய்யப் பட்டது.

11) திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் சட்டத்தரணி அவர்களினால் "தேசத்திற்கு மகுடம்" திட்டத்தின் கீழ் பதினைந்து இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மருந்துக் களஞ்சியசாலை ஒன்று கட்டப்பட்டது.

12) புர்கான்ஸ் உரிமையாளர் அல்-ஹாஜ். எம்.பி. றைசுல் இஸ்லாம் அவர்களினால் துவிச்சக்கர வண்டியொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

13) அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் அல்-ஹாஜ் டாக்டர் ஏ.எல். நஸீர் அவர்களினால் ஆய்வுகூட பரிசோதனைக்கான இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது.

14) AGASS அமைப்பினரால் இருபத்தைந்து மாங்கன்றுகள் அதன் தலைவர் டாக்டர் ஜெமீல் சித்தீக் அவர்களின் ஏற்பாட்டில் வைத்தியசாலையின் எல்லைக்குள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

15) சகோதரர் ஏ.எல்.கே.ஏ. ஹாதி (மின்சார இணைப்பாளர்) அவர்கள் வைத்திய சாலைக்கான மின்சார, நீர் விநியோக திருத்த வேலைகளை இலவசமாகவும், குறைந்த கட்டணத்திலும், இலகு கடனடிப்படையிலும் செய்துகொண்டி ருக்கிறார்கள்.

மேலும் வைத்திய அதிகாரிகளினதும், தாதி உத்தியோகத்தர்களினதும் வாகனங்களை நிறுத்துவதற்கான நவீன முறையிலான வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் டாக்டர் மிஹ்ளார் அவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவுநீர் அகற்றும் தொகுதி குறைதொழிற்பாடு உள்ளதாகவும், மழை காலங்களில் செயலிழக்கின்ற நிலைமைகள் ஏற்படுவதனாலும் மிகப்பாரிய சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியேற்படுகிறது. இது விடயமாக மாகாண சுகாதார அமைச்சர் அல்-ஹாஜ். எம்.ஐ.எம். மன்சூர் அவர்களை அழைத்து மேற்படி விடயம் கலந்துரையாட்டப்பட்டு 2015ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் நவீன முறையில் மறுசீரமைப்பு செய்வதற்கு உடன்பாடு காணப்பட்டு அதற்கான வரைபடங்களும், நிதி மதிப்பீடும் (மூன்று மில்லியன்) கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பல வைத்திய அதிகாரிகள் (டாக்டர்களான ஏ.எல். பாறூக், ஏ.ஆர்.எம். ஹாரிஸ், என்.எம்.எஸ். ஹரீஸா (BDS), ஏ.ஜி. ஜூரைஸ், ஏ.ஆர்.எம். அஸ்மி, எம்.எஸ். பர்ஹானா, இஸட். சுஜப், எச்.எம்.எம். கிபாயா) சிறந்த முறையில் கடமையாற்றி அபிவிருத்தியிலும் பங்களிப்புச் செய்து இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளனர். தற்போது டாக்டர்களான ஏ.எல்.எம். மிஹ்ளார் (DMO), என். சஹூர்தீன், சாமிலா ஜெமீல்ஸ், எம்.ஏ.எச்.ஜே. பர்ஸானா (BDS), எஸ்.ஏ.ஆர்.எம்.எஸ். மவ்லானா, ஐ.எல்.யூ. பாரி ஆகியோர் சிறப்பான சேவையாற்றி வருகிறார்கள்.

இவ்வைத்தியசாலையின் பௌதீக வளங்களையும், சேவைப் பரப்பினையும் மிக அண்மிய எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை வகுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வைத்தியசாலை நிருவாகவும், வைத்தியசாலை அபிவிருத்திச் சபையும் இணைந்து செயல்பட உறுதிபூண்டுள்ளது. இதற்காக அரசியல்வாதிகளினதும், துறைசார்ந்தவர்களினதும், பிரமுகர்களினதும் ஒத்துழைப்புக்களை வைத்தியசாலை அபிவிருத்திச் சபை வேண்டி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட சேவையிலுள்ள வைத்தியர்கள்

விஷேட வைத்திய நிபுணர்கள்

01. பேராசிரியர். M.M. ஜமீல் (FRCS, MSc, Dic) UK
02. பேராசிரியர். M.A.M. சித்தீக் (FRCDS)
03. டாக்டர். A.W.M. வாஸில் (MBBS, MD) Consultant Nephrologist
04. டாக்டர். M.N.M. சுஜப் (MBBS, MD) Consultant Physician
05. டாக்டர். A.W.M. சமீம் (MBBS, MS), (MRCS Engd.) Consultant Surgeon
06. டாக்டர். சித்தீக் ஏ. ஜமீல் (MBBS, MS) (MRCS Engd.) Consultant Surgeon
07. டாக்டர். A.G. ஜூரைஸ் (MBBS, MD) Consultant Phychiatrist

பொது வைத்தியர்கள்

01. டாக்டர். S.A.R.M.S. முகம்மது மௌலானா (R.M.O.)
02. டாக்டர். S.A. ஜம்பர் (MBBS. Dip. Cli. Micro)
03. டாக்டர். Z. சுஜப் (MBBS. Dip. Micro)
04. டாக்டர். A.L.M. மிஹ்லார் (MBBS)
05. டாக்டர். A.R.M. ஹாரிஸ் (MBBS)
06. டாக்டர். Mrs. முஸாஹிரா கரீம் (MBBS)
07. டாக்டர். Mrs. கமறுன்னிஸா நியாஸ் (MBBS)
08. டாக்டர். Mrs. கிபாயா ஜூரைஸ் (MBBS, Dip. Psy.)
09. டாக்டர். I.L. உவைசுல் பாரி (R.M.O)
10. டாக்டர். A.M. சம்சமீர் (MBBS)
11. டாக்டர். A.S. கியாமுடீன் (MBBS)
12. டாக்டர். A.L.M. உவைஸ் (MBBS)
13. டாக்டர். A.R.M. அஷ்மி (MBBS)
14. டாக்டர். N. சஹூறுதீன் (MBBS)
15. டாக்டர். A.C.M. பஸால் (MBBS)
16. டாக்டர். A.R.M. நிஹால் (MBBS)
17. டாக்டர். S.A.M. அஹ்ஸன் பாரி மௌலானா (MBBS)
18. டாக்டர். Mrs. பர்ஹானா சித்தீக் (MBBS)
19. டாக்டர். M.H.M. றயீஸ் (MBBS)
20. டாக்டர். A.L.M. றஊப் (MBBS)
21. டாக்டர். I.M.M. சபீக் (MBBS)
22. டாக்டர். M.T.M. றியாஸ் (MBBS)
23. டாக்டர். J.M. மஷாஹிம் (MBBS)
24. டாக்டர். H.M. றிஷ்வி (MD)
25. டாக்டர். H.M. நிஷ்ரி (MBBS)
26. டாக்டர். A.S. பௌஸாத் (MBBS)
27. டாக்டர். S.H.M. வர்ஸாத் (MBBS)
28. டாக்டர். M.A.M. புஹைம் (MBBS)
29. டாக்டர். S.M. ஷபா (MBBS)
30. டாக்டர். Mrs. பஸீலா நபீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. டாக்டர். Mrs. பர்ஷானா சியாத்
32. டாக்டர். Mrs. சிபாயா மாலிக்
33. டாக்டர். ஜெஸீம் அப்துல்லா (MBBS)
34. டாக்டர். M.M. ஸுஹைர் (MD)
35. டாக்டர். N.M. பாயிஸ் (MBBS)
36. டாக்டர். Mrs. ஷர்மிலா பாயிஸ் (MBBS)
37. டாக்டர். M. அரபாத் (MBBS)
38. டாக்டர். S.M. சப்ராஸ் (MBBS)
39. டாக்டர். Mrs. நஸ்ரின் ஜஹான் நஸ்மி (MBBS)
40. டாக்டர். Mrs. சாஜிதா முஸாதிக் நிப்ராஸ் முகம்மத் (MBBS)
41. டாக்டர். Mrs. பஸ்லாஸ் கியாம்
42. டாக்டர். Mrs. சித்தீக்

பல் வைத்தியர்கள்

01. டாக்டர். M.B. அப்துல் வாஜித் (B.D.S)
02. டாக்டர். Mrs. புஸைரா மாஹிறூன் (B.D.S)
03. டாக்டர். Mrs. ஹரீஸா ஹபீழ் (B.D.S)
04. டாக்டர். Mrs. பர்ஷானா மிஃழார் (B.D.S)
05. டாக்டர். M.I.M. நவ்சாத் (B.D.S)
06. டாக்டர். Mrs. ஷுப்னா ஷபீக் (B.D.S)
07. டாக்டர். M.I.M. ஹபீழ் (B.D.S)
08. டாக்டர். Mrs. பர்வின் ஹபீழ் (B.D.S)

வைத்திய பீட மாணவர்கள்

ரஜரட்ட பல்கலைக்கழகம்

01. எம்.எம். அயாஸ் அகமட் - 1ம் வருடம்
02. ஏ.ஜீ. ஹஸ்னி றப்ஸான் - 1ம் வருடம்
03. எம்.ஏ. ஜலூட் அகமட் - 2ம் வருடம்
04. எம்.ஐ. முகம்மது சாஜில் - 2ம் வருடம்

யாழ் பல்கலைக்கழகம்

05. எம்.ஐ.எம். முஜாஹிர் - 2ம் வருடம்
06. எம்.ஏ.எம். அஸீம் - 2ம் வருடம்

பேராதனைப் பல்கலைக்கழகம்

07. ஏ.டபிள்யூ.ஏ. றஸ்மி - 2ம் வருடம்
08. எம்.என்.எப். சுமையா - 2ம் வருடம்

ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

09. என்.ஏ.எம். றிஸ்வான் - 4ம் வருடம்
10. எம்.ஏ.ஏ. ஷிறாப் - 2ம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குப் பல்கலைக்கழகம்

11. ஏ.எச்.எம். றிஸ்வி
12. ஏ.ஏ. ஜூரைன்
13. எம்.ஏ.எப். பர்ஹானா - இறுதி வருடம்
14. எம்.ஐ.எப். சுமைறா
15. எம்.எப். சனூபர் - 4ம் வருடம்
16. ஏ.ஆர்.டபிள்யூ. சிப்றான்
17. எம்.ஏ.ஏ. சுஜா
18. எம்.இஸட். பர்ஜீஸ் - 4ம் வருடம்

கொழும்புப் பல்கலைக்கழகம்

19. எம்.ஏ.எம். அஸ்மீர் - 4ம் வருடம்
20. எம்.ஜே.எப். சுமையா - 2ம் வருடம்

பல் வைத்திய பீட மாணவர்கள் - பேராதனைப் பல்கலைக்கழகம்

21. எம்.எச்.எம். நஹீப்
22. ஏ.எச்.எம். சஸ்லி
23. எம்.ஏ.சீ.எம். சாரிக்

மிருக வைத்தியர்கள்

01. டாக்டர். பாஸி (காமில்)
02. டாக்டர். எம்.ஏ.எம். சுல்பிக்கார்

ஆயுர்வேத வைத்தியர்கள்

01. டாக்டர். கே.எம். அஸ்லம், B.U.M.S. (UOC), Dip. in Pharm (UOC)
02. டாக்டர். பீ.எம். சுகைடீன், B.U.M.S. (UOC)
03. டாக்டர். ஏ.ஆர்.ஏ. ஹபீல், B.U.M.S. (UOC)
04. டாக்டர். யூ.எல். கியாஸ், B.U.M.S. (UOC)
05. டாக்டர். ஏ.ஜே.ஏ. றாஸிம், B.U.M.S. (UOC)
06. டாக்டர். எம்.ஐ.எம். தாரிக், B.U.M.S. (UOC)
06. டாக்டர். எம்.பி.எம். நுபைல், B.U.M.S. (UOC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் வளர்த்த நம்மவர்கள்

எம்.ஏ.எம். ஜெலீல், (எம்.ஏ.)
முன்னைநாள் உப பீடாதிபதி. தற்போதைய வருகைதரு விரிவுரையாளர்
அட்டாளைச்சேனை தேசியக் கல்விக் கல்லூரி

ஈழத்திரு நாட்டிலே இலக்கியம் வளர்த்த நம்மவர்கள் பலராவர். அவர்களுள் சிலர் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, சமயம் என்பவற்றிலே அரும்பெரும் பணிகளைச் செய்து இன்றும் மங்காப் புகழுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்களுள் மருதமுனையில் தோன்றிய "சின்னாலிம் அப்பா" என்பவரே மிகவும் முன்னணியில் திகழும் புலவராவர். தென்கிழக்கில் அறியப்பட்ட முதலாவது புலவர் என அறிஞர்கள் கணித்துள்ளனர். இவர் ஓர் ஆலிம். இவருடைய தந்தையும் ஓர் ஆலிம் ஆவார். இவரின் தந்தையார் ஒரு பெரிய ஆலிம். இவர் சிறிய ஆலிமாகத் திகழ்ந்ததனால் இவரைச் "சின்ன ஆலிம் அப்பா" என அழைத்தனர். இவர் தமிழகத்தைச் சேர்ந்த காயல் பட்டினத்திலே மார்க்கக் கல்வியைப் பயின்றவர்.

இவர் இயற்றிய "ஞானரை வென்றான்" என்னும் நூல் 63 விருத்தப் பாக்களாலானது. இந்நூல் சொல்நயம், பொருள் நயம், யாப்பமைதி முதலியன ஒருங்கே அமைந்த நூலாகும். இவரின் பாடல்களின் பொருள்களை விளங்கிக்கொள்ள முடியாதளவுக்கு கருத்தாளம் செறிந்து காணப்படுகின்றது. இவரின் பாடல்களுள் ஒன்றினை நாம் ஆய்வு செய்யும் போது இந்த உண்மையை அறியலாம்.

"ஆதியான தேதடா வனாதியான தேதடா
நீதியானதேதடா நிறைந்து நின்ற றூகிலே
பாதியான தேதடா பகுத்து வந்த தெவ்விடம்
சோதிநின்ற வாறென்னோடு செப்ப வேணும் ஞானரே.

இப்பாடலில் ஞானநிலை எய்த வேண்டிய ஒருவன் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்களைத் தெளிவான முறையில் விளக்கியுள்ளார். இவர், "மழைக் காவியம்" என்னும் நூலையும் இயற்றினார். இவருடைய இந்த நூலும் கற்றறிந்தவர் களையும் கலக்கி வியப்படையச் செய்யும் ஒரு நூலாகும்.

சின்னாலிமப்பா எழுதிய மழைக்காவியம் 1950ஆம் ஆண்டளவில் மருதமுனை யைச் சேர்ந்த எம்.எஸ்.எம். இப்றாஹிம் என்பவரால் துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது 1995இல் "ஈழக்குயில் இத்ரீஸ்" அந்நுஸ்றத் வெளியீடாக நூலுருவாக வெளியிடப்பட்டது. மழைக்காவியத்தில் ஒரு பாடல் இது.

நோய்தனக் கீயா மருந்துகளு முண்டோ
நோவுக் குதவாத மானிடரு முண்டோ
நசிபோ லிருந்துஇப் பயிர்வாடு தய்யோ
தற்பரனே யிப்பமழை தந்தருளு வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையைச் சேர்ந்த மற்றொரு புலவரான செய்யது மவ்லானா என்பவர் "நடைவழிச் சிந்து" என்ற நூலை இயற்றினார். இது சிந்து, யாப்பமைதி நிரம்பிய ஒரு சிறப்பான நூலாகும். இதேபோன்று எஸ்.ஏ. அபூசாலி மவ்லானா என்வர் "மெய்ஞ்ஞான தீபம்" என்னும் நூலை வெளியிட்டார். இது ஓர் உரைநடை இலக்கிய நூலாகும். இது மக்களின் மார்க்க அறிவை வளர்ப்பதற்குத் துணை புரிந்தது.

யூ.எஸ். இஸ்மாயில் அவர்களினால் எழுதப்பட்ட "உபாக்கியான அந்தாதி" என்னும் நூல் 1939இல் வெளியிடப்பட்டது. இது பிரம்பூர் வரகவி சுப்பிரமணிய பாரதியாரின் அணிந்துரையுடன் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் பின்வரும் நூலையும் வெளியிட்டார்.

"அந்தாதி" என்பது ஒரு செய்யுளின் கடைசிச் சொல்லானது அடுத்த செய்யுளின் முதல் அடியின் முதற்சொல்லாக அமைந்து வருவதாகும். இந்த நூல் மருதமுனையில் தோன்றிய முதலாவது "அந்தாதி" நூல் என்று கூறப்படுகின்றது.

எம்.எம். இப்றாகிம் அவர்களும், எஸ்.எம். முஸ்தபா மவ்லானா அவர்களும் இணைந்து "ஜோதிமதம்" என்ற நூலை வெளியிட்டார்கள். இந்த நூலானது க.பொ.த. (சாதாரண தர) மாணவர்களின் இஸ்லாமிய அறிவுக்கு வளமூட்டுவதாக அமைந்தது.

மருதமுனை அகமது லெவ்வை அண்ணாவியார் (1912, 1977) கன்னியாவில் அடங்கப்பெற்றுள்ள அவ்லியா பற்றியும், சீனன் குடாவைச் சேர்ந்த கவாட்டிக் குடாவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள சின்னாலிமப்பா பற்றியும் "புகழ்ப் பாமாலை" இரண்டு பாடியுள்ளார். கப்பற்பாட்டு, 1957இல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காவியம், அஸீஸ் துரை (ஏ.எம்.ஏ. அஸீஸ்) புகழ்ப்பா, விவசாய இசைப்பாக்கள் என்பவற்றையும் பாடினார்.

செய்யிது உமர் மௌலானா கல்லோயாக் குடியேற்றத் திட்டம் சார்பான இங்கினியாகலை "வழிநடைச் சிந்து" ஒன்றினைப் பாடினார். மருதமுனை தாவூது லெவ்வைப் புலவர் இங்கினியாகலைக் காவியம் ஒன்றினைப் பாடினார்.

மருதமுனை யூ.எல்.ஏ. மஜீத் அவர்கள் "மழைக்காவியம்" என்னும் நூலை இயற்றினார். ஏ.எல். தாவூது லெவ்வை மரைக்கார் அவர்கள் "இஸ்லாமியச் சந்தர்ப்ப கீதங்கள்" பாடினார்.

மருதமுனையில் தோன்றிய எழுத்தாளர்களில் "மருதூர் வாணன்" என்னும் புனைபெயரில் எழுதிய எஸ்.எல்.ஏ. லத்தீப் அவர்கள் அதிகமான படைப்பிலக்கியங்களை ஆக்கியுள்ளார். நபி ஜனன புகழிசைப்பா, முஸ்லிம் முரசொலி இசைக் கவிதை, இசை விருந்து (கவிதை), பெருநாள் பரிசு (குறுநாவல்), முதலிரவு (சிறுகதைத் தொகுதி), சூறாவளி "சமாதானம்" என்ற பத்திரிகை வெளியீடு முதலிய இலக்கியப் படைப்புக்களைக் கொண்டு மருதமுனைக்குப் பெரும்புகழ் தேடித் தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழறிஞராய்த் திகழ்ந்த ஜே.எம்.எம். அப்துல் காதிர் அவர்கள் புதுகுஸ்ஸாம் - சித்தீக்கிய்யா காண்டத்திற்கு உரை வகுத்தார்கள். திருமணக் காட்சி, முகையதீன் புராண உரை, இலக்கிய இன்பம் ஆகிய நூல்களை எழுதி இலக்கியப் பணி புரிந்தார்.

மருதமுனை புலவர்மணி அல்-ஹாஜ். ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் தமிழ் மொழியில் நிறைந்த பாண்டித்தியம் பெற்றவர். பண்டைய தமிழ் இலக்கியங் களிலும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலும் ஆழமான அறிவு படைத்தவர். வெண்பா இயற்றுவதில் புகழ் படைத்தவர்.

நபிமொழி நாற்பது

நேரிசை வெண்பாவில் அமைந்த ஒரு நூல். இது அரசு வெளியீடாக நூலுருவில் வெளிவந்தது. 1969இல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றது.

நபிமொழி நாற்பது

நபிமொழியைப் பொருளாகக் கொண்டு இவர் இயற்றிய நூலே இதுவாகும். இது இன்னும் அச்சிற் பதிப்பில் வெளிவரவில்லை.

இசைவருள் மாலை

அல்லாஹ்வின் தொண்ணூற்றொன்பது திருநாமங்களான அஸ்மாஉல் ஹுஸ்னாவின் விளக்கமாகவும் பாடப்பெற்ற தொண்ணூற்றொன்பது செய்யுள் களால் அமைந்த ஒரு நூலே "இசைவருள் மாலை" என்னும் நூல்.

மக்களுக்கு இதோபதேசம்

சிறுபிள்ளைகளுக்கு அறிவுரை புகட்டும் நோக்கமாக எழுதப்பட்டதே இந்நூல். இந்நூல் நூறு செய்யுள்களைக் கொண்டது.

இந்த இரண்டு படைப்புகளும் ஒரே தொகுப்பாக 1979ஆம் ஆண்டில் நடைபெற்ற நான்காவது தமிழ் இலக்கிய மகாநாட்டில் வெளியிடப்பட்டது. அத்துடன் இவர் பின்வரும் படைப்புக்களையும் வெளியீடு செய்துள்ளார். "வீராங்கனை சைதா, தமிழ் இலக்கியம் (ஆ - பாடத்திட்டம்) க.பொ.த. (சா/தர) பரீட்சை கவிதைத்தொகுதிகள் உரை, புதுகுஸ்ஸாம் - பாறூக்கியாக் காண்ட வசனம் பாகம்-01, புதுக்குஸ்ஸாம் காண்ட வசனம்-02, புதுக்குஸ்ஸாம் பாறூக்கியாக் காண்ட வசனம் பாகம்-03, கனிந்த காதல், இஸ்லாமிய நந்நெறி (பதுறுப் படலம்) உலகியல் விளக்கமும், நம்நாட்டின் நாநிலக் காட்சிகளும், முதுமொழி வெண்பாவும் சூறாவளிப் படலப் போரும் என்பவையாகும். மேலும் மிக முக்கியமானது "மருதமுனையின் வரலாறு" என்னும் நூலை வெளிக்கொணர்ந்தமை பெரும் பாராட்டைப்பெற்ற ஒரு விடயமாகும்.

இதன் மூலமாக எமக்கு மருதமுனையின் அமைவிட வரலாற்றை ஓரளவாவது அறியக் கிடைத்தமை பெரும்பேறேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜின்னாஹ் சரிபுத்தீன் அவர்கள் இலக்கியம் வளர்த்த எம்மவர்கள் மத்தியில் குறிப்பிடத் தகுந்த பெரும் பணிகளை ஆற்றியுள்ளார். அவர் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களின் இரண்டாவது புதல்வராவர். 1965இல் இவர் இலக்கிய வானிலே அறிமுக மாகிறார். எழுபது காலப்பகுதியிலும், எண்பது காலப் பகுதியிலும் நன்கு பிரகாசிக்கத் தொடங்கினார். தமிழிலுள்ள சந்தி புணர்ப்பு களைக் கவனித்துத் தமது கவிதைகளை சிறப்பாக யாத்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இவரின் "முத்து நகை" கவிதைத் தொகுதி 1989இல் வெளிவந்தது. இஸ்லாமியக் கருத்துக்களைக் கொண்ட "பாலையில் வசந்தம்" என்ற கவிதைத் தொகுதியும் 1989இலேயே வெளிவந்தது. இவை யாவும் அன்னை வெளியீடா கவே வெளிவந்தன எனலாம்.

தமிழகத்தைச் சேர்ந்த நாவலாசிரியர் ஹஸன் எழுதிய "மஹ்ஜபீன்" என்னும் நாவலைத் தழுவி "மஹ்ஜபீன் காவியம்" 1991ல் அன்னை வெளியீடாக வெளி வந்தது. அதேபோலவே, ஹஸனின் "புனித பூமியிலே" என்னும் மற்றொரு நாவலைத் தழுவி இவர் காவியமாக யாத்துள்ளார். தென்கிழக்கில் வாழ்ந்த கவிஞர்களுள் இரு பெரும் காவியங்களைப் பாடிய பெருமை இவரையே சாருவ தாகும்.

எம்.வை.எம். முஸ்லிம் அவர்கள் மருதமுனையில் பிறந்து கண்டியில் திருமணம் செய்து வாழ்ந்து வருபவர். பல பொருள்களைக் கொண்ட பல தனிக் கவிதை களை அழகுற யாத்தவர். விருத்தப் பாவினத்தைக் கையாண்டு "இறவாச் செல்வம்" என்ற கவிதை நூலை 1983இல் வெளியிட்டார்.

மருதூர்க் கொத்தன்

இவரின் சொந்தப் பெயர் வீ.எம். இஸ்மாயில் ஆகும். இவர் 1951இல் தமது சொந்தப் பெயரில் "வெண்ணிலா" என்ற குழந்தைப்பா மூலமாக இலக்கியப் பிரவேசம் செய்கிறார். "காவியத் தலைவன்" என்ற கவிதை நூல் (அபூ-ஹபீனா) என்ற புனைப்பெயரில் வெளியிட்டார். மூன்று கவிதை நாடங்கள் உட்படப் பல கவிதைகளை ஆக்கியுள்ளார். மருதமுனை ஈன்றெடுத்த நற்றவப் புதல்வர்களுள் ஒருவராகத் திகழும் மருதூர்க்கொத்தன் அவர்கள் எழுதிய பன்னிரண்டு சிறுகதைகளைத் தொகுத்து "மருதூர்க்கொத்தனின் கதைகள்" என்னும் சிறந்த படைப்பிலக்கியத்தை அளித்தார்.

அல்-மனார் மத்திய கல்லூரியில் 1966ஆம் ஆண்டில் இஸ்லாமிய ஆராய்ச்சி மகாநாடு கூட்டப்பட்டது. அம்மகாநாட்டில்கலந்து உரையாற்றிய பேரறிஞர்களின் கருத்துக்களையும், ஆராய்ச்சிகளையும் தொகுத்து "இஸ்லாமியத் தமிழ்ச் சொற் பொழிவுகள்" என்ற பெயரில் நூல் ஒன்றினை வெளியிட்டார் எஸ்.ஏ.ஆர்.எம். ஹஸன் மவ்லானா அவர்கள். இவர் கவிதை இயற்றும் மரபுகளை நன்கறிந்து மாணவர்களுக்கும் போதனை செய்தவர். அதிகளவிலே மரபுக் கவிதைகளை இயற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகக் கதைகள் எழுதிப் புகழ்பெற்றவர் எம்.ஐ.எம். முஸம்மில் அவர்கள். இவர் எழுபதுகளில் எழுத ஆரம்பித்தார். இவரது சிறுகதைத் தொகுதியான "பிரார்த்தனை" பிறைப்பண்ணை வெளியீடாக 1989இல் வெளியானது. இவரது உருவகக் கதைத்தொகுதி "தியாகம்" 1979இல் கல்முனை சாஹிறாக் கல்லூரி வெளியீடாக வெளிவந்தது. அவர் "யாரைத்தான் நம்புவதோ?" என்னும் குறுநாவலையும் எழுதியுள்ளார்.

மருதூர்க்கனி யூ.எல்.எம். ஹனிபா மரபுக் கவிதைகள், சிறுகவிதைகள், நெடுங்கவிதைகள் என நிறைய எழுதினார். காதல் கவிதை, இஸ்லாமியக் கவிதை, சமூக யதார்த்தவாத, சோஸலிச யதார்த்தவாதக் கண்ணோட்டத்தில் உள்ள கவிதைகள் எனக் கவிப்பொருள் கொண்டு எழுதியவர். "தர்வேஸ்" என்ற பெயரிலும் எழுதியவர்.

மருதமுனை ஐ.எல்.ஏ. றஹீம் என்பவரும் தனிப்பாடல்கள் பலவற்றை எழுதியவர் "சொன்னால் பாவமே" என்னும் சிறுகதைத் தொகுதியை எஸ்.எல்.எம். நழீம் என்பவர் வெளியிட்டார்.

நாடக இலக்கியத் துறைக்கு எம்மவர்கள் செய்த பங்களிப்பு காத்திரமானவை சக்காப் மவ்லானா இந்த வகையில் அதிக பங்களிப்பினைச் செய்துள்ளார். இவரின் நாடகங்களுள் மிகவும் சிறந்து விளங்குவது "விடியும் வரை" என்பதாகும்.

எம்.ஐ.எம். றாசீக் அவர்கள் அதிகமான நாடகங்களைத் தானே எழுதியும், அவற்றை மேடைகளில் நடித்துக் காட்டியும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

மருதூர்க்கனியும் நாடகத் துறையில் சிறந்து விளங்கினார். இவர் எழுதிய நாடகங்களுள் சிறந்தது "அருமந்த அரசு" என்னும் நாடகமாகும்.

"மருதூர் பாரி" என்னும் புனைப்பெயர் கொண்ட எஸ்.எம்.எஸ்.எச். பாரி மவ்லானா அதிகமான சிறுகதைகளை எழுதி வெளியிட்டார். அதிக நாடகங் களையும் மேடையேற்றினார்.

மருதூர் பாரியின் சிறுகதைகளுள் குறிப்பிடத்தக்கவை முன்பணம், பலி, பிராயச் சித்தம், ஊர் அடங்காத வேளை முதலியனவாகும். இவர் எழுதிய நாடகங்களுள் சிறந்தவை "மெழுகுவர்த்தி" என்பதாகும். மருதூர்பாரியும், எம்.ஐ.ஏ. றஊப் அவர்களும் இணைந்து நடாத்திய இலக்கியப் பத்திரிகையே "முனைப்பு" என்னும் சஞ்சிகை. இது தமிழ் இலக்கியத் துறையில் சிறுகதை, நெடுங்கதை, நாவல், கவிதை, விமர்சனம், ஆராய்ச்சி என்னும் விடயங்களில் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் இலக்கிய, இலக்கண அறிவு மிகவும் குன்றிப்போய் இருந்த மையையும், பரீட்சைப் பெறுபேறுகள் பினதங்கியிருந்தமையையும் கண்டு மனம் வருந்தினார் எம்.ஏ.எம். ஜலீல். ஆகவே இவர் மாணவர்களின் முன்னேற்றங்கருதிப் பின்வரும் நூல்களை எழுதி வெளியிட்டுப் பெரும் பணி புரிந்தார். இவர் எழுதி வெளியிட்ட நூல்கள், செந்தமிழ் வளர்த்த புலவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1982), இலகு இலக்கணம் (1982), தமிழ்மொழி க.பொ.த. சாதாரண தரம் (1988), தமிழ் இலக்கியம்-01 (1992), தமிழ் இலக்கியம்-02 (1992), கல்வி டிப்லோமா சிங்களம் - 1986, கல்விமானிக் கற்கை நெறிக்கான தமிழ் இலக்கியம் சார்பான அதிகமான நூல்களையும் எழுதி வெளியிட்டார். இதனால் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் நூற்றுக்கு நூறு தராதரங்களைப் பெற்றுக்கொள் வதற்கு ஏதுவாய் அமைந்தன.

"மருதமுனை மஜீத்" என்னும் பெயரில் எழுதத் தொடங்கிய ஏ.எச்.எம். மஜீத் அவர்கள் வேலி, வெகுளி, உரிமை, பெசன் கேள் என்னும் சிறுகதைகளை எழுதித் தமிழ்மொழியைச் சிறப்பித்தார்.

நாடகத் துறையைப் பொறுத்தவரையில் கே. அல்லாபிச்சை அவர்கள் வழிகாட்டி, உயில் முதலான நாடகங்களை எழுதினார். அதேபோல எஸ்.எம். மூஸா அவர்கள் எழுதிய "உயிருள்ள ஜீவன் வாழும் நியாயங்கள்" என்னும் வானொலி நாடகங்கள் சிறந்தவை.

மு.இ.அ. ஜப்பார் எழுதிய "திறக்கப்படாத தீப்பெட்டிகள்" தரப்பட்ட அவகாசம் தொகுதியும், "அறநிலா" என்னும் புனை பெயர் கொண்ட அ.ற. நிஹ்மத்துல்லா அவர்கள் எழுதிய "கோலங்கள் கோணங்கள்" என்னும் கவிதைத் தொகுப்பும், "ஒரு வட்டத்துள் சில புள்ளிகள்" என்பதுவும் சிறந்த படைப்புக்களாகும்.

எம்.ஐ.எம். றஊப் அவர்களின் "கனவும் மனிதன்" என்னும் சிறுகதைத் தொகுதியும் சிறப்பு மிக்கவை. ஹஸீனா வஹாப் ஆசிரியை அவர்களின் "வதங்காத மலர் ஒன்று" (1992) என்ற குறுங்கதையும் சிறப்புமிக்கவை.

எஸ்.எம். மூஸா B.A. ஆசிரியர் அவர்கள் க.பொ.த. (உயர்தர) முதற்கலைத் தேர்வு, மாணவர்களுக்கு ஏற்ற வகையில் இஸ்லாமிய நாகரீகம் (உயர்தரம்), இஸ்லாம், இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்கள் - ஒரு வெட்டு முகம், இஸ்லாமிய நாகரீகம் (முதற்கலைத் தேர்வு) முதலான நூல்களை எழுதி வெளியிட்டார்கள்.

ஊன் கபூர் குரோட்டன் அழகி (கவிதைத் தொகுதி) திண்ணைக் கவிதைகள் முதலான ஆக்கப்படைப்புக்களை வெளியிட்டார்.

எம்.ஏ. குர்சித் நிறங்களால் நிறமூட்டப்பட்ட உலகு (கவிதைத் தொகுதி) என்னும் படைப்பினை வெளியிட்டார்.

ஜெஸ்மி மூஸா தேடலின் ஒரு பக்கம், நாகம்மாள் - ஒரு பார்வை, திருக்குறள் - அங்கவியல் தமிழ்ப் பொதுச்சாதாரண வினாவிடை என்னும் நான்கு படைப்புக்களை இலக்கிய உலகுக்கு அளித்தார். எம்.ரீ.எம். நவ்பல் அவர்கள் மாம்பழக் கொச்சி (கவிதைகள்), மருதமுனை வரலாறு - ஆள்சார கண்ணோட்டம்-01, மருதமுனை வரலாறு ஆள்சார் கண்ணோட்டம்-02 போன்ற படைப்புக்கள் ஆறினை தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கினார். எம்.ஏ.எம். மர்சூக் அவர்கள் சிங்கள நூல்கள் பலவற்றை எழுதி சிங்கள இலக்கிய வளர்ச்சிக்கு உதவினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ.எம். றாசீக் அவர்கள் சிங்களம் இரண்டாம் மொழி இலக்கணம் என்னும் நூலை எழுதியுள்ளார். எம்.ஜே.ஏ. ஹஸீப் அவர்களும், ஏ.ஜே.எல். பசீல் அவர்களும் இணைந்து மருதமுனை வரலாற்றில் - தனியாள் ஆளுமை - ஏ.எம்.ஏ. ஜலீல் என்னும் படைப்பினை யாத்தனர்.

கலாபூஷணம் அ.மு. பாறூக் (புன்னகை வேந்தன்) அவர்கள் - சந்தன மரம் மொழி பெயர்ப்பு இலக்கியத்தை இலக்கிய உலகுக்கு அளித்துள்ளார். உ. சஹ்தூனல் சபீல், உளநலக் கல்வி என்ற படைப்பினையும், மருதகவி காசிம் முகம்மது அஹ்றாப் "பாப்பாவுக்கு நூறு பாடல்" என்ற படைப்பினையும் அளித்துள்ளனர். கலைதாசன் ஹக்கீம் "இது ஒரு சுனாமி" (கவிதைகள்) என்ற படைப்பினைத் தந்துள்ளார். ஏ.எம். நியாஸ் அவர்கள் விலங்கியல் சார் நூல்கள் எட்டினை யாத்துள்ளார். இப்றாகீம் எம். றபீக் அவர்களின் உலா (கவிதைத் தொகுதி), "குருத்து மணல்" கவிதைத் தொகுதி ஆகிய படைப்பினையும் அளித்துள்ளார். எம்.எச்.ஏ. கரீம் அவர்கள் "புதிய நெருடல்கள்" கவிதைத் தொகுதி வெளியிட்டார். நயீம் ஷரிப்தீன் அவர்களின் உத்தம தூதர் (கவிதைத் தொகுதியை) என்ற சிறந்த படைப்பினைத் தந்துள்ளார். ஏ.எஸ். நியாஸ் அவர்களின் கவிதைகளும் சிறந்தவையாகும்.

ஈழக்குயில் இத்ரீஸ் அவர்கள் "ஓர் ஆத்மாவின் பிரார்த்தனைகள்", சின்னாலி மப்பாவின் "மழைக்காவியம் முதலான ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளார். கலாநிதி பீ.எம். ஜமாஹிர் "மெய்யியலும் சமயமும்" முதலான நூல்கள் நான்கினை வெளியிட்டுள்ளார். கலாநிதி மௌலவி எஸ்.எல்.எம். ஜலால்தீன் அவர்கள் "அல்-இஸ்லாம் ஓர் அறிவியல் நோக்கு" என்ற நூலை ஆக்கியுள்ளார்.

றஹ்மான் ஏ. ஜப்பார் அவர்கள், தொட்டுவிடும் தூரத்தில் (சிறுகதைத் தொகுதி), வண்ண வண்ண பூக்கள் சிறுவர் பாடல்கள், அடிமைகள் அழைத்த பூக்கள் (சிறுகதைத் தொகுதி) ரசிகச் சூரியன் (கவிதைத் தொகுதி) முதலான இலக்கியப் படைப்பினைத் தந்துள்ளார்.

அ.ற. றாசீக் அவர்கள் வீட்டுப் பயிற்சிப் புத்தகம், சிறுவர் சித்திரம் (செயல் நூல்) முதலான நூல்களை வெளியிட்டுள்ளார். மருதமுனை மஜீத் அவர்கள் சிறுகதைகளோடு நின்றுவிடாமல் காவிய நாயகன், எனது கிராமத்தைத் தேடுகிறேன். ஆழிப் பேரலைகள் முதலான நூல்களையும் படைத்துள்ளார்.

மேலும் மருதூர்க்கனி அவர்கள் "மண்பூனைகளும் எலிபிடிக்கும்" என்னும் சிறுகதைத் தொகுதியையும் இலக்கிய இதயங்களுக்கு அளித்துள்ளார். ஜமீல் அவர்கள் தனித்தலையும், பறவையின் துயர் கவியும் பாடல்கள், உடையக் காத்திருத்தல், காற்றை அழைத்துச் சென்றவர்கள் என்ற படைப்புக்களை அளித்துள்ளார். கவிஞர் "அலறி" அவர்கள் மழையை மொழிதல், எல்லாப் பூக்களும் உதிர்ந்துவிடும், பறவை போலச் சிறகடிக்கும் கடல், மிக்கடியில் வானம் முதலான படைப்புக்களைத் தந்துள்ளார்.

இவ்வாறாக இலக்கியம் "வளர்த்த நம்மவர்கள்" செய்த நற்பணிகள் போற்றற்குரியன வாகும். அவற்றை நாம் என்றென்றும் நன்றியுடன் போற்றிக் காப்போமாக. இனிவரும் காலங்களிலும் வளமான புலவர்கள், கவிஞர்கள் தோன்றி நம் ஊர் சிறந்தோங்க நற்பணி புரிவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது அபூபக்கர் முகம்மது ஜெலீல்

முன்னைநாள் உப பீடாதிபதி, தற்போதைய வருகைதரு விரிவுரையாளர்
அட்டாளைச்சேனை தேசியக் கல்விக் கல்லூரி

முகம்மது அபூபக்கர் முகம்மது ஜெலீல் 1945-08-26ல் மருதமுனையில் பிறந்தார். ஆரம்ப இடைநிலைக் கல்வியினை அல்-மனார் மத்திய கல்லூரியிலும், உயர்கல்வியினை வித்யாலங்கார களணிப் பல்கலைக்கழகத்திலும் கலைமானி (BA) சிறப்பினையும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முதுமானி (MA) பட்டத்தினையும், புதுடில்லி பல்கலைக்கழக முகாமைத்துவமும் நிர்வாகமும் சிறப்புப் பட்டங்களையும் தனதாக்கிக் கொண்டார்.

1964-06-01ல் மாணவ ஆசிரியராக தமது பணியை ஆரம்பித்து அல்-மனாரின் உப அதிபராகவும், அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியின் உப பீடாதிபதியாகவும் கடமையாற்றிய பின் தனது ஓய்வுநிலையிலும் கல்விக் கல்லூரியின் வருகைதரு விரிவுரையாளராகத் தற்போது சேவையாற்றிக் கொண்டிருக்கிறார்.

மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்ற இவர் பல நூல்களை வெளியிட்டதோடு பல விருதுகளுக்கும் சொந்தக்காரராவார்.

கரீம் சேட் பிள்ளையின் மகளான நூறுன் நயீமாவை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட இவருக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றனர்.

அதிக மார்க்க ஈடுபாடுடைய இவர், எல்லோருடனும் கனிவாகப் பேசும் சுபாவ முடையவர். இவரது ஆசிரியர் சேவைக் காலத்தில்கூட கேள்விகளுக்குப் பிழையான பதில்களைச் சொல்லும் மாணவனைக்கூட கடிந்துகொள்ளாமல் கனிவாகப் பேசிப் புரியவைக்கும் சுபாவம் அவருக்கு மட்டுமே சொந்தமான ஒரு விடயமாகும். இவற்றை நாங்கள் நேரடியாகவே அனுபவித்தவர்கள். ஏனெனில் இவர் எனது ஆசிரியர் என்பதில் பெருமைகொள்கிறேன்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் இலக்கிய அடையாளங்கள்

- ஒரு சிறப்புப் பார்வை -

மருதமுனை விஜிலி

மருதமுனையின் இலக்கிய அடையாளங்களை பதிவுசெய்ய ஒரு பொறுப்பும் அவகாசமும் எனக்கு வழங்கப்பட்ட போது எத்தளத்திலிருந்து தொடங்குவது என்பதுதான் எனது வினாவாக இருந்தது. இந்த மண்ணின் இலக்கியத்திற்கான அட்சய பாத்திரங்களை மறந்து விட்டு எப்படி முழுமைப்படுத்துவது?

வரலாறுகள், தேடல்களின் பெறுமானங்களையெல்லாம் புடம்போட்டு எழுதத் தொடங்கியபோது எனது புத்தக அலுமாரியிலிருந்து எடுக்கப்பட்ட புத்தகத்திலிருந்து ஒரு குறிப்பு மின்னியது. புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் அவர்கள் பதிப்பாசிரியராயிருந்தபோது, சின்னாலிமப்பாவின் "ஞானரை வென்றான்" என்ற நூலுக்கான குறிப்பில் புலவர்மணி இப்படி சொல்கிறார், "சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் மருதமுனையில் **ஞானரை வென்றான்** என்ற நூல் சின்னாலிமப்பா அவர்களால் பாடப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். நிரம்பிய பிழைகளுடன் சில கையெழுத்துப் பிரதிகள் கிடைத்தன. செ.அ. செய்யது முஹ்சின் மவுலானாவிடமிருந்து 1850ம் ஆண்டு ஆடி மாதம் 12ம் தினம் அஹமது லெவ்வை போடியிடமிருந்து ஏட்டுப் பிரதி ஒன்றும் கிடைத்த இச்சந்தர்ப்பத்திலாவது இதனை வெளிப்படுத்த கிடைத்தமைக்கு சந்தோசமடை கிறேன். தமிழில் யாப்பு அணி இலக்கணம் தெரிந்த ஒரு ஆலிம் மருதமுனையில் நூறு ஆண்டுகளுக்கு முன்னே இருந்திருக்கிறார் என்று பெருமைப்படுகிறேன்.

இது 01-07-1948இல் புலவர்மணி வழங்கிய வாக்கு மூலமே. மருதமுனையில் சின்னாலிமப்பா அவர்கள் சிரேஸ்டம் வாய்ந்த பெரியவர் ஆவார். இவர்களுடைய மகிமை திருகோணமலையிலும் மருதமுனையிலும் பரந்து காணப்பட்டது. இவ்வாறு மருதமுனையில் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்தவர் மீராலெவ்வை ஆலிம் எனப்பட்ட சின்னாலிமப்பா ஆலிமாவார். அக்காலத்து உலமாக்களில் தலைசிறந்தவராக விளக்கினார். இளமையில் இந்தியாவிற்குச் சென்று "ஆலிம்" பட்டம் பெற்றார். அறபு மட்டுமல்ல தமிழும் கற்று செய்யுள் செய்யும் ஆற்றலும் பெற்றிருந்தார். இதன் வெளிப்பாடே "ஞானரை வென்றான்" ஆகும். அவ்லியாக்களுள் ஒருவராக மதிக்கப்படும் இவர் ஒருமுறை மழை வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்ட போது மறுகணமே மழை பொழிந்து வேளாண்மை செழித்ததாக கூறப்படுகிறது. இதுவே பின்னர் "மழைக் காவியமாக" வெளிக்கொணரப்பட்டது. இறுதியில் இவர் திருகோணமலையில் "கவாட்டிக் குடா" என்னும் இடத்தில் இறைவனடி சேர்ந்தார். இவர் எழுதிய "விருத்தப்பா"வில் சில வரிகளைச் சமர்ப்பித்து இறுதி செய்யலாம் என நினைக் கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரை முந்து மென்னடா
படைப்பை முந்து மென்னடா
உயிரை முந்து மென்னடா
உறுப்பை முந்து மென்னடா
உயிரை முந்து மென்னடா
கருத்தை முந்து மென்னடா
வயிர முற்ற நித்திலத்து
வாறு கூறும் ஞானரே!

எனக் கூறிச் செல்கிறார்.

இந்த வகையில் அடுத்த மொழி ஜாம்பவனாகத் திகழ்பவர் புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் அவர்கள். 1966ஆம் ஆண்டு இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாடு இந்த மருதமுனை மண்ணில் நடைபெற்ற போது முதலாவது சொற்பொழிவை அன்றைய தினம் நிகழ்த்திய பெருமைக்குரியவர். இத்தேசத்தின் தலைசிறந்த கல்விப் பொக்கிசம், வெண்பாவில் புலி. கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கான பாடப்புத்தத்தின் வழிகாட்டி, மூத்த இலக்கியவாதி. எது சொன்னாலும் அவருக்கு நிகர் அவரே. இதனையே புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை இவ்வாறு கோடிடுகின்றார்.

வெண்பாவிலெ ன்னை நீ வென்றாய் ஷரிபுத்தீன்
நண்பாவென் நாமமுனக்களித்தேன் - பண்பாளனா
வாழி யறபுதமி ழுள்ளளவும் வாழி நீ
வாழி நம தன்பு மலர்ந்து.

இந்த வாழ்த்துப் பாவினை உற்றுநோக்கும் போது நமது புலவர்மணி அன்னவர் பெருமை "நிலாவினை உள்ளங்கையால்" பொத்த முடியாத கைங்கரியமாகப் படுகிறது. 1909ஆம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி இந்த மண்ணில் உதித்து இந்த அம்பாரை மாவட்டம் என்ன? கிழக்கு மாகாணத்திற்கே வெளிச்சமானார். காரைதீவைச் சேர்ந்த சிறீமான், கே.எஸ்., வைரமுத்து அவர்களிடம் தமிழ் இலக்கணங்களை முறையாகக் கற்றவர். பின்னர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாந்தரிடம் இலக்கியம் மட்டுமல்ல சமஸ்கிருத மொழிகளையும் கற்றுக் கொள்ளும் பாக்கியம் பெற்றவர். இவரின் பன்முக ஆளுமையின் இன்னொரு முகம் கல்வி; கிழக்கிலங்கையின் முதன் முஸ்லிம் ஆசான். 1924ம் ஆண்டில்தான் கல்வி கற்ற பாடசாலையிலேயே மாணவ ஆசிரியராகப் பதவியேற்று மூன்று ஆண்டுகள் முதலில் சேவையாற்றினார். ஆங்கிலக் கல்வியை முன்னேற்று வதிலும் மிகக் கரிசனை மேற்கொண்டவர்.

G.C.E. சாதாரண மாணவர்களுக்கான "புதுக்குஸ்ஸாம்" நூலினை ஆக்கிக் கொடுத்தவர். நான்காவது இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டில் "இசைவருள் மாலையும் மக்களுக்கு இதோபதேசமும்" எனும் நூல் வெளிக்கொணரப் பட்டது. 1969ல், இவருக்கு சாகித்ய மண்டலப் பரிசு கிடைத்தது. இதே கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தில் "வீராங்கனை சயிதா" என்னும் கவிதை நூலை வெளியிட்டார். மட்டுமன்றி 1967இல் வெண்பாவில் "நபிமொழி நாற்பது" நூலும் திருவளிப் படைப்பையும் தந்தவர். 1984ல் "கனிந்த காதல்" எனும் நூலை எழுதினார். இது கலையம்சமும், நாட்டுப்பாடல்களையும் கொண்டதாகும்.

அடுத்து **ஜே.எம்.** என்று எல்லோராலும் உயர் சிந்தையோடு அழைக்கப்பட்ட **ஜே.எம்.எம். அப்துல் காதர்** அவர்கள் 23-11-1919இல் பிறந்தார்கள். தனது 19ஆவது இளம் வயதில் ஆசிரியத் தொழிலில் பிரவேசித்த இவர் முன்னணிப் பாடசாலைகளில் சிறந்த அதிபராகவும் அலங்கரித்துள்ளார். இவ்வாறு 1978இல் ஓய்வுபெறும் வரை கழு/ அல்-மனார் மத்திய கல்லூரியிலேயே கடமை புரிந்தார். அது மட்டுமன்றி பிரசித்த நொத்தாரிஸ் பரீட்சையிலே இலங்கையிலே கூடிய புள்ளிகள் பெற்று ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலும் நொத்தாரிசு கடமைபுரிந்து வழக்கறிஞர் அல்லாத ஒரு முஸ்லிம் நமது J.M. அவர்களே யாவார். 1950களில் இருந்து இலக்கியத்தில் காலடி வைக்க ஆரம்பித்த காலத்திலிருந்து "சுதந்திரன்" பத்திரிகையில் இவருடைய கட்டுரைகள் பிரசுரமாகத் தொடங்கின.

தொடர்ந்த காலங்களில் "சீறாப்புராணத்தில் பிறமதக் கொள்கைகள், சீறாப்புராணம் ஒரு பெருங்காப்பியமே, நபிகள் நாயகத்தை நாயகத் திருமேனி" என அழைக்கலாமா? இவ்வாறான கட்டுரைகள் அவருடைய சிறந்த ஆய்வுத் திறனுக்கு சான்று பகர்கின்றன.

1970களிலும் இலங்கையின் தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும், தமிழ்நாட்டு முன்னணிச் சஞ்சிகைகளான பிறை, மணி விளக்கு, முஸ்லிம் முரசு ஆகியவற்றிலும் அநேகமான இலக்கியக் கட்டுரைகள் இடம்பிடித்தன. முகையதீன் புராணம், புதுகுஸ்ஸாம் ஆகியவற்றிற்கு எழுதிய உரை நூல்கள் விசேடமானவை.

மேடைப் பேச்சிலும் நாவல்லுனராகத் திகழ்ந்ததை 1966இல் நடைபெற்ற முதலாவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, 1979இல், கொழும்பில் நடந்தேறிய 4வது உலக இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாடு முக்கியம் பெறுகிறது. ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களுடனான நட்பு, மற்றும் இலக்கியத் தொடர்புகள் மூலம் பெருமட்டான இலக்கிய, கவிதை துறைகளில் சிறப்புற்று விளங்கிய காலம் எனலாம். பேராசிரியர் எம்.எம். உவைஸ், அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ், பேராசிரியர் நெய்னா முகம்மது, எஸ். பொன்னுத்துரை, வித்துவான் FXC. நடராஜா ஆகியோரின் உறவுகளில் JM சகல துறைகளிலும் சிறந்து விளங்கினார். இவ்வாறு பேராசிரியர் M.M. உவைஸ் அவர்கள் நமது J.M.M. அப்துல் காதர் பற்றிய குறிப்பில் இப்படிச் சொல்கிறார், நான் இலங்கையில் J.M.M. அப்துல் காதர் அவர்களின் இலக்கிய அறிவுத் தாகத்தைக் கொண்ட எவரையும் காண்பதில்லை. நான் தவறுகள் இழைத்தபோது அவர் துணிச்சலாகச் சுட்டிக்காட்டினார். இவ்வாறு கூறுவதில் பெருமையடை கிறேன். இவ்வாறு பேராசிரியர் குறிப்பிடும் போது அது நமக்கும் பேறுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, நமது J.M.M. அவர்களுடைய புதல்வர், மருதமுனை மண்ணின் முதல் பேராசிரியர், மாணவனாக இருந்து பல்கலைக் கழகத்திற்கு சென்ற முதலாமவர், கிழக்கு மாகாணத்தில் பல்மருத்துவத் துறைக்குச் சென்ற முதலாமவர். இவ்வாறு பல சிறப்புக்களைப் பெற்ற அவருடைய புதல்வர் பேராசிரியர் டாக்டர் எம்.ஏ. முகம்மது சித்தீக் அவர்களிடமும் கவிவளமும், இலக்கிய ஆர்வமும் நிறைந்து கிடப்பதைப் பார்க்கும் போது சந்தோசமாக விருக்கிறது. அதுமட்டுமல்ல தன் தந்தைக்காக அவர் எழுதிய யாப்பிலக்கிய மரபிலமைந்த கவிதை அதற்கு கட்டியம் கூறுகிறது. 2000ம் ஆண்டு JMM அவர்களுடைய இலக்கிய இன்பம் நூலை வெளியிடுவதில் அதிக அக்கறை எடுத்தவர். தந்தைக்காக எழுதிய அவருடைய கவிதையில் சில வரிகளை இங்கு அடையாளப்படுத்த விளைகிறேன்.

தந்தையே உம் சொல்லை மந்திரம் போல் நான் வந்ததாலன்றோ! வல்ல இறை அருள் செய்தான். அவையகத்தில் முந்தியே அமர முடியாவிடினும் சபைகளிலே சர்வ கலாசாலை களிலே இணைய எனக்கு ஏதுக்கள் செய்தவரே. துணைகள் பல செய்து தூக்கிவிட்டவரே. எந்தையே! உமை நான் தந்தையாய் அடைய எந்நோற்றேன் நானறியேன் இன்றுமே நானறியேன். இவ்வாறு முடிக்கிறார் பேராசிரியர் டாக்டர். எம்.ஏ. முகம்மது சித்தீக் அவர்கள். தனது பொறுப்புமிக்க பல்வைத்திய நிபுணராக திகழும் இவருக்குள் கவிதா திறன் மென்மேலும் வளர்ந்து செல்வதைப் பார்க்கும் போது நமக்கெல்லாம் பெருமையின் உச்சம் தான். அவருடன் நேரடியாக நான் கதைக்கும் போது அதனை பல சந்தர்ப்பங்களில் உணர முடிந்தது.

அடுத்து தமிழ்மொழிப் புலமையும், இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தை உலகறியச் செய்த பெருமைக்குரியவரும் இந்த மண்ணின் மற்றுமொரு இலக்கியப் பொக்கிசம் S.A.R.M. **செய்யது ஹஸன் மௌலானா அவர்கள்.** ஒரு சிறந்த ஆசிரியப் பெருந்தகையாய் இருந்து கொண்டு இஸ்லாமிய இலக்கியத்தையும் தன் வலக்கரத்தினால் நகர்த்தியவர் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் 1966ஆம் ஆண்டு முதன் முதலில் இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டை நடாத்துவதற்கு தானே தளபதியாய் முன்னின்று சிறப்பாக்கியவர். அதன் தொடராக நடைபெற்ற பல இஸ்லாமிய இலக்கிய மாநாடுகள் நடைபெறுவதற்கு அர்ப்பணிப்புச் செய்தவர். தமிழறிஞர் ஹஸன் மௌலானாவுடைய 1968இல், வெளிக் கொணரப்பட்ட இஸ்லாமிய தமிழிலக்கிய சொற்பொழிவு மிகவும் சிலாகித்துப் பேசப்பட்டது. இவர்களுடைய கவியரங்கக் கவிதைகள் ஒரு காலத்தில் முக்கியத்துவம் பெற்றன. முஹர்ரம் நாள், வளர்பிறை போன்றவை களைச் சொல்லலாம். மட்டுமன்றி "திருக்குர்ஆன்" என்ற கவிதை எளிமையும், இனிமையும் கொண்ட சிறந்த வெண்பாக் கவிதைகளில் ஒன்று என பேராசிரியர்கள், இலக்கிய கருத்துக்களினால் பேசப்பட்ட கவிதையாகும். சீறாப்புராணம், குணங்குடி மஸ்த்தான் பாடல்களும் இஸ்லாமிய இலக்கியத்திற்கு கிடைத்தது என்று பெருமைப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியத் தமிழ் இலக்கியமும் தமிழ் இலக்கியத்தில் ஒரு அங்கமே என உறுதிபடச் சொல்லி வருபவர். இவர் 1999 டிசம்பரில் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கி, நினைவுச் சின்னமும் வழங்கி பாராட்டுப் பெற்றார்.

இலங்கையில் 2002ல் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டில் "இஸ்லாமிய இலக்கிய காவலர்" என்று பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 01-10-2005இல் வெளியிடப்பட்ட "இஸ்லாமும் தமிழும் இலக்கிய சங்கமம்" எனும் நூல் படைப்பில், இஸ்லாமிய இலக்கியம், இஸ்லாமிய தமிழ் இலக்கியம், அரபுத் தமிழ் இலக்கியம் என்பவற்றை ஒருமித்து தொகுப்பாக வெளிக்கொணர்ந்த பெருமைக்குரியவர்.

அடுத்து **ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள்,** தன் இலக்கியத் தளத்தில் "ஜின்னாஹ்" என தடம்பதித்தாலும், மருதமுனையின் பெரும் பன்முக ஆளுமை புலவர்மணி ஆ.மு.வின் வாரிசு டாக்டர் ஜின்னா அவர்கள். கடல் கடந்த தேசங்களிலெல்லாம் இலக்கியப் புலமை மூலம் நமது கிராமத்தின் பேற்றினை கொண்டு சென்றவர். தனது வாழ்வியல் உறுதுணையாக வைத்தியத் தொழிலை கண்ணியத்துடன் தலைநகரில் செய்து வருபவர்.

1965இல் இலக்கியப் பிரவேசம் செய்து கவிதை, சிறுகதை, புதினம், சிறுவர் இலக்கியம், மொழிமாற்றம் (கவிதை) வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இலக்கியக் கருத்தரங்குகள், கவியரங்குகள் உள்ளிட்ட முழுமை பெற்ற ஒரு இலக்கியவாதி என்று வெளிப்படையாகக் கூறிக்கொள்ளலாம். யாப்பிலக்கியத்தில் தெளிவு ஞானமும் பெற்று வரும் மரபு ரீதியிலமைந்த கவிதைகளும் சமூகத்தில் காணப்படும் விடயதானங்களை கருவளமாகக் கொண்டு சிறுகதைகளையும் நிறைய எழுதி வருபவர். காத்திரமான இலக்கிய விமர்சனங்களையும், நூல் அறிமுகத்தையும் செய்து வருபவர். இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாடுகளின் காரணகர்த்தா. காவியங்களைச் செதுக்குவதில் இவருக்கு நிகர் இவர் என்றே சொல்லலாம். இதன் வெளிப் பாடே பிற்காலத்தில் "காப்பியக் கோ" என மகுடம் சூடப்பட்டவர். அறிஞர் எஸ்.டி. சிவனாயகத்தை தனது ஞானத்தந்தை என முன்னிறுத்தும் காப்பியக்கோ "ஜின்னா" அவர்கள் 1989இல் முத்து நகை, பாலையில் வசந்தம், மஃஜூபீன் காவியம் (600 பாடல்கள்), புனித பூமியிலே காவியம் (100 பாடல்கள்), பனிமலையின் பூபாளம், கருகாத பசுமை (புதினம்), இரு குறுங்காவியங்கள், கடலில் மிதக்கும் வீடு (சிறுவர் பாடல்), அகப்பட்ட கள்வன் (சிறுவர் படக்கதை), பெற்ற மனம் (சிறுகதை), எங்கள் உலகம் (சிறுவர் பாடல்கள்), பண்டார வன்னியன் காவியம் (1500 பாடல்கள்), திருநபி காவியம் திருமறையும் நவி வழியும், வேரறுந்த நாட்கள், ராகுலுக்கு ஒரு புது வண்டி போன்றனவும் பல ஆய்வுகளும் தேசிய ரீதியில் பல விருதுகளும் பரிசில்களும், கௌரவங்களும் பெறப்பட்டன. சிந்தாமணி கவிதா வட்டத் தலைவர் பதவியில் அலங்கரித்து, கொழும்பு தமிழ்ச்சங்க துணைத்தலைவர் வரை பலதரப்பட்ட பதவிகளில் செயற்பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு கம்பன் கழக ஆட்சிக்குழு உறுப்பினர், இவ்வாறு பல தகைமைகளை யுடைய இவர் விரைவில் வெளியிடப்படவிருந்த நூல்களாக கேள்வியும் பதிலும் (மகாகவி இக்பாலின் மொழி மாற்றக் கவிதைகள்) தேட்டம் (சிறுகதை), கவியரங்குக் கவிதைகள், ஜின்னாவின் கதைகள் உள்ளிட்ட இன்னும் பல இலக்கியங்களை நமது மண்ணுக்கு தந்து பெருமைசேர்க்க வாழ்த்துக்கள்.

அடுத்து, ஆசிரியராகவும், அதிபர் பெருந்தகையுமாக இருந்த **"மருதூர்க் கொத்தன்"** என்ற புனைப்பெயரில் தனக்கு முடிந்த இலக்கிய பயணிப்பில் வலம் வந்தவர் **மர்ஹூம் வீ.எம். இஸ்மாயில் அவர்கள்** "மருதம்" கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டு அதில் "சுந்தரி" "சலவைக்காரி" ஆகிய கதைகளை எழுதி வந்தபோது 1961இல் கல்முனை எழுத்தாளர் சங்கம் உதயமானபோது செயலாளராக இருந்து பின் கவிஞர் நீலாவணனின் தூண்டுதலினால் சுபைர் இளங்கீரனை ஆசிரியராகக் கொண்டு இயங்கிய "இருவர்" என்ற கதையையும் எழுதினார். இருந்த போதும் தேசியப் பத்திரிகையான தினகரனில் 1962இல், "கருமுகில்" என்ற கதை அச்சில் வந்த முதல் கதை எனலாம். இதே சமகாலத்தில் "வேலி" என்ற சிறுகதையும் எழுதப்பட்டது. இவர் மரணிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முதல் "கவசம்" என்ற சிறுகதை தினகரனில் வெளியாகியமை இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும். நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகள், கட்டுரைகள், எழுதி பெறுமானம் சேர்த்தார்.

1985இல் மருதூர்க்கொத்தன் கதைகளும், அபூஹபீனா என்ற பெயரில் "காவியத் தலைவன்" என்ற கவிதைத் தொகுதியையும் வெளியிட்டு பெருமை சேர்த்தவர். சூட்சுமப் பத்து, மோகப்பத்து, பாவப்பத்து, பெரியார் பத்து, ஒளிப்பத்து. இவ்வாறு இவரது தலைப்புகள் வித்தியாசமாக அவரது கவிதைகள் இடம்பிடித்தன. 1993இல், தாஜூல் அதீப், பட்டம் தொடங்கி, 1999இல் கலாபூஷணம் விருதும் பெற்று, இறுதியில் 2002இல், உலக இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டில் கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவரது குடும்பம் அண்மையில் அவரது முன்னணிச் சிறுகதைகளைத் தொகுத்து சிறப்பாக்கியமை நமக்கு பெருமைதான்.

அடுத்து நிற்பவர் **மருதூர்வாணர்** பாடசாலைக் கல்வியை முழுமையாக உள்வாங்க முடியாமல் போனாலும் மொழி ஆளுகையை தனது இலக்கியத்துள் முன்னிறுத்தியவர். தான் 4ம் தரத்தில் பயிலும் போது பாலர் கவிதைப் போட்டியில் கா...கா...கா... என்று கத்தாதே காகம் என்ற கவிதை மூலம் இலக்கியப் பிரவேசம் செய்கின்றார். தனக்கு "குட்டிப் புலவன்" பட்டத்தை புலவர்மணி ஆ.மு. அவர்கள் வழங்கியதாகக் கூறிக்கொண்டவர். 1951இல் முதலாவது கவிதைத் தொகுதியான "என் தம்பி" தொகுப்பினை வெளியிட்டார். 1956இல் முதலாவது சிறுகதையினை "சுதந்திரன்" வெளியிட்டது. முதலாவது தெளிவு" நாவலை 1961இல் செங்கை ஆழியான் வெளியிட்டார்.

1970இல், "முதலிரவு" சிறுகதைத் தொகுதி இலக்கிய உலகில் வியாபித்துப் பேசப்பட்டது. இவரது குறுநாவல் "பெருநாள் பரிசு" அமெரிக்க நூலகத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இவர் மரணிக்கும் வரை "சமாதானம்" சஞ்சிகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடராக 15 இதழை வெளியிட்டார். சிறந்த நடிகராகவும், இசையமைப் பாளராகவும் இருந்த இவர் "தேன்மதி" பொக்கிசம் மூலம் தன்னை வெளிச்ச மாக்கியவர், சீர்காழி கோவிந்தராஜனின் "கல்லிலே கலை வண்ணம் கண்டான்" சினிமாப் பாடல் மெட்டிலே "கதிர்காமம் தனில் வாழும் கோமான், எங்கள் ஹயாத்து நபி என்னும் பெருமான்... என்று இசையமைத்துப் பாடினார். பல விருதுகள், பாராட்டுக்களைப் பெற்ற இவர் தந்தை செல்வா விருதினை பெருமை என்கிறார். கலாபூசண விருதினையும் தன் உயிருடன் பெறும் பாக்கியம் பெற்றவர். அடுத்து கல்வியும் இலக்கியமும் ஒரு சேரப் பணிசெய்தவர் வரிசையில் நிற்பவர் **பாரிமௌலானா** அவர்கள். சிறந்த அதிபராகக் கடமைபுரிந்ததோடு, முனைப்பு கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசியராகப் பணிபுரிந்தார். பள்ளிப் பருவத்திலேயே கவிதை, கட்டுரை, சிறுகதைகளை எழுதி வந்தார். பின்னர் "கவிஞர் செஹபா" என இலக்கிய உலகில் அறியப்பட்டார்.

1980களில் சிறுகதை வல்லுனராக அறிமுகமாகி 50க்கும் மேற்பட்ட புனைகதைகளையும் தனது முனைப்பு சஞ்சிகையில் "மறுகரையின் நிறம்" என்ற நாவலையும் தொடராக எழுதி வந்தார். புத்தி பிறந்தது மெழுகுவர்த்தி போன்ற நாடகங்களின் மூலம் பேசப்பட்டவர். முனைப்பு சஞ்சிகையை தொடராக 14 வரை வெளியிட்ட பெருமைக்குரியவர்.

இவ்வாறு அடுத்த இலக்கிய நிரலில் இருப்பவர் **"முஹம்மது ஹனீபா"** என அறியப்பட்ட **கவிஞர் மருதூர்க்கனி.** ஒரு ஆசிரியராக இருந்தவேளை இலங்கை முஸ்லிம் காங்கிரஸில் ஈர்க்கப்பட்டு தான் மரணிப்பதற்கு முன் பாராளுமன்ற உறுப்பினராக (2000ம் ஆண்டு) பணிபுரிந்துவிட்டுச் சென்றவர்.

இவருடைய இலக்கிய வளர்ச்சியினை நோக்குகின்றபோது முற்போக்கு இலக்கியம் என்ற அணிக்குள் பயணித்து தன்னுடைய கவிதைகளில் சிவப்புச் சிந்தாந்தத்தை முன்னெடுத்தவர். இதன் பெறுமானமாக 1970களில் வெளிவந்த "அக்னி" என்ற சஞ்சிகையில் "பீத்தல் வலையும் சுறாக்களும்" என்ற கவிதையை எழுதி பெரிதும் பேசப்பட்டவர்.

எவ்வாறாயினும் 1963இல், "தினகரன்" பத்திரிகையில் வெளிவந்த **"நினைவு"** என்ற கவிதை மூலம் இவரது கவிதை முதல் கவிதையாக பிரசுரமாகிறது. ஒரு நல்ல புகைப்படக் கலைஞனான கனி, நாடகத் துறையிலும் சளைத்தவரல்ல. தனது முதல் நாடகமான "சோழன் மகன்" என்ற அரசியல் கதையம்சம் பின்னப்பட்ட இந்நாடகம் அப்போது பிரபலமாயிருந்தது. பல முகங்களைக் கொண்டு காத்திரமான பங்களிப்புச் செய்த இவர் அவ்வப்போது தேசிய பத்திரிகைகளில் பல நெடுங்கவிதைகளை எழுதி வந்தார். நெடுங் கவிதை எழுதும் கவிதா உத்தி பெற்றவர் இவரே. இதன் பெறுபேறுதான் இவரால் "மருதூர்க்கனி கவிதைகள்" தொகுப்பினை வெளிக்கொணர முடிந்தது. மட்டுமன்றி என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும், சந்தணப் பெட்டகமும் கிலாபத் கப்பலும்" இவரது கவிதைத் திறன்களுக்கு மேலும் அணிசேர்த்தன. **கவிஞர் நயீம் சரிபுத்தீன்** அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணச் செய்திகேட்டு தேசிய பத்திரிகை ஒன்றில் "என் பால்ய காலப் பாதிப்பூவே" என்ற நெடுங்கவிதை ஒன்றை எழுதி கவலையை வெளிப்படுத்தி யிருந்தார். தன் இறுதிக் காலத்தில் அவுஸ்திரேலியாவிலும் இவரது இரண்டு படைப்புகள் வெளிவந்தன.

2002ம் ஆண்டில் இவரால் வெளியிடப்பட்ட, மண்பூனைகளும் எலி பிடிக்கும், அந்த மழை நாட்களுக்காக போன்றவை நல்ல பாடுபொருள் கொண்ட இலக்கியங்களாகும். புலவர்நாயகம், கலாபூஷணம் போன்ற விருதுகளைப் பெற்ற இவர் 1998ல், லங்காதிலக என்ற பட்டமும் பெற்று போற்றப்பட்டார். ஸ்ரீ.ல.மு.கா. மூத்த துணைத்தலைவராக இருந்து குறுகிய அரசியல் காலத்தில் பல சேவைகள் புரிந்தவர். மருதமுனை பொது நூலகத்தை தரநிர்ணயம் செய்து அதனை பெறுமானப்படுத்தியவர். புதிய வெளிச்சம் சஞ்சிகையின், வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்று தொடர்ச்சியான அதன் வருகையை உறுதிசெய்தவர். அரசியல், இலக்கிய மேடைகளை சுவைபட அதிர வைத்தவர்.

அடுத்து சம்மாந்துறையைப் பிறந்தகமாகவும் கொண்டு மருதமுனையில் மணவினை செய்து நான்கு தசாப்த காலமாக இம்மண்ணை நேசித்து இலக்கியப் பணிசெய்து வந்தவர் கவிஞர் ஈழக்குயில் இத்ரீஸ் ஒரு கணக்காளராகவும், ஆயுள்வேத வைத்தியனாகவும் இருந்து பணிபுரிந்தவர். இவர் பல கோணங்களில் தன் இலக்கியப் படைப்புகளைச் செய்து வந்தார்.

1994ல், இதயத்தில் நீ, 1995ல், ஒரு ஆத்மாவின் பிரார்த்தனைகள், 1995ல், சின்னாலிப்பாவின் மழைக்காவியத் தொகுப்பு, 1997இல் நாடறிந்த ஈழமேகம் போன்ற இலக்கியப் படைப்புக்களை வெளியிட்டவர். பல தேசியப் பத்திரிகைகளிலும், பல சஞ்சிகைகளிலும் தன்னுடைய கவிதைகளை எழுதியவர். யாப்பு அணிசார் கவிதைகளையும் அவ்வப்போது பல தளங்களில் செதுக்கியவர். கவியரங்க மேடைகளில் தலைமை வகித்தும், பல கவியரங்குகளிலும் கவிதைகள் பாடி நெறிப்படுத்தியவர். தேர்ந்த சிறுகதைகளையும் தான் மரணிப்பதற்கு சில காலங்களுக்கு முன் "துறையூர் முகம்மதனிபா" என்ற பெயரில் அவ்வப் போது தேசிய பத்திரிகைகளில் எழுதினார். செந்தூரம் சஞ்சிகையில் சிறுவர் பாடல்களை நிறையவே எழுதியவர்.

மருதமுனைக் கவிஞர்கள் கவிதைகள் "உலா" என்ற பெயரில் தொகுப்பாக வந்தபோது அந்த "உலா" சஞ்சிகையை எழுத்தாளர் கவிஞர் மீராவைக் கொண்டு ஒரு விமர்சனத்தை வானொலியூடாக தனது இல்லத்தில் அரங்கமைத்து கேட்கச் செய்தவர் நமது ஈழக்குயில் அவர்கள். இவரது புதல்வன் "இளங்குயில் இம்தியாஸ்" தற்போது கவிதைகளை எழுதி வருகிறார்.

அடுத்து இணைந்துகொள்பவர் **"மருதமுனை மஜீத்"**. ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர். மருதமுனையிலுள்ள முன்னணிப் பாடசாலையான கமு/அல்-மனார் மத்திய கல்லூரியினை வளர்த்தெடுப்பதில் பெரிதும் பாடுபட்டார். **அதிபர் திலகம்** என்ற பெருமைக்குரியவர். நெடுங்கவிதைகளையும், தேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகளையும் எழுதியவர். "பெரியப்பா" என்ற சிறுகதை பலராலும் பேசப்பட்டது. 1998ல், காவிய நாயகன், 2005இல் எனது கிராமத்தைத் தேடுகிறேன், 2008இல் ஆழிப் பேரலைகள் போன்ற படைப்புக்களைத் தந்தவர். எனது பார்வையில் அவர் நிறையவே உளவியல் ரீதியான கதைகளை எழுதியவர்.

ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள் சிறந்த தமிழறிஞர். ஒரு கல்வியியலாளர். அல்-குர்ஆன் ஞானமணிக் கோவை நூலை 1994இல் வெளிக்கொணர்ந்தார். இஸ்லாமிய உணர்வுள்ள நெடுங்கதை எழுதுவதில் முக்கியமானவர்.

அடுத்து புலவர்மணியின் கட்டுத்தறி தமிழாசான் **நயீம் சரிபுத்தீன்** அவரின் உத்தம தூதர் என்ற கவிதைகள் முக்கியமாகும். ஒரு சிறந்த தமிழ்மொழிப் புலமைகொண்ட இவர் சொல்லாட்சி மிகு கவிவளமிகு கவிதைகள் தந்தவர்.

அடுத்து கொத்தனின் வாரிசு **எம்.ஐ.எம். றஊப்**, ஒரு விமர்சகர்; சிறுகதை எழுத்தாளர். "முனைப்பு" சஞ்சிகையின் உதவி ஆசிரியர்களுள் ஒருவர். 1992இல் "கனவும் மனிதன்" சிறுகதைத் தொகுதியை வெளியிட்டவர். சண்முகம் சிவலிங்கத்தின் "காலடி" என்ற குறுநாவலை விமர்சனத்திற்குள்ளாக்கியதன் மூலம் புலம்பெயர்ந்த இலக்கியத்திலும் பெரிதும் பேசப்பட்டவர். ஒரு சட்டத்தரணி. வீரகேசரி "உயிர் எழுத்து" பகுதியில் பல இலக்கிய கட்டுரைகளை எழுதியவர்.

அடுத்த **கவிஞர் எம்.எச்.ஏ. கரீம்**; இலங்கை வானொலியில் "ஒலி மஞ்சரி"யில் நல்ல கவிதைகள் பல எழுதி பிரபல்யமாய் மிளிர்ந்தவர். பல்வேறுபட்ட இலக்கிய மேடைகளில் கவியரங்குக் கவிதைகளை உயிரோட்டமாய் வாசிப்பவர். மரபுவழி நின்று நிறையக் கவிதைகளை எழுதியவர். 1998இல், "காலத்தின் காலடியில்" கவிதைத் தொகுதியைத் தந்தவர். "ஏடு" சஞ்சிகையின் இணையாசிரியர். பாவளம், கவிதைக் கலசம் போன்ற இலக்கிய நிகழ்ச்சியின் பல கவிதைகள் ஒலிபரப்பாகின.

கவிஞர் டீன் கபூர் ஒரு ஆசிரியர். 1986இல் மித்திரனில் வெளியான வழிகாட்டு, ஓலை, உயிர் போன்ற கவிதைகளை எழுதி அறிமுகமாயிருந்தாலும் பாடசாலைக் காலங்களில் கலங்கரை சஞ்சிகையின் மூலம் கவிதைகளை களமாகக் கண்டவர். மண்வாசனையுடைய கவிதைகளை மொழிக்கு கொண்டுவருவதில் வெற்றி கண்டவர். 'இது' சஞ்சிகையின் ஆசிரியர். 1994ல், குரோட்டன் அழகி கவிதைத் தொகுதியைத் தந்தார். இணையத் தளங்களில் கவிதைகள் படைத்துவரும் இவர் 2007இல் திண்ணைக் கவிதைகள் என்ற நூலை வெளியிட்டார். ஒரு ஓவியர். ஒரு ஆசிரியர்.

நமது இன்னும் ஒரு அடையாளம். **அ.ற. நிஹ்மத்துல்லாஹ்.** தற்போது பாடசாலை அதிபராயிருந்து பல நிகழ்வுகளை நெறிப்படுத்துபவர். கவிஞர் **'அறநிலா'** என்று அறியப்பட்டவர் இவர். 1986இல், கோலங்கள் கோணங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988இல், ஒரு வட்டத்துள் சில புள்ளிகள். இக்கவிதை தொகுப்புகளை வெளியிட்டு பெருமை சேர்த்தவர். இவருடைய கவிதைகளைப் படிக்கும் போது ஒரு "இரட்டைத் தன்மை" பொருந்தியதான கவிதா உக்தி ஏற்படும். ஹைக்கு வடிவிலான கவிதைகளையும் தந்தவர். "சரம்" இலக்கிய வட்டத்தின் முக்கியமானவர். கலங்கரை சஞ்சிகையை வெளிக்கொணர்வதற்கு மிகவும் உறுதுணையாயிருந்தவர். காத்திரமான இலக்கிய விமர்சகர். ஒரு தீவிர வாசகர். தேசியப் பத்திரிகைகள், பல சஞ்சிகைகளில் இவருடைய எழுத்துக்கள் இடம் பிடித்துள்ளன.

றகுமான் ஏ. ஜப்பாரும், ஒரு பன்முக ஆளுமை, கவிதை, சிறுகதைகளை எழுதியவர். ஒரு ஆசிரியராய் இருந்த போது மரணத்தைத் தழுவியவர். ஒரு அறிவிப்பாளர். 1979இல், தினகரனில் வெளிவந்த "ஏன் படைத்தான்" கவிதை மூலம் புறப்பட்டவர். 1992இல், தொட்டுவிடும் தூரத்தில் என்ற சிறுகதையைத் தந்தவர். முனைப்பு, சரம், இது இலக்கிய சஞ்சிகைகளில் உதவி ஆசிரியர். 2001இல், வண்ண வண்ணப் பூக்கள், ரசிகச் சூரியன் 2001 அலைகள் அழைத்த பூக்கள் சிறுகதைகள் போன்ற நூல்களை வெளியிட்டவர்.

மொழியை மொழியாய் நேசித்த இன்னொருவர் **தடங்கள் தமீம்**. இயற்கையை அழகாய் தன் கவிதைகளில் படியவிட்டவர். 1991ல், தடங்கள் கவிதை நூலைத் தந்தவர். பின்வந்த நாட்களில் சுயம், ஆலிசம், கங்கில் கவிதைகளின் தொகுப்பை வெளியிட்டவர். கவியரங்குகளில் கவிதைகள் பலவற்றை பெறுமானமாய் ஒப்புவித்தவர். ஒரு சிறந்த நவீன ஓவியர்.

இந்த மண்ணின் இன்னுமொரு இலக்கியப் புலமை எம்.ஐ.ஏ. ஜபார். முனைப்பு சஞ்சிகையின் இணையாசிரியர். விமர்சகர். 1986இல், திறக்கப்படாத தீப்பெட்டிகள், 1996இல், தரப்பட்ட அவகாசம் போன்ற கவிதைத் தொகுப்புக் களைத் தந்தவர். வெளிவராமல் இருந்த கலங்கரை சஞ்சிகையை மருதூர்பாரி அவர்களுடன் இணைந்து புத்துணர்வு பெற உயிரூட்டியவர். தன் இலக்கிய ஆளுமையால் புலம்பெயர் இலக்கியங்களுடனும் நன்கு பரீட்சயமானவர். இலக்கிய மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகளை முன்னின்று நடாத்தி வெற்றி கண்டவர். இவரது முதல் கவிதை **மனக்கோட்டைகள் சரிகின்றன** ஆகும்.

அடுத்து ஆரம்ப காலத்தில் இலங்கை வானொலியிலும், சஞ்சிகையிலும் **மருதமனாளன் றபீக்** என தன்னை நிலைநிறுத்திய இவர் இப்றாகிம் எம். றபீக் முழுப்பெயரோடு கவிதைகளை அடையாளப்படுத்துகிறார். உலா, பயணம் சஞ்சிகைகளை வெளியிட்டு வைத்தவர். 2011இல், குருத்து மணல் கனவு கவிதைத் தொகுப்பினை வெளியிட்டார். இருந்தும் 1986இல், சிந்தாமணியில் **கன்னிக் கவிதை** என்ற தன் முதல் கவிதையை எழுதியவர். எங்கள் தேசம், பிறை எப்.எம்., தளங்களில் கவிதைகளை எழுதி வருபவர்.

இன்னுமொருவர் **மருதூர் அலறி**. ஒரு சட்டத்தரணி. 1990களில் பிரவேசங் கொண்ட கவிஞர். பூமிக்கடியில் வானம் (2005), பறவைபோல் சிறகடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் (2006), எல்லாப் பூக்களும் உதிர்ந்துவிடும் (2008), மழையை பொழிதல் (2009) போன்ற இலக்கிய நூல்களைத் தந்தவர். இந்த அணியில் இன்னும் பலர் உளர். **ஏ.எம். குர்ஷித்** நிறைய சஞ்சிகைகளை தன் கவிதைகளுக்காகப் பயன்படுத்தியவர். நிறங்களால் நிறமூட்டப்பட்ட உலகு (2013) கவிதைத் தொகுதியைத் தந்தவர். ஒரு ஆசிரியர். **அம்ரிதா ஏ.எம்.** ஒரு விரிவுரையாளர். புனைகதை எழுத்தாளர். 2001இல், விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள் புனைகதை நூலைத் தந்தவர். வாசிப்பினை அதிகம் நேசிப்பவர். விமர்சகர்.

கலாபூஷணம், **புன்னகை வேந்தன்** ஏ.எம்.எம். பாறூக் இந்தக் கிராமத்தில் இற்றைவரை மரபுவழி நின்று கவிதை சொல்பவர். காத்திரமான கவிஞர். பல தேசியப் பத்திரிகைகளிலும், கவிதைகள் மற்றும் மொழி மாற்றம் செய்யப்பட்ட சிறுகதைகள் எழுதி வருபவர். 2013ல் சந்தன மரம் (மொழிபெயர்ப்பு) சிறுகதைகளைத் தந்தவர். 1965இல் இளம்பிறையில் வெளிவந்த "எழில் நிலவே" கவிதையின் மூலம் அறிமுகமான இவர் தனது ஆங்கில மொழிப் புலமையால் பல மொழிபெயர்ப்பு இலக்கியங்களை முன்வைத்துக் கொண்டிருக்கிறார். தற்காலத்திலும் உயிரோட்டமுள்ள கவிதைகளை தேசிய பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதி வருபவர். இவரது சந்தன மரம் மொழிபெயர்ப்பு சிறுகதை நூல் 2014ல் தேசிய ரீதியில் பரிசுக்காக தேர்வாகியது.

அடுத்து **ஏ.ஆர்.ஏ. ஹமீட்** அவர்கள். கூடுதலான சிறுகதைகளை எழுதி வருபவர். ஆங்கில மொழியிலும் புலமையுள்ளவர். ஒரு உளவளத் துணையாளர், விமர்சகர்.

அடுத்து **றகுமான் ஏ. ஜமீல்** கூடுதலான சஞ்சிகைகளிலும், தேசியப் பத்திரிகை களிலும் எழுதி வருபவர். ரோஜா இணையாசிரியர். அல்-மதீனா பாடசா லையில் கடமைபுரிபவர். 2007ல், தனித்தலையும் பறவையின் துயர் கவியும் பாடல்கள், 2010இல் உடையக் காத்திருத்தல், 2013இல் காற்றை அழைத்துச் சென்றவர்கள். இவ்வாறு கவிதை நூல்களை வெளியிட்டவர். பல கவிதைப் போட்டிகளில் பரிசில்கள், விருதுகள், பெற்றவர். சிறுவர் பாடல்கள் பலவற்றை எழுதி தேசிய ரீதியில் பாராட்டுப் பெற்றவர்.

ஐ.எல்.ஏ. றஹீம், ஓய்வுபெற்ற ஆசிரியர். மரபுசார் கவிதைகள் தந்த கவிஞர். அடுத்து **கவிஞர் ஏ.எச். லாஹிர்,** பிரதேச செயலகத்தில் உயர்பதவி வகிப்பவர். நிர்வாகத்திற்கான கிராம சேவை பொறுப்பதிகாரி. குறிப்பாக வீரகேசரிப் பத்திரிகையில் அற்புதமான கவிதைகள் தந்தவர். எம்.எம். உவைஸ். ஓய்வுபெற்ற கிராம நிலதாரி. அல்-ஹஸனாத், இலக்கிய மஞ்சரி ஆகியவற்றில் கவிதைகள் எழுதியவர். ஓய்வுபெற்ற ஆசிரியர் கவிஞர் ஈ.எம். றாசிக் பல பத்திரிகைகளில் கவிதைகளை அவ்வப்போது இளமை ததும்பும் காதல் கவிதைகள் எழுதி வருகிறார். கவிஞர் ஐ.ஏ. ஹமீட், தற்போது ஆழமான கவிவளமுள்ள கவிதைகளை எழுதிவருபவர். ஏ.ஆர். கலீலுர் ரஹ்மான் ஓய்வுபெற்ற தபால் அதிகாரி. இவரும் வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளுக்கு தளம் அமைந்திருக்கின்றார். தவிர, ஏ.எச். றிபாஸ், 1999இல் "நாளை" என்ற கவிதை நூலைத் தந்தவர். 1989இல், எஸ்.எல்.எம். நழீம், சொன்னால் பாவமே - கையெழுத்தினாலான சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டார். இந்தக் கிராமத்தின் மற்றுமொரு தமிழ் முத்து எம்.ஏ. ஜலீல் M.A. ஓய்வுபெற்ற உதவிப் பீடாதிபதி. தமிழ் இலக்கியத்தை சுவைபட பதியவைப்பவர். தமிழறிஞர். 1982இல், செந்தமிழ் வளர்த்த புலவர்கள் என்ற இலக்கிய நூலைத் தந்தவர். எஸ்.எம். மூஸா, ஓய்வுபெற்ற ஆசிரியர். "றாகிலா மூஸா" என்ற பெயரில் வானொலியில் நாடகங்களை எழுதியவர். எம்.சி.எம். அப்துல் காதர், ஒரு பதிப்பாசிரியராக இருந்து பல இலக்கியப் பங்களிப் புக்களைச் செய்து வருகிறார். அல்-மருதமுனை 11வது இதழை வெளியிட்டவர்.

அடுத்து **கலைதாசன் ஹக்கீம்**; கவியரங்குக் கவிதைகளை மொழியின் அழகான உச்சரிப்பால் முழங்குபவர். எங்கள் தேசம் உள்ளிட்ட பல பத்திரிகைகளில் தொடர் கவிதைகளை எழுதி பிரபலமானவர். இலங்கை வானொலி, பிறை எப்.எம்., ஊவா சமூக வானொலிகளிலும் கவிதை இடம்பிடித்திருக்கிறது. 2005இல் இது ஒரு சுனாமி கவிதை நூலை வெளிக்கொணர்ந்தார். ஒரு சமூக சேவையாளன்.

எஸ்.எம். ஹப்பார், வங்கி முகாமையாளர், வெண்ணிலா சஞ்சிகையை வெளியிட்டவர். காவியன் என்ற புனைப்பெயரில் பல சிறுகதைகளை வடித்துள்ளார். 1978இல், "சாஹிறா" இதழில் இவரின் "அவன் என்ன செய்து விட்டான்' சிறுகதை முக்கியமானது. இருந்தும் தனது முதல் கவிதையாக தாய் கவிதையினை எழுதியதாகச் சொல்லிக்கொள்கின்றார். அவ்வப் போது பத்திரிகை களில் சமூக, காதல் உரசும் கவிதைகளை எழுதிவரும் ஒரு படைப்பாளி.

ஓய்வுபெற்ற அதிபராகவிருந்து இலக்கியத் துறையிலும் கால்பதித்து வருபவர். **ஏ.எம்.எம். பாறூக்** அவர்கள். 1970களில் இலக்கியத் துறையில் அறிமுகமான போது "சுதந்திரன்" பத்திரிகைகளில், சமூகப் பார்வையில் நல்ல காத்திரமான சிறுகதைகளை எழுதியவர். வருகின்றார். இலக்கியக் கட்டுரைகள், சமூகத்தில் நடந்தேறும் விடயங்களை துல்லியமான அவதானிப்பில் நல்ல பல சிறுகதை களை எழுதுபவர்.

மிகவும் குறுகிய கால அளவில் நிறைய வாசித்தலின் விளைவாகவும், இலக்கியத் தின்பால் உள்ள தீவிர இரசரனயின் மூலம் கவிதை எழுதப் பிரசன்னமானவர் பிரதேச செயலாளர் கவிஞர் எம்.எம். நௌபல். கல்முனை பிரதேச செயலாளராக இருந்த காலம் இவரின் பொற்காலமாகும். தனிமனித ஆளுமையின் துணிகரத்தால் ஏழு முனைமலர், விசேட மலர் சஞ்சிகையை வெளியிட்டு பிரதேச இலக்கியத்திற்கு களம் அமைத்தவர். 2013இல் "மாம்பழக் கொச்சி" கவிதை நூலைத் தந்தவர். சாமஸ்ரீ, தேசமான்ய, ரத்னதீப போன்ற கௌரவங்களினைப் பெற்ற இவர், மருதமுனை வரலாறு ஆள்சார் கண்ணோட்டம் (பாகம் 1, 2) 2011, 2012, அல்-மனார் மத்திய கல்லூரி வரலாறு, பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் சேவைகள், பொதுமக்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருக்க வேண்டிய சட்டங்கள் போன்ற நூல்களைத் வெளியிட்டவர். அழகு மொழியில் கவிதைகளின் உள்ளார்ந்த சக்தியை வெளிக்கொணர்பவர். காதல், சமூகம் மற்றும் பலதரப்பட்ட விடயங் களை தன்னுடைய கவிதைகளுக்குள் செப்பனிடுவதில் ஆற்றல்மிக்கவர்.

அடுத்து மருதமுனை ஹஸன் அவர்கள். இனிய மொழி மணக்கும் இவர் கவிதைகள். இயற்கையை ரம்மியங்களோடு கவிதை சொல்பவர். கவியரங்குக் கவிதைகளை துணிவோடு அழகுற முன்னெடுப்பவர். ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர். பல சஞ்சிகைகளில் கவிதைகள் படைத்துள்ளார். பாடல் இயற்றி இனிமைசேர் சந்தங்களோடு ராகம் தொடுப்பவர். அரச ஊழியர்களுக்கான கவிதைப் போட்டிகள் உட்பட மூன்று தேசிய விருதுகள் பெற்றவர். பெறுமானம் மிக்க இலக்கிய விமர்சகர். விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகளில் வரவேற்புள்ள, கழக கீதங்களை இயற்றியுள்ளார்.

எம்.ஏ.எம். மர்சூக்; தான் கல்வி கற்கின்ற காலத்திலிருந்து இலக்கியத்தை நேசித்தவர். இதன் விளைவாக "மருத மலர்" என்ற கையெழுத்துப் பிரதியை வெளியிட்டார். சகோதர மொழியில் (சிங்களம்) ஆழ்ந்த புலமையால் பல நூல்களை கல்வி சமூகத்திற்கு சமர்ப்பித்தார். ஆமினா மர்சூக் என்ற புனைப் பெயரில் வானொலியில் பல நாடகங்களை சமூகப் பார்வையில் ஒலிபரப்ப முன்னின்றவர். தனது ஆழ்ந்த வாசிப்பின் மூலம் கருத்தாடல்களை முன்வைப்பவர்.

எம்.ஐ.எம். முஸம்மில், இறைவரித் திணைக்களத்தின் உயரதிகாரியாகப் பணிபுரிபவர். இந்தப் பிரதேசத்திலேயே உருவகக் கதையை அறிமுகப் படுத்தியவர் என்றும் சொல்லலாம். இதனை அரிதாகவே எழுத்தாளர்கள் கையாண்டனர். 1978இல், தியாகம் உருவகக் கதையை வெளிநாட்டு இலக்கிய உலகில் பேசப்பட்டவர். அதிலிருந்து ஒரு தசாப்த கால இடைவெளிக்குள் "பிரார்த்தனை" என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டு, அதே காலப் பகுதியளவில் "ஒரு நெக்லசும் ஆண் குழந்தையும்" தொகுப்பினையை வெளி யிட்டார். இவ்வாறு கூடுதலான சிறுகதைகள் சமூகத்தில் நடந்தேறும் பலதரப் பட்ட கருக்களை மையப்படுத்தி பெறுமானமிக்க நல்ல கதைகளைத் தந்தவர். மீளவும் 1998ல், "பிரதிபலன்" என்ற உருவகக் கதையை நூலுருவாக்கம் செய்தார். தேசிய ரீதியில் பல பாராட்டுக்களைப் பெற்றவர்.

கவிஞர் நியாஸ் ஏ. ஸமத் ஒரு பொறியியலாளர். யாப்பு இலக்கண அணியில், சந்தம், ஓசை, நயமிக்க உயிரோட்டமுள்ள கவிதைகளை பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதி வருபவர். சிந்தாமணி, தினகரன் பத்திரிகைகளில் மரபுசார் கவிதைகளை எழுதியவர். இந்த மண்ணில் நடந்தேறும் இலக்கிய முயற்சிகளுக்கு முழு மூச்சுடன் செயற்படுபவர். கவியரங்க மேடைகளில் அர்த்தம் பொதிந்த கவிதைகளை சொல்பவர். 2002இல் இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய மாநாட்டில் நிறையப் பங்களிப்பைச் செய்தவர். படைப்பாளர் பாராட்டினைப் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.வை.எம். முஸ்லிம் ஒரு இலக்கியப் பொக்கிசம். ஒரு கல்விமான். மரபுசார் கவிதைகள் சொல்வதில் கவனத்தைப் பெற்றவர். கூடுதலான இலக்கிய நூல்களைத் தராவிட்டாலும் 1978இல், இறவாச் செல்வம் நூலை அறிமுகப்படுத்தியவர்.

மருதவாசி எம்.எஸ்.எம். பாறூக், ஒரு கவிஞர், பதிப்பாசிரியர், இலக்கியத்தை நேசிப்பவர். 1972இல், றொபின்சன் குருசோ (மொழிபெயர்ப்பு) வை தந்தவர். பதினொரு நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார். கல்யாணத் கடைத்தெரு, காதலுக்கு டாட்டா, பாவம் மனிதன் இவற்றுள் சிலவாகும். 'முஸ்லிம்கள் நஜீசாக மாட்டார்கள்' என்ற நூல் இவரது ஆழ்ந்த தேடலுக்கு அணிசேர்த்தன.

சத்தார் எம். அஸாத் ஒரு ஆங்கில ஆசிரியர். சிந்தாமணி மூலம் அறிமுகமான இந்த மண் தந்த சிறப்பு மரபுக் கவிஞர். வானொலியில் நீண்ட காலமாக கவிதைகள் படைத்தவர். அதுபோல நீலாவணையூர் அல்ஜ், வானொலி, பத்திரிகைகளை நன்கு பயன்படுத்தியவர். உயிரோட்டமுள்ள கவிதைகளை எழுதி வருபவர். இதற்காக தற்போது இணையத் தளத்தினை பயன்படுத்தி வருகிறார்.

ஏ.எம். முனாஸ் 2001இல், "புதிய நெருடல்கள்" கவிதைத் தொகுப்பின் மூலம் அறிமுகமாகி எழுதி வருகிறார். கவிஞர் பற்றிமா எம். இஸ்மா; வானொலி, சஞ்சிகை, பத்திரிகைகளில் நீண்ட காலமாக கவிதை எழுதி வருகிறார்.

பீ.எம்.எம்.ஏ. காதர் ஒரு கவிஞர். பத்திரிகையாளர். 1980களிலிருந்து கவிதைகள் எழுதி வருபவர். ஆரம்ப காலங்களில் இவருடைய கவிதைகள் தொடர்ந்து பத்திரிகைகளில் வெளிவந்தன. பல தரப்பட்ட பாடுபொருள்களில் நிறையக் கவிதைகள் எழுதி வருபவர். சதொச நிறுவனத்தில் பணிபுரிந்தவர்.

ஏ.கே. கலீலுர்ரஹீம் ஒரு ஆசிரியர். காத்திரமான படைப்பாளி. பல தளங்களில் வாசிப்பினை உயர்த்திக் கொண்டவர். ஒரு இலக்கிய விமர்சகர். பத்திரிகைகளைவிட சஞ்சிகைகளைக் கூடுதலாக தன் கவிதைகளுக்கு களமாய் அமைத்தவர். புலம்பெயர் இலக்கியங்களோடு பரீட்சயமானவர். ஆங்கிலத்தில் தனக்கிருக்கும் புலமையால் நிறையவே உள்வாங்கிக் கொள்ளும் ஆற்றலோடு தற்போதும் எழுதி வருபவர்.

சத்தார் எம். பிர்தௌஸ், ஒரு ஆசிரிய ஆலோசகராக இருந்து கொண்டு உயர்நிலைப் பட்டப் படிப்பினை மேற்கொண்டிருக்கிறார். விரல்விட்டு எண்ணக்கூடிய இலக்கிய விமர்சகளுள் இம்மண்ணின் முத்து. கவிதைகள், சிறுகதைகள் தொடர்ச்சியாக எழுதா விட்டாலும் ஒரு இலக்கிய ஆய்வாளர். 1980 களில் உருவாக்கப்பட்ட "சரம்" இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவர். "அனோஜ் பிர்தௌஸ்" என்ற தனது புதல்வரின் பெயரில் அவ்வப்போது இனங்காட்டிக்கொண்டவர். கலை நயத்தல் மிகு அறிவிப்பாளர். கிழக்கு மாகாணத்தில் ஒரு நூற்றாண்டு நாவல் தொடர்பாக தன் கலாநிதிப்பட்டத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வை மேற்கொண்டு வெற்றி கண்டவர். பரதக் கலையை முறையாகப் பயின்ற முதல் முஸ்லிம் கலைஞர். இதனை 1989ல் இந்த மண்ணில் 'மக்கள் மண்டபத்தில்' ரசிகர்கள் பாராட்டுதலில் அரங்கேற்றிக் காட்டியவர். பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி வருபவர்.

பத்திரிகையாளர் ஜெஸ்மி எம். மூஸா, அலிஸ் நியூஸ் (Alish News) ஊடக ஸ்தாபகர். குறைவான கவிதைகள் எழுதினாலும் நிறையவே இலக்கியப் பங்களிப்புச் செய்திருக்கிறார். விமர்சகராகவும், ஓர் ஆய்வாளராகவும் திகழும் இவர் பலதரப் பட்ட விடயங்களை வைத்து பல நூல்களைத் தந்தவர். தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச்சங்க தலைவராக இருந்தபோது "துயரி" சஞ்சிகையின் 5 இதழ்கள் வரை ஆசிரியர் குழுவில் இருந்திருக்கிறார். சர்வதேச தமிழ் இலக்கிய மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருக்கிறார். தமிழ் கட்டுரைகளை தினக்குரல், தினகரன், எங்கள் தேசம் ஆகிய பத்திரிகைகளில் எழுதியவர். நாகம்மாள் ஒரு பார்வை (2008), திருக்குறள் அங்க இயல் (2008), தேடலின் ஒரு பக்கம் (2008). க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கு இலக்கிய நயம் தொடர்பான பகுதி நூல்களையும் வெளியிடுபவர்.

அடுத்தவர் கவிஞர் ஜீனாராஜ், கவிஞராகவும், நாடக தயாரிப்பாளராகவும், நடிகராகவும் காணப்படுகிறார். வானொலியை அதிகம் கவிதைகளுக்கு பயன்படுத்திய இவர் கவியரங்கக் கவிதைகள் மூலம் சபையைக் களை கட்டுபவர். தற்போது ஒரு திரைப்படத்தை தயாரிக்கின்றார்.

மேலும் அண்ணாவியார் காவியம், இங்கினியாக் கலைக் காவியம் என்பவற்றை தனியாக பிறிதொரு இடத்தில் ஆராயப்படும் என்பதால் இதற்குள் அடங்கப் பெறவில்லை. தவிர, இக்கட்டுரையை எழுத நான் பணிக்கப்பட்ட போது பல பிரயத்தனங்களுக்கு முகங் கொடுக்க நேர்ந்தன. அதாவது இம்மண்ணின் எழுத்தாளர்கள் பலர் உயிருடன் இல்லை என்பதும் இருப்பவர்கள் சிலர் இன்னும் புத்தகம் வெளியிடப்படவில்லை என்பதும் சில நேரம் இக்கட்டுரைக்கு ஒரு தொய்வுநிலை ஏற்பட்டிருக்கலாம். காரணம் தரவுகள் பெறப் படுவதிலுள்ள சிக்கலாகும். இயல்பான நிரல்படுத்தலில் சில நேரம் சில அம்சங்கள் விடுபட்டி ருக்கவும் கூடும். இந்த வகையில், அலியார் எம். சகா, மக்பூலியா முஸ்தகீம், நியாஜத், எஸ்.எல்.எம். நழீம், நழீம் எம் பதூர்தீன், மருதவூர் இப்றா, ஐ. தாரிக், எம்.எம். முபீன் ஆகியோரும் கவிஞர்கள் அணிக்குள் இருக்கிறார்கள்.

பெண் கவிதாயினிகளையும் மறக்கவில்லை. மாஜிதா தௌபீக், ஜோதா என்ற புனைப் பெயரில் எழுதியவர். 1984ல், நிலவு, கடல், சீதனம் கவிதை மூலம் பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரியில் இலங்கை வானொலியில் அறிமுகமானவர். வாலிப வட்டம், இலக்கிய மஞ்சரி, கவிதைக் கலசம் என்பன இவருக்கு களம் கொடுத்தன. சிந்தாமணியில் மரபு வடிவிலமைந்த நல்ல கவிதைகளை எழுதியவர். பிறை எப்.எம்., ஊவா சமூக வானொலியில் "ஜோதா" என்ற பெயரில் நிறைய கவிதைகளை அற்புதமாக எழுதுகின்றார். கவியரங்கக் கவிதைகளிலும் பங்குபற்றி கவிதை வாசிப்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசகீர்த்தி **அல்-ஹாஜ். ஏ.எம்.ஏ. சமது** (ஓய்வுபெற்றஅதிபர்), அவர்கள் வாழ்த்துப் பாடல்கள், வரவேற்புக் கீதங்கள், இரங்கற்பாக்களை இயற்றுவதில் வல்லவர். இவரது ஆக்கங்கள் மரபுக்கவிதை சார்ந்ததாகவும், கனதியான கருத்தாழமிக்கதாகவும், பொருட்செறிவுடையதாகவும் அமைந்திருக்கும். சில நாளேடுகளிலும் இவரது கவிதைகள் வெளிவந்திருக்கின்றன.

கப்பல் மஹ்றூப் என அழைக்கப்படும் **கப்பல் நெய்னா முகம்மது மஹ்றூப்,** ஒரு சிறுகதை எழுத்தாளர். மித்திரன் பத்திரிகையில் இவரது சிறுகதைகள், கவிதைகள் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஹரீஸா, இவர் 90களுக்குப் பின்னர் வந்த அணியில் இடம்பெறுகிறார். மருதமுனை ஹரீஸா, ஹரீஸா சமீம் என்ற பெயர்களில் எழுதி வருபவர். தினகரனில் "உன்னை மட்டும்" கவிதை மூலம் அறிமுகம். செந்தூரம், முஸ்லிம் குரல், இருப்பு ஆகிய சஞ்சிகைகளிலும் இவரது கவிதைகள் நிறையவே களம் தந்தன. நீலாவணையூர் ஹதியத் றம்ஸியா றகுமான், மாஹிறா முஜீப் ஆகியோரும் கவிதைக்கான பங்களிப்புக் களைச் செய்துள்ளனர். மற்றும் மாஜிதா அபூபக்கர், சபீனா அபூபக்கர், பஸ்லூனா அபூபக்கர் ஆகியோரும் இதற்குள் அடங்குவர். தவிர, ஹஸீனா வஹாப் ஒரு ஆசிரியை. வதங்காத மலரொன்று நாவலை 1992இல் தந்தவர். இவரும் ஒரு இலக்கிய அடையாளம்தான். அதுபோல A.R.U. ஹாவியா பத்திரிகைகளில் எழுதியவர். புதுமை சஞ்சிகையை வெளியிட்டவர்.

மி.அ. நாஸர், தேசியப் பத்திரிகைகளில் அவ்வப்போது கவிதைகள் எழுதினாலும் 'முனைப்பு' சஞ்சிகையில் தான் இவர் தன் கவிதைகளுக்கு களம் அமைத்தவர். 1990களில் இவரது "இருட்டு வீடு" என்ற கவிதை இலக்கியவாதி களால் பெரிதும் பேசப்பட்டது.

மஜீதா, மரபுக் கவிதைகளால் தன் கவி வளத்தைப் பெருக்கியவர். 'சமாதானம்' சஞ்சிகைகளில் இவரது கவிதைகள் பிரசுரமாயின. சமாதான உணர்வுமிக்க மற்றும் சமூகக் கவிதைகளை தருபவர்.

மருத நபா என்ற பெயரில் கவிதைகளை எழுதி வருபவர் றாஸிக் நபாயிஸ். பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கவிதைகளை எழுதியுள்ளார். ஒரு ஊடகவியலாளர். 'மருத நியூஸ்' என்ற செய்தித் தளத்தை ஸ்தாபித்தவர்.

இவ்விலக்கியம் தொடர்பான இக்குறிப்புகள் என் ஆரம்பப்பணி மட்டுமே. கூடுதலாக இலக்கியப்பணி செய்தவர்கள், குறைந்தளவு இலக்கியம் தொடர் பாளர்கள், இலக்கிய அனுபவங்கள் நிறைந்தவர்கள், வயது வித்தியாசங்கள் என்பனவற்றை வைத்து இக்கட்டுரை இடம்பிடிக்கவில்லை. ஏதோ ஒரு சொல்லிலாவது எல்லோரையும் இணைக்க வேண்டுமென்பதே கடைசி வரைக்கும் என்னை ஆட்கொண்டது. இதனை இன்னுமொருவர் நகர்த்திச் செல்ல முடியும். அப்போதுதான் எங்கோ? ஒரு நாள் ஒரு முழுமைப்படுத்தலில் இது முற்றுப்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகம்மது மூஸா விஜிலி, ஜே.பி.

ஆசிரியர்

முகம்மது மூஸா விஜிலி 1969-10-10இல் மருதமுனையில் பிறந்தவர். மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் வரை கற்றுத் தேர்ந்தார். இங்கிருந்து பேராதனைப் பல்கலைக் கழகம் நுழைந்த விஜிலி ஒரு கலைப் பட்டதாரியாக வெளியேறினார்.

07-05-1999ல் நூலக அபிவிருத்தி உத்தியோகத்தராகத் தனது முதல் நியமனத் தைப் பெற்ற இவர் பின்னர் பட்டதாரி ஆசிரியராக உள்வாங்கப்பட்டார். இன்று வரை பல பாடசாலைகளில் கடமையாற்றி வரும் இவர் பிலபல்யமான கவிஞர் மட்டுமன்றி கதைகள், ஆய்வுக் கட்டுரைகள், இலக்கிய விமர்சனங்கள் போன்ற வற்றில் தனது ஆற்றலை வெளிப்படுத்தியும் வருகிறார். சஞ்சிகைகள் சிலவற்றின் துணை ஆசிரியராகவும் செயலாற்றும் விஜிலி சிறந்த ஒரு உளவளத் துணை யாளருமாவார்.

பட்டமேற் கல்வி டிப்ளோமா, உளவளத்துறை டிப்ளோமா, ஊடகவியல் டிப்ளோமா போன்ற விஷேட தகைமைகளைக் கொண்டுள்ள இவர் பல சமூக இயக்கங்களில் இணைந்து சமூகப் பணியிலும் தன்னாலானவற்றைச் செய்யும் இவர் எமது சமூக மேம்பாட்டு மையத்தின் செயலாளராகவும் கருமமாற்றுகிறார்.

முகம்மது நழீம் காமிலா என்ற ஆசிரியையை மனைவியாகப் பெற்ற இவருக்கு ஒரு பெண்பிள்ளை உண்டு. இவர் ஒரு சமாதான நீதவானுமாவார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுத்துறை உத்தியோகத்தர்கள்

01. வை.எல்.எம். பஹ்றுத்தீன்	ACCD
02. ஏ.எம். நிஹ்மத்துல்லா (மரணம்)	CDO G-1
03. எச்.எல். சம்சுத்தீன்	CDO G-1
04. ஏ.எம். ஷாபி	CDO G-1
05. ஜே.யூ. மலீஹா	CDO G-1
06. ஏ.சீ.எம். அஷ்ரப்	CDO G-1
07. பீ.ரீ. ஆதம்பாவா	CDO IIA
08. ரீ.எல். டிபாசத்துல்லாஹ்	CDO IIB
09. கே. சித்தி ஷர்மிலா	CDO III

கிராம சேவை உத்தியோகத்தர்கள்

01. இப்றாலெப்பை இஸ்மாயில் - மூத்தவர் மகன்
02. பக்கீர் முகைதீன் ஆதம்பாவா - ஆராச்சியர் (A.M. ஜூனைதீன் CC தகப்பன்)
03. செய்யது ஐதுருஸ் மவ்லானா செய்யது செயின் மவ்லானா (மசூர் மவ்லானாவின் தகப்பன்)
04. ஹயாத்து முகம்மது முகம்மது அபூபக்கர்
05. ஆதம்பாவா முகம்மது முகைதீன் (ஓய்வுபெற்றுள்ளார்)
06. உதுமாலெப்பை இப்றாலெப்பை (பீ.எம். ஆதம்பாவா ஆராச்சியாரின் மருமகன் / ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். காதர் இப்றாகிம் அவர்களின் மாமா)
07. உமர்கத்தா குதுப்தீன் (ஓய்வுபெற்ற பின்பு மரணம்)
08. சாகுல் ஹமீது முகம்மது தௌபீக் (மரணம்)
09. நாகூரான் முகம்மது இஸ்மாயில் (ஹம்தூன் ஓய்வுபெற்றுள்ளார்)
10. அப்துல் ஹமீது அப்துல் ழாஹிர் (நிர்வாக கிராம உத்தியோகத்தர்)
11. முகைதீன் அப்துல் காதர் சித்தி துஹ்துல் காமிலா (கி.உ. மருதமுனை-02)
12. முகம்மது ஷாகிர் (தற்போது சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)
13. முகம்மது றூமில் (தற்போது வரி மதிப்பாளர்)
14. சக்கரியா லெப்பை முகம்மது தௌபீக் (கி.உ. நற்பிட்டிமுனை-03)
15. முகம்மது முஸ்தபா முகம்மது உவைஸ் (ஓய்வுபெற்றுள்ளார்)
16. முகம்மது ஷகீது அப்துல் கையூம் (கி.உ. மருதமுனை-05)
17. முகம்மது இப்றாகிம் நஸ்மி (கி.உ. பெரியநீலாவணை-02 மு.பி.)
18. சகாப்தீன் றசீபா (கி.உ. பெரியநீலாவணை-01 மு.பி.)
19. லெப்பைக்கனி (மக்கள் வங்கி முகாமையாளர் அல்மல்கானின் மாமா)
20. அப்துல் அஸீஸ் சதீலா (கி.உ. மருதமுனை-01)
21. முகம்மது நஜிமுத்தீன் பாத்திமா ஷூபா (கி.உ. மருதமுனை-03)
22. முகம்மது இப்றாகிம் பாத்திமா சர்மதா (கி.உ. மருதமுனை-05)
23. அப்துல் றசீது காமிலா (கி.உ. கல்முனைக்குடி-07)
24. சேக் றசீட் பஸ்மிலா (கி.உ. கல்முனைக்குடி-05)
25. இஸ்மாயில் முகாந்திரம் இஹ்ஷா பஹ்ஜத் (கி.உ. கல்முனைக்குடி-04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் நாவல் இலக்கிய வரலாறு

பிர்தௌஸ் சத்தார். M.Phil. M.A. B.A. PGDE
கலாநிதிப்பட்ட ஆய்வாளர் - கிழக்குப் பல்கலைக்கழகம்

தேசிய இலக்கியம், மண்வாசனை இலக்கியம், யதார்த்த இலக்கியம் பற்றிய கருத்துக்கள் வலுவடைந்திருந்த 1960 களிலேயே நவீன இலக்கிய முயற்சிகள் மருதமுனையில் தொடங்கப்பட்டிருந்தன. பொதுவுடைமைத் தத்துவங்களினாலும், சோசலிஸச் சிந்தனைகளினாலும் அவை தொடர்பான நூல்களின் வாசிப்பாலும் தினகரன், சுதந்திரன், தேசாபிமானி, பாட்டாளி, பாரதி, மல்லிகை, முதலிய பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், இக்காலப்பகுதியில் இடம்பெற்ற இலக்கியக் கருத்தரங்குகளும், எழுத்தாளர் மாநாடுகளும், இலக்கிய கருத்து மோதல்களும் அன்றைய மருதமுனை எழுத்தாளர்களையும் வெகுவாகப் பாதித்திருந்தன. அவ்வகையில் எழுதத் தொடங்கியோரில் மருதமுனையின் சிறுகதை முன்னோடியான மருதூர்க்கொத்தன் முக்கியமானவர். இவரது காலப்பிரிவிலேயே மருதூர்வாணனும், மருதூர்க்கனியும், மருதமுனை மஜீதும், சிறுகதைகளைத் தரத்தொடங்கினர். இவர்கள் சிறுகதை எழுத்தாளர்களாக இருந்த அதேநேரத்தில் கவிதைகள் புனைவதிலும் சஞ்சிகைகள் வெளியிடுவதிலும் முனைப்புக் காட்டினர். இவர்களுக்கு அடுத்தபடியாக எண்பதுகளிலிருந்து எழுதத் தொடங்கியோரில் எம்.ஐ.எம். முஸம்மில், புன்னகை வேந்தன், ஜின்னா ஷரிபுத்தீன், எம்.ஐ.எம். றஊப், மருதூர்பாரி, றஹ்மான் ஏ. ஜப்பார், எம்.ஐ.ஏ. ஜபார் (ஆகவே ஆசிரியர்), அம்ரிதா ஏ.எம். விஜிலி, ஏ.ஆர்.ஏ. ஹமீட் ஆகியோர் வெவ்வேறு தளங்களில் நின்று தங்கள் கால கட்டங்களுக்குரிய பதிவுகளைச் செய்துள்ளனர்.

கவிதைகளையும் சிறுகதைகளையும் ஏககாலத்தில் தந்த இப்படைப்பாளிகள் அநேகரின் சிறுகதைகள் இன்னும் தொகுதிகளாக வராமலிருப்பது துரதிஷ்டமே. கொத்தனின் சிறுகதைத் தொகுப்புக்கள்கூட சமகாலத்திலேயே வெளிவந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மருதூர்வாணனின் **முதலிரவு**, மருதூர்க்கொத்தனின் **மருதூர்க்கொத்தன் கதைகள்**, **கேள்வி**, மருதூர்க்கனியின் **மண் பூனைகளும் எலி பிடிக்கும்**, எம்.ஐ.எம்.றஊபின் **கனவும் மனிதன்**, எம்.ஐ.எம். முஸம்மிலின் **பிரதிபலன்**, **ஒரு வைர நக்லசும் ஆன் குழந்தையும்**, அம்ரிதா ஏயெமின் **விலங்குகள் தொகுதியொன்று அல்லது விலங்கு நடத்தைகள்**, றஹ்மான் ஏ. ஜபாரின் **தொட்டுவிடும் தூரத்தில்**, ஏ.ஆர்.ஏ. ஹமீதின் **மாமி இல்லாத பூமி** ஆகியன இதுவரை வெளிவந்துள்ள சிறுகதைத் தொகுப்புகளாகும்.

மருதமுனையின் நாவல் படைப்புகளைப் பார்க்கும் போது எழுத்தாளர்கள் கவிதை, சிறுகதைகளைப் புனைவதில் காட்டிய ஆர்வம் அளவிற்கு நாவல் இலக்கியம் புனைவதில் காட்டியிருக்கவில்லை. தொடக்ககாலப் படைப்பாளிகளிடம் படைப்பாக்கத் திறன் மிகுந்திருந்த போதும் படைப்புகளை வெளியிடுவதற்கான பொருளாதார வசதியோ ஆதரித்து வெளியிடுவதற்கான அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான நிறுவனங்களோ மருதமுனையில் இல்லாமை நாவல்கள் வெளிவராமைக்கான பிரதான காரணம் என்று கூற முடியும். எனினும் இவற்றையும் மீறிய நிலையில் மருதூர் வாணரின் **பெருநாள் பரிசு குறுநாவல் (1969)** வாஷிங்டன் லைப்ரரி ஓஃப் கொங்கிரஸில் மொழிபெயர்க்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளதோடு இதற்கான பாராட்டுச் சான்றிதழும் அனுப்பி வைக்கப்பட்டது. பாராட்டுச் சான்றிதழின் செயல் முகவரி மற்றும் இதன் தமிழாக்கம் 1970 இல் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. (மருதூர் வாணர் சமாதானம்-5, 1996:30) தற்காலத்தில் இப்புனைவினைக் காணக் கிடைக்கவில்லை.

இதன் பின்னர் இவரால் எழுதப்பட்ட **'செம்மாங்கனி'** நாவல் பத்திரிகைத் தொடராக வெளிவந்திருக்கிறது. கல்முனை முத்தமிழ் கழக வெளியீடாக வந்த இவரது **சூறாவளி** (1979) குறும்புனைவு சின்னச்சின்ன பதினொரு அத்தியாயங்களைக் கொண்ட நாவலாகும். மருதமுனை மண்ணைக் களமாகக் கொண்டு நெசவுத் தொழிலாளர் பிரச்சினைகளையும், 1978இல் வீசிய சூறாவளியின் பின்னர் முதலாளி வர்க்கம், பாதிக்கப்பட்ட ஏழைகளிடம் எவ்விதம் நேர்மையீனமாக நடந்து கொண்டது என்பதையும் வெளிக்காட்டுகின்ற நாவலாகும்.

மருதூர் வாணரின், **'புதியதோர் உலகம் செய்வோம்', 'எம்ஜியாரைப் போல்', 'கொண்டை வெட்டுவான் காதலி', 'படுவான்கரைப் போடியார்'** ஆகிய நான்கு குறுநாவல்களும் தொண்ணூறுகள், இரண்டாயிரம்களில் அவரது சமாதானம் சஞ்சிகையில் வெளிவந்தவையாகும். **புதியதோர் உலகம் செய்வோம்** தொண்ணூறுகளில் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட இனக்கலவரங்களையும், ஹர்த்தால் முதலியவற்றையும் காட்டுவதோடு மருதமுனையின் நெசவுத் தொழில், மீன்பிடித் தொழிலின் பாதிப்புகள் பற்றியும் பேசுகின்றது. கதையின் நாயகன் இசுமாலெப்பையும் ஊர்ப்பிரமுகர்களும் கலவரத்தின் பின்னர் அயலூர்த் தமிழ்ப் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை செய்வதன் மூலம் ஒற்றுமையைப் பிறப்பிக்கும் கதையாக புதியேதார் உலகம் செய்வோம் உள்ளது. அடுத்த நாவலின் தலைப்பு **எம்ஜியாரைப் போல** என்றிருந்தாலும் நாவலின் உள்ளடக்கம் மூவின உறவையும் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. தமிழீழப் போராட்ட கால நடப்புகள், போராட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த ஒடுக்கங்கள், அதன் விளைவுகள் என்பவற்றை நாவலில் கொண்டு தருகின்றார் ஆசிரியர்.

இவரது **கொண்டை வெட்டுவான் காதலி,** ஒரு காதல் கதையாக இருந்த போதும் முஸ்லிம் - தமிழ் மக்களின் பாரம்பரியங்களையும், வரலாற்று தடையங்களையும் தந்து நிற்கும் கதையாகும். 1950களில் ஆசிரியரது இளமைக்கால அனுபவங்கள், போடிமார் காணிக்கச்சேரி நடத்திய விதம், தமிழ்-முஸ்லிம் மக்களின் தாயக நிலங்கள் பேரினவாதிகளால் காலாகாலமாகச் சூறையாடப்பட்ட வரலாறு என்பவற்றைத் தருகின்றது. குறிப்பாகப் **பட்டிப்பளை, நாவலாறு, மூங்கிலாறு, கொண்டை வெட்டுவான்** பிரதேசங்களிலுள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட காணிகளும், தோட்டங்களும் பறிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு வெகுஜன பேரினவாதிகளால் முஸ்லிம்களும், தமிழர்களும் 1950 - 1955 வரை துரத்தியடிக்கப்பட்ட வரலாறு பதிவாகியுள்ளது. இக்கினியாக்கலைக் குளக்கட்டுக்குச் **சேனநாயக்க சமுத்திரம்** என்றும், கொண்டை வெட்டுவானுக்கு **அம்பாறை** என்றும், பட்டிப்பளை நாவலாற்றுப் பிரதேசங்களுக்கு **தீகவாபி** என்றும் மொத்தப்பட தமிழ் முஸ்லிம்களின் பரம்பரை பிரதேசங்களுக்கு **திகாமடுல்ல** என்றும் தனிச்சிங்கள மயமாக்கியமை, இது தொடர்பில் அன்றைய இடதுசாரிச் சிங்கள் கட்சிகளின் எதிர்ப்புகள் இருந்து வந்ததையும் இறுதிவரை தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களது இன ஒற்றுமையை வெளிக்காட்டி வந்திருப்பதையும் இதில் தருகின்றார்.

மருதூர் வாணரின் **படுவான்கரைப் போடியார்** ஒரு வரலாற்றுக் குறுநாவ லாகும்.

> "அடர்ந்து இருள் மண்டிய காடுகளை சேனைவெட்டி, வடிகால் அமைத்து பயிர், வயல் தோட்டம் செய்து முந்நூறு ஆண்டு காலத்திற்கும் மேலாக தமிழர்களும் முஸ்லிம்களும் படுவான் கரைகளில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். **வண்டாரதீவு, கோடலி வட்டை, தவ்வாலலிவட்டை, பொக்குவாயன் வட்டை** எனப் பல்லாயிரம் ஏக்கர்களைப் பரம்பரையாகச் செய்து வந்திருக் கின்றனர்."
>
> (மருதூர்வாணர், சமாதானம் 2000:21)

எனத் தொடங்கும் இப்புனைவு சின்னாலிம் கந்தூரி, உம்மாரிப்பயணம், துரைவந்திறங்கியமேடு, மருதமுனை பெயர் வந்த வரலாறு, பர்ட்டன் துரையும் செல்லத் தம்புவும், விழாவெட்டுவான் சந்தியிலே, ராணமடு ஓவிசர்கடை என ஏழு அத்தியாயங்களில் அமைந்து தமிழ் முஸ்லிம் தாயக வரலாற்றைக் காட்டி நிற்கிறது. இவற்றை நோக்கும்போது தமிழ், முஸ்லிம் ஐக்கியத்தையும் சமாதானத் தையும் முதன்மைப்படுத்தியும், கூர்மைப்படுத்தியும் நிற்பதாகவே மருதூர் வாணரின் புனைவுகளைக் கூற முடிகிறது. அன்றியும் தான் பிறந்த மண்ணின், தொழிலாளர் பிரச்சினைகளையும், வறுமைப் பிரச்சினைகளையும் காட்ட முற்படுகையில் அவரது மார்க்சீய ஈர்ப்பு புலப்படுகிறது. மெல்லிய காதலும் நகைச்சுவைப்பாங்கும், மொழியில் மண்ணின் மணமும் இவருக்கே உரித்தான தனித்தன்மைகளை வெளிக்காட்டுவதாயுள்ளன.

எஸ். இராகவன் ஆங்கிலத்தில் எழுதிய **"உறொபின்சன் குருசோ"** நாவலை மருதமுனையைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.பாறுக் (மருதவாசி) 1972 நவம்பரில் மொழிபெயர்த்து வெளியிட்டார். கல்முனை ஆனந்தா அச்சகத்தில் ஆயிரம் பிரதிகள் அடிக்கப்பட்டு அல்ஹம்றா வித்தியாலயத்தில் இதன் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. இதன் முதற்பிரதியை தாவூத் லெப்பை மரைக்கார் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். கிழக்கின் முதல் மொழிபெயர்ப்பு நாவல் என்ற பெருமை இதற்குக் கிடைக்கிறது. இக்குறுநாவல் வெளியிடும் போது மருதவாசியின் வயது இருபதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது படைப்பாளிகள் அநேகரை வளர்த்துவிட்ட பெருமை **'முனைப்பு'** சஞ்சிகைக்கு உரியதாகும். இதன் ஆசிரியர் ஹஸனுல்பாரி மௌலானா (செகபா) பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக, அதிபராக, பிரசித்த நொத்தாரிசு ஆகக் கடமை பார்த்த போதும் இலக்கிய வாதியாகவே அதிகம் அறியப்படுகிறார். **"மறுகரையின் நிறம்..."** என்ற இவரது நாவல் முனைப்பு சஞ்சிகையில் தொடர்ச்சியாக வெளிவந்திருக்கிறது. அரச காரியாலயமொன்றில் காரியாலய உதவியாளராய் வேலை பார்க்கும் சலீம், மனைவி நிசா, அவர்களது மூன்று குழந்தைகள், எனத் தொடரும் வாழ்க்கைப் போராட்டம் கதையாக விரிகிறது. ஒரு சிறந்த குடும்பப் பெண் வெளிநாட்டு மோகத்திற்கு அடிமைப்பட்டு, கணவனையும் பிள்ளைகளையும், நிர்க்கதியாக்கிட்டு வேறொருவனோடு சென்றுவிடும் கதை. தொண்ணூறுகளின் சமூக, அரசியற் பிரச்சினைகளைப் பேசும் இந்நாவல் பத்து அதிகாரங்களாக முனைப்பில் வெளிவந்திருப்பினும் இன்னும் நூலுருப் பெறவில்லை.

2000களில் மருதமுனை மஜீத் (ஏ.எச்.எம்.மஜீத்) எழுதிய **"ஜூனு"** என்ற குறு நாவல் **'ஆசிரியம்'** என்ற தலைப்பு மாற்றத்தோடு 2012 ஜூன் 'யாத்ரா-21' சஞ்சிகையில் வெளிவந்திருக்கிறது. கலாவெவ-காளாவிக் கிராமத்தில் தான் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் நடைபெற்ற சம்பவங்களோடு பின்னப்பட்ட கதையாக ஆசிரியம் உள்ளது. காளாவிக் கிராமத்தைக் களமாகக் கொண்ட இப்புனைவு கூஜூனு; என்ற மாணவனைப் பிரதான பாத்திரமாகக் கொண்டது. ஆசிரியரின் கண்டிப்பு அவரது மனச்சாட்சியை உறுத்துவதும், கண்டிப்பையும் தாண்டிய ஆசியரின் அரவணைப்பு மாணவனை அந்த ஊருக்கே தலைவனாக மாற்றி விடுவதும், மனச்சாட்சியின் தண்டனையிலிருந்து விடுபட்ட ஆசிரியர் மாணவனின் உயர்வு கண்டு நெகிழ்ந்து போவதும் கதையாக கூறப்படுகின்றது.

எம்.ஐ.ஏ. ஜப்பாரின் **'துப்பாக்கிகள் பற்றிய கதை'** (2002) 'பெயர்' என்ற திருகோணமலை சஞ்சிகையில் வெளிவந்திருக்கிறது. உலகெங்கும் உள்ள துப்பாக்கிகள் அனைத்தும் ஒன்று கூடி சில தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றிய பின்னர் எல்லாத் துப்பாக்கிகளுமே தற்கொலை செய்வதைக் கண்டு ஆகாசன் சந்தேகிக்கிறான். சருகுச் சத்தம் கேட்டு விழித்த போதுதான் சவக்காலைக் கல்லறை ஒன்றின் மீது அவன் இரும்புத் தலைக்கவசக்காரர்களிட மிருந்து தப்பித்து வந்து தூங்கிப் போயிருந்தது ஞாபகம் வந்தது. கண்ட கனவு கலையும் முன்னரே இரும்புத் தொப்பிக் காரர்கள் ஆகாசனைக் கைது செய்ததாக கதை முடிகிறது. எள்ளல், குறியீடு, வித்தியாசமான வடிவ உத்தி கொண்ட இப்புனைவு உலகில் ஆயுதக் கலாச்சாரம் அரங்கேற்றுகின்ற கொடுமைகளையும் அவற்றின் வரம்பு மீறலையும் கேள்விக்கு உட்படுத்துவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞராக அறியப்பட்ட வைத்தியக் கலாநிதி 'காப்பியக்கோ' ஜின்னா ஷரிபுத்தீனின் முதல் நவீனம் மருதமுனை அன்னை வெளியீட்டகத்தின் **"கருகாத பசுமை"** (2000) என்னும் நாவலாகும். நூல் வடிவில் வெளிவந்த மருதமுனை நாவல்களில் இதுவும் ஒன்று. இந்நாவல் மலையக மக்களின் உறவு, பாசம், தியாகம் போன்றவற்றை இணைத்து நிற்கின்ற மத்தியதர வர்க்க மக்களைப் பற்றிய புனைவாக உள்ளது. மலையக நவீனங்கள் வழமையாகப் பேசும் குடியுரிமை மறுப்பு அரசியல், தோட்டத் தொழிலாளர்களது பிரச்சினைகள் என்ற போக்கிலிருந்து விலகி, மலையக மக்களின் மெல்லுணர்வுகளை அக்களத்தில் நின்று எடுத்துக்காட்டுகின்றது. அவ்வகையில் கிழக்கு மாகாணத்தவர் ஒருவர் மலையகத்தைக் களமாகக் கொண்டு எழுதும் முதல் நவீனமாக ஜின்னா ஷரிபுத்தீனின் கருகாத பசுமையைக் காணலாம்.

நாவல்களென்று மருதமுனைப் படைப்பாளிகளால் இற்றை வரை வெளி வந்திருப்பவை இவ்வளவே. மருதூர்க் கொத்தன், மருதூர்க்கனி, ஆகியோர் நாவல்கள் எழுதவில்லை. "எரிமலையை மூடிய பனிமலை" என்றொரு நாவலை மருதூர்க் கொத்தன் தொடங்கியிருந்த போதும் அது முற்றுப் பெறவில்லை. றகுமான் ஏ.ஜபாரின் **"பகலில் சில பனித்துளிகள்"** அச்சாகவில்லை ஜின்னா ஷரிபுத்தீனின் **"கருகாத பசுமைப்"** புனைவும் மருதூர் வாணரின் **"சூறாவளியுமே"** நூல் வடிவம் பெற்ற வகையில் இன்று கிடைக்கின்றன. 'ஆகவே' ஜபாரின் (எம்.ஐ. ஏ.ஜப்பார்) **"துப்பாக்கிகள் பற்றிய கதை"** தவிர்ந்த ஏனைய படைப்புக்கள் அனைத்தும் நேர்கோட்டுப் பாதையில் செல்கின்ற ஒற்றைப் பரிமாணம் கொண்ட மரபு முறையான நாவல்களாகவே உள்ளன. புதுமை நோக்கிய நாவல் என்று சொல்லத்தக்க வகையில் எதுவும் இதுவரை மருதமுனையில் இருந்து வெளிவரவில்லை. வெளிவந்துள்ள படைப்புக்கள் கால கட்டங்களுக்குரிய சமூக, அரசியலை வெளிக்காட்டுகின்ற வகையில் மருதமுனை மண்வாசனை கொண்ட சிறந்த நாவல்களென்பதில் சந்தேகமில்லை. சஞ்சிகைகளிலும் கையெழுத்துப் பிரதிகளாகவும் இருக்கின்ற நாவல்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி பதிப்பிக்க வேண்டியதும் எழுதிசையுடன் புதுமையான நாவல்களை புனைய வேண்டியதும் இளம் படைப்பாளிகளின் முன்னே நிற்கின்ற அடையத் தகுந்த சவாலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் சத்தார் பிர்தௌஸ்

உதவிக் கல்விப் பணிப்பாளர் (முதன்மொழி), கல்முனை.

முகம்மது அப்துல் சத்தார் பிர்தௌஸ் மருதமுனையில் பிறந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆரம்ப, இடைநிலை, உயர்கல்வியைப் பெற்றுக்கொண்ட பிர்தௌஸ், அங்கிருந்து பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி கலைமாணி (BA) பட்டத்தினை 1991இல் பெற்றார். பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை NIEஇலும் (1997), முதுகலைமாணி (MA) பட்டத்தை மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்திலும் (2004) முடித்துக்கொண்டார். காமராஜர் பல்கலைக் கழகத்திலேயே கிழக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸின் மேற்பார்வையில் முதுகலைத் தத்துவமாணிப் பட்டத்தினை முதல் வகுப்புச் சித்தியாக (First Class) பெற்றார் (2007). இதன் பின்னர் 2009இல் கலாநிதிப் பட்டப்படிப்பினை (PhD) இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து 2014இல் ஆய்வேட்டினைச் சமர்ப்பித்த பிர்தௌஸ், தென்கிழக்குப் பல்கலைக் கழகப் பட்டமேற்படிப்பு சபை உறுப்பினராக (Member of Board of Study) 24-10-2013இலிருந்து சேவையாற்றி வருகின்றார்.

1990இல் ஆங்கில ஆசிரியராய் முதன் நியமனம் பெற்ற இவர் பட்டதாரி ஆசிரியராகவும், 10-11-1999இலிருந்து ஆசிரிய ஆலோசகராகவும், 01-04-2006இலிருந்து முதன்மொழி உதவிக் கல்விப் பணிப்பாளருக்கான கடமைகளையும் செய்து வருகின்றார். இதேநேரம் 2003 முதல் அட்டாளைச்சேனைக் கல்வியியற் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளராகப் பணிபுரிகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எழுத்து, ஆய்வு, நடிப்பு, நடனம், அறிவிப்பு எனப் பன்முக ஆற்றல்கள் அமைந்த இவர், நாட்டிய நிருத்தகி வஸந்தி சபாநாதனிடம் பரதம் பயின்று, வட இலங்கை சங்கீத சபைச் சான்றிதழை 1989இல் பெற்றிருந்தார். அறிவிப்பாளர், தனி நடிகர் என்பவற்றுக்கான இளைஞர் மன்றத் தேசிய விருதுகளை 1988இல் வென்றிருந்த பிர்தௌஸ் கல்விப்புல 'வித்திய பிரசாதினி' ஜனாதிபதி விருதினை 2005இல் பெற்றுக்கொண்டார்.

கிழக்கிலங்கைச் செம்மொழி மாநாட்டின் செயற்பாட்டாளர்களில் ஒருவராய் ஈடுபட்ட பெருமையும் இவருக்குண்டு. பாடசாலைக் காலத்திலிருந்தே நடிப்புத் துறையில் ஆர்வம் காட்டியவர். ஜூலியர் சீசர், சோக்ரடீஸ், அந்தகாரம், மாவீரன் மஃதி, கல்லுக்குள் ஈரம், பாவம் நரிகள் (இசை நாடகம்), The File No. 555 (ஆங்கிலம்), The Sneeze (ஆங்கிலம்) ஆகிய நாடகங்களில் பிரதான பாத்திரமேற்று நடித்ததோடு மருதமுனையில் இயக்கிய முதலாவது குறுந்திரைப்படமான "சலனங்கள்" படத்தின் நாயகனாகவும் நடித்து தன் திறமையை வெளிப்படுத்தியவர்.

ஸபீனா என்பவரை திருமணம் செய்துகொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். இவர்களுள் மூத்தவர் சட்டமாணி (LL.B) பட்டப்படிப்பினை University of Wolverhampton (UK) இல் முடித்துள்ளார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய விளையாட்டுத் துறையில் மருதமுனைப் பிரதேசத்தின் வகிபாகம்

ஏ.வீ.எம். மஹ்தூம் (ADAC)
ஓய்வுநிலை மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர்

உடல், உளம், ஆன்மா ஆகிய மூன்றினதும் கலவையே மனிதனாவான். ஆரோக்கியமான உடலில்தான் தெளிவான உளமிருக்கும். ஆன்மாவும் அமைதி பெற்றுக் காணப்படும். இதனடிப்படையிலேயே "சுவர் இருந்தாலே சித்திரம் வரையலாம்" எனும் பொய்யா மொழி எல்லா நாடுகளிலும் எப்பொழுதும் பேசப்பட்டு வருகின்றது. மனிதனின் உடல் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவனுடைய உள்ளம் எப்பொழுதும் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும்; அவனால் ஆக்கபூர்வமாக எவற்றையும் செய்யமுடியாது போய்விடும். இதனைக் கருத்திற்கொண்டே உலகிலுள்ள எல்லா நாடுகளும் கல்வித்துறையைப் போன்று விளையாட்டுத் துறைக்கும் முக்கியத்துவம் வழங்கி வருகின்றன.

விளையாட்டுத் துறையின் மூலமே ஒரு மனிதன் தன்னுள் தேங்கிக் கிடக்கும் வீரத்தினை வெளிக்காட்ட முடியும். இதனடிப்படையிலேயே கி.பி. 1926களில் கிரேக்க மன்னனினால் "ஒலிம்பியாட்" எனுமிடத்தில் குதிரையோட்டம், மல்யுத்தம், வாட்போர் பயிற்சி, மாட்டுப்போர் என ஆரம்பிக்கப்பட்ட போட்டி இன்று முதிர்ச்சியடைந்து நான்கு வருடங்களுக்கு ஒருமுறை ஒலிம்பிக் போட்டியாக உருவெடுத்து சர்வதேச ஒற்றுமையை வளர்த்து வருகின்றது.

இவ்வாறாக விளையாட்டுத்துறை வளர்ச்சியடைவதற்கு அத்திபாரமிட்ட பெருமை கிராமப் புறங்களில் காணப்பட்ட பாரம்பரிய விளையாட்டுக்களையே சாரும். எமது மருதமுனைக் கிராமத்து இளைஞர்களும் எல்லாத் துறைகளையும் போன்று விளையாட்டுத் துறையிலும் சாதனை படைப்பதற்கு வழிசமைத்துக் கொடுத்த பெருமை இப்பிரதேசத்தில் வேரூன்றியிருந்த பாரம்பரிய விளையாட்டுக்களையே சாரும். அவைகளுள் சில விளையாட்டுக்கள் வழக்கொழிந்து வருவதனால் அவைகளுக்குப் புத்துயிரூட்டும் நோக்கிலேயே இக்கட்டுரை வரையப்படுகின்றது.

கோலாட்டம் (பொல்லடி)

எமது பிரதேசத்தில் நீண்ட காலமாக நிலைத்திருந்த ஒரு விளையாட்டு கோலாட்டமாகும். மிகவும் இரசனை கொண்ட இவ்விளையாட்டு இன்று படிப்படியாக அருகி வருவது வேதனைக்குரியது. இக்கோலாட்டத்தில் பன்னிருவர் கொண்ட ஆறு சோடிப்பேர் இடம்பெறுவர். அவர்கள் ஒவ்வொருவரின் கரங்களிலும் இரு தடிகள் காணப்படும். அவைகளின் பின்பக்க நுணிகளில் சிறிய சதங்கைகள் கட்டப்பட்டிருக்கும். ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒருவரை யொருவர் நோக்கியவர்களாக அணியாக நிற்பர். அணியின் நடுவிலுள்ள சோடியில் "அண்ணாவியார்" என அழைக்கப்படும் ஆட்டத்தை நடாத்துனர் காணப்படுவார். அவர் சிறந்த குரல்வளமுள்ள பாடகராகவும் சுறுசுறுப்பான வராகவும் இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவியாரின் விருத்தப்பாடலுடன் ஆட்டம் ஆரம்பமாகும். தொடர்ந்து அவர் பாடும் பாடலின் இசைக்கேற்ப குழுவிலுள்ளோர் குனிந்தும், நிமிர்ந்தும் நளினமாக ஒடியாடியும் எதிரே நிற்பவரின் தடிகளில் தமது தடிகளைத் தட்டிய வண்ணம் அண்ணாவியாரின் பாடலுக்கேற்ப, கோரோசாகப் பாடிய வண்ணம் சகல உறுப்பினரும் ஆட்டத்தில் ஈடுபடுவர். பாடல்கள் துள்ளலிசையில் அமைந் திருப்பதனால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாகக் காணப்படும். ஆடுபவர்கள் கவனக்குறைவாக நடந்துகொண்டால், தடியானது எதிரில் நிற்பவரின் தலை யையோ முகத்தையோ பதம்பார்த்து விடும்.

அண்ணாவியாரின் பாடலுக்கேற்ப சுறுசுறுப்பாக ஆட வேண்டியுள்ளதால் ஆட்டக் காரர்கள் வெகுவிரைவில் களைப்படைவர். அவர்களுடைய கட்டுப் பாட்டையும் மீறி உடலும் உளமும் செயற்படுவதே இதற்குக் காரணமாகும். கோலாட்டமானது பன்னெடுங் காலமாக திருமண மாப்பிள்ளை ஊர்வலம், சுன்னத் (Circumsission) ஊர்வலம், வரவேற்பு ஊர்வலம் ஆகியவைகளின் போதும் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. மேலும், கூட்டுப்பொறுப் பையும், புரிந்துணர்வையும் வளர்ப்பதற்கான பயிற்சியாகவும் கோலாட்டம் காணப்பட்டது. இவ்வாட்டத்தில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற பலர் எம்மை விட்டும் மறைந்துவிட்டனர். இருப்பவர்களாவது புத்துயிரளிக்க முன்வரல் வேண்டும்.

வாரோட்டம்

நீண்ட காலமாக எமது பிரதேசத்தில் நிலைத்துக் காணப்பட்ட ஒரு ஆட்டம் வாரோட்ட மாகும். ஒழுங்காக மைதான வசதிகளற்ற மணற்பாங்கான இடங்களில் ஆடப்பட்டுவந்த இவ்வாட்டம் உடலைத் திடப்படுத்துவதற்குரிய சிறந்ததொரு முயற்சியாகக் காணப்பட்டது. ஆட்ட வீரர்கள் இரு அணிகளாகப் பிரிந்து ஏறக்குறைய நூறு மீற்றர் இடைவெளியில் எதிரெதிராக நிற்பர். விளையாட்டு ஆரம்பமானதும் ஒரு அணியைச் சேர்ந்த வீரரொருவர் எதிரணி யினர் பக்கஞ் சென்று அங்குள்ள ஒருவரின் கையை தன் கையால் தொட்டுவிட்டு, தனது அணியை நோக்கி வேகமாக ஓடுவார். உடனே, அவ்வாறு தனது கையில் தொட்டவரைத் துரத்தி, தொடப்பட்டவர் வேகமாக ஓடுவார். முன்னால் ஓடுபவர் பின்னால் துரத்தி வருபவரின் கையினால் அடிபடாமல் தனது அணியைச் சென்றடைந்து விட்டால் தனது அணிக்காக ஒரு புள்ளியைப் பெற்றுக்கொடுத்த வராகக் கருதப்படுவார். இவ்வாறாக, போட்டி தொடர்ந்து நடைபெற்ற வண்ணமே காணப்படும்.

இவ்விளையாட்டில் ஈடுபடுவோர் தமது கட்டுப்பாட்டையும் மீறி, முழு சக்தியையும் ஓடுவதற்காகப் பயன்படுத்துவதனால் சமகாலத்தில் உடலும் உளமும் புதுப்பொலிவினை அடைகின்றது. நிரந்தர மைதான வசதிகளற்ற அக்காலத்தில் கடற்கரையிலும் எம்மூரின் நடுப்பகுதிகளிலுள்ள மணற்பாங்கான பகுதிகளிலும் இவ்விளையாட்டு நடைபெறுவது வழக்கம். இவ்வாரோட்டமானது சிறுவயதி லேயே என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது. எனது பிறந்த வீடும் இன்றைய அல்-மனார் மத்திய கல்லூரி பெண்கள் பிரிவுக்கு அண்மையில் அமைந்திருந்தபடியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்த ஆலயடி மணல் மைதானத்தில் தினந்தோறும் நடைபெறும். இவ்விளையாட்டில் உற்சாகமாக ஈடுபடுவேன். அங்கு நான் பெற்ற பயிற்சியே என்னை எதிர்காலத்தில் ஒரு குறுந்தூர ஓட்ட வீரனாக்கியது எனக்கூற முடியும். நான் அகில இலங்கை தேசிய மெய்வல்லுனர் ஓட்டப் போட்டிகளில் 1972இல் 100 மீற்றர், 400 மீற்றர் ஓட்டங்களில் முறையே முதலாம் இடங்களையும், 1975இல் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தினையும் இலகுவில் பெறுவதற்கு வழிசமைத்துத் தந்த வாரோட்டத்தினை என்னால் என்றுமே மறக்க முடியாது. எனது இவ்விரு சாதனைகளும் நாற்பத்தியைந்து வருடங்கள் தாண்டிய நிலையிலும் எந்தத் தமிழ் முஸ்லிம் வீரர்களினால் முறியடிக்கப்படவில்லை என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மட்டைப் பந்து

மட்டைப்பந்து "றவ்ண்ட் பந்து" என்றும் அழைக்கப்பட்டு வந்தது. இவ்வாட்டம் எமது பிரதேசத்தில் நீண்டகாலமாக ஆடப்பட்டு வந்ததொன்றாகும். எல்லே (Ellay), கிரிக்கட் (Cricket) ஆகியவைகளில் ஏற்பட்ட மோகத்தினால் இவ்விளையாட்டு, படிப்படியாக வழக்கொழிந்துவிட்டது எனலாம்.

ஏறக்குறைய 100 மீற்றர் பரப்பினைக் கொண்ட ஒரு பிரதேசத்தில் ஆட்டக்காரர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து இவ்வாட்டம் நடைபெற்று வந்தது. ஆட்டம் ஆரம்பிக்கப்படும் மத்திய நிலையம் தவிர்ந்து மைதானத்தின் நடுவில் நான்கு தரிப்பிடங்கள் காணப்படும். அதன் முன்பகுதியிலுள்ள இரு இடங்களுக்கும் மத்தியில் நிற்கும் பந்து வீச்சாளர் தன் முன்னால் பொல்லையோ அல்லது மட்டையையோ கையில் பிடித்தவராக நிற்பவரை நோக்கி பந்தை வீசுவார். இவ்வாறு வீசும் பந்தை அடிப்பதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் மட்டுமே வழங்கப்படும். எனவே, மைதானத்தில் நிற்கும் எதிரணியினரின் கரங்களில் பந்து பிடிபடா வண்ணம் மைதானத்தை நோக்கி அடிப்பார். அடித்த பந்து தூரத்துக்குச் சென்றுவிட்டால், தனது முழுப்பலத்தையும் பிரயோகித்த வண்ணம் நான்கு தரிப்பிடங்களுடாகவும் ஓடி, ஆரம்பித்த மையப்புள்ளியை பந்தை அடித்தவர் சென்றடைவார். அப்பொழுது அவருடைய அணி, ஒரு ஓட்டத்தைப் பெற்றதாகக் கருதப்படும். பந்தானது மைதானத்தில் நிற்கும் எதிரணியினரால் பிடிக்கப்பட்டாலோ அல்லது ஆட்டக்காரன் தரிப்பிடங்களினூடாக ஓடும் போது பந்தினால் எறிபட்டாலோ அவர் ஆட்டத்திலிருந்து நீக்கப்பட, அவருடைய அணியைச் சேர்ந்த இன்னொருவரினால் ஆட்டம் தொடரப்படும்.

இவ்வாட்டத்துக்கான சீலைப்பந்து, விசேட தேர்ச்சிபெற்ற சிலரினாலேயே தயாரிக்கப் பட்டது. சீலைத்துண்டுகளை ஒன்றின்மேல் ஒன்றாகச்சுற்றி, உருண்டை வடிவமாக்கிய பின்னர், அதன் மேற்பகுதி கெட்டியான நூலினைக் கொண்டு வலை (Net) பின்னுவது போன்று பின்னப்படும். இப்பந்தினை ஆகாயத்தில் வைத்து இலகுவில் பிடிக்கவும் முடியாது. இப்பந்தைத் தயாரிப்பதில் எமதூரில் தேர்ச்சிபெற்றோராக காலஞ்சென்றவர்களான ஏ. அகமது லெவ்வை, அப்துர்ரஹீம் மரைக்கார் (சத்தார் ஹாஜியாரின் தந்தை), எஸ்.எம்.எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழீல் அதிபரின் சகோதரர்களான மஹ்மூது லெவ்வை, அப்துல் காதர், சமூர்த்தி முகாமையாளர் அன்வர் அவர்களின் தந்தை அப்துல் கரீம் இன்றும் எம்முடன் வாழ்ந்து வரும் மஜீத் தண்டையல் ஆகியோர் காணப்பட்டனர். மிகவும் இரசனை கொண்ட இவ்விளையாட்டு அருகிப் போனமை வேதனைக்குரிய விடயமாகும்.

கிளித்தட்டு

இவ்விளையாட்டானது எமது கிராமத்தில் படிப்படியாக அருகிவந்த போதிலும் இன்றும் எமது அயற்கிராமங்களில் பகலிலும் இரவிலும் ஆடப்பட்டு வருவதை நாம் காணலாம். இவ்வாட்டத்துக்காக நிலத்தில் 36' x 6' நீள்சதுரமாக வரையறையிட்டு வரையப்பட்டுள்ள மைதானம், மத்தியிலும் ஒரு குறுக்குக் கோடிட்டு ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். குறுக்குக் கோட்டின் ஒவ்வொரு மையத்திலும் ஒவ்வொரு வீரர் நிற்பர். இவர்களின் தலைவர் எதிரணியினரை கொத்தி வெளியேற்றும் நோக்கில் மைதானத்தின் கோடுகளில் குறுக்கும் நெடுக்கும் ஓடித்திரிவதனால் கிளி (Parrot) என அழைக்கப்படுகின்றார். எதிரணி ஆட்டக்காரர்கள் கிளியிடமோ, குறுக்குக் கோடுகளில் நிற்போரிடமோ அடிபடாமல் மிக அவதானமாக மாறிமாறி மறுக்கி மறுகரையைச் சென்றடைய முயல்வர். அவ்வாறாகச் சென்றடைந்த முதலாமவர் தமது சகாக்களை ஒரு பக்கம் செல்லும்படி "பக்கம் பக்கம்" எனக்கூறி எச்சரிக்கை செய்தவண்ணம் கிளியிடமோ எதிரணியிடமோ அகப்படா வண்ணம் மைதானத்தினூடாக ஓடி ஆரம்ப இடத்துக்கு வரமுயற்சிப்பார். அவரது முயற்சி வெற்றிபெற்றால் அவருடைய அணிக்கு கிளியிடம் கொத்துப்படாமல் ஒரு பழத்தினைப் பெற்றதாகக் கருதப்படும். இவ்வாறாக இரு அணிகளினாலும் இவ்வாட்டம் மாறிமாறி ஆடப்படும்.

இவ்வாட்டத்தினை கட்டமைப்பதற்கு எமது முன்னோர்கள் மேற்கொண்டுள்ள நுணுக் கங்கள் எம்மைப் பிரமிப்படையச் செய்கின்றன. கூட்டுப்பொறுப்பு, புரிந்துணர்வு, அவதானம் ஆகிய அடங்கியுள்ள இவ்வாட்டம் தேகத்தைக் கட்டமைத்து திடகாத்திரமாக வாழவும் உதவுகின்றது எனலாம்.

நொண்டியடித்தல்

உடலின் சகல உறுப்புக்களுக்கும் சமகாலத்தில் பயிற்சியை வழங்கும் சிறந்த ஆட்டம் இதுவாகும். ஒரு காலினை நிலத்தில் ஊன்றிய வண்ணம் மறு காலினை உயரத்தூக்கிய நிலையில் மைதான வட்டத்தினுள் நிற்கும் எதிரணியினரைத் தாக்கி வெற்றி பெறுவதனாலேயே இவ்வாட்டம் "நொண்டியத்தல்" எனும் பெயரைப் பெற்றுள்ளது.

வீரர்கள் இரு அணிகளாகப் பிரிந்து ஒரு பிரிவினர் வட்டமாக வரையப்பட்டுள்ள கோட்டில் நிற்பர். மறுபிரிவினர் வட்டமாக வரையப்பட்டுள்ள கோட்டில் நிற்பர். மறுபிரிவினர் ஒவ்வொருவராக ஒற்றைக்காலால் நொண்டிய வண்ணம் மைதானத்துக்குள் புகுந்து அங்கு நிற்பவர்களைத் தாக்கி அவர்களை வெளியேற்ற (Out) முயற்சிப்பர். வட்டத்தினுள் நிற்பவர்களோ வெளியிலிருந்து நொண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்களினால் தாக்கப்படாமல் தப்புவதற்காக வட்டத்தினுள் ஓடித்திரிவர். ஈற்றில், நொண்டியவர் களைப்படைந்து தனது ஆற்றாமையை வெளிக்காட்டி, பூமியில் காலை ஊன்றிய வண்ணம் மைதானத்திலிருந்து வெளியேறுவர். இவ்வாறாக ஆட்டம் மாறிமாறித் தொடர்ந்து கொண்டேசெல்லும். எமது பிரதேசத்தில் அருகிச் சென்றுள்ள ஆட்டங்களுள் இதுவும் ஒன்றாகும்.

கட்டையெறிதல் (கட்டைப்பந்து)

கட்டையெறிதல், ஆடுவதற்கும் பார்த்துக் கொண்டிருப்போர் இரசிப்பதற்கும் சிறந்ததோர் ஆட்டமாகும். ஆட்டக்காரர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் நிற்பர். அவர்களின் மத்தியில் ஏழு டப்பாக்கள் (Tins) ஒன்றின்மேல் ஒன்றாக உயரத்துக்கு அடுக்கப்பட்டிருக்கும். கையிலிருக்கும் இரப்பர் பந்தினால் இரு அணியினரும் டப்பா அடுக்கில் படும்படி மாறிமாறி எறிவர். யாரோ ஒருவருடைய எறி டப்பா அடுக்கில் பட்டதும் அது சில்லாங்கொட்டை சிதறியது போன்று நிலத்தில் சிதறிக்கிடக்கும். அதனை பழையபடி அடுக்கும் நோக்கில் மாற்று அணியினர் துரிதமாக ஈடுபடுவர். அதனைத் தடுக்கும் நோக்கில் மற்றைய அணியினர் துரத்தித் துரத்திப் பந்தினால் எறிவர். எறியையும் தாங்கிக்கொண்டு டப்பாக்களை பழையபடி அடுக்கி முடிந்ததும் ஆட்டம் மீண்டும் தொடரும். இவ்விளையாட்டு இன்று சில பகுதிகளில் வீதியோரங்களிலும் மூலை முடுக்கு களிலும் சிறுவர்களினால் ஆடப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இவ்விளை யாட்டு, ஆட்டக்காரர்களிடத்தில் கூட்டுப்பொறுப்பையும், ஓட்டப் பயிற்சியை யும் வளர்ப்பதைக் காணலாம்.

கொத்திருக்கோ கொத்து

நீண்டகாலமாக எமது பிரதேசத்தில் நிலைத்திருந்த இவ்வாட்டம் இன்று முழுமையாக வழக்கொழிந்து விட்டதென்றே கூறலாம். நிலத்தில் வரையப் பட்ட ஒரு வட்டத்தில் ஆட்டக்காரர்கள் முன்பக்கம் பார்த்தவாறு, இருகை களையும் பின்னால் பிரித்த வண்ணம் அமர்ந்திருப்பர். அவர்களுள் ஒருவர் எழுந்து நின்று தனது கையில் மரக்கொத்தொன்றினால் பற்றிப் பிடித்த வண்ணம் "கொத்திருக்கோ கொத்து" எனக்கூறிக் கொண்டு வட்டத்தின் பின்புறத்தைச் சுற்றி ஓடுவார். வட்டத்தில் அமர்ந்திருப்போர், "போட்டுட்டுப் போங்கோ" என கோரசாகக் கூறுவர். வட்டத்தைச் சுற்றி ஓடுபவர், தான் விரும்பிய ஒருவரின் பின்னால் கொத்தினைப் போட்டுவிட்டு ஓடுவார். அப்பொழுது கொத்தினை கையிலெடுத்தவர், அவருக்கு கொத்தினால் அடிக்கும் நோக்கத்தில் துரத்தி ஓடுவார். துரத்தப்படுபவர் குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்ததும் இவ்வாட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இவ்வாட்டமானது உடலை உறுதிப்படுத்துவது மட்டுமன்றி அவதானப் பயிற்சியையும் வளர்க்கும்.

கயிறிழுத்தல் (Taq of War)

"கயிறிழுத்தல்" என்பது கிராமப் புறங்களில் காணப்படும் பாரம்பரிய விளை யாட்டு மட்டுமன்றி தேசிய விளையாட்டாகவும் இருக்கின்றது. இரு பக்கமும் பத்துப் பத்துப் பேர் கொண்ட இரு கோஷ்டியினர் பலம்பொருந்திய கயிறொன்றைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிப் பிடித்த வண்ணம் நிற்பர். அதன் மத்திய புள்ளியில் நிற்கும் மத்தியஸ்தர் கட்டளை பிறப்பித்ததும் இருபக்க வீரர்களும் தங்களுடைய முழுச் சக்தியையும் பிரயோகித்து கயிற்றை இழுப்பர். அப்பொழுது பார்வையாளர்களும், மற்றவர் களும் உற்சாகப்படுத்திக் கொண்டேயிருப்பர். முடிவில், கயிற்றினை நடுப்புள்ளி யிலிருந்து தம் பக்கம் நகர்த்திய குழுவினரை வெற்றிபெற்றவர்களாக நடுவர் குழுவினர் அறிவிப்பர். பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும், கிராமப் புறங்களில் நடைபெறும் கலாசார விளையாட்டுப் போட்டிகளிலும் கயிறிழுத்தல் இறுதி அம்சமாக இடம்பெறுவது வழக்கமாகும்.

சறுக்கு மரம் ஏறுதல்

சறுக்கு மரம் ஏறுதல் கிராமப் புறங்களில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்ச்சி களில் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளது. போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறும் போது சறுக்கு மரம் ஏறுதல் மைதானத்தில் நடந்துகொண்டேயிருக்கும். மைதானத்தின் ஒரு பகுதியில் 21 அடி உயரமுடைய கம்பமொன்று நடப்பட்டி ருக்கும். அதில் அடியிலிருந்து நுனி வரை எண்ணெய்க்குழம்பு (Grease Oil) பூசப்பட்டு அதன் உச்சியில் பெறுமதிமிக்க பரிசுப்பொருளும் கட்டி வைக்கப் பட்டிருக்கும். அதனை எடுப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சியே சறுக்கு மரம் ஏறும் போட்டியாகும். இப்போட்டியில் வீரர்கள் தனியாகவும் ஐவர் கொண்ட குழுவாகவும் பங்குபற்றுவர். அவர்களுடைய நேரமும் வரையறுத்து வழங்கப் பட்டிருக்கும். வீரர்கள் மரத்தில் ஏறுவதும் சறுக்குவதும் பார்வையாளர்களைச் சிரிப்பூட்டும் காட்சியாகக் காணப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுக்கள் தவிர, கிட்டிப் பொல்லடித்தல், பாடுகிறேன் பாடுகிறேன் (கபடி), இலந்தை மாறுதல், குளம் கரை, பூப்பறிக்கப் போகிறேன் போகிறேன், யாரடா இந்த கோவிலுக்குள்ளால முதலியவைகள் எல்லாம் நாளாந்தம் அருகிச் சென்றுள்ளவைகளாகும். இன்று எமது பாடசாலை மாணவர்கள் சதா புத்தகப்பைகளுடனும் இளைஞர்கள் கையடக்கத் தொலை பேசியுடனும் வாழ்க்கையை பரபரப்பானதாக ஆக்கிக்கொண்டதனால் பெரும் பாலான பாரம்பரிய விளையாட்டுக்கள் எம்மை விட்டும் பிரிந்தே சென்றுவிட்டன. இதன் காரணமாக உடற்பருமன், முடக்குவாதம், உயர் இரத்தவழுத்தம் (Hyper-tension) முதலான தொற்றா நோய்களினால் எமது சமூகம் தினாந்தம் பாதிக்கப் பட்டு வருவதை நாம் அவதானிக்கலாம்.

மல்யுத்தம் (Wrestling)

மல்யுத்தம் எனும் மல்லுக்கட்டும் விளையாட்டு தேசிய, சர்வதேசிய விளை யாட்டுக்களில் ஒன்றாகும். அதனைக்கூட எமது மருதமுனைக் கிராமம் தொட்டுப் பார்க்காமல் விடவில்லை. ஏறக்குறைய அரைநூற்றாண்டுகளுக்கு முன்பு இப்போட்டி விளையாட்டு கல்முனைப் பிரதேசத்தில் சூடுபிடித்துக் காணப் பட்டது. வெளிநாடுகளைச் சேர்ந்த மல்யுத்த வீரர்களான கிங்கொங், தாராசிங், சித்தீக், வடியூசுப், தோராசிங், அஜித்சிங் முதலானோர் அடிக்கடி வருகைதந்து நிகழ்ச்சிகளை நடாத்தி விட்டுச் செல்வர். எமது கிராமத்தில் வாழ்ந்த அப்துல்லாஹ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயில்வான், இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் சாகுல் ஹமீது பயில்வான் ஆகியோர் இவ்விளையாட்டில் தேர்ச்சி பெற்றுக்காணப் பட்டதனால் அவர்களின் முயற்சியினால் எமதூரிலும் வீரர்கள் உருவாகி, போட்டி நிகழ்ச்சிகளை நடாத்திப் பாராட்டைப் பெற்றனர். எம்மைவிட்டும் பிரிந்தவர்களான யூ.எம். அறபா, ஏ. இப்றாலெவ்வை (அன்வர் ரேடர்ஸ்) இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எஸ்.எம். முஸ்தபா, ஏ. செய்னுலாப்தீன் ஆசிரியர், ஏ.எல்.ஏ. மஜீத் (நூலகர்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

கால்பந்தாட்டம் (Football)

இன்று எமது கிராமம் கால்பந்தாட்டத்தில் தேசிய மட்டத்தில் உரத்துப் பேசப்படுவது பாராட்டத்தக்க விடயமாகும். பல கழகங்கள் உருவாகி, சிநேக பூர்வமான புரிந்துணர்வுடன் ஊருக்கும் மாவட்டத்துக்கும் புகழைத் தேடிக் கொண்டிருப்பது யாவரும் அறிந்த விடயமாகும். இவைகளுக்கெல்லாம் முன்னோடியாக எமது கிராமத்தில் 1960களில் தாபிக்கப்பட்ட "மருதமுனை விளையாட்டுக் கழகம் (MSC)" திகழ்ந்தமை இன்று எத்தனை பேருக்குத்தான் தெரியும். இக்கழகத்தினரால் முதன்முதலாக கமத்துக்குள் (ஆ.மு. ஷரிபுத்தீன் வித்தியாலயத்தின் கிழக்குப்பகுதி) உதைபந்தாட்ட மைதானமொன்று அமைக்கப்பட்டு விளையாடப்பட்டது. மர்ஹூம்களான எஸ்.எம்.எம். பழீல் (அதிபர்), ஏ.ஆர்.ஏ. அஸீஸ் (முதல்வர்), எஸ்.எம். லாபீர், ஐ.எல்.எம். அமீர், ஈ.எம். அபூபக்கர் (அபூ), எம்.எம். நிஸாமுத்தீன் (அதிபர்), எஸ்.எம்.ஏ. மத்தீன் (அதிபர்), ஏ.எம்.ஏ. கரீம் (ஆசிரியர்) இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எஸ்.எம். மூசா ஆசிரியர், ஏ. செயினுலாப்தீன் (ஆசிரியர்), ஏ.எல்.ஏ. மஜீத் (நூலகர்), எஸ்.எம். முஸ்தபா, எஸ்.எம். பீர் முகம்மது (அதிபர்), எம்.எச். காதர் இப்றாகிம் (ZD), எம்.ஏ. றகீம் (அதிபர்), எஸ்.ஏ.எஸ். ஹஸன் மவுலானா (ஆசிரியர்) முதலானோர் அதன் ஆரம்பகால உறுப்பினர்களாகும்.

இக்கழகம் நிந்தவூர் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலயத்திலுள்ள மைதானத்தில் மர்ஹூம் அமீர்மேர்ஷா அவர்களின் தலைமையிலான உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் கொட்டும் மழையிலும் விளையாடிய சம்பவம் இன்று எத்தனை பேருக்குத்தான் தெரியும். பிற்காலத்தில் இக்கழகத்திலிருந்து பிரிந்து சென்ற அதிபர் எஸ்.எம்.ஏ. மத்தீன் அவர்களின் குழுவினரால் தாபிக்கப்பட்ட விளையாட்டுக் கழகமே கிழக்கிலங்கை விளையாட்டுக் கழகமாகும் (East Lanka Sports Club) என்பது குறிப்பிடத்தக்கது. (இன்றுள்ள உதைபந்தாட்டக் கழகங்கள் தொடர்பான கட்டுரைகள் அடுத்தடுத்த பக்கங்களில் வரவிருக்கின்றன.)

கரப்பந்தாட்டம் (Volly Ball - Over game)

இன்று சுதேச விளையாட்டாக மட்டுமன்றி சர்வதேச விளையாட்டாகவும் புகழ்பெற்று விளங்கும் ஒரு விளையாட்டு கரப்பந்தாட்டமாகும். அணிக்கு ஆறு பேர் கொண்ட இவ்விளையாட்டுக்கும் எமது கிராமத்துக்குமிடையில் சுவாரஸ்யமான நீண்ட வரலாறொன்றே உண்டு. 1960களில் தாபிக்கப்பட்ட மருதமுனை விளையாட்டுக் கழகத்துக்கென (M.S.C.) நிரந்தர கரப்பந்தாட்ட மைதானமொன்று இருக்கவில்லை. காணிகளுக்குச் சொந்தமான தனியார்களிடம், அவர்களின் காணிகளில் மைதானம் அமைப்பதற்கு அக்கழகத்தினர் சம்மதம் கேட்பார்கள். உடனே அவர்களும் அனுமதி வழங்கிவிடுவர். அப்பொழுது நெருஞ்சி முட்பற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைகள் நிறைந்த காணித்துண்டுகள் எமது கிராமத்தில் நிறைந்து காணப்பட்டன. ம.வி.க. உறுப்பினர்கள் காணிகளின் குழலிலுள்ள விளையாட்டு ஆர்வலர்களின் உதவியுடன் காணிகளைத் துப்புரவு செய்து மைதானமமைத்து ஆட ஆரம்பிப்பர். விளையாட ஆரம்பித்து ஓரிரு வாரங்களுக்குள் காணி உரிமையாளர் தாங்கள் அவற்றுள் வீடுகட்ட வேண்டும் என நச்சரிக்கத் தொடங்குவர். வீரர்கள் வேறு வழியின்றி வேறொரு காணியைத் துப்பரவு செய்வர். அங்கும் வெளியேறும்படி அபாய ஒலி தொடர்ந்து முழங்கும். இவ்வாறாக இருபதுக்கு மேற்பட்ட காணித் துண்டுகளை இக்கழகத்தினர் துப்பரவு செய்து வீடுகட்ட உதவியுள்ளனர்.

இவ்வாறான நெருக்குதல்களுக்கு மத்தியில் ம.வி.க. கரப்பந்தாட்ட (Over game) அணியினர் கல்முனைப் பிரதேசத்தில் கால்நூற்றாண்டு மேலாகக் கொடிகட்டிப் பறந்ததை விளையாட்டு ஆர்வலர்கள் மறக்க முடியாது. எம்மை விட்டுப்பிரிந்த எஸ்.எம்.எம். பழீல் (அதிபர்), ஏ.எச்.எம். மஜீத் (அதிபர்) இன்றும் எழுபது (70) அகவையைத் தாண்டிய போதிலும் எம் மத்தியில் வீறுநடை போட்டுக்கொண் டிருக்கும் எஸ்.எம். முஸ்தபா, ஏ.எல்.ஏ. மஜீத் (நூலகர்), ஆசிரியர்களான எம்.பி. முகைதீன், எஸ்.எம். மூசா, ஏ. செய்னுலாப்தீன், இப்றாலெப்பை தோம்புதோர் ஆகியோரே அக்கரப்பந்தாட்டக் கோஷ்டியைச் சேர்ந்த வீரர்களாகும். இவ்வணி யினரின் மறக்க முடியாத சாதனை மருதமுனை பொதுநூல் மைதானத்தில் இடம்பெற்ற இரவு வேளைப் போட்டியில் பெற்ற வியத்தகு வெற்றியாகும். இவ்வாட்டம் இக்கழகத்துக்கும் கல்முனை பஸார் விளையாட்டுக் கழகத்துக்கு மிடையில் (Bazaar Sports Club) இடம்பெற்றது. போட்டியின் இறுதி நேரம் வரை தோல்வியை நோக்கிக் கொண்டிருந்த இக்கழகம் திடீரென ஆக்ரோசமடைந்து வெற்றியடைந்தது. அவ்வெற்றிக்குக் காலாக அமைந்த அன்றைய இளம் வீரர் எஸ்.எம். மூசா எதிரணியினர் உட்பட சகலரதும் பாராட்டைப் பெற்றமை நினைவுகூரத்தக்கது. இத்தொடரில், பெரியநீலாவணைக் கிராமத்தில் பொது நூலகர் ஏ.எல்.ஏ. மஜீத் அவர்களின் அனுசரணையுடன் இமாம் கஸ்ஸாலி விளை யாட்டுக் கழகம் உருவாக்கப் பட்டது. அக்கழகமும் மருதமுனை விளையாட்டுக் கழகம் விட்ட பணியை நீண்ட காலமாகச் செய்து வந்தது. இன்று எல்லோரும் பரப்பரப்பான வாழ்க்கைக்கு (Busy Life) முகங்கொடுக்கத் தொடங்கியுள்ளதால் அவர்களின் பணியும் முற்றுப்பெற்று விட்டது எனக்கூறலாம்.

இன்று பிரதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் கால்பந்தாட்டம், கிரிக்கட் ஆட்டம் ஆகியவைகள் பற்றி எந்நேரமும் சிலாகித்துப் பேசப்படும் ஒரு கிராமம் மருதமுனையாகும். பலதரப்பட்ட படிகளையும் தாண்டி தேர்ச்சிபெற்ற பல விளையாட்டுக் கழகங்கள் எமது கிராமத்தில் நிரம்பிக் காண்பது ஆரோக்கிய மானது. இன்ஷா அல்லாஹ், வெகுவிரைவில் தேசிய தரத்திலான விளையாட்டு மைதானமொன்று அமையவுள்ளதால் எமது கிராமம் மேலும் பல சாதனை களைப் புரியும் என நம்புகிறோம். அதேநேரம் எமது பிரதேச பாரம்பரிய விளையாட்டுக்களுக்கும் புத்துயிர் வழங்குவதும் எமது சகலரதும் கடமை யாகும் எனக்கூறிக்கொள்கின்றேன். இறுதியாக, இக்கட்டுரையை வரைவதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கிய முன்னாள் பல்துறை விளையாட்டு வீரரும், எனது மதிப்புக்குரிய சகோதரருமான எஸ்.எம். மூசா B.A. (JP) அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து விடை பெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் வஹாப் முகம்மது மஹ்தூம், ஜே.பி.

விளையாட்டு அதிகாரி

அப்துல் வஹாப் முகம்மது மஹ்தூம் 20-06-1950ல் மருதமுனை-01இல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி ஆகியவைகளை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் கற்றார். சிறுபராயம் முதல் விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்டியதால் இவரை மெய்வல்லுனர் போட்டிகளில் பங்குபெறச் செய்வதென்ற முடிவினை இவர் சார்ந்திருந்த ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழகம் தீர்மானித்து இதற்காக இவரை பயிற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இதன் பயனாக இவரை ஒரு வெற்றி வீரனாக இனங்காண முடிந்தது. ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழக அஞ்சலோட்டப் போட்டிக் குழுவும் பல வெற்றிகளை இவர் மூலம் சம்பாதித்தது. இதன் உச்சக்கட்டமாக 1972ல் அகில இலங்கை தேசிய மெய்வல்லுனர் போட்டியில் 100 மீற்றர், 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்று எமது மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை சேர்த்தார். மட்டுமல்லாமல் இவர் ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரராகவும் விளங்கினார். இவரது திறமையைக் கண்ட தலைநகரின் பல முன்னணிக் கழகங்கள் தங்களோடு இணைந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தும் அவர் அவற்றை மறுத்து விட்டார்.

01-01-1980ல் விளையாட்டு அதிகாரியாக முதல் நியமனம் பெற்று அம்பாரை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் விளையாட்டு முன்னேற்றத்திற்காக உழைத்தார். இந்தியாவில் ஒன்றரை மாத சிறப்புப் பயிற்சியைப் பெற்றதன் பின்னர் விளையாட்டுப் பயிற்சியாளராகப் பதவியுர்வைப் பெற்று 2010ல் ஓய்வு பெற்றபின்பும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக இன்றும் தேவையான போது கடமையாற்றி வருகிறார்.

மர்ஹூம் பழீல் மவ்லானா அவர்களின் புதல்வி இஸ்ஸதுல் இனாயாவை தனது வாழ்க்கைத் துணையாகக் கொண்டுள்ள இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

பல சமூக அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் இவர் ஒரு சிறந்த உதைபந்தாட்ட மத்தியஸ்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை ஈஸ்ட் லங்கா விளையாட்டுக் கழகம்

தகவல் : ஏ.எல்.எம். முனாஸ், ஜே.பி. (முன்னாள் செயலாளர்)

14-03-1969இல் ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழகம் என்னும் பெயரில் விளையாட்டுக் கழகமொன்று ஆரம்பிக்கப்பட்டது. மர்ஹூம் எஸ்.எம்.ஏ. மத்தீன் அவர்களை தலைவராகவும், எஸ்.எம். பீர்முகம்மது அவர்களையும் பின்னர் எம்.எல்.எம். ஜமால்தீன் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்விளையாட்டுக் கழகத்தின் அடுத்த செயலாளராக ஏ.எல்.எம். முனாஸ் தெரிவுசெய்யப்பட்டார். இக்கழகம் தோற்றம் பெற்றதோடு மருதமுனையின் விளையாட்டுத் துறையில் புதியதோர் அத்தியாயம் ஆரம்ப மானது. இவ்விளையாட்டுக் கழகம் அதன் பெயருக்கேற்ற வகையில் கிழக்கிலங் கையில் ஒரு முன்னணிக் கழகமாக உருப்பெற்றது.

கல்முனைப் பிரதேசத்தில் மட்டுமல்லாது, கிழக்கிலங்கையிலும் உதைபந் தாட்டப் போட்டிகளிலும், மெய்வல்லுனர் போட்டிகளிலும் பல வெற்றிகளைக் குவித்து முன்னணிக் கழகமாக நிலைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட உதை பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்று மட்டக்களப்பு மாவட்ட உதைபந் தாட்டக்கழகங்களுடன் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறுவதற் கேதுவான சிறந்த வீரர்களைக் கொண்டிருந்தது. பின்வரும் வீரர்கள் இக்கழகத்தின் உதைபந் தாட்டக் குழுவில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. மர்ஹூம்களான எம்.பி.எம். இஸ்மாயில், எஸ்.எம்.ஏ. மஜீட், ஏ.சீ.எம். இஸ்மாயில், சபுர்தீன், வி. அசனார், ஏ.ஆர்.ஏ. கபூர், எம்.எல்.ஏ. காசிம் பாவா இவர்களுடன் தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் யூ.எல்.ஏ. அஸீஸ், எச்.எல். நஜ்முத்தீன், ஏ.சீ.எம். இப்றாகீம், ஏ.வீ.எம். மஹ்தூம், எஸ்.எல்.எம். ஜலால்தீன், எம்.பீ.எம். இக்பால் போன்றவர்களாவர். இக்கழகம் கிழக்கிலங் கையில் மட்டுமல்லாது அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட அனைத்து மாவட்டங்களிலுமுள்ள கழகங்களோடு விளையாடி பல வெற்றிகளைப் பெற்றது.

மெய்வல்லுனர் பிரிவை நோக்குமிடத்து ஈஸ்ட்லங்கா வி.க. சிறந்ததொரு அஞ்சலோட்டக் குழுவைக் கொண்டிருந்தது. கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மைக்கல் மென் வி.க., களுதாவளை கென்னடி வி.க. ஆகியவை அஞ்சலோட்டப் போட்டிகளில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தபோது ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழகத்தின் பிரவேசம் நிகழ்ந்தது. இக்கழகம் அஞ்சலோட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தொடங் கியதன் பின்பு ஏனைய கழகங்களின் வெற்றி கேள்விக்குறியானது. அஞ்சலோட்டப் போட்டிகளின் போது மருதமுனை ஈஸ்ட்லங்கா வி.க. வந்திருக்கின்றதா என்று தேடிப்பார்க்கும் அளவுக்கு நிலைமை உருவானது. சகல அஞ்சலோட்டப் போட்டிகளிலும் இக்கழகம் முதலாம் இடத்தைப் பெறுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. இதற்கு முக்கிய காரணகர்த்தா ஓட்டவீரர் ஏ.வீ.எம். மஹ்தூம் எமது அணியில் அங்கம் வகித்தமையாகும். இவருடன் எஸ்.எல்.எம். ஜலால்தீன் அதிபர், அபுல் ஆசிரியர், ஏ.எம். இப்றாகிம், எஸ்.எம்.ஏ. கையூம், சபுர்தீன், எம்.ரி.ஏ. ஜலீல் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலோட்டக் குழுவில் அங்கம் வகித்தனர். இதனிடையில் விளையாட்டு அமைச்சினால் பிரதேச செயலக, மாவட்ட, மாகாண மட்டங்களில் நடாத்தப்பட்ட அனைத்துப் போட்டிகளிலும் தனியாகவும், குழுவாகவும் பல வெற்றிகளைக் குவித்தனர். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் விளையாட்டு வீரர் ஏ.வீ.எம். மஹ்தூம் பிரதேச, மாவட்ட, மாகாணப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று அகில இலங்கை ரீதியில் தேசிய மட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றார். 1972ஆம் ஆண்டு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர், 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கங்களை வென்றார். இந்த மெய்சிலிர்க்க வைத்த அரிய காட்சியைக் காணும் பாக்கியம் ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.எம்.ஏ. மத்தீன், ஏ.எல்.எம். முனாஸ், எஸ்.எம்.ஏ. மஜீத் ஆகியோருக்குக் கிடைத்தது. அச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை வார்த்தைகளால் வடிக்க முடியாது. இதன் மூலம் ஏ.வீ.எம். மஹ்தூம் கிழக்கு மாகாணத்திற்கும், அம்பாரை மாவட்டத்திற்கும் பெருமை தேடித்தந்ததோடு நமது மருதமுனை மண்ணின் புகழை அகில இலங்கையும் அறியும் வண்ணம் நிலைநாட்டினார். கிழக்கிலங்கையில் நீண்ட காலமாக இயங்கி வந்த பல விளையாட்டுக் கழகங்கள் இருந்த போதிலும் கிழக்கிலங்கையில் முதலாவதாக மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்திய பெருமை ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழகத்திற்கே உரியது. இங்கு இரண்டு போட்டிகள் நடைபெற்றன. தற்போது மசூர்மௌலானா சதுக்கம் அமைந்துள்ள அப்போதைய மருதமுனை விளையாட்டுத் திடலில் சுற்றிவர மதில் ஏதும் இல்லாத நிலையில் மின்னிணைப்பு இல்லாத நிலையில் அவைகளை ஏற்படுத்தி இச்சாதனையைப் படைத்தது ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழகம்.

இக்கழகத்தின் வளர்ச்சியில் பின்வருவோர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். நிர்வாகம், உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகளின் வெற்றிக்கும் தம்மாலான பங்களிப்பை இவர்கள் வழங்கினர்.

என்.எம். இஸ்மாயில் (ஹம்தூன்), ஏ.ஆர்.ஏ. சத்தார், யூ.எல். யூசுப் ஜே.பி., டாக்டர். எம்.எம்.எம். ஜெமீல், நாஸிர், எஸ். றம்ழான், எஸ். துவான், ஈ. நஜ்முத்தீன், ஏ. கமறுத்தீன் (ஹியுமன் லிங்க்), எச்.எம்.ஏ. வதூத் அதிபர், நூர் முகம்மது, ஐ.எல். சம்சுத்தீன் (ஹிஜ்றா) போன்றவர்களுடன் கல்முனை மகேந்திரன், பாண்டிருப்பு கோபால், சுதா, கிருஷ்ணபிள்ளை (பிறதர்) போன்றவர்களும் மறக்க முடியாதவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசகீர்த்தி அகமது லெப்பை முகம்மது முனாஸ், ஜே.பி.

ஓய்வுபெற்ற வரி மதிப்பீட்டாளர்

15-09-1946ல் மருதமுனையில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரி, நற்பிட்டிமுனை அல்-அக்ஸா வித்தியாலயம், மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயம் ஆகியவற்றில் கற்றார். இதன்போது 8ம் வகுப்பில் விஞ்ஞானப் புலமைப் பரிசில் பெற்று வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் கல்வியை மேற்கொண்டார்.

பொது எழுதுவினைஞர் சேவையில் 06-05-1966ல் இணைந்துகொண்ட இவர் வரி உத்தியோகத்தர், சிரேஷ்ட வரி உத்தியோகத்தர் பதவிகளைக் கடந்து தனது ஓய்வின் போது வரி மதிப்பீட்டாளராகக் கடமையாற்றினார். ஓய்வுபெற்ற பின்னர் நொத்தாரிசுத் தேர்வில் சித்திபெற்று தற்போது நொத்தாரிசாகவும் பணிபுரியும் இவர் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். இதன் காரணமாக தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்குமான மொழிபெயர்ப் பாளராகவும் கருமமாற்றுகிறார்.

ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழகத்தின் செயலாளர், தலைவர் பதவிகளை அலங்கரித்த இவர் இளைஞர் புத்துணர்ச்சி மன்றத்தின் செயலாளராகவும், வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பொருளாளர், உப தலைவர் பதவிகளையும் வகுத்ததோடு, கிராமோதைய சபைகள், கிராம அபிவிருத்திச் சங்கம் எனப் பல பொது சமூக அமைப்புக்களின் மூலம் கிராமத்திற்கு அளப்பெரிய சேவையாற்றியுள்ளார்.

தேசகீர்த்தி விருதும், தங்கப் பதக்கமும் கிடைக்கப்பெற்ற இவர் முழுத்தீவுக்குமான சமாதான நீதவானுமாவார். சமாதான சபையுடன் இணைந்து ஊரின் அமைதிக்காகத் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கினார்.

தாவூத்லெப்பை அவர்களின் மகள் உம்மு ஸமீனா அவர்களைக் கரம்பற்றிய இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Al-Haj. A.R.A. SATHAR
Justice of the Peace - Whole Island
Regd. No: 2000/ 03/ NE/ WP/ B/ 015
504A, Central Road,
Maruthamunai 03

மருதமுனை கோல்ட்மைன்ட் விளையாட்டுக் கழகம்

எம்.ஏ.எம். அஸ்வர் (ஆசிரியர்). பிரதித் தலைவர்

1975ம் ஆண்டு பதினைந்து வயது இளைஞனாகவிருந்த முஸத்திக் ஜே. முஹம்மட் என்பவரினால் 'உடரட மெனிக்கே' என்ற பெயருடன் ஆரம்பிக்கப் பட்ட இக்கழகம், கலியுக விளையாட்டுக் கழகம், கோல்ட்மைன்ட் விளையாட்டுக் கழகம் எனப்பல பெயர்களில் இயங்கி 1993ம் ஆண்டு முதல் கோல்ட்மைன்ட் (GOLD MIND) தங்கச் சிந்தனை என்ற பெயரில் இன்றுவரை எமது பிரதேசத்தில் ஒரு முன்னணிக் கழகமாக இயங்கி வருகிறது.

ஆரம்ப காலங்களில் பள்ளி மாணவர்களாகவிருந்த இந்த இளைஞர் குழு கழகத்தினைக் கொண்டு நடாத்துவதற்கான நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டமையினால் அபிமானிகளிடம் பெறப் பட்ட நிதிகள் மற்றும் பல பொது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடாத்துவதன் மூலம் பெறப்பட்ட நிதிகள் பெருநாட் காலங்களில் ஏற்பாடு செய்யப்பட்டதால் விற்பனை, மற்றும் கழக உறுப்பினர்களினால் வீடு வீடாகச் சென்று கூலி வேலைகள்கூடச் செய்து தமது தேவைகளை நிறைவேற்றினார்கள் என்பது இக்கழகத்தின்பால் அவர்களுக்கிருந்த பற்றையும் பாசத்தையும் காட்டி நிற்கிறது.

23-11-1978ம் ஆண்டு வீசிய சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளறிந்து பொது நிறுவனங்கள் பள்ளிவாயல்களினால் மேற்கொள்ளப் பட்ட நிவாரணப் பணிகளில் தங்களையும் இணைத்துக் கொண்டனர்.

இக்காலையில் அரச உத்தியோகம், பல்கலைக்கழக நுழைவுகளினால் இவ்விளைஞர்களில் பலரின் பிரிவு கழக செயற்பாடுகளில் ஒரு தொய்வு நிலை யையும் ஏற்படுத்தியது. இதன்போது கழகத்தின் தலைவராகவிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் எம்.எச். சிராஜுத்தீன் அவர்களின் மறைவு கழகத்தை இயங்க முடியாத நிலைக்குத் தள்ளிவிட்டது.

1992ம் ஆண்டுவரை இந்நிலை தொடர்ந்தது. மீண்டும் பாவா சன்ஸ் எம்.கே.வீ.எம். ஜஹ்பர், ஏ.எஸ்.எம். ஹரீஸ் போன்றவர்களின் உந்துதலினால் கழகம் மீண்டும் புத்துயிர் பெற்று ஒரு சிறந்த நிருவாகத்தையும் அமைத்துக் கொண்டு செயற்படலாயிற்று. மறைந்த கழகத் தலைவர் எம்.எச். சிராஜுதீன் அவர்களின் நினைவாக ஒரு சவால் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடாத்தியதன் மூலம் கழகத்தின் செல்வாக்கும் பெருமையும் உயர்வதைக் கண்ட இவர்கள் ஒரு செயலூக்கம் கொண்ட நிருவாகத்தை அமைத்துக்கொள்ள விரும்பியதன் காரணமாக ஏ.ஆர்.எம். கலீல் ஜே.பி. அவர்களைத் தமது தலைவராக்கிக் கொண்டனர். இதன் பின்னர் தாம் விளையாடுவதற்கு ஒரு நிரந்தர இடம் இன்மை பாரிய பின்னடைவுகளுக்கு வழிசமைக்கலாம் என்பதை உணர்ந்து புலவர்மணி சரிபுத்தீன் வித்தியாலய கிழக்குப்புறப் பகுதியில் பலரின் நிதியுத வியுடன் ஒரு விளையாட்டு மைதானத்தை அமைத்துக் கொண்டது. இங்கு கழக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களின் திறமையை வெளிக்கொணரும் நோக்குடன் முறையான பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஊரில் முதன்முதலாக முறையான பயிற்சி களை வழங்கிய பெருமை இக்கழகத்திற்கே உண்டு. இதன் மூலம் இக்கழக வீரர் எம். ஜே. எம். றஊப் அவர்கள் தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்துக் கொண்டார் என்பது எமது கிராமத்திற்குப் பெருமை சேர்க்கிறது. 1994ம் ஆண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சுற்றுப்போட்டியில் கிழக்கு மாகாண சம்பியனாக கோல்ட்மைன்ட் விளையாட்டுக் கழகம் தெரிவானது மட்டு மல்லாமல் பல உடற்பயிற்சி ஆசிரியர்களையும் உருவாக்கியது.

பொது நிகழ்ச்சிகள், விழாக்கள் போன்றவற்றைச் சிறப்பாக வடிவமைத்துச் செய்து காட்டுவதில் இக்கழகத்திற்குத் தனிச்சிறப்பிடம் உண்டு. இந்த வகையில் விழாக்கள், கௌரவிப்பு நிகழ்வுகள் எனப் பலவற்றை வெற்றிகரமாக நடாத்தியதன் மூலம் பொது மக்களின் பாராட்டினையும் பெற்றுள்ளது.

2005ம் ஆண்டு கழகத்தின் தலைமைப் பொறுப்பை அல்-ஹாஜ். வை. கே. றஹ்மான் ஏற்றுக்கொண்டு இன்றுவரை சிறப்பாக வழிநடாத்தி வருகின்றார்.

கழகத்தின் மீயுயர்பீட உறுப்பினர்கள்

1983, 1994, 1995ஆம் ஆண்டுகளில் மயோன் வெற்றிக்கிண்ணச் சுற்றுத் தொடரை சிறப்பாக நடாத்திய இக்கழகம் 1994ல் மரிகோல்ட் கிண்ணச் சம்பியனாகவும் 1996ல் நடைபெற்ற கிளியர் கொம் வெற்றிக் கிண்ணத் தொட ரையும் தனதாக்கியது. 1998ல் தேசிய ரீதியிலான F.A. கிண்ணத் தொடரில் இறுதிச் சுற்றுக்கும் தெரிவானது. 2006ல் கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவின் உதைபந்தாட்டச் சம்பியனாகவும் தெரிவானது. 2008ல் தர்மராஜா வெற்றிக் கிண்ணமும் இவர்கள் வசமானது.

உதைபந்தாட்டங்களில் மட்டுமே நின்றுவிடாமல் மென்பந்துக் கிரிக்கட் போட்டிகளிலும் பல வெற்றிகளைக் கைப்பற்றியது. 2010ல் எமது பிரதேசத்தின் புதிய அறிமுகமான கடற்கரைக் கால்பந்துச் சுற்றுப் போட்டியையும் தன் வசமாக்கி பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வென்றது.

பல சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் கோல்ட்மைன்ட் விளையாட்டுக் கழகம் அல்-மனார் மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் அன்று முதல் இன்றுவரை தன்னை அர்ப்பணித்துக்கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகம்

அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார், ஜே.பி.

எமது பிரதேசத்தின் மூத்த கழகமும், முன்னணிக் கழகமுமான ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகம் 1974ல் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் பிரதேசங்களில் இயங்கி வந்த சில கழகங்களுடன் உதைபந்தாட்டங்களில் ஈடுபட்டும், மட்டக்களப்பில் பிரபல்யமான கழகங்களை வரவழைத்து கண்காட்சி உதைபந்தாட்டங்களிலும் இக்கழகம் ஈடுபட்டு வந்தது. ஆரம்பகால வீரர்களாக எம்.எஸ்.எம். சனூன், ஏ.ஆர்.எம். ஜஹ்பர், சகீட் ஆசிரியர் போன்றவர்கள் முன்னணி வீரர்களாக கருதப்பட்டனர். அநேகமானவர்கள் சிறுவயதினராகவிருந்த காரணத்தினால் கழகத்தினைக் கொண்டு நடாத்துவதில் பல சிரமங்களை எதிர்க்கொண்டனர். காலத்திற்குக் காலம் இதன் நிருவாகம் மாறிக் கொண்டும் சிலர் விலகி வேறு கழகங்களில் இணைவதும் விலகுவதும் தொழில் வாய்ப்புக்களினால் வெளிநாடு செல்லல் போன்ற விடயங்கள் கழகத்தின் வளர்ச்சியில் சவால்மிக்கவைகளாகக் காணப்பட்டன.

மேற்படி விடயங்களை அவதானித்து கழகத்தினை பலமிக்கதாக புனரமைக்க வேண்டும் என்ற முனைப்புடன் சில இளைஞர்கள் தொழிற்பட்டதன் விளைவாக 1984ம் ஆண்டு பல புதிய முகங்கள் இக்கழகத்தைப் பொறுப்பேற்றன. குறிப்பாக மரிகோல்ட் ஏ.எம். இப்றாகீம் இதன் செயலாளர் பதவியில் அமர்த்தப்பட்டார். சிறந்த முறையில் கழகத்தை வழிநடாத்திச் செல்கையில் மர்ஹூம் எச்.எல். ஜமால்தீன் SP அவர்களின் தலைமைத்துவம் இதற்குக் கிடைக்கப் பெற்றதனால் கழகத்தின் வளர்ச்சி பல மடங்காக அதிகரித்தது. தலைவர் அவர்களின் வருகையால் கழகத்தின் நிதித்தேவைகள் ஓரளவேனும் நிறைவு செய்யப்பட்டன.

மேலும் இதன் போசகராகவிருந்து அல்-ஹாஜ் எஸ்.எம்.ஏ. மஜீட் அவர்கள் தன்னாலான அதிகபட்ச பங்களிப்பை வழங்கினர். இக்கால கட்டத்தில் கழகம் உதைபந்தாட்டத் துறையில் பல வெற்றிகளைப் பெற்றது மட்டுமல்லாமல் பல சுற்றுப் போட்டிகளையும் நடாத்தியதன் மூலம் பிரபல்யத்தின் உச்சிக்கே சென்றது. அகில இலங்கை மட்டத்திலான பல போட்டிகளில் பங்கேற்று பல வெற்றிகளையும் சம்பாதித்துக் கொண்டது. அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவர், செயலாளர்களாக இக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலாளர்களே பதவி வகித்ததால் இக்கழகத்தின் வளர்ச்சிக்கு இவ்விடயமும் சாதகமாக இருந்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியதே.

விளையாட்டுத்துறை தவிர சமூக சேவைகளிலும் கழகம் தன்னை ஈடுபடுத்தியது. மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதி 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவங்களைத் தொடர்ச்சியாக நடாத்தி வந்தது. இப்தார் நிகழ்வுகள், சிரமதானப் பணிகள், வரவேற்பு விழாக்கள், பாராட்டு வைபவங்கள் என கழகத்தின் சேவை விரிவாக்கம் கண்டது. இவர்களுக்குப் பக்கபலமாக கழகத்தின் மூத்த உறுப்பினர்களான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எல்.எம். ஜமால்தீன், எச்.எல். நஜிமுத்தீன், எம்.எல்.எம். மஹ்றூப் ஆசிரியர், எம்.எல்.எம். புகாரி, ஏ.ஆர்.எம். ஜஹ்பர், றிஸ்வி போன்றவர்கள் துணை நின்றனர். இவ்வேளையில்தான் கழகத்தின் தலைவர் எச்.எல். ஜமால்தீன் எஸ்.பி. அவர்கள் அகால மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி றாஜிஊன்

தலைவரின் மறைவால் அதிர்ச்சியுற்ற கழகம் மூத்த உறுப்பினர் எம்.எல்.எம். ஜமால்தீன் அவர்களின் தலைமையில் மீண்டும் தலைநிமிர்ந்து நின்றது. வழமையான நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. மூன்றாண்டு காலம் இவர் தலைமைப் பதவிலிருந்து வழிநடாத்தியதன் பின்னர் இளைஞர் களிடம் கழகத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற ஆலோசனையின் பேரில் ஓய்வுபெற்ற விசேட அதிரடிப்படை வீரரும் சிறந்த சமூக சேவையாளரும், உதை பந்தாட்ட வீரருமான எம்.எஸ். உமர்அலி MMC அவர்களிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்திருக்கின்றனர். இவரது மிகக்குறுகிய காலத்திற்குள் பல வெற்றிகளை இக்கழகம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தில் விஷேடமாக ஒன்றைக் குறிப்பிடல் வேண்டும். 1984 முதல் இன்று வரையான மூன்று தசாப்த காலமாகத் தன்னை அர்ப்பணித்துவரும் செயலாளர் ஏ.எம். இப்றாகிம் மரிகோல்ட் அவர்கள் இக்கழகத்தின் முதுகெலும்பாகவிருக்கிறார். தொடர்ந்து விளையாட்டுத் துறைக்கு இவரது பங்களிப்பு இன்றியமையாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம்

தகவல் : E. கமால்தீன் (ஆசிரியர்) - பொதுச் செயலாளர்

சிறுபிள்ளைகள் ஒன்றுசேர்ந்து றப்பர் பந்துகொண்டு குளத்துக்குள் ஒன்றுகூடி விளையாடி விட்டு கலைந்து செல்வார்கள். அவ்வாறு இணைந்த ஒரு இளைஞர் குழு ஒரு விளையாட்டுக் கழகத்தை உண்டாக்க வேண்டும் என எண்ணியது. அதனடிப்படையில் 19-11-1983இல் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் ஒன்றுகூடிய குழு தங்களுக்கென ஒரு விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்தனர்.

அவ்வாறு விளையாட்டுக் கழகம் தொடங்கியபோது பல இளம் சிறுவர்கள் அதில் இணைந்து கொண்டனர். இதன் ஆரம்ப நிகழ்வில் பலர் கலந்து கொண்டாலும் இதன் முன்னோடிகள் ஒரு சிலராகவே இருந்தனர். குறிப்பாக மர்ஹூம் எஸ்.எம். றபியுத்தீனைக் குறிப்பிடலாம். இவருடன் இன்னும் சிலர் முனைப்பாக இணைந்து செயற்பட்டனர். இவ்வாறு உருவாக்கப்பட்ட கழகத்திற்கு "ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம்" என நாமம் சூட்டினர். இதற்குக் காரணம் அக்காலப்பகுதியில் ஒலிம்பிக் விளையாட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கழகத்தின் ஆரம்பகால தலைவராக E. கமால்தீன் அவர்களும், பொதுச் செயலாளராக எஸ்.எம். றபியுத்தீன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களோடு இணைந்த குழு கழகத்தை செவ்வனே நடாத்திச் சென்றது. ஆரம்பகால போசகர்களாக ஏ.எம். கமால்தீன் B.Com, எம்.எம். றபீக் LL.B. ஆகியோர் இருந்தனர். இக்காலப்பகுதியில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிப் போக்கையும், அதன் திறமையையும் கண்ணுற்ற ஒரு வளர்ந்த இளைஞர் குழு இக்கழகத்திலிருந்த பல வீரர்களைப் பிரித்து தன் பக்கம் அழைத்து ஆசைவார்த்தை காட்டி பிறிதொரு கழகத்தை 1984இல் ஆரம்பித்தது. இந்நடவடிக்கையினால் சற்றும் தளர்வுறாத கழகம் பல போட்டிகளில் வெற்றி நடைபோட்டு தனது நாமத்தை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டது. காலப்போக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கழகம் நலிவுற்று மீண்டும் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்துடன் சங்கமித்தது.

1990 காலப்பகுதியில் இக்கழகத்தின் நிருவாக கட்டமைப்பு மிகவும் நேர்த்தியாக்கப்பட்டது. தலைவராக E. கமால்தீன், செயலாளராக எஸ்.எம். றபியுத்தீன், முகாமையாளராக ஏ.எம். நிஹ்மத்துல்லா, வேலைப் பணிப்பாளராக எம்.ஏ.எம். நியாஸ், நிருவாகப் பணிப்பாளராக ஏ.ஆர்.ஏ. சத்தார் ஆகியோர் பொறுப்பேற்று கழகத்தை ஒரு வலுவான நிலைக்கு இட்டுச் சென்றனர்.

இவ்வாறு கழகத்தின் வெற்றிப் பாதையில் பல கிண்ணங்களும், பரிசில்களும் வென்றெடுக்கப்பட்டன. 17 வருட காலம் தொடர்ச்சியாக தலைவராக இருந்து செயற்பட்ட E. கமால்தீன் அவர்கள் 2000ம் ஆண்டு பெப்ரவரி மாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமையாளர் பதவியேற்க, ஏ.எம். நிஹ்மத்துல்லாஹ் தலைவராக பதவியேற்றார். அவர் பதவியேற்று 7 மாதங்களில் அகால மரணமடைந்ததனால் புதிய தலைவராக ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்களும், செயலாளராக A.B. ஜஸீல் அவர்களும் கடமைப் பொறுப்பேற்றனர். பின்னர் 2003ம் ஆண்டு தொடக்கம் நியாஸ் எம். அப்பாஸ் தலைவராகவும், E. கமால்தீன் பொதுச் செயலாளராகவும், ஜே.எம். நபார் பொருளாளராகவும் கடமைப் பொறுப்பேற்று இன்று வரைக்கும் கழகச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"ஒற்றுமை ஒன்றே எமது பலம்" எனும் வாசக மகுடத்தைக் கொண்ட கழகம் இன்று வரை மிகவும் ஒற்றுமையுடன் செயற்பட்டு வருகின்றது. லீடர் தங்க கிண்ணம், அப்பாஸ் கிண்ணம், NIRA கிண்ணம் என்பவற்றை மிகவும் விமர்சை யாக நடாத்தியது.

கழகத்தின் 25வது வருட நிகழ்வை மிகவும் சிறப்பாக ஒலிம்பிக் விளை யாட்டு விழா மூலம் சிறப்பித்தது. இதற்கு பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் றஊப் ஹக்கீம் கலந்துகொண்டார்.

இக்கழகத்தின் சாதனைகள் பல உள்ளன. 30 வருட காலத்தைத் தாண்டிய இக்கழகம் கல்விக் கல்லூரி, பல்கலைக்கழகம், தொழிலநுட்பக் கல்லூரி ஆகிய வற்றிற்கு பல ஆசிரிய மாணவர்கள் சமர்பித்துள்ளது. அதே போன்று பல சிரமதான வேலைகள், பொது வேலைத் திட்டங்கள், வறிய மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் என்பனவற்றை வழங்கியுள்ளது.

பொது வேலைகளாக இரத்ததான முகாம், மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி கருத்தரங்குகள், ஹாபிழ் பட்டமளிப்பு விழா, முஅத்தின் கருத்தரங்கு, இப்தார் விடயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

300 இற்கும் மேற்பட்ட நிரந்தர உறுப்பினர்களைக் கொண்ட இக்கழகம் தனது சேவை நோக்காக தற்போது விரிவுபடுத்தி செயற்படுத்தி வருகின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் பல சிறப்பான விடயங்களை முன்னின்று நடைமுறைப்படுத்தவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை யூனிவர்ஸ் விளையாட்டுக் கழகம்

ஏ.எம்.எம். றஜி (ஆசிரியர்) - கௌரவ செயலாளர்

கல்முனைப் பிராந்தியத்தின் தலைசிறந்த கழகங்களில் தற்காலத்தில் மிகவும் சிறப்பாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது மருதமுனை யூனிவர்ஸ் விளையாட்டுக் கழகம். 1996-05-05ஆம் திகதி இக்கழகம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு கிறிக்கட் துறையில் பிரகாசித்துக் கொண்டு வந்தது. இப்பருவ காலத்தில் 1998ஆம் ஆண்டு விளையாட்டுத்துறை அமைச்சில் பதியப்பட்டு (பதிவிலக்கம் : 140265) ஒரு அங்கீகாரம் பெற்ற கழகமாக இக்கழகம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

கழகத்தின் யாப்பின்படி கழக நோக்கம் / குறிக்கோளாக :

01. பிரதேசத்து இளைஞர்களின் விளையாட்டு ஆற்றலை மேம்படுத்தி தேசிய சர்வதேசப் போட்டிகளில் வீரர்களை பங்குபற்ற வைத்தல்.
02. விளையாட்டின் மூலம் ஆரோக்கியமான சமூகமொன்றை கட்டியெழுப்புதல்.
03. பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய மாணவர், இளைஞர்களின் விளையாட்டுத் திறமையை இனங்காணுதலும் பொருளாதார ரீதியாக அவர்களுக்கு விளையாட்டு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தல்.

போன்ற இன்னும் பல கொள்கைகளை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. மேலும் கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பை கூறுவதென்றால் ஒவ்வொரு வருடமும் வருடாந்த பொதுக்கூட்டம் மே மாதத்தில் கூட்டப்பட்டு சுதந்திரமான நிர்வாகத் தெரிவு இடம்பெறுகிறது. பொதுச்சபை அங்கத்தவர்களுக்கு வாக்களிக்கும் ஜனநாயக உரிமை வழங்கப்படுகிறது. அந்த வகையில் கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கழகத்தின் பொதுச்சபை அங்கத்தவர்களால் மனமுவந்து தலைவராக தேசமான்ய லயன் கே. றிஸ்வி யஹ்ஸர் ஜே.பி. கணக்காளர் அவர்கள் தொடர்ச்சியாக எதுவிதப் போட்டியுமின்றி தெரிவு செய்யப்பட்டு வருகின்றார்கள். இது அவரது தனிப்பட்ட ஆளுமைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். இதே காலப்பகுதியிலிருந்து பொதுச் செயலாளராக ஏ.எம்.எம். ரஜி ஆசிரியர் தமது பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார். எமது பொருளாளராக எம்.எம். மக்கீன் மற்றும் முகாமையாளர் எஸ்.எம். அன்சார் அவர்களும் தவிசாளராக எம்.ஏ.எம். முபீத் L.L.B. சட்டத்தரணி அவர்களும் பயிற்சியாளராக ஏ.எம்.எம். ரஜாத் ஆகியோரும் தமது பணிகளை திறம்பட செய்து வருகின்றார்கள்.

கடந்த வருடம் காற்பந்தாட்ட துறைக்கு பிரவேசித்த எமது கழகம் பல சிறப்பான முன்னணிக் கழகங்களை வெற்றிகொண்டு உதைபந்தாட்டத் துறையிலும் வீறுநடை போட்டு வெற்றிப்பாதையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் உதைபந்தாட்டத் துறைக்கு அரும்பங்களித்த கௌரவ அல்-ஹாஜ். Z.A.H. ரஹ்மான் ஜே.பி. (MMC), S.M. நசார் (Topaz Pvt. Ltd.), எம்.எஸ்.எம். நதீர் (மைஹோப் குறூப்), கௌரவ எம்.எஸ். உமரலி ஜே.பி. (MMC), முன்னாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண சபை உறுப்பினர் துல்கர் நயீம் LL.B., கே. சறூக் (Ceylinco), M.F.H. ஹைக்கல் ஆசிரியர் (லண்டன்), P.H. பியசேன M.P. மற்றும் அவரின் இணைப் பதிகாரி எம்.ஐ.எம். றியாஸ் அதிபர் அவர்களையும் என்றும் பெருமையுடன் நினைவுகூர்கின்றோம்.

மேலும் அவ்வப்போது மேலான ஆலோசனைகளை வழங்கி வருவதுடன் கழக நடவடிக் கைகளை ஊடகமயப்படுத்தும் சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.எம்.எம்.ஏ. காதர் அவர்களுக்கும், மருதமுனை ஒன்லைன் நிறுவனத்திற்கும் கழகத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கழகத்தின் அண்மைக்கால வெற்றிப் படிகளாக பின்வரும் கிண்ணங்களை எமது கழகம் சுவீகரித்துக் கொண்டது.

1. ரியல் அட்மிரல் சரத் வீரசேகர வெற்றிக்கிண்ணம்
2. மேயர் தங்கக் கிண்ணம்
3. மர்ஹூம் எச்.எல். ஜமால்தீன் (SP) மெகா கிண்ணம்

எமது கழகம் பொதுச் சேவையிலும் என்றும் பின்னிற்பதில்லை. அந்த வகையில் சுனாமியால் பாதிப்புற்று மோசமான நிலையில் காணப்பட்ட எமது மருதமுனை மைய வாடியை நீதிபதி ரீ.எல். அப்துல் மனாப் அவர்களின் தலைமையில் எமது கழக அங்கத்தவர்கள் சுமார் 85 பேர் சேர்ந்து சுத்தம் செய்து அழகுற அமைத்தமை ஒரு வரலாற்று நிகழ்வாகும். மேலும் மாநகர சபையின் கௌரவ உறுப்பினர் எம்.எஸ். உமரலி ஜே.பி. அவர்களின் தலைமையில் மருதமுனை மசூர்மௌலானா விளையாட்டு மைதானத்தின் உட்புற வெளிப்புற சுத்தங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற போது எமது கழகம் வழங்கிய பங்களிப்பு மகத்தானது. அதுமட்டுமல்லாமல் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி, அல்-ஹம்றா கலவன் பாடசாலை ஆகியவற்றில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் தாகசாந்தி வழங்கும் தார்மீகப் பொறுப்பையும் எமது கழகம் பொறுப்பேற்று சிறப்பாக செய்து முடித்தது.

18ஆவது வருடத்தில் காலடியெடுத்து வைக்க இருக்கும் எமது கழகம் இதே போன்று இன்னும்பல விளையாட்டு, மற்றும் இதர அபிவிருத்தி செயற்பாடு களிலும் எதிர்காலத்தில் சிறப்பாக இயங்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பந்தாட்டக் கழகங்கள்

| ஏ.ஆர். அப்துல் சத்தார், ஜே.பி.

மருதமுனையில் மருதமுனை கரப்பந்தாட்டக் கழகம் ஒரு காலத்தில் திறமை காட்டி வந்தது. இவர்களில் பலர் இடமாற்றங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்கள் காரணமாக தொடர்ந்தும் கரப்பந்தாட்டத்தில் ஈடுபடும் வாய்ப்பினை இழந்தனர். கழகமும் செயற்பட முடியாமல் போனது. இதில் அங்கம் வகித்த பலர் ஒன்றிணைந்து கஸ்ஸாலி விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் ஒன்றை உருவாக்கி கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

சமகாலத்தில் மத்திய கரப்பந்தாட்டக் கழகம், மினன் விளையாட்டுக் கழகம், அக்பர் விளையாட்டுக் கழகம் எனப் பல கழகங்கள் கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். எல்லோரும் OVER GAME முறையிலேயே விளையாடி வந்ததனால் இப்பிரதேசத்தில் மட்டுமே விளையாடும் நிர்ப்பந்தத்திற்குள்ளாயினர். நாட்டின் மற்றெல்லாப் பாகங்களிலும் SET-UP GAME முறையிலேயே கரப் பந்தாட்டம் நடைபெறுவதால் இத்துறை எமது பிரதேசத்தில் முன்னேற்றம் காண முடியாத துறையாகத் திகழ்வதோடு காலக்கிரமத்தில் வழக்கொழிந்து போகும் ஒரு நிலைமையே காணப்படுகின்றது. ஒரு சில இடங்களில் பல இளைஞர்கள் சேர்ந்து கரப்பந்தாட்டம் ஆடி வருகிறார்களாயினும் Set-up முறையில் கரப்பந்தாட்டப் பயிற்சிகள் வழங்கப்படுமானால் எம்மவர்களும் தேசிய அணியில் இடம்பெற்று நமக்கும் நமது மண்ணும் பெருமை சேர்ப்பார்கள் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கம்

அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கம் 1980களில் கல்முனை பாத்திமாக் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்பகால உத்தியோகத்தர்களாக காலஞ்சென்ற பி. தர்மராஜா, ரொய்ஸ்றாகல் களுடன் செயலாளராக நிந்தவூரைச் சேர்ந்த இக்பால் அவர்களும், பொருளா ளராக எம்.எல்.எம். ஜமால்தீன் ஜே.பி. அவர்களும், உப தலைவராக மர்ஹூம் எஸ்.எம்.ஏ. மத்தீன் அதிபர், உப செயலாளராக ஏ.ஆர்.ஏ. சத்தார் ஆகியோர் களும் தெரிவுசெய்யப்பட்டனர். சில வருடங்கள் இது சிறப்பாக இயங்கி வந்தாலும் இச்சங்கத்தில் அங்கம் வகித்து வந்த கழகங்களான மருதமுனை ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழகம், கல்முனை சன்டோஸ் வி.க., கல்முனை கிறீன்லைட் வி.கழகங்கள் போன்றன செயலிழந்து போன தன் காரணத்தாலும் புதிய கழகங்களின் வரவாலும் சங்கம் புதியவர்களின் கைமாறியது.

எமது பிரதேசத்தில் 84, 85களின் பின்னர் கல்முனையில் பிறிலியன்ட் வி.க., சனிமவுண்ட், சாய்ந்தமருது பிளையிங்கோஸ் போன்றனவும் மருதமுனையில் கோல்ட்மைன்ட், ஒலிம்பிக், ஈஸ்டன்யூத் போன்ற கழகங்களும் முன்னணிக் கழகங்களாக வளர்ந்து வந்தன. இதனால் அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தைப் பொறுப்பெடுத்து நடாத்த வேண்டிய பொறுப்பு எம்மவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் சங்கத்தின் தலைவராக ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் மர்ஹூம் எச்.எல். ஜமால்தீன் ஜே.பி. அவர்களும், செயலாளர் மரிகோல்ட் ஏ.எம். இப்றாகீம் அவர்களுமே அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவராகவும், செயலாளராகவும் தெரிவுசெய்யப் பட்டு சங்கத்தினை சிறப்பாக வழிநடாத்தி வந்தனர். தலைவர் எச்.எல். ஜமால்டீன் அவர்களின் அகால மரணத்தின் பின்னரும் எமது மகன் சட்டத்தரணி ஏ.எம். றகீப் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு வழிநடாத்தி வந்தார். அவரைத் தொடர்ந்து கோல்ட்மைன்ட் வி.கழகம் சார்ந்த அல்-ஹாஜ். இஸட்.ஏ.எச். றஹ்மான் ஜே.பி. அவர்களும், சங்கத்தின் தலைவராக விருந்து சிறப்பாக வழி நடாத்தினார்.

இவரது பதவிக்காலம் முடிந்தபின் மீண்டும் சங்கத்தின் தலைவராக கல்முனை மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எம். றகீப் LLB, JPUM அவர்கள் இன்றுவரை வழிநடாத்திச் செல்கிறார். குறிப்பாக இச்சங்கத்தின் செயலாளராக மிக நீண்டகாலம் பதவி வகித்த ஏ.எம். இப்றாகீம் அவர்களது பங்களிப்பு மிகவும் காத்திரமானது.

சுனாமியின் போது இச்சங்கத்தின் தலைவராகவிருந்த மர்ஹூம் ஜமால்தீன் அவர்களின் காலத்தில் எமது மகூர்மவ்லானா விளையாட்டு மைதானம் பல கட்டிடங்கள் மற்றும் பல அபிவிருத்திகளைக் கண்டு தற்போது ரம்மியமாகக் காட்சியளிக்கிறது.

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிறிக்கட் கழகங்கள்

ஏ.ஆர். அப்துல் சத்தார், ஜே.பி.



மருதமுனையில் கிரிக்கட் ஆட்டங்கள் 1970களிலிருந்தே ஆடப்பட்டு வருகிறது. தனிப்பட்ட பலர் சேர்ந்து மென்பந்து கிரிக்கட் ஆட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். ஆனாலும் கழக அமைப்பில் 1985 களின் பின்னரான காலங் களிலிருந்து இதில் அதிக ஈடுபாடுகாட்டத் தொடங்கினர். பல கழகங்கள் உருவாக்கப்பட்டன. பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பல சுற்றுப் போட்டி களையும் நடாத்தி வந்ததனால் இரசிகர்களும் அதிகமாயினர். நாளடைவில் பல கழகங்கள் உருவாகி பல போட்டிகள், சவால் கிண்ணங்கள் என கிரிக்கட்துறை களைகட்டத் துவங்கி இன்று பிரபல்யம் வாய்ந்த ஒரு விளையாட்டாக கிறிக்கட் மாறியிருக்கிறது. ஆனாலும் இதுவரை கடின பந்தாட்டமாக இது மாற்றப் பெறவில்லை என்ற பாரிய குறைபாடு உள்ளதோடு தேசிய ரீதியில் தேசிய அணியில் இடம்பிடிக்குமளவிற்கு இத்துறை வளரவில்லை என்பது கவலை தருகிறது. விரைவில் தேசிய ரீதியில் விளையாடுவதற்குத் தகுதியானவர்களை உருவாக்க வேண்டியது இத்துறை சார்ந்தவர்களின் கடமையாகும்.

மருதமுனையில் மென்பந்துக் கிரிக்கட் கழகங்கள் இப்போது அதிகரித்துக் காணப்படுவதனால் அதற்கான ஒரு கட்டுப்பாட்டுச் சபையும் நிறுவப் பட்டுள்ளது. இது கடந்த சுமார் பத்தாண்டு காலமாக இயங்கி வருகிறது. தற்போது இதன் தலைவராக கல்முனை மாநகர சபை உறுப்பினர் சகோதரர் ஏ.ஆர்.எம். அமீர் ஜே.பி அவர்கள் கழகங்கள் மூலம் வாக்களிப்பில் வெற்றி பெற்று வழிநடாத்தி வருகிறார். தேர்தல்கள் வருடாவருடம் நடைபெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மக்களின் வாழ்வாதாரமும் இயற்கை அனர்த்தங்களும்

அ.றா.அஹ்மட் நபாயிஸ்BA (JP)
அனர்த்த நிவாரண சேவைகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் - கல்முனை.

வாழ்நாள் சாதனையாளர் கௌரவிப்பும் மாண்புறும் மருதமுனை என்னும் இம் மலருக்கு "மருதமுனை மக்களின் வாழ்வாதாரமும், இயற்கை அனர்த்தங்களும்" என்ற தலைப்புக்கு தகவல்களை வழங்குவதுடன் இவ்ஆவணம் பிற்கால சந்ததி யினருக்கு பேருதவியாக அமையுமெனவும் நம்பி வரைகின்றேன்.

உலகம் தோன்றிய காலம் முதல் இன்று வரையும் எத்தனையோ இயற்கை, செயற்கை அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளன. மனிதப்பெருக்கமும், தொழிநுட்ப வளர்ச்சியும், மனித நடவடிக்கையும், அரசுகளின் அபிவிருத்தி முயற்சிகளும் பல செயற்கை அனர்த்தங்களுக்கு வழிகோலியுள்ளன.

இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவு. இது தனித் தீவாகவும், கடல் செல்வாக்கு மிக்க பிராந்தியத்தில் அமைந்துள்ளதாலும் இங்கு கடல் தொடர்பான அனர்த்தங்கள் பல நிகழ்ந்துள்ளன. சூறாவளி, பெருவெள்ளம், பலத்த காற்று, பாரிய மழை, சுனாமி என்பன அவற்றுள் அடங்கும். இலங்கையில் சில சிறு நிலநடுக்கங்களும், மண்சரிவுகளும், காட்டுத்தீ, மின்னல் தாக்கம், வரட்சி என்பனவும் அனர்த்தங்களாக இணங்காணப்பட்டுள்ளன.

இலங்கைத்தீவின் கிழக்கு கரையோரத்தில் அம்பாரை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலகப்பிரிவில் கல்முனை மட்டக்களப்பு வீதியில் 390வது மைல் கல்லிலும் கல்முனைக்கு வடக்கே 2.3km தூரத்திலும் அமைந்துள்ள மருதமொழி பேசுகின்ற மக்கள் நிறைந்த மருதம் மணக்கின்ற குட்டிக்கிராமம்தான் மருதமுனை. இது வடக்கே பெரியநீலாவணையும், தெற்கே பாண்டிருப்பும் கிழக்கே நெய் தலும், மேற்கே மருதநிலமும் ஆடையாக அணிந்த அழகிய கிராமம். இதன் மொத்த நிலப்பரப்பு 04 சதுர கி.மீ. ஆகும்.

இக்கிராமத்தில் ஆரம்பத்தில் குடியேறியோர் ஜீவனோபாயமாக நெசவுத் தொழில், கடற்றொழில், நன்னீர் மீன்பிடி, விவசாயம், பாயிழைத்தல், பனையோலை கொண்டு பெட்டியிழைத்தல், பீடிசுற்றுதல், கூலிவேலை என்பவற்றை செய்து வந்துள்ளனர். சிறப்பு தேர்ச்சிபெற்ற மீனவர்கள் கடற்றொழிலில் பெரும்முயற் சியுடன் பாரிய மீன் அறுவடையை பெற்றுக்கொள்வர். கடற்றொழில் சிறக்காத காலங்களில் படுவான்கரைப் பிரதேசங்களில் நன்னீர் மீன்பிடியும், மீன் உலர்த்து தலும் இவர்களுக்கு கைகொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலமாக மருதமுனைக் கிராம மக்களில் அதிகமானோர் தெரிவு செய்த கைத்தொழில்களாக நெசவு, குழித்தறி, கைத்தறி என்பவற்றைக் குறிப்பிடலாம். இதனூடாக தரமான ஆடைகளை உற்பத்தி செய்து மாற்றுக் கிராமங்களுக்கு விற்று பெரும் வர்த்தக களஞ்சியமாக மருதமுனையை மாற்றினர். இன்றும் நெசவுத் தொழில் உயர் தொழிநுட்பத்துடன் வளர்ச்சிபெற்று வருவது சிறப்பம்சமாகும்.

எமது மேற்குப் பிரதேசம் கழனிகளாகக் காணப்பட்ட போதும் உவர்நீர் தாக்கம் காரணமாக நெற்செய்கை போதிய வருமானத்தை பெறத்தவறியது. எனினும் எமது விவசாயிகள் எல்லை கடந்து 5ம் கொலனி, இறாணமடு, கல்வெட்டு, நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களில் விவசாய முயற்சியை மேற்கொண்டனர். பொலனறுவை பிரதேச தம்மான்கடவையில் புகையிலைச் செய்கையில் பெரும் ஆர்வம்காட்டி பொருளாதார ரீதியாக செல்வம் குவித்தனர். அது போன்று இக்கிராம பெண்கள் கற்பன் கொண்டு அழகிய உறுதியான பாயிழைத்தலில் பெரும் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். மருதமுனைப்பாய் இலங்கையில் எல்லாப் பிரதேசங்களிலும் சிறப்பாக பேசப்பட்டது. ஆனால் இன்று இத்தொழில் நலிவடைந்து மங்கி மறைந்து வருவது வேதனைக்குரியது.

இயற்கையின் பஞ்சபூதங்களின் மிதமிஞ்சிய இயக்கமே இயற்கை அனர்த்தங்களாக இனங்காணப்படுகின்றன. சமூக செயற்பாடுகளை பாதிக்கின்றதன் விளைவாக மனித மற்றும் பொருட்களுக்கும், சூழல் தொடர்பான வளங்களுக்கும் நேரடியான தாக்கம் செலுத்தக்கூடிய பாரிய விளைவே அனர்த்தமாகும். இவை இயற்கை, செயற்கை, மனித செயற்பாடுகள் என தரம் பிரிக்கப்படுகின்றன. இயற்கை அனர்த்தம் என்னும் போது இயற்கையின் செயற்பாட்டடினால் உயிராபத்து, பொருள் சேதம், பௌதீக வளத்தில் மாற்றங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இயற்கை அனர்த்தங்களாக சமூகவியலாளர்கள் நிலநடுக்கம், வெள்ளம், வரட்சி, மண்சரிவு, சூறாவளி, பூகம்பம், காட்டுத்தீ, எரிமலை வெடித்தல், சுனாமி, மின்னல் தாக்கம் என பலவற்றை இனங்கண்டுள்ளனர். இருந்தாலும் மனித நடவடிக்கைகளாலும் காட்டுத்தீ, மண்சரிவு, வரட்சி, வெள்ளம், சுனாமி என்பன ஏற்பட வாய்ப்புள்ளது.

மருதமுனைப் பிரதேசம் கிழக்குக் கரையோரம் கடலையண்டிய பகுதியில் அமைந்துள்ளதனால் கடலில் ஏற்படும் இயற்கை மாற்றம் எமதூரை பெரியளவில் பாதித்துள்ளது. வரலாற்றில் பலத்த காற்று, சூறாவளி, பருவமழை வீழ்ச்சி, பெரு வெள்ளம், சுனாமி என்பன இவற்றுள் அடங்கும். இக்கிராமம் பெருவெள்ளம், சூறாவளி, சுனாமி போன்ற அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து பாரிய அழிவுகளை பதியவைத்துள்ளது.

மருதமுனை கிராமத்தை தாக்கிய இயற்கை அனர்த்தங்களாக பின்வருவன இனங்காணப்பட்டுள்ளது.

1. 1845ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் பெரும் சூறாவளி ஒன்று வீசியது. இதன் சேத விபரங்கள் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 1907.03.09ஆம் திகதி இப்பிரதேசத்தில் இன்னுமொரு சூறாவளி வீசியது. இதனால் களிமண் குடிசைகளும், ஓலை வீடுகளும், உயிர்களும் காவு கொள்ளப்பட்டன.
3. 1922 டிசம்பரில் சிறுபுயலுடன் பெருவெள்ளம் ஏற்பட்டது. இதனால் களிமண் குடிசைகளும், ஓலை வீடுகளும் கரைந்து அழிந்தன.
4. 1957.12.25ஆம் திகதி இப்பிரதேசத்தில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. 5 அடி வெள்ளம் காரணமாக மண்சுவர் வீடுகளும், குடிசைகளும் முற்றாக அழிந்து நாசமாகின. கால்நடைகளுக்கு பெரும் அழிவு ஏற்பட்டது. மனித உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாயினும் அது தொடர்பான விதமான பதிவுகள் கிடைக்கவில்லை.
5. 1978.11.23ஆம் திகதி வியாழக்கிழமை மாலை இப்பிரதேசத்தில் ஏற்பட்ட பலத்தமழையும், சூறாவளியும் வரலாறு காணாத பெரும் இழப்புக்களை ஏற்படுத்தியது. குடிசை வீடுகள், வீதிகள், தோட்டங்கள், பாடசாலைகள், அரச நிறுவனங்கள் தரைமட்டமாயின. மரங்களும், மின்சாரக் கம்பங்களும் வீதிகளை தடைசெய்ததால் மீட்புப் பணியை செய்ய வந்த சமூக இயக்கங்கள் பெரும் பின்னடைவை சந்தித்தன.

இந்த சூறாவளியின்போது மருதமுனையில் ஆண்களும், பெண்களுமாய் மொத்தமாக 17 பேர் மரணித்ததாக பதிவுகள் கூறுகின்றன. இவ்அனர்த்தத்தை கண்டு எல்லோருமே கண்கலங்குகின்ற வேளையில் அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை போன்ற பகுதிகளிலிருந்து வந்த சமூக அமைப்புக்கள் மீட்புப் பணிகளை செய்ய முன்வந்தனர். தனிப்பட்ட முறையில் பலர் உணவுகளையும், உடைகள், மருந்துகள், பாத்திரங்கள் போன்ற வாழ்வாதார உதவிகளையும் செய்ய முற்பட்டனர். இது தவிர கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி போன்ற பிரதேச முஸ்லிம் தனவந்தர்கள் லொறிகளில் உலர் உணவுப் பொதிகளை வாரி வாரி வழங்கி மக்களின் துன்பங்களில் பெரும்பங்காற்றினர்.

அல்-மனார் மகா வித்தியாலயம், ஷம்சுல்-இல்ம் வித்தியாலயம், அல்-ஹம்றா வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் முற்றாக தரைமட்டமாயின. ஷம்சுல்-இல்ம் வித்தியாலயம் மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. இது சூறாவளி தந்த ஒரு பரிசாகும்.

சூறாவளிக்கு பின்னரான காலப்பகுதியில் பிரபல்யமான அரச சார்பற்ற நிறுவனங்கள் எதுவுமே மருதமுனையில் களமிறங்கவில்லை. என்றாலும் அப்போதைய கல்முனைப் பாராளுமன்ற உறுப்பினர் எ.ஆர்.மன்சூர் அவர்களின் அனுசரணையுடன் கரைவாகு வடக்கு கிராம சபையின் விஷேட ஆணையாளராக இருந்த ஜனாப் ஏ.ஆர்.ஏ.அஸீஸ் அவர்கள் பல செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்த முன்வந்தார். அதன் மூலம் இவ் எல்லைக்குள் வீதி அபிவிருத்தி, தொற்று நோய் பரவாமல் தடுப்பு மருந்து வழங்கல், உலர் உணவுப் பொருட்களை பெற்று வழங்குதல், தற்காலிக கூடாரங்கள் பெறமுயற்சித்தல் என்பதுடன் மஸூர் மௌலான விளையாட்டு மைதானம் பெக்கே இயந்திரம் கொண்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் பல நடந்தேறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறாவளிக்கு பின்னர் நூலக அபிவிருத்தி, அக்பர் கிராம 100 வீட்டுத்திட்டம், மின்சார விஸ்தரிப்பு, தொலைத்தொடர்பு விஸ்தரிப்பு, போன்றவைகளையும் சூறாவளியினால் ஏற்பட்ட பள்ளம் படுகுழிகள் நிறைந்த கடற்கரை வெளியை இயந்தர உதவி கொண்டு சமப்படுத்தி மக்கள் நடமாடும் நிலைக்கு கொண்டு வருதல் என்பன சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது என்று கூறமுடியும்.

2004.12.26ம் திகதி ஞாயிற்றுக் கிழமை வருடக்கடைசி வழமையான நாட்களைப் போல் பொழுது விடிந்து மக்கள் தங்களது வேலைகளில் கரிசனை கொண்டு ஈடுபடலாயினர். பாடசாலை விடுமுறை மாணவர்கள் அகதியாப் பாடசாலையில் அமைதியாய் கற்கின்ற நேரம். சிறுதொழில் செய்வோர், விவசாய பாட்டாளிகள் வேலை தேடி புறப்பட்ட நேரம். மீனவ நண்பர்கள் படகேறி மீன் வளைந்து கரைசேர்க்கும் தருணம்.

அமைதியாய் ஆர்ப்பரிக்காமல் கடல் மட்டம் உயர கடலலைகள் பேரலையாக மாற தரையை, ஊரை தவழ்ந்து சுற்றிவளைத்து சூழ்ந்துகொண்டது. நம்ப முடியவில்லை. கடல்நீர் ஊருக்குள் வருமா? இருந்தாலும் தர்க்கிக்க நேரம் இருக்கவில்லை. சினம்கொண்டு சீறிப்பாயும் சிறுத்தை, சிங்கம்போல் கடலின் பெரும் நீரப்பரப்பு கழிவு, கந்தலுடன் கர்வமாக கரையை கடந்து காட்டாறாய் ஊருக்குள் ஊடுருவி உயிர்கள் பல காவி, சொத்துக்கள் பலதை பறித்து சிவதாண்டவம் ஆடிநின்றது.

வங்கக் கடலின் கரையோர
வளமான பெரு நிலமே மருதமுனை
கடலின் சிற்றலைகள் கச்சிதமாய்
மெல்ல கரையை முத்தமிட
எம்சின்னஞ் சிறுசுகள் கூத்தாடி
சிரித்து மகிழ்தாடி விளையாடி
கொஞ்சி குலாவி கொண்டாடும் நேரமது.

ஆர்ப்பரித்த பெரிய அலை
ஆவென்று கரையை
ஆழ விழுங்கி ஆணமாய்
ஆர்ப்பாட்டம் செய்ததுவே.

வீடுகள் மனைகள்
வீதிகள் மரங்கள்
பள்ளிகள்
பள்ளிக்கூடங்கள்
நிலையான கட்டிடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தர தொழில் நிலையங்கள்
மனிதர் கால்நடைகள்
மங்கல் நொடிப் பொழுதில்
மண்ணாகிப் போனதுவே
மரணங்கள் நிகழ்ததுவே
சொந்தங்கள் சுமையாகி
சொல்லொண்ணா துயரங்கள்

இன்றும் எமக்குள்
இருண்ட யுகமாகி
கையைப் பிசைந்து வாயைப் பிளந்து
கைதி நிலையில் உக்கி உறங்கி
காரணமின்றி கரைகின்றோம்
காக்க இறைவன் துணைநிற்பான்.

கடலலைகள் பேரலையாக மாறி தரையை நோக்கி சங்கமிக்கும் அபூர்வ நிகழ்வை நாங்களெல்லாம் கேள்விப்படவுமில்லை, பார்க்கவுமில்லை. இதன் பெயரையும், பேராபத்தையும் பிறகுதான் ஊடகங்களின் வாயிலாக அறிய முடிந்தது. சுனாமி என்ற வாசகம் துறைமுக அலையென்று.

இலங்கையில் இதற்கு முன்னர் ஆங்கிலயர் ஆட்சிக் காலத்தில் 1883ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி ஏற்பட்ட பாரிய சுனாமி அனர்த்தம் வெறும் நிலத்தையே ஆக்கிரமித்தது. அதன் பிற்பாடு 2வது முறையாக 2004ஆம் ஆண்டு இவ்வாறு ஒரு நிகழ்வு உள்ளத்தை உறையவைத்து சோகத்தை விட்டுச்சென்றது இச்சுனாமி வடுக்கள்.

2004ஆம் ஆண்டு இந்தோனேசியா சுமாத்திரா தீவின் கடற்பரப்பின் ஆழ்பரப்பில் ஏற்பட்ட பூகம்பம் சுனாமியாய் மாறி இலங்கை உட்பட இந்து சமுத்திர கரையோர நாடுகளை சுற்றிவளைத்து சுருண்டு தாக்கியது. இலங்கையில் பல கரையோர மாவட்டங்கள் பாதிக்கப்பட்ட போதிலும் குறிப்பாக அம்பாரை மாவட்ட கரையோரத்திலுள்ள கல்முனை பிரதேச மருதமுனைக் கிராமம் அதிகமாக உயிர்களையும், உடமைகளையும் பொருளாதார, பௌதிக வளங் களையும் இழந்தது. கிழக்கில் எழில்கொஞ்சும் எமது கடற்கரை பிரதேசம் ஜனாஸாக் குவியல்களின் கோபுரமாகியது. கடல்கழித்த கந்தல்கள், குப்பைகள் நிரம்பி வழிந்தது. ஊரின் உட்புகுந்த கடல்நீர் மீள கடல்நோக்கி திரும்புகையில் ஏற்பட்ட தோணாக்கள் இன்றும் தடம்பதித்து காட்சியளிக்கின்றன.

சுனாமி பேரழிவின்போது மருதமுனையில் 4739 குடும்பங்களில் 17393 பேர் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இவர்களில் 50.8 வீதமானேர் ஆண்களும், 49.2 வீதமானோர் பெண்களுமாவர். இவர்களில் சுனாமி அனர்த்தத்தின் போது 922 பேர் உயிரிழந்தனர். மொத்த உயிரிழப்பில் 68.9 வீதமானோர் பெண்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தமாக 2996 குடும்பங்கள் பாதிக்கப்பட்டதுடன் 11086 உறுப்பினர்கள் தங்களது வாழ்விடத்தை விட்டு ஆண்களில் 5660 பேரும், பெண்களில் 5426 பேரும் இடம் பெயர்ந்தார்கள். இக்குடும்பங்களில் 936 குடும்பங்கள் 200 மீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்து வந்தவர்களாகும். 1359 வீடுகள் முழுமையாகவும், 1391 பகுதியாகவும் மொத்தமாக 2750 வீடுகளும் பாதிக்கப் பட்டன.

இவர்கள் தங்களது உயிரை காப்பாற்றிக்கொண்டு தங்களது உறவினர்கள் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும், தற்காலிக முகாம்களிலும், தகரக் கொட்ட கைகளிலும், பாடசாலை வளாகங்களிலும், நலன்புரி நிலையங்களிலும் வேறு அயற்கிராமங்களுக்கும் இடம்பெயர்ந்தும் வாழத்தலைப்பட்டனர். (நற்பிட்டி முனை, கொலனி, சம்மாந்துறை, மத்திய முகாம், அம்பாரை) இவர்களுக்கு சமைத்த உணவுகள், உலர் உணவுப்பொருட்கள் அரசின் மூலமும், தனியார் நிறுவனங்கள் மூலமும் வழங்கப்பட்டன.

அத்துடன் ஊரின் தொண்டு அமைப்புக்கள், இளைஞர் குழுக்கள், பள்ளிவாசல் உறுப்பினர்கள், உலமாசபை உறுப்பினர்கள் பெரிதும் உதவினர். மரணமான ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்காக நற்பிட்டிமுனை, கொலனி, சம்மாந்துறை மக்கள் பெரும்மனங்கொண்டு இடமும் தந்து உதவினார்கள். ஊரில் சிலரின் ஜனாஸாக்கள் மட்டுமே நல்லடக்கம் செய்யப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதிக்கப்படாத வெளியூர் சகோதர்கள் உலர் உணவுப் பொருட்கள், உடைகள் என பலபொருட்களை கொடுத்து உதவினார்கள். மின்சாரம் இன்றி இரவு வேளையில் இன்னல்பட்ட மக்களுக்கு அரிக்கன் லாம்புகள் கைகொடுத்தது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் உட்பிரவேசம் சுனாமி அகதிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். போட்டி போட்டுக்கொண்டு அவர்களினால் வழங்கப் பட்ட உதவிகள், ஒத்தாசைகள் எமது மக்களுக்கு பெரிதும் உதவியாய் அமைந்தது. இதற்கு தேசிய, சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தங்களை முற்றாக அர்ப்பணித் தார்கள். மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் (ஜே.வி.பி.), ஜமாஅதே இஸ்லாமிய தொண்டர்கள் கிராமத்தை சுத்தம் செய்வதிலும் வீதி களிலும், வீடுகளிலும் உள்ள கழிவுகளை அகற்றுவதிலும் முனைப்பாக செயற் பட்டார்கள்.

மக்களின் உடல்,உள வடுக்களை ஆற்றுவதுடன் வாழ்வாதார உதவிகளையும், சுயதொழில் உதவிகளையும் செய்தனர். அத்துடன் வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகள், கழிவகற்றல் தொகுதிகளையும் அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்து கொடுத்தார்கள். இதன் மூலம் மருதமுனையில் நான்கு வீட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (பிரான்ஸ் சிட்டி, இஸ்லாமிக் ரீலிப் மாடி வீட்டுத்திட்டம், 65 மீற்றர் வீட்டுத்திட்டம், மஸ்ஜிதுல் இஸ்லாம்புரம்) அத்துடன் பாதிக்கப்பட்ட, பயந்த மாணவர்களுக்கு உளவள பயிற்சியையும் வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்த வாழ்வாதார உதவிகளின் மத்திய நிலையமாக கமு/கமு/ அல்-மனார் மத்திய கல்லூரி விளங்கியது. ஊரின் கல்வி மான்கள், சமூக ஆர்வலர்கள் குழுவாக அமைந்து தருவிக்கப்பட்ட பொருட்களை நீதமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளித்தனர்.

சுனாமி அனர்த்தத்தின் போது கல்முனை பிரதேச செயலாளராக இருந்த ஏ.எச்.எம். அன்ஸார் அவர்கள் செய்த சேவைகள் அளப்பெரியன. அரச அதிபருடன் தொடர்பு கொண்டு சுனாமி அகதிளுக்கு தேவையான உலர் உணவுப்பொதிகளையும், சமைத்த உணவுகளையும் தற்காலிக கூடாரங்களையும் தருவித்து மக்களை ஆசுவாசப்படுத்தினார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு இலட்சம், இரண்டறை இலட்சம் ரூபாக்களை வழங்கி பாதிக்கப்பட்ட வீடுகளை புனர் நிர்மாணம் செய்யவும், புதிய வீடுகளை அமைத்துக்கொள்ளவும் வழிசெய்தார். சுனாமி அனர்த்தத்தினால் 2005 மே 13ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத் தினால் 2005ஆம் ஆண்டின் 13வது இலக்கச் சட்டம் அனர்த்த முகாமைத்துவச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் முதன்முதலாக அனர்த்த எச்சரிக்கை கோபுரம் மக்களை காப்பாற்றும் நோக்கோடு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் விழிகாட்டலின் கீழ் மருதமுனை அக்பர் கிராமத்தில் அமைக்கப்பட்டது. இதனூடாக எவ்வளவு மோசமாக மருதமுனைக் கிராமம் இவ் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

1. 1967ம் ஆண்டு வெள்ளம் முற்றாக மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்தது.
2. 2011ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம 1957ம் ஆண்டு வெள்ளத்தைவிட பாரிய வெள்ளமாக உருவெடுத்து அதிகமானவர்களிக் வீட்டுக்குள் புகுந்து முற்றாக மக்களிகன் இயல்பு வாழ்க்கையை பாதித்தது. ஆனால் குறிப்பிடத்தக்க உயிர்பாதிப்புக்கள் ஏற்படவில்லை.
3. 2013ம் ஆண்டும் பெரிய வெள்ளம் ஒன்று ஏற்பட்டது. பாதிப்புக்கள் அதிக மில்லை.

உசாத்துணை :

- எழுவான் சஞ்சிகை - ஷம்ஸ் மத்திய கல்லூரி வெளியீடு
- மருதமுனையின் சுனாமி அனர்த்தம் - ESMO வெளியீடு
- மருதமுனையின் வரலாறு - புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்
- எனது கிராமத்தை தேடுகிறேன் - அதிபர் திலகம் மருதமுனை மஜீத்
- மருதமுனையின் வரலாறு பாகம் - 1, எம்.ரி.எம். நௌபல் - பிரதேச செயலாளர்
- இடர் முகாமைத்துவ நிலையம் சனாதிபதி செயலகம், துண்டு பிரசுரம் இல: 1 - செத்தம்பர் 2005
- விஜய் பத்திரிகை - 23.03.2006
- தகவல் - அ.ற. அப்துல் றாசீக் - ஓய்வு பெற்ற அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் றாசிக் அகமட் நபாயிஸ், ஜே.பி.

அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்

ஓய்வுபெற்ற அதிபர் ஏ.ஆர்.ஏ. றாசிக் அவர்களின் மூத்த புதல்வரான அகமட் நபாயிஸ் 26-05-1982ல் மருதமுனையில் பிறந்தவர். "மருத நபாயிஸ்" என்ற புனைப்பெயர் கொண்டும் அழைக்கப்படுகிறார். ஆரம்பக் கல்வி முதல் உயர் தரம் வரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் பயின்ற இவர் கொழும்பு இலங்கை சமூக சேவைக் கல்லூரியில் தனது உயர்கல்வியினை மேற்கொண்டவர். கலைப்பட்டதாரியான இவர் 07-06-2012ல் கல்முனைப் பிரதேச செயலகத்தில் அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தினைப் பெற்றுக் கொண்டார்.

யூரோ நாணயம் பற்றிய தொகுப்பு நூல் ஒன்றினை இவர் 2001ல் வெளியிட்டதோடு 2010ல் பொது அறிவு நூல் இரண்டினையும் வெளியிட்டார். ஆறுக்கும் அதிகமான டிப்ளோமா சான்றிதழ்களைப் பெற்றுள்ள இவர் M.A. கற்கை நெறியினையும் மேற்கொண்டு வருகிறார். 2004 முதல் 2014 வரையான காலப் பகுதியில் பதினொரு விருதுகள் கௌரவங்கள் எனப் பெற்றுள்ளார். அகில இலங்கை சமாதான நீதிபதியான இவர் சாமஶ்ரீ, தேசகீர்த்தி, இரத்தின தீபம் போன்ற கௌரவங்களையும் பெற்றுள்ளார்.

அமீன் முனாஜிறா பானு என்ற பெண்ணைக் கரம் பற்றிய இவர் ஊடகத் துறையில் அதிக ஈடுபாடுடையவராகவும் சமூகசேவை இயக்கங்களுடன் இணைந்தும் செயற்படுபவருமாவார்.

"மருத நியூஸ்" என்ற குறுந்தகவல் சேவையினை நடாத்தி சர்வதேச, பிரதேச, உள்ளூர்ச் செய்திகளை உடனுக்குடன் மக்கள் அறியக்கூடிய ஒரு வாய்ப்பினையும் ஏற்படுத்தியுள்ளார். இதன் மூலம் பல பொது அறிவுத்தகவல்களையும் மக்களுக்காக வழங்கி வருகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமியின் பின்னரான அபிவிருத்திப் பணிகள் தடைகளையும் தாண்டி...

ஏ.எல்.எம். முனாஸ், ஜே.பி.

2004-12-26ஆம் திகதி இலங்கையின் கரையோரங்களைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்திய சுனாமியினால் அம்பாரை மாவட்டத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட கிராமம் எமது மருதமுனைக் கிராமமே. சுமார் 936 உயிர்களை காவுகொண்ட இச்சுனாமியினால் 1359 வீடுகள் முழுமையாகவும், 1391 வீடுகள் பகுதியளவும் மொத்தமாக 2750 வீடுகளும் பல பொது ஸ்தாபனங்களும் அழிவுற்றன இவற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை வைத்தியசாலை, பெரிய நீலாவணை அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல் மருதமுனை மஸ்ஜிதுல் ஹிதாயா பள்ளிவாசல் மற்றும் பெரியநீலாவணை மஸ்ஜிதுல் தக்வா ஆகியன முற்றாகச் சேதமடைந்தன.

ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பௌதிக வளங்கள் மற்றும் ஆவணங்கள் யாவும் அழிவுற்று அதன் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்து கேள்விக்குறி யாகிய நிலையில் அதன் பெற்றோர்களும், அபிமானிகளும், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும் துரிதமாகச் செயற்பட்டனர். பல கலந்துரை யாடல்களுக்குப்பின் கல்லூரியை தற்காலிகமாக ஒரு இடத்தில் அமைத்து இயங்கச் செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க கட்டிட நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசலின் மேல் மாடியிலும், பள்ளிவாசலைச் சூழவுள்ள பகுதிகளில் தற்காலிக கொட்டில்களை அமைத்தும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்லாது அகில இலங்கையிலும் சுனாமியால் அழிவுற்ற பாடசாலைகளில் மிக விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஷம்ஸ் மத்திய கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது. இது கல்வித்திணைக்கள அதிகாரி களினால் சிலாகித்துப் பேசப்பட்டது.

இதனிடையில் அரசு கடலோரத்திலிருந்து 200 மீட்டர் தூரத்திற்குள் எவ்வித கட்டுமானங் களையும் ஏற்படுத்தக் கூடாதென அந்நிலப்பரப்பை Buffer Zoneஆகப் பிரகடனப் படுத்தியமையால் சேதமடைந்த பொது ஸ்தாபனங்கள், வீடுகள் ஆகியவற்றை மீள நிர்மாணிப்பதற்கு வேறு அமைவிடத்தைப் பெறவேண்டிய அவசியமேற்பட்டது. நமது கிராமத்தில் மாற்றீடாக மேட்டு வட்டை வயல்நிலங்களே பொருத்தமான அமைவிடமாகக் காணப்பட்டது. இதற்கமைய மேட்டுவட்டையிலுள்ள வயல் நிலங்களை சுவீகரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய முயற்சிகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டன.

ஷம்ஸ் மத்திய கல்லூரியை நிரந்தரமான ஒரு இடத்தில் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டபோது கல்லூரியை எங்கு அமைப்பது என்ற சர்ச்சை எழுந்தது. பல கலந்துரையாடல்களின் பின் மேட்டுவட்டைப் பகுதியில் கல்லூரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவுவதென முடிவு செய்யப்பட்டது. அரசினால் காணிகள் சுவீகரிக்கப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் கல்லூரிக்குத் தேவையான காணியை விலைக்குப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சியின் பலனாக ஐக்கிய இராச்சியத்தில் (UK) பணிபுரியும் எமது ஊரைச்சேர்ந்த வைத்திய நிபுணரான Prof. M.M.M. ஜெமீல் அவர்களின் நிதியுதவியுடன் மிகப்பொருத்த மான இடத்தில் 07 ஏக்கர் காணி கல்லூரிக்கென விலைக்குப் பெறப்பட்டது. அத்தோடு கல்லூரியின் பழைய மாணவர்களாலும், அபிமானிகளாலும் ஒரு ஏக்கர் காணி விலைக்குப் பெறப்பட்டு மொத்தமாக எட்டு ஏக்கர் காணி கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இக்காணியில் கல்லூரி அபிமானிகளினதும் N.G.O. க்களினதும், பிரதேச செயலகத்தினதும் உதவியுடன் துரிதமாக தகரக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு கல்லூரி மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலிருந்து அங்கு இடமாற்றப்பட்டது. பல இன்னல்களுக்கு மத்தியில் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது UNICEF ஸ்தாபனம் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டிடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு முன் வந்தது. இந்த வரப்பிரசாதத்தை செயற்படுத்த முனைந்தபோது பூதாகரமான பிரச்சினையொன்று உருவெடுத்தது. கல்லூரிக்கான நிரந்தரமான கட்டிடத்தை கல்லூரி முன்பிருந்த இடத்தில் அமைக்க வேண்டுமென ஒரு சாரார் குரலெழுப்பத் தொடங்கினார்கள். இவர்கள் கல்லூரி மேட்டுவட்டையில் அமைவதைத் தடுப்பதற்கு பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டார்கள். இந்த இழுபறி நிலையினால் கல்லூரிக்குரிய கட்டிடங்களை அமைப்பதில் UNICEF ஸ்தாபனத்திற்கு தர்மசங்கடமான நிலையேற்பட்டது. கல்லூரியின் பெற்றோர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் UNICEFஇனால் ஒதுக்கப்பட்ட இரண்டு கோடி நிதி கைநழுவிப் போய்விடுமோ என்ற ஆதங்கம் ஏற்பட்டது. இதனிடையில் இவ்விடயம் மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்களால் இப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் சமரசமாகத் தீர்க்க முடியாத நிலையேற்பட்டது. இறுதியில் கல்லூரியில் கல்விகற்கும் மாணவர்களின் பெற்றோரிடமும் கருத்துக் கணிப் பொன்றை நடாத்தியது. இக்கருத்துக் கணிப்பில் கல்லூரியை மேட்டுவட்டையில் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் அமைக்க வேண்டுமென 67% வீதமான பெற்றோர் தெரிவித்திருந்தனர். இதற்கமைய கல்லூரிக்கான புதிய கட்டிடங்கள் மேட்டு வட்டைக் காணியில் நிர்மாணிக்கப்பட்டன. அத்தோடு சகல வசதிகளையும் கொண்ட கல்லூரியாக அமைக்கப்பட்டு கோலாகலமாகத் திறந்து வைக்கப் பட்டு UNICEF நிறுவனத்தினால் பாடசாலை சமூகத்திடம் ஒப்படைக்கப் பட்டது. தற்போது கல்லூரியில் கற்பித்தல் நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. UNICEF நிறுவனத்தினதும், இக்கல்லூரி அமைவதற்கு சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவரினதும் தயாள சிந்தையினால் ஷம்ஸ் மத்திய கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் அனுபவித்த இன்னல்கள் முடிவுக்கு வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயம் சுனாமியால் பாதிக்கப்பட்டு அதன் மாடிக்கட்டிடம் இடிந்து விழுந்ததோடு பாடசாலை ஆவணங்கள் யாவும் அழிவுற்றன. பாடசாலை துப்பரவு செய்யப்பட்டு கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. உடைந்த கட்டிடத்திற்குப் பதிலாக புதிய கட்டிடமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடலை அண்மித்த பகுதியிலிருந்த மருதமுனை வைத்தியசாலையும் முற்றாக அழிவுற்றது. சுனாமியினால் காயமுற்றவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் மக்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தனர். வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர். ஏ.எல்.எம். மிஹ்ழார் தலைமையில் வைத்தியர்கள் குழுவொன்று உடனடியாக செயற்பட்டு மருதமுனை மக்கள் மண்டபத்தில் வைத்திய முகாமொன்றை அமைத்து காயமுற்றவர்களுக்கும், ஏனைய நோயாளிகளுக்கும் சிகிச்சையளித்தார்கள்.

வைத்தியசாலையை அவசரமாக இயங்கச் செய்வதற்கு மருதமுனை மக்கள் மண்டபத்தில் மிகக்குறைந்த வசதிகளோடு தற்காலிகமாக வைத்தியசாலை அமைக்கப் பட்டது. மருதமுனை வைத்தியசாலை மக்கள் மண்டபத்தில் அரைகுறை வசதிகளோடு வழங்கக்கூடிய உயர்ந்தபட்ச சேவையை வழங்கிக் கொண்டிருந்தது. இதனிடையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல அளப்பரிய சேவைகளை வழங்கிக் கொண் டிருந்த அரசசார்பற்ற நிறுவனமான Merlin வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டிடங்களை அமைத்துத் தருவதற்கு முன்வந்தது. வைத்தியசாலை கட்டிடத்தை அமைப்பதற்குரிய காணி தேவைப்பட்டபோது, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைக்கென மலேசிய நாட்டின் மலாக்கா State இனால் கொள்வனவு செய்யப்பட்ட 07 ஏக்கர் காணியில் 03 ஏக்கர் காணியை வைத்தியசாலைக்கு ஒதுக்குவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. மலாக்கா State இனால் காணி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே வைத்தியசாலை நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முடியுமென Merlin நிறுவனம் கூறிவிட்ட அந்தக் காணியைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன. நடைமுறைப் பிரச்சினைகள், சட்டப்பிரச்சினைகள் காரணமாக இந்தக் காணியைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டு இறுதியில் காணி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது. இந்தக் காணியைப் பெறுவதில் முன்னாள் அமைச்சர் திருமதி. பேரியல் அஷ்ரஃப், பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்ஸார், Dr. ஏ.எல்.எம். மிஹ்ழார், சட்டத்தரணி எம்.எம். அபுல்கலாம், மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல், சட்டத்தரணி ஏ.எம். றகீப் MMC ஆகியோரின் பங்களிப்பு மருதமுனை மக்களால் நன்றியுடன் நினைவுகூரப் படல் வேண்டும். காணி கிடைத்ததும் Merlin நிறுவனத்தினால் வைத்திய சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கட்டிடங்கள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலையாக அமைக்கப்பட்டு Dr. A.R.M. ஹாரிஸ் தலைமையிலான வைத்தியசாலை நிர்வாகத்திடம் Merlin நிறுவனத்தினால் கையளிக்கப்பட்டது. பிறிதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினத்தில் அமைச்சர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளின் பங்கு பற்றுதலுடன் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. Merlin நிறுவனத்தின் காலத்தால் அழியாத அன்பளிப்பினால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த வைத்தியசாலை தற்போது பிரதேச வைத்தியசாலை யாகத் தரமுயர்த்தப்பட்டு மருதமுனை மக்களுக்கு மட்டுமன்றி இப்பிரதேச மக்களுக்கும் சிறப்பான வைத்திய சேவையை வழங்கிவருகின்றது. மலாக்கா State இனால் கொள்வனவு செய்யப்பட்ட 07 ஏக்கர் நிலத்தில் 3 ஏக்கர் போக மீதியாகவுள்ள 04 ஏக்கரும் வைத்தியசாலையின் எதிர்கால விஸ்தரிப்புக்கு வழங்கப்பட வேண்டுமென்பதே மருதமுனை மக்களின் அன்பான எதிர்பார்ப்பாகும்.

சுனாமியினால் அழிவுற்ற கட்டிடங்களையும், வீடுகளையும் மீள அமைப்பதற்கு மேட்டுவட்டையில் காணிகளை சுவீகரிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றன. மருதமுனையின் தேவைக்கென 10 ஏக்கருக்கு மேல் தேவைப்படாது என அரசாங்க அதிபர் கூறியபோதிலும் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்ஸார் அவர்களுக்கு அரசாங்க அதிபருடனிருந்த நல்லுறவின் காரணமாக, மருதமுனையின் எதிர்காலத் தேவை கருதி 33 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டது. இக்காணிகள் மருதமுனை மக்களின் எதிர்காலப் பயன்பாட்டுக்கு உதவக்கூடியதாகவுள்ளது.

கடல் ஓரத்திலிருந்து 65 மீட்டர் எல்லைக்குள் வசித்து வீடுகளை இழந்தவர்களுக்கு அரசினால் சுவீகரிக்கப்பட்ட காணியில் வீட்டுத்திட்டமொன்று அமைப்பதற்கு அரசினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 வீடுகளே தேவைப்பட்ட போதிலும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீடில்லாத வறிய குடும்பங்களுக்கும், கணவனை இழந்த குடும்பங்களுக்கும் வழங்க முடியுமென்ற நல்ல நோக்கத்தோடு பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்ஸார் அவர்களின் ஏற்பாட்டில் 176 வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு வீடுகள் கட்டும்பணி ஆரம்பிக்கப்பட்டது. இந்த வீட்டுத்திட்டம் சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கென "மேட்டுவட்டை 65 மீட்டர் வீட்டுத்திட்ட அமைப்பு" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த வீடுகள் கட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டதால் வீடுகளை இழந்து கூடாரங் களிலும், உறவினர் வீடுகளிலும் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வந்த பாதிக்கப்பட்டவர்கள் கூடிய விரைவில் வீடுகளை கட்டி முடித்து வழங்குமாறு கோரி கவன ஈர்ப்புப் போராட்டமொன்றை நடாத்தினார்கள். மருதமுனை பிரதான வீதியை மறித்து அதில் கூடாரமமைத்து அங்கேயே உணவு சமைத்து உண்டு, அங்கேயே தொழுகை நடாத்தி தொடர்ந்து இரவு பகலாக 3 நாட்கள் இப்போராட்டம் நடாத்தப்பட்டது. இப்போராட்டம் முழு இலங்கையிலுமே ஒரு முன்மாதிரியான போராட்டமாக அமைந்தது. வீதியில் டயர்களைப் போட்டு எரிக்காது பிரயாணிகளுக்கோ, வாகனங்களுக்கோ எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது சாத்வீகமான முறையில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பொலிஸாரும், பிரதேச செயலாளரும் போராட்டத்தைக் கைவிட்டு பிரதான பாதையை திறந்து விடுமாறு கோரியபோதிலும் அரசாங்க அதிபர் வந்து வாக்குறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கும் வரை போராட்டத்தைக் கைவிட முடியாதென கூறியதைத் தொடர்ந்து மூன்றாவது நாள் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் நேரில் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து கூடிய விரைவில் வீடுகளை கட்டிமுடித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்ததன் பின் போராட்டம் கைவிடப்பட்டது. பின்னர் வீடுகள் கட்டி முடிந்ததும் அவற்றைப் பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக இழுபறி நிலை ஏற்பட்டது. 65 மீட்டருக்குள் வசித்து வீடுகளை இழந்தவர்களுடன் வீடுகளை இழக்காதவர் களினதும், 65 மீட்டருக்கு வெளியே உள்ளவர்களினதும் பெயர்கள் வீடுகளை வழங்கும் பட்டியலில் இடம்பெற்றிருந்தமையால் 65 மீட்டர் அமைப்பு அதனை ஆட்சேபித்து அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு செய்தது. வீடுகளை இழந்த 100 பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட வேண்டுமெனக் கோரினார்கள். இந்தப் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்த நிலையில் பல விசாரணைகளும், நேர்முகப் பரீட்சைகளும் நடாத்தப்பட்டன. இந்த விடயத்தில் ஊரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனம் இதில் தலையிட்டு அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. இதனிடையில் வீடுகளை இழந்து அல்லல்பட்டுக் கொண்டிருந்த பல குடும்பங்கள் இந்த வீட்டுத்திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வீடுகளில் அத்துமீறிக் குடியேறின. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாதிக்கப்படாத சில குடும்பங்களும் இவ்வாறு குடியேறின. பொலிஸாரின் உதவியோடு இவர்களை வெளியேற்றிய பின் இறுதியில் 98 வீடுகள், வீடுகளை இழந்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. மீதியாகவுள்ள வீடுகளை பகிர்ந்தளிப்பதில் இன்னும் இழுபறிநிலை தொடர்கிறது.

சுனாமியினால் 65 மீட்டருக்கு அப்பால் வீடுகளை இழந்தவர்களுக்கு எவ்வித வீட்டுத்திட்டங்களும் அமைக்கப்படவில்லை. இருந்தபோதிலும் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம் அன்ஸார் அவர்களின் முயற்சியினால் French Red Cross என்ற நிறுவனம் மேட்டுவட்டையில் வீட்டுத்திட்டமொன்றை அமைத்து வழங்குவதற்கு முன்வந்தது. இதற்குரிய காணி விலைக்குப் பெறப்பட்டு வீட்டுத் திட்டத்திற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வீடுகளைப் பெறுவதற்கு தகுதியானவர்களில் ஆறு பேரைக் கொண்ட குழுவொன்று இவ்வீட்டுத்திட்ட நிர்மாணப் பணிகளை முன்னின்று செயற்படுத்தியது. கொங்கிரீட் கூரைகளோடு கூடிய பூரணத்துவம் வாய்ந்த 179 வீடுகளைக் கொண்டதாக இவ்வீட்டுத் திட்டம் அமைந்தது. இவ்வீட்டுத்திட்டத்திற்கு 'பிரான்ஸ் சிற்றி' எனப் பெயரிடப் பட்டது. வீடுகள் குலுக்கல் முறையில் பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. வீடுகள் அன்பளிப்புச் செய்தவர்களின் பங்குபற்றுதலோடு இவ்வீட்டுத்திட்டம் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டதோடு வீட்டுரிமையாளர்களுக்கு காணி உறுதிகளும் வழங்கப்பட்டன.

பெரியநீலாவணை அக்பர் கிராமத்தில் சுனாமியினால் வீடுகளை இழந்த வர்களுக்கு பெரியநீலாவணை வீ.சீ. வீதிக்கு அருகிலிருந்த அரச காணியில் இஸ்லாமிக் ரீலிப் நிறுவனத்தினால் 96 வீடுகளைக் கொண்ட தொடர்மாடி வீட்டுத்திட்டமொன்று அமைக்கப்பட்டு வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பெரிய மூன்று வீட்டுத்திட்டங்கள் தவிர நூற்றுக்கணக்கான வீடுகள் பல NGOக்களினாலும், நிறுவனங்களினாலும் அமைத்துக் கொடுக்கப்பட்டன. மஸ்ஜிதுல் இஸ்லாம் நகர் என தற்போது அழைக்கப்படும் பகுதியில் UN Habitat நிறுவனத்தினால் 50 வீடுகள் அமைக்கப்பட்டன. கடற்கரையை அண்மித்த பிரதேசங்களில் EHED நிறுவனத்தினால் 316 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. Islamic Hand அமைப்பினால் 150 வீடுகளும் மற்றும் YMCA, SWORD, Community Trust Fund, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா போன்ற அமைப்புக் களினாலும் பல வீடுகள் சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டன.

பெரியநீலாவணை மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல் சுனாமியினால் முற்றாகச் சேதமடைந்த நிலையில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இடத்தில் ஐங்காலத் தொழுகைகள் நிறைவேற்றப்பட்டன. ஜும்ஆத் தொழுகை பெரிய நீலாவணை பாக்கியத்துஸ் ஸாலிஹாத் பள்ளிவாசலில் நடாத்தப்பட்டது. அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் பெரியதொரு பள்ளிவாசலை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டது. அல்லாஹுத்தஆலாவின் மாளிகையை அவனுடைய உதவியைக் கொண்டு நிர்மாணிக்க முடியும் என்ற திடசங்கற் பத்தோடு பெரியதொரு பள்ளிவாசலுக்கு அத்திவாரமிடப்பட்டது. பள்ளிவாசல் நிர்வாகத்தினர் இப்பாரிய பணியில் முழுமூச்சாக ஈடுபட்டனர். இந்த அரிய முயற்சியில் ஊர்மக்களின் பங்களிப்புடன் கட்டம் கட்டமாக நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு கீழ்த்தளத்தைப் பூரணமாக நிறைவுசெய்து இன்று மருதமுனைப் பிரதேசத்தில் மிகவும் பெரியதொரு பள்ளிவாசலாக அமைத்திருக் கின்றார்கள். மேல்மாடிக்கும் கூரைபோட்டு விரைவில் பூரணமாக கட்டி முடிக் கப்படும் நிலையில் உள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதமுனை மஸ்ஜிதுல் ஹிதாயாவுக்குப் பதிலாக புதிய பள்ளிவாசலொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சியத்தில் (UK) பணிபுரியும் நமதூர் சகோதரர்களின் உதவியுடனும், ஊர் மக்களின் உதவியுடனும் பள்ளிவாசலின் கீழ்த்தளம் பூரணமாகக் கட்டி முடிக்கப்பட்டு தொழுகை நடைபெறுகின்றது. மேல் மாடியின் நிர்மாணப் பணிகள் நடைபெறும் நிலையிலுள்ளது.

கடற்கரையை அண்மித்ததாகவிருந்த மஸ்ஜிதுத் தக்வா பள்ளிவாசல் சுனாமி யினால் முற்றாக அழிவுற்றது. தற்போது ஏற்கனவே பள்ளிவாசலிருந்த இடத்தி லிருந்து சுமார் 100 மீட்டருக்கு அப்பால் புதிய பள்ளிவாசலொன்று அமைக்கப் பட்டுள்ளது.

மேட்டுவட்டைப் பகுதியில் குடியேறிய மக்கள் அவர்களின் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றும் பொருட்டு மஸ்ஜிதுல் இஸ்லாம் என்ற பள்ளி வாசலும், பிரான்ஸ் சிற்றி வீட்டுத்திட்டத்தில் ஒரு பள்ளிவாசலும், 65 மீட்டர் வீட்டுத்திட்டத்தில் ஒரு பள்ளிவாசலும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவு கடற்கரைப் பகுதியில் மஸ்ஜிதுல் கவ்ஸர் என்ற பள்ளிவாசலும் அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷம்ஸ் மத்திய கல்லூரி மேட்டுவட்டைப் பகுதிக்கு இடம் மாறியதால் கரையோர மாணவர்களின் நலன்கருதி, ஷம்ஸ் மத்திய கல்லூரியின் சுனாமியால் சேதமடையாது எஞ்சியிருந்த கட்டடங்களைக் கொண்டு அல்-மதீனா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 8ஆம் வகுப்பு வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

அக்பர் கிராமத்தில் அக்பர் வித்தியாலயம் என்ற பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 5ஆம் வகுப்பு வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தற்போது சுனாமி விட்டுச்சென்ற வடுக்கள் ஆங்காங்கே காணப்பட்ட போதிலும் பல குடும்பங்கள் நிரந்தர வசிப்பிடங்கள் இல்லாது கஷ்டங்களை அனுபவிக்கின்ற போதிலும் மருதமுனை மக்கள் சுனாமியின் தாக்கத்தை மறந்து வாழ்கின்றனர் என்றே சொல்ல வேண்டும். சுனாமியினால் தமது தொழில்களை இழந்தவர்கள் தங்களது தொழில்களை மீள ஆரம்பித்து நல்ல நிலைக்குத் திரும்பியுள்ளார்கள். இவற்றுக்கெல்லாம் அரச, அரசசார்பற்ற மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், தனவந்தர்கள், வெளியூர் சகோதரர்கள் வழங்கிய உதவிகள் மற்றும் நிவாரணங்கள் மூலமே இந்த நிலைக்குத் திரும்ப முடிந்தமைக்கு மருதமுனை மக்கள் இவர்களுக்கு என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை சீர்செய்வதிலும், அவற்றைத் துப்பரவு செய்வதிலும், இடிபாடுகளுக்கிடையேயும், குவியல் குவியலாகவிருந்த குப்பை கூழங்களுக்குள்ளும், மறைந்திருந்த ஜனாஸாக்களையும் ஏனைய ஜனாஸாக்களையும் அடக்கம் செய்வதிலும் தங்களை அர்ப்பணித்த தஃவா இயக்கங்களுக்கும் அந்த இயக்கங்களுடன் சேர்ந்து பணியாற்றிய வெளியூர் சகோதரர்களுக்கும் மருதமுனை மக்கள் நன்றி கூறுகின்றோம். இவை காலத்தால் மறக்க முடியாத அர்ப்பணிப்புக்களாகும்.

இறுதியாக மருதமுனையின், ஒரு பகுதிதான் சுனாமியால் பாதிக்கப்பட்டது. மற்றைய பகுதிக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. ஆயினும், இந்த பாதிக்கப்படாத பகுதியில் வாழ்ந்த மக்கள், தங்கள் உடன் பிறப்புக்கள் சுனாமியின் தாக்கத்திலிருந்தும், அதன் மூலம் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்தும் மீள்வதற்கும், அவர்களின் துயர் துடைப்பதற்கும் வழங்கிய பங்களிப்பு போதுமானதாக இருக்கவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியுள்ளது. மேலும், சுனாமியின் வடுக்களை பார்வையிடுவதற்கு வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் போன்று நமதூர் சகோதரர்கள் பலர் நடந்துகொண்டமை வேதனை தருவதாக இருந்தது. இன்னொரு அனர்த்தம் நேரும்போது நாம் இவ்வாறு நடந்து கொள்ளக்கூடாது என்பதற்காகவே இதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமியின் பின்னரான மருதமுனை

தடைகளும் சவால்களும் - ஒரு சமூகப்பார்வை

அஷ்-ஷெய்க் றஸ்மி எம். மூசா (ஸலபி)

உலகளாவிய ரீதியில் இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒரு மிகப்பெரிய எதிர்பாராத அனர்த்தம் என்றால் 2004 டிசம்பர் 26இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் தான் என்று சொன்னால் அது மிகையாகாது. குறிப்பாக இலங்கையில் ஏற்பட்ட தாக்கம் எமது மருதமுனைக் கிராமத்தில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது என்பதை யாவரும் அறிவோம்.

இதற்கு முன்னர் இந்த மிகப்பெரிய அனர்த்தம் பற்றிய அறிவும் அனுபவமும் எமக்கு இருக்கவில்லை. இந்நிகழ்வு நமது சமூகத்துக்கு பல்வகையில் தாக்கம் செலுத்திக்கொண்டிருப்பது பெரிய கவலைக்குரிய விடயமாக இன்றுவரை விளங்குகின்றது. குறிப்பாக இலங்கையில் ஏற்பட்ட இவ்வனர்த்தத்தில் அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை கிராமமே பாரிய சேதத்துக்கு உள்ளானது என்பது மட்டு உண்மையாகும்.

இவ்வனர்த்தம் நமது கிராமத்தில் சுமார் 950 பேர்களின் உயிர்களை காவு கொண்ட அதேவேளை சுமார் முன்னூறு பேர்களுக்குமேல் அங்கவீனம் மற்றும் புதிய நோய்த்தொற்று போன்றவற்றுக்கும் உள்ளாகினர். அது மட்டுமல்லாமல் கிட்டதட்ட 3000 பேர் களுடைய வீடுகள் முழுமையாகவும் பகுதியாகவும் சேதமடைந்தன. கிட்டதட்ட சுமார் 400 மில்லியன் ரூபாய் இழப்பீடு பல துறை களிலும் ஏற்பட்டதாக பிந்திய உறுதிப்படுத்தப்படாத மதிப்பீடுகள் கூறுகின்றன.

மருதமுனை சுனாமிக்கு முன்னரும் பின்னரும் ஒரு மதிப்பீடு

"மக்கம் தப்பினால் மருதமுனை" என்ற முன்னோர் மக்களின் சான்று நமது கிராமத்தின் பெருமையைக் கூறும் ஒரு புகழ்மொழி. அத்தகைய ஒரு கோணத் திலிருந்து இந்தக் கிராமத்தை நோக்கினால் சுனாமிக்கு முன்னரும் பின்னருமான ஒரு சமூகவியல் ஆய்வு நமக்கு சில அவதானிக்க தக்க தகவல்களைத் தருகின்றன.

ஏனெனில் சுனாமி உலகளாவிய ரீதியில் சமய சமூக பொருளாதாரத் துறைகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த மாற்றம் சிலவேளை நேர்மறை யாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருக்கக்கூடும். ஆனால் இம்மாற்றங்கள் பல வடிவங்களில் நிகழ்ந்தது என்றே சொல்ல வேண்டும். அப்படியான மாற்றம் இந்த மருதமுனை கிராமத்திலும் ஓரளவு சாதகமாக மதிப்பிடக்கூடிய அளவுக்கு ஏற்பட்டது என்பதுதான் எமது கருத்தாகும்.

அண்ணளவாக 1.5 மீட்டர் நீளத்தையும் அகலத்தையும் பரப்பளவாகக் கொண்ட இக்கிராமம் கிழக்கில் கடல் பிரதேசத்தையும் மேற்கில் வயல்வெளிகளையும் கொண்டது. இந்தக் கிராமம் பல சிறப்புமிக்க பாரம்பரியங்களைக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சுனாமிக்கு முன்னர் கடலை அண்டிய கரையோரப் பகுதிகளில் பரவலாக வாழ்ந்து வந்தனர். இக்கடல் பிரதேசம் அம்பாறை மாவட்டத்தில் ஏனைய கிராமங்களை அன்னியப்படுத்துவதுபோல் மருதமுனை கிராமத்தை அன்னியப் படுத்தவில்லை. மாறாக சுனாமிக்கு முன்பு கடலையண்டிய வசிப்பிடம்கூட பாரிய கட்டுமான வசதிகளுடனும் தொழில் பேட்டைகளுடனும்தான் காணப் பட்டது. இது ஏனைய இந்தப் பிராந்தியத்தில் உள்ள கடலையண்டிய கிராமங்களை ஒப்பிடும்போது ஒரு சிறந்த முன்மாதிரியாகும்.

இதற்குக் காரணம் இக்கடல் பகுதி மீனவத்தொழிலுக்கு மக்களால் முழுமை யாகப் பயன்படுத்தவில்லை என்பதுதான். அதாவது கடல் பிரதேசம் மக்களின் ஏனைய வருவாய் துறை போன்று ஒரு பயன்படத்தக்க துறையாக இன்று வரை அணுகப்படவில்லை என்பதும்தான்.

மக்களின் சமூக வருவாய் துறைகள் சுனாமிக்கு முன்னரான மதிப்பீடு செய்து பார்க்கும் போது மருதமுனையின் மிகப் பிரதான தொழிலாக நெசவு மற்றும் வர்த்தகம் போன்றன காணப்பட்ட போதும் மீன்பிடியும் ஓரளவு பங்களிப்புச் செய்தது. குறிப்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை இந்தக் கிராமத்தின் பொருளாதாரத்தில் பாரிய பங்களிப்பைச் செய்தது. கல்வி ஒரு வருமானம் தரும் தொழில்சுட்டியாக இல்லாவிட்டாலும்கூட கல்வியின் பொருளாதார பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டது. கடலை அண்டிய கிராம மாயினும் கடல்சார்ந்த வருமானம் மிகக்குறைவே. காரணம் மீன்பிடி சுவாத் தியத்திற்கு ஏதுவாக இந்த கடற்பிரதேசம் காணப்படவில்லை என்று கூறலாம்.

இந்த வகையில் சுனாமிக்கு முன்னர் மருதமுனை மக்களின் வருமானம் பின் வருமாறு அமையப் பெற்றது.

நெசவுத்தொழில் - 31%
மீன்பிடி - 6%
கல்வி வருமானம் - 8% ஆகக் காணப்பட்டது.

இங்கு கல்வித்துறை ஒரு வருமானம் தரும் சுட்டியாக இல்லாவிட்டாலும் நமது கிராமத்தை ஏனைய கிராமங்களுடன் ஒப்பிடும்போது பொருளாதாரத்தில் குறிப்பிட்டளவு வருமானம் தரும் துறையாகக் காணப்பட்டது. அரச உத்தியோ கத்தர்களின் எண்ணிக்கை இந்தக் கிராமத்தில் உயர்ந்து காணப்பட்டது. அதனால் பல குடும்பங்களின் ஜீவனோபாயத்திற்கு இந்தக் கல்வி குறிப்பிட்டளவு பங்களிப்புச் செய்தது. அது மீன்பிடித்துறையைவிடவும் அதிக பங்களிப்பு மிக்க தாகக் காணப்பட்டது.

குறிப்பாக மருதமுனையில் நெசவு ஒரு பிரதான பங்கினை ஆற்றினாலும் நெசவுத் தொழிலினையும் இந்த சுனாமி பாதித்தது. குறிப்பாக முன்பு சுனாமிப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் பெரும்பாலான மக்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டனர். சுமார் 1084 குடும்பங்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இவர்களில் 399 பேர் நேரடியாக தமது தொழிலை இழந்தனர். ஏனைய மக்கள் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டு முடக்கப்பட்டனர். இதனால் 68 மில்லியன் ரூபாய் இழப்பு இந்தத் துறைக்கு மட்டும் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமிக்குப் பின்னர் இந்த நெசவுத் தொழில் வீழ்ச்சியடைந்தாலும் பின்னர் பல்வேறு புதிய நவீன முறைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்திய காரணத்தால் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஓரளவு உயர்ச்சி கண்டு வந்துள்ளது. அதாவது குடிசைத்தொழில் என்ற நெசவு முறையை மாறி இன்று ஏற்றுமதி முறைமைக்கு மாற்றமடைந்துள்ளது. இந்த மாற்றங்கள் நாம் விரும்பியோ விரும்பாமலோ சுனாமிக்குப் பின்னரான எழுச்சி என்பதை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

அதேபோல் கல்வியைப் பொறுத்தவரையில் மருதமுனை இந்தப் பிராந்தியத்தில் ஓர் முன்னணியில் திகழும் கிராமமாகும். படித்த புத்திஜீவிகளைக் கொண்ட இக்கிராமம் (சுனாமி) பொதுவாக குறிப்பிட்ட காலப் பகுதியில் கல்வி வளர்ச்சியால் தடைப்பட்டிருந்தாலும் அந்நிலை மிக நீண்டகாலம் நீடிக்கவில்லை. காரணம் இந்தக் கிராமத்தில் மக்கள் கல்விக்குக் கொடுத்த அக்கறை என்றே சொல்ல வேண்டும். இதனால்தான் பாடசாலைகளில் சுனாமிக்குப் பின்னர் மாணவர் வீழ்ச்சி என்பது ஏனைய கிராமங்களை ஒப்பிடும்போது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

குறிப்பாக மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரி மட்டுமே நேரடியாக சுனாமியால் முழு அளவில் பாதிக்கப்பட்டாலும் உடனடியாக பாடசாலை சமூகம் விரைந்து செயற்பட்டதன் விளைவு சம்ஸ் மத்திய கல்லூரி தற்காலிகமாக இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் புதிய கட்டிடங்களுடன் மேட்டுவட்டைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இன்று எல்லா வசதிகளுடன் இப்பாடசாலை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

அதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட நிதி உதவிகள் விஸ்தரிக்கப்பட்டு சுனாமியால் பாதிக்கப்படாத பாடசாலை களுக்கும் வழங்கப்பட்டது. இது ஒரு சிறந்த வரப்பிரசாதமாகும்.

அதேவேளை பெற்றோரை இழந்த பல பிள்ளைகளின் கல்வி மேம்பாடு சுனாமி பிரதேசங்களில் ஒரு சவாலாக இருந்தாலும் மருதமுனை மக்கள் காட்டிய அக்கறை சுனாமியால் பாதிக்கப்பட்ட பல குழந்தைகள் கல்விக்கான தேவை களை பல நிறுவனங்களிலிருந்து பெற்று கல்வியைத்தொடர வாய்ப்பளிக்கப் பட்டது. குறிப்பாக UNICEF, SAVE THE CHILDREN, UNDP போன்ற சர்வதேச நிறுவனங்கள் இத்துறையில் அளப்பெரிய தொண்டாற்றின. இதனால்தான் சுனாமிக்குப் பின்னர் புதிதாக இரண்டு பாடசாலைகள் தோற்றம்பெற்றன. அதாவது மதீனா வித்தியாலயம் மற்றும் அக்பர் வித்தியாலயம் என்பன. மக்களின் கல்வி ஆர்வம் இதற்கு தக்க சான்றுகளாகும்.

அதுதான் இம்மாற்றம் **'தங்கச்சுனாமி'** எனச் சிலேடையாக பேசுமளவுக்கு நோக்கப்பட்டது. காரணம் குறிப்பிட்ட அழிவைவிட மக்கள் பின்னர் பெற்றுக் கொண்ட அனுகூலங்கள்தான் அதிகம். சுனாமி மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதாபக் கேடயமாக பயன்படுத்தப்பட்டது என்பது நாம் மறைக்காமல் சொல்ல வேண்டிய உண்மையும்கூட. ஆயினும் இழந்த உயிர் மதிப்பீடுகளுக்கு இது எவ்வகையிலும் சமமல்ல.

யதார்த்தமாக சிந்தித்தால் அழிந்த கட்டுமான வசதிகள் இருந்த தடயங் களைவிட அதிகமாக புதிய சுனாமி நிர்மாணப் பணிகளால் நமது கிராமத்தில் உருவாயின. எங்கே இந்தக் கிராமம் தடயம் இல்லாமல் போய்விடுமோ என்ற மக்களின் அச்சம் சுனாமிக்குப் பின்னர்தான் மனநிலை மாறி இன்று மிகப்பெரிய அபிவிருத்திக் கிராமமாக மாறியுள்ளது. பாதைகள் செப்பனிடப்பட்டு கட்டுமான வசதிகளுடன் மேம்படுத் தப்பட்டுள்ளன. ஒரு அழிவின் பின்னர் தான் ஆக்கபூர்வமான உருவாக்கம் ஏற்படும் என்ற மேற்கத்தேய பழிமொழியை இந்த சுனாமி மருதமுனைக் கிராமத்தில் தடம்பதித்துள்ளது என்று துணிந்து கூறலாம். இதனால்தான் நான் மேற்கூறிய இந்தக் கிராமத்தின் வருமான விபரங்கள்கூட சுனாமிக்குப் பின்னர் ஒரு புதிய புள்ளிவிபரத்தைக் காட்டி நின்றது. அதாவது,

நெசவுத்தொழில் மற்றும் பிடவைத் தொழில்	-	35%
வர்த்தகம் மற்றும் சுயதொழில்	-	55%
வெளிநாட்டு வேலைவாய்ப்பு	-	25%
மீன்பிடி	-	9%
கல்வி வருமானம்	-	10%

இந்த விபரப்படி மக்கள் ஆரம்பத்தில் மீன்பிடித் துறையில் காட்டிய ஆர்வம் போலவே தொடர்ந்தும் காட்டுகின்றனர். இருந்தும் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. ஆனால் மக்கள் தங்களுடைய ஜீவனோபாயம் மற்றும் சுனாமி அளவிலான நிர்மாணத்துறை விருத்தி போன்ற காரணங்களைக் கருத்திற்கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடிச்சென்றனர். 14 வீதமாகவிருந்த சுட்டி 25 வீதத்தால் அதிகரித்தது. அதேபோல் வர்த்தகம் 41 வீதத்தால் இருந்த நிலைமாறி 55 வீதமாக அதிகரித்தது. இன்று நெசவுத் தொழிலில் பாரம்பரிய முறைமை என்றில்லாவிட்டாலும் பிடவைக் கைத்தொழில் இந்த பிராந்தியத்தில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டது.

மக்கள் நேரடியாக மூலப்பொருட்களை இறக்குமதி செய்து தொழிலை நடாத்தும் நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக இது சுனாமிக்குப் பின்னரான உடனடி மாற்றம் என்றாலும் இதன் நேரடிக்காரணம் எது என்பது பற்றி குறிப்பிட முடியாது. சிலவேளை மக்களின் வெளிநாட்டுச் செலாவணி வருகை மற்றும் மக்களின் தொழில் மாறுதல் உக்திகள் இதற்கு ஒரு காரண மாகவும் இருக்கலாம். இந்த வகையில் சுனாமிக்குப் பின்னர் முன்புள்ள நிலைமை சிறிது மாற்றமடைந் துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டுமானமும் மீள் குடியேற்றமும்

குறிப்பாக கடலை அண்டிய மக்களின் வாழ்விடங்கள் முற்றாக அழிந்து விட்டாலும் அவர்களுடைய இருப்பிடங்கள் புதிய புதிய இடங்கள் நோக்கி நகர்ந்தன. இதை நாம் ஒரு வசனத்தில் கூறிமுடித்தாலும் பல ஆண்டுகளின் பின்னரான பாரிய சவால்களின் பின்னணியில்தான் இந்த மக்களுக்கு நிவாரணம் ஓரளவு கிட்டியுள்ளது. இதற்கு நல்ல உதாரணம் இந்த கட்டுரை எழுதும் வரை மருதமுனை சுனாமி மேட்டுவட்டை 65 மீற்றர் குடியிருப்பு இன்றுவரை பிரச்சினை தீர்க்கப்படாமல் காணப்படுகின்றது. வீடுகள் மக்களுக்கு இன்னும் முறையாக பகிர்ந்தளிக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது.

மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களைவிட சற்று அதிகமான வீடுகள் இந்த பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டதும் இத்தகைய ஒரு இழுத்தடிப்புக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இது அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட பிழையான சில தகவல்களின் பின்னணி என தற்போது மக்களால் விமர்சனம் செய்யப்படுகின்றது.

அதேபோன்று சுனாமிக்குப் பின்னர் கடலை அண்டிய பகுதிகளில் காணப்பட்ட எமது கிராமத்தின் பல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மேற்கு பக்கம் நோக்கிய வயல் பிரதேசங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. குறிப்பாக சம்ஸ் மத்திய கல்லூரி முற்றாகச் சேதமடைந்து புதிய கட்டிடங்களில் இயங்கி இன்று அதன் தேவைகளை படிப்படியாகப் பூர்த்திசெய்து கொண்டிருக்கின்றது.

இதேபோல் வைத்தியசாலையானது மருதமுனை கடலை அண்டிய பகுதியில் ஓரளவு சிறிய வசதிகளுடன் காணப்பட்டது. பின்னர் சுனாமியால் முற்றாக அழிந்தது. பின்னர் ஊரின் மேற்குப்பக்கமான மேட்டுவட்டை பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு தரமுயர்த்தப்பட்டு இன்று பல வசதிகளுடனும் புதுப்பொலிவுடனும் காணப்படுகின்றது. சுற்றயக்கூறு (Peripheral Unit) என்ற தரத்திலிருந்து சுனாமிக்குப் பின்னர் தற்போது பிரதேச வைத்தியசாலை (Divisional Hospital) என்ற தரத்துக்கும் உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல் 100 மீற்றர் பகுதிக்குள் வாழ்ந்த மக்களின் புதிய குடியிருப்பு பகுதிகள் மேட்டுவட்டை மற்றும் பிரெஞ்ச் சிற்றி (French City) என்ற குடியிருப்புக்களுக்கு மாற்றப்பட்டன. அதேபோல் இஸ்லாமிக் ரிலீப் (Islamic Relief) மீனவர் வீட்டுத்திட்டம் போன்ற வீட்டுத் திட்டங்களுக்கு மாற்றப் பட்டனர். பழைய வைத்தியசாலை இருந்த இடத்தில் இக்குடியிருப்பு இன்று அமையப்பெற்றுள்ளது. அதேபோல் கடலிலிருந்து 65 மீற்றருக்கு அப்பாலுள்ள மக்களின் அரைகுறையாகச் சேதமடைந்த வீடுகள் அதே இடங்களில் நிர்மாணிக் கப்பட்டன.

அதேபோன்று பல பள்ளிவாசல்களும் மீள புதிய தோற்றத்தில் நிர்மாணிக்கப் பட்டன. குறிப்பாக அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் முற்றாக சேதமடைந்த பின்னர் இன்று புதிய பொலிவுடன் பாரிய கட்டிடமாக அமையப் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஜிதுல் கவ்லர், மஸ்ஜிதுத் தக்வா, மஸ்ஜிதுல் இஸ்லாம், 65 மீட்டரில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் சாலிஹீன் மற்றும் பிரான்ஸ் சிற்றியில் அமைந்துள்ள மஸ்ஜிதுர் ரையான் பள்ளிவாசல்கள் எல்லாம் சுனாமிக்குப் பின்னர் கட்டப் பட்டவை யாமறிந்த உண்மையாகும்.

சுனாமிக்குப் பின்னரான பல்தேசிய அமைப்புக்களின் (INGO)க்களின் வருகை இந்தக் கிராமத்தில் ஒரு மிகப்பெரிய அபிவிருத்திப் புரட்சியை ஏற்படுத்தின என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. அதேபோன்று அரசாங்கத்தின் பல ஒதுக் கீடுகள் மூலம் அதிக அபிவிருத்திப் பணிகள் ஏற்படுத்தப்பட்டன என்பதை இதன் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம்.

குறிப்பாக மீள்குடியேற்றம் என்பது அந்த வேளை ஒரு சவாலாகக் காணப்பட்டது. எனினும் சுனாமி மீள்குடியேற்றத்துக்கு பல சர்வதேச நிதி நிறுவனங்கள் பங்காற்றின. Islamic Relief, French அரசு மற்றும் Practical Action, Samaritan Purse, EHED போன்ற நிறுவனங்களுடன் அரசாங்க நிறுவனமான SDC & CC என்ற நிறுவனமும் மீள்குடியேற்றப் பணியில் பங்களிப்புச் செய்தது. எனினும் அரசாங்கத்தின் நிர்மாணப் பணியான 65 மீற்றர் குடியேற்றம் மட்டும் இன்றுவரை மிகப்பெரிய சவாலாக உள்ளது. அரசாங்கத்தின் அசமந்தப் போக்கும் மற்றும் உள்ளூர் அரச அதிகாரிகளின் இழுத்தடிப்பும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுபெற தடைகளாகவுள்ளன.

சுனாமிக்குப் பின்னரான கலாசாரம்

பொதுவாக கலாசாரம் என்பது ஒரு சமூகத்தின் பிரதான அம்சம் என்பது நாம் அறிந்த விடயம். சுனாமிக்குப் பின்னர் எமது கிராமத்தில் ஏற்பட்ட மாற்றங்களில் கலாச்சாரப் பாதிப்பும் ஒன்று. அதாவது மதுபாவனை அதிகரித்துள்ளமை, போதைவஸ்த்துப் பாவனை போன்றன மாணவ சமூகத்தில்கூட பரவியுள்ளன. இதற்கு சுனாமி ஏற்பட்டு மீள் வசதிகள் செய்யும் காலப்பகுதிகளில் காணப்பட்ட சீரற்ற நிலை மற்றும் சர்வதேச அமைப்புக்களின் வருகையும் காரணங்களாகும். அதாவது எதிர்பாராத விதமாக பணப்புழக்கம் அதிகரித்துக் காணப்பட்டது.

அதேவேளை பலரின் சுனாமிக்குப் பின்னரான மனநிலை பாதிப்பு, விரக்தி நிலையும் காரணமாக இருக்கலாம். குறிப்பாக பெற்றோரை இழந்த சிறார்கள் மற்றும் குடும்பத்தை இழந்த பெற்றோர்கள் கூடுதலாக இந்த போதைவஸ்த்துப் பாவனையில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர் என அறிய முடிகின்றது. அதனால் தான் இன்றுகூட கடலோரம் அண்டிய பகுதிகளில் சுனாமிக்கு முன்னரைவிட தற்போது அதிகமான இடங்களில் போதைவஸ்த்து விற்பனை நேரடியாகவும் மறைமுகமாகவும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே சுனாமிக்குப் பின்னரான இந்த பழக்கம் எமது சமூகத்தின் கலாசார வளர்ச்சி சற்று பாதிப்படையச் செய்துள்ளது என்றுதான் கூறவேண்டும். இது வளர்ந்து வரும் மிகப் பெரிய சவாலாக நோக்கப்படுகின்றது. குறிப்பாக அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்செயல் இடம்பெறும் இடமாக மீள்குடியேற்றப் பகுதிகள் காணப்படுகின்றன. மக்கள் ஒதுக்கப்பட்ட தங்களுடைய வீடுகளில் வசிக்காமல் வேறு இடங்களை நாடிச்செல்லும் நிலை குறிப்பிட்ட குடியேற்றப் பகுதிகள் இந்தளவுக்கு கலாசார ரீதியில் சீரழிந்து செல்லக் காரணம் எனலாம். இன்று அதிகமாக பல சமூக பிரச்சினைகள் இந்த குடியிருப்புப் பகுதிகளில் தான் இடம்பெற்று பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது நிதர்சனமாகும்.

உட்கட்டுமானம்

உட்கட்டுமானத்தைப் பொறுத்தவரையில் மருதமுனைக் கிராமத்தில் சுனாமிக்கு முன்னர் பாதைகள் முழுமையாக செப்பனிடப்பட்டிருக்கவில்லை. பொதுவாக மணல் தரைகள் அதிகமாகக் காணப்பட்டன. பின்னர் பாதைகள் முழுவதும் செப்பனிடப்பட்டு கொங்ரீட் பாதை அமைக்கப்பட்டுள்ளன. பரவலாக பாதைகள் சிறந்த அபிவிருத்திச் சுட்டியாக விளங்குகின்றது என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. அதேபோன்று வடிகான்கள் முறையாக அமையப்பெற்றுள்ளன. இதனால் கழிவுநீர் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளது. இவைகள் சுனாமி தந்த வரப்பிரசாதங்களாகும்.

ஆயினும்கூட முற்றாக சேதமடைந்த கடற்கரை நீண்ட பாதை இதுவரை செப்பனிடப்படாமல் கிடப்பில் கிடப்பது ஒரு சவாலாகக் காணப்படுகின்றது. இதுவரை இதன் புனர்நிர்மாணப் பணிகள் பற்றி அரசாங்கம் எந்தத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. ஆனால் இந்தப் பிராந்தியத்தில் நமது கடற்கரை ஒரு பொழுதுபோக்கு இடமாக மாறியுள்ளபடியால் இதன் துரித நிர்மாணப் பணி பற்றி நாம் அதிகம் சிந்திக்க வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்-ஷெய்க். றஸ்மி எம். மூசா (ஸலபி)

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

தேசமான்ய, சாமஸ்ரீ றஸ்மி எம். மூசா (ஸலபி) M.A. ஜே.பி. ஆசிரியர் எஸ்.எம். மூசா - றாஹிலா தம்பதிகளின் நான்காவது புதல்வராவார். கழு/ மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் தரம் ஒன்பது வரை கற்றுவிட்டு KU/ பரகஹதெனிய தாருத் தவ்ஹீத் அரபிக் கலாசாலையில் இணைந்து மார்க்கக் கல்விகற்று மவுலவி ஆலிம் தரத்தினைப் பெற்றார். பின்னர் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கற்று கலைமானி (B.A. Hons) பட்டத்தினையும் தனதாக்கிக் கொண்ட இவர் ஒரு முதுமானிப்பட்டதாரி (MA) ஆவார்.

அரச சேவையில் இணைந்த இவர், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தராக முதல் நியமனம் பெற்று கல்முனை பிரதேச செயலகத்தில் (முஸ்லிம் பிரிவு) கடமையாற்றிய நிலையில் 2010இல் ஆங்கில மொழிப் போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவாகி தெற்காசிய நாடுகளின் சம்மேளனத்தின் (SAARC) கலாசார நிலையத்தில் மூன்று வருட காலம் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தராக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றினார். தற்பொழுது கட்டார் நாட்டில் பாடசாலைகளுக்கான தொழில்நுட்பக் கல்வி நிறுவனமொன்றில் செயலாளராக (Secretary) கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

மௌலவி கே.எல்.எம். ஹனிபா ஜே.பி. அவர்களின் புதல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர் (DO) சித்தி நிஸ்மினா (BA) அவரது மனைவியாகும்.

சிறந்த மேடைப் பேச்சாளரும் எழுத்தாளருமான றஸ்மி எம். மூசா (ஸலபி) தவ்ஹீத் ஜமாஅத்தின் பிரச்சாரகர்களில் (தாஈ) ஒருவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

- ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகத்துறையும் மருதமுனையும்

தொகுப்பு : அப்துல் சத்தார் ஹாபி
தொழில்நுட்ப உத்தியோகத்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

உலகில் வாழ்கின்ற பெரும்பாலான மக்களின் வாழ்க்கையின் அம்சமாக அடிப்படைத் தேவையாக இன்று ஊடகத்துறை மாறியிருப்பதை நாம் காண்கிறோம். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் என அத்தனை விதமாக விரிவடைந்துள்ள ஊடக சேவைகள் மக்களுக்கு உடனுக்குடன் செய்திகளை, தகவல்களை முண்டியடித்துக்கொண்டு தருவதில் முனைப்பாக இருக்கின்றன. மக்களும் அவற்றை முந்திக்கொண்டு பார்ப்பதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். இப்பாரிய உலகம் ஒரு கிராமமாக மாறுவதற்கு ஊடகத் துறையின் பங்களிப்பு காத்திரமானது. பெரும்பாலான விடயங்களைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் இவ்ஊடகத்துறை சில வேளைகளில் செயற்படுவதை நாம் காண முடிகிறது.

ஆனால் உலகளாவிய ரீதியில் ஊடகத்துறை பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குவதையும், குறிப்பாக எமது இலங்கையிலும் இத்துறை பல சவால் களுக்கு மத்தியில் கருமமாற்றுவதும், பல நெருக்கடிகளுக்கு மத்தியில் பக்கச் சார்பான விடயங்களையே வாசகர்களுக்கு தரவேண்டும் என்ற நிர்ப்பந்தங்களும் மேலோங்கியிருக்கின்றன. இதனால் ஊடகவியலாளர்களுக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கில் சரிவு ஏற்பட்டுள்ளமையும் நாம் மறக்க முடியாதுள்ளது.

எமது ஊரைப் பொறுத்தமட்டில் ஊடகவியல் என்பது ஆரம்பத்தில் மிகவும் சிறியளவிலேயே தனது பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. தினபதி, வீரகேசரி, தினகரன் போன்றவற்றிற்கான கவிதை, கட்டுரை போன்றவற்றை எழுதுவதன் மூலம் ஊடகத்துறைத் தொடர்புகளை மர்ஹூம் யூ.எம். ஹனிபா (மருதூர்க்கனி) அவர்கள் செய்திருக்கிறார். ஆனாலும் 1960 - 65களில் அல்-ஹாஜ் எம்.வை.எம். முஸ்லிம் (ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்) முதல்முதல் நிருபராகக் கடமையாற்றியுள்ள தகவல் எம்மிடமுள்ளது. இருந்தபோதும் மருதமுனை நிருபர் என்ற நியமனக் கடிதத்தை 1975ல் முதன்முதலில் சகோதரர் எம்.எல்.எம். ஜமால்தீன் ஜே.பி. அவர்கள் பெற்றுக்கொள்வதும் இங்கு நோக்கப் படல் வேண்டும். இவரைத் தொடர்ந்து பலர் ஊடகத்துறைக்கு உள்வாங்கப் பட்டு இன்றுவரை தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவை தவிர எமது கிராமத்தில் குறுந்தகவல் சேவையும் இன்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கணிக்கப்படுகிறது. உடனுக்குடன் பலவிதமான தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கு இவை பெரும் பங்காற்றுகிறது. இந்த வகையில் அலிஸ் நியூஸ், மருத நியூஸ் போன்ற குறுந்தகவல் சேவைகளும் மருதமுனை ஒன்லைன் என்ற இணையத்தள சேவையும் அரும்பணியாற்றி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகத்துறையில் பணியாற்றும் சிலரை இங்கு அறிமுகம் செய்வதில் நாம் பெருமையடைகிறோம்.

எம்.எல்.எம். ஜமால்தீன்

1952-08-22ம் திகதி மருதமுனையில் பிறந்த எம்.எல்.எம். ஜமால்தீன் ஜே.பி. அவர்கள் தினகரன், தினமின, டெய்லி நியூஸ் ஆகிய தேசிய நாளேடுகளின் கல்முனை சுழற்சி நிருபராக 1975 முதல் செயற்பட்டு வருகிறார். அரசியல், விளையாட்டு, சமயம், சமூக சேவைகள் என இவரது ஈடுபாடுகள் விரிவானது. அகில இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தராகவும் இலங்கைப் போக்குவரத்துச் சபை கல்முனைச்சாலை உதவிச் செயலாற்று முகாமையாளராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றார். அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளன செயலாளர் பதவியில் அமர்த்தப்பட்டுள்ள ஜமால்தீன் சிறந்த அறிவிப்பாளர் என்பதுடன் திட்டமிட்ட அடிப்படையில் நிகழ்ச்சிகளைச் சிறப்பாக ஒழுங்கு படுத்துவதிலும் வல்லவர்.

இஸ்மாயில் பி. மஆரிப்

1963-11-11ல் மருதமுனையில் பிறந்த சட்டத்தரணி இஸ்மாயில் பி. மஆரிப் LLB அவர்கள் 1988 இலிருந்து ஊடகத்துறையில் செயலாற்றி வருகிறார். சிரேஷ்ட அறிவிப்பாளர் செய்தி வாசிப்பாளர் மட்டுமன்றி தமிழ்த்தேசிய நாளேடுகளில் அரசியல் கட்டுரைகளும் எழுதி வருபவர் "அரசியல் நெருக்கடிகளும் முரண்பாடு களும்" என்ற நூலின் ஆசிரியரான மஆரிப் "வாழும் போதே வாழ்த்துவோம்" நிகழ்ச்சி மூலம் பல்துறை சார்ந்தவர்களையும் வாழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பீ.எம்.எம்.ஏ. காதர்

1957-12-27ல் மருதமுனையில் பிறந்த இவர் 1988 முதல் ஊடகவியலாளராகச் செயலாற்றுகிறார். எழுச்சிக்குரல், நவமணி, தினகரன், மெட்ரோ நியூஸ், தினக்குரல் போன்ற பல பத்திரிகைகளின் நிருபராகப் பணிபுரியும் காதர் இன, மத பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று செய்திகளைத் தருபவர். காதர் ஒரு நடுநிலை செய்தியாளர் என்று பெயர் பெற்றவர். பல விருதுகளுக்கும் சொந்தக்காரன்.

எம்.சி.எம். முகம்மது அப்துல் காதர், ஜே.பி.

முகம்மது காசிம் மரைக்கார் முகம்மது அப்துல் காதர் மருதமுனையில் பிறந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது கல்வியை மேற்கொண்ட இவர் தனது இளமைக்காலம் தொட்டே எழுத்து, கல்வி, அறிவுத் தேடல்களில் அதிக ஈடுபாடு காட்டினார்.

மருதமுனையின் கலை, இலக்கிய, சமூக ஆய்வு சஞ்சிகையாக வெளிவரும் "அல்-மருதமுனை" யின் ஆசிரியரான சகோதரர் காதர் பல சிரமங்களுக்கு மத்தியிலும் இப்பணியை மேற்கொள்வது இவரது சமூகப்பற்றின் வெளிப் பாடாகும். இது தவிர "ஹலோ மருதமுனை" மற்றும் Call Biz @ Maruthamunai சமாதான நீதவான்கள் போன்ற ஆக்கங்களையும் எமக்கு வழங்கியுள்ளார். சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் இவர் சமூக விரோதச் செயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளைத் தட்டிக்கேட்கும் துணிவு கொண்டவர் என்பதும் பொய்யல்ல. இவரது பணிகள் தொடரட்டும்.

ஜெஸ்மி எம். மூஸா

அலிஸ் நியூஸ் (Alish News) ஊடக ஸ்தாபகர். ஒரு ஊடகவியலாளர். குறைவான கவிதைகள் எழுதினாலும் நிறையவே இலக்கியப் பங்களிப்புச் செய்திருக்கிறார். விமர்சகராகவும், ஓர் ஆய்வாளராகவும் திகழும் இவர் பலதரப்பட்ட விடயங்களை வைத்து பல நூல் களைத் தந்தவர். சர்வதேச தமிழ் இலக்கிய மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருக்கிறார். தமிழ் கட்டுரைகளை தினக்குரல், தினகரன், எங்கள் தேசம் ஆகிய பத்திரிகைகளில் எழுதியவர். நாகம்மாள் ஒரு பார்வை (2008), திருக்குறள் அங்க இயல் (2008), தேடலின் ஒரு பக்கம் (2008). க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கு இலக்கிய நயம் தொடர்பான பகுதி நூல்களையும் வெளியிடுபவர்.

எம்.ஐ.எம். வலீத்

ஆசியா பவுண்டேஷன், கிழக்கு மாகாண நிகழ்ச்சித்திட்ட அதிகாரியாகக் கடமைபுரியும் எம்.ஐ.எம். வலீத் 1975-01-24ல் மருதமுனையில் பிறந்தார். நவமணி, தினகரன் போன்றவற்றின் செய்தியாளராக 1997இலிருந்து செயலாற்றி வரும் இவர் விளையாட்டு, அரசியல், சமூக சேவையெனப் பலவற்றின் மூலம் சேவையாற்றி வருகிறார். இவர் பல விருதுகள் பெற்றவர். சுமார் 6 வருடங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் (PHI) கடமையாற்றினார்.

ஹரீஷா முகம்மது சமீம்

சிரேஸ்ட ஊடகவியலாளர் பீ.எம்.எம்.ஏ. காதர் அவர்களின் புதல்வி ஹரீஷா 06-09-1980ல் மருதமுனையில் பிறந்தார். நவமணி, தினக்கதிர், இடி, சுடர்ஒளி போன்றவற்றில் 2001 முதல் எழுதி வருகிறார். நூலக உதவியாளராக கடமை யாற்றும் இவரது கணவன் அப்துல் ஜப்பார் சமீமும் ஒரு ஊடகவியலாளர்.

எம்.என்.எம். பதுறுத்தீன் ஜே.பி.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கல்முனை நிருபராக 2000ம் ஆண்டிலிருந்து செயலாற்றும் எம்.என்.எம். பதுறுத்தீன் ஜே.பி. 1963-12-23இல் மருதமுனையில் பிறந்தார். அகில இலங்கை சமாதான நீதவானாகிய இவர் உயர்கல்வி, கணனி தொடர்பான கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றைத் தருகிறார்.

எம்.எச்.எம். அமீன்

எழுவான், எங்கள் தேசம், நவமணி போன்றவற்றில் 2005 முதல் எழுதிவரும் அமீன் 1973-03-02ல் மருதமுனையில் பிறந்தவர்.

ஏ.எல்.எம். சினாஸ் *B.A. (Sp.)*

1962-10-02ல் மருதமுனையில் பிறந்த இவர் பிறை எப்.எம். சேவையில் அறிவிப்பாளராகக் கடமையாற்றுகிறார். கலை, இலக்கியம், பேச்சு, விளையாட்டு என இவரது பணி பரந்து செல்கிறது. பல விருதுகளுக்குச் சொந்தக்காரரான இவர் படப்பிடிப்பாளருமாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்கால வாழ்வியல்

மருதமுனையின் நினைவுக் குறிப்புக்கள்

எஸ்.எம். அபூபக்கர் (நஜீம்) ஆசிரியர்

இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த முரண்பாடுகள் வளர்ந்து, வலுப்பெற்று (1983ம் ஆண்டு தொடக்கம் 2009) வரை ஆயுத போராட்டமாக வெடித்திருந்தது. இப்பிரச்சினையானது இதனுடன் தொடர்பில்லாத முஸ்லிம் மக்களையும் பாதித்த; அதேவேளை தேசிய பிரச்சினையாக, இந்திய உபகண்ட பிரச்சினையாகவும், சர்வதேச பிரச்சினையாகவும் மாறி வளர்ந்திருந்தது எனலாம்.

இலங்கையின் இனப்பிரச்சினை மற்றும் மருதமுனையின் அரசியல், கலாசார, பண்பாடு தொடர்பாக 'மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்' எனும் நூலில் பல்வேறு துறைசார் அறிஞர்கள் பல தலைப்புக்களில் கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். எனவே எனது இந்த "போர்க்கால வாழ்வியல்" எனும் தலைப்பிலான குறிப்புக்கள் 1983 - 2009ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மக்களின் வாழ்க்கையைப் பாதித்த அம்சங்களை பற்றியும் இம்மக்களின் தொழில், பொழுதுபோக்கு அம்சங்கள், புதிய சொற்பிரயோகங்கள், வாழ்க்கை முறை, சில நிறுவனங்களின் பெயர்கள், திருமண நிகழ்வுகள் என்பன போன்ற அம்சங்கள் சிலவற்றையும் தற்போதுள்ளவர்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் கொண்டு செல்வதற்காக பதியப்படுகின்றன.

எமது மருதமுனைக் கிராமம் தமிழ்க் கிராமங்களை சூழவுள்ளதாக காணப்படுகின்றது. எமது மக்கள் சமாதான விரும்பிகள் என அடுத்தவர்கள் சான்றிதழ் வழங்குகின்ற அளவுக்கு எடுத்துக் காட்டுள்ளவர்களாக திகழ்கின்றார்கள். 1970ம் ஆண்டிற்கு முன்னர் தனிப்பட்ட நபர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினைகள் ஊர்க்கலவரமாக மாறி இருந்தன. இந்நிலையில் தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த பெரியோர்களுடன் எமது கிராமத்தைச் சேர்ந்த பெரியோர்கள் பேசி ஒரிரு தினங்களுக்குள் அமைதியை ஏற்படுத்தி வந்துள்ளனர். எவ்வாறாயினும் 1969ம் ஆண்டு இறுதிப்பகுதியில் எமது கிராமத்திற்கும் பெரியநீலாவணை, துறைநீலாவணை, கல்லாறு ஆகிய கிராமங்களுக்குமிடையில் ஏற்பட்ட இனக் கலவரம் பல நாட்கள் நீடித்ததோடு கல்முனை பொலிஸாருக்கும் எமது மக்களுக்கும் இடையே மோதல் ஒன்றும் ஏற்பட்டது. இறுதியில் எமது ஊரைச் சேர்ந்த மகன் ஒருவர் பெரியநீலாவணை V.C. வீதியில் வைத்து கொல்லப்பட்டதன் பின்னர் கலவரம் முடிவுக்கு வந்தது. அப்போது எல்லையில் வாழ்ந்த எம்மவர்கள் உறவினர்கள் வீட்டில் அகதிகளாக வாழ்ந்தார்கள்.

எவ்வாறாயினும் 1983ம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கை அரச படைகளுக்கும், தமிழ்ப் போராளிகள் குழுக்களுக்குமிடையே மோதல்கள் வெடித்த போது ஏனைய பல முஸ்லிம் கிராமங்கள் போரில் சிக்கிக்கொண்டன. குறிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளிக் குழுக்கள் முஸ்லிம் கிராமங்களை தாக்கி பலரை கொன்ற போதும் எமது மக்களின் புத்திசாலித் தனத்தில் இக்கால கட்டத்தில் இனக்கலவரங்கள் ஏற்படவுமில்லை; எமது கிராமத்தை போராளிக் குழுக்கள் தாக்கவுமில்லை. இதற்கு எமது ஊரின் புவியியல் அமைப்பும் மக்களின் மனோ நிலையுமே காரணங்கள் எனக் குறிப்பிடலாம்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் அன்று முஸ்லிம்களின் அழிவு குறிப்பாக சொத்தழிவு 10,000 கோடி எனவும். காணாமற் போனோர் 7,000 பேர் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய முஸ்லிம் கிராமங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது எமது கிராமத்தின் அழிவு குறைவு என்றே குறிப்பிட முடியும். 1981 தொடக்கம் 2009 வரை கடத்தப்பட்டும் காணாமற் போனோரின் தொகை சுமார் 70 பேர் எனக் கூறப்படுகின்றது.

1983ம் ஆண்டிற்கு முன்னர் எம்மவர்களின் தொழிற்றுறைகள் மருதமுனைக்கு அப்பால் இருந்ததை நாம் அறிவோம். அவர்கள் அரசாங்க உத்தியோகம், வியாபாரம், புகையிலைச் செய்கை, மாடு வளர்ப்பு போன்றவைகளில் ஈடுபட்டிருந்தார்கள். இத்தொழில்கள் போர்க்காலத்தில் கைவிடப்பட்டதுடன் மாலை ஆறு மணியுடன் எம்மவர்கள் ஊரை வந்தடைந்தும் விடுவார்கள்.

போர்க்காலத்தில் எமது ஊரைச்சேர்ந்த அதிகமான ஆண்களும், பெண்களும் தொழில்வாய்ப்பைப் பெற்று அரபு நாடுகளுக்குச் சென்றார்கள். இதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் புதிதாக தோற்றம் பெற்றதோடு சிலர் மருதமுனையிலிருந்து கொழும்புக்கு சென்று வருவதற்கான தனியார் வாகன சேவைகளை நடாத்திக்கொண்டிருந்தனர். மட்டக்களப்பிலிருந்து செல்லும் புகையிரதம் தடைப்பட்டமையினால் வாகனத்தொழில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அதுமட்டுமல்லாமல் கொழும்புக்குச் செல்பவர்கள் தங்குவதற்காக அங்கு தங்குமிடங்களை அமைத்து வருமானங்களை ஈட்டிக்கொண்டனர். அத்தோடு அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கடவுச்சீட்டு போன்ற வைகளை பெற்றுக்கொடுத்ததோடு சிலர் முத்திரை வியாபாரத்திலும் ஈடுபட்டி ருந்தார்கள்.

மேலும் போர்க் காலத்தில் போக்குவரத்துகள் அனைத்தும் வட கிழக்கில் ஆறு மணியுடன் முடிவுக்கு வந்துவிடும். இந்நிலையில் கொழும்பு செல்லும் எம்மவர்கள் அதற்கு முதல் புணானை, மகாஓயா ஆகிய சோதனைச் சாவடிகளை தாண்ட வேண்டும். மேலும் கொழும்பிலிருந்து வருபவர்கள் இரவு இரண்டு மணிக்கு வந்தாலும் காலை 6.00 மணி / 9.00 மணிக்குப் பின்னர்தான் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இக்கால கட்டத்தில் வாகன உரிமையாளர்கள் பல புதிய பாதைகளைக்கூட கண்டுபிடித்திருந்தார்கள். விபில, சடயந்தலாவ, இங்கினியாகல, சியம்பலாந்துவ ஆகியவைகளினூடாக கொழும்பு செல்வதற்கும் வருவதற்கும் பாதைகளை கண்டுபிடித்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் இன்னும் சிலர் வேறு தொழில்கள் மூலமும் பணம் சம்பாதித்திருந்தனர். குறிப்பாக 1987 - 1990 வரை வடகிழக்கில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்தபோது அவர்களுக்கு எமது ஊரைச் சேர்ந்த தரகர்கள் 500/- பெறுமதியான Tap Recorder களை 1500/- அல்லது 2,000/- வரை விற்று பெருமளவு இலாபம் ஈட்டிக்கொண்டார்கள். மேலும் இந்திய இராணுவத்தினரிடம் இந்தியன் பீடி, செய்யது பீடிகளைப் பெற்று சில்லறைக் கடைக்காரர்கள் இலாபம் ஈட்டினார்கள். வேறு சிலர் பெற்றோல், மண்ணெண்ணெய் போன்ற வியாபாரங்களிலும் ஈடுபட்டார்கள். மேலும் உக்கிரமான போர் காலத்தில் தமிழ் வியாபாரிகளும் மக்களும் கல்முனை செல்லமுடியாத நிலை காணப்பட்ட போதிலும் எமது ஊரில் பிரதான வீதி எங்கும் நடைபாதைக் கடைகள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் பலர் பணம் சம்பாதித்துக் கொண்டவையும் போர்க்கால வாழ்வியலில் ஓர் அம்சமாக குறிப்பிட முடியும்.

1987ம் ஆண்டு இந்திய இராணுவம் வடகிழக்கில் நிலை கொண்டிருந்தமையால் அவர்களை வெளியேறுமாறு கோரி தென்னிலங்கையில் ஜேவிபியினர் கலவரங்களில் ஈடுபட்டனர். இந்நிலையில் இந்திய பொருட்களுக்கும் அவர்கள் தடைவிதித்திருந்தார்கள். இந்திய பீடி பிடித்தவர்களின் உதட்டை அறுத்ததும், இந்திய சாரனை அணிந்தவர்களின் சாரணை உரிந்து எடுத்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.

இந்நிலையில் போர் நடைபெற்றாலும் எமது கிராமத்தின் பாரம்பரிய தொழிலான நெசவுத் தொழில் சிறப்பாக இருந்தது. எமது ஊர் உற்பத்திகளுக்கு சிறந்த சந்தைவாய்ப்பு கிடைத்ததனால் எமது ஊரைச் சேர்ந்த நெசவு முதலாளிகள் நன்மையடைந்தனர்.

1983ம் ஆண்டு இன வன்முறைக்குப் பின்னர் தமிழ் இளைஞர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயர்ந்தார்கள். எமது கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களும், இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சலாந்து போன்ற நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து பலர் கோடீஸ்வரர்களாக இன்னும் எம் மத்தியில் வாழ்கின்றனர். சிலரின் பெயருடன் சுவிஸ் என்றும், லண்டன் என்றும் இணைத்துக் கூறுவதை காணலாம்.

சோதனைச் சாவடிகளும் ஆள் அடையாள அட்டையும் போர்க்கால வாழ்வியலில் முக்கிய அம்சமாக பதியப்பட வேண்டியதாகும். 1972ம் ஆண்டு இலங்கையில் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது இது கேலியாகப் பார்க்கப்பட்டது. ஆனால் போர்க்காலத்தில் ஊருக்குள் இருந்து பிரதான வீதிக்கு வருவதோ, அருகிலிருந்த பெரியநீலாவணைக்குச் செல்வதோ முடியாததாகும். பயணங்களில் பணம் இல்லாவிட்டாலும் ஊர் போய் சேரலாம். ஆனால் அடையாள அட்டை இல்லாவிட்டால் எங்கும் நகர முடியாது. பாதுகாப்புப் படையினர் முதலில் பரிசீலிப்பது அடையாள அட்டையை. பின்னர்தான் பயணப் பொதிகளை சோதனை செய்வர். அடையாள அட்டை இல்லாதவர்களை வேறாக விசாரிப்பதற்கு நிறுத்தப்படுவார்கள். அவ்வேளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் எனக் கூறினாலும் நம்ப மாட்டார்கள். சிலரை உடல் பரிசோதனைக்கு உட்படுத்துவார்கள். (கத்னா செய்யப்பட்டதை உறுதி செய்வர்). இதைத் தவிர அல்குர்ஆன், கலிமா என்பவற்றை ஓதிக்காட்டச் செய்வர். மேலும் சிலரிடம் அடையாள அட்டை இருந்தும், கலிமாவைக் கூறினாலும் பாதுகாப்புப் படையினர் முஸ்லிம் என நம்ப மறுத்த சந்தர்ப்பங்களும் உண்டு. காரணம் எம்மவர் சிலரின் பெயர் சின்னத்தம்பி, தங்கராசா, தம்பிக்கண்டு, வெள்ளத்தம்பி, சின்னராசா என்பன போன்ற பெயர்கள் தமிழர் பெயர் என சந்தேகப்பட்டதே காரணமாகும்.

போர்க்கால வாழ்வியலில் மேலும் சில விடயங்களும் குறிப்பிட வேண்டியதாகும். அதாவது சில வெளிநாட்டுச் செய்தியூடகங்கள் குறிப்பாக London BBC, ஆகாச வாணி, பிலிப்பைன்ஸ் வானொலியான வெரிதாஸ் என்பன எம்மவர்களுக்கு பரீட்சயமான ஊடகங்களாக மாறின. நடுநிலையான அல்லது ஏதோ ஒரு உண்மைச் செய்திகளை கேட்பதற்காக தமிழ்மக்கள் அவைகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இலங்கைச் செய்திகளை அநேகமானோர் நம்புவதே இல்லை. "லங்கா புவத்" என்ற செய்தி ஸ்தாபனம் இலங்கையின் உத்தியோகபூர்வமான செய்தி ஸ்தாபனம் என்பது போர்க்காலத்திலேயே தெரியவந்தது. இதனை மக்கள் நம்ப மறுத்தார்கள் இட்டுக்கட்டப்பட்ட அல்லது சோடிக்கப்பட்ட பொய்யாக இதனை கருதினார்கள். நண்பர்களில் யாராவது எந்த நேரமும் பொய் கூறினால் அல்லது மிகைப்படுத்தி ஒரு செய்தியை கூறினால் அவரை நண்பர்கள் அதோ வருகின்றார் 'லங்கா புவத்' என கிண்டலாகக் கூறிய சுவாரஸ்யமான சந்தர்ப்பங்களும் உண்டு.

அத்தோடு "கலகத்தில் புளுகாதவன் நரகத்தில் பாதி" என்ற உவமையும் இக்காலத்திலேயே அநேக மக்களால் பிரயோகிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் சில சொற்பதங்கள் எம்மவர்களுக்கு பரீட்சயமாக மாறின. உதாரணம் ஹர்த்தால், சனி ஞாயிறு தவிர்ந்த அரசாங்க வேலைநாட்களில் போக்குவரத்தை தடைசெய்தல், அரச அலுவலகம், பாடசாலை என்பவற்றை இயங்க விடாமல் தடுத்தல், அரச ஊழியர்கள் வேலைக்குச் செல்லாது தடுப்பதற்காக பிரதான வீதிகளில் டயர் போட்டு எரித்தல் என்பன ஹர்த்தாலின் அடையாளங்களாகும். கொழும்புக்குச் செல்பவர்கள், அரச அலுவலகங்களுக்குச் செல்பவர்கள் அல்லது வியாபாரிகள் ஞாயிற்றுக்கிழமை இரவு படுக்கைக்குச் செல்லும்போது "நாளை ஹர்த்தாலா? வாகனம் ஓடுமா?" என்ற சிந்தனையுடனேயே தூங்குவார்கள்.

குறிப்பாக வடகிழக்கு மாகாண சபை இருந்த காலத்தில் மூன்று மாதம் சிவில் நிர்வாகம் கல்முனை மாநகரத்தில் தடைப்பட்டிருந்தது. அது மட்டுமல்லாமல் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில் திங்களும், வெள்ளியும் சிவில் நிர்வாகம் போராளிக் குழுக்களால் தடைசெய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் வங்கிகளில் கடும் நெருக்கடி காணப்பட்டது. அதன் காரணமாக எம்மவர்கள் வெளி நாடுகளிலிருந்து அனுப்பும் காசோலைகளை மாற்றுவதற்காக கொழும்பு சென்று வந்தவர்களும் எம்மத்தியில் காணப்படுகின்றார்கள். மேலும் ஹர்த்தால் காலத்தில் திருமணங்கள் நடந்தால் திருமணத்திற்கு அழைத்தவர்கள் எல்லோருமே வந்து விடுவார்கள். மேலும் திருமண வைபவங்கள் முன்னரெல்லாம் இரவு நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஐந்து மணிக்கு நடைபெறும். ஆனால் திருமண வைபவம் அனைத்தும் மாலை ஆறு மணிக்கு முன்னர் நடந்து முடிந்துவிடும். இது போர்க்கால வாழ்வியல் என்றே கூறவேண்டும்.

ஊரடங்குச் சட்டத்தினை எம்மவர்களின் வாழ்வில் முக்கிய அம்சமாக குறிப்பிட வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் ஊரடங்குச் சட்டம் என்றால் பிரதான வீதியில் மட்டுமே மக்கள் நடமாட முடியாது. ஆனால் 1987ல் இந்திய இராணுவம் வடகிழக்கில் நிலைகொண்டிருந்த போது அவர்கள் அமுல்படுத்திய ஊரடங்குச் சட்டம் மிகக் கடுமையானதாகும். அதாவது ஊரடங்குச் சட்டம் என்பதைவிட ஊடடங்குச் சட்டம் என்பதே பொருத்தமானதாகும். இந்திய இராணுவத்தினர் ஊருக்குள்ளும் வந்து வெளியில் நிற்பவர்களை தாக்குவார்கள். ஊரடங்குச் சட்டம் என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான CURFEW என்பதை அவர்களுடைய பாசையில் "கறுப்பி" எனக் கூறிக்கொண்டு கடற்கரையில் நிற்பவர் களை வீடு வரை துரத்திக் கொண்டு செல்வார்கள்.

போர்க்கால வாழ்வியலின் நினைவுக் குறிப்புக்களில் எம்மவர்களின் பொழுது போக்குகள் பற்றியும் குறிப்பிட வேண்டிள்ளன. எமது கிராமத்தில் இப்போது உள்ளதைப் போல் இறுக்கமான இஸ்லாமிய அமைப்புக்களோ, மார்க்க உபதேசங் களோ, தீவிர வணக்க ஈடுபாடுகளோ அப்பொழுது காணப்படவில்லை. அக்காலத்தில் நாடகம், இசைக்கச்சேரி என்பவற்றுக்கு எம்மவர்கள் செல்வார்கள். அத்தோடு பிரதான பொழுதுபோக்காக சினிமா தியேட்டர்களுக்கு படம் பார்க்கச் செல்வார்கள். சிறுவர்களும், பள்ளி மாணவர்களும், பகல் காட்சி களுக்கும், வளர்ந்தவர்கள் இரவுக் காட்சிகளுக்கும் செல்வார்கள். கல்முனைக்கு மட்டும் அல்லாமல் புதிய படங்கள் வெளியாகின்ற திகேட்டர்களுக்கும் செல்வார்கள். கோயில் திருவிழாக்களில் கலந்து கொண்டு பொழுதைப் போக்குவார்கள். அங்கு நடைபெறுகின்ற நாடகங்கள், இசைக்கச்சேரி ஆகியவைகளைப் பார்த்துவிட்டு அதிகாலையில் வீடு வந்து சேருவார்கள். அப்போது வீட்டில் உள்ள பெரியார்களினால் தண்டிக்கப்படுவதும் உண்டு.

ஆயினும் போர்க்காலத்தில் மேற்கூறிய யுகம் முடிவுக்கு கொண்டுவரப் பட்டது. அத்தோடு வீடியோ, டெக், படக்கொப்பிகள் என்பன புளக்கத்திற்கு வந்ததன. யுத்தம் காரணமாக சினிமா தியேட்டர்கள் மூடப்பட்டன. இந்நிலையில் வீடுகளிலே படம் பார்க்கின்ற நிலை தோன்றியது. நண்பர்கள், உறவினர்கள் ஒருவருக்கு 3 ரூபாய் வீதம் வசூல் செய்து படம் பார்ப்பார்கள். ஊரடங்குச் சட்ட வேளையிலும் வியாழன் இரவும் படக்காட்சிகளே எமது ஊரில் இடம்பெறும். மேலும் இக்காலத்தில் கத்னா வைபவம் (சுன்னத்துக் கல்யாணம்)களின் போது இசைக்கச்சேரி வைப்பதற்குப் பதிலாக வைபவம் நடைபெறும் வீட்டாரின் இலவச வீடியோ படக்காட்சி விடிய விடிய நடை பெறும். வளவு எல்லாம் சனக்கூட்டம் காணப்படும். அதிகாலையில் இறுதிப் படம் முடிவடையும் தறுவாயில் ஒரு சிலரே விழித்திருக்க ஏனையவர்கள் வளவிலேயே தூங்கிவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஹர்த்தால் காலத்திலும், ஊரடங்குச் சட்டக் காலத்திலும் போராளிக் குழுக்கள் முஸ்லிம் கிராமங்களை தாக்கிய காலங்களிலும் எம்மவர்கள் பாது காப்புப் படையினரின் அறிவுறுத்தலின் பெயரில் விடிய விடிய விழித்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது. இவ்வேளையில் சீட்டு விளையாடுதல், படம் பார்த்தல் என்பன பொழுது போக்கு அம்சங்களாக குறிப்பிடப்படுகின்றது. இவ்வேளைகளில் நித்திரை விழிப்பதற்காக பயறு, கடலை, கச்சான் கொட்டை போன்றவற்றை அவித்தும் வறுத்தும் ஒன்றாக சேர்ந்து பரிமாறுவார்கள். சிலர் கூட்டத்தோடு இருந்துவிட்டு ரகசியமாக படுக்கைக்குச் சென்று விடுவார்கள்.

போர்க்கால வாழ்வியல் குறிப்பேடுகளில் சில அரச தொழில்களைப் பற்றியும் நான் குறிப்பிடுதல் வேண்டும். படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற பேதம் மில்லாமல் சில இளைஞர்கள் ஊர்காவல் படையில் இணைந்து கொண்டார்கள் (Home Guard) இதனை எம்மவர்கள் ஹோம்காட் என்றும் அழைத்துக் கொண் டார்கள். மேலும் சில படித்த இளைஞர்கள் நிரந்தர பொலிஸ் படையிலும் ரிசோவ் பொலிஸிலும் விசேட அதிரடிப்படையிலும், ராணுவத்திலும் இணைந்து கொண்டார்கள். இங்கு குறிப்பிடப்பட்ட சொற்பதங்கள் எம்மவர்களுக்கு புதிய தாகும். போராளி இயக்கங்களை கட்டுபடுத்துவதற்காக இலங்கை அரசாங் கத்தால் உருவாக்கப்பட்ட விசேட பொலிஸ் அணி STF என அழைக்கப்பட்டது. இதனை தமிழில் விசேட அதிரடிப்படை எனக் கூறினாலும் எம்மில் வயது முதிர்ந்தவர்கள் அரிதட்டுப்படை என்றும் STO என்றும் கொச்சையாக குறிப்பிட்டார்கள்.

இதே வேளையில் 1983ம் ஆண்டு போராட்டம் தொடங்கிய காலத்தில் எமது ஊரைச் சேர்ந்த இளைஞர்கள் போராட்டத்தின் நியாயத்தன்மையை எடுத்துக் கூறி ஆதரவாகவிருந்த அதேவேளையில் சிலர் நிதியுதவியும் வழங்கினார்கள். அருகிலுள்ள தமிழ் கிராமங்களை பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்து தேடுகின்றபோது எல்லையிலுள்ள எமது ஊரவர்கள் போராளிகளை ஒழித்து வைத்து பாதுகாத் திருந்தார்கள். அத்தோடு பல இளைஞர்கள் போராட்ட இயக்கங்களில் இணைந் திருந்தனர். குறிப்பாக சிலர் இயக்க பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்கள். E.P.R.L.F. இயக்கத்தில் மத்திய குழு உறுப்பினராகவிருந்த மிஷ்லார் என்பவருக்கு 'கமலன்' என்ற பெயர் வைக்கப்பட்டது. இதேபோல் அந்த இயக்கத்தின் ராணுவப் பிரிவிலிருந்த ரஷாக் என்பவர் 'ரவி' என்று அழைக்கப் பட்டார்.

இப்போர்க்கால கட்டத்தில் பல புதிய சொற்பதங்கள் எம்மவர்களுக்கு பரீட்சயமாயின. STF, Home Guard, I.P.K.F., E.P.R.L.F., L.T.T.E. டெலோ, புளட், E.N.D.L.F. போன்ற சொற்பதங்களும், Round Up, சென்றி, கிளியர் Party, ஜிஹாத், கெனடி, மண்டயன் குழு முதலிய சொற்பதங்களும் பயன்படுத்தப் பட்டன. மேலும் ஏதாவது ஒரு விடயத்தைப் பற்றி நண்பரிடம் பேசிக்கொண் டிருக்கும் போது உங்களது கருத்து என்ன? என்று கேட்பதற்குப் பதிலாக உங்கள் நிலைப்பாடு என்ன? என்று கேட்பார்கள். மேலும் இயக்கப் போராளிகளை தமிழ் மக்கள் பொடியன்கள் என்றும், பொடிகள் என்றும் அழைப்பார்கள். இதனை எமது ஊரவர்களும் பொடியன்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். ஒருவர் மரணித்தால் அவர் மண்டையைப் போட்டிட்டார் எனக் கூறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் போர்க்காலத்தில் இயக்கப் போராளிகள் நிதியைப் பெற்றுக்கொள் வதற்காக தபாலகங்களில் முத்திரைகளை கொள்ளையிடுதல், வங்கிகளை கொள்ளையிடுதல் என்பதோடு அரச உத்தியோகத்தர்களின் சம்பள தினத்தில் அதனை கொள்ளையடிப்பதும் ஒரு கலாச்சாரமாக மாறியது. அப்பொழுதெல்லாம் எமது ஊரிலுள்ள பாடசாலைகளில் சம்பளத்தை பெற்றுக்கொள்வதற்காக திடகாத்திரமான ஆசிரியர்கள் வங்கிக்கு சென்று வந்து பாடசாலையில் சம்பளத்தை மிகப் பாதுகாப்பாக பிரிப்பார்கள். அவ்வேளையில் வெளியில் ஆசிரியர்கள் விழிப்புடன் பாதுகாப்பாக இருப்பார்கள். இதுவும் போர்க்கால வாழ்வியலில் பதியப்படவேண்டிய அம்சமாகும்.

மேலும் போர்க்காலத்தில் எமது ஊரின் பிரமுகர்கள், புத்திஜீவிகள் போன்றோர் ஒன்றுசேர்ந்து சமாதான சபையை உருவாக்கி இருந்தார்கள். இதனைப் பற்றி இந்நூலில் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. மிக நெருக்கடியான காலத்தில் இவர்களது பணிகள் பாராட்டிற்குரியன மட்டுமல்லாமல் வியப்புக்குரிய பணி களாகவும் காணப்பட்டன. இவர்கள் உயிரை பணயம் வைத்து ஊரை பாதுகாத் தவர்கள் என்றும் கூறலாம். பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் மட்டுமல்லாமல் போராட்ட குழுக்களின் முகாம்களுக்குக்கூட சென்று வந்தார்கள். இவர்கள் கடத்தப்பட்டவர்களை மீட்டு வந்திருக்கின்றார்கள். நஷ்டஈடு செலுத்தி வந்திருக்கின்றார்கள். ஏதாவது பிரச்சினையின் போது இவர்களின் வருகையை ஆவலுடன் ஊர் மக்கள் எதிர்பார்த்தார்கள்.

யுத்த காலத்தில் அநியாயமாக மரணமடைந்தவர்களுடைய மையித்தை நல்லடக்கம் செய்கின்றபோது இளைஞர்கள் கொதித்தெழுந்தார்கள். அவ் வேளையில் எமது சமாதான சபையின் உத்தியோகஸ்தர்கள் இளைஞர்களை அமைதிப்படுத்தி பொறுமையின் முக்கியத்துவத்தை உணர்த்தி உரையாற்று வார்கள். இதன் மூலம் பல அனர்த்தங்களை எம்மவர்கள் தடுத்திருக்கின்றார்கள். எம்மவர்களுடைய ஊருக்கு கட்டுப்படுகின்ற பண்பினை போர்க்காலத்தில் நாம் அவதானித்திருக்கின்றோம்.

போர்க்கால வாழ்வியல் சூழலில் ஆயுதங்களின் பெயர்களையும் எம்மவர்கள் தெரிந்துகொண்டார்கள். AK 47, T56, SLR, LMG, Lorry, பவள், கவச வாகனம், T72, டாங்கிகள், பரா (வெளிச்சம்), குண்டு வீச்சு விமானங்களான புகாரா, ஷியாச்சட்டி, பம்பர், ANTANO போன்ற விமானங்கள், துப்பாக்கிகளின் பெயர்களும் தெரியவந்ததோடு ஹெலிகொப்டர், கன்ஷிப் (துப்பாக்கி பொருத் தப்பட்ட ஹெலிகொப்டர்), கடற்படையினர் பயன்படுத்தும் டோறா படகு போன்றவற்றையும் எம்மவர்கள் தெரிந்துகொண்டனர்.

எமது கிராமத்தின் சனத்தொகை வேகமாக அதிகரித்து வந்ததன் காரணமாக பெரியநீலாவணை தமிழ் கிராமத்தவர்கள் நல்ல விலைக்கு தமது காணிகளை எம்மவர்களுக்கு விற்றார்கள். அம்மக்களுக்கும் எமக்குமிடையே எப்பொழுதும் நல்லுறவு நிலவியது, நிலவுகின்றது. ஆயினும் போர்க்காலத்தில் போராளிக் குழுக்களின் வற்புறுத்தலின் பேரில் ஓர்துண்டு நிலமேனும் எம்மூரவர்களுக்கு அவர்கள் விற்கவில்லை. விற்கப்பட்ட காணியும் மீளப்பெறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் போர்க்காலத்தில் பொலிஸ் நிலையங்களும், நீதிமன்ற நடவடிக்கைகளும் முடக்கப்பட்டிருந்த வேளையில் எமது ஊரில் ஏற்பட்ட களவு, கொடுக்கல் வாங்கல்கள், குடும்பத் தகராறு மற்றும் வேறு பிரச்சினைகளை எம்மவர்கள் குடும்பத் தலைவர்கள் மூலமும், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் மூலமும் சமாதான சபையினூடாகவும் தீர்வுகாணப்பட்டன. ஆயினும் சிலர் இதை மீறி போராளிக் குழுக்களின் முகாம்களுக்குச் சென்று நீதி தேடியதுமுண்டு.

எமது கிராமத்தவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் இயக்கங்களுக்கு அச்சத்தின் காரணமாக கப்பம் செலுத்தி வந்தனர். இதையும் மீறி சில இயக்கங்கள் வசதிபடைத்த வியாபாரிகளை அல்லது அவர்களுடைய பிள்ளைகளை தங்களுடைய கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு கடத்திச் சென்று விடுவர். அவ்வேளையில் எமது ஊர் பெரியவர்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அவர்களை மீட்டுவந்தார்கள். மேலும் போர்க்கால வாழ்வியலின் சூழலில் லொறிகள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனம் வைத்திருப்பவர்கள். அதனைக் அச்சத்துடனேயே பயன்படுத்தி வந்தனர். மோட்டார் சைக்கிள்களை பறிப்பது, லொறிகளை கடத்துவது என்பனவும் அக்காலப்பகுதியில் இடம்பெற்றன.

எமதூரிலிருந்து மட்டக்களப்பு போன்ற இடர்களுக்குத் தொழிலுக்காகச் செல்பவர்கள் அதிகாலையிலேயே வாகனத்தில் ஏறினாலும் றோட் கிறியரிங் என்ற பெயரில் பிரயாணிகளை வாகனத்திலிருந்து இறக்கி நடந்துவர இராணுவத்தினர் பணிப்பார்கள். ஒருவர் மட்டக்களப்பைச் சென்றடைய சுமார் நான்கு ஐந்து மணித்தியாலயங்கள் தேவைப்பட்டன. சில காரியாலய உயரதிகாரிகள் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது பதிவுப் புத்தகத்தில் சிவப்புக் கோடுகள் அடிப்பதும், கடிந்து பேசுவதும் சாதாரண நிகழ்வுகளாக விருந்தன. சில போது சில இடங்களில் பிரயாணிகள் இறக்கப்பட்டு வரிசையில் வரப் பணிக்கப்படுவர். கையிலிருக்கும் ஆயுதத்தினால் படையினர் ஓங்கி அடித்த நிகழ்வுகள் பல நடந்தன. ஒரு சமயம் ஒரு நீதிபதி, D.S. போன்றவர்களும் மற்றும் உயரதிகாரிகளும் இந்தியப்படையினரால் ஆடுகளுடன் வாகனத்தில் ஏற்றப் பட்ட காட்சி எம்மைக் கண்ணீர் சிந்த வைத்தது.

படையினர் தராதர வித்தியாசமின்றி ஒருமையாகப் பேசுவதும், தப்புத் தப்பாக ஆங்கிலம் பேசுவதும் அத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் சிரிப்பை வரவழைப்பதுமுண்டு. அவர்கள் பேசும் ஆங்கிலம் இவ்வாறு அமைந்திருந்தன. *No standing here,Go standing there.* இங்கு நிற்காமல்அங்கு போய் நில் என்பது இதற்குப் பொருள். *No Identity card - yes problem, Yes Identity card No problem.* அடையாள அட்டை இல்லையென்றால் பிரச்சினைதான் என்பது இதன் பொருள். சிலர் ஏதோ வேறு ஒருவருடைய அடையாள அட்டையைக் காட்டி விட்டுச் செல்வதுமுண்டு.

இக்காலப்பகுதியில் பிரயாணம் செய்வதென்பது வாழ்க்கையின் இறுதிப் பிரயாணம் என்ற நினைவுடனேயே செல்ல வேண்டியிருந்தது. கண்ணி வெடியில் இறந்த சம்பவங்கள், திருவிழாவுக்குச் சென்று கொல்லப்பட்ட நிகழ்வுகள், தூர இடங்களுக்குச் சென்று மீண்டுவராத சம்பவங்கள், பல நாட்களின் பின் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட சம்பவங்கள் எனும் போர்க்கால வாழ்வின் எம்மவர்கள் கண்டு அனுபவித்த விடயங்கள் இன்றும் ஆறாத வடுக்களாகவே பார்க்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனிமுகம்மது அபூபக்கர் (நஜீம்), ஆசிரியர்

"நஜீம் மாஸ்டர்" என்றே எல்லோராலும் அறியப்படும் சீனிமுகம்மது முகம்மது அபூபக்கர் 13-03-1958இல் மருதமுனையில் பிறந்தவர். ஏழைக் குடும்பம் ஒன்றில் பிறந்த இவர் குடும்பநிலை காரணமாக நான்காம் ஆண்டுவரையிலேயே பாடசாலைக் கல்வியைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றார். சிறுபராயத்திலேயே குடும்பச் சுமையைப் பொறுப்பேற்க வேண்டியதனால் நெசவுத்தொழில், கடல் தொழில், புகையிலைவாடி போன்றவற்றின் மூலம் வருமானம் பெறும் முயற்சியில் தன்னை உட்படுத்திக் கொண்டார். இவ்வேளையிலும் கல்விகற்க வேண்டும் என்ற ஆசையும் அவாவும் அவரை ஆட்கொண்டது. இதனால் தனிப்பட்ட முறையில் கல்வியைத் தேடியதன் விளைவாக 1978ல் க.பொ.த. சாதாரண தரத்திலும், 1982ல் உயர்தரத்திலும் சித்தி பெற்றார். இவை மட்டுமன்றி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரியாகத் தோற்றி 1990ல் கலைப் பட்டதாரியாகத் தன்னை உயர்த்திக் கொண்டார்.

1993-01-11ல் தனது ஆசிரியர் நியமனத்தைப் பெற்று அல்-மனார் மத்திய கல்லூரிக்கு கல்விப்பணிபுரியும் பேற்றினைப் பெற்றார். சில காலங்களில் இடமாற்றம் பெற்ற இவர் 2004ல் மீண்டும் அல்-மனார் மத்திய கல்லூரியிலேயே ஆசிரியப் பணிபுரிய வந்துசேர்ந்தார். இன்றுவரை இப்பணியில் தனது திறமை களையும் முழுப்பங்களிப்பையும் செலுத்தி வருகிறார். இக்காலப் பகுதியில் 2009ல் இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்ளோமாவையும் பூர்த்திசெய்ததோடு இந்தியக் காமராஜர் பல்கலைக் கழகத்தின் அரசியல் முதுமானி கற்கை நெறியினையும் வெற்றிகரமாக நிறைவுசெய்தார்.

தான் பெற்ற அறிவினை மற்றவர்களும் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கில், பாடசாலைகளிலிருந்து பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் வாய்ப்பினை இழந்த மாணவர்களை ஆற்றுப்படுத்தி அறிவுரைகள் பகர்ந்து அவர்கள் தமது உயர் கல்வியினைத் தொடர்வதற்கான ஆலோசனைகளை வழங்குவது மட்டு மல்லாமல் அவர்களுக்கு பொருத்தமான கற்கை நெறிகளைத் தெரிவுசெய்து வெளிவாரிப் பட்டதாரிகளாக உருவாக்கியுள்ளமை இவரது சேவைக்கு ஒரு உதாரணமாகும். இவ்வாறு வெளிவாரிப் பட்டம் பெற்றவர்கள் எமது கிராமத்தில் மட்டும் இருநூறையும் தாண்டியிருப்பது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

மேலும் அரச உயரதிகாரிகளின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான வழிகாட்டுதல்களையும் செய்துவருகிறார். சமூக சேவையில் மிகுந்த ஆர்வமுடைய இவர் பல சங்கங்களின் மூலம் தனது பங்களிப்பினையும் வழங்கி வருகிறார்.

சீனிமுகம்மது பாத்திமா என்பவரைத் திருமணம் செய்து கொண்டுள்ள இவரின் கல்விப்பணி தொடர நாம் பிரார்த்திப்போமாக. - ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆ பள்ளிவாசல்

அல்-ஹாஜ். எஸ்.எம். பீர்முஹம்மது, ஜே.பி.
முன்னாள் தலைவர் - மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல், மருதமுனை.

தோற்றம் :

கிழக்கு மாகாணத் தலைநகர் மட்டக்களப்பிலிருந்து தென்திசை நோக்கிப் பயணிக்கும் ஒருவர் காத்தான்குடியென்னும் முஸ்லிம் கிராமத்தில் பள்ளிவாசல் களைக் காண்பார். அங்கிருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து வருகையில் சந்திக்கும் முதலாவது பள்ளிவாசல் மஸ்ஜிதுன்நூர் எனும் பள்ளிவாசலும் அது அமைந்துள்ள தனி முஸ்லிம் கிராமம் மருதமுனையும் ஆகும். மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களின் எல்லைக் கிராமமான பெரிய நீலாவணையின் மையப்பகுதியான வீ.சி. சந்தியிலிருந்து தெற்கு நோக்கிப் பார்க் கையில் சுமார் 400 மீற்றர் தூரத்தில் பொன்னிறக் கலசங்களுடன் வானுயர்ந்து காட்சி தருவதே மருதமுனை மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளிவாசலாகும். அம்பாறை மாவட்டத்தின் கரையோர வடக்கெல்லையின் நுழைவாயிலில் அமைந்துள்ள முதலாவது ஜும்ஆப் பள்ளிவாசலும் மருதமுனையில் தோற்றம் பெற்ற முதலாவது பள்ளிவாசலும் இதுவேயாகும்.

இற்றைக்கு சுமார் 600 ஆண்டுகளுக்கு முன் அதாவது 15ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மருதமுனையின் முதற்பிரசைகளாக குடியமர்ந்த பெரியராசப்பா என அழைக்கப்பட்ட அபூபக்கர் அலி மற்றும் அவரது நெருங்கிய உறவினரான சேர்மன் முஹம்மது ஹாஜி ஆகியோரால் முதன்முதலாக இப்பள்ளி தற்காலிகக் கொட்டிலாக நிறுவப்பட்டது. நிறுவுநர்களில் மூத்தவரின் பெயரால் இது அவக்கொலியப்பா பள்ளியென அழைக்கப் பட்டது.

மேற்குறிப்பிட்ட இரு பெரியார்களும் ஜாவா எனப்படும் கிழக்கிந்திய தீவொன்றிலிருந்து கடல் மார்க்கமாக மட்டக்களப்பை அடைந்து, அங்கிருந்து மட்டக்களப்பு வாவியினூடாகப் பயணித்து மருதமுனைக்கு மேற்கிலுள்ள துறைநீலாவணையில் தரையிறங்கியுள்ளனர். இவர்கள் பயணித்த படகின் உரிமையாளரும் செலுத்துநருமாயிருந்தவர் இப்பள்ளிவாசல் குடிவழியொன்றான சம்மானோட்டிகுடியின் ஸ்தாபகர் ஆவார். சம்மான் என்பது படகைக் குறிக்கும் சொல்.

துறைநீலாவணையில் சொற்ப காலம் தங்கியிருந்த பயணிகளும் அவர்களது குடும்பத்தினரும், தாமறிந்த நெசவுத் தொழிலுக்குச் சாதகமான சூழல் மருதையடி முனையெனும் கடலோரக் கிராமத்தில் காணப்பட்டதால் அங்கு குடிபெயர லாயினர். அதுவே இன்றைய மருதமுனை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைப்பு :

இப்பள்ளிவாசலின் புனரமைப்புப் பணிகள் அவ்வப்போது நடைபெற்று வந்துள்ளன. முதலில் 1855ம் ஆண்டிலும் அடுத்து 1926 மற்றும் 1962களிலும், இடம்பெற்றுள்ளன. மருதமுனையின் முதலாவது உலமா பெரியாரான சின்னாலிமப்பா என அழைக்கப்பட்ட மீராலெவ்வை ஆலிம் அவர்களால் இப்பள்ளி கற்கட்டமாகப் புனரமைக்கப்பட்டது. மருதமுனை முழுவதற்கும் ஒரே பள்ளிவாசலாக இருந்து வந்தபோதிலும் குடிப்பரம்பல், மற்றும் குறிப் பிடத்தக்க வேறு காரணங்களால் மருதமுனையின் தென்புறத்தில் 1861ல் பள்ளிவாசலொன்று உருவாக்கப்பட்டு, அது தென்தெருப் பள்ளிவாசலென்று அழைக்கப்பட்டது. அதனையடுத்து அவக்கொலியப்பா பள்ளி வடதெருப்பள்ளிவாசலென்று அழைக்கப்பட்டது. அதனையடுத்து அவக்கொலியப்பா பள்ளி வடதெருப் பள்ளிவாசல் என பெயர் பெறலாயிற்று. பிரதேசத்தைச் சுட்டும் வகையில் பள்ளிகளின் பெயர் இருப்பது தவிர்க்கப்பட வேண்டுமென்னும் கருதுகோளில் வட மற்றும் தென்தெருப் பள்ளிவாசல்களின் பெயர்கள் முறையே மஸ்ஜிதுன்நூர், மஸ்ஜிதுல் கபீர் என 1972ல் பெயர் மாற்றம் பெற்றன.

இந்நிலையில் குடிசனப் பெருக்கம் கருதி இரு ஜும்ஆப் பள்ளிகளையும் விஸ்தரிக்க வேண்டிய அவசியம் பெருமளவில் உணரப்பட்டது. இதனையொட்டி 1975-03-28ஆந் திகதி, ஊர் தழுவிய மாபெரும் பொதுக்கூட்டமொன்று மஸ்ஜிதுன்நூர் சபா மண்டபத்தில் கூடப்பட்டது. அவ்வமயம் இரு பள்ளி களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பள்ளிவாசல்கள் கட்டடப் புனர்நிர்மாணக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. இக்குழுவின் நெறிப் படுத்தல் மற்றும் நடவடிக்கைகளின் கீழ் முதலில் மஸ்ஜிதுன்நூர் பள்ளியையும் அதன் நிறைவையடுத்து மஸ்ஜிதுல் கபீர் பள்ளியையும் புதிதாகக் கட்டுவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி 1976ஆம் ஆண்டு மஸ்ஜிதுன் நூர் கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டு புதிய கட்டடம் அமைப்பதற்கென அடிக்கல் நடப்பட்டது. கட்டடக் குழுவின் போஷகரான செனட்டர், அல்-ஹாஜ். எஸ்.இஸட்.எம். மஷூர் மௌலானா ஜே.பி. அவர்களின் அழைப்பினை ஏற்று அப்போதைய இலங்கைப் பாராளுமன்ற சபாநாயகரான அல்-ஹாஜ் எம்.எச். முஹம்மது அவர்கள் வருகை தந்து முதற்கல்லை நாட்டிக் கட்டட அமைப்புப் பணியைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்கள்.

மஸ்ஜிதுன்நூரின் புதிய கட்டடத்துக்கான படவரைபு (Plan), செலவு மதிப்பீடு (Estimate) முதற்கொண்டு சகல பொறியியல் வழிகாட்டல்களையும் தனது அரச உத்தி யோகப் பணிகளுக்கப்பால் மிகுந்த அர்ப்பணிப்புடன் வழங்கி, கைம'மாறு கருதாது செயற்பட்ட எமது கிராமத்தைச் சேர்ந்த பொறியியலாளர் அல்-ஹாஜ் என்.எம். ஹூசைன் காரியப்பர் அவர்களை மருதமுனையும் குறிப்பாக மஸ்ஜிதுன்நூர் சமூகமும் என்றென்றும் நன்றியுடன் நினைவுகூர்வ துடன் அவரது இருமை நற்பேறுகளுக்குமாகப் பிரார்த்திக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டட நிர்மாணக் குழுவின் அயராத முயற்சியின் பேறாக அத்திவார வேலைகள் சிறப்பாக நிறைவுற்றதன் பின் அடுத்த கட்டப் பணிகளை மஸ்ஜிதுன்நூர் நிர்வாகமே தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண்டது. எனவே தொடர் நடவடிக்கைகள் முழுவீச்சுடன் மேற்கொள்ளப்பட்டன. இதனால் நிலமட்டம் (Ground Floor) தொடக்கம் முதலாம் மாடிக்குக் கொங்கிறீற் இடுவது வரையுள்ள பணிகள் விரைவாக முன்னேற்றம் கண்டன. பழைய கட்டடம் உடைக்கத் தொடங்கியதிலிருந்து ஐவேளைத் தொழுகை பள்ளி வளாகத்திலுள்ளிருந்த குர்ஆன் மத்ரசா கட்டடத்தில் நடைபெற்று வந்தது. கீழ்த்தள வேலை ஓரளவு நிறைவுற்றதும் ஐவேளைத் தொழுகை 1983-07-08ஆம் திகதி மீண்டும் புதிய பள்ளியினுள் ஆரம்பிக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட மத்ரஸாவின் பூர்வாங்கக் கட்டடம் மர்ஹூம் அ.ற.லெ. இஸ்மாலெவ்வை (மூத்த தம்பி ஹாஜியார்) மரைக்கார் அவர்களால் 1952இல் கட்டப்பட்டு மஸ்ஜிதுன்நூருக்கு வக்பு செய்யப்பட்டது. அல்லாஹூத்தஆலா அவரின் அமல்களைப் பொருந்திக்கொள்வானாக. மேலும் கட்டடப் பணிகள் ஆரம்பித்த காலம் தொடக்கம் மாதமிருமுறை மஸ்ஜிதுன்நூர் பள்ளியில் இடம்பெற்று வந்த ஜும்ஆ தொழுகையும் மஸ்ஜிதுல் கபீரிலேயே இடம் பெற்று வரலாயிற்று. இது 1988-03-04ஆந் திகதி முதல் மஸ்ஜிதுன்நூரில் மீள ஆரம்பிக்கப்பட்டது.

நிர்வாகக் கட்டமைப்பு :

ஒரு நிறுவனத்தை அல்லது அமைப்பை சீராக நிர்வகிப்பதற்கு ஏற்ற வகையில் அந்தந்த நிறுவனங்கள் தமக்கான செயற்பாடுகளைச் செய்துகொள்ள நிர்வாகக் கட்டமைப்புக்களை வடிவமைத்துக்கொள்கின்றன. அத்தகையதொரு கட்டமைப்பு வடிவமே கிழக்கு மாகாணத்தின் முதிர்ச்சியடைந்த பள்ளிவாசல்கள் பலவற்றில் கடைப்பிடிக்கப்படும் மரைக்கார் சபைக் கட்டமைப்பாகும். இதில் பல அநுகூலங்கள் உள்ளன. அவற்றுள்,

- ஒரு மரைக்கார், தான் ஒரு குடும்பத்தின் தலைவர் என்ற முறையில் ஷரீஆவைக் கடைப்பிடிப்பதுடன் தன் கீழ்வரும் ஜமாஅத்தினரையும் அறிவுறுத்தி நெறிப்படுத்த முடிகின்றமை.
- ஜமாஅத்தினரில் சமய, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோரை இனங்கண்டு அவரை வழிப்படுத்தப் பொருத்தமான நடவடிக்கையில் ஈடுபட முடிகின்றமை.
- பள்ளிவாசலுக்கு ஜமாஅத்தினரின் ஒத்துழைப்பு, மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முடிகின்றமை என்பன முக்கியமானவையாகும்.

அதேவேளை குடும்பத்துக்குத் தலைமையேற்க தகுதியுள்ளவர்கள் ஒதுங்கிக்கொள்ளும் போது தகுதியற்றவர்கள் சிலவேளை மரைக்காயர் பதவி பெற்று அதன் கௌரவத்தைப் பங்கப்படுத்துகின்றனர். இது சில நபர்களின் தவறே தவிர மரைக்கார் சபைக் கட்டமைப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடல்ல. மேற்படிவகை சார்ந்த கட்டமைப்பொன்று பழங்காலம் தொடக்கம் இப்பள்ளிவாசலிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. அது பின்வரும் குடும்பங்களின் அல்லது குடிகளின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது.

01. யாகுவக்குடி :

இப்பள்ளிவாசல் ஸ்தாபகர்களுள் முதல்வரான அபூபக்கர்வொலி என்பவர் யாவா என்னும் நாட்டைச் பூர்வீகமாகக் கொண்டவராதலின் இவரது சந்ததியினர் யாவாக் குடியினர் எனப்பட்டனர். யாவாக்குடி என்பதன் மருவலே யாகுவக் குடியாகும்.

02. சேர்மாதுகுடி :

மற்றுமொரு ஸ்தாபகர் சேர்மன் முஹம்மது ஹாஜி என்பவராவார். சேர்மன் முஹம்மது குடி என்பதன் மருவலே சேர்மாது குடியாகும்.

03. வடக்கனார்குடி
04. சம்மானோட்டிகுடி
05. மாந்தறாகுடி
06. மூத்தநாச்சிகுடி
07. வெத்தசிங்க ஆராய்ச்சிகுடி

இவ்வேழு குடிகளும் மஸ்ஜிதுன்நூர் மரைக்கார் சபைக் கட்டமைப்புக்குள் வருவனவாகும்.

பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் (Trustees) முஸ்லிம் சமய, கலாசாரத் திணைக்களத்தினால் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நியமனம் செய்யப்படுவர். அச்சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகள் மேலே குறிப்பிட்ட முதல் மூன்று குடிகளிடையே பாரம்பரியமாகச் சுழற்சி முறையில் பகிரப்பட்டு வந்தன. பின்னர் ஏனைய குடிகள் நான்கினையும் ஒருங்கிணைத்து, இணைந்த குடியென்ற பெயரில் 2003ம் ஆண்டு தொடக்கம் மூன்று பதவிகளும் சுழற்சி முறைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

வக்பு சொத்துக்களும் வருமானங்களும் :

மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல், மருதமுனையைப் பிரதான வீதியை மேற்கெல்லையாகவும், பொதுநூலக வீதியைத் தெற்கெல்லையாகவும் சில தனியார் குடியிருப்புக்களை வடக்கு மற்றும் கிழக்கெல்லையாகவும் கொண்டு ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பள்ளி வளவில் மேற்கு மற்றும் மேற்கு தென்புறங்களில் கடை அறைகள் அமைக்கப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. மேலும் 1950ம் ஆண்டு அலியார்ப் போடியார் அவர்கள் வழங்கிய இரண்டு ஏக்கர், 1987இல் அல்-ஹாஜ். இ. முஹம்மதுத்தம்பி அவர்கள் வழங்கிய ஒன்றரை ஏக்கர், சீப்பலஸ் உரிமையாளர் அல்-ஹாஜ். ஐ.எல்.எம். இஸ்மாயில் ஜே.பி. அவர்கள் வழங்கிய மூன்று ஏக்கர் ஆகிய வயற்காணிகள் இப்பள்ளிவாசலுக்குரிய வக்புச் சொத்துக்களாகும். அவற்றில் சீப்பலஸ் ஹாஜியார் வழங்கிய காணி சுனாமி வீடமைப்புத் திட்டத்துக்கென அரசாங்கத்துக்கு விடுவிக்கப்பட்டு அதன் பேரில் கிடைத்த நிதியைக் கொண்டு சில கடையறைகள் கட்டப்பட்டுள்ளன. கடை வாடகைகள், நன்கொடைகள், திருமண வரி, மற்றும் பிற வருமானங்களைக் கொண்டு பள்ளிவாசல் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பள்ளிவாசலுக்குரிய மையவாடியாக மையத்துப்பிட்டி ஆலையடி எனப்பட்ட இடம் 1934ம் ஆண்டுவரை உபயோகிக்கப்பட்டது. தற்போது அந்நிலத்தில் அல்-மனார் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவும் பெண்கள் பிரிவும் இயங்கி வருகின்றன. 1934-09-01ம் திகதி தொடக்கம் மருதமுனை - பெரியநீலாவணை எல்லை வீதியில் கடற்கரையை அண்மித்த நான்கு ஏக்கர் நிலம் மையவாடியாக மஸ்ஜிதுன்நூர் பள்ளியினால் பரிபாலிக் கப்பட்டு வந்தது. இதற்கான அங்கீகாரம் கரைவாகு வடக்கு கிராம சபையினால் வழங்கப்பட்டது. தற்போது அந்நிலத்தின் கிழக்கெல்லையில் மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல், அக்பர் வித்தியாலயம் மற்றும் சில கட்டடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. மீதி நிலம் மையவாடியாக உபயோகத்திலிருந்து வருகின்றது.

மற்றும் பெரியநீலாவணையில், முதலில் பாக்கியத்துஸ்ஸாலிஹாத் குர்ஆன் மத்ரசா வாகவும், அடுத்து முஸ்லிம் பாடசாலையாகவும் பின்னர் தைக்காப் பள்ளிவாசலாக மஸ்ஜிதுன்நூர் அனுசரணையின் கீழ் அல்பாக்கியத்திஸ்ஸாலிஹாத் ஜும்ஆப்பள்ளி வாசலென இயங்கி வருகின்றது.

மேலும் பிரதான வீதியில் மக்காமடி என்னுமிடத்தில் அமைந்திருந்த அஸ்ஸெய்யித் இஸ்மாயில் மௌலானா பஃதாதி அவர்களின் கபுறடியும் அது சார்ந்த நிலமும் மஸ்ஜிதுன் நூரின் வக்புச் சொத்தாகவே இருந்தது. அது தற்போது வேறு நபர்களால் கையகப்படுத் தப்பட்டுள்ளது.

புஹாரி ஹதீஸ் மஜ்லிஸ் :

புனித அல்-குர்ஆனுக்கு அடுத்ததாக முஸ்லீம்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள புஹாரி ஹதீஸ் கிரந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஹதீஸ் மஜ்லிஸ் 1923ஆம் ஆண்டில் பெரிய மௌலானா என்னும் செய்யிதிஸ் மாயில் பஃதாதி அவர்களால் மஸ்ஜிதுன் நூரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது பிரதிவருடமும் ஜமாதுல் ஆஹிர் மற்றும் றஜபு மாதங்களில் இன்றுவரை நடாத்தப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசல்

ஏ.எல்.எம். முனாஸ். ஜே.பி.
ஓய்வுபெற்ற வரி உத்தியோகத்தர், நொத்தாரிஸ், மருதமுனை.

மருதமுனையில் தோற்றுவிக்கப்பட்ட இரண்டாவது பள்ளிவாசல் இதுவாகும். இது 1861ஆம் ஆண்டு (ஹிஜ்ரி 1279) நிர்மாணிக்கப்பட்டது. இது முதலிற் தோற்றுவிக்கப்பட்ட வடதெருப் பள்ளிவாசலுக்கு (தற்போது மஸ்ஜிதுன் நூர்) தென்புறத்தில் அமைக்கப்பட்டதால் தென்தெரு மீராபள்ளிவாசல் எனவும் வடதெருப் பள்ளிவாசலை விடவும் பெரிதாக அமைக்கப்பட்டதால் பெரிய பள்ளிவாசல் எனவும் அழைக்கப்பட்டது. மர்ஹூம் பக்கீர்தம்பி மரைக்கார் (மூத்தவர்) மற்றும் அலியார் போடியார் ஆகிய பெரியார்கள் இப்பள்ளிவாசல் அமைப்பதற்கான காணியை வழங்கினார்கள். இப்பள்ளி வாசலின் உட்பள்ளியின் வடபுறத்திலும், தென்புறத்திலும், கிழக்குப் புறத்திலும் விறாந்தைகளைக் கொண்டிருந்தன. கிழக்குப் புற விறாந்தையின் கிழக்குப் பகுதியில் இருந்த மண்டபத்தில் அரைவாசியில் குர்ஆன் மத்ரசாவும், அடுத்த அரைவாசியில் "ஹவ்ழ்" உம், வடபுற விறாந்தையின் வடபுறத்திலிருந்த மண்டத்தில் அரைவாசியின் அப்துர்ரஹ்மான் செய்யது வலியுல்லாஹ்வின் ஸியாரமும் அமைந்திருந்ததோடு அடுத்த அரைவாசி ஸந்தூக்கும் ஏனைய தளபாடங்களும் வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. இப்பள்ளிவாசல் அமைக்கப்பட்டதன் பின்பு வடதெருப் பள்ளிவாசலிலும் இங்கும் ஒன்றுவிட்ட வாரங்களில் மாறிமாறி ஜும்ஆ தொழுகை நடைபெற்று வந்தது.

இப்பள்ளிவாசல் 1976ம் ஆண்டு (ஹிஜ்ரி 1396) புனர்நிர்மாணம் செய்யப் பட்டது. 140 அடி நீளமும் 70 அடி அகலமும் கொண்ட இப்பள்ளிவாசலின் உட்பகுதிக்குப் பூரணமாக மாபிள் பதிக்கப்பட்டது. ஒரே நேரத்தில் சுமார் 3000 பேர் தொழுகை நிறைவேற்றக் கூடியதாக இடவசதி ஏற்படுத்தப்பட்டது. புனர்நிர்மாணத்தின் பின் பள்ளிவாசலுக்கு பெயர் சூட்டப்பட்டது. இப்பள்ளிவாசல் பெரிய பள்ளிவாசல் என அழைக்கப்பட்டு வந்தமையால் அதன் அரபிப் பதமான "மஸ்ஜிதுல் கபீர்" என்ற பெயர் சூட்டப்பட்டது. புனர்நிர்மாணம் செய்யப்பட்டதன் பின் இடவசதி போதாமையால் காலத்துக்குக் காலம் இரு பக்கங்களிலும் விறாந்தைகள் அமைக்கப்பட்டன. இவ்விறாந்தை அமைக்கும் போது வடபுறத்திலிருந்து வந்த ஸியாரம் மறைந்தது. இக்காலப் பகுதியில் குர்ஆன் மத்ரஸாவுக்கென தனியான கட்டிடமும் பள்ளிவாசல் வளவின் கிழக்கு எல்லையில் கடை அறைகளும் கட்டப்பட்டன. மருதமுனையில் பிரதான வீதியில் மாலை நேரச்சந்தை நடைபெற்று வந்தது. பள்ளிவாசலுக்கு கிழக்கே இருந்த நிலத்தில் காலை நேரச்சந்தை ஒன்று அமைக்கப்பட்டது. இச்சந்தை மூலமும், கடை அறைகள் மூலமும் பள்ளிவாசலுக்கு வருமானம் கிடைத்தது. மேலும் தனவந்தர்களால் பள்ளிவாசலுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட எட்டு ஏக்கர் நெற்காணி மூலமும் வருமானம் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001ம் ஆண்டு புதிய பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டு கட்டிடக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்கட்டிடக் குழுவின் முயற்சியால் ஊர் மக்களின் பங்களிப்புடன் பள்ளிவாசலின் வடபுறத்திலிருந்த வெற்று வளவில் புதிய பள்ளிவாசலின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. புதிய கட்டிடம் முடிவுற்றதும் பழைய பள்ளிவாசல் உடைக்கப்பட்டு, புதிய கட்டிடத்துடன் இணைத்து முழுவளவிலும் பள்ளிவாசல் அமைக்க திட்டம் தயாரிக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் மரக்கறிச் சந்தைக் கட்டிடம் உடைக்கப்பட்டு இரு மாடிக் கடைத்தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டது. இதன் மூலம் பள்ளிவாசலை நிர்வகிப்பதற்கு வேண்டிய வருமானம் பெறப்படு கின்றது. புதிய பள்ளிவாசலின் வடபுற நிர்மாணப்பணிகள் முடிவுற்றதும் பழைய பள்ளிவாசல் உடைக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு தென்புறத்தில் புதிய பள்ளிவாசலின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. புதிய பள்ளிவாசலை நிர்மாணிக்கும் பணி கட்டம் கட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

ஊரைப் பரிபாலனம் செய்வதற்கு பள்ளிவாசலுக்கு நிர்வாகிகள் தெரிவுசெய்யப் பட்டனர். இவர்கள் மரைக்காயர்மார் என அழைக்கப்பட்டனர். இந்த மரைக் காயர்மார் குடிவழி முறையில் தெரிவுசெய்யப்பட்டனர். மருதமுனையில் பரந்துபட்டு வாழும் ஜமாஅத்தினர் ஆலங்குடி, ஐக்கிய குடி (முன்னர் சில்லறைக்குடி என அழைக்கப்பட்டது), சின்னக்கருதன் குடி ஆகிய மூன்று பெருங்குடிகளுக்குள் அடங்குவர். ஒவ்வொரு குடியும் பல உட்பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

01. ஆலங்குடியின் உட்பிரிவுகள் :
   1) கொழும்பான் கத்தறை
   2) கோணவாயன் கத்தறை
   3) செவெயில் கத்தறை

02. ஐக்கிய குடியின் உட்பிரிவுகள் :
   1) சம்மானோட்டி குடி
   2) முன்னோர் குடி
   3) மூத்தநாச்சி குடி
   4) இளையநாச்சி குடி
   5) ஆராய்ச்சி குடி
   6) கொசுக்கொட்டான் குடி

03. சின்னக்கருதன் குடியின் உட்பிரிவுகள் :
   1) சின்னக்கருதன் குடி
   2) சுல்தாப்பிள்ளை குடி
   3) வடக்கனா குடி

இம்மரைக்காயர்களுக்கு ஊர் மக்கள் கட்டுப்பட்டு நடந்தனர். மக்களிடையே எழும் பிணக்குளைத் தீர்த்து வைத்தனர். அத்தோடு மக்களிடையே நடக்கும் திருமணங்களை பள்ளிவாசல் புத்தகத்தில் பதிவுசெய்தனர். ஆரம்பத்தில் ஒவ்வொரு குடிக்கும் மூன்று மரைக்காயர்கள் தெரிவுசெய்யப்பட்டதோடு இத்தொகை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு ஒரு குடிக்கு 10 மரைக்காயர்மார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதம் முப்பது பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இதனிடையே பள்ளிவாசல் களின் செயற்பாடுகளை கண்காணிக்கவும், சீர்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தினால் வக்பு சபை ஒன்று அமைக்கப்பட்டது. இச்சபை பள்ளி வாசல்களைப் பதிவுசெய்ததோடு பள்ளிவாசல்களுக்கு நம்பிக்கையாளர்களை (டிரஸ்டிமார்) நியமித்தது. இப்பள்ளிவாசல் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்தபோது அம்மாவட்டத்தில் முதலாவது பள்ளிவாசலாகவும் (BT - 1) அம்பாரை மாவட்டம் உருவாக்கப்பட்டதன் பின் அம்பாரை மாவட்டத்தின் முதலாவது பள்ளிவாசலாகவும் (AM-1) பதியப்பட்டது. இப்பள்ளிவாசலுக்கு ஜமாஅத்யாப்பு ஒன்று ஆக்கப்பட்டு 27-01-1995ம்திகதி பொதுச்சபைக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த யாப்பின்படி ஜமாஅத்தினர் அனைவரும் மகா சபை உறுப்பினர்களாகக் கொள்ளப்படுவர். மகா சபையாற் தெரிவுசெய்யப்பட்ட நூறு உறுப்பினர்கள் பொதுச் சபைக்குத் தெரிவு செய்யப் படுவர். இப்பொதுச்சபை மரைக்காயர் சபை எனவும் அதன் உறுப்பினர்கள் மரைக்காயர் எனவும் அழைக்கப்படுவர். இப்பொதுச்சபைக்கு ஒவ்வொரு குடியிலுமிருந்து தலா 33 பேரும் கூடியதொகை ஜமாஅத்தினரைக் கொண்டுள்ள ஆலங்குடிக்கு மேலதிகமாக ஒருவருக்குமாக (34 பேர்) 100 பேர் மரபு தெரிவு முறைகளில் நியமிக்கப்படுவர். பொதுச்சபையிலிருந்து நம்பிக்கையாளர் சபை (டிரஸ்டிகள்) உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர். நம்பிக்கையாளர் சபை நிர்வாக சபை எனவும் அழைக்கப்படும். ஒவ்வொரு குடியிலிருந்து தலா ஒன்பது பேர் வீதம் 27 பேர் நம்பிக்கையாளர் சபைக்குத் தெரிவு செய்யப்படுவர். தெரிவுசெய்யப்படுபவர்கள் வக்பு சபைக்கு விண்ணப் பிப்பதன் மூலம் வக்பு சபையால் நம்பிக்கையாளர்களாக நியமிக்கப்படுவர். நம்பிக்கையாளர் சபையே பள்ளிவாசலின் பரிபாலனம், நிர்வாகம், நிதி முகாமைத்துவம் என்பவற்றிற்கு பொறுப்பாகவிருக்கும். நம்பிக்கையாளர் சபையிலிருந்து தலைவர், உபதலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் ஆகியோர் தெரிவுசெய்யப்படுவதோடு மேற்படி பதவிகளுக்கு மூன்று வருடங்களுக்கொரு முறை மூன்று குடியினரும் மாறிமாறி சுழற்சி முறையில் தெரிவுசெய்யப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல்

எம்.ஏ.எம். இனாமுல்லா *(SLPS) B.Ed.*
அதிபர், கமு/ புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயம்,
பெரியநீலாவணை, மருதமுனை.

அம்பாரை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்களுள் கல்வி, கைத்தொழில் என எடுப்பாகக் கூறப்படும் கிராமமாக மருதமுனை (நகரம்) முக்கியமான இடத்தை வகுப்பது இன்று பொதுவாகப் பேசப்படும் உண்மையாகும்.

அந்த உண்மையின் பின்னால் உரமாக ஒழிந்திருந்த காரணிகளாக பல விடயங்களைச் சிறப்புறக் கூற முடியும். அந்த வகையில் எமது கிராமமக்களின் மார்க்க பக்தி, சகிப்புத்தன்மை, இணங்கிப்போகும் சுபாவம், நல்ல விடயங்களை பேதமின்றி ஆமோதிக்கும் தன்மை என்பவற்றை சிறப்பாகக் கூறலாம்.

கடந்த 30 வருடங்களில் எம் கிராமத்தின் நிலையும் அதற்குப் பிற்பட்ட காலத்தில் அதன் பரிமாணமும் சற்று வித்தியாசமானது. கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் நெசவுத்தொழில், மீன்பிடி, சிறிதளவு விவசாயம், கல்வி என்ற மட்டிலேயே தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. குறிப்பாக எமது ஊரவர்கள் பெரும் வயல் நில புலன்கள் உள்ளவர்களாகவோ, பரம்பரையாகப் பணம் படைத்தவர் களாகவோ இருந்தமைக்கான தடங்கள் இல்லை.

மீன்பிடி, விவசாயம், நெசவு என்பன முதலான தொழில்களையே மேற்கொண்டு வந்துள்ளனர். இத்தொழில்கள் மிகவும் சவால்கள் நிறைந்த நம்பகத்தன்மை இல்லாத தொழில்களாகவே இன்றும் உள்ளன.

எமது மக்களின் பிரதான தொழிலாகவிருந்த நெசவுத் தொழில் வீட்டோடு இருந்து செய்யும் சிறந்ததோர் தொழிலாகவும் ஆண், பெண் இருபாலாரும் செய்யக்கூடிய தொழிலாகவும் காணப்பட்டது. 1977களின் பின்னர் இத்தொழில் மாறிமாறிவந்து அரசுகளின் தாராள இறக்குமதிக் கொள்கைகளால் வீழ்ச்சிகண்டு தாக்குப்பிடிக்க முடியாத நிலைக்கு நலிந்ததுடன் தொழில் ரீதியான பெரிய சவால்களுக்கு ஈடுகொடுக்க எமது மக்களைத் தள்ளியது. அந்த வகையில் கைக்கொள்ளத் தலைப்பட்ட பிரதியீடான பிரதான பாதையே கல்வியும் அதனால் பெறப்பட்ட வருமானமுமாகும்.

எது எவ்வாறிருந்த போதிலும் இதனால் ஏனைய தொழில்கள் மூட்டை கட்டிவைக்கப்பட்டன எனக்கொள்ள முடியாது. இயலுமானோர் இயலுமான பல்வேறு தொழில்களை மேற்கொண்டதுடன் வெளிநாடு செல்வதிலும் அதிக நாட்டத்தைச் செலுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பாரம்பரியமாக மேற்கொண்டு வந்த மீன்பிடித் தொழிலை மேற்கொண்டவர்கள் இன்றுவரை அதைச்செய்து வருகின்றனர். ஆரம்ப காலத்திலிருந்தே கடற்றொழிலில் குறிப்பிடப்பட்ட அளவினரே நாட்டம் காட்டினர். இதனால் கடற்கரை அண்டிய பகுதிகளில் கல்லாறு எல்லைவரை கடலோரங்களில் இம்மீனவர்களுக்கு வாடிகளும் தென்னந் தோட்டங்களும் காணப்பட்டன. 1980களின் முன்னர் நீலாவணையில் அமைந்துள்ள தோணாவின் வடபுறத்தே காணப்பட்ட தென்னைகள் நிறைந்த "வாடி" எனும் இடத்தில் பெரிய தண்டையல் நிரந்தரமாக வசித்தார்கள். ஒல்லிக்கேணி போன்ற இடங்களிலும் எம்மவர்கள் வசித்துள்ளார்கள். பொதுவாக நீலாவணையின் மேற்கே தமிழ் சகோதரர்கள் வசித்த போதும் கிழக்குப்பகுதி எம்மவர்களின் சொந்த நிலமாகவே அன்று தொட்டுக் காணப்பட்டு வருகிறது. இன்னும் தற்போது தோணாவின் வடபுறத்தே அமையப் பெற்ற மாடிவீட்டுத்திட்ட நிலம் கல்முனைக்குடியைச் சேர்ந்த பீ.எம். இஸ்மாயில் (கருவாட்டு இஸ்மாயில்) என்பவருக்குச் சொந்தமானது. அரசு அதனை கையேற்று வீட்டுத்திட்டம் அமைத்ததன் பேரில் காணிச் சொந்தக்காரர்களுக்கு கூடுதலான நஷ்டஈட்டுத்தொகை (13 ஏக்கருக்கு) நீதிமன்றத்தின் மூலம் வழங்கியதும் அண்மையில் நடந்த சம்பவமாகும். இவ்வாறான கரையோர கடற்றொழில் புரிந்தவர்களின் ஈடுபாடும், தேவையுமே மருதமுனையின் வடகிழக்கே அக்பர் கிராமத்தின் உதயத்திற்கு வழிகோல பிரதான காரணியாக அமைந்திருந்தது.

1980களின் முன்னே வாழ்ந்த எவரிடம்கேட்டாலும் கடற்கரை யோரத்தின் தென்னந்தோப்புகள் நிறைந்த வாடிகளைப் பற்றிக் கூறுவார்கள் அவை அனைத்தும் மீன்பிடித் தொழில் புரிந்தவர்களின் உடைமைகளாக இருந்த வரலாற்றை கூறுவார்கள். இதனைக் கேட்டறிவது இளைஞர் சமுதாயத்தின் தலையாய கடமையாகும். ஏனெனில் தனது சமூகத்தின் வரலாற்றை அறிந்திருப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும். அதனைக் கருத்திற்கொண்டே நானும் இதனை எழுதுவதன் மூலம் வரலாற்றைத் தொட்டுவைக்கின்றேன்.

இந்தப் பரிணாமத்துடனேயே அக்பர் கிராமத்தின் உதயம் உருவாகின்றது. 1960 காலப்பகுதியில் கடற்றொழில் புரிந்தோர் மாத்திரமல்லாது இடங்கள் தேவையுள்ளோர் அனேகர் அரசு நிலம் வழங்கத் தலைப்படுவதை அறிந்து மருதமுனையின் வடகிழக்குப் பிரதேசத்திற்குத் தம் குடிப்பரம்பலை நகர்த்தினர். அவ்வாறான ஒரு குடிப்பரம்பலே "அக்பர் கிராமம்" எனப் பெயர்கொண்டது. அக்பர் என்பது "பெரியது' எனப் பொருள்படும். எமது ஊரில் மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளி எனவும் மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப்பள்ளி எனவும் இருபள்ளி வாசல்கள் உள்ளன. கபீர் என்பதும் மிகப்பெரிது என்ற பொருள் கொண்டது. அக்பர் என்பது பெரிது என்று பொருள்படும் அந்த சூழ்நிலையிலேயே ஏகோபித்து அதற்கொத்த அக்பர் என்ற பெயரை முதலில் பள்ளிவாசலுக்கு சூட்டினர். அதனை வைத்தே எந்தப் பொதுஇடங்களையும் அக்பர் என்ற தனித்துவத்துடன் உருவாக்கவும் அமைக்கவும் எச்சூழ்நிலைகளிலும் அப்பிரதேச ஈடுபாட்டாளர்கள் தலைப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் ஒன்று கூடும் இடங்களில் நிச்சயமாக வணக்கஸ்தலம் ஒன்றை கட்ட எவரும் தலைப்படுவது இயல்பே. அந்தவகையில் ஆரம்பத்தில் அக்பர் தைக்கா என்ற பள்ளிவாசல் சிறிய ஓலைக்குடிசையாக கட்டப்பட்டது. அதற்கு அனேகரின் பங்களிப்பு இருந்திருக்கும். அதனை பெயர் குறிப்பிடும்போது விடுபடுபவர்கள் வேதனைப்பட இடமுண்டு. இதனால் அதனைத்தவிர்த்து தொழுகை நடாத்தி யதுடன் ஆரம்பத்திலிருந்தே குர்ஆன் மத்ரசாவையும் நடாத்திவந்தவர்களுமான எஸ்.எம்.மீராலெப்பை (சூத்திரக்காரன் பிள்ளை) அவர்களையும் எம்.கே.எம். கல்பான் லெப்பை அவர்களையும் குறிப்பிடலாம். இவர்களின் பணியால் இப்பள்ளிவாசல் உயிர் பெற்றதுடன் மார்க்கக் கல்வியும் இப்பிரதேச மாணவர் களுக்குப் புகட்டப்பட்டது.

1969 காப்பகுதியில் இன்று காணப்படும் அக்பர் மையவாடியின் தென்கிழக்கு மூலையில் ஓலைக்குடிசையாக இருந்த குர்ஆன் மத்ரசாவுடன் இணைந்த தொழுகைக்கான இடம் இங்கு குடியேறி வாழ்ந்த மக்களால் கட்டிப் பேணப் பட்டு வந்தது. பலர் இதன் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் இறைவனுக்காக பாடுபட்டு வந்துள்ளனர் அவர்கள் அனைவருக்கும் இறைவன் அருள்பாலிக்க வேண்டும்.

இங்கு வாழ்ந்த ஏழை மக்கள் ஆரம்பத்தில் மஸ்ஜிதுல் கபீர் அல்லது மஸ்ஜிதுன் நூர் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததனால் அவ்வப்போது மஸ்ஜிதுல் கபீர் நிர்வாகம் தனது ஆளுகையில் தங்களைப் பதிந்துகொள்ளும் படியும், மஸ்ஜிதுன் நூர் தங்கள் ஆளுகையின் கீழ் தங்களைப் பதிந்துகொள்ளும் படியும் அழைப்பு விடுக்கும். ஆனால் அவ்வாறானதோர் ஆளுகையில் தம்மைப்பதிந்து கொள்ள மஸ்ஜிதுல் அக்பர் நிர்வாகம் ஒருபோதும் விரும்பவில்லை. காரணம் இரு பகுதி சார்ந்தோரும் இங்கு வாழ்ந்ததனால் பொதுவாக இருப்பதையே விரும்பினார்.

இதனால் பல சிக்கலான சூழ்நிலைகளை மஸ்ஜிதுல் அக்பர் பள்ளிவாசல் அவ்வப்போது எதிர்வு கொண்டது. தமது நிர்வாகச் செலவினங்களை தாமே மேற்கொள்ள வேண்டியிருந்தது. செல்வங்கள் சேரும் இரு பெரிய பள்ளிவாசல் களுக்கும் மஸ்ஜிதுல் அக்பர் சிம்ம சொப்பனமாகவே இருந்தது.

இது விடயமாக பல கூட்டங்கள் வாதப்பிரதி வாதங்கள் என்பன தொடர்ந்து இடம்பெற்றுள்ளன. சில சந்தர்ப்பங்களில் அக்பர் நிர்வாகம் புறக்கணிக்கப் பட்டுள்ளன. பிரித்தளிக்கப்படவேண்டிய பங்களிப்புக்கள் ஏனைய தைக்காக் களுக்கு வழங்கப்படும் போது அக்பர் பள்ளிக்கு அது வழங்கப்படுவதில்லை. மேலும் அதன் அன்றைய நிர்வாகிகள் அக்பர் பள்ளியை அண்மித்து வசிக்காத வர்களாக இருந்தமையால் அவர்கள் பள்ளிவாயலின் பக்கம் இருந்தாற்போல் ஒரு தடவையே சமூகமளிப்பதுண்டு. இவ்வாறான சூழ்நிலைகள் பற்றுள்ள இளைஞர்கள் மத்தியில் ஒருவித சுதந்திர வேட்கையை ஏற்படுத்திற்று எனலாம். இதனால் எங்களை நாங்களே ஆளவேண்டும் என்ற சுதந்திர உணர்வுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களின் ஒழுங்கமைப்பான வாழ்க்கைக்கு பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை பள்ளிவாசலின் நிர்வாக அமைப்பினூடாக நடைமுறைப்படுத்த முற்பட்டனர்.

சட்டம்கண்டு கொள்ளாத சமூக விரோதச் செயல்களை பள்ளிவாசல் நிர்வாகத்தினூடாக சீர்படுத்தினர். இளைஞர்கள் மத்தியில் சமூக உணர்வையும் நல்ல வாழ்க்கை முறையும் தழைத்தோங்க விளையாட்டு, வாசிப்புப்பழக்கம் போன்றவற்றை ஏற்படுத்த நூலகம்,மைதானம் போன்றவற்றை நிறுவினர். இவைகள் அனைத்து செயற்பாடுகளும் பள்ளி வாசலினூடாகவே மேற்கொள்ளப்பட்டன. இந்த சூழ்நிலையிலேயே 23.11.1978ம் நாள் வீசிய சூறாவெளியால் குடிசைகள் நிறைந்த இப்பிரதேசம் தரைமட்டமாக்கப்பட்டது. இதனால் கூடுதலான உடமைகளும் சில உயிர்களும் தென்னந்தோப்புகளும் அழிந்துபோயின. குடிசையாக இருந்த பள்ளிவாசல் நீண்ட நாட்களாகக் குடை சாய்ந்து மண்மூடிக்கிடந்தது. இதிலிருந்து மீண்டெழ மக்கள் மிகவும் பிரயத்தனமெடுத்தனர். கிடைத்த கம்பு தடிகளைக் கொண்டு பலர் ஒன்று பட்டு பள்ளிவாசலை மீண்டும் குடிசையாக கட்டினர். இவ்வேளை பள்ளிவாயலுக்காக மரந்தடிகள் வசூலிக்கச் சென்றபோது பொது இடமொன்றில் குவிக்கப் பட்டிருந்த கம்புதடிகள் மேட்டுக்குடிகளால் விற்பனைக்குத்தான் வைக்கப் பட்டுள்ளது என்ற வரலாற்றையும் மறந்துவிட முடியாது.

இக்காலப்பகுதியில் தான் ஜனாதிபதி ஆர்.பிரமதாசா அவர்களினால் வீடற்றோருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பாரிய திட்டம் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில் சுய உதவி வீடமைப்புத் திட்டம் என்ற நாமத்துடன் இப்பிரதேசத்திலும் மேற்கொள்ள அவ்வேளை அமைச்சராக இருந்த ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களினால் எமது ஊரிலுள்ள முன்னோடிகள் சிலரின் முயற்சியினாலும் சிபாரிசு செய்யப்பட்டு அக்பர் கிராமம் என்ற பெயரில் அக்பர் பள்ளிவாசல் முன் வீதிக்கும் கடற்கரைக்கும் கோவில் வீதிக்கும் இடையில் இவ்வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டது. இதில் முதலாம் இலக்க வீடு ஏ. மீராமுஹிதீன் (வட்ட விதானை) என்பவரின் வீடு. இது அமைந்த இடம் சவக்காலையின் (எம்மவர் கொடுத்த இடம்) வட கிழக்கு மூலையில் கடற்கரை நோக்கி கோவில் வீதியில் இரண்டாவது இடம். இவ்வீட்டுத்திட்டம் அமைத்தது என்பது அடித்து அப்பம் தீத்தும் ஒரு விடயமாகவே மக்களைப் பொறுத்தவரை அன்று இருந்தது.

இருந்தும் இதனை திறந்து வைக்க 1982ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆர். பிரமதாசா வருகை தருவதாக அறிவிக்கப்பட்டு அதனால் அவருடைய அன்றைய கோட்பாட்டின்படி வணக்கஸ்தலம், சனசமூக நிலையம் என்பன வீட்டுத் திட்டத்தில் அமைந்திருத்தல் கட்டாயப்படுத்தப்பட்டதன் பேரில் இரவோடு இரவாக எமது அக்பர் பள்ளிவாசல் கல்லால் கட்டப்பட்டது. 60அடி நீளமும் 20அடி அகலமும் கொண்ட ஒரு செவ்வக அமைப்பான பள்ளிவாசல் அவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். ஜனாதிபதி அவர்களின் வருகையும் திறப்பு விழாவும் கடற்கரைப் பிரதேசத்தில் தென்னைகள் நிறைந்த இடத்தில் பிற்காலத்தில் சிறிய பள்ளிவாசலான மஸ்ஜிதுல் ஹுமைதி அமைந்த சுற்றுச்சூழலில் மிகவும் பிரமாண்டமாக நடைபெற்றது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இதன் பின்னரே மஸ்ஜிதுல் அக்பரில் எமது மக்களினால் முதலாவது ஜும்ஆத் தொழுகை 08.01.1988ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஜும்ஆ பிரசங்கத்தை எல்லா உலமாக்களும் மறுத்த நிலையில் எம்.ஐ. றஹ்மத்துல்லாஹ் மௌலவி முன்வந்து நிகழ்த்தினார்கள். மக்கள் நிறைந்திருந்தனர். இதனால் பொலிஸ் வரை இந்த நிர்வாகம் விசாரிக்கப்பட்டது.

இந்தக்கால ஓட்டத்தில் மக்கள் குடிகளும் பெருகி மங்களகரமான வாழ்வும் வெளிநாட்டு உழைப்பும் விரும்பியபடி உழைத்து மக்கள் சிறப்பாக வாழ்ந்தனர் ஏழைக்கும் ஒரு காலம் வரும் என்பார்களே அந்தக்காலம் வந்தும் அனுபவித்தும் இன்புற்றிருந்தனர். இந்தச் செழிப்புமிக்க காலத்தில் மக்களின் இறைவழிபாட்டுக் கொள்கையில் இங்கு மாத்திரமல்லாது பரந்த நிலையில் அறியாமையின் ஊடறுப்புக்கள் பின்னிப் பிணைந்திருந்தன அவதானித்த எமது அக்பர் பள்ளிவாயல் ஈடுபாட்டாளர்களும் முன்னோடிகளும் தெளிவான இஸ்லாமியக் கொள்கையை அறியவும் அதனை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவும் முற்பட்டனர். இதற்காக பல்வேறு மார்க்க அறிஞர்களை எடுத்து மக்கள் மத்தியில் மார்க்கப் பிரச்சாரங்களை மேற்கொள்ளவும் தலைப்பட்டனர். இதற்கு மர்ஹூம் எம்.எம். மலிக் மௌலவி, மர்ஹூம் முஸ்தபா மவுலானா, எஸ்.எச். முபாறக் மௌலவி போன்றோரும் தமது கடமையாகவும் இறைபணியாகவும் கருதி இப்பணிக்காய் செயற்பட்டனர். அமைப்பு ரீதியாக ஜமாத் அன்சாரி சுன்னத்துல் முஹம்மதிய்யா என்ற அமைப்பு இதற்கான பாலமாகவும் பலமாகவும் இருந்ததுடன் இன்னும் பல உலமாக்களும் இதற்கான மார்க்க அறிஞர்களை உருவாக்கித்தர அயராது பாடுபட்டனர். இவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக.

இவ்வாறானதோர் சூழ்நிலையிலேயே 2004 டிசம்பர் 26ஆம் நாள் ஏற்பட்ட சுனாமிப் பேரலையும் அதனால் ஏற்பட்ட அழிவுகளும் அறிந்ததோர் துன்பியல் வரலாறு. இதுபல இடங்களில் பதிவானதோர் விடயம் இதனால் மக்கள் அனுபவித்த அல்லல்களும் இளப்புகளும் மீழமுடியாதவைகள். இருந்த போதிலும் அதன் பின்னணியில் இறைவன் பல நண்மையான விடயங்களையும் வைத்துத்தான் சோதித்துள்ளான். அந்தவகையில் எமது அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசலும் அதன்கீழ்ருந்த கடற்கரையில் அமையப்பெற்ற அல்-மஸ்ஜிதுல் ஹுமைதி என்ற சிறிய பள்ளிவாசலும் முற்றாகவே சேதத்திற்குள்ளானது. வாழ்விடமும் இளந்து உயிர்களையும் பறிகொடுத்த மக்கள் நொடிந்து காணப்பட்டனர்.

காலங்கள் கடந்தன. விதியைப் பொருந்திக் கொண்ட மக்கள் மீண்டும் தலையெடுத்தனர். தம் வாழ்விடங்களை புனரமைத்தனர். தமது இதயத் துடிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த பள்ளிவாசல்கள் புனரமைக்கப்பட வேண்டும் எனத் துடியாய்த் துடித்தனர் தற்காலிக தொழுகைக்கான இடமொன்றை அமைத்தனர். அதன்பின்னர் பிரமாண்டமானதோர் பள்ளிவாசல் அமைப்பதற்கு அடித்தள மிடப்பட்டது. அதுமட்டுமல்லாமல் இளந்த ஹுமைதிப் பள்ளிவாசலுக்குப் பதிலாக தக்வா என்று சிறிய பள்ளிவாசலையும் இஸ்லாமிக் றிலீப் வீட்டுத்திட்டத்தில் இன்னொரு பள்ளிவாசலையும் அமைத்து நிர்வகித்து வந்ததுடன் இன்று மிகப் பிரமாண்டமானதாகவும் மேல்மாடியில் குர்ஆன் மத்ரசாவையும் கொண்ட தாகவும் புதுப்பொலிவுடன் காட்சிதரும் அல்-மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசலை இறைவன் உதவியால் அமைத்தனர் இன்று இதனைக்கண்டு பிரமிக்காதோர் இல்லை எனலாம். இதன் ஆளுகையில் கடைத்தொகுதி, நூலகம், பாடசாலை, தபாற்கந்தோர், திருமணபதிவுக் காரியாலயம் என நீண்டு கொண்டே போகும் ஒரு வரலாற்று மையத்தை அமைத்தனர்.

இவைகளையெல்லாம் இறைவனின் உதவி கொண்டு இன்று முன்னின்று பாடுபட்டு பல விமர்சனங்களையும் சகித்துக்கொண்டு இறைபணியாக செய்து வரும் நிருவாகத்தினரை நாம் கட்டாயம் நினைவு கூறியே ஆக வேண்டும்.

கட்டடக்குழுத் தலைவராக வை.எல்.எம். அன்சார் அவர்களும், மஸ்ஜித் தலைவராக ஐ.எல்.எம். பாறுக் அவர்களும், உபதலைவராக ஏ.ஆர். தாஜூத்தீன் அவர்களும், பொருளாளராக ஐ.எல். நயிமுத்தீன் அவர்களும், செயலாளராக யூ.எல். நபீர் அவர்களும், உப செயலாளராக யூ.எல். சஜித் அவர்களும், கட்டடக்குழு உறுப்பினர்களாக எம்.ஐ. கமால்தீன், எஸ்.எச். ஜபறுல்லா, எச்.ஏ. காதர், யூ.எல். அ'மட்லெப்பை, எஸ்.ஏ. வாரிட் போன்றோரும் இவ்விறைபணியில் ஈடுபட்டு வருவதுடன் எல்லோரது ஒத்துழைப்பும் ஈடுபாடும் எப்போதும் இந்நிர்வாகத் திற்குக் கிடைத்த வண்ணமே உள்ளன. அந்த வகையில் வழிகாட்டலையும் ஆலோசனைகளையும் எம்.எச்.எம். முபாறக் (மதனி) அவர்கள் வழங்கி வருவதும் மார்க்கப் பிரச்சாரப் பணியை சிறப்புற முன்னெடுத்துவருவதும் அல்லாஹ்வின் ஏற்பாடகப் பொருந்திக்கொள்ள வேண்டும். இதில் பெருமையோ புகழோ கலந்து விடாமல் இறைவன் அனைவரையும் என்றென்றும் பாதுகாக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

வரலாறு ஒன்று புதைந்துவிடக்கூடாது அந்தவகையில் இப்பள்ளிவாயல் ஆரம்பித்தது முதல் இன்றுவரை யார்யாரெல்லாம் இதன் வளர்ச்சிக்காகவும், எழுர்ச்சிக்காகவும் ஒரு துரும்பைத்தான் சேர்த்திருந்தாலும் நிச்சயமாக அதன் நண்மையை பெற்றுக்கொள்வார்கள் அதனால் குறைகளை விடுத்து நன்மை யைச் சுமந்துகொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாசல்

எ.ஆர்.எ. சத்தார், ஜே.பி.

1959ம் ஆண்டு இப்போதைய அல்-மதீனா வித்தியாலயம் ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று ஏறக்குறைய மூன்றாண்டுகள் முன்னராக, பஞ்சாப் மாநிலம் என்றழைக்கப்படும் மக்பூலியாபுரத்தில் அதிகமான மக்கள் வந்து குடியேறத் தொடங்கினர். இதனால் இம்மக்களுக்கான வழிபாட்டுத் தலங்களும், சிறுவர்களுக்கான பாடசாலைகள் என்பன அமைக்கப்படுவதன் அவசியம் உணரப்பட்டதன் விளைவாக பாடசாலை, பள்ளிவாயல் எனப்பல பொது நிறுவனங்கள் நிறுவப்பட்டன. இந்த அடிப்படையிலேயே குடியேறிய மக்களின் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றவும் பிள்ளைகளின் இஸ்லாமியக் கல்வி குர்ஆன் கற்றல் போன்றனவற்றிற்காகப் பள்ளிவாசல் மத்ரஸா என்பனவற்றின் தேவையேற் பட்டது. இதையுணர்ந்த சமூக ஆர்வலர்கள், தனவந்தர்கள் ஒன்று சேர்ந்து இவற்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இக்காலத்தில் முகம்மது ஹனிபா அசனார்லெப்பை என்பவர் இப்பிரதேசத்தின் அதிக நிலத்தின் சொந்தக்காரராகவிருந்தனாலும் வள்ளல் தன்மை கொண்டவராக விருந்தனாலும் தாமாகவே முன்வந்து பள்ளிவாயல் மத்ரஸா அமைப்பதற்கான காணியை இனாமாக வழங்கினார். அந்த இடத்திலேயே இன்றைய மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாயல் தலைநிமிர்ந்து நிற்கிறது.

இவ்வாறு அசனார்லெப்பை அவர்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் இஸ்மாயில் (மாஹிர் விரிவுரையாளரின் தந்தை) தலைமையிலான குழுவினர் ஒரு ஓலைக்கொட்டிலமைத்து ஐங்காலத் தொழுகையில் ஈடுபட்டனர். சமகாலத்தில் குர்ஆன் மத்ரஸாவும் முகம்மது ஹனிபா இப்றாலெவ்வை (குஞ்சித்தம்பியர்) அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஒரு சுழற்காற்றினால் இக்கொட்டில் சாய்ந்து வீழ்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து குர்ஆன் மத்ரசா இப்றாலெவ்வை ஆலிம் அவர்களின் வீட்டுக்கு மாற்றப்பட்டதுடன் ஐங்காலத் தொழுகையும் நடைபெறாத ஒரு நிலையேற்பட்டது.

சில காலங்களின் பின்னர் மக்கள் எவ்வாறாவது ஐங்காலத் தொழுகை நடாத்தப்படல் வேண்டும் என்ற ஆர்வத்தில் ஒரு தற்காலிக கொட்டிலை அமைத்து தொழுகையில் ஈடுபட்டனராயினும் ஒரு ஒழுங்கான நிருவாகமோ கட்டமைப்போ இருக்கவில்லை. இந்நிலையைக் கவனத்திற்கொண்ட சிலர் எம்.எஸ். சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் கூடி ஒரு நிருவாக அமைப்பினை ஏற்படுத்தியதோடு அவரையே தலைவராகவும் தெரிவுசெய்து கொண்டனர். இக்குழுவினரின் முயற்சியால் ஒரு சிறியளவிலான கற்கட்டிடம் உருவாக்கப்பட்டு ஐங்காலத் தொழுகை, மத்ரசா என்பன நடைபெற்று வந்தது. இவரது தலைமையும் நீண்ட நாட்கள் இருக்கவில்லை. பள்ளிவாசலை நிருவகித்தவர்களினது ஆர்வமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றிக் காணப்பட்டது. இதனைக் கவனத்திற் கொண்ட தோழர் இஸ்மாயில் அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்று பள்ளிவாயலின் நாளாந்த நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இவரைத் தொடர்ந்து தலைவராக வந்த இப்றாலெப்பை அபூ என்பவரும் சிலகாலம் பள்ளிவாயல் நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டினார்.

ஒரு பள்ளிவாயல் உயிரோட்டமாக இருக்க வேண்டுமானால் அதனை அண்டி வாழ்பவர்கள் பள்ளியுடன் தொடர்புள்ளவர்களாக இருப்பது முக்கிய மானதாகும். இதன் நிர்வாகப் பொறுப்பினை ஏற்ற பலர் தூர இடங்களில் இருப்பவர்களாதலால் அவர்கள் மற்றைய பள்ளிவாயல்களை நாடிச் செல்வது தவிர்க்க முடியாதது. இந்த வகையில் மக்பூலியாவின் நிலைமையும் அதுவாக விருந்தது. இதற்கு இன்னுமொரு பிரதான காரணமும் இருந்தது. புதிதாகக் குடியமர்ந்த மக்கள் தமது அலுவல்களைக் கவனிப்பதிலேயே அதிக கவனம் செலுத்துவதற்கும், கடற்றொழில் செய்வதற்குமே அவர்களது பெரும்பகுதிக் காலங்களைச் செலவிட்டனர்.

இதன் பின்னர் பள்ளிவாயலின் தலைமைப் பொறுப்பை பள்ளிவாயல் நிலத்தை அன்பளிப்புச் செய்தவரின் இளைய புதல்வர் ஏ.எல். ஹம்தூன் (செயினுத்தீன் ஓடாவியார்) ஏற்றுக்கொண்டார். இவரது நான்கு வருட காலத்தில் தற்போதுள்ள பள்ளிவாயல் கட்டிடம் ஏழு அடிவரை கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. படிப்படியாக பிரதேச மக்களும் மார்க்கக் கடமைகளில் ஓரளவு ஈடுபாடு காட்டத் துவங்கினர்.

இவரைத் தொடர்ந்து இப்பிரதேசத்திலேயே தமது தொழிலையும் மேற்கொண்டதோடு நிலையான குடியிருப்பையும் ஏற்படுத்திக் கொண்டவரும் ஓரளவு பணவசதி படைத்த வராகவும் காணப்பட்ட அல்-ஹாஜ் நா. இஸ்மாலெப்பை ஜே.பி. அவர்களைப் பிரதேச மக்கள் தலைவராகத் தெரிவு செய்தனர். இவர் சுமார் பதினெட்டு வருடங்கள் தலைவராகப் பணி புரிந்ததோடு பாரிய அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்டார். மாடியின் கட்டுமானப் பணிகள், விஸ்தரிப்புப் பணிகள், நீர்த்தாங்கியமைத்தல் போன்ற பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டதோடு இதனை ஒரு ஜும்ஆ பள்ளியாகவும் மாற்றிக் கொண்டார். இவரது காலம் மக்பூலியாவின் பொற்காலம் என்று சொல்வதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அவரது இப்பாரிய பணிக்காக அல்லாஹுத்தஆலா அவருக்கு ரஹ்மத்தை வழங்குவானாக.

இதன் பின்னர் தலைமைப் பொறுப்பை கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஜனாப். ஏ.எல்.எம். முஸ்தபா அவர்கள் ஏற்றிருக்கிறார். கடந்த 2010இல் இருந்து நான்கு வருடங் களாகப் பள்ளிவாயலின் அபிவிருத்தியில் முழுக்கவனம் செலுத்தி வருகிறார். பள்ளிவாயல் விஸ்தரிப்பு, அழகுபடுத்துதல், நிரந்தர வருமானங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் எனப் பலவகையான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கிறார். தற்போது மழ்கறுல் மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாயல் அழகிய தோற்றத்துடனும் புதுப்பொலிவுடனும் ஒரேவேளையில் சுமார் இரண்டாயிரம் பேர் நின்று தொழக்கூடியதாகவும் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மத்திய பள்ளிவாசல்

எம்.எம். நவ்பல். செயலாளர்

இப்பள்ளிவாயல் எமது ஊரின் மத்திய பகுதியில் அமைந்திருப்பதனால் இது மத்திய பள்ளிவாசல் என பெயர் பெறுகின்றது. 1950ம் ஆண்டு உ.லெ. இபுறாலெவ்வை என்பவரிடமிருந்து இந்நிலம் மத்ரசா மவ்லானா, ஆதம்லெப்பை ஹாஜியார் என்ற ஆலிமு ஹாஜியார், அப்துர் ரஹ்மான் மரைக்கார், அலியார் மாஸ்டர், காசிம் ஹாஜியார், வெள்ளத்தம்பி ஹாஜியார், சாகுல் ஹமீட் மௌலவி ஆகியோரை உள்ளடக் கியதாக ஒரு குழுவினரால் விலைக்கு வாங்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் ஒரு குர்ஆன் மத்ரசா "மௌனதுர் றஃமான் மன்பஉல் ஹிதாயா" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தது. 1952ம் ஆண்டு இங்கு தொழுகை ஆரம்பிக்கப்படுவதற்காக ஒரு சிறிய இடம் வளவில் மேற்குப் புறத்தில் உருவாக்கப்பட்டு கல்முனை D.R.O. காரியாலயத்தில் பதிவுசெய்யப் பட்டது.

குர்ஆன் மத்ரசாவுக்குரிய இடம் கிழக்குப் பக்கமாக அமைக்கப்பட்டு அதில் அதிகமான மாணவர்கள் கற்றுள்ளனர். இக்கட்டிடம் 1965ம் ஆண்டு வரை, தேர்தல் வாக்களிப்பு நிலையமாக இருந்தது மட்டுமல்லாமல் கூட்டங்கள், பொது விடயங்கள் சம்பந்தமான கலந்துரையாடல்கள் என்பன நடைபெறும் இடமாகவும் விளங்கியது.

இக்காலத்தில் இதன் தலைவராக ஆதம்லெப்பை ஹாஜி அவர்களும் செயலாளராக அலியார் ஆசிரியர் அவர்களும், பொருளாளராக அப்துர் ரஹ்மான் மரைக்கார் அவர்களும் செயற்பட்டார்கள். ஊரின் மூன்றாவது பள்ளிவாசலாக இது அமைந்தது. இது மத்திய தைக்கா என்றே அழைக்கப்பட்டு வந்தது. இது 1980 களின் பின்னரே மத்திய பள்ளிவாசல் என்ற பெயர் மாற்றம் பெற்றது.

இன்றுவரை உயிரோட்டமுள்ள ஒரு பள்ளிவாசலாக இது இருப்பதுடன் அதிகளவான மக்கள் தொழுமிடமாகவும் விளங்குகின்றது. குறிப்பாக இப்பகுதியின் மஹல்லாவாசிகளின் 90 வீதமானோர் ஐங்காலத் தொழுகையில் ஈடுபடுவது இப்பள்ளியின் ஒரு சிறப்பம்சமாகும்.

பிற்காலங்களில் இப்பள்ளிவாசலை பொறுப்பெடுத்து நடாத்திய தலைவர் களின் சிறந்த செயற்பாடுகள் காரணமாக இன்று ஊரின் மத்தியில் தலைநிமிர்ந்து நிற்கும் இப்பள்ளிவாசல் எமது முதுசொங்களில் ஒன்றாகும்.

எஸ்.எம். இப்றாஹிம் ஹாஜியார், சட்டத்தரணி அல்-ஹாஜ். ஏ.எம். பதுறுத்தீன், ஓய்வுபெற்ற ஆசிரியர் அல்-ஹாஜ். ஈ.எம். பதுறுத்தீன், அல்-ஹாஜ். எஸ். இறமுளான் ஆகியோர் தலைவர் களாகவிருந்து வழிநடாத்தியதோடு கடந்த பத்து ஆண்டுகளாக அல்-ஹாஜ் ரீ.எல்.எம். அமீனுத்தீன் ஓய்வுபெற்ற அதிபர் அவர்களின் தலைமைத் துவத்தின் கீழ் மிகச்சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.

இங்கு குர்ஆன் மத்ரஸாவும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. சாஹுல் ஹமீட் மௌலவி, வெள்ளைத்தம்பி ஹாஜியார், மன்னார் ஆலிம் லாபிர் மௌலானா, அலிஜின்னா மௌலவி, புவாத் ஆலிம், அறூஸ் மௌலவி, செயினு லாப்தீன் மௌலவி, தற்போது முபாறக் மௌலவி ஆகியோரின் நெறிப்படுத்தலில் குர்ஆன் மத்ரஸா சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மஸ்ஜிதுல் ஹிதாயா பள்ளிவாசல்

அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார், ஜே.பி.
முன்னாள் தலைவர் - மஸ்ஜிதுல் ஹிதாயா பள்ளிவாசல். மருதமுனை.

தோற்றம் :

மருதமுனை மூன்றாம் குறிச்சியில் கடற்கரைப் பிரதேசத்தில் விளையாட்டு மைதானத்தின் வடபுறத்தில் ஸம் ஸம் வீதியுடன் இணைந்ததாக அமைந்திருப்பது மஸ்ஜிதுல் ஹிதாயாவாகும். ஆரம்பத்தில் "ஹிதாயத்துல்லா தைக்கா" என்றும் "றசூல் மவ்லவியுடைய பள்ளி" என்றுமே இது அழைக்கப்பட்டு வந்தது. பனையடி வீதியின் கிழக்கே நீர்தேங்கி நிற்கும் பெரிய கேணியும், அதன் கிழக்கே காடும் அதனை அண்டியதான குடியிருப்புமாக அமைந்திருந்த இப்பிரதேசம் ஆலங்கேணி என்றே அழைக்கப்பட்டு வந்தது. மின்சார வசதிகளோ, போக்குவரத்து வசதிகளோ இல்லாத காலம். அதிலும் மழைக்காலம் அறவே போக்குவரத்துச் செய்யமுடியாமல் கேணி நிறைந்த நீர் தடையாகவிருக்கும். இரவில் பிரயாணம் செய்வதென்பது நினைத்துப் பார்க்க முடியாதது மட்டுமல்ல கேணியில் ஒரு வகைக்கிழங்கு அவித்தால் வருமே அந்த மணம் மக்களை அச்சுறுத்திய காலம். பேய், பிசாசுகள் நடமாட்டம் இப்பகுதியில் உள்ளனவென்று மக்கள் நம்பிய காலம். மக்கள் தமது ஐங்காலத் தொழுகையை நிறைவேற்று வதற்காக வடதெருப்பள்ளி (தற்போதைய மஸ்ஜிதுன்நூர் பள்ளிவாசல்), தென்தெருப்பள்ளி (தற்போதைய மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசல்) மற்றும் மத்திய தைக்கா போன்ற வற்றையே நாடிச்செல்லும் நிலை.

இப்பிரதேசத்தில் சின்னப்பள்ளி (மஸ்ஜிதுன் நூர்) மரைக்காயர்மார்களான யூ.எல். அலியார் லெப்பை (ராசாப்பிள்ளை), எஸ்.எல்.ஏ. சமத் (யூக்ளிட் ரைவர்) ஆகியோரும், பெரியபள்ளிவாயலின் (மஸ்ஜிதுல் கபீர்) மரைக்காராக ஐ.எல். அப்துல் றகீம் (கட்டுரை ஆசிரியரின் தந்தை) அவர்களும், சம்சுத்தீன் வைத்தியர், முகம்மது முகைதீன் (மலையளத்தார்) போன்ற பிரபல்யமானவர்களும், பள்ளிவாயலின் வடபுறத்தில் அலித்தம்பியர், மீராலெப்பை, அலியார் (தம்பிகண்டர்) போன்ற முக்கியஸ்தர்களும் வாழ்ந்து வந்தனர். தற்போது பள்ளிவாசல் அமைந்திருக்கும் காணி, விளையாட்டு மைதானம், வீட்டுத்திட்டம் என்பன மையவாடியாக இருப்பினும், செறிவாக மையித்துக்களை அடக்கம் செய்யும் இடமாக விளையாட்டு மைதானமுள்ள பிரதேசமே காணப்பட்டது. மற்ற இடங்களில் நெசவுக்கான பாக்கலைத்தல், றவுண் பந்து அடித்தல், கிளித்தட்டு விளையாடுதல், வார் விளையாட்டுக்கள் எனப் பல விளையாட்டுக்களும், சிறுவர்கள் றப்பர் பந்து கொண்டு உதைபந்தாடும் இடமாகவுமே காணப்பட்டது. மழை காலங்களில் ஒரு சில நாட்களுக்கு நீர் நிறைந்த பிரதேசமாகவும் காணப்படும்.

1959ம் ஆண்டு மருதமுனை கிழக்கு முஸ்லிம் கலவன் பாடசாலை தற்போதைய அல்-மதீனா வித்தியாலயமுள்ள இடத்தில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியாக இப்பிரதேசத்தில் குடியிருப்புக்கள் உருவாகின. மக்கள் வெற்று நிலமாகக் கிடந்த இடங்களையெல்லாம் வேலி போட்டு அடைக்கத் தொடங்கினர். தற்போதைய கடற்கரை வீதி வரை விளையாட்டு மைதானம் உள்ள மையவாடி தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் மக்களால் அடைக்கப்பட்டு வேலிகள் இடப்பட்டு சிறிய சிறிய குடிசைகளும் உருவாகின. இ.லெ. அப்துல் றகீம் மரைக்கார் அவர்களால் தற்போதைய பள்ளிவாசல் காணியும் அடைக்கப் பட்டது.

இந்த வேளையில்தான் றசூல் மவ்லவி அவர்கள் மவ்லவி ஆசிரியர் நியமனம் பெற்று சில காலம் சேவையாற்றிய பின் மன்னார் தாறாக்குண்டிலிருந்து இடமாற்றம் பெற்று இங்கு வருகிறார். இப்பிரதேசத்தில் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுவதற்கான ஒரு பள்ளி அமைக்கப்படுவதன் அவசியத்தையும் விளக்கி ஒரு கூட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது. இக்கூட்டம் தற்போதைய காறூன் பழக்கடையுள்ள இடத்தில் நின்ற பெரிய வேப்ப மரத்தின் கீழ் கூட்டப் பட்டது. இக்கூட்டத்தில் மேற்படி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு ஏகமனதான ஆதரவினைப் பெற்றதுடன் எவ்விடத்தில் பள்ளியை அமைப்பது என்ற வாதங்கள் நடைபெற்ற வேளையில் அப்துல் றகீம் மரைக்கார் அவர்கள் தன்னால் அடைக்கப்பட்ட பிரதேசத்தைப் பள்ளிவாயல் கட்டுவதற்கு விட்டுக் கொடுக்க முன்வந்தார். இது 1963 இறுதிப் பகுதியில் நடைபெற்ற சம்பவம். இக்காலப் பகுதியில்தான் இவரது 3ஆவது மகன் ஹிதாயத்துல்லா வபாத் தானார். இதைக் காரணமாக வைத்து அமையப் பெறவிருக்கும் பள்ளிவாசலுக்கு ஹிதாயத்துல்லா தைக்கா என்ற பெயரைச் சூட்டுவதற்கு சபையோர் முன் வந்தனர்.

பிரதேச மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மரம்வெட்டி ஓலை பின்னி தொழுகையை நிறைவேற்றுவதற்காக ஒரு சிறிய இடத்தினை ஏற்பாடு செய்து கொண்டனர். றசூல் மவ்லவி அவர்கள் கதீபாகவும், ஆத்திமோட்டார் என்கின்ற அகமட்லெப்பை முஅத்தினாகவும் எதுவித ஊதியமுமின்றி கடமையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து பள்ளியைக் கற்கட்டிடமாக மாற்ற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் றசூல் மவ்லவி அவர்களை ஆலோசகராகவும், முகம்மது முகைதீன் அவர்களைத் தலைவராகவும், அப்துல் றகீம் மரைக்கார் அவர்களைச் செயலாளராகவும், அலியார் லெப்பை மரைக்கார் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட ஒரு சபை உருவாக்கப்பட்டது. ஏனைய உறுப்பினர்களாக சமது மரைக்கார், அலித்தம்பியர், சம்சுத்தீன் வைத்தியர் போன்றவர்களும் தெரிவாகினர். மேற்படி குழுவினர் றசூல் மவ்லவி அவர்களின் தலைமையில் வசூல் செய்வதில் முழுமூச்சாக வேலை செய்து 30X20 அடி கட்டிடம் ஒன்றை உருவாக்கினர். இதில் கிரமமாக ஐங்காலத் தொழுகை நிறை வேற்றப்பட்டது. பக்கத்து வீடுகளுக்குச் சென்று வுழு செய்தும், வீட்டிலிருந்து வுழு செய்து வந்துமே மக்கள் தொழுகையை நிறைவேற்று பவர்களாக இருந்தனர். இதனைக் கவனத்திற் கொண்ட குழுவினர் கிணறு அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு 1965ல் ஒரு கிணற்றையும் அமைத்ததோடு ஒரு ஹவ்ழும் அமைத்துக்கொண்டனர். இந்த ஹவ்ழு கிணற்றோடு சேர்ந்ததான 3X5 அடி அளவானதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சிறுவர்களின் குர்ஆன் மத்ரசா பற்றிய சிந்தனை உருவானது. இப்பொறுப்பையும் றசூல் மவ்லவி அவர்கள் ஏற்று 1968இலிருந்து மத்ரசாவை நடாத்தி வந்தார். சுமார் முப்பது மாணவர்களளவில் இங்கு கல்வி கற்றனர். 1970 ஜூன் மாதமளவில் மேலதிகமாக கிதாப் மத்ரசாவும் ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒன்றரை வருடங்கள் கிரமமாக நடாத்தப்பட்டு வந்தது.

இவ்வேளையில் பள்ளிவாயலை விஸ்தரிக்க வேண்டிய தேவையேற்பட்டதாலும் பெரிய ஹவ்ழு கட்ட வேண்டியிருந்ததாலும் மத்ரசா மஜீட் மவ்லவி அவர்களின் இல்லத்திற்கு (தற்போதைய ஐ.ஏ. ஹமீட் சேமன் அவர்களின் இல்லம்) மாற்றப்பட்டது. இதன் பின்னர் பள்ளிவாயல் இரண்டு பக்கத்து விறாந்தைகள், ஹவ்ழுக்காக கிழக்குப் புறம் என வேலைகள் நடந்து கொண்டிருந்த வேளையில் பல நிருவாக மாற்றங்களும் இடம்பெற்றன.

1978இல் வீசிய சூறாவளி 2004இல் ஏற்பட்ட சுனாமிப் பேரலை போன்ற வற்றினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இப்பள்ளிவாயலின் முக்கியஸ்தர்களாகவும், தலைவர்களாகவும் கடமையாற்றியவர்களை இங்கு நினைவுகூருவது பொருத்தம். ஏற்கனவே கட்டுரையில் குறிப்பிடப்பட்டவர்கள் தவிர ஏ.எம். இப்றாகிம் ஹாஜியார், ஏ.சீ.ஏ. மாஜித் மவ்லவி, ஏ.ஆர்.எம். கலீல் சட்டத்தரணி, சங்குமார்க் அபூபக்கர், எம்.எம். மன்சூர், பழில் மவ்லானா, ஏ.எல்.எம். முஸம்மில், அலியார் (தம்பி கண்டர்), எம்.வீ. அகமதுலெப்பை வைத்தியர், எம்.எல். இஸ்மாலெப்பை, ஏ.வீ. முகைதீன், ஏ.எல்.எம். பரீத், எம்.எஸ்.எம். சனூன், மீராலெப்பை, ஏ.பி.எம். கரீம், அப்துல் சலாம், வீ.ஏ. மஜீட், வீ.ஏ. செயின், முகையதீன் பிச்சை, சக்கூர், அப்துல் காதர் மோதினார், ஹக்கீம் ஷாப், சாலி போன்றவர்களும் செயற்பட்டதுடன் பிற்காலங்களில் எஸ்.எம். அப்துல்லாஹ் (இலங்கை வங்கி) அவர்கள் தலைவராகவும் சுனாமியின் போது ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்களும் தலைவராக விருந்து செயற்பட்டனர்.

சுனாமியின் தாக்கத்தினால் மக்களின் பயம், அழிவுகள் இடம்பெயர்வு போன்றன சில காலம் பள்ளிவாயலில் தொழுகை நடாத்துவதற்கான சந்தர்ப் பத்தை வழங்கவில்லை. இதனால் எவ்வாறாவது பள்ளிவாயலைத் திருத்தம் செய்து மீண்டும் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்ற முனைப்பில் நிருவாகத்தினர் ஈடுபட்ட வேளையில் அக்கரைப்பற்றிலிருந்து வந்து பள்ளிவாயலின் சேதங்களைப் பார்வையிட்ட ஒரு வைத்தியர் குழுவினரிடம் மேற்படி உடைவுகளைத் திருத்தி தொழுகை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருமாறு வேண்டியதன் பயனாக அவர்களும் அவ்வுடைவுகளைத் திருத்தி தொழுகைக்கு ஏற்றதாக மாற்றித்தந்தனர். இவர்களுக்கு இந்த இடத்தில் நன்றி கூறுவதோடு மேற்படி பணியில் தீவிரமாக ஈடுபாடு காட்டிய கலாநிதி. எஸ். ஜஹ்பர் சாதிக், பாறூக் (மை ஹோப்), என். லாபிர் மவ்லானா, இக்பால், ஐயூப்கான், கமறுத்தீன், ஜலீல், சாபி, நஸ்றுல்லா போன்றவர்களும், செயலாளராக கடமையாற்றிய எம்.ஆர்.எம். சமீம் போன்றவர்களும் நன்றிக்குரியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் எஸ்.எம். அப்துல்லாஹ் அவர்கள் தலைவராகவிருந்த காலத்தில் 40X50 அடிக் கட்டிடத்திற்கான அத்திபாரம் இடப்பட்டிருந்ததையும் மறக்க முடியாது. மேற்படி கட்டிடத்தைத் தொடர்ந்து கட்டி விரைவில் அதில் தொழுகை நடாத்த வேண்டும் என விரும்பிய நிருவாகத்தினர் அதற்கான நிதிகளைத் தேடி முயற்சிகள் செய்தனர். அப்போது அமைச்சராகவிருந்த அதாவுல்லாஹ் அவர்களையும் நாடினர். அவர் உதவுவதாக வாக்களித்தாலும் அது இறுதிவரை நிறைவேறவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதே.

இச்சந்தர்ப்பத்தில் தான் சகோதரர் றிபான் அவர்கள் (குதிரை வைத்திருப்பவர்) பள்ளிவாயல் தலைவர் சத்தார் ஹாஜியார் அவர்களைச் சந்தித்து லண்டனில் வேலை பார்க்கும் எமதூர் இளைஞர்கள் ஒரு தொகைப் பணத்தினை சுனாமியால் பாதிக்கப்பட்ட பொது நிறுவனங்களின் அபிவிருத்திக்காகச் சேர்த்திருப் பதாகவும் அதில் ஒரு பகுதியை மஸ்ஜிதுல் ஹிதாயாவுக்கும் தரமுடியும் என்ற விடயத்தையும் கூறினார். இதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய நிருவாகத் தினரின் அயராத ஓட்டத்தின் பயனாக மேற்படி லண்டன் வாழ் நமது இளைஞர் களின் ரூபா 650,000/- எமக்குக் கிடைக்கப் பெற்றதும் அதனைக் கொண்டு கட்டிடத்தின் மேல் தளம் கொங்கிறீட் இடப்பட்டதும் நடந்தேறின. இதில் ரூபா மூன்றரை இலட்சம் மீதமாக இருக்கையில் தலைமைப் பொறுப்பை மர்ஹூம் இப்றாகீம் ஹாஜியார் அவர்கள் ஏற்றார்கள். அவர்களும் அயராது உழைத்து மேற்படி கட்டிடத்தில் தொழுகை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தது மட்டுமல்லாமல் பறக்கத் டெக்ஸ் உரிமையாளர் அல்-ஹாஜ் ஐ.ஏ. பரீட் அவர்களின் நிதியுதவி கொண்டு தரைக்கு மாபிள் இடும் பணியினையும் நிறைவேற்றினார்கள். இந்த வேளையில் தான் அவரது மரணம் சம்பவிக்கிறது. அவரது ஈருலக வெற்றிக்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக.

இதன் பின்னர் கலாநிதி எஸ். ஜஹ்பர் சாதிக் அவர்கள் தலைவராகவிருந்து சில அபிவிருத்திகளையும் அதன் பின்னர் தலைவராக ஏ.எல்.எம். சித்தீக் அவர்களும் கருமமாற்றி வருகின்றனர். அபிவிருத்திப் பணிகளும் தொடர் கின்றன. இன்ஷா அல்லாஹ் வெகுவிரைவில் முழுமை பெற்ற ஒரு பள்ளிவாயலாக இதனைக் காணமுடியும். எமது பிரார்த்தனைகளை எல்லாம்வல்ல அல்லாஹ் அங்கீகரித்து இதன் பணிகளில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கான நன்மைத் தட்டினைக் கதிக்கச் செய்வானாக. ஆமீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஜிதுன் மினன் பள்ளிவாசல்

அல்-ஹாஜ். கே.எல்.ஏ. வாஹித் (ஓய்வுபெற்ற அதிபர்)

மருதமுனையின் தென்பகுதியின் எல்லையாக தற்போது அமைந்துள்ளது ஹாஜியார் வீதியாகும். இவ்வீதியின் தென்பகுதியிலும் அதற்கு அடுத்ததாயுள்ள செட்டியார் வீதி - செல்லப்பா வீதி, திருவள்ளுவர் வீதி ஆகிய வீதிகளின் இரு மருங்கிலும் முஸ்லிம்களின் குடிப்பரம்பல் 1948க்கு பின்னர்தான் செறிவாக இடம் பெற்றது. இப்பகுதியில் ஆரம்ப காலம் முதல் மக்களின் குடிப்பரம்பல் மிக மெதுவாகவே இடம்பெற்று வந்துள்ளமையை நாம் அவதானிக்க முடிகிறது.

முஸ்லிம்கள் செறிவாக வாழும் இடங்களில் அவர்களுக்கென ஒரு வணக்கத் தலம் ஏற்படுத்துவது அப்பகுதியில் வாழும் மக்களின் கடமை போன்றிருந்து வருகின்றது. இப்பிரதேசத்தைச் சேர்ந்த எம்.எம். ஒமர் சாஹிப் அஹமத் மீராசாஹிப் ஹாஜியார் (பெரிய ஹாஜியார் என மக்களால் அழைக்கப்பட்ட வர்கள்) அவர்கள் தலைவராக மக்களால் தெரிவுசெய்யப்பட்டமையால் அவர்கள் மருதமுனை மஸ்ஜிதுன் கபீரின் வளர்ச்சியில் அக்கறைகொண்டு உழைத்தார்கள். தான் வாழ்ந்த பிரதேச அபிவிருத்தி பற்றி அவர்களால் கவனம் செலுத்த முடியவில்லை. எனினும் இப்பகுதியில் குடியேறிய செல்வாக்குடைய வர்கள் மருதமுனை பெரிய பள்ளிவாசலின் நிருவாகக் கடமைகளுக்குப் பொறுப் பாளர்களாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டமையால் அவர்கள் தம் பிரதேசத்தின் அபிவிருத்தியில் அதிகளவு அக்கறை காட்டாது அவர்கள் சார்ந்த பெரியபள்ளி வாசலின் (மஸ்ஜிதுல் கபீர்) நிருவாகத்தையும் அதன் அபிவிருத்தியையுமே கருத்தில் கொண்டு இயங்கி வரலாயினர். அக்கால மக்களின் குடிப்பரம்பல் இப்பகுதியில் மிகக்குறைவாக இருந்தமையும் ஒரு முக்கிய காரணியாகும்.

சுமார் கால் நூற்றாண்டுக்குப் பின்னர், அதாவது 1980க்கு பின்னர் மக்களின் குடிபெயர்வு மிக வேகமாக இடம்பெற்றமையினால் மருதமுனையின் தென் பகுதியான பாண்டிருப்பில் முஸ்லிம்களின் குடியிருப்புக்களும் அதிகரித்தன. இதனால் மக்களின் மார்க்கக் கல்வியினையும் மார்க்க அறிவினையும் ஊட்ட வல்ல ஓரிடம் தேவையென்பது பலராலும் உணர்த்தப்பட்டது. எனினும் வணக்கத்தலம் - பள்ளிவாசல் ஒன்றினை அமைப்பதற்கு ஏற்ற ஓரிடம் இல்லா திருந்தமை மிகவும் சஞ்சலத்தைத் தந்தது. இவ்வேளையில் தற்போது மஸ்ஜிதுல் மினன் அமைந்துள்ள காணியின் உரிமையாளர் அவர்களை 1984-02-03இல் சந்தித்து குறித்த காணியினை பள்ளிவாசல் அமைப்பதற்கு தந்துதவ வேண்டும் என அல்-ஹாஜ் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா ஜே.பி. தலைமையில் சென்ற குழு அவரைப் பணித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியின் உரிமையாளர் குறித்த காணியினை தன் சகோதரிக்குக் கொடுக்கப் பொருந்தியுள்ளதாயும் அதற்கு மாற்றீடாக அவர்களுக்கு பணம் கொடுத்தால் அவர்கள் இணங்குவார்கள் எனவும் கூறவே ரூபா 20,000 (இருபதாயிரம்) ஒரு மாத காலத்துள் கையளிப்பதாக இணக்கங்காணப்பட்டது. அதற்கேற்ப இப்பிரதேசத்தில் வாழும் வசதி படைத்தவர்கள் குறித்த தொகைப் பணத்தினை அன்பளிப்பாக வழங்கியதன் பேரில் 1984-02-29இல் காணி கிரயமாக வாங்கப் பட்டமையை சுட்டிக்காட்டியேயாக வேண்டும். மருதமுனை, பெரியநீலாவணை ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள பள்ளிவாசல்கள் அனைத்தும் நன்கொடையாகப் பெறப்பட்ட அல்லது முடிக்குரிய காணிகளில் தான் அமைந்துள்ளன. எனினும் மஸ்ஜிதுல் மினன் மட்டும் கிரயமாகப் பெறப்பட்ட காணியில் அமைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து காணியில் நிரந்தர கட்டடத்தினை அமைக்க ஆவன செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1985-03-03இல் நிரந்தரக் கட்டிடத் திற்கான அடிக்கல் மௌலவி அல்-ஹாஜ் ஏ. முஹமத் அதிபர் அவர்களாலும் முந்நாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான அல்-ஹாஜ் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களினாலும் நடப் பட்டன. அதனைத் தொடர்ந்து நாம் நிதி வசூலுக்குச் சென்றபோது எமக்கு வழங்கப்பட்ட ஆலோசனையின் பேரில் தற்காலிக கொட்டில் (தகரத்தினால்) அமைத்து தொழுகை மேற்கொள்ளப் பட்டது. 01-04-1990 முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நிதி வசூலினாலும் ஏனைய தாபனங்களின் அன்பளிப்பினாலும் அரை குறையாக பள்ளிவாசல் ஒரு பகுதி முடிவுற்று தொடர்ச்சியாக ஐங்கால தொழுகை நிறைவேற்றப்படுகின்றது. மேல்மாடியின் தளத்திற்கு தற்போது மாபிள் போடும் பணியில் மூன்றில் இரண்டு பகுதிக்கான வேலை நிறைவாகியுள்ளது. எஞ்சியுள்ள வேலைகளும் இன்ஷா அல்லாஹ் இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் நிறைவுற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாடிவேலை முடிவுற்றதும் மத்ரஸா, ஜும்ஆ போன்றவை மேற்கொள்ள எமது நிருவாகம் உத்தேசித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்-ஹாஜ். கே.எல்.ஏ. வாஹித், ஜே.பி. (ஓய்வுபெற்ற அதிபர்)

கலந்தர் லெப்பை அப்துல் வாஹித் 1938-05-17இல் மருதமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் மேற்கொண்டார். 16-04-1959ம் திகதி ஆங்கில ஆசிரியராகத் தனது முதல் நியமனம் பெற்றார். பல பாடசாலை களில் கல்விப்பணி செய்த இவர் 1970-03-01இல் அதிபராகப் பதவியுயர்வு பெற்று 1986-12-16ம் திகதி கல்விப்பணியில் இருந்து ஓய்வுபெற்றார்.

முழுத்தீவுக்குமான சமாதான நீதவானான இவர் "கல்முனை மீடியேசன் போர்ட்" அங்கத்தவராகவும் பாண்டிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவு T.C.C.S. ன் தலைவராகவும் செயற்படுவதோடு மஸ்ஜிதுல் மினன் பள்ளிவாயலின் தலைவராக நீண்டகாலமாகப் பணிபுரிகிறார். மஸ்ஜிதுல் கபீரின் நம்பிக்கையாளர் சபை உப தலைவராகவிருந்து அதன் நிர்வாகப் பரவலாக்கல் விடயத்தில் அதன் தலைவருடன் இணைந்து செயற் பட்டார். 2003இல் "சிலைசோ" அமைப்பின் விருதுபெற்ற இவர், சுனாமியின் பின்னர் அழிந்துபோன நெசவுத் தொழில் முயற்சியினை மேம்படுத்துவதற்காகவும், அதன் மூலம் மக்கள் தமது வருமானங்களைப் பெற்று தமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காகவும் பேசும் நிலையம் (பீடியோ) என்ற அமைப்பின் தலைவராகவிருந்து பல அரிய சேவைகள் புரிந்தார். இது மஸ்ஜிதுன்நூர் கட்டிடக் குழுவில் வெகுசிறப்பாக இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

சுனாமியின் பின்னர் எமதூரில் நலிவுற்ற கல்வியினை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற தூர நோக்கில் குறிப்பாக பாலர் கல்விக்காக ஐந்து நிலையங்களை நிறுவி 20 ஆசிரியர்களை ஆறாயிரம் ரூபா சம்பளம் வழங்கி பாலர் கல்வி மேம்பாட்டுக்காக உழைத்தார். மருதமுனை சமாதான சபை, ஸகாத் நிதியம் போன்றவற்றின் கருமங்களிலும் தனது பங்களிப்பை வழங்கினார்.

முகைதீன் மீராசாகிபு ஹப்ஸா என்பவரைத் தனது வாழ்க்கைத் துணையாகப் பெற்ற இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். நாட்டில் பிரசித்தி பெற்ற வைத்திய நிபுணர் வாஸில் அவர்கள் இவரது மகன் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மஸ்ஜிதுல் நூறாணியா பள்ளிவாசல்

ஏ.ஆர்.ஏ. சத்தார், ஜே.பி.

1983ம் ஆண்டு காலப்பகுதியில் எமது நாட்டில் ஏற்பட்ட கலவரம் காரணமாக அடிக்கடி ஊடரங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் மருதமுனை பிரதான வீதிக்கு மேற்புறத்தின் மத்தியில் வாழ்ந்த மக்களுக்கு தமது ஐவேளைத் தொழுகையினை நிறைவேற்ற பிரதான வீதியைக் கடந்து மஸ்ஜிதுன் நூர், மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசல்களுக்குச் சென்று வருவதில் பலவித சிரமங்கள் குறுக்கிட்டன. அத்தோடு குர்ஆன் மத்ரசாக்கள் அனைத்தும் பிரதான வீதியின் மறு பக்கத்திலேயே இருந்ததால் சிறுவர்கள் தமது மார்க்கக் கல்வியை கற்பதற்காக பிரதான வீதியைக் கடந்தே செல்ல வேண்டியிருந்தது. இது அவர்களுக்குக் கஷ்டமான நிலை. எனவே தமது பகுதியிலேயே தொழுகைகளை நிறைவேற்றவும், சிறுவர்களுக்கு இஸ்லாமியக் கல்வியை ஊட்டவுமாக குர்ஆன் மத்ரசாவுடன் இணைந்ததாக ஒரு பள்ளிவாயலை அமைத்துக்கொள்ள வேண்டிய தேவை இப்பகுதி மக்களால் உணரப்பட்டது. எனவே பள்ளிவாசல் அமைப்பதற்கான முன்முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டன.

முதலில் பள்ளிவாசல் அமைப்பதற்கான நிலம் இனம் காணப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வேளை இதற்காக எவ்வித பயன்பாட்டுக்கும் பொருத்த மில்லாத நீர் நிரம்பியிருந்த சேற்றுக்குடா இனம் காணப்பட்டது. சேறும் சகதியும் நிரம்பியிருந்ததாலேயே இது சேற்றுக்குடா என அழைக்கப்பட்டது. இது கல்முனைப் பிரதேச சபைக்குச் சொந்தமானதாக இருந்தது. இதன் கரைப் பிரதேசத்தைத் தனது சொந்தமாக்கிக்கொள்ளும் நோக்குடன் தனிநபர் ஒருவர் குடிசை கட்டி வாழ்ந்து வந்தார். சேற்றுக்குடாவை களி நிரப்பி திடலாக்கி பள்ளிவாசல் கட்டுவதென்று அதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது முன்னின்று செயற்பட்டவர்கள் முகம் கொடுத்த தொல்லைகளும் கஷ்டங்களும் ஒன்றிரண்டல்ல.

அதில் குடிசை கட்டி வாழ்ந்த தனிநபராலும் பிரதேச சபை உத்தியோகத்தர் களாலும் தொல்லைகள் தொடர்ந்தன. எனினும் முன்வைத்த காலைப் பின்வைப்ப தில்லை என்ற திடசங்கற்பத்துடன் செயற்பட்டதன் விளைவாக அல்லாஹ்வின் மாளிகைக்கு அயராது பணிசெய்து ஆவலுடன் வந்தவர்கள் அவ்வப்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டனர். உயிருக்குப் பயந்து இரவில் மறைந்து வாழ வேண்டிய நிலையும் ஏற்படாதிருக்கவில்லை. என்னதான் தொல்லைகள் தொடர்ந்தாலும் விடாக்கண்டனாக செயற்பட்ட இறையுள்ளங் களின் அர்ப்பணிப்பால் குறித்த நிலத்தை பள்ளிவாசலுக்கு அர்ப்பணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பிரதேச சபைக்கு ஏற்பட்டது. இதன் பரப்பு 80 அடி அகலமும் 140 இடி நீளமுமாகும்.

1988ல் இந்நிலப்பரப்பு பள்ளிவாசலுக்கு சட்டப்படியாக சொந்தமான பிறகு பிரதேச மக்கள் அனைவரினதும் சிரமதானப் பணிகள் மூலமும் நிதியுதவி போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னோரன்ன உதவிகள் மூலமும் பள்ளிவாசல் கட்டுவதற்கும் பொருத்தமாக தயார்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து பள்ளிவாசல் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஆரம்ப நிர்வாக சபை அமைக்கப்பட்டது. அதன் உத்தியோகத்தர்கள் வருமாறு.

தலைவர் : எஸ்.எச்.எம். நிஸாம், B.A.
செயலாளர் : ஐ. நூறுல் பௌஸ்
பொருளாளர் : அல்-ஹாஜ். எம்.வை.எல்.எம். இப்றாகிம் (சொய்ஸ் பலஸ்)

பள்ளிவாசல் நிர்மாணப் பணிகளுக்கு அல்-ஹாஜ். ஏ.பீ.எம். மரைக்கார், ஜே.பி. அல்-ஹாஜ். எம்.எஸ்.எம். ஐயூப், ஜே.பி, ஜனாப். எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா ஜே.பி, ஜனாப். ஏ. முகைதீன் G.S., அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஆகியோர் தமது தார்மீகப் பங்களிப்பை வழங்கினர். இதனால் 1989ம் ஆண்டு ஒரு தற்காலிகப் பள்ளிவாசல் அமைக்கப்பட்டு செயற்பட்டு வந்தது.

இந்த நிர்வாகத்தின் செயற்பாடுகளில் ஏற்பட்ட சில தவிர்க்க முடியாத மந்த நிலை காரணமாக சில காலங்களில் இடைக்காலத் தலைவராக அல்-ஹாஜ். எஸ்.எம். தொஹ்த்தார் தெரிவுசெய்யப்பட்டு 1991ம் ஆண்டு வேறொரு நிரந்தர நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. அதன் தலைவராக எச்.எல். சம்சுதீன் CDO அவர்களும், செயலாளராக எஸ்.எம். றபியுடீன் ஆசிரியர் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இக்காலகட்டத்தில் பள்ளிவாசலின் சுற்றுவேலிகள் பலமாக அமைக்கப்பட்டு பள்ளிவாசல் வளவில் மரக்கறித் தோட்டம் செய்யப்பட்டது.

தற்காலிக கொட்டிலில் ஐங்காலத் தொழுகைகள் நடைபெற்றுவரும் வேளையில் மேற்படி காணியில் கட்டப்பட்ட கொட்டிலை அகற்றி மாட்டு மடுவம் ஒன்றை அமைப்பதற்கு ஏதுவாக பிரதேச சபையிடம் இக்காணியை ஒப்படைக்க வேண்டும் என்று கடிதம் அனுப்பப்பட்டது. இப்பிரச்சினை பல கட்டப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஏ.எம். அஜ்முத்தீன் அவர்கள் தனது மாமாவின் காணியில் ஒரு துண்டினை மடுவம் கட்டுவதற்குத் தருவதாக வாக்குறுதி வழங்கியதனால் தீர்த்து வைக்கப்பட்டது. இக்காலப் பகுதியிலேயே இப்பள்ளி வாயல் மத்ரசா என்பனவற்றின் நம்பிக்கையாளர் சபை வக்பு சபையில் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் காணப்பட்ட நூறாணியாவின் பிரதான வீதி அப்போது நீர் வழிந்தோடும் ஒரு வாய்க்கால் போலவே இருந்த மையும் இதில் மக்கள் போக்குவரத்துச் செய்வது பெரும் சிரமமான ஒன்றாகவே இருந்தது. இவ்வீதியில் வசிக்கின்ற அதிகமானவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் என்ற காரணம் காட்டியே இவ்வீதியின் நிர்மாணப் பணி பிற்போடப்பட்டது. இவ்வேளையில் 1994ம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்கள் அமைச்ச ரானார்கள். மருதமுனை மத்திய குழுவின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வீதி அமைப்புக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதியும் திறந்துவைக்கப்பட்டது. இதன் மூலம் இப்பிரதேசத்தின் அழகும் முக்கியத்துவமும் உயர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச மக்கள் தமது ஐங்காலத் தொழுகைகளையும், மாணவர்களின் குர்ஆன் மத்ரசாவும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த இக்காலங்களில் பல நிருவாக மாற்றங்களும் இடம்பெற்றன. இக்காலப்பகுதியில் அல்-ஹாஜ். பீ.எம்.எம். றஊப்தீன் ஓய்வுபெற்ற கணக்காளர், டாக்டர் எம்.எல்.ஏ. காதர், பறக்கத் டெக்ஸ் உரிமையாளர் அல்-ஹாஜ். எம்.ஐ. பரீட், அல்றாஜி உரிமையாளர் அல்-ஹாஜ். எஸ்.எல். நஜிமுர் ரஹ்மான் ஆகியோர்கள் தலைவர்களாகவும், பீ.ரி.எம். மஹ்றூப் ஆசிரியர், ஐ.எம். நூறுல் பவுஸ், அல்-ஹாஜ் எம்.எஸ்.எம். கியாஸ் ஆசிரியர் ஆகியோர்கள் செயலாளர்களாகவும், ஏ.எம். அஜிமுத்தீன், எச். இஸ்ஸத்தீன் ஆகியோர் பொருளாளர்களாகவுமிருந்து சிறப்பான சேவையாற்றினார்கள். இவர்களுக்குப் பக்கபலமாக மர்ஹூம் வை.எல்.எம். இப்றாஹீம் சொய்ஸ் பலஸ், அல்-ஹாஜ். எம்.ஏ. கமர்தீன், அல்-ஹாஜ். எஸ்.எச்.எம். நிஜாம், எம்.எம். சிறாஜ், எச்.எல். சம்சுத்தீன் CDO போன்றவர்களின் பங்களிப்பும் மகத்தானது. இக்காலப் பகுதியில் பள்ளிவாயல் பல அபிவிருத்திகளையும், விரிவாக்கல்களையும் கண்டுள்ளது. பிரதேச மக்களில் அநேகமானோர் மார்க்கக் கடமை களில் ஈடுபடுபவர்களாகவும் திகழ்கின்றனர்.

2004 டிசம்பர் 26ம் திகதிய சுனாமிப் பேரலையின் பின்னரான காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களையும் பொது தாபனங்களான பாடசாலை, வைத்தியசாலை, விளையாட்டுக் கழகம் போன்றன இப்பிரதேசத்திலேயே அமையப் பெற்றமையால் இப்பிரதேசத்தினதும், பள்ளிவாயலினதும் முக்கியத்துவம் பெருகியுள்ளது. இப்பள்ளிவாயலின் சிறப்பம்சமாக பள்ளிவாயலின் மேற்கில் அந்நஹ்ழ் அரபுக்கல்லூரி அமைந்திருப்பதும், தெற்கே மர்கஸுத் தஃலீமுல் இஸ்லாமியு என்ற ஹாபிழ்கள் மத்ரசா அமைந்திருப்பதுவும், அல்ஹிக்மா பாடசாலை, ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை பிரதேச வைத்தியசாலை எனப் பல முக்கிய நிறுவனங்களின் அமைவினால் இப்பிரதேசமும் பள்ளிவாயலும் கண்கவர் பிரதேசமாகக் காட்சி தருகிறது.

பள்ளிவாயல் தரை மாபிளிடப்பட்டு, பல அபிவிருத்திகளையும் கண்டிருக்கிறது. இதற்குக் கடந்த காலங்களில் தலைவர்களாகவிருந்த தனவந்தர்களான அல்-ஹாஜ். ஐ.ஏ. பரீத், அல்-ஹாஜ் எஸ்.எல். நஜிமுர் ரஹ்மான் ஆகியவர்களின் பங்களிப்பு அதிகமானது.

2014-05-31ம் திகதியிலிருந்து பள்ளிவாயலின் நிருவாகப் பொறுப்பை இளைஞர்கள் குழுவொன்று பொறுப்பேற்றிருக்கிறது.

தலைவர்	:	அல்-ஹாஜ். எம்.எஸ்.எம். கியாஸ் ஆசிரியர்
செயலாளர்	:	சகோ. சீ.எம். தில்ஷாட் ஆசிரியர்
பொருளாளர்	:	சகோ. எம்.எம்.எம். முஷர்ரப் ஆசிரியர்
உப தலைவர்	:	அல்-ஹாஜ். எஸ்.எல். நஜ்முர் ரஹ்மான் (அல்றாஜி)
உப செயலாளர்	:	சகோ. எஸ்.ஏ.எம்.எஸ். ஹரீஸ் மவ்லானா LDO

மேற்படி நிருவாகத்தினர் பள்ளிவாயலின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் எதிர்காலத்தில் சிறப்பாக இயங்குவார்கள். அதற்கு எல்லாம்வல்ல அல்லாஹ் உதவி புரிவானாக. ஆமீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியநீலாவணை மஸ்ஜிதுல் பாக்கியாத்திஸ் ஸாலிஹாத்

நிருவாகம், பாக்கியாதிஸ் ஸாலிஹாத், பெரியநீலாவணை (மு.பி.)

எழில்மிகு மருதமுனையின் வடபகுதியில் காணப்படும் அம்பாரை மாவட்டத்தின் இறுதி வட எல்லை முஸ்லிம் கிராமமான பெரியநீலாவணைக் கிராமத்தில் முதலாவது குர்ஆன் மத்ரசாவாக 1952ம் ஆண்டு ஓலைக்கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டு இன்று இரண்டு மாடிக் கட்டிடத்துடன் காட்சி தரும் இப்பள்ளிவாசல் ஆரம்ப முதல் இற்றை வரையுள்ள அதன் வரலாறு சுவாரஸ்யமும் இன்றைய காலகட்டத்தின் முக்கியத்துவம் பெற்றதாகவும் அமைந்துள்ளது.

1952ம் ஆண்டு பெரியநீலாவணைக் கிராமத்தில் குடியேறிய ஆ.மு. ஷரிபுத்தீன் எனும் புலவர்மணி அவர்கள் அப்பிரதேசத்தில் மார்க்கக் கல்வி பயில்வதற்கு மத்ரசா அமைக்கப்பட வேண்டும் என்ற தனது விருப்பத்தை மர்ஹூம் மௌலவி எஸ்.எம். அப்துல் கரீம் (பாகவி) அவர்களிடம் தெரிவித்தார். அக்காலகட்டத்தில் ஆ.மு. ஷரிபுத்தீன் ஆசிரியர் மர்ஹூம் மௌலவி எஸ்.எம். அப்துல் கரீம், யூ.எல். ஆதம்லெப்பை ஓடாவியார் ஆகியோர் உற்ற நண்பர் களாயிருந்தனர். யூ.எல். ஆதம்லெப்பை ஓடாவி அவர்களிடம் 4 - 5 வளவுகளி லிருந்தது. பொதுச்சேவையில் அதிகம் நாட்டம் கொண்டவராயுமிருந்தார். இவரது குண நலனை அறிந்த ஆ.மு. ஷரிபுத்தீன் ஆசிரியர் அவர்களும், மர்ஹூம் எஸ்.எம். அப்துல் கரீம் மௌலவி அவர்களும் இப்பிரதேசத்தில் குர்ஆன் மத்ரசா ஒன்றின் தேவை பற்றி அவரிடம் எடுத்துக்கூறினார்கள். அம் மாத்திரத்திலேயே தனது காணியினை (இன்று பள்ளிவாசல் அமைந்திருக்கும் காணி) குர்ஆன் மத்ரசாவிற்கு வழங்குவதாக வாக்களித்ததோடு நின்று விடாது தன்னால் வழங்கப்படும் காணியின் அளவையும் எல்லையிட்டு மரங்களை அகற்றி உடனே ஓலைக்கொட்டிலை அமைத்துக் கொடுத்தார். இம்மத்ரசாவில் மர்ஹூம் மு.அ. சதக்கத்துல்லா லெப்பை அவர்கள் இலவசமாக ஓதிக்கொடுக்க முன்வந்தார்கள். இம்மத்ரசாவை திறம்பட நிர்வகிக்க வேண்டுமெனில் ஸ்தாபன ரீதியில் நிருவாக அமைப்பொன்றின் கீழ் பராமரிக்க வேண்டுமென பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கமைவாக மர்ஹூம் மௌலவி எஸ்.எம். அப்துல் கரீம் அவர்கள் தலைவராகவும், எம்.பி. முஹிதீன் ஆசிரியர் செயலாளராகவும், எம்.எம். இப்றாகிம் ஹாஜியார் பொருளாளராகவும், மர்ஹூம் யூ.எல். அப்துல் ஸமது மௌலவி உப தலைவராகவும், எம்.ஏ. இஸ்மாயில் மனேஜர் மனேஜராகவும் கொண்ட நிருவாக சபை அமைக்கப்பட்டது. தலைவராக தெரிவுசெய்யப்பட்ட மர்ஹூம் எஸ்.எம். அப்துல் கரீம் மௌலவி அவர்கள் தான் இந்தியாவில் கைதரபாத்தில் மார்க்க கல்வி பயின்ற கலாசாலையின் பெயரான "பாக்கியாத்திஸ் ஸாலிஹாத்" எனும் பெயரையே இம்மத்ரசாவிற்கு சூட்ட விரும்பினார். சபையின் விருப்பப்படி அப்பெயரே சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956ம் ஆண்டு அப்பிரதேச மக்களின் நிதியுதவி கல்விற்பனை, கொடி விற்பனை மற்றும் உதவிகள் பெற்று தொழுகைக்கும், குர்ஆன் மத்ரசாவிற்கும் ஒரு கொட்டில் அமைக்கப்பட்டது. கிணறு இல்லாமல் இருந்தது. அதனால் கிணற்றின் அவசியம் கருதப்பட்டது. அவ்வேளை கரைவாகு வடக்கு கிராம சபையின் பெரியநீலாவணை வட்டார உறுப்பினராகவிருந்த திரு. எஸ். செல்லத்துரை என்னும் ஆ.மு. ஷரிபுத்தீன் ஆசிரியரின் மாணவர் கிராம சபையூடாக ஒரு கிணற்றை மத்ரசா வளவிற்கும் கட்டுவதற்கு முன்வந்தார். கிணற்றுக்குரிய காணியை கிராம சபையின் பெயருக்கு மாற்றி எழுதப்பட வேண்டும் என சுட்டிக் காட்டியதற்கிணங்க ஆதம் லெப்பை ஓடாவியார் கிணற்றுக்குரிய காணியை கிராம சபைக்கும், மத்ரசாவிற்குமுரிய காணியை மத்ரசாவிற்கும் எழுதிக்கொடுத்தார். அதன்படி கிணறு கட்டப்பட்டது.

இதன் பின்பு ஆ.மு. ஷரிபுத்தீன், ஏ.எச். முகம்மது ஆசிரியர், எஸ்.எம். இப்ராகிம் ஓடாவியார், எஸ்.எம். அப்துல் கரீம் மௌலவி ஆகியோர் இக்கொட்டிலை விருத்திசெய்யும் நோக்குடன் தமன்கடுவ புகையிலைத் தோட்ட உரிமையாளர்களைச் சந்தித்து நிதி திரட்டி வந்தனர். இவ்வேளை ஆதம்லெவ்வை ஓடாவியார் வழங்கிய காணிக்கு கிழக்குப் புறமாகவிருந்த காணியை ஆ.மு. ஷரிபுத்தீன் ஆசிரியர் வாங்கி ஸ்தாபனத்திற்கு வக்பு செய்தார். மௌலவி எஸ்.எம். அப்துல் கரீம் அவர்களின் இடமாற்றம் காரணமாக மர்ஹூம் யூ.எல். அப்துல் ஸமது மௌலவி அவர்கள் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். தமன்கடுவயிலும், மற்றும் சில பிரதேசங்களிலும் திரட்டிய நிதியிலிருந்து ஆ.மு. ஷரிபுத்தீன் ஹாஜியார் அவர்கள் வாங்கிய காணியில் 50X20 விஸ்தீரணமுள்ள கட்டிடம் ஒன்றை கட்டும் பொருட்டு அப்போதைய கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த எம்.சி. அஹமது அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அத்திவாரத்திற்கு எம். இப்றாலெப்பை என்பவர் தனது வண்டிலில் மண் ஏற்றி இலவசமாக நிரப்பினார்.

1961ம் ஆண்டில் கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களைக் கொண்டு பெரியநீலாவணை அ.மு.க. பாடசாலை எனும் பெயரில் இம்மத்ரசாக் கொட்டிலில் ஆரம்பிக்கப் பட்டது. அடிக்கல் நாட்டப்பட்ட அத்திவாரம் பொது மக்களின் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டது. இந்த நேரத்தில் பெரியநீலாவணைக்கென கூட்டுறவுக் கடை மருதமுனையிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டு இக்கட்டிடத்தில் ஒரு அறையில் திறக்கப்பட்டது. குர்ஆன் மத்ரசாவும் தொழுகையும் புதிய கட்டிடத் திற்கு மாற்றப்பட்டது. இங்கு நடைபெற்று வந்த பெரியநீலாவணை அ.மு.க. பாடசாலைக்கென பிரத்தியேக காணி அரசினால் வழங்கப்பட்டதனால் தற்போது தற்காலிக கொட்டில் உபயோகமற்றுக் கிடந்தது. இக்கால கட்டத்தில் நிருவாக சபையொன்று தெரிவானது. மர்ஹூம் எம்.எஸ். சாலிகு வைத்தியர், ஏ. அப்துல் றகீம் மற்றும் எஸ். நாகூர்மீரா முறையே தலைவர் / செயலாளர் பொருளாளராக நியமிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978ம் ஆண்டு இடம்பெற்ற சூறாவளியினால் பாக்கியாதிஸ் ஸாலிஹாத் கட்டிடம் சேதமுற்றது. இதனைக் கேட்கவோ, பார்க்கவோ யாருமில்லை. அந்த நேரத்தில் வை.எம்.எம்.ஏ. இயக்கத்தினால் மருதமுனைக்கு வழங்கப்பட்ட 15 வீடுகளில் ஒன்றாக இம்மத்ரசாவையும் கணித்து 15,000/-ஐப் பெற்றுத் தருவதற்கு ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் பெரிதும் பாடுபட்டார்கள். இப் 15,000/-தினால் மத்ரசா புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

நாளடைவில் தொழுகைக்காக மக்கள் அதிகரிக்க ஒரு நிரந்தர பள்ளிவாயல் ஒன்றைக் கட்டும் முக்கியத்துவம் உணரப்பட்டது. அதனால் பெரும் முயற்சி செய்து பள்ளிவாயலாகவும், மத்ரசாவாகவும் இயங்கி வந்த பழைய கட்டிடத்தினை மேற்குப் புறமாக இரண்டு மாடிக் கட்டிடமாக அமையக்கூடிய விதத்தில் ஒரு பள்ளிவாயலுக்கான அடித்தளமிடப்பட்டது. இவ்வேளையில் 1981 இதன் தலைவராக மஸ்ஜிதுன்னூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் செயலாளராகவும், கட்டிடக்குழு செயலாளராகவும் மிக நீண்ட காலம் பணியாற்றிய அனுபஸ்தருமான மர்ஹூம் ஏ.எல்.ஏ. ஹமீது ஓவசிரியர் அவர்கள் பலரின் வற்புறுத்தலின் பேரில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவ்வேளையில் செயலாளர் மர்ஹூம் நயீம் ஷரிபுத்தீன் அதிபர் அவர்களின் உதவியுடன் "ஜம்இய்யதுல் அன்ஸாரிஸ் சுன்னத்துல் முஹம்மதியா" எனும் ஸ்தாபனத்தின் உதவி இப்பள்ளிவாயலுக்கு கிடைத்தது. தௌஹீதை கடைப் பிடிக்கும் தூய பணிக்கு கைமாறாக இப்பள்ளிவாயலை கட்டித் தருவதாக இவ்வமைப்பினர் வாக்களித்தனர். வாக்குறுதியின்படி இன்று அழகுடன் காட்சி தரும் இருமாடிக் கட்டிடத்தை சுமார் பன்னிரெண்டரை இலட்சம் ரூபாச் செலவில் கட்டி தந்தனர். 16 வருடம் பள்ளிவாயலின் தலைவராகவிருந்து இறைபணி செய்து ஜனாப் ஏ.எல்.ஏ. ஹமீது அவர்கள் 1997-09-04ம் திகதி இறையடியெய்தியதைத் தொடர்ந்து ஜனாப் அல்-ஹாஜ் ஏ. அலாவுதீன் ADE அவர்கள் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். இன்று அல்லாஹ்வின் உதவியாலும் திறமைமிகு நிருவாக சபையினராலும் வக்பு திணைக்களத்தில் மஸ்ஜிதுல் பாக்கியாதிஸ் ஸாலிஹாத் ஜும்ஆ பள்ளி" எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டு ஜும்ஆ நடைபெற்று வருகிறதென்பதும், வெள்ளை வெளேரென காட்சி தருவதும் கண்குளிர்ச்சி செய்வதனை காணக்கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியநீலாவணை மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசல்

செயலாளர், மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசல், பெரியநீலாவணை (மு.பி.)

பெரியநீலாவணை முஸ்லிம் - தமிழ் பிரதேச எல்லைப் பகுதியை அண்மித்து வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் தமது நாளாந்த ஐவேளைத் தொழுகையை நிறை வேற்றுவதற்கும், இப்பிரதேச சிறார்களின் மார்க்கக் கல்வி கற்பதிலும் எதிர்நோக்கிய பிரச்சினைகளை அவதானித்து வந்த சகோதரர் எம்.எச்.எம். அமீர் என்பவரின் தலைமையிலான இளைஞர் குழு இப்பிரதேசத்தில் ஒரு குர்ஆன் மத்ரஸாவையும், பள்ளிவாயலையும் நிறுவ வேண்டுமென்ற ஒரு நடவடிக்கையில் இறங்கியது.

இதன் முதற்படியாக காணித்தேவை என்பதை உணர்ந்த இப்பிரதேச வாழ் மக்களில் சிலர் ஜனாப். ஏ.ஆர்.எம். கலீல், ஏ. நெய்னாமுஹம்மது, சுபைர், அப்துல் கபூர், அப்துல் கரீம், ஏ.எல்.எம்.ஏ. மஜீத், சுபைர் மாஸ்டர், எம்.எஸ்.எம். முசாதிக் அடங்கலான குழு மருதமுனையைச் சேர்ந்த பல் வைத்திய கலாநிதி முஹையதீன் அப்துல் காதர் முஹம்மது சித்தீக் அவர்களிடமிருந்து, இறையடி சேர்ந்த அவரது தகப்பனார் ஜமால் முஹம்மது ஹாஜி முஹையதீன் அப்துல் காதிர் அவர்களின் "சதக்கத்துல் ஜாரியா" எனும் நிலையான தருமத்தினுள் சேருமாறு அன்பளிப்பாக பெறப்பட்டதாகும். இக்காணியின் எல்லைகளாக வடக்கே V.C. றோட், கிழக்கே அலியார் நெய்னா முஹம்மதுக்குரிய இதன் மறுபங்கு, மேற்கே இமாம் கஸ்ஸாலி வீதியும், தெற்கே நில அளவை நாயகத்தின் வரைபடத்தில் 2992ம் கண்டத்தில் வடபுறத் துண்டில் ஒரு பகுதியாகும்.

இந்த இறையில்லத்தை அமைப்பதற்கு எம்.எச்.எம். அமீர் தலைமையிலான குழுவும், எம்.எம்.எம். வஸீர், முஹம்மது சாலிஹ், சாகிர் ஹுசைன், எம்.எம். உவைஸ், எம்.ஐ. மஆரிப் போன்றவர்களும், பின்தொடராக ஜனாப்கள், ஏ. நெய்னா முஹம்மட், ஏ.ஆர்.எம். கலீல், ஏ.எல்.எம். அப்துல் மஜீத், ஏ.ஆர்.ஏ. வஹாப் மற்றும் இப்பிரதேச நலன்விரும்பிகளும் தங்களின் மனத்தூய்மையான பங்களிப்பை நல்கினர். இதன் பயனாக ஒரு கிணறும் அமைக்கப்பட்டது. 1989-01-12ம் திகதி ஒரு ஓலைக்கொட்டிலாக இறையில்லம் அமைக்கப்பட்டது. ஆனாலும் இந்த இடத்தில் இப்பள்ளிவாயலை தொடர்ந்தும் பராமரிப்பதா? அல்லது கைவிடுவதா? என்ற பாரிய பிரச்சினைக்குத் தீர்வாக, அப்போது எமது கிராமத்துக்கு தலைமை வகித்த மர்ஹூம் ஐ.எல்.எம். இஸ்மாயில் ஜே.பி. (சீப்பலஸ்) ஹாஜியார் அவர்களின் தலைமையில் மருதமுனை மத்திய தைக்காவில் கூட்டப்பட்ட அனைத்துப் பள்ளிவாயல் சம்மேளனக் கூட்டத்தில் ஊரின் உலமாக்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பள்ளி நிர்வாகிகள் அனைவரினதும் ஆலோசனையைப் பெற்று பள்ளிவாயலை தொடர்ந்தும் இயங்குவதற்கு வழிவகுப்பட்டது.

அமைக்கப்பட்ட பள்ளியில் அமல் செய்வதற்கு மக்களை பள்ளியுடன் தொடர்புபடுத்தும் பணியில் தப்லீக் ஜமாஅத்தினரின் வீடு வீடாகச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை அழைத்து பள்ளிவாசலுடன் தொடர்புபடுத்திய பணியின் காரணமாக, பள்ளிவாயல் தொழுகை மற்றும் அமல்களின் ஈடுபாட்டில் அதிக மக்கள் கலந்து கொண்ட போது பள்ளிவாயலை கல்லினால் சற்றுப் பெரிதாக கட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் மஹல்லா வாசிகளினாலும், நிர்வாகி களாலும் உணரப்பட்டது. அப்போது எல்லைக்கு போடப்பட்ட கிடுகு வேலி யானது ஜமாஅத்தே இஸ்லாமி நிறுவன சகோதரர்களினால் புனரமைப்புச் செய்யப்பட்டது.

அத்துடன் தொடர்ந்து வந்த நிருவாகங்கள் மேற்கொண்ட அயராத முயற்சியின் காரணமாக வளர்ச்சியடைந்து இப்பொழுது இரு மாடிக் கட்டிடமாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், மலசல கூடம், குழாய்நீர் வசதி, சுற்றுமதில் என்பனவும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இப்பள்ளிவாயல் முஸ்லிம் சமய கலாச்சார பண்பாட்டு அமைச்சின் "வக்பு" பிரிவில் இப்பள்ளிவாசலுக்குரிய 'யாப்பு கோவை' சமர்ப்பிக்கப்பட்டு அத்துடன் 13 நம்பிக்கையாளர்களைக் கொண்ட சபையுடன் கூடிய இரு நிர்வாகம் பதிவாக் கப்பட்டது. மேலும்,

1. இப்பள்ளிவாயல் : மஸ்ஜிதுல் ஹுதா எனும் பெயரிலும்,
2) மத்ரசா : அல்-மத்ரசத்துல் ஹுதா எனும் பெயரிலும் பதிவாகியுள்ளது.
3) ஜமாஅத் நிர்வாக எல்லைகளாக :

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியிலிருந்து கானடி வீதியினூடாகச் சென்று, கஸ்ஸாலி வீதியின் சந்தியிலிருந்து கிழக்குப் புறமாகச் சென்று எதிர்கொள்ளும் ஒழுங்கையினூடாகச் சென்று, மீண்டும் கிழக்குப் புறமாக பெரியநீலாவணை முஸ்லிம் வித்தியாலய வீதியானது அக்பர் கிராம மைய வாடியின் மேற்குப்புற வீதியில் சந்திக்கும் இடத்திலிருந்து வடக்குத் திசையினூடே சென்று வீ.சீ. றோட்டின் அமைந்த பிரதேசமும், வீ.சீ. றோட்டின் வடபுறத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் பிரதேசமும் உள்ளடக்கியதாக அமைந்த பகுதியுமாகும்.

இப்பள்ளிவாயலின் தலைமைத்துவத்தை கீழ்வருவோர் பொறுப்பேற்று சிறப்பாக நடத்தியுள்ளனர்.

1. ஜனாப். ஏ.எல்.எம். அப்துல் மஜீத் (ஓய்வுபெற்ற நூலகர்)
2. ஜனாப். எம்.எச்.எம். சுபைர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
3. ஜனாப். எம்.சீ.எம். இஸ்மாயில் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
4. அல்-ஹாஜ். ஏ. மீராமுகைதீன் (மஸ்ஜிதுல் கபீர் நிர்வாகி)
5. அல்-ஹாஜ். ஏ. ஹாமிதுலெவ்வை (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
6. அல்-ஹாஜ். ஏ. நெய்னா முஹம்மட் (பஸீல் அரிசி ஆலை)

மேற்குறித்த தலைவர்களின் நிர்வாகக் காலப்பகுதியில் பின்வருவோர் இப்பள்ளிவாசலின் இமாம்களாக கடமைபுரிந்துள்ளனர்.

1. மர்ஹூம் E. செயினுத்தீன் (தண்டயல்)
2. மர்ஹூம் U.L. இஸ்மாயில் மரைக்கார் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
3. ஜனாப். A.L. அப்துல் ஹக்கீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மவ்லவி அஷ்ஷேஹ் - அலி ஜின்னா
5. ஜனாப். சரீப்
6. மர்ஹூம் செய்யது அகமது செய்யது அப்துல்லா மவ்லானா
7. மவ்லவி N.G.A. கமால் (இஸ்லாஹி)
8. அல்-ஹாபிழ் மவ்லவி நஜிமுத்தீன் (ஹாமி)
9. மவ்லவி பவுசுல் அமீன் (ஹாமி)

கொட்டிலாகவிருந்த இப்பள்ளிவாசலை மாடிக்கட்டிடமாக அமைப்பதற்குரிய நடவடிக்கைகளின் ஆரம்பமாக தலைவராகவிருந்த ஜனாப். ஏ.எல்.எம்.ஏ. மஜீத் தொடர்ந்து அல்-ஹாஜ். ஏ. மீராமுகையதீன் இருவரினதும் முயற்சியை அளப்பரியதாக கருதவேண்டும். அப்போதும் நிர்வாக உறுப்பினர்களாக இருந்த ஹாமிது லெப்பை ஆசிரியர், மர்ஹூம் சுபைர், மர்ஹூம் செயினுத்தீன் (தண்டயல்), அப்துல் மஜீத் (தண்டயல்) எம்.எஸ். சறூக், எஸ். அமானுல்லா, முனாசிர், எம்.எம். தாஹா, ஏ.ஆர். வஹாப், ஏ.எல். அலாவுத்தீன் போன்றவர்களுடன் இப்பிரதேச வாசிகளும், சம்மாந்துறை - நெய்னாகாடு செங்கல்வாடிகளுக்குச் சென்று செங்கற்களை வகூலித்து ஒன்றுசேர்த்து பின்பு கொங்கிறீட் தூண்களை இட்டு கட்டிட வேலைகளை அல்-ஹாஜ் ஏ. மீராமுகைதீன் அவர்களின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகும். ஜனாப். ஏ. ஹாமிதுலெப்பை ஆசிரியரின் நிர்வாக காலத்திலும் பல கட்டிட அபிவிருத்தி வேலைகள் தொடரப்பட்டன. 2004ம் ஆண்டிலிருந்து 2007ம் ஆண்டு வரையான ஜனாப். ஏ. நெய்னா முகம்மது தலைமையிலான நிர்வாகத்தின் போது ஜனாப்கள் ஏ. நெய்னா முஹம்மட், ஏ.ஆர். கலீல், எஸ்.எல்.எம். நளீம், எம்.எல். அலாவுத்தீன், எம்.ஐ.எம். றபீக் அவர்களின் முயற்சி 100க்கு 75 வீதத்துக்கும் மேலாக இருந்தது என்பது உண்மையாகும்.

இன்றைய முக்கிய குறிப்புகள் :

1) நிர்வாகம் :

அல்-ஹாஜ். ஏ. நெய்னா முஹம்மது (பசீல் அரிசி ஆலை) அவர்களின் தலைமையிலான 13 உறுப்பினர்கள் உள்ளனர்.

2) நிர்வாக ஜமாஅத் எல்லைகள் :

- பிரதான வீதிப்பகுதிக்கு "மஸ்ஜிதுல் றஹூமத்" அமைக்கப்பட்டுள்ளதால் பிரதான வீதி என்ற எல்லையானது ஸ்டார் வீதிக்கு சுருக்கப்பட்டுள்ளது.
- ஆ.மு. சரிபுத்தீன் வித்தியாலயத்தின் தெற்குப்புற வீதியினூடாகச் சென்று சமூர்த்தி வீதியினூடாக V.C. றோட் ஆக எல்லை சுருக்கப்பட்டுள்ளது.

3) பள்ளிவாசல் காணி :

- பல் வைத்திய கலாநிதி சித்தீக் அவர்களால் வழங்கப்பட்ட காணியானது 11.696 பேச்சர்ஸ் விஸ்தீரணமுள்ளதாக இருந்தது. ஆனால் இக்காணியின் கிழக்குப்புற எல்லையாகவிருந்த ஜனாப். ஏ. நெய்னா முஹம்மதுவின் வளவானது அவர்களின் சதக்கத்துல் ஜாரியா எனும் நிலையான தருமத்தினுள் சேருமாறு பள்ளிவாயலுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆகையால் பள்ளிவாயலின் மொத்த இடப்பரப்பு தற்காலம் அங்கீகாரம் பெற்ற நில அளவையாளரின் பட இல SMI/160/2008 இன் படி 23.16 பேச்சர்ஸ் விஸ்தீரணமாக உள்ளது.

4) குடும்ப எண்ணிக்கை :

தற்போது மஹல்லா எல்லையினுள் சுமார் 420 குடும்பங்களும், சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு அமைக்கப்பட்ட இஸ்லாமிக் றிலீப் வீட்டுத் திட்டத்தில் சுமார் 96 குடும்பங்களுமாக மொத்தம் 520 குடும்பங்கள் பதிவாகியுள்ளன.

5) நிர்வாக உறுப்பினர்களைத் தவிரவும் :

- அல்-ஹாஜ். என்.எம். ஷரீப் அவர்களும், ஜனாப் ஏ.ஆர். கலீல் அவர்களும் இப்பள்ளிவாயலின் போசகர்களாகவும்,
- அல்-ஹாஜ். எஸ்.எம். பீர்முஹம்மது (விவாகப் பதிவுகாரர், அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வுபெற்ற அதிபர், முன்னர் மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசல் தலைவர்) அவர்கள் ஆலோசகராகவும் கொண்டு அல்லாஹ்வின் உதவியினால் இயங்கி வருகிறது.

மருதமுனை மஸ்ஜிதுல் றையான்

மருதமுனையின் சுனாமியின் பின்னரான குடியேற்ற பிரதேசமான பிரான்ஸ் சிற்றியில் 2013ல் அமைக்கப்பட்டு ஜங்காலத் தொழுகைகள் நடைபெற்று வருகிறது. மிகப்பதிவாகவும், சிறியதாகவும் இப்பள்ளி காணப்பட்டது. தொழுகை நிறைவேற்றுவது வெயில் காலங்களில் மிகவும் கஷ்டமான காரியமாக விருந்தது.

இவ்வாறான நிலைமைகள் எல்லாம் மிக விரைவில் நீங்க ஒரு வழி பிறந்தது. MFCD நிறுவனத்தினால் ஒன்றரைக்கோடி ரூபா ஒதுக்கீட்டில் ஒரு பெரிய பள்ளிவாயலைக் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு முதற்கட்ட வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றது. இதற்கான காணியைப் பலர் முன்வந்து வழங்கினர். ஜமாஅத்தே இஸ்லாமியும் தமது பங்களிப்பைச் செய்துள்ளது.

SLTJ / BR / 039

மருதமுனை-06, ஹாஜியார் வீதியில் 24-01-2014 முதல் சிறிலங்கா தவ்ஹீத் ஜமாஅத் என்ற பெயரில் இயங்கி வரும் இம்மையத்தில் ஐங்காலத் தொழுகையும் நிறைவேற்றப்படுகிறது. இதன் தலைவராக எம்.எல்.எம். மிஹ்ழார் செயற்பட்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஜிதுல் இஸ்லாம் பள்ளிவாசல்

நன்றி : அல்-மருதமுனை.

மருதமுனைக் கிராமத்தின் மேற்கிலே மேட்டுவட்டை என்னும் பெரிய வயல்வெளி ஒன்று இருந்தது. (அதில் ஒரு பகுதி இன்னும் இருக்கிறது). அந்த வயலைச் சுற்றி நவியான் குளம், வட்டிக்குளம், பெரிய குளம், துரைவந்திறங்கிய மேடு கிழக்கு குளம் என பல்வேறு குளம்களும் இருக்கின்றன. அந்த வயல் வெளியின் முன்புறத்தில் ஆற்றுமேடு என்ற ஒரு மேட்டுப்பகுதி இருக்கிறது. பேச்சு வழக்கில் ஆற்றுமேட்டை ஆத்துமேடு என்றும் சொல்லப்படுகிறது. அம்மேட்டிலே 1940ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு பெரிய கிணறும் அதற்கு அண்மையில் நவியான் குளக்கட்டோடு சேர்ந்த மாதிரி ஒரு பெரிய வம்மி மரம் ஒன்றும் நின்றது. வயல் வேலை செய்யும் விவசாயிகளும், குளங்களின் மீன் பிடிக்கும் மீனவர்களும், அப்பகுதி சிறுகைத்தொழிலாளர்களும் நாள்தோறும் வம்மி நிழலில் அமர்ந்து ஓய்வெடுத்துக்கொள்வர். பின்னர் அக்கிணற்றில் குளிப்பார்கள். குடங்களில் தண்ணீர் எடுத்துக்கொண்டு சொல்வார்கள். பலர் வுழுச்செய்து சுத்தமான ஆல நிழலிலே தொழுதுகொள்வார்கள். இந்த சம்பவங்களை முன்னோர் இன்னோருக்கு சொல்லி ஆறுதல் அடைவார்கள். சுகமாக நினைவுகளை மீட்டிக் கொள்வார்கள். இவ்வாறாகக் கழிந்த ஆண்டுகள் பல.

பிற்காலத்தில் இந்த இடம் மாட்டுக் கழிவுகளாலும், மனிதக் கழிவுகளாலும், வீட்டுக்கழிவுகளாலும், குப்பை கூளங்களாலும் நிறைக்கப்பட்டு மனிதன் நடமாட முடியாத பகுதியாக மாறிவிட்டது. நாய்களும் பேய்களும் அதற்குச் சமமானவர் களும் மட்டுமே அங்கு நடமாடினர். ஆலமரத்தடி சூதாடும் தளமாகவும், போதைவஸ்துப் பாவனை நிலையமாகவும் காணப்பட்டது.

இந்நிலையிலிருந்து அந்த இடம் சுனாமியின் கொடையால் கடந்த 2010-04-01ம் திகதி இறைவனின் அருளால் தக்வாவின் அடிப்படையில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டது. அதுதான் "மஸ்ஜிதுல் இஸ்லாம்" என்னும் இறை இல்லமாகும். இறை விசுவாசிகளும் அன்ஸாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா நிறுவனத்தினரும் சேர்ந்து இப்பள்ளிவாசலைக் கட்டினர். அல்ஹம்துலில்லாஹ்.

ஊரின் நாலா பக்கங்களிலிருந்தும் தொழுகையில் கலந்துகொள்ள ஏராளமா னோர் இங்கு வருகைதருகின்றனர். வியாழக் கிழமைகளில் மார்க்க வகுப்புக் களும் ஏனைய நாட்களில் குர்ஆன் விளக்கவுரைகளும் இங்கு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியநீலாவணை மஸ்ஜிதுத் தக்வா பள்ளிவாசல்

பெரியநீலாவணை அக்பர் கிராமத்தில் கடற்கரைப் பிரதேசத்தில் 2006ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான் மஸ்ஜிதுத் தக்வா. இப்பள்ளிவாயல் 'ஜமாஅத்துல் அன்ஸாரிஸ் சுன்னத்தில் முகம்மதிய்யா'வினால் பிரதேச மக்களின் ஐங்காலத் தொழுகையைச் சிரமமின்றி நிறைவேற்றுவதற்காக அமைத்துக் கொடுக்கப்பட்டது. வை.எல். அன்ஸார் இதன் தலைவராகவிருந்து பணியாற்றி வந்தார். அழகிய சிறிய பள்ளியாக உருவாக்கப்பட்ட இப்பள்ளிவாயலில் கடற் கரைக்கு இளைப்பாறுவதற்கும், உல்லாசமாகவும், காற்று வாங்குவதற்கும் வரும் அதிகமான மக்கள் தமது தொழுகைகளை நிறைவேற்றப் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஐ.எல்.எம். பாறூக் இதன் தற்போதைய தலைவராகவிருந்து செயற்படுகிறார்.

மருதமுனை மஸ்ஜிதுல் கவ்ஸர் பள்ளிவாசல்

மருதமுனை மக்பூலியா புரத்தின் கிழக்குப் பிரதேசத்தில் கடலை அண்மியதாக அல்-ஹாஜ். எம்.ஏ.எம். ஜும்பர் அவர்களினால் நன்கொடையாக வழங்கப்பட்ட நிலத்தில் ஜமாஅதுல் அன்ஸாரிஸ் சுன்னதுல் முகம்மதியாவினால் கட்டி முடிக்கப்பட்டு 29-11-2007இல் திறந்து வைக்கப்பட்ட இப்பள்ளி பிரதேச மக்களின் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுவதற்கு கையளிக்கப்பட்டது. எம்.எம்.ஏ. காதர் அவர்களைத் தலைவராகக் கொண்ட இப்பள்ளிவாயல் பொது மக்களிட மிருந்து பெறப்படும் நன்கொடைகளின் மூலமே நடைபெற்று வருகிறது.

மருதமுனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட இஸ்லாமிக் ரிலீப் தொடர்மாடி வீட்டுத்திட்டத்தில் அம்மக்களின் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுவதற்கு வசதியாக ஜமாஅதுல் அன்ஸாரிஸ் சுன்னதுல் முகம்மதியா வினால் நிர்மாணிக்கப்பட்டதுதான் இப்பள்ளிவாசலாகும். எஸ்.எம். றபாயிதீனைத் தலைவராகக் கொண்டு இயங்கிய இப்பள்ளிவாயல் 2009லிருந்து இயங்கி வருகிறது. இதன் தற்போதைய தலைவராக எம்.இஸட்.எம். மஸ்ஹூத் செயற்பட்டு வருகிறார்.

மருதமுனை மஸ்ஜிதுஸ் ஸாலிஹீன் பள்ளிவாசல்

மருதமுனையின் வயல் பிரதேசத்தில் வனப்புடன் காணப்படும் 65 மீட்டர் வீட்டுத்திட்டத்தில் இம்மக்களில் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பறக்கத் டெக்ஸ் உரிமையாளர் அல்-ஹாஜ். எம்.ஏ. பரீட் அவர்கள் அவர்களது மாமாவாகிய அல்-ஹாஜ். ஏ.எம்.எம். சாலிஹ் அவர்களின் நினைவாக இதனைக் கட்டி 15-03-2003இல் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியநீலாவணை மஸ்ஜிதுர் றஹ்மத் பள்ளிவாசல்

பெரியநீலாவணை பிரதான வீதியில் மேற்குப் புறத்தில் அரிசி ஆலைச் சூழலில் அமைந்திருக்கும் மஸ்ஜிதுர் றஹ்மத் பள்ளிவாயல் நிலம் அல்-ஹாஜ் எம்.எச்.எம். றிஸ்வி, அல்-ஹாஜ் ஏ. சைபுல்லாஹ், ஜே.எம். சுபைர் ஹாஜி ஆகியோர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டு 2002ல் பீ.ரீ.எம். இஸ்மாயில், எம்.எச்.எம். நஸீர், ஹகீம், றஹ்மதுல்லாஹ், ஜே.எம். ஜமீல், அஸீஸ் போன்ற வர்களின் அயராத முயற்சியினால் சிறிய பள்ளிவாயல் ஒன்று அமைக்கப்பட்டு ஜங்காலத் தொழுகை நிறைவேற்றப்பட்டது. இதன் தலைவராக அல்-ஹாஜ் ஜே.எம். சுபைர் அவர்கள் இயங்கி வந்தார்.

2004 டிசம்பர் 26ம் திகதிய ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணப் பணிகளுக்காக இங்கு வந்த பல அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்றான மோர்ஸி லங்கா நிறுவனம் குவைத்தைச் சேர்ந்த மன்சூரி என்ற குடும்பத் தினரின் உதவி கொண்டு ஓலையால் வேயப்பட்டிருந்த கொட்டிலை அகற்றி அழகிய சிறிய பள்ளிவாயல் ஒன்றினை அமைத்து 2005ல் மக்களிடம் கையளிக் கப்பட்டது.

இன்றுவரை கிரமமாக ஜங்காலத் தொழுகைகளுக்கும் மற்றும் மார்க்க விடயங்களும் நடைபெற்றுவரும் இப்பள்ளிவாயலை பதினொரு அங்கத்த வர்களைக் கொண்ட சபை நிருவகித்து வருகிறது. இதன் தலைவராக அல்-ஹாஜ். ஐ. சக்கரியா லெப்பை அவர்கள் இயங்கி வருகிறார்.

மருதமுனை மஸ்ஜிதுல் மனார்

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் மாணவர்களின் நன்மை கருதி 2002ம் ஆண்டு முதல் ஒரு பள்ளிவாயல் இயங்கி வருகிறது. இதன் உருவாக்கத்தில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பங்களிப்புச் செய்தனர். நீண்ட நாட்களாக இதன் கதீபாக ஓய்வுபெற்ற ஆசிரியர் சலாஹுத்தீன் அவர்கள் கடமையாற்றினார்.

சின்ன அல்-மனாரில் ஜமாஅத்தே இஸ்லாமியின் அனுசரணையுடன் ஒரு பள்ளிவாயல் இயங்கி வருகிறது. 2004 டிசம்பர் சுனாமியின் பின்னர் இப்பாட சாலையில் ஒரு பள்ளிவாசல் அமைக்கும்படி அப்போது அதிபராகவிருந்த ஜனாப். றசூல் அவர்கள் ஜமாஅத்தே இஸ்லாமி மன்றத்தினரிடம் வேண்டு கோளொன்றை விடுத்தார். இதற்கு வேண்டிய காணியையும் தருவதாகக்கூறி பாடசாலையின் மேற்குப்புறத்தில் ஒரு இடத்தையும் ஒதுக்கித் தந்ததனால் இவ்விடத்தில் பள்ளிவாயல் அமைக்கப்பட்டது. இன்றுவரை ஜங்காலத் தொழுகைகள் நிறைவேற்றப்படுகிறது. இதன் பராமரிப்பை ஜமாஅத்தே இஸ்லாமியினரே பொறுப்பேற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபை

ஒரு சுருக்க வரலாற்றுப் பார்வை

அஷ்-ஷெய்க். ஏ.ஆர்.எம். சுபைர் (நளீமி) ஜே.பி.
பொதுச் செயலாளர்.
மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபை. மருதமுனை.

மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபையானது நிறுவப்பட்டுத் தனது செயற்பாட்டில் ஏறத்தாழ 55 வருடங்கள் கடந்த நிலையில் இன்று வரை தனது காத்திரமான பங்களிப்புக்களை மருதமுனை வாழ் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றது. மருதமுனையின் சமய, சமூக, விழுமிய செயற்பாட்டில் இம்மக்களுக்கு வழிகாட்டி முடிவெடுக்கும் ஒரு சக்தியாக இந்த சபை செயற்படு கின்றது என்று கூறினால் அது மிகையில்லை.

மௌலவி மர்ஹூம் ஸெய்னுலாப்தீன் அப்துல் கரீம் (பாகவீ), மௌலவி மர்ஹூம் ஐ.எல். அப்துல்கரீம் (பஹ்ஜி), மௌலவி மர்ஹூம் எஸ்.வீ.ஏ.றசூல் (பாரி), மௌலவி மர்ஹூம் கே. ஷாஹூல் ஹமீது (ஷர்க்கி), மௌலவி மர்ஹூம் ஏ.மொஹிதீன் (ஜமாலி), அல்-ஹாஜ் மௌலவி மர்ஹூம் அப்துல் மஜீது (பாரி), அல்-ஹாஜ் மௌலவி மர்ஹூம் ஏ.எம். ஹஸன் (ஷர்க்கி), அல்-ஹாஜ் மௌலவி மர்ஹூம் முஸ்தபா மௌலானா (பாஸில்) (தேவ்பந்தி), மௌலவி மர்ஹூம் ஏ.எம். அப்துல் மலிக் (கபூரி), அல்-ஹாஜ் மௌலவி மர்ஹூம் ஏ.சீ.ஏ. மாஜிது (ஷர்க்கி) என பல மூத்த உலமாக்கள் தலைவர், செயலாளர், பொருளாளர், நிறைவேற்று உறுப்பினர் என்ற மகுடங்களிலிருந்து இந்த சபையையும் இந்த ஊரையும் வழிநடாத்தி இந்த சபையின் வரலாற்றில் மைல்கற்களாகத் திகழ்கின்றார்கள்.

இஸ்லாமிய அகீதாவுக்கு எதிரான சிந்தனை இந்த ஊரில் விதைக்கப்பட்டபோது அதனை முறியடித்து இந்த ஊர் மக்களை இஸ்லாத்தின் பால் வழி நடாத்தியமை யானது இந்த ஊரின் வரலாற்றில் இந்த சபைக்கு பாரிய கௌரவத்தை ஏற்படுத்தி யுள்ளது. அக்கால வேளையில் சபையின் செயலாளராக இருந்து அல்லும் பகலும் அதற்காகப் பாடுபட்ட அல்-ஹாஜ் மௌலவி மர்ஹூம் ஏ.எம். ஹஸன் (ஷர்க்கி) அவர்கள் இந்த ஊரின் மக்களால் இன்றும் கண்கள் பனிக்க நினைவு கூரப்படுகின்றார்.

1990 களின் பின்னர் அல்ஹாஜ் மௌலவி கே.எல்.எம். ஹனீபா (பஹ்ஜி), அல்-ஹாஜ் மௌலவி ஏ. அபூஉபைதா (மதனி), அல்-ஹாஜ் மௌலவி எம்.ஐ. ஹூஸைனுதீன் (றியாதி), அஷ்-ஷெய்க் கலாநிதி எம்.எஸ்.எம்.ஜலால்தீன் (கபூரி) ஆகியோர் தலைவர்களாகவும் அஷ்-ஷெய்க் அல்-ஹாஜ் எப்.எம்.ஏ. அன்சார் மௌலானா (நளீமி), அஷ்-ஷெய்க் என்.ஜீ.ஏ.கமால் (இஸ்லாஹி), அஷ்-ஷெய்க் எம்.எம். ஜெபீர் (நளீமி) ஆகியோர் செயலாளர்களாகவும் சேவையாற்றியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறாவளி, வெள்ள அனர்த்தம், சுனாமி என பல அனர்த்தங்களின்போது இந்த ஊர் மிகவும் பாதிக்கப்பட்ட வேளைகளில் அவர்களுக்கான நிவாரண உதவிகள், உளவள ஆலோசனைகள் என்பவற்றை வழங்கி அவர்களைக் காப்பதில் இந்த சபை அபரிமிதமான பங்களிப்பினை வழங்கியுள்ளது.

தற்போது 57 உறுப்பினர்களைத் தன்னகத்தே கொண்ட இச்சபை தனது தாய்ச் சங்கத்தின் அனுசரணையுடன் கற்றறிந்த உலமாக்களால் இந்த மண்ணின் தேவைகளுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக கடந்த சுனாமியின் போது வீடுகளை இழந்தவர்களில் 16 பேருக்கு இச்சபை தனது தாய்ச்சங்கத்தின் அனுசரணையில் நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுத்தது. தொழில்களை இழந்த 35 பேருக்கு இச்சபை அவர்களின் அடிப்படைத் தேவையான துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொடுத்தது. இதன் மூலம் இச்சபை எவ்வாறு பௌதீக ரீதியாகவும் இம்மக்களுடன் பின்னிப் பிணைந்து செயலுறுகின்றது என்பதை அறியலாம்.

அது மட்டுமன்றி மருதமுனையின் பௌதீகக் கட்டமைப்பிலும் இச்சபை தனது காத்திரமான பங்களிப்பினைச் செய்து வருகின்றது. ஜம்இய்யதுல் உலமா, அனைத்துப் பள்ளிவாசல்கள், தஃவா அமைப்புக்களின் சம்மேளனம் என்ற பாரிய நிறுவனம் இந்த சபையின் சிந்தனையின் விளைவு என்பது கண்கூடு. அதுபோல் ஸக்காத் நிதியம், அல் -மஸ்றபுல் இஸ்லாமிய்யு (இஸ்லாமிய வங்கிச் சேவை) போன்றனவும் இச்சபையின் சிந்தனையின் வெளிப்பாடு எனலாம்.

மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபை தற்போது அல்-ஹாஜ் அஷ்-ஷெய்க் எம்.ஐ. ஹுஸைனுதீன் (நியாதி) அவர்களைத் தலைவராகக் கொண்டு தனது செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அதன் உறுப்பினர்கள் பின்வருமாறு:

1. தலைவர் : அல்-ஹாஜ் அஷ்-ஷெய்க் எம்.ஐ. ஹுஸைனுதீன் (நியாழி)
2. செயலாளர் : அல் -ஹாஜ் அஷ்-ஷெய்க். ஏ.ஆர்.எம். சுபைர் (நளீமி)
3. பொருளாளர் : அஷ்-ஷெய்க் எம்.எஸ். மன்சூர் (ஷர்க்கி)
4. உப தலைவர் : அல்-ஹாஜ் அஷ்-ஷெய்க் எப்எம் அன்சார் மௌலானா (நளீமி)
5. உப - தலைவர் : அஷ்-ஷெய்க் எம்.எச்.எம். ஜலீல் (ஹாமி)
6. உப - செயலாளர் : அஷ்-ஷெய்க் ஏ.ஆர். பைஸல் கியாஸ் (பலாஹி)
7. பிரதிப் பொருளாளர்: அஷ்-ஷெய்க் கே. பௌசுல் அமீன் (ஹாமி)

செயற்குழு உறுப்பினர்கள் :

8. அஷ் - ஷெய்க் அஜ்மல் புர்ஹான் (ஸஹ்வி)
9. அஷ் - ஷெய்க் ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)
10. அஷ் - ஷெய்க் எம்.எஸ்.எம். அஸ்வர் (பலாஹி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அஷ் - ஷெய்க் என்.ஜீ.ஏ. கமால் (இஸ்லாஹி)
12. அல் -ஹாஜ் அஷ் - ஷெய்க் ஏ. அபூ உபைதா (மதனி)
13. அல் - ஹாஜ் அஷ் - ஷெய்க் ஏ.எல்.ஏ.எஸ்.எம். முபாறக் (பாரி)
14. அல் - ஹாஜ் அஷ் - ஷெய்க் கே.எல்.எம். ஹனீபா (பஹ்ஜி)
15. அல் - ஹாஜ் அஷ் - ஷெய்க் ஏ.ஆர். செயினுலாப்தீன் (ஷர்க்கி)
16. அல் - ஹாஜ் அஷ் - ஷெய்க் எம்.எல்.எம். முபாறக் (மதனி)
17. அஷ் - ஷெய்க் எச்.எம்.எம். அரூஸ் (தப்லீகி)
18. அஷ் - ஷெய்க் எம்.எச். நஜ்முதீன் (ஹாமி)
19. அஷ் - ஷெய்க் எஸ்.எம். நஜ்முதீன் (ஹஸனி)
20. அஷ் - ஷெய்க் எம்.எம். ஜுபீர் (நளீமி)

நிர்வாக சபை உறுப்பினர்கள் :

21. அஷ் - ஷெய்க் கலாநிதி எம்.எஸ்.எம். ஜலால்தீன் (கபூரி)
22. அஷ் - ஷெய்க் ஏ.ஜீ.எம். நதீர் (நளீமி)
23. அஷ் - ஷெய்க் எஸ்.எச். முஜீப் (ஸலபி)
24. அஷ் - ஷெய்க் எம்.எஸ். றஸான் (நளீமி)
25. அஷ் - ஷெய்க் றஸ்மி மூஸா (ஸலபி)
26. அஷ் - ஷெய்க் ஏ. அலி ஜின்னாஹ் (ஷர்க்கி)
27. அஷ் - ஷெய்க் பீ.எம்.எம். இர்பான் (நளீமி)
28. அஷ் - ஷெய்க் ஏ.எம். அப்துல் மலீக் (நளீமி)
29. அஷ் - ஷெய்க் எம்.எஸ்.எம். றியாஸ் (நளீமி)
30. அஷ் - ஷெய்க் ஏ.எம். இஸ்ஹாக் (கபூரி)
31. அஷ் - ஷெய்க் எம்.ஐ. ரஹ்மதுல்லாஹ் (ஷர்க்கி)
32. அஷ் - ஷெய்க் எம்.ஐ.எம். மஸீன் (இஸ்லாஹி)
33. அஷ் - ஷெய்க் எம்.ஐ.எம். கிஸ்லி (ஸலபி)
34. அஷ் - ஷெய்க் ஏ.எச். பர்ஸான் (நஜாஹி)
35. அஷ் - ஷெய்க் எம்.எல். றுஹூல் ஹக் (ஹாமி)
36. அஷ் - ஷெய்க் ஏ.டப்ளியூ.எம். ஹயஸ்கான் (ஹாமி)
37. அஷ் - ஷெய்க் எம்.எஸ்.எம். அஸ்மி (ஹாமி)
38. அஷ் - ஷெய்க் ஏ.ஆர். ஜஸாஉள்ளாஹ் (பலாஹி)
39. அஷ் - ஷெய்க் ஏ.எச். உபைதுள்ளாஹ் (இஸ்லாஹி)
40. அஷ் - ஷெய்க் எம்.பீ.எம். சுபைர் (ஸலபி)
41. அஷ் - ஷெய்க் ஏ. அமீறுல் அன்சார் (ஸலபி)
42. அஷ் - ஷெய்க் ஆர். நுவைஸ் (ஸலபி)
43. அஷ் - ஷெய்க் எம்.எஸ்.எம். ஹனீபா (ஸலபி)
44. அஷ் - ஷெய்க் யூ.எல். ஸாஜித் (ஸலபி)
45. அஷ் - ஷெய்க் எம்.பீ.எம். இல்ஹாம் (ஸலபி)
46. அஷ் - ஷெய்க் ஏ.ஏ.எம். மஜாஸ் (ஸலபி)
47. அஷ் - ஷெய்க் எஸ். றுஸ்வின் (ஸலபி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. அஷ் - ஷெய்க் எம்.ரீ.எம். ஷபீக் (ஸலபி)
49. அஷ் -ஷெய்க் எம்.எஸ்.ஏ. ஹபீல் (ஸஹ்வி)
50. அஷ் - ஷெய்க் ஐ.எல்.ஏ. கபீர் (ஸஹ்வி)
51. அஷ் - ஷெய்க் எம். ஜிபான் (ஸஹ்வி)
52. அஷ் - ஷெய்க் எம். ஸிபான் (ஸஹ்வி)
53. அஷ் - ஷெய்க் ஏ. அஸ்லம் (இஸ்லாஹி)
54. அஷ் - ஷெய்க் எம். பஸ்லான் (ஸலபி)
55. அஷ் - கே. ஜெஸ்மி (ஸலபி)
56. அஷ் - ஷெய்க் ஏ.எச். ஸப்றாஸ் (ஸலபி)
57. அஷ் - ஷெய்க் எஸ்.ஐ. புஆத் (அஸீஸி)

மேற்படி கற்றறிந்த உலமாக்களினால் ஆன்மீக, லௌகீக வழிகளில் இந்த சமூகத்தை வழிநடாத்திக் கொண்டிருக்கும் இந்த சபை தனது பயணத்தை மேலும் தொடர வல்ல அல்லாஹ்வை வேண்டுகின்றேன்.

குறிப்பு :

1953ம் ஆண்டு மர்ஹூம் எஸ்.கே.எஸ். இஸ்மாயில் மௌலானா அவர்களைத் தலைவராகவும், மர்ஹூம் எஸ்.ஐ.எம். ஸாலிஹ் மவ்லானா அவர்களைச் செயலாளராகவும், மௌலவி யூ.எல். அப்துல் மஜீத் அவர்களைப் பொருளாளராகவும், எல்லாமாக 15 உலமாக்களுடன் "லஜ்னதுல் உலமா" எனும் பெயரில் மருதமுனை உலமா சபையின் வரலாறு ஆரம்பித்தது. முஸ்லிம்களுக்கு நல்லுபதேசம் புரிவது, ஊரில் இடம்பெறும் மார்க்கவிரோதச் செயல்களைத் தடுத்தல், மார்க்கத் தீர்ப்புகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மாணவர்களின் சமய அறிவு விருத்தி மேம்பாட்டுக்காகப் பல போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து பரிசில்களும் வழங்கி உற்சாகப்படுத்தினார்கள்.

1968ம் ஆண்டு இலங்கையின் பல பாகங்களிலும் புனித குர்ஆன் அருளப் பெற்ற 1400வது வருடப் பூர்த்தி கொண்டாடப்பட்டது. இவ்விழாவை மருதமுனை "லஜ்னதுல் உலமா" தற்போதைய உலமா சபை பொறுப்பேற்று வெகு விமர்சையாகக் கொண்டாடியது. கிறாஅத், குர்ஆன் மனனம், பேச்சு, பாட்டு முதலிய போட்டிகளை நடாத்தி வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கியது. இந்நிகழ்வுக்காக பிரதம அதிதியாக அன்றைய இலங்கையின் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கௌரவ ஹூமாயூன்கான் பன்னி அவர்கள் கலந்து கொண்டார்கள். கிராஅத் போட்டியில் எம்.எம். பதுறு நயீம் முதல் பரிசும், ஏ.ஆர்.ஏ. சத்தார் இரண்டாம் பரிசும் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை ஹாபிழ்கள்

01. எஸ்.எம். நஜ்முத்தீன்
02. எம்.எச். நஜ்முத்தீன்
03. ஏ.ஆர்.ஆர். பைஸல் கியாஸ்
04. ஏ.ஆர்.எம். ஜரீர்
05. ஏ.எச்.எம். பர்ஸான்
06. ஏ.எம்.எம். முபீன்
07. எஸ்.எம். றியாஸ்
08. ஏ.எம்.எம். அஸ்லம்
09. அப்துல் நபார் அஹமத் இஸ்ரத்
10. முகம்மது உவைஸ் அப்துல் ஹாலிக்
11. அபூஉபைதா முஹம்மது ஹஸ்ஸான்
12. முகம்மது மஹ்றூப் முஹம்மது நஸ்ரீன்
13. முகம்மது சபுர்தீன் முகம்மது றஸ்ஸான்
14. முகம்மது சஹாப்தீன் முகம்மது நியாஸ்
15. அப்துர் றஷீத் முகம்மது சஜீத்
16. முகம்மது இப்றாகிம் முகம்மது சிபாஸ்
17. அபூஉபைதா முகம்மது ஹாத்திம்
18. அப்துஸ்ஸலாம் முகம்மது அஸ்மி
19. முகம்மது தாஹிர் முகம்மது பிர்னாஸ்
20. அலாபுத்தீன் முகம்மது ஷப்ராஸ்
21. முகம்மது ரமழான் அஹமத் மில்ஹான்
22. அல்துல் ஹலீம் முகம்மது நிஸாத்
23. முகம்மது ஜாபிர் முகம்மது ஷர்ஜூன்
24. அப்துர்ரஹ்மான் முகம்மது தஃஸீன்
25. முகம்மது முஸம்மில் முகம்மது ஸாஜித்
26. முகம்மது முஸ்தபா முஅஸ்ஸம் அலி
27. முகம்மது அபூபக்கர் அஹமட் அஸ்ரின்
28. அஸத் அப்துல் ஆபித்
29. அப்துல் காதர் முகம்மது ஸஜீத்
30. சஹ்துல் கலீம் இன்திஜார் முகம்மத்
31. கமால்தீன் முகம்மது றிழா
32. மனாறுத்தீன் முன்ஷிப் அஹமட்
33. சினாஸ் அப்துர்ரஹ்மான் சுதைஸ்
34. கே.எம். ஆஸிப்
35. பி. முகம்மத்
36. எம். அப்ஸான்
37. ஏ.எம்.எம். அப்ரிஸ்
38. இஸட். பிர்னாஸ்
39. றிமைஸ்

Dharul Hudtha Ladies College for Arabic & Islamic Studies - Maruthamunai.

2011/2012

01. J.M. Madhina Jauzan
02. M.K. Mahjabeen
03. M.A. Ayisha Dhilani
04. M.S. Afsana
05. S. Risna
06. M.S.F. Sadheena
07. A.L. Fasmiya
08. M.B. Safreen
09. M.S.F. Insaaf
10. A.F.F. Roshan
11. M.L.K. Fasliya
12. N.M. Lufna
13. U. Farjees
14. A.H. Dhaniya
15. R. Juthama
16. M.R. Hifthiya
17. K.L.F. Wasmiya

2012/2013

01. S.F. Sajeena
02. K.L.F. Rajana
03. A. Afrose
04. I.F. Natheefa
05. I.F. Hasna
06. M.M. Emuna
07. A.H. Sahna
08. M.M. Athiyya
09. R. Shabnam
10. M.K. Masfa
11. A. Afra
12. M.M.F. Fasna
13. M.T. Jazna Banu
14. M.F.F. Fayisha
15. L.F. Jesly
16. N.A.F. Sifani

2012/2014

01. M.W.F. Suhaina Anvary
02. N.A.F. Afrin
03. I.F. Asreena
04. A.H. Hafreena
05. Y. Hasniya
06. M.S. Fathima Yamana
07. J. Fathima Sana
08. A.R. Nifla
09. M.F.F. Sajeeya
10. M.N. Rifkana
11. A.S. Afrose
12. M.M. Fathima Rifna
13. A.R.F. Suja
14. I. Fathima Sana
15. M.A. Baby Saheela
16. M.J. Fathima Safna
17. M.J. Fathima Sajeena
18. M.A.R.F. Mawfika
19. M.B. Aneesa
20. A.N. Fathima Zeenath
21. M.A.F. Rija
22. M.N. Ramsath Begam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மௌலவியாக்கள்

01. பௌசுல் இனாயா அன்ஸார் மௌலானா

02. நஸ்லீனா சுல்தான்

03. சபானா சபுறுத்தீன்

04. மாஜிதா அப்துல் ஹமீத்

05. ஜனூன் தௌபீக்

06. துபைலா இஸ்ஹாக்

07. வாயிஸா கானம்

08. சஜானா சபுறுத்தீன்

09. துனூஸா நாபிஃ

10. ஸீனா ஹிஸ்புல்லாஹ்

11. றம்ஸானா முகைதீன்

12. ஸஜீறா மஹ்றூப்

13. ஹஜீமா த. முஹம்மத்

14. சரீஜா இப்றாகிம்

15. பர்ஸானா பாறூக்

16. நுவைஸியா தாஸிம்

17. மர்சூக்கா கியாஸ்

18. முபாறக்கா அலியார்

19. மாஜிதா மன்சூர்

20. மஸீனா நௌபாஸ்

21. ஜஹான் அப்துல் ஹக்

22. நூறுன் நஜீமா அலாவுதீன்

23. நூறுல் முபீனா

24. றுபைதா ஸமத்

25. பிர்னாஸ் கையும்

26. நஜ்முன்னிஸா ஷுகைப்

27. மக்பூலா அஜ்மல்

28. றாஷிதா முர்ஷித்

29. ஜிஸ்மியா முனீர்

30. ஸமீறா அலியார்

31. சனோபர் ஜஹான் நிஃமத்துல்லாஹ்

32. நதீகா ஹலால்தீன்

33. பஸீஹா நஜ்முத்தீன்

34. நிஸாமா நவாஸ்

35. ஹதீகா ஜமால்தீன்

36. பர்வின் றஷீத்

37. ஷஹீகா சமத்

38. நுஸ்றா நாஸிர்

39. சஸ்னி தௌபீக்

40. பப்னா லதீப்

41. பஸ்ரின் அப்துல் காதர்

42. சாஜிஹா அப்துல் கையும்

43. மாஜிதா எம். இஸ்மாயில்

44. ஹுஸ்னா அபூஉபைதா

45. நிலோபா சமத்

46. இன்ஷிரா அமீறுல் அன்ஸார் மௌலானா

47. பர்ஹத் பறக்கத்துல்லாஹ்

48. நஜா சாஜஹான்

49. சஹ்னாஸ் செய்னுலாப்தீன்

50. அப்றோஸ் அன்வர்

51. நிஹ்லா ஜெய்னுடீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை ஆசிரியர்கள் மரணப் பணிக்கொடை நிதியம்

ஏ.எஸ். றுஸ்தா ஏ. றஜீ (BBA) ஆசிரியை

1927-10-01ம் திகதி ஆ.மு. சரிபுத்தீன் என்ற பதினெட்டு வயது இளைஞனுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப் பெற்றதிலிருந்து எமது மருதமுனை மண்ணில் ஆசிரியர் சேவை உதயம் பெறுகிறது. இவரைத் தொடர்ந்து சம்சுத்தீன் வாத்தியார் (சங்காரம் போற்றி) என இன்றுவரை எமது பிரதேசத்திலேயே அதி கூடிய ஆசிரியர்களைக் கொண்ட கிராமமாக மருதமுனை இடம்பிடிக்கிறது.

இன்றைய கணக்கெடுப்பின் பிரகாரம் மருதமுனையில் 750 ஆசிரியர்கள் ஓய்வூதியம் பெறுபவர்கள் உட்பட இருக்கின்றார்கள். நாட்டின் பல பிரதேசங்களிலும் இவர்களது சேவை ஆற்றப்படுவதும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் சகல பிரதேசங்களிலும் இவர்களின் சேவை வழங்கப்படுவதும் குறிப்பிடத் தக்கது. அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் பாடசாலைகளில் மருதமுனையைச் சேர்ந்த ஆசிரியர்கள் இல்லாத பாடசாலை இல்லையென்றே கூறவேண்டும்.

இப்பிரதேசத்தில் தனியார் வகுப்புக்கள் (ரியூசன்) நடாத்துவதிலும் பெயர் போன ஆசிரியர்களாக மருதமுனை ஆசிரியர்கள் பிரசித்தி பெற்றவர்கள் நமது ஊரின் மொத்த வருமானத்தில் 12 மில்லியன் ரூபாக்களை மாதமொன்றுக்குப் பெற்றுத்தரும் ஒரு துறையாக இது காணப்படுகிறது.

இவர்கள் மத்தியில் "மருதமுனை ஆசிரியர்கள் மரணப்பணிக்கொடை நிதியம்" என்ற ஒரு அமைப்பு 1971ம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. நாற்பது அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிதியம் 480 அங்கத்தவர்களைக் கொண்டதாக வளர்ச்சி கண்டுள்ளது. அங்கத்தவர்களின் இறப்பின்போது, அல்லது இடர்பாடுகளின் போது நிதியுதவி செய்வதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இது தலைக்கு ஐந்து ரூபா வீதம் அறவிட்டு முதற்கொடுப்பன வாக ரூபா அறுநூறை வழங்கியிருந்தது. தற்போது இருநூறு ரூபா வீதம் அறவீடு செய்யப்பட்டு ஒரு அங்கத்தவரின் இறப்பின் போது உடனடியாகப் பத்தாயிரம் ரூபாவும் அடுத்துவரும் சில நாட்களில் நாற்பதினாயிரம் ரூபாவும் வழங்கப்படுகிறது. இதுவரை நிதியம் ஐம்பத்தாறு அங்கத்தவர்களுக்காக கொடுப்பனவுகள் செய்துள்ளது.

ஏ.எச். முகம்மது அதிபர் அவர்களைத் தலைவராகவும், ஏ.எம். சாலிஹ் அதிபர் அவர்களைச் செயலாளராகவும், எம்.எம். இப்றாகிம் ஹாஜியார் அதிபர் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பின் தற்போதைய தலைவராக எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மவ்லானா (ஓய்வுபெற்ற) அதிபர் அவர்களும், செயலாளராக ஏ.எம். சாபி ஓய்வுபெற்ற ஆசிரியர் அவர்களும், பொருளாளராக கே.எல்.ஏ. வாஹித் ஓய்வுபெற்ற அதிபர் அவர்களும் செயற்பட்டு வருகிறார்கள். இதன் சேவைக்கு எமது பாராட்டுக்கள் என்றும் உரித்துடையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பணிபுரிந்து எம்மை விட்டும் பிரிந்த ஆசிரிய பெருந்தகைகள்

01. E. அலியார் அதிபர்
02. I. ஹபீப் முகம்மது ஆசிரியர்
03. I.M.A. குத்தூஸ் அதிபர்
04. J.M.M. அப்துல் காதிர் அதிபர்
05. U.L. அப்துஸ் ஸமது மௌலவி
06. அல்-ஹாஜ். M.M. இப்றாகிம் அதிபர்
07. Y.L. செயினுலாப்தீன் அதிபர்
08. K. அல்லாபிச்சை அதிபர்
09. A. சஹாப்தீன் ஆசிரியர்
10. K.M. சம்சுத்தீன் அதிபர்
11. S.L. ஹாமிதுலெவ்வை ஆசிரியர்
12. K.M. சாகுல்ஹமீத் மௌலவி
13. A.L.A. சமது அதிபர்
14. U.L.M. இப்றாகிம் ஆசிரியர்
15. A.M.M. முகிதீன் ஜமாலி மௌலவி
16. A.L.M. இப்றாகிம் அதிபர்
17. A.A. றஹீம் அதிபர்
18. S.M. நளீம் அதிபர்
19. S.L.M. ஷாபி ஆசிரியர்
20. I.L.A. றஹீம் ஆசிரியர்
21. A.M. முஸாதிக் அதிபர்
22. E. உதுமாலெவ்வை அதிபர்
23. S.M.A. மத்தீன் அதிபர்
24. அல்-ஹாஜ். நயீம் சரிபுத்தீன் அதிபர்
25. S.M. றபியுத்தீன் ஆசிரியர்
26. அல்-ஹாஜ். A.M. சரிபுத்தீன் வ.க.அ.
27. அல்-ஹாஜ். S.M.M. பழீல் அதிபர்
28. A. நெய்னா முகம்மது ஆசிரியர்
29. S.V.A. றசூல் மௌலவி ஆசிரியர்
30. V.M. இஸ்மாயில் அதிபர்
31. A. அப்துல் மஜீத் ஆசிரியர்
32. S.M. செயினுலாப்தீன் ஆசிரியர்
33. H.M. சதுறுத்தீன் ஆசிரியர்
34. A.M.A. வதூத் ஆசிரியர்
35. ஜனாபா. E.T. ஜாபிர் ஆசிரியை
36. அல்-ஹாஜ். U.M. ஹனிபா (மருதூர்க்கனி)
37. A.M. முஸ்தபா அதிபர்
38. அல்-ஹாஜ். M.M. நிஜாமுத்தீன் அதிபர்
39. M. சமுசத்தீன் ஆசிரியர்
40. M.M.A.H. மலீக் மௌலவி
41. A.M. சாலி அதிபர்
42. S.M.S.H. பாரி மௌலானா அதிபர்
43. M.M. இஸ்மாயில் அதிபர்
44. S.M. சம்சுத்தீன் ஆசிரியர்
45. S.M. முஸ்தபா மௌலானா ஆசிரியர்
46. அல்-ஹாஜ். A.H. முகம்மது அதிபர்
47. அல்-ஹாஜ். A.M.A. கரீம் ஆசிரியர்
48. A.R.A. ஜப்பார் ஆசிரியர்
49. M.J. சுஆதா ஆசிரியை
50. A.H.M. புஹாரி ஆசிரியர்
51. P.M. மீராலெவ்வை அதிபர்
52. அல்-ஹாஜ். H.M.A. வதூத் அதிபர்
53. A.H.M. மஜீத் அதிபர்
54. அல்-ஹாஜ். A.R.A. அஸீஸ் அதிபர்
55. A.C.A. மாஜித் மௌலவி
56. J.A.M. யூசுப் ஆசிரியர்
57. அல்-ஹாஜ். I.L.M. இப்றாகிம் ஆசிரியர்
58. அல்-ஹாஜ். A.M.A. ஜலீல் அதிபர்
59. அல்-ஹாஜ். S.H.M. அக்பர் அதிபர்
60. அல்-ஹாஜ். U.L. றஹ்மதுல்லா அதிபர்
61. Y.L. இஸ்மாயில் முகாந்திரம் ஆசிரியர்
62. I.L.M. இஸ்மாயில் ஆசிரியர்
63. ஹாஜியானி தூபத்துன் நஸீஹா ஆசிரியை
64. அல்-ஹாஜ். S.M. இப்றாகிம், D.D.E.

இவர்களின் மறுமை வெற்றிக்காக இருகரமேந்தி
இறைவனிடம் பிரார்த்திப்போமாக!

தகவல் உதவி :
ஏ.எம். ஷாபி (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாவின் தாக்கம் 1960களின் பின்னரே எமது மருதமுனையில் காணப் படுவதையும் அதற்குப் முன்னரான காலப்பகுதியில் மக்களின் பொழுது போக்கு அம்சமாக நாடகத்துறை பெரும் பங்காற்றியுள்ளமையையும் நாம் காணலாம்.

1947ல் மகாத்மா காந்தி அவர்களின் போராட்டத்தினால் இந்தியா சுதந்திர மடைகிறது. இக்காலத்தில் எமது கிராமத்தில் இந்திய வம்சா வழியினர் பலர் இருந்துள்ளமையும், மருதமுனையைச் சேர்ந்த சிலர் மார்க்கக் கல்வியின் நிமித்தம் இந்தியாவில் தங்கியிருந்து கற்றமையும், காந்தியின் போராட்டத்தின் வெற்றி இங்கும் தாக்கம் செலுத்தியிருக்கிறது. இதன்பேறாக 1948 ஜனவரியில் காந்தி என்ற நாடகம் மேடையேற்றப்பட்டிருக்கிறது. இந்த நாடகத்தில் காந்தியின் உருவ ஒற்றுமையைக் கொண்ட ஒருவராகவிருந்த மர்ஹூம் உதுமாலெப்பை அவர்களை இனங்கண்டு அவரையே காந்தி வேடத்தில் நடிக்கச் செய்திருக்கின் றார்கள். இதனாலேயே இவர் பிற்காலங்களில் காந்தியர் என மக்களால் அழைக்கப்பட்டுள்ளார். இவரது மகளும் குடும்பத்தினரும் இன்றும் மருதமுனை மூன்றாம் குறிச்சி மத்திய பள்ளிவாயல் மகல்லாவில் வாழ்ந்து வருகின்றனர்.

1950ல் 'அலிபாதுஷா' என்றொரு நாடகம் மேடையேற்றப்பட்டது. இதில் தாவூத்லெப்பை மரைக்கார், அலீஸ் பிள்ளை (வெள்ளவத்தை), இப்றாலெப்பை (முதிலுத்தீன் டைலரின் தந்தை), சாய்வுலெப்பை (PD அன்வர்தீனின் தந்தை) போன்றவர்கள் முக்கிய பாத்திரமேற்று நடித்திருக்கிறார்கள்.

1952ல் றஹீம் ஆசிரியர் (ஹமீட் சேமனின் சகோதரர்) இஸ்மாலெப்பை (மாஹிர் விரிவுரையாளரின் தந்தை), குலாம் முகைதீன் போன்றவர்கள் 'நீதியே நீ கேள்' என்றொரு நாடகத்தை மேடையேற்றியுள்ளனர்.

இக்கழகத்தினர் மத்தியில் சிறிய பிளவு ஒன்று ஏற்பட்டதன் காரணமாக 1968 இறுதிப்பகுதியில் இளைஞர் புத்துணர்ச்சி மன்றம் நடிப்பிசைமணி எம்.ஐ.எம். றாசீக், மனாப், சக்காப் மவ்லானா, செய்னுலாப்தீன் ஆசிரியர் போன்றவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு அவர்களும் பல நாடகங்களை மேடையேற்றினர். இவற்றில் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று நடிப்பிசைமணி றாசிக் அவர்கள் இயற்றிப் பாடும் பாட்டுக்கள் இவற்றில் "பசியைத் தீர்ப்பதும் பாலப்பம்" என்ற பாடலும் "நான் குடைகட்டிக் கொடுப்பேன், கூலி கூடவும் எடுப்பேன், அடைமழை வந்தால் நான் ஆனந்தப்படுவேன்" என்ற பாடல்கள் இன்றும் சிலரால் நினைவு கூரப்படுகின்றன. இவர் இன்றும் காத்தான்குடிப் பாலமுனையில் வாழ்ந்து வருகிறார்.

இளைஞர் கலைக்கழகத்திலிருந்து பிரிந்து சென்ற குழுவினர் இளைஞர் புத்துணர்ச்சி மன்றம் ஊடாக பல நாடகங்களை வழங்கியதுடன் சமய, கலை, கலாசார போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வெற்றியாளர்களுக்கு பரிசில் களும், பதக்கங்களும் வழங்கின. இவ்வாறு கிழக்கிலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியொன்றில் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் தங்கப் பதக்கம் வென்றதும் இப்பதக்கத்தை மன்றத்தின் அப்போதைய செயலாளராக விருந்த எஸ்.எச்.ஏ. றகுமான் (றகுமான் கண்டக்டர்) அவர்களால் வெற்றியாளருக்கு அணிவிக்கப்பட்ட விடயத்தை மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் ஒரு பொது இடத்தில் வைத்து றகுமான் கண்டக்டருடன் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960ம் ஆண்டு 'கொன்றவன் இவனல்ல' என்ற ஒரு மேடை நாடகம் எம்.ஐ.எம். அமீன் (வட்டாரக் கல்வி அதிகாரி), பீ.எம். மீராலெப்பை அதிபர், ஏ.எம். அபூபக்கர் ஆசிரியர் (தமிழ்) போன்றவர்களைக் கொண்டு மேடையேற்றப் பட்டது. இந்நாடகங்கள் அனைத்தும் மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளது மட்டுமல்லாமல் நடிகர்களுக்கு மக்கள் மத்தியில் பெயரையும் பெற்றுக் கொடுத்துள்ளது. எல்லா நாடகங்களும் பெரிய பள்ளிவாயல் முன்றலிலேயே நடை பெற்றிருக்கிறது.

நாடகத் துறையைப்பற்றிப் பேசும்போது எம்.வை.எம். மனாப் மறக்க முடியாதவர். ஓரங்க நாடகம் இவர் மூலமே எமது பிரதேசத்தில் மட்டுமல்ல; குதூகலம் என்ற வானொலி நிகழ்ச்சியினூடாக நாடு முழுவதும் பிரபல்யமானது. பத்துக்கும் அதிகமான குரல்களில் நடிக்கும் திறமையை இவர் பெற்றிருந்தமை சிறப்பம்சமாகும்.

கலைக்கூடல்

1970 களில் கலைக்கூடல் தோற்றம் பெற்றது. எஸ்.இஸட்.எம். சக்காப் மவ்லானா, எம்.வை.எம். மனாப், எம்.ஐ.எம். அமீன், அவ்ஃப் ஷரீப்தீன், நயீம் ஷரிப்தீன் அதிபர், றபீக் போன்றவர்களைப் பிரதானமாகக் கொண்ட இவ்வமைப்பு பிரபல்யமான பல நாடகங்களை எமக்கு வழங்கியுள்ளது. அவற்றுள், அறபு இஸ்ரவேல் போர், அவலட்சணம் ஐந்து, சவக்காலையில் பணம், ஆண்டவனுக்குத்தான் தெரியும் போன்றன பிரபல்யமானவை. இவற்றோடு தீனாராஜ் என்ற அபூதாலி, சித்தீக், நெய்னா போன்றவர்களும் சில நாடகங்களை வழங்கியுள்ளனர்.

அல்லாபிச்சை ஆசிரியர் 'உயில்' என்ற நாடகத்தையும், மருதூர்க்கனி, மருதூர்கொத்தன் போன்றவர்களும் நல்ல நாடகத் தயாரிப்பாளர்களாகவிருந்து நாடகங்களை வழங்கியுள்ளனர். இவர்களில் சக்காப் மவ்லானா அவர்களின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. காலவோட்டத்தில் தொலைக்காட்சிகளின் வரவும், அதில் இடம்பெறும் நாடகங்களின் மோகமும் இம்மேடை நாடகங் களின் முக்கியத்துவத்தை இழக்கச் செய்துள்ளன.

1959ம் ஆண்டு இளைஞர்கள் பலர் ஒன்றிணைந்து இளைஞர் கலைக் கழகம் என்ற பெயரில் ஒரு சங்கம் உருவாக்கப்பட்டது. இதில் ஏ.எம்.ஏ. சமது அதிபர், ஏ.எல்.எம்.ஏ. மஜீட் நூலகர், ஏ. செய்னுலாப்தீன் ஆசிரியர், கே. அல்லாபிச்சை அதிபர், எம்.பி.ஏ. றஹீம் ஆசிரியர், வை.எம். முஸ்தபா கண்டக்டர், டாக்டர் ஜின்னா சரிபுத்தீன், ஏ.சீ. நூர்முகம்மது ஆசிரியர், எம்.ஐ.எம். றாசீக், ஏ. அச்சு முகம்மது, எம்.ஐ. அப்துல் காதர், கே. ராமக்குட்டி போன்றவர்கள் அங்கம் வகித்ததோடு செயலாளராக ஏ.எம்.ஏ. சமது அதிபர் அவர்கள செயலாற்றினார். பிற்காலங்களில் அல்லாபிச்சை அதிபர் அவர்களும் செயலாளராகக் கடமை யாற்றினார். இக்கழகத்தினர் ஏ.எம். அபூபக்கர் (தமிழ் அபூபக்கர்) அவர்களினால் எழுதப்பட்ட "ஏழை அழுத கண்ணீர்" மருதூர் கொத்தன் வீ.எம். இஸ்மாயில் அதிபர் அவர்களினால் எழுதப்பெற்ற வழிகாட்டி சுடர்விளக்கு போன்ற நாடகங் களை மேடையேற்றி பெரு வரவேற்பைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரை நண்பர்கள் வட்டத்தின் உறுப்பினராகவிருந்து எம்மோடு இணைந்து கருமமாற்றியபோது இறையடியெய்திய இந்த நால்வரையும் இதனூடாக நாம் நினைவுகூர்வதோடு அவர்களின் மறுமை ஈடேற்றத்திற்காகவும் பிரார்த்திக்கிறோம்.

தலைவர் : கடற்கரை நண்பர்கள் வட்டம்

மர்ஹூம். ஏ.எச்.எம். மஜீத் (மருதமுனை மஜீத்)

1935இல் பிறந்த இவர் கல்விச் சேவையில் பல பரிமாணங்களைப் பெற்றவர். ஆசிரியராக, அதிபராக கல்விப் பணிப் பாளராகச் சேவையாற்றிய போதிலும் அல்-மனார் மத்திய கல்லூரியின் உயர்ச்சியில் அவரது பங்களிப்பு அளவிட முடியாதது. அதிபர் திலகம் என்ற இந்த ஆளுமை கிராமத்தின் சகல செயற்பாடு களிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். எதையுமே வெளிப்படை யாகப் பேசும் இவரது சுபாவம் சிலவேளைகளில் சில மனக்கசப்புக்களை ஏற்படுத் தினாலும், அவற்றையெல்லாம் உடனே மறந்துவிடும் தன்மையைப் பெற்றிருந்தார். சிறுகதை, எழுத்து, இலக்கியம், கலையென இவரது சேவைகள் நீண்டது.

என்னோடு மிக நெருக்கமாகப் பழகிய இவரை இந்த மாண்புறும் மருதமுனை வாயிலாக நினைவுகூர்வதுடன் மறுமைப் பேற்றுக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

மர்ஹூம். வை.எல். இஸ்மாயில் முகாந்திரம் ஆசிரியர்

1952-10-03ம் திகதி மருதமுனையில் பிறந்த இஸ்மாயில் முகாந்திரம் அவர்கள் அல்-மனார் மத்திய கல்லூரியில் பயின்று பட்டம் பெற்று 33 வருடங்கள் கல்விப்பணி புரிந்து மாணவர்களின் நன்மதிப்பையும் பெற்றார். தமிழ், இலக்கியம் என்பது இவருக்கு வாலாயம். நடையில் ஒரு கம்பீரம். பேச்சில் ஒரு வசீகரம். எங்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் அங்கத்தவராயிருந்து எம்மை உற்சாகப் படுத்தினார்.

மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளியில் 17 வருடங்கள் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவிருந்து நல்ல பணியாற்றியவர். இவருடைய சேவைகள் அனைத்தையும் எல்லாம்வல்ல நாயன் பொருந்திக்கொண்டு ஈருலக வெற்றியைக் கொடுக்க வேண்டுமென இருகரமேந்திப் பிரார்த்திக்கின்றோம்.

மர்ஹூம். ஏ.சி.எம். சுபியான் IPT

1958ம் ஆண்டு பிறந்த இவர் 2013இல் தனது ஐம்பத்தைந்தாவது வயதில் வபாத்தானார். ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-மனாரிலும் உயர்கல்வியை குண்டசாலை தொழில்நுட்பக் கல்லூரியிலும் கற்றுத்தேறினார். தொலைத் தொடர்புகள் திணைக்களத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்று ஸ்ரீலங்கா ரெலிகொம்மில் சேர்ந்து பணியாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
246301

கிரிக்கட் விளையாட்டில் ஆர்வம் கொண்ட சுபியான் மென்பந்துக் கிரிக்கட் விளையாடியதுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்பகாலம் முதல் அதன் வெற்றிக்காகப் பாடுபட்டவர். எமது கடற்கரை நண்பர்கள் வட்ட சமூக மேம்பாட்டு மையத்தின் உறுப்பினர் கடற்கரையில் எம்மோடு ஒன்றாக பிற்பகல் வேளைகளில் கூடி சமயம், அரசியல், உலக விவகாரங்கள், பிற விடயங்கள் எனக் கலந்துரையாடுவதுடன் சிலபோது சமய விவகாரங்களில் இப்றாகீமுடன் (றஊப்) சூடான விவாதங்களையும் புரிவார். சிலபோது நாங்கள் தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. எல்லா விடயங்களிலும் ஆழமாகச் சிந்திப்பதும் வாதங்களின் போது பொருத்தமான விடய தானங்களை முன்வைப்பதும் அவரது சிறந்த புலமைக்குச் சான்று.

அன்னாரின் ஈருலக வெற்றிக்காக இருகரமேந்திப் பிரார்த்திப்போமாக.

மர்ஹூம். ஜ.எல்.எம். அமீர் (பன்னீர் அமீர்)

அமீர் அவர்கள் எங்களது கடற்கரை நண்பர்கள் வட்டத்தின் ஆரம்பகால உறுப்பினர். சமயம் வாய்க்கின்றபோது எம்மோடு கலந்துகொண்டு எம்முடன் உரையாடுவார். விளையாட்டு, சமூகசேவை, அரசியல் எனப் பல துறைசார்ந்த ஒருவராகவிருந்தார். இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றதன் பின்னர் சிறுகைத்தொழில் முயற்சியின் மூலம் பன்னீர், ஓமத்திரவம் போன்றவற்றை உற்பத்தி செய்து மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்று வந்தார். இதனாலேயே பன்னீர் அமீர் எனப் பெயர் பெற்றார்.

சைக்கிள் ஓட்டம், குறுந்தூர, நெடுந்தூர ஓட்டங்கள், உதைபந்து, கரப்பந்து எனப்பல விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டிய இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளனாகவும் இருந்ததுடன் கிராம அபிவிருத்திச் சபை, கிராமோதய சபை போன்றனவற்றின் தலைவராகவும் இருந்து தான் வாழ்ந்த பிரதேசத்தின் அபிவிருத்திக்காகத் தன்னாலானவற்றைச் செய்தார்.

இவரது மறுமை வெற்றிக்காக இருகரமேந்திப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிகளும் அரச அலுவலகங்களும்

தொகுப்பு : ஏ.எஸ். சர்மதா எம். அஸ்வர் பீ.ஏ. (ஆசிரியை)

மக்கள் வங்கி

1996-03-17ம் திகதி மருதமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள ஐயூப் பில்டிங்கில் கல்முனை மக்கள் வங்கியின் கருமபீடமொன்று மக்கள் வங்கியின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளினால் திறந்து வைக்கப்பட்டது. இங்கு வங்கி நடவடிக்கைகளில் வழமையாக இடம்பெறும் சேவைகளில் கடன் வழங்கல் தவிர்ந்த மற்றெல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக நடைமுறைக் கணக்கை ஆரம்பித்து அவற்றை நடைமுறைப்படுத்தும் ஏற்பாடும் செய்யப்பட்டது. இந்த நடைமுறை இலங்கையில் மருதமுனை மக்கள் வங்கி கருமபீடத்தில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

சகல வசதிகளையும் கொண்ட ஒரு வங்கியாக இதைத் தரமுயர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் புதிய கிளைகளைத் திறக்கும் வேலை நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளினால் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தமையால் இம்முயற்சிகள் யாவும் கைகூடாமல் போயின. இருந்தாலும் நாட்டின் நிலை பயங்கரவாதப் பிடியிலிருந்து ஓரளவேனும் விடுவிக்கப்பட்டதாலும் எமது பிரதேச மக்கள் சுதந்திரமாக நடமாடும் ஒரு நிலையோடு வர்த்தகமும் விரிவடையத் தொடங்கியது. இதனால் மருதமுனையின் மக்கள் வங்கி கருமபீடம் 05-09-2011 சகல வசதிகளையும் கொண்ட ஒரு முழு வங்கியாக **மக்கள் வங்கி மருதமுனை** என்ற பெயரோடு 346ம் இலக்கக் கிளையாக தற்போது பிரதான வீதியில் ஏ.எச்.ஏ. ஸமத் ஆசிரியர் அவர்களின் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இலங்கை வங்கி

கல்முனை இலங்கை வங்கியின் கருமபீடமாக மருதமுனை பிரதான வீதியில் 2008ம் ஆண்டு முதல் இயங்கிவருகிறது. இங்கு சேமிப்புக் கணக்குகள் அடவுச் சேவைகள் என்பன நடைபெறுகின்றன. இதனையும் முழுமையான இலங்கை வங்கி கிளையாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் பயனாக 2013 செப்டம்பர் 15 இலிருந்து C - Grade வங்கியாக ஜே.எம். நஸ்றுத்தீன் அவர்களுடைய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

ஹட்டன் நெஷனல் வங்கி

மருதமுனை ஹட்டன் நஷனல் வங்கி 23-10-2010இல் மருதமுனை பெரியநீலாவணைப் பிரதான வீதியில் கொழும்பு றைஸ்மில் உரிமையாளரின் கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. மேற்படி கிளையில் வங்கிச்சேவைகள் அனைத்தும் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூர்த்தி வங்கி

மருதமுனை வாசிகசாலையின் கிழக்குப் பக்கமாக சமூர்த்தி வங்கி இயங்கி வருகிறது. மருதமுனை நற்பிட்டிமுனை சமூர்த்தி உதவிபெறும் சுமார் நாலாயிரம் குடும்பங்களின் நன்மை கருதி இது 2002இலிருந்து இயங்கி வருகிறது.

சமூர்த்தி உதவியினைப் பெறும் பயனாளிகளின் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதும் அவர்களின் அவசரத் தேவைகளுக்கான சிறிய கடன்வசதிகளை வழங்கு வதும் இதன் நோக்கமாகவுள்ளன. மேற்படி கடன்கள் சமூர்த்திச் சங்கங்களின் சிபார்சின் பேரில் வழங்கப்படுகின்றன. இச்சங்கம் 20 நபர்களுக்கு ஐவர் என்ற அடிப்படையில் ஒவ்வொரு குறிச்சிகளிலிருந்தும் தெரிவுசெய்யப்படுகின்றது. இந்த அடிப்படையில் மருதமுனை சமூர்த்தி வங்கி 556 டிவிசன்களில் 66 குழுக்களைக் கொண்டமைந்திருக்கின்றன. இவற்றிலிருந்து 15 பேர்களைக் கொண்ட ஒரு நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டு அதற்குத் தலைவர், செயலாளர், பொருளாளர் என ஒரு சபை அமைக்கப்படுகிறது. இச்சபையின் தலைவர்களாக ஆரம்பத்தில் நூறு முஹம்மது அப்துல் சத்தார் இருந்து வந்தார். தொடர்ந்து வந்த காலங்களில் இரு கிராமங்களைச் சேர்ந்த வங்கியென்ற அடிப்படையில் நற்பிட்டிமுனையைச் சேர்ந்த இருவரும் நமதூரைச் சேர்ந்த கமறுத்தீன் (துனியா) என்பவரும் கடமையாற்றினார். தற்போது இதன் தலைவராக அபூதாலி என்ற ஏ.எல்.ஐ. ஹுசைன் கடமையாற்றுகிறார். இச்சபையே பயனாளிகளின் கடன்களுக்கான சிபார்சுகளைச் செய்வதன் மூலம் வங்கி தனது உத்தரவாதத்தினை உறுதிசெய்து கொள்கிறது. தற்போது இவ்வங்கி **"வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி"** என்ற பெயரில் இயங்கி வருகிறது.

வங்கித் துறை

- அல்-ஹாஜ். ஏ.எல்.ஏ.எஸ்.எம். ஜஃபர் அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் நீண்டகாலம் கடமையாற்றிய பின் ஓய்வுபெற்று தற்போது "பறக்கத் சென்ரர்" என்ற ஹாட்வெயார் கடையின் பங்காளியாகவிருந்து வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார். மருதமுனை இஸ்லாமியப் பிரச்சார மையத்தின் பணிப் பாளர் சபை உறுப்பினராகவிருந்து சமயப் பணிபுரிந்து வருகிறார்.
- அல்-ஹாஜ். எஸ்.எம். அப்துல்லாஹ் LLM அவர்கள் இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளராகவும், சட்ட ஆலோசகராகவும் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.
- ஜனாப். எச்.எல். நஜ்முத்தீன் வங்கி முகாமையாளர் தரத்திலிருந்து தற்போது ஓய்வுபெற்றுள்ளார்.
- ஜனாப். பீ.ரீ.எம். நஸ்றுத்தீன் வங்கி முகாமையாளராக மருதமுனை மக்கள் வங்கியில் நியமனம் பெறவுள்ளார்.
- ஜனாப். எம்.பி.எம். இக்பால் (B.Ed.) தேசிய சேமிப்பு வங்கியில் முகாமையாளராகப் பணிபுரிகிறார். விரைவில் ஓய்வுபெறவிருக்கிறார்.
- ஜனாப். ஏ.எல்.எம். ஆப்தீன் தேசிய சேமிப்பு வங்கியின் உத்தியோகத்தராகவிருந்து தன் நோய் காரணமாக ஓய்வுபெற்று தற்போது வாழ்ந்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை உப தபாலகமும், உப தபாலதிபர்களும்

ஏ.எஸ். நிரோசா ஹாபி B.A.

மருதமுனையில் உப தபாலகமொன்று 1953இல் ஆரம்பிக்கப்பட்டது. பாய்க் கடைக்கும் புர்ஹான்ஸ் கடைத் தொகுதிக்கும் இடையில் கோசியனியார் அவர்களுடைய கட்டிடம் இருந்தது. இதிலேயே முதன்முதலில் இந்த தபாலகம் இயங்கியது. 1964 வரை இங்கு இயங்கிய உபதபாலகம் பின் தற்போது ஒன்கோயிங் (On Going) இருக்கின்ற இடத்தில் இயங்கத் துவங்கியது. பின்னர் மஜீத் மவ்லவி அவர்களின் பழைய கடையிலும் அதன் பின்னர் மஜீட் மவ்லவி அவர்களின் புதிய கட்டிடத்திலும் சில காலம் மஸ்ஜிதுல் கபீர் கட்டிடத்திலும் இயங்கியது. ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் அல்-ஹாஜ் றஊப் ஹக்கீம் அவர்கள் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சராகவிருந்த போது மருதமுனையில் ஒரு தபாலகக் கட்டிடம் அமைப்பதற்காக ரூபா எழுபத்தைந்து இலட்சம் (7500000/-) ஒதுக்கியதன் பயனாக மருதமுனை மக்கள் மண்டபத்திற்குப் பின்புறம் ஒரு அழகிய கட்டிடம் அமைக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.

இதற்கிடையே 1994ம் ஆண்டு ஜனாப். ஹிஸ்புல்லாஹ் அவர்கள் பிரதி தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சராகவிருந்த சமயம் எமது வேண்டுகோளிற் கிணங்க மருதமுனை அக்பர் மாதிரிக் கிராமத்தில் அக்பர் பள்ளிவாயல் கட்டிடத்தில் ஒரு உப தபாலகத்தைத் திறந்து தந்தார். பின்னர் இது இதன் உப தபாலதிபர் எம்.எம். றஹ்மத்துல்லாஹ் அவர்களின் வீட்டிற்கு அக்பர் கிராமத்தின் உட்பகுதிக்கு மாற்றப்பட்டது.

உப தபால் அதிபர்களாக :

மருதமுனையில் முதலாவது உப தபாலதிபராக எஸ்.எல். அப்துல் றஹீம் என்பவர் இயங்கினார். இவர் புர்கான், கனிமவ்லவி ஆகியோரின் மூத்த சகோதரர். கல்முனைக் குடியில் திருமணம் செய்து குழந்தைகள் இல்லாமையினால் அவரது ஊருடனான தொடர்புகள் பற்றிய தகவல்கள் தற்போதுள்ளவர்கள் அறியாத ஒன்றாகிவிட்டது. இவர் மரணமாகி விட்டார்.

மர்ஹூம் லாபிர் மவ்லானா அவர்கள் இவருக்குப் பின்னர் சில காலம் தற்காலிக மாகக் கடமையாற்றினார். இவர் பழீல் மவ்லானா யாசீன் மவ்லானா ஆகியோரின் இளைய சகோதரர். மத்திய பள்ளிவாயலில் நீண்ட நாட்கள் குர்ஆன் மதரஸா வையும் நடாத்தியவர்.

மர்ஹூம் ஏ.சீ.எம். சாலிஹ் அவர்கள் நீண்டகாலமாக மருதமுனை உப தபாலதிபராகக் கடமையாற்றினார். இவர் சஹூதுல் நஜீம் ZDE, சஹூதுல் அமீன் ISA ஆகியோரின் தந்தையாவார்.

1977 முதல் 2006ஆம் ஆண்டுவரை உபதபாலதிபராக அபூபக்கர் முகம்மது முகைதீன் அவர்கள் கடமையாற்றினர். இவர் தற்போது அக்பர் கிராமத்தில் உப தபாலதிபராக 1994 நவம்பர் மாதத்திலிருந்து கடமையாற்றிவரும் றகுமத்துல்லாஹ் அவர்களின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்துல் றகீம் அதிபர் அவர்களின் மகன் கலீலுர் ரஹ்மான் உபதபால் அதிபராகக் கடமையாற்றினார். 1998ம் ஆண்டு இது தபாலகமாக தரமுயர்த்தப்பட்டது. தற்போது அல்-ஹாஜ். பீ.எம். அஸ்கர்டீன் தபாலதிபராகக் கடமைபுரிகிறார். கொழும்பில் அபுல்ஹஸன் என்பவர் உபதபாலதிபராகக் கடமையாற்றிய விபரம் எமக்குக் கிடைத்துள்ளது. இவர் செய்யதலியினுடைய தகப்பனார் அப்துல்லாஹ் மவ்லானா அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தசாப்தத்தில் மருதமுனை ஸகாத் நிதியம்

அல்ஹாபிழ். றஸ்ஸான் சபுறுத்தீன் (நளீமி) (SLAS)

ஸக்காத் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்று. தனிப்பட்ட, சமூக வாழ்வின் விடயங்களை அது கையாள்கின்றது. வறுமை ஒழிப்பு, அதன் பிரதான குறிக்கோளாக இருப்பினும் இழப்புக்கள், சுமைகள் மற்றும் சமூக பாதுகாப் பிற்கான தீர்வாக பங்களிப்புச் செய்கின்றது. ஸக்காத்தை திரட்டுதல், அதனைப் பாதுகாத்து வைத்தல் மற்றும் உரியவர்களை இனங்கண்டு விநியோகம் செய்தல் எனும் ஒழுங்கு முறைகள் ஒரு கூட்டு கடமை என்பதை வலியுறுத்தி காட்டு கின்றது. ஸக்காத் பெறத் தகுதியான எட்டு கூட்டத்தாரில் "ஆமீல்கள்" எனும் ஒரு சாராரை அல்-குர்ஆன் குறிப்பிட்டு காட்டுவதன் மூலம் தனியாக, தான் விரும்பிய பிரகாரம் இக்கடமையை ஒரு முஸ்லிம் நிறைவேற்றக் கூடாது என்பதை நாம் அறிகின்றோம்.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இக்கட்டமைப்பை வெற்றிகரமாக செயற்படுத்திக் காட்டினார்கள். கலீபாக்களின் ஆட்சிக் காலத்தில் அதிகாரம் மிக்க செயற்பாடாக இது மாற்றம் கண்டது. வரலாறு நெடுகிலும் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டிய கடமையாக நோக்கப்படுகின்றது.

இந்த பின்னணியில் மருதமுனை ஸக்காத் நிதியத்தின் தோற்றம் அதன் வளர்ச்சி மற்றும் தற்போதைய செயற்பாடுகள் பற்றிய ஒரு வரலாற்று கண்ணோட்டத்தை இங்கு தருகின்றேன்.

நிதியத்தின் தோற்றத்திற்கான பின்னணி

மருதமுனை வரலாற்றில் தொன்று தொடக்கம் செல்வந்தர்கள் தமது செல்வங்களை சதகாவாக செலவு செய்து வந்துள்ளனர். பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள், பாடசாலைகள், சமூக அமைப்புக்கள் என பலவற்றிற்கும் அவர்களின் பங்களிப்புக்கள் இருந்து வந்துள்ளன. இதே முறையில் ஸகாத் என்ற பர்ழான கடமையும் நிறைவேற்றப்பட்டு வந்தது.

குறிப்பாக றமழான் மாதத்தில் இருபத்தி ஏழாம் கிழமை ஸக்காத் பணம் பெறப்போகிறோம் என எண்ணி ஏழை மக்கள் ஒரு சில பணக்கார வீடுகளுக்கு வருவார்கள். வருடா வருடம் இந்த நடைமுறை இருந்து வந்ததனால் 1990களின் ஆரம்பத்தில் இதனை பரவலாகக் காணமுடிந்தது. வருகின்றவர்கள் வீட்டு முற்றத்தில் ஒன்றுசேர்க்கப்பட்டு அவர்களுக்கு சில்லறை ரூபாய்கள் வழங்கப் படும். இதில் வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள், யாசகத்திற்காக வெளியூரி லிருந்து வருவோர்கள் அதிகம் காணப்பட்டனர். ஆரம்பத்தில் பொதுவாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் நாணயங்கள் கொடுக்கப்பட்டு வந்தது. பின்னர் பத்து ரூபாய் இருபது ரூபாய் என அதிகரித்தது. நன்கு தெரிந்தவர்கள் சொந்தக்காரர்கள் போன்றோருக்கு ஐம்பது ரூபாய்கள் கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் திரளாக ஒன்றுகூடும் இக்கூட்டத்திற்கு வருடாந்தக் கடமையை நிறைவேற்றுகின்றோம் என்ற எண்ணத்தில் பணக்காரர்கள் அக்கால சூழலுக்கும் வழிகாட்டலுக்கும் ஏற்றவாறு செய்து வந்தனர்.

இவ்வாறான முறைகள் அல்குர்ஆன், சுன்னாவின் கூற்றுக்கும், போதனைகளுக்கும் உடன்பாடு இல்லாமல் இருந்ததை மருதமுனை உலமாக்கள் குத்பா பிரசங்கங்கள் மூலம் தெளிவுபடுத்தினார்கள். இதன் பின்னர் கூட்டு ஸக்காத்தை ஆரம்பிப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அது நடைமுறைக்கு வரவில்லை.

நிதியத்தின் உருவாக்கம்

மருதமுனையில் மட்டுமல்ல நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்ட இஸ்லாத்தின் சிந்தனைத் தாக்கம் பல ஊர்களிலும் ஸக்காத் நிதியங்கள் தோற்றம் பெறுவதற்கு வழிகோலியது. குறிப்பாக பேருவளை ஜாமியா நழீமிய்யாவில் இடம்பெற்ற ஸக்காத் செயலமர்வுக்கு நாடு பூராகவுமிருந்து பல உலமாக்கள் கலந்து கொண்டனர். இதன் போது கூட்டு ஸக்காத்தின் அவசியம் வெகுவாக உணரப்பட்டது. இதில் முன்வைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் நூலுருப் பெற்றதன் மூலம் ஸக்காத் பற்றிய கருத்துக்கள் சமூகமயமாக ஆரம்பித்தன.

இதனோடு இணைந்து மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா கூட்டு ஸக்காத்தின் அவசியத்தை வலியுறுத்தி தனவந்தர்களை விழிப்புணர்வூட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தது. 1995ம் ஆண்டு கபீர் பள்ளிவாசலில் இடம்பெற்ற ஜும்ஆ பிரசங்கத்தில் மௌலவி ஏ.ஆர். செய்னுலாப்தீன் (ஷர்கி) அவர்கள் கூறினார்கள். இதன் விளைவாக உலமாக்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், தனவந்தர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், ஊர்ப்பிரமுகர்கள் அடங்கலான குழுவினர் 1995ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி மஸ்ஜிதுல் கபீரில் ஒன்றுசேர்ந்தனர். இதில் ஸக்காத் சேகரிப்பு மற்றும் விநியோகம் ஒரு அமைப்பின் கீழ் இடம்பெற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனால் "மருதமுனை ஸக்காத் நிதியம்" என்ற அமைப்பு உருவானது.

ஆரம்பகட்ட செயற்பாடுகள்

ஸக்காத் நிதியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வுக்கு உந்து சக்தியாக அமைந்தது மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலின் அப்போதைய தலைவர் மர்ஹூம் அல்-ஹாஜ் ஐ.எல்.எம். இஸ்மாயீல் (சீப்பலஸ்) அவர்களின் முதற்கட்ட பங்களிப்பாகும். இவர்கள் முதன்முதலில் பத்தாயிரம் ரூபாவை தனது ஸக்காத்தாக நிதியத்திடம் ஒப்படைத்து உற்சாகப்படுத்தினார்கள். இதனையடுத்து பலரும் தமது பங்களிப்புக்களை வழங்கினார்கள்.

இக்காலப்பகுதியில் நாட்டில் பயங்கரவாதம் மற்றும் அச்சம் மிகுந்த சூழல் நிலவியதனால் ஸக்காத் பணத்தை கூட்டாக சேகரித்து வைத்துக்கொள்வதில் பல சிரமங்கள் இருப்பதாக அஞ்சப்பட்டது. கப்பம், ஆட்கடத்தல், கொலை அச்சுறுத்தல் என்பன இடம்பெற்றதனால் நிதியமாக தொழிற்படுவது ஆபத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவிக்கும் என கருத்துக்கள் பரிமாறப்பட்டன. நமதூர் செல்வந் தர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட மேற்படி நிகழ்வுகள் இதற்கு ஆதாரமாக அமைந்தன. ஆயினும் அல்லாஹ்வின் மீது பொறுப்புச்சாட்டி இந்நிதியத்தை ஆரம்பிப்போம் என்ற கருத்து வரவேற்பைப் பெற்றதனால் நிதியம் உத்தியோக பூர்வமாக செயற்பட ஆரம்பித்தது.

இந்த அமர்வில் ஸக்காத் நிர்வாக குழு மற்றும் நிதியத்தின் தலைவராக அல்ஹாஜ் எம்.ஐ. ஹுஸைனுத்தீன் (நியாழி) அவர்கள் தெரிவுசெய்யப் பட்டார்கள். நிர்வாக சபையில் 40 பேர் அங்கம் வகித்தனர். ஸக்காத் பற்றிய சட்ட திட்டங்கள் மற்றும் வழிகாட்டல்கள் என்பன நிர்வாகக் கூட்டங்களில் தலைவர் அவர்களினாலும் உலமாக்களினாலும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன் விளைவாக நிதியத்திற்கென தனியான யாப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கேற்ப அனைத்துச் செயற்பாடுகளும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் சட்டக்கோவை ஆக்கக்குழு மற்றும் சட்டக்கோவை பரிசீலனைக்குழு என இரண்டு குழுக்கள் உருவாக்கப்பட்டன. சட்டக்கோவை ஆக்க ஆலோசகராக அல்-ஹாஜ் ஏ.எம். பதுர்தீன் (சட்டத்தரணி) அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

சட்டக்கோவை ஆக்கக் குழுவில் அல்-ஹாஜ் மௌலவி ஏ. அபூஉபைதா (மதனி), அல்-ஹாஜ் மௌலவி ஏ.ஆர். செய்னுலாப்தீன் (ஷர்கி), அல்-ஹாஜ் எம்.எம். சபீக் (பொறியியலாளர்), அல்-ஹாஜ் ஏ.ஆர்.ஏ. சத்தார் (வங்கியாளர்), ஜனாப். பீ.ரீ.எம். மஹ்றூப் (ஆசிரியர்) ஆகியோர் இடம்பெற்றனர். இக்குழு நிதியத்திற்கான உபவிதிகளை ஆக்கியதோடு ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கும் ஸக்காத் நிதியங்களுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொண்டனர். இதன் மூலம் சிறந்த யாப்பு ஒன்றை வடிவமைக்க முடியுமாக இருந்தது.

இக்குழுவின் வழிகாட்டல்கள், பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய வரைபு சட்டக்கோவை பரிசீலனைக் குழுவிற்கு முன்வைக்கப்பட்டது. இக்குழுவில் ஜனாப். எஸ்.எம். பீர்முஹம்மது ஜே.பி. (ஓய்வுபெற்ற அதிபர்), மௌலவி என்.ஜீ.ஏ. கமால் (இஸ்லாகி), ஜனாப் எச்.எம்.ஏ. வதூத் (அதிபர்), ஜனாப். எம்.பீ.எம். இக்பால் (வங்கியாளர்), ஜனாப். எச்.எல்.எம். மபாஸ் (இலிகிதர்) ஆகியோர் அங்கம் வகித்தனர். இதன்போது தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு மருதமுனை ஸக்காத் நிதிய உப விதிகள் (By Laws) ஆக்கப்பட்டன.

நிதியத்தின் கட்டமைப்பு

ஸக்காத் நிதியம் பொதுச்சபை, நிர்வாக சபை, மீயுயர் சபை ஆகிய சபைகளைக் கொண்டதாக இயங்குகின்றது. பொதுச்சபை நிதியத்திற்கு ஸக்காத்தை வழங்கு பவர்களையும் ஸக்காத் வழங்கத் தகுதியுடைய அனைத்து நபர்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. நிர்வாக சபை பொதுச்சபையினால் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை தெரிவுசெய்யப்படுகின்ற 50 பேருக்கு உட்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சபை மருதமுனை உலமா சபையிலிருந்து குறைந்தது நான்கு பிரதிநிதிகள், ஸக்காத் நிதிய எல்லைப் பரப்பிற்குட்பட்ட பிரதேச பள்ளிவாசல்களின் அப்போதைய தலைவர்கள், மருதமுனையின் இரு பிரதான கல்லூரிகளின் அதிபர்கள், குறைந்தது ஒரு வைத்திய அதிகாரி, குறைந்தது ஒரு சட்டத்தரணி, மருதமுனை வர்த்தகச் சங்க உறுப்பினர்களில் குறைந்தது மூவர் மற்றும் கல்வி மான்கள், புத்திஜீவிகள் போன்றோரை அங்கத்துவமாகக் கொண்டு இயங்க வேண்டும். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கை பொதுச்சபை தீர்மானத்திற்கு ஏற்ப மாறுபட முடியும்.

மீயுயர் சபை, இது நிர்வாக சபையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 13 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையாகச் செயற்பட்டு வருகின்றது. நிதியத்தின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், நிர்வாக சபை உறுப்பினர் 10 பேர் அடங்கிய சபையாக இருக்கும்.

நிதியத்தின் எல்லைப் பரப்புகளாக பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு, மருதமுனை, பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பள்ளிவாசல்களின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளாகும்.

நிதியத்தின் செயற்பாடுகள்

விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் :

கூட்டு ஸக்காத் நடைமுறை 1995ம் ஆண்டு முதல்தடவையாக நமதூரில் அமுல்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் பல சவால்களை எதிர்கொண்ட போதிலும் ஊர் தனவந்தர்களின் ஒத்துழைப்புக் காரணமாக வெற்றியளித்தது. தொழுகை போன்று ஸக்காத் ஒரு கூட்டுக் கடமை என்பதை மக்கள் தெரிந்துகொள்ளாமை மிக முக்கிய தடையாகக் காணப்பட்டது. இதற்காக ஜும்ஆக்கள், பிரத்தியேக பயான்கள், துண்டுப்பிரசுரங்கள், பெனர்கள், தனிப்பட்ட சந்திப்புக்கள் என்பவற்றை நிதியம் உலமா சபை மற்றும் பள்ளிவாசல்களின் ஒத்துழைப்புடன் காலத்திற்குக் காலம் ஏற்பாடு செய்து வருகின்றது.

ஸக்காத் பற்றிய விழிப்புணர்வு ஏற்பாடுகளில் 2007ம் வருடம் ஏப்ரல் மாதம் 13ம் திகதி அல்-மனார் மத்திய கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்ட ஸக்காத் முழுநாள் கருத்தரங்கு குறிப்பிடத்தக்கது. ஊர் தழுவிய வகையில் ஸக்காத் வழங்கத் தகுதியானவர்களை இனங்கண்டு அழைக்கப்பட்டிருந்தனர். இதில் சிறப்புரைகளாக சமூக மேம்பாட்டில் ஸக்காத்தும் ஸதக்காவும், சமூக பாதுகாப்பு இயக்கம் என்ற வகையில் ஸக்காத் கூட்டுச் செயற்பாடும், கோட்பாடும், ஸக்காத் வழங்க கடமைப்பட்டவர்களும், பெறத்தகுதியுள்ளோரும், ஸக்காத் விதியாகும் பொருட்களும் விநியோக முறையும் எனும் தலைப்புக்களில் விரிவுரைகள் இடம்பெற்றன. நாட்டின் தலைசிறந்த உலமாக்களைக் கொண்டு நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கின் இறுதியில் கேள்விகள், சந்தேகங்கள் என்பவற்றிற்கான பதில்கள், தெளிவுகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸக்காத் சேகரிப்பு நடவடிக்கைகள் :

நிதிய உறுப்பினர்கள் அனைவரினதும் பங்களிப்பைப் பெறுவதற்கும் வினைத்திறன்மிக்க சேகரிப்பையும் நோக்காகக் கொண்டு ஐந்து பகுதிகளாக எல்லைப்படுத்தப்பட்டு ஸகாத் வசூல் இடம்பெறுகின்றது. ஒவ்வொரு பகுதிக்கும் உலமா ஒருவரின் தலைமையின் கீழ் உறுப்பினர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருட ஸக்காத் நிதியை கையாண்ட விதம் பற்றிய கைநூல் விநியோகம் செய்து புதிய வருடத்திற்கான சேகரிப்பு ஆரம்பிக்கப்படுகின்றது.

தற்போது வசூல் நடவடிக்கைக்காக பெரியநீலாவணை எல்லையிலிருந்து எஸ்.எம். வீதி வரை முதற்குழுவும், எஸ்.எம். வீதியில் ஆரம்பித்து மக்காமடி வீதி வரை இரண்டாம் குழுவும், மக்காமடி வீதியில் ஆரம்பித்து மசூர்மௌலானா வீதிவரையிலா பகுதி மூன்றாம் குழுவுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நான்காம் குழு மசூர்மௌலானா வீதியிலிருந்து ஜாயா வீதி வரைக்குமாகும். ஜாயா வீதியிலிருந்து பாண்டிருப்பு எல்லை வரைக்கும் குழு ஐந்து சேகரிப்பு வேலை களுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

சேகரிக்கும் பணம் மற்றும் வரவுகள் அனைத்தும் நிதியத்தின் அமானா வங்கிக் கணக்கில் பொருளாளரினால் வரவு வைக்கப்படுகின்றது. பணம் மீளப் பெறுவதற்கு நிர்வாகசபைத் தீர்மானத்துடன் பொருளாளருடன் தலைவர் அல்லது செயலாளர் கையொப்பமிட்டு பெறப்படுகின்றது. நிதியத்தின் நிதி மற்றும் விநியோக நடவடிக்கைகள் மிகவும் வெளிப்படைத் தன்மை வாய்ந்த தாகவும் பலர் பொறுப்புக்கூற வேண்டியதாகவும் உள்ளதனால் எல்லோரும் திருப்திப்படுகின்ற வகையில் நிதியம் செயற்பட்டு வருகின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

ஸக்காத் நிதியம் தொடர்ந்தும் வளர்ச்சிப் பாதையில் செல்வதை வருடாந்தம் அதிகரித்துச் செல்லும் நிதி சேகரிப்பு எடுத்துக்காட்டுகின்றது. பின்வரும் அட்டவணை கடந்த இரு தசாப்தகால பார்வையைத் தருகின்றது.

வருடம்	பெறுகைகள் (ரூபாவில்)
1995	210,150
1996	235,850
1997	203,300
1998	248,250
1999	243,170
2000	351,350
2001	496,250
2002	596,240
2003	753,120
2004	11,79,540

வருடம்	பெறுகைகள் (ரூபாவில்)
2005	12,76,780
2006	13,16,610
2007	15,82,240
2008	19,44,655
2009	26,85,849
2010	25,89,350
2011	36,00,450
2012	36,22,410
2013	44,34,345
2014	42,95,367

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது வருட காலப்பகுதியினுள் நிதியத்தின் நிதி சேகரிப்பு இருபது மடங்கினால் அதிகரித்துள்ளது. 1995ம் ஆண்டு இரண்டு இலட்சம் அளவில் இருந்த தொகை 2014ம் வருடம் 42 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. இதற்குக் காரணம் புதியவர்கள் பலர் தமது கடமையான தொகையை வழங்கியிருப்பதாகும்.

வெளிப்படையாக ஸக்காத் கொடுப்பதற்கு வசதியிருந்தும் போதுமான தெளிவின்றி வழங்காமல் இருப்பவர்களுக்கு நிதியத்தின் விஷேட செயலணி மூலம் தெளிவுபடுத்தும் திட்டம் ஒன்றும் சேகரிப்பு நடவடிக்கையின் போது பின்பற்றப்படுகின்றது. மேலும் நமதூரில் பிறந்து தொழில்வாய்ப்பு மற்றும் கல்வி நிமித்தம் வெளியூர்களில் வசிப்பவர்களிடமிருந்தும் வெளிநாடுகளில் தங்கியிருப்பவர்களிடமிருந்தும் ஸக்காத் தொகையை பெறுவதற்கான முயற்சி களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமது கடமையான தொகையை காலம் வருகின்றபோது நிதியத்தின் உறுப்பினர்களைத் தேடிவந்து வழங்குகின்ற அளவிற்கு சில தனவந்தர்கள் மாறி இருப்பது சிறந்த மாற்றத்திற்கான சூழலை நிச்சயம் உருவாக்கும்.

ஸக்காத் விநியோக நடைமுறைகள்

அல்-குர்ஆன் ஸக்காத் பெறத்தகுதியான எட்டு கூட்டத்தாரை குறிப்பிட்டுக் காட்டுகின்றது. புகறாக்கள், மிஸ்கீன்கள், ஆமில்கள், முஅல்லபதுல் குலூப்கள், அடிமைகள், கடன்காரர்கள், வழிப்போக்கர்கள், இறைபாதையில் போராடு பவர்கள் இதற்கு உரித்துடையவர்களாகும்.

இக்கூட்டத்தார்களுக்கு ஸக்காத் விநியோக நடவடிக்கையில் மருதமுனை ஸக்காத் நிதியம் பின்வரும் செயற்பாடுகளை தொழில் முயற்சிகளுக்கு மேலதிக உதவிகளை வழங்கல்.

01. தனிநபர்களின் புதிய தொழில் முயற்சிகளுக்கு நிதியுதவி வழங்கல் அல்லது ஏற்கனவே அவர்களிடம் காணப்படும் தொழில் முயற்சிகளுக்கு மேலதிக உதவிகளை வழங்கல்.

02. தனிநபர்களின் குடிசைக் கைத்தொழில் முயற்சிகளுக்குத் தேவையான இயந்திர உபகரணங்கள், மூலப்பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தல்.

03. கூட்டுத்தொழில் முயற்சிகளை ஏற்படுத்தி அவற்றிற்கான ஆலோசனைகளை வழங்கிப் பராமரித்தல்.

04. தனிநபர்களின் கடன் பழுவை நிவர்த்தி செய்ய நிதியுதவி வழங்கல்.

05. நோயாளிகளின் நோய் நிவாரணங்களுக்கு நிதியுதவி செய்தல்.

06. வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவியளித்தல்.

07. தனிநபர்களின் குடியிருப்புக்களில் ஏற்படும் அத்தியாவசிய பொது வசதித் தேவைகளை நிறைவுசெய்து கொடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. நிலை தடுமாறிய வழிப்போர்களுக்கு உதவியளித்தல்.
09. ஆதரவற்ற முதியவர்கள், விதவைகள் போன்றோருக்கு மாதாந்த கொடுப்பனவை வழங்கல்.
10. நவ முஸ்லிம்களுக்கு தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
11. அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்குள்ளான மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தல்.
12. நிரந்தர வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டங்களை அமுல்படுத்தல்.

வருடாந்தம் சேகரிப்பு நடைபெறும் ஏக காலத்தில் ஸக்காத் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிர்வாக எல்லைக்குட்பட்ட அனைத்து பள்ளிவாசல்களிலும் அறிவிப்புச் செய்யப்படுகின்றது. இதற்கேற்ப மகல்லாவிற்கு உட்பட்டவர்களில் தகுதியானவர்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களை பள்ளிவாசல் நிர்வாக சபைகளால் சிபார்சு செய்யப்பட்டு நிதியத்திற்கு முன்னளிப்புச் செய்யப்படுகின்றது.

மேலும் பள்ளிவாசல்களின் பிரதிநிதிகளுடன் இணைத்து நிதிய உறுப்பினர்கள் விண்ணப்பதாரர்களை களப் பரிசோதனை மேற்கொண்டு தகுதிபெறும் நிலைமை குறித்து நிர்வாக சபைக்கு அறிக்கை இடுகின்றனர். இதன் பின்னர் இறுதித் தீர்மானம் சபையில் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆரம்பத்தில் பள்ளிவாசல்கள் ஒவ்வொன்றிற்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களுக்கு மாத்திரமே ஸக்காத் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்ட போதும் பிறகு, பொதுநலனை கருத்திற்கொண்டு அனைத்து விண்ணப்பதாரர்களுக்குள்ளால் தேவையான நிமித்தம் முன்னுரிமை பெறுகின்றவர்களுக்கே உரித்தாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தற்போது விநியோகம் நடைபெறுகின்றது. நிதியத்தின் கையிருப்புத்தொகை மற்றும் வாக்களிக்கப்பட்டு எதிர்பார்க்கும் நிதி என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

செயற்றிறனான விநியோகத்தை நோக்காகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்டவர்களின் உண்மை நிலை மற்றும் தகுதிகாண் விடயம் குறித்து அறிந்து கொள்ளும் பொருட்டு அவர்களின் பெயர்பட்டியல் மகல்லாவாசிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது. தவறுகள், திருத்தங்கள், ஆட்சேபனைகள் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஸக்காத் பங்கீடானது மாதாந்த கொடுப்பனவு, கடன் நிவர்த்தி கொடுப்பனவு, வைத்தியக் கொடுப்பனவு, வழிப்போக்கர் கொடுப்பனவு, நவமுஸ்லிம்கள் கொடுப்பனவு ஆகியவற்றிற்கு மாத்திரமே பணமாக வழங்கப்படுகிறது. ஏனைய கொடுப்பனவுகள் பொருளாகவோ, சேவையாகவோ வழங்கப்படுகின்றது. உரிய பயனடைவதை நிச்சயப்படுத்தும் பொருட்டு இவ்வேற்பாடுகள் சபைத் தீர்மானங்களுக்கேற்ப அமுல்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயதொழில் மேம்பாட்டிற்காக பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. தையல் இயந்திரம், மாவரைக்கும் இயந்திரம், மனைப் பொருளியலுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் மீன்பிடிச் சாதனங்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக நெசவுத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. விநியோக நடவடிக்கையின் ஆரம்ப வைபவத்தில் ஸக்காத் பணத்தை பயன்படுத்தி பயன் பெறுவதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நிதியம் தனது செயற்பாடுகளை விசாலமான வகையில் அமைத்திருந்தது. ஏற்பாட்டாளர்கள் மற்றும் வசதியளிப்பவர்களின் ஒத்துழைப்புடன் கஷ்டங்களும் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்தது. அந்த வகையில் பல அமைப்புக்களின் உதவியோடு 180 துவிச்சக்கர வண்டிகள், 20 தையல் இயந்திரங்கள், தோணி வலைகள் என்பன பாதிக்கப்பட்ட மக்களுக்கு பங்கீடு செய்யப்பட்டன.

வீடு திருத்தம், மலசல கூடம் அமைத்தல், மின்னிணைப்பு பெறுதல், சிறு வியாபார முயற்சிகள் என்பவற்றிற்கும் தீவிர நோய்களினால் அவதியுறுவோருக்கும் நிதியம் உதவி செய்கின்றது. வருமானம் குறைந்த ஏழை மாணவர்கள் மற்றும் விசேட தேவையுடையவர்கள், அங்கவீனர்களுக்கு உதவும் நோக்குடன் மருதமுனை அந்நஹ்லா அறபுக் கல்லூரி மற்றும் ஹியூமன் லிங்க் போன்ற நிறுவனங்களுக்கு வருடாந்த உதவித்தொகையை வழங்கி வருகின்றது.

நிதிய நிர்வாகம்

நிர்வாக சபைக்கான காலப்பகுதி மூன்று வருடங்களாகும். புதிய நிர்வாகம் மாறுகின்றபோதும் நீண்டகால உறுப்பினர்கள் நிதியத்துடன் இணைந்து பணியாற்றுவதனால் அனுபவம் சார்ந்த தீர்மானங்களை எய்துவதற்கு முடியுமாக உள்ளது. மேலும் புதிய உறுப்பினர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு மஷூறா அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் ஆரம்பம் முதல் பணியாற்றிய தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் பொருளாளர்களின் காலப்பகுதி இங்கு இற்றைப்படுத்தப்படுகின்றது.

முதலாவது நிர்வாக சபை 1995ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. இதில்,

தலைவர் : அல்-ஹாஜ். மௌலவி. எம்.ஐ. ஹுஸைனுத்தீன் (நியாழி)

இணைச் செயலாளர்கள் :

அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார், ஜே.பி.

அல்-ஹாஜ். எப்.எம்.ஏ. அன்ஸார் மௌலானா (நளீமி)

பொருளாளர் : அல்-ஹாஜ். எம்.எம்.எம். சபீக் (பொறியியலாளர்)

உப தலைவர்கள் : எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா (அதிபர்)

ஏ.எல்.எம்.ஏ. மஜீத் (நூலகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது நிர்வாக சபை 1998ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. இதில்,

தலைவர் : அல்-ஹாஜ். மௌலவி. ஏ. அபூஉபைதா (மதனி)
செயலாளர் : அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார், ஜே.பி.
பொருளாளர் : அல்-ஹாஜ். எம்.எம்.எம். சபீக் (பொறியியலாளர்)

மூன்றாவது நிர்வாக சபை 2001ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. இதில்,

தலைவர் : அல்-ஹாஜ். மௌலவி. ஏ.ஆர்.ஏ. செய்னுலாப்தீன் (ஷர்கி)
இணைச்செயலாளர்கள் : ஜனாப். பீ.ரீ.எம். மஹ்றூப் (ஆசிரியர்)
ஜனாப். எம்.ஏ.எம். மர்சூக் (சதொச)
பொருளாளர் : அல்-ஹாஜ். எம்.எம்.எம். சபீக் (பொறியியலாளர்)

நான்காவது நிர்வாக சபை 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. இதில்,

தலைவர் : அல்-ஹாஜ். மௌலவி. ஏ. அபூஉபைதா (மதனி)
செயலாளர் : ஜனாப். பீ.ரீ.எம். மஹ்றூப் (ஆசிரியர்)
பொருளாளர் : அல்-ஹாஜ். ஏ.ஆர். றகுமத்துல்லாஹ்

ஐந்தாவது நிர்வாக சபை 2005ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. இதில்,

தலைவர் : அல்-ஹாஜ் மௌலவி. கே.எல்.எம். ஹனிபா (பஹ்ஜி)
பிரதித் தலைவர் : அல்-ஹாஜ். எம்.எம்.எம். சபீக் (பொறியியலாளர்)
இணைச் செயலாளர்கள்: ஜனாப். இ. கமால்தீன் (ஆசிரியர்)
ஜனாப். எம்.ஆர்.எம். சமீம் (SLTB)
பொருளாளர் : அல்-ஹாஜ். ஏ.ஆர். றகுமத்துல்லாஹ்

ஆறாவது நிர்வாக சபை 2008ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. இதில்,

தலைவர் : மௌலவி. என்.ஜீ.ஏ. கமால் (இஸ்லாஹி)
பிரதித் தலைவர் : மௌலவி. எம்.எச்.எம். ஜெலீல் (ஹாமி)
செயலாளர் : ஜனாப். எம்.ஆர்.எம். சமீம் (SLTB)
பொருளாளர் : அல்-ஹாஜ். எம்.எம்.எம். சபீக் (பொறியியலாளர்)

ஏழாவது நிர்வாக சபை 2011ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. இதில்,

தலைவர் : அல்-ஹாபிழ். எம்.எஸ்.எம். றஸ்ஸான் (நளீமி) (SLAS)
பிரதித் தலைவர் : அல்-ஹாஜ். எம்.எம்.எம். சபீக் (பொறியியலாளர்)
இணைச் செயலாளர்கள் : ஜனாப். எம்.ஆர்.எம். சமீம் (SLTB)
ஜனாப். எம்.ஏ.எம். அஷ்ரப் (SLT)
பொருளாளர் : அல்-ஹாஜ். ஏ.ஆர். றகுமத்துல்லாஹ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவது நிர்வாக சபை 2014ம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. இதில்,

தலைவர் : அல்-ஹாபிழ். ஏ.ஆர்.எப். கியாஸ் (பலாஹி)
செயலாளர் : ஜனாப். பீ.ரீ.எம். மஹ்றூப் (ஆசிரியர்)
பொருளாளர் : அல்-ஹாஜ். எம்.எம்.எம். சபீக் (பொறியியலாளர்)

பைத்துல்மால் உருவாக்கம் :

நிதியத்தின் வளர்ச்சிப் படியில் மற்றுமொரு முக்கிய மைற்கல்லாக "பைதுல்மால்" உருவாக்கப்பட்டதை குறிப்பிடலாம். ஸக்காத் நடைமுறையில் இருக்கும் அதேவேளை மக்களின் இதர நிதி தேவைப்பாடுகள் மற்றும் பொதுப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஏற்பாடாக ஸ்தாபிக்கப்பட்டது. இதன் முதற்படியாக அல்மஸ்ரபுல் இஸ்லாமியு எனும் இஸ்லாமிய நிதி நிறுவனம் உருவாக்கப்பட்டது.

மக்கள் வட்டி வங்கிகளை நாடி தமது அவசரத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். இவர்களை வட்டியிலிருந்து விடுவித்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான செயற்றிட்டங்கள் மற்றும் முயற்சியாளர்களின் பங்குகளை பெற்று முதலீடு செய்து இலாபம் உழைக்கும் நிதி நிறுவனம் என ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது தனியான நிர்வாக சபையினால் வழிநடாத்தப்படுகின்றது. ஸக்காத் நிதியத்தின் உறுப்பினர்கள் தமக்குரிய ஆமில் பங்குகளை பெறாது மனமுவந்து விட்டு வருகின்றனர். இதன் சேமிப்பே அல்-மஸ்ரபுல் இஸ்லாமியு தோற்றம் பெறுவதற்கான அடிப்படை நிதி மூலமாகும்.

இணைந்திருந்து இறையடியானவர்கள் :

நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் இணைத்திருந்து பணியாற்றியவர் களில் எம்மைவிட்டும் இறையடி எய்தியவர்கள் நினைவுகூற வேண்டியவர்கள். அந்த வகையில் மர்ஹூம்களான, அல்-ஹாஜ். ஐ.எல்.எம். இஸ்மாயில் (சீப்பலஸ்), அல்-ஹாஜ். மௌலவி. ஹசன் (ஷர்கி), அல்-ஹாஜ். ஏ.எச்.எம். மஜீத் (ஓய்வுபெற்ற அதிபர்), ஜனாப். காதர் ஆகியோர்களுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக.

நிதியத்தின் தேவைப்பாடுகள் :

- **நிரந்தரக் கட்டிடத்துடன் கூடிய காரியாலயம்**

நிதியத்தின் தொடக்கம் முதல் இன்றுவரை நிரந்தரக் காரியாலயத்திற்கான சொந்தமான இடம் இல்லாமையினால் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சிறிது காலத்திற்கு ஒரு முறை காரியாலயத்தினை வேறு ஒரு இடத்திற்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

நிதியத்திற்கென இரண்டு காணிகள் வக்பு செய்யப்பட்டிருக்கின்றது. அதில் ஒன்று சுனாமி அனர்த்தத்தின் போது காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் நிதியத்திற்கென கிடைக்கப் பெற்றது. இது ஷம்ஸ் மத்திய கல்லூரியை அடுத்தாற்போல் இருக்கின்ற நிறப்பப்பட வேண்டிய நிலமாகும் மற்றையது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்களான எம்.எம். மஸாஹிம் மற்றும் கலீல் ஆகியோர் வழங்கிய காணியாகும். இவற்றை சீர்செய்து தனியான, வசதியுடன் கூடிய கட்டிடம் அமையப் பெறுவது நிதியத்தின் பணிகளை வருடம் முழுவதும் தொடர்ந் தேர்ச்சியாக மாற்றுவதற்கு வசதியளிக்கும்.

- **விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் :**

நிதியம் இரு தசாப்த காலத்தை எட்டினாலும் முழுமையான வகையில் ஸக்காத்தின் நோக்கத்தை நிவர்த்தி செய்ய முடியாதுள்ளது. ஸக்காத் எதிர் பார்க்கும் மாற்றங்கள் இன்னும் அடையப்பெறவில்லை. கடமை, கணிப்பிடும் முறை என்பன உணரப்படாத நிலையில் தனவந்தர்கள் பலம் இருக்கின்றனர். இவர்களுக்கு இதனை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதி மற்றும் ஆளணி பற்றாக்குறை உள்ளது.

எனவே நமதூர் வளங்களையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தி திட்ட மிட்ட அடிப்படையில் ஒரு முன்மாதிரியான ஸக்காத் நிதியமாக செயற்படு வதற்கு இன்னும் பலர் இந்நிதியத்துடன் சேர்ந்து பணியாற்ற வேண்டிய உடனடி தேவையுண்டு.

இறுதியாக இவ்வளவு காலமும் ஸக்காத் நிதியை வழங்கிய அனைவருக்கும் அவற்றை திரட்டி விநியோகம் செய்வதில் பாடுபட்ட நிதியத்தின் உறுப்பனர்கள் அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாபிழ். முகம்மது சபுறுத்தீன் முகம்மது றஸ்ஸான், (SLAS)

உதவிப் பிரதேச செயலாளர்

முகம்மது சபுறுத்தீன் முகம்மது றஸ்ஸான் (முகம்மது முபாஸ்) 28-08-1984ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் பயின்ற இவர் புனித அல்-குர்ஆனை மனனம் செய்ய விருப்பம் கொண்டார். இதன் காரணமாக ஹாபிழ் குர்ஆன் மத்ரசாவில் சேர்ந்து வெற்றிகரமாகத் தனது ஆசையை நிறைவேற்றி 2000ஆம் ஆண்டு அல்-ஹாபிழ் பட்டத்தினைப் பெற்றார்.

இதன் பின்னர் றஸ்ஸான் அவர்கள் தனது உயர்கல்வியினை ஜாமியா நழீமிய்யா விலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டு அதில் தேர்ச்சி பெற்றார். இலங்கை நிர்வாக சேவை (SLAS) பரீட்சைக்குத் தோற்றி எமது மண்ணிற்குப் பெருமை சேர்த்தார். அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராகக் கடமையாற்றுகிறார்.

அல்-ஹாபிழ் றஸ்ஸான் சிறந்த சொற்பொழிவாளர் என்பதுடன் தான் எடுத்த தலைப்பில் சிறப்பான தரவுகளுடன் விடயங்களை முன்வைப்பது ஒரு சிறப்பம்ச மாகும். ஜமாஅதே இஸ்லாமி மருதமுனை மன்றத்தின் செயற்பாட்டாளர்களுள் ஒருவரான இவரது மார்க்க விளக்க வகுப்புக்கள் மிகவும் பயன் தரத்தக்கன.

2011 முதல் 2014ம் ஆண்டு வரையில் மூன்றாண்டுகள் மருதமுனை ஸகாத் நிதியத்தின் தலைவராகவிருந்து அரும்பணியாற்றினார்.

அண்மையில் முகம்மது அன்ஸார் அப்ஸானா என்பவரைத் திருமணம் செய்து கொண்டு சிறப்புடன் வாழ்கிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்லீக் ஜமாஅத் வரலாறு

மர்ஹூம் அல்-ஹாஜ். எஸ்.எம். இப்றாஹிம்
ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்

1952இல் கண்டி நகரிலுள்ள "லைன்" பள்ளிவாசல் (போகம்பர மறியல் சாலைக்கு அருகில்) நடைபெற்ற அகில இலங்கை தப்லீக் மாநாட்டிற்கு மருதமுனையிலிருந்து முதன் முதலாக சென்ற நால்வர் குழுவில் காலஞ்சென்ற கரீட் செட் ஹாஜியார் தலைமையில் காலஞ்சென்ற ஹிழ்ர் மரைக்கார் ஹாஜியாரும் சென்று மூன்று நாள் மாநாட்டில் பங்கு பற்றியதிலிருந்து மருதமுனையின் தப்லீக் வரலாறு ஆரம்பிக்கிறது.

பின் மாதம் மாதம் 3 நாள் ஜமாஅத் ஜூம்ஆ ராத்திரி இல்லாவிட்டாலும் 3 மாதங்களுக்கு ஒரு தடவை பல ஊர்களையும் சேர்ந்த நபர்கள் ஒன்று சேர்ந்து அண்மையிலுள்ள கொலணி, நிந்தவூர், கல்முனை, சம்மாந்துறை, சாய்ந்தமருது சென்று பள்ளிகளில் தங்கி மார்க்கப் பிரச்சாரம் செய்து வந்தனர். நிந்தவூரில் அமைக்கப்பட்ட பள்ளிவாசல் முஜாஹிதீனில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜூம்ஆ ராத்திரிக்கு மருதமுனையிலிருந்தும் லாபிர் ஷாப், ஸஹாப்தீன் ஹாஜியார், பீ.எம். இஸ்மாயில் ஹாஜியார், அபுல்ஹஸன் ஹாஜியார் போன்றோர் சென்று வந்தனர்.

1978இல் ஹோத்ரா (இந்தியா) மாநாட்டிற்கு மருதமுனையிலிருந்தும் மர்ஹூம் லாபிர் ஷாப், மர்ஹூம் ஸஹாப்தீன் ஹாஜியார் இருவரும் சென்று பங்குபற்றி அங்கிருந்து நான்கு (04) மாதங்களை இந்தியாவில் முடித்துத் திரும்பினர்.

1979இல் அமீனுத்தீன் அதிபரும், சுபைர் ஹாஜியாரும் சேர்ந்து உழைத்தனர். 1980இல் அல்-ஹாஜ் எஸ்.எம். இப்றாஹிம் (முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்) ஜமாஅத்தில் சேர்ந்து கொண்டார். அமீனுத்தீன் அதிபரும், இப்றாஹிம் ஹாஜியாரும் முதன் முதலாக படித்தவர்களாக ஜமாஅத் அமைப்பில் சேர்ந்து கொண்டனர். அதிலிருந்து கற்றவர்கள் தப்லீகில் நாட்டம் கொள்ள தொடங்கினர்.

1983இல் கமறுத்தீன் (ஏரியா பொறுப்பு), பொறியியலாளர் உபைதுல்லா, அல்-ஹாஜ். எஸ்.எம். அப்துல்லாஹ் (சட்டத்தரணி), பொறியியலாளர் மஃஜூத் போன்றோர்கள் சேர்ந்து கொண்டனர்.

அதன் பிறகு மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலில் மையம் கொண்டிருந்த தப்லீக் ஜமாஅத் வேலை சகல பள்ளிவாயல்களிலும் துரிதமாக வளர்ச்சி காணத் தொடங்கியது. 1986இல் அப்துல் ஹபீழ் (அபாயா), 1987இல் நிஜாமுத்தீனும் ஜமாஅத் வேலையில் சேர்ந்து உழைத்தனர். 1993இல் அப்துல் றஸாக் ஹாஜியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆசிரியர்) அவரும் சேர்ந்து கொண்டார். இப்படிப்பட்ட ஆரம்ப தியாகிகளின் உழைப்பாலும் பின்னர் வந்து சேர்ந்துகொண்ட பெண்கள் பலர் சேர்ந்து உழைத்ததாலும் தப்லீக் வேலை வெகுவாக வளர்ந்தது.

மருதமுனை தப்லீக்கை சேர்ந்தவர்கள் இலங்கை பூராகவும் சென்று தீனுக்காக பாடுபட்டார்கள். அத்தோடு வெளிநாடுகளுக்கும் சென்றார்கள். குறிப்பாக, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, சீனா, பிலிப்பைன்ஸ், தென்கொரியா, ஜப்பான், அஸார்பைஜான், துர்கிஸ்தான், உஸ்பகிஸ்தான் போன்ற நாடுகளுக்கும் Europeஇல் இங்கிலாந்து, பிரான்ஸ், நோர்வே, சுவீடன், போலாந்து போன்ற நாடுகளுக்கும், வட அமெரிக்காவில் ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கும், மத்திய ஆபிரிக்காவில் உகண்டா, கென்யா, தன்ஸானியா, மடகாஸ்கர், தென்னாபிரிக்கா, சோமாலியா, ஜிபுடி, மொறக்கோ, அல்ஜீரியா போன்ற நாடுகளுக்கும், தென் அமெரிக்காவில் பிறேஸில், ஆஜர்ன்டீனா போன்ற நாடுகளுக்கும் தங்களது பணத்தை எடுத்துக்கொண்டு சென்று தீன் வளர்த்தார்கள்.

தற்போது தப்லீக் வேலை உலகிலுள்ள 200 நாடுகளில் நடைபெறுகிறது. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கும் சென்று இஸ்லாத்தைப் பரப்பும் கைங்கரியங்களில் ஈடுபட்டார்கள்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, இங்கிலாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகளில் தப்லீக் மர்கஸ்கள் அமைக்கப்பட்டு தீன் வேலைகள் நடைபெறுகின்றன. இந்த அமைப்புக்கு தலைவர், காரியதரிசி, பொருளாளர் என்று யாருமே இல்லை. அல்லாஹ்வின் உதவியோடு தப்லீக் வேலைகள் உலகமெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்தோடு வருடாந்தம் சகல நாடுகளிலிருந்தும் 25,000 - 30,000 வரையான ஜமாஅத்துக்கள் கிளம்பி தீனுடைய பிரச்சார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பு : உலகில் கிறிஸ்தவ ஜமாஅத் அமைப்பு வருடாந்தம் 60,000 ஜமாஅத்துக்கள் இயங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Al-Haj. A.R.A. SATHAR
Justice of the Peace - Whole Island
Regd. No: 2000/ 03/ NE/ Wi/ B/ 015
504A, Central Road,
Maruthamunai - 03

மர்ஹூம். அல்-ஹாஜ். சின்னத்தம்பி முகம்மது இப்றாஹீம், ஜே.பி.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்

1949-01-04ல் மருதமுனையில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. சாதாரண தரம் வரை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் பயின்றார். இவர் ஒரு கலைமானி வெளிவாரிப் பட்டதாரியாவார்(BA). 01-06-1979ல் உதவி ஆசிரியர் நியமனம் பெற்று கற்பித்தலில் ஈடுபாடு கொண்ட இவர் கல்வி அதிகாரியாக உயர்வு பெற்று தற்போது ஓய்வு நிலையில் உள்ளார்.

இவரது மேடைப் பேச்சுக்கள் சிந்தனைமிக்கவைகளாகவும் சுவாரஸ்யமிக்க தாகவும் அமைந்திருக்கும் தப்லீக் அமைப்பில் தீவிர ஈடுபாடுமுடையவர்.

"அமெரிக்கா ஈரான் அணு உரசல்" என்ற ஆக்கத்தினை 2004ல் வெளியிட்டவர். மருதமுனை மத்திய பள்ளிவாயலின் தலைவராக 1987 முதல் 1992 வரை பணியாற்றிய இவர் மஸ்ஜிதுல் கபீரின் மரைக்கார் சபையிலும் பின் நம்பிக்கை யாளர் சபையிலும் அங்கம் வகிக்கிறார்.

அறிமுகமான அரசியல்வாதிகள் மூலம் புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலய சுற்றுமதில் அமைப்பதற்கு உதவியவர். ஷம்ஸ், அல்-மனார் பாடசாலைகளின் அபிவிருத்திகளிலும் கரிசனை காட்டுபவர்.

சீப்பலஸ் ஹாஜியாரின் மூத்த புதல்வி சித்தி முனீறாவைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

விஷேடமாக குடும்ப உறவினைப் பேணுவதுடன் அவர்களுக்கு மத்தியில் பிணக்குகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை நடுநிலை நின்று தீர்த்து வைக்கும் ஒரு சமாதானப் பிரியரான இவர் ஒரு சமாதான நீதிவானுமாவார்.

25-10-2014 அன்று வபாத்தானார்கள். அவரது மறுமை வெற்றிக்காக பிரார்த் திப்போமாக.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை ஜமாஅத்தே இஸ்லாமி

மருதமுனை மன்றம் - ஓர் அறிமுகக் குறிப்பு

அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார், ஜே.பி

1941ம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் - பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றாக இருந்த அக்காலத்தில் மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டதே ஜமாஅத்தே இஸ்லாமி என்ற இப்பேரியக்கமாகும். மௌலானா அவர்கள் அதிகளவிலான புத்தகங்களை வெளியிட்டுத் தனது ஆழமான கருத்துக்களையும், இப்புனித இஸ்லாத்திற்கே இவ்வுலகை ஆளும் தகுதியும் சக்தியும் உண்டு என்பதனை ஆணித்தரமாகக் கூறிவந்தார்கள். இக்கருத்துக்களால் இந்தியாவின் பல பாகங்களில் இருந்த முஸ்லிம்கள் கவரப்பட்டார்கள். இவ்வாறு கவரப்பட்டவர்களில் பலர் இலங்கையில் வியாபாரம் செய்பவர்களாகவும் இருந்தனர். 1954ல் இந்தியாவில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் சமகாலத்திலேயே இலங்கையிலும் தோற்றம் பெறலாயிற்று.

ஜமாஅத்தின் முதல் அமீராக தெரிவுசெய்யப்பட்ட மர்ஹூம் அப்துல் காதிர் ஜெய்லானி அவர்கள் 1940களிலிருந்தே இலங்கையுடன் தொடர்புகளை வைத்திருந்த காரணத்தினால் இலங்கையிலும் ஜமாஅத் வளர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்பட்டது. 1954ல் இங்கு ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கத்தின் முன்னோடிகளாக மர்ஹூம் அப்துல் காதர் ஜெய்லானி அவர்களுடன் கொழும்பைச் சேர்ந்த பீ.ரீ.எம். மொஹிதீன், ஹெம்மாதகமவைச் சேர்ந்த எம்.யூ. செய்யித் முகம்மத் ஆகியோர்களைக் குறிப்பிட முடியும். இதன் முதலாவது உத்தியோகபூர்வ அமர்வு தெஹியோவிட்ட என்ற கிராமத்தில் நடை பெற்றது.

பின்னரான காலங்களில் இவ்வியக்கத்தின் அமீர்களாக மௌலவி யூ.எம். தாஸிம் நத்வி, சகோதரர் பீ.எம்.எம். யூசுப், மௌலவி ஏ.எல்.எம். இப்றாகீம் போன்றவர்கள் செயற்பட்டு சிறப்பாக வழிநடாத்தினார்கள். கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக உஸ்தாத் ஹஜ்ஜூல் அக்பர் அவர்கள் இதன் அமீராக விருந்து இலங்கையின் மிகப்பிரபல்யமிக்க ஒரு தஃவா இயக்கமாக இலங்கை ஜமாஅதே இஸ்லாமி மிளிர்வதை நாம் காணமுடிகிறது.

இப்பேரியக்கமானது நாட்டின் பல பாகங்களிலும் தமது வேலைத் திட்டங்களை விரிவுபடுத்தியதோடல்லாமல் ஒரு சிறந்த இஸ்லாமிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் முனைப்பாக இயங்கியது. எமது மருதமுனையிலும் 1981ம் ஆண்டுவாக்கில் "ஜம்இய்யத்துல் தலபா" என்ற மாணவ இயக்கமாக ஆரம்பித்து இயங்கி வந்தது. இவ்வமைப்பின் ஆரம்ப உறுப்பினர்களாக, மர்ஹூம் ஏ.சீ.ஏ. மாஜித் மௌலவி, எம்.எம். மலீக் மௌலவி, எஸ்.எம்.எம். உமர் மௌலானா, எம்.ஏ.எம். மர்சூக் (சதொச), எம்.ஏ. இனாமுள்ளா (அதிபர்), எம்.ஏ. சிறாஜுதீன் (ஆசிரியர்) மற்றும் சகோதரர் இஸ்ஹாக் போன்றவர்கள் முனைப்புடன் இயங்கி வந்தனர். இவர்கள் ஆரம்ப காலங்களில் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கள் செயற்பாடுகள் போன்றன இங்கு எடுத்துரைக்கப்பட்டன. தனிநபர் களிடமும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. பள்ளிவாயல்களில் பல சொற் பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

படிப்படியாக இவ்வியக்கத்தில் மருதமுனையின் ஆர்வங்கொண்ட இளைஞர்கள், முதியவர்கள் எனப் பலர் தம்மை இணைத்துக் கொண்டனர். இவர்களிடையே இஸ்லாமியப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு இவர்கள் தூய இஸ்லாத்தைப் பேணும் நன்மக்களாக வடித்தெடுக்கப்பட்டனர். பிரச்சார உத்திகளாக பத்திரிகைகள், சஞ்சிகைகள் என விநியோகிக்கப்பட்டன. அல்-ஹஸனாத், எங்கள் தேசம் என்பன இவற்றில் முக்கியமானவையாகும். நல்ல பல புத்தகங் களைக் கொண்ட நூல் விற்பனை நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தியதோடல்லாமல் கல்வி முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. பல இளைஞர்கள் இவ்வமைப்பில் ஆர்வத்துடன் இணைந்து செயற்படத் தொடங்கினர்.

இவ்வாறு ஜமாஅத்தே இஸ்லாமி மருதமுனை மன்றம் செயற்பட்டு வருகையில் தான் 2004-12-26ம் திகதி எம்மையெல்லாம் கதிகலங்கவைத்த சுனாமி ஏற்பட்டது. இதனால் மருதமுனை பாரிய அழிவுகளையும் இழப்புக் களையும் தழுவிக்கொண்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கான ஆதரவினை வழங்க வேண்டிய தார்மீகப் பொறுப்பை ஜமாஅத் ஏற்றுக்கொண்டது. இவர்களுக்கான தற்காலிக கொட்டில்கள், உணவு வகைகள், மருந்து வகைகள், உடுதுணி வகைகள் போன்ற அவசரத் தேவைகள் ஜமாஅத்தின் தலைமைக் காரியாலயத்தின் அனுசரணையுடனும் ஆலோசனையுடனும் வழங்கப்பட்டன. இச்சேவைகள் யாவும் ஜமாஅத்தின் அமீர் உட்பட மற்றும் முக்கிய உறுப்பினர்களின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்றன. தொற்றுநோய்கள் பரவா மலிருப்பதற்காக கிராமம் முழுவதும் தெளிமருந்துகள் இடப்பட்டு மக்கள் தங்கும் பொது இடங்களும் அடிக்கடி சுத்தம் செய்யப்பட்டன. இதன் மூலம் சுகாதார மேம்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட்டன.

இக்கால கட்டங்களில் ஜமாஅத்தின் செயற்பாடுகள், தியாகங்கள், உதவிகள் என்பன மிகவும் கனதியானவை. இலவச வைத்திய முகாம்கள், இரத்ததான நிகழ்வுகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டதோடு உழ்கியாவைக் கூட்டாகக் கொடுப் பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு சகல குடும்பங்களும் அவற்றைப் பெறு வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உளவள சேவைகளும் அடிக்கடி இடம்பெற்றன. துவிச்சக்கர வண்டிகள், தையல் இயந்திரங்கள், மற்றும் சுயதொழில் தேவைகளுக்கான உபகரணங்கள் போன்றனவும் தேவையானவர் களுக்கு ஏற்பாடு செய்து தரப்பட்டன. சுருங்கக்கூறின் பாதிக்கப்பட்ட மக்களுடன் தோளோடு தோள் நின்று அவர்களுடைய சகல விதமான சுக துக்கங்களிலும் ஜமாஅத் பங்கெடுத்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து வந்த காலங்களில் மக்களுக்கான சுயதொழில் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கடன் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு அவர்களது வருமான முன்னேற்றங்களை உறுதி செய்வதற்கான வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் அதிகளவான குடும்பங்கள் இன்னும் நன்மையடைகின்றமை நம்மால் பெருமையுடன் பார்க்கப்பட வேண்டியது. கடந்த 7 வருடங்களில் சமூகத்தை வட்டியிலிருந்து காப்பதற்கான Micro Investment Project ((M.I.P) அண்ணளவாக 30 மில்லியன் ரூபாய்களை முதலிட்டுள்ளது.

இந்த இடத்தில் இன்னொன்றையும் கூறுவது பொருத்தமாகும். பாதிக்கப்பட்ட அனைவரும் மனிதர்கள் என்ற அடிப்படையில் ஜமாஅத் பக்கத்துத் தமிழ் சகோதரக் கிராமங்களுக்கும் தமது சேவையை விரிவுபடுத் தியமை இன்றும் அம்மக்களால் நன்றியுடன் பார்க்கப்படுகிறது. இவ்வாறு தஃ வாப் பணிகள் சமூகப்பணிகள் எனப்பல விடயங்களில் ஆர்வதுடன் செயற்படும் இவ்வியக்கம் எதிர்காலத்திலும் சிறப்பாக இயங்க வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

ஜமாஅத்தினரின் இரண்டு பிரதான பிரிவுகளாக,

1. பெண்கள் பகுதி
2. மாணவர் அமைப்பு

பெண்கள் பகுதி தனியான சூறா அமைப்பைக் கொண்டு தேசிய வழிகாட்டலின் உதவியுடன் சுதந்திரமாக இயங்கி வருகின்றது. இவற்றின் செயற்பாடுகள்,

1. தாருல் அர்க்கம் அல்-குர்ஆன் பாடசாலை.
2. க.பொ.த. (சா/த), க.பொ.த. (உயர்தர) மாணவிகளுக்கான ஒரு வார வதிவிட தலைமைத்துவ, இஸ்லாமிய அறிவுப் பாசறை.
3. பெண்களுக்கான முஅய்யித் பயிற்சி நெறி
4. விதவைகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவு
5. தொழில் வழிகாட்டல் ஸக்காத் கொடுப்பனவு
6. வார, மாதாந்த விசேட மார்க்க விளக்க வகுப்புக்கள்.
7. பட்டம் பெற்று வெளியான மௌலவியாக்களுக்கான செயலமர்வுகள்.

மாணவர் அமைப்பு :

1980களில் உருவாக்கப்பட்ட ஜமாஅத்தினரின் மாணவர் அமைப்பான ஜம்இய்யத்துல் தலபதில் இஸ்லாமியா, சுதந்திரமான தனியான அகில இலங்கை ரீதியான சூறாவைக் கொண்ட மாணவர்களுக்கான தனித்துவமான அமைப்பாகும்.

1. மாணவர்களின் அறிவு, ஆன்மீக திறன்களை விருத்தி செய்தல்.
2. O/L, A/L மாணவர்களுக்கான ஒரு வார கால வதிவிடப் பயிற்சி நெறி, வாராந்த மாதாந்த சொற்பொழிவுகள்.
3. நோன்புகால விசேட தர்பியா நிகழ்வுகள்.
4. தரம் 06 முதல் O/L வரையான மாணவர்களுக்கான அஸாபிர் நிகழ்ச்சிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பாடசாலை Prefect களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி.
6. வறிய மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குதல்.
7. பஜ்ருக் கலம் (கல்விக்கான அமைப்பு)
8. 9A Project

ஆரம்ப காலங்களில் தனியாரிடங்களில் இயங்கி வந்த ஜமாஅதே இஸ்லாமி மருதமுனை மன்றத்தின் காரியாலயம், மருதமுனை எஸ்.எம். வீதியில் தலைநிமிர்ந்து நிற்கும் தனது சொந்த இருமாடிக் கட்டிடத்தில் தினமும் இயங்கி வருவதும் நாளாந்தம் அதிகளவான இளைஞர்கள் ஆர்வமுடன் இயக்கப்பணிகளில் ஈடுபடுவதும் இவர்கள் மத்தியில் நற்பண்புகள், நல்லொழுக்கம் என்பன பாரியளவில் வளர்ச்சி கண்டிருப்பதுடன் ஒரு கண்ணியமான ஆரோக்கிய சமூகத்தை எமதூரில் கட்டியெழுப்பும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. மேற்படி இக்காரியாலயத்தின் கட்டுமானப் பணிகளின் 90 சதவீதமான பங்களிப்பினை இயக்க அங்கத்தவர்களே பொறுப்பேற்றுக்கொண்டனர். மேலும் இவ்விடத்தில் ஜமாஅத்துக்காக நிலங்களை வழங்கிய இவர்களை நாம் என்றும் மறந்துவிட முடியாது.

தனிப்பட்டவர்களின் அன்பளிப்பு :

ஐ.எம். றூமில் செய்னுல் அறப் தம்பதியினர்கள் தங்களது வீடு வளவில் தெற்குப்புறமாக அரைப்பங்கினை ஜமாஅத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். இது அல்-ஹாஜ். மர்ஹூம் எஸ்.வீ.ஏ. றசூல் மவ்லவி அவர்களின் நினைவாகவும், அவரது மறுமை வெற்றிக்காகவும் சதகதுல் ஜாரியா என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஜமாஅத் சிறுவர்களுக்கான குர்ஆன் மத்ரசா பாடசாலைப் பாடத்திட்டங்களுக்கமைவாக நடைபெறுகிறது. இருநூறுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர். இக்காணியின் தற்போதைய பெறுமதி ஐம்பது இலட்சத்தினையும் தாண்டியுள்ளமை இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

சகோதரர். முகம்மது முஸ்தபா முகம்மது மஸாகிம் அவர்கள் மேட்டு வட்டையில் நிரப்பப்பட்ட காணி 20 பேர்ச்சஸ் ஜமாஅத்துக்காக அன்பளிப்புச் செய்துள்ளார். இதன் பெறுமதியும் பத்து இலட்சத்தினைத் தாண்டியுள்ளது. இப்பாரிய பணியை அல்லாஹ்வுக்காகவும், அவனது திருப்பொருத்தத்திற் காகவுமே இவர்கள் செய்துள்ளனர். இவர்களுக்கு அல்லாஹூத்தஆலா றஹ்மத்தை வாரி வழங்க நாம் பிரார்த்திப்போமாக.

அல்-மனார் ஆரம்பப் பிரிவின் மேற்குப்புறக் காணித்துண்டில் அமைக்கப் பட்டுள்ள பள்ளிவாயலில் ஜமாஅத்தின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்டு ஐங்காலத் தொழுகைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பிரான்ஸ் சிற்றியில் பெரியதொரு பள்ளிவாயல் MRCD யின் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டு வருவதும் ஜமாஅத்தே இஸ்லாமி மருதமுனை மன்றம் இதற்கான நிலத்தைப் பெற்றுக் கொடுப்பதற் காகப் பாரிய பங்களிப்புச் செய்திருப்பதும் குறிப்பிடப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஜமாஅத்தே இஸ்லாமி மருதமுனை மன்றத்தின் வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டவர்களை இங்கு நினைத்துப் பார்ப்பதும் எமது கடமையாகும்.

01. மர்ஹூம். ஜே.எம். பஸால் இஸ்லாஹி
02. அல்-ஹாஜ். ஐ.எம். றூமில் (வரி உத்தியோகத்தர்)
03. அல்-ஹாஜ். ஏ.ஆர். றஹ்மதுல்லாஹ் (றஹ்மத்துல்லாஹ் ஸ்டோர்)
04. மவ்லவி மலிக் நழீம் (பாகிஸ்தான்)
05. மவ்லவி எம்.எச்.எம். ஜலீல் (ஹாமி) விரிவுரையாளர் கி.ப.
06. மவ்லவி என்.ஜி. அப்துல் கமால் B.A. (இஸ்லாஹி) சிறுவர் நன்நடத்தை உத்.
07. அல்-ஹாஜ். எம்.ஐ. உபைதுர் றஹ்மான் (MD, ஜாஹி வீவர்ஸ்)
08. சகோ. ஜே.எம். நியாஸ் B.Sc. ஆசிரியர்
09. சகோ. ஏ.பி.ஏ. ஜபீர், B.A.
10. சகோ. ஏ.எல்.எம். பாறூக் ஆசிரியர்
11. சகோ. ஹலீம் இஸ்ஹாக்
12. டாக்டர். ஏ.டபிள்யூ.எம். சமீம் (சத்திரசிகிச்சை நிபுணர்)
13. டாக்டர். எச்.பி. அஹ்ஸன் மவ்லானா MBBS (SL)
14. சகோ. எம்.எச்.எம். நைறூஸ், விரிவுரையாளர், SEUSL
15. மர்ஹூம். ஏ.எஸ்.எம். சாஜஹான், M.I.P.
16. சகோ. ஜே.எம். கியாஸ், (CC - ஜாஹி வீவர்ஸ்)
17. சகோ. ஐ.எல்.எம். இர்பான் B.A. (கச்சேரி, அம்பாரை.)
18. மவ்லவி. ஏ.எச். உபைதுல்லாஹ் (இஸ்லாஹி)
19. சகோ. ஏ.எச். முனவ்வர் (கச்சேரி, அம்பாரை)
20. சகோ. ஏ. அலிஅக்பர் B.A.
21. சகோ. ஏ.பி. அப்துல் றஊப் ஆசிரியர்
22. அல்-ஹாஜ். எச்.எல்.எம். மபாஸ் (பிரதேச செயலகம், கல்முனை.)
23. சகோ. எம்.எம். பைறூஸ் B.A. ஆசிரியர்
24. சகோ. எம்.எம். பவுஸ் B.A. ஆசிரியர்
25. மவ்லவி. எஸ்.எம். றஸ்ஸான் (நழீமி) SLAS
26. சகோ. ஏ.சீ.எம். அஸ்றப், CDO
27. சகோ. ஏ.சீ.எம். அஹ்றப்
28. சகோ. ஏ.டபிள்யூ.எம். சுஜப் (கட்டார்)
29. டாக்டர். பீ.எம். சைபுத்தீன்
30. அல்-ஹாஜ். ஏ.எச். கமறுத்தீன் (வாழைப்பழக்கடை)
31. சகோ. ஏ.ஜி.எம். றஹீம் ஆசிரியர்
32. சகோ. ஐ.எம். உமீர்
33. சகோ. என்.எம். றபாஸ், B.A.
34. சகோ. எம்.எம்.எம். றமீஸ் ஆசிரியர்
35. சகோ. ஏ.எல்.எம். இஸ்மாயில் ஆசிரியர்
36. சகோ. ரீ.ஆர். பரிஸ் - மர ஆலை
37. சகோ. எம். முபீன் ஆசிரியர் - M.I.P.
38. சகோ. எம். றமீஸ், தாதி உத்தியோகத்தர், AMH
39. சகோ. எம். அமீன், D.O., கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை தௌஹீத் பிரசார மையத்தின் ஒரு கண்ணோட்டம்

அஷ்-ஷெய்க் எஸ்.எச். முஜீப் (ஸலபி)

உலகில் தோன்றிய அனைத்து நபிமார்களும் ஏகத்துவத்தையே (தௌஹீத்) போதித்தனர். ஆதம் (அலை) முதல் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் வரை அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும். அவனுக்கு எந்த ஒன்றையும் இணையாக்கக் கூடாது என்பதே அவர்களின் முதலாவது அழைப்பாக இருந்து வந்தது.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இணைவைத்தல், மூடநம்பிக்கை, அனாச்சாரம் என்பவற்றில் மூழ்கியிருந்த மக்களை தூய இஸ்லாத்தின்பால் அழைத்தார்கள். மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஏகத்துவத்தைப் புரிந்துகொண்டு அதன் பக்கம் வர ஆரம்பித்தனர். இறுதியில் அது ஒரு பெரும் கூட்டமாக மாறியது. ஆரம்பத்தில் தூய இஸ்லாத்தை கடைப்பிடித்த மக்கள் நபியவர்களின் மரணத்தின் பின்னர் யூத, கிறிஸ்தவர்களின் சூழ்ச்சி யினாலும் பிளவுபட்டு அன்னிய கலாச்சாரத்தின் மோகத்தினாலும் பிற்காலத்தில் மூட நம்பிக்கைகளிலும் அநாச்சாரங்களிலும் ஈடுபட்டனர்.

கிரேக்க, பாரசீக, இந்து, உரோம நாகரீகங்களின் செல்வாக்கிற்குட்பட்டு இஸ்லாம் தத்துவங்களுக்குள் அகப்பட்டமையினால் இஸ்லாத்தின் எதிரிகளால் குறைகாணப்பட்டு இலகுவாக முஸ்லிம்களை இஸ்லாத்தைவிட்டும் தூரமாக்கி விடலாம் என அவர்கள் எண்ணினார்கள். ஏனெனில் முஸ்லிம்கள் ஆன்மீகத்தை விட லௌஹீகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மௌட்டீகங்களுக்குள் அடிமைப்பட்டிருந்தார்கள்.

இக்காலகட்டத்தில் உலக முஸ்லிம்கள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப் பட்டிருந்ததைக் கண்ட உலமாக்களும் முஜ்தஹித்களும் இஸ்லாத்தை தூய்மைப் படுத்தி சிறந்ததோர் இஸ்லாமிய சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். அவர்களில் முக்கியமானவர்களாக,

1. இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹாப் (ரஹ்) - சவூதி அரேபியா
2. இமாம் மௌலானா மௌதூதி (ரஹ்) - இந்தியா
3. இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) - எகிப்து
4. இமாம் இல்யாஸ் (ரஹ்) - இந்தியா

போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இவர்கள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இஸ்லாம் மீளெழுச்சியடைய ஆரம்பித்தது. உலகின் பல பாகங்களுக்கும் இவர்களின் பிரச்சாரங்கள் சென்றடைய அங்குள்ள உலமாக்களும், புத்திஜீவிகளும் இதனால் கவரப்பட்டு ஒவ்வொரு நாடுகளிலும் மார்க்கப் பிரச்சாரங்களை ஆரம்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி 1947இல் இலங்கையில் "அப்துல் ஹமீத் அல்பக்ரி (ரஹ்)" அவர்கள் பரகஹதெனியாவை மையமாகக் கொண்டு ஷிர்க், பித்அத், அனாச்சாரங்கள் என்பவற்றுக்கு எதிராக பிரச்சாரங்களை முன்னெடுத்தார்கள். குறிப்பாக இஸ்லாத்தில் வேருன்றியிருந்த கப்ர் வணக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்தார்கள். மௌலூத், கத்தம், கந்தூரி என்ற இஸ்லாம் அனுமதிக்காத அனாச்சாரங்களுக்கு எதிராகவும் பிரச்சாரம் செய்தார்கள்.

இவருடைய பிரச்சாரம் கொழும்பு, புத்தளம், மன்னார், கல்முனை போன்ற பிரதேசங்களுக்கும் பரவியது. இவர்கள் கல்முனைக்குச் சென்று பிரச்சாரப் பணியை முன்னெடுத்த போது அங்குள்ள பலர் இவருடன் ஒன்றிணைந்தனர். இவர்களது முயற்சியினால் 1980களில் மருதமுனைக்கும் இப்பிரச்சாரம் முன்னெடுக்கப்பட அங்கும் பலர் இக்கொள்கையால் கவரப்பட்டனர். குறிப்பாக அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். முஸ்தபா மௌலானா (பாஸில்), அஷ்ஷெய்க் ஏ.எஸ்.எல்.எம். முபாறக் (பாரி), அஷ்ஷெய்க் சஹாப்தீன் கபூரி போன்றோர்களைக் குறிப்பிடலாம்.

மருதமுனையில் ஆரம்பத்தில் ஷிர்க், பித்அத், அனாச்சாரங்களுக்கெதிரான பிரச்சாரமாக இது அமைந்தமையினால் இங்கிருந்த நடுநிலையாளர்கள் இதன் உண்மை பற்றி சிந்திக்க முற்பட்டனர். இருப்பினும் ஊர்த்தலைவர்களும், மார்க்கம் கற்ற உலமாக்களும் இதனை எதிர்த்தனர்.

இவர்களின் செயற்பாட்டையும், பிரச்சாரத்தையும் அவர்கள் முன்னெடுத்துச் செல்கையில் பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல்களுக்கும், மிரட்டல்களுக்கும் உட்பட்டதுடன் பல சந்தர்ப்பங்களில் பொலிஸாரின் அடக்கு முறைகளுக்கும் ஆட்பட்டனர். என்றாலும் இவற்றையெல்லாம் கண்டு துவண்டுவிடாது அல்லாஹ்வின் தீனை நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கோடு அல்லாஹ் உண்மைக்கு எப்போதும் உயர்வைக் கொடுப்பான்.

உண்மை என்றும் அழிவதில்லை என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அல்லாஹ்வுக்காக தங்களது பிரச்சாரப் பணிகளை முன்னெடுத்துச் சென்றனர். இதன் விளைவாக அக்பர் கிராமம் பாக்கியத்துஸ் ஸாலிஹாத் மஹல்லாப் பிரிவு என்பவற்றில் வேகமாக மாற்றங்கள் ஏற்பட்டதுடன் இவ்விரண்டு பிரிவுகளிலும் இரண்டு பள்ளிவாயல்கள் அமைக்கப்பட்டு அல்குர்ஆன், சுன்னா அடிப்படையில் பிரச்சாரப்பணி திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாது மருதமுனையில் தௌஹீத் சிந்தனையுள்ள உலமாக்களை உருவாக்க வேண்டும் எனக்கருதி அதற்கான பிரயத்தனங்களையும் மேற்கொண்டனர். இதற்காக இங்கிருந்து "தாருத் தௌஹீத் அஸ்ஸலபிய்யா (பறகஹதெனிய)" கலாபீடத்திற்கு மாணவர்கள் சென்று அல்குர்ஆன், சுன்னா அடிப்படையிலான போதனைகளைப் பெற்றார்கள்.

தௌஹீத் பிரச்சாரத்தை மேற்கொள்ள இவர்கள் உறுதுணையாக நின்று உதவினார்கள். மேலும் அவர்கள் குத்பா பிரசங்கங்கள், மார்க்க விளக்க வகுப்புக்கள் என்பவற்றை நடத்தினர். இம்மாணவர்களின் கற்றல் அஷ்ஷெய்க் எம்.எல். முபாறக் மதனி (ஸலபி) அவர்களின் முயற்சியினாலும் மூத்த ஆலிம்களின் ஒத்துழைப்புடனும் முன்னெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இவர்களது பிரச்சாரப்பணி தொடர்ந்து செல்லும்போது சமூக சேவைகள் அமைப்புக்களான "ஜமாஅத் அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா", "சர்வதேச நிவாரண அமைப்பு (IIRO)", ஜம்இய்யத்துல் ஷபாப்", "நிதாஉல் கைர்" போன்ற அமைப்புக்கள் இன்னோரன்ன உதவிகள் செய்ததன் மூலம் இவர்களின் பிரச்சாரத்திற்கு உறுதுணையாக அமைந்தன.

இவ்வாறான சூழ்நிலையிலேயே 2004-12-26ஆம் திகதி சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது. அப்போது தௌஹீத் சகோதரர்கள் ஓர் அமைப்பாக ஒரு நிறுவனத்தின்கீழ் ஒன்றிணைந்து சமூக சேவைப்பணிகளை மேற்கொள்கின்ற நிலை ஏற்பட்டது. இதன் பிரதிபலனாக 2009ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் "இஸ்லாமிய பிரச்சார மையம்" என்ற பெயரில் பதிவுசெய்யப்பட்டு இயங்கி வருகின்றது. இதற்காக தனியான இடம் ஒன்றையும் வாங்கி ஒரு மத்திய நிலையமொன்றையும் அமைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதனடிப்படையில் தற்போது இஸ்லாமியப் பிரச்சார மையம் ஒரு தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் கீழ் இரண்டு ஜும்ஆப் பள்ளிகளையும், ஐந்து தைக்காப் பள்ளிகளையும், ஒரு பெண்கள் அறபுக் கல்லூரியையும் அதன் செயற்பாட்டுத் தளங்களுக்குள் தனித்தனி நிர்வாகங்களை அமைத்து ஒரு நிறுவனத் தொகுதியைப் போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இஸ்லாமியப் பிரச்சார மையமானது தனது செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஓர் நிர்வாகக் கட்டமைப்பை பின்வருமாறு ஏற்படுத்திக் கொண்டது.

நிறைவேற்று நிர்வாகம் :

பணிப்பாளர் சபை	:	Dr. ஹாரிஸ், A.L.A.S.M. முபாறக் பாரி, A.L.A.S.M. ஜவ்பர் ஹாஜியார்
தலைவர்	:	M.L. முபாறக் (மதனி)
உப தலைவர்	:	M. பஹ்றுத்தீன்
செயலாளர்	:	S.H. முஜீப் (ஸலபி)
உப செயலாளர்	:	M.M. அனஸ்
பொருளாளர்	:	M.M. கபீன்
கணக்காளர்	:	A.S.M. முஜீப்

நிருவாகக்குழு உறுப்பினர்கள் :

M.L.M. ஜுனைட், A.H. முஜாஹித், A.L.K.A. ஹாதி, A.H. நஸ்றுத்தீன், M.M. றஸ்மி

இந்நிறைவேற்று நிருவாகத்துடன் இணைந்து மொத்தம் 33 பேரை உள்ளடக்கியதாக மஷூரா சபை காணப்படும். இச்சபை ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை இஷாத் தொழுகையைத் தொடர்ந்து கூடும்.

இஸ்லாமியப் பிரச்சார மையத்தின் பணிகளில் முக்கியமான தஃவா நிகழ்ச்சித் திட்டங்களாக,

- வாராந்த குத்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாராந்த பெண்கள் மார்க்க விளக்க வகுப்புகள்
- வாராந்த ஹதீஸ், பிக்ஹ், அகீதா, தப்ஸீர் வகுப்புக்கள்
- வாராந்த துஆ வகுப்புக்கள், கேள்வி - பதில் நிகழ்வுகள்
- மாதாந்த ஆண்கள், பெண்கள் பயான் நிகழ்வுகள்
- வருடாந்த ஆண், பெண் மாணவர்களுக்கு வதிவிடப் பயிற்சி நெறி, நோன்புக்கான பயிற்சி நெறி, G.C.E. (A/L) வழிகாட்டல் பயிற்சி நெறி, பெண் மாணவர்களுக்கான பெண்கள் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி நெறி வகுப்புக்கள்.
- ஹஜ் வழிகாட்டல் பயிற்சி வகுப்புக்கள்
- ஜனாஸா பயான்கள், நிகாஹ் குத்பாக்கள், இரு பெருநாள் குத்பாக்கள் என கள ரீதியான தஃவா செயற்பாடுகள்.

போன்ற தஃவாச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு "லஜ்னதுல் தலபா" என்ற பெயரில் மாணவர் அமைப்பு உருவாக்கப்பட்டு அதனூடாகவும் பிரச்சாரப் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

அத்தோடு சமூக சேவைப்பணிகளாக,

- அநாதைகளைப் பராமரித்தல்.
- ஏழைகளுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- பல்கலைக்கழகம் நுழைந்துள்ள குறிப்பாக விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளில் கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை பெற்றுக் கொடுத்தல்.
- வறிய குடும்பங்களுக்கு அவ்வப்போது நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- தீராத நோயினால் அவசர சத்திரசிகிச்சை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்ட வர்களுக்கு முடியுமான உதவியை வழங்கல்.

போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறாக பல்வேறு மட்டங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்லாமிய பிரச்சார மையம் பல்வேறு இலக்குகளையும் கொண்டிருக்கிறது.

- அல்-குர்ஆன், சுன்னாவை தெளிவாக அறிந்து செயற்படும் சமுதாயத்தை உருவாக்கலும், அதனூடாக சுவர்க்கத்தை அடைதலும்.
- தனிமனித வழிபாட்டையும் கண்மூடிப் பின்பற்றலையும் ஒழித்தல்.
- சமூகக்கொடுமைகளையும், இஸ்லாத்திற்கு முரணான சிந்தனைகளையும் அடையாளம் கண்டு இல்லாதொழித்தல்.
- முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை தெளிவுபடுத்துவதுடன் மறுமையை இலக்காகக் கொண்டு செயற்படுதல்.

இவ்வாறாக தௌஹீத் ஜமாஅத் மருதமுனையில் சிறப்பான முறையில் இயங்கி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றமை பாராட்டத்தக்க விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை வை.எம்.எம்.ஏ. யின் வரலாறு

ஏ.எம்.எம். பாறூக் (ஓய்வுபெற்ற அதிபர்)

மருதமுனைக் கிராமத்தின் நலன்கருதி கொழும்பில் இயங்கி வந்த மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ. செயலகத்துடன் தொடர்புகொண்டு மருதமுனையில் ஒரு கிளையை அமைக்கும் முயற்சியில் 1977ஆம் ஆண்டில் ஜனாப். S.A.R.M. செய்யது மவ்லானா அவர்களும், ஜனாப். F.M. அமீறுல் அன்சார் மவ்லானா அவர்களும் ஈடுபட்டார்கள். இவர்களுக்கு உதவியாக ஜனாப். A.C.A. மாஜித் மவ்லவி அவர்கள் இயங்கினார். இதற்கு அமைவாக 1978ஆம் ஆண்டு கமு/அல்-மனார் மகாவித்தியாலயத்தில் அங்குரார்ப்பணக் கூட்டம் நடாத்த தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிணங்க 1978-06-24ஆம் திகதி அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பின்வருவோர் சமுகமளித்தார்கள்.

ஜனாப். I.A. அமீன்
ஜனாப். A.M.M. பாறூக்
ஜனாப். S.A.R.M. செய்யது மவ்லானா
ஜனாப். F.M.A. அன்சார் மவ்லானா
ஜனாப். A.C.A. மாஜித் மவ்லவி
ஜனாப். A.R.A. சத்தார்
ஜனாப். M.C.M. இஸ்மாயில்
ஜனாப். N.M.M. அமீன்
ஜனாப். N.M.M. இஸ்மாயில்
ஜனாப். A.R.A. ஹமீட்
ஜனாப். I.L.M. அக்றம்
ஜனாப். S.A.S. இஸ்மாயில் மவ்லானா
ஜனாப். S.H.M. அக்பர்
ஜனாப். A. அபுல்குதா
ஜனாப். M.M. நக்சபி
ஜனாப். M.M. சுபியான்
ஜனாப். M.C.M. அப்துல் காதர்
ஜனாப். S. மனார்த்தீன்
ஜனாப். A.R.M. தவ்பீக்

இவர்களைக் கொண்டு ஒரு நிர்வாக சபை அமைக்கப்பட்டது. அதற்கேற்ப I.A. அமீன் B.A. தலைவராகவும், A.R.A. சத்தார், S.A.R.M. முகம்மது மவ்லானா இருவரும் உபதலைவர்களாவும், F.M. அமீறுல் அன்சார் மவ்லானா செயலாளராகவும், N.M.M. அமீன் உப செயலாளராகவும், S.H.M. அக்பர் அக்பர் பொருளாளராகவும், போசகர்களாக அல்-ஹாஜ் S.Z.M. மசூர் மவ்லானா அவர்களும் முகம்மட் செயின் ஜே.பி. அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன் பின்னர் இயக்கத்தின் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க முதற்கட்டமாக மருதமுனை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கிணங்க க.பொ.த. சாதாரண தரத்தில் கல்விகற்ற பின்தங்கிய மாணவர்கள் இனங்காணப்பட்டு கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் இலவசமாக போதிக்கப்பட்டன. இதனால் வை.எம்.எம்.ஏ.யின் புகழ் பேசப்படத்தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத விதமாக 1978-11-23 வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு பெரும்புயல் வீசத்தொடங்கி சூறாவளியாக மாறியதால் பல அனர்த்தங்கள் ஏற்பட்டன. அடுத்த நாளே உடனடியாக கழக உறுப்பினர்கள் ஒன்றுகூடி சிரமதானப் பணிகளைச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவதென முடிவுசெய்தனர். இவர்களுக்கு உதவியாக பல இளைஞர்கள் முன்வந்து பணியில் ஈடுபட்டார்கள்.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்கள் பற்றி தலைமைக் காரியாலயத் துக்கு அறிவிக்கப்பட்டது. இதனால் அங்கிருந்து பல நிவாரணப் பொருட்கள் தருவிக்கப் பட்டு, அவை மருதமுனை மக்களுக்கிடையே பங்கிட போதுமானதாக இல்லாததால் கழக உறுப்பினர்கள் பற்றி தப்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அவற்றை யெல்லாம் பொறுமையோடு சகித்துக்கொண்டு மக்களுக்குச் சேவைசெய்வதில் மும்முரமாக இருந்து செயல்பட்டார்கள்.

கழகத்தின் வளர்ச்சியை மேலும் வறுவடையச் செய்வதற்காக சகல உறுப்பினர்களும் ஒன்றிணைந்து புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட வேண்டுமென முடிவுசெய்தனர். இதற்கேற்ப I.A. அமீன் தலைவராகவும், F.M.A. அன்சார் மவ்லானா, S.A.R.M. செய்யது மவ்லானா, A.R.A. சத்தார் ஆகியோர் உப தலைவர்களாகவும், A.M.M. பாறூக் செயலாளராகவும், உப செயலாளராக N.M.M. அமீன் அவர்களும், கணக்குப் பரிசோத கராக I.L.M. அக்றம் அவர்களும் நியமிக்கப்பட்டனர். ஏனையோர்கள் உறுப்பினராக விருந்து செயல்படுவதென விருப்பம் தெரிவித்தனர்.

கழகத்திற்கு, உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஜனாப். M.S. ஐயூப் ஜே.பி. அவர்களை போசகராக நியமித்தனர். இவருடைய ஆலோசனைகள் பெரும் உதவியாக இருந்தது. அத்தோடு ஜனாப். I.M.S.M. பழீல் மவ்லானா அவர்களும் ஆலோசனை களை வழங்கினார்கள்.

சில மாதங்களின் பின்னர் கழகத்தின் அவசர கூட்டம் அல்-மனார் மகாவித்தியால யத்தில் கூட்டப்பட்டது. அப்போது அதிபராகவிருந்த ஜனாப். A.H.M. மஜீத் அவர்களுடன் கலந்துபேசி சூறாவளியால் பாதிக்கப்பட்ட கட்டடத்தின் ஓடுகளைத் திருத்திக்கொடுப் பதற்கு உறுப்பினர்கள் முன்வந்தார்கள். அக்கூட்டத்தில் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு உதவிகள் பெற்றுக்கொள்வதென தீர்மானம் எடுக்கப்பட்டது.

சூறாவளியின் பாதிப்புக்களை எடுத்துக்கூறப்பட்ட போது தலைமைக் காரியாலயம் இருபத்தைந்து (25) வீடுகள் கட்டித்தருவதற்கு இணக்கம் தெரிவித்தார்கள். வீடு கட்டுவதற்குரிய நிலைமை ஏற்பட்டபோது அதற்குரியவர்களை நியமிப்பதில் நல்ல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதற்கிணங்க பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு, மருதமுனை, பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவு ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவுகள் இடம்பெற வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறான நிலையில் ஆ.மு. சரிபுத்தீன் ஹாஜியார் வை.எம்.எம்.ஏ. இயக்கத்திற்கு ஒரு விண்ணப்பம் கொடுத்திருந்தார். அதில் பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருந்த பாக்கியத்துஸ் ஸாலிஹாத் பள்ளிவாசல் சூறாவளியால் பாதிக்கப்பட்டு தொழுவதற்கு வசதியில்லாத நிலையில் இருப்பதாகவும், அதனைத் திருத்தி அமைத்துத் தருமாறும் கேட்டிருந்தார்.

இருபத்து நான்கு வீடுகளையும் கட்டி முடிப்பதற்கு கழக உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து ஜனாப். A.L. மீராமுகைதீன் ஆசிரியருக்கு கொன்ரெக்ட் வழங்கினார்கள். வீடுகளைக் கட்டி முடிப்பதுடன் அதற்கு வைத்துக்கட்டப்படும் ஏனைய பொருட்கள் உட்பட அனைத்தையும் மேற்பார்வை வெய்யவென கழக உறுப்பினர்களிடையே ஒருவர் தேவைப்பட்டபொழுது பெருமனது கொண்டு ஜனாப். A.R.A. ஹமீட் அவர்கள் முன்வந்தார். இதனை உறுப்பினர்கள் வரவேற்று பொறுப்புக்களை ஒப்படைத்தனர்.

பாக்கியத்துஸ் ஸாலிஹாத் பள்ளிவாயலைத் திருத்தி அமைக்கும் மேற்பார்வைப் பொறுப்புக்களை அல்-ஹாஜ். ஆ.மு. சரிபுத்தீன் அவர்கள் ஏற்றுக்கொண்டு சிறப்பாகக் கட்டி முடித்தார்கள். இதனைத் திருத்தி அமைத்துக் கொண்டமைக்காக வேண்டி கழக உறுப்பினர்களைப் பாராட்டினார்கள். இச்சந்தர்ப்பத்தில் தன்னால் எழுதப்பட்ட மருதமுனை வரலாறு என்னும் எழுத்துப் பிரதியை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். போதிய நிதியில்லாத காரணத்தால் அது கைவிடப்பட்டது.

வங்கி நடவடிக்கைகளுக்காக கல்முனை மக்கள் வங்கியில் A/C No. 3272 இலக்க கணக்கும் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் போசகரின் இல்லத்தில் அவசரமாக செயலாளர் அவர்களால் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் ஆ.மு. சரிபுத்தீன் ஹாஜியாரின் விண்ணப்பம் தொடர்பில் ஆலோசனை செய்யப்பட்டு நீண்ட நேரத்தின் பின் ஒரு முடிவுக்கு வந்தது. இருபத்தைந்து வீடுகளை இருபத்து நான்கு வீடுகளாகவும், ஒரு வீட்டின் பணத்தை பள்ளிவாசல் கட்டிக்கொடுப்பதற்கு உதவுவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

வீடு கட்டிக்கொடுப்பதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் வெளி யிடப்பட்ட போது அதனைப்பற்றி எவரும் குறைகூறாதது கழகத்தின் நன்மதிப்பையே காட்டியது.

அத்தோடு நின்றுவிடாமல் மருதமுனை மக்களிடமும், வெளியூர்களிலிருந்தும் பணம் வசூலிக்கப் பட்டு பாதிப்படைந்தவர்களின் வீடுகளுக்கு கூரை வேய்வதற்கு கிடுகுகள் வழங்கப்பட்டன. பாய், வாளி போன்ற சில உபகரணங்கள் வழங்கப்பட்டன. சிறிய தொழில்கள் செய்யும் நோக்குடன் சிலருக்கு பண உதவிகள் செய்ததுடன், இலவச மூக்குக் கண்ணாடிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை ஒப்படைக்கும் பணியை மிகவும் சிறந்த முறையில் செய்யும் பொருட்டு மசூர்மவ்லானா சதுக்கத்தில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் தாய்ச் சங்க உறுப்பினர்களும் கலந்துகொள்ளும் வகையில் வீடுகள் கையளிக்கப்பட்டன. தாய்ச்சங்க உறுப்பினர்கள் தங்குவதற்குரிய ஏற்பாட்டையும், இடத்தையும் போசகர் M.S. ஐயூப் ஜே.பி. அவர்கள் ஏற்று செயற்படுத்தினார்கள்.

மருதமுனை பொது நூலகத்தின் குறைபாட்டை ஓரளவாவது நிவர்த்தி செய்யும் பணியில் கழக உறுப்பினர்கள் ஈடுபாடு கொண்டனர். இதற்கேற்ப மருதமுனைக் கிராமத் திலுள்ள மக்களிடம் புத்தகங்கள் அன்பளிப்பாகப்பெற்று நூலகத்திற்கு வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வை.எம்.எம்.ஏ. நிதியிலிருந்து கழு/அல்-மனார் மகாவித்தியாலயத்தி லிருந்தும், கழு/சம்சுல் இல்ம் மகாவித்தியாலயத்திலிருந்தும் தலா பத்து மாணவர் களைத் தெரிவுசெய்து நூலகத்தில் அங்கத்தவர்களாக்கப்பட்டனர். அத்தோடு கழக உறுப்பினர்களாலும் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

அக்கால கட்டத்தில் எமது கிராமத்தில் மார்க்கத்துக்கு முரணான வகையில் செய்யப்பட்டு வந்த விடயங்களை உடனடியாக நிறுத்தும் பொருட்டு இரண்டு பள்ளிவாயல்களைச் சேர்ந்த நம்பிக்கையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டு அவற்றில் வெற்றியும் காணப் பட்டன.

எமது கிராமத்திலிருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் களுக்கு வை.எம்.எம்.ஏ. தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு உபகார நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டன. இதனால் பல மாணவர்கள் நன்மையடைந்தார்கள். பிற்காலத்தில் இவ்வாறான உதவிகள் தாய்ச்சங்கத்தின் மூலம் நிறுத்தப்பட்டன. அதனால் மேலும் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போயின.

சூறாவளியினால் பாதிக்கப்பட்டு காயப்பட்டவர்கள், நோய்யுற்றவர்களுக்கு இலவச வைத்திய சிகிச்சையளிக்கப்படுவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இதனால் மக்கள் பெரிதும் நன்மையடைந்தார்கள்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன்கருதி இலவசமாக கொப்பிகள் வழங்கப்பட்டன. அத்தோடு பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் கழகத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஒரு சிலர் ஈடுபட்டாலும் அவ்வாறான நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தன.

தாய்ச்சங்க உறுப்பினர்கள் அடிக்கடி மேற்பார்வை செய்து எவ்வித குறைபாடுகளும் இல்லையென சுட்டிக் காட்டியதால் மருதமுனை வை.எம்.எம்.ஏ. உறுப்பினர்கள் இரவு, பகல் பாராது எவ்வித ஊதியமும் இல்லாமல் பாடுபட்டனர். இதனால் மருதமுனைக்கு தாய்ச்சங்கத்திடம் மதிப்பும், நற்பெயரும் கிடைத்தன.

அக்கால கட்டத்தில் எமது கிராமம் அரசியல் காரணங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்ததைக் கண்ணுற்ற கழக உறுப்பினர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்தனர். அப்போதைய நிலையில் அரசியலில் பிரவேசம் செய்திருந்த ஜனாப். A.R. மன்சூர் அவர்களை அவரது வீட்டிற்குச் சென்று சந்தித்தனர். அப்போது எமது கிராமத்தின் தேவைகள் பலவற்றை எடுத்துக் காட்டினர். குறிப்பாக அல்-மனார், ஸம்ஸ்சுல் இல்ம் பாடசாலைகள் பற்றியும், பொது வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல், புதிய நூலகம் அமைத்தல், மேட்டுவட்டைக் காணிகளுக்கு பாய்ச்சல் வசதி செய்தல், நெசவுக் கைத்தொழிலுக்கு புத்துயிரளித்தல், வடிகால் அமைத்தல், உத்தியோகங்கள் வழங்குதல் போன்றன பற்றி எடுத்துக் கூறினார்கள். 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவருக்காக பாடுபட்டதாகவும் எடுத்துச் சொன்னார்கள். இவற்றையெல்லாம் கேட்டு சந்தோசப்பட்டு செய்து தருவதாக வாக்களித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளில் வளர்ச்சி கண்ட மருதமுனை வை.எம்.எம்.ஏ. இயக்கம் காலப் போக்கில் தலைமைக் காரியாலயத்தின் புறக்கணிப்பாலும், அவர்களிடையே ஏற்பட்ட பிரச்சினை களாலும் இயங்குவது நிறுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுமுகம்மது முகம்மது பாறூக்

ஓய்வுபெற்ற அதிபர்

அச்சுமுகம்மது முகம்மது பாறூக் 1949-08-16ல் மருதமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி போன்றவற்றை அல்-மனார் மத்திய கல்லூரியில் பெற்றுக்கொண்டார்.

24-06-1977இல் தனது முதல் நியமனத்தைப் பெற்று பெரியநீலாவணை முஸ்லிம் வித்தியாலயத்தில் தனது பணியை ஆரம்பித்தார். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பயிற்சியின் பின்னரான காலப்பகுதியில் நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியராக, பிரதி அதிபராகக் கடமையாற்றிய பின்னர் 2003ஆம் ஆண்டு முதல் 16-08-2009 தனது ஓய்வு வரை தனது பாடசாலையான அல்-மனார் மத்திய கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றும் பாக்கியம் பெற்றார்.

1970களில் மருதமுனையில் சிறப்பாக இயங்கிய வை.எம்.எம்.ஏ. இயக்கத்தின் முக்கிய பல பதவிகளிலிருந்து ஊருக்கும் மக்களுக்கும் பாரிய சேவையாற்றினார். பின்னாட்களில் தன்னை ஒரு கலைப்பட்டதாரியாக வளர்த்துக்கொண்ட இவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் முடித்துக்கொண்டார். அதிபர் சேவை தரம் ஒன்றைப் பெற்றிருந்த இவர் கட்டுரை, கவிதை, சிறுகதை புனைவதிலும் ஈடுபாடு காட்டினார்.

2002இல் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் கட்டுரைக்கான விருதினையும், 2003ல் தொண்டன் சஞ்சிகை சிறுகதைக்கான விருதினையும் பெற்றதோடு 2011ல் கலாபூஷணம் விருதினையும் பெற்று மண்ணுக்குப் பெருமை சேர்த்தார்.

சாஹுல் ஹமீட் சித்தி சரீனாவை மனைவியாகப் பெற்ற இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

அஹதியாப் பாடசாலைகள் மூலம் மருதமுனை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இன்றும் பணிபுரிந்து வருகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹியுமன் லின்க்

விசேட தேவையுடையோருக்கான இல்லம்

அல்-ஹாஜ். ஏ. கமறுத்தீன் (B.A.)
பணிப்பாளர்

வலது குறைந்த மக்களின் நலன்கருதி மருதமுனையில் 01.05.2007ம் திகதி வலது குறைந்த பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான **பகுதி நேரப்பராமரிப்பு நிலையம்** 05 பிள்ளைகளுடனும் ஒரு ஆசிரியருடனும் ஒரு தனியார் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2008.01.02ம் திகதியிலிருந்து **முழு நேரப்பராமரிப்பு நிலையமாக** தரம் உயர்த்தப்பட்டு மருதமுனையில் காரியப்பர் வீதியில் அமைந்துள்ள சுகாதாரத் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடத்தின் ஒரு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு இன்றுவரை அதே இடத்தில் இயங்கி வருகின்றது. இதன் வளர்ச்சிப்பாதையில் 2005.05.01ம் திகதியிலிருந்து **விசேட தேவையுடையோருக்கான இல்லமாகத்** தரமுயர்த்தப்பட்டு தற்பொழுது 45 ஆண் பெண் பிள்ளைகள் ஆறு ஆசிரியர்களினால் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றார்கள். இப்பிள்ளைகள் பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, நிந்தவூர், மாவடிப்பள்ளி, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, காத்தான்குடி போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களாவர்.

பதிவுகள் :

KM/DS/VSSO/2008/74	-	பிரதேச செயலகம், கல்முனை.
EP/ DSS/ DH / 03	-	சமூக சேவைகள் திணைக்களம் கிழக்கு மாகாணம்.
MSS/T/NSPD/R/141	-	வலது குறைந்தோருக்கான தேசிய செயலகம்.

நோக்கம் :

வலது குறைந்த மக்களை சமூகத்திலிருந்து ஒதுக்கித்தள்ளாது அவர்களின் வாழும் உரிமையை வழங்குவதன் மூலம் சமூகத்தில் சம அந்தஸ்தைப் பெற்றுக்கொடுத்தல். வலது குறைந்த மக்களுக்கு உதவுவது சமூகம் பொறுப்பேயன்றி கருணையல்ல என்பதை விழிப்பூட்டல்கள் மூலம் உணர்த்தி சம அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதே எமது பயணமாகும்.

குறிக்கோள்கள் :

- வலதுகுறைந்த மக்களை சுயமாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடியவர்களாக உருவாக்குதல்.
- வலது குறைந்த மக்களுக்கு பொருளாதார ரீதியாக பாதுகாப்பானதும் வழமானதுமான ஓர் எதிர்காலத்தை அமைத்துக்கொடுத்தல்.
- சவால்களுக்கு முகங்கொடுத்து சமூகத்தில் பெறுமதிமிக்க பிரஜைகளாக்குவதற்கு தேவையான ஊக்கம், ஒத்தாசை, உதவிகளை வழங்குதல்.
- வித்தியாசமான வலது குறைந்தவர்களின் பல்வேறு விடயங்களில் அதிகளவில் அக்கறை செலுத்தக்கூடியவாறு பொதுமக்களை விழிப்படையச்செய்தல்.
- வலதுகுறைந்தவர்கள் சமூகத்தில் பயனுள்ளவர்களாகவும் சமூக அங்கீகாரம் பெற்ற பிரஜைகளாகவும் உருவாகுவதற்கு உதவியளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடப்பட்டுள்ள சேவைப் வழிவங்கள்

விசேட அணுகு முறை	உள்வாங்கல் அணுகுமுறை	சமூக அணுகுமுறை
வளப்படுத்தல் நடவடிக்கை	தொழில் பயிற்சி	குடும்ப வலைப்பின்னல்
வதிவிடப் பராமரிப்பு	தொழில் வாய்ப்பு	விழிப்புணர்வு செயற்றிட்டம்
	சுகாதார பராமரிப்பு	வாழ்வாதார செயற்றிட்டம்
	ஆசிரியர் பயிற்சி	வலதுகுறைந்தோர் சங்கம்
		வலதுகுறைந்த இளைஞர் கழகம்

பயிற்றுவிக்கப்படுகின்ற பிள்ளைகளின் வகைகள் :

01. பார்வை குறைபாடுடையவர்கள்
02. காது கேட்காத வாய்பேச முடியாதவர்கள்
03. மெல்லக்கற்பவர்கள். கற்றல் குறைபாடுடையவர்கள்
04. மூளை வளர்ச்சி குறைந்தவர்கள்.

பிள்ளைகளின் வகைகளும் வகுப்பு அமைப்புக்களும்

வகுப்புக்கள்	மாணவர்களின் வகைகள்
Form - I	பால்வகுப்பு (3-5 வயது வரை சகல வகையான குறைபாடுடையவர்கள்)
Form - II	பார்வை குறைபாடுயைவர்கள் - 06 வயதுக்கு மேல்
Form - III	வாய் பேசமுடியாத. காது கேட்காதவர்கள் - 6 வயதுக்கு மேல்
Form - IV	மெல்லக் கற்பவர்கள் - 6 வயதுக்கு மேல்
Form - V	மூளை வளர்ச்சி குறைந்தவர்கள் - 6 வயதுக்கு மேல்
Form - VI	தொழில்பயிற்சி - 16 வயதுக்கு மேல்

வழங்கப்படுகின்ற இலவச சேவைகள் :

- ❑ உணவு
- ❑ போக்குவரத்து (பெரியநீலாவணை. மருதமுனை. பாண்டிருப்பு. கல்முனை. சாய்ந்தமருது. நிந்தவூர். மாவடிப்பள்ளி. நற்பட்டிமுனை வரை வழங்கப்படுகின்றது)
- ❑ தங்குமிட வசதிகள்
- ❑ கற்றல் உபகரணங்கள்
- ❑ கல்வி
- ❑ குர்ஆன் மதரசா செயற்பாடுகள்
- ❑ சுகாதார பராமரிப்பு
- ❑ திறன் விருத்தி
- ❑ துணைபாடவிதான செயற்பாடுகள்
- ❑ தொழில் பயிற்சி

நிறுவனத்தின் நிதி நிலமை :

நிறுவனத்துக்கென நிலையான நிரந்தர வருமான வழிகள் எதுவுமல்லை. பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகளால் வழங்கப்பட்டு வருகின்ற அன்பளிப்புக்கள் மற்றும் நன்கொடைகளைக் கொண்டே இயங்கிவருகின்றது. வருமானங்களும் செலவுகளும் சட்டதிட்டங்களுக்கமைவாக பதிவுகள் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படு கின்றது. நிதிக்கையாள்கைகள் அனைத்தும் வங்கிக்கணக்குகளின் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றன.

மருதமுனை மேட்டுவட்டைப் பிரதேசத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒரு ஏக்கர் காணியில் தேவையான கட்டிடவசதிகளை அரச. அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் ஒத்துழைப்புக்களைப்பெற்று கட்டிக்கொள்வதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளுக்கு :

பணிப்பாளர், ஹியுமன் லின்க்,

காரியப்பர் வீதி , மருதமுனை-04.

தொலைபேசி : 071-4182184, 077-1397114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். அகமது லெப்பை கமறுத்தீன், ஜே.பி.

ஓய்வுபெற்ற முகாமைத்துவப் பணிப்பாளர் - இ.போ.ச.

அகமது லெப்பை வைத்தியரின் இளைய மகன் கமறுத்தீன் 1953-01-12ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா, அல்-மனார் ஆகிய கல்லூரிகளில் பெற்று க.பொ.த. உயர்தர வகுப்பினை கமு/ சாஹிறாக் கல்லூரியில் கற்றார். இங்கிருந்து இலங்கைக் களணிப் பல்கலைக் கழகத்திற்கு கலைப்பீடத்திற்குத் தெரிவானார். கலைப்பட்டதாரியான இவர் 01-08-1980இல் இலங்கைப் போக்குவரத்துச் சபை கிழக்கு மாகாண முகாமைத் துவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். சில காலம் இலிகிதராகவும் கொழும்பு நில அளவைத் திணைக்களத்தில் கடமையாற்றினார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பல உயர்பொறுப்புக்களிலிருந்து தனது திறமையை வெளிக்கொணர்ந்தார். இதனால் இவரைத் தேடிப் பல உயர்பதவிகள் வந்தமை இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

சமூக, விளையாட்டு, அரசியல், சமய நிறுவனங்களின் மூலம் தனது சேவை யினையும் செய்துவரும் இவர் 2007ம் ஆண்டு முதல் வலது குறைந்த மக்களுக்கான ஒரு நிலையத்தினையும் நடாத்தி வருகிறார். இந்நிலையம் தற்போது Human Link என்ற பெயரில் ஐம்பது வலது குறைந்த மாணவர்களுடனும் ஐந்து ஆசிரியர் களுடனும் அளப்பரிய சேவைபுரிந்து வருகிறது. இதன் முகாமைத்துவப் பணிப் பாளராகவிருந்து பல அர்ப்பணிப்புக்களுடன் சேவையாற்றி வருவது அவரது தியாக சிந்தையின் வெளிப்பாடே.

முகம்மது தம்பி சஹாதுனா என்பவரைத் திருமணம் செய்துகொண்ட கமறுத்தீன் ஜே.பி. அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களால் இந்த மண்ணுக்குப் பெருமை

தொகுப்பு : ஏ.ஆர்.ஏ. சத்தார், ஜே.பி. உதவி : கே.எல்.ஏ. வாஹித் (ஓ.பெ. அதிபர்)

மர்ஹூம். ஐ.எல்.எம். இஸ்மாயில், ஜே.பி. (சீப்பலஸ் ஹாஜியார்)

1931ம் ஆண்டு பிறந்த சீப்பலஸ் ஹாஜியார் அவர்கள் 1998ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை முடித்து மறு உலக வாழ்வில் காலடி எடுத்து வைத்தார்கள். ஆரம்பத்தில் ஏழையாகவே தனது வாழ்வினை ஆரம்பித்த இவர் தனது அயராத முயற்சியினாலும், உழைப்பினாலும் உயர்ந்தவர். வர்த்தகத் துறையில் பெயர்சொல்லுமளவிற்கு உயர்ந்த இவர் சமூக சேவையில் அதிக ஈடுபாடுடையவர்களாகவும் மார்க்கப்பணிகளில் முன்னின்றுழைப்பவராகவும் திகழ்ந்தவர்.

கரைவாகு வடக்கு கிராம சபையின் உப தவிசாளராகவும், சில காலம் தலைவராகவும் இருந்து பணியாற்றினார். மருதமுனை மஸ்ஜிதுல் கபீரின் நம்பிக்கையாளராகவும், தலைவராகவும் இருந்து கடமையாற்றியதுடன் ஸகாத் நிதியத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் முதன்மையானவராக மட்டுமல்லாது இந்நிதியம் ஆரம்பிப்பதற்கான முதல் பங்களிப்பைச் செலுத்தி வரலாற்றில் தனக்கென தனியிடத்தினைப் பெற்றுக்கொண்டார்.

மருதமுனையின் சமாதான சபை உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து பெறுமதியான பங்களிப்பை வழங்கியதன் மூலம் அசாதாரண சூழ்நிலையிலும் எமது கிராமம் ஓரளவேனும் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலைகள் ஏற்படுவதற்கு தன்னாலான பாரிய பங்களிப்பினை வழங்கினார்.

மஸ்ஜிதுல் கபீர், மஸ்ஜிதுன்நூர் ஆகிய இரு ஜும்ஆப் பள்ளிவாயல்களுக்கும் தமது பணிகளிலிருந்து ஒரு பகுதியினை வழங்கியமை இன்றும் மக்கள் மனதில் அழியா இடம்பெற்றுள்ளது. இவரின் மறுமைப் பேற்றுக்காகவும், வெற்றிக்காகவும் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். ஏ.பி.எம். மரைக்கார், ஜே.பி.

பக்கீர் முஹைதீன் என்ற எல்லோரும் ஏ.பி.எம். ஹாஜியார் என்றே அழைக்கப்படும் இந்த இனிய மனிதர் 1917ஆம் ஆண்டு பிறந்து 2013 டிசம்பரில் தனது 95வது வயதில் வபாத்தானார்கள். அவர் வாழ்ந்த காலப் பகுதியில் பீடி சுற்றும் தொழிலில் மிகச்சிறப்புற்று விளங்கினார். வர்த்தகம் இவரது பிரதான தொழிலாகவிருந்தது. மஸ்ஜிதுல் கபீரின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து பல அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டதோடு சமூக சேவையிலும், தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அன்னாரின் மறுமைப் பேற்றுக்காக இறைவனை இருகர மேந்திப் பிரார்த்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். ஏ.எம். ஹஸன் மவ்லவி, ஜே.பி.

1944ஆம் ஆண்டு பிறந்த ஹஸன் மவ்லவி அவர்கள் 2004 சுனாமியின் போது தன்னாலான அனைத்துச் சேவைகளையும் செய்துவிட்டுத்தான் 2005இல் வபாத்தானார்கள். இக்கிராமத்தை அவர் நேசித்தளவு வேறெவரும் நேசித்திருப் பார்கள் என்று நான் எண்ணவில்லை. பிரச்சினைகள் எங்கு நடைபெற்றாலும் அதைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் முதன்மையானவராக இவரைக் காணலாம். அரசியலாகவிருந்தாலும் சரி, விளையாட்டாகவிருந்தாலும் சரி, மார்க்க விடயங்களாகவிருந்தாலும் சரி, சமூகப் பிரச்சினைகளாகவிருப்பினும் சரியே.

அப்துல்லாஹ் பயில்வானுடைய வழக்குப் பிரச்சினையில், இறுதிக் கட்டங் களில் அவர் தன்னந்தனிமையில் நின்று பிரச்சினைகளை எதிர்நோக்கிய விடயங்கள் நான் நேரடியாகவே கண்ட விடயங்கள். மருதமுனை சமாதான சபைக்கான இவரின் பங்களிப்பு மகத்தானது. வல்ல அல்லாஹ் மறுமையில் அவருடைய பதவியை உயர்த்த வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். ஏ.ஆர்.ஏ. அஸீஸ்

19-09-1938இல் பிறந்த மர்ஹூம் அஸீஸ் அவர்கள் 01-08-1957இல் ஆங்கில ஆசிரியராகக் கடமை யேற்று 1983 வரை ஆசிரியராக, அதிபராக நாட்டின் பல பிரதேசங்களிலும் தனது சேவைகளை வழங்கினார். பின்னர் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் காலாசாலை விரிவுரையாளராக, கல்விக் கல்லூரியின் பீடாதிபதியாக, வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளராக கடமையாற்றியதுடன் மருதமுனை நெசவு அபிவிருத்தி நாடி "மருதமுனை மக்கள் அபிவிருத்திக் கம்பனி"யின் தலை வராகவும் செயற்பட்டார்.

தனது மரணம் வரை மாணவர் சமூகத்துக்காகப் பணியாற்றிய இவரை அச்சமூகம் என்றுமே மறக்க முடியாது. பல விருதுகள் பெற்றுள்ள இவரை "மாண்புறும் மருதமுனை" மலரினூடாக நினைவுகூர்வது எனது கடமையெனக் கருதுகிறேன். இவரின் மறுமை வெற்றிக்காகவும் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். ஐ.எம்.எஸ்.எம். பழீல் மவ்லானா

31-12-1920ஆம் ஆண்டு பிறந்த அபுல்கலாம் பழீல் மவ்லானா அவர்கள் 1947ல் ஆசிரியப் பணியில் இணைந்து நாட்டின் பல பிரதேசங்களிலும் தனது அரிய சேவையினை ஆற்றியுள்ளார். இன்றும் அந்த மக்களால் கௌரவிக்கப்படும் இவரால் எமது மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமையே. 1974ல் கல்வி அதிகாரி யாக உயர்வுபெற்ற இவர் 1980 வரை பல பிரதேசங்களில் கடமைசெய்தார்கள்.

மார்க்கப்பற்று அதிகமுள்ள இவர் உறவுகளைப் பேணுவதிலும், ஊரில் பொது விடயங்களிலும் அதிக ஈடுபாடுடையவர்களாகவும் காணப் பட்டார். அன்னாரை எனது இம்மலரினூடாக நினைவுகூர்வதுடன் ஜன்னதுல் பிர்தவ்ஸை அடையவும் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். ஏ.எம்.ஏ. ஜெலீல் அதிபர்

இவர் பாண்டிருப்பு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் அதிபராக இருந்தார். பாண்டிருப்பு முஸ்லிம்களின் இருப்பைப் பேணுவதற்காக இவரால் பல சங்கங்கள் தாபிக்கப்பட்டன.

1990ஆம் ஆண்டிலே ஐந்து தொண்டர் ஆசிரியர்களின் பற்றாக் குறையினை உரிய கல்வித் திணைக்கள மட்டங்களில் முறையிட்டு அவர்களுக்கான ஆசிரியர் நியமனத்தினைப் பெற்றுக்கொடுத்தவர்.

தமிழ் - முஸ்லிம் உறவினைப் பேணுவதில் பள்ளிவாசல் தர்மகர்த்தாக் களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு அரசியல்வாதிகளுடன் சிறப்பான நல்லுறவினைப் பேணிவந்தவர். இவரும் கல்முனை முன்னைநாள் பாராளுமன்ற பிரதி நிதியும், அமைச்சருமான ஏ.ஆர்.ஏ. மன்சூர் அவர்களும் ஒரே கல்லூரியில் ஒன்றாகக் கல்வி கற்றவர்கள். இவர் கல்வி கற்ற பாடசாலைகள் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, மட்டக்களப்பு அரசாங்க ஆங்கில பாடசாலை என்பவைகளாகும்.

1957ஆம் ஆண்டு ஆங்கில மொழி ஆசிரியராக நியமனம் பெற்று 1958, 1959 ஆகிய ஆண்டுகளில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றுக்கொண்டார்.

மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலில் செயலாளராக இருந்தவர். கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் என்பவற்றில் நற்பணி புரிந்தவர். குர்ஆன் மத்ரசா, பாலர் பாடசாலை, மினன் அரசினர் முஸ்லிம் பாடசாலை போன்றவற்றின் அபிவிருத்தியில் அயராது பாடுபட்டுழைத்தவர்.

1933-11-08இல் பிறந்த இவர் ஹாஜியானி எஸ்.எம். ஹாறூனா என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவரின் தாயார் அலிமாநாச்சி. தகப்பனார் அபூபக்கர் மரைக்கார் ஆவார். இவரின் தகப்பனார் தலைமைப் பொலிஸ் கிராம அதிகாரியாக இருந்தவர். (பொலீசாணை).
இவரின் மறுமை வெற்றிக்காகவும் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். அல்-ஹாஜ். எஸ்.எம். நஜீப்

இவர் மருதமுனையில் 1955-09-06ஆம் திகதி பிறந்து அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொண்டவர். அதன் பின்னர் கமு/ பாத்திமாக் கல்லூரி பாடசாலையில் க.பொ.த. (சாதாரண தர) வகுப்பு வரை கற்றுத்தேறியவர்.

இவர் மருதமுனை மஸ்ஜிதுன்னூர் பள்ளிவாசலில் தலைவராக 2005-09-16ம் திகதி தொடக்கம் அவர் மரணமாகிய 2006-05-16ஆம் திகதி வரை இருந்து பள்ளி வாசலின் அபிவிருத்தி வேலைகளில் அயராது பாடுபட்டுழைத்தவர். இவருடைய காலத்தில் பள்ளிவாசலுக்கென்று பல கடைத்தொகுதிகள் உருவாக்கம் பெற்றன. பள்ளிவாசல் கட்டட வேலைகளில் முன்னின்று உழைத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987-06-18ஆந் திகதி பிரபல வர்த்தகர் மருதமுனை பானு டெக்ஸின் உரிமையாளர் எஸ்.எம். ஹனிபா என்பவரின் மகளான பதுறுன்னிஸா என்பவரைத் திருமணம் செய்தவர். இவருக்கு இரண்டு ஆண்களும், ஒரு பெண் பிள்ளையும் இருக்கிறார்கள்.

இவர் மருதமுனை கோல்ட்மைன்ட் விளையாட்டுக் கழகத்தின் போசகர் களுள் ஒருவராகத் திகழ்ந்து அரும்பணியாற்றியவர். "சறோ பாம்" நிறுவனத்தின் முதல்வராகத் திகழ்ந்த இவர் சமாதான நீதிபதியுமாவார்.

இவரின் தாயாரின் பெயர் சீனிமுகம்மது லைலத்தும்மா. தந்தை இஸ்மாலெப்பை செயினுலாப்தீன் ஹாஜியார். இவர் குடும்பத்தில் மூத்த மகனாவார். அன்னாரை எனது இம்மலரினூடாக நினைவுகூர்வதுடன் ஜன்னதுல் பிர்தவ்ஸை அடையவும் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். அல்-ஹாஜ். எச்.எம்.ஏ. வதூத் அதிபர்

மருதமுனையில் 1952-05-18ஆம் திகதி பிறந்த இவர் அல்-மனார் மத்திய கல்லூரியில் தமது க.பொ.த. (சா/த) கல்வியைப் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் அவர் தமது க.பொ.த. (உயர்தர) கல்வியை கல்முனை சாஹிறாக் கல்லூரியில் பெற்றுக்கொண்டார். பல்கலைக்கழகக் கல்விக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் கொழும்பு வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்தில் 1976 - 1977 ஆகிய ஆண்டுகளில் பயின்று B.A. பட்டதாரியாக வெளியானார். இதற்கிடையில் 1978ல் ஆசிரிய நியமனம் கிடைக்கப் பெற்று கமு/ புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமிக்கப் பெற்றார்.

பல பாடசாலைகளில் நீண்டகாலம் பட்டதாரி உதவியாசிரியராகக் கடமை யாற்றினார். சம்ஸ் மத்திய கல்லூரியில் பல வருடங்கள் அதிபராகக் கடமை யாற்றினார். அதன் பின்னர் கமு/ நற்பிட்டிமுனை லாபீர் வித்தியாலயத்தில் சில ஆண்டுகள் அதிபராகக் கடமைபுரிந்தார். பின்னர் அவர் ஏறக்குறைய ஒன்றரை வருடங்கள் கல்முனைக் கல்வி வலயத்தில் கோட்டக் கல்வியதிகாரியாகக் கடமை யாற்றினார்.

இவருடைய காலத்திலே "பொதுப்பணி மன்றம்" ஒன்றினை நிறுவி அதன் மூலமாகப் பல பணிகளை மேற்கொண்டார். தேசிய அடையாள அட்டைகளை இலவசமாக வழங்குதல், இலவச நூல் விநியோகம் செய்தமை, புத்தூக்க வகுப்புக்கள் நடாத்தியமை, இலவசப் புவியியல் வகுப்புக்கள் நடாத்தியமை போன்ற சேவைகளை இலவசமாகச் செய்தமையின் காரணமாகப் பொது மக்களினதும், மாணவர்களினதும் அபிமானத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவரின் தந்தையின் பெயர் அஹமது லெப்பை ஹச்சு முகம்மது, தாயாரின் பெயர் ஆசியா உம்மா ஆகும்.

இவரின் மறுமை வெற்றிக்காக பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். எஸ்.எல்.எம். ஷாபியு ஆசிரியர்

மருதமுனையில் 1939-04-22ஆம் திகதியில் பிறந்த எஸ்.எல்.எம். ஷாபியு ஆசிரியர் அவர்கள் மருதமுனை அரசினர் கலவன் பாடசாலையில் (தற்போதைய அல்-மனார் மத்திய கல்லூரி) தமது ஆரம்பக் கல்வியைக் கற்றார். இவரின் தகப்பனார் சம்சுலெப்பை மரைக்கார் ஆவார். அதன் பின்னர் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் க.பொ.த. (சா/த) கல்வியை முடித்து அது சார்பான பரீட்சை சித்தியடைந்ததன் காரணமாக "பிஸ்கால்" உத்தியோகம் பார்த்தவர்.

அதன் பின்னர் சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்போதைய அல்-ஹிலால் வித்தியாலயம்) 1959ஆம் ஆண்டில் நியமனம் கிடைத்து ஆங்கே 1961 வரை ஆசிரிய பணிபுரிந்தவர். அதனைத் தொடர்ந்து கொழும்பு மாளிகாவத்தை அரசினர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகப் பணி புரிந்தார்.

பின்னர், 1962 - 1963 காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவருக்கு அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த ஹொறவப்பொத்தான என்னும் பிரதேசத்திலுள்ள வீரச்சோலை என்னும் கிராமத்திலே பயிற்றப்பட்ட ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அங்கே அவர் 1964 தொடக்கம் 1965 வரை கற்பித்து வந்தார்.

1966 - 1968 வரை ஒலுவில் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்போதைய அல்-ஹம்றா மகாவித்தியாலயம்) ஆசிரியப்பணி புரிந்தவர். 1969 - 1970 ஆகிய காலப்பகுதியில் நற்பிட்டிமுனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்போதைய அல்-அக்ஷா மகாவித்தியாலயம்) ஆசிரியப் பணி புரிந்து வந்தார். அதனைத் தொடர்ந்து பெரியநீலாவணை அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் (இன்றைய புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் வித்தியாலயம்) 1994ஆம் ஆண்டு வரை கற்பித்து வந்தார். இவரிடம் பல சிறப்புக்கள் காணப்பட்டன. இவரின் மறுமை வெற்றிக்காக பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். எம்.எம். இஸ்மாயில் அதிபர்

மருதமுனையில் 1928-12-26ஆம் திகதி பிறந்த இவர் யூசுப்பு லெவ்வை - முகம்மது அபூபக்கர் கதிஜா உம்மா தம்பதியினருக்கு புதல்வராகப் பிறந்தவர். ஆரம்பக் கல்வியையும், உயர்கல்வியையும் மருதமுனை ஆண்கள் பாடசாலையில் (தற்போதைய அல்-மனார் மத்திய கல்லூரி) கற்றவர்.

ஆசிரியர் பயிற்சியை 1949-01-01 தொடக்கம் 1950-05-03 வரை அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பெற்றுக் கொண்டார். ஆசிரிய பயிற்சியின் பின்னர் தாம் கற்ற அல்-மனார் மத்திய கல்லூரியிலேயே வேதனம் பெறாமல் பாட போதனை செய்தார். அவ்வேளையில் அல்-மனார் பாடசாலையில் மர்ஹூம் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் அதிபராகக் கடமை புரிந்தார்கள். இவருக்கு முதல் நியமனமாகக் கிடைத்த பாடசாலை 1950-08-01இலிருந்து மாத்/ கொறக்கொட அரசினர் தமிழ் கலவன் பாடசாலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கான பிரயாண வசதியில்லாத அக்கால வேளையில் மிகவும் கஷ்டமான பிரதேசங்களிலேயே கற்பித்துப் பல புதுமையான அனுபவங்களைப் பெற்றிருக் கிறார்.

1958-10-01இலிருந்து இரண்டாம் தர அதிபர் பதவி கிடைத்தது. அப்போது அவருக்குக் கிடைத்த பாடசாலை கோ/ கதிரவலானை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையாகும். 1969-01-01 முதல் அவருக்கு முதலாம்தர அதிபர் பதவி கிடைத்தது. அப்போது அவருக்குக் கிடைத்த பாடசாலை தி/ பேராறு கொலனி அ.மு.க. பாடசாலை யாகும். 1970-06-29 முதல் 1988-12-25 வரை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கடமையாற்றி 1988-12-25ஆம் திகதி தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டார். பொதுப்பணிகள் பலவற்றில் ஈடுபட்டு வந்த இவர் 2008-09-07இல் றமழான் நோன்பு 06இல் இறையடி சேர்ந்தார். இவரின் மறுமை வெற்றிக்காக பிரார்த்திக் கின்றேன்.

மர்ஹூம். எச்.எல். ஜமால்தீன், S.P.

எனது வகுப்புத் தோழன் ஜமால்தீன் 1955இல் பிறந்தவர். பாடசாலைக் காலங்களில் விளையாட்டுத் துறையில் மிகவும் ஆர்வமாக இருந்ததோடு தேசிய உதைபந்தாட்ட அணியிலும் இடம்பெற்றிருந்தார். ஆசிரியராகத் தனது சேவையை ஆரம்பித்து பொலிஸ் அத்தியட்சகர் வரையில் உயர்ந்து எமது கிராமத்தில் பாதுகாப்புத் துறையில் அதி உயர்ந்த தகுதியினைப் பெற்றிருந்தார். நல்ல சமூக சேவையினை இவர் மஸ்ஜிதுல் கபீரின் தலைவராகவிருந்து அதன் புதிய கட்டிடம், சந்தைக் கட்டிடம் நுழைவாயில் கோபுரம் எனப் பல அபிவிருத் திகளைச் செய்தார். ஈஸ்டன்யூத் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும், அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவராகவுமிருந்து விளை யாட்டுத் துறைக்குப் பாரிய பங்களிப்புச் செய்தார்.

பயங்கரவாதத்தின் கோரவடிவம் இவரது இன்னுயிரைக் காவு கொண்ட நிகழ்வு எம்மை அதிர்ச்சியிலாழ்த்தியது. இவரது ஜனாஸாவுக்கு வருகை தந்த மக்கள் கூட்டம் இதுவரை எமதூரில் என்றுமே காணாதளவு இருந்தமை இங்கு குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியது. எனது இனிய நண்பனின் ஈடேற்றத்திற் காக இரு கரமேந்தி எல்லாம்வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். ஏ.எம். இஸ்மாயில் - AMI

ஏ.எம்.ஐ. என்ற முன்னெழுத்துக்களைக் கொண்டே அழைக்கப்பட்ட ஏ.எம். இஸ்மாயில் ஜே.பி. அவர்கள் மஸ்ஜிதுல் கபீரின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் அதன் பொருளாளராகவும் இருந்து இப்பள்ளி வாயலின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். நூல் வியாபாரம், பிடவை வியாபாரம் என்பனவற்றைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்த இவர் தேவையானபோது நல்ல பொருத்தமான ஆலோசனை வழங்கும் பக்குவத் தினைப் பெற்றிருந்தார். இவரது மறுமைப்பேற்றுக்காக இறைவனை இருகரமேந்திப் பிரார்த்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். ஏ.எல். தாவூத் லெப்பை மரைக்கார், ஜே.பி.

1931இல் பிறந்து 2013இல் மரணமானார். மருதமுனை நெசவுத் தொழில் முயற்சியில் பாரிய பங்களிப்பு இவருடையது. பொதுச்சேவைகளில் ஆர்வம் காட்டியதோடு மஸ்ஜிதுல் கபீர் நம்பிக்கையாளர் சபையின் உறுப்பினராகச் செயற்பட்டார். மக்பூலியா, மத்திய பள்ளிவாயல்களின் அபிவிருத்தியிலும் பங்கெடுத்துக்கொண்ட இவர் ஷம்ஸ் மத்திய கல்லூரியின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டினார். அல்-மினன் பாடசாலையின் காணியை இவரது சொந்தப் பணத்தில் வாங்கி அன்பளிப்புச் செய்தமை இவரது பொதுப் பணிக்கு சிறந்ததொரு உதாரணமாகும். பாடல்கள் இயற்றிப்பாடும் திறமை பெற்றிருந்ததோடு கோலாட்டம் இவரது பொழுதுபோக்காக இருந்தது. இவரையும் மாண்புறும் மருதமுனையினூடாக நினைவுகூர்வதோடு மறுமை வெற்றிக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

மர்ஹூம். எஸ்.எம்.எம். இப்றாகிம் மரைக்கார், ஜே.பி. (S.M. பிள்ளை)

எஸ்.எம். பிள்ளை அல்லது எஸ்.எம். மரைக்கார் என்றழைக்கப்பட்ட எஸ்.எம். முகம்மது இப்றாகீம் மரைக்கார் என்பவர் மஜீட் அதிபரின் மாமனாராவார். இவர் ஆளுமைமிக்க ஒருவராகவிருந்து மஸ்ஜிதுன் நூறின் தலைவராகக் கடமையாற்றியுள்ளார். உள்ளூராட்சி மன்ற தேர்தலொன்றில் எஸ்.எம். சுல்தான் மரைக்கார் அவர்களுடன் போட்டியிட்டு சிறு வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்டாலும் அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளுடன் இருந்தார்கள். பிரதான தொழிலாக தமன்கடுவைப் பிரதேசத்தில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டிருந்தார். சந்திக்கின்ற எல்லா வேளைகளிலும் என்ன பேரன் என்று அன்பாக அழைப்பது என்னை அவரின்பால் ஈர்த்துள்ளது. அன்னாரை இம் மலரினூடாக நினைவுகொள்ள விரும்புகிறேன்.

மர்ஹூம். சக்காப் மவ்லானா ஆசிரியர்

எமது அரசியல் தந்தை அல்-ஹாஜ் மசூர் மவ்லானாவின் சகோதரர் சக்காப் மவ்லானா மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட ஒருவர் என்றால் மிகையில்லை. சாய்ந்தமருதில் திருமணம் செய்தாலும் பகல் வேளைகளைப் பெரிதும் மருதமுனையிலேயே கழிக்கும் வழக்கம் கொண்டிருந்தார். அரசியலில் அதிக ஆர்வம் காட்டிய இவர் சகோதரர் மசூர் மவ்லானாவின் வெற்றிக்காகப் பெரிதும் பாடுபட்டார். கலைத்துறை இவருக்கு மிக விருப்பமானது. மருதமுனை கலைக் கழகம் புத்துணர்ச்சி மன்றம் போன்றவற்றின் மூலம் நாடகங்களை முன்னின்று நடித்து அரங்கேற்றியதுடன் பின்னரான காலங்களில் கலைக்கூடல் என்ற அமைப்பை உருவாக்கி அதனூடாகப் பல பிரசித்தி பெற்ற நாடகங்களைத் தயாரித்து மேடையேறியதன் மூலம் பெரு வரவேற்பைப் பெற்றார்.

இலங்கை வானொலியில் 'முத்தாரம்' நிகழ்ச்சியூடாக சமூகப் பிரச்சினைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை விழிப்படையச் செய்தார். பல்துறைத் திறமை கொண்ட மர்ஹூம் சக்காப் மவ்லானாவுடன் பிரயாணம் செய்வதென்பது எல்லோருக்கும் ஒரு அலாதியான விடயம். நேரம் போவது தெரியாமல் அலுப்பில்லாமல் நேரம் போய்விடும். இவரை மாண்புறும் மருதமுனையூடாக நினைவு கூர்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். எஸ்.வீ.ஏ. றசூல் மவ்லவி

றசூல் மவ்லவி என எல்லோராலும் அழைக்கப்படும் இவர் அரபு ஆசிரியராகத் தன்னை இணைத்துக்கொண்டார். மன்னார் மாவட்ட தாறாக்குண்டில் தனது சேவையை நீண்டகாலம் வழங்கிவிட்டு அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்றப்பட்ட பின் உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் தனது ஆசிரியப் பணியை தனது ஓய்வுவரை செய்தார். இடைக்காலங்களில் குர்ஆன் மத்ரஸாக்களை மஸ்ஜிதுல் கபீரிலும், மஸ்ஜிதுல் ஹிதாயாவிலும் நடாத்தி வந்தார். மஸ்ஜிதுல் ஹிதாயாவின் ஸ்தாபகரான இவர் கிழக்கிலங்கை அறபாசிரியர் சங்கச் செயலாளராகவும் கடமையாற்றினார். கிதாப் மத்ரஸாக்களையும் நடாத்தியதோடு பல உலமாக்கள் தோன்றுவதற்குக் காலாக அமைந்தார். எனது தாய்மாமாவான இவரை இந்த மலரினூடாக நினைவுகூர்வது எனது கடமையாகக் கருதுகிறேன். இவரது மறுவுலக வெற்றிக்கு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். ஐ. முகம்மதுத் தம்பி (மூத்த தம்பியர்)

மூத்த தம்பியர் என்றே அழைக்கப்பட்ட ஐ. முகம்மதுத் தம்பி என்பவர் அரிசி ஆலைத்தொழிலில் ஈடுபட்ட ஒரு வர்த்தகரான இவர் செல்வாக்கு மிக்க ஒரு குடும்பத்தின் பின்னணியைக் கொண்டுமிருந்தார். எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் இவர் கரைவாகு வடக்குக் கிராம சபையின் உறுப்பினராகவும் இருந்த துடன், மஸ்ஜிதுல் நூரின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவுமிருந்து செயற்பட்டார். பொதுவேலை சமூக சேவைகளில் அதிக ஈடுபாடுடையவரா கவும் இருந்ததோடு குடும்ப உறவுகளைப் பேணுவதில் அதிக கரிசனை காட்டிய வராவார். நானறிந்த வகையில் இவர் யாருடனும் பிரச்சினைகளில் ஈடுபட்ட வரில்லை என்று துணிந்து கூறலாம். இவரை எனது இம்மலர் மூலம் நினைவு கூர்கிறேன்.

மர்ஹூம். சாகுல்ஹமீட் மவ்லவி

சாகுல் ஹமீட் மவ்லவி அவர்கள் ஒரு மவ்லவி ஆசிரியராவார். ஸம்ஸ் மத்திய கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்கெடுத்துக்கொண்ட இவர் மத்திய பள்ளிவாயலின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் அங்கு நடாத்தப்பட்ட குர்ஆன் மதரசாவின் ஆரம்ப கர்த்தாவுமாவார். சிறந்த சிந்தனைப் போக்குடைய இவர் எல்லோரிடமும் இதமாகப்பேசும் இயல்பினைக் கொண்டிருந்தார். என்னோடு மிக அன்பாக இருந்ததோடு தேவையான போது நல்ல பல ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் சொல்லவும் தவறமாட்டார்கள். இவர்களை மாண்புறும் மருதமுனை ஊடாக நினைவு கூர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாம்வல்ல இறைவன் இவர்களை ஜன்னதுல் பிர்தவ்ஸில் சேர்க்க வேண்டுமென்றும் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். ஏ.எம். அபூபக்கர் அதிபர்

மருதமுனையில் 1934இல் பிறந்த இவர் கல்முனை உயர்தர பாடசாலையில் கல்வி பயின்றவர். ஆங்கில ஆசிரியரான இவர் 1964 - 1965 காலப்பகுதிகளில் பலாலி ஆங்கில ஆசிரிய கலாசாலையில் கற்றுத் தேறியவர். சம்ஸ் மத்திய கல்லூரியில் அதிபராகவிருந்து பாடசாலை முன்னேற்றத்தில் அரும்பாடு பட்டுழைத்தவர். மஸ்ஜிதுல் கபீரின் நம்பிக்கையாளராகவும், அதன் செயலாள ராகவும் இருந்து அரும்பணியாற்றினார். இவரது ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக் கின்றேன்.

மர்ஹூம். ஏ. ஜமால்தீன் ஹாஜியார் (ஜமாலியா ஹாஜியார்)

ஜமாலியா ஹாஜியார் என்று அழைக்கப்படும் இவர் என்னோடு நெருங்கிய தொடர்புடையவராகவும் ஸ்ரீ.ல.மு.கா. கட்சிப்பணிகளில் நல்ல பல ஆலோசனைகளை வழங்குவராகவும் திகழ்ந்தார். அரிசி ஆலைத் தொழில், ஹாட்வெயார் வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்ட இவர் மஸ்ஜிதுன் நூர் கட்டிட நிர்மாணக் குழுவின் பொருளாளராகவும் சில காலம் செயற்பட்டார். சமாதான சபையின் பொருளாளராகவிருந்தும் பணியாற்றியுள்ளார்.

மர்ஹூம். ஜலால்தீன் மவ்லவி பாகவி

ஆரம்ப காலங்களில் எமதூரிலிருந்து இந்தியாவுக்குச் சென்று மார்க்கக் கல்வி பயின்று வந்தவர்களில் ஜலால்தீன் மவ்லவி அவர்கள் முதன்மையானவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் மிக நீண்ட காலமாக ஆசிரியர் தொழில் மூலம் சேவையாற்றியவர். இவர் இஸ்லாம் பாடம் போதிக்கும் போது இவரது அடிக்குப் பயந்தே பலர் பாடத்துக்கு ஒழித்துவிடுவதும் உண்டு. சிலர் பயத்தில் எல்லாவற்றையும் மனனம் செய்வதும் உண்டு. எங்களுடைய பாடசாலைக் காலங்களில் நாங்கள் இவர் மூலம் அனுபவித்த பல சுவையான நினைவுகள் இன்றும் அடிக்கடி பேசுபொருள்களாகவுள்ளன. எங்களால் மிக மரியாதை யாகப் பார்க்கப்படும் இவர்களை மேலான சுவர்க்கத்தில் நுழைவிப்பானாக! இவரது மறுமைப் பேற்றுக்காக எல்லாம் வல்ல நாயனைப் பிரார்த்திக்கிறேன்.

மர்ஹூம். எம்.ஐ.எம்.ஏ. காதர் மனேஜர்

காதர் மனேஜர் என்றால் சிறுபிள்ளையும் அறியும். மஸ்ஜிதுன் நூரின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் பல சந்தர்ப்பங்களில் தலைவரா கவும் இருந்து பணியாற்றியதுடன் மருதமுனை சமாதான சபை அங்கத் தவராகவும் இணைத் தலைவராகவும் இருந்து சேவையாற்றினார். 2004-12-26ஆம் திகதி எம்மைக்காவு கொண்ட சுனாமிப்பேரலை அழிவை நாம் காண்பதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பாக இவரது இன்னுயிரை இறைவன் கைப்பற்றிக் கொண்டமை எல்லோர் மத்தியிலும் இவரை ஞாபகம் செய்யும் ஒரு நிகழ்வாக வுள்ளது. இவரது மறுமைப் பேற்றுக்காக எல்லாம் வல்ல நாயனைப் பிரார்த்திக் கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். ஏ.எச். முகம்மது அதிபர்

அல்-மனார் கண்ட நல்ல அதிபர்களுள் ஏ. ஹபீப் முகம்மது அதிபர் அவர்களும் ஒருவராவார். தமிழ் இலக்கிய பாடங்கள் நடாத்துவதில் மிகவும் தேர்ச்சி பெற்ற இவரது விஷேட அம்சம் என்னவென்றால் காலையில் பாடசாலைக்கு முதன் முதலில் வருபவராக இவரே இருப்பதாகும். இவரைவிட முன்னராகப் பாட சாலைக்கு வரவேண்டும் என்று வந்த சிலர் இவரிடம் தோற்றுப்போன சம்பவங்கள் பல உள. மிகவும் மென்மையான சுபாவமுடைய இவர் மாணவர்களை மரியா தையாகவே அழைப்பது இன்றும் எம் நினைவைவிட்டு அகலவில்லை. அதிக மார்க்க ஈடுபாடுள்ள இவர்கள் இம்மலரினூடாக நினைவுகூரப்படுகிறார்கள். இவருக்கு எல்லாம்வல்ல நாயன் மேலான சுவர்க்கத்தைக் கொடுப்பானாக!

மர்ஹூம். எஸ்.எம். சுல்தான் மரைக்கார்

சுல்தான் மரைக்கார் என்றால் மிகப்பிரபல்யம் வாய்ந்தவர். மஸ்ஜிதுன் நூரில் மிக நீண்டகால நம்பிக்கையாளர் சபை உறுப்பினராக இருந்தவர். இப்பள்ளி வாயலின் தலைவராக வரவேண்டும் என்ற இவரது ஆசை சில நிர்வகக் கட்டுப் பாடுகளினால் நிறைவேறாமலே போய்விட்டது. இதற்காக இவர் கடும் எத்தனங் களை மேற்கொண்டு களத்தில் நின்றபோதும் அது கைகூடவில்லை. இறுதியில் இப்பணியைத் தொடர அவரது நம்பிக்கையாளர் உறுப்பினர் பதவிக்கு என்னை நியமித்தார். எனது அணுகு முறையாலும் மற்றவர்களின் ஒத்துழைப்பினாலும் அவரது போராட்டம் ஒரு முடிவு கண்டதை அவரது வாழ்நாள் காலங்களின் போதே கண்டு கொண்டமையை உவகையுடன் கூறிக்கொள்வார். அரசியலில் அதிக ஈடுபாடுடைய இவரை எனது இம்மலரினூடாக நினைவுகொள்கிறேன்.

மர்ஹூம். உதுமாலெப்பை அதிபர்

1996 இலிருந்து உதுமாலெப்பை அதிபர் அவர்களின் மரணம் வரை அவரோடு மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. ஐயூப் பில்டிங்கில் மக்கள் வங்கியில் நான் கடமையாற்றிய வேளையில் அவர் பக்கத்திலேயே குடிபதியா யிருந்தார். அடிக்கடி சந்தித்து ஊர் விடயங்கள், பொது விடயங்கள், மார்க்கம், அரசியல் என எல்லா விடயங்கள் பற்றியும் பேசும்போது இடையில் நெஞ்சைப் பொத்திக்கொண்டு சற்றுப் பொறுத்துக் கொள்ளும்படி கூறிவிட்டு ஒரு மாத்தி ரையை உட்கொள்வார். நெஞ்சு நோயினால் அவர் அவதிப்படுபவதை நான் அடிக்கடி கண்டிருக்கிறேன்.

அல்-மனார் ஆரம்பப் பிரிவின் அதிபராக மிக நீண்டகாலம் கடமையாற்றிய தோடு மஸ்ஜிதுன் நூரின் நிர்வாகிகளுள் ஒருவராகவிருந்து கடமையாற்றினார். இம்மலர் இவரையும் நினைவிற்கொள்கிறது.

மறுமை வெற்றிக்காக இறைவனை இறைஞ்சுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். எம்.வை.எல்.எம். இப்றாகிம் (சொய்ஸ் பலஸ்)

சொய்ஸ் பலஸ் ஹாஜியார் என்ற எம்.வை.எல்.எம். இப்றாகிம் அவர்கள் மிக நெருக்கமாக என்னோடு பழகியவர். ஸ்ரீ.ல.மு.கா. கட்சிப் பணிகளில் பாடுபட்ட அவ்வேளைகளில், நல்ல பல ஆலோசனைகள் மட்டுமல்லாது பணத் தேவை களை நிறைவேற்றுவதிலும் பங்கெடுத்துக் கொண்டவர். அவர் மருமகன் என்று உறவு முறை சொல்லி அழைக்கும் பாங்கு என்னைப் பெரிதும் கவர்ந்தது. கல்முனையில் சொய்ஸ் பலஸ் புத்தகக்கடை என்பது பலராலும் மறக்க முடி யாதது. ஆரம்ப காலங்களில் கல்முனையில் வர்த்தகத்தில் ஈடுபட்ட சிலரில் இவரும் ஒருவர். இவரது வர்த்தக நிலையம் இன்றும் கல்முனையில் இவரது புதல்வர்களினால் நடாத்தப்பட்டு வருகிறது. இவரையும் இந்த "மாண்புறும் மருதமுனை" மலரினூடாக நினைவு கூர்கிறேன்.

மர்ஹூம். எம்.எம். அப்துல் காதர் அதிபர்

வெள்ளத்தம்பி வாத்தியார் என்று எல்லோராலும் அழைக்கப்படும் அப்துல் காதர் அதிபர் அவர்கள் கணக்குப் பாடத்தில் மிகத்தேர்ச்சி பெற்றவராகக் காணப்பட்டார்கள். அத்தோடு தமிழ் இலக்கியமும் அவரது விருப்பத்துக் குரியனவாகவிருந்தது. தோட்டங்கள் செய்வதும் அதன் அழகை இரசிப்பதும் இவரது சிறந்த பொழுபோக்காகவிருந்தமையை நாமறிவோம். என்னையும் எம்.பீ.எம். இக்பாலையும் அழைத்து கணக்குப் பாடம் சொல்லித்தருவதும் அவரது வீட்டுத் தோட்டத்தினைக் காண்பிப்பதனையும் வழக்கமாகக் கொண்டி ருந்தார். மஸ்ஜிதுன் நூரில் மிக நீண்டகாலமாக நம்பிக்கையாளர் சபையில் ஒருவராகவிருந்து நல்லபல சேவைகள் புரிந்துள்ளார். இவரையும் எமது இந்நூலினூடாக நினைவுகூர்கிறேன். மறுமை வெற்றிக்காகவும் பிரார்த்திக் கிறேன்.

மர்ஹூம். ஏ.எம். நிஃமத்துல்லாஹ் C.D.O.

1960ஆம் ஆண்டு பிறந்து 2000ம் ஆண்டு இடம்பெற்ற எம்.எச்.எம். அஸ்ரஃப் அவர்களுடனான உலங்குவானூர்தி விபத்தில் தனது இன்னுயிரை நீத்த எனது அருமை நண்பன் CDO நிஃமத்துல்லாஹ் அவர்களை "மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்" எனும் இந்நூலினூடாக நினைவு கூருகிறேன்.

எனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் தோளோடு தோள்நின்று உழைத்தவர். நான் பேனாவாக இருந்தால் அவர் மையாகவிருந்து செயற்பட்டவர். பழகுவதற்கு மிக இனிமையானவர்.

கட்சிப்பணியில், விளையாட்டில், சன்மார்க்க நடவடிக்கைகளில் மிக முன்மாதிரி யாகத் திகழ்ந்தவர். இவருக்கு அல்லாஹுத்தஆலா ஜன்னதுல் பிர்தவ்ஸ் எனும் உயர்ந்த பேற்றினை வழங்க எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். எஸ். எம். றபிஉடீன் ஆசிரியர்

1966 ஆம் ஆண்டு பிறந்து 2000ம் ஆண்டு இடம்பெற்ற உலங்கு வானூர்தி விபத்தில் உயிர்நீத்த எனது அன்புக்குரிய நண்பன் றபீஉடீன் ஆசிரியர் அவர்களை எனது இந்நூல் மூலம் நினைவுகூருகிறேன்.

சிறந்த விளையாட்டு வீரனாகவும், எதையும் துணிந்து கருமமாற்றுப வராகவும், உதவி செய்வதில் முதன்மையானவராகவும் இருந்தார். எதிலும் ஒரு அவசரம். மரணத்திலும் அவசரப்பட்டுச் சென்றுவிட்டார். அவருடைய ஈடேற்றத்துக்காக இரு கரமேந்திப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். ஏ.எம். முஸ்தபா ஆசிரியர்

நல்ல கற்பித்தல் திறனைக் கொண்டிருந்த முஸ்தபா ஆசிரியர் அவர்கள் மருதமுனையின் பிரபல்யங்களைப்பற்றிய ஒரு நூலுருவாக்கத்தில் ஈடுபட்டார். அது நிறைவேறாமலேயே வபாத்தாகிவிட்டார்.

1955ஆம் ஆண்டு 5ம் வகுப்புப் புலமைப்பரிசில் பெற்று காத்தான்குடி மத்திய கல்லூரியில் கல்வி கற்றவர். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களை வழிப்படுத்துவதில் மிகவும் ஆர்வம் கொண்ட இவர் எதுவித ஊதியமோ, சம்பளமோ இன்றி இச்சேவையைச் செய்ததானது இவர் மாணவர் சமூகத்தின் பால் கொண்டிருந்த அன்பை வெளிக்கொணர்வதாகும். மிகுந்த மார்க்க ஈடுபாடு கொண்ட இவர் மத்திய பள்ளிவாயலில் வந்து தவறாமல் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றத் தவறமாட்டார். இவரது மறுமை வெற்றிக்காக அல்லாஹ்வைப் பிரார்த் திக்கிறோம்.

மர்ஹூம். ஏ.எம். இப்றாகிம் (சீப் சென்றர்)

1948ஆம் ஆண்டு பிறந்து 2009ம் ஆண்டு மரணமான சீப்சென்டர் உரிமை யாளர் இப்றாகிம் ஹாஜியார் அவர்களை எனது இந்த நூலினூடாக நினைவு கூர்கிறேன்.

மஸ்ஜிதுல் ஹிதாயாவின் தலைவராக மிக நீண்டகாலமாகவிருந்து சேவை யாற்றிய இவர் மருதமுனை ஸக்காத் நிதிய அங்கத்தவராகவிருந்து சிறந்த பணியாற்றியவர். நெசவு உற்பத்தித்துறையில் கணிசமான பங்களிப்பைச் செய்தவர்.

நோன்பு இருபத்தியேழில் (27) பிறந்த இவர் அத்தினத்தை ஏழை, எளியவர்கள், நண்பர்கள், உறவினர்கட்கு புத்தாடை வழங்கி நன்மைகளை அதிகமதிகம் தேடிக்கொள்ளும் சிறந்த கொடையாளியாகவிருந்தார்.

அன்னாரின் மறுமை வெற்றிக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். எம்.வை. அப்துல் றஷீட் மரைக்கார்

1931ம் ஆண்டு பிறந்த றஷீட் மரைக்கார் அவர்கள் 1968ம் ஆண்டு தனது 37 வயது பூர்த்தியாவதற்கு முன்னரே இறைவனடி சென்றுவிட்டார்கள். பிரதான வீதியில் குடிபதியாகியிருந்த இவரது குடும்பம் எமது இல்லத்துக்கு அண்மையில் குடிபெயர்ந்த பின்னர்தான் இவரது அறிமுகம் எனக்குக் கிட்டியது. குறுகிய காலத்திற்குள் அவருடைய ஒவ்வொரு பேச்சும் சிந்திக்கத்தக்க வகையில் இருந்ததைச் சிறப்பம்சமாகக் கண்டேன். மஸ்ஜிதுல் கபீரில் நம்பிக்கையாளர் சபையின் உறுப்பினராகவிருந்து நல்ல கருத்துக்களை முன்வைப்பதும்; இக்கருத்துக்கள் எல்லோரது வரவேற்பையும் பெறுபனவாகவே காணப்படும். அவரது பிள்ளைகள் எல்லோரும் இன்று நல்ல நிலையில் இருப்பதற்கு அவருடைய நல்ல சேவைகள் காரணமாகின்றன. அவருக்காக நான் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். ஏ. அப்துல் ரஹ்மான் மரைக்கார்

அப்துல் ரஹ்மான் மரைக்கார் அவர்கள் ஏ.ஆர்.ஏ. அஸீஸ் சேர் அவர்களின் தந்தையாவார். 1918ம் ஆண்டு பிறந்த இவர்கள் 1992ஆம் ஆண்டு வபாத் தானார்கள்.

மத்திய பள்ளிவாசலின் உருவாக்கத்தில் ஒருவராகவிருந்ததோடு மஸ்ஜிதுல் கபீரின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் இருந்தார். றகுமானியா நெசவாளர் சங்கத்தின் தலைவராகவிருந்து நெசவுத்தொழில் விருத்திக்கு. ஆக்கமும் ஊக்கமும் வழங்கியதோடு, தனது வீட்டின் அதிகமான கைத் தறிகள், குழித்தறிகள் மூலம் ஆடை உற்பத்தியிலும் ஈடுபட்டார்கள். அன்னாரின் ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். ஏ.சீ.ஏ. வாஜித், ஏ.சீ.ஏ. மாஜித் மவ்லவி

சிறுவால் ஆலிம் என்று அழைக்கப்படும் அப்துல் கரீம் ஆலிம் அவர்களின் இரண்டு புதல்வர்களுமே வாஜித், மாஜித் ஆகிய இருவருமாவர். கிழக்கிலங்கை காகிதசாலையில் கடமையாற்றிய வாஜித நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் அவ்வாலை மூடப்பட்ட பின் வெளிநாட்டில் வேலைபார்த்து நாடு திரும்பினார். பல சமூகப்பணிகளில் ஈடுபட்ட இவர் மஸ்ஜிதுன்நூர் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும், சமாதான சபை உறுப்பினராகவும் சேவைகள் புரிந்தார். இறக்கும் போது பிறப்பு இறப்புப் பதிவுகாரராகவிருந்தார்.

மாஜித் மவ்லவி அவர்கள் ஆசிரியராக கடமையாற்றியதோடு நல்ல பல சேவைகள் புரிந்ததோடு, அகதியாப் பாடசாலை நிறுவனராகவும், வாராவாரம் இஸ்லாமிய சிந்தனைகளை துண்டுப்பிரசுரங்கள் மூலம் வெளியிட்டு வருபவராகவும் இருந்து வந்தார். இவ்விரு சகோதரர்களின் மறுமை வெற்றிக்காக இறைவனைப் பிரார்த் திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். கே.எல். அலியார் மரைக்கார்

கே.எல். அலியார் மரைக்கார் மஸ்ஜிதுல் கபீரின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்தவர். ஸம்ஸ் மத்திய கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டவர். மருதமுனை வைத்தியசாலைக்கான இடம் தேவைப்பட்ட காலத்தில் இவர் மஸ்ஜிதுல் கபீரின் தலைவராகவிருந்த வேளையில் வைத்தியசாலைக்கான நிலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அனுசரணை யாகவிருந்து தொழிற்பட்டவர்.

நெசவுத்தொழில் பிரதான தொழிலாக இருந்து வர்த்தகத்திலும் பாடுபட்ட துடன் பொதுவேலைகள் சமாதான சபையின் செயற்பாடுகளிலும் பங்கெடுத்துக் கொண்டார். "மாண்புறும் மருதமுனை" நூலின் மூலம் இவரையும் நினைவு கூர்கின்றேன்.

மர்ஹூம். ஐ.எல். அப்துல் றகீம் மரைக்கார்

எனது தந்தை அப்துல் றஹீம் மரைக்கார் அவர்களை இம்மலரினூடாக நினைவு கூர்வதில் பெருமையடைகின்றேன். எங்களின் நல்வாழ்வுக்காக அவர்கள் செய்த தியாகங்கள் அளப்பெரியன. நெசவு, மீன்பிடி, விவசாயம், தையல், பொட்டணி வியாபாரம், சில்லறைக்கடை என எல்லாத் தொழில்களிலும் ஈடுபாடுடையவராக இருந்து உழைத்தமை எமது கண்களைக் கசியவைக்கின்றன.

மஸ்ஜிதுல் கபீரின் நம்பிக்கை சபை உறுப்பினராகவும், றகுமானியா சங்கத்தின் செயலாளராகவும், மேட்டுவட்டை வடகண்டத்தின் செயலாளராகவும், மஸ்ஜிதுல் ஹிதாயாவின் செயலாளராகவும், பொருளாளராகவும் இருந்து ஆர்ப்பாட்ட மில்லாமல் பணியாற்றியவர். எல்லோரிடமும் இனிமையாகப் பழகுபவர். இவரது நண்பர்கள் என்னைக் காண்கின்றபோது இவரது சிறந்த பண்புகளைப் பற்றி சிலாகித்துப்பேசுவது இன்றும் என் நினைவில் பசுமையாகவுள்ளது. 1920ஆம் ஆண்டு பிறந்த இவர்கள் 1998-03-31ஆம் ஆண்டு இறைவனடி எய்தினார்கள். அன்னாரின் ஈடேற்றத்துக்காக இருகரமேந்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். சின்னத்தம்பி ஹாஜியார்

நூலார்ர சின்னத்தம்பி என்றும் அக்கிராசனர் சின்னத்தம்பி என்றும் ஊரவர்கள், நண்பர்களால் அழைக்கப்பட்ட இவர் இப்றாஹிம் ஹாஜியாரின் தந்தையாவார். கரவாகு வடக்கு கிராம சபையின் அங்கத்தவராக இருந்த இவர்கள் 2012ஆம் ஆண்டு தனது மரணம் வரை தனது 95வது வயது வரை நல்ல தேகாரோக்கியமாக வாழ்ந்தது மட்டுமல்லாமல் ஐவேளைத் தொழுகையைத் தவறாமல் நிறைவேற்றுப வராகவும் இருந்தார்கள். சீப்பலஸ் ஹாஜியார் அவர்கள் எப்போதும் "எனது வாழ்க்கையில் வழிகாட்டியவர்" எனக்கூறிப் பரவசப்படுவதை நானறிவேன். எனது தகப்பனாருடன் நல்ல உறவை வைத்திருந்தார். இவரது மறுமைப் பேற்றுக்காக இருகரமேந்திப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். ஏ.சீ.எம். சாலிஹ் (போஸ் மாஸ்டர்)

போஸ் மாஸ்டர் என்றே நண்பர்களாலும் ஊரவர்களாலும் அழைக்கப் படும் இவர்கள் எமது கிராமத்தின் மூன்றாவது உப தபாலதிபராவார். பிரதான வீதியில் உப தபாலகம் அமைந்திருந்தபோது பாடசாலை கலைந்து நாங்கள் வரும்போது அவரது தொலைபேசி உரையாடலை ஆசையுடன் கேட்பதுண்டு. மருதமுனை வாசிகசாலையின் ஆரம்பகர்த் தாக்களில் இவரும் ஒருவர். ஷம்ஸ் மத்திய கல்லூரி தரமுயர்வின்போது தம்மாலான முழுப்பங்களிப்பையும் வழங்கிய தோடு அரசியலிலும் தமது சிறந்த வழிநடாத்துதலை வழங்கியுள்ளார். இவரை மாண்புறும் மருதமுனை நினைவுகூர்கிறது. இவரது தாயார் அகவை நூறையும் தாண்டி இன்றும் எம்மத்தியில் வாழ்கிறார் என்பது விஷேட தகவலாகும்.

மர்ஹூம். யூ.எல். இஸ்மாயில் மரைக்கார்

1917ம் ஆண்டு மருதமுனையில் பிறந்த இஸ்மாயில் மரைக்கார் 1938ம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்றார். நாட்டின் பல பிரதேசங்களிலும் சேவையாற்றிய இவர் தலைமையாசிரியராக அல்-மனார், நற்பிட்டிமுனை அல்-அக்ஷா போன்ற பல பாடசாலைகளிலும் 1978ம் ஆண்டு தனது ஓய்வின்போது பாத்திமாக் கல்லூரியில் சேவையாற்றியிருந்தார். 1994இல் காலமான இவர் இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். மஸ்ஜிதுன் நூரில் பேஷ் இமாமாகச் சிலகாலம் கடமைபுரிந்த இவரை மாண்புறும் மருதமுனையூடாக நினைவு கூர்கிறேன். இவரின் மறுமை வெற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

மர்ஹூம். ஏ. அஹமத் லெவ்வை அதிபர்

ஆசிரிய உலகில் அஹமத்லெவ்வை அதிபர் அவர்கள் அனைவராலும் விரும்பப் படும் ஒரு ஆசானாகத் திகழ்ந்தவர்கள். அல்-மனாரில் அதிபர் ஆசனத்தைப் பெற்றதும், தம்மாலான பங்களிப்பினை தான் பிறந்த மண்ணுக்கு ஆற்ற வேண்டும் என்னும் துடிப்பில் பல நுட்பமான கற்பித்தலை, சகல ஆசிரியர்களும் மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணப்பாங்கில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்கள். இவர்கள் அதிபராக அல்-மனாரை அலங்கரித்தபோது, நாள் முழுவதும் "மாணவர் ஆசிரியர் பாடசாலைத் தொடர்பு" மிகவும் ஆரோக்கியமாகக் காணப்பட்டதுடன் ஏனைய கல்விக் கூடங்களுக்கும் அது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் பாடசாலை நெருங்கிய நட்புறவுடன் மாணவர் ஆசிரியர் காணப்பட்டனர். ஆர்வமுள்ள மாணவர்கள் தம் கல்வியின் தேடலைப் பூர்த்தி செய்துகொள்ள நல்ல சந்தர்ப்பமாய் அமைந் தமையால் பல மாணவர் தம் பரீட்சைகளில் சிறப்புடன் சித்தியடைய வாய்ப்பாக அமைந்தது. அன்னாரின் அளப்பரிய சேவையினை பாராட்டும் இவ்வேளை, மறுமை வாழ்விலும் பாராட்டுப் பெறும் வண்ணம் இருகர மேந்திப் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். எம்.எம்.எஸ்.எம். முஸ்தபா மவ்லானா (பாஸில்)

முஸ்தபா மவ்லானா அவர்கள் நாடறிந்த ஒரு அறிஞரும் பன்னூலாசிரியரு மாவார். இஸ்லாமிய மார்க்கம் தூயவழியில் பின்பற்றப்படல் வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாகவிருந்து இறுதிவரை போராடி வந்தார்.

மார்க்கத்தின் பெயரால் அனுஷ்டிக்கப்பட்ட பல அனாச்சாரங்களை எழுத்து மூலமும், பிரச்சாரங்கள் மூலமும் எதிர்த்த இவர் அதிகமான மக்களால் மரியா தையுடன் பார்க்கப்பட்டார். இவரது விஷேட அம்சம் சகலதுறை அறிவையும் பெற்றிருந்ததே. அரசியல், விளையாட்டு, சமயம் ஏன் சினிமா விடயங்களைக் கூட அறிந்திருந்தார். தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் அனைத்து சஞ்சிகைகளும் நாட்டில் வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என எல்லாவற்றையும் படிக்கும் ஒரு சிறந்த வாசகராகவும் இருந்தார். உலமாக்களுக்கேற்படும் சந்தேகங்கள் இவரால் பலமுறை தீர்க்கப்பட்டதனை நம்மால் அறிய முடியும்.

06-04-1924இல் பிறந்த முஸ்தபா மவ்லானா அவர்கள் இந்தியாவில் சன்மார்க்கக் கல்விகற்று வெளியேறினார். 1947இல் காரைதீவு மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் நியமனம்பெற்று மேலும் பல பாடசாலையிலும் கடமையாற்றினார். 12-02-2009ம் ஆண்டு வபாத்தானார்கள். இப்பெரியாரை இந்நூல் வாயிலாக நினைவு கூர்வதில் பெருமையடைகிறேன். இவரின் மறுமை வெற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

மர்ஹூம். எம்.எம். இப்றாகிம் ஹாஜியார் அதிபர்

அல்-ஹாஜ். எம்.எம். இப்றாஹிம் அதிபர் அவர்கள் ஆசிரியராக, அதிபராகக் கடமைபுரிந்தவர்கள். அல்-மனாரில் உதவி ஆசிரியராகக் கடமைபுரிந்த இவர்கள் அதிபராக பதவியுயர்வு பெற்று 1962இல் கல்முனைக்குடி கடற்கரை முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்போது அல்-பஹ்றியா ம.வி.) அதிபராகக் கடமைபுரிந்தவர்கள். அக்கால மரணப்பணிக்கொடை நிதியத்தின் செயலாள ராகவும் பொருளாளராகவும் கடமைபுரிந்த மர்ஹூம் ஏ.எம். சாலி அதிபர் அவர்கள் பொருளாளர் பதவிகளை இராஜினாமாச் செய்ய, அப்பதவி அல்-ஹாஜ் எம்.எம். இப்றாஹிம் அதிபர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மிகுந்த கரிசனையுடன் இப்பதவியினை அன்னார் மேற்கொண்டதுடன் மரணப் பணிக்கொடை நிதியத்தின் வளர்ச்சிக்கும் தன்னாலான பங்களிப் பினைச் செய்தார்கள். மருதமுனை அல்-மனாரில் சேவை செய்யும்போது "ஜோதி மதம்" என்னும் தலைப்பில் இஸ்லாம் பாடத்திற்கான ஒரு பாடப் புத்தகத்தினை, அல்-ஹாஜ். மௌலவி எம்.எம். முஸ்தபா மௌலானா வுடன் இணைந்து தயாரித்து வெளியிட்டார்கள். இதனால் க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்குக் குறித்த பாடத்தில் தேர்ச்சிபெற மிகவும் உதவியாய் அமைந்தது. மௌலவி ஆசிரியர்கள் இல்லாத பாடசாலையில் கற்ற முஸ்லிம் மாணவர்கள் இப்பாடநூலைக்கற்று சிறப்புடன்சித்தியடைய வசதியாய் அமைந்தது. ஆசிரியராய், அதிபராய், அளப்பரிய சேவையாற்றிய அன்னார் மறுமை வாழ்விலும் சிறப்புற இரு கரமேந்திப் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம் E. அலியார் அதிபர்

மருதமுனை பெற்ற மாண்புறும் ஆசிரியர்களில் மர்ஹூம் E. அலியார் அதிபர் அவர்களும் ஒருவராவார். தான் கற்ற கல்வி, தம் சமூகத்திற்கும் சென்றடைய வேண்டும் என்னும் நோக்கில் தன் வீட்டிலேயே பின்தங்கிய மாணவர்களுக்கு இலவசமாக சகல பாடங்களையும் போதிக்கும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார்கள்.

தான் திருமணம் முடித்த தன் வீட்டிலேயே இலவச மேலதிக வகுப்புக்களை நடாத்தி மாணவர் மனதில் நல்லெண்ணத்தைப்பெற்று கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு சக்தியாய் அமைந்தார்கள். 1974இல் இறையடி சேரும்வரை மருதமுனை கல்வி வளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பினைச் செய்து சாதனை படைத்தார்கள். மறுமை வாழ்விலும் சாதனை படைக்க இறைவனை இறைஞ்சு வோம்.

மர்ஹூம் ஜனாப். கே.எம். சம்சுத்தீன் (ஓய்வுபெற்ற அதிபர்)

மர்ஹூம் கே.எம். சம்சுத்தீன் அதிபர் அவர்கள் மருதமுனைக் கிராமத்தின் ஆசிரியர் சமுகத்தின் மூத்த மகன் என நாம் அறிவதில் மிகவும் மனமகிழ்கிறோம். அன்னார் தன் கல்விப் பணியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடமைபுரிந்து இறுதியாக தான் பிறந்த மண்ணிற்கு சேவை செய்யும் நோக்கில் இடமாற்றம் பெற்று - அப்போது பெண்கள் பாடசாலையாகவிருந்த அல்-ஹம்றா வித்தியாலயத்தின் அதிபராக கடமையேற்றார்கள். க.பொ.த. (சா/த) வகுப்புக்களைக் கொண்ட ஒரு பாடசாலையாக அதனை வளர்த்து கலவன் பாடசாலையாகவும் ஆக்கி மருதமுனையின் கல்வியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார்கள். இடை விலகிய பல மாணவர்கள் இப்பாடசாலையில் இணைத்துக்கொள்ளப் பட்டு இரவு பகல் என்றில்லாது பாடங்கள் நடாத்தப்பட்டு பொதுப் பரீட்சைகளில் பலர் தேற வழிசமைத்தார்கள்.

பாடசாலையில் கண்டிப்புடன் கடமைபுரிந்ததன் காரணமாக பல மாணவியர் பொதுப் பரீட்சைகளில் சிறப்புடன் சித்தியெய்தியமை குறிப் பிடக்கூடிய அம்சமாகும். 1988ம் ஆண்டின் பிற்பகுதியில் அவர்கள் மரணிக்கும் வரை நாம் கிராமத்திற்கும் மக்களுக்கும் தன்னாலான சேவையினைச் செய்தார்கள்.

மாணவர் சமுதாயத்தை நல்வழிப்படுத்த அன்னார் மேற்கொண்ட சேவையினை நினைவுகூறும் இவ்வேளை, அவரின் மறுமை வாழ்வு வளம்பெற வல்ல இறைவனை இருகரமேந்தி இறைஞ்சுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம் ஜனாப். ஜே.எம்.எம். அப்துல் காதிர் அதிபர்

மருதமுனை ஈன்றெடுத்த மங்காப் புகழ்பூத்த ஆசிரியர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர்கள்தான் மர்ஹூம் ஜனாப் ஜே.எம்.எம். அப்துல் காதிர் அதிபர் அவர்களாவர். நமது அயல்கிராமமான சம்மாந்துறையில் மிகச்சிறப்புடன் கடமை புரிந்த காலை அந்நாளில் புகழ் இப்பிரதேசம் முழுவதும் ஜொலித்தது எனின் அது மிகையாகாது. இக்காலத்தே இவர்களின் இளைய சகோதரர் மர்ஹூம் ஜனாப். ஜே.எம்.எம். அபூபக்கர் அவர்கள், சம்மாந்துறையில் தன் துணையைத் தேர்ந்தெடுத்ததும் ஒரு வரலாறாக அமைந்தது எனலாம். நமது கிராமத்தில் பெண் ஆசிரியர்கள் அப்போது இருக்கவில்லை. எனவே இவரின் திருமணத்தின் பின்னர் நமது பெண்களும் கல்வியில் அக்கறை செலுத்தி, ஆசிரியர் தொழிலில் ஈடுபட ஒரு வழியாக இத்திருமணம் அமைந்தது எனலாம்.

மர்ஹூம் ஜனாப். ஜே.எம்.எம். அப்துல் காதிர் அதிபர் அவர்கள் நமது கிராமத்தின் பல தேவைகளை அப்போதைய அரசியல்வாதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்து அவற்றை நிறைவுசெய்ய ஆவன செய்தார்கள். அல்-மனாரின் வளர்ச்சியுடன் மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் அபிவிருத்திக்கும் அன்னார் பாடுபட்டு வெற்றியும் கண்டார்கள். இவர்கள் தன் பிள்ளைகளின் கல்வியிலும் அக்கறை காட்டியதன் காரணமாகத் தன் மூத்த மகனை டாக்டர் சித்தீக் அவர்களை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்பித்து பல்கலைக்கழகம் புகச்செய்து பல் வைத்தியராக ஆக்கி, இன்று Plastic Surgeon ஆக திகழ வழிசமைத்தார்கள். அவர்களின் ஏனைய ஆண், பெண் பிள்ளைகளும் கல்வியில் தேர்ச்சி பெற்று மிளிர்வதை இக்கிராமம் அறியும். 1980ம் ஆண்டின் பிற்பகுதியில் மரணமடைந்த அன்னார் இவ்வுலக வாழ்வில் எவ்வளவு புகழுடன் வாழ்ந்தார்களோ அதைவிட தன் மறுவுலக வாழ்விலும் புகழ்பூத்து வாழ வல்லநாயனைப் பிரார்த்திப்போமாக.

மர்ஹூம். எஸ்.எம்.எம். பழீல் (ஆங்கில ஆசிரியர்)

1938ஆம் ஆண்டில் மருதமுனையில் பிறந்த இவர் அல்-மனார் மத்திய கல்லூரியில் தமது ஆரம்பக் கல்வியைக் கற்றார். 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்த காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும் வாய்ப்பைப் பெற்றார். 1959 - 1960 ஆகிய காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ்மொழி மூலமான பயிற்சியைப் பெற்றார். பின்னர் 1969 - 1970 காலப்பகுதியில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆங்கில மொழி மூலமான பயிற்சியைப் பெற்றார். அல்-மனார் மத்திய கல்லூரியில் நீண்ட காலம் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார். அல்-மனார் மத்திய கல்லூரியின் வளர்ச்சிப் படிகளில் அயராது பாடுபட்டுழைத்தவர், விளையாட்டுத் துறை, சாரணியம் போன்ற பாடங்களில் மாணவர்களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்றவர். சிறந்த உதைபந்தாட்ட வீரரும், நடுவருமான இவரை சொர்க்கத்தில் நுழைவிப்பானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம் ஐ.எம். அப்துல் குத்தூஸ் அதிபர்

மர்ஹூம். ஜனாப். ஐ.எம்.ஏ. குத்தூஸ் அதிபர் அவர்கள் இப்றாலெப்பை மரைக்கார் அவர்களின் மூத்த புதல்வராவார்கள். இவர்களின் சகோத ரர்கள் பலருள் மர்ஹூம் ஜனாப். ஐ.எம்.எம். ஐயூப் அதிபரும் ஒருவரா வார்கள். பல சகோதர சகோதரிகளுடன் பிறந்த ஜனாப் குத்தூஸ் அதிபர் அவர்கள் 1959ல் அமையப்பெற்ற மருதமுனை கடற்கரை அ.மு.க. பாட சாலையில் அதிபராகக் கடமையாற்றி அங்கிருந்தே ஓய்வும் பெற்றார்கள். முதலாம் தர தலைமையாசிரி யராகக் கடமையாற்றும் காலை அவர்கள் பாடசாலையின் அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாயிருந்து தன்னால் முடிந்தளவு அப்பாடசாலையின் உயர்வுக்கு வழிசமைத்தார்கள்.

பாடசாலை முடிவடைந்ததும் நேரடியாக கல்முனைக் கல்விக் காரியாலயம் சென்று பாடசாலைத் தேவைகள்பற்றி கல்வியதிகாரிகளை நேரில்கண்டு கதைத்து அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். ஆரம்பத்தில் ஐந்தாம் வகுப்புவரை வகுப்புகளைக் கொண்டிருந்த அப்பாடசாலை தொடர்ந்து 9ம் வகுப்பு வரையும் வகுப்புகளை நடாத்த அனுமதித்ததுடன் தொடராக க.பொ.த. சாதாரண தரம் வரை நடாத்த அனுமதிக்கப்பட்டது.

மர்ஹூம் ஜனாப். குத்தூஸ் அதிபரின் அயராத முயற்சியினாலும் அபிவிருத்திச் சங்க உறுப்பினரின் முயற்சியினாலும் இப்பாடசாலை பல வசதிகளைப் பெற்ற துடன் கல்வியிலும் சிறப்புற்று விளங்கியது. அல்லாஹ் அன்னாரின் இவ்வுலகச் சேவைகளைப் பொருந்திக் கொண்டதுபோல் மறுமை வாழ்வையும் வெற்றி யாயமைந்திட இருகரம் ஏந்தி இறைஞ்சுகிறோம்.

மர்ஹூம். எஸ்.எம்.ஏ. மத்தீன் அதிபர்

1944இல் மருதமுனையில் பிறந்த இவர் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் தமது ஆரம்பக் கல்வியை மேற்கொண்டவர். அதன் பின்னர் 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்து, காத்தான்குடி மத்திய கல்லூரியில் பயின்றவர். 1962ஆம் ஆண்டில் ஆசிரிய நியமனம் பெற்ற இவர் 1963 - 1964 ஆகிய காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசா லையில் பயிற்சி பெற்றுத் தேறியவர்.

அதிபர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்த இவர் பல பாடசாலைகளில் அதிபராகவிருந்து வந்துள்ளார். சாளம்பைக்கேணி முஸ்லிம்பாடசாலை, அல்-மினன் பாடசாலைகளில் சில காலம் அதிபராகக் கடமை புரிந்துள்ளார். எஸ்.எம்.ஏ. மத்தீன் அதிபர் அவர்கள் அல்-மனார் மத்திய கல்லூரியில் உதவி அதிபராக இருந்துள்ளார். அதேவேளையில் மாணவர்களுக்குத் தமிழ் மொழியினைச் சிறப்பாகக் கற்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அல்-மனார் மத்திய கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் அக்கறையுடன் செயற்பட்டு வந்தமை குறிப் பிடத்தக்கதாகும். விளையாட்டுத்துறையில் அதிக ஆர்வம் காட்டி வந்த இவரது மறுமைப் பேற்றிற்காக இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம் ஐ. ஹபீப் முஹம்மது ஆசிரியர்

மருதமுனையில் 1945இல் பிறந்த இவர் அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பயின்றார். 1964-06-01இல் ஆசிரிய சேவையில் கால் பதித்த இவர் 1966 - 1967 காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். இவருடன் ஒரே காலத்தில் பயிற்சி பெற்றவர்கள் இருவராவார். அவர்களில் ஒருவர் எம்.ஏ.எம். ஜெலீல், மற்றவர் எஸ்.எம்.எஸ்.எச். பாரிமவ்லானா என்பவர்கள் ஆவர். மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியிலும், சம்ஸ் மத்திய கல்லூரியிலும் ஆசிரியப் பணிபுரிந்தார். இவர் நற்பண்புகள் குடிகொண்ட நல்லாசிரியராவர். பழகுவதற்கு இனிமை யானவர். மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் முன்னின்று உழைக்கக் கூடியவர். மாணவரின் கல்வி வளர்ச்சியில் இரவும், பகலும் வகுப்புக்களை நடாத்தி மாணவர்களின் பேரன்பைப் பெற்றுக்கொண்டவர்.

அல்-மனார் மத்திய கல்லூரியை அபிவிருத்தி செய்வதிலே முன்னின்று உழைத்த குழுவினரில் முதன்மையானவர். கல்விப்பணி மன்றத்திலே ஓர் அங்கத்தவராயிருந்து அரும்பணியாற்றி பாடசாலைத் தளபாடங்கள், விஞ்ஞான அறைகள், கட்டடங்கள் முதலிய பல வசதிகளைப் பெறுவதில் அயராது பாடுபட்டுழைத்தார். ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகளே ஆசிரியப் பணிபுரிந்த இவர் 13-04-1977ஆம் திகதி இறையடி சேர்ந்தார். இவரது மறுமை வெற்றிக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம் ஐ.ஏ. அமீன் (பெரும்பாக உத்தியோகத்தர்)

1950இல் மருதமுனையில் பிறந்த இவர் அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்வி பயின்றார். க.பொ.த. உயர்தர வகுப்புக்களை வெளிப்பாடசாலைகளில் கற்றுத் தேறி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கற்று பட்டதாரியாக வெளியானவர். இவர் பழகுவதற்கு மிகவும் இனிமையான சுபாவம் படைத்தவர். நற்பண்புகள் பல நிறைந்தவர். அம்பாரையில் பெரும்பாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய வேளையில் இறைவனடி சேர்ந்தார். "இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி றாஜிஊன்". இவரது மறுமை வெற்றிக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். மௌலவி அப்துல் கரீம் (பாக்கவி) ஆலிம்

மருதமுனையில் தோன்றிய ஆலிம்களில் முதன்முதல் இறையடி சேர்த்தவர்கள் இவர்களேயாவர். இவர் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் முதலாவது அரபு ஆசிரியர் ஆவர். சிறந்த மார்க்க மேதை. இவர்கள் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும் பாட போதனை செய்தவர். இவர் நோன்பு காலங்களில் பெண்களுக்கான மார்க்கக் கல்வியைப் போதனை செய்வதிலும் தஃவாப் பணியினை மேற்கொண்டு அரும்பணி புரிந்தமை குறிப்பிடத்தக்க தாகும். இவரது மறுமை வெற்றிக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். கே. அல்லாபிச்சை அதிபர்

1942ஆம் ஆண்டில் மருதமுனையில் பிறந்த இவர் மிகுந்த உயரமும், வாட்ட சாட்டமான அழகிய தோற்றத்தையும் உடையவர். பழகுவதற்கு மிகவும் இனிமை யானவர். 1962இல் ஆசிரிய நியமனம் பெற்ற இவர் 1964 - 1965 ஆகிய ஆண்டு களில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றார். ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றினார். இறக்காமம் அல்-அஷ்றப் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றினார். அல்-மனார் மத்திய கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய வேளையிலேயே மாரடைப்பு நோயினால் அகால மரணமடைந்தார். இவரது மறுமை வெற்றிக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். எஸ்.எம். நழீம் அதிபர்

1939ஆம் ஆண்டில் மருதமுனையில் பிறந்த இவர் அல்-மனார் மத்திய கல்லூரியில் தமது ஆரம்பக்கல்வியைப் பெற்றார். பின்னர் உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார். 1960 / 1961 ஆகிய கால கட்டத்தில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். இவர் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் க.பொ.த. (சா/த) மாணவர்கள் நலன்கருதி தமிழ்மொழியினை சிறப்பாகக் கற்பித்து உயர்வான அடைவு மட்டங்களைப் பெறுவதற்கு வழி வகுத்தார். பெரியநீலாவணை புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் அதிபராகவிருந்த பொழுது எதிர்பாராத விதமாக இறையடி சேர்ந்தார். இறைவன் அன்னாருக்கு உயர்வான சுவர்க்கத்தை வழங்குவானாக.

மர்ஹூம். மவ்லவி பீ.எம். அஹமது லெவ்வை ஆலிம்

இவர்கள் மருதமுனையில் பிறந்த முதலாவது ஆலிம் என்ற பெருமையைப் பெற்றுக் கொள்கிறார்கள். 1898ஆம் ஆண்டில் பிறந்த இவர்கள் இந்தியாவில் தமது மார்க்க கல்வியைப் பெற்றுக்கொண்டார்கள். மருதமுனை மஸ்ஜிதுந்நூர் பள்ளிவாசலில் கதீபாக இருந்திருக்கிறார்கள். இவர்கள் அல்-மனார் மத்திய கல்லூரியில் அரபுப் பாடம் போதனை செய்யும் ஆசிரியராக அமர்ந்து சிறப்பான முறையில் சமய போதனை செய்துள்ளார்கள். "கணீர்" என்ற குரலையுடைய இவர்கள் மிகவும் கூடிய ஆளுமைச் சக்தியை உடையவராகக் காணப்பட்டார்கள். இவரைப் போன்ற எவருக்கும் அஞ்சாத அர்த்த புஷ்டியுடன் கற்பிக்கும் ஒரு சிறந்த ஆசிரியரைக் கண்டுகொள்வது மிகவும் அபூர்வமானதாகும். இவர்கள் 5ஆம் குளணியில் காலமானார்கள். இவரது மறுமை வெற்றிக்காகப் பிரார்த்திக கின்றேன்.

11597-04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம். எம்.எம். சமுசத்தீன் ஆசிரியர்

மீராசாஹிபு முகம்மது சமுசத்தீன் ஆசிரியர் அவர்கள் தம்பாளை கல்வி வலயத்திலுள்ள நானூறு கிராமத்திலுள்ள பாடசாலையில் தனது முதல் நியமனத்தை பெற்று சில காலம் கல்விப்பணி புரிந்தபின், மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுவந்தார். ஷம்ஸ் மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் தன்னாலான அதிகபட்ச பங்களிப்பினை செய்தார். ஐந்து பெண் மக்களின் தந்தையான இவர் பதவியிலிருந்து ஓய்வுபெற முன்னரே இறையடி எய்தினார். இவருடைய ஈருலக வெற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மர்ஹூம். வீ. எம். இஸ்மாயில் அதிபர் (மருதூர்க்கொத்தன்)

மருதூர்க் கொத்தன் அவர்கள் நாடறிந்த எழுத்தாளன். சிறுகதை, தொடர்கதை, நாவல், கவிதைகள் எனப் பல ஆக்கங்களை எமக்கு வழங்கியவர். நல்ல ஆசானாக விருந்து மாணவர்களின் கல்வித்தாகம் தீர்த்தவர். அல்-மனாரின் அபிமான ஆசானாகவிருந்து கல்விச்சேவை புரிந்த பின் ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் பொறுப்பையேற்று அதன் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உரமாயிருந்து பணியாற்றியவர். 1959ல் ஷம்ஸ் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட வேளை அதன் முதல் ஆசானாயிருந்து சேவையாற்றியவர்.

கல்முனை எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் பதவியை அலங்கரித்தவர். சிறந்த விமர்சகர், பேச்சாளர். 'அ' என்ற முதல் எழுத்தை 1959ம் ஆண்டு மண்ணில் என் கை பற்றி எழுதித்தந்த என் முதல் ஆசான் மருதூர்க்கொத்தன் வீ.எம். இஸ்மாயில் அதிபர் அவர்களின் மறுமைப் பேற்றிற்காக இருகரமேந்தி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

மர்ஹூம். ஹாமிட்லெப்பை (வண்டிக்கார ஹாமிது)

மருதமுனை-03, மக்காமடி வீதியில் வசித்து வந்த வண்டில்கார ஹாமிதுப் பிள்ளை என்றால் எவராலும் மறக்க முடியாது. மஸ்ஜிதுல் ஹிதாயாவில் முஅத்தினாகவும், ஹதீபாகவும் கடமையாற்றிய இவர் நிழல் மரங்களை வளர்ப்பதில் அதிக நாட்டம் கொண்டவர். கடல் மணல் ஏற்றி விற்கும் தொழிலில் ஈடுபட்ட இவர் தனது வண்டியில் நிரந்தரமாகவே இரண்டு குடங்களை வைத்திருப்பார். வீட்டிலிருந்து நீர் நிரப்பிய குடத்துடன் வருவதும், கடற்கரைப் பிரதேசங்களில் அவரால் நடப்பட்ட மரங்களுக்கு நீர் வார்ப்பதும் அவரது வாடிக்கையான விடயங்கள். 1965ல் மஸ்ஜிதுல் ஹிதாயாவில் கிணறு ஒன்று கட்டப்படும் வரை தனது வீட்டிலிருந்து நீர் கொண்டுவந்து அத்தனை மரங்களுக்கும் நீர் வார்த்ததன் பயனால் அதிகமான மரங்கள் வளர்ந்தன. வீட்டுத்திட்டம், மைதானம் என அமைக்கப்பட்டதனால் அவை வெட்டப்பட்டனவாயினும் மஸ்ஜிதுல் ஹிதாயாவில் ஒரு ஆலமரம், மருதமுனை மையவாடியில் தற்போதும் அவரால் வளர்க்கப்பட்ட மரங்களிற் சில அவரது சேவையை நினைவூட்டுவதாக வுள்ளன. மறுமையிலும் இவருக்கு அல்லாஹ் மறுமையில் நிழல் கொடுப்பானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்து சென்ற சொந்தங்களும், தேடிவந்த உறவுகளும்

எம்.ஏ.எம். ஜெலீல் எம்.ஏ. - ஏ.ஆர்.ஏ. சத்தார், ஜே.பி.

பிரிந்து சென்ற சொந்தங்கள்

❑ ஈ.எல்.ஏ. ஹஸன்

இவர் ஒரு தபால் அதிபர். மருதமுனையில் 1927-04-10இல் பிறந்தவர். இவரின் தந்தையார் இப்றாகீம் லெவ்வை ஆவார். இவர் கண்டியார் என்றும், கண்டியார் வைத்தியர் என்றும் அழைக்கப்பட்டார். இவரின் தந்தையும் மருதமுனையிலேயே பிறந்தவர். அபுல்ஹஸன் அவர்கள் கண்டியுள்ள "தெய்யன்னவெல" என்னும் பகுதியிலுள்ள இமாம்பீவி என்னும் பெண்மணியைத் திருமணம் செய்தார்.

இவர் தமிழ் இலக்கண, இலக்கிய அறிவு நிரம்பப் பெற்றவர். பாடல்கள் இயற்றுவதில் வல்லவர். இவர் இயற்றிய ஒரு பாடலை மருதமுனையைச் சேர்ந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இஸ்லாமிய கீதப் பாடகியான எம்.ஜே. றூபியா அவர்கள் பாடி இவருக்குப் பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடல் "நபி முஸ்தபா முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்" என்று தொடங்கும் பதினாறு அடிகளைக் கொண்டது.

❑ கே.எல்.எம். இப்றாகீம்

இவர் மருதமுனையில் 1922ஆம் ஆண்டில் பிறந்தவர். ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்தவர். அக்கரைப்பற்றில் திருமணம் செய்தவர். இவரின் மக்கள் தாஹிறா என்பவரும், தாஹிர் என்பவரும் ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றியவர்கள். கே.எல்.எம். இப்றாகீம் அதிபர் அவர்கள் மருதமுனையைச் சேர்ந்த சம்சுதீன் ஆலீம் அவர்களின் மைத்துனர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

❑ ஏ.ஏ. றஹீம்

மருதமுனையில் அசனார் தோம்புதோர் அவர்களின் மகனாக 1918ஆம் ஆண்டு பிறந்தார். 1941 - 1943 காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றவர். ஆசிரியராகவும், அதிபராகவும் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கல்முனைக் குடியில் திருமணம் செய்தவர்.

❑ ஜே.எம்.எம். அபூபக்கர்

இவர் மருதமுனையில் 1927இல் பிறந்து சம்மாந்துறையில் திருமணம் செய்தவர். மருதமுனையில் பிரபல தமிழறிஞராய்த் திகழ்ந்த ஜே.எம்.எம். அப்துல் காதிர் அவர்களின் சகோதரரும் ஆவார். அதிபராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❑ ஐ.எல். லத்தீப் ஆசிரியர்

இவர் மருதமுனையில் பிறந்தவர். இவரின் தந்தையார் இப்றாலெப்பை அவர்களாவார். மருதமுனை அரசினர் கலவன் பாடசாலையில் கல்வி பயின்றவர். இவர் 1961 - 1962 காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்டவர் ஆவார். அநுராதபுரத்தைச் சேர்ந்த கஹட்ட கஸ்த்திகிலிய பகுதியிலுள்ள முக்கிரியாவ என்னும் ஊரில் திருமணம் செய்தார். இவர் பிறந்த ஆண்டு 1939 ஆகும். ஆங்கில மொழியில் மிகுந்த திறமைமிக்கவர்.

❑ இஸ்ஸதீன் ஆசிரியர்

இவர் மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1965/66 காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றவர். மூதூரில் குடியேறி வாழ்ந்து வந்தவர். மருதமுனை ஹயாத்து முகம்மது புச்சர் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

❑ எஸ்.எம். இஸ்மாயில் ஆசிரியர்

மருதமுனையில் பிறந்த இவர் மருதமுனை அரசினர் கலவன் பாடசாலையில் கல்வி கற்றவர். இவர் 1960 - 1961 காலப்பகுதியில் ஆசிரிய பயிற்சியை கண்டி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பெற்றார். ஆசிரியராக நீண்ட காலம் பதவி வகித்தவர். இவர் பிறந்த ஆண்டு 1939 ஆகும். இவர் சாய்ந்தமருதில் திருமணம் செய்தார். பின்னர் 5ம் ஆண்டு குளணிப் பகுதியில் வாழ்ந்தார். அதன் பின்னர் கொழும்பு சென்ற இவர் தற்போது "ராஜகிரிய" என்னும் பகுதியில் வாழ்ந்து வருகிறார்.

❑ எம்.எஸ்.எம். பைஸால் அதிபர்

மருதமுனையில் பிறந்த இவர், சம்ஸ் மத்திய கல்லூரியில் கல்வி பயின்றவர். ஆசிரியராக இருக்கும்போது அதிபர் பரீட்சைக்குத் தோற்றி அதிலே அதிபராக உயர்வு பெற்றவர். தற்போது கல்முனை றோயல் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

இவர் 1972-06-06இல் பிறந்தவர். 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களின் அபிவிருத்திக்காக பல வெளியீடுகளைச் செய்து மாணவர்களை ஊக்கப்படுத்தி வருபவர். கலைமாணிப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத் தக்கது ஆகும்.

❑ எம்.ஐ.எம். அன்வர் ஆசிரியர்

இவர் மருதமுனையில் பிறந்தவர். மூதூரில் வசித்து வருபவர். 1966 - 1967 ஆகிய ஆண்டுகளில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றவர். உதைபந்தாட்டத்தில் சிறந்த வீரராகத் திகழ்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❑ ஏ.எல். முஹம்மது ஆசிரியர்

இவர் மருதமுனையில் 1939இல் பிறந்தவர். மருதமுனை அரசினர் கலவன் பாடசாலையில் கல்வி பயின்றவர். 1958 - 1959 ஆகிய காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றவர். அல்-மனார் மத்திய கல்லூரி உயர் பிரிவிலும், அல்-மனார் ஆரம்பப் பிரிவிலும் நீண்ட காலம் ஆசிரியராகக் கடமையாற்றியவர். ஏ.எல். முகம்மது ஆசிரியர் அவர்கள் சாய்ந்தமருதில் விவாக பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டவர். சில காலம் அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியில் ஆக்கத்தொழிற்பாடு, சித்திரம் முதலான பாடங்களை விரிவுரை செய்யும் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

❑ எம்.ஐ.ஏ. காதர் ஆசிரியர்

இவர் அன்வர் ஆசிரியர் அவர்களின் மூத்த சகோதரர் ஆவார். இவர் 1967 - 1968 ஆகிய காலப்பகுதிகளில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் பயிற்றப் பட்டவர். மருதமுனையில் பிறந்த இவர் மூதூரில் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார்.

❑ எம்.ஐ.எம். முஸாதிக் ஆசிரியர்

இவர் மருதமுனையில் பிறந்து மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்வி பயின்றவர். பின்னர் பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் ஏ/எல் வகுப்பு கற்றவர். பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான இவர் 74/77 காலப்பகுதியில் திறம்படக் கற்றுச் சமூக விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியாகியவர். கண்டியில் பல பாடசாலை களில் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றினார். அங்கு ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றினார். இவர் ஒரு சிறந்த ஊடகவியலாளராகத் திகழ்ந்தவர். கண்டியில் திருமணம் செய்தவர். "புது யுகம்" என்ற நூலை வெளியீடு செய்தவர். பல நூல்களுக்கு அணிந்துரை வழங்கியவர். ஏ.எல்.எம். இப்றாகீம் அதிபர் அவர்களின் புதல்வராவார். இவர் பிறந்த ஆண்டு 1953-02-03 ஆகும்.

❑ கே.ஏ. அலீம் ஆசிரியர்

இவர் மருதமுனையில் பிறந்து யாழ்ப்பாணத்தில் வர்த்தக ஆசிரியராகப் பயிற்சி பெற்று கண்டியில் ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் அதன் பின்னர் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணிபுரிந்தவர். கண்டியைச் சேர்ந்த இனிகலை என்ற இடத்தில் திருமணம் செய்து வாழ்ந்து வருபவர்.

❑ கே.எம். இக்பால் ஆசிரியர்

மருதமுனையில் பிறந்து திருகோணமலையைச் சேர்ந்த முள்ளிப்பொத்தானை என்னும் பகுதியில் பணிபுரிந்தவர். தற்போதும் அங்கேயே வாழ்ந்து வருபவர். மேலும் இவர் முள்ளிப்பொத்தானை முஸ்லிம் பாடசாலையில் அதிபராகவும் சில காலம் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❑ கே. றஹ்மத்துள்ளா

இவர் மருதமுனையில் பிறந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்வி கற்று மக்கள் வங்கியில் பணிபுரிந்து வந்தவர். தற்போது ஓய்வுபெற்றுள்ள இவருடைய இரண்டு பெண் மக்கள் வைத்தியர்களாக பட்டம் பெற்று வெளியேறியுள் ளார்கள்.

❑ டாக்டர் ஏ. சம்சமீர்

மருதமுனையில் பிறந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்வி கற்றுத் தேறியவர். தற்போது வைத்தியத் துறையில் மருத்துவராகப் பணிபுரிந்து வருகிறார். அல்லாபிச்சை அதிபர் அவர்களின் புதல்வரான இவர் சம்மாந் துறையில் திருமணம் செய்து அங்கேயே வாழ்ந்து வருகிறார்.

❑ எஸ்.ஏ.ஆர்.எம்.ஏ. கலீல் மவ்லானா

இவர் மருதமுனையில் 1951ஆம் ஆண்டில் பிறந்தவர். மஹரகம அரபுக் கல்லூரியில் பயின்று மவ்லவியாக வெளியாகியவர். கல்முனைக்குடியில் திருமண வாழ்க்கையை மேற்கொண்டவர். சிலகாலம் குவாசி நீதிபதியாகக் கடமையாற்றியவர்.

❑ எம்.எஸ்.ஏ.எம். மசூத்

மருதமுனையில்1957இல் பிறந்தவர். சாய்ந்தமருதில் திருமணம் செய்து வாழ்பவர். சம்சுதீன் ஆலிம் அவர்களின் புதல்வராவார். கல்முனை மக்கள் வங்கியில் முகாமை யாளராகக் கடமையாற்றிய இவர் தற்போது கொழும்பில் கடமைபுரிந்து வருகிறார்.

❑ இஸட்.எம். நதீர் மவ்லவி (உதவிக் கல்விப்பணிப்பாளர்)

மருதமுனையில் 1955இல் பிறந்தவர். கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கல்விமானி சிறப்புப் பட்டம் பெற்றவர். கல்முனைக்குடியில் திருமணம் செய்தவர். கல்முனைக் கல்வி அலுவலகத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராகக் கடமை யாற்றி வருகிறார்.

❑ இஸட். எம். மிஹ்ழார்

இவர் மருதமுனையில் பிறந்து அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்வி கற்றவர். குண்டசாலையில் பயிற்சிபெற்றவர். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பிரதேச முகாமையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

❑ டாக்டர். எம்.எம்.எம். ஜெமீல்

இவர் வைத்தியத்துறையில் உயர்பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர். மருத முனையில் பிறந்த இவர் களுத்துறையைச் சேர்ந்த முன்னைநாள் அட்டா ளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஏ.ஏ.ஏ. ஜிப்ரி அவர்களின் புதல்வியைத் திருமணம் செய்தவர். தற்போது லண்டன் நகரில் வாழ்ந்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❑ டாக்டர். அஹ்ஸன் ஆரிப் மௌலானா

இவர் மருதமுனையில் பிறந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் வரை கற்றுத்தேறியவர். வைத்தியத் துறைக்குத் தெரிவான இவர் சிறந்த வைத்தியராக புகழ்பெற்று வருகிறார். ஒலுவில் பிரதேசத்தில் பெண் டாக்டர் ஒருவரைத் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார். "முனைப்பு" ஆசிரியர் எஸ்.எம்.எஸ். ஹஸனுல் பாரி மௌலானா அவர்களின் புதல்வராவார்.

❑ டாக்டர். முகம்மது நிஜாமுதீன் சுஜப்

மருதமுனையில் பிறந்த இவர் பிரபல வைத்திய நிபுணத்துவ ஆலோசகராகத் திகழ்ந்து வருகிறார். இவர் கல்முனைக்குடியில் பிரபல பொது வைத்திய நிபுணர் ஏ.எம். ஹபீல் டாக்டர் அவர்களின் சகோதரியைத் திருமணம் செய்தவர்.

❑ டாக்டர். ஏ.எல்.ஏ. றஊப்

மருதமுனையில் பிறந்த இவர் அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது ஆரம்ப கல்வி முதல் க.பொ.த. (உயர்தர) வகுப்பு வரை பயின்றார். 1987/1988 பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானவர்களில் இவர் வைத்தியத்துறையில் கற்கும் அதிஷ்டத்தைப் பெற்றுக் கொண்டார். வைத்தியத் துறையை மேற்கொண்ட இவர் மக்களோடு பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். கொழும்பில் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார். சில காலம் மருதமுனையிலும் வைத்தியத் தொழிலை மேற்கொண்டார்.

❑ டாக்டர். ஐ.எல்.எம். சியாத்

இப்றாலெப்பை ஹாஜியார் அதிபர் அவர்களின் இளைய புதல்வர் டாக்டர் ஐ.எல்.எம். சியாத் அவர்கள் அக்கரைப்பற்றில் திருமணம் செய்து தற்போது ஓமானில் வாழ்ந்து வருகிறார். இவரது மனைவியும் ஒரு வைத்தியராவார்.

❑ எம்.ஐ. முகம்மது ஐயூப் அதிபர்

மருதமுனையில் பிறந்த இவர் ஆசிரியராகவும் அதிபராகவும் பணிபுரிந்தவர். சாய்ந்தமருதில் திருமணம் செய்து வாழ்ந்தவர். இவரின் ஒரு மகளான எம்.ஐ. சபீக்கா ஆசிரியை அவர்கள் அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆசிரியையாகப் பணிபுரிந்து வருகிறார். இவர் ஹிபாஸ் ஜூவலரி உரிமையாளர் அல்-ஹாஜ். சுபைர் அவர்களின் மாமாவாவார்.

❑ ஏ.எச். அபூதாஹிர் ஆசிரியர்

மருதமுனையில் பிறந்த இவர் அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியைக் கற்றுத்தேறினார். சம்ஸ் மத்திய கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் தற்போது சேனைக்குடியிருப்பு விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் பணிபுரிந்து வருகிறார். கல்முனைக்குடியில் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❑ ஏ.எம். மஜீத் (கல்விப் பணிப்பாளர்)

மருதமுனையில் 1933ஆம் ஆண்டில் பிறந்த இவர் (அல்-மனார்) மருதமுனை அரசினர் கலவன் பாடசாலையில் கல்விபயின்றவர். அக்கால வேளையில் புலமைப்பரிசில் பெற்றுச்சென்ற மசூர்மவ்லானா அவர்களுடன் இவரும் ஒருவராகத் திகழ்ந்தவர். பின்னர் இவர் லண்டன் B.Sc. பட்டதாரியாகத் தேறியவர். கல்விப் பணிப்பாளராகவும், மாகாணக் கல்விப்பணிப்பாளராகவும் பணி புரிந்தவர். சாய்ந்தமருதில் திருமணம் செய்து வாழ்ந்து வந்தவர். அதன் பின்னர் தற்போது கொழும்பில் வாழ்ந்து வருகிறார். இவர் ஆராய்ச்சியார் அவர்களின் புதல்வராவார்.

❑ எஸ்.ஏ.எம். இஸ்மாயில் மவ்லானா அதிபர்

இவர் அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்விகற்றவர். அதே பாடசாலை யிலேயே விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றினார். மருதமுனையில் பிறந்த இவர் நிந்தவூரில் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார். அட்டப்பள்ளம் அல்-சஹீதா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய இவர் தற்போது இளைப்பாறியுள்ளார்.

❑ பாறூக் சரிபுத்தீன்

புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களின் புதல்வரான பாறூக் ஆசிரியர் அவர்கள் அக்கரைப்பற்றில் திருமணம் செய்து கொண்டார். தற்போது ஓய்வு பெற்றுள்ள இவர் சிறந்த ஓவியரும், கலைத்துவம் மிக்கவருமாவார்.

தேடி வந்த உறவுகள்

❑ ஏ. அலாவுத்தீன் (கல்விப் பணிப்பாளர்)

இவர் 1949இல் அக்கரைப்பற்றில் பிறந்து மருதமுனையில் வாழ்ந்து கொண்டிருப் பவர். இவருடைய தந்தை எமதூரைச் சேர்ந்தவர். இவர் ஆரம்பத்தில் ஆசிரிய சேவையில் சேர்ந்து பின்னர் 1ம் தர அதிபராகப் பதவியுயர்வு பெற்றார். அதன் பின்னர் கல்வி நிருவாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த இவர் இளைப்பாறும் வரை கல்விப்பணிப்பாளர் சேவையில் இருந்தார். இவர் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களின் மருமகனுமாவார். கல்விமானிப் பட்டதாரியான இவர் தமிழ்மொழி, இலக்கியம், இசை ஆகிய துறைகளில் பெரிதும் பாண்டித்தியம் பெற்றவர். இலங்கை வானொலி முஸ்லிம் பிரிவில் இஸ்லாமியக் கீதப் பாடகராக இருந்தமை குறிப் பிடத்தக்கதாகும்.

❑ எம்.எஸ்.எம். சுபைர் ஆசிரியர்

இவர் சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மருதமுனையில் திருமணம் செய்துள்ளார். மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் நீண்ட காலம் கற்பித்து ஓய்வு பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❑ ஏ. காலிதீன் அதிபர்

இவர் 1952இல் அக்கரைப்பற்றில் பிறந்தவர். மருதமுனையில் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களின் புதல்வியைத் திருமணம் செய்து இங்கேயே வாழ்ந்து வருகிறார். உதவி ஆசிரியராக ஆசிரிய சேவையில் கால்பதித்த இவர் ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறும்போது 1ஆம் தர அதிபராகவிருந்தார்.

❑ டாக்டர். ஏ.எம். ஹபீல்

இவர் கல்முனைக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மருதமுனையில் பெண் டாக்டர் ஹரீஸா அவர்களைத் திருமணம் செய்துள்ளார். இவர் பொது வைத்தியத்துறையில் சிறப்பான பணிசெய்து வருகிறார்.

❑ மர்ஹூம். யூ.எல். றஹ்மத்துள்ளாஹ் அதிபர்

இவர் கல்முனைக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மருதமுனையில் திருமணம் செய்தவர். இறுதியாக இவர் புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றி இளைப்பாறியுள்ளார். அண்மையில் இவர் இறையடி சேர்ந்தார்.

❑ எம்.எச்.எம். ஹுஸைன் (பாய்)

பதுளை - பஸ்ஸறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மருதமுனைக்கு வந்து திருமணம் செய்து கொண்டார். இவர் சிங்களம், தமிழ், ஆங்கிலம், உர்து, ஹிந்தி போன்ற மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். இவர் பிறந்த ஆண்டு 1923. எம்.எச்.எம். சுபைர் ஆசிரியர் அவர்களின் தந்தையாவார். அரச சேவையில் பணியாற்றியவர்.

❑ மர்ஹூம். ஜே.ஏ.எம். யூசுப் ஆசிரியர்

காத்தான்குடியைச் சேர்ந்த இவர்கள் ஒரு கணித ஆசிரியராக அல்-மனார் மத்திய கல்லூரியில் நீண்ட காலம் பணியாற்றி இருக்கிறார்கள். இவருடைய கணித வழிகாட்டலில் அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற்று இன்று உயர்ந்த கல்வித் துறைகளில் சிறப்புற்று விளங்குகிறார்கள். இவர் E. அலியார் அதிபர் அவர்களின் மூத்த புதல்வியைத் திருமணம் செய்தார்கள். அண்மையில் இறையடி எய்தினார்.

❑ எம்.ஐ.எம். ஆரிப் ஜே.பி. (சிரேஷ்ட ஊடகவியலாளர்)

இவர் சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் மருதமுனையில் திருமதி நஜீபா ஆசிரியை அவர்களைத் திருமணம் செய்துள்ளார்கள். இலங்கை போக்குவரத்துச் சேவையில் பணியாற்றி வருகிறார்கள். ஒரு ஊடகவியலாளர்.

❑ ஏ.சீ.ஏ. றஹீம் ஆசிரியர்

இவர் சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயம், சம்ஸ் மத்திய கல்லூரி, அல்-மனார் மத்திய கல்லூரி முதலான கல்லூரிகளில் கல்விப் பணிபுரிந்தவர். மருதமுனையில் மண வாழ்க்கையை மேற்கொண்டவர். சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்நுட்பப் பாட விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❑ ஈ.எல். காதர் மீரா அதிபர்

பொலன்னறுவை - அளிஞ்சிப்பொத்தானை என்னும் பிரதேசத்தைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட இவர் மருதமுனையில் இ. உதுமாலெவ்வை அதிபர் அவர்களின் மகளைத் திருமணம் செய்தார். பொலனறுவைப் பிரதேசத்தில் நீண்ட காலமாக அதிபராகக் கடமையாற்றியவர். இவர் 1971 - 1972 ஆகிய காலப் பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசலையில் ஆசிரிய பயிற்சி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் "காதர்-சா" என்றும் அழைக்கப் படுகிறார்.

❑ டாக்டர். ஏ.ஜே.எம். மாஹிர்தீன்

மாவனெல்ல பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மருதமுனையில் டாக்டர் திருமதி ஏ.ஏ. புசைறா அவர்களைத் திருமணம் செய்தவர். பொது வைத்தியத்துறையில் சிறப்பான மருத்துவப்பணி மேற்கொண்டு வருகிறார். பொதுவைத்திய அதிகாரியாகவிருந்து வருகிறார்கள்.

❑ எஸ்.எல்.யூ. லெவ்வை

இவர் சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மருதமுனையில் எம்.எச்.எம். ஹூசைன் பாய் அவர்களின் புதல்வியைத் திருமணம் செய்தவர். இலங்கை போக்குவரத்துச் சேவையில் முகாமைத்துவப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுக்கொண்டவர்.

❑ திருமதி. பரீதா நயீம் சரிபுத்தீன் ஆசிரியை

கல்முனைக்குடியில் பிறந்த இவர் மருதமுனையைச் சேர்ந்த நயீம் ஷரிபுத்தீன் அதிபர் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் நீண்ட காலம் மனைப் பொருளியல் ஆசிரியையாகப் பணிபுரிந்தவர். இவர் 1944-08-26இல் பிறந்தவர். பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

❑ ஏ. டபிள்யூ. ஹஸீனா ஆசிரியை

இவர் மாத்தறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மருதமுனையைச் சேர்ந்த உருவகக் கதை, சிறுகதை, குறுங்கதை முதலியவைகளை எழுதிய எம்.ஐ.எம். முஸம்மில் அவர்களின் மனைவி ஆவார். அல்-மனார் மத்திய கல்லூரியில் நீண்ட காலமாக ஆசிரியப் பணி புரிந்தவர். தற்போது புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் கடமை புரிந்து கொண்டிருக்கிறார். "வதங்காத மலரொன்று" என்ற நாவலை எழுதியவரும் இவரே.

❑ ஜெஸ்மின் லத்தீப் ஆசிரியை

இவர் புத்தளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மருதமுனையைச் சேர்ந்த ஏ.ஏ. லத்தீப் என்பவரைத் திருமணம் செய்து இங்கேயே வாழ்ந்து வருகிறார். தற்போது அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆசிரியப் பணி புரியும் இவர் சிங்கள மொழியையும், வர்த்தகப் பாடத்தையும் சிறப்பாகக் கற்பித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❑ எம்.எச்.எம். மஹ்சூம் ஆசிரியர்

அட்டாளைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மருதமுனையில் பஸ்லூனா என்னும் ஆசிரியையை திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார். இவர் தற்போது கல்முனை பாத்திமாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமைபுரிந்து வருகிறார்.

❑ ஏ.எம். அலி

இவர் சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பட்டதாரி ஆசிரியரான இவர் மருதமுனையில் திருமணம் செய்துள்ளார். அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பல வருடங்கள் கடமையாற்றினார். இவரது காலத்தில் இஸ்லாம் பாட பரீட்சைப் பெறுபேறுகள் மிகவும் மோலோங்கிய நிலையில் இருந்தன. தற்போது ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கடமையாற்றும் இவர் எமது சமூக மேம்பாட்டு மையத்தின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

❑ மீராஷா றவ்சான்

இறக்காமம் வருப்பத்தாஞ்சேனையை பிறப்பிடமாகக் கொண்ட மீராஷா றவ்சான் தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கலைத்துறைப் பட்டதாரியாவார். மர்ஹூம் ஹஸன் மவ்லவி அவர்களின் புதல்வி இம்திஸாவைத் திருமணம் செய்து கொண்டு தற்போது கட்டாரில் குடும்பமாக வாழ்ந்து வருகிறார்.

❑ ஏ.எல். தவம் (மாகாண சபை உறுப்பினர்)

வடகிழக்கு மாகாண சபையின் கௌரவ உறுப்பினர் ஏ.எல். தவம் அவர்கள் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலைத்துறைப் பட்டதாரியாவார். அக்கரைப் பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மருதமுனையில் அபுல்ஹஸன் றோஜிதா என்பவரைத் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார். சிறந்த சிந்தனைப் பேச்சாளரான இவர் ஒலுவில் பிரகடனம் நிறைவேற முன்னின்று உழைத்தவர். முழுநேர அரசியலில் ஈடுபாடு காட்டும் இவர் எதிர்காலத்தில் ஒரு சமூக விடுதலை வீரராகத் திகழ்வார் என்பதில் ஐயமில்லை.

❑ ஜெஸீர் ஹமீட்

நிந்தவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெஸீர் ஹமீட் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலைத்துறைப் பட்டதாரியாவார். வடகிழக்கு மாகாண ஐக்கிய நாடுகள் வாழ்வக பிரதி திட்ட முகாமையாளராக கிளிநொச்சி அலுவலகத்தில் கடமையாற்றுகிறார். நபார் நுஸ்ரத் என்பவரைத் திருமணம் செய்துள்ள இவர் இங்கு சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்.

❑ எம்.எச்.எம். ஜாபிர் (SLEAS)

தோப்பூர் என்ற கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட எம்.எச்.எம். ஜாபிர் தனது சிறு பராயம் முதல் மருதமுனையிலேயே தங்கி அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்வி கற்றவர். தற்போது இலங்கை கல்வி நிருவாக சேவையில் சித்தி பெற்று சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையில் உதவி கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது திருமணங்களில் பெண் மேலாதிக்கம்

ஓர் ஆய்வு கண்ணோட்டம் - விமர்சனம்

ஏ.ஆர். அப்துல் நாசிக் (B.A.) ஓய்வுபெற்ற அதிபர்

மக்கம் தப்பினால் மருதமுனை என்று எமது அயல் முஸ்லிம் கிராமத்தவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட எமது கிராமம் கல்வி, ஒழுக்க விழுமிய, இலக்கிய, ஆத்மீக, விளையாட்டு, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற செயற்பாட்டுக்களில் மூத்த பெரிய கிராமத்தவர்கள் ஆச்சரியப்படுமளவிற்கு முனைப்படைந்த மக்கள் தொகுதி நிறைந்த கிராமமாக புகழ் பரப்பிவருவது நாம் அனைவரும் பெருமை கொள்ளத் தக்கது.

இஸ்லாமிய முற்போக்கு சிந்தனைகளிலும், கட்டுக்கோப்பான சமூக இணக்கப் பாடுகளிலும், அயல் தமிழ்க் கிராமத்தவர்களின் வாழ்வியல், கலாசார, பண்பாட்டு அம்சங்களில் மதிப்புக் கொண்டவர்களாகவும், புத்திசீவிகளும், மூளைசாலிகளும் அபரிமிதமாக உருவாக்கப்படும் அறிவியல் பூமியாகவும், பரிணாமமடைந்து காணப்படுகின்றது எமது மண்.

இந்தச் சிறப்புகளும், நற்பெயர்களும் களங்கப்படுமளவிற்கு எமது இஸ்லாமிய செயற்பாடுகள் சீர்கெட்டு சிதைக்கப்பட்டு வருவது பெரும் வேதனையே. ஒரு பக்கம் இஸ்லாமிய தஃவா இயக்கங்களின் பாரிய பிரச்சாரம் கிராம மக்களின் குறிப்பாக மனங்களில், செயற்பாடுகளில் பாரிய மாற்றத்திற்கான ஆணிவேரை அறையும் அதேவேளை இஸ்லாமிய விரோத செயற்பாடுகளும் வளர்ச்சி யடைந்து வருவது; சமூக ஆர்வலர்களுக்கு, ஊர்ப்பற்றாளர்களுக்கு பெரும் அவ மரியாதையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளாக மாறியுள்ளது.

சீதனம், வட்டி, பதுக்கல், கொள்ளை லாபம், போதை, புகைப்பாவனை, காழ்ப்பு, குழி பறிப்புகள், பழிவாங்கல்கள், வதந்திகள் போன்றன துரித வளர்ச்சியடைந்து வருவது சமூக ஆர்வலர்களுக்கோ குர்ஆன், ஹதீஸ் வழிநிற்கும் உலமாக்களின் கண்களுக்கோ தெரியாத விந்தை நிகழ்வுகளாக வளர்ந்து வருவது வேதனைக் குரியதொன்றாகும். வெறும் பிரச்சாரங்கள் எமது இஸ்லாமிய வாழ்வுக்கு நூறுவீதம் வெற்றியைத்தராது என்பதை உலமாக்கள் புரிந்துகொள்ள வேண்டும். செயற் பாட்டு ரீதியான சில தண்டனை முறைகளை நாமும் பின்பற்றலாமே. அது பெரும் வெற்றியைத் தரலாம்.

முற்றுமுழுக்க புனித இஸ்லாத்தில் கூறப்படாத வாழ்வியல் முறைகளை நாம் பின்பற்றினோம்; கடைப்பிடித்தோம். குறிப்பாக எமது திருமண நடைமுறைகள் தமிழ்க் கலாசாரத்திலிருந்து வழிவந்த சடங்கு ரீதியான முறைகளே. இவைகளில் பெரும்பாலானவை மங்கி மறைந்து கொண்டு வருவதில் நாம் பெருமை கொண்ட போதிலும், "சீதனம்" எனும் அரக்கப் பிடியிலிருந்து எம்மை முற்றாக விலக்கிக் கொள்ள முடியாமலிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலிடல், பட்டாசு, மேளம், நாதஸ்வரம், பறையடிப்பு, ஒலிபெருக்கி, குரவை, கால் கழுவல், பாளைக்குடம், எண்ணெய் விளக்கு, மருதவெண்டி என்பன வெல்லாம் கடன்பெற்ற கல்யாணச் சடங்குகளாக இருந்தும்; அவை எமது இஸ்லாமிய சமூக வளர்ச்சியில் மறைந்து போன அம்சங்களாகவே இனங்காணப் படுகின்றது. இதில் இஸ்லாமிய தஃவா அமைப்புக்களின் பிரச்சார முறைமைகள் பெரும் பங்களிப்பு செய்துள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

எனினும் எமது திருமண நடைமுறைகளில் சீதனம் எனப்படும் "பணச்சடங்கு" மட்டும்பாரிய இடமொன்றைப் பிடித்து பூதாகரமாக வளர்ச்சியடைந்து வருவதும், இஸ்லாமிய பிரச்சாரகர்களுக்கு சவாலாக அமைந்துள்ளதும் நோக்கத்தக்கது. உண்மையில் இந்த சீதன நடைமுறை இஸ்லாமிய சமூக அமைப்பில் இல்லாது போனாலும் உயிர்த்துடிப்புள்ள அம்சமாக மறைமுகமாக வளர்ந்து வருவது நம் எல்லோருக்கும் தலைக்குனிவை ஏற்படுத்தும் ஓர் அம்சமாகவே உள்ளது.

இந்த பணச்சடங்கு உயிர்த்துடிப்புள்ள அம்சமாக வளர்ந்து வருவதிலும், அதன் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் மாப்பிள்ளை தரப்பினர் அனைவருமே ஆர்வம் காட்டிய போதிலும் தற்போதைய காலகட்டத்தில் மாப்பிள்ளை சார்பான பெண் தரப்பினரே இழிபண்பினராக இனங்காணப்பட்டுள்ளனர். பர்தா அணிந்து வரும் எமது இளந்தாய்மார் சீதன நடைமுறைகளில் உத்வேகம் பெற்ற வகுப்பினராக வளர்ந்து வருகின்றனர்.

ஆரம்ப காலப்பகுதிகளில் பணக்கார பெண்ணொருத்தியை திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்ட ஏழை மாப்பிள்ளை ஒருவன் திருமணச் செலவுக்காக சிறிதளவு பணவரவை எதிர்பார்த்தான். அதில் ஒரு நியாயம்கூட இருந்தது. இது நாளடைவில் பூதாகரமாக வளர்ச்சிபெற்று சீதனப் பேயாக வரதட்சனை பூதமாக உருவாக்கம் பெற்றுள்ளது.

எமது கிராமத்தில் இந்த சீதன நடைமுறையிலும் அதன் இயக்கச் செயற்பாடு களிலும் கூடிய ஆசையும், ஆர்வமும் நிறைந்தவர்கள் ஆண் தரப்பினராகவே இருந்தனர். இன்று இதில் பெண்தரப்பினர் கூடிய ஆர்வம் காட்டத்தொடங் கியுள்ளனர். எனது மகன் படித்தவன், பட்டதாரி, உத்தியோகம் பார்க்கிறான். அவனுக்கு கொழுத்த சீதனம் தரப்பட வேண்டும் என்று வாதிடுகின்றனர். தனது நண்பன் ஒருவன் சீதனம் வாங்கியதை அறிந்த ஒருவன் தானும் அவ்வாறு பெற்றுக்கொள்வதில் தப்பில்லை என்று அவனும் சீதனம் கேட்கத்தொடங் குகிறான். இதற்கு தாயும், சகோதரிகளும் உரமூட்டுகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்த எமது மாப்பிள்ளையின் தாயொருவர் கூறுகையில், எனது மகன் ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி கற்றவன். கல்விக்காக பல இலட்சங்களை செலவு செய்துள்ளேன். அவ்வளவு பணத்தையும் அவனிடமிருந்தே மீளப்பெற வேண்டும். இதுதான் நல்ல தருணம் என்று தனது வெற்றிப் பிரமிதத்தை பறைசாற்றிக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் முடிப்பதும், பிள்ளைகள் பெறுவதும், அவர்களை ஒழுக்க சீலர்களாக வளர்ப்பதும், கல்வி புகட்டுவதும், உத்தியோகம் பெற்றுக் கொடுக்க முயற்சிப் பதும், திருமணம் செய்துகொடுப்பதும் பெற்றாரின் சீரிய கடன் என்பது அவருக்கு விளங்க மறுத்திருப்பது வியப்புக்குரியது.

பெண் தரப்பிலிருந்து எந்தெந்த வகையில் பணம் கறக்க முடியுமோ அப்படி யெல்லாம் பணத்தைக் கறந்துவிடுவதில் எமது பெற்றோர்கள் சூரர்களாக காட்சி தருகின்றனர். ஆரம்பத்தில் வீடு மட்டும் போதும் என்று கூறுவார்கள். போகப் போக நிர்ப்பந்தம், நியதி, சூழல், தேவை என்று சொல்லி பல பெயர்களில் வல வழிகளில் சொத்துக்களை பிடுங்கி விடுவதில் முன்னிற்கிறார்கள். பிரதான வீதிக்கடை, கொழும்பு வீடு, வேன், கார் என்றெல்லாம் விலை பேசுவார்கள். பெண்ணின் தந்தை ஒரு இழிச்சவாயனென்று இனங்காணப்படுமிடத்து அவன் மேலும் நசுக்கப்படுகிறான்; பிழியப்படுகின்றான். இதற்கு வாய்ச் சாதுரியமிக்க தரகர்களும் துணைபோகின்றனர்.

இந்த சீதன நடைமுறைகளில் கற்ற மாப்பிள்ளைமார் மட்டுமல்ல எமது மதிப்பிற் குரிய உலமாக்கள் சிலரும் கைதேர்ந்தவர்கள். தனது இரத்த உறவுகள், சொந்தங்கள், உறவினர்கள் பலருக்கு இலட்சங்கள் சேர்வதற்கு துணைபோகின்றனர். சில வேளைகளில் அவர்களே தரகர்களாக மாறி இரண்டு தரப்பினர்களிடமும் கூலி பெறுகின்றனர். இந்த நடைமுறைகளில் குறிப்பிட்ட மாற்றங்கள் வெளிவரத் தொடங்கிய போதிலும் முற்றுமுழுதாக ஏற்படும் மாற்றமே எமது சமூகத்திற்கு அதன் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும்.

சோத்துப் பெட்டிக்காசு, பணியாரப் பெட்டிக்காசு, பால்கொடுத்த காசு, மலசலம் அள்ளிய காசு, தாலிப்பெட்டிக்காசு என்று பல பெயர்களில் பெண் தரப்பினர் ஒரு காலத்தில் நசுக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். இஸ்லாமிய இயக்க வழிமுறைகளில் எமது மாப்பிள்ளைமார் இணைந்து செயற்படுவதால் மேற்கூறிய பல நடைமுறைகள் மறைந்துள்ளது. சந்தோசப்பட வேண்டிய விடயமே. எனினும் அண்மைத் திருமண பேச்சில் ஒரு பாட்டி மாப்பிள்ளைக்கு மலசலம் அள்ளியுள்ளேன். அதற்கு பணம் தரவேண்டுமென்று அடம்பிடித்துள்ளார். மற்ற உயிரினங்கள் கூட தமது குட்டி, குஞ்சுகளுக்கு பாலூட்டி, உணவூட்டி மகிழ்ச் சியுடன் வளர்ந்து வருவதும், எமது மனித செயற்பாடுகள் தலைகீழாக மாறியதும் எந்த அடிப்படையில் என்பது ஆராயப்பட வேண்டியதொன்று.

ஒரு வகையான தனித்துவம், மனோபாவம் சார்ந்த விடயங்கள், சமூக உயர் அந்தஸ்து போன்ற பல காரணங்கள் சீதனம் வாங்குவதை தவிர்க்க முடியாத தேவையின் நிர்ப்பந்தமாக மாற்றிவிட்டது. சமூக உயர் அந்தஸ்து அண்மைக் காலமாக எமது திருமண நடைமுறைகளில் பெரும்செல்வாக்கைச் செலுத்தி வருவதை நாம் அவதானிக்கலாம். சீதனம் வாங்காத திருமணங்களில் அல்லது அதில் சம்பந்தப்பட்ட ஆணோ அல்லது பெண்ணோ ஒரு தரக்குறைவான நிலையிலேயே பேசப்படுகின்றனர். உயர் சீதனம் பெற்றுக்கொள்ளும் ஓர் ஆண்

246301
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பெறுமதியை சமூக ரீதியாக அளவிட்டுக்கொள்வதும், அவ்வாறு அவர் சீதனம் பெறத்தவறுமிடத்து அவரது குறைபாடுகள் மற்றவர்களால் சந்தேகத்துடன் ஆராயப்படுவதும் சமூக வாழ்வில் சாதாரண விடயங்களாகவே முன் வைக்கப்படுகின்றன.

ஒரு மணப்பெண் தான் வழங்கும் கொழுத்த சீதனத்தின் மூலம் தனக்குக் கிடைக்கும் மண வாழ்வு தனது பிறந்த வீட்டின் பெறுமதியினை பறைசாற்றுவதும், அதன் மூலம் ஒரு விசேட தகுதியினை தான் பெற்றுக்கொண்டதாக நம்புவதும் சமூக ஒழுங்கமைப்பின் வழிவந்த பழக்கங்களேயன்றி வேறெதுவுமில்லை. ஒரு சமூகத்தில் வாழும் சகல பிரஜைகளும் சீதன நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்தால் சமூக அந்தஸ்து ரீதியான மனப்பாங்கு ஒருவரிடமும் வளர்ந்து நிலைபெறப்போவதில்லை. இத்தத்துவார்த்த சிந்தனை அண்மைக் காலமாக எமது இளம் ஆண் தரப்பினரிடம் குடிகொள்ளத் தொடங்கியிருப்பது ஒரு சமூக விடுதலைக்கான ஆரம்பமாகும்.

திருமணத்தின் முன்னே பெண் தரப்பினரிடம் பணம் பெற்று மாப்பிள்ளை தனது கடன்களை அடைப்பதும், வீடு திருத்தம் செய்வதும், தனது பெண் சகோதரிகளுக்கு வீடு கட்டுவதும், திருமணச் செலவுகளைச் செய்வதும், தாலி வாங்குவதும், தட்டுமுட்டுச் சாமான்களைக் கொள்வனவு செய்வதும், மீதியை வங்கியிலிடுவதும் நமது திருமண கலாசாரமாக மாறியிருந்து பின்னர் படிப்படியாக இதில் சில மாற்றங்கள் கண்டுவருவதும் நல்ல சகுனமாகும்.

பெண் பிள்ளைகளுக்கான சீதன தேடலில் தந்தை ஒருவர் வாழ்நாளின் பெரும் பகுதியை தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அர்ப்பணிப்பதும், பெண் சகோதரிகளுடன் பிறந்த ஆண்கள் பலர் சகோதரிகளின் வீடு, சீதனம் மற்றும் செலவுகளுக்காக தயங்காமல் விருப்புக்களை புறம்தள்ளி தியாகித்து வருவதும் நடைமுறையில் சாதாரண விடயங்களாகி விட்டன. இந்த வகையில் எமது இளைஞர்கள் தமது உயர்கல்வியைத் தியாகம் செய்து வெளிநாடுகளில் பணியாட்களாக வலம்வருவது நோக்கத்தக்கது. ஆண் வசதியற்ற இளம் பெண்கள் துணிந்து விமானம் ஏறி வீட்டுப் பணிப்பெண்களாக தம்மை மாற்றிக் கொள்வதும் ஒரு வகையில் பாழாய்ப்போன இந்த சீதனப் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளத்தான். மார்க்கத்தில் கூறியபடி ஒவ்வொரு ஆண் மகனும் திருமணம் முடிக்க முன்வருவார்களேயானால் இந்தப் பெண் சீரழிவு தவிர்க்கப் படலாம்.

சில காதல் திருமணங்கள் சீதனப் பேரப் பேச்சுகளிலிருந்து விலகிக்காணப்பட்ட போதிலும் ஆரம்பத்தில் காதலனால் கூறப்படும் காதல் மொழிகள், தியாக வெளிப்பாடுகள் காலஞ் செல்லச்செல்ல, காத மொழிகளாக, சீதன வெளிப் பாடாக வெளிக்கொணரப்படுவது நம் சமுதாயத்தில் காணப்படும் மற்றொரு சாட்சியாகும். தங்கள் படித்த, அழகான ஆண் வாரிசு ஒரு சதத்திற்கும் வழியில்லாமல் மணமேடையில் ஏறப்போவதை ஏற்க மறுக்கின்றனர். ஏதோ வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் தரப்பினரிடம் பேசி மனதை மாற்றி திருமண ஏற்பாடுகளை ஒழுங்கு படுத்துகின்றனர். சீதனக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து தப்பித்துக் கொள் ளலாம் என்று மனக்கோட்டை கட்டிய பெண்ணின் பெற்றோர் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் பெறுமதியான நகைகளை அடகுவைத்து, காணிகளை அறா விலைக்கு விலைபேசி, காதல் திருமணங்களை காசுத் திருமணங் களாக மாற்றியமைத்து அமைதி பெறுகின்றனர்.

அறிவியல்பூர்வமாக சிந்திப்பின் சீதனப் பிரச்சினைகளுக்கும் ஆணாதிக்கத்துக்கு மான உறவாகவே புலப்படலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்ணா திக்கம் தான் சீதனத் திருமணங்களுக்கு இயக்க சக்தியாக தொழிற்படுகின்ற உண்மையை உணரலாம். எது எப்படியிருந்த போதிலும் இக்கொடிய முறைமை சமூக மட்டத்திலிருந்து முற்றாக வெளியேறுவதற்கான வழிமுறைகளை இனங் கண்டு அதற்கான முயற்சிகளில் களமிறங்கி வெற்றிவாய்ப்பைப் பெற முயற்சிப்பது ஒவ்வொரு இஸ்லாமிய சகோதர, சகோதரிகளினது தலையாய கடமையாகும்.

எம்.ஏ. யாஸிர் றஸ்மி 1998இல் நடைபெற்ற பாடசாலைகள் மட்டத்திலான தேசிய மெய்வல்லுனர் போட்டியில் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் சார்பில் பரிதி வட்டம் வீசுதல் நிகழ்ச்சியில் தங்கப்பதக்கம் வென்று எமக்கும் எமது மண்ணுக்கும் பெருமை சேர்த்தார்.

1977ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஜூனியர் தேசிய மெய்வல்லுனர் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் வென்று இம்மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர். சகோதரர் எஸ்.எம்.ஏ. கையூம் இவர் ஒரு உதைபந்தாட்ட வீரரும், சமூக முன்னேற்றச் செயற்பாடுகளில் பங்கெடுத்துக் கொள்பவருமாவார். நண்பர்கள் இவரைக் கையூம் டெய்லர் என்றழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் றகுமான் மரைக்கார் அப்துல் றாசீக்

ஓய்வுபெற்ற அதிபர்

அப்துல் றகுமான் மரைக்கார் அவர்களின் மகன் அப்துல் றாசிக் 1950-12-25ல் மருதமுனையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியினை அல்-ஹம்றாவிலும், க.பொ.த. உயர்தரம் வரை கல்முனை சாஹிறாவிலும் கற்றார். கொழும்பு பல்கலைக் கழகத்தின் கலைப்பட்டதாரியான இவருக்கு 1979-03-26ம் திகதி உதவி ஆசிரியர் நியமனம் கிடைக்கப்பெற்றது. தனது சேவைக் காலத்தில் கற்பித்தல் முறையில் தனது திறமையை வெளிப்படுத்தியதோடல்லாமல் மாணவர்களின் அபிமானத்துக்குரிய ஆசிரியராகவும் புகழ்பெற்றார். இதற்காக சில விருதுகளும் பெற்றார்.

அதிபராக பதவியுயர்வு பெற்ற றாசீக் அல்-ஹம்றா வித்தியாலயத்தில் தனது நிருவாகத்திறமையை வெளிப்படுத்தியதன் மூலம் சிறந்த அதிபர் என்ற விருதையும் தனதாக்கிக் கொண்டார்.

சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் அதிக நாட்டங்கொண்ட இவர் சிறுவர் சித்திர செயல் நூல், வெட்டுங்கள் ஒட்டுங்கள் சிறுவர் சித்திர செயற்பாடுகள் போன்ற நூல்களையும் சிறுவர்களுக்காக வழங்கியுள்ளார்.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் வளர்ச்சியிலும், சுனாமியால் பாடசாலை அழிவுற்ற பின்னர் அதன் மீள்கட்டுமானப் பணியில் தீவிர ஈடுபாடு காட்டினார்.

ஆதம்பாவா ஹயறுன் நிஸா என்பவரைத் திருமணம் செய்துகொண்ட றாசிக் அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

தனது சகோதரர் மர்ஹூம் ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்களின் கல்விப்பணியினை தற்போது றாசிக் பொறுப்பேற்று வழிநடாத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் பலிகொண்ட எம்மவர்கள்

இல.	பெயர்	வயது	சம்பவம்	ஆண்டு
01.	செய்யது அகமது மௌலானா செய்யது பரீத்	18	காணாமல் போனார்	1985
02.	செல்ல மரைக்கார் முகம்மது சுபையிர்	26	வெட்டிக் கொலை	1985
03.	அல்லாபிச்சை முகம்மது முஸ்தபா	23	காணாமல் போனார்	1986
04.	அப்துல் ஹமீத் கைதர் அலி	26	காணாமல் போனார்	1986
05.	சரிபுத்தம்பி முகம்மது பாறூக்	22	காணாமல் போனார்	1988
06.	முகம்மது இஸ்மாயில் நிசார் (அபுல்)	25	சுட்டுக்கொலை	1988
07.	பைக்கீர் முகைதீன் முகம்மது ஜாபிர்	23	சுட்டுக்கொலை	1988
08.	செயினுலாப்தீன் அன்வர்தீன்	24	காணாமல் போனார்	1988
09.	முகம்மது ஹனீபா முகம்மது பசீல்	12	சுட்டுக்கொலை	1989
10.	அலியார் அப்துல் கனி (றஊப்)	25	சுட்டுக்கொலை	1989
11.	அப்துல் ஹமீத் முகம்மது ஐயூப்	29	சுட்டுக்கொலை	1989
12.	நாகூரார் மீராமுகைதீன்	42	கடத்தப்பட்டு கொலை	1990
13.	அகமது லெப்பை முகம்மது அலியார்	60	சுட்டுக்கொலை	1990
14.	அப்துல் அஹது நியாஸ்	19	கடத்தப்பட்டு கொலை	1990
15.	முகம்மது ஹனீபா சிறாஜ்தீன்	30	சுட்டுக்கொலை	1990
16.	சாய்வுலெப்பை நுஹ்மான்	26	சுட்டுக்கொலை	1990
17.	பிச்சை மரைக்கார் முகம்மது முனவ்வர்	24	சுட்டுக்கொலை	1990
18.	ஆதம்பாவா அப்துல் றகீம்	21	சுட்டுக்கொலை	1990
19.	முகம்மது முசாதீக்	24	சுட்டுக்கொலை	1990
20.	தம்பிக்கண்டு ஆதம்பாவா	50	காணாமல் போனார்	1990
21.	அப்துல் கரீம் முகம்மது நியாஸ்	25	காணாமல் போனார்	1990
22.	ஆதம்பாவா சுலைமாலெப்பை	30	கடத்தப்பட்டு கொலை	1990
23.	அப்துல் சலாம் அமீர்கான்	30	சுட்டுக்கொலை	1990
24.	ஆதம்பாவா முகம்மது சலீம்	23	சுட்டுக்கொலை	1990
25.	அப்துல் அஸீஸ் அகமது நியாஸ்	18	சுட்டுக்கொலை	1990
26.	முகம்மது இப்றாகீம் முகம்மது அமீன்	55	சுட்டுக்கொலை	1990
27.	முகம்மது ஜகுபர் முகம்மது பரீத்	25	சுட்டுக்கொலை	1990
28.	சாகுல் ஹமீது முகம்மது அஷ்ரப்	19	சுட்டுக்கொலை	1990
29.	சுலைமாலெப்பை தாஹிர்	25	கடத்தப்பட்டு காணாமல் போனார்	1990
30.	அலியார் ஹம்சா உம்மா	60	கடத்தப்பட்டு காணாமல் போனார்	1990
31.	அகமதுலெப்பை ஷரிபுத்தீன்	35	கடத்தப்பட்டு காணாமல் போனார்	1990
32.	ஹச்சுமுகம்மது நியாஸ்	25	சுட்டுக்கொலை	1990
33.	மாக்கார் பகுறுதீன்	30	சுட்டுக்கொலை	1990
34.	அஜ்வாத் மரைக்கார் ஜவாபுத்தீன்	24	சுட்டுக்கொலை	1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

	பெயர்	வயது	சம்பவம்	ஆண்டு
35.	அலியார் முகம்மது மிஹ்ழார்	30	சுட்டுக்கொலை	1991
36.	உதுமாலெப்பை உம்மு ஹபீபா	65	பிரயாணத்தின்போது சுட்டுக்கொலை	1991
37.	அலியார் தௌபீக்கா	36	பிரயாணத்தின்போது சுட்டுக்கொலை	1991
38.	அலியார் றிபாயா	25	பிரயாணத்தின்போது சுட்டுக்கொலை	1991
39.	அப்துல் அமீர் நஸார்	19	பிரயாணத்தின்போது சுட்டுக்கொலை	1991
39.	அப்துல் அமீர் நஸார்	19	பிரயாணத்தின்போது சுட்டுக்கொலை	1991
40.	அப்துல் அமீர் சமீர்	10	பிரயாணத்தின்போது சுட்டுக்கொலை	1991
41.	அப்துல் அமீர் சபீரா	08	பிரயாணத்தின்போது சுட்டுக்கொலை	1991
42.	அப்துல் ஹமீத் நாஸர்	27	காணாமல் போனார்	1991
43.	ஆதம்பாவா அப்துல் சத்தார்	44	காணாமல் போனார்	1992
44.	அல்லாபிச்சை அகமது கபீர்	45	கூரிய ஆயுதத்தினால் கொலை	1992
45.	அகமது கபீர் முகம்மது நளீம்	17	சுட்டுக்கொலை	1996
46.	இறமுளார் முகம்மது அஸ்வர்	24	கடத்தப்பட்டு கொலை	1996
47.	சுலைமாலெப்பை ஜெமீல்	29	கடத்தப்பட்டு கொலை	1996
48.	முகம்மது உமர்தீன் முகம்மது நிஸாம்	27	கடத்தப்பட்டு கொலை	1996
49.	சாகுல் ஹமீட் முகம்மது அன்சார்	26	கடத்தப்பட்டு கொலை	1996
50.	அஸீஸ் முகம்மது றமீஸ்	25	கடத்தப்பட்டு கொலை	1996
51.	அசனார் முகம்மது முசத்தீக்	26	கடத்தப்பட்டு கொலை	1996
52.	மீராலெப்பை முகம்மது றகீப்	24	சுட்டுக்கொலை	1997
53.	இறமுளார் நசுறுத்தீன்	61	சுட்டுக்கொலை	1997
54.	அனுஸ்லெப்பை முகம்மது பர்ஹான்	21	சுட்டுக்கொலை	1998
55.	எச்.எல். ஜமால்தீன், எஸ்.பி.	57	சுட்டுக்கொலை	2009

நன்றி : அல்-மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்கள் எழுத்துக்களாய்...

அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

மருதமுனை

மருதமுனை என்பது வடக்கே பெரியநீலாவணை முஸ்லிம்களும் தெற்கே பாண்டிருப்பு முஸ்லிம்களும் உள்ளடங்கலாக.

01. சமூக மேம்பாடு

1. ஆன்மீக மேம்பாடு 2. லவ்ஹீக மேம்பாடு

1. ஆன்மீக மேம்பாடு

எமது பிரதேச மக்களிடையே ஆன்மீக ரீதியிலான மேம்பாட்டினை ஏற்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஒரு ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ஆன்மீகத்துறையில் உள்ள குறைபாடுகளை இனம் காணலும் அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளும்.
- இயக்க முரண்பாடுகள் இவற்றை அடிக்கடி தஃவா இயக்க ஒன்றுகூடல்கள் மூலமும், புரிந்துணர்வுகள் மூலமும் தீர்த்துவைத்தல்.

  உ-ம்:- இன்று தஃவா இயக்கங்கள் தத்தமது நிகழ்ச்சி நிரல்களின் பிரகாரம் மார்க்கத்தில் போதனைகள் செய்துவருகின்றன. இவை ஒரு புறமிருக்க ஆகக் குறைந்தது மாதம் ஒருமுறையேனும் எல்லா அமைப்புகளும் இணைந்து கருத்தாடல்கள், உபந்நியாசங்கள், கருத்தரங்குகள், இஜ்திமாக்கள் போன்ற விடயங்களில் ஈடுபடுவதன்மூலம் இயக்க ஊழியர்களிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்படுவதோடு மக்கள் மத்தியிலும் பரஸ்பர ஒற்றுமையும், ஒத்துழைப்பும் ஏற்படுவது உறுதி. இன்ஷா அல்லாஹ் இது பாரிய மாற்றமொன்றிற்கு இட்டுச்செல்லும்.

- உலமாக்களின் பொடுபோக்குத்தன்மை.
  எமது கிராமத்திலுள்ள உலமாக்கள் மத்தியில் ஒரு நம்பகத்தன்மை இன்மையை காணமுடிகிறது. இவற்றைக் கூர்ந்து கவனித்தால் அவர்கள் மத்தியில் மார்க்க விடயங்கள் தொடர்பான கருத்தொற்றுமை வர கௌரவப் பிரச்சினைகள், தொழிற்பிரச்சனைகள், விட்டுக்கொடுப்பதற்கான மனமின்மை போன்ற வற்றைக் கூறமுடியும். இது மக்கள் மத்தியில் உலமாக்கள் மீதான ஒரு வெறுப்பையும் நம்பிக்கையின்மை யையும் தோற்றுவித்துள்ளது.

  மார்க்க விடயங்களில கருத்துமுரண்பாடுகள் வருவது தவிர்க்கமுடியாத ஒன்று என்பதைப் புரிந்துகொண்டு வேற்றுமையில் ஒற்றுமை காணலாம் என்ற முறையில் சகல உலமாக்களும் பரஸ்பரம் விட்டுக்கொடுப்புகளைச் செய்ய முன்வருவார் களானால் மக்கள் மத்தியில் அவர்களுக்கான அந்தஸ்தும் கௌரவமும் ஏற்படுவதோடு மக்கள் அவர்களின் கருத்துக்களுக்குச் செவி சாய்க்கக் கூடியவர்களாக மாறுவர். இதன்மூலம் தனிமனித செல்வாக்கும் மறைவது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஒரு பொதுவேலைத் திட்டத்தின் கீழ் உலமாக்களை ஒன்றிணைப் பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- இன்று எமது கிராமத்தில் ஒரே நேரத்தில் நான்கு ஜும்ஆக்கள் நடைபெறு கின்றன. இது ஆரோக்கியமான ஒரு நிலையல்ல. எனவே இந்த நிலையை மாற்றி வாரத்தில் இரு இடங்களில் மாத்திரம் ஜும்ஆ நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

  உ-ம்:- மஸ்ஜிதுல் கபீரிலும், அக்பர் அல்லது பாக்கியத்துல் ஸாலிகாத்தில் ஒருவாரமும், மறுவாரத்தில் மஸ்ஜிதுன் நூறிலும் மக்பூலியாவிலும் நடைபெற ஏற்பாடுகள் செய்தல்.

- மேலும் பெருநாட் தொழுகைகள் ஒரேதிடலில் நடைபெற ஏற்பாடுகள் செய்தல்.

- பள்ளி நிர்வாகங்களிலும் மாற்றங்கள் தேவை. இன்று எமதூரில் சுமார் 20 பள்ளிகள் காணப்படுகின்றன. ஒரு பள்ளி நிறைய வருமானம் பெறும் அதேவேளை சில பள்ளிகள் மிகக்குறைந்த வருமானத்தையே பெறக்கூடிய நிலையுள்ளது. எனவே அவ்வப் பிரதேச மக்கள் அவ்வப்பள்ளிகளை மேற் பார்வை செய்யும் அதேவேளை அனைத்துப் பள்ளிவாசல்கள் ஒரே நிர்வாகத் தின் கீழ் வருதல் வேண்டும். இதனால் மக்களைக் கட்டுப்படுத்தும் சக்தியும் வலிமையும் அதற்குண்டாவதோடு, கிராமத்திற்கு தேவையான விடயங்களை ஒற்றுமையுடன் மேற்கொள்ள முடிவதோடு வேண்டத்தகாத பொருத்தமற்ற தெரிவுகளும் தவிர்க்கப்படும்.

- ஊரின் உலமாக்கள், மேன்மக்கள், படித்தவர்கள், வர்த்தகர்கள் என எல்லோரும் அடிக்கடி கூடித் தமது ஊரின் தேவைகள், விழுமியங்கள், குறை பாடுகள் என்பனவற்றை இனங்கண்டு அவற்றை நிவர்த்திக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு ஒவ்வொரு நபரும் தமது சொந்த வாழ்கையில் ஒழுக்கம் நற்பண்புகளுடைய நல்லவர்களாக இருப்பதன் மூலம் இச்சபை மீது மக்கள் அதிக மரியாதை செலுத்துவதோடு கட்டுப்படக்கூடியவர்களா கவும் மாறி விடுவர்.

- வறுமையுள்ள இடங்களில் மார்க்க ஈடுபாடுகள் குறைந்திருப்பதை நாம் அவதானிக்கலாம். எனவே முதலில் அத்தகையவர்களின் அடிப்படைத் தேவைகள் யாவை என்பன போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி அதற்கான தீர்வுகளை மேற்கொள்வதன் மூலம் அம்மக்கள் மத்தியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உருவாகும்.

- இன்று பணத்தேவைகள் ஏற்படும்போது தரவித்தியாசமின்றி வங்கிகளையும் ஏனைய நிதி நிறுவனங்களையும் நாடிச்செல்லும் பழக்கம் அதிகரித்துள்ளது. இதன் மூலம் வட்டியுடனான தொடர்புகள் யாரையும் விட்டுவைப்பதாக வில்லை. எனவே எமக்குச் சொந்தமான நிதி நிறுவனங்கள் அமைக்கப்படுவ தோடு வறிய மக்கள், வர்த்தகர்கள் என எல்லோருக்கும் நிதி வழங்கும் ஆற்றல் மிக்கதாய் இருத்தல் வேண்டும். இதற்காக எம்மத்தியில் உள்ள துறைசார்ந்த வர்களை நன்கு பயன்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இஸ்லாத்திற்கெதிரான களவு, சூது, குடி, இருபாலார் ஒன்றுகூடல், விபச்சாரம் போன்றன நடைபெறாவண்ணம் கண்காணிப்பாளர்கள் ஏற்படுத்தப்படுவதோடு இவற்றை கண்காணிக்கும் பொறுப்பை பள்ளிவாயல்களின் சம்மேளனம் ஏற்க வேண்டும்.
- மார்க்கக் கல்வி புகட்டக்கூடிய ஒரு முழுநேரப் பாடசாலை வடிவமைக்கப்பட்டு மாணவர்கள் உரிய முறையில் வழிநடாத்தப்படுவதை உறுதிசெய்தல்.
- பெண்கள் ஜமாஅத்தாக தொழுவதற்கான ஒரு பள்ளிவாயல் ஆரம்பிக்கப்படல் வேண்டும். 65அ பிரதேசத்தில் அமைவது பொருத்தம்.

2. லவ்ஹீக மேம்பாடு

1. தொழில்சார் மேம்பாடு
2. கல்வி மேம்பாடு
3. சுகாதார மேம்பாடு
4. கலாச்சார மேம்பாடுகள்

01. தொழில்சார் மேம்பாடு

இன்று எமது கிராமத்தில் பல்வேறுபட்ட தொழில்வாய்ப்புகள் காணப்படுகின்றன.

- வர்த்தகம், வாணிபம்
- கடற்தொழில் - மீன்பிடி
- நெசவு, சிறுகைத்தொழில்
- விவசாயம், சிறுவியாபாரம்
- அரச ஊழியம்

- **வர்த்தகம், வாணிபம் :**

எமது ஊரில் அதிகமான வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 90 விகிதமான வர்த்தக நிலையங்கள் வங்கிகளையே நம்பியிருக்கின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்ற அதேவேளை உழைக்கின்ற இலாபங்கள் யாவும் சில வேளைகளில் அதிலும் கூடுதலான பணத்தினை அவ்வங்கிகளிற்குச் செலுத்த வேண்டியுள்ளது. இதனால் அவ்வர்த்தகர்கள் காலப்போக்கில் தமது முதலையும் இழந்து கடனாளியாக நிற்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆகவே மேற்படி நிலையங்கள் எமது சபையினால் உதவி செய்யப்படுவதோடு எமது இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்குதல் முடியுமாகும். நியாயமான சம்பளங் களோடு அவர்கள் வேலைபெறுவதோடு அவர்களுக்குரிய ஏனைய சலுகைகளும் வழங்கப்படல் வேண்டும். இதற்காக நாம் செய்ய வேண்டியது வர்த்தகர்களின் நிதிப்பற்றாக் குறையை நாம் நிவர்த்தி செய்வதோடு அவர்கள் இலாபம் பெறுவதை உறுதிசெய்வதற்கான ஏற்பாட்டினை மேற்கொள்ளல், அத்தோடு ஊழியர்களையும் வழிநடாத்தும் ஓர் அமைப்பையும் ஏற்படுத்தி அவர்கள் அனைவரும் அவ்வமைப்பில் அங்கத்தவர்களாவதோடு அவர்களிடமிருந்து ஒரு சிறுதொகை அறவீடு செய்யப்படல் வேண்டும். அவர்களின் தொழில் வேதனம் போன்றவற்றிற்கு இவ்வமைப்பு உத்தரவாதம் கொடுக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

- **கடற்தொழில் - மீன்பிடி**

இத்துறை எமது ஊரில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இங்கும் ஒரு நியாயமான தொழில் முறைமை காணப்படவில்லை, உத்தரவாதம் இல்லாத வருமானங்கள். எனவே இதில் ஒரு பாரிய மாற்றம் தேவை. இதில் நன்னீர் மீன்பிடியை அறிமுகம் செய்வதோடு அதற்கான உதவிகள் ஆலோசனைகள் வழிகாட்டல்களை ஏற்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை ஊக்குவித்தலும் உதவிசெய்தலும், கரைவலைத் தொழிலை நவீனமயப்படுத்தலும் பராமரித்தலும், இவற்றோடு பெறப்படும் மீன்கள் யாவும் ஒருமுகப்படுத்தப்படுவதோடு நியாயமான விலையில் மக்கள் மீன்களைப் பெறக்கூடிய வகையில் மீன்வியாபாரிகளின் ஏகபோகத்தை இல்லாமல் செய்தல், அதிகளவு மீன்கள் பெறப்படும் காலங்களிலாவது அதனை டின்களில் அடைக்கும் முறையையும் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளல்.

- **நெசவும், சிறு கைத்தொழில்களும் :**

மருதமுனை நெசவுக்கிராமம் என்பது பிரபல்யமானது. இன்று சில இடங்களில் தரமான உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு நாடு முழுவதும் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றது. ஆனால் இதில் பாரியதோர் அபாயத்தை இன்று அவதானிக்க முடிகிறது. என்னவென்றால் இளம்தலைமுறையினர் இத்தொழிலை கற்றுக்கொள்வதற்கான எந்த ஆர்வமோ, கரிசனையோ காட்டவில்லை. காலப் போக்கில் வேறு நபர்களையே இத்தொழில் நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகப்போகிறது. எனவே நெசவுத்தொழில் எம்மோடு தொடர்ந்தும் இருக்க வேண்டுமென்றால் எமது இளந்தலைமுறையினர் இதைக்கற்றுக்கொள் வதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படல் அவசியம். மேலும், இத்தொழில் அபிவிருத்தி செய்யப்படுவதோடு வெளிநாடுகளுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப் படக்கூடிய ஒரு ஏற்பாட்டினையும் செய்தல் வேண்டும்.

தொழிலாளர்கள் நலன்கள் பேணப்படுவதோடு அவர்கள் இத்தொழில் செய்வதன் மூலம் போதிய வருமானம் பெறுவதும் உறுதிசெய்யப்படல் வேண்டும். மேலும் உற்பத்தியாளர்களிடையே நிலவும் போட்டித்தன்மை ஆரோக்கியமான முறையில் நெறிப்படுத்தப்படல் அவசியம்.

இவற்றோடு கோழி வளர்ப்பு, பண்ணைத்தொழில் (ஆடு, மாடு போன்றன) சிறு உணவுப்பொருட்கள் செய்தல், பாய் பின்னுதல், விளையாட்டுச் சாமான்கள் செய்தல், தையல், பாதணிகள் செய்தல், தும்புத்தடி போன்ற பொருட்கள் செய்தல், மேசன் தொழில், ஓடாவித்தொழில் போன்றவற்றிற்கான ஆலோசனைகள், உதவிகள் வழங்கல், நெறிப்படுத்தல், மேற்பார்வை செய்தல் போன்றவற்றை ஒரு அமைப்பினூடாக மேற்கொள்வதன் மூலம் திட்டமிட்ட அடிப்படையில் மேற்படி தொழில்கள் தடைகள், பிரச்சினைகளின்றி மேற்கொள்ள முடியுமாகவிருக்கும்.

- **விவசாயம் - சிறு வியாபாரம் :**

விவசாயத்தைப் பொறுத்தமட்டில் எமது கிராமம் குறிப்பிடக்கூடியளவு முன்னேற்றம் காணப்படாமைக்கு விவசாயத்திற்கான நிலமின்மை, கைத்தொழில் களின் ஆதிக்கம் என்பன காரணமாக அமைகின்றன. ஆனால் இது தொடர்பாக விவசாயத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கு அரசாங்கம் இன்று நாட்டின் பல பகுதி களிலும் விவசாய நிலங்களை வழங்கி வருவதைக் கவனத்திற்கொண்டு மேற்படி விவசாயக் காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் ஊக்கிவிக்க முடியும். சிறுவியாபாரம் எமதூரில் நிறையவே காணப்படு கின்றன பெரும்பாலும் இவ்வியாபாரிகள் உள்ளூரிலும் வெளியூரிலும் தமது முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே அவர்களை அணுகி அவர்களது தேவைகள், பிரச்சினைகள் பற்றி ஆலோசிக்கப்பட்டு, உதவிகள் தேவைப்படின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறான உதவிகள் என்பன போன்ற விடயங்களை அறிந்து அவர்களை ஊக்குவித்தலும் நெறிப்படுத்தலும். இவற்றில் மீன்வியாபாரம், மரக்கறி வியாபாரம், பழவகைகள் வியாபாரம், சிறிய உற்பத்திப்பொருட்கள் வியாபாரம், பேக்கரி உற்பத்திப்பொருட்கள் வியாபாரம், நொறுக்குத்தீனிகள் வியாபாரம் போன்ற வைகள் அடங்கும்.

- **அரச தொழில் :**

எமது கிராமத்தில் இன்று அரச ஊழியர்கள் மூலம் மாதாந்தம் 3 கோடி ருபாவிற்கும் அதிகமான வருமானம் கிடைக்கப்பெறுகிறது. இது எமது மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 30 வீதமாகும். எனவே இது விடயத்தில் நாம் பாரா முகமாக இருக்கமுடியாது. நிறுவனங்களுக்கப்பால் இந்த அரச ஊழியர்களின் விடயங்களில் கிராம ரீதியான கரிசனைகள் மேற்கொள்ளப்படல் அவசியம். அவர்களின் சந்தோச, துக்க சம்பவங்களில் ஆபத்தான நோய்வாய்ப்பட்ட வேளை களில் அவர்களுக்கான ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கப்படுவதை உறுதி செய்யும்பொருட்டு, இயக்க ரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதோடு அவர்களது இடமாற்றம் போன்ற பிரச்சினைகளை நாமே முன்னின்று தீர்த்து வைக்கக் கூடிய ஒரு அமைப்பு முறையும் உருவாதல் வேண்டும். இதேபோல சமயாசமய ஊழியர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினையிலும் அவர்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்வார்களானால் அவர்களின் பராமரிப்பிலுள்ள பிள்ளைகள், பெற்றோர்கள் போன்றவர்களின் நலன்களைப் பேணும் அமைப்புகள் உருவாக்கப்படல் வேண்டும். அதற்காக அவர்களிடமிருந்து ஒரு தொகை அறவிடப்படல் பிழையானதல்ல. மேற்படி வெளியிடங்களுக்குச் சென்று பொதுவாகனங்களில் பிரயாணம் செய்பவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களுக்கான தீர்வுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் வேளைப்பழு காரண மாகச் சோர்வுற்றும் விரக்தியுடனும் காணப்படுபவர்களுக்கான உளவள ஆலோ சனைகளும் மேற்கொள்ளப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

02. கல்வி மேம்பாடு

உண்மையில் எமதூர் கல்வித்துறையில் முன்னேற்றம் கண்டுள்ளது என்ற ஒரு பொய்யான கணிப்பீட்டில் நாம் நின்றுகொண்டிருக்கிறோம்.

எமது கிராமத்தின் கல்வி வளர்ச்சி ஆரம்ப காலங்களில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்துள்ளது. இருந்தாற்போல் ஒன்றிரண்டுபேர் இதற்கு விதி விலக்காக இருந்திருக்கலாம், குறிப்பாக 1970ம் ஆண்டு வரையான சுமார் 20 வருடத் தகவல்களின்படி எமது அல்மனார் மகாவித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த) சித்தி எய்தியவர்கள் வெறும் 16 பேர் மட்டுமே என்ற கசப்பான செய்தியை நாம் மனம்கொள்ள வேண்டியுள்ளது. சுருக்கமாக கூறினால் கல்வி வரலாற்றில் இக்காலம் இருண்ட காலம் என்று வர்ணிப்பது பிழையானதல்ல.

1978ம் ஆண்டு சூறாவளியின் பின்னர் அல்மனார் இடமாற்றப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றதானது எமக்கு இரண்டு மகாவித்தியால யங்கள் பெற வாய்பானதோடு கல்வி வளர்ச்சியில் சமூகத்தவர்களின் ஈடுபாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையும் அதிகரிக்கச் செய்தது. மேலும் இரு பாடசாலைகளுக்கிடையிலான போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஓரளவு மாற்றங்களைக் கொணர்ந்தது. இதன் பின்னரான எமது கல்விச் செயற்பாட்டில் மாற்றங்கள் கண்டதானது எமக்கு பல வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், பல பட்டதாரி களையும் உருவாக்கித்தந்தது. கல்வி வளர்ச்சிக்கோட்டில் ஒரு மாற்றம் இதன் பின்னரே ஆரம்பமாகிறது. ஆனால் நாம் ஒன்றைச் சிந்திக்கவேண்டும். உதாரண மாக ஒரு வருடத்தில் உயர்தரப் பரீட்சைக்கு 200 பேரளவில் தோற்றி சர்வகலா சாலைக்குச் செல்வோர்கள் எல்லாத்துறைகள் மூலமாகவும் 20பேர்கள் எனக் கொண்டால் மற்ற 180 பேர்களின் நிலை என்ன? இது எமது கல்வித்திட்டத்தில் உள்ள குறைபாடு. இதை நாம் சிந்திப்பதில்லை. ஒரு சிலர் வைத்தியராகவும், பொறியியலாளராகவும் ஆகிவிட்டார்கள் என்றால் நாமும் அதோடு திருப்திய டைந்து விடுகிறோம், மற்றவர்கள்பற்றி நாம் கவலைப்படுவதில்லை.

இன்று நாம் கல்வித்துறையில் பாரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளோம். மாணவர்கள் மத்தியில் ஒழுக்கவீழ்ச்சி மேலோங்கி காணப்படுகிறது இவை பெற்றோர்களாகிய எமது கவனக்குறைவே. இவற்றுக்கான இன்னோர் காரணமாக மார்க்கக் கல்வியைப் புறக்கணித்தமையும் இனங்காணப்பட்டுள்ளது. மாணவர்கள் மத்தியில் கையடக்க தொலைபேசிகளின் தாக்கம் பாரிய சீர்கேட்டை உருவாக்கியுள்ளது. இரவுவேளைகளில் மாணவர்கள் கடற்கரைக்குச் சென்று போதைவஸ்துக்களை தாராளமாகப் பயன்படுத்துவது உண்மைப்படுத்தப் பட்டுள்ளது. பாலியல் சேட்டைகளுக்கும் குறைவில்லை. இவற்றையெல்லாம் எவ்வாறு தடைசெய்யலாம் என்பது போன்ற கலந்துரையாடலும் பெரிதாக இடம்பெறுவதில்லை.

அண்மைக் காலமாக கிராமத்தின் கல்வித்துறையில் ஆண், பெண் கலவன் பாடசாலைகளை, ஒரு பாலார் கல்விக்கூடங்களாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் அவையாவும் கைகூடுவதற்கான எந்த சாத்தியப்பாடுகளும் இல்லை. இது தொடர்பில் நாம் ஆரம்பிக்க வேண்டிய இடத்தை விட்டுவிட்டு வேறோர் இடத்தில் நின்று ஆரம்பிக்கிறோம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். என்ன விலை கொடுத்தேனும் இப்பாடசாலை விவகாரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்விடயம் தொடர் பாக பின்வரும் ஆலோசனைகளையும் இதில் கூறவிரும்புகிறேன்.

01. பாடசாலைகளை ஆண்கள், பெண்கள் எனப் பிரிப்பதற்காக ஏற்பாடு செய்கின்ற குழுவானது மீள்உருவாக்கம் செய்யப்படல் வேண்டும். ஏனெனில் இக்குழு விலுள்ள பலர் இவ்விடயத்திற்கு எதிரானவர்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும் இந்த அமைப்பினர் முதலில் தங்களுக்கிடையில் ஒரு கருத்தொற்று மையை ஏற்படுத்திக்கொள்வது இன்றியமையாதது.

02. ஊரிலுள்ள தஃவா அமைப்புகள் அனைத்தினதும் ஆதரவினை உறுதிசெய்தல்.

03. இவ்விவகாரம் தொடர்பான பிரச்சாரங்கள் பெண்கள் மத்தியில் தஃவா இயக்கங்கள் ஊடாகப் பேசப்படல் வேண்டும். இது தொடர்தேர்ச்சியாக செய்யப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. அரசியல்வாதிகளின் பூரண ஆதரவின்றி இவற்றை நிறைவேற்ற முடியாது. எனவே கட்சிபேதமற்ற வகையில் இப்பணி மேற்கொள்ளப்பட உரியவர்கள் களமிறங்க வேண்டும்.

05. மாணவர்கள் மத்தியில் இதன் முக்கியத்துவம் உணர்த்தப்படல் வேண்டும்.

06. அதிகாரிகளின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்படல் வேண்டும்.

07. இவையாவும் பலம்பொருந்திய ஒரு குழுவினரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

08. இவர்களின் செயல்களில் முன்னேற்றம் காணப்படாவிடின், இதற்கு ஆதரவு வழங்கும் பெற்றோர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் பிள்ளைகள் மாத்திர மாவது பாடசாலைகளிலிருந்து விலக்கப்பட்டு சாத்தியமான பாடசாலை களில் சேர்க்கப்படுவதன் மூலம் படிப்படியாக எமது இலக்கினை அடைய முடியும்.

09. மேற்படி பாடசாலைகள் ஆண், பெண் எனப் பிரிக்கப்படுவது காலத்தின் தேவை. மாணவர்களின் திறமைகள் இனங்காணப்பட்டு உரிய துறைகளில் அவர்கள் ஈடுபாடு காட்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

10. மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம், மார்க்க வழிபாடுகள் மார்க்கக் கல்வி போன்றவற்றின் அவசியம் உணர்த்தப்படல் வேண்டும்.

03. சுகாதார மேம்பாடு

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். சுத்தம் ஈமானின் பாதி. சுத்தம் எவ்வாறு இஸ்லாத்தில் வலியுறுத்தப்படுகின்றது என்பது நாம் எல்லோரும் அறிந்த விடயம். இந்த விடயத்தை நாம் உரிய முறையில் அணுகுகின்றோமா என்பதே இன்றுள்ள வினாவாகும். மக்கள் மத்தியில் இதன் அவசியம்பற்றிய கருத்தாடல்கள், அறிவூட்டல்கள் செய்யப்படுவதோடு கண்காணிப்புகளும் மேற்கொள்ளப்படல் அவசியம். இலவச மருத்துவ முகாம்கள் மாதமொரு முறையேனும் செய்யப் படல் வேண்டும். அதிகமான மக்கள் வைத்தியச் செலவுக்காகப் பெருந்தொகைப் பணம் செலவளிப்பதை நாம் காண்கிறோம். நோய்கள் பெரும்பாலும் நமது உணவு, மற்றும் பழக்க வழக்கங் களாலேயே அதிகம் உண்டாகின்றன. எனவே இது தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சிகள், தொடர்பாடல்கள் மூலம், துண்டுப் பிரசுரங்கள், கலந்துரையாடல்கள் போன்றன செய்யப்படல் வேண்டும்.

இதன் மூலம் மக்கள் பயன்பெறுவது உறுதி செய்யப்படுவதுடன் அவர்களின் பாரிய வைத்தியச் செலவுகளிலிருந்து விடுதலைபெற முடியும். மேலும் இது தொடர்பில் வைத்தியர்களிடமும் சில வேண்டுகோள்களை நாம் விடுக்க வேண்டி யிருக்கிறது. ஏனென்றால் சில வைத்தியர்கள் அதிக கட்டணங்கள் அறவிடுவ தான குற்றச்சாட்டுகளும் பரவலாக காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வைத்தியசாலையில் சகல மருத்துவ வசதிகளையும் பெறக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுவதன் மூலம் தேவையற்ற செலவுகளையும் குறைப்பதற்கான சாத்தியப்பாடுகள் ஏற்படுவது திண்ணம்.

04. கலாச்சார மேம்பாடு

கலாச்சார சீரழிவு என்ற சொல்லாடல் இன்று எமக்குள்ள பாரிய சவாலாகும். இவற்றை எவ்வாறு அணுகுவது என்பதுவும், இதற்கான மாற்று வழிகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தோடர்பாகவும் நாம் நிறையவே பேசவேண்டியுள்ளது. பரவலான கலந்துரையாடல்கள் செய்ய வேண்டியுள்ளது. மறுமைநாளில் நாம் ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகள் என்ற வகையில் விசாரணைக்குட்படுத்தப் படுவோம்.

எல்லா விடயங்களிலும் கண்டும் காணாததுபோல் ஒரு நழுவல் போக்கையே நாம் கடைப்பிடிக்கிறோம். எத்தனையோ குர்ஆன் வசனங்கள் மிகத்தெளிவாகப் பேசுகின்றன. நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும்படி கூறவில்லையா? இதனாலேயே நீங்கள் சிறந்த சமூகமாக உள்ளீர்கள் என்று கூறவில்லையா? இருந்தும் "தங்களது மார்க்கத்தை கேளிக்கையாகவும் வீண்விளையாட்டாகவும் எடுத்துக்கொண்டவர்களது உலக வாழ்வு அவர்களை மதிமயக்கி விட்டது" என்ற மறைவசனம் எவ்வளவு யதார்தமாகிவிட்டது பாருங்கள் இன்று எமது கலாசாரத் திற்கு சவாலாக எத்தனையோ விடயங்களை நாம் பார்க்க முடிகிறது.

நாம் எல்லோரும் எவ்வாறான சீரழிவுகள் நடைபெறுகின்றன என்பதை அறிந்தே வைத்திருக்கிறோம். எனவே அதுபற்றி இங்கு விரிவாக பேச வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குள்ளது.

மேலோட்டமாக இந்த இழிநிலைக்கு என்ன காரணம் என்று நோக்கும் போது இவர்கள் மத்தியில் உண்மையான ஈமான் இல்லை என்ற முடிவுக்கு வரலாம். ஏனென்றால் ஒருவன் உண்மையாகவே இஸ்லாத்தை நேசித்தால் பாவத்தின் பக்கம் நெருங்கவேமாட்டான் என்பது கண்கூடு. எனவே நாம் மார்க்கத்தில் அதிக பற்றுடையவர்களாக மக்களை மாற்றுவதன் மூலமே இவ்வாறான நிலை களிலிருந்து மக்களை மீட்டெடுக்க முடியுமாகவிருக்கும். அதற்கான பரந்தள விலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது அவசர, அவசியத் தேவை யாகவுள்ளது.

மேற்போந்த எமது கருத்துக்களில் இருந்து குறிப்பாகச் சில விடயங்கள் அவசியம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- கிராமத்தை வழிநடாத்தும் ஒரு மேன்மக்களைக் கொண்ட சபை உடனடி யாக உருவாக்கப்படல் வேண்டும். அதன் தலைமைப் பொறுப்பு தகுதியான வரிடம் வழங்கப்படுவது உறுதிசெய்யப்படல் அவசியம்.
- இஸ்லாமிய நிதிநிறுவனங்கள் எமது செல்வந்தர்களின் பங்களிப்போடு நிறுவப்படல் வேண்டும். இதற்காக துறைசார்ந்தவர்களின் ஆலோசனைகள் பெறப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சகல அரச ஊழியர்களதும் நலன்கள் பேணப்படுவதற்கான ஓர் அமைப்பு உருவாக்கப்படல் வேண்டும். அது அவர்களது சகல விடயங்களுக்கும் பொறுப்புக்கூறும் சக்திபெற்றதாக இருத்தல் வேண்டும்.

- தனியார் ஊழியர்களை வழிநடாத்தும் ஓர் அமைப்பு உருவாக்கப்படல் வேண்டும். அவர்கள் இவ்வமைப்பின் அங்கத்தவர்களாகவும், கட்டுப்பட்டவர் களாகவும் இருத்தல் வேண்டும். அவர்களுக்குப் பொறுப்புக்கூறும் அந்தஸ்த்தை இவ்வமைப்பு பெற்றிருக்கும்.

- சகல பள்ளிவாயல்களும் ஒரே நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டும். உப சபைகளாலேயே பள்ளிவாயல்கள் மேற்பார்வை செய்யப் படல் வேண்டும்.

- வர்த்தக நிலையங்களை வழிநடாத்துவதும் சிறந்த ஆலோசனைகள், நிதி உதவிகள் என்பன ஒரு பலம்பொருந்திய, திறமைமிக்க சபையிடம் ஒப்படைக் கப்படல் வேண்டும்.

- ஏனைய சிறு கைத்தொழில்கள் விவசாயம், மீன்பிடி போன்றவற்றிற்கான சிறந்த வழிகாட்டல்கள், உதவி வழங்கல் என்பன ஒரு சபைமூலம் செய்வது உறுதி செய்யப்படல் வேண்டும்

- மார்க்க பிரசாரங்கள், வெளியீடுகள், இஜ்திமாக்கள் என்பன சகல தஃவா இயக்கங்களையும் ஒன்றுகூட்டிய ஒரு சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- ஆண், பெண் பாடசாலை விவகாரம் உடனடியாக மேற்கொள்ளப்படல், அதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.

- கிராமத்தின் தேவைகள் அனைத்தும் இனங்காணப்பட்டு அவற்றை பெறவும், நடைமுறைப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசியல் வேறுபாடற்ற ஒரு சபை மிக முக்கியமாகும்.

- உலமா சபையினர் வேற்றுமைக்கப்பால் ஒற்றுமையுடன் இயங்குவதோடு தங்களுக்குள்பேசி பிரச்சினைகளுக்குரியவற்றினை ஏகோபித்த கருத்துட னேயே வெளியிடப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுக்கு மணம் சேர்ப்போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். முகம்மது சம்சுத்தீன் ஐயூப், ஜே.பி.

முகம்மது சம்சுத்தீன் ஐயூப் அவர்கள் 1936ல் மருதமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் பெற்றார். பாடசாலைக் கல்வியை தொடர முடியாத சூழ்நிலையில் தனது முழுக் கவனத்தையும் வியாபாரத்தின் பால் திருப்பினார். நெசவு, பொட்டணி வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டு தனது வர்த்தக அனுபவங்களின் மூலம் ஒரு தொழில் அதிபராகத் தன்னை வளர்த்துக் கொண்டார். 1960களில் சவளக்கடையில் தனது முதல் தொழில் நிலையமாக ஒரு பிடவைக் கடையைத் திறந்தார். சம காலத்திலேயே தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொருளாளராகவிருந்து சமூகப் பணிகளில் ஈடுபட்டார்.

1968 அளவில் தனது தொழில் முயற்சிகளை மருதமுனையில் மேற்கொண்டு சீப்பலஸ் நிறுவனத்தை மர்ஹூம் ஐ.எல்.எம். இஸ்மாயில் ஜே.பி. அவர்களுடன் இணைந்து ஆரம்பித்தார். பின்னாட்களில் தனது தொழிலைத் தனியாச் செய்து வந்தார்.

மஸ்ஜிதுல் கபீர் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவிருந்து பின்னர் அதன் தலைவராகப் பொறுப்பேற்று சிறப்புடன் செயலாற்றினார். அனைத்துப் பள்ளிவாசல்களின் தலைவராகவும், சமாதான சபையின் தலைவராகவும் பணிபுரிந்தார்.

எமது பிரதேசத்தில் அசாதாரண சூழ்நிலையின் போது சமாதான சபைத் தலைவராகவிருந்து இந்தக் கிராமத்தையும் மக்களையும் வழிநடாத்திய பாங்கு இன்றும் மக்களால் நினைவுகூரப்படுகிறது. உரிய வேளைகளில் சரியான முடிவுகள் எடுக்கும் சாமர்த்தியமே இவரின் விஷேட அம்சமாகும். இப்பணிகளின்போது தனது சொந்தப் பணத்தினையே செலவிடும் தன்மை இவருக்கு மேல் அதிக மரியாதையை ஏற்படுத்தின.

அல்-மனாரின் வளர்ச்சியில் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கியதோடு ஒரு காணித்துண்டினையும் வாங்கி அன்பளிப்புச் செய்தார்.

ஆதம்லெப்பை சம்சுன்னகார் என்பவரைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு ஆறு பிள்ளைகள் இருக்கின்றனர். 1976ம் ஆண்டு இவருக்கு சமாதான நீதவான் பட்டம் வழங்கப்பட்ட இந்நிகழ்வு ஊர்மக்களால் கொண்டாடப்பட்டது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். கலந்தர் லெப்பை முஹம்மது ஹனீபா மௌலவி (பஹ்ஜி)

கலந்தர் லெப்பை முஹம்மது ஹனீபா அவர்கள் 1944-09-28ல் காலஞ்சென்ற குப்பைத்தம்பி கலந்தர் லெப்பை மரைக்கார் மற்றும் உதுமான் லெப்பைபோடி ஹதீஜா உம்மா தம்பதிகளின் மகனாக மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை தற்போது அல்-மனார் மத்திய கல்லூரி என்றழைக்கப்படும் அப்போதைய அரசினர் கலவன் பாடசாலையில் தரம் 8 வரை பயின்றார்.

பின்னர் 1957 - 1960 வரை அட்டாளைச்சேனையில் அமைந்துள்ள அல்-மத்ரஸதுல் ஷர்கிய்யா அரபுக்கலாசாலையிலும் தொடர்ந்து 1960 - 1964 வரை காலிக்கோட்டை அல்-மத்ரஸதுல் இப்ராஹிமிய்யா அரபுக் கல்லூரியிலும் பயின்று "பஹ்ஜி" எனும் பட்டம் பெற்றார். இப்பட்டமளிப்பு நிகழ்வு அப்போதிருந்த சுகாதார அமைச்சர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களினால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தனது மத்ரஸாக் கல்வியை முடித்து வெளியேறிய இவர் தனது இளமைக் காலத்தில் வர்த்தகத்தில் ஈடுபாடு காட்டத் தொடங்கியதுடன் படிப்படியாக வளர்ச்சியடைந்து மருதமுனைப் பிரதேசத்தின் முக்கிய வர்த்தகப் பிரமுகர்களுள் ஒருவராக விளங்கினார். அந்த வகையில் 1965 முதல் தனது சகோதரர் கே.எல்.எம். இஸ்மாயில் அவர்களின் அனுசரணையுடன் தனது பாட்டனார் தொழில்புரிந்த இடமான மொனராகல மாவட்டத்தின் தொம்பகஹவெல எனும் இடத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1975ம் ஆண்டு முதல் நூல் வியாபாரத் தொழில் சிறப்பாக இருந்த காலப்பகுதிகளில் அத்தொழிலில் சிறப்புற்ற ஒருவராக விளங்கினார். பின்னர் 1980ம் ஆண்டளவில் பெரியநீலாவணையில் அரிசி ஆலை ஒன்றை நிறுவினார். மருதமுனைப் பிரதேசத்திலிருந்து பாரியளவிலான அரிசி ஆலைகளை நிறுவி தொழில் புரிபவர்களில் முன்னோடியாக இவரைக் குறிப்பிடலாம். அக்காலப் பகுதியில் அம்பாரை மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளராகச் செயற்பட்டார். அத்துடன் கரைவாகு வடக்கு அரிசி ஆலை உரிமையாளர் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ம் வருடம் தொடக்கம் சுமார் 20 வருடங்கள் மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசலின் பிரதம இமாமாகப் பணிபுரிந்தார். 1997ம் ஆண்டிலிருந்து மருதமுனை 2ஆம் பிரிவின் விவாகப் பதிவாளராக சுமார் 15 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணி புரிந்தார்.

சமூகப் பணிகளில் ஈடுபாடுள்ள மௌலவி ஹனீபா அவர்கள் 1996 முதல் 2002 வரையான காலப்பகுதியில் மருதமுனை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவராக செயற் பட்டார். 1987ஆம் வருடம் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்று செயற்பட்டு வந்தார். 2005ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை மருதமுனை ஸகாத் நிதியத்தின் தலைவராக செயற்பட்டார். அத்தோடு 2002 முதல் 2013ஆம் ஆண்டு வரை மருதமுனை ஜம்இய்யதுல் உலமாவின் உப தலைவராகச் செயற்பட்டார். 2010ஆம் வருடத்தில் மருதமுனை ஸம் ஸம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உப தலைவராகச் செயற்பட்டுள்ளார். மேலும் மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாயல் கட்டட நிர்மாணக்குழு செயற்பட்ட போது அதன் உறுப்பினராகச் செயற்பட்டதுடன் மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாயல் கட்டிட நிர்மாணக் குழுவின் அங்கத்தவராகவும் மருதமுனை வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் ஆரம்ப உறுப்பினர்களுள் ஒருவராகவும் இன்றுவரை செயற்பட்டு வருகின்றார். 2011 முதல் 2012 வரை கரைவாகுப்பற்று காழி நீதிபதியாக நியமனம் பெற்று செயற்பட்டார். அத்துடன் கடந்த 6 வருடங்களாக மருதமுனை அனைத்துப் பள்ளிவாயல்கள், ஜம்இய்யதுல் உலமா மற்றும் தஃவா அமைப்புக்கள் சம்மேளனத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவரது குடும்ப வாழ்வைப் பொறுத்தவரை 1971ஆம் ஆண்டு இப்றாலெப்பை மரைக்கார் சித்தி பரீதா என்பவரைத் திருமணம் செய்து அதன் மூலம் நான்கு ஆண்களும் மூன்று பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்-ஹாஜ். ஆதம்பாவா மீராமுகைதீன், ஜே.பி.

மீராலெப்பை ஆதம்பாவா - பாத்தும்மா தம்பதிகளுக்கு 1933-06-16இல் மீராமுகைதீன் பிறந்தார்.

அல்-மனார் மத்திய கல்லூரியிலேயே ஆரம்பக் கல்வியையும், கனிஸ்ட இடை நிலைக் கல்வியையும் கற்றிருந்தார். திரு. சாமித்தம்பி தலைமை ஆசிரியராக இருக்கும்போது புலவர்மணியின் மாணவனாக இருந்தவர்.

மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலின் தர்மகர்த்தாவாக நீண்டநாளாக இருந்துவரும் இவர் அக்பர் கிராம உருவாக்கத்தில் செய்த பங்களிப்பு காத்திரமானது. அதற் காகப் பாடுபட்ட சூத்திரக்காரன் மீராலெப்பை, குடைகட்டியர் ஹனிபா, கல்பான் லெப்பை ஆகியோருடன் இணைந்து செயற்பட்டவர். அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சி. அகமதுவை எதிர்த்து அக்பர் கிராமத்திற்காக காணிச் கச்சேரி நடாத்தியவர்.

அக்பர் பள்ளிவாசல் ஓலைக்கொட்டிலாக இருந்தபோது அதனைக் கல்லால் கட்டி முடிப்பதற்கு ஏ.ஆர்.ஏ. அஸீஸ் கொமிசனர் அவர்களுடன் இணைந்து உழைத்தவர். பாக்கியத்துஸ் ஸாலிஹாத், மஸ்ஜிதுல் ஹுதா என்பவற்றின் உருவாக்கத்திலும் பணியாற்றியவர்.

மருதமுனையின் மருத்துவமனை சலாம் றைவர் வீட்டில் மகப்பேற்று மனையாக ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் இன்றைய உயர்ச்சி நிலை வரை அதன் சேவகனாகவும் குழு உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.

மருதமுனை சமாதான சபையின் பெரியநீலாவணை உறுப்பினராகவிருந்து நீண்டகாலம் பாடுபட்ட மீராமுகைதீன் முகம்மது நாபி அவர்களைத் தலைவ ராகக் கொண்டு இயங்கிய சிற்றிசன் கொமிற்றியின் அங்கத்தவராவார். நான்கு காழிமார்களின் முறைகளில் "ஜூரி" சபை உறுப்பினராகச் செயற்பட்ட பெருமைக் குரியவர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதம்பாவா அப்துல் சமது, ஓய்வுபெற்ற அதிபர்

ஆதம்பாவா அப்துல் சமது அவர்கள் 1942-02-10இல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அல்-மனாரில் கற்றார். மாணவர் பருவத்திலேயே விளையாட்டு, நாடகங்கள், பேச்சுப் போட்டிகள் எனப் பலவற்றிலும் அதீத திறமை காட்டியதனால் ஆசிரியர்கள், உயரதிகாரிகளின் பாராட்டையும் பெற்றார். சிறந்த வாசகராகவும் அன்று முதல் இன்றுவரை திகழ்கிறார்.

இவர் தனது ஆசிரியர் நியமனத்தை 1961-10-16ம் திகதி தனது 18 வயதில் பெற்றுக்கொண்டார். 1965இல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நுழைந்து தனது பயிற்சிக் காலத்திலும் நாடகம், பேச்சு போன்றவற்றில் திறமை காட்டியது மட்டுமல்லாமல் ஓரங்க நாடகம் நடிப்பதிலும் தனது அதிதிறமையைக் காட்டி பாராட்டுக்கள் பெற்றார். 1967இல் அனுராதபுரத்திற்கு இடமாற்றம் பெற்ற இவர் பல பாடசாலைகளில் தனது கல்விச் சேவையை வழங்கிய பின் 1989ல் சம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றார். 1978ல் சூறாவளியின் பின்னரான பாடசாலை இடமாற்றக் கோரிக்கையின் போது இளைஞர் குழுவுடன் இணைந்து இரவு பகலாக இவர் செயற்பட்டது மறக்க முடியாதது. முதலாம் தர அதிபரான இவர் 1991ல் நற்பிட்டிமுனை அல்-அக்ஷா மகாவித்தியாலயத்தின் அதிபர் பொறுப்பினை ஏற்று அதன் உயர்ச்சிக்காக சுமார் ஆறு வருடங்கள் சேவையாற்றிய பின் மீண்டும் 1997இல் ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்று 2002இல் தனது ஓய்வுவரை இக்கல்லூரியின் பௌதிக வளம், கல்வி மற்றும் விளையாட்டு என எல்லாவற்றின் மேம்பாட்டுக்காகவும் தன்னாலான அதிகபட்சப் பங்களிப்பை வழங்கினார்.

விளையாட்டுப் போட்டிகளின் போது அதன் வருணனையாளராகவிருந்து அதை விரைவாகவும் சிறப்பாகவும் நடாத்துவதில் வல்லவர். இளைஞர் கலைக் கழகத்தின் செயலாளராகவிருந்து பல காலம் கலைத்துறைக்கும் பங்காற்றினார்.

மஸ்ஜிதுன் மினன் பள்ளிவாயலின் செயலாளராக மிக நீண்டகாலமாகவிருந்து இன்றுவரை சேவையாற்றுகிறார்.

சீனிமுகம்மது சித்தி நிசாமியா என்பவரைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மவ்லானா, ஜே.பி., ஓய்வுபெற்ற அதிபர்

செய்யது அப்துல் றஸ்ஸாக் மவ்லானா செய்யது இஸ்மாயில் மவ்லானா அவர்கள் நபி (ஸல்) அவர்களின் 33வது தலைமுறையில் 20-10-1939ல் மருதமுனையில் பிறந்தார். தனது கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரியில் மேற்கொண்ட இவர் 1958 டிசம்பரில் நடைபெற்ற S.S.C. (T) பரீட்சையில் சித்தி பெற்றார். தொடர்ந்து இவ்வாண்டிலேயே நேர்முகப் பரீட்சையின் மூலம் வெற்றிபெற்று 01-06-1959ல் தான் கற்ற அல்-மனார் மத்திய கல்லூரியிலேயே ஆசிரியர் நியமனம் பெற்றார். நாட்டின் பல பாகங்களிலும் சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றிய பின் 1975ல் மீண்டும் அல்-மனார் மத்திய கல்லூரியில் மாற்றம் பெற்று 1996-12-15ல் தனது ஓய்வு வரை ஆசிரியராகவும் அதிபராகவும் பணி புரிந்த இஸ்மாயில் மௌலானா அவர்கள் இக்காலப்பகுதியில் மூன்றாம், இரண்டாம், முதலாம் தர அதிபராகப் பதவியுயர்வும் பெற்றார். காலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிகளை மேற்கொண்ட இவர் பல விசேட பயிற்சி நெறிகளையும் பூர்த்தி செய்துள்ளார். இவரது கல்விப் பணியைக் கௌரவித்த அல்-மனார் சமூகம் அதன் ஆரம்பப் பிரிவிலுள்ள ஒரு கட்டிடத்திற்கு இவரது நாமம் சூட்டியிருப்பது என்றும் எம்மால் நினைவுகூரப்படல் வேண்டும்.

அதிக மார்க்க ஈடுபாடுடைய இஸ்மாயில் மவ்லானா அவர்கள் மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளியின் மரைக்காராராக, நம்பிக்கையாளராக, தலைவராக மூன்று தசாப்தங்கள் சேவையாற்றியுள்ளதுடன் ஊரின், சகல அமைப்புக்களிலும் முக்கிய பொறுப்புக்களை ஏற்று அரும்பணியாற்றியுள்ளார். ஸகாத் நிதியம், சமாதான சபை, அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனம் போன்றவற்றின் மூலமும் நல்லபணி செய்துள்ளார்.

1968ல் இலங்கையின் பல பாகங்களிலும் அல்-குர்ஆன் அருளப்பட்ட 1400வது வருடப்பூர்த்தி விழா கொண்டாடப்பட்ட வேளையில் எமதூரிலும் அப்போது "லஜ்னதுல் உலமா" (தற்போதைய உலமா சபை) மேற்படி விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. இவ்விழாக்குழுவின் இணைச் செயலாளர்களில் ஒருவராகவிருந்த மவ்லானா அவர்கள் இவ்விழாவின் வெற்றிக்காகப் பெரிதும் பாடுபட்ட நிகழ்வை இன்றும் நினைவுகூருகிறார்.

தனது தந்தை அப்துல் றஸ்ஸாக் மவ்லானா அவர்களுடன் குர்ஆன் மத்ரசாவில் போதனை செய்ததற்காக மாதம் ரூபா பத்து சம்பளமாகப் பெற்றது இவரது மறக்க முடியாத சம்பவம் என்கிறார். மருதமுனை மக்களால் கௌரவமாகப் பார்க்கப் படும் இஸ்மாயில் மவ்லானா அவர்கள் அப்துல் கரீம் ஆலிம் (படல் ஆலிம்) அவர்களின் புதல்வி சித்தி ஸஹ்தியா அவர்களைத் திருமணம் செய்துள்ளார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். சத்திர சிகிச்சை நிபுணர் ஏ.டபிள்யூ.எம். சமீம் இவரது மகளின் கணவனாவார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். நாகூரான் முகம்மது இஸ்மாயில், ஜே.பி.
(ஹம்தூன்) காதி நீதிபதி

ஹம்தூன் என்றே எல்லோராலும் அறியப்பட்ட நாகூரான் முகம்மது இஸ்மாயில் 1949-07-22ல் மருதமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பயின்று பாடசாலையிலிருந்து இடைவிலகியதன் பின்னர் கல்முனை தனியார் கல்வி நிறுவனங்களில் கல்விகற்று க.பொ.த. சா/த பரீட்சையில் சித்திபெற்றார்.

1978ல் விவசாய உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இவர், விவசாய உத்தியோகத் தர்கள் அனைவரும் கிராம சேவகர்களாக உள்ளீர்க்கப்பட்டபோது கிராம சேவகர் நியமனம் பெற்று ஊரின் பல பரிவுகளிலும் சிறந்த சேவையாற்றிய பின் 2012ல் ஓய்வுபெற்றார்.

தனது ஓய்வின் பின் கல்முனை வடக்கின் காதி நீதிபதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையில் வெற்றிபெற்று இப்பகுதியின் காதிநீதிபதியாக நியமனம் பெற்ற சகோதரர் இஸ்மாயில் இன்று வரை காதி நீதிபதியாகக் கடமைபுரிகிறார்.

அரசியல், சமூக, விளையாட்டு, சமய விடயங்களில் அதிக ஈடுபாடுடைய இவர் ஊரின் பல சங்கங்கள், கழகங்கள், கட்சிகளில் இணைந்து தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். ஈஸ்ட்லங்கா விளையாட்டுக் கழகத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகவும் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் ஆரம்ப ஆதரவாளர்களில் ஒருவராகவும், அக்பர் கிராம உருவாக்கத்தில் ஒருவராகவுமிருந்து அரிய பல சேவையாற்றியுள்ளார்.

பாத்திமா என்பவரைத் திருமணம் புரிந்துள்ள இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

அகில இலங்கை சமாதான நீதவான், சாமஸ்ரீ, தேசகீர்த்தி போன்ற கௌரவப் பட்டங்களின் சொந்தக்காரனாகிய இவர் சிறந்ததொரு வாசகன் என்பதோடு தேசிய பத்திரிகைகளில பல ஆக்கங்களையும் வடித்துள்ளார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது ஹனிபா காதர் இப்றாஹிம்

ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர்

முகம்மது ஹனிபா காதர் இப்றாகிம் 06-11-1944இல் மருதமுனையில் பிறந்தார். மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது கல்வியினைப் பெற்றுக் கொண்ட இவர் 01-06-1964ல் ஆசிரியர் நியமனம் பெற்றார். தான் கல்விகற்ற பாடசாலையில் மிக நீண்டகாலம் கல்விப் பணியாற்றும் பாக்கியம் பெற்ற இவர் இதன் அதிபராகவிருந்தும் பல அபிவிருத்திகளைச் செய்தார். இவரது சேவைக் காலம் பாடசாலை பௌதிக வளம், கல்வி வளம் என்பன மேம்பாடடைந்த காலமாகக் கருதப்படுகிறது.

1977ல் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தான் ஆசிரியராகவிருக்கும் போதே நல்ல பெறுபேற்றினைப் பெற்று பல இடர்களுக்கு மத்தியிலும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தனது பட்டப் படிப்பினை நிறைவுசெய்து ஒரு கலைப் பட்டதாரியானார். இலங்கை கல்வி நிருவாக சேவையிலும் தோற்றி வெற்றி பெற்றார். பொத்துவில் கோட்டக்கல்வி அதிகாரியாகவும் சேவையாற்றிய இவர் காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் அதிபராகவிருந்து அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். 2004ல் ஓய்வுபெறும் போது கல்முனை வலயக் கல்விப் பணிப் பாளராகக் கடமைபுரிந்து எமது பிரதேசத்துக்குப் பெருமை சேர்த்தார்.

கௌரவ அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் அவர்களுடன் தோழமை கொண்டிருந்த இவர் அவரது சிறந்த ஆலோசகராகவும் செயற்பட்டார். கிடைத்த வாய்ப்பினை ஊரின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தினார். 1981 - 1987 வரை கரைவாகு வடக்கு கிராமாட்சி மன்ற விஷேட ஆணையாளராகக் கிடைத்த சந்தர்ப்பம் இவரால் கிராம அபிவிருத்தியில் கூடுதல் பங்களிப்பைச் செய்ய வாய்ப்பளித்தது.

சகல துறைகளிலும் திறமை காட்டிய இவர் அசாதாரண சூழ்நிலை நிலவிய காலங்களில் மருதமுனை சமாதான சபையினருடன் இணைந்து தன்னாலான காத்திரமான பங்களிப்பை வழங்கினார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் சிறந்த விமர்சகருமாவார். மருதமுனையின் கல்வி நலிவுற்றிருந்த காலத்தில் நண்பர்களுடன் இணைந்து கல்விப்பணி மன்றம் நிறுவி கல்விக்கு உயிரூட்டினார்.

அப்துல் சமது சாகிறாவைக் கரம்பற்றிய இவருக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



A.M. MAJEED B.Sc. (Lond), Retd. Director of Education

Name	:	A.M. Majeed
Address	:	26, Sirimal Avenue, Quarry Road, Dehewela.
1933	:	Birth
1937	:	Primary Education at the Village School
1941	:	Successful at the DENHAM scholarship exam along with Mashoor Moulana and a boy from Mandur, the only 3 from the Eastern Province.
1942	:	Joined Shivananda Vidyalaya - Batticaloa with Mashoor Moulana, the first two from Maruthamunai to go for English Education.
1949	:	Passed the S.S.C. (English) examination, the first from Maruthamunai.
1957	:	Passed the B.Sc. (London), being the first Muslim Science graduate in Eastern province.
1961	:	Became inspector of Schools, again being the first Muslim from Eastern Province.
1971	:	After various promotions became the first two Muslims (along with Mr. Sameem) to be appointed Director of Education when the D.E. was in charge of one province unlike today.
1974	:	The first and only Muslim D.E. to serve in the Nothern Province (Jaffna). Worked sucessfully for 3 years.
1990	:	Appointed Chairman of Sathosa Computers Services. Again the first Chairman of a Corporation from Eastern province.

Development of Village

Development work has been delegated to politicians by all governments. Public officers are debarred from engaging in work for an area or particular village. This fact sadly the public does not understand. My period of service in Eastern province was very short. I may mention one fact. When I was working in the Ministry of Education I laid the foundation for upgrading Shamsul Ilm Primary School into a Maha Vidyalaya in spite of opposition from powerful sources. Maruthamunai is the only Village to have two mixed Maha Vidyalayas. I did this to enable the students to have a peaceful environment for their studies.

In general I many mention one fact. During my short stay at Batticaloa, I found that all the Maha Vidyalayas in Kalmunai district did not have adequate Science graduates. In order to rectify this in 1978, I started week end A/Ls Science classes taught by teachers who came from Batticaloa. These classes became very successful. For the first students from Kalmunai, started entering universities. Most of the present day Doctors and Engineers entered universities as a result of these classes.

- A.R.A. Sathar, J.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவ பீட,
வாய் மருத்துவத்துறைப் பேராசிரியர்
டாக்டர். எம்.ஏ.எம். சித்தீக்

1980இல் காலஞ்சென்ற அதிபரும், பிரசித்த நொத்தாரிசும், புகழ்பெற்ற தமிழ் இலக்கிய ஆய்வாளருமான ஜே.எம்.எம். அப்துல் காதர் அவர்களுக்கும், அக்காலத்தில் நடைமுறையிலிருந்த கரவாகு வடக்கு கிராமச் சங்கத்தின் தலைவராக விளங்கிய முஹம்மது சாலிஹ் மௌலானா (மத்ரசா மௌலானா) அவர்களின் புதல்வியார் சித்தி சஹ்தியா அவர்களுக்கும் சிரேஷ்ட புதல்வராக முஹம்மது சித்தீக் 1949-11-06ம் திகதி பிறந்தார்.

மருதமுனை வடக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்கால அல்-மனார் மத்திய கல்லூரி) ஆரம்பக் கல்வியையும், கல்முனை பாத்திமாக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் க.பொ.த. (சா.த) வரையிலான கல்வியையும் பெற்றார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விகற்று க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் சித்தியடைந்து 1968ல் பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவப் பாட நெறியில் இணைந்தார். 1972ல் தமது 22வது வயதில் பட்டம் பெற்று வெளியேறினார்.

டாக்டர். சித்தீக், கொழும்பு, கேகாலை, மட்டக்களப்பு ஆகிய வைத்திய சாலைகளில் அரச சுகாதார சேவையில் பணியாற்றியதன் பின்னர் 1977 ல் இங்கிலாந்து சென்றார். அங்கே British National Health Service இல் Oral Surgeon ஆகப் பணிபுரிந்து கொண்டே Fellow in Dental Surgery of the Royal College of Surgeons (FDSRCS) என்ற பட்டம் பெற்று 1985ல் நாடு திரும்பினார். அவ்வருடம் மருதமுனைப் பொதுமக்கள் ஷம்ஸ் மத்திய கல்லூரியில் பெரும் விழாவெடுத்து அவரைக் கௌரவித்தனர்.

அதன் பின்னர் சவூதி அரேபியாவில் சுகாதார அமைச்சில் Consultant Oral Surgeon ஆகப் பதவியேற்று 1990 வரை சேவையாற்றினார். அதன் பின்னர் நாடு திரும்பிய டாக்டர். சித்தீக் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக 1991இல் இணைந்தார். உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) புலமைப்பரிசில் பெற்று 1994ல் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இரு மாத கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டார்.

1997/1998ஆம் ஆண்டுகளில் Colombo Plan - JICA புலமைப்பரிசில் பெற்று ஜப்பான் நாட்டில் ஒசாகா பல்கலைக் கழகத்தில் வாய், தாடை கதிரியல் துறையில் (Oral and Maxillofacial Radiology) விசேட பயிற்சி பெற்றதோடு அந்நாட்டில் பல பல்கலைக் கழகங்களிலும் பரந்த கல்விச் சுற்றுலாவையும் மேற்கொண்டார். 2001ல் ஹொங்கொங் பல்கலைக் கழகத்தில் மூன்று மாத கால விஞ்ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சியில் ஈடுபட்டார். 2002 - 2004 காலப்பகுதியில் கிளாஸ்கோ Royal College of Physicians and Surgeons ஆல் வழங்கப்பட்ட புலமைப்பரிசில் பெற்று மீண்டும் UK சென்று கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் மூன்று மாத கால கல்விச் சுற்றுலா மேற்கொண்டதுடன் British National Health Service இல் Oral Surgeon ஆக இரு வருடம் கடமையாற்றி நாடு திரும்பினார்.

டாக்டர். சித்தீக் அவர்கள் 2007ம் ஆண்டு வாய் மருத்துவத் துறையில் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றார். 2010 - 2011 காலப் பகுதியில் (பின்னர் 2013 இறுதிப்பகுதியிலும்) மலேசியா விஞ்ஞானப் பல்கலைக் கழகத்தில் வருகை நிலைப் பேராசிரியராகப் பதவி வகித்தார். 2012ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஷர்ஜா பல்கலைக் கழகத்தில் கல்விச் சுற்றுலா மேற்கொண்டார்.

பேராசிரியர் சித்தீக் 25க்கும் அதிகமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை மருத்துவ சஞ்சிகைகளில எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றில் சில கட்டுரை களுக்காக ஜனாதிபதி விருதை இரு முறை பெற்றுள்ளார். 40க்கும் அதிகமான வைத்திய மாநாடுகளில் ஆராய்ச்சி உரைகளை நிகழ்த்தியுள்ளார். ஒக்ஸ்போட் பல்கலைக் கழக நூல் வெளியீட்டகத்தினால் 2010ல் வெளியிடப்பட்ட "Oral Complications of Cancer and its management" என்ற நூலில் ஒரு அத்தியாயத்தை எழுதியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் மூன்று சர்வதேச மருத்துவ சஞ்சிகைகளின் ஆசிரியர் சபையிலும், நான்கு மருத்துவ சஞ்சிகை களின் மதிப்பீட்டாளராகவும் கடமைபுரிகின்றார்.

பேராசிரியர் சித்தீக் அவர்கள் மருதமுனைக் கல்வி வரலாற்றில் சில முதல் நிலைகளைப் பெற்றுமை இங்கு குறிப்பிடற்குரியது.

- உள்வாரி மாணவனாக பாடசாலையிலிருந்தே பல்கலைக்கழகம் நுழைந்த முதலாவது மருதமுனை மாணவன்; குறைந்த வயதில் பட்டதாரி ஆனவர் களில் முதலாமவர்.
- விஞ்ஞானத்துறை ஒன்றில் வெளியாகிய மருதமுனையின் முதலாவது உள்வாரிப் பட்டதாரி.
- வடக்குக் கிழக்கு மாகாணங்களில் முதலாவது முஸ்லிம் பல்மருத்துவப் பட்டதாரி.
- பல்மருத்துவத் துறையில் வெளிநாடொன்றில் (இங்கிலாந்து) உயர்கல்வி பெற்று நாடுதிரும்பிய முதலாவது முஸ்லிம் இலங்கையர்.
- பல்கலைக் கழகம் ஒன்றில் விரிவுரையாளராக இணைந்த முதலாவது மருதமுனைப் பிரஜை.
- பல்கலைக்கழகப் பேராசிரியராக உயர்வுபெற்ற முதலாவது மருதமுனைப் பிரஜை.
- விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருது (2010, 2013) பெற்ற முதலாவது மருதமுனைப் பிரஜை.

பேராசிரியர் சித்தீக் மருதமுனையைச் சேர்ந்த காலஞ்சென்ற அல்-ஹாஜ். எல்.எம். இஸ்மாயில் (சீப்பலஸ் ஹாஜியார்) அவர்களின் புதல்வி மௌலவியா நூறுல் ஜன் அவர்களை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டுள்ளார். இவரின் மூத்த புதல்விகள் இருவர் வைத்தியர்களாகக் கடமைபுரிகின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி அல்-ஹாஜ். முகம்மது ஹனிபா முகம்மது நாஸிர்
தலைவர், கணிதபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.
ஆலோசகர், சுல்தான் காபூஸ் பல்கலைக்கழகம், ஓமான்.

முகம்மது ஹனிபா முகம்மது நாஸிர் 1962-11-16ம் திகதி மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்ப, இடைநிலைக் கல்விகளை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, அல்-மனார் மத்திய கல்லூரி, கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா இந்துக் கல்லூரியிலும் மேற்கொண்டார். யாழ் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தினை நிறைவு செய்த நாஸிர் University of Petrolium Minerals, KSA (M.Sc. Computer), University of Electro Communication, Japan (M-Engineering, PhD, DSC) ஆகிய உயர்கல்வித் தகைமைகளையுங் கொண்டுள்ளார்.

1986-11-17ம் திகதி விரிவுரையாளராக நியமனம் பெற்ற கலாநிதி நாஸிர்யாழ் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விரிவுரை யாளராக, சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றிய பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கணித பீடத்தின் தலைவராகவும் கடமையாற்றினார். தற்பொழுது ஓமான் சுல்தான் காபூஸ் பல்கலைக்கழகத்தின் ஆலோசகராக சேவை புரிகிறார்.

சந்திரனில் காலடியா?, பிரித்தானியா உளவாளியின் நினைவேடு, வாழ்வே மாயம் போன்ற பல ஆக்கபூர்வமான ஆக்கங்களை எமக்கு வழங்கிய கலாநிதி நஸீர் அவர்கள் கணிதத்திற்கான "சேர் அருணாச்சலம் ஞாபகார்த்த விருதி"னையும் பெற்றுள்ளார். "கொம்பியூட்டர் நஸீர்" என்றே அழைக்கப்பட்ட இவர் எமது பிரதேசத்தில் "ஜன்னா கொம்பியூட்டர்" என்ற நிறுவனத்தை நிறுவி மாணவர்கள் மத்தியில் கணனிக் கல்வியை அறிமுகம் செய்ததோடு அதன் துரித வளர்ச்சிக்கும் காரணகர்த்தாவாக விளங்கினார்.

முகம்மது அபூபக்கர் ஜனுல் முகர்ரமா என்ற விவசாய விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியை அவர்களைத் திருமணம் செய்துள்ள இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். இவர்களுள் இருவர் ஹாபிழ்களும், ஒரு அல்-ஆலிமா என்பதும் குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர். அப்துல் லத்தீப் முகம்மது மிஹ்ளார்

டாக்டர் அப்துல் லத்தீப் முகம்மது மிஹ்ளார் (MBBS) அவர்கள் 1966-11-01ல் மருதமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியினை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும், க.பொ.த. உயர்தரம் வரை அல்-மனார் மத்திய கல்லூரியிலும் பயின்ற இவர் பாடசாலையில் முதன்முறையாக விஷேட திறமைகளைப் பெற்று வைத்தியத்துறைக்குத் தெரிவானதன் மூலம் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். தனது வைத்தியபீட கற்கை நெறியைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெற்றிகரமாக முடித்துக்கொண்ட இவர் அரசாங்க வைத்தி அதிகாரியாக 1996-06-24ம் திகதி முதல் நியமனம் பெற்றார். கல்முனை ஆதார வைத்தியசாலையில் நியமனம் பெற்ற இவருக்கு எமது பிரதேச மக்களுக்கு சேவைபுரியும் சந்தர்ப்பம் கிடைத்தது. மட்டுமல்லாமல் கல்முனைப் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பொறுப்பதிகாரியாகவும், அதிதீவிர சிகிச்சைப் பிரிவு வைத்திய அதிகாரியாகவும் சேவையாற்றிய இவர் தற்போது மாவட்ட வைத்திய அதிகாரியாக மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் தனது அளப்பரிய சேவையினை வழங்கி வருகிறார்.

2012ம் ஆண்டு சவூதி அரேபியா ஜித்தாவில் இஸ்லாமிய தலைமைத்துவப் பயிற்சி, 2011இல் தாய்லாந்து பெங்கொக்கில் முடிவுகள் அடிப்படையிலான முகாமைத்தவப் பயிற்சியையும் நிறைவு செய்தது மட்டுமல்லாமல், தொற்று நோய் தடுப்பு பயிற்சியினைத் தாய்லாந்திலும் பெற்றார்.

அதிக மார்க்க ஈடுபாடுள்ள இவர் ஆரம்ப காலங்களில் தப்லீஃ ஜமாஅத்தின் மூலம் பல பணிகள் புரிந்தார். பின்னர் ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பின் தீவிர ஆதரவாளராகச் செயற்படுகிறார்.

சுனாமியின்போது மருதமுனை வைத்தியசாலையில் கடமையாற்றிய இவர் அழிவுற்ற வைத்தியசாலையின் மீள் கட்டுமானத்துக்காகவும், மக்களுக்கான வைத்திய சேவைகளை உடன் ஆரம்ப்பிப்பதற்காகவும் செயற்பட்டு இதற்கான வசதிகளைப் பெறுவதற்கான முயற்சிகளும் செய்தமை எம்மால் என்றும் நன்றியுடன் பார்க்கப்படல் வேண்டியவைகளாகும்.

பல்மருத்துவ வைத்திய அதிகாரி ஹாஜியானி அபுல்ஹஸன் பர்சானா அவர்களைத் தனது வாழ்க்கைத் துணையாகக் கொண்ட இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர். செய்யது அப்துல் றசாக் மவ்லானா
செய்யது முகம்மது மவ்லானா

செய்யது அப்துல் றசாக் மவ்லானா அவர்களின் ஒன்பதாவது பிள்ளையாக 1956-11-20ம் திகதி மருதமுனையில் செய்யது முகம்மது மவ்லானா பிறந்தார்.

அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கி, கல்முனை சாஹிறாக் கல்லூரியில் க.பொ.த. (சா/த), சம்மாந்துறை மத்திய கல்லூரியில் க.பொ.த. (உயர்தரம்) எனக்கற்று 09-07-1979ல் உதவி ஆசிரியர் நியமனத்தையும் பெற்றுக்கொண்டார். இவ்வேளையில் சுகாதார அமைச்சின் உதவி வைத்தியர் பயிற்சிக்காக யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு கற்கை நெறியை முடித்த பின்னர் லகுகல வைத்தியசாலையில் 1984-07-09ம் திகதி வைத்தியராக நியமனம் பெற்றார். பின் 1986ல் சாய்ந்தமருது வைத்தியசாலையில் கடமையாற்றிய பின் 26-05-1994ல் மருதமுனை மகப்பேற்று மருத்துவமனையைப் பொறுப்பேற்றார். இம்மகப்பேற்று மருத்துவமனை பல இடங்களுக்கு மாற்றப்பட்டதும் பின்னர் கடற்கரையில் நிறுவப்பட்டதும், இது சுனாமியினால் முற்றாகச் சேதமடைந்ததும், பின்னர் மேட்டுவட்டைப் பிரதேசத்தில் கட்டப்பட்டு இன்று அழகானதொரு வைத்தியசாலையாகக் காட்சி தருவதும் எம்மை பெருமைகொள்ளச் செய்கின்றன. இதன் ஒவ்வொரு விடயங்களிலும் மிகவும் தியாகத்தோடும் அர்ப்பணிப்புடனும் பல சிரமங்களையும் கடந்து டாக்டர் மவ்லானா அவர்கள் தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்கியிருப்பதை இம்மக்கள் மறக்க மாட்டார்கள்.

அப்துல் கரீம் முஸர்ரபாவின் கணவரான இவருக்கு மூன்று பெண் மக்கள் இருக்கிறார்கள்.

இவர் இக்கிராமத்தின் பொதுவேலைகளில் கூடிய அக்கறையோடு பங்கெடுத்துக் கொண்டவர். YMMA இன் உப தலைவராகவும், மஸ்ஜிதுன் நூர், மஸ்ஜிதுல் மினன் ஆகியவைகளின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் இருந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர். அப்துல் வாஜித் முகம்மது சமீம்

மர்ஹூம் அப்துல் வாஜித் அவர்களின் மகன் முகம்மது சமீம் 17-11-1973ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. உயர்தர வகுப்பு வரை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் கற்று க.பொ.த. (உயர்தரம்) விஞ்ஞானப் பிரிவுப் பரீட்சையில் அம்பாறை மாவட்டத்தின் முதல் நிரல் மாணவனாகத் தெரிவானார். இதற்காக 1995ல் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அமைச்சர் அவர்களினால் பரிசில்களும் பாராட்டும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கை களணிப் பல்கலைக் கழகத்தில் தனது வைத்தியத்துறை கற்கை நெறியை வெற்றிகரமாக முடித்து ஒரு வைத்தியராக வெளியானார்.

26-03-2001ல் ஒரு சத்திர சிகிச்சை நிபுணராகப் பதவியேற்ற இவர் இன்று எமது பிரதேசத்தின் சிறந்த வைத்திய நிபுணர்களில் ஒருவராகப் பிரகாசிக்கிறார். சம்மாந்துறை வைத்தியசாலையில் கடமையாற்றிய காலத்தில் குறைந்த வசதிகளுடன் துணிந்து பல சத்திர சிகிச்சைகளைச் செய்து மக்களின் பாராட்டு தலையும் பெற்றார். தற்போது சிங்கப்பூரில் உள்ள National University Hospitalல் புலமைப்பரிசில் பெற்று தனது உயர் கல்வியினை மேற்கொண்டு வருகிறார்.

MRCS (England), MD (Colombo - Surgery) போன்ற விஷேட தகைமைகளையுடைய டாக்டர் சமீம் மிகுந்த மார்க்கப்பற்றுடையவர். ஜமாஅதே இஸ்லாமி மருதமுனை மன்றத்தின் முக்கிய உறுப்பினராகவிருந்து செயற்பட்டார்.

ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.ஏ.ஐ. இஸ்மாயில் மௌலானா ஜே.பி. அவர்களின் ஒரே மகள் செய்யித் மேஸ்பானி என்பவரைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர். நிஜாமுத்தீன் சஹர்தீன்

நிஜாமுத்தீன் சஹர்தீன் 1972-05-06இல் மருதமுனையில் பிறந்தவர்.

அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்து சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று ஸ்ரீஜயவர்த்தனபுர சர்வகலாசாலைக்கு மருத்துவத்துறை மாணவனாகத் தெரிவானார்.

தனது பட்டப் படிப்பினை முடித்துக்கொண்ட இவர் மருத்துவராக (M.O.) 2002-01-21இல் நியமனம் பெற்றார். தற்போது மருதமுனை வைத்தியசாலையில் தனது சேவையினைச் செய்துவரும் இவர் மார்க்கப்பற்றுடைய ஒருவராவார். தப்லீஃ ஜமாஅத்தில் இணைந்து அவரது இளமைக்ககாலம் முதல் அதன் உயர்ச் சிக்காகப் பாடுபட்டு வருகிறார்.

மன்சூர் வைத்தியரின் மகள் பஜீலாவைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள்.

இவரது வைத்திய சேவையினை மக்கள் பெரு விருப்புடன் பெற்றுக்கொள்வதற்கு இவரது இனிய சுபாவம் கைகொடுக்கின்றதென்றே கூறவேண்டும்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகைதீன் பாவா அப்துல் வாஜித்

பல்மருத்துவர்

பல்மருத்துவர் முகைதீன் பாவா அப்துல் வாஜித் 1970-12-07இல் மருதமுனையில் பிறந்தவர்.

பாண்டிருப்பு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியினைப் பெற்று இடைநிலைக் கல்வியைச் சம்ஸ் மத்திய கல்லூரியில் கற்று பல்மருத்துவ பீடத்திற்குத் தெரிவானார். 1997ல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பினை முடித்துக்கொண்டு மேற்படி துறையில் சேவை யாற்றும் பொழுதே கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பட்டப் பின் டிப்ளோமா, பல் மருத்துவப்பணி 2013இல் தேர்ந்தார்.

2000-11-01ல் பல் மருத்துவராக நியமனம் பெற்ற இவர் பல இடங்களிலும் தனது சேவையை ஆற்றியதன் பின்னர் தற்போது பொலன்னறுவை மாவட்ட பிரதான பல் வைத்திய அதிகாரியாகக் கடமைபுரிகிறார்.

கலாவெவவைச் சேர்ந்த வைத்தியர் எஸ். எஸ். உம்மு ஷிபாவை மனைவியாக்கிக் கொண்ட இவருக்கு இரு குழந்தைகள் இருக்கின்றனர்.

கவிதையாக்கம், பேச்சுப் போட்டிகளில் பல வெற்றிகளைச் சுமந்துள்ள இவர் கட்டுரைகள் பலவும், பாடசாலை வெளியீடுகள், அல்-மருதமுனை சஞ்சிகை போன்றவற்றிலும் வரைந்துள்ளார்.

ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் சிறந்த பெறுபேறுகளுக்கான விருதுகள் பெற்ற இவர் கவியரங்குகள் பலவற்றில் பங்கேற்று பாராட்டுதல்கள் பெற்றதோடு பல சுகாதாரக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்து மக்களின் சுகாதார மேம்பாட்டிற் காகவும் உழைத்துள்ளார்.

மாணவப் பருவத்திலிருந்தே தப்லீஃ ஜமாஅத் இயக்கத்தில் சேர்ந்து மார்க்கப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவூத் லெப்பை அப்துல் மனாப் - நீதிபதி

தாவூத் லெப்பை அவர்களின் புதல்வன் அப்துல் மனாப் 24-12-1963ம் திகதி மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியினை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தா ஆகியவற்றில் கற்றபின் க.பொ.த. உயர்தர வகுப்பை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் மேற்கொண்டார். ஷம்ஸ் மத்திய கல்லூரி மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டபின் 1983ம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய முதல் தொகுதி மாணவர்களுள் மனாப் அவர்களும் ஒரு மாணவனாகத் தோற்றி அப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை மாணவனாக இணைந்துகொண்டார். 1990ல் சட்டப்பட்டதாரியாக வெளியேறிய இவர் அவ்வாண்டிலேயே சட்டக்கல்லூரி கற்கை நெறியினையும் பூர்த்தி செய்தார். 1991 முதல் 2000ஆம் ஆண்டுவரை ஒரு சட்டத்தரணியாக உயர்நீதி மன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அடங்கலாகப் பல நீதிமன்றங்களில் தனது வழக்காடு திறமைகளை வெளிப்படுத்தினார்.

01-10-2000ல் நீதிபதியாக நியமனம் பெற்ற மனாப் அவர்கள் கொழும்பு, திருகோணமலை, மூதூர், பொத்துவில், அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் மேலதிக நீதிவான், மாவட்ட நீதிபதி போன்ற பதவிகளை அலங் கரித்தார். தற்போது மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றுகிறார். தேசிய ஆங்கில டிப்ளோமா, தொலைக்கல்வி ஆங்கில டிப்ளோமா, அக்குவினாஸ் ஆங்கில டிப்ளோமா போன்ற கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்துள்ளார். அத்துடன் கொழும்பு பல்கலைக் கழகத்தில் சட்ட முதுமானி பரீட்சையில் விசேட சித்தியினையும் பெற்று இந்த மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

பல சஞ்சிகைகளில் கட்டுரைகள் வரைந்துள்ள இவர், ஒரு சமூக ஆர்வலராவார். சமூகத்துக்காகவும் குறிப்பாக மாணவர் சமூக வளர்ச்சிக்காகவும் ஆர்ப்பாட்ட மில்லாத சேவைகளையும் செய்து வருகிறார். சுனாமிப் பேரலையால் முற்றாகவே அழிவுற்ற சம்ஸ் மத்திய கல்லூரியின் மீளுருவாக்கத்திலும், அதற்கான பௌதீக வளத்தினைப் பெறுவதற்குமாகத் தனது அதிகபட்ச சேவையைச் செய்தார். சமூக அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், கல்விசார் அமைப்புக்கள், தஃவா இயக்கங்கள் என பலவற்றில் ஆலோசகராக, நிறைவேற்றுக்குழு உறுப்பினராக விருந்து அதன் வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் ஆதரவினையும் வழங்கி வருகிறார்.

முகம்மது ஷம்சுத்தீன் சித்தி ஜெஸீமாவைக் கரம்பற்றிய இவர்களுக்கு மூன்று ஆண் மகவுகள் உண்டு.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்-ஹாஜ். முகம்மது சம்சுத்தீன் முகம்மது ஜமீல்

சட்டத்தரணி

முகம்மது சம்சுத்தீன் முகம்மது ஜமீல் 26-05-1960ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியிலும், க.பொ.த. (உயர்தர) த்தினை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் கற்றார். கொழும்புப் பல்கலைக் கழகத்தில் 1986ல் சட்டத்துறை கற்கை நெறியைப் பூர்த்திசெய்த ஜமீல் சட்டக்கல்லூரி கற்கை நெறியை 1987ல் நிறைவுசெய்தார்.

கூட்டுறவுப் பரிசோதகர் நியமனம் பெற்ற இவர் 06-11-1987ல் உயர்நீதி மன்றத்தில் ஒரு சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்தார். இதன் பின்னர் இலங்கை இராணுவ தலைமையகத்தில் சட்ட அலுவலகராகப் பதவியேற்று கப்டன் தரத்தில் கடமைபுரிந்தார். தனிப்பட்ட முறையில் வழக்காடும் பணியை மேற்கொண்ட ஜமீல் ஒரு சிறந்த பிரசித்தி பெற்ற சட்டத்தரணியாக இனங் காணப்பட்டார்.

சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் 1987 முதல் 1997 வரையிலான பத்து ஆண்டுகள் வருகைதரு விரிவுரையாளராகவும், தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் வர்த்தக சட்டத்துறையின் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றிய ஜமீல் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும், கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் பல வருடங்களாக பதில் மாவட்ட நீதிபதியாகவும், மற்றும் மருதமுனையில் உள்ள பல விளையாட்டு, சமூக, தஃவா நிறுவனங்களின் முக்கிய செயற்பாட்டாளராகவும் இருந்து வருகிறார்.

16-05-2008ல் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் உயர்நீதிமன்ற ஆணை யாளராக நியமனம் பெற்ற ஜமீல் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் இதன்மூலம் பெருமை சேர்த்தார்.

முகம்மது தம்பி நதீரா என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு மூன்று ஆண் மக்கள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். அப்துல் மஜீத் பதுறுத்தீன், ஜே.பி. சட்டத்தரணி

சட்டத்தரணி அப்துல் மஜீத் பதுறுத்தீன் 06-06-1952ல் மருதமுனையில் பிறந்தார். பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்று மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி, கல்முனை ஸாகிறாக் கல்லூரி களில் இடைநிலைக் கல்வியினைக் கற்றார். களணி வித்தியாலயங்காரப் பல்கலைக் கழகத்தில் தனது கலைமானி பட்டத்தை நிறைவுசெய்த பின் கொழும்பு சட்டக் கல்லூரியிலும் சட்டமானியைப் பூர்த்தி செய்தார்.

05-12-1975இல் பொரல்ல அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் முதல் நியமனத் தைப் பெற்றார். சில கால சேவைக்குப்பின் கொழும்பு வீடமைப்புத் திணைக் களத்திலும் வேலைசெய்தார். பின்னர் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்று மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் கற்பித்தார். தனது சட்டப் படிப்பை நிறைவுசெய்த பின் முழுநேர சட்டத்தரணியாக இயங்குகின்றார்.

மத்திய பள்ளிவாசலின் செயற்குழு உறுப்பினராகவிருந்து அதன் கட்டுமானப் பணிகளில் பெரும்பணி புரிந்தார். "அந்நஹ்ழா" அரபிக் கல்லூரியின் தலை வராகவும், அதன் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராகவும் செயற்பட்டார்.

மர்கஸுல் தஃலீமுல் இஸ்லாமி குர்ஆன் மத்ரஸாவின் வளர்ச்சியில் அதிகபட்ச பங்களிப்பைச் செய்தார். இவரது சகோதரர் ஏ.எம். கமால்தீன் (B.Com) அவர்களின் நிதியுதவி பெற்று இந்த கிப்ழு மத்ரசாவை அமைப்பதற்கு இவரது ஊக்குவிப்பும் பங்களிப்பும் மிகவும் காத்திரமானது.

அப்துல் கரீம் சம்சுன்னஹாராவைக் கரம்பற்றிய இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

கல்முனை நீதிமன்றத்தின் பதில் நீதவானாகவும் கடமையாற்றுவதோடு பல பொது அமைப்புக்களிலும் இணைந்து தனது பங்களிப்பைச் செய்து வருகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது இஸ்மாயில் முகம்மது றபீக், சட்டத்தரணி

சட்டத்தரணி முகம்மது இஸ்மாயில் முகம்மது றபீக் 11-12-1954ல் மருதமுனையில் பிறந்தவர்.

மருதமுனை தெற்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியினைப் பெற்ற இவர், மருதமுனை அல்-மனார், கல்முனை உவெஸ்லி, கல்முனை சாகிறா போன்ற பிரபல பாடசாலைகளில் கற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைத்துறை மாணவனாகப் பிரவேசித்தார். 1974ல் கலைப்பட்டதாரியாக வெளியேறிய இவர் கொழும்பில் தனது LL.B. சட்டமானிக் கற்கை நெறியினை 1981ல் நிறைவு செய்தார். 1984ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஒரு பிரபல்யமான வழக்குரைஞராக செயற்பட்டு வருகிறார்.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக ஆளுனர் சபை உறுப்பினராகவும், சப்ரகமுவ மாகாண சபையில் அரசாங்க சேவை ஆணைக்குழு உறுப்பினராகவும், இலங்கைப் போக்குவரத்து சபை பலாங்கொடை டிப்போவின் சட்ட ஆலோசகராகவும் இவர் செயற்பட்டு வருகிறார்.

பலாங்கொடை நீதிமன்றின் பதில் நீதிபதியாகக் கடமையாற்றும் இவர் இரத்தினபுரி மாவட்டத்தில், மாகாண சபைத் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டவர்.

மருதமுனையின் முதலாவது சட்டத்தரணியான இவர் பலாங்கொடை சித்தி பௌஸியா என்ற பட்டதாரி ஆசிரியையைத் திருமணம் செய்துகொண்டுள்ளார். இவருக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனர்.

மருதமுனையின் பள்ளிவாயல்களுக்கு பல நன்கொடைகளை வழங்கியவர் என்பது இங்கு குறிப்பிடப்படல் அவசியம்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். எப்.எம். அமீறுல் அன்ஸார் மவ்லானா, ஜே.பி. சட்டத்தரணி

அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மவ்லானா அவர்களின் மூத்த புதல்வன் அமீறுல் அன்ஸார் மவ்லானா 1958-09-17ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கற்ற இவர் இடைநிலைக் கல்வியை கல்முனை பாத்திமாக் கல்லூரி, உவெஸ்லி உயர்தரப் பாடசாலை ஆகியவைகளில் மேற்கொண்டார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தனது கலைமானிப் பட்டத்தை முடித்துக்கொண்ட இவர் திறந்த பல்கலைக் கழகத்தில் தனது சட்டமானி (LL.B) யையும் நிறைவுசெய்தார். 01-11-1978ல் உதவி ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் 1983 - 1990 காலப்பகுதியில் பட்டதாரி ஆசிரியராகவும், 1990 - 1994 காலப்பகுதியில் முதலாம்தர அதிபராகவும் கடமையாற்றினார். அரசியலில் அதிக நாட்டமுடையவரான இவர் தனது ஆசிரியர் பதவியைத் துறந்து சட்டத்தரணியாகப் பணியாற்றியதோடு முழுநேர அரசியலையும் தேர்ந்தெடுத்துக் கொண்டார். பல தேர்தல்களையும் களம் கண்டு பல வெற்றி களையும் சில தோல்விகளையும் ஏற்றுக்கொண்டார்.

1978இல் வை.எம்.எம்.ஏ. இயக்கம் சிறந்த சேவைகளை இக்கிராமத்திற்கு வழங்கியது. இதன் உருவாக்கத்தில் முன்னின்று உழைத்ததுடன் இதன் செய லாளராகவும் பணியாற்றினார். கல்முனைப் பிரதேச சபை உறுப்பினராக 1994 - 1999 வரையும், கல்முனை மாநகர சபை உறுப்பினராகவும், 2006 - 2008 வரையும் இருந்தார். மஸ்ஜிதுல் கபீரின் தலைவராக 2009 - 2011 வரை பதவி வகித்து அதன் உயர்ச்சிக்காகப் பாடுபட்டார். மஸ்ரபுல் இஸ்லாமியு, ஸக்காத் நிதியம் போன்றவற்றின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் பள்ளிவாயல்கள் சம்மேளனத்தின் உபதலைவராகவும், சர்வோதயம், MWRAF அமைப்பின் சட்ட ஆலோசகராகவும் பணிபுரிந்தார்.

சீப்பலஸ் ஹாஜியாரின் மகள் றும்மானாவை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்ட இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் அகில இலங்கை நல்லுறவு ஒன்றியத்தினால் 2013ல் சாமஸ்ரீ, தேசமான்ய பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளத்தம்பி முகம்மட் சியான்

மேலதிக நீதவான்

வெள்ளத்தம்பி முகம்மது சியான் 1975-02-09இல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. உயர்தரப் பரீட்சை வரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் மேற்கொண்டார். சட்டத்துறை மாணவனாகப் பல்கலைக்கழகம் சென்ற சியான் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தபின், நீதித் துறைப் பரீட்சைகள் பலவற்றிலும் தேர்ச்சி பெற்றார்.

2010-05-03ம் திகதி தொழில் நீதிமன்றத் தலைவர் மேலதிக நீதவானாக தொழில் நீதிமன்றத்தில் (LT) முதல் நியமனம் பெற்றார். தற்போதும் மட்டக்களப்பு தொழில் நீதிமன்றத்தில் மேலதிக நீதவானாக கடமையாற்றும் சியான் சமூக சேவை இயக்கங்கள் சிலவற்றில் அங்கத்தவராகவிருந்து சமூகப் பணியிலும் ஈடுபடுகிறார். ஸம்ஸ் மத்திய கல்லூரியின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டுள்ள இவர் அதன் செயற்பாடுகளிலும் கலந்துகொள்கிறார்.

முகம்மட் நாசூக் சுமையான சிஹ்னாஸ் என்பவரை மணந்துள்ள இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் காதர் றிஸ்வான்

மேலதிக மாவட்ட நீதிபதி

அப்துல் காதர் றிஸ்வான் 1978-10-12ல் பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு-01ல் பிறந்தார்.

புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் அல்-மனார் மத்திய கல்லூரியில் உயர்தரம் வரை பயின்றார். சட்டக் கல்லூரி மாணவனாகத் தெரிவான இவர் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் அதனை நிறைவுசெய்தபின் ஒரு சட்டத்தரணியாகப் பணிபுரிந்தார். பின்னர் நீதிபதியாகத் தன்னை உயர்த்திக் கொண்டு தனது பெற்றோருக்கும் இந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்தார். இவரது கல்வி முன்னேற்றத்திற்காக இவரது பெற்றோர்கள் மிகவும் சிரமங்களை மேற்கொண்டனர் என்பது இங்கு நினைவு கூரப்பட வேண்டியது. கடுமையான முயற்சியுடைய இவர் தற்போது வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் மேலதிக மாவட்ட நீதிபதியாகக் கடமைபுரிகிறார். LLB (Hons) ஆன இவர் தற்போது LLM பரீட்சைக்கான ஆயத்தங்களையும் செய்து வருகிறார்.

முகம்மது நஜிமுத்தீன் பஸ்மிலா என்ற பெண்ணைத் திருமணம் செய்துள்ள இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Niyas Abdus Samad (Consultant Structural Engineer)

Name	:	Niyas A. Samad (Consultant Structural Engineer) Presently working as a Consultant to Ministry of Education for ADB funded projects.
Date of Birth	:	1st January 1962
Schools attended	:	Al-Manar Central College, Carmel Fatima College, Sammanthurai Central College.
University Entrance	:	From Al-Manar Central College in 1982 (First student entered for Engineering Faculty from Al-Manar C.C.)
Academic Qualifications	:	B.Sc. in Civil Engineering, University of Peradeniya PG Dip in Structural Design, University of Moratuwa. Reading M.Sc. in Project Management, Asia e University of Malaysia.
Professional Qualification	:	Corporate Member of the Institute of Engineers of Sri Lanka. (Chartered Civil Engineer)
Professional Activities	:	Secretary, Civil Engineering Sectional Committee of Institute of Engineers, Sri Lanka. Committee Member, Professional Standard Committee of Institute of Engineers, Sri Lanka.
Foreign Training & Seminars	:	International Seminar on "Building Materials for Low Cost Housing" at Bandung, Republic of Indonesia in September 2003. Shelter Training to Construction Managers in Red Cross movements conducted by Australian Red Cross at Brisbane, Australia in July 2010. Program Managers Finance Training conducted by International Federation of Red Cross Crescent Societies at Islamabad, Pakistan in March 2011.
Work Experience	:	Ceylon Development Engineering Co. Ltd. — Nov. 1987 to May 1993 Department of Building — June 1993 to Aug. 2005 International Federation of Red Cross and Red Crescent Societies, Pakistan. — Feb. 2005 to Sep. 2011 Squire Mech Engineering (Pvt) Ltd. — Nov. 2011 to Oct. 2012 Ministry of Education, Isurupaya. — Nov. 2012 to date.

- A.R.A. Sathar, J.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்மாலெப்பை அப்துல் ஹமீட், ஜே.பி.

இஸ்மாலெப்பை அப்துல் ஹமீட் 17-07-1945ல் மருதமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியினை அல்-மனார் மத்திய கல்லூரி, வீரத்திடல் ஹிதாயா மகாவித்தியாலயம் போன்றவற்றில் பெற்று இடைநிலைக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும் மேற்கொண்டபோது புலமைப்பரிசு பெற்று வந்தாரமூலை மத்திய மகாவித்தியாலயத்திலும், பின்னர் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியிலும் மேற்கொண்டார். தனது உயர் கல்வியினை கட்டுபொத்த மொறட்டுவப் பல்கலைக் கழகத்திலும், நாவல இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்திலும் கற்று வெளியேறினார்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள் சபையில் IPT யாகக் கடமையாற்றிய போது அபூதாபியில் வேலைவாய்ப்புப் பெற்று அங்கு குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். நாடு திரும்பியதும் இவர் அரசியலில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று முழுநேர அரசியலிலும் ஈடுபட்டார். 1994ம் ஆண்டு கல்முனைப் பிரதேச சபையின் மக்களின் அதிகூடிய வாக்குகளைப் பெற்று முதலாவது தவிசாளராக ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் அஷ்ரப் அவர்களினால் நியமிக்கப்பட்டார். நல்ல பேச்சாளரான இவர் எழுத்துத் துறையிலும் ஆர்வம் காட்டினார். 1962ல் ஏறாவூரில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான தமிழ் பேச்சுப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அப்துல் மஜீட் மவ்லவி அவர்களின் மூத்த புதல்வி சித்தி மாஜிதா மவ்லவியா அவர்களைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு நான்கு ஆண் குழந்தைகள் உண்டு. இவர்கள் நால்வரும் டாக்டர்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியது. அகில இலங்கை சமாதான நீதவானாகிய இவர், புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் தலைவராகவிருந்து மக்களுக்குப் பல சேவைகள் புரிந்தார். பின்னர் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கொழும்பில் கடமையாற்றி வருகிறார்.

மஸ்ஜிதுல் கபீரில் நீண்டகாலமாக மரைக்கார் சபை உறுப்பினராகவும், நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றினார். சமூக விஞ்ஞானப் பட்டதாரியான இவர் In Corporated Engineer UK (I. Eng.), Associate Member of Electronic and Radio Engineers Institution (UK) A.M.I.E.R.E. போன்ற விசேட பட்டங்களையும் சுமந்துள்ளார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது சாலிஹு முகம்மது பஸீல், பொறியியலாளர்

முகம்மது சாலிஹு முகம்மது பஸீல் 1976-10-05ல் மருதமுனையில் பிறந்தவர். பாண்டிருப்பு அல்-மினன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் க.பொ.த. உயர்தரம் வரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கற்று பொறியியல்பீட மாணவனாக பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றார்.

2003-06-10ல் கொழும்பில் தனது பொறியியலாளர் தொழிலை ஆரம்பித்துப் பல இடங்களிலும் கட்டுமானப் பணிகள் பலவற்றை வெற்றிகரமாகச் செய்து முடித்தார். அம்பாறை JICA வீதி அபிவிருத்தித் திட்டத்தின் திட்ட பொறியியலாளராகக் கடமையாற்றும் இவரது பணி மிகவும் காத்திரமானது. இவர் மருதமுனையின்பால் கொண்ட அன்பும் பற்றும் சுனாமியின் பின்னர் வெளிப்படையாகவே தெரிந்தது. சுனாமியின் பின் அழிவடைந்த மருதமுனை வீதிகள் அனைத்தும் இவரால் புனரமைக்கப்பட்டும் தாரிடப்பட்டும் மக்களது பாவனைக்காக விடப்பட்டன. GOAL என்ற NGO வில் பொறியியலாளராக நியமிக்கப்பட்ட இவர் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மற்றெந்தக் கிராமங்களிலும் இல்லாதவாறு அத்தனை வீதிகளையும் செப்பனிட்டு மக்களின் பாவனைக்காகத் திறந்துவிட்டார்.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் மீளுருவாக்கத்திலும் தனது அதிகபட்ச பங்களிப்பைச் செய்தார். பல பொது அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் இவர் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் உதவிகளைச் செய்யத் தவறமாட்டார்.

கட்டுமான திட்ட முகாமைத்துவம் பாடநெறியினை விஷேட தகைமையாகக் கொண்ட இவர் சாமஸ்ரீ கௌரவத்தினையும், சமாதான நீதவான் பட்டத்தையும் கொண்டிருக்கிறார்.

அண்மையில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் Works Engineer ஆக நியமனம் பெற்றுள்ளார்.

உமறுத்தீன் தஸ்ஹீனா என்பவரை மணந்து கொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது பளீல் ஹிபத்துல் கரீம், பதிவாளர்

மர்ஹூம் எஸ்.எம்.எம். பழீல், மர்ஹூமா பாத்துமுத்து தம்பதியினரின் புதல்வர் எம்.எப். ஹிபத்துல் கரீம் 1967-05-03ம் திகதி மருதமுனையில் பிறந்தார். மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரம் வரை கற்றார்.

1987 - 1994ம் ஆண்டு வரை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமானிப் பட்டப்படிப்பை (B.Sc.) பூர்த்தி செய்தார். 1994 - 1997ம் ஆண்டு வரை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டப்படிப்பை (M.Sc.) பூர்த்தி செய்தார். பின்னர் 2004ம் ஆண்டு பட்டப்பின் முகாமைத்தவ டிப்ளோமா கற்கையை (Post Graduate Diploma in Management) இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பூர்த்தி செய்தார். பின்னர் கணனி விஞ்ஞான டிப்ளோமா கற்கை (Diploma in Computer Science) நெறியினை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் 2004ல் பூர்த்தி செய்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் உதவிப் பதிவாளராக 1997-02-03 முதல் கடமையாற்றி பின்னர் 1999-04-01இல் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் நிரந்தர நியமனம் பெற்றார். அதன் பின்னர் 1999-09-01இல் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு இடமாற்றம் பெற்று கடமையாற்றி 2005-01-03ம் திகதி சிரேஷ்ட உதவிப் பதிவாளராக பதவியுயர்வு பெற்றார். 2005-09-01 முதல் 2009-01-31 வரை பதில் பதிவாளராக தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திலேயே கடமையாற்றினார்.

2009-02-01 முதல் 2012-04-31 வரை தனது பட்ட முகாமைத்துவ (MBA) படிப்பைப் பூர்த்தி செய்வதற்காக விடுமுறை பெற்று 2013இல் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் (PIM) வியாபார நிருவாக முதுமானி பட்டத்தை நிறைவு செய்தார். இந்தியாவின் Kzazian Global School of Business Management இல் தனது Doctorate in Business Management கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தார். கிழக்குப் பல்கலைக் கழக திருகோணமலை வளாகத்தின் பிரதிப் பதிவாளராக கடமை யாற்றிய இவர் 2014-02-17ம் திகதி முதல் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் பதிவாளராகக் கடமையாற்றி வருகிறார்.

மருதமுனைப் பிரதேச கல்வி மற்றும் விளையாட்டு அபிவிருத்திக்குச் சிறந்த பங்களிப்பைச் செய்துவரும் இவர் எல்லோரோடும் மிகவும் அன்பாகப் பழகுபவர். கல்வித்துறையுடன் சம்பந்தப்பட்ட கருத்தரங்குகளுக்கு கனடா, தாய்லாந்து, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று பங்கு பற்றியுள்ளார்.

முகம்மது ஜூனைட் அகீலா என்பவரைக் கரம்பற்றிய இவருக்கு நான்கு பிள்ளை கள் உள்ளனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி. அப்துல் அஸீஸ் முஹம்மது நுபைல், சிரேஷ்ட விரிவுரையாளர்

ஏ.ஆர்.ஏ. அஸீஸ் - எச்.எம். கரிமுன்னிஸா தம்பதிகளின் சிரேஷ்ர புதல்வரான அப்துல் அஸீஸ் முஹம்மது நுபைல் அவர்கள் இளைஞர் சேவைகள் உத்தியோகத்தராக (YSO) தமது பொதுச்சேவையை 1993இல் ஆரம்பித்த துடன் 1998ஆம் ஆண்டிலிருந்து இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளராகக் (Senior Lecturer) கடமையாற்றி வருகின்றார். கல்முனை கல்வி வலயத்திலுள்ள மருதமுனை கமு/கமு/ அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியையும் மருதமுனை கமு/கமு/ ஷம்ஸ் மத்திய கல்லூரியில் தனது இடைநிலை மற்றும் உயர் கல்வியையும் பூர்த்தி செய்த இவர், 1994ஆம் ஆண்டு தனது இளங்கலைமானி பொருளியல் சிறப்புப் பட்டத்தினை B.A. (Hons) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், 1990 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் முறையே முதுகலைமானி (M.A.) மற்றும் முது தத்துவியல்மாணிப் பட்டங்களை (M.Phil.) இலங்கை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தினை (PhD) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் பூர்த்தி செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் Certificate in Computer Applications (CCA) கற்கை நெறியை 2001ஆம் ஆண்டிலும், கொழும்பு பல்கலைக் கழகத்தில் Certificate in Teaching in Higher Education (CTHE) எனும் கற்கையை 2003ஆம் ஆண்டிலும் பூர்த்தி செய்துள்ள ஏ.ஏ.எம். நுபைல் அவர்கள் 2007 மே மாதம் 28ஆம் திகதி முதல் 18 டிசம்பர் 2007 வரையான காலப்பகுதியில் Hamdard University, New Delhi, HCM Rajasthan State Institution of Public Administration, Jaipur - India, Cranes Software International Limited, India ஆகியவைகளில் புலமைப்பரிசு பெற்று பல்வேறு குறுகியகால பாடநெறிகளையும் கற்றறிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச மற்றும் பிராந்திய வர்த்தகம் பற்றி தொடர்ச்சியான பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்டுவரும் இவர் இந்தியா, இலங்கை மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இடம் பெற்ற பல சர்வதேச ஆய்வு மாநாடுகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தும் உள்ளார். முக்கியமாக International Journal of Accounting and Business Management (IJABM), Journal of Management of Prodence (JMP) மற்றும் Asia Pacific Journal of Marketing and Management Review (APJMMR) ஆகிய புகழ்பெற்ற சஞ்சிகைகளில் இவரது ஆய்வுக் கட்டுரைகள் வெளி வந்துள்ளன.

அத்துடன் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் ஆய்வு சஞ்சிகையான "கலம்" (KALAM) மற்றும் "சமூக நோக்கு" ஆகியவற்றில் பொருளியல் தொடர்பாக இவர் எழுதிய பல ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஏ.ஏ.எம். நுபைல் இலங்கைப் பொருளாதார வரலாறு, பிராந்தியவாதம் மற்றும் பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு (தென்னாசியா) அத்துடன் தேசிய வருமானமும் தேசிய உற்பத்தியும் ஆகிய மூன்று புத்தகங்களின் இணையாசிரியராகவும் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி முகைதீன் பாவா முகம்மது இஸ்மாயில், சிரேஷ்ட விரிவுரையாளர்

முகைதீன் பாவா முகம்மது இஸ்மாயில் 1974-11-28இல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியினை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் மேற்கொண்டார். இங்கிருந்து தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு வர்த்தகப் பிரிவுக் கற்கை நெறிக்குத் தெரிவானார். BBA (Hons) (Sp. in Marketing) கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த இஸ்மாயில் MBA (UOC), MSc - MIT (UOK), Ph.D. (OUJ) ஆகிய உயர்கல்வித் தகைமைகளையும் கொண்டுள்ளார்.

07-02-2005இல் முகாமைத்துவ விரிவுரையாளராக தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நியமனம் பெற்ற இவர், தற்போது இங்கு முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். CTHE (UOC), SEDA (UK) போன்ற விசேட தகைமைகளைக் கொண்டுள்ள கலாநிதி இஸ்மாயில் 'இலத்திரனியல் வர்த்தகம் - அறிமுகம்', 'சேவைச் சந்தைப்படுத்தல்' ஆகிய இரு நூல்களை எமக்கு வழங்கியுள்ளதோடு 'ஆராய்ச்சி முறைமையியல்' என்ற ஆக்கத்தினையும் விரைவில் வெளியிடவுள்ளார்.

இந்தியாவின் சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் விருதினையும், தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 'வர்ண இரவுகள்' விருதினையும் வென்றுள்ள இவர் எமது பாரம்பரிய நெசவுத் தொழில் தொடர்பான சில ஆய்வுக் கட்டுரைகளை சர்வதேச மாநாடுகளில் சமர்ப்பித்துள்ளார்.

மருதமுனையின் முகாமைத்துவத் துறையில் முதலாவது கலாநிதிப் பட்டம் பெற்ற இஸ்மாயில் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் இலங்கை, இந்தியா, நேபாளம், டுபாய் போன்ற நாடுகளில் கல்விக் கருத்தரங்குகளில் பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். சிறந்த கற்பித்தல் திறனைக் கொண்டுள்ள இவர் ஒரு நல்ல வளவாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒலுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.எல். சல்மா என்ற பெண்ணைத் திருமணம் செய்துள்ள கலாநிதி இஸ்மாயிலுக்கு ஒரு பிள்ளை இருக்கிறது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி அப்துல் மஜீட் முகம்மது நவாஸ், சிரேஷ்ட விரிவுரையாளர்

தேசகீர்த்தி நூலகர் அப்துல் மஜீத் அவர்களின் புதல்வர் முகம்மது நவாஸ் 1969-07-28ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் மேற்கொண்டார். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று ஷம்ஸ் மத்திய கல்லூரியிலிருந்து தெரிவானார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விவசாய விஞ்ஞானமானி (சிறப்பு) கற்கை நெறியினைப் பூர்த்திசெய்த நவாஸ் 2000ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் ஆங்கில மொழி கற்பித்தல் டிப்ளோமா பட்டப் பின் படிப்பினையும் 2002ல் களணிப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில மொழியியல் முதுமானிப் பட்டத்தினையும் தனதாக்கிக்கொண்டார்.

2012இல் இங்கிலாந்து நொட்டிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் பிரயோக ஆங்கில மொழியியல் துறையில் வெற்றிகரமாகத் தனது கலாநிதிப் பட்டத்தையும் நிறைவு செய்தார்.

இங்கிலாந்து, அமெரிக்கா, தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் குறுகிய கால பயிற்சிகள் பலவற்றை மேற்கொண்ட கலாநிதி நவாஸ் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளராகவும் ஆங்கில மொழிப் பிரிவின் தலைவராகவும் கடமையாற்றுகிறார்.

எமது சிறார்களின் கல்வி முன்னேற்றத்தில் கரிசனை கொண்ட நவாஸ் 2005 முதல் சைல்ட் பெர்ஸ்ட் (Child First) என்ற முன்பள்ளி ஒன்றை ஆரம்பித்து அதன் தலைவராகவிருந்து சிறந்த கல்விப் பணியாற்றி வருகிறார்.

மர்ஹூம் முகம்மது தம்பி அவர்களின் புதல்வி றிஸ்பா அவர்களைத் துணை வியாக்கிக் கொண்ட இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி பைக்கீர் முகைதீன் ஜமாஹிர், விரிவுரையாளர்

பைக்கீர் முகைதீன் ஜமாஹிர் 1968-08-13ல் மருதமுனையில் பிறந்தார் ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. உயர்தரம் வரை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் பயின்ற இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு கலைத்துறை மாணவனாகத் தெரிவானார். இங்கு தனது கற்கை நெறியை B.A. (Hons) பூர்த்தி செய்த பின் 14-02-1994ல் மெய்யியல், உளவியல் துறை உதவி விரிவுரையாளர் நியமனம் பெற்றார். இன்று வரை பேராதனைப் பல்கலைக் கழகத்திலேயே கடமையாற்றும் இவர் முதுநிலை விரிவுரையாளராகத் தன்னை உயர்த்திக் கொண்டார். B.A. (Hons) Dip. in. Ed., M.Phil, Ph.D. என்ற விசேட தகைமைகளைப் பெற்ற கலாநிதி ஜமாஹிர் பொது உளவியல் ஓர் அறிமுகம், மெய்யியலும் சமயமும், மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும், ஒழுக்கவியல் ஓர் அறிமுகம், நவீன அளவையியல் போன்ற நூல்களையும் எமக்களித்துள்ளார்.

இலங்கை தென்கிழக்கு ஆய்வு மையத்தின் இளம் கல்வியியலாளர் விருது 21-11-2002இலும், மத்திய மாகாண கல்வி அமைச்சின் எழுத்தாளர் கௌரவிப்பு விருது 2002இலும் பெற்று எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்தார்.

சேகுசாய்வு என்று எல்லோராலும் அறியப்பட்ட முகம்மது அபூபக்கர் என்பவரின் மகள் மிஸ்றியாவைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

கடந்த இருபது வருடங்களாக மெய்யியல் மற்றும் உளவியல் புலம் சார்ந்த கற்றல்- கற்பித்தல், அறிவுப் பரப்புகை ஆகிய பணிகளைச் செய்து வருவதுடன் உள்நாட்டிலும் பிராந்திய நாடுகளிலும் ஆய்வு மாநாடுகளில் கலந்துகொண்டு கணிப்புக்குள்ளான ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளதோடு இலங்கைப் பல்கலைக் கழகங்களில் மெய்யியல் பாட நெறியைக் கற்பித்தல் தொடர்பான ஆய்வறிக்கை தயாரிக்கும் குழுவின் முதன்மை ஆலோசகராகவும் க.பொ.த. (உயர்தரம்) அளவையியலும் விஞ்ஞான பாடச் சீர்திருத்தக் குழுக்களிலும் பங்கேற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி. பீர்முகம்மது முகம்மது இர்பான்

ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.எம். பீர்முகம்மது அவர்களின் ஒரே மகன் முகம்மது இர்பான் 01-07-1974ல் மருதமுனையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை அல்-மனார் மத்திய கல்லூரியில் பயின்ற இவர் பின்வரும் உயர் கல்வித் தகைமைகளைக் கொண்டவர்.

1. அஷ்ஷேய்க் அறபு மொழிமூலப் பட்டம் - ஜாமிஆ நழீமியா, பேருவல.
2. கலைப்பட்டதாரி (BA) பேராதனைப் பல்கலைக்கழகம்
3. ஆங்கில டிப்ளோமா - கொழும்பு, அக்குவைனாஸ் கல்லூரி
4. M.A. மொழி கற்பித்தல்
5. M.A. தமிழ், ஆங்கிலம், அறபு மொழிபெயர்ப்பு
6. Ph.D. (கலாநிதி) பிரயோக மொழியியல், ஆபிரிக்கா சர்வதேச பல்கலைக் கழகம், சூடான்.

24-07-2005ல் ஜாமியா நழீமியாவின் விரிவுரையாளராகப் பணியேற்ற இவர் 25-10-2010ல் சூடான் சர்வதேசப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையேற்றார். தமிழ், ஆங்கிலம், அறபு மொழிகளுக்கிடையேயான மொழிபெயர்ப்பு எனும் தலைப்பில் M.A. பட்டம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமைக்குரியவர்.

"ஷரீஆவின் பின்னணியில் இஸ்லாமிய நிறுவனங்களின் பொறுப்பு" என்ற ஒரு ஆய்வுநூலை எழுதியிருக்கும் இர்பான் கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, அபூ சுலைமான், ஹஸனுல் பன்னா செய்யித் குதுப் போன்ற மற்றும் பல பிரபல்யமான அறிஞர்களின் 15இற்கும் மேற்பட்ட நூல்களை மொழிமாற்றம் செய்து எமக்கு வழங்கியுள்ளார். இன்னும் பல நூல்கள் வெளிவரவிருக்கின்றன.

சூடான் நாட்டுப் பல்கலைகழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கட்கு மத்தியில் அறபுமொழி மூலம் நடைபெற்ற "இலத்திரனியல் விளையாட்டு உபகரணங்களும் சிறார் வளர்ப்பதில் அவற்றின் தாக்கமும்" என்ற ஆய்வுக் கட்டுரைக்காக முதற்பரிசும் பண முடிப்பும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

பாத்திமா சிஹாறா என்பவரைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். WAMY - முஸ்லிம் சர்வதேசப் பேரவை, MFCD - கலாச்சாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் நிறுவனம் என்பனவற்றின் பிரதானி என்ற வகையில் இஸ்லாமிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித் தொடர்களை நடாத்தியதுடன் பொருளாதாரத் தேவையுடையவர்கள் பலருக்கு உதவிகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்-ஷெய்க். மௌலவி. முகம்மது ஹனீபா முகம்மது ஜெலீல்

சிரேஷ்ட விரிவுரையாளர்

முகம்மது ஹனீபா முகம்மது ஜெலீல் 1967-01-02ல் மருதமுனையில் பிறந்தவர். கமு/ மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் கலைமானிப் பட்டதாரியாக தனது உயர்கல்வியை ஆரம்பித்து இலங்கை, பாகிஸ்தான் (M.A.), இந்தியா (M.Phil.) முதலிய உயர்கல்வித் தகைமைகளையும் பெற்றுள்ளார். 20-03-1990ல் ஆசிரியர் நியமனத்தைப் பெற்ற இவர் விரிவுரையாளராகவும் தற்போது சிரேஷ்ட விரிவுரையாளராக கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

ஜமாஅத்தே இஸ்லாமி மருதமுனை உப பிராந்திய அமைப்பாளராகச் செயற்படுவதோடு இவர்,

1. இஸ்லாம் கூறும் உலக வாழ்வு (2008)
2. இல்முத் தலாலா மினழ் ழவாஹிரில் லுகவிய்யா (2011)
3. மின் கல்கலீ - அறபுக் கவிதைத் தொகுப்பு (2012)
4. Teaching Methodology of Arabic Language in Sri Lanka University (2012) (Arabic Version)

ஆகிய நான்கு நூல்களையும் எமக்குத் தந்துள்ளார்.

மருதமுனை உலமா சபையின் உப தலைவராகவும் அந்நஹ்ழா அறபிக் கல்லூரியின் நிருவாக சபை உறுப்பினராகவும் செயற்படுகிறார்.

முகம்மது பாறூக் ஐனுல் கிபாயா என்ற பட்டதாரி ஆசிரியையின் கணவரான இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

இவர் ஆற்றும் உரைகள், குத்பாப் பிரசங்கங்கள் என்பன சிந்தனை ரீதியானவையாகவும் மக்களின்பால் அதிக தாக்கத்தினை ஏற்படுத்துவதும் இங்கு சுட்டிக் காட்டப்படல் வேண்டும்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழீல் மவ்லானா அஹமத் அன்ஸார் மவ்லானா, விரிவுரையாளர்

மர்ஹூம் பழீல் மவ்லானா அவர்களின் புதல்வர் அஹ்மத் அன்ஸார் மவ்லானா 1968-01-01ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கமு/ உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் உயர்கல்வியினை பேருவளை ஜாமியா நழீமிய்யா மற்றும் எகிப்து அல்-அஸ்ஹர் பல்கலைக் கழகத்திலும் பெற்றுக்கொண்டார். 1993-09-01இல் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் இஸ்லாம் பாட வளவாளராகப் பல பாடசாலைகளிலும் சேவையாற்றிய பின் அட்டாளைச்சேனை தேசிய கல்வியில் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

MA (Islamic Culture), MA (Teach of Education) போன்ற விசேட தகைமைகளை யுடைய இவர் பின்வரும் நூல்களையும் தந்துள்ளார்.

1. இலங்கையின் பன்மைச் சமூக கலாசாரக் கூறுகளிடையே நல்லிணக்கம்.
2. விழுமியக் கல்வியில் ஆசிரியர் வகிபாகம்.
3. இஸ்லாம் கூறும் சமாதானம் (குத்பாக்கள்).
4. குத்பாக்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்.
5. அரபுக் கல்லூரிகளினூடாகச் சமாதானக் கல்வி.

இவர் முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் நடாத்திய சேர். மாக்கான் மாக்கார் சவால் கேடய பேச்சுப் போட்டியில் 1984, 1985, 1986ம் ஆண்டுளின் தொடர் வெற்றிபெற்று விருதுகளைச் சுமந்தவர்.

அப்துல் ஸமத் பௌசுல் இனாயா மவ்லவியாவைத் திருமணம் செய்துகொண்ட இவர்களுக்கு ஒரு பெண் பிள்ளை உண்டு.

தேசிய பத்திரிகைகளில் பல கட்டுரைகள் வரைந்துள்ள இவர் மருதமுனை ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளராகவும், அம்பாறை மாவட்ட உலமா சபையின் செயலாளராகவும், மருதமுனை ஸகாத் நிதியத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். பாகிஸ்தான், றியாத், டாக்கா, ஈரான் போன்ற நாடுகளில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள், செயலமர்வுகள், தலைமைத்துவப் பயிற்சிகள் எனப் பலவற்றில் பங்கேற்றுள்ள இவர் மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் (NTF) ஆசிரியர் கல்வித்துறையின் விரிவுரையாளரு மாவார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்மாலெப்பை முகம்மது மாஹிர், விரிவுரையாளர்

மருதமுனையின் பல்வேறு சமூக சேவைகளில் ஆர்வம் கொண்டு செயற்பட்ட மர்ஹூம் எம்.எல்.எம். இஸ்மாலெப்பை (ஹப்ஸா) வின் மகனான இவர் ஆரம்பக் கல்வியை கமு/ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கற்றார். 1990ல் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று இதே பாடசாலையிலிருந்து 1992இல் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு பிரவேசித்த மாஹிர் அவர்கள் 1997இல் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளரானார். இவர் தற்போது முதுநிலை விரிவுரையாளராக கலைப்பீடத்தில் சமூக விஞ்ஞானத் துறையில் மெய்யியல் உளவியல் ஆலோசனைப் பிரிவில் உயர்கல்விச் சேவை செய்து வருகிறார்.

சமூக ஆய்வு விடயங்களில் ஆர்வம் கொண்ட இவர் தனது முதலாவது பட்டப் படிப்பு ஆராய்ச்சியில் கிழக்கு மாகாண சூஃபிகளின் விபரங்களை சேகரித்து ஆவணப்படுத்தி அத்துறையை மதிப்புக்குள்ளாக்கினார். பின்னர் தொடர்ந்தும் உயர்கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு நுழைந்த இவர் தத்துவத்தில் முதுமானி பட்டம் பெற்றார். இதனால் மருதமுனையின் உயர் கல்வித் துறையினரின் பட்டியலில் சேர்ந்து மதிப்பை ஏற்படுத்தினார். இப்பட்டப் பின் படிப்பு ஆய்வு ஆராய்ச்சி முறைகளோடு தொடர்புபட்டதால் இத்துறையில் ஈடுபடும் பலநூறு மாணவர்கள் இவரிடம் பயின்று பல்வேறு துறைகளில் சேவையாற்றுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தென்கிழக்குப் பல்கலைக் கழகம் இவரை வெளிவாரி கற்கைக்கான இணைப்பாளராகவும் நியமித்துள்ளது. வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு ஆலோசனை உதவிசெய்து வருகிறார். தனது கலாநிதிப் பட்டப்பின் படிப்பு தகவல் சேகரிப்பு தொடர்பாக இந்தியாவுக்கு பல தடவைகள் சென்றுள்ளதுடன் பல சர்வதேச மாநாடுகளிலும் கலந்துகொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மர்ஹூம் எம்.ஏ. அப்துல் ஹமீது (ஓவசியர்) அவர்களின் மகளான பஸீலாவை திருமணம் செய்த இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது இஸ்மாயில் முகம்மது ஆரிப், பொறியியலாளர்

"மருதூர்க் கொத்தன்" என அழைக்கப்படும் ஓய்வுபெற்ற அதிபர் வீ.எம். இஸ்மாயில் அவர்களின் புதல்வன் முகம்மது ஆரிப் அவர்கள் மருதமுனையில் பிறந்தவர்.

ஆரம்பக் கல்வியை கழு/ சம்சுல் இல்ம் வித்தியாலயத்திலும், கழு/ அல்-ஹம்றா வித்தியாலயத்திலும், கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் பெற்றார். பின்னர் க.பொ.த. உயர்தரத்தினை கல்முனை சாஹிறாக் கல்லூரியில் சிறப்பாகக் கற்று 1983/ 1984ம் கல்வியாண்டில் மொறட்டுவப் பல்கலைக் கழகத்திற்கு பொறியியல் துறைக்குத் தெரிவானார்.

1990ஆம் ஆண்டு இரசாயனப் பொறியியலாளராக சிறப்புப் பிரிவில் தேர்ச்சி பெற்று, அதே ஆண்டில் சிறந்த இரசாயனப் பொறியியல் Design Project இற்கான Lever Brother's Award இனையும் பெற்று பெருமை சேர்த்தார்.

1989 - 1994 வரை அம்பாறை சீனி உற்பத்தித் தொழிற்சாலையில் இரசாயன பொறியியலாளராக (Chemical Engineer) மற்றும் Laboratory Chemist ஆகவும் பணியாற்றினார்.

1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் Skill Migrant ஆக தொழில்வாய்ப்பைப் பெற்று அவுஸ்திரேலியா நாட்டில் குடிபெயர்ந்து தற்போது இருநாட்டுப் பிரஜையாக தனது மூன்று பெண் மக்களுடன் வாழ்ந்து வருகிறார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக உயர்கல்வி மற்றும் தொழில், குடிபெயர்வு போன்ற காரணங்களால் மருதமுனையில் வசிக்க முடியாமல் போனதால் சில நண்பர் களையும், உறவினர்களையும் தவிர பல பேருக்கு தன்னைப் பற்றிய குறிப்புக்கள், அறிமுகங்கள் இல்லாமல் போய்விட்டதே என்ற மன ஆதங்கத்துடன் வாழ்ந்து வருகிறார் என்பதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். ஏ.எச்.எம். அன்ஸார், SLAS

செயலாளர், வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு, கிழக்கு மாகாணம்.

அப்துல் ஹமீட் முகம்மது அன்ஸார் மருதமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா மற்றும் அல்-மனார் மத்திய கல்லூரிகளில் மேற்கொண்டார். மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி இப்பாடசாலையிலிருந்தே தெரிவான இவர் ஒரு முகாமைத்துவமானி (BBA) பட்டதாரியானார். ஆசிரியராகத் தனது முதல் நியமனம் பெற்று சிறந்த ஒரு ஆசிரியராகக் கடமையாற்றிய வேளையில் இலங்கை நிர்வாக சேவைப் பரீட் சைக்குத் தோற்றி சித்தி பெற்றார். பல பிரதேசங்களில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய அன்ஸார் இவரது நேர்மையான சேவையின் மூலம் மக்களின் அபிமானத்தையும், மேலதிகாரிகளின் அன்பினையும் பெற்றார்.

குறிப்பாக 26-12-2004 சுனாமியின் போது கல்முனையின் பிரதேச செயலாளராக விருந்த காரணத்தினால் தனது சொந்த மக்களுக்குச் சேவை செய்யும் வாய்ப் பினையும் பெற்றார். சுனாமியினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மருத முனையின் மீள் கட்டுமானப் பணியில் தீர்க்க தரிசனத்துடனும், தியாக சிந்தனையுடனும் அரும்பணியாற்றினார். மக்களோடு மக்களாக நின்று அவர்களின் கஷ்ட நஷ்டங்களையும் பகிர்ந்துகொண்டார். வாழ்வாதாரங்கள், வீட்டுத் திட்டங்கள், மறுவாழ்வுத் திட்டங்கள், கல்வி, சுகாதார வேலைத் திட்டங்கள் எனப் பிரதேசத்தின் குறிப்பாக மருதமுனையின் மேம்பாட்டுக்காகவும் அயராது உழைத்தார். அழிவுற்ற ஷம்ஸ் மத்திய கல்லூரி, வைத்தியசாலை என்பனவற்றின் மீளுருவாக்கத்தில் திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டதுடன் மக்களின் எதிர்காலத் தேவைகளையும் கவனத்திற்கொண்டு அதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டார்.

இவரது சேவைகளைப் பார்த்துப் பொறாமை கொண்ட சிலரும் இல்லாமலில்லை. பல சிரமங்கள், இடைஞ்சல்கள் என இவர் எதிர்கொள்வதற்குக் காரணமாக அமைந் தவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்பதனையும் இங்கு சுட்டிக்காட்டல் பொருத்தம்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகத் தற்போது கடமை யாற்றும் அன்ஸார் அவர்கள் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி மருதமுனையின் பல வீதிகளைத் தார்வீதிகளாகவும், கொங்கிறீட் வீதிகளாகவும் மாற்றியுள்ளார். வடிகாலமைப்புக்கள் மற்றும் பொதுநிறுவனங்களுக்கான உதவிகள் எனப் பல சேவைகளைச் செய்து வருகிறார்.

இவரது சேவைகள் மேலும் எமது மண்ணுக்குக் கிடைக்க வேண்டும் என்பதும் அவருக்கு உதவிகள் செய்ய முடியாவிட்டாலும் உபத்திரமாவது செய்யாமல் விடுவது மிக முக்கியமானது என்ற செய்தியை இதன் மூலம் விடுக்க விரும்புகின்றேன்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமஶ்ரீ, தேசமான்ய, ரத்னதீப

அல்-ஹாஜ். முகம்மது தம்பி நௌபல் (SLPS, SLAS)

முகம்மது தம்பி முகம்மது நௌபல் தனது ஆரம்பக் கல்வியை புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வி மற்றும் க.பொ.த. உயர்தர வகுப்பு வரை அல்-மனார் மத்திய கல்லூரியிலும், மேற்கொண்ட இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வியாபார நிர்வாகமானி (சிறப்பு) பட்டம் பெற்று வெளியேறினார்.

தனது முதல் நியமனமாக பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற நௌபல் ஒரு சிறந்த ஆசிரியராக மிகக் குறுகிய காலத்திலேயே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். விளையாட்டு, கலை, இலக்கியம் என இவரது திறமைகள் விரி வடைந்து சென்ற இக்காலத்தில் இலங்கைத் திட்டமிடல் சேவைப் போட்டிக்குத் தோற்றி அதில் சித்திபெற்றதன் பயனால் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பதவியினைப் பெற்றுக்கொண்டார்.

இவ்வேளையில் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் தோற்றி அதிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று இலங்கை நிர்வாக சேவையில் உள்வாங்கப் பட்ட நௌபல் அட்டாளைச்சேனை, பொத்துவில், ஓட்டமாவடி, கல்முனை போன்ற பிரதேசங்களில் கடமையாற்றியதன் பின் தற்போது மீண்டும் ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகக் கடமையாற்று கிறார்.

"மருதமுனை வரலாறு ஆள்சார் கண்ணோட்டம்" என்ற நூலின் இரண்டு பாகங்கள், மாம்பழக்கொச்சி என்ற கவிதைத் தொகுப்பு ஆகிய படைப்புக்களைத் தந்துள்ள நௌபல் மருதமுனையில் கலாச்சார மண்டபம் அமைவதற்குக் காரண கர்த்தாவாக விளங்கினார்.

பல சமூக சேவைகள் இயக்கச் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டும் இவர் மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவிருந்து கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. அப்துல் கபூர் ஹன்சிலா என்ற பெண்ணைத் திருமணம் செய்துள்ள இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகம்மது காசிம் அன்ஸார்

பிரதேச செயலாளர்

முகம்மது காசிம் சவ்தா உம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரான அன்ஸார் 17-09-1963இல் மருதமுனையில் பிறந்தார். புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியினையும், அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியையும் கற்று பல்கலைக் கழகம் சென்று ஒரு கலைமானியாக வெளியேறினார்.

1991-03-25ம் திகதி பொது எழுதுவினைஞர் நியமனத்தைப் பெற்ற இவர் ஒரு சிறந்த ஊழியனாகத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார். தனது இப்பதவிக் காலத்திலேயே இலங்கை நிருவாக சேவையில் தேறி சாய்ந்தமருது, ஏறாவூர், காத்தான்குடி, ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களில் பிரதேச செயலாராக தனது அதி உயர்பட்ச சேவையினை ஆற்றினார்.

இவர் கடமையாற்றிய பிரதேசங்களின் அரசியல் தலைமைகளை அனுசரித்தும், தோழமையுடனும் பழகியதனால் மக்களுக்குத் தேவையான சேவைகளைப் புரிவதில் தேவையற்ற சிரமங்களைத் தவிர்த்துக்கொண்டமையானது மக்கள் மத்தியில் இவருக்கு பிரபல்யத்தை ஏற்படுத்தியது. இதில் ஒரு சங்கடமும் இல்லாமலில்லை. ஏனென்றால் குறிப்பிட்ட அரசியல்வாதியின் அதிகாரங்களும், செல்வாக்கும் இல்லாமல் போகும் சந்தர்ப்பங்களில் இவரும் ஒரு சில பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கும். எது எப்படியிருப்பினும் இத்தடைகளையெல்லாம் தாண்டி தனது சேவைளை மக்களைச் சென்றடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்.

முகம்மது இஸ்மாயில் ஹமீதா உம்மாவின் கணவரான இவருக்கு இரண்டு குழந்தைகள் உண்டு.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்வுலெப்பை அன்வர்தீன்

திட்டமிடல் பணிப்பாளர்

சாய்வுலெப்பை அன்வர்தீன் 1966-08-05ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. உயர்தரம் வரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கற்றார். இங்கிருந்து இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் திற்குத் தெரிவான அன்வர்தீன் கலை சிறப்புப்பட்டதாரியாக வெளியேறினார். பின் கலைமுதுமானி (MA) கற்கை நெறியையும் பூர்த்தி செய்ததுடன் P.G.D. Planning, Dip. in FNP போன்ற கற்கை நெறிகளையும் நிறைவுசெய்தார்.

மேலும் பங்களாதேஷில் Dip. in Rural Development, அவுஸ்திரேலியாவில் Dip. in Housing Plane கற்கை நெறிகளைத் தனது விசேட தகைமைகளாக்கிக் கொண்டார்.

சமூகக் கல்வியும் வரலாறும் O/L, வரலாறு O/L, வினைத்திறன் வழிகாட்டி, சமூர்த்தி உத்தியோகத்தர் வழிகாட்டி, கிராமசேவகர் ஆகிய ஐந்து நூல்களை வெளியிட்டு கல்வி உயர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியுள்ளார்.

சிறுவயதில் ஓரங்க நாடகங்களைத் தனிமையில் செய்து பார்ப்பதை நாங்கள் ஒழிந்திருந்து பார்த்த பசுமையான நினைவுகள் இன்றும் எனக்குள்ளது. சில போது றாசீக் ஆசிரியர், என்.எம். இஸ்மாயில், தவ்பீக் அதிபருடன் நானுமாகச் சேர்ந்து நாடகம் நடித்துக் காட்டும்படி கேட்டுக்கொள்வோம். அவ்வேளையிலேயே அவைக் கூச்சம் எதுவுமின்றி உடனேயே தானாகவே நாடகமியற்றி நடித்துக் காட்டுவார். சிறுவயதிலேயே அயலவர்களுக்கு உதவும் தன்மையையும் பெற்றிருந்தார். இவரது இளமைக் காலச் செயற்பாடுகளை அவதானித்த எனது தந்தை அப்துல்றகீம் மரைக்கார், அன்வர்தீனை உற்சாகமூட்டுவது மட்டுமல்லாமல் அவரது தந்தை சாய்வுலெப்பை அவர்களிடம் அன்வர்தீனை உயர்கல்வி கற்கவைக்க வேண்டும் என்று கூறிக்கொண்டே இருப்பதை என்றும் என்னால் மறக்க முடியாது. எமது அயலவர்களாகவிருந்த இவரது குடும்பம் எம்மோடு மிகவும் நட்புரிமையுடன் பழகி வந்தமையும் என்றும் அழியாத நினைவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையாகவே கலைத்துறையிலும், சமூக சேவையிலும் ஆர்வம் கொண்ட இவருக்குப் பொருத்தமான பதவி அம்பாரை மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் கிடைத்திருப்பதென்பது இவரது திறமைக்கும் அயராத உழைப்புக்குமான பரிசாகவே நான் காணுகின்றேன்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை அன்வர்தீன் எமது இந்தக் கிராமத்தின் அபிவிருத்திக்கும், உயர்ச்சிக்குமாகப் பயன்படுத்தத் தவறவில்லை. இதன் மூலம் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரிக்கான மூன்றுமாடிக் கட்டிடம், விஞ்ஞான ஆய்வுகூடத் திருத்தம், பள்ளிவாசல் மீளமைப்பு, மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கான பார்ப்போர் அரங்கம், அல்-ஹிக்மா பாடசாலைக் கட்டிடம், புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தி யாலயத்துக்கான கட்டிடத் திருத்தவேலைகள், பெண்கள் அரபுக் கல்லூரி நிர்மாணப் பணிக்கான ஆரம்பகட்ட வேலைகளுக்காக ரூபா ஏழு இலட்சம் ஒதுக்கீடு போன்ற பாரிய வேலைத்திட்டங்களை இன்றுவரை நிறை வேற்றியுள்ளார் என்பதை நன்றியுடன் நாம் நினைத்துப் பார்த்தல் வேண்டும். எதிர்காலத்திலும் இவ்வாறான அபிவிருத்திப் பணிகளுக்கு உதவக் காத்திருக்கிறார்.

அப்துல் கரீம் மவ்லவி அவர்களின் புதல்வி சித்தி முனவ்வறா என்பவரைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். இவரது சேவைகள் தொடர இறைவனைப் பிரார்த்திப்போமாக.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது சாலி அப்துல் ஜலீல் B.Com

வலயக் கல்விப் பணிப்பாளர் - கல்முனை.

முகம்மது சாலி அப்துல் ஜலீல் 1960-04-16இல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் மேற்கொண்ட இவர் க.பொ.த. உயர்தரம் வரை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகத்துறை கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தார்.

26-12-1985ல் வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற அப்துல் ஜலீல் ஒரு சிறந்த ஆசிரியராகப் பணிபுரிந்தது மட்டுமல்லாமல் பொருளாதார பாடத்தினைக் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் மூலம் கற்பித்து சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறுவதற்குக் காலாக அமைந்தார். இத்தனைக்கு மத்தியிலும் இந்தியா காமராஜர் பல்கலைக் கழகத்தின் பொருளியல் முதுமானிப் பட்டத்தினைப் பூர்த்தி செய்த இவர் கல்வி, பொருளியல் தொடர்பான பல வெளியீடுகளையும் தந்துள்ளார்.

வலயக் கல்விப் பணிப்பாளராக சம்மாந்துறைக் கல்வி வலயத்தினை அலங்கரித்த ஜலீல் தற்போது கல்முனைக் கல்வி வலயத்தின் பணிப்பாளராகக் கடமையாற்று கிறார்.

மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராக விருக்கும் இவர் மருதமுனை பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்கான அமைப்பின் தலைவராகவும், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீட சபையின் உறுப்பினராகவுமுள்ளார்.

ஓய்வுபெற்ற ஆசிரியர் அபூபக்கர் அவர்களின் புதல்வி ஜெஸீலாவைக் கரம்பற்றிய இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது சாலிகு சஹ்தூல் நஜீம்

வலயக் கல்விப் பணிப்பாளர் - சம்மாந்துறை.

போஸ்ட்மாஸ்டர் என எல்லோராலும் அறியப்பட்ட காலஞ்சென்ற முகம்மது சாலிகு அவர்களது புதல்வர் சஹ்தூல் நஜீம் 1967-03-06ல் மருதமுனையில் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும், ஒருவருடம் உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் 7 முதல் 12ம் ஆண்டு வரை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் கற்று விவசாய விஞ்ஞான பாடநெறிக்குத் தெரிவாகி பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றார். அதனைச் சிறப்பாக நிறைவுசெய்த இவர் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தனது விஞ்ஞான முதுமானிப் பட்டத்தினையும் முடித்துக் கொண்டதுடன் இலங்கை கல்வி நிருவாக சேவைப் பரீட்சையிலும் வெற்றி பெற்றார். 06-01-2000ல் தனது முதல் நியமனத்தைப் பெற்ற இவர் தற்போது சம்மாந்துறைக் கல்விப் பணிமனையில் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரிகின்றார்.

ஆங்கிலம், சிங்களம், கணனி போன்றவற்றில் அதிக தேர்ச்சியுடையவரான இவர் கல்விச் செயற்பாடுகளுக்காகப் பாடசாலைகள் வழங்கிய பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

ஜெஸ்மின் சிபா என்பவரைத் திருமணம் செய்துள்ள இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

SESDO அரசசார்பற்ற நிறுவனத்தின் தவிசாளராகவும், HUT, CLUB ன் உறுப்பினராகவுமிருந்து சமூக சேவைகளிலும் பங்கேற்கும் இவர் சுனாமியினால் அழிவுண்ட ஷம்ஸ் மத்திய கல்லூரியின் மீளுருவாக்கத்தில் பெரிதும் பங்கேற்றுக் கொண்டார்.

"மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்" என்ற இவ்வாக்கம் நடுநிலையான உண்மைகளை வெளிக்கொணரும் ஒரு ஆவணமாக அமைய வேண்டும் என்ற கருத்தினையும் இவர் கொண்டுள்ளார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யது முகம்மது மவ்லானா செய்யது உமர் மவ்லானா

பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் - சம்மாந்துறை.

செய்யது முகம்மது மவ்லானாவின் புதல்வரான செய்யது உமர்மவ்லானா 1964-09-18ம் திகதி மருதமுனையில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கமு/ அல்-ஹம்றாவில் தொடங்கி அல்-மனார் மத்திய கல்லூரி, தேசிய கல்வி நிறுவகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் எனத் தனது உயர்கல்வியை வளர்த்துக் கொண்டார். 07-12-1984ல் ஆசிரியர் நியமனம் பெற்ற இவர் பின்னர் கல்வி நிருவாக சேவையிலும் தேறினார். அல்-மனார் மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய பின் சம்மாந்துறை பிரதி வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

ஹோமியோபதி மருத்துவம், ஆயுள்வேத வைத்தியத்திலும் தேர்ச்சி பெற்று தனது பிரத்தியேக சேவையாகவும் வைத்தியம் செய்து வருகிறார்.

ஏ. செய்னுலாப்தீன் ஆசிரியரின் மகள் நிஸ்வானாவைக் கரம்பற்றிய இவர் இரு குழந்தைகளின் தந்தையுமாவார். 2009 இறுதியிலிருந்து 2014 ஆரம்பம் வரையான அல்-மனாரின் அதிபராகவிருந்த காலப்பகுதியில் பௌதிகவள அபிவிருத்தி, விளையாட்டு மைதானம், பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னேற்றம் என வளர்ச்சி கண்டதுடன் விளையாட்டு, சாரணியம், முதலுதவி என இவரது காலத்தில் பெருவளர்ச்சியடைந்தது. மேலும் இக்கல்லூரி எட்டு ஜனாதிபதி விருதுகளைப் பெறுவதற்கும் காரணகர்த்தாவாக இருந்தார்.

அக்பர் கிராம உருவாக்கத்தின்போது இவரது பங்களிப்பு அளப்பெரியது. ஜம்இய்யதுத் தலபா, ஜமாஅத்தே இஸ்லாமி ஆகியவைகளின் ஆரம்பகால உறுப்பினரான இவர் கிராமத்தின் பல இயக்கங்களின் உறுப்பினராகவும், மருதமுனை மக்கள் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளராகவுமுள்ளார்.

பசுமை, உட்படுத்தல் கல்வி என்பனவற்றின் நூலாசிரியரும், அல்-மனார் வெளியீடுகளின் முதன்மையாளராகவும் இவர் காணப்படுவதுடன் பல விருதுகளுக்கும் சொந்தக்காரனாவார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைக்கீர் முகைதீன் யாஸீர் அறபாத் முகைதீன் (SLEAS)

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), கல்முனை.

எம்.பி. முகைதீன் ஆசிரியர் அவர்களின் புதல்வரான யாஸிர் அறபாத் 1971-12-01ல் பிறந்தார். புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பயின்று அல்-மனார் மத்திய கல்லூரியில் உயர்தரம் வரை கற்றார். இங்கிருந்து தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு விஞ்ஞானவீட மாணவனாகத் தேர்வானார். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி முதுமானிப் பட்டத்தினையும் தனதாக்கிக் கொண்டார்.

1999-11-01இல் ஆசிரியராக நியமனம் பெற்றார். இலங்கை கல்வி நிருவாக சேவை (SLEAS) தரம் மூன்றில் தேறிய இவர் தற்போது கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் - முகாமைத்துவம் - பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

பாக்கியதுஸ் ஸாலிகாத் ஜும்ஆப் பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபையில் 2003-2006 காலப்பகுதியில் அதன் அங்கத்தவராகவிருந்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

க.பொ.த. உயர்தர ICT பாடநெறியைத் தழுவிய மாதிரி வினா-விடைப் பயிற்சிப் புத்தகம் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

பாத்திமா பெறோசா என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹுசைன் தம்பி குமாயூன்

ஓய்வுபெற்ற அதிபர்

அதிபர் முகம்மது ஹுசைன் தம்பி குமாயூன் 26-09-1954ல் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். 1957ம் ஆண்டு இளமைப் பருவத்திலேயே தனது தந்தையுடன் நிரந்தரமாக மருதமுனையில் குடியேறிய இவர் தனது ஆரம்பக் கல்வியை அல்-ஹம்றாவிலும், இடைநிலைக் கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரி, கல்முனை சாஹிறாக் கல்லூரி ஆகியவைகளிலும், உயர்கல்வியை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் மேற்கொண்டார்.

12-05-1977ல் கணித, விஞ்ஞான ஆசிரியராக நியமனம் பெற்றுப் பல பாடசாலைகளில் கற்பித்து நல்ல ஆசான் என்ற பெயரினையும் பெற்ற இவரால் விஞ்ஞானப் பாடத்தில் ஷம்ஸ் மத்திய கல்லூரி மாணவர்கள் அதிகளவான பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றார்கள் என்பதும் குறிப்பிடப்படல் வேண்டும்.

ஜப்பான் ஜைக்கா நிறுவனத்தினால் சிறந்த அதிபருக்கான விருதினைப் பெற்ற இவர் மருதமுனை புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்தின் அதிபராக சிறப்பான பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார். இவர் இப்பாடசாலைக்காகப் பல அபிவிருத்திப் பணிகளையும், கல்வி முன்னேற்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

அப்துல் ஹமீத் கதீஜா உம்மா என்பவரைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

1965 முதல் 1970 வரை அல்-மனாரில் எனது வகுப்புத் தோழனாக இவர் இருந்தமையும் இக்காலப் பகுதியில் தற்போது விளையாட்டு மைதானமுள்ள பிரதேசமான மையித்துப்பிட்டியில் இவருடன் நாங்கள் உதைபந்தாட்டங்களில் ஈடுபடுவதும் மறக்க முடியாதன.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீராலெப்பை முகம்மது அப்துல் காதர், ஓய்வுபெற்ற கணக்காளர்

மீராலெப்பை முகம்மது அப்துல் காதர் 23-03-1950ல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் ஆரம்பித்து ஒரு வருடத்தின் பின் மருதமுனை அல்-மனார் மகாவித்தியாலயத்தில் பயின்று க.பொ.த. (சாதாரண தரம்) வரை படித்து பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் மருதமுனையில் க.பொ.த. உயர்தர வகுப்பு ஊரில் இல்லாததால் கல்முனை சாஹிறாக் கல்லூரியின் முதலாம் ஆண்டையும், மட்டக்களப்பு பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் இரண்டாம் ஆண்டையும் படித்து சித்தியடைந்து கொழும்பு பல்கலைக் கழகத்திற்குச் சென்று 1971 - 1973 வரை படித்து B.A பட்டம் பெற்றார். இதற்கிடையில் அரசாங்க எழுதுவினைஞர்களின் தெரிவிற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்பு தபாலக தலைமைக் காரியாலயத்தில் 01-09-1970ல் பதவியேற்று கொழும்பில் வேலை பார்த்துக் கொண்டு கொழும்பு பல்கலைக் கழகத்தில் பல சிரமங்களுக்கு மத்தியில் படித்து (B.A) பட்டம் பெற்றார்.

தொடர்ந்து தபால் திணைக்களத்தில் வேலை பார்த்து அங்கு நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்து தபாலகக் கணக்குகளை பரிசோதனை செய்யும் பிரிவுக்கு நியமனம் கிடைத்தது. அப்போது (CIMA) லண்டன் பரீட்சைக்காக படித்து அதில் முதலாம் பகுதியில் சித்தியடைந்த போதிலும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக அதை முழுமைப்படுத்த முடியவில்லை. பின்னர் இலங்கை கணக்காளர் சேவைக்கான பரீட்சையில் சித்தியடைந்து 17-08-1992 கணக்காளராக நியமனம் கிடைத்தது. பிரதேச செயலகம், சுகாதார திணைக்களம் ஆகியவைகளில் கடமையாற்றி இறுதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சின் பிரதான கணக்காளராக கடமையாற்றி 2010 மே மாதம் தனது சேவையிலிருந்து இளைப்பாறினார்.

கணக்காளராக கடமையாற்றிய காலத்தில் பொது நிதி, அபிவிருத்தி கணக்கியல் நிறுவனத்தில் கணக்கியல் துறையில் A.P.F.D.A. பட்டமும் பத்து வருடத்தின் பின் F.P.F.D.A. பட்டமும் கிடைத்தது.

அரசாங்கக் கடமையில் இருக்கும்போது ஓய்வு நேரங்களில் வைத்திய பயிற்சிக்கு இந்தியாவிற்கு பலமுறை சென்று அங்கு பயிற்சிகளை பெற்றார். சித்த ஆயுர்வேதம், ஹோமியோபதி, அக்கு பஞ்சர் ஆகியன பயின்று பட்டங்கள் பெற்றார்.

தற்போது அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறி முழுநேர வைத்திய சேவையில் ஈடுபடுகின்றார். முகம்மது புர்கான் றபீக்காவின் கணவரான இவருக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகூப் ஹபீபுள்ளாஹ், கணக்காளர்

யாகூப் ஹபீபுள்ளாஹ் 1973-09-17ல் மருதமுனையில் பிறந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது க.பொ.த. (உயர்தரம்) வரை கற்று தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சென்றார். கணக்கியல் பாடத்தில் அதிக திறமை காட்டிய இவர் இப்பிரதேச கணக்கியல் மாணவர்களின் விருப்பத்துக்குரிய ஆசானுமாவார். பொது முகாமைத்துவம் முதுமானிப்பட்டம் பெற்று தமது கல்வித் தகைமையை உயர்த்திக் கொண்ட இவர் இலங்கைக் கணக்காளர் சேவைப் பரீட்சைக்குத் தோற்றி அகில இலங்கையில் முதல்தர மாணவன் என்ற விருதினையும் 2008ம் ஆண்டு அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடமிருந்து பெற்று எமக்கும் எமது பிரதேசத்துக்கும் மாண்பினைப் பெற்றுத்தந்தார்.

2005-09-02ல் தனது முதல் நியமனத்தைப் பெற்ற இவர் கணக்காளராக இன்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் கடமை புரிகிறார்.

கிரயக் கணக்கீடு (உயர்தரம்) - 2001
உயர் பங்குடமைக் கணக்கீடு - 2004
முகாமைக் கணக்கீடு - 2005
பொது நிதி முகாமைத்துவம் - 2014 ஆகிய ஆக்கங்களை வழங்கியுள்ளார்.

அல்-மனார் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளராகவும், அபிவிருத்திக்குழு உறுப்பினராகவுமிருந்து அதன் வளர்ச்சிக்குத் தம்மாலான உதவிகளைச் செய்து வருகிறார்.

மு.ஹ. விஜிதா என்பவரைக் கரம்பற்றிய இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

மருதமுனை ஜாயா விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும், கோல்ட்மைன்ட் மீயுயர்பீட உறுப்பினராகவும் செயற்படும் இவர் மருதமுனை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையிலும் அங்கம் வகிக்கிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமர்தீன் றிஸ்வி யஹ்சர், கணக்காளர்

கமர்தீன் றிஸ்வி யஹ்சர் 1976-12-27இல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. உயர்தரம் வரையான கற்றல் நடவடிக்கைகளை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் மேற்கொண்டார். இங்கிருந்து பல்கலைக்கழகம் சென்ற இவர் BBA, CBA, APFA, MBA போன்ற உயர் கல்வித் தகைமைகளையும் பெற்றுக்கொண்டார்.

2000ம் ஆண்டு கணக்காளர் நியமனம் பெற்ற றிஸ்வி யஹ்சர் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையில் கணக்காளராகத் தற்போது கடமையாற்றுகிறார்.

முழுத்தீவுக்குமான சமாதான நீதவானாகிய இவர் தேசமான்ய (சாமஶ்ரீ) விருதினையும் பெற்றுள்ளதோடு அம்பாறை மாவட்ட மனித உரிமைகள் அமைப்பின் இணைப்பாளராகவும் செயலாற்றுகிறார்.

நீண்டகாலமாக மருதமுனை யூனிவேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவராக விருந்து அதன் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் பாடுபடுகிறார். தன்னிடம் உதவி கேட்டு வரும் பொது அமைப்புக்களுக்கும் தன்னால் முடியுமானதைச் செய்யும் இவர் எல்லோருடனும் உற்சாகமாகப் பழகும் தன்மை கொண்டவர்.

இந்த மண்ணின் முதுபெரும் சமூக சேவையாளர் ஐயூப் ஹாஜியாரின் மகள் காலிதாவைத் திருமணம் செய்துள்ள றிஸ்வி யஹ்சருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் ஹமீட் தஸ்தீக், கணக்காளர்

அப்துல் ஹமீட் தஸ்தீக் 26-01-1976ல் மருதமுனையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் பயின்ற இவர் ஒரு வர்த்தகப் பட்டதாரியாவார் (B.Com) Hons. spl. இந்தியாவில் MA பட்டத்தினையும் நிறைவுசெய்த இவர் APFA - SL (Association of Public Finance Accountant - Member SL) என்ற விஷேட தகைமையினையும் பெற்றுள்ளார். 01-09-2004ல் கணக்காளராக காரைதீவு பிரதேச செயலகத்தில் தனது முதல் நியமனத்தைப் பெற்ற இவர் தற்போது சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையில் கணக்காளராக கடமையாற்றுகிறார்.

இலங்கை கணக்காளர் சேவைக்கான கிரய கணக்கீடு, கணக்காய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளார். ஓய்வுபெற்ற பிரதேச செயலாளர் தாஸிம் அவர்களின் மகள் ஜஹ்சியா பேகம் என்பவரைக் கரம்பற்றிக்கொண்ட இவருக்கு இரண்டு பிள்ளை கள் இருக்கின்றனர்.

மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்காகப் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இவர் தற்போதைய கல்வி வளர்ச்சியில் மருதமுனை பின்னடைந்துள்ளமையைக் கவலையுடன் நோக்குவதோடு அதன் வளர்ச்சியில் மேம்பாட்டைக்காண வேண்டும் என்ற அவாவுடன் இருக்கிறார். மட்டுமன்றி இஸ்லாமியக் கல்வியுடன் இணைந்ததான கல்வியின் மூலமே ஒரு சிறந்த மாணவர் சமூகத்தைக் கட்டி யெழுப்ப முடியும் என்ற கருத்தினையும் கொண்டுள்ளார்.

ஊருக்கு ஒரு சிறந்த தலைமைத்துவம் உருவாக்கப்பட வேண்டும் என்பது இவரது அவாவாக இருக்கிறது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்த மரைக்கார் முகம்மது அமீர், அதிபர்

சிவத்த மரைக்கார் முகம்மது அமீர் 23-03-1964ல் மருதமுனையின் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பெற்று க.பொ.த. உயர்தர வகுப்பு வரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் பயின்றார். சர்வகலாசாலையில் தனது பட்டப்படிப்பினை மேற்கொண்ட இவர் 27-12-1984ல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்றார். மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் மிக நீண்டகாலம் கற்பித்தலில் தனது அளப்பெரிய பங்களிப்பைச் செய்தார். இவரது பொருளாதாரப் பாடத்தின் பரீட்சைப் பெறுபேறுகள் மிக உயர்மட்டத்தில் காணப்பட்டன.

பின்னர் இலங்கை கல்வி நிருவாக சேவைப் பரீட்சையிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றார். இவரது பதவியுயர்வுகள் சிலகாலம் காரியாலயப் பிழைகளினால் காலம் தாழ்த்தப்பட்டமையானது இவரை மிகவும் கவலைக்குள்ளாக்கியது. இது தொடர்பில் சில அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் கூட அவை கைகூடவில்லை.

இதன் பின்னர் ஏறாவூர் கல்விப் பணிமனையில் திட்டமிடல் மற்றும் மீளாய்வு பிரதிக் கல்விப்பணிப்பாளராகக் கடமைப் பொறுப்பை ஏற்றார். இவரது திறமையைக் கண்ட அப்பிரதேச கல்விசார் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் அவரைத் தொடர்ந்தும் மேற்படி கல்வி வலயத்திலேயே பணியாற்றுமாறு வேண்டிக்கொண்டனர். இவற்றையெல்லாம் தாண்டி அண்மையில் சம்மாந்துறை வலயக் கல்விப்பணிமனைக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

உம்முல் பசீறா என்பவரைத் திருமணம் செய்துகொண்ட இவர்களுக்கு மூன்று ஆண் பிள்ளைகள் இருக்கின்றனர். சுனாமியின் போது அழிவுண்ட ஷம்ஸ் மத்திய கல்லூரியின் மீளுருவாக்கத்தில் தனது முழுப்பங்களிப்பையும் வழங்கினார்.

ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்று அதன் உயர்ச்சிக்கு உழைக்குமாறு ஷம்ஸ் சமூகம் தற்போது இவரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. இதன் பிரகாரம் 01-11-2014 முதல் மேற்படி கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றுள்ளார்.

பணவீக்க வரி ஒரு நோக்கு, சிறுவர் நேயப்பாடசாலைகளின் கல்விச் சுற்றுலா என்ற இரு ஆக்கங்களின் உரிமையாளர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது மூஸா ஜெஸ்மி, ஆசிரியர்

பன்னூலாசிரியரான முகம்மது மூஸா அவர்களின் புதல்வரான ஜெஸ்மி 1979-01-31ல் மருதமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வி முதல் தென்கிழக்குப் பல்கலைக் கழகம் செல்லும்வரை அல்-மனார் மத்திய கல்லூரியிலேயே கற்றார். மேற்படி பல்கலைக் கழகத்திலிருந்து கலைப்பட்டதாரியாக வெளியேறிய இவர் 2005-09-07ல் ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுக்கொண்டார்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா, ஊடகத்துறை மனித உரிமை டிப்ளோமா, முது தத்துவமானி (தமிழ்) போன்ற துறைகளில் தேர்ந்த இவர் நாகம்மாள் ஒரு பார்வை, தேடலின் ஒரு பக்கம், திருக்குறள் - அங்கவியல் - தெளிவுரை மற்றும் 10ஆம் 11ம் தரத்திற்கான வினா-விடைப் பேழையையும் வழங்கியவர். ஊடகத் துறையில் மிகவும் விருப்பம் கொண்டுள்ள இவர் "அலிஸ் நியூஸ்" என்ற பெயரில் ஒரு குறுஞ்செய்திச் சேவையின் சொந்தக்காரர்.

இலங்கை ரூபவாஹினியின் செய்திப் பிரிவுக்கான அம்பாறை மாவட்ட ஊடக வியலாளராகவும், நாட்டின் பிரபல்யமிக்க நாளாந்த, மாதாந்த பத்திரிகைகளின் ஊடகவியலாளராகவும் செயற்படுகிறார்.

முகம்மது மர்சூக் (சதொச) அவர்களின் புதல்வியான பாத்திமா சுமையாவைக் கரம்பற்றிய இவருக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். சமூக சேவையிலும் ஈடுபாடுடைய இவர் பல அமைப்புக்களில் பொறுப்பு வாய்ந்த அங்கத்தவராகவும் இருந்து செயற்பட்டு வருகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமால்டீன் சுகைல் ஜே.பி.

மர்ஹூம் எச்.எல். ஜமால்டீன் (SSP) அவர்களின் மகன் சுகைல் 1988-08-04ல் மருதமுனையில் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியிலும், பண்டாரவளை புனித தோமியர் கல்லூரியிலும் கற்று பின்னர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்குத் தனது இடைநிலைக் கல்விக்காக வந்தார்.

B.Sc. (Hons) in Computing (Software Engineering) பாடநெறியினைப் பூர்த்தி செய்து தனது கல்வித் தகைமைகளை உயர்த்திக் கொண்டார்.

2010-12-01ல் மென்பொருள் பொறியியலாளராக நியமனம் பெற்று இன்று வரை கடமையாற்றி வருகிறார்.

முழுத் தீவுக்குமான சமாதான நீதவானாகிய இவர் கண்டி ஊடகச் சுடர் மலையக கலாச்சார சபையின் ஏ.எம். ராஜா ஜிக்கி ஞாபகார்த்த விருதியினையும் பெற்றுள்ளார்.

இதுவரை திருமணமாகாத இவர் 10-09-2009ல் சமூக சேவைகள் அமைப்பு ஒன்றையும் அமைத்து அதன் ஸ்தாபகத் தலைவராகவிருந்து சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகிறார்.

மருதமுனை ஓன்லைன் (Maruthamunai Online) செய்திச்சேவை இவரால் நடாத்தப்பட்டு வருகிறது. இச்சேவை நாடுகடந்து தொழில்புரியும் எம்மவர் களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

எஸ்.பி. ஜமால்டீன் பவுண்டேஸன், ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகம் என்பன வற்றின் பிரதித் தலைவராகவும் இவர் செயற்படுகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது நளீம் முகம்மது அப்துல் காதர், ஜே.பி.

பிரதி ஆணையாளர் - இறைவரி திணைக்களம்

முகம்மது நளீம் முகம்மது அப்துல் காதர் 10-09-1961ல் மருதமுனையில் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றாவில் பெற்ற இவர் அல்-மனார் மத்திய கல்லூரியிலும் கற்று யாழ் பல்கலைக் கழகத்திற்கு விஞ்ஞானப் பிரிவிற்குத் தெரிவானார். தனது B.Sc. (B.Adm.) Hons படிப்பினை நிறைவுசெய்து வெளியேறிய இவர் ஜெயவர்த்தன பல்கலைக் கழகத்தில் M.Sc. (Management) கற்கை நெறியினையும் நிறைவு செய்தார். பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் FPFA கற்கை நெறியினையும் பூர்த்தி செய்து வரி மதிப்பீட்டாளராக நியமனம் பெற்றார். படிப்படியாகத் தனது திறமையினால் பல பரீட்சைகளை வெற்றி கொண்டு கொழும்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தலைமைக் காரியாலயத்தில் பிரதி ஆணையாளராகக் கடமையாற்றுகிறார்.

கே.எல்.ஏ. வாஹிட் அதிபர் அவர்களின் புதல்வி மஸீனா அவர்களைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். தற்போது கொழும்பில் குடும்பமாக வாழ்ந்து வருகின்றார்.

இவர் ஒரு முழுத்தீவுக்குமான சமாதான நீதவானுமாவார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் றகீம் முகம்மது சாலிஹ், ஜே.பி.

அப்துல் றகீம் முகம்மது சாலிஹ் 1965-03-12ல் மருதமுனையில் பிறந்தார்.

தரம் ஒன்று முதல் ஐந்து வரை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும், க.பொ.த. உயர்தரம் வரை அல்-மனார் மத்திய கல்லூரியிலும் பயின்று கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியானார். 1994-03-01ல் Staff Officer ஆக நியமனம் பெற்ற இவர் தற்போது கல்முனைப் பிரதேச செயலகத்தில் சிரேஷ்ட தலைமைப்பீட சமூர்த்தி முகாமையாளராகக் கடமை புரிகிறார். சமூக சேவைகளில் தன்னை இணைத்துக்கொண்டு செயலாற்றும் இவர் அல்-மனார் மத்திய கல்லூரி அபிவிருத்திச் சபையின் செயலாளராகவும், சம்ஸ் மத்திய கல்லூரியின் S.D.C. உறுப்பினராகவும் இருந்ததுடன் கிராம அபிவிருத்திச் சங்கம், வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவைகளின் உறுப்பினராகவுமுள்ளார். அகில இலங்கை சமாதான நீதவானாகிய இவர் சாமஸ்ரீ, தேசகீர்த்தி, இரத்தினதீப போன்ற பட்டங்களையும் சுமந்துள்ளார்.

அப்துல் லத்தீப் சித்தி நஜீமாவை வாழ்க்கைத் துணையாகக் கொண்டுள்ள இவருக்கு நான்கு பிள்ளைகளிருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்சுத்தீன் சம்சுல் பரீறா

சம்சுத்தீன் வைத்தியரின் புதல்வியான சம்சுல் பரீறா மருதமுனையில் 1970-06-08ல் பிறந்தவர். மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலேயே தனது கல்வியை மேற்கொண்ட இவர் கொழும்புப் பல்கலைக் கழகத்திற்கு கலைப் பிரிவிற்குத் தெரிவானார். பட்டப்படிப்பை நிறைவுசெய்த இவருக்கு சமூர்த்தி முகாமையாளர் பதவி 1997-01-02ம் திகதி கிடைக்கப் பெற்றது. தனது பதவியின் மூலம் மக்களுக்குத் தொண்டாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வறிய மக்களுக்கான வீட்டு வசதிகள், குடிநீர், மின்சாரம், பாடசாலை உபகரணங்கள், கடன் வசதிகள், தொழில் முயற்சிகளுக்கான உதவிகள் போன்றனவற்றைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னின்றுழைத்தார். சுனாமி அனர்த்தத்தின் போதும் அப்பிரதேச மக்களுக்கு வேண்டிய உதவிகளை மேற்கொண்டார்.

அப்துல் கரீம் ஆலிமின் மகன் அப்துல் ஸகீட் என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது இப்றாகிம் முகம்மது சுபைர்

முகம்மது இப்றாகிம் முகம்மது சுபைர் 1964-08-25ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை அல்-மனார் மத்திய கல்லூரியில் பெற்றதோடு இடைநிலைக் கல்வியினையும் இங்கேயே முடித்தார். இங்கிருந்து கிழக்குப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான இவர் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நியமனம் UK, ஸ்ரீஜயவர்த்தனப் பல்கலைக் கழகப் பட்டப்பின் படிப்பிற்கான முகாமைத்துவ நிறுவனம் போன்றனவற்றில் கற்று தனது உயர்கல்வியினை மேலும் விருத்திசெய்து கொண்டார்.

மொரட்டுவப் பல்கலைக் கழகத்தில் உதவிப் பதிவாளராக தனது முதல் நியமனம் பெற்று சில வருடங்கள் சேவைசெய்த பின் UNHCR சர்வதேச அமைப்பில் தொழில்வாய்ப்பினைப் பெற்று இலங்கை, பங்களாதேஷ், லண்டன் போன்ற பல நாடுகளில் தொழில்புரிந்தார். தற்போது சிரேஷ்ட நிதி திட்டமிடல் அதிகாரியாக சுவிற்சலாந்து, ஜெனீவாவில் (UNHCR) தலைமைக் காரியாலயத்தில் பணியாற்றுகிறார்.

முகம்மது அபூபக்கர் சித்தி முனீறா என்பவரைத் திருமணம் செய்துகொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

பாடசாலைகள், பள்ளிவாயல்கள், தேவையுடையவர்கள் எனப்பல நிதியுதவிகளையும், பொருளுதவிகளையும் தாராளமாக வழங்குவதுடன் எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்பவும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவும் தான் வேலைசெய்த அமைப்பின் மூலம் மகத்தான சேவைகள் புரிந்தவர் என்பது இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். ஏ.எல். சக்காப், ஜே.பி.

B.A., Dip.in Edu.(Marit) M.Ed. Pen.

அகமது லெப்பை சக்காப் 1961.08.13ம் திகதி மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் மேற்கொண்டு அங்கிருந்தே பல்கலைக்கழக அனுமதியினையும் பெற்றுக் கொணடார். தனது பட்டப்படிப்பினை நிறைவுசெய்த இவர் 14-12-1987இல் பட்டதாரி ஆசிரியராக கல்விச் சேவையில் உள்வாங்கப்பட்ட பின்னர் அச்சேவைக் காலத்திலேயே தனது கல்வித் தகைமைகளையும் உயர்த்திக் கொண்டதுடன் இலங்கை அதிபர் சேவையிலும் தேர்ச்சி பெற்றார்.

தனது மருதமுனைக் கிராமத்தின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் பேரார்வம் கொண்ட இவர் பல சங்கங்கள் நிறுவனங்களிலும் இணைந்து தன்னாலான அதிகபட்சப் பங்களிப்பினை வழங்கினார். குறிப்பாக மருதமுனை மஸ்ஜிதுல் கபீரின் செயலாளராகவும் பொருளாளராகவும் இருந்து அரிய பல பணிகள் செய்ததோடல்லாமல் புதிய கட்டட வேலைகளில் முழு மூச்சாக நின்று உழைத்தார். தற்போது 2015 இலிருந்து அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்கான மஸ்ஜிதுல் கபீரின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட ஏ.எல். சக்காப் அவர்களுக்கு இப்பதவி அவரின் தன்னலமற்ற சேவையின் பிரதிபலனாகவே பார்க்கப்படல் வேண்டும்.

தனது அரச உத்தியோகத்தோடு மட்டும் நின்றுவிடாது அரிசி ஆலை, நெசவு நூல் வியாபாரம் என இவரது அயராத உழைப்பு அவரை ஒரு ஊர்ப் பிரமுகர்கள் வரிசையில் நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். மௌலவி முகம்மது இஸ்மாயில் ஹுசைனுத்தீன் (றியாழி)

மர்ஹூம் பீ.எம். இஸ்மாயில் அவர்களின் புதல்வன் மௌலவி ஹுசைனுத்தீன் அவர்கள் மருதமுனையில் பிறந்தவர். மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினை மேற்கொண்ட இவர் தான் ஒரு ஆலிமாக வர வேண்டும் என்று ஆசை கொண்டார். இதனால் இங்கு சில மத்ரசாக்களில் கல்வி கற்று உயர்கல்வி பெறும் நோக்கில் சவூதி அரேபியாவின் றியாத் நாட்டுக்குச் சென்று தனது கல்வியை மேற்கொண்டார். மார்க்க விடயங்களில் ஆழ்ந்த அறிவினைப் பெற்ற இவர் ஒரு சிறந்த பேச்சாளராகவும் மார்க்கச் சொற்பொழி வாளராகவும் விளங்குகிறார்.

மருதமுனை ஸக்காத் நிதியத்தின் உருவாக்கத்தில் முக்கியமான இவர் மூன்று வருடங்கள் இதன் தலைவராகவிருந்து நிதிய வளர்ச்சிக்கு உரமூட்டினார். ஆசிரியராகவிருந்து மாணவர்களின் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளையும் பெற்றுக்கொடுத்தார். சமூக சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதுடன் அவைகளுக்குத் தேவையான நிதியுதவிகளையும் மனங்கோணாது செய்து வருகிறார். கோல்ட்மைன்ட் விளையாட்டுக் கழகத்தின் பணிப்பாளர் சபையில் அங்கத்துவம் பெறும் இவர் அதன் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவி வருகிறார்.

தற்போது மருதமுனை உலமா சபையின் தலைவராகச் செயற்படும் மௌலவி ஹுசைனுத்தீன் அவர்கள் தனது "உம்முல் குறா" நிறுவனத்தின் மூலம் எம்மவர்கள் இலகுவில் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு வழிசமைத்துக் கொடுக்கிறார்.

இப்றாலெப்பை ஹபீபா என்ற பெண்ணைத் திருமணம் செய்துள்ள இவருக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஷ்-ஷெய்க். மௌலவி. மஸ்கூது லெப்பை முகம்மது முபாறக் (மதனி)

சாகுல் ஹமீட் பயில்வான் என்றே எல்லோருக்கும் அறிமுகமான மஸ்கூது லெப்பையின் புதல்வரான முபாறக் 1973-07-05ல் மத்திய முகாமில் பிறந்தார்.

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் மௌலவி ஆலிம் கற்கை நெறியினை பரகஹதெனிய தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடத்திலும், இஸ்லாமிய சட்டத்துறையில் கலைமானி சிறப்பினை மதீனா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக் கழகத்திலும், முதுமானி (எம்.ஏ) படிப்பினை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் நிறைவுசெய்தார்.

19-09-2005ல் ஆசிரியர் நியமனம் பெற்று கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் கடமையாற்றிய பின் தனது உயர்கல்வியினை இந்தியாவில் மேற்கொள்ளும் பொருட்டு ஆசிரியர் தொழிலிலிருந்து விலக்குப் பெற்றுக்கொண்டார்.

மருதமுனை தாருல்ஹுதா அறபு இஸ்லாமிய மகளிர் கல்லூரியின் முதல்வராக விருந்து மாணவர் சமூகத்தின் உயர்ச்சிக்காக செயலாற்றி வருகிறார். தாருல் ஹுதாவின் பரீட்சைப் பெறுபேறுகளும், சர்வகலாசாலை நுழைவுகளும் வியத்தகு அளவில் காணப்படுவதற்கு இவரது வழிகாட்டல் பிரதானமானது.

மருதமுனை தவ்ஹீத் பிரச்சார மையத்தின் தலைவராகவிருந்து; இஸ்லாத்தில் புகுத்தப்பட்ட நூதனங்களுக்கெதிராக கடும் விமர்சனம் செய்து வருவதுடன், தூய இஸ்லாம் சரியாகப் பின்பற்றப்படல் வேண்டும் என்ற கொள்கையிலும் திடமாக நின்றுழைத்து வருகிறார். இவரது பிரச்சாரங்கள் மக்கள் மத்தியில் தாக்கம் செலுத்தக் கூடியதாகவுள்ளமை குறிப்பிடப்படல் வேண்டும்.

இஸ்மாயில் பஸீலா என்ற பெண்ணைத் துணைவியாகக் கொண்ட இவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். டாக்டர். ஸாலிஹ் அல் பவ்ஸாரின் "கிதாபுல் தவ்ஹீத்" என்ற நூலை தமிழில் மொழிமாற்றம் செய்து எமக்கு வழங்கியுள்ளமை நினைவிற்கொள்ளப்பட வேண்டியது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். மௌலவி ஆதம்பாவா அபூ உபைதா (மதனி)

ஆதம்பாவா தோம்புதோர் அவர்களின் இளைய மகன் மௌலவி அபூஉபைதா 26-11-1957ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆரம்பித்து அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை (ஷர்கி) அரபிக் கல்லூரியில் கற்றார். பின் இடைநிலைக் கல்வி, உயர்கல்வி போன்ற வற்றை மதீனா சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தில் கற்று கலைப் பட்டதாரியாக (மதனி) தனது உயர்கல்வியை முடித்துக்கொண்டார். இவர் 1998-07-15ல் அரபு ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுக்கொண்டார். தற்போது ஆசிரியர் தொழிலில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

ஆரம்ப காலங்களில் மதீனாவிலிருந்து பட்டம் பெற்றுத்திரும்பி வந்து இஸ்லாத் தின் பெயரால் அனுஸ்டிக்கப்பட்ட பல நூதன அனுஸ்டானங்களை கடுமையாக விமர்சித்தார். தல்கீன் ஓதுவது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட விடயமா, அறபு அரிச்சுவடி எழுத்துப் பயிற்சி புனித ஹஜ் யாத்திரை போன்ற நூல்கள் போன்றன இவரால் வெளியிடப்பட்டன.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உறுப்பினராகவிருந்த இவர் அம்பாரை மாவட்ட உலமா சபை உறுப்பினராகவும், மருதமுனை உலமா சபை செயற்குழு உறுப்பினராகவும் இருந்து செயற்படுவதுடன் மருதமுனை சமாதான சபை, அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளனம் போன்றவற்றின் உறுப்பினராக விருந்து அசாதாரண சூழ்நிலைமைகளில் ஊரின் நலனுக்காகப் பாடுபட்டார். ஹியூமன் லிங்க் வலது குறைந்தோருக்கான மனிதநேய அமைப்பின் தவிசாள ராகவும் செயற்படும் இவர் கிழக்கு மாகாணத்தின் முதல் ஹஜ் முகவராக 1986இலிருந்து செயற்பட்டு வருகிறார்.

சாமஸ்ரீ, தேசமான்ய போன்ற கௌரவங்களைப் பெற்ற இவர் நாடு முழுவதுக் குமான சமாதான நீதவானுமாவார். எமதூரில் முப்பதுக்கும் அதிகமான காபிழ் களை உருவாக்கியிருக்கும் ஹிப்ழு குர்ஆன் மத்ரசா மற்றும் அந்நஹ்ழா அறபுக் கல்லூரி ஆகியவற்றின் உருவாக்கத்திலும் முதன்மையானவராவார்.

இப்றாலெப்பை ஹமீதா உம்மாவை மனைவியாகப் பெற்ற இவருக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்-ஹாஜ். மௌலவி. அப்துல் றஸாக் செய்னுல் ஆப்தீன், ஜே.பி. (ஷர்கி)

தம்பிராசா தண்டயல் எனப் பிரபல்யமான அப்துல் றஸாக் அவர்களின் மூத்த மகன் மௌலவி செய்னுல் ஆப்தீன் 03-11-1965ல் மருதமுனையில் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியினை மருதமுனை அல்-ஹம்றா, ஷம்ஸ் மத்திய கல்லூரி களில் கற்ற இவர் மார்க்கக் கல்வி கற்பதற்காக அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியில் சேர்ந்து வெற்றிகரமாக அல்-ஆலிம் பரீட்சையில் சித்தி பெற்று ஷர்கி - ஆலிமாக வெளியேறினார்.

1993-03-22ல் உதவி ஆசிரியர் நியமனத்தைப் பெற்று உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, ஒலுவில் அல்-ஹம்றா மகாவித்தியாலயம் போன்றவற்றில் கற்பித்த பின்னர் தற்போது மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் பணியாற்றுகிறார்.

சேகுசாகிப் சித்தி அறூசா என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட இவர் களுக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

மக்களுக்காக சிறந்த குத்பாக்களைச் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப ஆற்றும் இவரது பிரச்சார உக்தி மக்கள் மத்தியில் அதிக தாக்கம் செலுத்தக் கூடியவை. குறிப்பாக கூட்டு ஸகாத் தொடர்பான இவரது குத்பா உரைகள் மிகவும் காத்திர மானவை. 2010ல் ஏற்பட்ட பாரிய வெள்ளத்தின் போது அகதிகளான மக்களுக் காக அனர்த்த முகாமைத்துவக் குழுவின் தலைவராகவிருந்து பணியாற்றியவர்.

மூதூர் மக்களுக்காக மருதமுனையில் சேர்க்கப்பட்ட நிவாரணப் பொருட்களைத் தலைமை தாங்கிச் சென்று ஒப்படைத்த இவர் பொதுச்சேவைகளிலும் பங்கெடுத் துக்கொள்கிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமது லெப்பை றைஹானத்தும்மா, ஓய்வுபெற்ற ஆசிரியை
(ஜரீனா ரீச்சர்)

ஜரீனா ரீச்சர் என்றே எல்லோராலும் அறியப்பட்ட அகமது லெப்பை றைஹானத்தும்மா 1952-06-20ல் மருதமுனையில் பிறந்தவர். அல்ஹம்றா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்டு இடைநிலைக் கல்வியினை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் கற்றார். 1973-11-01ல் ஆசிரியர் நியமனம் பெற்றார். 44/90 விஷேட சுற்று நிரூபத்திற்கமைவாக தனது சுயவிருப்பத்தின் பேரில் 1996-12-16ம் திகதி பதவிக்காலம் மேலும் 16 வருடங்கள் மீதமிருக்கையிலேயே ஓய்வினைப் பெற்றுக்கொண்டார். மருதமுனையின் முதலாவது விஞ்ஞான ஆசிரியையாக நியமனம் பெற்ற இவரின் ஓய்வின்போது மருதமுனையில் அதிகளவான விஞ்ஞான ஆசிரியர்கள் காணப்பட்டமையைப் பெருமையுடன் நினைவுகூருகிறார். இவர் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்டு, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது சேவைக்காலத்தில் அதிக கவனத்தை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கழித்ததை நினைவுகூரும். இவர் 10 ஆண்டுகள் அல்-மனார் மத்திய கல்லூரியில் கற்பிக்கும் பேற்றினைப் பெற்றதாகவும் கூறுகிறார். இக்காலப் பகுதியில் பெண் மாணவிகளை வலைப்பந்தாட்டம், உடற்கல்வி, தட களப் போட்டிகளில் பல வெற்றிகளையும் கண்டதாகக்கூறும் இவர் 1974/75இல் மகூர்மௌலானா விளையாட்டரங்கில் தன்னால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண் மாணவிகளின் உடற்பயிற்சிக் கண்காட்சி பற்றியும் சிலாகித்துக் கொள்கிறார்.

ஏ.எல்.எம். தாஹிர் அதிபர் அவர்களை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌலவியா. மிஸ்கீன் பாவா சித்தி மர்ழியா

ஓய்வுபெற்ற ஆசிரியை

மிஸ்கீன் பாவா சித்தி மர்ழியா 1956-06-09ம் திகதி மருதமுனையில் பிறந்தார்.

தரம் ஏழு வரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கல்விகற்ற இவர் கல்லெலிய அரபிக் கல்லூரியில் சேர்ந்து மௌலவியா பட்டத்தினைப் பெற்றார். பின் களுத்துறை அரசினர் மகளிர் பயிற்சிக் கல்லூரி (தர்கா நகர்) யில் இரு வருடங்கள் தனது பயிற்சியினைப் பூர்த்தி செய்தார்.

1975-07-15ல் தனது 18வது வயதில் ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுக் கொண்டார். தனது முதல் நியமனத் திகதியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு ஏழு மாதங்கள் இருக்கையில் அல்-ஹம்றா பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றார். சுமார் 33 வருடங்கள் ஷம்ஸ் மத்திய கல்லூரியில் தனது கல்விச் சேவையினை வழங்கினார்.

சில காலம் குர்ஆன் மதரசாக்களையும் நடாத்தினார். இவரது கணவர் ஆதம்பாவா அப்துல் வதூத் என்பவரும் ஒரு சிறந்த ஆசிரியராவார். இவர் 26-12-2004ல் ஏற்பட்ட சுனாமியில் அகால மரணமானார். நான்கு ஆண் பிள்ளைகளின் தாயாரான இவர் ஓய்வுபெற்று தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார்.

இவரது நீண்டகால ஆசிரியர் பணியினால் அதிக மாணவர்கள் இஸ்லாம் பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர் என்பது இன்றும் அவர்களால் குறித்துப் பேசக்கூடியனவாகவுள்ளன.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது மீர்ஷா சித்தி ஜெஸீலா உதுமாலெப்பை

ஆசிரிய ஆலோசகர்

முகம்மது மீர்ஷா அவர்களின் மூத்த புதல்வியான சித்தி ஜெஸீலா 1958-09-04ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கற்று அல்-மனார் மத்திய கல்லூரியில் உயர்தரம் வரை கற்றுத் தேர்ந்தார்.

1979-06-12ம் திகதி ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் தனது கடமையை மிகவும் கரிசனையுடன் செய்து வந்து தற்போது ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

ஏ.ஆர். உதுமாலெப்பை (பொலிஸ்) அவர்களைக் கரம் பற்றிய இவருக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றனர்.

மனைப் பொருளியில் குழந்தை விருத்தி
மனைப் பொருளியல் உணவும் போசனையும் என்ற நூல்களை வெளியிட்டுள்ளார்.

தனது ஓய்வுவரை மாணவர் சமூகத்திற்காகச் சிறந்த சேவையை ஆற்றுவதுடன் அவர்களின் எதிர்கால உயர்வுக்காகத் தன்னாலான ஆலோசனைகளை வழங்குவதாகவும் கூறுகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது மஜீத் மஸ்றூபா ஹமீம்

சிரேஷ்ட உதவி நூலகர் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

அதிபர் திலகம் மர்ஹூம் ஏ.எச்.எம். மஜீத் அவர்களின் புதல்வி மஸ்றூபா (பேபி) 22-10-1968ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. உயர்தரம் வரை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் மேற்கொண்ட இவர் இலங்கைக் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியாக விசேட தரத்துடன் நிறைவு செய்து வெளியேறினார். இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் Post Grad. Dip. in Edu. மற்றும் கொழும்பு பல்கலைக் கழகத்தில் Master of Library & Introduction Science கற்றை நெறிகளைப் பூர்த்தி செய்தார். தற்போது மலேசியாவின் Management Science University இல் Ph.D. கற்கை நெறியினையும் மேற்கொள்கிறார்.

01-04-1992ல் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி, மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயம் ஆகியவற்றில் மாணவர் களின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்குப் பணியாற்றினார். 01-04-1968ல் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் உதவி நூலகராக நியமனம் பெற்ற இவர் இன்றும் இங்கு சிரேஷ்ட உதவி நூலகராகக் கடமைபுரிகிறார்.

தகவல் அறிவு தொடர்பான ஒரு மாதப் பயிற்சியை நியூசிலாந்தின் விக்டோரியாப் பல்கலைக் கழகத்தில் பூர்த்திசெய்த இவர் புதுடில்லியில் உள்ள தேசிய விஞ்ஞான தொடர்பாடல் தகவல் வள நிலையத்தில் (NISCAIR) இலத்திரனியல் வள முகாமைத்துவப் பயிற்சி நெறியினையும் வெற்றிகரமாக நிறைவுசெய்தார்.

"சமூக விஞ்ஞான கல்விசார் பருவ வெளியீடுகள் தொடர்பில் இலங்கைப் பல்கலைக் கழகங்களினால் வழங்கப்படும் தகவல் சேவைகள்" எனும் இவரது ஆய்வு நூல் ஜேர்மனியின் VDM Verlag என்னும் வெளியீட்டகத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். சம்சுத்தீன் உமர்அலி, மாநகர சபை உறுப்பினர்

நெசவு மாஸ்டர் சம்சுத்தீன் அவர்களின் மூத்த மகன் உமர்அலி 12-10-1964ல் மருதமுனையில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரி மற்றும் ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் பயின்றார்.

1985-08-11ம் திகதி பாதுகாப்புப் படையில் தனது முதல் நியமனத்தைப் பெற்று சுமார் 12 வருடங்கள் நாட்டின் பல பிரதேசங்களிலும் விஷேட அதிரடிப்படையில் கடமை யாற்றினார். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையில் அம்பாறை மாவட்டத்தில் கடமையாற்றி தனது நாட்டுப்பற்றை வெளிப்படுத்தினார். குடும்பத்தினரின் வேண்டுகோளை ஏற்றுத் தனது பதவியைத் துறந்த இவர் நெசவு உற்பத்தி, வியா பாரத்தில் ஈடுபாடு காட்டினார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீவிர ஆதரவாளரான இவர் அதன் வளர்ச்சியிலும், வெற்றியிலும் பங்கெடுத்துக் கொண்டதன் பயனால் கட்சி மட்டத்தில் செல்வாக்கைப் பெற்றுக்கொண்டார். 2011ல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறங்கி மாநகரசபை உறுப்பினராக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இவர் இம்மக்களுக்காகத் தன்னால் முடியுமான அத்தனை பணிகளையும் செய்கிறார். இவர் சமூகசேவையில் அதிக விருப்பமுடையவர். பல அமைப்புக்களில் அங்கத்தவராக விருந்தும் பணிபுரிகிறார்.

ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்தின் தற்போதைய தலைவராகவிருந்து அதன் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பாடுபடுகிறார். அநீதியைக் கண்டால் தட்டிக் கேட்கவும் தவறமாட்டார்.

எம்.எச்.எம். முகைதீனின் மகள் உம்மு பதீலாவைத் திருமணம் செய்துள்ள இவருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்து தற்போது இரு பிள்ளைகளிருக்கின்றனர்.

பஜ்றுத் தொழுகையின் பின்னர் நடைப்பயிற்சியை நாளாந்தம் மேற்கொள்ளும் இவர் வீதிகளில் எரியும் மின்சார விளக்குகளை அணைப்பதற்கும் வீதிகளில் காணப்படும் ஆணிகளைப் பொறுக்குவதற்கும் தவறமாட்டார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமது லெப்பை முஹம்மது முஸ்தபா, மாநகர சபை உறுப்பினர்

முகம்மது ஷரீப் என்றே எல்லோராலும் அறியப்பட்ட அகமதுலெப்பை முகம்மது முஸ்தபா 1954-05-17இல் மருதமுனையில் பிறந்தார். மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயம், பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம் மற்றும் மருதமுனை அல்-மனார் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்விகளை மேற்கொண்டார். பெரும்பாலும் வியாபாரத்தில் ஈடுபாடு காட்டிய முஸ்தபா கைத்தறி உற்பத்திப் பொருட்கள் வியாபாரத்தில் இன்றுவரை தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

மாணவப் பருவத்திலேயே மாணவர் மன்றம் பாடசாலை விழாக்களில் நடைபெறும் போட்டி நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டமை அவரை நல்ல மேடைப் பேச்சாளராக உருவாக்கியது. அரசியலில் முழு ஈடுபாடுள்ள இவர் 2006, 2011ம் ஆண்டுகளில் நடைபெற்ற கல்முனை மாநகர சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இன்றுவரை நல்ல பல சேவைகளைச் செய்து வரும் இவர் தன்னை ஆதரித்த மக்களுக்காக கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த தவறமாட்டார்.

மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாயலின் தலைவராக மஹல்லா மக்களால் தெரிவு செய்யப்பட்ட இவர் பள்ளிவாயலின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகிறார். இன்று இப்பள்ளிவாயல் அழகிய தோற்றத்துடனும் ஒரே நேரத்தில் சுமார் இரண்டாயிரம் பேர் வரை நின்று தொழக்கூடியதாக இப்பள்ளிவாயல் விஸ்தரிக்கப்பட்டுக் காணப்படுவது இவரது முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

கொழும்பைப் பிடப்பிடமாகக் கொண்ட ஸீனதுல் அஸீஸா என்பவரைக் கரம் பற்றிய சமாதான நீதவான் முஸ்தபா அவர்களுக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீராமுகைதீன் அஸ்ரப்

பொறுப்பதிகாரி (சமூக பொலிஸ் பிரிவு),
பொலிஸ் நிலையம், சம்மாந்துறை.

மீராமுகைதீன் அவர்களின் இளைய புதல்வரான அஸ்ரப் 03-04-1965ல் மருதமுனையில் பிறந்தார். ஆரம்பக் கல்வியினை கமு/ அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கற்ற இவர் இடைநிலைக் கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரியிலும் க.பொ.த. உயர்தரத்தினை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் மேற்கொண்டார்.

1990-04-16ம் திகதி பொலிஸ் பரிசோதகராக (S.I.) நியமனம் பெற்ற இவர் நாட்டின் பல பிரதேசங்களிலும் கடமையாற்றினார். ஹட்டன் பிரதேசத்தில் கடமையாற்றிய காலம் மறக்க முடியாதெனக் கூறும் இவர் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் சமூகப் பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுகிறார்.

யூ.எல். இஸ்மாயில் அதிபர் அவர்களின் இளைய மகள் ஸம்ஸம் என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட இவர் இரண்டு குழந்தைகளின் தந்தையாவார்.

மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினரான இவர் சிறந்த ஒரு உதைபந்தாட்ட வீரருமாவார். தனது கிராமத்தில் நடைபெறும் பொது வேலைகளில் பங்கெடுத்துக்கொள்ளும் இவர் பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் தனது பங்களிப்பை வழங்கியவர். தனது விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிக்காக இன்றும் உழைத்து வருகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமது பஷீர் அப்துல் கையூம்

கட்டுப்பாட்டாளர் - பிறை எப்.எம்.

அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர் - இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

முகம்மது பஷீர் டெய்லரின் புதல்வரான அப்துல் கையூம் 1968-05-02ல் மருதமுனையில் பிறந்தவர். அல்-ஹம்றா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பயின்ற இவர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் உயர்தரம் வரை பயின்றார். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர் சிறந்த நாவன்மையுள்ளவர். தமிழ்மொழியில் நல்ல சொல்வளம் மிக்க வராகத் திகழ்ந்தமை இவரை வானொலி அறிவிப்பாளர் வரையில் கொண்டு சென்றது. பாடசாலைக் காலத்தில் இவர் ஜனாதிபதி விருதொன்றினையும் பெற்றமை விசேட அம்சமாகும். அகில இலங்கைப் பேச்சுப் போட்டியில் முதலாமிடங்களை 1987, 1990 ஆகிய இரு பருவ காலங்களில் தனதாக்கிக் கொண்டவர்.

ஸ்ரீலங்கா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் அறிவிப்பாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் கடமை புரிவதுடன் பிறை FM கட்டுப்பாட்டாளராகவும் இருந்து அரிய பல சேவைகள் செய்து வருகிறார். இன்று பிறை FM பலவழிகளிலும் முன்னேற்றம் கண்டிருப் பதற்கு இவரது அயரா முயற்சியும் ஒரு காரணம் என்று கூறின் மிகையல்ல.

முத்தலிப் ஓவிசர் என்று எல்லோராலும் அறியப்பட்ட அப்துல் றகீம் என்பவரின் புதல்வி சித்தி நிஸ்வானாவின் கணவராவார். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலியார் நெய்னா முகம்மது

உரிமையாளர், ஏ.என்.எம். என்ஜினியரிங் லிமிட்டட்

அலியார் நெய்னா முகம்மது 25-11-1955ல் பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில் பிறந்தார். தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியினை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பெற்றார். தொழில்வாய்ப்பினைப் பெற்று வெளிநாடு சென்று பல வருடங்களின் பின் நாடு திரும்பினார்.

பஸீல் அரிசி ஆலையை நிறுவி அரிசி வியாபாரம் செய்து தனது தொழிலை விருத்தி செய்தார். A.N.M. Engineering Ltd. கட்டிட நிர்மாணக் கம்பனி உரிமையாளரான இவர் கட்டிட நிர்மாணத்துறையில் பல காலமாக இயங்கி வருகிறார். கிழக்கு மாகாண தேசிய கட்டிட நிர்மாண சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டு வருகிறார்.

சமூகசேவை அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்றவற்றில் முக்கிய உறுப்பினராகவிருந்து அவற்றுக்கு உதவிகளும் செய்து வருகிறார். மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாயலின் தலைவராகவும், அல்-மனார் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினராகவும் செயற்படுகிறார்.

மிருக வைத்தியர் முகம்மது சாலி அவர்களின் மகள் பரீதாவை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட இவர்களுக்கு மூன்று பிள்ளைகளுண்டு.

சமாதான நீதவானாகிய இவர் தேசமான்ய விருதுக்கும் சொந்தக்காரன்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். முகம்மது இப்றாஹீம் உபைதுர் ரஹ்மான்

முகாமைத்துவப் பணிப்பாளர், ஜாஹி வீவர்ஸ் (P) லிமிட்டட்

முகம்மது இப்றாகிம் உபைதுர் ரஹ்மான் 1975-01-05இல் மருதமுனை-03இல் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரியிலும் பெற்றார்.

உயர்கல்வி நாடி இலண்டன் மாநகரம் சென்ற இவர் அங்கு GreenHill Collegeஇல் Diploma in Business Administration பயிற்சி நெறியை வெற்றிகரகமாக பூர்த்தி செய்தார். பின் நாடுதிரும்பிய இவர் அரச தொழில்களில் நாட்டம் கொள்ளாது தான் பலருக்குத் தொழில்வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார்.

1999இல் கைத்தறி நெசவு உற்பத்தி ஊரில் கைவிடப்பட்டிருந்த நிலையில் இக்கைத்தொழிலை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டு இத்தொழிலில் அனுபவம் வாய்ந்த பலரது ஆலோசனைகளை உள்வாங்கி தனது தந்தை பரம்பரையாக செய்து வந்த நெசவு உற்பத்தியும், வியாபாரமும் இவரால் பொறுப் பேற்கப்பட்டன. காலப்போக்கில் இத்கைத்தொழில் 2004இல் ஏற்பட்ட சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் பாரிய நஷ்டத்தினை ஏற்படுத்தினாலும் விடா முயற்சியுடன் அதனை மீண்டும் சிறந்த நிலைக்குக் கொண்டுவந்தார். உற்பத்திப் பொருட்களின் தரத்தில் அதிகூடிய கவனம் செலுத்தினார். நாட்டின் பல பாகங்களுக்கும் தனது உற்பத்திப் பொருட்களைக் கொண்டு சென்றார். இதன் மூலம் நிரந்தரமான ஒரு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டார். தற்போது இவரது தொழில் மூலம் மருதமுனை மட்டுமல்லாது ஏனைய கிராமத் திலுள்ள பல வறிய குடும்பங்களும் நெசவாளர்களும், வர்த்தகர்களும், பாவனை யாளர்களும் பயன்பெறுகின்றனர்.

இவ்வுற்பத்திப் பொருட்கள் அரச ஆதரவில் பல கண்காட்சிகளைக் கண் டுள்ளன. மாகாண, தேசிய மட்டத்திலான பல விருதுகளை இவரது உற்பத்திப் பொருட்கள் பெற்றுள்ளன. அண்மையில் நெசவுத் தொழில்துறை சம்பந்தமான ஒரு மாத பயிற்சிப்பட்டறை இந்தியாவின் கேரளா மாநிலத்தில் நடைபெற்றது. இதற்கு கிழக்கு மாகாணத்திலிருந்து நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப் பட்ட முஸ்லிம் தமிழ்பேசும் மகன் இவர் ஒருவரே ஆவார்.

முகம்மது மன்சூர் மாஜிதா பேகம் மௌலவியாவைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் முக்கிய உறுப்பினரான இவர் பல சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சபைகள், மற்றும் தஃவா இயக்கங்கள் எனப் பலவற்றிலும் முக்கிய உறுப்பினராகவிருந்து தன்னாலான ஆலோசனைகள் மற்றும் நிதி, பொருள் உதவிகளையும் செய்துவருகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது புர்ஹான் றயீசுல் இஸ்லாம்

உரிமையாளர், புர்கான்ஸ்

முன்னாள் கரைவாகு வடக்கு கிராம சபையின் தலைவராகவிருந்த புர்ஹான் அவர்களின் மகன் றயீசுல் இஸ்லாம் 1960-07-28ம் திகதி மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பெற்று இடைநிலைக் கல்வியை கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவில் பூர்த்தி செய்தார்.

மருதமுனையின் பிரதான வீதியில் இவர்களுக்குச் சொந்தமான கடைகளை இவரின் மூத்த சகோதரரும், தகப்பனாரும் நடாத்தி வந்தமையினால் இவரது கவனமும் வியாபாரத்தின் பால் ஈர்க்கப்பட்டது. மேற்படி கடைகளை 1980களில் பொறுப்பேற்று நடாத்தி வந்ததன் மூலம் வியாபாரத்தில் தேர்ச்சி பெற்றார். புதிய அணுகுமுறைகள், யுக்திகள் விஷ்தரிப்புக்கள் என இவரது வியாபாரம் பெருகத் தொடங்கியது. துவிச்சக்கர வண்டி (பைசிக்கள்) அதன் உதிரிப்பாகங்கள் வியாபாரத்தில் மாத்திரம் நில்லாமல் பலவேறு பொருட்களுக்கான கிழக்கு மாகாண ஏகவினியோகஸ்தராகவும் பதிவுசெய்து கொண்டமையானது இவரது விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும். தந்தையின் ஆலோசனைகளும், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பும், நண்பர்களின் வழிகாட்டல்களும் இவரின் உயர்ச்சிக்குப் பெரிதும் உதவின. இன்று இவர் மூலம் பலர் வேலைவாய்ப்புக்கள் பெற்று மருதமுனையின் முக்கிய முதல் வர்த்தகர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

மருதமுனை மஸ்ஜிதுல் கபீரின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினரான இவர் பிரதேசத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் போது 1995 - 2006 வரை மருதமுனை சமாதான சபையின் பொருளாளராகவிருந்து சிறந்த சேவையாற்றியவர். சமாதான நீதவானாகிய இவருக்கு சாமஸ்ரீ, தேசமான்ய போன்ற கௌரவங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மர்ஹூம் பீ.எம். மீராலெப்பை அதிபர் அவர்களின் மகள் பஹ்மியாவைத் திருமணம் செய்துள்ள இவருக்கு இரண்டு பெண் மக்கள் உள்ளனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். முகம்மது இப்றாஹிம் அப்துல் பரீட்

உரிமையாளர், பறக்கத் டெக்ஸ்

முகம்மது இப்றாகிம் அப்துல் பரீட் தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் மேற்கொண்டார். தனது பாடசாலைக் காலத்திலேயே தனது மச்சான் ஸம்ஹா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் அல்-ஹாஜ். ஏ. அப்துல் கபூர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் வியாபாரத்தில் ஈடுபட்டார். அபார திறமையின் காரணமாகவும் மற்றவர்களுடன் அன்புடனும், பணிவுடனும் பழகுவதன் காரணமாக இவரது வியாபார முயற்சிகள் படிப்படியாக உயர் வடைந்து விருத்தியானது. இவரது அயராத் முயற்சியாலும் நேர்மையாலும் இப்பிரதேசத்திலேயே ஒரு முன்னணி வர்த்தகராக விளங்குகிறார். இன்று அதிக வாடிக்கையாளர்களையும், மொத்த, சில்லறை வியாபாரிகளையும் உள்ளடக் கியதாகப் பிரதான வீதியில் வானுயர்ந்து நிற்கும் பறக்கத் டெக்ஸ் ஐந்து மாடிக் கட்டிடம் ஊரின் பெருமையை வெளிப்படுத்தி நிற்கிறது. மேலும் எட்டு மாடிக் கடைத் தொகுதி ஒன்றினையும் அல்-ஹாஜ் பரீட் அவர்கள் அமைத்து வருவதும் இங்கு குறிப் பிடப்பட வேண்டியது.

மஸ்ஜிதுல் நூறாணியாப் பள்ளிவாயலின் தலைவராகவிருந்து அதன் வளர்ச் சிக்காக உழைத்த இவர் பல பொதுநிறுவனங்கள், கழகங்கள், சங்கங்களுக்கும் உதவி வருகிறார். குறிப்பாக பெரும் செலவில் மஸ்ஜிதுல் ஹிதாயாப் பள்ளிவாயல் தரைக்கு மாபிள் பதித்து தனது வள்ளல் தன்மையை வெளிப்படுத்தினார்.

மருதமுனை ஸக்காத் நிதியத்திற்குத் தனது பாரிய பங்களிப்பைச் செய்து அதன் வளர்ச்சிக்கும் தனது அளப்பரிய பங்களிப்பை வழங்கும் இவர் மருதமுனை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளருமாவார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். எம்.எம். உதுமாலெப்பை, ஜே.பி.

உரிமையாளர், இந்தியன் செலக்ஷன்

அல்-ஹாஜ். எம்.எம். உதுமாலெப்பை ஜே.பி. அவர்கள் மருதமுனையில் பிறந்தவர். தற்போது அக்பர் கிராமத்தில் வாழ்ந்து வருபவர். ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி போன்றவற்றை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் மேற்கொண்ட இவர் நெசவுத் தொழிலை மேற்கொண்டு வந்தார். அதன் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வந்த உதுமாலெப்பை தனது தொழிலை "இந்தியன் செலக்ஷன்" என்ற பெயரில் விஸ்தரித்தார். இன்று இந்த நிறுவனம் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற நிறுவனமாகத் தன்னை வளர்த்துக் கொண்டுள்ளது.

அக்பர் கிராமத்தின் விவாகப் பதிவாளராகப் பணியாற்றும் இவர் மஸ்ஜிதுல் அக்பர் பள்ளிவாயலின் முக்கிய செயற்பாட்டாளர்களில் ஒருவராகவும் இருக்கிறார்.

பல சமூகப் பணிகளில் ஈடுபடும் அல்-ஹாஜ். எம்.எம். உதுமாலெப்பை ஜே.பி. அக்பர் கிராமத்தின் வளர்ச்சியில் முன்னின்று உழைத்ததன் மூலம் அம்மக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்றிருப்பது இங்கு சுட்டிக்காட்டப்படல் வேண்டியது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். அப்துல் றசூல் பறகத்துல்லாஹ்

உரிமையாளர், ஒன் கோயிங்

மர்ஹூம் மவ்லவி அப்துல் றசூல் அவர்களின் மூத்த மகன் பறக்கத்துல்லாஹ் தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் மேற் கொண்டார். இடைநிலைக் கல்வியை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் மேற்கொண்டு வரும் வேளையில் இவரது நாட்டம் வியாபாரத்தின்பால் ஈர்க்கப் பட்டது. பாடசாலைக் காலங்களில் அதிக திறமையைக் காட்டிய இவர் வியாபாரத்தில் அதனைக் காட்டவிழைந்தார். இதனால் எல்லோரும் செய்கின்ற வியாபாரத்திலிருந்து வேறுபட்ட ஒரு வியாபாரத்தினை ஆரம்பித்து அதிலும் வெற்றிகண்டார். வீட்டுப் பாவனைப் பொருட்கள், தளர்பாடங்கள், அழகு சாதனப் பொருட்களான பூச்சாடிகள், அலங்காரப் பொருட்கள் எனப் பல வகையானவற்றின் மொத்த, சில்லறை வியாபாரத்தினை மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டார்.

தனது தம்பி, மச்சான் ஆகியவர்களின் துணையுடன் இத்தொழிலைச் செய்து வந்த பறக்கத்துல்லாஹ் அத்தொழிலை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு டெக்ஸ்டைல்ஸ் வியாபாரத்தில் தன்னை ஈடுபடுத்தினார். தற்போது பிரதான வீதியில் தலைநிமிர்ந்து நிற்கும் On Going நிறுவனம் நமது மண்ணுக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

பள்ளிவாயல்கள், தஃவா இயக்கங்கள் எனப் பலவற்றில் அங்கத்தவராகவிருந்து உழைத்து வந்த இவர் மர்கஸுத் தஃலீமுல் இஸ்லாமியின் பொருளாளராகவிருந்து அதன் கட்டிடப் பணிகளில் சிரத்தையுடன் செயற்பட்டு வந்தார்.

மர்ஹூம் சாகுல் ஹமீத் மவ்லவி அவர்களின் புதல்வி மஸ்றூபாவைத் திருமணம் செய்த இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். இவரது மனைவி அண்மையில் காலமானார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ். எஸ்.எல். நஜிமுர் றகுமான்

உரிமையாளர், அல்-றாஜி என்ரபிறைஸ் (பி) லிமிட்டட்

சுலைமாலெப்பை நஜீமுர் றகுமான் 1959-07-16ல் மருதமுனையில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கல்முனை பாத்திமாக் கல்லூரியிலும் மேற்கொண்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்று இளைஞர்கள் மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகளுக்கு அதிகமாகச் சென்று தங்களது வருமானங்களை ஈட்டிக்கொண்டனர். இவ்விளைஞர்களுடன் ஒருவராக நஜீமுர் றஹ்மான் அவர்களும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார். அவரது பெரிய குடும்பத்தைக் கவனிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பும் இவருக்கு இருந்தது. பல வருடங்கள் வெளிநாட்டில் தொழில்புரிந்த இவரது கவனம் வெளிநாட்டு முகவராகவிருந்து மக்களை வெளியே அனுப்பும் தொழிலைச் செய்ய வேண்டும் என்ற தன் பக்கம் திரும்பியது.

அக்காலத்தில் வெளிநாட்டு முகவர்களாகவன்றி உதவி முகவர்களாகப் பலர் எமதூரில் இயங்கினர். இவர்களில் அதிகமானவர்கள் பலராலும் ஏமாற்றப்பட்ட சம்பவங்கள் அதிகம். ஆனால் நஜிமுர் றகுமான் அவர்கள் அல்-றாஜி என்ற பெயரில் ஒரு முகவர் நிலையத்தைத் துணிவுடன் ஆரம்பித்தார். படிப்படியாக இவரது முகவர் நிலையம் வளர்ச்சி கண்டது. இப்பிரதேசத்திலேயே அதிகளவானவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பும் ஒரு நிலையமாக இவரது முகவர் நிலையம் இன்று விளங்குகிறது.

எஸ்.எல். நஜிமுர் றகுமான் ஒரு சமூக சேவையாளர் என்பதும் இங்கு குறிப்பிடல் வேண்டும். பொது நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் என உதவிகோருவோருக்கெல்லாம் வாரி வழங்கும் தன்மையுடையவர். விளையாட்டுக் கழகங்கள் இவரை நன்றாகப் பயன்படுத்தின.

மஸ்ஜிதுன் நூறாணியாவின் தலைவராகவிருந்து அதன் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினார். இவராலேயே இப்பள்ளிவாயல் தரைக்கு மாபிளிடும் பணி நிறைவேறப்பட்டது. மருதமுனை ஸக்காத் நிதிய அங்கத்தவராகவிருந்து அதன் வளர்ச்சிக்கும் பெருங்பங்காற்றினார்.

புகழ்பெற்ற குடும்பமொன்றில் செய்யது சித்தி அஸ்றபா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது சித்தீக் முகம்மது நதீர், ஜே.பி.

தவிசாளர், மை ஹோப் குறூப்

முகம்மது சித்தீக் முகம்மது நதீர் 1976ல் மருதமுனையில் பிறந்தார். ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி போன்றவற்றை சாளம்பைக்கேணி அஸ்ஸிறாஜ் வித்தியாலயம் மற்றும் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் மேற்கொண்டார்.

தனது தந்தை மர்ஹூம் சித்தீக் அவர்களின் வெளிநாட்டு முகவர் தொழில் நிமித்தம் கொழும்பிலேயே மேற்கொள்ள வேண்டியிருந்த காரணத்தினால் அதிகளவு நேரத்தைத் தலைநகரிலேயே செலவு செய்ததன் மூலம் பலரின் அறிமுகம், அனுபவம் போன்றவற்றைப் பெற்றுக்கொண்டதன் மூலம் இன்று தனித்து நின்று பல தொழில் முயற்சிகளை வெற்றிகரமாகச் செய்வதன் மூலம் தொழிலதிபராக இன்று மிளிர்கிறார். இவரது MY HOPE GROUP நிறுவனம் பிரதேசத்தில் மட்டுமல்ல தலைநகரிலும் ஒரு முன்னணி நிறுவனமாகக் காணப்படுகிறது.

பிராந்தியத்தில் பல்வேறு பாடசாலைகள், பள்ளிவாயல்கள், மத்ரசாக்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் போன்றவற்றின் அபிவிருத்திக்காகத் தன்னால் முடியுமான உதவிகளைச் செய்து வருகிறார்.

கொழும்பு மாவட்ட மனித உரிமைகள் அமைப்பின் இணைப்பாளராகவும், ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் ஆலோசகராகவும், மருதமுனை யூனிவேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆயுட்கால போஷகராகவும் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினருமாகவுமிருக்கிறார். IVA தாதிகள் பாடசாலைக்கான தவிசாளராகவும் செயற்படுகிறார்.

சாஹீ, தேசமான்ய போன்ற விருதுகளுக்குச் சொந்தக்காரரான நதீர் சர்வதேச லயன்ஸ் கழகத்தால் வழங்கப்படும் உயர்விருதான 'மெல்வின் ஜோன்ஸ் பலோ' (MJF) விருதினையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமறுலெப்பை முகம்மது நகீப்

உரிமையாளர், அப்னா ஒப்செற் பிரிண்டர்ஸ்

உமறுலெவ்வை முகம்மது நகீப் 1970-01-04ல் மருதமுனையில் பிறந்தார். பாண்டிருப்பு அல்-மினன் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்று க.பொ.த. உயர்தரம் வரை உயிரியல் துறை மாணவனாகக் கற்றார். பல்கலைக் கழக வாய்ப்பினை இழந்த இவர் அச்சுத்தொழிலில் தனது கவனத்தைத் திருப்பி பழைய முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த இத்துறைக்குள் பல புதிய நுட்பங்கள் மற்றும் நவீன இயந்திரங்கள் எனப் பல மாற்றங்களை மேற்கொண்டார். இதன் மூலம் பிரதேசத்திலேயே பிரசித்தி பெற்ற அச்சகமாகத் தனது நிறுவனத்தை நிலைநிறுத்தினார். இதன் மூலம் இலங்கை அச்சகத்தார் சங்கத்தின் சிறப்பு விருதினையும் நகீப் பெற்றுக்கொண்டார்.

மருதமுனை வர்த்தக சங்கத்தின் உப செயலாளராகவும், ஹியுமன் லிங்க் வலது குறைந்தோர் நிறுவனத்தின் பொருளாளராகவும் செயற்படும் இவர் பல சமூக சேவை அமைப்புக்களிலும் அங்கம் வகிக்கிறார்.

ஓய்வுபெற்ற அதிபர் மீராமுகைதீன் அவர்களின் மூத்த மகள் அகீலா பாணுவைத் திருமணம் செய்துள்ள இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீராலெப்பை மரைக்கார் ஜமால்தீன், ஜே.பி.

ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், இ.போ.ச.

மீராலெப்பை மரைக்கார் ஜமால்தீன் 1952-08-22ல் மருதமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியைத் தற்போதைய அல்-மனார் ஆரம்பப் பிரிவிலும், க.பொ.த. (சா/த) வரை அல்-மனார் மத்திய கல்லூரியிலும் பயின்று தேறிய பின் 16-02-1978ல் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் நியமனம் பெற்றார். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இ.போ. சபையில் பணியாற்றிய ஜமால்தீன் பல பதவி உயர்வுகளைப் பெற்றுத் தனது ஓய்வின் போது இ.போ.ச. கல்முனைச் சாலையின் உதவி முகாமையாளராகப் பணியாற்றினார்.

1975 முதல் இன்று வரையான நான்கு தசாப்தங்களாக வீரகேசரி, தினகரன் ஆகிய தேசிய பத்திரிகைகளின் நிருபராகவிருந்து ஊடகத்துறையில் தனது பங்களிப்பை வழங்கிய இவர் லேக் ஹவுஸின் கல்முனை சுழற்சி நிருபராக இன்றும் பணிபுரி கிறார்.

ஊரின் சமூகசேவை இயக்கங்களில் பங்குபற்றி தன்னாலான சமூக சேவைகளைச் செய்யும் இவர் மஸ்ஜிதுன்நூர் ஜும்ஆப் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் அதன் செயலாளராகவும் கருமமாற்றியுள்ளார்.

விளையாட்டுத் துறையில் அதிக ஆர்வம் காட்டிய ஜமால்தீன் மருதமுனையின் விளையாட்டுத்துறை முன்னேற்றத்திற்காக அளப்பரிய சேவையாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கம், ஈஸ்ட்லங்கா வி.க., ஈஸ்டன் யூத் வி.க. ஆகியவைகளின் தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர் எனப்பல பதவிகளை அலங்கரித்த இவருக்கு அகில இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினால் 25-03-2006இல் தேசிய விருது ஒன்றும் வழங்கப்பட்டது. உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையிலும் 1982ல் தேர்ச்சி பெற்ற இவர் ஒரு சமாதான நீதவானுமாவார்.

அப்துல் மஜீத் மிஹ்றுன்னிசா என்பவரைக் கரம்பற்றிய ஜமால்தீன் அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீர்முகம்மது முகைதீன் அப்துல் காதர்

சிரேஷ்ட ஊடகவியலாளர்

பத்துமுகம்மது ராவுத்தர் பீர்முகம்மது அப்துல் காதர் 1957-12-27ம் திகதி அநுராதபுரத்தில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை துருக்குராகம முஸ்லிம் வித்தியாலயம், மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்றார். குடும்ப நிலைமை காரணமாக கல்வியைத் தொடர முடியாமல்போன இவர் தனது இளமைப்பருவத்திலேயே நெசவு, மீன்பிடி, வியாபாரம் உள்ளிட்ட பல்வேறுபட்ட தொழில்களைச் செய்தார்.

1988ம் ஆண்டு மித்திரன் வாரமலர் பத்திரிகையில் "அன்னை" என்ற தலைப்பில் பிரசுரமான கவிதைமூலம் எழுத்துலகில் பிரவேசித்தார். நாட்டில் பிரசுரமாகும் தேசிய பத்திரிகைகளின் நிருபராகவிருந்து எழுத்துப்பணி செய்து வருகிறார். பதினைந்துக்கும் மேற்பட்ட இணையத்தளங்களுக்கும் எழுதி வருவதுடன் "விலேஜ் விசிட்" என்ற தலைப்பில் 'மெட்றோ நியூஸ்' பத்திரிகையில் தொடராக 125 வாரங்கள் எழுதியது இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

மருதமுனைக் கிராமத்தின் பௌதீக வளம், கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களிலும், அம்பாரை, மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள பின்தங்கிய பிரதேச மக்கள் எதிர்நோக்கிய பல்வேறுபட்ட பிரச்சினைகளை கட்டுரை வாயிலாக வெளிக்கொண்டு வந்த இவர் அரசியல் சார்பான கட்டுரைகளையும் வரைகிறார். இதுவரை 400க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும், 200க்கும் மேற்பட்ட கவிதைகளையும் எழுதி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. உள்ளூர், பிரதேச, மாவட்ட, தேசிய விருதுகள் எனப் பத்துக்கும் மேற்பட்ட விருதுகளையும் பெற்றுள்ளார். 26 வருடகால ஊடக சேவையைப் பூர்த்திசெய்துள்ள காதர் 1994ம் ஆண்டு முதல் 2005ம் ஆண்டு வரை கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தில் (சதொச) கடமை யாற்றினார்.

1989ம் ஆண்டு இவர் தனியார் கல்வி நிலையங்களில் கல்விகற்று க.பொ.த. (சா/த)ப் பரீட்சையில் சித்தியெய்தினார். 1979ல் திருமணம் செய்துகொண்ட காதருக்கு ஆறு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூசுப்லெப்பை முகம்மது பஹூறுத்தீன் (நைல்வர்)

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

யூசுப்லெப்பை முகம்மது பஹூறுத்தீன் 1956-06-27இல் மருதமுனையில் பிறந்தார். இவர் நைல்வர் என்றே எல்லோராலும் அழைக்கப்படுகிறார். பாண்டிருப்பு மெ.மி.த.க. பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். தொடர்ந்து கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை சாஹிறாக் கல்லூரி, யாழ்ப்பாணம் இளவாலை சென்ஹென்றி கல்லூரி போன்றவற்றில் உயர்கல்வியை மேற்கொண்டார்.

1983-08-01இல் கூட்டுறவுப் பரிசோதகராகத் தனது முதல் நியமனத்தைப் பெற்றுப் பல இடங்களில் சேவையாற்றும் போதே இந்தியாவில் கூட்டுறவுத்துறை டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தார். தற்போது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ACCD) கல்முனைக் காரியாலயத்தில் கடமை புரிகிறார்.

சிறந்த உதைபந்தாட்ட வீரரான இவர் யாழ்ப்பாணம் இளவாலை சென்ஹென்றி பாடசாலையின் உதைபந்தாட்டக் குழுவில் இடம்பெற்றார். இவ்வணி தேசிய ரீதியில் வெற்றிபெற்றமையினால் இவ்வணியில் இடம்பெற்ற எமது இந்த மகனும் தங்கப்பதக்கம் சூடப்பட்டு கௌரவிக்கப்பட்டமை நமக்கெல்லாம் பெருமையே.

ஒலுவிலைச் சேர்ந்த எம்.பி. வொஜிஹா வீவி என்பவரை மணந்துகொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

முகம்மது இஸ்மாயில் முகம்மது முஸர்ரப்

நிர்வாக உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, கல்முனை.

முகம்மது இஸ்மாயில் அதிபர் அவர்களின் மூத்த புதல்வன் முகம்மது முஸர்ரப் 1964-02-10இல் மருதமுனையில் பிறந்தார். மருதமுனை அல்-ஹிறா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரி மற்றும் கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியிலும் மேற்கொண்டார்.

16-09-1987இல் பொது எழுதுவினைஞர் சேவை வகுப்பு - II தரம் - 'ஆ'வில் தனது முதல் நியமனமாகப் பெற்றார். பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிவிசேட வகுப்பு நிலையை அடைந்த இவர் நிருவாக உத்தியோகத்தராக பதவியுயர்வு பெற்று சிலகாலம் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றினார். பின்னர் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார்.

ஏ. அறூஸா என்பவரைக் கரம்பற்றிய இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். பொது வேலைகளிலும் ஆர்வம் காட்டி வருகிறார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எஸ்.எம். பாறூக் (மருதவாசி)

மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாவரைப்பிள்ளை என எல்லோராலும் அழைக்கப்படுபவரின் மகன் எம்.எஸ்.எம். பாறூக் ஆவார். "மருதவாசி" என்ற புனைப்பெயரில் நிறையவே எழுதி வருகிறார். 1972 களில் 'றொபின்சன் குறுசோ' என்ற மொழிபெயர்ப்பு நூலின் மூலம் எழுத்துத் துறைக்கு அறிமுகமாகும் இவர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார். இவரால் எழுதப்பட்ட இன்னும் ஐந்து புத்தகங்களை வெளியிட எதிர் பார்த்திருக்கும் இவர் ஒரு இலைமறையாக இருப்பது கவலைக்குரியது.

முஸ்லிம்களே, ஒரு முஸ்லிம் நஜீசாகமாட்டான், திருப்பொருத்தம், மனிதனின் கௌரவப் பெயர், கல்யாணத் கடைத்தெரு, காதலுக்கு டாட்டா, ப்பூ.. இவ்வளவுதானா உலகம், பிரியங்களுக்கு அப்பால், பாவம் மனிதன், TENT (கூடாரம்) ஆகிய நூல்கள் இவரால் இதுவரை வெளியிடப்பட்டவை. இவற்றில் ஒன்றையாவது எமதூரில் வெளியிட்டு வைப்பதற்கு இதுவரை யாரும் முன்வரவில்லை என்பது மனவேதனை. எதிர்காலத்திலாவது அவரால் வெளியிடப்பட இருக்கின்ற நூல்களையாவது வெளியிட நாம் முன்வர வேண்டும் என்பது எமது அவா.

ஏ. அப்துல் ஹமீட் ஜே.பி. (தோழர் இஸ்மாயில்)

தோழர் இஸ்மாயில் என்றால் சிறுபிள்ளைக்கும் தெரியும். மருதமுனை மகனான இவர் இவரது சிறு வயதிலிருந்தே சமூக சேவைகளில் ஆர்வம் கொண்டவர். 1960, 1970 களில் ஒன்றியம் என்ற அமைப்பினூடாக தனது நண்பர்களுடன் இணைந்து சமூகப்பணியில் ஈடுபட்டவர். அரசியலிலும் ஆர்வமுள்ள இவர் ஒரு சிறந்த வாசகனுமாவார்.

"மருதமுனை ஜனாஸா நலன்புரிச் சங்கம்" என்ற அமைப்பினூடாக இன்றும் சமூகப்பணி புரிகிறார். மருதமுனை மையவாடி எங்குமில்லாதவாறு மிகவும் சுத்தமாகவும், பாதுகாப்பானதாகவும் வைத்திருப்பதில் தனது முழு நேரத்தையும் செலவிடும் இஸ்மாயில் தனது எழுபத்தைந்தாவது வயதிலும் உற்சாகமாய் செயல்படுவது வியப்புக்குரியது. இவரது "ஜனாஸா" சேவையை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இவரது பணி தொடர இறைவனைப் பிரார்த்திப் போமாக.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூபக்கர் மரைக்கார் அப்துல் அமீன்

அபூபக்கர் மரைக்கார் அப்துல் அமீன் 1973-12003இல் மருதமுனையில் பிறந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் கல்விகற்ற இவர் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு கலைத்துறை மாணவனாகப் பிரவேசித்து வெளியேறினார். இலங்கை தொழில்நுட்ப கல்வி நிறுவகத்திலும் தனது கற்கைநெறியினை மேற்கொண்ட இவர் 07-09-2005இல் அபிவிருத்தி உத்தியோகத்தராகத் தனது முதல் நியமனத்தைப் பெற்றுக்கொண்டார்.

BBA (SP) Accounting, HNDA, Dip. in SCMA போன்ற விஷேட தகைமைகளைக் கொண்ட இவர் இலங்கை கணக்காளர் சேவையிலும் தேறினார். அம்பாறைப் பிரிவு இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கணக்காளராகத் தற்போது கடமை யாற்றி வரும் இவர் மிகவும் கரிசனையுடன் கல்வியில் நாட்டமுள்ளவராகவும், தேடலுள்ளவராகவும் இருந்தார். உயர்கல்வியைத் தேடித்தேடி கற்கின்ற ஒரு மாணாக்கனாகவே இவரைப் பார்க்க முடியும். கல்விக்கு வறுமை ஒரு தடையல்ல என்பதற்கு இவர் ஒரு சான்றாகவுள்ளார்.

சின்னராசா என நம்மால் அழைக்கப்படும் முகம்மது பதுறுத்தின் என்பவரின் மகளான பாத்திமா ஜறோஸா என்பவரைக் கரம்பற்றிக் கொண்ட இவருக்கு இரு பிள்ளைகள் இருக்கின்றனர்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

முகம்மது சாலிஹ் முகம்மது ஜலீல், ஜே.பி.

மிருக வைத்தியர் முகம்மது சாலிஹ் அவர்களின் மகன் முகம்மது ஜலீல் மருதமுனையில் பிறந்தவர். அல்-மனார் மத்திய கல்லூரியில் தனது கல்வியினை மேற்கொண்ட இவர் சில காலம் மருதமுனை வாசிகசாலையின் உதவி நூலகராகக் கடமையாற்றினார்.

சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகவும், கொழும்பில் வாழ்ந்து வருபவருமான தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் வேந்தர், கொழும்பு முஸ்லிம் லேடீஸ் கொலிஜ் முன்னாள் அதிபர் தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் அவர்களினால் நடாத்தப்படும் MWRAF என்ற தொண்டு நிறுவனத்தின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளராக செயலாற்றி வரும் ஜலீல் மருதமுனையின் பல பொது நிறுவனங்கள், அமைப்புக்களின் அங்கத்தவராகவிருந்து நல்லபணி செய்து வருகிறார்.

அகில இலங்கை சமாதான நீதவானாகிய இவர் சாமஶ்ரீ, தேசமான்ய, தேசகீர்த்தி போன்ற பட்டங்களையும் சுமந்துள்ளார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது சாலி அபுல் கலீஸ்

பிரதி விவசாயப் பணிப்பாளர்

முகம்மது சாலி அபுல் கலீஸ் 16-10-1964இல் மருதமுனையில் பிறந்தவர். மருதமுனை அல்-ஹம்றா மற்றும் கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரிகளில் கல்விகற்ற இவர் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் B.Sc. (Agriculture Special) பட்டத் தினையும், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் M.Sc. (Development and Extension) பட்டத்தினையும் பெற்றார்.

04-06-1990இல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற கலீஸ் தற்போது அம்பாறை மாவட்ட பிரதி விவசாய மாவட்டப் பணிப்பாளராகக் கடமையாற்று கிறார்.

இலங்கை விவசாய சேவைகள் (SL.Ags.), இலங்கை விஞ்ஞான சேவைகள் (SL.Sc.S) போன்ற விஷேட தகைமைகளைக் கொண்டிருக்கும் இவர் "சேதன விவசாயம் (விவசாயிகளுக்கான பயிற்சி வழிகாட்டி)" நூலினையும் வெளியிட்டுள்ளார். இவர் விவசாயத் திணைக்களத்தினூடாக இந்தோனேசியா, மலேசியா, சீனா மற்றும் கொரியா ஆகிய நாடுகளுக்குப் புலமைப்பரிசில் பெற்றுச் சென்றுள்ளார்.

அப்துல் சமத் ஸஹர்பான் பீவி ஆசிரியை அவர்களைத் திருமணம் செய்துள்ள இவருக்கு மூன்று பிள்ளைகளுண்டு. இவர் மருதமுனை மஸ்ஜிதுல் கபீரின் மரைக்காயர் சபை உறுப்பினருமாவார்.

- ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.

விசேட சேர்க்கை பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் விபரங்கள்

பரப்பு : 3.52 சதுர கி.மீ.

விபரம்		2012	TOTAL	2013	TOTAL
குடும்பங்கள்		4465	4465	4532	4532
பால் :	ஆண்கள்	7958		8071	
	பெண்கள்	8233		8364	
			16191		16435
தொழில் ரீதியில் (குடும்பங்களில்)					
	விவசாயம்	41		69	
	மீன்பிடி	197		188	
	வியாபாரம்	675		616	
	கூலித்தொழில்	1563		1736	
	அரச ஊழியர்	883		1077	
	ஏனையவர்	1104		858	
			4465		4544
100 வீத முஸ்லிம்கள் தொழில் ரீதியில் :					
	ஆசிரியர்கள்	520		526	
	அரச ஊழியர்கள்	570		677	
	அரச, தனியார் உத்.	112		52	
	கூட்டுறவு	12		11	
	தனியார்	247		119	
	ஓய்வூதியம்	160		140	
	விவசாயம்	18		05	
	கடற்றொழில்	224		209	
	வியாபாரம்	523		479	
	பாயிழைத்தல்	8		01	
	தச்சுவேலை	103		75	
	மேசன்	140		58	
	உப உணவுப்பொருள் உற்பத்தி	96		76	
	சிறுகைத்தொழில்	134		116	
	வேறும் கூலிவேலை	89		45	
	வெல்டர்ஸ்	8		07	
	போன் திருத்துதல்	29		15	
	பிளம்பர்ஸ்	41		25	
	வாகனம் திருத்துபவர்கள்	18		17	
	சைக்கிள் திருத்துபவர்கள்	14		08	
			3066		3439
வேலைகொள்வோர்	ஆண்கள்	2556		2930	
	பெண்கள்	1075		1669	
			3631		4599
வேலையற்றோர்	ஆண்கள்	2335		2397	
	பெண்கள்	2105		3054	
			4440		5451

24631
11587-CC
Al-Haj A.R.A. SATHAR
Justice of the Peace - Whole Island
Regd. No: 2000/ 03/ NE/ WI/ B/ 015
504A, Central Road,
Maruthamunai - 03
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரம்		2012	TOTAL	2013	TOTAL
வருமான ரீதியில் : 1,000/-வுக்கு குறைந்தது		568		506	
1,000 - 5,000		1240		1225	
5,000 - 10,000		1281		956	
10,000 - 15,000		699		541	
15,000இற்கு மேல்		710		1292	
			4498		4520
கல்வித் தகைமைகள் :					
பாடசாலை செல்லாதவர்கள் :	ஆண்கள்	2472		2529	
	பெண்கள்	2708		2823	
			5180		5352
5ம் தரம் வரை கற்றவர்கள் :	ஆண்கள்	3427		3653	
	பெண்கள்	2708		2687	
			6135		6340
க.பொ.த. (சா/த) கற்றவர்கள் :	ஆண்கள்	4329		4093	
	பெண்கள்	4301		4933	
			8630		9026
க.பொ.த. (உ/த) கற்றவர்கள் :	ஆண்கள்	2015		2373	
	பெண்கள்	1890		2017	
			3905		4390
பட்டதாரிகள் :	ஆண்கள்	340		354	
	பெண்கள்	308		351	
			648		705
Post Graduates :	ஆண்கள்	37		42	
	பெண்கள்	24		33	
			61		75
கலாநிதிகள் :	ஆண்	05	05	12	12
நெசவாளர்கள் : 1 கைத்தறி உரிமையாளர்		204		210	
2 - 5 கைத்தறி உரிமையா.		152		160	
5இற்கு மேல்		35		40	
			391		410
அரச நன்கொடை பெறுநர்		318	318	320	320
PMMA நபர்கள்		454	454	453	453
விசேட தேவையுடைவர்கள் :					
கண்பார்வையற்றவர்கள்		07		05	
வாய்பேச, காது கேளாதவர்கள்		13		09	
சித்தசுவாதீனமற்றவர்கள்		20		21	
நடக்க முடியாதவர்கள்		09		18	
கை, கால்களை இழந்தவர்கள்		05		10	
வேறு குறைபாடுடையவர்கள்		13		15	
			67		78
விதவைகள் : 21 வயது முதல் 30 வயது வரை		17		16	
31 வயது முதல் 40 வயது வரை		11		13	
41 வயது முதல் 50 வயது வரை		39		43	
51 வயது முதல் 60 வயது வரை		164		166	
60 இற்கு மேற்பட்டவர்கள்		332		341	
			563		579

தகவல்கள் உதவி : **அல்-ஹாஜ். ஏ.எச்.ஏ. ழாஹிர்** (கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியர்....

மருதமுனையை நேசிக்கும் நல்லிதயம் கொண்ட அல்-ஹாஜ் ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர்கள் தன் கிராமத்தின் வரலாறும் சிறப்பும் செழிப்பும் சொல்லப்பட வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு இந்நூலை தொகுக்க முற்பட்டமை ஒரு துணிச்சலான செயற்பாடாகும்.

ஐந்து நூற்றாண்டு பழமை பேசும் இக்கிராமத்தின் கல்விப்புலமை ஒரு நூற்றாண்டு மட்டுமே. 20ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியே கல்விக் கண் திறந்த காலமாகும்.

உலக தரிசன உணர்வுடைய எவரின் சிந்தனையிலும் இதுவரை உருவாகாத இப்பெரும் பணியை செய்து முடிக்கும் உத்வேகத்துடனான இவரின் முனைப்பு பாராட்டுக்குரியது.

கல்விப் புலமையாளர்கள் தொட்டுவிடத் துணியாத பரந்த எல்லையைத் தொடுவதற்கு முற்பட்டு ஆய்ந்தறிவும், ஆற்றல் மிகுந்த பலரை அணுகி தான் மேற்கொண்ட பணியினை செவ்வனே நிறைவு செய்தமை பெரும் வரலாற்றுச் சாதனையாகும்.

வடதென் மருதமுனையில் பக்கஞ் சாராத நடுவு நிலைமையால் பலரையும் தன்பால் ஈர்த்தவர். பொதுப்பணிகளை வெற்றியை எட்டுமட்டும் சலியாது உழைப்பவர். ஷம்ஸ் கல்வியகம் உயர்வடைய தன் முழுச் செயற்பாடுகளையும் அர்ப்பணித்தவர்.

கல்முனை சாஹிறாக் கல்லூரியில் தனது உயர்கல்வியைப் பெற்றபின் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தும் இளைஞர் படையணியில் உழைத்தார். நமக்கென ஒரு தனித்துவ அரசியலை உருவாக்கும் வேள்வியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியவர். மாமனிதர் அஷ்ரபின் பாசறையின் முக்கிய கதாபாத்திரமாக மருதமுனைக்காக பங்கு பணியாற்றியவர்.

வங்கித்துறையில் மிக நீண்டகாலம் சேவையாற்றி பலரையும் கண்டறிந்தவர். புதியவைகளை அறியும் அவாவுடையவர். மருதமுனையின் வீறுகொண்ட வளர்ச்சியைக் கண்டு களிப்படைந்தமையினால் இந்நூல் மூலம் அதனை வெளிப்படுத்தி யுள்ளார்.

தான் சரியெனக் காண்பவைகளை உரத்துக்கூறும் வல்லமையால் இவ்வரலாற்றுப் பதிவை ஆவணப்படுத்தும் முயற்சியில் வெற்றிகண்டு, தனது தகைமையை நிரூபித் துள்ளார்.

யாரோ செய்திருக்க வேண்டும் என்று இறந்த காலத்தை இரை மீட்டுவதை விடுத்து நிகழ் காலத்தை தன் நினைவுக்குட்படுத்தி தான் கேட்டறிந்த சம்பவங்கட்குட்பட்ட கால கட்டத்தை நம் மனக்கண்களில் நிறுத்த மேற்கொள்ளப்பட்ட இப்பிரயத்தனம் கல்விச் சமூகத்திற்குச் செய்யப்பட்ட பேருதவி என்றால் மிகையில்லை.

பல தொண்டு நிறுவனங்களையும், அமைப்புக்களையும் உருவாக்கி செயற்படுத்துவதில் - வழி நடத்துவதில் அபார திறமை கொண்ட அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி. அவர்கள் கொள்கையில் தடம்புரளாதவர். ஏற்க மறுக்கும் தன்மானக் காப்பாளர்.

தொடர் தேடலினாலும் உழைப்பினாலும் நூலின் விடயதானங்கள் மிகக் கனதியான பரிமாண எல்லைகளைக் தொட்டு காத்திரமான வரலாற்றினைத் தந்து பிரமிக்க வைத் துள்ளன. இவர் பெற்ற வெற்றி நாம் பெற்ற வெற்றியே.

தேசகீர்த்தி **அல்-ஹாஜ். ஏ.எம்.ஏ. சமது, ஜே.பி.**
ஓய்வுநிலை அதிபர்,
கல்முனை மத்தியஸ்தர் சபை உறுப்பினர்,
முஸ்லிம் பிரிவு,
பாண்டிருப்பு-01.

ISBN No.: 978-955-41921-0-2

9 789554 192102

Print : ABNA Offset Printing
07, Main Street, Maruthamunai. Tel.: 067 2225448, 077 2256648

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org